ஸ்ரீமஹா
பக்தவிஜயவசனம்.

பி.நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்
வெளியிட்டது

ஸ்ரீ

ஓம் புண்டரீக வரதாய நம:

சத்துவகுண பிரசித்தர்களின் சரித்திரமாகிய

ஸ்ரீ மஹா பக்தவிஜயம்.

முதற்பாகம்.

இஃது
சித்தூர் அருள்வாக்கு
வெங்கடதாசரவர்களால்
மாராஷ்டிர பாஷையிலிருந்த
ஜெயதேவர், கபீர், துளசி, நாமதேவர், ஞானேசு
வரர் முதலாகிய ஐந்து தாசர்களின்
சரித்திரங்களை தமிழில் மொழிபெயர்த்ததுடன்
சாத்தம்பாக்கம்
கிருஷ்ணசாமி முதலியாராலியற்றிய்
குசேலமுனிவர் சரித்திரமும்
அடங்கியிருக்கின்றன.

சென்னை
வித்தியா ரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பித்தது.
1933

இதன் விலை ரூபா. 2-8-0

ஸ்ரீ

ஓம் பரப்பிர்மணே நம:

ஸ்ரீமகா பக்தவிஜய விளம்பரம்.

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனின், ஓம் சச்சிதானந்த நித்ய நிர்மலக் கடவுளாகிய பரப்பிரமம் தன் மாயாவிலாசத்தால் மூவுருவாகி சிருஷ்டி ஸ்திதி சம்ஹார கிருத்தியஞ் செய்யும் இப்பூவுலகின் கிரேதா திரேதா துவாபர யுகங்களில் நடந்தவண்ணமே இக்கலியுகத்திலும் சகுண தியானமும் பிர்ம்மக்ஞானமும் கிரகஸ்த சன்யாச வர்ணாசிரம தர்மங்களும் நடக்கும்பொருட்டு மூவரும் முனிவரும் அவதாரஞ்செய்து மாந்தர்களின் பக்குவாபக்குவப்படி போதிக்க வேண்டியதாகும் என்று பவுஷிய புராணத்தி லுரைத்தபடியே இக்கலியுகத்தில் அவதாரஞ்செய்த பக்த முக்தரனேகருள் 700-பேர்களின் சரித்திரங்களடங்கிய நாபாஜிசித்தர் செய்த இந்துஸ்தானிப் பாஷையிலுள்ள பக்தி சாரத்தையும், உத்தவ சித்தர் செய்த பக்தமாலாவையும் இதனுதாரத்தால் மைபதீபாவாஜியென்பவர் சில சரித்திரங்களை சங்கிரமமாக மாராஷ்டகத்தில் செய்த பக்தவிஜயம் சந்த விஜயத்தையும் இன்னும் இச்சரிதங்களைச் சார்ந்த சில நூல்களையும், வடதேசத்தில் 16-வருஷங்களாயிருந்து சக்தியானு சாரமட்டும் ஆராய்ந்து சங்கைகளைப் பல பெரியோர்களைக் கேட்டறிந்து இலக்கிய விலக்கணஞ் சற்றுந் தெரியாதவனுயிருந்தும் பக்தர் திருவிளையாடலென்னும் சரித்திரங்கள் உளத்தில் நிறைந்து இடம் போதாது பொங்கி இதைப்பார்க்கும் புண்யவான்களின் கண்களின் வழியாகவும் கேட்போர் செவியின் வழியாகவும், நிறைந்து தன் ஆற்றலடங்கவும் அவர்களாசீர்வாதப் பலனை அடியேற்குத் தருவிக்கவும், சகலரும் எளிதிலுணர வசனரூபமாய் வெளிப்பட்டு அதின் முகப்பிலுள்ள ஐயர் திருவிளையாடல்களை முன்னிட்டுப் பல தேசங்களிற் பரவப் பகற்கண்ணுன சூரியனும் இராக்கண்ணுன சந்திரனும் உள்ளமட்டும் மேற்படி பக்த விஜயத்தில் ஸ்ரீ வியாசாவதாரமான ஜீவகாருண்ய விரதமுடையோர்க்கே மோக்ஷமுண்டெனத் தன் சரித்திரத்தாற் காட்டிய ஸ்ரீஜெயதேவர் ஸ்ரீசுகாவதாரமான தவத்திலும்

தர்மமே பரமபத மடைவதற் கேதுவான மார்க்கமெனத் தன் சரித்திரத்தாற் புலப்படுத்திய ஸ்ரீ கபீர்தாஸர் ஸ்ரீ வால்மீகாவதாரமான நிஷ்காமமே பேரின்பமடையும் சூட்சும மார்க்கமெனத் தன்சரித்திரத்தால் வெளிப்படுத்திய ஸ்ரீ துளசிதாஸர் ஸ்ரீ உத்தவதாரமான பகவத் பக்தியே பரந்தாமனது பதாம்புஜங்களின் தரிசனத்துக் கேதுவாகிய முக்கிய நெறியெனத் தன் சரித்திரத்தால் விளக்கிய ஸ்ரீ நாமதேவர் ஸ்ரீ விஷ்ணுவாவதாரமான இல்லறத்திலிருந்து தேர்ந்த பிர்ம்மக்ஞானியே பிர்மானந்தவாரிக் குரியவனெனத் தன் சரித்திரத்தாற் றெரிவித்த ஸ்ரீ க்ஞானேஸ்வரர் ஆகிய இவ்வைவரின் சரித்திரங்கள் கங்காஸ்நானஞ் செய்யவந்த சதுர்வேத சித்தாந்த சபைத்தலைவராகிய ம-௱-௱-ஸ்ரீ சைதாபுரம் சோதிட வல்ல சிற்றம்பல முதலியார், ம-௱-௱-ஸ்ரீ ஆறைமாநகரம் முத்தமிழ்க் கவி திருவேங்கடப் பிள்ளை பரிட்சைக் குட்பட்டுப், புரசை அஷ்டாவதானம் ம-௱-௱-ஸ்ரீ சபாபதி முதலியார் முதலான கவிவாணரின் சாற்றுகவிகளைப் பெற்ற புத்தகத்தைக் கொண்டும் பழைய பிரதிகளைக்கொண்டும் இப்போது அச்சிட்டு விற்பனை செய்கிற ஆறுதாஸர் சரித்திர மென்னும் பக்தவிஜயத்தை ஒருவாறு திருத்தி அச்சிட்டிருக்கின்றோம். இதனை வைணவரே யன்றி ஏனையோரும் இப்புத்தகத்தை வாங்கி வாசித்துப் பலனடைவார்களென்றே இதன் விலையையும் சிறிது சுருக்கினோம். விஷ்ணுவினுடையவும், பக்தர் முக்தர்களுடையவும் அற்புத மகிமைகளை அறிந்துய்ய விருப்புடையோர் இந்தப் பக்தவிஜயத்தினை விரும்பாதிரார். விரைவில் முந்திக்கொள்ளுஙகள். சில பிரதிகளையே பதிப்பித்துள்ளோமாதலால் வாங்குவோர்க்கு இதுவே நல்லதருணம்.

உ

கடவுள் றுணை.

ஸ்ரீமகா பக்தவிஜய சிறப்புப்பாயிரம்.

இஃது உபாத்தியாயர் ம-ள-ள-ஸ்ரீ தஞ்சாவூர்

இலட்சுமணசுவாமி முதலியாரவர்கள் பாடிய

நேரிசை ஆசிரியப்பா.

மணிமலர் பொருநில மகளடை யழகுற
அணியென வுடுத்தபா லாழியி னெடுமால்
உந்தியங் கமலத் தொளிதரு பொகுட்டில்
வந்த நான்முகன் வாக்கினி லிருந்த
நாமக ணவின்ற நான்மறைக் கடலைத்
தோமறக் கடந்த சுயம்பிர காசன்
இருந்தவ ருள்ளத் தெழுந்த செழுஞ்சுடர்
தெரிந்துரை செய்ய வொணாதசிந் தாமணி
அந்தமு நடுவு மாதியி லாதாய்
முந்த மலிந்த மோன வடிவாய்ச்
சிற்குணத் தவர்தஞ் சிந்தையு ணிறைந்த
நற்குண வாரி நானில மொருங்கு
பரவிய தனைய பாந்தண்மேற் கிடந்த
தரைமிசை யுருக்கொடு சாந்த தயாநிதி
குறைவிலா வன்ப ருளங்குடி கொண்ட
நறைவிரிந் தொழுகு நாண்மல ரனைய
தேசிகன் பரந்த ஜெகத்குரு வாகி
மாசிலா னென்னு மாதவத் துயர்ந்த
சங்கரா சாரியின் ருளனு தினமு
மங்கள கரமுடன் வாழ்த்து மடியரில்
மாதமும் மாரி வரையறப் பெய்து
தாதவிழ் சோலைசேர் தாமரைப் பொய்கையும்
சங்கின மீன்ற தரளத்தை யுற்றே
அங்கிருந் தன்ன மடைபல கிடப்பச்
செந்நெல் மலிந்த செழுவய லுடனே
கன்னன் முதிர்ந்த கழனியு மாருப்
புயல்புறம் போகாப் பொழிலுமா மதிலும்
நயமுறு பல்பொரு ணண்ணிய கடையும்
பன்மணி யிடையிடை பதித்தகோ புரமுநற்
சொன்மலி புலவர் சூழ்மா ளிகையும்

கயல்விழி யார்கழங் காடுசா லைகளும்
மயலறு தவத்தினர் வாழுமண் டபமும்
நீர்வள மிருந்த நிலமங்கை நெற்றி
சீர்பெற வணிந்த திலகமென் றுலகஞ்
செப்புதற் கரிய சேர்நா டதனில்
ஒப்பிலாச் சிற்றா ருரியநன் னூரான்
நிகரிலா சித்த லிங்கமென் றவரும்
புகறிரு நாமன் புண்ணிய வசத்தால்
மரபினி லுதித்து மண்ணுளோர் களிக்கப்
பரிவுறு கலைபல பண்புட னாய்ந்து
மலரயன் வகுத்த மன்பைத் தொகுதியுள்
அலகிலா மக்கட் பிறப்பரி தென்னுய்க்
துருகுசிங் கையனு யுய்யுமா றோர்ந்து
பெரும்பய னடைதலே பிறத்தற் கரிதென
முற்பவ மொழித்த வற்புதாத் துவித
கற்பனை கடந்த விற்பன விவேக
சற்சன சாது சங்கத் தமர்ந்து
துற்சன குழாங்களைத் துறந்தவ னாகிப்
பூமலி வனமும் புனிதர்க ளினமும்
மாவளர் குயிலும் மன்னுபூ மயிலும்
பூவை கிள்ளை பொருந்திய வன்றில்
பாவைய ராடப் பாவலர் கூடக்
கீத் வோதையும் கிளர்ந்தெழு நாத
வேத வோதையு மிகவொலி தரவே
ராயவே லூரி னலம்பெற விருந்து
தூயனைம் புலனைத் துகளறக் களைந்து
தத்துவ மகன்ற சாத்விக காரண
சுத்த நிர்மல சொரூப சாக்ஷாத்
பூரண வகளங் கநிர்நாம வரூப
வெண்குண னவதரித்த கொள்கை போன்றுற்ற
மாரிமுத் தாசான் மலரடி வணங்கிச்
சூருயி ரருந்தி சுரர்க்கருள் சுரந்து
தெள்ளித் தெளிந்த தெய்வ சிகாமணி
வள்ளி மணாளனை வழிபடு கடவுளாய்த்
துணைப்பத முடிமிசை சுடருறச் சூட்டிக்
கணப்பொழு தகலாக் கருத்துட் கொண்டு
இந்துஸ் தானெழின் மராஷ்டகத் தெய்திய
சுந்தர மூயர்திரு துளசிதாஸ் நாம்தேவ்

ஜெயதேவ் முதலாச் சிறந்தவர் சரிதை
மகிதலத் தமர்ந்த வாரண வித்தை
சொற்பொரு ளிசைத்த சுவைநலந் தோன்றப்
பொற்பமை யாவு நிறைநிறை பொருந்த
வரையிலாத் தென்கலை மண்டபத் தூன்றிக்
கரையிலா னந்தக் கடனீர் பெய்து
நன்குணர்ந் தவரெலா ஞான மலரெனத்
தென்புல னறிவுயர் சென்னையிற் றுலங்கக்
கொடுத்தனன் கொடுக்கக் கொண்டுளோ ரகத்துத்
திடத்துட னொளிதர தெளிந்த வரகவி
வேங்கட தாசன் விளங்கப்
பாங்குற வியற்றிய பக்த விஜயமே.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

ஸ்ரீமகா பக்தவிஜய சாற்றுகவிகள்.

இஃது புரசை அஷ்டாவதானம்

ம-ா-ா-ஸ்ரீ சபாபதி முதலியாரவர்களா லியற்றப்பட்ட

நேரிசை ஆசிரியப்பா.

மழைதவிழ் குடுமி யிமயமலை வடபாற்
தென்பாற் குமரி திகழ்நில வரைப்பில்
விலங்குமீன் முதற்பல களங்கறு முறுக்கொடு
செல்லல் களைவான் றொல்லைஞான் றுதித்த
புயனிற மேனிப் பவளவாய்ப் பெரும்பர்
தண்மையும் வெம்மையுந் தருபெருஞ் சுடரிரு
தடக்கை தாங்கிய எழிற்றிரு மார்பன்
பேரருட் களைகணாற் பிறழ்கிலா வாரணப்
பொருட்பய னாகிய சாங்கிய யோகக்
கருப்பொரு ளுணர்ச்சியிற் கைவரு நெடுந்தகை
அடியரிற் சிறந்த அறிஞர்பற் பலருள்
ஞான தேவ ரைவகப் பெரிய
இந்திரி யத்தொடக் குறுமைந் தடக்கிய
ஜெய தேவர் நாம தேவர்
துளசிதாசர் கபீர் தாசர் முதலாம்
புண்ணியர் சரித நண்ணிய முதனூல்
இந்துஸ் தான்மராட் டிரமெனு மிவற்
றிருப்பதைத் தமிழி னியாவரு மெளிதிற்
புலங்கொடு தேர்ந்து நலம்பெறு மாண்பின்
நயந்தரக் காணூஉ வியந்தனர் களிப்பப்
பக்தவிஜய மெனப் பெயர் பணித்து
வளங்கிளர் வசன நடையினிற் றந்தனன்
சரோருக மலர்த்தடம் விராவு மிராய
வேலூர்ப் பதியினன் மாலூர்ப் பழவினை
வலனறக் கடிந்த நிலையுறற் சீர்மைசால்
மாரி முத்துப் பிரம மாதவன்
பொற்பதம் பழிச்சு விற்பன மேதகை
தேங்கமழ் பொழிற்கண் மாங்குயிற் றொகுதி
பண்ணிசை கூட்ட விண்ணிடைத் தருமலர்
தம்மினு மினியன வம்மினென் றத்தலைச்

சுரும்பரை யழைக்கும் பெரும்பரி சிறுதென
மெல்லிய நறுமென் பல்லவம் பொதுளிய
சேயிதழ் பூத்திர ளாயிடை வார்தரூஉம்
நறுந்தே னூர்வுற விருந்தபின் றகங்கொளீஇக்
களிதலை சிறப்ப வளியினம் பாண்செயக்
கற்றுணர் மாக்களின் பொற்றுணர் கொடைசொரி
சரந்தரு கொன்றை நிறந்தநீள் புரவம்
உருவவோ டரிக்கட் பருவம் விரிசிகைச்
சிற்றிடை மகளிர் பொற்றொடி கரமெனக்
காந்தளம் போந்தக மேந்துபல் சுடர்நிரை
வயங்குசிற் றாருறை பயன்செறி யருட்கவி
நேசமால் வெங்கட தாச னென்ப
அன்னத்தை யுழுநர் பண்ணையி லோப்பும்
வறுநீ ருழக்கலின் வாளைபாய் தடஞ்சூழ்
ஆறையம் பதியின் வீறு முத்தமிழ்
கவித்திரு வேங்கட னெனவரு நாவல
னும்மைதவழ் தண்டலை மதிமுகத் தங்கலார்
செய்தவழ் கூந்தல் நிகர்புறு சைதைவாழ்
சோதிடப் பெருநூ றுளக்கற வுணர்ந்த
கோதறு குணச்சிற் றம்பலக் குரிசிலும்
ஆர்வமுற் றிணிதிற் பார்வையிட் டுதவ
அன்னசிற் றம்பல னகமகிழ் சோதரன்
சென்னையிற் புகழ்மை திகழ்சதுர் வேத
சித்தாந்த சபைக்குத் திருமு தல்வன்
கல்விக் கடற்கரை கண்டவான் புலவர்
சொல்வித் தகந்தரு தொன்மை மருத
நிதிகுல திலக னெனநவி லுமாபதி
சதுர னாவுநீர்த் தரணியி லெவரும்
மெச்சிடு மெழுத் தியந்தரத்
தச்சிடு வித்து நல்கினமை வுறவே.

இஃது ம-ா-ா-ஸ்ரீ. கா. பச்சையப்ப முதலியார்
கல்விச்சாலை பிரதமபண்டிதர்.

ம-ா-ா-ஸ்ரீ சுப்பராயபிள்ளை அவர்களாலியற்றப்பட்ட

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

திருமருவு பக்தவிஜ யத்தைமக ராட்டிரத்
திகழுமிந்துஸ் தானியாம்
தெளிமொழியி னின்றுதமி ழின்மாரி முத்தென்னச்
செப்பவரு பிரமவள்ளல்
மருவுறு மாணக்கன் சிற்றார் சிறக்கவரு
மகிபனெண் டிருவேங்கட
மாதாசன் செப்பியதைச் சைதைவள நகர்தனில்
வயங்குசிற் றம்பலவனென்
றிருமருவு வள்ளலொடு பொழில்சூழு மாறையெனு
மொப்பிலா நரபதியினன்
ஒளிருமுத் தமிழ்க்கவித் திருவேங்க டப்புலமை
யுயர்கவிஞ ரைாய்ந்திட
அருமைபெரு சென்னைபுரி சதுர்வேத சித்தாந்த
வஞ்சபைத் தலைவனெனவே
அமருமா பதிநரேந் திரனுலகு போற்றவே
யச்சிட்டளித்த னனரோ.

இஃது ம-ா-ா-ஸ்ரீ. கா. பச்சையப்ப முதலியார் கல்விச்சாலை
தமிழ் இரண்டாம் உபாத்தியாயர்

திருமணம். கேசவசுப்பராய முதலியார் பாடிய

பதினென்குசீரடியாசிரிய விருத்தம்.

சீர்மருவு மரிதாசர் சரிதமிந் துஸ்தானி
செழுமராட் டிரபாஷையிற்
றேர்ந்துபண் டுற்றதைப் பக்தவிஜ யப்பெயர்
தெளித்தினிய செந்தமிழினற்
றேர்மருவு மொழிபேர்த்து மாரிமுத் துப்பிரம
தேசிகற் கன்புபூண்ட
தெய்வவேங் கடதாச னருளிடச் சதுர்வேத
சித்தாந்த சபைதனக்குப்

பார்மருவு தலைமையொடு சோதிடப் புலமைவரு
பான்மைசெறி சிற்றம்பலம்
பாவலன் முத்தமிழ்த் திருவேங்க டச்செம்மல்
பழுதறும் புரைதபுக்கத்
தார்மருவு குவளைப்பு யாசல னுமாபதிச்சை
தய்யான சென்னைநகரிற்
றமிழ்வளர்த் திட்டநம் வள்ளலச் சிற்பதிவ
தான்செய் தளித்தனனரோ.

திரிசிரபுரம் வித்வான் ம-ா-ா-ஸ்ரீ,

கோவிந்தபிள்ளையவர்களா லியற்றப்பட்ட

விருத்தம்.

அரிதாச ரானபத்தா துவிஜயமா ராஷ்டமிந் துஸ்தான் பாஷை
விரிதாசர் புகன்றவற்றை விளங்குசெந் தமிழில் வசனரூபமாக
வரிதாசர் மாரிமுத்துப் பிரமதே சிகர்மகிழ்மா ணாக்கர் சேட
கிரிதாச ரெனுந்திருவேங் கடதாச ரியற்றிடச்செய் தனைக்கண் மாதோ.

சதுர்வேத சித்தாந்தச் சபைத்தலைவ ரானசிற்றம் பலச்சான் றோரும்
முதுசீர்சா லாறைதிரு வேங்கடமுத் தமிழ்கவியு முயன்று நோக்கு
மதுசால வச்சபைக்குத் தலைவருமா பதியறிஞ ரச்சிற் சேர்த்தற்
கெதுதானைப் பெதுவுமிலை யிகபரபோ கங்களிக்கி தேதுவாமே.

புரசை ம-ா-ா ஸ்ரீ, செ. அப்பாவுபிள்ளை யவர்களியற்றிய

இரட்டை யாசிரிய விருத்தம்.

பரப்பிரம மாக்திருமா லிணையடிக்கன் புடனினிய பத்திசெய்து
பாகவத மாதவரா யோகமுமெய்ஞ் ஞானபூ ரணருமாகித்
திரப்பேறு பெற்றுள மாதுளசி தாசர்கபீர் தாஸர் தூய
ஜெயதேவ ருடனும தேவர்ஞா னேசுரனென் றைவர்தங்கள்
சந்திரமிந் துஸ்தான் மராஷ்ட மதினென்றெம் வெங்கடேச
தாஸனுந் தகையனற் றமிழ்வசன மாச்செய்ய வதனைச்சைதா
புரத்தருமா பதியெனுமா லொடுசிற்றம் பலவேளாம் புலமைமிக்கோர்
பொருவில்சீ ரச்சுதனிற் பதிப்பித்து வழங்கினர்பூம் புகழுவம்மா.

நாகப்பூர் டிவிஷன் ஜெனலஜிட்டன் ஆபீஸ் எட்ரைட்டராகிய

ம-௱-௱ஸ்ரீ, தி. வீரராகவலு நாயகரவர்க ளியற்றிய

விருத்தம்.

சுந்தரஞ்சேர் சிக்கந்தார் பாதில் வாழும்
 சோமசுந் தரனிதய தான தன்னைச்
சந்ததம்விட் டகலாத முருகன் றன்னை
 தனதகத்திற் றினங்குடியாய்க் கொண்ட நேமன்
பந்தவுல கோரறிந்து படிக்கக் கேட்பப்
 பாசமுடன் றலைக்கணிய விநயஞ் செய்ய
விந்தையதாய்ப் பக்தவிஜ யத்தை யீய்ந்தான்
 வேங்கடதா ஸனுநாமன் விரைந்து தானே.

ஆசிரிய விருத்தம்.

பொன்னகர்க் கரசன்வே தாசௌரி நின்மலன்
 பொய்யிலா முனிவர் தேவர்
போற்றுந் திருப்பழனி யாண்டவனை யனுதினம்
 புளகமொடு துதிசெய்கு வோன்
மன்னுமறை முடிவருட் சங்கரா சாரியர்
 மரபினைச் சார்ந்த புகழார்
மாரிமுத் துப்பிரம தேசிகன் றனதுதிரு
 மலரடிக ளைப்பரவு வோன்
தன்னைநிக ரில்லாத சிற்றூர னுந்திவ்ய
 சத்குணச் சித்த லிங்கம்
தந்திடப் புவியில்வேங் கடதாச னுயிலகு
 சாதுசன் மார்க்க தீரன்
மன்னுதமி ழால்பக்த விஜயமென் றீந்தனன்
 பரிவுட னகங் களித்தே
பார்த்தபே ருஞ்செவியிற் கேட்டபே ரும்புவியில்
 பல்லாண்டு கூர்மின் களே.

ஸ்ரீ

ஓம் பரப்பிர்மணே நம:

பண்டரிநாதர் துணை.

ஸ்ரீமகா பக்தவிஜயம்.

பாயிரம்.

பரப்பிர்ம துதி காப்பு.

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

சீரார்நெஞ் சினராற்றுஞ் செபக்கோவை தனைச்சூடுந் தேவ தேவைப்
பாராதி பஞ்சகர்த்தர் பகுதிபவ நெறிக்கிடமாம் பரமான் மாவைப்
பேராதி யிலகோவை மனச்சோர்வை யகற்றும்பரப் பிரம சேவை
தூராதி தூரமெனு மகப்பார்வைத் தரும்வாழ்வைத் தொழுதல் செய்வாம்.

கஜானனன் துதி.

வஞ்சித்துறை.

திருவாழ் வருளுங் கரிமா முகனற்
சரணம் புயநஞ் சிரமே லணிவாம்.

திருநாதன் துதி.

அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

பிரகலாதனுக் காகத்தூணிற் பெருநர ஹரியானனைக்
கரியழைத் திடவேவந்து காத்தருளிய மாயோனை
அரியுனக் கபயமென்றுட் காடைமேன் மேற்றந்தானைத்
துரியமா நிலைபெற்றுய்யத் தோத்திரஞ் செய்குவாமே,

பார்க்கவி துதி.

அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

அரன்பிர மத்திதிரா தனேகநா ளலையும்போதவ்
வரன்பிர மத்திதன்னை யரைகணத்திற் றீர்த்தானைக்
கரிதனை யுணர்த்ததுக்கா ராமரின் றந்தைக்கன்று
பெருநிதி யளித்தாடன்னைப் பேணிநம் மிடிகடீர்ப்பாம்.

நிடலாட்சதன் துதி.

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

மிருகண்ட முனியின் சேய்க்கும் வியாக்கிர பாதசேய்க்கும்
பெருவய துடன்பா லவரம் பிரியமாய்க் கொடுத்த நாதன்
திரிபுரந் தனையுங் காமன் றனையுஞ்செவ் வனலாய்ச் செய்தோன்
திருவடிக் கமலம் போற்றித் தீங்கினை யகற்று வோமே.

பவானி துதி.

அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

புசுண்டனுக்கழியாயோகம் பூர்ணமாய்போதித்தாளை
அசியுணர்குகற்காவானோர்க் கருண்மகவில்லாதென்றும்
வசைமொழிபுகன்றிட்டாளை மாசிலாவதனத்தாளை
நிசபதத்தோடதீதப் பதம்பெற நினைவில்வைப்பாம்.

காயத்திரி துதி.

அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

ஹரியெழுத்தறியநாயேன் றனைத்தடுத்தாட்கொள்வாளை
அருமறையாகமத்தோ டனந்தசாத்திரமானாளைப்
பிரமனூர்நாக்குற்றாளைப் பிரியலீலையையாண்டாளை
எரியுணுதரும்பச்சோலை யாகினாட்கிணக்கஞ்செய்வாம்.

கார்த்திகேயன் துதி.

பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அடியாரெங்குண் டெங்குண்டென் றலையுமறுமா முகருகனே
அரனார்கணிலுற் பவித்தவனே அமரர்சிறையைத் தவிர்த்தவனே
அடியாதியிலா வறிவுருவே அகஸ்தியர்க்கன் றருட்குருவே
அருணகிரிநா தரையாண்ட வருளேஞானப் பரம்பொருளே
படிமீதடியார் சரித்திரமாம் பக்தவிஜய மெனுநூலைப்
பக்தியோடு வாசகமாய் பண்ணுநாயே னுவதனிற்
குடியாயிருந்தோர் குறைவின்றிக் குணமாமுழுது முடித்தெனையாட்
கொள்வாய்தோகை வாகனனே கூவுஞ்சேவற் கொடியோனே.

ஜீவன்முத்தர் துதி.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஜெயதேவ் நாம்தேவ் சோபான்தேவ் க்ஞான்தேவ் நிவர்த்தி திகழ்சாது
நயமீ ரொயிதாஸ் சூரதாஸ்மா நாண்ய துளசீதாஸ் கபீர்தாஸ்
கயமில் ராம்தாஸ் புரந்தரதாஸ் கனமா தவதாஸ் கூர்மதாஸ்
சுயதுக்காரா மேகநாது சுவாமி யெனைக் காக்கவுங் கடனே.

குருபரம்பரை துதி.

கலி விருத்தம்.

அங்க லிங்க வயிக்ய முணர்த்துநற், கெங்க னும்மில கும்பர மோருய
ரங்க மாயிவ் வகிலத் தெழுந்தருள், சங்க ராசாரி தண்பத மேத்துவாம்.

தத்து வங்க ளௌலாமகன் றானந்த, வத்து வாகி விளங்கிடு மாதவ
வித்தி யாரண்ய ஸ்வாமி விமலனைப், பத்தி யோடு பணிந்தினி யுய்குவாம்.

அத்பு தானந்த வற்புத வச்சுத, சத்வி னோதவிச் சர்வ வியாபக
சித்வி லாசு சதாசிவப் பிர்மமாந், தத்வ நீதனுக் குச்சர ணங்களே.

நேத்ர மாதி நினைவுக ளும்மிகு, காத்ர மாயெழுங் காலு மலவல
சூத்ர தாரியென் றோர்ந்தருடேய்கா, பாத்ர ஸ்வாமியை யேத்திப்பணிகுவாம்

அங்க மாதி யலவென்ற கன்றரு, வங்க மாய்ப்பரை யாதிய கன்றுயர்
லிங்க மேவிய நின்மல னாகிய, புங்க சேஷகி ரீசனைப் போற்றுவாம்.

சச்சி தானந்த னங்கிருஷ்ண சாமியை, அச்சுத வேங்க டேசக் குரவனை
உச்சி யையுணர் நாராய ணன்றனை, நிச்ச யம்பெற நெஞ்சு ளிருத்துவாம்.

சகல ரும்பிர மந்தனை யுற்றிட, ரகல வேண்டிக் கைவல்ய கறைந்தநற்
சுகசொ ரூபநற் றண்டவ மூர்த்தியின், மிகுப தத்தினை மேவிப் புகழுவாம்.

குரு துதி.

இரட்டையாசிரிய விருத்தம்.

தானந்தவத்தின்மிகு ஜீவகாருண்யமுஞ் சாந்தமுஞ் சரிதையென்றும்
தத்துவமுணர்த்துமருளாரியர்க்குப்பணிகடாஞ்செய்தல்கிரியையென்றும்
ஞானந்த்தும்பூமறி வினையருந்தருணெறியை நாடலுயிர் யோகமென்றும்
நாதனருளாலறிவு நானெனத்திடமதாய் நம்பன்மிகு ஞானமென்றும்
ஆனந்தமாமெனக் கிடர்பிறப்பில்லையென் றறிவதே நிஷ்டையென்றும்
ஆமிந்த்ரியகரண கருமமறிவாமெனக் கணுகா தெனத்தெரிந்தே
மோனந்தனைப்பெற்று யாதொன்றுநாடாத மோனமுயர் சகசமென்றும்
முத்திமுடிவருள்ஞான மாரிமுத்துப்பிரம முத்தனை யகத்துள்வைப்பாம்.

மகத்துக்கண் மகிமை.

ஓம், அகண்டாகண்ட, அசல, அதுல அச்சுத, அத்வித அபய, அட்சய, அபாகிய, அபாசிய, அனுமய, அப்ரமேய, அவிகார, அசரீர, அனந்த, அனந்தானந்த, ஆதிமத்யாந்த ரகிதமாயும், ஈசுவர, ஏகதேவ, கருணலய, கர்த்தவ்ய, கருணகரக் கடவுளாகியும், தற்பர, சிற்பர, ஜகநாத, சச்சிதானந்த, சகோதய, சம, சாந்த, சாஸ்வித, சர்வசாக்ஷீ, சர்வோன்னத, சர்வலோகசரண்ணிய சர்வக்ஞ, சர்வகாரண சர்வேசுர, சர்வேந்திரியாமியாகியும், உசித உத்க்ருஷ்ட உத்தம உத்தமோத்தமமாகியும், சுய சுகசிந்த சுயம்பிரகாச சோதி சொரூப சாக்ஷாத்கார சுபமங்கள சுவாமியாகியும், நிகஜோத்ய நிக்லேத்ய நிர்வேத்ய நிர்வாக்கிய நிதான நிசாதன நிஜார்த்த நித்ய சத்ய நிரஞ்சன நிர்சலன நிர்பந்த நிர்சங்க நிஷ்களங்க நிர்காம நிஷ்காம நிர்குண நிர்விகாரமாகியும், நிர்பேத நிர்சேத நிகர்வ நிரவயவ நிருப நிர்சின்ன நிர்பின்ன நிர்பாத நிர்ஜீவ நிராங்கார நிராலம்ப நிர்விசேஷானந்தமாகியும், நிர்சப்த நிஷ்கர்ம நிஷ்கள புஷ்கள நிர்மல் நிரந்தர நிராகுல நிர்வர்ண நிஷ்பிரபஞ்சமாகியும், நிராவரண நிராமய நிராதார நிராகார நிரதிசயானந்தமாகியும் நீதிபர பரஞ்சோதி பரதுக்க துக்கபரம பரம்பர பரப்பிர்ம பரமேஸ்வர பராபர பரிபூரணமாகியும், புண்ய கண்ய புனித புராதன ஜனதன புத்த மூத்த சுத்த விஷ்ணு வ்யோமவ்யாபகமாகியும், கேவல கைவல்ய பிர்மானந்த மெஞ்ஞான சின்மய தேஜோமய சித்விலாச தேவதேவனுகியும் விளங்காநின்ற சமஸ்தமத சம்மதக் கடவுளாகிய பரப்பிர்மத்தை நானெனதென்னும் அகங்கார மமகார மறத் திரிகரணச்சுத்தியோடும் வணங்கி இதைப்பார்க்கும் புண்ணியவான்களின் திருவருட் கமலக் கழல்களைச் சிரமேற் கொள்ளுதற்கிணங்கிப்,

புளியம்பழத்தின் போர்வை	போலவும்
தெளிலூமை செவிடன்	போலவும்
நீர்மீதுறு நவ நீதம்	போலவும்
நீர்தனிற்றெரியும் நிழலைப்	போலவும்
பூமியிலுறுமகப் பூச்சியைப்	போலவும்
ஆழியில்விழும்பல ஆற்றைப்	போலவும்
ஆடும்தொம்ம ராகத்தைப்	போலவும்

பாடும்பாடகன் பாட்டைப் போலவும்
கனவிற்காணுங் காட்சியைப் போலவும்
புனற்குடமேந்திய பூவைப் போலவும்
விபசாரிசெய்யும் வேலை போலவும்
உபகாரபுருஷ னுள்ளம் போலவும்
பரத்தையர்காட்டும் பட்சம் போலவும்
சிரத்தையிற்சிறந்த சீஷன் போலவும்
பஞ்சபூதங்களின் பண்பைப் போலவும்
பஞ்சவர்னங்கவர் படிகம் போலவும்
அருங்குழவிகளி னுசை போலவும்
பருந்துநிழலுறும் பான்மை போலவும்
உடன்கட்டையேறு முத்தமி போலவும்
மடங்கொக்குவீதி மணியைப் போலவும்
சமணர்போற்றுஞ் சாமியைப் போலவும்
சமலத்துறுமுத கந்தனைப் போலவும்
ஏகசக்ராதிப னிச்சை போலவும்
நாகங்குயில்மயில் நாணயம் போலவும்
நெய்யுண்டுகக்கும் ஞானியைப் போலவும்
வெய்யோன்விசிறி வீணை போலவும்
கண்ணிற்கரிக்குங் கருமை போலவும்
விண்ணிற்றெரியும் மேகம் போலவும்
கற்பகங்காக்கை கருவிழி போலவும்
கற்பைக்காக்குங் கன்னியைப் போலவும்
பித்தன்போலவும் பேயன் போலவும்
பத்தன்போலவும் பாமரன் போலவும்

சமுசார வியாபாரத்தி லிருந்தே பிபீலிகாதி சமஸ்தவஸ்துக்களிலும், பிரமமே நிறைந்திருக்கிறதென்றும் பிரமமில்லாத விடமுண்டோ வென்றும், பரப்பிரமத்துள் நானென்பது முக்காலத்திலுமில்லை யென்றும், நானெனு மகந்தையே மூலஞ்ஞான மென்றும், நானெனுஞ் சீவத்தன்மை அறிவூன்றி விசாரிக்கில் சுத்தசூன்ய மாகுமென்றும், நானீ யெமதுமதென்னும் விகற்பமற் றிருத்தலே பிரமக்ஞானமென்றும் நானெனலற்றவிடத் துதயமானவின்பமே, நிரதிசயாநந்தமென்றும், பரப்பிரமமே ஒருருவா யெழுந்தருளிய குருஸ்வாமிகட் குடல் பொருளாவி யென்னு மூன்றையுந் தத்தஞ்

செய்து தானென்பதை யடக்குவதே உத்தம தானமென்றும், தனக் கிதர ஜீவர்களாற் பொல்லாங்கு நேரிட்டாலும் தானப் படி செய்யாதிதஞ்செய்து நானென்பதை யடக்குவதே சாந்த நிதானமென்றும், நான்மறை முடிவாகிய மகா வாக்கியார்த் தங்களைச் சிரவணஞ்செய்து தேகேந்திரிய பிராணகரண சீவ விருள் நானலவென்ருத்ம ஸ்வரூபமாகிப் பரபிரமத்துள்ளே சீவக பாவமாதலே பிரமத்தியானமென்றும், இம்மனனபலத் தாற் றிரிகரணங்களை அசைவற நிறுத்தி தானென்னு மகங் காரக் கிரந்தியைக் களைதலே பிரமக்ஞானமென்றும், திரிகர ணங்களின் சலனமற்றபோ துதயமான பிரமானந்த வாரியி லமிழ்ந்து தன்னைமறத்தலே மகா மௌனமென்றும், திக்கு தேசாதிகளை மறந்து சங்கற்ப விகற்ப மிறந்து நனவிற்சுழுத் தியை யடைந்து மானபி மானங்களைக் கடந்து நிருவிகற்ப மாயிருத்தலே ஜீவன் முக்தி யென்றும், இப்பேர்க்கொத்த அபேத நிலையிலிருந்து சாக்ஷாத்கார மடைதலே மோக்ஷ மென்றும், தன்னையடைந்த சத் சீஷர்களுக் குபதேசித்து இஷ்ட தேவதையை யுபாசித்து எப்போது மாசானைப் பூசி த்து இரவிபோலென்றும் பிரகாசித்து எழிலாரருள்பெற யா சித்து இன்ப மீவாரையே நேசித்து, இகவாழ்வற்பமென்று யோசித்து குருவேபதியெனப் பூசித்துக் கோதிலா நூல்களை வாசித்துக் குரு சங்கீர்த்தனங் கோஷித்துச் சாத்விகராய்ச் சந்தோஷித்துச் சாக்ஷிப் பொருளாய்ச் சேக்ஷித்துச் சர்வசாட் சியாய் விசேஷித்துத் துரிய வீட்டினிற் பிரவேசித்துச் சும் மாயிருக்கவே ஆசித்து ஆனந்தவாரியில் நிதானந் தப்பி தாணிறந்திருந்தும் தன்னைக்கொல்ல நினைந்த சண்டாளர் மேல் சாகரத்தைபோன்ற கருணையும், சங்கரன் சாரங்கபாணி தமக்குப் பணிசெய்யும்படியான பெருமையும் மாயா வாழ்க் கையி லுள்ளோர் தம்மை மானபங்கஞ் செய்யும்போது மங் கல காலத்துள்ள மகிழ்வும், தம்மை யண்டினோர்க்கு மோக்ஷ வாழ்வளிக்குந் திகழ்வும் தருமார்த்தமாகத் தநயன்றலையை யரிந்த தைரியமும், சாதுக்களுக் கன்னமளிக்கு நிமித்தம் தன் மனைவியை அயலானுக் ககமகிழ்வோடீந்த பிரியமும், மிரு கங்கள் வாக்கால் வேதத்தைச் சொல்வித்த சாதுரியமும், சவ த்தை யெழுப்பின திறமையும், ஜனார்த்தனனைப் பனிரெண் டாண்டு ஜலம் சுமக்கவைத்த உரிமையும், பிறருயிர்க்காத் தன்

னுயிரை மாய்க்கத் துணிந்த ஒருமையும், தருமர் சுகர் ருக்மாங்கதர் முதலானோர் சகலரும் பார்க்கப் பொந்தியோடு வானுல கடந்ததைப்போலவே தேகத்தோடு மேலுலகிற் சென்றும், ரூபமாய்த் தெரிந்தும் வெட்டும்போது, ஆகாயவடிவாய் நின்றும் பக்தர்கள் மத்தியி லிருந்தபடி மாயமாகியும், தங்களாக்கையைப் புஷ்ப துளசிகளாய்க் காட்டியும் அழியாசிரஞ்சீவி பட்டத்தைப்பெற்றும், வானுலகிலிருந்து புஷ்பவிமானங்கள் வர அதிலமர்ந்து சென்றும், அடியார்கள் முன் அரியர ஸ்வரூபிகளாய் நின்றும் சமயோபதேசர்க்குப் பிரமோபதேசஞ் செய்தும், மதபேதர்க்குச் சம்மதபோதமளித்தும், பகவானுக்குங் கல்லுருவான ரிஷபத்துக்கு மன்னமூட்டியும், அனுபவக்ஞானத்தால் இதர மதஸ்தரை வாட்டியும், ஆகாயத்திலிருந்து கொடிகள் வர நாகேசுரர் கோயிலில் நாட்டியும், கற்களையெல்லாம் பரிசவேதியாகச்செய்து காட்டியும் நாகேசுரர்கோயிலை மேற்கு முகமாகத்திருப்பியும் பாதங்களைத் தூக்கிவைத்த இடங்களிலெல்லாம் லிங்கங்கள் முளைக்க செய்தும் சமாப்தமான பின்னும் பக்தர்கள் கூப்பிட ஏனென்றுத்தரவீந்தும்; இன்ன இன்னமனேக விநோதங்களைக் காண்பித்தும், விளக்கமுற்றிருந்த ஜெயதேவ் நாமதேவ் க்ஞான்தேவ் சோபான்தேவ் சாங்தேவ் துளசிதாஸ் கபீர்தாஸ் கூர்மதாஸ் விஷ்ணுதாஸ் சூரதாஸ் ரொயிதாஸ் ராமதாஸ் மாதவதாஸ் மச்சேந்திரநாத் சலந்தர்நாத் கோரக்நாத் ஏகநாத் கோராகும்பார் ராகுமார் பரமானந்தசோகா ஜகமித்ரிநாசர் நிவிர்த்திசாது சாவந்தியமாலி முக்தபாய் ஜெருபாய் மீராபாய் கங்காபாய் நரஹரி கஜனகசாய் துக்காராம் முதலான 700 பிர்மக்ஞானிகளினது சரிதையெனும் அமிர்தத்தை நிறைத்துவைத்திருக்கும் பக்தவிஜயமென்னுங் கிரந்தத்தைப் பொய்வார்த்தைகள் சம்பூரணமா நிறைந்த புன்மையேன் வாக்கினற் புகலக்கூடாததாயிருந்தும், புகலத்துணிந்த காரணம் தேவமனவிக்கினமின்றி நிர்விக்கினமாய் முழுதுமினிதாக நிறைவேற்றுவதற்காக கருணகரக் கடவுளாகிய கணபதியின் றிருத்தாட்டாமரைகளின் மகத்துவமே. இவ்வடியேனைத் தடுத்தாட்கொள்ளும் திருமுருகேச னருளோ? பக்தசரித்திரங்களைக் கேட்ட விதமோ? யான் அறிகிலேன். அன்றி பிர்மாவதாரனை நாபாஜி சித்தராற் செய்யப்பட்ட பக்தசாரமென்னும்

விசாலமான ராத்திரியில் உத்தமர்க டிருவிளையாடலென்னும் சுகந்த வாசனைவீசும் புஷ்பங்கள் புஷ்களமாய்ப் புஷ்பித்திருக்கும் நந்தவனமாகிய பக்தவிஜயத்தை இவ்வுலகிலுள்ள பாபங்களெல்லாந் திரண்டோருருவமான வடிவமும் க்ஷண நேரமாயினும் சஞ்சலமற்றிராத வஞ்சகமாகிய நெஞ்சகமுள்ள கொடியேனாகிய அடியேனுடைய இருதயத்திலாணவ வந்தகாரத்தைக் கிழித்தெழாநின்ற கோடி சூரியப் பிரகாசமான அருள் விலாசமே பிரவேசித்துத் தமிழ் பாஷையிற் செய்யத் தொடங்கின அதிசயமே அதிசயமாம்.

நூற்பெருமை.

பக்தப் பிரியனாகிய பகவானுடைய திருநாபிக்கமலத்தில் வீற்றிருந்தபடி இவ்வண்ட பிண்ட பிரமாண்டங்களை ஓர் நொடியிற் சிருஷ்டித்த பிர்மதேவனே இவ்வுலகிடேற அவதாரஞ்செய்து நாபாஜி சித்தரெனப் பேர்பெற்றுப் பக்த சரித்திரங்களையெல்லாம் இந்துஸ்தானி பாஷையிற் செய்து வைத்து அன்பரைக்காத்து ரக்ஷித்து நாளது பரியந்த மிவ்வுலகிலுலாவிக்கொண்டிருப்பாரெனி னிதன் மகிமையை ஒருவராற் சொல்லக்கூடியதோ? சொல்ல மானிடராற் பாடியதோ? பக்தசாரமெனப் பேர்வழங்கும் பக்தவிஜயமானது பிர்மானந்த ரசத்தை யளித்துச் சந்ததமுங் களித்து அழியாச் சத்யக் ஞானாந்த பிரம்ம மாத்திரமா யிருக்கச்செய்வதால் தேவாமிர்தமென்றும் கொலை களவு கட் காமம் குரு நிந்தையென்னும் பஞ்சமா பாதகங்களை நீக்குதலால் பகிரதியென்னும் அனந்தஞ் சரிதங்களா லலங்கரிக்கப்பட்டிருப்பதால் இதிகாசமென்றும், ஸ்ரீமந் நாராயணருடைய திருவிளையாடல் நிறைந்திருப்பதால் விஷ்ணு புராணமென்றும், சாட்சாந் பரமசிவத்தின் பலமகிமையுடைய சரித்திரங்க ளடங்கியிருப்பதால் சிவபுராணமென்றும், பிரபஞ்சோற்பத்தி நாசமும் விதி நிஷேதங்களும் பல நிலைகளு முறைப்பதால் வேதமென்றும், வேதமுடிவான மகா வாக்கியார்த்தங்களி னிரகசியங்க ளனந்தமிருப்பதால் வேதாந்தமென்றும் சொல்லப்படும். அன்றி இதில் மதபேதங்களைக் கண்டித்து மானாபிமானங்களைத் துண்டித்து அரியரனைச் சமமாகப் புகழ்ந்து அல்லவென்பவர்களை யிகழ்ந்து காமக்கிரியைகளைக் குறித்து பிர்மக்ஞானத்தை

நிறைத்துத் துன்பத்தி லிருப்போரைப் பிழைத்து இன்பத்தில் வாருமென் றழைத்து ஜன்மங்களில்லாமற் போக நன்மைபெற் றெந்நாளும் வாழ்க பிர்மானந்த போதத்தையே விரித்துரைத்தலால் வேதாந்த சித்தாந்த விளக்கமென்றும் சொல்லலாம். இவ்வளவு மாட்சிமையான மோட்ச காட்சிக் கிரந்தத்திற்குப் பக்தவிஜயமெனப் பேர்வைத்திருப்ப தேனெனின், அரியர குருபக்தியில்லாமல் சித்திமுத்தி யடைந்தவர்களில்லாமையாலும், எல்லாவற்றிற்கும் பக்தியே காரணமாதலாலும், பக்தியில்லாதவர்க்கு மூத்தியில்லாமையாலும், இதிற்சொல்லும் பிர்மக்ஞானிக ளனைவரும் பகவத்பக்தியினாலேயே சித்தி விரக்தி மூக்தியடைந்தார்க ளாதலாலும், பக்தியினாற் காமக் குரோத லோப மோக மத மாச்சரங்க ளென்னு மரிஷட வர்க்க வீரர்களைச் செயித்து, விஜயம்பெற் றுண்மைக் ஞானமும் பேரின்பமும் கைவல்யமு மடைந்தபடியால் பக்த விஜயமெனப் பெயர் வைக்கப்பட்டதுமன்றி,

கலியுகாதி 4811-ம் வருஷத்தில் துக்காராம் புத்திரியின் குமாரனாகிய வாசுதேவ பாவா என்பவர் பண்டரிபுரத்தில் பிரமாம்சமான நாபாஜிசித்தர்செய்த இந்துஸ்தானி பாஷையிலுள்ள பக்தசாரத்தைப் பாராயணஞ் செய்துகொண்டிருப்பதை அவ்வூருக்கிறைவனாகிய பாதுஷா நாடோறுஞ் சிரவணஞ் செய்துகொண்டேவந்து துக்காராம் பொந்தியோடும் சகலரும் பார்க்க வானுலகிற்சென்றாரென்பதைக் கேட்டுச் சந்தேகங்கொண்டு துக்காராம் போனதைக் கண்ணாரப் பார்த்தவர்க ளியாராவ திவ்வூரிலிருக்கிறார்களா வெனக்கேட்க, இரண்டொருத்தர் நாங்கள் சிறுவயதுடையவரா யிருந்தபோது போனாரிதுமெய்ம்மையென் றுரைக்க, அரசன் நம்பிக்கைகொள்ளாமல் இது சுத்த அபத்தமென்றறைய, அதற்குத் துக்காராம்போன வயதில் மிகுந்த என் மாதாவுக்குத் தெரியுமெனப் புகல, இராஜன் உன் மாதாவை யழைத்துக்கொண்டுவந்து மெய்ப்பித்தாலும் நம்பமாட்டே னினி யிப்புராணத்தைக் கேட்கவுமாட்டேனெனச் சபையிலுள்ளவரு மப்படியே புகல,

வாசுதேவபாவா தானுஞ் சந்தேகங்கொண்டு தன் தாயை கேட்டு நிஜந் தெரிந்துகொள்ளவேண்டிய வெண்ணத்தால், புராணத்தை நிறுத்திச் சபையோரை நோக்கி, அடியேன் வருகிற பரியந்தம் யாரும் போகாதீர்கள். இதோ அரைக்க

ணத்தில் வருகிறேனென் றறைந்து சபையை நீங்கித் தன் வீட்டைநோக்கிப் போகையில் அச்சபையில் சாதுவேஷத்துடன்வந்து நாடோறுங் கேட்டுக்கொண்டிருக்கும் துக்காராம் தனது பேரனைக் கூப்பிட்டுக்கொண்டேபோய்த் துக்காராம் ரூபத்துடன் நின்று, அப்பா வாசுதேவா! நானே துக்காராமென, அவர் நீர் துக்காராமாயின் என் தாயிடம் வாருமெனத் துக்காராம் வாவென் றழைத்துக்கொண்டுபோய்த் தன் புத்திரியின் நாமத்தைச் சொல்லிக்கூவ, தந்தையின் தொனியைக்கேட்ட அவ்வம்மணி திடுக்கென்றெழுந் தோடிவந்து, தந்தையி னடிகளிற்படிந்து, ஓ என் தந்தையே! நீர் வந்தது வெகு விந்தையே 80 வருஷங்களாக எங்கு மறைந்தீர் எனப் பலவிதங்களாகத் தோத்திரஞ்செய்ய,

துக்காராம் வந்த காரணத்தைப் புகன்று, பேரனுக்குற்ற சந்தேகத்தை நிவர்த்திசெய்து, அடா என் கண்மணியே! நான் மீட்டிக்கொண்டிருந்த இந்தத் தம்பூரைச் சபைக்குக் கொண்டுபோய், ஓ சபையோரே! துக்காராம் பொந்தியோடும் மேலுலகிற் சென்றது மெய்யாகின் அவர் கரத்தால் மீட்டிக்கொண்டிருந்த இந்தத் தம்பூரும் அந்தரத்திற் செல்லுமென்றுரைத்துக் ககனத்திலேறி உடனே நான் பிடித்துக்கொண்டு வானுலகிற் செல்கின்றேனென,

அதைக்கேட்ட வாசுதேவபாவா சந்தோஷ சித்தனுகச் சபையை யடைந்து இறைவனை நோக்கி, ஓ பாதுஷாவே! உமக்குற்ற சந்தேகத்தை இத்தம்பூரால் நீக்குகிறேன் பாருமென்றுரைத்து, ஸ்ரீமந் நாராயணனைப் பலவிதங்களாகத் துதித்து, ஓ என்னுண்டவனே! உமக்கத்தியந்த பக்தனை துக்காராம் பொந்தியோடும் வானுலகிற் சென்றது சத்தியமானல், அவருடைய தம்பூரும் அந்தரத்திற் செல்லுமென் றறைந்து ஆகாயத்திலெறிய, உடனே துக்காராம் அதைப் பிடித்துக்கொண்டு தம்பூரைமீட்டித் தாளத்தைக்கூட்டி ஜெய விட்டல் பாண்டுரங்க விட்டலெனப் பற்பல பாடல்களைப் பாடிக்கொண்டே அந்தரத்திற் சென்றதன்றிப் பக்தசரித்த்தை அன்புடன் ஓதுபவர்களும் கேட்பவர்களும் பவசாகரத்தையும் துக்கசாகரத்தையும் கடந்து, சகல சுபமங்களமும் பிர்மானந்தமுமடைந்து மோக்ஷ வீட்டைப் பெறுவார்களென்றுரைத்து மறைந்தாராதலால்,

இதன்பெருமையை மதித்துரைக்கக் கூடுமோ இதைப் பக்தியுடன் பார்ப்போர்பால் யாதொரு துன்பமும் நாடுமோ? நாடாது: ஸ்ரீமகா பாரதராமாயண பிர்மாண்ட புராணத்திலும், பெருத்த நூலான விதை கலியுகாதி 4732-ம் வருஷத்தில் விரிஞ்சாவதாரரான நாபாஜி சித்தர் இந்துஸ்தானி பாஷையில் 700-சரித்திரங்களை செய்து பக்தசாரமென பெயர் வைத்து உத்தவசித்தர் முதலானவர்களுக்குப் போதித்தார்.

அதுகேட்ட உத்தவசித்தர் 700-சரித்திரங்களையும் சுருக்கமாகக் குவாலியர் பாஷையிற்செய்து பக்தமாலா வெனப் பெயர் வைத்தார். மைபதி பாவாஜியென்பவர் கலியுகாதி 4862-ம் வருஷத்தில் ஒருவர்க்கொருவர் போதித்த ஞானவாக்கியங்களை முழுதுஞ் சேர்க்காமல் சிலவற்றைச் சேர்த்து 109-சரித்திரங்களை மராஷ்ட பாஷையிற் செய்து பக்தவிஜயமெனப் பெயர்வைத்து மற்றைச்சரித்திரங்களுக்குச் சந்தவிஜயம் சந்தவிஜய லீலாமிர்தமெனப் பெயர்வைத்தார். தீபதேவ் என்பவர் ஞானவாக்கியங்களை மாத்திரஞ்சேர்த்து மாராஷ்ட பாஷையிற்செய்து தீபரத்னகரப் பெயர் வைத்தனர். இவைகளையெல்லாம் பார்வையிட்டு ஒன்றுக்கொன்று ஏறக்குறைவாயிருப்பவைகளைப் பெரியோர்கள்பாற் கேட்டுச் சரித்திரங்களிற் சற்றும் பிசகின்றி வரிசையாகக் கலியுகவருஷம் 4966, விக்கிரமாதித்த வருஷம் 1922, கிறிஸ்து வருஷம் 1864, சாலிவாகன வருஷம் 1787, ஹிஜரி வருஷம் 1280, பசலி வருஷம் 1273, கொல்லமாண்டு வருஷம் 144, சதுர்வேத சித்தாந்த சபா வருஷம் 24-ல் சிற்றூர் வேங்கடதாசரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, சைதாபுரம் உமாபதி முதலியாரால் பிரசித்தஞ் செய்யப்பட்டது.

அவையடக்கம்.

விருத்தம்.

கசடரிலுங் கசடனெனத் திரிந்துழலு மடியேனுங் கரங்கள் கூப்பி, நிசபதத்தை யளிக்கின்ற நித்தியஷண் முகப்பெருமா நெடிய பாதம், நசையுடனே பணிந்திந்த பக்தவிஜயம் மடியே னவின்றேன் சொற்கள், பிசகிடினும் பெற்றோர்க்குப் பிள்ளைசொலுங் குதலைமொழி பிரிய மாமால்.

தெரியாத தன்மையினன் முன்னோர்க ளுரைத்தபடி தமிழ்ச் செய்யுந், தரமேது மறியாம லிருக்கையிலுஞ் செய்யுமெ

னைத் தயவி லாமற், பெரியோர்க ளிகழ்ந்தா லும் பயனலா திழி வுண்டோ பிறவி மாற்றுந், திரமாள வவுடதமாம் பெரியோர்க டிருவாயின் றீஞ்சொற் ருனே.

என்று பெரியோர்களின் திருவருட் கமலக்கழல்களைப் புகழ்ந்து மகிழ்ந்து பிரமா, விஷ்ணு, ருத்திரன், ஆதிசக்தி, வியாசர், வான்மீகர், சுகர், உத்தவர், நாரதர், பிரகஸ்பதி, அருணன், அக்ரூரன், அனுமான் முதலானவர்களும் இவ் வுலகிலுள்ளோ ரீடேறும்பொருட்டு அவதாரஞ் செய்த சரித் திரங்கள் நிறைந்த பக்தவிஜயத்தைக் கல்வியில் வல்ல வித்து வான்கள் தமிழிற் செய்யுளாக வல்லது வாசகமாகச் செய்யல் வேண்டும். அக்கல்விகளைக் கனவிலுமறியாக் கடையேன் துர்க் குணங்கள் நிறைந்த மடைமையேன் தமிழிற் செய்ய வாரம் பித்தது எப்படியிருக்கிறதெனில், வறுமையுள்ளோ னிரசவா தமும், யாசகனிராஜரீகமும் பொன்னுசையா லலைவோன் சன் யாசமும், இகபோகங்களை யாசித்துப் பகவானை மேலுக்குப் பூசித்துப் பரமபதமடைய விரும்பின பாமரனும் புருஷனை வஞ்சித்துப் பரபுருஷனை நாடியபாவை மதிதனின் மிகுந்த பதிவிரதத் தன்மையையும் இச்சித்ததுபோ லிருக்கின்றது. அன்றி, பஞ்சலட்சணங்களை யறிந்து இஷ்டதேவதையின் வரப்பிரசாதங்கள் பெற்ற கவிராஜர்களுக்கு முன் ஆசியக் கூத்தனுகிய அடியேனுரைக்கும் ஆசியச்சொற்களி லனேகம் பழுதுக ளிருக்குமாயினு மாசியச் சொற்களைப் பலரும் ஆன ந்தமாகக் கேட்டு நகைப்பதன்றி இன்னங்கேட்க விரும்புகிற தைப்போல ஆசியச்சொற்களாகிய விதனையும் விரும்புவார்க ளானுலும் தீனனுடைய ஈனச்சொற்கள் நகைக்கிடமாயிருப் பினும் பக்த சரித்திரங்களென்னும் ஆனந்தவெள்ள மிதைப் பார்ப்போர்மேற்பொங்கி அகமும்புறமும் நிறைந்து தங்கித் தனக்குள் ளாகிரிக்கொண்டு இதிலுள்ள சாரமாச்சரியமென விண்டு துச்சச்சொற்களை யெல்லாஞ் சொச்ச சொற்களாகக் காட்டும் குற்றம் பார்க்கப்புகின் இதில் வரிக்குப் பல குற்றங்க ளிருப்பதற் கையமில்லை. ஏனெனின் "முக்கண்ணுள்ளமுதல் வன் பாடிய ஓர் பாவில் முக்குற்ற மெடுத்தவருமுண்டு, குற்றம் பார்க்கில் சுற்றமில்லை—சுற்றம்பார்க்கிற் குற்றமில்லை" அன் றித் தாய்தந்தையர் தங்கள் மதலைகள் பேசுங் குதலைச்சொற் களிலோரற்புத மில்லாதிருந்தும் சொற்பமா வெண்ணுமற்

கற்பனையும் விற்பனமுமுள்ளதாகப் பாவித்து அன்பாயின்பாய்க்கேட் டுல்லாசமடைந் துடம்புபூரித் தானந்த வாரியில் நிதானந் தப்பித் தாணிறந் திருப்பதைப்போல முத்துக்களை யொத்த பற்பல வற்புதச் சொற்களை வித்தகமாகச் சேர்க்கும் உத்தம கர்த்தவ்ய சர்ச்சனர்களாகிய எந்தைகளே! உங்கள் சொந்த மைந்தனுந் தாசானுதாசனுமாகிய வேங்கடதாசன் தங்கடிருத்தாட் டாமரைகளைச் சிரமேற்சூட்டி தூபதீபங்களைக் காட்டிச் சகல சந்தேகங்களையும் வாட்டி, நிர்பயனென பாராட்டித் தடைவரு மென்பதையோட்டி, அடியாரடிகளை மனதில் நிலைநாட்டிச் சடாட்சரத்தை நாக்கிற் றீட்டிப் பக்தவிஜயத்தைச் சக்தியில்லா மோசகன் வாசமாகச்செய்யுங் கொடியேனாகிய வடியேன் புன்மொழிகளை நன்மொழிகளாக வங்கீகரித்திவனறிவுக்கெட்டின திவ்வளவென்று யோசனையோடு பல ஆசிகள்கூறிப் பழுதிலார் சரித்திரங்களை முழுதும் பார்த்தால் அன்பாக முன்புதோற்றித்தென்பனும் மலைமீதிலேற்றி மனோவிகாரங்களை விலக்கி வினோதம் பல பல துலக்கிப் பரபிர்ம விலாசத்தைக் காட்டிப் பரிபூரணானந்தத்தை நிலைநாட்டி ஆனந்த பாஷ்பங்களைப் பெருக்கி அன்பிலா நெஞ்சினையுருக்கி ஆனந்தசாகரம் புரண்டு அளவிலா வாசைகள் திரண்டு அப்புறம் பேரவாக்குறைத்து ஆனந்தமெப்பொழுதும் நிறைந்து திக்குதேசாதிகளிறந்து திருவிஸ்வரூபத்தில்மறைந்து ஆமைபோலடங்கி ஊமைபோலொடுங்கி ஒரு விகாரங்களுமின்றி பெருமை பாராட்டலுங் குன்றிச் சங்கல்ப விகல்பமுங் கெட்டு அங்கமேலாசையும்விட்டுக் கேவல கைவல்ய பிரமானந்த சொரூப சாக்ஷத்கார சுயம்பிரகாச சுபமங்கள சின்மயதேஜோமய சித்விலாச சித்களமான பரப்பிரமத்திற்சொக்கியிருப்பாம்.

விஷ்ணுபத்தர் வாக்கியம்.

விருத்தம்.

நின்றவொன்றை யுணர்ந்தேனுக்கதனுண்மை யதுவிதுவென்
றொன்றுமொருவர்க் குணரலாகாதுணர்ந்துமேலுங் காண்பதரிது
சென்று சென்று பரம்பரமா யாதுமின்றித் தேய்ந்தற்று
நன்று தீதென் றறிவரிதாய் நன்றாய் ஞானங் கடந்ததே
நன்றாய் ஞானங் கடந்துபோய் நல்லிந்திரிய மெல்லாமீ
தொன்றாய்க் கிடந்த வருபெரும்பா ழுலப்பிலதனை யுணர்ந்துணர்ந்து
சென்றாங் கின்ப துன்பங்கள் செற்றுக்களைந்து பசையற்றால்
அன்றே யப்போ தேவீடு யதுவேவீடு:வீடாமே.

சிவபத்தர் வாக்கியம்.

விருத்தம்.

அஞ்சலென்ற கரதலமுங் கணபணகங் கங்கணமும்
அரைக்கிசைந்த புலியிடையு மம்புலிச் செஞ்சடையும்
நஞ்சுண்ட மணிமிடறு மூன்னூலு மார்பும்
நலந்திகழ் வெண்ணீற் ரெளிவு மறிமானு மழுவும்
கஞ்சமலர்ச் சேவடியுங் கருணைபொழி முகமுங்
காமனையன் றெரித்ததிருக் கண்களொரு மூன்றும்
பஞ்சடியிற் றிருமடந்தை யொப்பனைபா கனுமாப்
பால்வண்ண னுளத்திருக்கப் பயமுண்டோ வெமக்கே.

என்றுரைத்த

பதிக்கவர் சதியுரைத்த வாக்கியம்.

விருத்தம்.

ஆக்கையெனும் புழுக்குரம்பை யணைந்தணையாப் பொருளை
அருளொளியைப் பராபரத்துக் கப்புறமா மறிவை
நீக்கமற மயிர்முனைக்கு மடமறநின் றிலங்கும்
நிறைந்துநின்ற பெருவெளியை நினைவிலெழுஞ்சுடரை
பாக்கியங்கள் செய்தனந்தந் தவக்குறைகண் முடிக்கும்
பழவடியார்க் கருளுதவும் பகுந்துணர் கற்பகத்தை
வாக்குமன விகற்பத்துக் களவுபடா வொன்றை
மாசற்ற பெருவெளியை மனவெளியி லடைப்பாம்.

குருநாதன் திருவடி - அருள்போதம் தருமுடி
பாயிரம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

தோத்திரம்.

ஓம் பரப்பிர்மணேநம, கணேசாயநம, கார்த்திகேயநம, சிவாயநம, விஷ்ணுவேநம, பார்க்கவியேநம, கவுரியேநம, பாரதியேநம, பிர்மதேவாய நம, நாரதாயநம, தக்ஷிணாமூர்த்தியேநம, தத்தாத்ரேய யோகீஸ்வராயநம, ஸ்ரீமத் பரமஹம்ச பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீமத்சங்கராசார்ய பதாம்புஜமே நம, அப்துலாசாயப் திருவடிகளேநம, அல்லிமீயாசரணங்களேநம, மாரி முத்துப் பிரமயோகீஸ்வராநம, குருவேதுணை, குருவாழ்க சுபம்! சுபம்!!

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

பண்டரிபுரத்தின் வரலாறு.

ஸ்ரீமந் நாராயணருடைய பிரதான குணம்போலவும் லம்போதரனணியு மம்பரம்போலவும், சுப்ரமண்யர் திருநாமங்களிலோர் நாமார்த்தம் போலவும், பரமசிவனார் மேனியைப்போலவும், சிதேவியின் ருய்க்குள்ள நிறம்போலவும், உமாமயேசுவரி லலாடத்திலிடும் பொருள்போலவும், நாமங்கள் வீற்றிருக்குமாசனம்போலவும், அஷ்டாக்ஷரன் வாகனம் போலவும், கோதுக்குள்ளாய் வாதஞ்செய்வோர் மனவாதையுட னாதியூதி வேதையுற்றினி போதுமென் ருேதும்படியாகச் செய்யும் சூதம்போலவும், பிரணவாக்ஷரங்களை மாறி இலக்ஷமுருவேற்றும் இராகுவுக்குச் சரியுணவாயாதி வருணர்ஸ்நானஞ்செய்துக் கிருபைகூரத் தமக்குத் தப்பிப் புறம்புசிதலுக்குமுன் மூலாக்ஷாத்தைச் சித்திசெய்துக்கொள்வோரால் ஊறுசெய்யப்பட்ட பேதியின் வெண்டாதுவைப் போலவும், விளக்கமுற்ற அபரங்கள் சுப்பிரமத்தி லாரோபமாய்த் திரிகுணங்களுக்குத் தாயாகிய மாயையில் முதல் முதலுற்பத்தியாய் ஏககுணமாய் எங்குமிருப்பதாய் எங்குமில்லாததாய் சங்கையறப்பார்ப்போர் முன் தங்கியிருந்து அங்கமில்லா மங்குவிற்றுவி சடாதரன் முடியிலொளித்துக்கொண்டே சோமுகாசுரனும் திதிமூதற் சுதனும் பதுங்கவும், மதுகைடவருலாவவும், ஆதிசேஷன் தாங்கவும், இடங்கொடுத்து வாயின்றிது ஓயாமல் அஷ்டதிக்குப் பாலகருட னூரக்கமின்றி ஓசையுடன் பேசிக்கொண்டு, ஒருவனுக் கைக்யமாயிரா வேசைக்கிணையாகியும் கற்பி லொப்புவமையில்லாப் பஞ்சகுணமுள்ள வஞ்சியைத் தரங்கமென்னுங் கரங்களாற் றுவிப்பிடிக்க நீட்டி நீட்டி அகப்படாமல் வாட்ட மடைந்து சதுர்க்குணமுடனெப்போதும் பிரணவாக்ஷரத்தை யுச்சரித்துக்கொண்டிருக்கும் முப்பூவிலொன்றுன உப்பளிக்கும் அப்புப் பெண்ணைக் கூடிக் கர்ப்பமடைந்து பின்னிடைந்து திருமால் வண்ணம் போலவும், சிவனார் குணம்போலவும், பாமரன் மனம்போலவும், அளகனே வாக்கொண்ட புளகக்குளகன் றுயினளகம் போலவும், நிதங்கொண்டு மீண்டு கற்புள்ள பதிவிரதையும், ஆசாரமுள்ள பிரமசாரியையும், தருமத்திற் சிறந்த கிரகஸ்

தனையும், தவத்திற்செழித்த வானபிரஸ்தனையும், ஏகைக பாவமுள்ள சந்நியாசியையும், தன்னை மறந்த ஆரூடஞானியையும், தலைவனிற் கலந்த அவதூதனையும், நீதியால் நிறைந்த வாருகனையும், ஜீவகாருண்ய விரதத்தையும், அரியரபக்தரையும், அறுபத்துநான்கு கலைகள்கற்று மகங்கார மற்றிருக்கும் சித்தரையும், அகமமதை பற்றருக்குஞ் சுத்தரையும், களிக்கடலிற் படிந்திருக்கும் முத்தரையும், திரிகுண சம்பையென்னும் அம்பகத்தைத் திறந்து பார்த்துக்கொண்டே பறந்து உபயகுணன் மோதுவதால் வேதையுற்று அச்சத்தா லரிதலுற்றுத் தங்களுக்கு பின்கல நேரிட்டு இடிபட்டுப் பெரு இரைச்சலிட்டுத் தட்டுக் கெட்டுத் தடுமாறிக்கொண்டே பல திசைகளிலு மலைந்து குலைந்து கிருஷ்ணபகவானுடன் பிணங்குச் சந்திரதிலகம் காகதுண்டம், கேசுர பாடலம், துருமோத்பலம், திலகம், சம்பகம், நாகம் நாரங்கம், நாகரி, மாலதி, மௌல், முல்லை, குல்லைமரவம், கவீரம் தமநகம், அநங்கம், மூண்டகம், வலம்புரி, புற்பதி மூக்கம் கோவலம்பநசம் ஆம்பிரம் நாரீகேளம் அரம்பைகழை வடம் காஞ்சுநம் காகோரி குஞ்சராசநம் மதலை சதாத்லம் மாளுக்கம் கபித்தம் குந்தம் நீபம் பூரணி அஞ்சி முதலிய செடி கொடி தருக்கள் பெருக்கமாய் நெருங்குண்டிருக்கும் திண்டிரவனத்திற் றங்கியிருக்கும் ருக்மணியைக்கொண்டு ஆனந்தங்கொண்டு இதுவே நாம் நாடிவந்த ஸ்தானமெனத் துணிந்து சமுசாரிகளின் வாட்டம் நீங்க தவசிகளின் கோஷ்டமோங்கா ஆசைகொண்டு யாசகஞ் செய்வோர்க் கறமோகுருவா யவதரித்தோனளிக்குந் தானம்போலவும், மோசஞ்செய்யவும் வேசையர் பாசத்துக் குட்பட்டவன் நேசத்துட னத்தாசிகட்கு விசுவாசத்துடன் மாசை யீவதைப்போலவும் மொழிந்து ருக்மணியின் பிணக்கைத் தவிர்க்க உருக்கமாய் வந்து,

சந்திரபாகா நதிக்கரையில் தந்தைதாய்க்குச் சேவை செய்யும் புண்டரீகன் சிரத்தாபாத்தியை நோக்கி ருக்மணிபாற் செல்லு மவாவை நீக்கிப் பீமநதியின் தீரத்தில் நிற்கும் பகவானைத் தேடிப் பாத பரிசத்தை நாடித் தங்காமலோடிச் சந்திரபாகையைக் கூடிப் பகவானடிகளைத் தழுவி அவற்றை கழுவிக் களிப்பால் வழுவி மெதுவாய் நழுவிப்போகும் பகவானுக்கும் சந்திரபாகா நதிக்கும், ருக்மணியிருக்கும் திண்

டாவனத்துக்கும், இடையிலுற்ற பண்டரிபுரத்தின் மகிமையே மகிமை அன்னப்பிரமம் ஜெகநாதமென்றும், பூரணப் பிரமம் திருப்பதியென்றும் தாரகப்பிரமம் சிவாரணையென்றும்; நாதப்பிரமம் பண்டரி புரமென்றும், சாஸ்திரங்கள் முறையிடுவதால் சமஸ்த சுபங்களாற் பூர்த்தியடைந் திருப்பது பண்டரி புரமே யெனக்காட்டியது.

புண்டரீகபக்தன் அண்டையில்வந்த விண்டுவைப் பண்டரிபுரத்தி லிருக்கும் தொண்டர்களை யண்டித் தொண்டுசெய்தன்னமுண்டு உவந்தேனென்ன விண்டு ஆனந்தங்கொண்டு, அக்கண்டங் கடக்காமலிருக்க வரம் வாங்கிக்கொண்டபடியால் பண்டரிபுரத்தின் மாட்சிமைக் கெதுசாக்ஷியாகுமென் றுரைக்கலாம் அன்றி,

பண்டரிபுரத்தின் சமீபத்தில் சதவருஷங்களுக்குமுன் களிப்பெய்தி ஒருஜாமம் பொன்மாரி பொழிந்திருக்க அதற்கெதை ஒப்பெடுத்துரைக்கலாம். இவ்வளவு அலங்காரமுள்ள பண்டரிபுரத்தில் கோபுரங்களும் மாமரங்களும், கொடிகளும், பிடிகளும், மடங்களும், தடங்களும், ஓடைகளும், மேடைகளும், நீதிகளும், வீதிகளும், நதிகளும், பதிகளும், பெருஞ் சோலைகளும், அருஞ்சாலைகளும், சாதுக்கள் கூட்டங்களும், சங்கீர்த்தன கோஷ்டங்களும், வரையுங்குறையுமின்றி யிருக்குமாயின் தாழ்வொன் றிருப்பதென் றுரைப்பதற்குக் கூடுமோ? மாந்தரின் மறுமையைக் கழித்து இப்பூவுலகிற் செழித்து இருப்பது பண்டரிபுரமே யெனப் பிரத்தியட்சமாகப் பொன் மாரியைப் பிழிந்து மேகங்களே காட்டியிருக்க மதபேதமாராயினும் அநுமானங்கொள்ள இடமுண்டோ? இல்லை மேலும் அப்பண்டரி புரத்தில் வசிக்கும் குடிகளின் பக்தியைக் கிஞ்சித்து என்னறிவுக் கெட்டியவரையில் யெடுத்தோதுகின்றேன். அதெப்படியெனில், எட்டு வயது குழந்தைகள் முதல் ஆணும் பெண்ணுமான பெரியோர்களும் அதிக காலையிலெழுந்து சந்திரபாகா நதியையடுத்து ஸ்நான அனுட்டானங்களை முடித்து பகவந் நாமங்களை பலவாறு படித்து ஆங்காங்கு தன்னைமறந்து நடித்து சன்னதியை யடுத்து பாண்டுரங்களை சேவித்து மெத்த அன்புசெய்து ஆலிங்கனாதி வினயங்களால் இன்பமெய்தி பூர்வஜென்ம வினைகளைக்கொய்து சதாகாலமும் இடைவிடாது பஜனைசெய்து ஆனந்தவாரியில்

முழுகி நாளைப் போக்கிக்கொண் டிருப்பார்கள். இது நிற்க வியாபாரிகள் பக்திசெய்யும் விதமெப்படியெனில் யாதாமொரு வஸ்துவேண்டிவரு மவர்கள் பணத்தைக் கொடுக்கும்போது விட்டல விட்டலவென்று பகவந் நாமத்தை நவின்றுகொண் டே பணத்தைக் கொடுப்பார்கள். வியாபாரியும் அப்பணத் தைப் பெற்றுக் கொள்ளும்போது விட்டல விட்டலவென்று சொல்லிக்கொண்டே பெற்றுக்கொள்ளுவார்கள், ஆகையால் அப்பண்டரிபுரத்தை பகவந்நாம பஜாரென்றே சொல்லத் தகும் அப்படிப்பட்ட பண்டரிபுரத்தில் பகவான் சன்னிதி செய்துக்கொண்டு இருப்பதற்குக் காரணம் யாதெனில் புண்ட ரீக பக்தனிமித்தியம் வைகுந்தமா நகரத்தை விட்டுவந்து புண்டரீகனுக்குக் கொடுத்த வரத்தின் பொருட்டு செங்கல்லின் மீது நின்று இரண்டு கரங்களையும் இடுப்பின்மீது வைத்துக் கொண்டு ராதா ருக்குமணி சமேதராகி பக்தர்கள் இஷ்டார்த் தங்களைக் கொடுத்து ரட்சித்துக்கொண் டிருக்கின்றார். பாண்டு ரங்க நாதனிடம் வரம்பெற்றுக்கொண்ட புண்டரீகனென்ப வர் யாவர் அவர் பகவானை பக்திசெய்த விதமெப்படி அந்த விவரத்தைக் கேழ்க்கவேணு மென்றால் அப்புண்டரீக பக் தன் வரலாறு எப்படியெனில்,

புண்டரீகபக்தன் வரலாறு.

சந்திரபாகா நதிக்கும் திண்டிர வனத்துக்கும் நடுவில் பண்டரியென்கிற ஓர் தலமுண்டு; அதில் புண்டரீக பக்தன் என்னும் ஓர் புண்ணியசீலன் பரமாத்மாக்களில் முதல்வனாகி யும் பிரம குலத்தில் பிறந்தவனாகியும், தாய் தந்தையர்க்கு வணங்கி நடப்பவனாகியும், சகல சாஸ்திர புராணங்களில் வல்லவனாகியு மிருந்தமையால் தாய் தந்தையர்கள் சந்தோ ஷித்துப் புதல்வனுக்கு மணம்புரிவிக்க வெண்ணங்கொண்டு தங்கள் மரபில் ஓர் கன்னிகையைப் பேசி மணஞ் செய்வித்து அன்பாய்ப் பாதுகாத்துக்கொண்டு வருகையில் சிலநாள் கடந் தபின் கலியாணப்பெண் தன் கணவனாகிய புண்டரீகனை நோக்கி, ஓ ஸ்வாமி! தங்கள் தாய்தந்தையர்கள் என்னேர மும் என்மீது யேதோ ஒரு குற்றத்தைச் சாட்டி வைத்துக் கொண்டிருப்பது மன்றிப் பார்த்துப்பார்த்து வயிறெரிகின் றார்கள். ஆகையால் இன்றுமுதல் எனக்கவர்களுடன் ஒரு

மித்திருப்பதற்குச் சம்மதியில்லை அவர்களிருவரையும் வேறெங்கேயாகிலுங் குடியேற்றினால் நான் உம்முடன் கூடி வாழ்வேன் அப்படிச் செய்யாவிடில் நானென்தாய்வீட்டைச் சேர்வேனென புண்டரீகபக்தன் தனக்கு மனையாள்மீதிருக்கும் அதிக மோகத்தினால் உடனே தாய்தந்தையர்களை யடித்து வேறகத்திற் குடியேற்றிச் சவரட்சணைசெய்துக்கொண்டிருப்பவனாகியும், மனைவியைப் புகழ்பவனாகியும், மாதாபிதாக்களை யிகழ்பவனாகியும் மனையாள்மொழி மகாவாக்கிய மென்பவனாகியும், ஒருபோதுந் தர்மஞ் செய்யாதவனாகியும், ஒருதரமாகிலும் பகவான் றிருநாமத்தை உச்சரிக்காதவனாகியும், சாதுக்களைக் கண்டால் தூஷிப்பவனாகியும் தையலரைக் கண்டால் பூசிப்பவனாகியும், வேசையர்வலையிற் சிக்கினவனாகியும், மிகவும் மோகத்திற் சொக்கினவனாகியும், ஈவதை விலக்குபவனாகியும், எளியோரை யெதிர்ப்பவனாகியும், கோள் சொல்லுவதிற் சிரேஷ்டனாகியும், குலத்திலும் சிரேஷ்டனாகியு மிருப்பவன்.

மூன் சென்மத்திற் செய்திருந்த தபோ பலத்தாலோ இவன் தந்தைதாய் செய்யும் மாதவத்தாலோ? பிரஜைகளின் பலவந்தத்தாலோ? பண்டரியில் விண்டுவானவர் வந்திருக்க வேண்டுங் காரணத்தாலோ? மற்றெவ்வகைப் புண்ணியத்தாலோ? ஓர் புராணிகர் காசிகாண்டத்தை வாசிப்பதைக் கேட்க விசுவாசத்துட னவ்வூரிலுள்ளோ ரனைவரும் போகிறதைக் குறித்து தானும்போக வெண்ணங்கொண்ட புண்டரீக னில்லாள் ஓர் தினந் தன் மணாளனைநோக்கி, ஓ ஸ்வாமி? பகீரதியின் மகத்துவத்தையும் வாரணாசியின் மேன்மையையும் கேட்க விருப்பங்கொண்டேனாதலாற் றேவரீர் கருணைகூர்ந்தின்றைக்கு காசிகாண்டத்தை பாராயணஞ்செய்யுமிடத்திற் கென்னை யழைத்துக்கொண்டு போகவேண்டுமெனப் பிரார்த்தனை செய்ய,

புண்டரீகன் அடி பேதாய், அறிவில்லாக் கோதாய் வீட்டிற் பற்பல வேலைகளிருக்க அதை விடுத்துப்போய் புராணத்தைக் கேட்டுவருதல் அன்னமகப்படுமா? சொர்னமகப்படுமா? கர்மிகள் புண்ணியக்கதையை கேட்பதாற் பிரயோசனமேதுவெனெனின் ஒன்றைக் கேட்டபின் அவ்வழியில் நிற்கவேண்டும் சிரவணஞ்செய் தம்மார்க்கத்தில் நெஞ்சகத்தை நிலைநி

றத்தாதவனுக்கு நரகமே பிராப்தியாகும் புராணத்தை ஓதும் ஆதிவருணனே ஓதினபடி சாதனஞ்செய்யக் கூடாமற் றடுமாற்றத்துட னிருக்க நம்மாற் கூடுமோ? ஓதினபடி சாதனஞ் செய்யாப் பேதையரினும் அதிபேதை யாருமில்லை யென்னும் பழமொழி மெய்யல்லவா? காசிகண்டத்தி லென்னென்ன வைக்கியங்க ளிசைத்திருக்கின்றனவோ அரையன் பறை சாற்றின வண்ணம் நடக்கா மாந்தர்க்காக்கினை கிடைப்பது போலும் பகவானுடைய பறையென்னும் புராணாதிகளைக் கேட்டவண்ணமே நடக்கவேண்டும் இன்றேல் குற்றத்துக்காளாக்கிக் கடவுளுடைய ஆக்கினைகட் குட்படவேண்டும் ஆதலால் நான் வரமாட்டேனென்று மறுக்க,

அத்தெரிவை, ஓ ஸ்வாமி! பரிசவேதியினால் அயமிரணியமாமன்றி மண்ணுங்கல்லும் மழையாகாததுபோலப் புராணங் கேட்கும் பலரில் ஒருவனே அதினர்த்தத்தைக் கிரகித்து நல்வழியில் நடந்து தியமார்க்கத்துக்குக் கிடைத்து மோக்ஷார்த்தத்தை யடைவான் மற்றவர்களிற் சிலர் நாடோறுங் கேட்கக் கேட்கத் துர்க்குணங்கள் நீங்கிச் சற்குணத்திற் பிரவேசிப்பார்கள். சிலர் பாபகர்மங்கள் செய்யக் கிஞ்சித் தச்சமுற்று நாட்செல்லசெல்ல மேற்குணத்திற் பிரவேசிப்பார்கள் சிலர் சாபங்களை முன் செய்தாலும் சிரவணஞ்செய்யும் வேளைமாத்திரம் பிரயோசனப்பட்டு மறுஜன்மத்தில் நற்குணமடைவர். இப்படியிருக்க நீர் கேட்டபடி நடக்கச் சக்தியுள்ளவனே புராணசிரவணஞ் செய்யவேண்டுமென் றுரைப்பது விசித்திரமே அசிரத்தையுடன் புராணங்கேட்டாலும் புண்ணியலோகங் கிடைக்குமென்று புராணங்கள் முறையிடுகின்றன எனக்கு விவாகமாகுமுன் நாடோறும் புராணங்கேட்பதிலேயே நாள்கழித்தேன் விவாகமானபின் பதியே. தெய்வமாதலால் உமக்குச்செய்யும் பணிவிடையே சகல நோன்புகளுமெனப் புராணங் கேட்பதையும் விடுத்தேன் எனக்கு உம்மிஷ்டபடியே நடக்கும் அடக்க ஒடுக்கமே மோக்ஷமளிக்கு மார்க்கமாகும் உமக்கே சாஸ்திரங்கள் கேட்கவும் அதின் வழியால் நடக்கவும் சிரத்தை பூரணமாயிருக்கவேண்டும் அன்றி நீர் புராணங்கேட்க வந்தாலொழிய நான் போகமாட்டேன் காரணப் பதியைப் பிரிந்துபோய்ப் பாவை புராணங் கேட்பது பகவானைப்புகழ்ந்து பரமசிவனை இகழ்ந்ததை பொக்குமென்

றழைத்துக் காதலன் மனதைக் கரைத்துப் பலவந்தமாயழைத்துக் கொண்டுபோ யோர்சார்பிலிருந்து கேட்க விருப்பங் கொண்டிருக்கையில்.

புராணிகர் சகரரைக் குறித்துப் பகீரதன் பரமசிவனை நோக்கித் தவஞ்செய்ததும் பகீரதியைக் கொண்டுவந்ததும் பஸ்பமாய்ப்போன சகரர்மேல் கங்கைபிரவாகித்ததும் சாத்வியின் பரிசத்தால் சகரர் புண்ணியலோக மடைந்ததும் கோஹத்தி சிசுவத்தி பிர்மத்தி ஸ்திரீஹத்தி குருஹத்திமுதலானவைசெய்யும் கொடும்பாவிக ளானுலும், மந்தாகினியில் ஸ்நானஞ்செய்தால் பாவனராய்ப் போவார்களென்றும், அப்படி அக்கங்கை பகீரதனுக்கு வரமளித் திருக்கிருரென்றும், வாரணசியில் மரணமடைந்தவர் வலதுசெவியில் ஸ்ரீவிஸ்வநாதர் தாரகமந்திரத்தை உபதேசஞ் செய்கிருரென்றும்; அதனுல் மோட்சமடைகிருர்க ளென்றும், எப்பொழுதும் சுரநதியின் தீரத்தில் முனீஸ்வரர்கள் வாசஞ்செய்கிருர்களென்றும், அவர்களின் பாதங்களை பரிசுத்த புண்ணியர்கள் பூசித்து அனேக ரிருக்கிருர்களென்றும், பிர்மாதி தேவதைகளெல்லாம் மாருரூபங்கொண்டு தவஞ் செய்கிருர்களென்றும்: விரதத்திற் சிறந்தோர்களுக்கு இப்போதுந் தரிசனந்தருகிருரென்றும் சொல்லக்கேட்ட,

புண்டரீகபக்தன் உடனே எழுந்து புராணிகரை பணிந்து காசி யாத்திரைக்குப் பிரயாணமாய்ப் போகையில் அவர் சதிபதியை வணங்கி அடியாளையு மழைத்துக்கொண் டேகுமென்று கூடவேதொடர்ந்து போகையில் அதுதெரிந்த புண்டரீக பக்தனையீன்ற தாய்தந்தை வழிக்குத்தேவையான சாமக்கிரிகைக ளேந்திக்கொண்டு தநகனுடன் வாரணசிக்குப் பிரயாணப்பட்டு மார்க்கத்தில் தங்குமிடங்களில் மகனும் மருகியும் அலுப்புற்றிருந்தாலும் வயிரமேறிய மரம்போற் ருங்களேபாக்ய முதலானவைகள் செய்தூட்ட உண்ணும் குமாரனும் அவன் மனைவியும் விருத்தர்கள் பளுவேந்திக்கொண்டு வருகிறதையும் அன்னபாகங்க ளமைத்துத் தருகிறதையும் கவனத்திற் கொள்ளாமல் வாரணசிக்குப் போகவேண்டுமென்கிற எண்ணத்தையே பெரிதெனமதித்துக் காசி விஸ்வநாதரையும் விசாலாட்சியம்மையையும் வரநதியையும் துதித்துக் கொண்டுபோகையில்,

மனைவி நடக்கச் சக்தியற்றதாற் றோள்மேலேந்திக்கொண்டு செல்லும்போதும் மாதா பிதாக்களுடைய வருத்தத்தை மனதிற் றரிக்காமல் மறந்து பரந்து காசியையடைந்து குக்குடரிஷி வாசஸ்தானமாகிய அசியென்னு மிடத்திலிறங்கி குக்குட மகாரிஷியின் மகிமையைப் பலருஞ்சொல்லக் கேள்விப்பட்டு அவரைக்காணுதற் கவாக்கொண்டு ரிஷியிருக்கும் அகத்திற்சென்று அவரைக் காணுமல் அங்கு பணிசெய்துக் கொண்டிருக்கும் கங்கா யமுனா சரஸ்வதி நர்மதை கௌதமி யெனும் ஐவரையும் பார்த்துக் கரங்களைச்சேர்த்து அவர்களுடைய அழகு சுந்தரத்தையும், ஆபரணங்கள் பூண்டிருக்கும் அலங்காரத்தையும், விசித்திரமான ஆடைகளணிந்துக் கொண்டிருக்குஞ் சிங்காரத்தையும்கண்டு ஆனந்தங்கொண்டு; ஓ ஓ இவர்கள் நரலோக ஸ்திரீகளா? சுரலோக ஸ்திரீகளா? ஆ ஆ அகலிகை, துரோபதை, சீதை, தாரை, மண்டோதரி யென்னும் பஞ்சகன்னிகைகளாக விருக்கவேண்டும் இன்றேல், மூதேவி, சீதேவி, பவானி, பாகீரதி, பாரதியா யிருக்க வேண்டும் இன்றேல், பஞ்சகங்கைகளா யிருக்கவேண்டும். இன்றேல் அநுசூயை, ரேணுகை, பிருந்தை, இந்திராணி, அருந்ததியா யிருக்கவேண்டுமெனத் துதித்து, வேர்வைகள் சிந்த பலகாரபாகங்களை அதிக பரபரப்போடுஞ் செய்கிறதை குறித்து வாட்டமடைந்து மிகவுமிடைந்து, ஓ புண்ணியபதிகளே நீங்கள் தேவலோக கன்னிகைகளைப் போலவும் இராஜஸ்திரீகளைப்போலவுந் தோற்றப்படுகிறீர்களே இப்பணிகள் செய்ய பாங்கிக ளில்லாமற் போனர்களே? உங்கள் கைகள் நோக இனி பாகங்களியார்க்காகச் செய்கிறீர்களோ? உங்களிருப்பிட மேதோ? நாமகரண மேதோ? அடியேனுக் குறைப்பதன்றி மெலிவான கரங்கள் நோக மிருதுவான பாதங்கள் வருந்தச் சிங்காரமான அங்கங் குலுங்கச்செய்யும் இம்மடப்பள்ளி வேலையைச் செய்கிறதை நிறுத்துங்கள், சங்கையைத் திருத்துங்கள், உங்களைவரால் செய்யப்பட்ட பாகங்கள் நானே செய்வேன் மறுப்பீரேல் என்மனைவியை கொண்டியற்றிவைப்பேன் ஐயோ தூமத்தாற் சோமத்துக் கிணையான உங்கள் வதனங்கள் கருகிபோகின்றதே? அனலாங்கம் வேகின்றதே? என புண்டரீக பக்தனைப்பார்த்த பஞ்சகங்கைகள் மூனீஸ்வரர்களுக்குங் காணுதற்கரிதான நாம் மாதா பிதாவை வாட்டப்

படுத்தின கோட்டனுக்கு புலப்பட்ட காரணமேது? இது யார் செய்தகுது? என்றெரிந்து கோபம்விரிந்து அடா துன்மார்க்கா! அறிவிலா மூர்க்கா! பஞ்சமாபாதகா! எமகாதகா! சீக்கிரம் அவ்விடம்விட்டுப் போவென்றதட்டும்போது புண்டரீகனன்புடன் பணிந்து, ஓ புனிதவதிகளே! உங்களுடைய நாமதேயத்தையும் யார்க்காக இப்பாகம் செய்கிறீர்களோ? அதையும் திருவாய் மலர்ந்தருளுவீராயின் இக்கணம் இவ்விடம் விட்டுப் போகிறேனெனச் சாற்றப் பஞ்ச கங்கைகள் தங்கள் நாமத்தைப் புகன்று குக்குட மகாரிஷிக்கே இப்பாகங்கள் செய்கிறோ மென்றறைந்து இனி யிருப்பிடத்திற்குப் போவென்றுரைக்கப் புண்டரீகபக்தன் நீங்கள் தேவலோக ஸ்திரீகளா? உண்மையை சொல்லுங்களென பஞ்சகங்கைகள் கோபித்து நீ முன்னம் வினவின இரண்டு சங்கைக் குத்தரஞ் சொல்லிவிட்டோமாகலாலினி பன்னிப் பேசினல் சென்னியைப் பிடித்து இத்திரிபதைகையிற் றள்ளிவிடுவோம் போபோவென, புண்டரீகன், ஓ ரூபவதிகளே! பண்டரியிலிருந்து பிரயாணப்பட்டு நெடுநாள் நடந்து அநேக தேசங்கள் கடந்து இக்காசியை யடைந்து விந்நதியில் ஸ்நானஞ் செய்யவே யாம் வந்தோம் உங்கள் கரங்களா ளென்னங்கத்தை இக்கங்கையிற் றள்ளினுல் யான்செய்த பஞ்சபாதகங்கள் உங்கள் சொந்தமாகும், பாகிரதியிலிறந்தார் பவித்திர மாவதற்கோர் தடையுமுண்டோ? கங்கையில் ஸ்நானஞ் செய்யாமல் தரிசன பலத்தாலேயே பஞ்சகன்னிகைகட் கிணையான உங்கள் தரிசனம் பெற்றேன் பாகிரதியில் மடிந்தா லெனக்கென்ன பேறு கிடைக்குமோ யானறிகிலே னெனப்பணிந்து பலகாரங்கள் செய்வதற்காகத் தன் நாயகியை விளித்தார்.

அதற்குப் பஞ்சகங்கைகள், அடா மடையா கடையா! ஒருவரறிந்தா லுலக மறியுமெனும் பழமொழிப்படிச் செய்ய யோசித்தாய், இனி இவ்விட மெங்களை வாராமற்செய்யதானு பூசித்தாய், உன்மனைவியை இங்கழைக்கவே வேண்டாம், நீயுமிங்கு நிற்கவே வேண்டாமென் றுரைத்துக்கொண்டே அதிதுரிதமாய்ப் பாகங்கள் செய்யும்போது, புண்டரீகன் கஷ்டத்துக் காற்றமாட்டாமல் பின்னுந் தன்மனைவியை விளித்தார்.

பஞ்சகங்கைகள், அடா மூரடா! எங்களை கண்டுகொண்ட திருடா! உன் மனைவி இங்குவந்தால் நாங்களிவ்விடம் விட்

டிப்போதே நீங்குவோம், குக்குட ரிஷிக்குப் பக்குவபாக மில்லாமையாற் கோபிப்பார், உன்னைச் சாபிப்பாரெனப் புண்டரீகன் குக்குடரிஷி எங்கே போயிருக்கிறாரெனப் பஞ்சகங்கைகள் தாய் தந்தையர்க்குச் சேவைசெய்யப் போயிருக்கிறாரெனப் புண்டரீகன் உண்மைஞானந் தெரிந்த ரிஷீஸ்வராரும் தாய் தந்தைக்குச் சேவை செய்யப்போனாரா? மாதாபிதா தாரம் புத்திரர் வாஞ்சை நீங்கினவர் அன்னை தந்தைமேல் வாக்கொள்வாராவெனச் சங்கைசெய்ய,

பஞ்சகங்கைகள், அடா புண்டரிகா! அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வமென்ப தறியாயோ? மாதாபிதா குரு தெய்வமென்னும் நான்கில் மாதாவே முதல்கண்ட தெய்வமாகும், இரண்டாவது போஷணைசெய்த பிதாவாகும், மூன்றாவது ஞானமார்க்க மறிவிக்கும் குருவாகும், நான்காவது மோக்ஷமளிக்குந் தெய்வமாகும், முதற்படியிலேறாமல் மூன்றாம்படியிற் பாய்வாருண்டோ? அதுபோலப் பத்துமாதஞ் சுமந்து பலவவஸ்தைகளாற் பீடிக்கப்பட்டுப் பிரசூதவேதனையால் ஸ்மரணைகெட்டுப் பெற்றுக் களித்துத் தன்னுதிரத்தையூட்டி வளர்த்தமாதாவும், பலபாடுபட்டுத் தேகசுகத்தைவிட்டுப் புதல்வனையே முதல்வனாக எண்ணித் தன்னுயிரைபோற் பாதுகாத்து வளர்த்தபிதாவும், சுமைசுமக்கவும், எவ்வர்னமுள்ளவனாகிய உன்னுடன் நடக்கவும், இரங்குமிடங்களில் பாகஞ் செய்துடைக்கவும்செய்த கொடிய பாதகனாகிய உனக்கு மாதா பிதாக்களுக்குச் செய்யும் பூசையின் மகிமைதெரியுமோ? முதுமைப் பருவமுள்ள தாய் தந்தையரைக் கஷ்டத்துக்குள்ளாக்கி இடையில்வந்த மனையாட்டியைச் சுமந்துகொண்டு வந்த, நீ அன்னை தந்தைகளினடிகளி னர்ச்சனையின் பலனையறிவாயோ? அறியா பக்தர்களுக்கும் ஜீவன் முக்தர்களுக்கும் பக்கனென்கிற பேர்கிடைக்காமல் மாதாபிதாவைத் தோள்மேலேந்திகொண்டு திரிந்தவனுக்கு குருபக்தனென்ற பேர்கிடைத்ததை நீ கேட்டிலையோ? சாத்திரங்களிற் பார்க்கவில்லையோ? ஸ்ரீரகுநாயகர் தனக்குக் குருவாகிய வசிஷ்டர் தந்தையாகிய தசரதர் முதலானவர்களுடைய வாக்கியத்தைக்கடந்து மாதா வாக்கியத்தைப் பரிபாலனஞ் செய்யவில்லையோ? அருந்ததி கொழுநன் கௌசிகன் முதலானவர்கள் நெருக்குண்டிருக்குஞ் சபையில்வந்த ஸ்ரீராமர் முனீஸ்வரனையும் ஞானசாரிய

ளையும் வணங்காமல் முன்னந் தந்தையை வணங்கிப் பிதாவின் மேன்மையைச் சபைக்குத் தெரிவிக்கவில்லையோ? ஒருவனன்றி இருவர் புணர்தல் மகா குற்றமென் றறிந்திருந்தும் மாதா வாக்கியத்தால் ஐவரும் ஓர் கன்னிகையைக் கூடியிருக்கவில்லையோ? பரஸ்திரீ கமனஞ் செய்வோனுக்குப் பரகதியில்லையெனத் தெரிந்திருந்தும் மாதாவாக்கியத்தைத் தடுக்கக் கூடாக் குறையால் சகோதர ஸ்திரீகளை வியாசர் புணரவில்லையோ? இவ்வளவு மேன்மையான மாதா பிதாக்களை நையச் செய்த வெய்யனாகிய உன் முகத்தைப் பார்க்கலாகுமோ? குரு தெய்வம் தாரம் புத்திரர் மித்திரர்களை வெவ்வேறு சம்பாதித்துக்கொள்ளலாம் மாதா பிதாவைச் சம்பாதிக்கக் கூடுமோ? கர்ப்பத்தில் வைத்துக்கொண்டு ஓர்பாதத்தை எடுத்துவைத்து நடந்ததற்குச் சதைகளைக் கொய்துக்கொய்துக் கொடுத்தாலும் நிகராகுமோ மார்மீதும் தோள்மேலும் மடிமேலும் வைத்துப் பாதுகாத்த பிதாவுக்குத் தநயன் செய்யும் கைமாறீதெனச் சாஸ்திரங்களி லுரைக்கின்றதோ? (பெற்றமனம் பித்து பிள்ளைமனங்கல்லு, கடந்தஞானியுங் கடப்பரோ மக்கள்மேற்காத) லென்னும் பழமொழிகள் புத்ரா பேக்ஷையைக் காட்டியிருப்பதால் இவ்வளவு அன்புள்ள மாதாபிதாக்கள் மனம் நோக நீகாசியாத்திரை வந்தாலோர் பிரயோசனமுண்டோ? அற்பசுகத்தைக்கொடுக்கும் சொற்பமான துகையைச் சுமந்து கொண்டுவந்த தோஷியாகிய உன்னுடன் பேசவுங்கூடுமோ? (மாதாவையொருநாளும் மறக்கவேண்டாமென்றும், தந்தை சொன் மிக்க மந்திரமில்லையென்றும்) சொல்லும் பழமொழி மெய்யா பொய்யா மாதாபிதாக்கள் சேவையிற்சிறந்த குக்குடரிஷிக்குப் பஞ்சகங்கைகளாகிய நாங்கள் பணிவிடைசெய்வது பிரத்தியட்சமாய்ப்பார்த்த நீர்ச்சங்கை செய்யக்கூடுமோ? வென்றுரைத்துக்கொண்டே சகலபாகங்களுஞ் செய்துமுடித்து அந்தர்த்தானமாய் மறைந்தார்கள்.

அவ்வாச்சரியத்தைக் கண்ட புண்டரிக பக்தன் உடனே அவ்விடம் விட்டு நீங்கித் தந்தைதாயிட மடைந்து பாதங்களில் வந்தனங்கள்செய்து காவடிகளைக் கட்டித் தாய்தந்தையரை அதிலிருத்தி தோள்மேலேந்திக்கொண்டு சாமக்கிரிகைகளை மனையாள் சுமந்துகொண்டுவரப் பண்டரியையடைந்து ஒருநாள் தங்கி மறுநாள் அப்படியே புறப்பட்டுக் குருபக்

தனிவனேயாமெனத் திரிலோகங்களும் போற்ற வாரணாசியை யடைந்து கங்கையிற் றாய்தந்தையரை ஸ்நானஞ்செய்வித்து அவர்கள் பாதநீற்ருடி அவர்களுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகள்செய்து முடிந்தபின் மாதா பிதாக்களிடம் விடைபெற்றுக்கொண்டு,

குக்குடரிஷிகள் ஆசிரமத்தையடைந்து அம்மகாரிஷிக்கு வந்தனம்புரிந்து அவர் மகிழ்ச்சியுட னுபதேசித்த மகாவாக்கிய மர்மங்களை அறிந்துக்கொண்டு ஆனந்தங்கொண்டு அவரிடம் தனக்குற்ற சந்தேகங்களையெல்லாம் நிவர்த்திசெய்துக்கொண்டு பூரணுபிஷேகம் பெற்றுகொண்டு அவரருளால் தாய் தந்தையர்பாற்சென்று தனக்குக்கிடைத்த பிர்மானத்தத்தின் மாட்சிமையையும் மோட்ச சாட்சியையும் புகன்று, அவர்களைக் காவடியிலேந்திக்கொண்டு பண்டரியையடைந்து தாய் தந்தையரை நாடோறு மதிகாலையிற் சந்திரபாகா நதிக்குக்கொண்டுபோய் ஸ்நானஞ்செய்வித்து பாதபூசை முதலானவைகளும் செய்து வீட்டிற் கொண்டுபோய் ஷட்ருசிகளான பதார்த்தங்களைப் புகட்டிச் சயனிக்கச்செய்து பின்புதான் புசித்துப் பிர்மக்ஞான நிஷ்டையிற் செழித்திருந்தார் இப்படியிருக்குங்காலத்தில் பண்டரபுரத்துக்கருகான கோபால வூரிலிருக்கும் சந்த்ராவளியெனும் ஓர் உத்தமி பகவானையே விவாகம் செய்வேனன்றி மற்ற பரமசிவனுகிய ரெனைக்குறித்துத் தவஞ்செய்தாலும் அவர்களைக் கனவிலும் நினையேனென்றுறுதிகொண்டு கிருஷ்ண பரமாத்மாவினுடைய நாமமன்றி வேறு நாமத்தை மறந்தும் நினையாமல் உக்கிரமான தபஞ்செய்துக்கொண்டு 30-வயது பரியந்தம் விவாகமின்றி இருக்குங் காலத்தில் அப்புண்ணியவதியைச் சோதிக்கவேண்டிப் பகவான் பரமசிவனு ருருவுடன்போய் அவ்வரிவையின் முன்னின்று, ஓ பெண்ணே! உன் தவத்துக்கு மெச்சினேன் உனக்கு வேண்டியவரத்தைக் கேளெனத் திருவாய் மலர்ந்தருள, அப்பத்தினி நிடலாக்ஷனைப் பணிந்து, ஓ ஸ்வாமி! பகவான் வந்து என்னை விவாகஞ் செய்யும்படியான வரமேயெனக்குத் தேவையெனத்தொழப் பார்வதிபாகன் ஓ மாதரசே! பகவானை குறித்து இத்தனை நாள் பரியந்தந் தவஞ்செய்து நிஷ்பிரயோசனமாளுய் ஏனெனின், ஸ்ரீ கிருஷ்ணர் பவுத்தாவதாரமாய் மௌனஸ்திதியை யடைந்திருக்கிருரன்றி, ருக்குமணி அவ

ரிணே பிரியாம லிருக்கின்ருளாதலால் என்னே விவாகஞ்செய்துக்கொள்ளென்றறைய அவ்வாக்கியத்தைக்கேட்ட அப்பதிவிரதை மிகவும் முனிவு கொண்டவளாய், ஓஸ்வாமி! பகவானுக்கு மாலேயிட நினேத்த என்னே நீர் கோருவதுத்தமமோ? ஒருவனுக்கைக்யமானபின் மற்ருெருவனே மறந்தும் நினேக்கலாமோ? விபசாரியைப்போன்ற அபசாரி இவ்வுலகிலுண்டோ? பிறர் மனேயாளே இச்சிப்பவர் ரட்சிக்கபடுவார்களோ? தாருகாவனத்து ரிஷிகளின் பத்தினிகளே கற்பழித்தபோ தம் மகாமுனிவர்களிட்ட சாபம் போதாதோ? என்னுடைய சாபமும் பெறவேண்டுமோ? அத்திரிமகாரிஷியின் களத்திரமான அநுசூயாதேவியைச் சோதிக்கப்போய்ப் பங்கமடைந்ததை மறந்துவிட்டீரோ? காமத்தால் நியமத்தை துறந்துவிட்டீரோ? வென்றுரைக்கும் வார்த்தைகளேக் கேட்ட ருத்ரரூபத்துடன்வந்த பகவான் களிப்புற்று; ஸ்ரீகிருஷ்ண பரமாத்மஸ்வரூபமாய்க் காட்சிக்கொடுத்து, ஓ பெண்ணே! உன்கற்பை சோதிக்கும் நிமித்தமே மயேஸ்வர ரூபத்துடன் வந்துன் மனதைக் கொதிக்கச்செய்தேன், ஓ பதிவிரதா சிரோன்மணி! என்னேக்குறித்து நெடுநாளாய்த் தவஞ்செய்தகாரணமேதோ? உனக்குத் தேவையான தேதோதென கேட்குந் தருவாயில் ருக்மணியம்மை பகவானேக் காணுமல் பலவிடங்களிற்றேடி அங்கு வந்தடைந்து தனித்துப்பேசு மிருவரையும் பார்த்து குரோதம்மேலிட்டுப் பகவானேப் பணியாமல் நிற்கும்போது அவ்வுத்தமி, ஆ ஆ என்னுண்டவனிடம்வந்து பேசாமலும் பணியாமலும், இந்த ருக்மணி அகமடைந்திருக்குங் காரணமேன், ஓ ராசன்புத்திரிக் கிவ்வள் வகங்கார மிருக்கலாமோ? 16,000-கோபிகாஸ்திரிகளி லொருத்தி தானேயென மதித்துத் துதிக்காமலும் தொழாமலும், எழாமலும் பகவான் கேட்ட வினுவுக்குத்தரஞ் சொல்வதற்குக்கூடாமலும், இவளே னித்தருணத்தில் வந்தாளெனுங் குரோதத்தால் ஒருவார்த்தையுமாடாமல் மௌனமாயிருந்தாள் பகவானே இவருடைய மனோபாகத்தை ஆராய்வதிற் சித்தத்தைவைத்து ருக்மணியை அழைக்காம லிருந்துவிட்டார் ருக்மணியோ இவர்கள் குற்றவாளிக ளானபடியினுலேயே தேள் கொட்டிய திருடனேப்போலிருக்கின்ருர்க ளினி யிவர்களேப் பார்க்கக் கூடாதெனத் தீர்மானித்துத் தவஞ்செய்ய யோசித்து ரிஷியாசிர்மங்களே

யாசித்துத் திண்டிரவனத்திற் பிரவேசித்து அகோரமான தவஞ்செய்யத் தொடங்கினாள்.

பகவான் ருக்மணியின் பிணக்கைத் தவிர்த்து வருகிறேனென் றம்மாதைச் சம்மதப்படுத்தித் திண்டிரவனத்துக்கும் பண்டரிக்கும் சமீபத்திலோடும் சந்திரபாகா நதியிலிறங்கி அக்கரையிற்சென்று தாய்தந்தையர்க் கன்பாய்ப் பூசைசெய்யும் பூரண பிர்மக்ஞானியாகிய புண்டரிக பக்தனைக்கண்டு ஆனந்தங்கொண்டு ருக்மணியைமறந்து அசைவற்று நின்று ஓ புண்டரிகா! தாய் தந்தையர் சேவைசெய்வதற்கு நீயொருத்தனே யிவ்வுலகிற் பிறந்தாய், குருபக்தனுனக்கிணை யென்றுரைக்கத்தகாது உனக்கு நீயே ஒப்பாகும் உன்னுடைய விரதத்துக்கு வந்தேன் அரியசேவை தந்தேன் சீக்கிரமுனக்குத் தேவையானவரம் நீ கேட்பாயாக வெனத் திருவாய்மலர்ந்தருளியதைக் கேட்ட புண்டரிக பக்தன் பகவானை நோக்காமல் நீவிரியாரென்று வினவ, பகவான் ஓ ஒப்பில்லா வுத்தமனே! வசுதேவருக்கும் தேவகீ தேவிக்கும் மகவாய்ப்பிறந்த பகவானென்றறிந்துக் கொள்ளெனப் புண்டரிகபக்தன், ஓ அரிபாதத்தாமா! நான் நினையாதிருக்கவு மும்முடைய காட்சிதந்தீரோ? சேற்றில் வெகுநேரமாய் நின்றுநொந்தீரோ! இதோ இச்செங்கல்லின்மேற் சற்றே நிற்பீராயின் மாதாபிதாக்களுக்குச்செய்யும் பூசையை முடித்துத் தேவையான வரங்கேட்டுக் கொள்ளுகிறேனென் றுரைத்து, அன்னை தந்தைகட்கன்புடன் பூசை செய்து முடிந்தபின் அவர்களைக் காவடியி லேந்திக்கொண்டு பகவானை நோக்கி, ஓ ஸ்வாமி! என் தாய்தந்தையை வீட்டிற் கொண்டுபோ யன்னமூண்பித்து வருகிறே னதுபரியந்த மிங்கேயிருக்கிறேனென்கிற வரம் முன்னமளித் தனுப்புமையா வெனத்துதிக்கக் கருணாநிதியான பகவான், ஓ புண்டரிக பக்தனே! நீ வருகிறபரியந்தம் ஓரடியும் பேர்த்துவைக்காமல் உன் வரவுக்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றேன் சீக்கிரம் வருவாயாக வென்றுக்யாபிக்கப் புண்டரிக பக்தன் தொழுது வீட்டிற்சென் றன்னையப்பனுக் கன்னமுதலானவை யூட்டிப் பாராட்டி, ஓ என் தாய் தந்தையே! ஸ்ரீ அகிலாண்டகோடி பிர்மாண்ட நாயகராகிய ஸ்ரீமந்நாராயணர் சந்த்ரபாகா நதி தீரத்தில் எழுந்தருளி யிருக்கின்றார் தேவரீர்க ளுத்தரவுகொடுத்தாற்போ யவரிடம் வரம் பெறுகிறேனெனப் பணிய,

அம்மாதா பிதா, ஓ எங்களரும்பாலகனே! யொருவன் தரிசித்து வரங்களைப் பெற்றுக்கொள்ளுதலாற் பிரயோசன மேது ஆதலால் இவ்வுலகிலுள்ள சகலவிதமான பேர்களுந் தரிசித்துக் கண்காட்சி யடையும்படியான சூட்சிசெய்வாயா கில் மாட்சிமை யடைவாயென் றறையப் புண்டரீக பக்தன் மகா பாக்கியம் தங்கள் கட்டளையின்படியே செய்வேனென் றவர்கள் தாள்களிற் றொழுது இனி விண்டுவை இப்பண்டரி யிற்றானே தங்கச் செய்கிறேனென் றுன்னி வீட்டைவிட்டுப் புறப்பட்டு,

ஓ ஓ ஸ்ரீமந்நாராயணரைக் கண்ணாரக்கண்டும் ஆனந்தங் கொண்டும் இனிபெறும்படியான வரமும் வேண்டியதோ வென் றுரைத்துக் கொண்டேபோய்த் தந்தைசொன் மிக்க மந்திரமில்லையெனத் தூரத்தில் நின்றபடி பகவானைப் பார்த் துக் கரங்களைச் சேர்த்து, ஓ பகவானே! எனக்குத் தேவை யான வரந் தாங்க ளிப்படியே நின்று சகலருக்குந் தரிசனந் தந்து காத்து ரட்சிப்பதே யென்றுரைத்துப் பகவானருகிற் சென்றால் வேறு வரந்தந்து மறைந்தருளுவா ரிதனாற் றந் தைதாய் வாக்குக் கானிவரும் ஆண்டவன்முன்வத் தகன்று லபராதத்துக் குட்படவேண்டுமென் றுன்னிப் பலவாறாக வெண்ணிப் பகவானைப் பார்த்தபடி சமாதி நிஷ்டைசேர்ந்து பகிர்முகத்திலிருந்து போந்து பிர்மானந்தத்தாற் களிகூர் ந்து சகல சங்கடங்களுந் தீர்ந்து தன்னைமறந்து தேகஸ் மரணை யிறந்து கொல்லைக்குக் காவலிருந்த சடபாதரைப் போலசைவற்றுக் கைகளைக் கூப்பிக்கொண்டு நின்றார்.

பகவானோ, இதோ புண்டரீகபக்தன் வந்தான் நம்மைக் கண் டுகந்தானென் றன்பின்மேலீட்டா லவனுக்களித்த வாக்கின்படி அப்புண்டரீக பக்தன் வரவுக்கெதிர்பார்த்தபடி அசைவற நின்று புண்டரீக பக்தன் சமாதியடையுங்கால பரியந்தம் சுயரூபத்துடன் சகலருக்குங் காட்சிக்கொடுத்துத் தன்னெதிரில் நின்றபடி சமாதியடைந்த புண்டரீகபக்தனைப் புகழ்ந்து மிகவும் மகிழ்ந்து அவரைப் பார்த்தபடியே சிலா ரூபமாய் நின்றார்.

பண்டரியென்னுமூரிற் றங்கியிருப்பதால் பண்டரிநாத னென்றும், ஈட்டென்னும் செங்கல்மேல் நிற்பதால் இடோ பாவென்றும், நீ வந்து வரங்கேட்டுக்கொள்ளுகிற பரியந்தம்

இங்கேயே நிற்கிறேனெனப் புண்டரீக பக்தனுக்கு வரமளித்ததால் புண்டரீக வரதனென்றும் பகவானுக்கு நாமங்களேற்பட்டன.

புண்டரீகபக்தன் வரலாறு முற்றிற்று.

நூல் வரலாறு.

ஸ்ரீ அகிலாண்டகோடி பிர்மாண்ட நாயகராகிய ஸ்ரீமந் நாராயணர் வீற்றிருக்கும் பூலோக வைகுந்தமாகியும் பிர்மானந்தத்தாற் றன்னை மறந்திருக்கும் ஜீவன்முக்தர்களுலாவுமிடமாகியும் அஷ்டாங்க யோகங்களாற் சகல சித்திகளையுமடைந்த சிறப்பாயமைத்துள்ள சித்துக்கள் சஞ்சரிக்குமூராயும் திரிமூர்த்திகளை யுபாசிக்கும் பக்தர்களும் வேதமாதிகளை ஓதியுணர்ந்து நீதிமான்களும் நிறைந்திருக்கும் நாடாகியும் துவாரகாநாத் ஜெகந்நாத் ராம்நாத் பதரிநாத் என்னும் நான்கு கயிற்றூற் கட்டியிருக்கும் மத்தியிலுள்ள கொடிஸ்தம்பத்துக் கிணையாகிய இடையிலுள்ள பண்டரிநாத் என்றுரைப்பதாகியும், சந்ததமுமெந்தத் திக்கிலும் காலப்பிர்மம் முழங்கும் பண்டரிபுரத்தில் கலியுகாதி 4690-ம் வருஷத்தில் இப்பூவுலகோர் ஈடேறத் திருவவதாரஞ்செய்தருளி அநேக வற்புதங்களைக் காண்பித்து டாகூர்தேசத்தி லவதாரஞ்செய்தருளிய இராமதாஸ் ஸ்வாமிகளுக்கு மவருடன்வந்த இராஜன் முதலானவர்களுக்கும் தேவர்களுக்கும் மூவர்களுக்கு மன்னமூண்பித்து அச்சுவாமிகட்குமுன் விஷ்ணு ஸ்வரூபமாய் நின்று பல ஞானவாக்கியங்களைப் புகன்று 4730-ம் வருஷத்தில் தன்னுடன் பொந்தியோடும் வானுலகுக்குவர ஏழுநாள் பரியந்த மனைவரையுங் கூப்பிட்டுப் பரமபதத்துக்கு வாருங்களெனக் கும்பிட்டுச் சகலரும் வராததற்காகப் பின்னிட்டு மிகவும் வியாகுலப்பட்டுப் பிராப்தியில்லையென முன்னிட்டழியாக் கீர்த்தியை இவ்வுலகில் நட்டு ஜெயவிட்டல்ஜெயவிட்டல் என்றுரைத்துக் கொண்டே தன்னுடன்வந்த 22-பேருடன் ஆகாயத்திற்போகும் துக்காரா மென்பவரைப் பார்த்த திண்டிரவனத்திலிருக்கும் உத்தவசித்தர் முதலானவர்களும் பிரமாவதாரரான நாபாஜி சித்தரிடம்போய் வலம்வந்து பணிந்து அவர் தாள்களிற் றங்களுடைய நயனங்களை யணிந்து துக்காராம் வானிற்போகும் விந்தையையுரைக்க, மகாயோகி

யான நாபாஜிசித்தர் உத்தவசித்தர் முதலானவர்களைக் கைய மர்த்தி துக்காராமுக்கு வந்தனம்புரிந்து மிகவும் பரிந்து உல்லாசத்தாற்றிரிந்து மகாத்மாவெனத் தெரிந்து சந்தோஷம் புரிந்து புஷ்பங்களைச் சொரிந்து ஆனந்தங்கொண்டு விந்தையென விண்டு நீர் செய்ததேதொண்டு பாக்கியஞ் செய்தவர் பண்டு நல்லவரந் தந்தார்யிரண்டு தீபமனதைக்கொன்று பலமாதிகளைவென்று நானென்பதனைமென்று சற்றுமில்லாமற்றின்று எங்கே போகிறீரின்று பேசலாகாதா நின்று அடியேன் மூடனென்று நில்லும் நில்லுமென்று அன்பானமொழிகளைப் புகன்று சந்தோஷமேலிட்டா லானந்த நிர்த்தனஞ் செய்யத் தொடங்கினர். உத்தவ சித்தர் முதலானவர்களும் அவருடன் தாண்டவஞ்செய்து நாபாஜிசித்தரைப் பலவந்தமாய் நிறுத்தி ஆசனத்தின்மேலிருத்தி, ஓ எங்கள் சற்குரு நாதனே! மெஞ்ஞானபோதனே! ஆகாயத்திற்போகும் மூத்தமரெவர்? எந்த லோகத்திற்குப் போகின்றீர்? இந்நாள் பரியந்த மெங்கிருந்தார் சொல்லும் சுவாமியெனத் தொழ,

நாபாஜிசித்தர் நாமின்று செய்த பாக்கியமே பாக்கியமெனச் சந்தோஷசித்தராய் அகங் குளிர்ந்து முகம் மலர்ந்து, ஓ சித்தர்களே! மிகவும் பரிசுத்தர்களே இவருடைய பெருமையை யென்னொருவனு லுரைக்கப்போமோ? ஆதிசேஷனாலும் விரிக்கப்போமோ? தேவர்களாலுந் துதிக்கப்போமோ! மூவராலும் மதிக்கப்போமோ! கூடாதாயினும் எனக்குத்தெரிந்த மட்டுஞ் சொல்லுகிறேன். அதாவது குப்ததானஞ் சப்தலோகமு மறியுமென்பதைப்போல் அதிகுப்தமாய்ப் பண்டரிபுரியின் சமீபத்திலிருந்தவர் பிர்மக்ஞானம் பூரணமாய்த் தெரிந்தவர் பண்டரிநாதன் பணிசெய்யும்படியான தபோபலமுடையவர் துக்காராமென்னும் பேருடையவர் வைராக்கியத்தில் வல்லவர் மிகவும் நல்லவர் ஜீவகாருண்யத்தையே விரதமாகக்கொண்டவர். பிரமக்ஞானமே முக்கியமென விண்டவர் மனதைப் பிரமானந்தத்தில் சொக்குவித்தவர் வாக்கைச் சந்ததமு மிஷ்டதெய்வத்தைத் துதிக்க வைத்தவர் காயத்தைச் சாதுக்கள் சேவைக் காளாக்கினவர் நானெனுஞ் சீவத்தன்மையைத் தூளாக்கினவர் இறந்த மைந்த னுயிர்பெற்றெழ விண்டவர் இரண்டு நாய்களை மாணுக்கராக்கிக்கொண்டவர் கழுதையைக் கருடனுக்கினவர் கனம் வேண்டாமல் நீக்கினவர் சமு

சாரத்தோடிருந்தவர் சகலமர்மங்களு மறந்தவர் அபிமானத்தை வென்றவர் ஆகாயத்திற் சென்றவர் என்றுரைக்ககேட்ட,

உத்தவசித்தர் முதலானவர்களும் வணங்கி ஓ ஸ்வாமீ! சுகப்பிர்ம ரிஷியைப்போ லாகாயத்திற்போகும் இவருக்குற்ற தபோபலம்முற்பிறப்பிற்செய்ததா இப்பிறப்பிற்செய்ததா திருவாய்மலர்ந்தருளு மென்று விண்ணப்பஞ்செய்ய விரிஞ்சாவதாரனன நாபாஜிசித்தர் சொல்லுவார் ஓ உத்தவசித்தரே! இந்த துக்காராமென்பர் முன் சென்மத்தில் ஸ்ரீவைகுந்தவாசராகிய ஸ்ரீமந்நாராயணரைச் சிறுபொழுதிலிருந்து தேகவியோகமாகிற பரியந்தம் தோத்திரஞ் செய்ததன்றி பண்டரிநாதன் கோயிலைவிட்டு நீங்காமல் பாண்டுரங்கனுக் கன்னமூட்டின மகா அருமையான பக்தனுக்கும். அல்லாமல் யோனி சம்பந்த முடையவர்களென்று நவிலவும், உத்தவ சித்தர் அயோனிஜன்மமெடுத்தவரெவர் மூன்றுஞ்சென்மத்திலெந்த முனிவராயிருந்தார் சொல்லுமையாவென்ன,

நாபாஜிசித்தர், ஓ சித்தசிகாமணியே! இவர் மூன்றுஞ் ஜென்மத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவானிடம் பிர்மோபதேசம் பெற்றுக்கொண்ட உத்தமராகும். அவரிவ்வுலகில் ஓர் குழந்தையாகிப் பண்டரிபுரத்துக் கருகிலிருக்கும் சந்திரபாகா நதியில் மிதந்துக்கொண்டே வந்து பண்டரிநாதனை நெடுநாளாய் மிகவுமன்பாய்ப் பூசித்துக்கொண்டிருந்த தாம்ஸேட்டியென்பவருக்குப் பிள்ளையாகி நாம்தேவனென்று பேர்பெற்றுப்பாண்டுரங்கனுக் கன்னமூட்டி அனேக விசித்திரங்களைக் காட்டிக்கொடிகள் சுவர்க்கத்திலிருந்துவர, நாகேஸ்வரர் கோயிலில் நாட்டி, அநேக விசித்திரங்களைக் காட்டிப் பசுவின் கன்றையெழுப்பி, அக்பர் பாதுஷாவை வாட்டி அங்குள்ள நாகதேசுவரர் கோயிலை மேற்குமுகமாகத் திரும்பச்செய்து சதகோடி கீர்த்தனைகளால் ராமாயணத்தை முடிக்கவெண்ணங்கொண்டு, பாதி கீர்த்தனைகளைப் பாடி ராமாயணத்தை முடிக்கவேண்டி இந்தத் துக்காராமாய்ப் பிறந்து பாடிமுடித்துப் பரமபதத்திலிருந்து வந்தமடியே இப்போது பொந்தியுடன் வைகுந்தத்திற்குப் போகின்றாரெனப் புகல,

உத்தவசித்தர் ஸ்ரீகிருஷ்ணபகவானிடம்பிர்மோபதேசம் பெற்றுச் சாக்ஷாத்காரத்தை யடைந்த உத்தவர் இவ்வுலகில்

குழந்தையாய் வரவேண்டிய காரணமேதோ தெரியச்சொல்லும் சுவாமியென்ன நாபாஜிசித்தர் உத்தவரொருவரே இவ்வுலகிலவதாரஞ் செய்யவில்லை வால்மீகர், வியாசர், சுகர், அக்ரூரன், அருணன், தாரகன், பிர்மா, விஷ்ணு, ருத்திரன், ஆதிசத்தி முதலானவர்களு மிவ்வுலகி லவதாரஞ் செய்துக் குலாசார தர்மத்தையும், உலகப் பிரஷ்டமடைந்த மர்மத்தையும், சகுணத் தியானத்தையும், பிர்மக் ஞானத்தையும், இவ்வுலகிலுள்ள மாந்தர்களுக்குப் போதிக்கவந்தார்களென்ன, உத்தவசித்தர் இவ்வுலகிலென்ன விபரீதம்நடந்ததென்று இவர்களெல்லாம் அவதாரஞ் செய்தார்களென்ன,

நாபாஜிசித்தர் இவ்வுலகில் கலிபிறந்து பரீக்ஷித்து மகாராஜனுற்ருழ்ந்து 5,000 வருஷபரியந்த மிக்கலியுகத்தி லென் ஸ்வரூபத்தைக் காட்ட மாட்டேனென்று வாக்குதத்தஞ்செய்திருந்தும் கலிகால மகத்துவத்தால் அனேகர்களுக்கு விபக்த குணங்களுண்டாகி ஒற்றுமையுள்ள மனமிரண்டாகித் தீர்த்த யாத்திரை போதல் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்தல், தேவாலயங்களைப் பிரதட்சணஞ் செய்தல் திரிமூர்த்திகளின் ஸ்வரூபங்களாகிய விக்கிரகங்களை ஆராதித்தல், பெரியோர்களைப் பூசித்தல், பக்த சரித்திரங்களை வாசித்தல், மோக்ஷார்த்தத்தை ஆசித்தல், அரியா சங்கீர்த்தனங் கோஷித்தல், தன்னை மறந்த பிரமக்ஞானிகளைப் பூசித்தல் வேதபாராயணங்களைச் சாதித்தல், வேதாந்த வாக்கியங்களைப்போதித்தல், ஆரியர் முதலானவரைக் கண்டெழல் எதிர்கொண்டு தொழல், சாதுக்களுக்கு நீராட்டல், மலர்மாலைகளை சூட்டல், தூபதீபங்களைக் காட்டல், இஷ்ட பதார்த்தங்களை யூட்டல், அவர் சொல் நிலையில் மனதை நாட்டல், அதிதிகட் கன்னபரிமாருதல், அடியார் சங்கத்திற் சேருதல் முதலான நற்குணங்கள் குறைந்து பெரியோர்களைத் தூஷித்தல், பேதையர்களைப் பூசித்தல், சத்தியவான்களைக் கெடுத்தல், தர்மஞ்செய்வோரைத் தடுத்தல், தாசிகட்கரும்பொருள் கொடுத்தல், தர்மமவர்க்கே தொடுத்தல், சாந்தகர்கள் சங்கம் விடுதல், சண்டாளர் தம்மை யடுத்தல், சூதாடல், வாதாடல், மனைவியைக் கொண்டாடல், மாதாவுடன் வம்பாடல், சொர்னமிருதியாற் றுள்ளுதல், சுராபானத்தைக் கொள்ளுதல், தூஷணவார்த்தைகள் விள்ளுதல் முதலான துற்குணங்கள் நிறைந்து

சரியை கிரியை யோக ஞானமென்னும் ஒருவழியிலுஞ் செல்லாமல், துரிய திருஷ்டியில் நில்லாமல், அரியா வென்றுஞ் சொல்லாமல், அஞ்ஞானமனதைக் கொல்லாமல் பரஸ்திரீகளையே யல்லாமல், குலஸ்திரீகளைப் புல்லாமல், ஒரு நற்குணமு மில்லாமல் அகமமதையை வெல்லாமல் பாபகர்மங்களையே செய்துக்கொண்டிருக்கிற காலத்தில், அக்கினிக்குச் சகாயமான காற்றைப்போல மூவர் தேவர் மற்றியாவர்மீதும் குரோதங்கொண்டு பிரமசிருஷ்டிக் கெதிர் சிருஷ்டிசெய்த விசுவாமித்திரருடைய கோரமான கோபத்திலிருந்துதித்த கறுத்த நிறமும், பெருத்த உடலும், பருத்த உதடும், சுளித்தமுகமும், சிலிர்த்த மயிரும், கடின நெஞ்சமும், கர்வமிகுதியும், பல்லிற் கறையும், சொல்லிற் குறையும், கொல்லுங் கையும், குடிலகுணமுள்ள அராபிய ரென்னுந் துடுக்கர் மிகவும் முடுக்கர், மோசல மாமுனியினால் விஸ்தாரண மடைந்து மொசல்மான்களென்கிற பேர்பெற்று அரசாங்கம் பெற்றுத் தேசங்களில் மதயானைகளைப்போற் சஞ்சரித்து, மறையோர்களென்றும் பெரியோர்களென்றும் பாராமல், தீங்குவருமென்றோராமல், முன்பின் தெரியாமல், பாபமென்றுங் குறியாமல், அதட்டி வாயில்வந்தபடித் திட்டி, மது மாம்சங்களைப் புகட்டி, வாள்களைச் சுழற்றி, மனநடுங்க மிரட்டிப் பின்தொடர்ந்து வெட்டிக் குடிகளைக் காட்டில்விரட்டி ஸ்திரீகளின் மாங்கிலியங்களைக் கழற்றிப் பூமியில் வீழ்த்திப் புரட்டி, மானபங்கஞ் செய்துச் சிரங்களைக் கொய்து வாயில்வந்தபடி வைது, தலைமேற் கற்களையெய்து சூரிய வம்சத்தைப் பாழாக்கிச் சந்திர வம்சத்தைக் கீழாக்கிக் காசிமுதலான புண்ணிய க்ஷேத்திரங்களிற் பசுக்களை யறுத்து மாமிசங்களை வறுத்து, நன்றாய்த்தின்று பருத்து, வேதவாக்கியங்களை மறுத்து, லாகிரியால் மிகவுஞ் சிரித்து அட்டகாசத்துடன் கொக்கரித்துப் பிறருடைமைகளைப் பறித்துப் பாழ்நெற்றிகளை நெறித்து, விக்கிரகங்களை அபகரித்து, ஊர்களிற் கொள்ளையடித்துத் தேவாலயங்களை பொடித்து, இவ்வித கோரத்தால் அரசர் நீதிகுன்றித் தர்மஞ் சற்றுமின்றி, உலகத்தைப் பாபம்மூடிக்கொண்டு மழை பொழியாமல், மந்திரம் பலிக்காமல், நாடுங் காடுஞ் சூரிய உஷ்ணத்தா லெரிந்து பொரிந்து மரிந்து, ரிஷிகளுடைய தபசுகள் பங்கப்பட்டுத் தவநிலைகெட்டு, இதுவென்ன விப

ரீதம்! இதுவென்ன அபவாதம்! இறந்த ராவணன் வந்தானோ? இரணியனுயிர்பெற் றெழுந்தானோ? இறந்த சோமுகன் வந்தானோ? எமனிவ்வனத்தில் வந்தானோ? வென்று வாரணாசியி னருகிலிருக்கும் வேதவியாசர் முதலான ரிஷிகளெல்லாங் கூடிச் சொர்க்கலோகஞ் சென்று, தேவேந்திரன்பால் முறையிட்டுதேவர்களும் ரிஷிகளும் புறப்பட்டு, வைகுந்தத்தை யடைந்து தவங்குன்றினதற் கிடைந்து, அரிகரி யென்ற கோஷத்துடன் நவரத்தின கசிதமான மேடையில் கோடிசூரியப் பிரகாசமான சிங்காதனத்தில் வீற்றிருக்கும், ஸ்ரீமந்நாராயணரை வலம்வந்து பணிந்து அவர்தாள்களில் நயனங்களையணிந்து, ஓ ஸ்வாமி! அகிலாண்டகோடி பிர்ம்மாண்ட நாயகா! அநுதரட்சகா! பக்தவச்சலா! பரமதயாபரா! அநந்தசயனா! கமலநயனா! கருடவாகனா! கோபியர்மோஹனா சங்குசக்ரா! சதுர்ப்புஜா! பச்சைவர்ணா! பரந்தாமா! துளசிதரா! தாமோதரா! மச்சகச்ச வராகவதாரா! ராட்சசசம்மாரா! ஓ பகவான்! ஓ கர்த்தனே யென்று முறையிடும்போது,

மேகவண்ணனான மகாவிஷ்ணுவானவர் கையமர்த்தி ஓ ரிஷிகளே! உங்களுக்கு நேரிட்ட குறையேதென்று திருவாய் மலர்ந்தருளினபோது, சகலருந் தொழுது கண்ணீர் விட்டழுது ஓ புருஷோத்தமா! புண்டரீகாக்ஷா! இக்கலியுகத்தில் இகலோகத்திலுள்ள காசி, காயா, அஸ்திநாபுரி, அயோத்தி முதலான புண்ணிய ஸ்தலங்களில் கோஹத்தி, சிசுஹத்தி, பிர்மத்தி, ஸ்ரீஹத்தி, குருஹத்தி முதலான காலகருமங்களை விடுத்துத் துன்மார்க்கரை யெடுத்துப் பொருளாசையால் மற்ற வர்ணத்தாருக்குக் குற்றேவல்செய்து பொருமை மேலிட்டுழல்கின்றார்கள். க்ஷத்திரியர்களோ தன் பலப்பிரதாபத்தால் வேதியர் சாதுக்கள்முதலானவர்களிடம் பணிவிடைகள் வாங்கி அகங்காரம் மிகவுமோங்கி, அனேக ஸ்திரீகளைப் புணர்ந்து காமதுரந்தர்களாயிருந்து இராஜநீதி விசாரணையன்றி மதமச்சரங்கள் மேலிட்டிருக்கின்றார்கள். வைசியரோ பொருளாசையால் பொய்விலைகள்பேசி அகவிலைகள் விற்று சூதும் வாதுங்கற்று கோக்களைப் புலையர்க்கு விற்பனைசெய்து கொலை களவு கள் காமம் குரு நிந்தையென்னும் பஞ்சமாபாதகத்துக் குட்பட்டிருக்கின்றார்கள். சூத்திரரோ துரைகளாய்ப் பிர்ம க்ஷத்திரியர் வாயிலைக்காக்க வைசியரிஷ்டப்படி விற்க

சகலரும் வரிப்பணங்கட்டத் திட்டஞ்செய்துச் சூரர்களாய்க் காமக்குரோத லோபங்களாற் கட்டுண்டிருக்கின்றூர்கள். பஞ்ச மராகிய துடுக்கரோ மேற்சொன்ன நான்கு வருணத்தாருக்கும் அதிபதிகளாய் அஷ்டமான ஸ்திரீகளைப் புணர்ந்து மாடமாளிகையி லிருந்துக்கொண்டு குடும்பிகளை யிடும்பு செய்துக்கொடும்பாவிகளாய் வரிப்பணம் வாங்கி மலர்மெத்தையிற் றூங்கித் தேவாலயங்களை இடித்து மடஞ் சத்திரங்களை யொடித்து கோஹத்தி செய்து சாதுக்கள் சிரங்களைக் கொய்து துன்பமின்றி இன்பத்துடனிருக்கிறூர்கள். இவ்விதகொரேங்களால் பாப மூலகத்தைச் சூழ்ந்துகொண்டு மழை பொழியாமல் நாடுங்காடு மூலர்ந்து வனத்திலிருந் தெங்களாற் றவஞ் செய்யக்கூடாமல் மனேசஞ்சல மிகுந்து உமதடைக்கலம்புகுந்து முறையிட்டுக்கொள்ள வந்தோமெனத் தொழுது தோத்திரஞ் செய்தார்கள்.

அதற்கு ஸ்ரீமந்நாராயணர் உலகங்களை ரட்சிக்குங் கர்த்தாவாதலால் தனக்குட்டானே யோசிக்கத் தொடங்கினர் அதாவது எப்போது அரசர் நீதிகுன்றிப் பதிவிரதத்தனங் கெடுமோ அப்போதே பாபம் மேலிடும் பாபமேலிட்டால் மழைகுன்றும், மழை குறைவதால் தவசுபங்கமாம், தவசுபங்கமாவதால் குலதர்மங் கெட்டுக் கொலையாதிகள் மேலிட்டு உலகத்தைப் பாபம் மூடிக்கொள்ளும், இதனல் ஜீவர்களுக்கு வியாதி மூதலான பீடைகள் நேரிட்டு ஆயுள்குறைந்து நாஸ்தியாய்ப் போவார்களாதலா லிதைக்குறித்துப் பூர்த்தியாயோசிக்க வேண்டுமென்று ஸ்ரீகைலாசவாசராகிய பரமசிவனைச் சந்திக்க அதுதெரிந்த பசுபதி பார்வதி சமேதராய் ரிஷபவாகனரூடராய், விக்நேசுவரர், சுப்ரமண்யர், நந்திகேசுவரர், பிருங்கேசர், தூருவாசர், வியாக்கிரபாதர், வசிஷ்டர், அகஸ்தியர், புலஸ்தியர், மிருகண்டர், மார்க்கண்டர், புஜண்டர், மூதலான ரிஷிகளும், நவகோடி சித்தர்களும், அனேகங் கோடி, பூதகணங்களும் புடைசூழ வைகுந்தத்திற் கெழுந்தருளி ஸ்ரீமந்நாராயணர் மூன்வர, உடனே பகவான் புளகாங்கமுடையவரா யெழுந்து ஒருவருக்கொருவர் வந்தனை வழிபாடுகள் செய்துக்கொண்டு இருவரும் சமானராய்ச் சிங்காதனங்களிலெழுந்தருளிப் பிர்மா சரஸ்வதி மூதலானவர்களுக்குமாசனமளித்து க்ஷேமவார்த்தைகள் பேசும்போது பராசர்,

வியாசர், சுகர், வால்மீகர் முதலானவர்களும் பரமேசுவரனை வணங்கி, ஓம் அரகரா! சடாதரா! சசிதரா! பஞ்சமுகா! பாண்டரங்கா! நீலகண்டா! நிடலாட்சா! பார்வதி சமேதா! பூதகண நாதா! சர்ப்பாபரணு! சர்வாபஹரணு! திரிசூலா! காலகாலா! சதாசிவா! மகாதேவா! ஓ ஸ்வாமியெனத் துதித்துப் பரமசிவனு ரிடப்பாகத்தில் வீற்றிருக்கும் ஆதிசத்தியைப் பணிந்து, ஓ அம்மணி! அந்தரி, சுந்தரி, நிரந்தரி, துரந்தரி, சங்கரி, உமாமகேஸ்வரி கௌரி, திரியம்பிகை, திரிநேத்திரி நிர்மலகாத்திரி, ஓங்காளி, மனோன்மணி, அன்னபூரணி, ஓ லோகமாதேயெனப் பலபலவிதங்களாய்த் தோத்திரஞ்செய்து பிரமதேவரையும் சரஸ்வதியையும் மகாலட்சுமியையும் பணிந்து, அழுதகண்ணுந் தொழுதகையுமாய் நிற்க,

அப்போது பரமசிவனுர் ஓ ரிஷீஸ்வரர்களே! உங்களுக்கு நேரிட்டகுறை யேதென்று கேட்கத் தபோதனர் ஸ்வாமி இக்கலியுகத்தில் மானிடர்கள் நான்கு வேதங்களையும் தள்ளிவிட்டார்கள். கொலைக்குரிய வேதத்தை ஸ்திரமாக நட்டார்கள். பாபகர்மங்களுக் குட்பட்டார்கள், கோஹத்தியாற் கெட்டார்கள், முற்காலத்தி லிரணியனுனவன் தானே தேவனென்று அனேகசாஸ்திரங்களை யேற்படுத்தத் தேவரும் மற்றியாவரும் தன்னையே வணங்கும்படியாகச்செய்து தானேயனேகருக்கு வேண்டிய வரங்களீந்து நானெனுமாங்காரத்தா லழிந்துப் போனதைப்போல இந்த கலியுகத்து மனிதர்களில் மிகவுங் கற்ற சிலர் அனேகவிதமான யுக்திவார்த்தைகளைச் சேர்த்து இதுதான் கடவுளாலுண்டாக்கப்பட்ட ஆதிவேதமென்றுரைத்துத் தங்கள் மதத்திற் பிரவேசிக்கச்செய்து தாங்கள் கெட்டதன்றி மற்றவர்களையுங் கெடுத்துக்கொண்டு வருகிறுர்கள். சிலர் பொருளாசையாலும் பூவையாசையாலும் மதுமாமிசங்கள்மேலிருக்கு மிச்சையாலும் ஆசாரத்தைவிடுத்து அனுசாரத்தை யடுத்து ஈனமதங்களிற் பிரவேசித்து மானிடர்களா லுண்டாக்கப்பட்டக் கட்டுக்கதைகளை வேதமென்று நம்பிப் புலையர்களாய் மாமிச புக்தமும் மதுபானமுஞ்செய்து வரிசையேயின்றி மாதர்களை புணர்ந்து அதோகதிக்காளாயிருக்கிறுர்கள். ஜீவகாருண்யத்தை விரதமாகக்கொண்டு ஜீவர்கள் பதைக்க வதைக்காமல் தங்கள் பெரியோர்களிருந்த ஆசாரத்திலிருந்து நீதிபானுய் நிருபமாகிய பரப்பிரமத்தையாவது

சிருஷ்டி திதி நாசகர்த்தர்களாகிய தங்களையாவது தோத்தி ரஞ்செய்து மோட்சலாப மடையாமல் மூக்கறுப்புண்டவன் பலர்மூக்கையு மறுக்கத் துணிந்த கதைபோல யாதோ ராதர வில்லாப் பொய்ப்போதகர்க்குட்பட்டு வர்ணாச்சிரம தர்மங்கெட் டுப் பிரஷ்டத்துவ மடைந்தோமோவெனத் தன்மனந் திடுக் குத் திடுக்கென்று தனக்குச் சாட்சியாய் பறையறைவதுபோல் பிரத்தியட்சமாய்ச் சொல்லிக்கொண்டிருக்கவும், தான்கெட்ட குரங்கு வனத்தையெல்லாங் கெடுத்ததென்பதைப்போலச் சங் கைகளுண்டாக்கி ஆசாரம் பூசை தவம் ஜபம் தோத்திரம் முத லான சத்காரியங்களில் வாழ்நாளைக் கழிப்பவர்களைக்கெடுத்து மதுபானமும் மாமிச புக்தமுஞ் செய்து மதத்துக்கொழுத்து லாகிரியால் வெறிகொண்டு வீணாளைக்கழிக்கும்படியாய்ச் சொ ல்லுகிருர்கள் பசுவைப்போலொத்த மானிடர்கள் ஈனமதங்க ளிற் பிரவேசித்து ஆனையைப் புசிப்பவனுக்குப் பூனை யெவ் வளவு பெரியதென்பதுபோல மதுபானம் மாமிசபுக்தஞ் செய் வதிலும் மாதர்களைப் புணர்வதிலும் சிரேஷ்டர்களாய்ப் பட் டணத்தை எப்போதும் ஆளும்படியான கீர்த்திபரர்களாகிய அதிதிகட் கன்னமிடாமலும், அனித்திய வாழ்வை பொய் யென்றும், தந்தை தாயார் வாடவும், தாரத்தைக்கொண்டாட வும், தர்ம தானங்களைத் துறக்கவும், தயவு தாக்ஷண்ய மிறக்க வும், வாக்கினுற் சொன்னதை மாற்றவும், வசைமொழியாற் பெரியோர்களைத் தூற்றவும், கபடுங்கள்ளமும் மிஞ்சவும், கன் னிகள் மொழிகளைக்கேட்டுக் கொஞ்சவும் வீணருக்கேவல் செ ய்யவும், வித்தகர்தம்மை வையவும், பொய்மொழியென்றும் பேசவும் புலால்நாற்றம்மேல் வீசவும், தவசிகடம்மைத் தாழ் த்தவும், சண்டாளர் தம்மை வாழ்த்தவும், தேவாலங்கள்குறை யவும், தேவதாசிகள் வீடு நிறையவும், கோக்களை யனுதினங் கொய்யவும், கொய்து பாகங்களாய்ச்செய்யவும், குருவைக்கண் டால் நாணவும், கோதையர், தம்மைப்பேணவும், பூசையாசா ரங்கள் நீங்கவும், ஆசையாய்ப் பொருளைச் சேர்க்கவும் சாதுக் கள் சங்கம் நீங்கவும், சண்டாளர் சங்கம் ஓங்கவும், இஷ்ட தெய்வங்களை யிகழவும், ஈனர்கள் தம்மைப் புகழவும் நேரிட் டால் பாபம் மேலிட்டுத் தெரிவையர் மனம் போனபடி திரி த்து மழையில்லாமற் சகலமு மெரிந்து, எங்களுடைய தவசு பங்கமாய் உலகத்தில் நிர்வகிக்க மாட்டாமல் நாட்டில் முகங்

காட்டாமல், மிகவும் நொந்தோம் தங்களிடம் முறையிட்டுக் கொள்ள வந்தோம்.

ஆதலால், உலகில் புண்ணியம் பூசைபுகழும் ஓங்க திண்ணிய மனதிற் செபங்களும் ஓங்க அன்னியஸ்திரீகளையன்னையெனப் பார்க்கத் தானந்தியானஞ் சாந்தமாய்ச்செய்யச் சாதுக்கள் சங்கம் சந்தோஷமாய்ச் செய்யத் தேவாலயங்கள் தெருவெல்லாம் நிறைய தேவதோத்திரங்கள் செவிகளில் நிறைய அன்புமாசார மதிகமாயிருக்க, அன்பர் சேவடிக் கன்புசெய்திருக்கச் சத்திய மொழிகள் தழைத் தழகாகச் சகல சம்பத்துடன் சகலரும் வாழ்க, மாதமும்மாரி வளமுடன் பெய்ய, மானிடரெல்லாம் மாதவஞ்செய்யக் கருணைகூர்ந் தெங்களையாட்கொள வேண்டுமெனப் பிரார்த்தனை செய்து வணங்கி நிற்கும்போது திரிமூர்த்திகளு மாலோசித்து ரிஷிகளை நோக்கி, ஓ தபோதனர்களே! நாங்கள் பூலோகத்தில் காசிக்கும் அயோதிக்கும் பண்டரிபுரத்துக்கும் மத்தியிலவதாரஞ்செய்து பரமக்ஞான துலுக்கர்மத முதலான துர்மதங்களைக் கண்டித்துத் துன்மார்க்கரைத் தண்டித்து எங்கள் திருநாமங்களை நிலைநிறுத்துங்களெனத் திருவாய்மலர்ந்தருளி மகாலட்சுமியையும் சரஸ்வதியையும் நோக்கி நீங்களிருவரும் இத்தபோதனர்களுக்குதவியா யிருங்களென் றுரைத்துச் சபைகலைந்து தங்கடங்களிருப்பிடஞ் சேர்ந்தார்கள்.

பின்பு பகவான் கட்டளைப்படி வேதவியாசர் ஜகநாதமென்னும் ஸ்தலத்தி லவதாரஞ் செய்து ஜெயதேவென்றும் வால்மீகர் டில்லியி லவதரித்துத் துளசிதாசென்றும், உத்தமர் பண்டரிபுரத்தில் யோனி சம்பந்தராய்ப் போய் நாமதேவென்றும் சுகர் காசியில் யோனி சம்பந்தரா யவதாரஞ்செய்து கபீரென்றும், அக்ரூரன் மதுரா பிருந்தாவனத்தி லுற்பவித்துச் சூரதாசென்றும், அனுமார் டாகூர் தேசத்தில் ஜென்மித்து இராமதாச ஸ்வாமிகளென்றும் திருநாமம் பெற்றார்கள். இப்படியே அனேகர் அனேகதேசங்களி லவதாரஞ் செய்தார்கள். மும்மூர்த்திகளும் ஆதிசத்தியம் பண்டரிபுரத்துக்குச் சமீபமாயிருக்கும் ஆபேகாமென்னும் ஊரில் கர்ணீக பிராமணக்குலத்தில் விடோபா வென்பவர்க்கும் ருக்மாபாயிக்கும் பிள்ளைகளாய்ப் பிறந்து நிவர்த்தி சாதுக்ஞானேசுவரர் சோபான்தேவ் முக்தாபா யென்னுந்திருநாமங்களைப்பெற்றார்கள்.

இவர்களுடைய வரலாறுகள் அங்கங்கே அவரவர்கள் சரித்திரங்களிற் சவிஸ்தாரமாய்த் தெரிந்துக்கொள்ளலா மென த் திருவாய் மலர்ந்தருளிய நாபாஜீ சித்தரை உத்தவசித்தர் முதலானவர்களும் தோத்திரஞ்செய்து முன்னம் வேதவியாச ரிவ்வுலகிலவதரித்து என்ன திருவிளையாடல் செய்தாரோ, அதையும் மற்றவர்களுடைய சரித்திரங்களையு மாதியோடந்த மா யாங்களறியக் கருணை கூருமையா வென்றுவணங்க, நாபாஜிசித்தர் அகங்குளிர்ந்து முகம் மலர்ந்து ஓ சித்தர்களே! உங்களிஷ்டப்படியே சொல்லுவேன், ஆனல் இன்று ஜெயதேவ் திவ்விய சரிதையைச் சொல்ல என்னபாக்கியஞ்செய்தேனே வென்று புளகாங்கத்துடன் சொல்லத் தொடங்கினர்.

ஸ்ரீமந் நாராயணர் திருவடிகளே சரணம்.

குருவே துணை.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

முதலாவது

ஜெயதேவஸ்வாமிகளின் சரித்திரம்.

பகவான் துதி.

விருத்தம்.

திருவைகுந்தந் தனில்வாழுந் தேவேகோவே தேவரெலாம்
மருவித்துதிக்குந் திருமாலே மணியேகணியா மாதவமே
பெருமைதருமெம் பெருமானே பீதாம்பரதா மோதரனே
அரியபொருளே அச்சுதனே அடியேனுன்ற னடைக்கலமே.

ஜெயதேவர் துதி.

விருத்தம்.

ஜெயதே வென்னுந் தேசிகனே திருடர் தமையாட் கொண்டவனே
மயலா வுயர்நீங் கியபதுமா வதிக்கா ருயிரை யளித்தவனே
ஜெயமீ யுன்றன் சரிதைதனைச் சீராக செயவுன் திருவடியைத்
தயவோ டிந்தேன் றனையாளச் சரணம் புகுந்தேன் சரணருளே.

முதலாவது அத்தியாயம்.

ஜெயதேவர் உற்பத்தி.

சீர்தருங் கணபதியென்றோர்தரம் நினைக்கும் பக்குவாபக்குவர்களி னெக்காரியங்களெனும் அக்கணமேமுடியச் சர்வ விக்கினங்களையும் நிக்கிரகிக்கும் சுக்லாம் பரதரனை விக்னேஸ்வரன் மூலாதாரத்திலும் நோக்கற்கரிய சாக்ஷியாய் ஜீவன் மோட்சமடைந்தோர் வாக்கினில் நீக்கமின்றிய வாக்காலே நாக்கினிற் றரித்த எண்ணேக்கமுள்ள பிரமாவைச் சுவாதிஷ்டானத்திலும் பகிர்முகம்விட்டு அகமுகப்பட்டு அகம்மதைக்குன்றி சட்டகஸ்மரணையின்றி சுகமயமாயிருப்போர் வாசஸ்தானத்தை நீங்காத் திருமகளை வட்சஸ்தலத்திற் பட்சமுடன் றரித்த அச்சுதனை மணிபூரகத்திலும் தர்மங்களெல்லாந் தெரிந்து மர்மங்களெல்லா மறிந்து, கர்மங்களெல்லா மெரிந்து, பிர்மானந்தம் விரிந்து, தன்னை மறந்திருப்போர்க்கன்னமும் பாலுமேந்திக்கொண் டவர் பின்னிழலைப்போற்றிரியும் அன்னபூரணிக் கிடபாகமீந்த சங்கரனை அனாகதத்திலும், பிர்மானந்த வாரிகோடியில்மூழ்கி, திரிகரணத் துன்பங்கள் மாழ்கி, உன்

மனியவஸ்தையி லிருப்போர்க் கேவல்செய்யும் மாதவர்மேற் றனதாக்கினையைச் செலுத்தா மயேஸ்வரனை விசித்தியிலும் ஜாக்ரத சுவப்ன சுழுத்தி துரியமுங் கடந்து, துரியாதீத நிலையைப் பொருந்தி சங்கல்ப விகல்ப மென்னும் இராப்பகலற்று நிருவிகற்பமா யிருப்போரைப் பணியும் பத்தர்களின் சித்தத்தைச் சுத்தமாக்கும் பிரசித்தனுன நித்திய சத்திய சதாசிவத்தை ஆக்னேய சக்கிரத்திலும் தரிசித்த பரிசுத்த உத்தமசித்தர் முதலானவர்களை நோக்கி இருமணிகளையும் ஒருமணியாக்கி ஆயிரத்தெட்டிதழ்ப்பங்கய மேடையில் ஒருகாலை நீட்டி, ஒருகாலை யாட்டி, காலனைவாட்டி, வீணையை மீட்டி, ஓசையைக் கூட்டி, சுகாமிர்தத்தை யூட்டிய சட்சக்ரேஸ்வர ரறுவரும் ஒருருவாகிய கோடிசூரியப் பிரகாச கிரணங்கள் திரணங்களாய் மக்கும்படி ஒளி விளங்கிய சுப்பிரமண்யரை பிரமரந்திரத்திற் காணுமற்கண்டு ஆனந்தங்கொண்டு அவாள்மனோகோசரமாய் மூவர் தேவர் மற்றியாவராலு மறிவதற் கரியபரமாய், அபரோக்ஷமாய், அத்வைதமாய், சாக்ஷாத்காரமாய், தன்மய சின்மயமாய், நிஷ்கள புஷ்களமாயிருக்கும் அச் சுப்பிரமண்யமே தானுன நாபாஜிசித்தர் சொல்லுவார்.

ஓ சீலர்களே! சற்சங்கத்துக் கனுகூலர்களே ஸ்ரீரகுநாயகர் தன் மார்பகத்திற்போட்ட மாலையிலுள்ள முத்துக்களை ஒன்றொன்ருய்க் கடித்துப்பார்த்து ஞானரசமில்லையென் றத்தர்மத்தை யெறிந்துவிட்ட பூரணபிர்மக்ஞானியாகிய மாருதியின் திருவுருவை வெகுசித்திரமாய் வரைந்திருக்கும் நீட்சியான அனுமக்கொடிகளும், பிருங்கீசனைத் தன் சேட்டைக் காற்றினல் வாட்டியக்கேச னழகிய வடிவை யெழுதியிருக்கு மாட்சிமையான கருடத்துவஜங்களும், புருஷ மிருகத்துக்கும் பீமனுக்குமுள்ள வழக்கைத் தீர்த்த நடுநிலைமைப்பூண்ட தருமமே ஒருருவான உதிஷ்டிரன் முதலான அரசர்களும் நாணும்படியான நீதிகள் வாய்த்தவர்களாற் கட்டப்பட்ட வாயுமண்டலத்தின் ஸ்பரிசத்தையும் பாபத்துக்கஞ்சி கோபித்துக்கொண்டிருக்கும் மேகசலத்தின் ஸ்நானத்தையுங் கோரியதொத்த நீண்ட கோபுரங்களும் மாபுரங்களும் மாதர் போகத்தையும் மோகத்தையும் வென்றவர்களால் வகுத்த சத்தியலோகத்தார் பார்த்தாச்சரியப்படும்படியான ஓமகுண்டங்களும் பிதுர்பிண்டங்களும் கனகாசை கனவிலுமில்லார் புது

க்கிய தேவர்கள் மகிழத்தக்க யாகசாலைகளும் பெருஞ்சோலைக ளும் சொற்பனத்திலுந் தப்பிதஞ்செய்யா அற்புதமானவர்க ளாற் செய்த தர்மதேவதை வாஞ்சித்திருக்கும்படியான அன்ன சத்திரங்களும் அதில் வன்னசித்திரங்களும் மறந்தும் அதர் மஞ் செய்யாம லறமேசெய்து ஆனந்த மடையும் புனிதர் களாலியற்றிய ரிஷிகள் சந்தோஷத்துடன் எப்பொழுதுந் தங்கி வாசஞ்செய்யும்படியான பூந்தோட்டங்களும் அதில் நீரோட்டங்களும் இதர புருஷர்கள் நம்மைக் காணிலுசித்து மயக்கமடைவராதலால் நமது பதிவிரதா தர்மங்கெட்டுப் பாப கர்மம் மேலிட்டு நிரையத்துக் காளாவோமென் றச்சமுற்றுப் புறம்போகாது மறைந்திருக்கும் அளகேசனுந் துதிசெய்யும் மேடைகளும் சிங்காரவீடுகளும், மேனகை யூர்வசி அரம்பை முதலானவர்களும் நாட்டியஞ் செய்யப் பின்னிட்டு இதுவெ ன்ன முழக்கமென் றச்சமுற் றுகாயத்தி லிருந்தபடி ஆவலு டன்கேட் டுளமகிழும் விதரணையான மத்தளத் தொனிகளும் வீணையினொலிகளும், பவுத்தாவதாரமாகிய பூரணனந்த நிஷ் டையிற் றிகழ்ந்து மனமகிழ்ந்து இதுவே யிருப்பிடமாகி க்ஷீர சாகரத்தை நினையா திருப்பதென்ன பயித்தியமோ? சீக்கிரம் சேஷன்மேற் சயனிக்க வாருமென்றோங்கார சப்தத்துடன் கூவும் வாரிதியின் கோஷ்டமும், ஓ கிருஷ்ண! இந்த நாகா னந்தம் க்ஷீரசாகரத்திற் கேட்கக்கிடையாததா லிச்செகநாதத் தை எப்போதும் நீங்காதிருப்பா யென்றுரைசையுடனோசையாய்ப் பாடும் பரமபாகவதர்களின் விஷ்ணுநாமசங்கீர்த்தன கோஷ் டமும் முழங்கும், நான்குவர்ணத்தாரு மொருமைப்பட்டன்ன முண்ணும் ஸ்தலமாகியும், புண்ணிய க்ஷேத்திரமாகியும் அழ கும் புகழும் ஓங்கிய ஜகநாத மென்னும் திருநாமம் படைத்த திவ்யநகருக்குச் சமீபமாகிய பில்வகா மென்னு மூரிலிருப்ப வர் திவ்விய திருநாமந் தரிப்பவர் பந்தபாசங்களிற் குறைந்த வர் பந்தபுத்திகளெல்லாம் மறைந்தவர் இந்திரிய சேஷ்டை களிறந்தவர் தொந்தங்களெல்லாந் துறந்தவர் நிந்தையிலி ருந்து பிரிந்தவர் எந்தசாஸ்திரங்களு மறிந்தவர் இந்தவாழ் வற்பமென் றறைந்தவர் நந்தனந்தனன் பக்தி நிறைந்தவர் விந்தையாம் ஸ்திதியிற் சிறந்த சிந்தைமாய்ந்தருளி லுறைந் தவர் அந்தமாம் பிர்மத்தில் மறைந்தவர் சிந்தரானந்தத்திற் கரைந்தவர் அந்தணர் குலத்திற் பிறந்தவர் அல்லும் பகலும்

கல்லும் உருக நாராயணன் திருநாமங்களை பாராயணஞ் செய்யும் நாராயண சாஸ்திரியென்னும் திருநாமமுள்ள ஓர் புண்ணிய சீலர்.

விமலானந்தமே ஒருருவாகிய கமலாபாயென்னும் உத்தம சித்தத்தினையுடைய பத்தினியோடும் வித்தகமாகிய இல்லறத்தில் நில்லறத்தோடிருந்து அதிதிகட் கடிக்கடி விருந்து அன்புடன் செய்து கர்மங்களைக்கொய்து சதா சாதுக்கள் சங்கமும் சத்கதாப்பிரசங்கமும் பெரியோர்கள்பால் வணக்கமும் உரியோர்கள்பா லிணக்கமும் நாவிலரிகரியெனும் செபமும் நாடோறும் பிசகாமற் செய்யுந்தபமும் எப்போதுங் காத்தில் வேதமும் இசைப்பதெல்லாஞ் சுத்தபோதமும் இல்லையென்பவர்க்கியுந்தானமுந் தொல்லைவந்தாலும் முனியாநிதானமும் சஞ்சல மில்லா யோகத்தியானமும் சந்தோஷவாரியிற் படிந்திடும் மோனமும் பெற்று நித்தமு முத்தமோத்தமனாகிய ஜனார்த்தனுமனார்த்தனங்களைத் தாரைவார்த்து உச்சித மனதுடையவனாய் துச்சவிச்சைகளை யெல்லாம் வெறுத்து அஞ்ஞான பாசங்களை யறுத்து சகல சாம்பிராச்சியத்துடன் பிர்மானந்தத்தைப்பெற்று நிர்விகற்ப நிலையையுற்று வாழ்கின்ற காலத்தில் கமலாபாய் தனக்கெல்லாப் பாக்கியமிருந்தும் புத்திரபாக்கிய மில்லாக் குறையால் ஸ்ரீஜகநாதரை விசுவாசித்து அன்புடன் பூசித்து, ஓம் அரிகரி நரஹரி அம்புஜாட்சரியெனக் கோஷித்து புத்திரவாஞ்சை விசேஷித்து ஓ பகவானே! சாந்தமே ஒருருவான ஓர் மைந்தனை யான் பெறும்படியான வரந்தந்தருளல் வேண்டுமெனச் சந்ததமுஞ் சிந்தனஞ்செய்துக் கொண்டிருக்கிற நாளில் ஒரு நாளிரவில்,

இலட்சுமியை வட்கஸ்தலத்திற் றரித்த பச்சைவர்ணனான அச்சுதனானவர் நாராயண சாஸ்திரியார் கனவிலடைந்து, ஓ எனக்குகந்த பக்தனே! ஜீவன் முக்தனே நீயும் உன் மனைவியு மென்னை நோக்கித் தவஞ்செய்தற்காக வானந்தமடைந்தேன் அதனாலுன் மனைவிகோரிய வரமுந்தந்தேனினி தனாலுன்குறையும் உன் மூதாதைகள் செய்த குறையும் நீங்குமென்றறைந்து போயினர்.

உடனே சாஸ்திரியார் விழித்து தன்னாயகியை விளித்து ஓ பெண்ணே! என்னிருகண்ணே! என்கனவில் பகவான் வந்து உன் மனையாளிச்சித்தவரங் கொடுத்தே னதனால் உன்குற்

றமும் உன் மூதாதைகள் குற்றமும் நீங்குமென்றோதிப் போயி ஞர் ஓ என் குலவிளக்கே! கோதிலாவமுதே! யென்னவரத்தை பகவானிடங்கேட்டாய், அதை யிக்கணமேசொல்லும் பாவை யே பூவையே யென்ருவலுடன்கேட்டார் அதற்கப்புண்ணிய வதி இன்பமொழி புகன்ற அன்பனை வணங்கி, ஓ சுவாமி நமதுகுறை நீங்க ஆனந்தமோங்க ஆரணத்தின் கருத்தின் படி மூத்தியளிக்கும் புத்திரனைப்பெறும் வரத்தையே வாஞ் சித்தேனெனச் சந்தோஷத்துட னுரைத்தாள். அவ்வசனத் தைக்கேட்ட அந்தணர்மிகவும் வியாகூலமடைந்து அடிபே தாய்! அறிவில்லாக்கோதாய்! (எண்ணறக்கற்று எழுத்தற வாசித்தாலும், பெண்புத்திபின்புத்தி) யென்ற பழமொழியை நிலைநாட்டினுய், பேதமைக்குணத்தையேகாட்டினுய், அழியா பதத்தையும் பதத்தையடையவும் விதத்தையுந்தரும் பகவான் தரிசனத்தையுங் கோராமல் இகவாசையைக்கோரினுய், பல நாள் ஜகநாதரைநோக்கித் தவஞ்செய்த நீ மோட்சத்தைக் கேட்கலாகாதோ? அதனுல் சஞ்சிதகர்மங்களெல்லாம் நீங்கிப் போகாதோ? இகவாசையான மகவாசைக்குட்பட்டாய், நீ கெட்டாய் பகவானைக்கேட்பது நித்தியப்பொருளையா அநித் யப்பொருளையா ஈஷணத்திரயங்களை வாஞ்சிப்போர்க்கு பந்த மென்றும், புராணங்களில் முறையிடுவதறியாதவளா? சிதேவி யை வேண்டியதுபோலவும், மலையைக்கெல்லி எலியைப்பிடித் ததுபோலவும், பாதாளஞ்சனம்போட்டுப்பருத்த எலும்பைக் கண்டெடுத்தது போலவும், நெடுநாளாய் தவஞ்செய்து யுத் தத்தைக்கோரிய வாணசுரனைப்போலவும், பேரின்பத்தை நீக் கிச் சிற்றின்பத்தைக்கோரிய குப்ஜையைப்போலவும் செய்தாய் ஓ மாதே! காளையால் பரமபதம் பெறுவோமா? பரமானந்த முறுவோமா? வெகு நாளாய் விரதமிருந்தும் வீணுய்ப்போ னுயே? நிறையத்துக் காளானுயே? என்கிற பலவார்த்தைக ளாடி மனம் நைந்து வாடி பகவானைப்பாடி பரமானந்தத்தை நாடி நிஷ்டையில் வெகுநேரமிருந்து பிறகு தெளிந்துமனை யாளுடன் பேசாமலிருந்தார்.

கமலாபாய், மணாளன் முன்னிற்பதற்கு நாணமடைந்து மிகவுமிடைந்து புத்திரரைப்பெருதவர்களுக்கு மூத்தியில்லை யென்றுரைக்கும் கர்மகாண்டத்தை நம்பி மர்மமறியாமற் பிர மைக் குள்ளாய்ப்போனேமே? துச்சு விச்சையாற் பேதை

யானேமே? என்றனந்த விதவெண்ணங்களால் மனம் புண்ணாகி, ஸ்ரீஜகநாதனை நினைந்து கண்ணீரால் நனைந்து ஓ பகவானே சதிபதிகளாகிய எங்கள் மூவேழிருபத்தோர் தலைமுறையோரும் மோட்சமடையும் பாக்கியமளிப்பாயெனப் பணிந்து இருவருமன்னாகாரமின்றிப் பகல் முழுதுங் கழித்து இரவிற்றுயில்வாராமையால் விழித்துக்கொண்டிருந்தார்கள் அப்போது பகவான் ஓரந்தணனாகவந்து உபயருக்குத் தரிசனந்தந்து, ஓ பக்தியிற்சிறந்த உத்தமர்களே! புத்திரபாக்கியத்தாலுங்கள் மூதாதைகட்கும் முத்தியும் விரத்தியினாலுங்களுக் கென்பத்தியும் அளித்தேனினி ஸ்நானபானஞ் செய்திருவரு மொருமித்திருங்களென்றுரைத்து அந்தர்த்தான மாயினர்.

அவ்வற்புதத்தைப்பார்த்த பாகவதன் தனக்கிருந்த மாச்சரியங்கெட்டு வாச்சரியப்பட்டு காதலியை நோக்கி கக்கசத்தைப் போக்கி, ஓ மாது சிரோமணியே! என்னிருகண்மணியே! உன்னாலென் குலத்தோரும் நானும் கிருதார்த்தரானோமென்றுரைத்து முன்பிலும் அன்புமேலிட் டின்புடன் கூடியிருந்தார் இப்படி சிலநாள் கழிய இலட்சுமியை வட்சஸ்தலத்திற்றரித்த அச்சுதனுத்தரவாலும், சதிபதிகளிருவருமொருமனதாய்செய்யுந் தபோபலத்தாலும் முனிவருக்குள் முதல்வர் பராச மகாரிஷியின் புதல்வர் வேதங்களைக் கையிற்பிடித்துக்கொண்டே பிறந்தவர் எண்ணுஞ் சிரஞ்சீவிகளாகிய அரிஞரிற் சிறந்தவர், பெண்ணாசை முதலானதுந் துறந்தவர், வேதவாக்கியங்களையறிந்தவர், மூவுலகத்து வேதங்களை விரித்தவர், நாவிற்றாமோதரனைமந் தரித்தவர் ஆகிய வேதவியாசர் கௌசலையின் கர்ப்பத்தையடைந்த மகா விஷ்ணுவைப் போலவும், சுமுத்திரையின் கருவிலடைந்த ஆதிசேஷனைப்போலவும், கமலாபாயின் வயிற்றிலடைந்து பிறர்குற்றத்தைநாடாப் பெரியோர்களின் வாழ்வைப் போலவும் ஜீவகாருண்ய முள்ளோர்கள் செய்யுந் தவத்தைப் போலவும் கற்புள்ள ஸ்திரீகளுக் குண்டாகுஞ் சுபத்தைப்போலவும், மோட்சவிச்சையுள்ளோ ரன்புடன் செய்யுஞ் செபத்தைப்போலவும், பெருமை சற்றுமில்லார் குடும்பத்தைப்போன்ற திருவுருவுடனவதாரஞ் செய்தருளினர்.

அழகிய தநயனைக்கண்ட பெற்றோர் அன்பாய்ப்பார்த்து மார்புடன் சேர்த்து பிறவிக்குருடன் கண்பெற்றதை போலவும்

மலடி மைந்தனைப் பெற்றதைப் போலவும் தரித்திரனுக்கு க்ஷேமங் கிடைத்தாற் போலவும், யாசகனுக்கு இராஜரீகம் கிடைத்தாற்போலவும், அரியைப் புகழ்ந்து கண்ணைக்காக்கும் இமையைப்போலவும், கன்றைக்காக்கும்கபிலையைப்போலவும், கற்பைக்காக்குங் காந்தையைப் போலவும், உயிரைக் காக்குமுடலைப் போலவும், காப்பாற்றிக் கர்த்தனைப்போற்றி தருமந் தாராளமாய்ச்செய்து தங்களுக்குற்ற சங்கல்பத்தை கொய்து அனைவருக்கும் விருந்திட்டு ஜெயதேவனென்று பேரிட்டு ஐந்துவயதானதும் நற்சுபதினத்தில் பலவாத்தியங்கள் முழங்க பிராமணோத்தமர்கள்சூழ உபநயனஞ்செய்து வித்தியாப்பியாசமுஞ் செய்வித்து நான்குவேதம் ஆறுசாஸ்திர புராண விதிகாசங்களையும் ஓதுவித்து வயது முதிர்ந்தபின் தங்கள் பந்துக்களில் திருந்திய செல்வமும் அருந்தவக்கல்வியும் செவ்வியதேகமும் திவ்வியயோகமும் கண்டுபோல்மொழிகளும், கெண்டையின் விழிகளும், கமல நிகர்த்தாள்களும் விமலமுள்ள தோள்களும், பதியின்பா லடக்கமும், துதியுனொடுக்கமும், பரமானந்த பக்தியும், திரமான புத்தியும், கற்புடைமானமும் விற்பனதியானமும் கருணையுளதானமும், ஸ்மரணையோடு மோனமும், மேகத்தைப்போன்ற கூந்தலும் சந்திரனைப்போன்ற முகமும், பவளம்போன்ற வாயும், முகத்தைப்போன்ற பற்களும், மெதுவான நடையும், மெலிவான விடையும் உள்ள பத்மாவதியென்னுங் கன்னியைப்பேசி பலருக்குஞ் சந்தணம்பூசி பந்து வர்க்கத்துடன் பலருஞ்சேர்ந்து விந்தையாய் மணஞ்செய்ய மிகக் களிகூர்ந்து, அன்பாய்த் தென்பாய் அருமையாய்ப் பெருமையாய் பச்சைபந்தல் பட்சமாய்ப்போட்டு உச்சித வாழைக ளுயர்ந்ததாய் நட்டு மலர்களின் தோரணம் மாவிலைத் தோரணம் பலரும்மெச்சப் பரிவாகக்கட்டி ஜெயதேவுக்குச் சீரணிபூட்டி நயபத்மாவதிக்கு நகை பல சூட்டி மணக்கோலஞ்செய்து மலர்பந்தல் கீழே இணக்கமா யிருவரை யிருந்திடச்செய்து ஓமம் வளர்த்தி உச்சிதம் நடத்தி நேமமனைத்தும் நேசமாய் க்ஷேமமீவேளையிற் றெரிவையர் சூழச்செய்து க்ஷேமமாயிருவருஞ் சேர்ந்தென்றும் வாழ, வேதியர் வேதகோஷ்டங்களை யோத, கோதையர் மங்கள கோஷ்டமோத, தாளமும் மேளமுஞ் சதிருடன் முழங்க, ஆளும் பதிபதம் அன்புடன்வழங்க, அமரர்கள் சாக்ஷியாய்

குமாரன் கைகளால் கோதையின் கழுத்தில் மங்கிலியத்தை வகையுடன் தரித்து அங்கையாற் பலரும் அக்ஷதைதூவி ஆசிகள்செய்து அலர்மழைபெய்து மாசுகோத்தமரர்கள் மன மிகமகிழ பந்துவர்க்கத்துடன் பலரும் விண்டு விந்தையீதென்றும் மெட்சியுட்கொண்டு உள்ளங்கனிந்து உடலம்பூரித்து விள்ளொணுவன்பினை மேவியேவியந்து வதுவை முடித்த பின் சகலருந் தங்கடங்க ளிருப்பிடஞ் சேர்ந்தனர்.

பின்பு ஜெயதேவும் பத்மாவதியும் அன்புடன் இன்ப போகங்களை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். எப்படியெனின், உடல்வேருக உயிரொன்ருக வடிவிரண்டாக மன மொன்ருக ஒருவர் மொழியை ஒருவர் தள்ளாமல் பிரியமில்லா புன்மொழிகள் விள்ளாமல் இருவருமொன்ரு யேகபோக மாய்மருவி திருமால்மாயையிலிருந்தும் கடினமில்லாமற் கசந்துபேசாமல் விடியுமுன்னெழுவார், வேதமோதிடுவார், ஆதி நாராயணன் அரிநாமங்களை ஓதி யெந்நாளு முளங்களிகூர்வார் பெரியோர்க்கேவல் பிரியமாய்ச் செய்வார், உரியோர்வந்தா லுவகையோ டழைப்பார், சொர்னதானங்கள் சும்மாசெய்வார் அன்னதானங்க ளன்புடன் செய்வார், அநித்யவாழ்விலாசையேனென்பார், ஜெனித்ததிவ் வாஞ்சையாற் றெளிந்தோமென்பார், சத்தியமானது தவசேயென்பார், துர்ச்சன பங்கந் தொல்லையாமென்பார், சற்ஜனசங்கஞ் சதானந்தமென்பார் சாதுக்கள்வந்தாற் சாந்தமாய்ப்பணிவார், போதமீந்தெமையாள் புனிதனே யென்பார் இவ்வித நன்மொழிக ளாடிக்கொண்டு இருவரும் மனமொத்து மூவருந் தேவரும் முத்தரும் சித்தரும் யாவரும் மனமகிழ வாழ்கிறகாலத்தில்,

நாராயண சாஸ்திரியாரும் கமலாபாயும் விரக்தியினுலுங் களுக்கு பக்தியும், பக்தியினுல் முக்தியுமுண்டென்றுரைத்த பகவான் வாக்கியத்தை நினைத்து இனி நமது மைந்தனுக்கோர் குறையுமில்லை கற்புள்ள பத்மாவதி யிருப்பதால் வராதுயாதொருதொல்லையுமென்று யோசித்துப்பகவானைப்பூசித்துத் தந்தைதாயிருவருந் தவஞ்செய்ய நினைத்து விந்தையாய்வனந்தனில் மேவிடத்துணிந்து தநயனைப் பார்த்துச் சாந்தமாயிருந்தால் விநயமாய் மோட்சநீ மேவுவாயென்று மருமகடன்னை மகிழ்ச்சியாய் நோக்கித் தெரிவையே பதியே தெய்வமென்ரேதி அடவியிற்போய் நல்ல அருந்தவம்புரிந்து மட

மையைத் தவிர்ந்து மகிழ்ச்சியாயிருந்தார்கள். ஜெயதேவும் பத்மாவதியும் தந்தைதாய் வனத்திற் சென்றதற் கயர்ந்து நாமுஞ் சிலநாளில் வானப்பிரஸ்தத்தையே கைக்கொள்ள வேண்டுமென்று உறுதிகொண்டிருந்தார்கள்.

ஜெயதேவர் உற்பத்தி அத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவது அத்தியாயம்.

ஜெயதேவர் விரக்தி.

கேட்டீர்களோ சித்தர்களே! பின்பு ஜெயதேவென்னுந் தேசிகோத்தமனுந் திவ்விய பத்மாவதி யென்னுந் தேவியும் சந்தோஷத்துடன் சகல சவுக்கியங்க ளனுபவித்துக்கொண் டிருக்குந் தருவாயில் ஜெயதேவுக்குத் தவத்துக் குறுதியான சீவகாருண்யமும், மோட்சத்துக்குரிய பிரமக்ஞானமும் மேலிட்டுக் காலையிலிருந்து மாலைமட்டும் தன்னையறிந்த பிரமக்ஞானிகளுக்கும் காயத்திரி ஜபம்செய்யும் பிராமணோத்தமர்களுக்கும் ஆசையோடு யாசகஞ் செய்யும் அதிதிகட்கும் இல்லையென்னுமலிருந்ததை யெல்லாம் தயவுதாட்சண்ய மிகுந்து சாந்த மனத்துடன் தந்து திரவியஞ் சற்றுமில்லாமல் ஆவினந் தன்னிலோரா வில்லாமல் தானியந்தன்னிற் றவிடில்லாமல் வீட்டையும் விற்று மேவலர்க்கீந்து காட்டிலிருப்போர்களைப் போலாக மங்கிலிய நதவிர மற்றொன்றின்றி எங்கணும் பேசவிவர்செய்நன்றி கோவணமணிந்து குவலயந்தன்னில் சாவடி சத்திரத்தினிற்றங்கி அச்சுதகேசவ ஞதிநாராயணன் உச்சிதநாமங்களுளத்திற் பாராயணம் க்ஷணமறக்காமல் ஜபித்தகமகிழ்ந்து கணவனுங் காந்தையுங் கர்த்தனைப்புகழ்ந்து குட்சிநிமித்தம் பிட்சைக்கேகி பட்சமுள்ளோர்தரும் பண்டங்கைக் கொண்டு சதிபாற்சென்று தையலே கொள்வாய் மதியுளோரளித்த வஸ்துவென்றீந்து தடாகந்தன்னில் ஸ்நானமுஞ் செய்து அடாதுசெய்தா லலைச்சலென் றுரைத்துப் பூசைகள் செய்து புராணமும் படித்து மாசுகோத்தமரை வாஞ்சையாய்த் தேடி அன்பரைக்கண்டு அடிபணிந்தேத்தி அன்புடன் மலர்களை யணிந்து பூசித்து நாராயணன் கதை நல்லமுதென்று பாராயணஞ்செய்யும் பக்தரைப் பணிந்து அரியினும

மன்புடனேதிப் பிரமக்ஞானம் பெருமையென்றேதி அதிதி யின்மனதை அரக்காக்கரைத்து துதிசெய்தெங்க டோன்றலே யென்று போனகஞ்செய்யப் புனிதனே வாரும், ஞான விளக் காம் நாதனேவாரும், அருளோருருவா மையனே வாரும், பொருளீந்தெம்மைப் புனிதனேவாரும், சுயம்பிரகாசச் சோதி யேவாரும், நயந்தருங்குருவே நலமுறக்காரும், சின்மயானந் ததேவனே வாரும், தன்மயமடியேன் சார்ந்திடக்காரும் என் றத்துறவியை யின்புடன் கொணர்ந்து இன்றிங்கனமூண் டெங்களைக் காருமென்றுரைத்து ஸ்ரீ அகிலாண்டகோடி பிர் மாண்டராகிய ஸ்ரீமந்நாராயணன்மேல் நவமாயனேக கீர்த் தனைகளும் அஷ்டங்களும் பாடிக்கொண்டிருக்கும்போது.

பத்மாவதியும் பதிகொண்டுவந்து கொடுத்தபண்டங்களை ஒருநொடியி லதிமதுர பாகமாய்ச் சமைத்துப் பலவிதங்களா லமைத்துப் பதியைப்பணிந்து பாதங்களில் நயனங்களையணி ந்து குருதெய்வமான கொழுநனேவாரும், சுரர்நரரேத்துந் தூயனேவாரும், அன்னமுண் ணுதற் கென்னப்பனேவாரும் அன்னம் புசிப்பித் ததியைக்காரும் என்றவ்வம்மணி ஏந்தி டும் பொழுதில், நன்றருள் ஜெயதேவ் நாயகிதனைப்பார்த் தித மாக்கூவு மெழிலே! பொழிலே! பதுமாவதியே! பரிபூரண மதியே! அன்னம் யின்னம் அதிதிக்கிடவில்லை இன்னமேனு ன்னிருள் மனங்கெடவில்லையே எனவிசைத்துசீக்கிரம்படைப் பாயெனவோதி அன்னமுணத் தாமதமாச்சதென் றோதித் துரிதமா யதிதியின் தூயடிபணிந்து பிரியமாய் நோக்கிப் பிரானே யென்று படைத்த வமுதினைப் பண்புடனூட்டி அடைக்காயினையு மன்புடன்கொடுத்துச் சந்தணம்பூசிச் சந் தோஷம் பேசி எந்தையேயென்ற னிறைவனேயென்று பந்த மில்லாத பரமனேயென்று அந்தரமுகத்திலமர்ந்தோயென்று வேதவாக்கிய விவரங்களெல்லாஞ் சோதியைக்காணுஞ் சூச னையெல்லாம் மனதைக்கொல்லு மார்க்கங்களெல்லாம் மனங் குவிந்தொடுங்கும் மார்க்கங்களெல்லாம் சுவாசமடங்கும் சூக்ஷ மமூஞ் சலனசுவாசமடங்குந் துவாதசவெளியும் வந்தவர் மயங்க மாய்ந்திட வரைத்துச் சிந்தைகள் மறந்து தருக்கு வாயிருந்து பரமானந்தன் மிகுந்த அன்புடன் புசித்துப் பசுமரத்தாணிபோல் இன்பமாயிருந்து ஏகமாய் நிறைந்து துன்பமகன்ற துரியமேதானய்த் தன்னை மறந்து தலைவனிற்

கலந்து பின்னமில்லாத பிரமமேதாணுய் நினைவுங் கனவும் நாஸ்தியாய்ப்போக நனவிற் சுழூத்தியை நன்ருயடைந்து ஞானந்ததும்பி நயன நீர் பெருக ஆனந்தத் தூக்கந் தன்னி லமர்ந்து நிவத தீபத்தைப்போலவும் நிஸ்தரங்க சமூத்திரம் போலவும் பிர்மநிஷ்டையிலிருந்தார்.

பத்மாவதி பதியின் பாதங்களை மனதிற்பதித்து அதிதி யினடிகளை யன்புடன் துதிக்கப் போய்வாருமென்றப் புனித ரையனுப்பி தாய் தந்தைகளைத் தானினையாமல் பதியே! அரு ளாம் பதியே! பொருளாம் பதியே! துணையாம் பதியே! புணை யாம் பதியே! குருவாம் பதியே! தேவாம் பதியே அன்பாம் பதி யே! யின்பமாம் என்றுறுதிகொண்டு கொழுநன் பணிவிடை யே தனக்குரிய நியமமாகக் காலங்கழிக்கத் தொடங்கினுள். இவ்விதமா யிருவரு மிருக்குங் காலத்தில் அவ்வூரிலுள்ளோர் ஜெயதேவ் சுவாமிகள் செய்யுங் கீர்த்தனைகளையும் சேர்த்து ஓர் புத்தகமாக்கி அதை யத்தியந்த பக்தியுடன் பாராயணஞ் செய்துக்கொண்டிருந்து ஜெகநாதத்தில் திருவிழாவாகும் போது பில்வகாமிலிருக்குஞ் சிலர்போய் ஸ்ரீஜெகநாதருடைய திருச்சன்னிதானத்தில் அப்புஸ்தகத்தை வைத்து நவரசா லங்காரமான சுலோகங்கள் அஷ்டகங்கள் கீர்த்தனங்கள் பாடித் தோத்திரஞ்செய்யும்போது ஸ்ரீஜெகநாதர் கோயிலி னுள் அங்கீகரித்தேனங்கீகரித்தேன் ஆனந்தமடைந்தேனுன ந்தமடைந்தேன் என்கிற சப்தம் ஓர் முகூர்த்தபரியந்தம் உண்டாக, அதுகேட்ட திருநாளுக்கு வந்திருந்த சகலருஞ் சந்தோஷவாரியி லமிழ்ந்தவர்களாய் ஜெயதேவ் சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய வாக்கியங்களை வேதமென்று நம்பிச் சகலருந் துதித்து ஆனந்தமேலீட்டால் கண்ணீரைப் பெருக் கித் தன்னை மறந்து நடனஞ்செய்யத் தொடங்கினுர்கள். அதை யறிந்த அவ்வூரிறைவன் உற்சவம் நடக்கும்போதெல்லாம் நூதன கீர்த்தனங்களும் அஷ்டகங்களும் செய்து அரங் கேற்றுவோ ணுதலாற் ருன்செய்ததை யாவரும் தோத்திரஞ் செய்யும்படியாகப் பலதரங்கொடுத்தும் அங்கீகரியா அந்த ணர்களைநோக்கி முனிவுகொண்டு இதுவுஞ் ஜெகநாதருடைய தோத்திரமன்றி வேருே, இதையேன் அனுஷ்டிக்காமல் மறுக்கின்றீர்கள் ஜெயதேவ் செய்ததைமாத்திரம் ஏன் துதிக் கின்றீர்களென வற்புறுத்திக் கேட்க.

அதற்கு விப்பிரர் நீர்செய்த வாக்கியங்க ளடங்கிய புத்த கத்தைப் பகவானங்கீகரித்தால் நாங்களு மங்கீகரிக்கின்ரு மென்றிரண்டு புத்தகங்களையும் ஜெகநாதருடைய திருப்பாதத் தண்டையில் வைத்து அரணம்மூடி இராஜமுத்திரை போட் டுச் சில அந்தணர்களையுங் காவலரையும் காவல்வைத்து தங் கடங்க ளிருப்பிடஞ் சேர்ந்து மறுநாட்காலையி லனைவரு மொன்ருய்ச் சேர்ந்துவந்து பார்க்கையில் வெளியிலெறிந் திருக்கும் இராஜன் பாடிய புத்தகத்தை நோக்கிக் கவாடந் திறந்து ஜெயதேவ சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய புத்த கத்தின்மேல் அங்கிகரித்தேனென் றெழுதியிருப்பதைப் பார்த் துக் கரங்களைச் சேர்த்து ஆனந்தமடைந்து வேத மென்றும் நாற்றிசையோரும் பாராயணஞ்செய்யத் தொடங்கி ஞர்கள்.

அப்போதவ் விறைவன் வாட்டமனதுடன் வீட்டை யடைந்து அன்னுகாரமின்றிப் பகலெல்லாங்கழித்து தன்னை மிகவும் பழித்து இரவாகியு மாயாசத்தால் விழித்துக்கொண் டே ஓ பகவானே! இரணியாக்ஷனுடைய தூஷண வார்த்தை களை யெல்லாம் பூஷணமாகக்கொண்ட புருஷோத்தமா! புண் டரீகாக்ஷா! அன்புடன்செய்த உன் தோத்திரங்களடங்கிய புத்தகத்தைக் காத்திரத்துடன் வெளியிலெறிந்துவிடலாமா? என்னைச் சுடாமற் சுடலாமா? ஓ தீனபந்துவே உன்னுடைய திவ்விய திரு நாமங்களுநம், திருவிளையாடல்களுநம் நிறைந் திருக்கும் நூ லுமக்குக்கசப்பான காரணமேதோ? யான்செய்த தீதோ? உமக்குள்சூதோ? செய்யும் வாதோ? ஓ என்னுண் டவனே! கற்கண்டு ஓர்பக்கங் கைப்பும் ஓர்புறந் தித்திப்புமா யிருக்குமோ? ஓ அனுதரட்சகா! தந்தையின்மடியை ஆசித் துக் கிடைக்காத துருவனுனக்குச் செய்த உபசாரமென்ன? நான்செய்த அபசாரமென்ன? சொல்லலாகாதோ ஜெகத்துக் கெல்லாம் நாதரென்னும் பேர்பெற்ற உமக்குப் பாரபக்ஷ மிருக்கலாமோ, விகற்ப பாவமுள்ள உமக்கு ஜெகநாதனென் கிற பேரிருக்கலாமோ, கோபிகா ஸ்திரீகளின் மத்தாலடிப் பட் டானந்தமடைந்த நீர் என் துதியென்னும் வாக்கம்பு களுக் கிடைந்திரோ, சர்வம் ஒன்றேயென்று திருவாய்மலர்ந் திவ்விடத் திருந்தவாக்கைக் கடந்திரோ, உமக்கு சுபாவமான பேதகத்தை விடவில்லையோ, துவிதபாவங் கெடவில்லையோ,

அலரவனை ஆழியால் மறித்துச் சயந்தனைக் கொன்றீரே, அபத்தம்பேசித் துரோணரை வென்றீரே, அது யின்னம் நீங்கவில்லையோ மெய்ஞ்ஞானம் ஓங்கவில்லையோ ஓ அரிபரந் தாமா ஸ்ரீரகுராமா வேணுகோபாலா அருமறைகள் மூலா, வாசுதேவா, தேவதேவா, சேஷசயனு, கமலநயனு, வசுதேவ புத்ரா, பாண்டவர்கள் மித்ராவென் றனந்தம் விதங்களாக நிந்தாஸ்துதிசெய்து நித்திரைசெய்ய பகவான் அவ்விறைவன் சொற்பனத்தடைந்து, ஓ அரசனே நீ ஜெயதேவ்செய்த வாக்கியங்களை யோக்கியத்துடன் துதிப்பாயாயின் நீ செய்த வாக்கியங்களில் பதின்மூன்று சுலோகங்களை யங்கீகரிப்பேனென்றறைந்து மறைந்து போயினர்.

உடனே அவ்வேந்தன் விழித்துக்கொண்டு ஜெயதேவ் பகவானென்றே தீர்மானித்துத் தோத்திரஞ் செய்துக்கொண்டிருந்து அதிகாலையில் ஜெகநாதருடைய திருச்சந்நிதானத்தையடைந்து அந்தணர்களுடன் கூடிக்கொண் டத்தியந்த பக்தியுடன் ஜெயதேவ் திருவாய் மலர்ந்தருளிய பாடல்களைத் தோத்திரஞ் செய்யும்போது கபடநாடக சூஸ்த்ராவதாரியாகிய ஸ்ரீஜெகநாதர் அசரீரியாய் ஓ ராஜனே! நீ செய்த பல பாடல்களில் ஆதியிலிருக்கும் பதின்மூன்று பாடல்களை அங்கீகரித்தேனென்று திருவாய் மலர்ந்தருள அவ்வாக்கியத்தை கேட்ட சகலரும் அந்நரபதியா லியற்றிய பதின்மூன்று பாடல்களை ஜெயதேவ்செய்த புத்தகத்திற்சேர்த்து பாராயணஞ் செய்யத் தொடங்கினுர்கள். இவ்வளவு மகிமை பொருந்திய ஜெயதேவ் எவ்விடத்திற் றங்கியிருக்கின்றாரோ அவ்விடத்திலே அஷ்ட வயிசுவரியமும் ஆவினப்பலவும் சிஷ்டர்கள் கூட்டமும் தெளிவுளோர் கோஷ்டமும் குறைவின்றி நிறைந்திருக்கையில் இவ்வற்புதங்களைப் பலரும் புகழத்தொடங்கினுர்கள்.

பத்மாவதியின் தந்தையானவர் இவர்களிருக்கும் விந்தையைக்கேட்டு சிந்தைநைந்துருகி வந்திவரிருக்கும் மகிமையை நோக்கித் துன்பத்தைநீக்கி உடலம் பொங்கி உள்ளங் கலங்கி இவர்களைக் காண என்ன தவஞ்செய்தேன் இவர் மருமகனு, இவள் மகடானு, இவரே பகவான், இவரே மகவான், இவரே கனவான், இவரே தனவான் இவரைப்பார்த்தால் புத்திபத்தியும் வரும். இவரைப் பார்த்தால் சித்தி-முத்தி

யும்வரும், இவள் சீதேவி, இவள் பூதேவி, இவளே கமலே, இவளே விமலே, இவளிந்த்ராணி, இவள் இராணியென்று பலபலவிதங்களாகத் தோத்திரஞ்செய்து தனக்கிருந்த காத்திரங் கொய்து பத்மாவதியினருகிற் சென்று, மகளேயென்று கூப்பிட்ட தந்தையினடிகளிற் பத்மாவதி சிர சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டுப் பாதங்களுக்குமுத்தமிட்டு எந்தையே என்னைப்பெற்றத் தந்தையே! வெகுநாள் பொறுத்து வந்தையே என்மீதிருந்த அன்பைத்துறந்தையே? என்னைசுத்தமாய் மறந்தையே? என்கிற பட்சமான வார்த்தைகளைப் புகன்று பயபக்தியுடனெதிரில் நின்று பல வார்த்தைகள் பேசிக்கொண்டிருக்கையில் ஜெயதேவ் சுவாமிகள் நிஷ்டையிலிருந்து தெளிந்து, மாமனுரைப் பார்த்துக் கரங்களைச்சேர்த்து அடிகளிற் சந்தணம் பூசி, க்ஷேமவார்த்தைகள்பேசி உத்தமரே உந்தன் புத்திரியாலே சாதுக்கள்சேவை சாந்தமாகசெய்தேன் இத்தரைக்குள் நானின்பத்தை பெற்றேன், அத்தனே உந்தனுசியாலென்று அன்பான வார்த்தைகளுரைத்து, மாமனுர் மனதைக்கரைத்து நொடியதனி லுளந்தனைத் திருப்பி, உத்க்ருஷ்டமான சிற்சொரூப சமாதியி லெழுந்தருளியிருந்தார்.

அப்போது பத்மாவதியின் தந்தையானவர் விந்தையீதென்று மிகவதிசயித்து வந்தனஞ்செய்து மனமிகமகிழ்ந்து, பலபல விதங்களாய்ப்புகழ்ந்து கொண்டுவந்த ஆடையாபரணங்களை யளித்து பத்மாவதியை நோக்கி வியாகூலத்தைப் போக்கிப் போய்வருகிறேனென்று புத்திமதிகளைச் சொல்லித் தன்னிருப்பிடம்போகையில் பத்மாவதி கூடவேதொடர்ந்து போய் தந்தையை வழிவிட்டு வருவதற்குள் ஜெயதேவஸ்வாமிகள் நிஷ்டைகலைந்து வெளிப்பட்டு நடந்து வெகுதூரஞ்சென்று அவ்விடம் மனித சஞ்சாரமில்லாமலும், மிருகங்களும், பரவைகளும் சஞ்சரிப்பதாயும் ஆரணியமாயும் ஆகாயத்தையளாவிய பர்வதக்குகைக்குள்புகுந்து அங்கு உன்னதமான வோரிடத்தி லுட்கார்ந்து பதுமாசனமிட்டுக் கண்ணை மூடி பசுமரத்தாணிபோல் பகவான் பாதத்தில் மனதைப்பதித்து இன்பமாயிருந்து ஏகமாய் நிரைந்து துன்பமகன்றதுரியமேதானுய் தன்னை மறந்து தலைவனிற் கலந்து பின்னமில்லாத பிரமமேதானுய் நினைவுங் கனவும் நாஸ்தியாய்போக

நனவிற் சுழுத்தியை நன்முயடைந்து ஞானந் ததும்ப நயன னீர்பெருக, ஆனந்தத் தூக்கந் தன்னிலமர்ந்து நிவாதீபத் தைப்போலவும், நிஸ்தாங்க சமுத்திரம்போலவும், அசை வின்றி பிர்ம நிஷ்டையிலிருந்தார். இங்கே பத்மாவதி திரு ம்பி இருப்பிடம்வந்து மணாளனை நாடிக் காணமல் வாடிச் சுற்று பக்கங்களிலோடி அதிக பரபரப்போடுந் தேடிப் புதரு களில் நுழைந்து களையால் கீழ்விழுந்து ஐயோ பொழுது போச்சுதே எனக்கே துன்பம்வாச்சுதே? இருபுறமும் அக் கினி மூண்டெரியும் மூங்கிற் குழாய்க்குள்ளலையும் எரும்பைப் போல பலதரம் நாட்டுக்குங் காட்டுக்கும் அலைந்து செடிக ளில் மயிர் சிக்கவும், தேன்புயங் கடிக்கவும், மூட்களால் திரே கத்திலுங் கால்களிலும் உதிரம் பெருகவும், கற்களால் கண் ணீர் பெருகவும், உடல்வேர்த்துருகவும், உள்ளங்கலங்கி யுரு கவும், கரடியும் புலியுமிரட்டவும், கரியுமெருமையு மதட்ட வும், நடுங்கி ஒடுங்கி குருதியாலும் கண்ணீராலும் நனைந்து கொழுநனை அடிக்கடி நினைந்து ஓ! என்பிராண நாயகா! பிராண சினேகா! சர்வசங்கபரித்தியாகா! சதானந்த போகா! நீரிப்படி மோசஞ்செய்வீரென் றறியாமற்போனேனே ஆருத் துயருக் காளானேனே? யாருமற்ற அனாதியைப்போலானே னென் தந்தையைவிட்டு வருவதற்குள் எப்படிப்போனீரோ? எங்குசென்று யெப்படி யானீரோ? காமக்கடலைக் கடந்தவா, காசினித் தலங்களுக்கு நடந்தவா, மோட்சவீட்டில் நுழைந் தவா, மோனானந்தத்திற் றழைந்தவா, மிருகங்களின் கர்ச் சனையால் மனம் நடுங்குகின்றதே, உம்மைக் காணா குறையால் பிராணம் ஒடுங்குகிறதே? காரிருளால் வழியுந் தெரியவில்லை யே, ஏனோ தந்தாயிவ்வளவு தொல்லையே, இன்னம் உனது மனம் இரங்கவில்லையே, எனக்குள் அருமை தரிசனந்தரவில் லையே! மாதரச்சத்தால் மரணமடைவாரே! மணாளன்மேலிச் சையால் மிகவும் இடைவாரே, என்னை நீரிப்படி சோதிக்க லாமோ! இருளில் மறைவுற்றுப் பேதிக்கலாமோ, ஓ புரு ஷோத்தமா, புண்ணிய புருடா, பூததயாளா, புண்டரீகத்தா ளா, ஓ என்தெய்வமே என்னுயிரே, தனித் திவ்விருளிலும் மைத் தேடித்தேடித் திரிகிறேனே, பதறிக்கதறி வெகுநேர மாய்ப் புலம்புகிறேனே, ஏனென்று பேசலாகாதா, இன்ன மோர்கணத்திலென்னுயிர்போகாதா, இன்னமும் நீனினைத்

திருப்பதற்கிச்சையா, எளியாளுடன் பேசவும்லச்சையா என்கிற பலவார்த்தைகள் பேசிக்கொண்டே இரவெல்லாந்தேடி சூரியோதயமானதே, மலேக் குகைகளிலும், புதருகளிலும், பர்ணசாலைகளிலும், அடர்ந்த சோலைகளிலும் பார்த்து அங்கம்வேர்த்து; ஓ மயில்களே, குயில்களே, என்மணாளனேக்கண்டீர்களா, ஓ நரிகளே என் காவலனைப்பார்த்தீர்களா? ஓ புலிகளே! புனுகு பூனைகளே! என் கணவனிங்கு வந்தாரா? ஓ காகங்களே; யூகங்களே என்னூர்வல ருங்களுக்குத் தரிசனந் தந்தாராவென்று மிருகங்களையும் பட்சிகளையும் கேட்டுக்கொண்டே வாயில்வந்த மொழிகளையெல்லாம் விண்டுக்கொண்டே பெருத்த மலையின் குகையுள்புகுந்து அங்கு பதுமாசனமிட்டுக் கண்ணைமூடி பிர்ம நிஷ்டையிலிருக்கும் தன் கணவனைக் கண்டு அவர் திருவடிகளில் வணங்கி மூக்காலும் வலம்வந்திணங்கியிருக்க ஜெயதேவ் பிரம்மநிஷ்டைகலைந்துக் கண்ணைத் திறந்து மனைவியைப்பார்த்து, இம்மாதிருக்குங் கோலத்தால் சிரமத்தை யுணர்ந்து தன்மனைவியுடன் காட்டைவிட்டு நாட்டை யடைந்து தங்களிருப்பிடஞ் சேர்ந்து சில வருடங்கள் கழித்துக்கொண்டிருந்தார்.

இவரிப்படியிருக்க, பத்மாவதியின் தந்தை முன்போல வந்து மகளையும் மருமகனையுங்கண்டு, ஆனந்தங்கொண்டு, அவர்களால் பல உபசாரங்களையேற்று விடைபெற்றுக்கொண்டு பத்மாவதியு முன்போல தந்தையை வழிவிடப்போனபோது நடந்த ஆச்சரியத்தையும் பிராப்தத்தின் சமர்த்தையும் ஜெயதேவுக்குண்டான விபத்தையும் அதனுற் பத்மாவதியடைந்த துன்பத்தையும் சொல்லப் பெருந்துக்கமாயிருக்குமென்று நாபாஜி சித்தர் பின்னுஞ்சொல்லத் தொடங்கினர்.

விரக்தி அத்தியாயம் முற்றிற்று.

மூன்றுவது அத்தியாயம்

ஜெயதேவர் கைகால்கள் வெட்டுண்டது.

கேளுஞ் சித்தர்களே! பரிசுத்தர்களே! இப்பால் ஜெயதேவ சுவாமிகள் சற்றுநேரம் நிஷ்டையிலிருந்து பிறகு தெளிந்து வீதியின் வழியாகப்போகையில் அயலூரிலிருந்து

வந்த மிகவும் ஞானத்திற்றெளிந்த பகவத்தாசனெனும் வர்த்தகனாகிய தனவான் ஜெயதேவைப் பார்த்துக் கரங்களைச்சேர்த்து இன்று இம்மகாத்மாவைத் தரிசிக்கும்படியான காரணம் நான் செய்ததவமோ? எங்கள் மூதாதைகள் செய்தமாதவமோ? வென்றவரை வாரியெடுத்து தன்ரதத்தின்மேலிருத்திக்கொண்டு பில்வகாமிலிருந்து புறப்பட்டுக் காட்டைக்கடந்து தன் ஊரை யடைந்து வீட்டினுட் கொண்டுபோய்த் தானுந் தன் மனைவியும் பூசித்து மிகவும் விசுவாசித்துப் பத்மாவதி தேடுவாளென்று யோசித்து குரு ஸங்கீர்த்தனங்களைக்கோஷித்து அந்த ரதத்தின்மேல் சுவாமிகளை எழுந்தருளச்செய்து பத்மாவதிக்காக பல ஆடையாபரணங்களும் ஆயிரம் வராகன்களுங் கொண்டுபோய் கொடுவென்று சாரதியை எச்சரித்து சீக்கிரம் சுவாமிகளை விட்டுவாருமென்றனுப்ப.

ஜெயதேவர் வர்த்தகனை நோக்கி இவ்வுயிர்க் கொல்லியும் ஆடையாபரணங்களு மேன் கொடுத்தனுப்புகிறீர்கள் வேண்டாம் வேண்டா மென்று மறுக்க அவ்வியாபாரி என் தாயாகிய பத்மாவதிக்கு தக்ஷிணை யென்றுரைத்துச் சிரசாஷ்டாங்கமாக வந்தனஞ் செய்து சாரதியைச் சாக்ரதை செய்ய, உடனே சூதன் அந்த ரதத்தை அதி சீக்கிரமாயோட்டிக் கொண்டு காட்டின் மத்தியிற் போகையில் அவ்விரதத்தின் சத்தத்தைக்கேட்ட கள்வரோடிவந்து தனித்துப்போகும் அச் சகடத்தை நிறுத்தி, வலவனை வருத்தி, ஆபரணாதிகளைப் பறித்து, ஆங்காரத்துடன் கொக்கரித்து வாளால் வெட்டப் போகையில், சாரதி பூமியிற் குதித்து ஓட்டமெடுக்க ஜெயதேவ் விபரீதம் நேரிட்டதென்றவ் விரதம் விட்டிழிந்து இதையும் ஓட்டிக்கொண்டு போகட்டுமென்றவரைப் பார்க்காமல் நடந்து போகையில், அவர்மகிமையை யறியாச்சோரர் வீரத்துடன் திரம்பேசிக்கொண் டவரைப் போகவிடாமல் மடக்கி நெட்டி தள்ளியடக்கி காட்டில் நடவென்று மூடுக்கி, புலிமுன் பசுவைப்போ லொடுக்கி, இழுத்துக்கொண்டு போகையில், ஜெயதேவ் கள்வர்க்கு வந்தனம்புரிந்து என்னிடத்தொன்று மில்லையே நானுங்களுடன் போர்புரிய வரவில்லையே? வீணாயே னென்னை அலங்கோலப் படுத்துகிறீர்கள் சந்தோஷமா யிவ் விரதத்தின்மே லூர்ந்துகொண்டுங்க ளிருப்பிடஞ் சேருங்கள்

ஏழையென்மேற் கிருபை கூறுங்களென்று பணிவாக மொழியும்போது,

அக்கரவடர் அவரணிந்துக்கொண்டிருந்த வஸ்திரங்களைப் பறித்துக்கொண்டு நிர்வாணமாக்கி அடா பணவாசை நீங்காப்பிணமே! கூசாமற் பாசாங்கு வார்த்தைகளைப்பேசாதே! திருடர்கள் முரடர்களென்றறியாயோ? எங்களிருப்பிடத்தைக் கண்டுகொள்ள மெதுவாய் நடந்துபோன உன்னெண்ணத்தை நாங்களறியோமோ? பலருக்குங் காட்டிக்கொடுத்தெங்களை வாட்டப்படுத்த நீ செய்த சூதைக் குறியோமோ? திருடர்களிடத்துன் திருட்டுத்தனம் நடக்குமோ? யாரை நம்பினாலும் நம்பலாம், ஆதிவருணரை நம்பப்போமோ உன்னையினி உயிருடன் விடப்போகிறோமோ வென, அப்புண்ணியவான் வேண்டாம் வேண்டாமெனப் பல வின்பமொழிகளால் மறுக்கவுங் கேட்காமல் இருகரங்களையும் கால்களையும் இரண்டாக துண்டித்து அவரை ஓர் பாழுங்கூபத்திற் றள்ளிச் சகடத்தின்மேலேறிக் கொண்டுபோய் விட்டார்கள்.

பின்பு பாழுங்கிணற்றில் வீழ்ந்த பக்த சிகாமணி பரப்பிரமக்ஞானி பரமசாதுவாகிய வெனதையன் பரப்பிரமமே ஒருருவான துய்யன், என்றும் பொய்சொல்லா மெய்யன், ஏழைகட் கனேக திரவியமீந்த கையன், சத்திய வாக்குள்ள சாந்தன், அநேகருக் குபதேசித்த வேதாந்தன் ஜகததிலுள்ள வடியார்களெல்லாம் புகழுஞ் சீலன், ஜன்மப் பிணிக்கயர்ந்து வரும் முமூட்சுகளுக்கனுகூலன், முனிவென்னுங் காட்டை வெட்டின முத்தன், மோகாதிகளை யெரித்த சுத்தன், பயமென்பதரியா நிஷ்காமி ஜெயதேவென்னும் சுவாமி பாழுங்கேணிலுருண்டுக்கொண்டேபோய் தலைகீழாய் விழுந்து துக்க சாகரத்திலாழ்ந்து பிராப்த மியாரையும் விடாதெனத்தெளிந்து பிராப்தாதீன மல்லவோ இத்தேகமெனத் துணிந்து பாபங்களையே முக்கியமாகச் செய்யுங் கைகால்களை வெட்டியெறிந்ததற் காயாசப்படாமற் களித்துப் புரையோரை விளித்து, ஓ புண்ணிய புருஷர்களே யெனத் துதித்துத் துரிதமாயோர் கல்லைப்போட்டென்னைக் கொல்லலாகாதோ வெனக்கதித்து அவரரவ மில்லாததற் காயாசமடைந்து மிகவுமிடைந்து கைகால்க ளறுபட்ட உபத்திரவத்தாலும், முட்களும் கற்களும் தேகமெல்லாம் பொத்துக் கொண்டதாலும், உருண்டு

விழும்போது தேகமெல்லா முராய்ந்து தேய்ந்து போனதினு லும், ஈக்களும் எறும்புகளும் மொய்த்துக்கொண்டதினுலும், அன்னுகாரமில்லா ஆயாசத்தாலும், உறவு முழுதும் மூண் மயமாயிருந்ததினுலும், எழுதற்கு மூட்காருதற்குங் கூடாமை யாலும், சகிக்கக்கூடா வேதையாலு மனேபாதையாலும் கிட ந்தபடியே களைத்து மிகவுமிளைத்து மூர்சையடைந்து துன்ப மேலீட்டாற் றெளிந்து,

ஓ ஓ இனி தேகவியோக மடையுங்காலம் நேரிட்டதிப் பொழுதே நமதிஷ்ட தெய்வமாகிய ஸ்ரீமந் நாராயணனைத் தியானஞ்செய்து பிரம நிஷ்டையாற் றேகத்தை மறந்து விதேக கைவல்யத்தையடைந்து மோட்சானந்தம் பெறுவோ மெனத்துணிந்து பகவானை நினைத்து கண்ணீரால் நனைத்து மொண்டிக்கரங்களைக் கூப்பிட்டுக்கொண்டு பாதுகாப்பாயென விண்டு, அச்சுதா கேசவா ஆயனே அபயம், உச்சிதா நாரு வுபாயனே அபயம், புண்டரீகாக்ஷா பரிபூரணு அபயம், அண் டரேத்தும் ஆதிகாரணு அபயம், பரமபுருஷா பத்மநாபனே அபயம், திருவாழ்வுதருஞான தீபனே அபயம், சங்கு சக்கர கோதண்டபாணியே அபயம், பங்கமில் கோதண்ட பாணியே அபயம், மாயனே யுலகுண்ட வாயனே அபயம், தூயனே தூதர்கள் நேயனே அபயம், அடியார்கள்மே லதிக மித்ர சாவதார மணிவண்ணனே அபயம், கச்சாவதார நல் கண் ணனே அபயம், ஜெயராம ஸ்ரீராமதேவனே அபயம் பாப ணருளு மகானுபாவனே அபயம், மாதவா வைகுந்தவாசனே அபயம், யாதவராகவா ஈசனே அபயம், கேசவானுகூல திரி விக்ரமா அபயம், யாவரும் போற்றும் பராக்ரமா அபயம், சுரர் நரர் தொழுதேத்து முராஹரீ அபயம், அரி அரி அரி அரி நரஹரீ அபயம், பக்தவச்சல வேணுகோபாலா அபயம் முத்தியருள்முகுந்த பூபாலா அபயம், சீதாசமேத துளசீதாரா அபயம், தாதா விநோதா தாமோதரா அபயம், மதுசூதனு கிருஷ்ண வாமனு அபயம், பதிதபாவன லோகபாலனு அப யம், பஞ்சபாண்டவர் தூதராமனே அபயம், கெஞ்சுவோற் கருள் தாமனே அபயம், ரங்கநாதா நாரசிங்கனே அபயம், துங்கபாதா தொனிசங்கனே அபயம், கரிவரத கோவிந்தகர்த் தனே அபயம், சிரமை தீர்த்தாள்வை பிரசித்தனே அபயம், பாண்டுரங்கா விஷ்ணுபகவனே அபயம், ஈண்டென்னையாளு

வா யிறைவனே அபயம், துரோபதை தனைக்காத்த தோன்றலே அபயம், விரோதமென் மீதிலேன் விமலனே அபயம், அருமறைகள் புகழாதி மூலனே அபயம், திருவருளை யீந்திடுஞ் சீலனே அபயம், வேங்கடேசுவர வேணுநாதனே அபயம், சங்கடந்தீர்க்குஞ் சகநாதனே அபயம், சுயஞானவடிவான சோதியே அபயம், நியமமெல்லாந்தரும் நீதியே அபயம், ஜகபதிவேங்கடாசலபதீ அபயம், ரகுபதி கஜபதீ பசுபதீ அபயம், பரமேசுவரா பரந்தாமனே அபயம், பரமசுகமுள பரசுராமனே அப்யம், சகல பூஷண சேஷசயனனே அபயம், சர்வலோகசரண்ய சாமியே அபயம், சர்வபாப விநாசநேமியே அபயம், கம்ஸ சம்ஹாரக்காம்பீரனே அபயம், அம்ஸஸ்வரூபாவதாரனே அபயம், மாசுள்ள சிசுபால மர்த்தனு அபயம், தேசுள்ள காளிங்க னிர்த்தனு அபயம் மதமுள்ள ராவணனை மாய்த்தவா அபயம், சதிசெய் சிசுபாலனைச்சாய்த்தவா அபயம், கருடவாஹனு கருடத்துவஜனே அபயம், இருடிகள் ஏத்துஞ் சதுர்ப்புஜனே அபயம், நாராயணு நந்தநந்தனே அபயம், பாராயணுபக்தர் சொந்தனே அபயம், பீதாம்பரா அன்பர் பிரியனே அபயம், மாதா பிதா குரு தெய்வமே அபயம், எழில்பிரகலாதன்மே லிஷ்டனே அபயம், தொல் வினைக் கட்டுகடறு பிரம நிஷ்டனே அபயம், கனகாதிபர் தொழு சாந்தனே அபயம், கனவிபீஷணன்றொழும் வேந்தனே அபயம், களபமொழுகிய புளகமார்பனே அபயம், அளகமுள நளினியுறு மார்பனே அபயம், முனிவரனுதின மேத்து முதல்வனே அபயம், புனித தசரத ராஜன்புதல்வனே அபயம் இரணியாக்கனை வென்றஎந்தையே அபயம் தருணமெனையாளன்றன் தந்தையே அபயம் அபயமென்றிவ்விதமாக வோலமிட் டோவென்றிரைந்து கூவும்முறையானது பரமபதத்தில் ஆதித்தரனேக ரொளிமழுங்கும் கிரணங்கள் வீசும் சிங்காரமண்டபத்தில் நவரத்தினங்கள் பதித்த சிம்மாசனத்தில் கருடர் காந்தருவர் கின்னரர் கிம்புருடர் விஞ்சையர் தேவர் முனிவர்கள்சூழ வீற்றிருக்கும் ஸ்ரீ அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகராகிய ஸ்ரீமந் நாராயணருடைய திருச்செவியிற் புகுந்த மாத்திரத்தில் பச்சைமேனியெல்லாம் புழுங்கி வேர்வைகள் சிந்தி மிகவும் பதறி ஆவெனக்கதறிக் கண்ணீரைப்பெருக்கிச் சூழ்ந்திருப்போரையுமுருக்

கிக் கைகளை யடிக்கடி யிசைந்து, இவ்வளவவஸ்தையும் நேரிட்டதாவென்றிசைத்துக் கருடனையும் நினைக்காமல் தாரகனையும் விளிக்காமல் இலக்குமியுடனும் பேசாமல் நாரதாதி முனிசுவரர்களையும் பார்க்காமல் தன்னை மறந்து திடுக்கென்றெழுந்து ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் மறைந்தது.

ஆ என்பக்தனே! ஜீவன் முக்தனே! ஆ சஞ்சீவியே! ஆ பரமபாகவதனே! பரப்பிரமக்ஞானியே! ஆ என்பாலனே! அன்பர்க் கனுகூலனே! நாராயணனே! பரப்பிரம்மமெனச் சத்தியஞ்செய்தவனே! நானென்னு மாங்காரத்தைக் கொய்தவனே! என்னை மேன்மையென் றுரைத்தவர்க் கிகழுண்டா? என்னை யிகழ்ந்தவர்க்குப் புகழுண்டா? உனக்கு மிப்பேர்க் கொத்த துன்பம்வந்ததா? மனமும் நொந்ததா? இதோவந்தேன் வந்தேன், சுகந்தந்தேன் தந்தேன், என்றுரைத்துக் கொண்டே துளசிமாலைகள் கழன்று விழவும், பீதாம்பரத் தொங்கலானது பூமியிற்புரளவும், சுதரிசனம் பின்தொடர்ந்தோடி வரவும், ஆகாயவாசிகள் பூமாரி பொழியவும், ருத்ரபிரமாதி ரிஷிகள் தோத்திரஞ் செய்யவும், அஷ்ட கெஜங்களுந் தும்பிக்கைகளை ஆகாயத்திலெடுத்து ஆரவாரிக்கவும் பூதேவி மனமகிழவும், இலக்குமி ஆச்சரியத்தாற்றன்னை மறந்திருக்கவும், ஆதிசேஷனதிசயிக்கவும் வாயுவேகத்தாலும் அதிகமாக நடந்து ஜகநாதத்தைக்கடந்து,

ஜெயதேவ ஸ்வாமிகள் வீழ்ந்திருக்குங் கூபத்தினிடமடைந்து சுகசொரூபத்துட னவரிருதயகமலத்தினுள் ஆனந்தமெல்லாந் திரண்டோ ருருவமாய் எழுந்தருளி ஞானக் கண்ணுக்குப் புலப்பட்டுத் துன்பமென்ப தினி யெக்காலத்திலும் திரணமளவும் தங்காமல் நீங்கும்படியான ஆசிர்வாதஞ்செய் தென்னப்பனே! என்னுடைய ரூபம், சொரூபம், நிரூபம் என்னும் மூன்றையு மிக்கணமே தரிசிப்பாயென்றசரீரியாய்த் திருவாய் மலர்ந்தருளியதைச் சிரவணஞ்செய்யா முன்னமே ஜெயதேவர் ஞானக்கண்ணாற் றனதுள்ளத்தில் கிருஷ்ண பரமாத்ம ஸ்வரூபமாய் விளங்கும் பகவானைக்கண்டு ஆனந்தங்கொண்டு துன்பமிறந்து இன்பநிறைந்து, ஆ என்னாண்டவன் வளிக்கும் வெளிக்கும் கண்ணொளிக்கும் சமீபமாய் பூரணச்சந்திரனைச் சூழ்ந்திருக்கும் அதிசீதள கிரணங்களைப்போல என்னை யானந்தமாகச் சூழ்ந்து என்னூற் புகல்

வதற்கருமையான பரவசமளித்த தெனக் குள்ளாகவே யிருப்பதை யோயாமல் தான் தானுகவே யிருக்கத் தானென்பதெதுவென் றவயவங்களைத் தானெனப் பிரமித்துக் கேட்கும் அறிவீனனைப்போலே அநித்ய சடதுக்க நிர்மல வுன்மத்தமான ஆக்கையினிடருக் காயாசப்பட்டுத் திடஞானத்தைக் கைவிட்டு ஓலமிட்டழுகேனே! ஆ! ஆ! பகவானென்னுளத் தமர்ந்து பத்தர்கள் போற்றும் ரூபத்தையும் பரப்பிரமக்ஞானிகளைக்கியமாயிருக்கும் நிரூபத்தையுங்காணுமல் விஷயானந்தங்களை யிச்சிக்கும் சுரோத்ராதி இந்திரியங்களென்னும் பஞ்ச தந்திரிகளும், மனமாதி சதுர் மந்திரிகளும், இச்சையென்னும் பலகொஞ்சிப்பேசும் வஞ்சியர்களும் காமக்குரோதாதி வீரர்களும், சப்தாதி சூரர்களும் வாக்காதி ஏவலரும், பிராணுதி காவலரும், வசனுதி சேனுதிபதிகளும், புகழும், சீவராஜனென்னும் அகங்காரி அரசுசெலுத்திகமாயிருக்கும் அரணுகிய இவ்வங்கத்தின் சுகத்தைக் கோரினேனே, எல்லையற்ற பேரின்பத்தை வாஞ்சிக்காமற் சிற்றின்பத்தையிச்சித்தெப்போழ்து மிடரையே நுகரும் மானைப்போல துன்பத்தை யோரு வாக்கு மெனக்குள்ளிருக்கு மிவ்வின்பத்துக்குளைக்யமா யிராமல் மறதிக் குட்பட்டேனே! ஆ கெட்டேனே மதியிலாமற் றன்பதியை யிழந்தேனென்றுந் துயர்வாரியிலமிழ்ந்த தோகையைப் போல இந்தப் பராத்பரனை நம்பாமல் நாககூபமான இத்தனுவை வாய்மையென் றுறுதிகொண்டு அறுதிக்குள்ளாக விருந்தேனே, அடக்கம் ஒடுக்கமுள்ள அருந்துணைவியை யிகழ்ந்து நடை நொடியுமுள்ள நாயகியைப் புகழாமல் புகழ்ந்து மகிழாமல் தூலத்தைத் துதிக்க எண்ணினேனே யென்கிற பற்பல வாக்கியங்களை மொழிந்து பகவானைக் கண்ட பரவசத்தாலானந்த புஷ்பங்கள் வழிந்து தனதுளக் கண்ணின் மையத்தில் வீற்றிருக்கும் அழகெல்லாந்திரண் டோருருவாய் களிப்பெலாங் கூடிய மேனியாய்ப் புண்ணியவதியான தேவகியின் கர்ப்பத்திலிருந்துற்பவித்தபோது தூலமாய் நந்தன் இல்லாளாகிய அசோதையினட்சிகளுக்குப் பட்சமுள்ள சூட்சுமபாலகனுய்ப் புறப்பட்ட ஸ்ரீமந்நாராயணனைப் பரப்பிரம்மப் பாராயணனைப் பார்த்தபடியே நிலையில் நின்று இவரல்லவோ சுமந்தவர் கோவர்த்தனக் குன்று எனப் புகன்று எவ்விதமாய்ப் புகழலாமென்று

உச்சிதொடங்கி உள்ளங்கால் பரியந்தம் ஊடுருவிப் பார்த்து மனமொன்ருகச் சேர்த்து, ஒருகோடி சூரியப் பிரகாசங்கள் மழுங்க, விகசித்தகிரீடனே நவரத்னங்களாற் றுலங்குங்குண்டலனே விசாலமான நிடலனே திவ்யபுண்டரந் தரித்தவனே சகஜலோசனனே பத்மதளாகார முகவசீகரனே வொளியான வாகுவலயனே புஜபலபராக்கிரமனே பீதாம்பரதரனே சுலட்சணங்கள் வாய்ந்த ஸலட்சணமான இலட்சுமி வீற்றிருக்கும் வட்சஸ்தலனே வனசத்தி வனமாலிகா பரணனே திவ்ய பரிமள வலங்கிருதபூஷணனே ராதா மனோகரனே ருக்மணிமணாளனே கோபியர்களுளனே அண்டபிண்ட பிர்மாண்டங்களை உண்டுபண்ணும் விதிவீற்றிருக்கும் பத்மநாபனே ஈரேழுலகு மோராணுவாக கர்ப்பத்தில் வைத்திருக்கும் பிரதாபனே சாம்ப சிவனார் சடாபாரத்தில் வீற்றிருக்குங் கங்காபவானி யுற்பத்தி யான பாதனே மெஞ்ஞான போதனே வேணுநாதனே லீலா விநோதனே அவதூதனே அதீதனே அவிரோதனே நிச்சேதனே, நிற்பேதனே, நிஷ்குரோதனே என்று தோத்திரம் புரிந்து மிகவும் பரிந்து சந்தேகங்களை நீக்கித் தேகஸ்மரணையைப் போக்கி இந்திரியங்களை யடக்கிப் பகிர்முகமாகாமல் மாயாமனதை மடக்கிச் சுவாசத்தை யொடுக்கிப் பிரமரந்திரத்தில் முடுக்கிச் சங்குகளின் முழக்கமும், மேகங்களின் முழக்கமும், வீணையினோசையும், தம்பூரினோசையும், மத்தளத்தொனியும், மகதயாழ்தொனியும், தாளங்களின் சப்தமும், பெண்டுகள் கீதமும் வண்டுகள் நாதமும், குயில்களினொலியும், மயில்களினொலியும், சமுத்திர கோஷ்டமும் சங்கின்கோஷ்டமும், கேட்டுத்துவாத சாந்தவெளியில் ஆயிரத்தெட்டிதழ்ப் பங்கய மேடையில் கங்காயமுனை கூடுங் கூட்டத்தில் புரியட்டக நாடியின் முனையான சுழிமுனையில் பலகோடி இரவிகளினொளி போல விளங்கியிருக்கும் பகவானுடைய சொரூபமான சோதியைக்கண்டு ஆனந்தங்கொண்டு மனவெண்ணங்களை மாய்த்து மானாபிமானங்களைத் தேய்த்து நானென்னு மிருட்டைக் கடந்து அப்பால் நல்லவர்களுடன் தொடர்ந்து அப்புறம் மாயா சத்தியைப் பார்த்து ஆயாசங்களைத்தீர்த்து அறிவெனும் பொருளிலக்ஷமாய் ஆனந்தத்தில் மூழ்கிச் சவுக்கியமாய் நிவாத தீபமாய் பிரமசொரூபமாய் விளங்கி யிருக்கும் பகவா

னுடைய நிருபமாகிய ஏகபரிபூரணத்தைக் காணமற் கண்டு ஒன்றுந் தோணவில்லையென விண்டு,

பின்னும் பகவானைத் துதிசெய்யத் தொடங்கினர் அதெப்படியெனில், ஓ புண்டரீகாக்ஷா! உனக்கு வந்தனம் புருஷோத்தமா! உனக்கு வந்தனம் சகலலோக சொரூபா உனக்கு வந்தனம் உக்கிரமாகும் சக்கரமதைத் தரித்ததேவா உனக்கு வந்தனம் தவசு வேதங்கள் முதலானவற்றிற்கும் தேவதேவனுகி கோக்களுக்கும் பிர்ம நிஷ்டர்களுக்கும் நேசனுகி சகல உலகங்களுக்கும் ரட்சகனுகி ஸ்ரீகிருஷ்ண னென்றும், கோவிந்தனென்றுந் திவ்விய நாமங்களோடு கூடியிருக்கும் உமக்கனந்தம் வந்தனங்கள் பிரமரூபனுகி உலகங்களை சிருஷ்டித்தும் சுயசொரூபத்தினுலே ரட்சித்தும், கல்பாந்தரத்தினில் ருத்ரரூபியாகி சங்கரித்துக்கொண்டும், திரிமூர்த்தி சொரூபியாகி பிரகாசித்துக்கொண்டு மிருக்கு முமக்கு வந்தனம் ஓ அச்சுதனே; தேவ - அசுர கந்தர்வ கின்னர சித்த சாத்திய பன்னக யக்ஷராக்ஷச பிசாசமநுஷிய பசுபட்சி ஸ்தாவர பிபீலிகாதிகள் பிருதிவு அப்பு தேயு வாயு ஆகாயங்கள் சத்த ஸ்பரிசரூபரச கந்தங்கள் மனம் புத்தி சித்த அகங்காரங்கள் காலம் அக்ருணங்கள் இதின் பரமார்த்தமாகும் ஆத்துமா இவை யாவும் நீயே வித்தை அவ்வித்தைகள் சத்தியம் அசத்தியங்கள் பிரவிருத்தி நிவர்த்திகள் வேதோக்த சகல கருமங்கள் இவை யாவும் நீயே ஓ பகவானே! சகலரும்யோகங்களை அனுபவிக்கு மவனும் கருமசாதனங்களாகும் திரவியங்களும் சகல கருமபலன்களும் நீயே, ஓ மகாப்பிரபூ என்னிடத்திலும் அன்னியர்களிடத்திலும் சேஷபூதங்களாகும், சகல லோகங்களினிடத்திலும் நீ நிறைந்திருப்பது உபாதானநிமித்தகாரணமாகும், ஐஸ்வரியங்களும் அனந்தஞான சக்தியாதிகல்யாண குணங்களும் நன்ருய் காணப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பரமயோகிகளும் உன்னை வணக்கமாய் துதிசெய்கிருர்கள். யாகசீலர்கள் உன்னை யுத்தேசித்து யாகங்கள் செய்கிருர்கள், நீயே பிதுர்ரூபமும் தேவரூபமுந்தரித்து அவ்விய சவ்வியங்களைப் புசிக்கின்ருய், ஓ அச்சுதனே! மகதசங்காரதி நுட்பங்களும், பிருதிவியாதி பூதங்களும் அதனிடமிருக்கின்ற நுட்பமாகும், ஆத்தும தத்துவமுமாகி இந்த சூட்சப் பிரபஞ்சம் யாவும் எவ்விட மிருக்கின்றதோ? எவ்

விடத்திலிருந் துண்டாகின்றதோ? அது சொரூப குணங்களினலே பெருத்ததாகும், நினது மஹாரூபமாகி யிருக்கின்றது, சூக்குமாதி அதிக சூனியமாகி சிந்திக்கக் கூடாதாகி யிருக்கும் ரூபம் நினது பரமாத்தும சொரூபமாகி யிருக்கின்றது.

இப்படிப்பட்ட புருஷோத்தமனுகு மூமக்கு வந்தனம், சகலாத்துமகனயாவத் பூதங்களினிடத்திலும் சாந்தாதி குணங்களுடன் கூடியிருக்கும் நினது அப்ராக்ருதசக்தியாகும் ஜீவசொரூபத்திற்கு நமஸ்காரஞ்செய்கிறேன், எது வாக்குக்கும் மனத்துக்கு மெட்டாமலிருக்கின்றதோ எது விசேஷங்களாலும் விசேஷிப்பதற்குக் கூடாததோ, ஞானிகளுடைய ஞானத்தினலே நிரூபிக்கக்கூடாததோ அப்படிப்பட்ட சிலாக்கியமாகும், நினது முக்தாத்தும சொரூபத்திற்கு வந்தனம், எவனுக்கு தனக்குப் புரம்பாகும்ப,நார்த்த மில்லையோ, எவன் யாவத்திற்கும் அன்னியமாகி யிருக்கின்ருனே, அப்படிப்பட்ட பகவானுகும் வாசுதேவனுக்கு வந்தனம் தந்தனம், கர்மாதீனமாகும் நாமரூபங்களில்லாமல் கேவல விலக்ஷண சொரூபமாகும் மஹாத்துமனுக்கு வந்தனஞ் செய்கின்றேன், மேலுமவனுக்கு வந்தனஞ் செய்கின்றேன், அவனுக்கனந்தம் வந்தனஞ் செய்கின்றேன், சங்கர்ஷணதி வியூகரூபியகுவானி வந்தனஞ் செய்கின்றேன், தேவர்களெவன் பராத்பர ரூபத்தை தெரிசிக்கமாட்டாமல் மச்சகூர்மாதி அவதாரங்களினலே அர்ச்சனை செய்துக்கொண் டிருக்கின்ருர்களோ? அப்படிப்பட்ட பரமாத்துமனுக்கு வந்தனம், எவன் ருத்திராதி சகல பூதங்களுக்கும் அந்தர்யாமியாகி சுபாசுபங்களைப் பார்த்துக்கொண் டிருப்பனே? அப்படிப்பட்ட சகலசாக்ஷியும் பராபரனுமாகும் ஸ்ரீமகாவிஷ்ணுவுக்கு வந்தனஞ்செய்கின்றேன் அனித்தியமாகிய இப்பிரபஞ்சம் யாவும் எவனுடன் பேதமின்றி யிருக்கின்றதோ அப்படிப்பட்ட விஷ்ணுவுக்கு வந்தனஞ் செய்கின்றேன், எவனிடத்தில் நூலு வஸ்திரத்தில் கலந்திருப்பதுபோல கலந்தும், நூலினில் மணிகள் கோர்க்கப்பட்டதுபோல கோர்க்கப்பட்டிருக்கின்றதோ, அந்த மகாத்துமனுக்கு வந்தனம், சகல சாமியாகி சகல சேஷியாகுமிருக்கும் அந்த உத்தம புருஷனுக்கு வந்தனம், எவனிடத்தில் சகலமும் ஒடுங்குமோ, எவனிடமிருந்து சகலமும் சிருஷ்டி

காலத்தி லுற்பத்தியாகுமோ, எவன் சரீரியாகி சகலத்திற்கும் ஆதாரபுருஷனாக யிருக்கின்றானோ அப்படிப்பட்ட சர்வசுவாமிக்கு வந்தனஞ் செய்கின்றேன், எவன்யாவத்திற்கும் ஆத்துமாவாகி உள்ளும் புறம்புமாய் வசித்து ஞானானந்தமயனாகி நிறைந்திருப்பானோ, அந்தவாசுதேவனுக்குவந்தனம் என்று பலவாறு ஜெகதீசனான பரதேவ வாசுதேவனைப் புகழ்ந்துக் கொண்டாடி,

அப்பால் வெளியில் ஐக்யமாய் அத்வைதமாய் அகண்டானந்தமாய் அவாங் மனோகோசரமாய்த் தன்னை மறந்து அகம்பாவமிறந்து சதானந்தவாரியில் நிதானந்தப்பித் தானிறந்திருந்தார். கேட்டீர்களோ சித்தர்களே! இவரிப்படிக் காட்டிலிருக்க நாட்டில் ஜெயதேவ சுவாமிகளின் பத்தினியாகிய பத்மாவதி பதிவிரதைகளிற் புண்ணியவதி, பாபங்களைத்தீர்க்கும் பகீரதி, பக்தர்களைக்காக்கும் பார்வதி, பரஞானந்தெரிந்த பாக்கியவதி பரிபூரணானந்தம் நிறைந்தசந்த்ரமதி பசித்தோர்க் கன்னமளிக்கு மழியா நிதி, பந்தபாசங்களை மாய்த்த குணவதி, சகலசாஸ்திரங்களுமறிந்த பாரதி, அழியாக் கற்புள்ள பகவதி, ஜெயதேவுக்குகந்த ரதிபதியின் வாக்கைக் கடவாதசதி தன் தந்தையைவிட்டுத் தன்னிருப்பிடஞ் சேர்ந்துத் தன் கணவன் மாலைமட்டும் வாராமையால் பலவிடங்களிலும் பார்த்துக் காணுமல் வேர்த்து நிஷ்டையாலெங்கு நின்றுவிட்டாரோ? சிஷ்டராலெங்குக் கட்டுப்பட்டாரோ? பசியாலெங்கு பள்ளிகொண்டாரோ! பக்தர்கள் கையிற் சிக்கிக்கொண்டாரோ? அலைச்சலென் றகவாழ்வை துறந்துவிட்டாரோ ஆனந்தத்தாலென்னை மறந்துவிட்டாரோ வென்று,

ஊரெல்லாந்தேடி யுளமிகவாடி மடங்களுள் ஓடுவாள் அலறிவீழ்ந்தெழுவாள் காக்கைபோல் பறந்து கால்பலங் குறைந்து அயல்வீடென்றும் அறியாநங்கை, அயலாருடுரையிடாமங்கை, பிள்ளைகள் தம்மையும் கேட்டுளம் நைந்தாள், பள்ளிவீடுகளிற்பார்த் தகம் நொந்தாள், என்செய்வேன் என்பாள், பதியினைப் பிரிந்தேன், பாவியேனிருந்தேன், என பிரலாபித்துக்கொண்டு தெருக்கள்தோறும் அலையும்போது அதுதெரிந்த பத்மாவதியின்தந்தையானவர் பத்மாவதியினிடம்வந்து மிகவும்நொந்து அம்மா! நீ யொன்றுக்கு மஞ்ச வேண்டாம் நான் தேடிப்பார்த் தழைத்துவருகிறே னென்று

உரைந்து அவ்வம்மணியைத் தன்வீட்டுக் கனுப்பிவிட்டுத் தான் நாடுங் காடுந் தேடித்திரிந்து முகங்கரிந்து காணமல் மிகவு மிடைந்து வீட்டையடைந்து குமாரியான பத்மாவதியை நோக்கி,

ஓ அம்மா பாக்கியவதி! அவரெங்கேயோ மலைக்குகைகளிற் புகுந்து தவஞ்செய்துக்கொண் டிருப்பதைபோற் காண்கின்றது, இன்னுஞ் சிலநாளில் தானேவருவார் தரிசனந் தருவார் என்று பலவிதங்களால் தேற்றி துக்கத்தையாற்றிக் காப்பாற்றுகையில் பத்மாவதி அழுதகண்ணுந் தொழுதகையும் ஒருபொழுதுண்டும் தரையிற் புரண்டும் தலைமயிர் கோதாள், கலைகளையோதாள், வேறுடையுடுக்காள், மெத்தையிற் படுக்காள், மொழியாடாமல் விழிமூடாமல் துக்கம்மேலிட்டுக் கக்கசத்துக் குட்பட்டு, ஓ ஓ பகவானே! என் கணவனைப் பார்க்க எத்தனைநாள் செல்லுமோ இப்பிறப்பிற் காண்பேனே, காணமாட்டேனே, எக்காட்டிற் பிரவேசித்தாரோ, அல்லது தூர நாட்டிற் போய்விட்டாரோ, இம்மலைக்குகைகளிற் றவஞ்செய்கிருரோவென்று நாடோறும் காலையிலெழுந்து மாலைமட்டுக்கும் மலைகளிலும் குகைகளிலும் புதருகளிலும் பார்த்துத் தேகமெல்லாம் வேர்த்துக் கற்களாலும் முட்களாலும் பாதங்கள் பிளந்து தேகமெல்லாம் பீறிட்டு ரத்தமயமாகிப் பலதரம் களைத்து நடப்பதற் கிளைத்தும் பகலில் காட்டிலும் இரவில் நாட்டிலுமிருந்து சொல்லொணுத் துயரக்கடலி லமிழ்ந்து பகவானை பஜிக்கத் தொடங்கினுள். கேட்டீர்களோ சித்தர்களே யென்று நாபாஜி சித்தர் சொல்லுவார்.

ஜெயதேவர் கைகால் வெட்டுண்ட அத்தியாயம்

முற்றிற்று.

நான்காவது அத்தியாயம்

ஜெயதேவர் நாட்டையடைந்தது.

இவ்விதமாகப் பத்மாவதி நாள்கழிக்கும்போது கிரவுஞ் சராஜனைவன் வேட்டையாட நாட்டைவிட்டுக் காட்டையடைந்து வேட்டையாடித் தாட்டீகவீரரோடு நாட்டைநாடி வருகையில் ஜெயதேவர் வீழ்ந்திருக்கும் ஆழ்ந்த கிணற்றில் ஜலமுண்டென்று நலமுடன்சென்று எட்டிப்பார்க்கையில்

மானிடவுருவாய் மதிதருங்குருவாய்த் தோன்றப்பட்டு பெருமூச்சுவிட் டிருப்பதைக்கண்டு, ஜீவகாருண்யம் மேலிட்டு, ஐயோவென்று முறையிட்டு, வீரரைவிடுத்து வெளியிலெடுத்து, நீரெவரென்றும், நிஜஞ்சொல்லென்றும் வேந்தன் வினவ, ஜெயதேவர் ஊமைபோ லொன்றும் உரையாமலிருக்க, இராஜன் எதிராளிகளுடன் இகல்செய்தீரோ? மதிகெட்டு இந்தவகையானீரோ? துஷ்டர்களிந்த துன்பஞ் செய்தனரோ? கஷ்டம்வந்து உம்மைக்கலந்து நொந்தீரோ? கைகால் போன காரணமேதோ பொய்யில்லாமற் புகலவொண்ணுதோ திருடனே! சித்தனே! தேவனே! சொல்வீர் குருடனே! மூறடனே! குறையினைச் சொல்வீர்.

என்று பலதரங்கேட்கும் அண்ணல் வாக்கியத்தைக்கேட்ட ஜெயதேவர் சமாதியினின்று நீங்கிக் கண்களைத் திறந்து மன்னனே நீரேன்வந்தெனை யெடுத்தீர். உன்னதமானவென் சமாதியை யேன்கெடுத்தீர். தேவனுமல்ல, சித்தனுமல்ல, பாவஞ்செய்யாப் பத்தனுமல்லன், ஏழைப்பார்ப்பானு னீனமதியோனுன், ஊழினுலிந்த உபத்திரம் நேர்ந்தது, பக்தர்கள்போற்றும் பகவானுனவர், இத்தலந்தன்னி லின்புடன் பிறந்தார், கோதிலாராமனுக் குறைபலவடைந்தார், சீதையாற்றுன்பமாஞ் சிந்தையிலடைந்தார், சங்கரர் ஹத்தியாற் சகமெல்லாந் திரிந்தார், பங்கயன் தலையிழந் தங்கநொந்திருந்தார், பிராப்த வசத்தினுற் பேதையன் நொந்தேன், தராதலத்தழிவிலாச் சமாதியிலிருந்தேன் கால்கையைக் குறைத்தவன் கர்த்தனேயாகும், மால்விட்டு முன்படிவைத்து நீரேகும், சஞ்சாரசமாதிபல சஞ்சலமீய்ந்திடும், சஞ்சலமில்லாதவிச் சமாதி யருளீந்திடும், யாவரோ வென்றனக்கிவ்வுதவி செய்தனர், சேவைதந் தென்றனைத் திருக்குவிற் சேர்த்தனர். கைகால் ஜீவகாருண்யம் போமல்லோ கைகளாற் பலபலகஷ்டம் வந்துறுமல்லோ, பாதங்களாற் பல பதிதம் வந்துறுமல்லோ சடபாதர் காதையைச் சார்ந்து நீரறிவீரோ, சடவுடலையறிஞர்கள் தானெனப் புகல்வரோ என்று பற்பல மொழிகள் பண்புடனுரைத்துப் பார்த்திபனுளந்தனைப் பாகுபோற்கரைத்து, நயனங்களை மூடி நல்லருளை நாடி, நிஷ்டையில் த்ருக்குவாய்த்திருஷ்டி சேர்ந்திருந்தார்.

அப்போது இறையவனுகிய சிவபக்தன் திகைத்து, மிகவும் பதைத்து, நம்முடைய அரசாக்ஷியிலும் இப்பேர்க்கொற்ற தீங்கு நேரிட்டதல்லவா? ஆ ஆ துஷ்டர்களியாரோ, என்னுண்டுவனைத் துன்பத்தி லமிழ்த்தினுர்கள். சிவ சிவா! இதற்கு நானென்ன செய்வேனென்று கண்ணீர்விட்டழுது, கடவுளேயென்று தொழுது பெரியோர்க்கும் வந்ததேபழுது, பிரயோசன மில்லாதாயிற்றே யென்றழுது, மிகவும் நைந்து, அவரை வலம்வந்து, சாஷ்டாங்கமாகப் பணிந்து, அவர் நயனங்களிற் றன் நயனங்களை யணிந்து, பூமியில் விழுந்து, புரண்டெழுந்து, வாய்விட்டிரைந்து, மனம்புழுங்கவயர்ந்து மார்பிருகத் தழுவிக் கண்ணீராற்கழுவி அருமை யீதருமை யீதாரகரா வென்ருன், பெருமையாம் பெருமையாம் பித்தனே யென்ருன், தெளிகிலேன் தெளிகிலேன் சிவ சிவாவென்ருன், எளியனென் செய்குவே னீசனே யென்ருன் சங்கரா சாம்பவாவென்ருன், மங்கைபங்காளா மழுவாளியே யென்ருன், அய்யனே மெய்யனே ஆதியே யென்ருன், துய்ய நற்கையனே சோதியேயென்ருன், தேவர்கள்பணியும் தேவனே யென்ருன், ஜீவர்கள்தொழுமகா தேவனேயென்ருன், திருநீறணிந்த திரிசூலனே யென்ருன், அருமறைகள் புகழாதிமூலனேயென்ருன், காமதகன ரிஷபவாகனுவென்ருன் ஏமமில்லாக் கங்கை மோகனுவென்ருன், சோமசுந்தரமௌலி தூயனேயென்ருன், நேமமுள பக்தர்கள் நேயனேயென்ருன் பூதநாத பரிபூரணுவென்ருன், ஆதிநாதா ஆதிகாரணுவென்ருன், திரிநேத்ரனே திவ்ய சரணனேயென்ருன், சரணமென் பார்பாப ஹரணனே யென்ருன், சம்புசாம்பவசாக்ஷி சாந்தனேயென்ருன், நாகபூஷண நந்திகேசனே யென்ருன் தியாகராயா சித்விலாசனேயென்ருன் நீலகண்டாவின்ப நிர்த்தனே யென்ருன், சீலதிரிபுரநாச சித்தனேயென்ருன், பாண்டரங்கா பரசுபாணியே யென்ருன், தாண்டவா ஆண்டவா சாமியே யென்ருன், அருளிலேன்செய்வ தென்னருள்வா யென்ருன், அயனரியுமேத்தும் களங்கனே யென்ருன், இமயமருளும் ஏகலிங்கனே யென்ருன், நித்யநிர்மல நிராங்காரனே யென்ருன், சிவ சிதம்பரதேசிகனே யென்ருன், பவவினுச மசானவாசனேயென்ருன், அவிநாசவ விசேஷவதூலனே யென்ருன், சுவிசேஷ ஜகதீசசுபலேனேயென்ருன், நித்தசுத்த

வகோர நிஷ்களாவென்றான் புத்தமுதவ்யோமபுஷ்களாவென்றான், அந்தமாதியிலா வனாதியே யென்றான், பந்தமறு நிஷ்டானு பூதியேயென்றான், சகலசுகமருளுபய பாதனேயென்றான், சர்வசரஜீவர்கள் சாட்சியே யென்றான், துரியபரவசமீயுஞ் சூட்சியே யென்றான் என்றீவ்விதத் தோத்திரம்புரிந்து மிகவும் பரிந்து அழுதகண்ணு நதொழுதகையுமாய் நின்று எனதிஷ்ட தெய்வமாகிய பரமேசுவரனே என்னை யாட்கொள்ளும்பொருட்டு இவ்வுருவோ டிவ்விடத் தெழுந்தருளினார்.

ஓ ஓ மந்திரிபிரதானிகளே! நமது சத்குருசுவாமிகளைப் பார்த்தீர்களா! சந்தேகத்தைத் தீர்த்தீர்களாவென்று தண்டிகையிலேற்றிச் சத்குருவேயெனப்போற்றி நாட்டிற்கொண்டு போய் மேடையிலிருத்தி கைகள் ரணத்தையும் கால்கள் ரணத்தையும், அவுஷதங்களினு லருமையாகவாற்றி உலகெலாமிவரென் குருவெனத்தூற்றி எனையாளவந்தவ ரிவரென்று வாழ்த்தி இனியெனக்கோர்குறைவில்லை யென்றேத்தி உடலுமுயிரும்போலும், ஊசியுநாலும்போலும், நீரும்பாலும்போலும், வெளியும் வளியும்போலும், வேறுந்தோலும், போலும், கண்ணும் நிமையும்போலும், கடலும் ஒலியும்போலும், ஒற்றுமையோடு கால்சேவை முதலானதுஞ் செய்துக்கொண்டு வருங்காலத்தில் இராஜனுக்குத் தர்ம்மமேலிட்டுக் கர்மங்கீழ்ப்பட்டு முத்தியைநாடி முகமிகவாடிக் குருவேயென்று குறைபலபுகன்று ஞானசாஸ்திரம் வாசித்து நல்லருளுடையோரை நேசித்து உபதேசம் பெற்றுத் தபவேஷமுற்று நிஷ்டையைக்கூடி நேயத்தைநாடி ஒருநாள் ஜெயதேவஸ்வாமிகளை வலம்வந்து பணிந்து இவ்வாழ்க்கை வேண்டிலேனெனத் துணிந்து, ஓ எனதையனே! மிகவுந்துய்யனே! தேகமோ நீர்மேல்குமிழி, செல்வமோ நீர்மேலெழுத்து, துக்கமோ ஆழ்ந்தஆழி சுகமோ அளந்திடுதாழி, பந்தமாஞ் சமுசாரப்பாழில், எந்தையே நானின்னம் வீழில் துன்பங்கள் நீங்கலெக்காலம், இன்பம் நானடைவதெக்காலம், அன்னப்பால் புசித்தாலுமென்ன, ஆவின்பால் புசித்தாலுமென்ன, சரிகையுடுத்தாலுமென்ன, தவிசுமேற் படுத்தாலுமென்ன, கந்தையை யுடுத்தாலுமென்ன, கற்கள்மேற் படுத்தாலுமென்ன, கனகபூஷண மணிந்தாலும், கஸ்தூரி திலகமணிந்தாலும், நாடெலாம் பணியவாழ்ந்தாலும், நாற்றிசையர்வந்து தாழ்ந்தாலும், மாடுபோ

லுழைத்து நொந்தாலும், வாசல்காத் திழிவடைந்தாலும் எல்லாமொன்றேயாம் ஆதலால் அருளான ஞானவழிகற்று, ஆனந்தவாழ்வினைப்பெற்று உம்மைப்போ லொன்ருயிருந்து இம்மைச் சுகமெல்லாந் துறந்து, வீடெலாம்போய்ப் பிட்சை வாங்கி வீதிதிண்ணையில் தங்கித்தூங்கி உணர்வான ஒளிவிரித் தோங்கி உம்மைப்போல் துக்கத்தைத்தாங்கி எண்ணங்களில் லாமலோட்டி, ஏகத்தில் மனதினைநாட்டிப் பித்தனென் றய லோர்க்குக்காட்டிப் பேய்மனதை யில்லாமல் வாட்டிச் சந்தோ ஷவாரிதியிற் படிந்து, தன்னையறிந்து, தேகஸ்மரணையிற ந்து, பிரம மாத்திரமாயிருக்கக் கருணை கூறுமையாவென்று கிரீடமுதலானவைகளை நீக்கி, இகபோக விச்சையைப்போ க்கி, ஜெயதேவஸ்வாமிகளை அரைநிமை பிரியாதிருக்கும் போது ஒருதினம் ஜெயதேவர் கருணையுடனே இராஜனை நோக்கி,

ஓ அரசனே! பிரஜைகளுக்குள் சுரசனே! இல்லறந்துற ந்தா லேதுண்டுலாபம், யானெனதென திரிபவர்க்கேகுமோ கோபம், தாணிறக்காவிடிற் ருேணுமோ தீபம், சாதுக்கள் சேவையாற் புத்தி பத்தியும்வரும் சாதுக்கள் சேவையாற் சித் திமுத்தியும்வரும், சாதுக்கள் சேவை செய்தால் வரும் பாக்கி யம், சாதுக்கள் சேவைசெய்தால் வரும்யோக்கியம் சாதுக்கள் சேவையால் வரும்ருள் சிலாக்கியம், சாதுக்கள் பக்குவர்க் கருள்வர் மாவாக்கியம் ஆதலால் அரசாங்கத்தை அன்புடன் செய்து, அறத்தாற் பாவமனைத்தையுங்கொய்து என்போலில் லறத் திருந்தையே யானல், உன்போலுத்தம ருலகினி லுண் டோ ஏழையேன்மொழியா விழிவுறலுண்டோ கோழையேன் மொழியாற் குறைவுறலுண்டோ? வென்று கிரீடமுதலான வைகளையு மழைப்பித்து உத்தமர் கைகளாற்றரிப்பித்து மௌ னசமாதியி லெழுந்தருளி யிருந்தார். கேட்டீர்களோ சித்தர் களே யென்று பின்னுஞ்சொல்லத் தொடங்கினர்.

ஜெயதேவர் நாட்டை அடைந்த அத்தியாயம்

முற்றிற்று.

ஐந்தாவது அத்தியாயம்

ஜெயதேவரைப் பத்மாவதி தரிசித்தது.

என்னைப்போ லில்லறத்தி லிருப்பாயாகில் உன்னைப்போ லுத்தமருண்டோ? எனத் திருவாய் மலர்ந்தருளிய ஜெயதேவைப் பூபதி வணங்கி, ஓ ஸ்வாமி! தேவரீரைப்போ லடியேனைச் சமுசாரத்தி லிருக்கும்படியாக கட்டளையிட்டீரே? ஸ்வாமிகளுக்கு மனைவிகளுண்டோ வென்றுதொழ, ஜெயதேவர் உண்டென்றறைய நரபதி அவ்வம்மணியை விட்டுப்பிரிந்த காரணமேதென்றுபணிய ஜெயதேவர் முன்னடந்த வெல்லாஞ் சொல்ல வேந்தன், ஐயோ! பாவியீதறியா திருந்தேன் அடியேனுக்குற்ற அபசாரந்தெரிந்தேனென்று அக்கணமே பல பல்லக் காட்களையும், பல தெரிவையர்களையும், சிங்காரமான தண்டிகையையும், திவ்யமான ஆடையாபரணங்களையும் பில்வகாமுக்கனுப்பவும், பத்மாவதியைப் பயபக்தியுடனழைத்துக்கொண்டு வரும்படியாகவும், மந்திரிகளிடமுரைத்து ஸ்வாமிகளைநோக்கி ஓ என்னுண்டவனே! பத்தர், சித்தர், பரமஞானிகள் சித்தங்கலங்கிடத் தீவினை மூண்டிடுமெனப் பெரியோர்கள் உரைக்கின்றார்களே அதுமெய்மையானால் தேவரீரை இவ்விதமாய் கண்டித்துபாழுங்கிணற்றிலெறிய நினைத்தவுடனே அக்கள்வரெறிந்து பஸ்பமாய் போகாம லிருந்த காரணமேதோ தெய்வீக தன்மை பொருந்திய தங்கட் கிவ்வித தண்டனையும் வந்த காரணமேதோ? தாங்கள் நினைத்தால் வீரமுள்ள சோரர் மனந்திடுக்கிட் டிடையாரோ? எமலோகமடையாரோ? இச்சங்கை நீங்க அனுக்கிரகம் புரியுமையாவெனத் துதிக்க, ஜெயதேவர் ஓ நித்தியானந்தத்தைக் கோரும் சத்தியவாக்குள்ள வேந்தனே! உபசாந்தனே! பிராப்தமானது மூவர் தேவர் முனிவர் மற்றியாவரையும் விட்டதல்ல அப்படியிருக்க என்னால் வெல்லக்கூடியதோ இதற்கோர் திருஷ்டாந்தமான சரித்திரமுண்டு அதுயென்னவென்றால்,

திரிகாலங்களை யுணர்ந்த சித்து வித்தைகளிற் றேர்ந்து ஜீவன் முக்திப்பதத்தை யடைந்த ஓர் முனீஸ்வரரிடம் மோக்ஷாபேக்ஷையுள்ள ஓர் சீலன் அடைந்து அவர்க்குப் பணிவிடைசெய்துக்கொண்டிருந்தா னஃதெவ்விதப்பணியெனின் ஆசான் மெஞ்ஞானநிஷ்டையி லெழுந்தருளியிருந்து பகிர்முகப்பட்டுக் கண்களைத்திறந்து எவ்வஸ்துவை நினைப்பாரோ

அவ்வஸ்துவை அவர்கேட்காமுன்னமே அவரெதிரில் வைத்து வந்தனஞ்செய்வா னுதலாற் றேசிகனேர்நாளு மிப்பண்டம் எனக்கு வேண்டியதென்று வாய்திறந்து கேட்டதேயில்லை. எதுவேண்டுமென்று ஓர்நாளும் மாணுக்கனும் வினவியதுமில்லை, இப்பேர்க்கொத்த அபூர்வ செவைசெய்யும் சீஷனைச் சோதிக்கும்பொருட் டம்முனிவர் ஓர் திவசமொன்றையும் நினையாமல் அட்சிகளைத் திறந்து மௌனமாயிருந்தார் அப்போதம் முமூட்சு ஆசாரியர் கவனித்ததை வேறுவிஷயத்தில் தன்புத்தியைச் செலுத்தியிருந்ததனு லல்லவோ உணராமற் போனேம், குருவுக்கு அபராதஞ்செய்த நாமினி இவ்வாக்கையோடிருத்தல் மிகவுங் குற்றமென் றம்முனியின் பாதத்தில் வந்தனஞ்செய்து தன் சிரத்தைக் கொய்துக்கொள்ள வெத்தனிக்கையில், மாதவன் மாணுக்கனை விளித்து, ஓ சீலனே! நான் கேட்கா முன்னமே கோரியபொருளைக் கொடுத்துக் கொண்டுவந்த உன்விவேகத்துக்கு வியப்படைந்து இன்றையத்தின மொன்று மூண்ணுமல் கண்கள் மலர்ந்திருந்தேனிதனுலேயே உனக்கொன்றும் புலப்படாமற் போயிற்று, உன்னைப்போல் பணிவிடைக் காளானவர்க ளிவ்வுலகில் யாருமிருக்கமாட்டார்கள், உன்னை மிகவும் மெச்சினேன், நீயெனக்குகந்த மாணுக்கனேயாம், இனி புனக்குபதேசிப்பதற் கியாதோர் தடையுமில்லை உனக்கென் னபயவஸ்தங் கொடுத்தேன், அறுபத்து நான்கு சித்திகளையும் ஜீவன் முக்தியின் நுட்பமான நிலையையு முங்களுக்கு போதிப்பேன், எமனுடைய பாசத்தைச் சேதிப்பேன், உனக்கோர் குறையுண்டாகுமாயின் மூவர்களோடும் வாதிப்பேன், அண்ட பிண்ட பிரமாண்டங்களையும் பேதிப்பேன் என்று சீஷன் மஸ்தகத்தின்மேற் றனதஸ்தத்தைத் தாக்கி மகா வாக்கியோபதேசஞ்செய்ய யோசித்து இவனுக்கின்ன மெத்தனை நா ளாயுளிருக்கின்றதோவென்று க்ஞான திருஷ்டியால் நோக்கி எழுபத்திரண்டு நாழிகையிருக்க ஆச்சரியப்பட்டு மாச்சரியங்கொண்டு ககனகமன குளிகையொன்றை சீடனை வாயிலடைத்துக்கொள்ளும்படி செய்து பூலோகம் புவர்லோகம் சுவர்லோகம் சனலோகம் தபோலோகம் மகாலோகம் என்னு மாறையுங்கடந்து சத்தியலோகமடைந்து பிரமாவை தரிசித் தென்மாணுக்கனுக் கற்பாயுள் கொடுத்த காரணமேதெனக்கேட்க விரிஞ்சன் ஓ முனிசிரேஷ்

டரே! உமது மாணுக்கனுக்கின்னம் இருபத்தாறு முகூர்த்தமே ஆயுளிருக்கின்றதாதலால் நானென்ன செய்யட்டுமென்று பின்னிடைந்ததைக் கண்ட அப்புங்கவன் வைகுந்தமடைந்து நாரணனை வினவ அம்முகுந்த னிவனுக்கின்னம் பதினறு முகூர்த்தமிருப்பதா லென்னுலொன்றுஞ்செய்யக் கூடியதல்லவென முனிநாதன் கைலைக்கெழுந்தருளி உமாபதியைக் கேட்க அக்கறைமிடற்றண்ணல் இவனுக்கினி ஆறுமுகூர்த்தமாயுளே யிருக்கின்றதாதலினு லென்னுலொன்றுஞ் செய்யக் கூடியதல்லவென அவ்வடிகள் நமது மாணுக்கனை மாய்க்குங் காலனை இப்போதே வாட்டுவேனென்று எமபுரிக்குப்போய் எமன் வாயிலிற் புகுத ஆறுமுகூர்த்தமானதால் பின்வரும் மாணுக்கனுக்காயுள் முடிந்து காவடம்பட்டு மண்டையுடைந்து ஆசிரியர் மேல்விழுந்து மரணமடைந்தான் அதைக் கண்ட முனிநாதன் மிகவும் முனிந்து பெருமூச்சுவிடவே, அம்மூச்சில் அக்கினிபிறந்து எமனுலகை எரிக்கத் தொடங்கிற்று.

அப்போது கூற்றுவன் பயந்து நயந்து நடுங்கி ஒடுங்கி ரிஷீஸ்வரனைத்தொழுது, ஓ மாதவனே உம்முடைய மாணுக்கன் மடிந்தது உம்மாலன்றி என்னுலல்ல எப்படியென்பீரேல் உமதாசிர்மத்தி லிருந்துக்கொண்டே எமனெப்படி வருவானென்று ஆசீர்வதித்திருப்பீரேல் இவனுயிர் நீங்குமோ? மும்மூர்த்திகளாவது தங்களுலகங்களில் நிறுத்தி ஆசீர்வாதஞ் செய்திருப்பாராகில் என் வாசலில் மரணமடைவானே? தேசிகர் பணிவிடையிற் செழித்தவனுதலால் மும்மூர்த்திகளேயும் தரிசித்து என்னைத்தரிசிக்காமல் மரணமடைந்தான் என்னுடைய வாசலில் அவனுடைய பிராணன் நீங்கும்படியான விதியிருந்தபடியால் அவ்விதி உம்மையும் திரிமூர்த்திகளையும் ஆசீர்வாதஞ் செய்யாமற் பேதித்ததன்றி இவ்வளவுதூரம் உம்மையும் வரும்படியாகச் செய்த பிராப்த உண்மை தெரியாமல் என்மேல் முனிவுகொள்ளலாமோ? உமது மாணுக்கன்மேலுமக்குக் கருணை யிருக்குமானுல் உமதஸ்தத்தை அவன் மஸ்தகத்தின்மேற் ருக்கி தீர்க்காயுளுடன் வாழ்வாயாகவென்று ஆசீர்வதிப்பீரே லிப்போழ்தே உயிர்பெற் றெழுவானெனப் பணியும்போது அம்முனீஸ்வரன் உண்மையேயென் ருங்காரந்தணிந்து ஓங்கார முச்சரித்துச் சீஷனுக் காசிர்வாதஞ்செய்

தெழுப்பிக்கொண்டு தன்னாசிரம மடைந்தி அறுபத்து நான்கு கலைகளையும், பரமானந்த நிலையையும் போதித்துச் சுக சமாதியி லெழுந்தருளி யிருந்தாராதலால், ஓ மண்டலாதிபனே? பிராப்தபோகம் யாரையும்விடாது, வீணாய்த் துக்கத்தைக் கொடாது ஆனால் ஈஸ்வர கடாட்சமும் பெரியோர்க ளாசீர்வாதபலமும் திடஞானமு முள்ளவர்களுக்கு மலைபோல்வரும் வினை பனிபோல் நீங்குமென்பதற்கையமில்லை அதெப்படியெனில் எனது கை கால்கள் வெட்டுண்டும் ஸ்ரீமந்நாராயணன் கருணைகடாட்சத்தா லெனக்கோ ரணுவளவுந் துன்பந் தோன்றாமல் பிரமானந்தத்திற் சொக்கியிருந்தேன் எந்தெந்த நாளில் எந்தெந்தச் சுகதுக்கங்களை யனுபவிக்கவேண்டுமோ அந்தந்த நாளில் அதுவது வந்தடையாமற்போகாது பளுவாய் வரும்விதி சுளுவாகப் போவதற்கு சாதுக்கள் சேவையே முக்கியமானது, ஏனெனின் திரிமூர்த்திகளாலுந் தீர்க்காவினை சீவர்முக்தர்களாற் றீர்ந்துபோம் முன்னம் மாந்தாதா மைந்தரில்லாக் குறையால் வாட்டமடைந்திருக்க அதுதெரிந்த நாரதபகவானாசீர்வசனம் புகலாமல் மும்மூர்த்திகள்பாற் சென்று கேட்க, அவர்களும் வரமளிக்காம லவ்வரசனுக்குப் புத்திர பாக்கிய மில்லையென்றாற்ற யாழ்வல்லோன் சிந்தாக்கிராந்தனாய்க் காட்டிற்சென்று தபஞ்செய்யத் தொடங்கினார் அதை யறிந்த ஓர் முனிவர் மாந்தாதா வீட்டையடைந்து அவர்மனைவி பணிந்தன்புடன் கொடுத்த நான்கு பலகாரங்கட்கு நான்கு புத்திரர் பிறக்கக்கடவதென் றாசீர்வதித்துத் தன்னிருப்பிடஞ் சேர்ந்தார். அம்முனிவர் வாக்கியப்படியே மாந்தாதாவுக்குச் சதுர்மகவுண்டாகிச் சந்தோஷசாகரத்தி லமிழ்ந்திருந்தான். ஆதலால் மகான்களுக்குப் பணிவிடைசெய்வோர்க்கு ஓர் காலத்தும் பழுதுண்டாகாது. அநுமார்முதலானவர்களும் சிரஞ்சீவியைப் பெற்றது உத்தமர்களினாசீர்வாதப் பலனல்லவோ?

ஓ இராஜனே! நீயும் பெரியோர்களுக்குப் பணிசெய்வதற்குடன்பட் டிருப்பையாயின் மேன்மையான லாபத்தை யடைவா யென்கிறபடி பல வார்த்தைகளைப் பகரும்போது நிருபன் மகாபாக்கியமென்று சாதுக்கள் சேவையிற் செழித்திருந்தா னிவர்களிவ்விதமா யிங்கிருக்கையில் மந்திரிகளால னுப்பப்பட்ட தண்டிகையாளரும் தையலரும் பில்வகாமுக்

குப்போய் ஜெயதேவ ஸ்வாமிகளின் திருநாமம் புகன்று பதி விரதா சிரோமணியாகிய அவர் பத்தினி எத்தெருவி லிருக்கிறு ரெனக் கேட்டறிந்து அவ்வம்மணி யிருக்கும் வீட்டை யடைந்து பத்மாவதியைப்பணிந்து நயனங்களை யணிந்து, பத்மாவதியிவளெனத் துணிந்து, அம்மா பாக்யவதி ஜெய தேவஸ்வாமிகளுக்குகந்த யோக்யவதி, ஸ்வாமிகள் கிரவுஞ்ச ராஜனிடம் க்ஷேமமா யிருக்கின்றார், அவ்வரசன் உம்மை இக்கணம் அழைத்துக்கொண்டு வரும்படியாய் எங்களை யனு ப்பியிருக்கிறபடியால் எங்களம்மணி தடைசெய்யாமல் சீக்கிரம் புறப்படுமம்மாவெனத் துதித்துநிற்கும் ஏவலாளர் வார்த்தை யைக்கேட்ட பத்மாவதி உடலைவிட்டகன்றவுயிர் பின்னு மவ் வுடலில் வந்துற்றதுபோலவும், இறந்த மக்கள் எழுந்து வந்ததைப்போலவும், இஷ்டதெய்வம் தன்னெதிர் பிரசன்ன மானதைப்போலவும், தரித்திரனுக் கிராஜரீகங் கிடைத்த தைப்போலவும் சந்தோஷமடைந்து ஸ்ரீராமனைப் பிரிந்த சீதாபிராட்டி அசோகவனத்தி லுயிர்விடுந் தருணத்தில் பிர சன்னமாகி ஸ்ரீரகுநாயகன் சீர்புகன்று உயிர்விடாமல் ஜானகி யைக்காத்த அநுமானைப்போல் என்பிராண நாயகனுடைய க்ஷேமமுரைத்து என்னை ரட்சித்த சீலர்களே அநுகூலர்க ளே இதோ பாயாசமுண்ணுங்கள் ஆயாசந் தீருங்களென்று உபசரணை செய்தூட்டித் தன்பதிவிரதா தர்மத்தைக்காட்ட நளமகாராசனைப் பிரிந்த தமயந்தி தன்பதியைக் காணும்பரி யந்தம் கிழிந்த ஓர் துண்டுவஸ்திரத்தையே யணிந்துகொண் டிருந்து நளமகாராஜனைத் தரிசித்த பதிவிரதையைப்போல ஜெயதேவ ஸ்வாமிகளைப் பிரிந்ததின்முன் னுடுத்தியிருந்த ஆடையுடனோர் வருஷபரியந்த மிருந்து அப்படியே வெளி ப்பட்டுப் பிராணநாயகனைப் பிரிந்தநாளே இறவாது வி்து நாள்பரியந்தம் இவ்வாக்கையை வைத்திருந்த பாதகியாகிய தோதகி தண்டிகைமீதேறத் தகுமோவென்று தாய்தந்தைய ரிடம் விடைபெற்றுக்கொண்டு காதலனைப்பார்க்க அதிக ஆவ லோடும் நடக்கத் தொடங்கினாள். அப்போது காவலாட்க ளும் ஏவல் ஸ்திரீகளும் பலவந்தமாக யவ்வம்மணியைப் பல் லக்கிலேற்றி அதிதுரிதமாக நடக்கும்போது பத்மாவதி இத்தனை நாளாவெனைமறந் தெவ்வண்ணமிருந்தார் யான் செய்தகுறை யேதென்பாள், இத்தனை நாளா யிவ்வுடல்

நீங்காதேனிருந்தேனே யிறைவனே யென்பாள், பதியினைப் பிரிந்தும் பாவியேனிருந்த பண்பேதறியேன் பரனேயென்பாள், பதியினைப்பிரிந்தும் பாவையரினி நாம் பாரினிலிருந்த தாற் பயனேதென்பாள், தேசமெல்லாம் நான்தேடாதையோ வாசமாக இவ்வூரில் வாழ்ந்தேனென்பாள், நீசதியென்று நிமைபிரியாத நிர்மலன் பிரிந்த நியமமேதென்பாள், எத்தனை நாள்செலும் இறைவனைப் பார்க்க ஏவலாளர்களே இசைப்பீரென்பாள், என்றனுயக னிருந்திடூர்தானிதுவோ வெதுவோ விசைப்பீரென்பாள், என்றிங்ஙனம் புலம்பிக்கொண்டே கிரவுஞ்ச ராசனுடைய பட்டணத்திற் பிரவேசித்து ஜெயதேவரைப் பார்க்க மிகவுமாசித்து ஸ்வாமிகளிருக்கும் மேடையிற் சென்று கணவன் முன்னின்று தோத்திரம் புரிந்து மிகவும்பரிந்து வலம்வந்து பணிந்து கரங்களைச் சேர்த்துக் கைகால் வெட்டுண்டிருப்பதைப் பார்த்துத் தேகமெல்லாம் வேர்த்து இதுவென்ன ஆச்சரியமென்று பூமியில்விழுந்து கடகடவென்றுருண்டு பெருமூச்சுகள்விட்டு ஸ்மரணை கெட்டு மூர்ச்சையடைந்து மிகவுமிடைந்து உடனே தெளிந்து வாய்விட்டழுது பலதரந்தொழுது யார்செய்தாரிக்குறை இறைவனே யென்றாள், பார்தனிலவ ரிருப்பார்களோ யென்றாள்.

இப்படி பத்மாவதி புகன்ற மொழியைக்கேட்ட ஜெயதேவர் திடுக்கிட்டு என்ன புன்மொழிதனை யிசைத்தனை பூவையே! என்னை யாண்டவர்களை யிகழ்ந்தேன் பாவையே! கை குறைந்தாலென்னே? மெய்யிழந்தாலென்னே? விதியை நான் வெல்வனோ? அம்பை யெய்தவனைவிட் டம்பினை நோதல் போல் எம்பிரான்றன்னை விட்டியாரை நாம் நோதலே எம்பிரான் கட்டளை யார்வெல்வர் நங்கையே! யாம் முன்னஞ்செய்த தீவினை நம்மை வந்தணுகினுல் நாராயணன் என்செய்வான் நவிலுவாய் கோதையே! பிணிகளுங் கவலையும் பீடையும் பிரிதலும் பிராப்தமென்று நீ தெளிகுவாய் பேதையே! அரசாங்க போகமும் அருள்ஞான யோகமும் அயனெழுத்தின்படியமையும் நல்லறிவையே! ஜகமாண்ட புரூரவச் சக்ரவர்த்தியு மரிச்சந்திரனும் பட்டபாடறிவையே தெரிவையே என்று பத்மாவதியின் துயர்நீங்க அரிச்சந்திரன் முதலானவருடைய சரித்திரங்களைச் சொல்லத் தொடங்கினர்.

அரிச்சந்திரன் கதை.

விருத்தம்.

சத்தியம்பொறுமை தருமநல்லொழுக்கஞ் சாந்தமுமுளவரிச் சந்த்ரன்
உத்தமநாடு நகரராசாட்சி யொருநொடி தனிவிழந்தணிய
வத்திரமிலதோர் தனையனைச்சுமந்து மன்னர்வாழ்த் திடுமடிநோக
அத்தமிற்றிரவு தேள்கடிக்கயர்வுற் றனல்வெயின் முட்களினடந்தே. 1
உலகெலாமாளும் புத்திரன் றனையு மும்பர்வா முலகினைமதிக்கு
நலமதாயோங்கு பணியணிந்திருந்த நன்மனை யாளையுநாண
நிலமிசையன்று வீதிகடோறும் நீர்கொண்மி நீர்கொண்மியென்று
விலைதனைக்கூறி யந்தணன்றனக்கு விற்றமுந்தினன் றுயர்க்கடலில். 2
ஜகமொருதுரும்பா யெண்ணியீந்திட்ட சற்குணன் கிஞ்சித்தப்பொருட்கா
ரிகழ்வுளபுலையற் கடிமையாயாவி னிறைச்சியைச் சுமந்திடுகாட்டை
பகலிராக்காத்து வாயரிசியையே பக்ஷித்துப் புலையன்கால்பிடித்துச்
செகம்புகழ்புதல்வன் றனைதனதாவித் தேவியை நினைந்தழுதேங்கி. 3
இருக்கின்றநாளிற் சந்திரமதியு மீவிரக்கமுமிலா மறையோன்
றருக்குணனடிக்க வுடன்மிகநடுங்கித் தலைவிதி யென்றதிகாலை
சுருக்குடனெழுந்து பூமியைத்துலக்கித் தோட்கள்வீழ்ந் திடபணிசெய்து
மருக்கொழுந்தணிந்த மத்தகநோக வரிபுனல்சாணமுஞ் சுமந்தாள். 4
ஆழிசூழுலகை யாளுநற்குமா னருக்கன்வந் திடுமுனமெழுந்து
கூழினைப்புசித்துக் கரிபுலிவாழுங் குழுப்பொறை தனில்வெயிலதனி
லேழைபாலகருக் கேவல் செய்தஞ்சி யிடர்தருங் கற்கண்மேனடந்து
தோழர்களோடு சமித்தையுந்தருப்பைச் சுமந்துயா மத்தின்முன்பாக. 5
கொண்டுவந்திடவந் தணன்மிகமுனிந்து கொஞ்சமென் றடித்திடவயர்ந்து
மண்டிடமில்லா தாதரவில்லா தம்மம்ம வப்பனேயென்றும்
முண்டநொந்திடவுங் கண்டநொந்திடவு முளரியைத் தருப்பையைக்கட்டிக்
கொண்டுதந்திடுநா ளினிலொருநாளிற் கொடியமாவட வயிற்றநயன். 6
தருப்பையைக்கண்டு பறித்திடாவிடினந் தலைவன்வோ துவனெனவஞ்சித்
தருப்பையைப்பறிக்கச் சீரியேயுரகந் தீண்டிடச் சகித்திடாதுடலம்
நெருப்புபோலெறிய நிலந்தனில்வீழ்ந்து நெட்டுயிர்ப் பிறந்துமெய்மூர்ச்சித்
தருப்பமேமிந்ததா தரவிலாதையோ வன்னைதந்தையை நினைந்தழுதான். 7
பஞ்சணைமீது வரும்பிலாமலரைப் பரப்பிமேற் படுக்கவைத்திடவப்
பஞ்சணைமீது முடல்சகிக்காத பண்புளகுமாரனு நாய்பேய்
வஞ்சகப்புலிவா ழடவியிற்கற்கண் முட்கண்மேற் புரண்டுடல் வருந்தித்
தஞ்சம்யாரின்றித் தனல்விழுபுழுப்போற் றுமமேமிகுந் துயிர்விடுத்தான்.
ஆவிநீங்கிடவந் தணர்நகர்மேவி யறைந்திடச் சந்திரமதியும்
ஓவியம்போலோர் நாழிகைநின் றுன் மத்தமா யுடறனைமறந்தாள்

பாவிநானென்செய்வே னென்பன் தப்பாள் பதைத்துவீழ்ந் தழுதுமூர்ச்சிப் [பாள்
ஆவிநீத்தவள்போ லரைபதமிருப்பா ளப்பனே மடிந்தையோ வென்பாள்.

வாய்திரந்தழுதால் மறையவன்முனிவா னென்றுதன் வாய்திறந்தாற்றாள்
சேய்தனைநினைந்து மறந்துதன்வாய்விட் டிடர்க்கடலினிற் புகுந்தழுவாள்
நாய்நரிபேய்வாழ் நாசமாங்கானினல்லுயிர் விடுத்தையோவென்பாள்
சேய்தனைக்காண மன்னவன்வந்தாற் செப்புவ தென்னெனத்துடிப்பாள்.

வேறு.

முகத்திலு மார்பின்மீது மறைந்துகொண் டழுதேமுற்றத்
தகத்துள பணிகள்யாவு மட்டியில் லாமற்செய்து
தகர்த்திடு மறையோன்பாதந் தாழ்ந்தென்றன் றநயன் காட்டில்
தகித்திடுமரவான் மாண்டான் தகனஞ்செய் திடனுன்போக. 11

விடைகொடு மெனவப்பார்ப்பன் வேலைபற் பலவிருக்க
அடியென்ன சொன்னுய்பைய லடவியின் மாண்டதாலே
தடந்தனக் குரியகள்ளி தருப்பையைக் கொணர்தற்காளின்
றிடர்நஷ்ட மெனக்கல்லாம லென்னடி யுனக்குநஷ்டம். 12

என்னவென் னையாவிட்டி லிருக்கின்ற பணிகள்யாவு
முன்னமே செய்தேனென்ன முனிவுகொண் டடித்துவைதென்
சொர்னத்துக் கழிவுதந்த துன்மார்க்க பயறனக்கோ
ரன்னையு முண்டோபோகா தகத்தினி லிருப்பாயென்றான். 13

இருவென்ற போதேபெற்ற வயிறெரிகிற தென்னையா
அருணன்வந் திடுமுன்சேர்வே னகந்தனை யெனவவ்வம்ப
னருங்கானஞ் செல்லவிடையீ யெனவடி பணிந்துபோற்றி
இருளென்று மறியாச்சந்த்ர மதியிரு ளினிற்றனித்தே. 14

கானக நாடிச்செல்லக் கார்மழை குமுறிப்பெய்ய
ஆனனங் கட்டிடாம லநிலன்வே கமதாய்வீச
கானக முள்ளுங்கல்லுங் கால்களிற் றைக்கமுங்கில்
ஊனெலாம் பீறரத்தத் தா லுடனனைந்து நொந்தாள். 15

செடிகளின் மயிர்கள்சிக்கத் தேள்புயங் கமுங்கடிக்கப்
பிடிபுலி கூவிநிற்கப் பீதியான் மனந்துடிக்க
மடிபிடி யெனப்பேய்சூழ மைந்தனை நினைந்துநைந்து
படியெலா மாளுந்தூய பாலனைத் தேடலுற்றாள். 16

மயில்குயில் கிளிகாளென்றன் மைந்தனைக் காண்கிலீரோ
புயங்கமே புலியேயென்றன் புதல்வனைக் காண்கிலீரோ
கயங்கர டிகளேயென்றன் காளையைக் காண்கிலீரோ
பயந்தரும் பேய்களேயென் பாலனைக் காண்கிலீரோ. 17

திக்கொரு வருமிலாமற் றியங்கியே தேடித்தேடி
மைக்குழன் மாதுகானின் மைந்தனைக் கண்டாள்கண்டு
துக்கமே மிகுந்துசோர்ந்து சுதனைத்தன் மடிமேலேந்தி
துக்கத்தா லழுதியாவ ராற்சொல்ல லாமென்மாதே. 18

வெகுபொழு தழுதுசோர்ந்து விடியுமுன் வேதியன்றன்
அகந்தனைச் சேராவிட்டால் அடிப்பனென் றவனுக்கஞ்சி
மகன்றன்னைத் தோண்மேலேந்தி மயானஞ்சேர்ந் திமமீது
மகனைவைத் தழலைமூட்ட மன்னன்கண் டோடிவந்து. 19

அடிகுடி கேடியென்றத் தநயனைக் காலால்வீசப்
படிபுகழ் மைந்தாவுன்னைப் பறையனு முதைத்தானென்று
மடிமிசை மைந்தன்றன்னை மதிமதி யேந்திக்கொண்டங்
கிடர்க்கடல் புகவவ்வேந்தே னென்மகன் மடிந்தானென்றே. 20

சந்திர மதியானுற்ற சங்கதி யெல்லாங்கேட்டு
மைந்தன்மேல் வீழ்ந்தயர்ந்து மார்புட னணைத்துக்கொண்டுன்
மைந்தனை வைத்துநீபோய் மடிபணங் கொண்டுவந்து
தந்தபின் சுடுவாயென்ன சந்திரமதிதீ பார்ப்பான். 21

இடஞ்செல வழியின்மாண்ட விளைஞனைக் கண்டுநொந்து
மடிமிசை யேந்தலோடும் வந்துகா வலர்கள்சூழ்ந்து
துடிதுடித் திடவிர்த்தாந்தந் தோன்றக்கீழ் விழவடித்துப்
படிபுகழ் காசிமன்னன் பாற்கொண்டு போய்நின்றார்க்க. 22

மன்னனுஞ் சிறுவன்றன்னை வதைத்தவ ளிவளோவென்றிக்
கன்னியைக் கொல்வாயீமங் காப்பவா வெனவந்நீசன்
மென்னியைப் பிடித்துத்தள்ளிக் கோசல வேந்தன்கையில்
கன்னியைக் கொடுக்கவேந்தன் காந்தையோ டுகொடுற்றே. 23

தநயனைப் பார்த்தயர்ந்துந் தையலைத் துணிக்கநைந்தும்
தநயனே பணியான்மாண்டான் சசிதனை நானேவெட்ட
எனமுனம் பாவஞ்செய்தே னென்றிடர்க் கடற்புகுந்து
மனைவியைக் குனியவைத்து வாளினைக் கையிலேந்தி. 24

விசிடப் பரமன்வந்து வேந்தன்கை பிடித்துக்கொண்டு
மாசிலா தவனீயென்று மைந்தரை யெழுப்பித்தந்து
கோசலம் புரப்பாயென்று குன்றவில் லியன்மறைந்தான்
மாசிலா தவனேகேட்பாய் மற்றொரு காதையென்றான். 25

அரிச்சந்திரன் கதை முற்றிற்று.

புரூரவ சக்கிரவர்த்தி கதை.

விருத்தம்.

பொக்கிஷமும் விளைவுமுளநாடு புரந்த புரூரவமாச்
சக்கரவர்த்தியு மனைதனநாடு மிழந்தயனுட்டினிலே
மைக்குழறன்மனை யாளையிழந்திரு மகவினி லோர்மகவைப்
பக்குவமாயோ ராற்றின்கரைதனில் வைத்தோர் பாலனையே. 1

ஆற்றங்கரையினில் வைத்திக்கரைவரு மாதவவரசனுமவ்
வாற்றுறுநீர்மேன் மேமிகவரவே யக்கரை காணும
லாற்றுறுநீரி லமிழ்ந்துமெழுந்து மவஸ்தைகள் பலவெய்தவ்
வாற்றுறுநீருட னேவெகுதூர மகன்றோர் கரையேறி. 2

ஏறுங்கரைதனிலுயர் வெண்பொன்னு மிலகியபொன்னகையும்
கோறற்சமனு முத்தாரம்மிகு கோமேதகங்கண்டே
ஏறுங்கரிபுலி வாழுங்கான மதிலிவ்வுயிர்கொலியெவ்
வாறுபொருந்தின தெனநோக்குற்றங் குற்றான்மன்னவனே. 3

வேறு.

மாடுனக்கேதென்று நோக்கிடும்வள்ளலை மாக்கள்ள னென்றடித்தக்
காடுதனிலொருகையை யொருகாலைவாங்கிக் காவலரகல மன்னனேங்கி
நாடிழந்தேன்ப்ராண நாயகியோடெச்சமு நலனிழந்தே னதியினிற்
பாடடைந்தேனிடர்க் கடலடைந்தேன்பாணி காலிழந்தேன் றெய்வமே. 4
என்னகாரணமர காசிவானந்த னேயென்றறைந்த வண்ணல் [தே
என்னனரசென்னவாழ் வென்னவிதியெனவிசைத் திறைவனெயபயமென்
மன்னுறைமுடிவிளிக் குற்றபொருலருளினான் வடிவுமனை மகவுமன்றி
முன்னிழந்தவையெலாம் பெற்றுதியினின்முத்தி பெற்றின்பமுற்றானரோ.

நளச்சக்கிரவர்த்தி கதை.

விருத்தம்.

பூவெலா மாணடகன் னளமகா ராஜன் பொன்னாடு மகவிழந்திப்
பூவினுறு கன்னியர்க ளினிலழகுகற்புள்ள புண்ணியசா வியுனைந்திடத்
தாவமதி லலையவிட்டுத்தூசி லாமற்றன் னுருவேற தாய்தனக்குச்
சேவைசெயு மண்ணனுக் காளதாய்த் துன்புறுந் தேற்பாகனானரோ. 6

வேறு.

இரவினிற் காணிற் காவலனின்றி யேந்தினபோ தெனக்களிப்பே
அரவுவந்தணுகி விழுங்கிடும்போதி லயர்ந்திடும் போதெனக்களிப்பே
அரவினைத்துணிந்த கிராதனைக்கற்பா லனல்செய்யும் போதெனக்களிப்பே
கரிகண்மேல்வீழ்ந்த போதந்தவனத்திற் களிப்பெனத் தமயந்திதனக்கே.

அரக்குமாளிகையி லனலிட்டபோழ்து மமர்செயும் போதெனவின்பே
இரக்கின்றவறையோர் பாலிரந்துண்டங் கிருந்தபோ தென்னநல்லின்பே
எரிம்புதல்வியைமன் னவர்முன்மான வீனஞ்செய் போதெனவின்பே
அருப்பமீயடவி தனிலுறும்போது மைவருத்தகன்ன நல்லின்பே. 8

மாவுரிதரித்து வனந்தனிற்செல்லும் போதுந்தன் மனைவியைக்காணு
திருளடவியிற்றன் றேடுறும்போது மிராக்கத ரமர்செய்யும்போதும்
அருளிலக்குமியை யடவியிற்கொடுபோ யதஞ்செய்து வாவென்றபோதும்
தரைதனிற்சீதை புதைந்திடும்போதுந் தசரதன் மகற்கெனசுகமே. 9

வனந்தனிற்செலும்போ தவுணரைக்கொலும்போ திராவணன்வந்தெ டுக்கும்போ, தனந்தனம்வெருவுங் கழலுழன்கீழ்விழும்போ சோகமாத வனந்தனிலழும்போ, தனந்தவரா னிராமனுத்தாவென்றடவியிற் கொண்டு போய்விடும்போ, தினம்பிரிமான்போற் றனித்திடர்படும்போ திலக்குமிக் கெனசுகமாதே. 10

வேறு.

நாடெலாமாண்டமக் கிரீடம்புனைந்தநன் னரபதிக ளுள்ளநைந்தெம்
நாடிழந்தோமரி நகரிழந்தோநல்ல மகவிழந்தோ மெமதுயிர்ச்
சோடிழந்தோமிடக் கடலடைந்தோங்கழற் றேளிழந் தோமெனமிக
வாடியிறையோன ருளினலின் படைந்தனர் மாசிலாக் குமுதவதியே. 11

என்று, பலபேர் பட்டபாட்டைப் பகர்ந்து பத்மாவதியின் துயரத்தையாற்றி பகவானைப்போற்றித் துரிய திருஷ்டியிற் கரியாக்கிப் பிரியாதிருந்தார்.

பத்மாவதி மாறுத்தர வொன்றுஞ் சொல்லாமல் விதியினல் நமது பதிக்கிக் கெதிவந்ததென்றுன்னி, வியாகூலத்தை நண்ணி, பதியே தெய்வம், பதிமொழியே வேதம், பதிசேவையே பூசை, பதியை நினைத்தலே தியானம், பதியைப் பிரியாதிருத்தலே ஞானம், பதியுடனிறத்நலே மோட்சமென்று, பதிசேவையை நாடிப் பதிபக்தியிற்கூடிப் பதியைத் தியானஞ்செய்துக்கொண்டிருந்தாள். இவ்வாச்சரியங்களைப் பார்த்த இறைவன் இவரே மகாதேவன், இவரே வாசுதேவன், இவரே தேவதேவன், இவரே பிரமதேவன், இவரே அயிராணி, இவரே இந்திராணி, இவரே செல்விவாணி, இவரே கல்விநிர்வாணி எனத்துதித்து, இருவரையும்வலம் வந்து பணிந்து, துறவியாய்ப் போகலாமென்கிற விச்சைதணிந்து, பத்மாவதியின் திருவடிகளில் தன் திருநயனங்களை யணிந்து, இனியிவர்களுக்குப் பணிசெய்தாலே மோக்ஷம், இதுவே மோட்சமடையும் சூட்சம் எனத் தீர்மானித்

தன்றுமுதல் சாதுக்கள் யார்வந்தாலும் வேண்டிய உபசரணை யோடும் வைத்துக்கொண்டிருந்து வேறு தேயங்கட்குப் போக வெண்ணங்கொண்டவர்கட் களவற்றதிரவியங் கொடுத்தனுப்பி மந்திரி பிரதானிகளைநோக்கி நம்முடைய பட்டணத்தில் விஷ்ணுபக்தர்கள், சிவபக்தர்கள், பிரமக்ஞானிகள், அதிதிகள் யாவர்வந்தாலும் எனக்கரிக்கைசெய்து சேவையைத்தருவித்து என்னை உய்வித்துக் கீர்த்தியடையுங்களென் றுக்யாபித்தார்.

அப்படியே மந்திரி பிரதானிகள் நடக்கப் பிராமணர்களும், சாதுக்களும் நிறைந்து வீதிவீதியில் விஷ்ணு சங்கீர்த்தனங்களும், சிவ சங்கீர்த்தனங்களும், வேதகோஷ்டங்களும், வேதாந்த கோஷ்டங்களும் முழங்க, எத்திசையிலும், ஆலய கோபுரங்களும், அனுமக்கொடிகளும், ஒன்றிலுமொன் றுயர்ந்ததாய் விளங்கிப் பசுக்கூட்டங்கள் பரவி ஸ்ரீ மகாவிஷ்ணு வீற்றிருக்கும் வைகுந்தத்தைப் போலவும், பரமசிவனார் வாசஸ்தானமாகிய கயிலையைப்போலவும் பிரமதேவன் நிவாசஞ்செய்யும் சத்தியலோகத்தைப் போலவும், சொர்க்க லோகத்தைப்போலவும், அளகா புரியைப்போலவும் பிரகாசித்து ஐம்பத்தாறு தேசங்களிலும் பிரக்தியாய் நான்கு திக்குகளிலும் கீர்த்திப் பிரசன்னமாகி அரிச்சந்திரன், நளன், மாந்தாதா, ரகுராஜன், தருமர் முதலானோர்செய்த அரசாட்சியைப்போ லிருந்தது. கேட்டீர்களோ சித்தர்களோ வென்று விரிஞ்சாவதாரரான நாபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லத்தொடங்கினார்.

ஜெயதேவரைப் பத்மாவதி தரிசித்த அத்தியாயம்
முற்றிற்று.

ஆறுவது அத்தியாயம்.

கள்வர் பாதாளத்தி லமிழ்ந்தது.

இப்படி யிருக்குங் காலத்தில் ஜெயதேவ ஸ்வாமிகளின் கை கால்களைக் கண்டித்துப் பாழுங்கிணற்றிற் றள்ளின பாதகர்களாகிய சோரர் கிரவுஞ்சராஜன் சாதுக்களைக்கண்டால் மிகவும் உபசாரத்துடன் தேவையான திரவியக் குறையல் தருகிறபடியால் நாமேன திருட்டுத்தனத்தாற்

சீவனஞ் செய்யவேண்டும், சாதுக்கள்வேஷந்தரித்து வேண்டிய வஸ்துக்களை வாங்கிக்கொண்டுவந்து சுகமாய் வாழ்ந்திருப்போமென்று கோஷாயிவேஷந்தரித்துக் கிரவுஞ்சராஜன் தேசத்திற் பிரவேசித்தார்கள் அவர்களைக்கண்ட காவலர் வந்தனஞ்செய்து, அரசனரண்மனைக் கழைத்துக்கொண்டுபோய் இதுதானிறைவ னிருக்குமிடம் அதோதெரியு மேடை ஜெயதேவஸ்வாமிகளின் வாசஸ்தானம், ஸ்வாமிகளின் தரிசனம் வேண்டியிருக்குமாயின் அவ்விடத்திற் செல்லுங்களென்று சாற்றக் கரவடர் அண்ணல் மேடைக்குப்போனால் இராஜதரிசனங்கிடைக்கத் தாமஸமாவதன்றி எல்லாருக்குங் கிடைப்பதுபோல நமக்கும் கொஞ்சம் பொருளகப்படும், ஆதலாலிறைவனுசிரிய ரனுமதியாற் போவோமாயின் அளவற்ற பொருளகப்படுமென்றதிக ஆசை அளவற்ற மோசமென்பதறியாமல் சத்குருஸ்வாமிகளின் மேடைக்குட் பிரவேசித்தார். உடனே அங்கிருக்கும் ஏவலாளர் பணிந்து, ஓ சாதுக்களே! தடையில்லாமல் வாருங்கள், கிருபை கூருங்கள் எங்களைக்காருங்கள், ஸ்வாமிக ளிதோ வீற்றிருக்கிறார் பாருங்களென் றழைத்துக்கொண்டு போய்த் தேசிகரை நோக்கி, ஓ ஸ்வாமி யாரோ புண்ணிய புருஷர்கள் தங்கள் தரிசனத்துக் கெழுந்தருளினர்கள் அவர்களை யன்புடன்பார்த்து வேண்டிய தளித்துக் காத்து அரசனுடன் சேர்த்துக் கோரிக்கைகளைத் தீர்த்து ஆட்கொள்ளுமையாவென்று பணிய,

ஜெயதேவர் சாதுக்களைக் கண்டதே மொண்டிக் கைகளை கூப்பித தெண்டனிட்டார். அப்போது தேவர் மொண்டிக் கைகளையுங் கால்களையுங்கண்டு சந்தேகங்கொண்டு, ஓ ஓ மோசம்வந்தது, ஆசையெல்லாம் வீணாச்சுது, நம்முயி ரின்றோடு போச்சுது, மரணகாலம்வந்து வாச்சுது, நாமே தேடிக்கொள்ளலாச்சுது என்று முன்னிட்டகாலைப் பின்னிட்டோடத் தொடங்கினர்கள். அதற்கு ஸ்வாமிகள் ஓ பரமசாதுக்களே! வந்தனம் வந்தனம், பரப்பிரம ஞானிகளே! வந்தனம் வந்தனம், பரம பாகவதர்களே வந்தனம் வந்தனம், இவ்வளவு தூரம் நடந்துவந்துப் பாவியேனுக்கு தரிசனந்தந்தும் சில நாளிருந்து போகாமல் பாமரன் முகத்தைப் பார்க்கொணுதென்றே போகிறீர்கள் தயவுசெய்துசற்று நில்லுங்கள் நில்லுங்கள் உங்கள் பாததரிசனந் தந்தாட்கொள்ளுங்கள் என்று

சிர சாஷ்டாங்கமாக தெண்டனிட்டன்புடனழைக்கும்போது புரையோர் சற்றுந்தங்காமல் காலடிபிட்டத்திற் படும்படியாக ஓடத் தொடங்கினர், ஆசிரியர் இவர்கள் நம்மைக் கண்டித்த கரவடர்போற் ரோன்றுகின்றது ஐயோ! யாதோவிச்சையா லிவணடைந்து நம்மைக் கண்ணுற் றிடைந்து பயந்தோடு கிருர்க ளினியிவர்களைப் பலவந்தமா யழைப்பித்து வேண்டிய திரவியங்களைக் கொடுத்தனுப்பலாமென்று ஏவலாளரை நோக்கி ஓ சேவகரே! என் பிராணனைக் காப்பாற்றின பரம பாகவதோத்தமர்களை போகவொட்டாமற் றடுத்து அன்போ டழைத்துக்கொண்டு வந்தென் னெதிரிலிருத்திப் பாயாசத்தைப் பருகுவித்துப் பண்டுபலாதிகளை நூகருவித்து விசிறிகளைக்கொண்டு வீசி, மேனியெல்லாம் சவ்வாதுபூசி விரைவாக வேந்தன்பாலோடி வேந்தன் விரைவா யிங்குவோடி வரும்படியாய்ச் செய்வீர்களெனத் திருவாய் மலர்ந்ததைக்கேட்ட வேவுகாரரிற் சிலர் கள்ளச் சாதுக்களைப் பலவந்தமாக விழுத்துக்கொண்டுவந்து பீடங்களின்மேலிருத்தி உபசரணை செய்துக்கொண் டிருக்கச் சிலர் இராஜன்பாற் போகையில் பிதா என்னமோ மோசம்வந்தது, (மோசம் நாசம் கம்பளி வேஷம்) என்கிறபடி நமக்கு மரணகாலம் நேரிட்டதென்று திருடர் நெஞ்சம் திடுக்கு திடுக்கென்று துடிக்குமென்பது போலவும் விபசாரியினுள்ளம் வெடுக்கு வெடுக்கெனத் திடுக்குறுவதைப் போலவும், கொலையாளிகளி னிதயம் குடுக்கு குடுக்கென முடுக்குவதைப்போலவுந் துடித்து உதடுகளைகடித்துத் தாங்கள்செய்த அக்கிரமங்களை நினைத்து விசனுக்கினியால் வெந்து உள்ளம் மிகவும் நொந்து உயிர் நீங்கினவர் போல் நைந்து முகவாட்டமடைந்து நடுக்கங்கொண்டிசைத்த மொழிபோல் குறைந்து வியாகுலம் நிறைந்து கனகாசை யிறங்கி தங்களைத்தாங்கள் மறந்து மனதிற் கிலிபிறந்து காயத்தை யசைக்காமல், கண்ணிமைகொட்டாமல் பிர்மஹத்தி பிடித்தவரைப் போலவும் பேய் பிடித்தவரைப் போலவும், சர்ப்பயாகஞ் செய்தகாலத்தில் ரிஷியின் மந்திரோச்சாடன பலத்தால் ககனத்திலிந்திரன் ஸ்தம்பித்து நின்றுவிட்டதை போலவும், மயங்கித் தியங்கித் தேகமுருகி முகங்கருகிப் பயமென்னும் வாரிதியிலாழ்ந்து பிரமத்தி சூழ்ந்து அசைவற்றிருந்தார்கள்.

கரவட ரிப்படியிருக்க, காவலர் நிருபனிடம்போய் ஓ சுவாமி! தேவரீரை நமது சத்குருஸ்வாமிகள் துரிதமாயழைத்துக்கொண்டு வரும்படியாகச் சொன்னாரென் றுவணங்க, உடனே நராதிபன் கருணா நிதியாகிய கர்த்தனுக் கிவ்வெளியேன்மீ தின்றைக்குத்தான் கருணைவந்ததோவென் றுடனே எழுந்து விசையான காற்றைப்போலவும், அம்பைப்போலவும் ஓடிவந்து சுவாமிகளை அன்பா யின்பமாய்ப்போற்றி புகழ்ந்து, பொங்கிப்பூரித்து, மகிழ்ந்து, அங்கங்குளிர்ந்து,முகம் மலர்ந்து சிரசாஷ்டாங்கமாய் வந்தனம்புரிந்து, மிகவும் பரிந்து, கைகட்டி வாய்பொத்தி, ஓ எனது சற்குருநாதனே! மெய்ஞ்ஞான போதனே அடியேனாகிய கொடியேனை அழைப்பித்த காரணமேதோ திருவாய்மலர்ந் தருளுமெனக் கேட்க, அடிகளண்ணலை யன்புடன்நோக்கி, ஓ ராஜாதி ராஜனே! சிறப்புற்ற போஜனே! நீ செய்த நலமோ? உங்கள் பெரியோர்செய்த தபோபலமோ மகா புண்ணியவான்களான இந்தச் சாதுக்க ளிங்குவந்தார்கள் அரிதான சேவைதந்தார்கள்.

ஓ ஓ இவர்களிருக்கும் நிஷ்டாபலத்தைப்பாரும், இவர்களடிகளி லுமது தலையைச்சேரும், பீடைகளெல்லாந்தீரும், மெய்ஞ்ஞான விலாசம் மீறும், என்னவரம் வேண்டுமோ கோரும், அதிலெனக்குப் பாதிதாரும், ஆ! ஆ! இவர்கள் மெய்ஞ்ஞான தேசிகோத்தமர்களையா? யான் சொல்வார்த்தை பொய்யா? இதிற் சந்தேகமில்லை துய்யா? என்றும் பொய் சொல்லா மெய்யா தர்மஞ் செய்யுங்கையா வெனப் புகழ்ந்து, ஓ அரசனே! பிரஜைகளுக்குள் சரசனே இவர்களுக்கு நல்ல ஆடையாபரணங்களளித் துமது சிங்காரமேடையி லிருத்திப் பயபக்தி யிதயத்திருத்திப் பாழிற்போகும் மனதைத் திருத்திப் புண்ணியமும், புகழும் பூலோகத்தில் நிறுத்திப் பூரண தியானத்தை விருத்தி யடையும்படி செய்வாயப்பா வெனத் திருவாய் மலர்ந்தருள, அதிபதி அதிக சந்தோஷ சித்தனாய் காவலராற் றண்டிகைகளை யழைப்பித்து அதிற் சாதுக்களை எழுந்தருளவைத்துச் சிங்காரமான மேடையி னுட்கொண்டு போய்ச் சிம்மாசனங்களி லெழுந்தருளச்செய்து இவர்களே மகத்வம் பொருந்திய பிர்மக்ஞானிகள், இவர்களேபத்திபுத்தி தருஞ் சீலர்கள், இவர்களே சித்தி முத்தி யளிக்கும் அனுகூலர்கள், எனப்பலவாருகப் புகழ்ந்து புகழ்ந்து மகிழ்ந்து

ஏவலாளர்களாற் சகல உபசாரங்களையுஞ் செய்துக்கொண்டிருக்கிற காலத்தில் சஞ்சல நெஞ்சவர்களாகிய கரவடர் தங்களுக்குள் தாங்களே குழைந்து நமக்கிவ்வித பூசனைசெய்துக்கொண்டு வருகிறதை யோசிக்குமளவில் வெகு மோசமாகவேயிருக்கின்றது யாதொன்றும் வேண்டாம லோட்டமெடுப்போமென்றால் அருகில் காவலாளர் கடுங்காவல் நெருக்குண்டிருக்கின்றார்கள்.

இனி சில நாளில் நம்மை வதைப்பார்களேயன்றி விடப்போகிறதில்லை நாம்செய்த துரோகம் நம்மையே சூழ்ந்து கொண்டிருக்கின்றது. கழுவிலேற்றுவோனுக்குச் சகல சுகபோகங்களை மனுபவிக்கக் கொடுப்பதைப்போல நம்மைப் பூசித்துக்கொண்டு வருகிறார்களென்று தேள்கொட்டிய திருடனைப்போல பூசனை செய்யச்செய்ய மனோவியாகுல மிகுந்து மாறுப்பீதி மனதிற்புகுந்து உடல்வாட்டமும், மனவாட்டமுமடைந்து மிகவுந் திகிலடைந்திருந்தார்கள் இப்படியிருக்க பார்த்திபன் சாதுக்களின் குணங்குறிகள் வேறுபட்டிருக்கக் கண்டு சந்தேகங்கொண்டு ஸ்வாமிகளிடமடைந்து, ஓ சுவாமி அருள் விலாசம் விளங்கிய ஞானிகளை முக விலாசத்தாற் கண்டறியலாமல்லவா? அப்படி யிருக்க, இப்போது வந்திருக்கும் சாதுக்கள் கோதுக்குள்ளானவர்போல் உடல்வாடி ஓடிப்போவதற்கே நாடியிருக்கிறார்களன்றி நான் சேவைசெய்யப்போனால் பீதியடைந்து என்னைப் பார்ப்பதற் கிடைந்து குற்றமுள்ளவன் பலர் முன்வர மனங் கோணுவதைப்போலவும், ஆசையுள்ளோன் நிராசையுள்ளோன் முன்னிற்க நாணுவதைப்போலவும், கற்பில்லா மங்கையர் கால்நடையைப் போலவும், கொலை பாதகன் குலத்தைப் போலவும், திருடரடைந்த திகிலைப்போலவும், பலகுறிகள் வேறுபட்டுச் சற்சனர் குணங்களுக்கு மாறுபட்டுக் காணுகின்றது. ஆனால் பெரியோர்செய்கை நன்று யறியேனாதலா லறியும்படியாகக் கிருபைகூர்ந் தருளல்வேண்டுமெனப் பிரார்த்தனை செய்ய,

ஜெயதேவர் கோமானை நோக்கி ஓ கொற்றவனே! சொல்லற்கரிய நற்றவனே! வறியேனும் பெரியோர்களின் குணங்குறிகளை நன்றாயறிந்தவனல்ல, ஆயினும் தெரிந்தமட்டுஞ் சொல்லுகிறேன், அதாவது பரப்பிரமக் ஞானிகளாகிய ஜீவன் முக்தர்கள் ஆரம்பத்திற் சமாதிசாதனஞ் செய்யத்தொடங்கிச்

சாத்தியமாகும் பரியந்தம் ஒருவரோடதிகமாகப் பேசாமலும் தேகாதிகளின்மேல் வாஞ்சைகொள்ளாமலும், கடினவார்த்தைகள் விள்ளாமலும், அதிகுப்த மௌனத்தை யடைந்திருப்பார்கள், மனமடக்க அடங்காமல் நிஷ்டைக்கு மாறுபட்டதனுல் பித்தனைப்போற் பிறரைவைவதாய் வாயில்வந்தபிரகாரம் பிதற்றிக்கொண்டே திரிவார்கள், மனமடங்கினுல் ஆனந்தம் மேலிட்டுப் பாடுவார்கள், பாடி யாடுவார்கள், பிரம்மானந்தத்தையே நாடுவார்கள், பிரமத்துட னென்ருய்க் கூடுவார்கள், மனம் பகிர்முகப்படில் வாடுவார்கள், அந்தர்முகத்தையே தேடுவார்கள், தானின்னுனென்று மறியார்கள், காடுநாடென்றுந் தெரியார்கள், நன்கு தீதென்றும் குறியார்கள், திரிய நாட்டத்தைப் பிரியார்கள், தேகசுகத்தைத் தேடார்கள், தேசங்கடோறு மோடார்கள், இந்திரிய சுகங்கருதி வாடார்கள், இந்த்ராதிலோகங்களை நாடார்கள், தீமைகளொன்றுஞ் செய்யார்கள் தெரிவையர் போகங்களில் நையார்கள், அடிமைகடம்மையும் வையார்கள், அன்பிலாதோருயிரைக் கொய்யார்கள், பிராப்தத்தால் இல்லறத்திருந்தாலும் நாழியமுதுக்கும் நால்முழந் துண்டுக்கே இச்சைவைப்பார்கள், இவ்விச்சையையும் மனதிலிருந்து பிரிப்பார்கள், சமுசாரம் நமக்கேனென்றுரைப்பார்கள், ஒரேமனதாய்த் துறப்பார்கள், இருந்தாலு மிருப்பார்கள், மெய்ஞ்ஞானத்தையே விரிப்பார்கள், நாற்றிசையிலுந் தெரிப்பார்கள், பிரமமே மேலானதெனக் குறிப்பார்கள், அடியார்க டங்குகள் விலக்கத் திரவியமும் பறிப்பார்கள், அகந்தையையடியோடு மெரிப்பார்கள், மாயவாழ்க்கை யீதெனச்சிரிப்பார்கள், மாயாவாரியிலு மனமெழாமல் மறிப்பார்கள், இன்னமனேக விதங்களாயு மிருப்பார்கள், ஏனெனில் பிரமக் ஞானிகளி னனுபவத்தைத் திரிமூர்த்திகளாலும் அறியக்கூடாப் பான்மையானுதலால் என்னுலுரைக்கப்போமோ? ஓ பூபாலனே! உரைத்தற்கரிய சீலனே! ஏழைகட்கனுகூலனே! என்னருமைப்பாலனே! இப்போது நம்மிடம் வந்திருக்கும் பெரியோர்கள் நமது குறைகளெல்லாம் நீங்க உமக்கு நற்குணங்களோங்க இகவெண்ணெங்களெல்லாமோங்கப் பாவங்களை யெல்லாம் வாங்க ஆனந்தத்திற் றூங்கச் செய்ய வந்தார்கள், இப்பேர்க்கொத்த மகானுபாவர்களைச் சஞ்சாரசமாதி செய்யாமல் இச்சையான விடத்திற் கேகாமல்

நெடுநாளாகத் திருடரைச் சிறைச்சாலையி லடைத்ததுபோல வும், விபசாரமங்கையை வெளியில் விடாததைப்போலவும், யானையைக் குழியிற் றள்ளிவைத்ததைப்போலவும் புலியை கூண்டிலடைத்ததைப்போலவும், மேடையில் வைத்திருப்ப தால் சஞ்சார சமாதிக்கு தடையாயிற்றென்றும் ஏகாந்தமாயி ருப்பதற் கில்லாமற் போயிற்றேயென்றும் வாட்டமடைந்தி ருப்பார்கள்.

ஆதலால், அவர்களுக்குத் தேவையான திரவிய முதலா னதுகளைக் கொடுத்தனுப்பி விடுமெனத் திருவாய்மலர்ந்தருள ஏந்தல் ஓ ஸ்வாமி! நிஷ்காமி பெரியோர்கள் தங்களுடல் மேலிருக்கும் அவாவையு மகற்றித் தன்னை மறந்திருக்குஞ் சிலர்களாயிற்றே அவர்களுக் குயிர்க்கொல்லியின்மே லிச்சை யிருக்குமா திரவிய வாஞ்சையுள்ளோரை ஞானிகளென்று சொல்லக்கூடுமா வென்று சங்கைசெய்ய, ஜெயதேவர் ஓ கோ மானே! தரும குணத்திற்சிறந்த சீமானே! மலைகளையெல்லாம் பொன்னாக்கும் வல்லமையுள்ளவராயும், சமுத்திரத்தையுண்டு கலசத்திலடைத்தவராயும், வாதாபி சீரணபியெனப் புகன்ற வராயும் கும்பத்திலுதித்தவராயும், தாருகாவனத்து ரிஷிகளை வென்றவராகியும் விளங்கா நின்ற அகஸ்திய முனிவர் ஓர் பெண்ணையால் அரச ரனேகரிட மலைந்து திரவியத்தை சம்பாதித்தார் ஜனகர் யாகஞ்செய்து அளவற்ற திரவியமும் அனேக பசுக்களையும் ஞானியாய் ரிஷியா யிருப்பவருக்கு கொடுப்பேனென்று பறைசாற்றிவைக்க அது தெரிந்துமைத் திரி மூடையென்னும் இருமனைவியர்களின் வாஞ்சை நீங்க யார்க்யவர்க்கரென்பவர் பூரணக்ஞானியு மல்லாமல் ரிஷிசிரே ஷ்டன் நானென்ப துண்மையல்லவோ? ஆதலால் இத்திர வியக் குவையலும் கோகூட்டமும் எனக்குத்தத்தஞ் செய்யு மென்று கையேந்தி அவ்விறைவனிடம் பெற்றுக்கொள்ள வில்லையா இவர்களிச்சித்தது மாத்திரந்தொல்லையா? யாரார் பிராப்த மெப்படியிருக்கின்றதோ நமக்குத்தெரியுமா? யாரெ தை யிச்சித்தார்களோ? அது தன்னிட மிருக்கு மாயின் க்ஷணமே பட்சமுட னளிப்பவனல்லவோ உத்தமபுருஷ னெனச்சொல்லப்படும், இதற்கு திருஷ்டாந்தம் ததீசி மகா ரிஷி - கர்னன் - ரகுராஜன் - அரிச்சந்திரான் முதலானவர்களே யாம் ஆதலால் இல்லையென கேட்பவர்க் கில்லை யென்னுமற்

கொடுத்தனுப்புவதே அயிஸ்வரிய முடைய விவேகிகட் கழகல்லாமல் க்ஞானிகளருத்தத்தை ஆசிப்பார்களா வென்றுந் தமனுகிய நீ சங்கை செய்யலாகாது பிறர் குற்றத்தை நாடாதவர்களே பெரியோர்களென் றுரைக்கத்தகும் ஆதலின் என் வாக்கை மறுக்காமல் இச்சாதுக்களுக்களவற்ற கனகந்தந்து அனுப்பிவிடும் ஏனெனின் பிராமணர்-யாசகர்-கவீசுவரர்-சாத்திரவாசிகள் அங்கவீனர் ஏழையராகிய விவர்கட்கே தானஞ் செய்ய வேண்டுமென்றும், அதிலுந் தன்னையறிந்து நிஷ்டாசாதனஞ் செய்வோர்க்கு இரணிய முதலானதளித்துச் சமாதிக்குத் தடை வராமலனுகூலஞ் செய்தலே ராயசூயத்துக்கு மேன்மையான உத்தமதானமென்றும் சொல்லப்படும், பெரியோர்களுக்கோர் பிடியமுதளித்தால் பிரமானந்தத்தைகொடுக்குமென் றுரணம் முறையிடுகின்றது ஆதலாலிச் சாதுகளுக்கு ஏமமளிப்பீரேல் தன்யனுவதற்கோர் தடையில்லை யெனச் சாற்ற, மண்டலீகன் மாறுத்தர மொன்றுஞ் சொல்லாமல் ஆசிரியரடிகளிற் பணிந்து சாதுக்களிடம் போய் யானை குதிரை ஒட்டகங்களை யழைப்பித்து அவற்றின்மேல் திரவியத்தை யேற்றிச் சாதுக்களைப்போற்றித் தண்டிகைகளில் வீற்றிருக்கச்செய்து அவர்களின் மனக்கோட்டத்தைக் கொய்துக் காவலரை நோக்கி ஓ ஏவலாளர்களே! இந்தச் சாதுக்கள் எத்திசையிற்போக வெண்ணங் கொள்ளுகிறுர்களோ அத்திசையிற்கொண்டுபோய் யானைமுதலான திரவியத்தை இவர்களுக்கொப்பித்து வாருங்களென் றுக்கியாபிக்க,

காவலர் மகாபாக்கியமென்று பட்டணத்திலிருந்து வெளிப்பட்டுச் சாதுக்களை நோக்கி, ஓ ஸ்வாமிகளே தாங்களெத்திசையிற் போகவேணுமென்று வணங்க, அதற்குக் கள்ள ஞானிகள் காட்டைக்காட்ட மகாபாக்கியமென்று காட்டிற்கொண்டுபோய்த் தாங்கள் தவஞ்செய்யு மிடமேதென்றுபணியக் கரவடர் மெள்ளவும் பேசாமலிருந்தது போய் நாட்டுக்கரசன் யானை, காட்டுக்குத் திருடர் யானை பென்பதுபோலக் காலாட்களைச் சட்டைசெய்யாமல் வாய்விட்டிறைந்து ஓ ஏவலாளர்களே! இவ்விடத்திலேயே தாங்களிருப்பவர்க ளாதலால் இங்கேயே திரவியங்களைக்கொட்டி யானை முதலானதுகளையுங் கட்டிப்போய்விடுங்களென் றதட்ட அதற்குப் பணியாளர் அச்சமுற்றவர்களாய், ஓ புனிதர்களே! உங்களை ஓர் வார்த்

தை கேட்க விருப்பங்கொண்டோ மூத்தரவானுல் விண்ணப் பஞ்செய்துக்கொள்ளுகிறோமென்று வணங்க, கள்ளச்சாதுக் கள் மெள்ளப்பேசாமல் குயில்தான் றக்கச்சக்தி வருமட்டும் மௌனமாயிருந்து சக்தி வந்தமே ஓடிப்போகும் பாவனை போல் ஒரு பேச்சும் பேசாமலிருந்துபோய்ப் பாசாங்கைவிட்டுக் கூசாமல், அடா துஷ்டர்களே? ஏவல்செய்யும் பிரஷ்டர்களே! என்ன கேட்கவேண்டியதோ சீக்கிரங் கேளுங்களடா வென்றுரைக்கத் தொழும்பர், ஓ சீலர்களே! நீங்க ளிதுநாள் பரியந்தம் மௌனமாயிருந்த தென்னகாரணம் அன்றி ஜெயதேவர் உங்களைக் கண்டவுடன் மரியாதையோடு வந்தனஞ் செய்து வைபவத்துடன் வெகுநாள் வைத்திருந்து அளவற்ற திரவியங் கொடுத்தனுப்பும்படியான காரணமேதோ உங்களை அவர்முன்னமறிந்திருந்தாரோ? உங்களுக்கு மவர்க்கு முன்பேதாவது தொந்தார்த்த முண்டோ? சற்றே கிருபை கூர்ந்து தெரியப்படுத்துங்களெனப் பணிய அதற்கவ்வசடர் (கேடுவரும்பின்னே மதிகெட்டுவரும் முன்னே) என்கிற பழமொழிப்படி தாங்களே தங்களுக்குக் கேடு தேடிக்கொள்ள, ஓ சேவகரே; இப்போது ஜெயதேவென்று பேர்பெற்றுக் கூசாமற் பாசாங்குபண்ணி எல்லாராலும் பணிவிடைவாங்கிக்கொள்ளும் வஞ்சகன், கடின நெஞ்சகன் இப்படியே முன்போரரசனிடம் தான் மகாஞானவானென்று வெகுநாள் மௌனமாயிருந்து சமயம் பார்த்துச் சிலரத்தினங்களைத் திருடிக் கொண்டு வஞ்சித்துப் போகக்கண்டு இராஜன் முனிவுகொண்டு உண்ட வீட்டிற்கிரண்டகஞ் செய்த இக்கண்டகனை இரண்டாகவெட்டி அத்துண்டங்களைக் கோட்டைவாயலினெதிரிற் கட்டிவையுங்களென்று சேவகராகிய எங்களுக்குத் திட்டஞ்செய்தான். நாங்கள் தன்னுயிரைப்போல மன்னுயிரைப் பார்க்க வெண்ணி இவனை இக்காட்டிற் கொண்டுவந்து கைகால்களை மாத்திரம் வெட்டி ஓர் பாழுங்கிணற்றில் தள்ளி இராஜன்பாற்போகப் பயப்பட்டு எல்லாவற்றிலுந்தவமே மேலானதென் றுலகாசையை வெறுத்துப் பலதேசங்களிலுழன்று உங்களுடைய பட்டணத்திற்கு வந்து மேடையினுட் போக ஜெயதேவென்கிறவர் ஓ ஓ நம்மைத் தண்டித்தவர்களும் கண்டித்தவர்களும் வந்துவிட்டார்களே! இனி நமது சூதுவெளிப்படப் போகுதென்று பலவந்தமா யழைத்துப்

பலவுபசாரங்கள் செய்து தன்சூதை வெளிவிடாமலடக்கி எங்கும் போகாமல் மடக்கி இவ்வளவு திரவியங்களைக் கொடுத்தனுப்பினனென்கிற பற்பல தூஷணவார்த்தைக ளுரைத்த தக்ஷணத்தில், பூமி படீலென வெடித்துக்கொள்ள ஞானிகளினுள்ளங் கலங்கிப் பூமியிலமிழ்ந்த பரமலோபிகளும் மிகுந்த கோபிகளும், பக்தர் முத்தர்களை நடுங்கச் செய்தவர்களும் பதை பதைக்க ஓர்சீவன் கழுத்தைக் கொய்தவர்களும், குருவை வெறுத்தவர்களும், குருவாக்கை மறுத்தவர்களும், தெய்வத்தை யிகழ்ந்தவர்களும், தீமைகள் செய்து மகிழ்ந்தவர்களும், பிறர்மனைவிகளை யிச்சித்தவர்களும், கோமாம்சத்தைப் பட்சித்தவர்களும், தேவாலயங்களை யிடித்தவர்களும், மடஞ்சத்திரங்களை இடித்தவர்களும், பொய்சொல்லி பிறரைக் கொல்வித்தவர்களும், ஜீவர்களை வதைத்தவர்களும், ஓர் குடியைக் கெடுக்க நினைத்த குலபாதகரும், இகவாசையா லிதரமதத்திற் பிரவேசித்த தோதகரும், இடுகின்றபேரை யிடாமற் கெடுத்தவர்களும், தவஞ்செய்வோரை தடுத்தவர்களும், குருவுபதேசத்தை மறந்தவர்களும், இயம நியமங்களைத் துறந்தவர்களும் நம்பிக்கை கொடாதவர்களும், அதிதிகட் கன்னமிடாதவர்களும், பத்தினிகளைப் பழித்தவர்களும், தூரவு தோப்புகளை யழித்தவர்களும், பிரமக்ஞானிகளை வைதவர்களும், பணிந்தவன்மே லம்பெய்தவரும், உத்தமரை தூஷித்தவரும், உலுத்தரைப் பூஷித்தவரும், குண்டினிவேலை செய்பவரும், கோட்சொல்லித் திரிபவர்களும், ஏழைகளை யெதிர்த்தவர்களும், இணங்குவோர் வாடக் குதித்தவர்களும், பதிவிரதைகளை யுதைத்தவர்களும், பரத்தையரைத் துதிப்பவர்களும், பெரியோர்வரவைக்கண் டெழாதவர்களும், பிராமணர்களைத் தொழாதவர்களும் அடையும்படியான ரவ்ரவாதி நரகத்திற் பிரவேசித்தார்கள், கேட்டீர்களோ சித்தர்களேயென்று பின்னும் நாபாஜிசித்தர் சொல்லத் தொடங்கினர்.

கள்வர் பாதாளத்திலமிழ்ந்த அத்தியாயம்

முற்றிற்று.

ஏழாவது அத்தியாயம்

ஜெயதேவர் கள்ளரைக் காத்தது.

கொல்லாமை, மெய்மை கூறல், கல்லாமை, பிறர்பொரு ளிச்சியாமை, இந்திரியமடக்கல் முதலான சத்குணங்களாற் செழித்த இயம நியமங்களைப் பாதுகாக்கும் சித்தர்களே! பரிசுத்தர்களே! இப்படி பூமி படீலென்று வெடித்து ஜெயதேவைத் தூஷித்த வேஷதாரிகள் தாத்திரியிலமிழ்ந்து போகவே, சேவகர் கிடுகிடென நடுநடுங்கிக்கொண்டு வந்தவைகளை யெல்லாம் அங்கேயே விட்டுவிட்டு தட்டு கெட்டு தடுமாறிக் கொண்டே மூலைக்கொருவராயோடி பட்டணத்தை நாடி ஓட்டமெடுத்து இராஜனையடுத்து நடந்ததைச் சொல்லப் பயப்பட்டுத் தூஷணஞ் செய்ததை நினைத்துக் கண்ணீர்விட்டு அவ்வசனங்களைச் சொல்லப் பின்னிட்டுப் பூமியிலமிழ்ந்ததுசொல்ல முன்னிட்டு மற்றதைச் சொல்லத் தடைபட்டு ஊமைகளாய் நின்றார்கள். அவர்களைப் பார்த்த பார்த்திபன் மயங்கித் தயங்கி, ஓ ஓ பெரியோர்களுக்கென்னமோ குறைநேரிட்டதுபோற் றோன்றுகிறதென யோசித்து ஏவலாளர்மேற் கோபித்துத் துவேஷத்துடன் சாதுக்களுக் கென்ன தீங்கடா செய்து வந்தீர்களென்றதட்டிக் கேட்கச் சேவகர் கள்ளசாதுக்களைக் காட்டிற்கொண்டு போனதும் தாங்களவர்களை வினவியதும், சுவாமிகளை யவர்கள் தூஷித்ததும், பூமியிற் பிரவேசித்ததும் சொல்லி முறையிட்டழுதார்கள்.

அதற்கிறைவன் வந்தவர்கள் துன்மார்க்கர் அவர்க்குபசாரஞ்செய்தவ ரெவ்வளவுசன்மார்க்கர் என்னப் பலவிதங்களாயோசித்துச் சோரரை தூஷித்துச் சுவாமிகளைப் பூசித்து அவரைப் பார்க்க ஆசித்து ஜெயதேவ ஸ்வாமிகளிடம்போய் வந்தனஞ் செய்து ஓ என்னாண்டவனே! நாமனேக நாள் வைத்துப் பூசித்தனுப்பிய பாதகர் பாதாளத்தி லமிழ்ந்ததைக் கேட்டீர்களோ வென்று ஆதியோடந்தமாய்ச் சகலமு முரைத்துப் புரையோரைத் தூஷிக்கத் தொடங்கினர். அதுகேட்ட ஜெயதேவர் ராமராம பரமசாதுக்களைத் தூஷிக்கலாமோ? துவேஷிக்கப் போமா? அவர்களுரைத்த வாக்கியங்க ளெல்லாஞ் சத்தியமேயாம். அவ்வளவு உபகாரஞ்செய்த புண்ணியவான்களானபடியினாலே பூமி யிடங்கொடுத்தது மகா பதிவிரதையான சீதாபிராட்டிக் கிணையானவர்களாதலால் பிருதிவி

யிடங் கொடுத்துச் சமாதி யடைந்தார்கள். உண்மையா யவர்களென்னைக் காத்தவர்கள்தான். ஆதலாலவர்களைத் தூஷிக்கலாகாது. என்னைப்போன்ற பாவிகட்குத் தலமிடங்கொடுக்குமா? துன்மார்க்கர்களுக் கிப்பேர்க்கொத்த பேர் கிடைக்குமா? ஓ இறைவனே! துஷ்டர்களையும் நிந்திக்கலாகாது. துவேஷியே பாவஞ்செய்வதில் விசேஷியெனப் பெரியோர்களுரைக்கின்றார்கள். தான் நைந்தாலும் பிறரை நிந்தைசெய்யக் கூடாதென்று சாஸ்திர முறை யிடுகின்றது. ஒருவரைத் தூஷிப்பவனே உலுத்தரிற் சிறந்த மகாலுத்தனென்று சொல்லப்படு மப்படியிருக்க இப்படிப் பேசலாமோ? வந்தனஞ்செய்யத் தகுந்தவரை நிந்தை செய்யப்போமா? மேலானவர்களைத் தூஷித்த பாவம் நம்மை விட்டுப்போமா? ஆ ஆ என்னைக் காத்திரக்ஷித்த சாதுக்கள் தராதலத்தி லமிழ்ந்துபோனார்களா? அந்தோ நானிதற்கென்ன செய்யட்டுமென பிரலாபிக்க தொடங்கினர்.

அப்போதண்ணல், ஜெயதேவ ஸ்வாமிகளுக் கிருக்கும் ஜீவகாருண்யத்தைக் குறித்து வியந்து, ஓ ஸ்வாமி! அந்த சாதுக்கள் பாதலத்தி லமிழ்ந்த விடத்தைப் பார்க்க வாஞ்சித்தேனாதலாற் தேவரீருமங்கு எழுந்தருளல் வேண்டுமென வணங்க, ஆசிரியர் ஆ ஆ புண்ணியவான்கள் சமாதியான விடமே பரமபதமெனச் சொல்லத்தகும். ஆதலாலகத்தியம் அவ்விடத்தைத் தரிசிக்க வேண்டியதுதா னிதுகாரியத்திற்காகத் தடையுண்டோ? சீக்கிரம் பிரயாணப்படுமென்று நவில, அரையன் சந்தோஷ சித்தனாய்ச் சதுரங்க சேனைகள் சூழத் தானும் ஸ்வாமிகளும் ரதாரூடர்களாய்க் கானகமடைந்து அங்குப் பூமிகிடுகிடு பாதாளமாய்ப் பிளந்திருப்பதைக் கண்டு ஆச்சரியங்கொண்டு அப்பிளப்புக்கருகில் ஜெயதேவர் வீழ்ந்திருந்த பாழுங்கிணற்றைப் பார்த்து ஐயோ பாவிகள் நமது ஸ்வாமிகளின் கால் கைகளை வெட்டின ரணபூமியே கொலைபாதகரைக் கொள்ளை கொண்டது. ஆ ஆ நமது ஸ்வாமிகளை சோரர் சூழ்ந்து கரங் கால்களைக் கண்டித்தபோது எவ்வளவு துயரமடைந்தாரோ? கிணற்றி லெரியும்போதெவ்வளவு மனமிடைந்தாரோ? எல்லா நீதிகள் தெரிந்திருந்தும் திருடரென்றறிந்தும் அன்புடன்வைத்திருந்தோமே, உபசாரத்தோடு பூசித்தோமே என்கிற பல பல எண்ணங்களோடு மிருக்கை

யில் ஜெயதேவர் கள்வர் பூமியிலமிழ்ந்ததற்காக மிகவுந் துக்கித்து, ஓ கர்த்தனே! பரிசுத்தனே! பரமசாதுக்களைப் பாரிலமிழ்த்தலாமா, மகா பாவியேனுவி இனியிருத்தலாமா நீ கருணைகரனென்பது கட்டுக்கதையே யல்லவா, இத்தனை நாளாய்ச் செய்துவந்த தவம் பாழாய்ப் போச்சே இனி யிவ்வுடலோடிருத்த லீனமான யேச்சே ரவ்ரவாதி நரகத்துக் குட்படலாச்சே சந்திர சூரியர்களிருக்கிற பரியந்தம் நகைக்கிடமான பேச்சே என்றனந்தவித வார்த்தைகளுரைத்துக்கொண்டே ரதத்தின்மேலிருந்து பூமியில் விழுந்து கடகடவென் றுருண்டு கற்களிலும் முட்களிலும் புரண்டு தேகமெல்லா மூராய்ந்து தேய்ந்து ரத்தப் பிரவாகத்தில் நனைந்து மூர்ச்சையாயிருந்து உடனே தெளிந்து, ஓ பரமசாதுக்களே! பாப்பிரமக்ஞானிகளே! நீங்களமிழ்ந்த இப்பாதலத்தில் நானும் விழுந்து உம்மைத் தரிசிக்க இதோ வந்தேன் வந்தேனென் றுருண்டுக்கொண்டே, பிளப்புக்கருகிற் போக, அதையறிந்த யிறைவன் அதிசீக்கிரமா யோடிப் பாதலத்தில் விழாமற் பிடித்துக்கொண்டு இதுவென்ன விபரீதம்! இதுவென்னவபவாதம் இதுவென்ன பாபம் இதுவென்ன கோபம் இதுவென்ன கோரம் என்று அவருடைய வயிற்றிற் றன் றலையை வைத்துக்கொண்டு தாரை தாரையாய்க் கண்ணீர் வடிய அழத் தொடங்கினுர். அப்போது ஜெயதேவர், ஓ அரசனே இவ்வேளையிலென்னை மறுக்கவேண்டாம் வேண்டாமென்று தலையைத் தரையிற் பலதரம் மோதிக்கொண்டார். மத்தகத்திற் கற்கள் பொத்துக்கொண்டு ரத்தம் புறப்பட்டு, இராஜனை ரத்தமயமாக்கிவிட்டது. அப்போதிராஜன் மந்திரி பிரதானிகளை நோக்கி, ஓ சீலர்களே, என்னுண்டவனை அசையாமற் பிடித்துக்கொள்ளுங்களென்று கூக்குரலிட்டழத் தொடங்கினுன். அப்போது மந்திரி பிரதானிகள் இதுவென்ன விபரீத காலமென்று ஜெயதேவ ஸ்வாமிகளின் தேகமும் சிரசும் அசையாமல், பிடித்துக் கொண்டார்கள். அதற்கு தேசிகர், ஓ மந்திரி பிரதானிகளே! வீணு யென்னை யேன் வியாகுலத்தி லமிழ்த்துகிறீர்கள். என் வாக்கும் எண்ணமும் ஒன்றே யன்றி இரண்டல்ல. இனிமேல் நான் பிராணனேடு யிருப்பதே வபத்தம் யென்று உரைத்துக் கை கால்களைத் திமிறிப் பிடுங்கிக்கொள்ள எத்தனப்பட்டு அவயவங்களிலுள்ள எலும்புகள் நறநறவென்று

மூறியும் படியாகச் செய்துக்கொண்டார். அதையறிந்த இராஜன் துக்கம்மேலிட்டு தனதிஷ்டதெய்வமாகிய பரமேசுவரனை நினைந்து கண்ணீரால் நனைந்து ஓ பரமேஸ்வரா ஜகதீஸ்வரா கருணாகரா சுகசாகரா இவரிறக்கும் பாவம் என் மட்டிற் போகுமா? இவருடைய வைராக்கியத்தை நீக்க வென்னலாகுமா? ஐயோ நிந்தைக்குள்ளாய்ப் போனேனே? நாட்டிலிருந்தவரைக் காட்டிற்கொண்டுவந்து கொல்லத்துணிந்தேனே! தனித்து வராமற் போனேனே இவருக்கு நானே எமனானேனே என்று பல விதங்களாகப் பிரலாபித்து ஆசிரியரை நோக்கி, ஓ ஸ்வாமி உம்முயிர் நீங்கு முன் என்னுயிரைவிட்டு விடுகிறேன் பாருமென்றப்பாதலத்தில் விழப்போனார் உடனே ஏவலாளர் அரசனைவிழாமற் பிடித்துக்கொண்டனைவரும் இதுவென்ன கொடுமையென் றோலமிட்டழத் தொடங்கினார்கள். அப்போதிறைவன் தொழும்பர்மே லதிகோபங்கொண்டு தூஷணவார்த்தைகள் விண்டு ஜெயதேவ ஸ்வாமிகள் ரக்தத்தால் நனைந்திருப்பதைப் பார்க்கத்துன்பமேலிட்டு ஓவென்று புலம்பத் தொடங்கினர். அப்போது ஜெயதேவர் பாவியாகிய என்னால் பரமசாதுக்கள் பாரிலமிழ்ந்துப் போனார்கள். அரசனும் உயிர்விடத் துணிந்தான். இனி இக்கொடிய தேகமிருந்தால் வெகு குற்றங்களுக் கிடமுண்டாகுமென்று தலையைத் திமிறிப் பிடுங்கிக்கொண்டு பூமியில் மோதிச் சாவுக்கிணையான மூர்ச்சையாய் வீழ்ந்துவிட்டார். அதையறிந்த பார்த்திபன் ஆசிரியர் மடிந்தாரென்று தீர்மானித்து ஓஓ என்னுண்டவன் மரணமடைந்தாரா இனி நானென்ன செய்யட்டும் ஓ கர்த்தனே பரிசுத்தனே ஜடாதரனே கங்காதரனே நிடலாக்ஷனே நீலகண்டனே உமை பாகனே லோகநாயகனே கபாலபாணியே கைலாசவாசனே சுயம்பிரகாசனே எனத் துதித்து, ஆயாசமேலீட்டால் மூர்ச்சையா யடியற்ற பனைபோல் நிலத்திற் சாய்ந்துவிட்டார். அப்போது மந்திரி பிரதானிகள் முதல் சகலரும், ஓ ஓ இராஜனும் இறந்துவிட்டார்போற் றோன்றுகிறதென்று ஜெயதேவ ஸ்வாமிகளினருகிற் கிடத்தி கோவென்று அழத் தொடங்கினார்கள். அவ்வோசையால் இராஜன் மூர்ச்சை தெளிந்து ஜெயதேவ் ஸ்வாமிகளைப் பார்த்து மார்புடன் சேர்த்து ஓ என் சத்குருநாதனே மெஞ்ஞான போதனே என்னைவிட்டுப் பிரிந்தீரோ? என்னைப்பிரியவும்

உமக்கு மனம் வந்ததோ? இனியும்மை யெப்பிறப்பிற்காணப் போகிறேன் ஐயோ நீர் மரித்த சங்கதி என் தாயாகிய பத்மாவதி கேட்டால் உயிருட னிருப்பாளா அரைநிமை பொறுப்பாளா? என்னவென்று சொல்வேன் எவ்விதமாகத் துயரத்தை யாற்றுவேன், ஆ ஆ இனி யிவ்வுடலோடிருப்பேனு இருந்துயிர் தரிப்பேனு என் தாயின்முன் போவதைப் பார்க்கிலும் உமது சரணார விந்தத்தி னண்டையிலே மரணமடைகிறேனென்று ஜெயதேவைப் போலவே மத்தகத்தைத் தரையில் மோதிக்கொள்ளப் போனுர். உடனே மந்திரி பிரதானிகள் அரசனை யசையாமற் பிடித்துக் கொண்டார்கள் இராஜனே அந்தோ இந்த வேளையில் என்னை ஆதரிப்பார் யாருமில்லையே! ஐயோ தொல்லையே! குருவைக்கொன்ற கொடும்பாவியாகிய வெனக்கென்ன கெதியுண்டாகுமோ? இப்படிவருமென் றறியாமற் போனேனே? நரகத்துக் காளானேனே என்று தனதிஷ்ட தெய்வமாகிய பரமேஸ்வரனைத் தோத்திரஞ் செய்யத் தொடங்கினுர்.

பாடல் தேவாரம் சிவதுதி.

திருவரு ளுருவே திவ்ய தெளிவருட் குருவேயுன் றன்
சரணமே கெதியென்றெண்ணிச் சத்குரு பஜனைபண்ணிப்
பெருமையாய் வாழ்ந்திப்போது பெரும்பழிக் காளாய்நின்றேன்
அரகர வாமதேவா வடியனைக் காக்கவாவா. 1

அரியய னமரர்போற்று மனுதியே யாதியேயுன்
கருணையாற் குறையொன்றின்றிக் காசினிபுரந்திப்போது
சிரமையிற் புகுந்தேனையா செய்வதொன் றறியேன் றுய்யா
அரகர வாமதேவா வடியனைக் காக்கவாவா. 2

திரிபுரந் தனையெரித்த சிவபெரு மானேயுன்னைப்
பிரியமா நினையாதொன்றும் பிழைகளே செய்திப்போதில்
உரிமையா யுனைப்பாராட்டி யுளங்குழைந் தழைக்கின்றேனே
அரகர வாமதேவா வடியனைக் காக்கவாவா. 3

சிரந்தச முடையோனன்று தேவியைக் கேட்கவன்பா
யுரிமையோ டவனுக்கீந்த வுதாரசற் குணனேயுன்றன்
தரிசனந் தாராதின்னந் தாமதஞ் செய்யலாமோ
அரகர வாமதேவா வடியனைக் காக்கவாவா. 4

தரமறி யாமலுன்னைச் சமரினுக் கழைத்ததீய
தருவவா ணன்றன்வாயில் காத்தகா ருண்யமூர்த்தி
அருமையோ டழைக்குமென்மே லருள்செயா திருக்கலாமோ
அரகர வாமதேவா வடியனைக் காக்கவாவா. 5

பரமனே பரசுபாணி பத்மாசூரன் றன்கேட்ட
வரமளித் தவன்றுரத்த வாடியோ டியபூங்காலாய்
குருதுரோ கியும்பிழைத்திக் குவலயத் திருக்கலாமோ
அரகர வாமதேவா வடியனைக் காக்கவாவா. 6

மிருகண்ட ரிஷிசேய்காலன் வேதனைக் காற்று துன்னைப்
பிரியமாய்த் துதித்த போதே பெருவய தளித்தாட்கொண்ட
கருணையங் கடலேயென்னைக் காத்திடா திருக்கலாமோ
அரகர வாமதேவா வடியனைக் காக்கவாவா. 7

அருளுப மன்னியர்க்கா யமிர்தசா கரமளித்த
பெருமையென் னென்றுசொல்வேன் பிஞ்சகா பினாகபாணி
திருவுள மிரங்காயேலென் சிரமிதோ தருவேன்மெய்யா
அரகர வாமதேவா வடியனைக் காக்கவாவா. 8

சுரரரக் கருங்கடைந்த சுதைததி யினிலெழுந்த
காளமுண் டவனேநீல கண்டனே கபாலமூர்த்தி
யொருவரா தரவிலாம லுனதடைக் கலம்புகுந்தேன்
அரகர வாமதேவா வடியனைக் காக்கவாவா. 9

அருமறைப் பொருளேயென்ற னாவியேயடியேனிந்தத்
தரணியிற் பிறந்தடைந்த சஞ்சல மெவர்க்குச்சொல்வேன்
தருணமே யாட்கொள்ளாமற் றடைசெயி னுயிர்நில்லாது
அரகர வாமதேவா வடியனைக் காக்கவாவா. 10

என்றிவ்விதமாகத் தோத்திரஞ் செய்யும்போது கைலாச வாசராகிய பரமசிவனார் இராஜனுடைய அலங்கோலத்தையும் ஜெயதேவ ஸ்வாமிகளின் ஜீவகாருண்யத்தையுந் திருவுளத்தறிந்து ரிஷபவாகன ரூடராய்ப் பார்வதி சமேதராய்த் தேவ கணங்களும் பூத கணங்களும் சூழ இராஜன்பா லடைந்து ஓ என்னருமைப் பாலனே! திவ்யகுண சீலனே! உனக்கு வேண்டிய வரமேதோ அதைத் தந்தோஞ் சீக்கிரங்கேளப்பா வென்று திருவாய் மலர்ந்தருளும்போது பார்த்திபன் பரமசிவனார் பாதத்திற் சிரசாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டெழுந்து நின்று, ஓ என் தெய்வமே! உம்மையும் பார்க்கும்படியான பாக்கியஞ் செய்தேனோ? இப்பாவியின் முன்னும் பிரசன்ன மானீரோ? என்னையு மொருபொருளாக நினைத்துவந்

திரோ? அரிதான சேவையுந் தந்திரோ? என்முன் வருவ தற்கு மூவந்திரோ? உம்மை தரிசிக்கும்படியான தபமொன் றுஞ் செய்ய வில்லையே? செய்த தெல்லாந் தொல்லையே? உம்மையன்றி வேறு துணையில்லையே? நீர் வந்தும் என்னுண் டவனுயிர் பெற்றெழவில்லையே? நான் சத்குருநாதனைக் கொ ன்ற பாவியாச்சுதே? என்னுண்டவனுயிர் பிரிந்து போச்சுதே? தீராப் பழிக்காளாய் விட்டேனே? குருவைக் கொல்லவு மூட் பட்டேனே? ஆ கெட்டேனே? இதற்காகவே உமக்கு முறை யிட்டேனே? சீக்கிரமென் குருஸ்வாமிகளை யெழுப்பலாகா தோ? எழுப்பாவிடி லென்னுயிர் பிரிந்துபோகாதோவெனப் பலபல விதங்களாகப் பிரலாபிக்கும்போது,

கங்காதரன், ஓ பாலனே ஜெயதேவ் இறந்து விட்டா ரென்றே நினைத்தால் எவ்வளவுசூது கபட நாடகனுகிய பக வானிடத் திருக்கின்றதோ அவ்வளவு தந்திரம் அவர் பக்தர் களிடத்திலு மிருக்குமென் றறிந்துக் கொள்வாய், இப்போ தும்முடைய ஆரியர் தன் சுவாசத்தை பிர்மாந்தரத்தி லேற்றி இத்தேகத்தின்மேல் நிராசையாகி இப்பாதலத்தி லெறிந்து விட்டுப் போகும்படியான யுக்திசெய்து பிர்மானந்தத்திலேக் யப்பட் டிருக்கின்றார், நீ யந்தச்சூது தெரிந்துக் கொள்ளக் கூடாமல் துக்கசாகரத்தில் மூழ்கி மரணமடைய நினைத்தாய் இனி வியாகுலப்படாதே தயிரியம் விடாதே யென்றரசனை மார்பிறுகத் தழுவிப் பலபல அன்பான வார்த்தைகளாடினார் அப்போது பூபாலன் சிவபெருமானை நோக்கி சர்ப்பாபரணம் பூண்டு மான் மழு சூல மேந்திய கையனே! தேகமெங்கும் விபூதி தூளிதந் தரித்த மெய்யனே! சகல பிராணிகளையுங் காத்துரக்ஷிக்குந் துய்யனே! அடியேனுக் குண்டாகிய இட ரைத் தீர்த்து ஆட்கொள்ள வெழுந்தருளிய எனதையனே! ஜாக்கிரதை சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீத மென் னும் இவ்வைந் தவஸ்தைகளையும் சகல ஜீவர்களுக்கும் பொ துவேயாகும். இந்த ஐந்தவஸ்தைகளையும் சத்குருநாதன் முன்னிலையில் நன்றாய் விசாரித்தறிந்து ஞானமார்க்கந் தெரி ந்து அந்த ஞானத்தால், பத்தியும் சித்தியும் வைராக்கியமும் யோக்கியமும் சூக்ஷமான தியானமும் மோனமும் அணுமுதல் பிரமாண்ட பரியந்தம் பிரமமே நிறைந்திருக்கிற தென்றும், அப்பரிபூரணமாகிய பிரமத்தைவிட நானென்பது இல்லை

யென்றும், என்றும் அழியாமலிருப்பது பிரமமென்றும் நானென்னும் அப்பாவத்தையும், எனதென்னும் மபவாதத்தையும் தலையெடுக்காமல் தவளையையுண்ணும் சர்ப்பத்தைப்போலப் புசித்துப் பூரண வைராக்கிய மடைவது கானற்சலத்துக்கிணையான பிரபஞ்சத்தை சுத்தமாய் மித்தையென்றுன்னி ஸ்திரீகள் முதலான போகங்களைக் காகங்களி னெச்சத்தைப்போ லெண்ணி மனதிற்றோன்றும் நினைவுகளையெல்லாம் மாய்த்துக் காம குரோத லோபமோக மதமாச்சரியங்க ளென்னும் ஆறு கள்வரையும் அடியோடு வெட்டிச் சாய்த்து குடும்பத்தை விர்த்திசெய்ய வேண்டுமென்கிற மனோவிச்சையைத் தேய்த்து ஆனந்த சமூத்திரத்தில் கருவி கரணாதிகளைத் தோய்த்துத் தன்னையறிந்து பிரம மாத்திரமாயிருக்கும் எதார்த்த வைராக்கியத்தை யடைந்து ஆசாரியர் மீது அதிகப் பிரியமுடையவராய் எப்போதுஞ் சாதுக்கள் கூட்டத்தை விடாமற் றொடர்ந்து சதாகாலமும் நானே பிரமமென்று மௌனம் பண்ணிவரும், சரீர பாவனையை நீக்கிச் சங்கல்ப விகல்பங்களைப் போக்கிப் பாமரத்தைத் தூளாக்கி அகமுகத்திற் பரப் பிரமத்தை நோக்கித் தன்னைப் பிரமத்திற்கு ஐக்கியமாக்கி நிர்விகல்பராய் அகண்டானந்த நிராமயமான சத்பாவ வைராக்கியமும் அபாவ வைராக்கியமும் ஸ்தாபன வைராக்கியமும் திட வைராக்கியமும் சம்மத வைராக்கியமும் விசார வைராக்கியமும் நிர்வாண வைராக்கியமும் மகா வைராக்கியத்தையு மடைந்த எமது குருசாமிகளாகிய ஜெயதேவ ஸ்வாமிகள் கைகால்கள் வெட்டுபட்டுப் போவதற்கு முன் ஜென்மத்திலென்ன பாவஞ் செய்தனரோ? இம்மகாத்துமாவுக்கு இப்படிப்பட்ட சங்கடம் வந்து நேரிடுவதற்குக் காரணமேதோ? அதை சங்கைதீர திருவாய் மலர்ந்தருள வேணுமென்று தொழுது நிற்கும் நரபாலனை நோக்கி கரைமிடற்றண்ணல் புன்சிரிப்புடன் சொல்லத்தொடங்கினார்.

கேளும் அரசனே கர்மமானது மூவரையும் தேவரையுமற்றியாவரையும் விட்டதல்ல. இந்த ஜெயதேவர் எந்த கர்மத்தையனுட்டித்து கால் கரங்கள் வெட்டுண்டாரெனில் முற்பிறப்பி லிவர் பராசர முனிவருக்கும் பரிமளகந்திக்கும் பிறந்து வியாசரென்று பேர்பெற்று பல மதங்களை யேற்படுத்தி கட்டுபாடுசெய்து முடிவில் கங்கையிலிரங்கி கரங்களை உயரத்தூக்கி

நாராயணனே பரனென்று மூன்றுதரஞ் சத்தியஞ் செய்த படியால் கால்கள் ஜலத்தி லெவ்வளவு மூழ்கியிருந்ததோ அதுவரையிலும் கரங்கள் மூழங்கை வரையிலும் கள்வர்வெட்டினார்கள் மேலும் இவர் சகலசாஸ்திர சம்பன்னராக விருந்தும் ஏகமூர்த்தி திரிமூர்த்திகளானதை யறிந்திருந்தும் பிரிவு செய்யத் தருமோ அக்கருமத்தினாலே இவர்க்கு கைகால்கள் துண்டிக்கப்பட்டார் என்றுசொல்லி ஜெயதேவ் மஸ்தகத்தின் மீது தனது திவ்ய அஸ்தத்தை வைத்து ஓ ஜெயதேவ் உன் கண்களைத் திறந்து அரசனைப்பார்த்து துக்கத்தை நீக்கலாகாதோ? சூதுசெய்து பூமியில் வீழ்ந்திருப்ப தழகோ? பிர்மக்ஞானியாகிய உம்மை யண்டின சகலரும் பிர்மானந்தத்தில் ரம்மித்திருக்க வேண்டுமே யன்றித் துக்கத்தை யடையக் கூடுமோ? ஓ சீமானே! வீணா யேனும்முடைய உயிரைவிடத் துணிகிறீர் வேண்டாம் சீக்கிரமெழுந்து தேவையான வரங் கேட்டுக் கொள்ளுமென்றஸ்த வஸ்தக சையோகஞ் செய்த மாத்திரத்தில் ஜெயதேவ் தேகவாதைகளும் மனோபாதைகளுந் தீர்ந்து களிகூர்ந்து நித்திரைவிட் டெழுந்தவர்போ லெழுந்து பரமேசுவரன் பாதங்களின்மேல் விழுந்து ஓ என்னாண்டவனே! மூத்துத் தாண்டவனே கள்வரைக்காத்திரட்சிப்பதே யெனக்குத் தேவையான வரமென்று வணங்க கைலாசபதி, ஓ ஜெயதேவ் உமது கைகால்களைக் கண்டித்தவர்களுக்கென் பதவியைக் கொடுத்தேன் இதிற் சந்தேகமில்லை, அவர்களைக் குறித் தாயாச படவேண்டாம். கள்வர் காசினியிலமிழ்ந்தது உன் பொறுமையாலும் உன் மனைவியிட்ட சாபத்தாலுமேயாம் நீர் ஓர் தூஷணவார்த்தைச் சொல்லி யிருப்பீராகில் சோரர் பாதலத்திலமிழ்ந்துப் போகமாட்டார்கள், உம்முடைய பூஷணமேயவர்களுக்கு எமபாசமாய் விட்டது அன்று யாரார் செய்கைக ளெப்படியோ அப்படியே அவரவர்களின்ப துன்ப மடைவார்கள். அவரவர்கள்செய் கர்ம தர்மமே அவரவர்களுக்குத் துணையா யிருக்கும் உண்மை யிப்படியிருக்க உம்மால் மரண மடைந்தார்களென நினைந்துயிர்விடத் துணிந்தது விபரிதகுணமே உம்மாலல்லவோ கொடும்பாவிகளான கள்ளர்களுக்கு என் பதவியைக் கொடுக்கும் படியாய் நேரிட்டதென்று திருவாய் மலர்ந்தருளிய பரம சிவனார் திருவடிகளில் ஜெயதேவ் வணங்கி, ஓ மகாதேவா

ஆதிதேவா தேவதேவா வாமதேவா மகானுபாவா பாவியே னுடைய மஸ்தகத்தின்மே லுமது திவ்விய அஸ்தத்தை வைக்கும்படியான நற்காலமும் வந்ததோ ஓ கர்த்தனே ஆன ந்த நிர்த்தனே பாரிலமிழ்ந்த பரமசாதுக்கள் உன் பதவியை யடைந்தார்களோ ஆனந்தம் ஆனந்தம் அவர்களிப்பூமியி லமிழவும் நாங்க ளிங்குவரவும் இறைவனும்மை துதிக்கவும் தேவரீர் பிரசன்னமாகவும் எங்கள் குறைகள் நீங்கவும் மெஞ் ஞானம் ஓங்கவும் நேரிட்ட சுபம் பாரிலமிழ்ந்த பரமசாதுக் களாலல்லவோ தியருக்கு உம்முடைய பதவிகிடைக்குமோ ஆ ஆ அவர்கள் செய் பாக்கியமே பாக்கியமென்று சங்கரன் தாட்களிற்சூழ்ந்து ஆனந்தவாரியிலாழ்ந்து இன்பமேலீட் டாற் றன்னைமறந்து பல பல விதங்களாகத் தோத்திரஞ் செய் யத் தொடங்கினர்.

அதற்கு கருணாசாகரனான கங்காதரன் ஜெயதேவைநோ க்கி, ஓ ஜீவகாருண்ய விரதத்திற் சிறந்த ஜீவன் முக்தனே ஓ அரிபக்தனே நீர் பட்டணத்திற் பிரவேசித்த இரண்டு முகூர் த்தத்துக்குள் உமது கைகால்கள் தனக்குத்தானே வளரக் கடவது ஸ்ரீமந் நாராயணரும் தரிசனந் தரக்கடவது, பின்பு ஆனந்தமாயாதொரு குறைவுமின்றி வாழக்கடவாய் உமது பேரைச் சிந்திப்பவர்களின் தீவினைகளகலக்கடவது என்று திருவாய்மலர்ந்து அரசனை நோக்கி ஓ என்னப்பனே! குருவை நம்பினோர்க்குக் குறைவுண்டோ, நீ குருபக்த சிகாமணியாத லால் உனக்கோர் குறையும் நேரிடாது, சுபமங்களமாக பிர் மானந்த வாரியில் மூழ்கி மோட்சலாபம் பெறுவாயென்றாசீர் வதித்து அந்தர்த்தானமானார், தேவர்கள் பூமாரி பொழிந் தார்கள், தேவ துந்துபி தாம்தாமென்று முழங்கிற்று, ரிஷி கள் ஜெயதேவ் சாந்த குணத்தைக் குறித்து வியந்து மிகவு மகிழ்ந்து இராஜனுடைய குருபக்திக் காச்சரியப்பட்டு மாச் சரியங்கெட்டு ஜெயவிஜயீபவா வென்று வாழ்த்தி மறைந்தார் கள். பின்பு கிரவுஞ்சராஜன் ஜெயதேவ் ஸ்வாமிகளின் றிருத் தாட் டாமரைகளிற் பணிந்து நயனங்களை யணிந்து பல தோத்திரம்புரிந்து இனி நம்முடைய நாட்டுக்குப் போகலாம் வாரும் ஸ்வாமியென்று தேரின்பேரி லேற்றிக்கொண்டு சது ரங்க சேனைகளுஞ்சூழ அதிக சந்தோஷத்துடன் நாட்டை நாடிப் பிரயாணப் பட்டார்கள். அப்போது மந்திரிபிரதானி

கள் முதல் சகலரும் ஜெயதேவைத் தன்யகுருவென்று கொண்டாடிப் புகழ்ந்தார்கள். கேட்டீர்களோ சித்தர்களே யென்று பிர்மாம்சமான நாபாஜிசித்தர் சொல்லத்தொடங்கினர்.

கள்வரைக்காத்த அத்தியாயம் முற்றிற்று.

எட்டாவது அத்தியாயம்

பத்மாவதி மரித்தது.

இப்படி ஜெயதேவும் இராஜனும் சதுரங்க சேனைகள் சூதநாட்டை நாடிவருகையில் நகரில்கிரவுஞ்ச ராஜன்மனைவி பத்மாவதியினிடம் போய் அன்புடன் பணிந்து, ஓ அம்மணி! ஒன்றும் அறியாத நான் ஒரு நன்மார்க்கத்தை யடையும்பொருட்டு ஞானோபதேசஞ் செய்து கருணையுடன் ஆட்கொள்ளுமம்மாவென்று தாள்களில் வணங்கும்போது, பத்மாவதி ஓ அம்மா! பாக்கியவதி இராஜனுக்குகந்த யோக்கியவதி நானொரு ஞானமார்க்கமும் அறியேன் ஆனாலெனக்குத் தெரிந்த மோட்ச மார்க்கத்தை ஒளிக்காம லுரைப்பேனது ஏதென்றால், ஸ்திரீகளுக்குப் பதியே பரமேசுவரன், பதியே ஜகதீசுவரன், பதியே முத்தியளிக்கும் நாதன், பதியே ஞானமளிக்கும் விநோதன், பதிக்குச் செய்யும் பணிவிடையே மேலான பூசை, பதிசொல் பிசகாததே பரகதியடையும் ஆசை, பதிவிரதத் தன்மையைக் காத்தலேமேலான ஞானம், பதியின் திருநாமத்தைப் பஜித்தலே, பிர்மத்தியானம், பதியுடனிறத்தலே மோக்ஷம், பதியிறந்த வக்கணமே தன்னுயிரை விட்டுவிடுதலே மோட்சமடையும் சூட்சமம், அன்றிக் கற்புள்ளவளே விற்பன முடையவளென்றும், கற்புடையவளே அற்புதகுணமுடையவ ளென்றும், கற்புடையவளே முத்திக்குரியவளென்றும் கற்புடையவளே யுற்பத்தியுடையவளென்றும், கற்பிலாதவள் கர்த்தபத்துக் கிணையானவளென்றும், கற்புடையவளே காமதேனுவுக் கிணையானவளென்றும், கற்பழிந்தவள் கணிகைக்குக்கீழ்மையானவளென்றும், கற்புடையவளே கமலைக்கிணையானவ ளென்றும், கற்புடையவ ளொருதியானமும் செய்யவேண்டியதில்லை யென்றும், கற்பைக் காத்தலே பெண்மைக்குரிய சகல கிரியைகளென்றும், கற்பழிந்தவள்செய்யுஞ் சகல தர்மங்களும் கர்மங்களாய் முடியுமென்றும் கற்

பே பரலோகத்தைக் காட்டுமென்றும், கற்புள்ளவளாலேயே இக்காசினி நிற்கின்றதென்றும், கற்புள்ளவளுக்குத் திரிமூர்த்திகள் முதலானவர்கள் பயப்படுவார்களென்றும் பெரியோர்கள் சொல்லுவதன்றிச் சாஸ்திரங்களுமிப்படியே முறையிடுகின்றன. அன்றிச் சாவித்திரியம்மை தன் கற்பால் இறந்த புருஷனை யெழுப்பினாள், தமயந்தி கற்பையழிக்க வெத்தனப்பட்ட வேடனை யெரித்தாள், சந்திரமதி அக்கினியை ஜலம்போல் குளிர்ச்சி யடையும்படி செய்தாள். அன்றி ரேணுகாதேவி ஜலத்தைத் திரட்டினதும், பிருந்தை தன் புருஷன்போல்வந்த பகவான் மாயை யறிந்துக்கொண்டதுவும், ஜலந்தரான் திரிமூர்த்திகளை வென்றதும், அனுசூயாதேவி நாரதரளித்த இருப்புக் கடலையைப் பொரியாக்கினதும், மூவரைப் பாலராக்கினதும், ஜானகி இராவணன் தன்னைத் தீண்டாமல் மறித்ததும், நளாங்கினி ஏழுநாள் பரியந்தம் சூரிய னுதயமாகாமற் செய்ததும், அருந்ததி மணலைப் பாகமாக்கினதும், இலக்குமி பரமசிவனார் பிர்மத்தியை நீக்கினதும், அக்கினிபகவானுடைய மோகத்தை நீக்கும் பொருட்டவன் மனைவி அருந்ததியின் ரூபமெடுக்க கூடாமற் றிகைத்ததும், பார்வதி பரமசிவனா ரிடப்பாகத்தைப் பெற்றதும் கற்பினா லல்லவோ? இன்னம் விரித்துச் சொல்லவோ? ஓ ராஜபத்தினி! அருந்ததி நீச்ச ஸ்திரீயா யிருந்தும் நக்ஷத்திர ரூபமாய்த் துலக்கமுற்றாள், அகலிகை பெண்மைக்குரிய இலட்சணங்களெல்லா மமைந்திருந்தும் திருப்பாற் கடலிற் பிறந்தவளாயிருந்தும் கற்பிழந்ததால் கல்லுருவாய்க் கணவன் சாபத்தை யடைந்தாள், தற்காலத்திலும் கலியாண சடங்குகளில் கற்பிழந்த அகலிகை கல்லுருவானதால் விபசாரமென்னும் அம்மியை மிதியென்றும், பதிவிரதத் தன்மையுள்ள அருந்ததி நக்ஷத்திர ரூபமாயிருப்பதால் கற்பென்னும் அருந்ததியைக்காட்டி வணங்கென்றும் சொல்லுகிறார் கற்புள்ளவளுக்கு ஆசாரம் பூசை தியானம் நிஷ்டை முதலானதும்வேண்டியதேயில்லை. கற்பைக்காத்தலே ஆசாரம்பூசை தியானம் நிஷ்டையெனச் சொல்லப்படும். தேவகுருவான பிரகஸ்பதி பகவான் மனைவியாகிய தாரா விபசாரஞ்செய்து எல்லாராலும் நிந்திக்கப்பட்டாள். ரேணுகை ஆகாயத்திற் போகும் கார்த்தவீரியார்ச்சுனனை ஜலநிழலிற்பார்த் திப்போர்க்

கொத்த புருஷர்களு மிருக்கிறார்களாவென் றதிசயித்த மாத்தி ரத்தில் கற்பழிந்து ஜலந்திராட்டக் கூடாமல் பரசுராமனால் வெட்டுண்டாள் துரோபதை கர்னனழகைப் பார்த்ததிசயித்த குறையால் ஓர் ரிஷி புசிக்கும் பழம் அத்தருவில் ஒட்டிக்கொள் ளப்போனது கீழ்விழுந்து ஐவருக்குங் கலக்கமுண்டாக்கினது மன்றி மிகவும் நாணமடையும்படியாய்ச் செய்துவிட்டது. ஆதலால் பெண்கள் அதிசாக்கிரதையாய்க் கற்பைக் காப்பாற் றல்வேண்டும். இறந்தவர்களை யெழுப்புதலும், திரிமூர்த்தி களை வரவழைத்தலும், பூமியைத் தலைகீழாகச் செய்தலும் லேசானதாகும் கற்பைக் காத்தல் வெகு துர்லபமாகும் ஏனெ ன்றால் சஞ்சலமுள்ள மனதை மடக்கியடக்கும் பிர்ம நிஷ்டை யும் பதிவிரதை தனமும் சமானமென்று சொல்லத்தகும் புரு ஷர்களுக்கு சலனமுள்ள மனதையடக்கும் பிர்ம நிஷ்டையே மோட்சமடையும் சூட்சமமாகும் ஸ்திரீகளுக்கும் அச்சஞ்சல நெஞ்சகத்தைக் கிஞ்சித்தும் பிசகாமற் காத்தலே முத்தியளிக் குஞ் சித்தியென் றெண்ணத்தகும் தபோதனர்க்கும் துன்மார்க் கமுள்ள ஸ்திரீகளெப்படி விஷமோ அப்படியே கற்புள்ள ஸ்திரீகளுக்குத் துற்குணமுள்ள புருடர்களே விஷமாகும் உத்தம புருஷர்களுக்குத் தெய்வ மொன்றேயாகும் உத்தம ஸ்திரீகளுக்குக் கணவனொருவனே யாகும் ஆடவர்க்குப் பக வானே தெய்வமாகும் அரிவைக்குப் பதியே தெய்வமாகும் என்கிற பற்பல வார்த்தையைக்கேட்ட,

இராஜபத்தினி, ஓ அம்மா! தாங்கள் சொன்னபடியே கணவனுட னெதிரிட்டுப் பேசாமலும், கணவனுக்கு சேவை செய்வதிற் கூசாமலும், கணவனே தந்தைதாயென்றும், கண வனே குருதெய்வமென்றும் பக்தியுடன் பணிவிடை செய்ய லாம், பதியிறந்தவுடனே தன்பிராணனை விடுவது வெகு பிர யாசையாம் அப்படி யிறப்பவர்க ளிவ்வுலகிலில்லை வாக்கினாற் சொல்வதேயன்றிச் சொன்னவண்ணம் நடப்பது மிகவும் அருமையல்லவோ வென்றாள். அதற்குப் பத்மாவதி நகைத் துப் பதிவிரதையாகிய சீதாபிராட்டி நினைக்கப் பூமிபடீலெ ன்று வெடிக்கவில்லையா? கற்புள்ள சகுந்தலை நினைக்க ஆகா யவாணி பேசவில்லையா? உயிர் பிரிந்துபோதல் தொல்லையா? நாகபாசத்தா லிராம லட்சுமண ரிறந்தாரென்பதைக் கேட்ட வுடனே ஜானகி தன்னுயிரைவிட வெத்தனித்து திரிச்சடை

யால் பிராணனை விடாமலிருக்கவில்லையா? இராவணனிறந்த தே அவன்மேல் வீழ்ந்துபுலம்பி உடனே மண்டோதரி பிராணனை விட்டுவிடவில்லையா? பட்சிசாதிகளு மூடனே தன் பிராணனை விட்டுவிடுகின்றதே, பெண்டுகள் பதியுடனிறந்து போகாமலிருப்பதாற் பிரயோசனமேதுண்டு. அப்படியிருப்ப தாற் கரைகாணுத துன்புண்டு பதியுடனிறந்தா லின்புண்டு, அப்பதிவிரதைகளுக்கே மோட்சவீடுண்டு அன்றி, பதியிறந் தானெனக்கேட்டு உயிருடனிருப்பவ ளதர்மஸ்திரீ, உடன் கட்டை யேறுபவள் மத்திபஸ்திரீ, உடனே உயிர்விடுபவள் உத்தம ஸ்திரீயென்று பெரியோர்க ளுரைக்கின்றூர்க ளன்றி ஸ்திரீகளி லுத்தமஸ்திரீ தன் பிராணனைவிட கணவனே மேன்மையென்று மதித்திருப்பாள், நானுமப்படியே நம்பியிருக் கின்றேனெனச் சொல்லக்கேட்ட, அரசன்றேவி அவிவேகிக ளுக்குள் சிகாமணியாதலால் பத்மாவதியை நோக்கி, ஓ அம் மா யாவராலுஞ் செய்யக்கூடாத அபாரமான வார்த்தையை சொல்ல வந்தீரென்று தன்மேடையிற் பிரவேசித்து, ஆ ஆ அந்தப் பத்மாவதி மாத்திரம் பத்தினி மற்றவர்களெல்லாம் சித்தினிகளாயல்லவோ தோன்றப்படுகின்றது, இப்படியே முன்னொருதரம் கணவனிறந்த ஸ்திரீயி னழுகுறலைக்கேட்டு, ஆ ஆ புருஷனிறந்து வெகுநாளாயும் துணியோடு உயிருட னிருந்துக்கொண்டு அழுகிறதற்கும் மனம்வருமா? என்னு லிப்படியிருக்கக் கூடுமாவென்கின்ற பலவார்த்தைகளாடினுள் இப்படித் தன்னைத்தானே புகழ்வதறிவீனமல்லவா? இவ்வு லகில் மணவாளன் மறித்தால் மங்கைய ருடன்கட்டை யேறு வார்கள், அப்படி செய்வது மேகதேசம். அப்படியிருக்க இந் தப்பத்மாவதி புருஷனிறந்ததே தன்னுயிரை விடவேண்டு மென்றும் அப்படிவிட்டவளே உத்தமஸ்திரீயென்றும் விகட மாய்ச் சொன்னுள், சொன்னபடி தன்னுல் நடக்கக்கூடுமா? ஓ தாதிகளே! நீங்கள் சொல்லுங்கள், தன்னுற் கூடாமை யான காரியத்தைப் பிறருக்குச் சொல்லக்கூடுமா, வார்த்தைக ளால் வெல்லக்கூடுமா? தன்னுலெடுக்கக்கூடா பாரத்தைப் பிற ரை யெடுக்கச்சொல்லும் பாவனைபோ லல்லவோ யிருக்கின்ற தென்று சாற்றக்கேட்ட தாதிகள் ராஜன்மெச்சினவளே ரம் பையென்பதுபோல, ஓ ராஜேஜஸ்வரி! உலகத்தி லுடன்கட் டை யேறுதலே வெகு பிரயாசை, அதிலுமிது கலியுகம், இக்

காலத்திலுடனே உயிர் துறத்தல் கூடவேகூடாது, அப்படி விட உயிர் தன்வசமாயிருந்தாலல்லவோ மூக்காலத்திலு மிக் காரியம் நடந்திருக்கமாட்டாது, அநேக சாஸ்திரங்களைக் கற்றுக்கொண்டு பிறருக்குப் போதித்து அப்படி நடக்கச் சக்தியில்லாப் பேதையைப்போ லிருக்கின்றதென் றுபசார வார்த்தைகள் சொல்ல,

இராணி கெக்கலிகொட்டி பற்களைக்காட்டி நகைத்துப் பத்மாவதியைப் பகைத்து, ஓ பாங்கிகளே! நீங்களிக்கணம் ஓர் பட்சியைக்கொன்று அதினுதிரத்தில் ஓர் வஸ்திரத்தை நனைத்துப் பத்மாவதியினிடங் கொண்டுபோய் ஜெயதேவைப் புலிகொன்றுவிட்டது இது அவருடையவஸ்திரமென்று சொல்லுங்கள் உடனே தான் சொன்னவண்ணம் உயிரைவிட்டு விடுகிருளா பார்ப்போமென் றுரைக்கத் தாதிகள் திடுக்கிட்டு மதிகெட்டு, ஓ அம்மா! இதுகாரியத்தில் ஓர் வேளை பொல்லாங்கு நேரிட்டாலும் நேரிடும் இக்காரியம் செய்யாமலிருப்பதே யோக்யமென்று மறுக்க, இராஜஸ்திரீ ஓ தாதிகளே! மகாபதிவிரதைகளான கைகேயி, சுமித்திரை, கௌசலை, குந்திமுதலானவர்கள் தங்கள் கணவனிறந்து மூயிருடனிருக்கவில்லையா? ஸ்திரீகளுக்கு புருஷன்பேரில் மிகுதிச்சை, அதிலும் ஆடையாபரணங்கள்மேல் பிரீதி, அதிலும் தன் பிராணன்மீததிக வாஞ்சையல்லவோ, விவரித்துச் சொல்லவோ நல்லதிந்தப் பத்மாவதி சொன்னவண்ணம் நடப்பதுமெய்யாயிருக்குமாயின் ஜெயதேவ் கால்கைகள் வெட்டுண்டு பாழுங்கிணற்றில் வீழ்ந்திருந்தபோது எப்படிபிரிந்து உயிருடனிருந்தாள், அப்போது பிராணனை விடாமலிருந்த காரணமென்ன? அல்லாமல் உங்கள் பதியிறந்தானென்னக் கேட்டதே பிராணனை விட்டவர்களைப் பார்த்ததுண்டா? அல்லது கேள்விபட்டதுண்டா? மகாலட்சுமியான சீதை இராமலட்சுமணனிறந்தாரெனக் கேள்விப்பட்டதே அவரைப்பார்க்க வாஞ்சித்தாளன்றி உடனே பிராணனைவிடத் துணிந்தாரா? இது பொய்யான வார்த்தையல்லவா அந்த மண்டோதரியும் இராவணன்மேல் விழுந்தழுது உயிர் விட்டாளன்றி உடனே உயிர்விட்டாளா கேட்டவுடனுயிர்விடுவ தொருவரால் கூடுமோவெனப் புகல தாதிகள் இந்த வண்ணம் நடந்ததெனக் கேள்விப்பட்டதுமில்லைப் பார்த்ததுமில்லை. ஆனல், நளாயினி சூரி

யோதயமாகாமற் செய்தாளென்றும், தமயந்தி வேடனையெரித்தாளென்றும், சந்திரமதி அக்கினியிற் குதித்தாளென்றும், சாவித்திரியம்மை இறந்த புருஷனுக் குயிர்கொடுத்தாளென்றும், சீதைகணவனுடன் வனத்திற்சென்றாளென்றும் புராணங்களில் முறையிடுகிறதேயன்றிப் பதியிறந்தானெனக் கேட்டவுடன் சதியிறந்தாளென் றெப்புராணத்திலும் முறையிடவில்லை. ஆனாலும் யார்யார் எண்ணமெப்படி யிருக்குமோ நம்மாலறியக்கூடுமா முன்னமிப்படி நடந்திருந்தாலு மிருக்கலாம் இல்லவே யில்லையெனச் சொல்லவும் கூடாதெனத் தொழ,

அரையன் நாயகி, ஓ தாதிகளே! ஆதிமூலப்பெருமாளாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் குமாரத்தியான சுமித்திரை அவ்வாசுதேவனுடன் பிறந்தாளாகிய சுபத்திரைபெற்ற அபிமன்னனென்னுந் தன் கணவனிறந்தானென்று பலர் சொல்லக் கேட்டும் தன்பிராணனைவிடாம லிருந்தாளென்றால் குட்சியினிமித்தம் பிட்சையெடுத் துண்ணுந் துச்சகுணமுள்ள இப்பத்மாவதி ஜெயதேவர் இறந்துபோனாரென்று சொன்ன மாத்திரத்தில் உயிர்விட்டுவிடப் போகிறாளா உயிரைவிட லேசான காரியமா? தானிருப்பது அற்பவீரியமா வாளாலாவது விஷங்களாலாவது, கற்களாலாவது பிராணனைவிட யெத்தனிப்பாள். அப்படிச்செய்யாமல் நீங்கள் மறுத்து என்னைக் கூப்பிடுங்களுடனே நான்வந்து ஜெயதேவ ரிறந்துபோகவில்லையென்றும் இக்காரியம் உம்மைப் பரீட்சிக்கச் செய்தோமென்றும் மேலான ஆடையாபரணங்க ளளித்து துயரத்தையாற்றிவிடுகிறேன் கர்வத்தை மாற்றிவிடுகிறேன் சீக்கிரம் நான் சொன்னபடி செய்யுங்கள் ஓர்பட்சியின் கழுத்தைக் கொய்யுங்களென்றறைய தாதிகள் பயந்து, ஓ அம்மா இராஜபத்தினி பத்மாவதி மகாபதிவிரதையெனச் சொல்லுகிறார்கள். கணவனைப் பிரிந்தநா ளுடுத்திருந்த வஸ்திரத்துடன் வெகுநாளிருந்து அவ்வஸ்திரத்தோடும்வந்து மணாளனைக்கண்டாளிதுவே போதுமான சாட்சியாயிருக்கிறது குணங்குறிகளுமப்படி காணுகிறது ஓர்வேளை உள்ளே பிராணனை விட்டாலும் விடுவாள், ஆதலால் இக்காரியம் செய்யாமலிருக்கின்றதே நமக்குச் சிலாக்கியமாயிருக்கின்றதென்று மறுக்க அரசன் மனைவி நான் முன்னமே பத்மாவதியினிடம் போயிருக்கி

றேன் நீங்கள் நான் சொன்னபடி செய்து சீக்கிரமாக வாருங் களென்று அதட்டிப் பத்மாவதியினிடம்போய் ஓ அம்மா! காட்டிற்குள்ளேபோன அரசன் மீதிலும், ஜெயதேவஸ்வாமி களின் மீதிலும் பருத்துக்கொழுத்த பெருத்த வேங்கையொன்று பாய்ந்ததாம் என்னகெதியானார்களோ! நான் போகும் போதே வேண்டாமென் மறித்தேன் என்வார்த்தையைக்கேட் காமற் போனார்கள் என்ன விபரீதம் நடந்ததோ கைகால்க ளில்லாச் சுவாமிகளுக் கென்ன துன்பம் நேரிட்டதோ எனக் கானல் மிகவுஞ் சந்தேகமாயிருக்கின்றது. ஆனால் ஒரு தாதி யைத் தூதுவர்கள்பாலனுப்பி யிருக்கிறேன் ஒரு நொடியி லுண்மை தெரியவருமெனப் பலபல வீபரீத வார்த்தைகளாடி துக்கமுகத்தைக் காட்டினாள் சத்திய வார்த்தையாய்ப் பாராட் டினாள் பத்மாவதியினுள்ளத்தில் துன்பத்தை நாட்டினாள் விசனக்கினியை மூட்டினாள்.

பத்மாவதி அரசன் தேவியின் பொய்வார்த்தையை மெய் யென்று நம்பி மனங்குழப்பி ஐயோ பாவியாகிய நான் ஸ்வா மிகளுடன் போகாமல் அறிவீனத்தா லிங்கிருந்துவிட்டேன் முன்னமிப்படியே கெட்டேன், துன்பத்துக் குட்பட்டேன், அல்லாமல் நமது ஸ்வாமிகள் புலியென்றும் பூதமென்றும் பார்க்கமாட்டார் எல்லாமுள்ளபடி முடியுமென்று பாயும்புலி மேற் பாய்வார், நிச்சயமாயவர்மேற் புலிபாய்ந்ததாவெனப் பலதரங்கேட் டாமென்னு மிராணியின் மொழி மெய்யென நம்பி கண்ணீர் விட்டழத் தொடங்கினாள். அத்தருவாயில் தாதிகள் இராஜஸ்திரீ சொன்னவண்ணஞ் செய்து ரத்தவஸ் திரத்தை கையிலேந்திக்கொண்டு பத்மாவதியினெதிரில்நின்று பத்மாவதியின் முகவிலாசத்தையும் அழகுமேனியையும் தேம் பியழுவதையும் பார்த்துக் கரங்களைச் சேர்த்து நமது ஸ்வாமி கள் மரணமடைந்தாரென் றெப்படி துணிந்து சொல்லு வோம், சொல்லி எவ்விதம் பத்மாவதியைக் கொல்லுவோம், இதனாலென்ன விபரீதம் விளையுமோ இராஜனிதை யறிந்தா லென்ன ஆக்கினை செய்வானோவென்கிற பலபல வெண்ணங் களா லொன்றுஞ்சொல்ல வாயெழாமற் பிர்மித்து அசையாச் சித்திரம்போல நின்றுக்கொண்டு இதுவென்ன விபரீதச் செய்கை செய்யத் துணிந்தோமென்று கண்ணீர்விட்டழத் தொடங்கினார்கள் அத்தருணத்தில் இராஜன்தேவி கொப்

பென்றெழுந்து இதுவென்னவஸ்திரம் ரக்தமயமாயிருக்கின்றது இந்த வஸ்திரம் ஜெயதேவ சுவாமிகளணிந்து கொண்டிருந்ததாயிற்றே ஜெயதேவசுவாமிகள்மேல் புலிபாய்ந்ததெனக் கேள்விப்பட்டோமே புலி பாய்ந்ததால் சுவாமிகள் மரணமடைந்தாரோவெனச் சொல்லிக்கொண்டே சைகைசெய்தாள், இராஜஸ்திரீக்குப் பயந்த தாதிகள் சுவாமிகளைப் புலி கொன்றுவிட்டதா மெனப் பணிந்தழுதார்கள் அதுகேட்ட பத்மாவதி ஆ ஆ இது நிச்சயமான வார்த்தையா வென ராணி நிச்சயமில்லா வார்த்தையை துச்சமாய்த் தாதிகள் சொல்லுவார்களா? சொல்லி யழுவார்களா பூமியில் விழுவார்களா? நிச்சயமாகவே யிருக்குமென்ருள். அவ்வார்த்தையைக் கேட்டவுடனே,

பத்மாவதி அடியற்ற பனைபோல் பூமியில் வீழ்ந்து கடகடவென்றுருண்டு அழுதுபுரண்டு முகத்திலும் மார்பிலும் கரங்களாலறைந்துக்கொண்டு, ஓ என் பிராணநாயகா! பிராணசினேகா! பிராணவல்லபா! ஆ புண்ணிய புருஷா! புருஷசிகாமணி! ஆயென் மனோகரா! மன்மத சொரூபா வென்கிற பற்பல வார்த்தைகளாடி முகம்வாடி தேகம்வேர்த்து மனஞ்சோர்ந்து சாவுக்கிணையான மூர்ச்சையடைந்து உடனேதெளிந்து ஆ ஆ என் பிராணநாயகா! என்னை விட்டிறந்தபின் இனி யரை நிமை என் பிராணனிருக்குமா ஓ பகவான்! ஓ தெய்வமே! அற்பமான புலியடித்துக் கொல்லவும் பார்த்திருந்தாயோ, என்னைத் தனித்திருக்கச்செய்தாயோ? என்கழுத்தை கொய்தாயே? என் பிராணநாயகா! நானுமிதோ வந்தேன் வந்தேனென்றலரி, ஓம், அரகரா மகாதேவா! வாமதேவா! நீலகண்டா! நீரணிமுதல்வா! சாம்பவா சங்கரா! மயானவாசா! கயிலாசவாசா! உமாபதி! பசுபதி! திரிநேத்திரா! திரிபுரதகனு! சர்வேஸ்வரா! சர்ப்பாபரணு! காலகாலா! திரிசூலா! பரமேசா! ஆதிமூர்த்தி! கபாலமூர்த்தி! விஸ்வநாதா! பூதகணநாதா! சசிதரா! சடாதரா! நந்திவாகனு! கங்கைமோகனு தாண்டவா! ஆண்டவா! வென்றும் ஓம் ஹரிஹரி! நரஹரி! அம்புஜாக்ஷரி! அச்சுதா! உச்சிதா! பஞ்சாயுத! பாண்டவர் தூதா! லட்சுமிசமேதா, லீலாவினோதா, கமலபாதா, ஆதிமத்தியாந்தரகிதா, அனுதரக்ஷகா, அகிலாண்டகோடி பிரமாண்டநாயகா, பரமானந்தா, முகுந்தா, வைகுந்தா, கோவி

ந்தா, பச்சைவண்ணா, கார்வண்ணா! கமலக்கண்ணா! ஜனார்த் தனா! கருடவாகனா! ராக்ஷஸமர்த்தனா! காளிங்க நிர்த்தனா! சேஷசயனா! நாராயணா! பிரமபாராயணா! வாமனா! நந்தநந் தனா! மதுசூதனா! பரிபூரணா! சர்வகாரண வெங்கடரமணா! சங்கடஹரணா! சிதரா! துளசிதரா! தாமோதரா! பீதாம்பரா! மச்சவராகவதாரா! பலபத்திரா! பரமதயாபரா! பரமேசுவரா! சங்குசக்ரா! ஸர்வேசுவரா! கருணாகரா! ராதாமனோகரா! ஸ்ரீர ங்கா! பாண்டுரங்கா! லோகநாயகா! பத்மநாபா! திவ்விய சொரூபா, புண்ணிய புருஷா! புருஷோத்தமா! ஸ்ரீராமா! பரந்தாமா! நாரசிம்மா! திருவிக்கிரமா! பரசுராமா! சகஸ்திர நாமா! பக்தவச்சலா! தேவானுகூலா! ஆதிமூலா! வேணு கோபாலா! மாதவா! யாதவா! ராகவா! கேசவா! வாசுதேவா! தேவதேவா! ஆதிதேவா! மஹானுபாவா! வசுதேவதநயா? தசரததநயா! மாயாவிலாசா! வைகுண்டவாசா! சுயம்பிரகாசா! வேங்கடேசா, ருஷீகேசா, சித்விலாசா கஜபதி, ரகுபதி, சீதா பதி, வேங்கடாசலபதி, மாயா, ஆயா, வெண்ணையுண்ட நே யா, அண்டர்களேத்துந் தூயா, உலகமுண்டவாயா, நானா உபாயா, பக்தர்கள் சகாயா, சதுர்புஜா, கருடத்துவஜா, கோ தண்ட அஸ்தா, புண்டரீக வரதா, ஓ விஷ்ணு, ஓ பராத்பரா பரமதயாளா, அரேகிருஷ்ணா அரேகிருஷ்ணவென்று பகவா னைத் துதித்து தன் பிராணனை விட்டுவிட்டாள்.

அப்பிராணனானது சோதிப்பிரகாசமா யாகாயமார்க்கமா ய்ப் போய்விட்டது. அச்சோதிபோன அதிசயத்தைக்கண்ட சாதுபிராமணர்கள் ஆச்சரியங்கொண்டு விந்தையென விண்டு பத்மாவதியின் மேடைக்குவந்து சங்கதிதெரிந்து மயங்கி தயங்கி அங்கங்கே அசைவற்று நின்றுவிட்டார்கள், தங்கள் ஸ்மரணைகெட்டார்கள், அருகேயிருந்த ராஜஸ்திரியும் பிர மைகொண்டு திக்குமுக்கிட்டு ஒன்றுந் தோன்றாதவளா யசை வற்று நின்றிருந்தாள். தாதிகளோ அங்கங்கே வீழ்ந்துவிட் டார்கள். பின்பு அரசன்தேவி கண்கெட்டபின் சூரியநமஸ் காரஞ் செய்வதைப்போலவும், தலையிற்பட்டபின் தாழ்வதை போலவும் ஓ ஓ மோசம் வந்தது இதற்கு நானென்ன செய் வேன் உலகில் இப்போர்க்கொத்த உத்தமிகளு மிருக்கிறார்க ளோ? ஆ ஆ தான்திருடி அயலாரை நம்பாளென்கிறபடி நான் பாதகியாயிருந்தும் பத்தினியை கொன்றுவிட்டேனே

சித்தினியாய் நின்றுவிட்டேனே, இராசன் செய்த தர்மங்களையெல்லாம் பாழாக்கிவிட்டேனே, நரகத்துக்காளாக்கிவிட்டேனே பார்வதியைத் தின்றுவிட்டேனே, பாவியாய் நடுவீதியில் நின்றுவிட்டேனே, ஆ கெட்டேனேயென்று பலபல விதங்களா யுரைத்து அங்கிருக்கும் பலருடைய மனதையுங் கரைத்து மிகவும் நொந்து இடராக்கினியால் வெந்து பூமிமேல் விழுந்து புரண்டெழுந்து இராசன் வந்தா லென்ன சொல்லப்போகிறேனென் றலைந்து மனங்குலைந்து பலபல விதங்களாய் நினைந்து கண்ணீரால் நனைந்து கைகளைப்பிசைந்து பூமியிலலைந்து மெய்மறந்து பெருமூச்சுகள்விட்டு மூர்ச்சையாய் வீழ்ந்துவிட்டாள். அதையறிந்த தாதிகள் கைகால் நடுக்கமெடுத்து இராசஸ்திரியையடுத்து கண்ணீர்விட்டழுது கடவுளேயென்று தொழுது ஐயோ வந்ததே பழுது இதோ போய்விட்டதே பொழுது இராசன் முதலானவர்களும் வந்துவிடுவார்களே? நம்மைக் கொன்றுவிடுவார்களே இரண்டு பேர்களு மிறந்துவிட்டார்களே இகலோகத்தை துறந்துவிட்டார்களே, இராஜனுக் கென்னசொல்லுவோம் என்ன தைரியங்கொண் டெதிர்நிற்போமெனப் பலபலவிதங்களாய்ப் பிரலாபித்து ராணியின்மேற் கோபித்தும், பன்னீரைத் தெளித்து விசிறிகளால் பலங்கொண்டு வீசிக் கோவென்றழத் தொடங்கினார்கள் அப்போ திராஜஸ்திரி யெழுந்து பத்மாவதியைப் புரட்டிப்பார்த்து மார்புடன் சேர்த்து ஐயோ பிராணனுண்மையாய்ப் போய்விட்டதே இராஜதருமங் கெட்டதே ஸ்திரிஹத்தி மேலிட்டதே, என்னைச் சுட்டதே, இராஜனும் மரிக்கநேரிட்டதே, பட்டணத்தைப் பாவஞ் சூழ்ந்துகொண்டதே, ஸ்திரிஹத்தி பொல்லாதாச்சுதே, இனி யென் மானம் போச்சுதே நானே தேடிக்கொள்ளலாச்சுதே, தீரா அபகீர்த்தி வாச்சுதே, ஓ பாங்கிகளே! இனி நாமென்ன செய்யலாம், யாரைவையலாம், நான் இராஜன் வராமுன்னமே பிராணனை விட்டுவிடுகிறேன் விஷங்கொண்டு வாருங்கள் குடித்துயிர் விடுகிறேன் யினியென் பிராணனை அரைக்கணமும் வைக்கலாகாது பாவியின் முகத்தை யரசனுக்குக் காட்டலாகாது. இப்பாவமென்மட்டும் போகாது இனி யரைக்கணமு மிருக்கமாட்டேன் சாகாது என்று தலையைத் தரையில் மோதிக்கொண்டுயிர்விடத் துணிந்தாள். தாதிகள் ராணியை யசையாமற்

பிடித்துக்கொண்டு ஓவென்றலறி யழத்தொடங்கினார்கள். அப்போதங்கிருக்கும் சாதுப் பிராமணர்கள் இராஜன் மனைவியை நோக்கி, ஓ ராஜபத்தினி பத்மாவதியை யெழுப்ப ஜெயதேவ சுவாமிகளாலாகும் அவர் நினைத்தா லீதருமையோ அவர்க்கோர் பெரிதல்ல சுவாமிகள் வந்தவுடன் உள்ளபடி கள்ளமின்றி யுரைத்து அவர் மனதைக் கரைத்துப் பணிவையாகில் பத்மாவதியை ஓர் கணத்திலெழுப்புவார் உன்னைத் தேற்றுவார், காப்பாற்றுவார், பாவத்தை மாற்றுவார், பத்மாவதியைப் போற்றுவார், உன் துயரத்தை யாற்றுவாரென்றுரைத்துத் தங்கடங்களிருப்பிடஞ் சேர்ந்தார்கள் பின்பு அரசன்றேவி ஒருவாறு தேறி பத்மாவதியை ஓர் அறையிலடக்கஞ்செய்து ராஜன் வரவை யெதிர்பார்த்துக்கொண்டிருந்தாள், கேட்டீர்களோ சித்தர்களேயென்று பின்னும் நாபாஜிசித்தர் சொல்லத் தொடங்கினார்.

பத்மாவதி மரித்த அத்தியாயம் முற்றிற்று.

ஒன்பதாவது அத்தியாயம்.

பத்மாவதி உயிர்பெற்றது.

இங்கு யிப்படியிருக்க நாட்டைநாடிவரும் அரசன் தேரிலிருந்துகொண்டு ஜெயதேவுடைய பெருமையை கொண்டாடி ஆ ஆ இன்றைக்குப் பரமசிவனார் தரிசனம் பெறும்படியான பாக்கியமேதோ, நாம்செய்த சிலாக்கியமேதோ, இப்பிறப்பிற் செய்த தபமோ, முற்பிறப்பிற்செய்த தபமோ, ஸ்வாமிகளுக்குச் செய்த பணிவிடைப்பலமோ நமது முன்னோர்செய்த நலமோ சங்கரனைத் தரிசிக்கும்படியான பாக்கியம் குருஸ்வாமிகளா லல்லவோ நேரிட்டது. பத்மாவதியின் வாக்கியமல்லவோ கள்வரைப் பாரிலமிழ்த்துவிட்டது ஸ்வாமிகள் பாழுங்கிணற்றில் வீழ்ந்திருந்ததனு லல்லவோ எந்தாய் வெகுநாள் பிரிந்திருக்க நேரிட்டது மகாபதிவிரதையாகிய பத்மாவதியும் சாந்தமே ஒருருவான சுவாமிகளும் நமது பட்டணத்திலெழுந்தருளியிருக்க நாமென்னதவஞ் செய்தோமோ ஆ ஆ நமக்குற்ற பாக்கியமே பாக்கியம், நமது பெரியோர்செய்த சிலாக்கியமே சிலாக்கியம், நம்மைப்போன்ற புண்ணியவான்கள் இவ்வுலகி லியாருமில்லையென்றே சொல்லத்தகும். காட்

டில் பரமசிவனைத் தரிசித்து இனி நாட்டில் பகவானைத் தரிசிக்கும்படியான புண்ணிய மொன்றுஞ் செய்ததில்லையே நாட்டிற் சென்றதே பகவான் தரிசனந்தருவாரா ஸ்வாமிகளுக்குக் கைகால்கள்வருமா, என் கண்களுக் கானந்தந்தருமா, இன்றைக்கு நாமடைந்த லாபமேலாபம், நமக்குற்ற பிரதாபமே பிரதாபமென் றுன்னிக்கொண்டே ஆனந்தமாய்க் குரு சங்கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டே ஸ்வாமிகளையும் பத்மாவதியையும் தோத்திரஞ் செய்துக்கொண்டே கேளிவிலாசத்தோடும் மந்திரிபிரதானிகளும் ரதகஜதுரகபதாதிகளும் புடைசூழப் பட்டணத்திற் பிரவேசித்தார்கள். அப்போது பட்டணத்திலிருக்கும் சகலரும் பத்மாவதியின் பிராணன் சோதிரூபமாய்ப் போனதும் இராசன்தேவிசெய்த சற்பனையும் தாதிகள் செய்த கற்பனையும் நினைத்து நினைத்துப் பிரலாபித்து செவிகளைக் கரங்களால் மூடிக்கொண்டு அரி! அரி! ராமராமா! சிவசிவா! அரகரா என்னபாவம், என்னகாரணம் என்னகாலம் என்னவிபரீதம் என்றுரைத்துக்கொண்டே மனமுருகி கண்ணீர்பெருகி அங்கங்கு கும்பல் கும்பலாய்க்கூடி இராசன் வரவெதிர்நாடி குசுகுசுவெனப் பேசிக்கொண்டே நின்றிருந்தார்கள். அப்போது பட்டணத்திற் பிரவேசித்த அரையன் நாட்டில் லட்சுமீ விலாசமில்லாமல் இருளடைந்து தேவ கோஷ்டங்களும் அரியரசங்கீர்த்தன கோஷ்டங்களும் குறைந்து அழுகுரலோசை நிறைந்து சந்தோஷமென்பதில்லாமல் ராம ராம சிவா சிவா வென்னும் வார்த்தையல்லாமல் வேறு வார்த்தை சொல்லாமல் அரசன் முன்னில்லாமல் தங்கடங்கள் வீட்டினுள் புகுந்து வெளிவராமலிருப்பதை இராஜனறிந்து தேசிகரைப்பணிந்து, ஓ ஸ்வாமி! இப்பட்டணம் பாழடைந்திருக்குங் காரணமேதோ! சாதுப்பிராமணர்முதல் சகலரும் மனக் கோட்டமும் முகவாட்டமு மடைந்திருக்க வேண்டிய தென்ன மர்மமோ! அடியேனெதிரில்யாரும் வராமலிடைந்திருப்ப தென்னகர்மமோ! நமது பட்டணத்திலென்னபாவம் நேரிட்டதோ! அல்லது அடியேன்செய்த கொடுமையோ இப்பட்டணத்தைச் சூழ்ந்துகொண்டதோ! ஒன்றுந் தோன்ற வில்லையே! ஏவலரால் வந்த தொல்லையோ! பட்டணத்தை யடைந்ததே பகவான் பிரசன்ன மாவாரென்றுரைத்த பரமேசுவரன் வாக்கியம் வெகுயோக்கியமா யிருக்கின்றதே

என்ன காரணத்தாலோ என்னெஞ்சந் துடிக்கின்றதேயெனப் பற்பல வார்த்தைகளாடும்போது ஜெயதேவர் நீ சொன்ன படியே என்மனமும் திகிலடைந்து திடுக்குதிடுக்கெனத்துடிக் கின்றது இதுகாரணத்தை யோசித்தால் உத்தமரியார்க்கோ விபத்துவந்ததுபோற் காண்கின்றது சீக்கிரமிப் பிரஜைகளைக் கேளுமெனத் திருவாய்மலர்ந்தருள மகா பாக்கியமென்றிறை வன்ரதம் விட்டிழிந்து பிரஜைகளைநோக்கி, ஓ புனிதர்களே நல்ல மனிதர்களே! நமது பட்டணத்திலென்ன தீங்கு நடந் ததைச்தெரியச் சொல்லுங்களென்று வற்புறுத்தி கேட்க, ஜெனங்கள் சொல்லக்கூடாக்குறையால் மௌனமாய் நின்றி ருந்தார்கள் மன்னவன் பலதரங்கேட்டும் ஒன்றுஞ்சொல்லா மையால் மனந்திடுக்கிட்டு மந்திரிகளைநோக்கி இதுவென்ன விபரீதச்செய்கையோ சீக்கிரங் கொலுமண்டபத்திற் போய் விசாரியுங்களென் றுய்க்கியாபித்துத் தானு மதிதுரிதமாய்த் தேரை நடத்திக்கொண்டு போகும்போது மந்திரிகள்போய் விசாரித்துண்மை தெரிந்துகொண் டரையனிடம் வந்துவண ங்கி, ஓ இறைவனே! இப்போது நமதுபட்டணத்தில் நடந் தது தீங்கேயாகும். அதை உமது மனைவியைக்கேட்டாலன் றிச் சவிஸ்தாரமாகத்தெரியாது, தெரிந்திருந்தாலும் யாருஞ் சொல்லமாட்டார்களென் றுரைத்ததை கேட்ட பூபதிகைகால் கள் நடுக்கமெடுத்துக்கொண்டு அதிதுரிதமாய் மேடையிற் பிர வேசித்து மனைவியைக்காணமல் காவலரைக் கேட்டுப் பத்மா வதியிருக்கும் மேடைக்குட்போய்த் தன்னையகிய னழுகுரலைக் கேட்டு உடனே தாதிகளைக்கூப்பிட்டு என்ன சங்கதியென்றார் பாங்கிகள் நடந்த சங்கதி யாவும் கள்ளமின்றி உள்ளபடி யுரைத்தழத்தொடங்கினார்கள் இராஜனோ ஆ ஆ என்தாயான பத்மாவதியைக் கொன்றுவிட்டீர்களா, கொன்று தின்றுவிட் டீர்களா, ஆ பத்மாவதி என்னும் பார்வதி மரணமடைந்தா ளா, ஓ தெய்வமே தெய்வமே! இந்தப் பழிக்கு யானென்ன செய்யட்டும் உயிரோ டெப்படி யிருக்கட்டுமென்று தரையில் வீழ்ந்து துக்கசாகரத்திலாழ்ந்து மெய்மறந்து மூர்ச்சையாய் வீழ்ந்து விட்டார்.

அத்தருணத்திலே ஜெயதேவர் மேடையிற்பிரவேசித்து இராசன்மனைவி ஓவெனப் புலம்புவதையும் அரசன் மூர்ச் சை யடைந்திருப்பதையும் பார்த்துத் தேகமெல்லாம் வேர்த்

துப்பாங்கிகளைநோக்கி இராசன்றேவிக் கென்னகுறை நேரிட்டது சொல்லுங்க ளெனக்கேட்கத்தாதிகள் சகலசங்கதிகளுஞ் சொல்லி பத்மாவதியின் பிராணன் சோதிசொரூபமாய் போய் விட்டதென்றரைந்து கரைந்தழுதார்கள், அதுகேட்ட ஜெய தேவர் பிரமித்து ஆ பத்மாவதி நானிறந்தேனெனக் கேட்டதே ஆவியை விட்டு விட்டாளா! உயிர் சோதி ரூபமாய்ப் போய்விட்டதா! ஆ மரணமடைந்தாளா! இன்றுடன் பத்தினியைப் பிரியலாச்சுதா நிச்சயமாகச் சீவன்சோதி சொரூப மாய்போச்சுதா? என்மேலிவ்வளவு பட்சமும் வைத்திருந்தாளோ! அன்பே மரணத்துக்கிடங் கொடுத்ததோ! இப்படியும் உலகில் நடந்ததுண்டோ! நடப்பதுமுண்டோ ஆ ஆ நானிறந்தேனெனக்கேட்டதே எவ்விதமாக பதைத்தாளோ! என்னமாயழுதாளோ! என்னென்ன நினைத்தாளோ! எவ்விதமாயுயிர் விட்டாளோ! எவ்வளவு பதைபதைப்போடுயிர் பிரிந்து போயிற்றோ! இவ்வளவு அன்பென்மீது வைத்திருந்தகாரணமேதோ, னக்காக உயிர்விடப்போமோ, இவ்வளளவு துன்பப் படலாமோவெனப் பலபல விதங்களாய்ப் புலம்பி தேகத்தைக் கண்ணீரா லலம்பித் தயங்கி மயங்கி பெருமூச்சு விட்டிடைந்து சகிக்கக்கூடாத துன்பத்தை யடைந்து மிகவு மேங்கித் துக்கமோங்கி ஓ வென்றழத் தொடங்கினர். ஜெயதேவரழுத குரலோசையைக் கேட்ட இராஜன் மூர்ச்சை தெளிந்தெழுந்து ஸ்வாமிகளின் முன்விழுந்து ஓவென கூக்குரலிட்டழுது ஐயோ வந்ததேபழுது எனக் கோபதீப்தனுய்க் கண்களிலிருந்து நெருப்புப்பொறிகள் பறக்கப் பல்லைநாநரவெனக் கடித்து மீசை படபடவெனத்துடிக்க அங்கமெல்ல ம் நடுங்க ஆர்ப்பரித்துச் சந்திராயுதத்தைக் கையிலேந்திக்கொண்டு தன் மனைவியிருக்கு மறைக்குட் குதித்துப்பாய்ந்து கோப மேலீட்டால் தேகமெல்லாம்வேர்த்துப் பூமியிற்சாய்ந்து மறுபடியும் மூர்ச்சையாய் வீழ்ந்துவிட்டார்.

அப்போதரசன் தேவி கைகால்கள் கிடுகிடென்று நடுநடுங்கத் திடுதிடென வெளிப்பட்டு ஜெயதேவ ஸ்வாமிகளைக் கட்டிக்கொண்டு வயிற்றிற் றலையை வைத்துக்கொண்டு, ஓ தெய்வமே! ஓ கர்த்தனே! நானறியாமற்செய்த குற்றத்தைப் பொறுத்து சீக்கிரம் பத்மாவதியை யெழுப்பி என்னையுமிறைவனையுங் காக்கலாகாதோ கருணைக்கண்ணுற் பார்க்கலாகாதோ

வெனக் கூக்குரலிட் டழத்தொடங்கினாள். அவ்வழுகுர லோசையாற் பார்த்திபன் மூர்ச்சை தெளிந்து குதித்தோடிவந்து மனைவியின் தலைமயிரை பிடித்திழுத்து, அடிபஞ்சமா பாதகீ, பார்வதியைக் கொன்ற தோதகீ, கடின சித்தமுள்ள நீலி, இனி எல்லாருஞ் செய்வாரே கேலி, படுபாவி, உன்னைக் கண்டங் கண்டமாய் வெட்டிப் பிறகுமடிவேனென்று இத்தாதிகளையெல்லாமொன்றாய்ச் சேர்த்துக்கட்டித் துண்டந்துண்டமாகவும்வெட்டி யெறிந்தல்லவோ நானும் வெட்டிக்கொண்டு மடிவேனென்று ஈனவார்த்தைகளைப் புகன்று ஜெயதேவைக்கட்டிப் பிடித்துக் கொண்டிருக்குங் கரங்களை விடுவிக்கத் தொடங்கினார். அப்போ தரசன் மனைவி ஜெயதேவைச் சர்ப்பம்போற் பின்னிக் கட்டிக்கொண்டு, ஓ என்னாண்டவனே! உமக்குக் கருணையின்னம் வரவில்லையோ, நான்செய்த தொல்லையோ? ஓ ஸ்வாமி! நானிறந்தா லியாதொரு குற்றமில்லை, யாதொரு குற்றமுஞ் செய்யா, இத்தாதிகளும் இராசனும் மரித்தல் தர்மமோ? சும்மா விருப்பதென்ன மர்மமோ? நான் செய்த கர்மமோ? தீனதயாளா! தீனபந்து! கள்வரை யாட்கொண்ட கர்த்தனே! மிகவும் பரிசுத்தனே! எல்லா வல்லமையுமுள்ள சித்தனே நாற்றிசையிலும் பேர்பெற்ற பிரசித்தனே சீக்கிரம் பத்மாவதியை யெழுப்பலாகாதோ எழுப்பினாலெங்கள் குறைபோகாதோ வெனப் புலம்பும்போது ஜெயதேவர் இராசனை நோக்கி, ஐயா அரசனே! சற்றே நில்லும் பதரவேண்டாம் ஆத்திரக் காரருக்குப் புத்திமட்டு என்கிற பழமொழி யறியீரோ வென்றுரைத்து அரையனில்லாளை நோக்கி, ஓ அம்மணி அழவேண்டாம் நானிருக்கும்போ துங்களுக்கோர் குறையும் நேரிடாது இப்போது பத்மாவதி மடிந்தது கடவுள் செயலேயன்றி உன்பேரி லியாதொரு குற்றமில்லை ஜீவா கௗெப்போது ஜென்மிக்க வேண்டுமோ, அப்போதே ஜென்மிப்பார்கள், எப்போது மரணமடைய வேண்டுமோ அப்போதே மரிப்பார்கள் அவரவர்கள் மரணமடையுங்காலம் நேரிட்டால் அதைப் பிரமாதி தேவர்களாலும், தடைசெய்யக் கூடாது, நிந்தையில்லாமல் பொந்திபோகா தென்கிறபடி வீணையுன்மேல் நிந்தைநேரிட்ட தென்றுரைத்து இறைவனை நோக்கி, அப்பாபூபாலனே! இனியுன் கோபத்தை யாற்றிப் பத்மாவதியை யடக்கஞ்செய்ய எத்தனப்படும் சந்திராயுதத்

தைக் கீழேபோட்டுவிடும், இனி என் வார்த்தையைத் தள்ளாதே, தூஷணவார்த்தைகள் விள்ளாதே, வீணுய்க் கோபங் கொள்ளாதே, வெட்டி மடிகிறேனெனத் துள்ளாதே யெனச் சொல்லும் வாக்கியங்களைக்கேட்ட மன்னவன் ஓ ஸ்வாமி! நல்ல வசனங்களை யுரைத்தீர், இனியவர்களை இரண்டு துண்டாக நறுக்கி நெருப்பாற் சுட்டுகருக்கி என்னுயிரையும் விட்டு விடுகிறேன் பின்பு எங்களனைவரையும் தாங்களடக்கஞ்செய்து விடுவீரென்று கடுங்கோபங் கொண்டு கொடுஞ் சூரியென்று விண்டு பலங்கொண்டு தன் ஸ்திரீயை யிழுத்து வாளால் வெட்டப்போகையில் இராஜஸ்திரீ ஓ ஜெயதேவ ஸ்வாமி? உமக்கபய மபயமென் றோலமிட்டுக்கூவ உடனே ஜெயதேவ ஸ்வாமி ஓ ராஜனே! வெட்டவேண்டாம் வேண்டாமென் றலங்கோல யவசரமா யவ்விறைவனது கரத்தைப் பிடித்துக் கொள்ள வெழுந்திருக்கையி லுடனே ஸ்ரீமந் நாராயண ரருளால் கைகால்கள் வந்துவிட்டது, தனக்குக் கைகால்கள் வந்தது மறியாமல் அதிக பரபரப்போடும் போய் ராஜனது இரண்டு கரங்களையும் பிடித்துக்கொண்டு இதுவென்ன விபரீதம் நேரிட்டதெனவிண்டு துக்கம்மேலிட்டு கக்கசத்துக்குட்பட்டு ஒன்றுந்தோன்ருதவராய்த் தனதிஷ்ட தெய்வமாகிய ஸ்ரீமந் நாராயணரைத் தோத்திரஞ்செய்யத் தொடங்கினர்.

தசாவதாரத் தோத்திரம்.

விருத்தம்.

திருவருட் பொருளாயாதித் தேவனுய்த் தேவர்கோனுய்
அருவமாய்த் தூயவன்பர்க் கன்பனு யகண்டானந்த
சொரூபமாய்த் துலங்கியெங்குஞ் சோதியாய் நிறைந்தமூர்த்தி
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 1

சுருதியைத் திருடிப்போன சோமுகவசு ரன்றன்னைத்
திசைகடற் குள்ளேமீனுய்ச் சென்றுகொன் றவனேநேமி
கரமுடை கமலக்கண்ணு கர்த்தனுகிய கார்வண்ணு
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 2

சுரர்கடல் கடையும்போது தூயகச் சபமாய்மேந்
தரமலையினை யாழாமற் றூங்கின தயவேவதையா
முராஹரி யெல்லார்மெய்யா மூடன்மேல் துனிவேன்றய்யா
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 3

தரைதனைச் சுருட்டியாழ்ந்த சமுத்திரத் தொளித்திருந்த
இரணியாக் கனைவராக வெழிலுரு வெடுத்துக்கொன்ற
பரமனே பதுமநாப பரஞ்சோதி யானதீபா
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 4

பிரகலாதனுக்காத் தூணிற் பெருநர ஹரியாய்த்தோன்றி
இரணியன் றனைவதைத்த வீசனே நெடியமாலே
பிரமனைப் பெற்றநாதா பேதையே ஞானனீதா
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 5

திரமகா பலிபாதாளஞ் சேரவிவ் வுலகளந்த
சரணனே வாமனவ தாரகெம் பீரசூரா
திருவுறுங் களபமார்பா திவ்விய துளபமார்பா
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 6

அரசர்க டமையடக்கி யந்தணர் தம்மைக்காத்த
பரசுராமா கோபாலா பராத்பரனே பூபாலா
விரிமறை தேடுமூலா வேலையிற் றுயின்றசீலா
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 7

இருடிக டவஞ்செருக்க விராவணன் றனைவதைக்கத்
தரைதனில் வந்தராமா சாஸ்விதனே சங்கராமா
முருகனுக் கிசைந்தமாமா முறையிடு மெனையாள்சோமா
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 8

பிரலம்பன் முதலானோரைப் பிடித்திகல் செய்துகொன்ற
தரையும்விண் புகழுநாமா ஜயபல பத்ரராமா
தரணியிற் கொடுமைசெய்தச் சண்டாள னைவென்னைத்
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 9

திரைகட லுலகிலுற்ற தீயர்கடமை யழித்துத்
தருமரா திபரைக்காத்த சங்குசக் கரனேகிருஷ்ண
வரையினைச் சுமந்தசீலா வாரியிற் றுயின்றபாலா
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 10

பரியவ தாரமாகிப் பாரினை யழிக்கவுன்னுங்
கரியனே கஞ்சத்தாளா கடையனேன் றன்னையாள
வுரியனே முறையோவென்று மோலங்கேட் டிருக்கலாமோ
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 11

என்று தசாவதாரங்களைத் தோத்திரஞ்செய்தும், பிரத்தியட்சமாகப் பகவானை நினைத்து, கண்ணீரால் நனைத்து பரமசிவமே என்னுலிப்பட்டணம் பாழடையும்படியாய் நேரிட்டதே? உமது கருணை எளியேன்மே லெள்ளளவு மில்லாமற்

போச்சுதே? பொல்லா வபகீர்த்திவாச்சுதே என்று புலம்பும் போது, பரமசிவனார் சொல்லிய வாக்கியப்படியே சுவாமிக ளுக்கு கைகால்கள் வந்துவிட்டது இனி பகவானும் பிரசன்ன மாவார் பத்மாவதியை எழுப்புவார் பத்மாவதியை சுவாமிக ளருகிற் கொண்டுவந்து வைத்தாலன்றி உருக்கமாய்ப் பகவா னைத் துதிக்கமாட்டாரென்கிறக் கருத்தால் தாதிகளால் பத்மா வதியைக் கொண்டுவரச்செய்து சுவாமிகளின் முன்வைக்கவே அப்பதிவிரதையைப் பார்த்த ஜெயதேவர் அனலில்வைத்த அரக்குபோற் கருகி, மிகவுமுருகி, ஓ பெண்ணே! என்னிரு கண்ணே கற்பகத்தருவே பரிமளமருவே என் குலவிளக்கே தீண்டா நெருப்பே பதியிறந்தா னெனச்சொல்லக் கேட்டதே ஜீவனைவிட்ட தேவியே ஓ என்னுவியே பதிவிரதா சிரோன் மணியே என்னிரு கண்மணியே என்னைப் பரலோகத்திற் பார்க்கப் போனாயோ? எனக்குற்ற துன்பத்தைத் தீர்க்கப் போனாயோ? பகவானுக்குப் பட்சத்துடன் ராதா மூத்தமீவது போல் எனக்கோர் மூத்தமீயலாகாதோ? என் துயர் நீங்கிப் போகாதோ? (பாடையேறினும் பட்சமறவாள்) என்கிற பழ மொழியைப் பொய்யாக்கிவிட்டாயே? அது மெய்யானால் பாடையில் வைத்துக்கொண்டு போமுன் உனக்கிருக்கும் பட் சத்தைக் காட்டலாகாதோ? என் முகத்தைப் பார்க்கலாகாதோ? நான் உனக்கோர் குறையுஞ் செய்யவில்லையே! ஓ பத்மாவதி! என்னுடன் ஓர் வார்த்தையாவது பேசலாகாதா? உன்னைவிட் டுப் பிரிந்தினி யுயிரோடிருப்பேனா? உன்மே லதி யன்புடை யவனென அறியமாட்டாயோ? நின்மூகத்தைக் காட்டாயோ? எனக்குக் கைகால்கள் வந்துவிட்டதை உன் கண்களாற் பார் க்கமாட்டாயோ? என் துயரத்தைத் தீர்க்கமாட்டாயோ? நீ பிராணன் விட்டதை நினைத்துக்கொண்டால் தனக்குத்தானே துக்கம் வருகின்றதே! மெழுகுபோல் நெஞ்சம் உருகுகின் றதே கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகுகின்றதே துக் கத்தை யடக்கினாலும் அடங்கேனென்கின்றதே கொஞ்சத் திற்றுயரம் ஆரேனென்கின்றதே உயிர்பெற் றெழுந்திருப் பாயா? என்னையு முன்னைப்போ லர்க்குகின்றாயா ஐயோ வெகு நேரமாய்ப் பகவானைத் துதித்தும் அன்புடனழைத்தும் பிர சன்னமாக வில்லையே. இராஜனே தன் பத்தினியைக் கொ ல்ல வாளேந்தி நிற்கின்றானே, கொல்லாம லிருக்கேனென்று

புகல்கின்றானே தானுமடியத் துணிந்திருக்கின்றானே யென்று மனமுருகிக் கண்ணீர்பெருகிப் பின்னும் பகவானைத் தோத்திரஞ் செய்யத் தொடங்கினார்.

தோத்திரப் பாடல்.

கரிமுகத் துன்பத்தாழ்ந்து காதலா யழைத்ததோகல்
பிரகலா தனனிப்போது பிரியமா யழைக்கின்றானே
மருளனேன் முன்பிந்நேரம் வருதற்குத் தடையேனையா
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 12

சுரர்களு மயர்ந்துமுன்னை துரிதமா யழைக்கின்றாரோ
அருடிரோ பதையிந்நேர மபயமிட் டழைக்கின்றாளோ
கருடவாகன கோவிந்தா கடினமேன் வரமுகுந்தா
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 13

அருச்சுனன் சுதர்மன்வில்லா லடிபட்டுச் சுழல்கின்றானோ
உரிமையா லவனைக்காக்க வோடுகின் றீரோவென் றன்
கருமமே தடையாக்கிற்றோ கடையனேன் பொறுக்கமாட்டேன்
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 14

தருமமோ ருருவமான சகாதேவன் பிணைத்திட்டானோ
துரிதமாய்த் தந்தவக்ரன் துரத்துகின் றானோவென்ன
மருமமோ வழக்கமான மாயமோ மடையனேனைத்
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 15

பரமனிப்போது பொல்லாப் பஸ்மாசுரன் றன்னாளே
விரவிக்காய்க் குண்ணுழைந்தே வேஷ்டையுற் றிருக்கின்றேனோ
உரியமோகினியா யன்னோற் குதவிசெய் திடப்போனாயோ
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 16

குருகுல நாதாவுன் றன் கோபிகா ஸ்திரீகள்போரை
யருமையாய்த் தீர்க்கின்றீரோ யவர்குர லோசையாலே
யருளினேன் குருவுமோசை யணுவுங்கேட் கிலையோவந்தோ
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 17

தெரிவையர் மேன்மோகித்துத் தியக்கமுற் றிருக்கின்றாயோ
ஒருமையாக் கலைகள்கொண்டோர் மரத்தின்மே னிற்கின்றாயோ
அருடுரையே யெனன்பே யலக்கணுற் றிருக்கின்றேனே
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 18

உருக்கமாய் மறையோனாலே யுருக்மணி யழைத்திட்டாளோ
சுருக்குடன் செல்கின்றாயோ தொண்டன்முன் வரவொண்ணாதோ

செருக்குட னலைகின்றேனே தீவினை பலசெய்தேனே
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 19

தருமமமெள் ளளவுஞ்செய்யேன் க்ஷணமுனை நினையேன்பொல்லாக்
கருமமே மிகவுஞ்செய் திக் கயலையிற் சிக்கிக்கொண்டேன்
அரவின்மே னடித்தமாயா வருமறை தேடுந்தூயா
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 20

கருணையோ சற்றுமில்லாக் கடுநெஞ்சன் வஞ்சன்றுங்காச்
சிரமையிற் புகுந்துவிட்டேன் றிக்கிலா துணைக்கூட்பிட்டேன்
துரிதமாய் வாராதின்னஞ் சோதனைச் செய்யலாமோ
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 21

அருளெனுந் தேனேயென்ற னன்புரு வானகோவே
பெருமையோ டிருந்தேனன்றிப் பீடையால் நொந்தேனிந்தத்
தருணமே வரலாகாதா சந்தோஷந் தரலாகாதா
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 22

அருமையா யென்னைக்காக்கு மருடெய்வ நீயுண்டேயென்
றொருவரை மதிக்காதென்று மூவகையோ டிருந்திப்போது
திருடன்போல் விழிக்கின்றேனே சிந்தைநைந் திருக்கின்றேனே
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 23

கருணைத்தெய் வமேநீயானுற் கடியனுன் னடிமையானல்
தரணிபன் பார்க்கராதா சமேதனைத் துன்பந்தீர்க்கத்
தருணமே வரலாமையா தடைசெயி னுயிர்போமையா
தெருள்ஜெக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. 24

என்று தன்னிஷ்ட தெய்வமாகிய ஸ்ரீமந்நாராயணரைத் தோத்திரஞ் செய்துருகியும், பகவான் வாராமையால் ராதாம்பாளிடந் தன் மனதை தூதாகவனுப்பி ஏ ராதா முன்னம் பகவான் ராமாவதாரஞ்செய்து பிதுர்வாக்கிய பரிபாலன நிமித்தம் வனம்போகையில் சித்திரகூடத்தில் நின்னுடன் தங்கியுனது துடையின்மீது ஸ்ரீராமர் சிரசைவைத்து நித்திரை செய்கிறபோது ஜெயந்தனனவன் காக்கை யுருவமெடுத்து அங்கிருந்த ஓர் மரத்தின்மீதிருக்கையில் நினது கச்சை தளர்ந்து கொங்கை வெளிதோன்றக் கண்ட காகாசுரனனவன் அதனை யாதோ ஒரு கனியென்றுன்னி விரைவில் மரத்தை விட்டுப் பறந்துவந்து தன் மூக்கினுல் கொங்கையைக் குத்தி உதிரம் பெருகுவதைக்கண்டு இது கனியல்லவென்று கடுகி முன்போலப்பறந் தம்மரத்தின்மீதிருக்க அப்போது கொங்

கையிலிருந்து உதிரமானது சிறியகால்வாயிலிருந்து பெருகு வதைப்போல உதிரம்பெருகிப் பூமியில் விழுந்து பரவுகிற போது பகவானை எழுப்பினால் நித்திரை பங்கமாகுமென்று கருதிநீயிருக்க உதிரமானது ஸ்ரீராமர்முதுகிற்பட்டு உடனே நித்திரை தெளிந்துபார்த்து இப்படிக்குச் செய்தவர்களாரெ ன்று நின்னை வினவியபோது உலகமாதாவும் யாவரையும் புத்திரரைப்போல பாவித்து ரட்சிக்கும் தயாளருணமுடைய தாயானதால் ஸ்ரீராமருக்குண்டாகிய கோபத்தையறிந்து வா க்கினாலிவன்தானென்று சொன்னால் சங்கரித்து விடுவாரென் றுன்னிக்கையினாற் சைகையாகக் காகாசுரனைக் காட்டினதாயே உடனே ஸ்ரீராமர் வில்லும் அம்பும் சமீபத்தி லில்லாமையா லருகிலிருக்கும் புல்லைக்கிள்ளி அதற்கு மந்திரத்தை உச்சரி த்து காகாசுரன்மீதுவிட்டார் அப்புல்லஸ்திரமானது ஸ்ரீரா மர்கையிலிருந்துவிடுபட்டு காகாசுரனை விடாதுதுரத்த அவ ன் தச திக்குகளிலும் சென்று அங்கங்குள்ள தேவதைகளைச் சரணம் புகுந்தும் ஒருவராகிலும் தன்னை யாதரியாக் குறை யால் அக்காகாசுரன் திரும்பிவந்து நின் திருவடியில் அபய மபயமென்று சரணாகதியடைய சுதந்தரமில்லாத நீ மனங் கரைந்து புத்திரவாச்சல்ய மதிகரித்து நின்திருவடியில் விழு ந்துகிடந்த காகாசுரனைத் திருப்பி ஸ்ரீராமர் திருவடிகளில் வீழ்த்தி யாட்கொண்ட என்னம்மணி உன்மேலிருக்கும் மோக த்தால் ஸ்ரீகிருஷ்ணபகவான் பூமியில் வீழ்ந்து புரண்டுக் கொண்டிருக்கிறார் சீக்கிரம் நீபோயவரைத் தேற்றி ஜெயதே விட மழைத்துக்கொண்டு வாவெனப் பாடும்போது பகவான் இனி யென்னென்னவிதமாகப் பாடுவானோவென்று பரமபத த்திலிருந் துருண்டுகொண்டே ஜெயதேவிடம் வந்த மாத்திர த்தில் ககனத்திலிருந்து தேவர்கள் புஷ்பமாரியைச் சலசல வென்று பொழிந்தார்கள்.

பகவான் பிராமண ரூபமாய்வந்து

சுயரூபத்தைக் காட்டினது.

விருத்தம்.

அன்பர்தம் மமுதேசோதி யருமறைப் பொருளேதேவ
ரின்புற வமுதளித்த யெழிலுரு வமைந்ததேனே

நின்புகழ் பகாநீச நெறியிலா வேழையாகு
மென்றர மாமோவெங்கு மேகமாம் நெடியமாலே.

தும்புருநாரதர் தம்புரு வீணையை மீட்டிப் பாடினார்கள். ரம்பாஸ்திரீகள் நடனமாடினார்கள் எங்கும் தேவர்கள் எங்கும் ரிஷிகள் எங்குஞ்சித்தர்கள் எங்கெங்கும் பக்தர்கள் பரவி நிற்பதையறிந்த ராதாவுமங்குவந்து காட்சிகொடுக்க உடனே இராஜன் தன் கையிலிருந்த சந்திராயுதத்தைக் கீழேபோட்டு விட்டு ஸ்ரீகிருஷ்ணபகவானையும், ராதாம்பாளையும், சகலதேவ ரிஷிகளும் வணங்கி நிற்க, அப்போது ஜெயதேவர் பகவானைக்கண்டு ஆனந்தங்கொண்டு பலபலவிதங்களாகத் தோத்திரஞ்செய்து சிரசாஷ்டாங்கமாக வந்தனஞ்செய்து நிற்கப் பகவான் ஜெயதேவைத் தழுவி, ஓ புண்ணியவானே! என்னை வருந்தி நினைத்த காரணமேதோ? என்னவரம் வேண்டுமோ கேளும் தருகிறேனெனத் திருவாய்மலர்ந்தருள ஜெயதேவர், ஓஸ்வாமி! புண்டரீகாக்ஷா! புருஷோத்தமா! புண்ணிய புருஷா! தீனதயாளா, தீனபந்து, ஓபகவான், ஓதெய்வமே, இப்பாவியேன் தேவரீரைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்தும் வேறே வரமுங் கேட்கவேண்டியிருக்கின்றதோ கொடியேனாகிய அடியேனை என்ன காரணத்தைக் குறித்தும்மை நினைக்கச் செய்தீரோ அதைமுடித் திவ்விறைவனையு மென்னையு மாட்கொள்ளும் சுவாமியென்று தாள்களில் வீழ்ந்தார். அப்போது ஸ்ரீகிருஷ்ணபகவான் ஜெயதேவை மார்புடனணைத்துக்கொண்டு, ஓ சீலனே, உன்னாலாகாத காரிய மென்னாலாமோ? நீ நினைத்தால் பத்மாவதி உயிர்பெற்றெழாளோ? நானென்னு மாங்காரத்தைக் காட்டக் கூடாதென்றல்லவோ என்னை இவ்வளவு வருந்தியழைத்தாய், ஓ ஜீவகாருண்ணியத்திற் சிறந்தவனே, ஆசாபாசங்களைத் துறந்தவனே, சாந்தரூபனே, பிர்மானந்த நித்திரையில்ரமித்தவனே, உன்மனையாளாகிய பத்மாவதியை யெழுப்பிவிடட்டுமா? அல்லதிந்த ராஜனுக்குச்சிரஞ்சீவிபட்டங் கொடுக்கட்டுமாவெனத் திருவாய் மலர்ந்தருளும் போது அரசன் பகவான் பாதத்தில் சிரசாஷ்டாங்கமாய் வந்தனஞ்செய்து, ஓ சுவாமி, என் தாயாகிய பத்மாவதியை எழுப்பித் தருவதே எல்லா பாக்கியமுந் தந்ததற்குச் சமானமாகுமெனப் பணியும்போது மாயா விலாசனாகிய பகவான் பத்மாவதியைநோக்கி, ஓ அம்மணி பத்மாவதி நான்வந்தும்

நித்திரை செய்யலாமோ? சீக்கிர மெழுந்து வரலாகாதோவெனத் திருவாய்மலர்ந்தபோது அப்பகவானுடைய திருவாயிலிருந்தொரு சோதிபுறப்பட்டுப் பத்மாவதியின் திவ்யதேகத்தில் தங்கின மாத்திரத்தில் பத்மாவதி நித்திரைவிட் டெழுந்தவள்போ லெழுந்து ஆ என் பிராண நாயகாவென்று தன் னுயகனைக்காண ஆவாக்கொண்டு கைகால்கள்வந்து பிரமானந்தமுக விலாசத்துடனிற்குங் கணவனைக்கண்டு ஆனந்தங்கொண்டு பலதரம் வலம்வந்து பணிந்து பாதங்களில் தன திருநயனங்களை பகவானையும் ராதாம்பாளையும் போற்றிப் புகழ்ந்து பொங்கிப் பூரித்து மகிழ்ந்து சகல தேவரிஷிகளையும் வணங்கி மிகவு மிணங்கி ஜெயதேவர் பின்பக்கமாய் நின்றாள்.

அப்போது பகவான் ஜெயதேவ் பத்மாவதி கிரவுஞ்சராஜனையும் பார்த்து நீங்கள் மூவரும் பிரமக் ஞானம்பெற்று பிரமானந்தத்தையுற்றுச் சுகசீவிகளாய் வாழ்ந்திருக்கக் கடவீர்களென் றாசீர்வதித்து ஜெயதேவைநோக்கி, ஓ மஹானுபாவனே, ஜெயதேவனே; நீகற்றகல்வியையும் பிரமக்கியானத்தையும் உன்மட்டில் மறைத்திருப்ப தழகல்லவே உலகோபகாரமாய் பக்திமார்க்கத்தையும், மூக்திமார்க்கத்தையும் சேர்த்துச் சில சாஸ்திரங்களை யேற்படுத்தி ஜீவர்களுக்குப் போதித்து என்பதவியை யடையக்கடவாயெனத் திருவாய்மலர்ந்தருளிச் சகலதேவரிஷிகளுடன் அந்தர்த்தானமானார் தேவர்கள் பூமாரிபொழிந்தார்கள். ரிஷிகள் ஜெயவிஜயீ பவாவென்று ஆசீர்வதித்தார்கள். பின்பு இராசன் பத்மாவதியை வலம்வந்து பணிந்து, அம்மா என்னையீன்றதாயே பகவான் தரிசனமியாருக்குக் கிடைக்கும், உமது கிருபையா லல்லவோ தரிசித்துக் கிருதார்த்தனானேன். தங்களுடைய கிருபையில்லாவிட்டால் முழுமூட னுக்கும் நாரதாதிகளின் சேவைகிடைக்குமா? ஓபரமேசுவரி, ஜகதீசுவரி யெனத்தொழுது, ஓ லோகமாதாவே உம்மை வஞ்சனைசெய்து சர்ப்பனையாற்கொன்ற கொடும்பாவியாகிய என் மனைவியை என்னசெய்யலாஞ் சொல்லுமம்மாவென்று வணங்க பத்மாவதி, ஐயா ராஜனே, உன் மனைவியினாலல்லவோ நமது ஸ்வாமிகளுக்குக் கால்கைகள் வந்தன. பகவான் தரிசனந்தந்தது என்றுரைத்து அரசன் தேவியை யருகிலழைத்து ஆலிங்கனஞ் செய்துக்கொண்டு பலபல உப

சார வார்த்தைகளுரைத்து அத்தியந்த பிரீதியுட னனுசரித்தாள், பின்பு இறைவன் ஜெயதேவ சுவாமிகளின் திருவடிகளிற்ரொழுது, ஓசுவாமி, இத்திருவடிகளை இத்தனை நாளாய் எங்கு மறைத்து வைத்திருந்தீரோ, அனுயாசமாய் வளர்ந்த காரணமேதோ, ஓ என்னுண்டவனே, நீரே வாமதேவன், நீரே வாசுதேவன், நீரே பிரமதேவன், நீரே ஆதிதேவன், நீரே தேவதேவன், நீரே மகானுபாவன் என்று சுவாமிகளின் திருவடிகளில் வீழ்ந்து கண்ணுடன் சேர்த்துப் பலதரம் முத்தமிட்டு ஸ்மாணைகெட்டு ஆனந்தவாரியிற் படிந்திருந்தான்.

ஜெயதேவ் இராஜனை வாரியெடுத்து மார்புடனணைத்துக்கொண்டு பல அன்பான வார்த்தைகள் விண்டு இராஜன்றேவியை விளித்துப்பல உபசார வார்த்தைகளுரைத்து இராஜனை முன்பிலும் அன்பாய் பார்க்கச்சொல்லி பல ஆசிகள் கூறி இதுகளையெல்லாம் ஓர் சொர்ப்பனம்போல் நினைத்து உத்க்ருஷ்டமான சிற்சொரூப சமாதியி லெழுந்தருளி யிருந்தார். பின்பு இறைவன் ஆசான் கட்டளைப்படியே அரசாங்கஞ்செய்துக்கொண டிருந்தான். இப்படி சில நாள்கழிய ஒரு நாள் ஜெயதேவ் பகவான் பக்தவிலாசத்தையும் பரப்பிரமக்ஞானத்தையுந் தொகுத்து நூதனமாகச் சாஸ்திரங்களைச்செய்யும்படியாய்க் கட்டளையிட்டதை நினைத்துப் பகவானுடைய லீலையும் பிரமக்ஞானமும் பூரணமாய் நிறைந்திருப்பது பாகவதமேயாம் அதை விஸ்தீரணமாகச் செய்வதே நலமாயிருக்கின்றது ஏனெனின் பகவான் பிரதாபமும் லீலையும் பக்தியும் பிரமக்ஞானமும் பிரமக்ஞானிகளுடைய சரிதையும் பகவானுடைய அவதாரங்களும் வருமென்று தேவபாஷையில் வெகு சித்திரமாகப் பாடிக்கொண்டிருந்தார். கேட்டீர்களோ சித்தர்களேயென்று பின்னும் நாபாஜிசித்தர் சொல்லத் தொடங்கினர்.

பத்மாவதி உயிர்பெற்ற அத்தியாயம்

முற்றிற்று.

பத்தாவது அத்தியாயம்

ஜெயதேவர் பாடிய பாகவதத்தைப் பகவான்

பிராமண ரூபமாய்வந்து வாசித்துச் சுயரூபத்தைக் காட்டினது.

ஜெயதேவர் பாகவதத்தைப் பாடி முடித்து ஒருநாள் அரசன்முதல் சகல சாதுப் பிராமணர்களும் சூழ்ந்திருக்குஞ் சபைக்குக் கொண்டுபோனார் சுவாமிகள் வரவை யறிந்த இறைவன் உடனே சிம்மாசனம்விட்டு பாதங்களில்விழுந்து ஓ சுவாமி தேவரீர் திருவடிகள்நோக அடியேன் சபைக் கெழுந்தருளும்படியான காரணமேதோ? தாங்கள் கொலுமண்டபத்துக்குவர நான் செய்த பாக்கியமேதோ? அடியேனை யழைப்பித்தால் வரமாட்டேனோவென்று பலபல வார்த்தைகள் பட்சத்துட னுரைக்கும்போது ஜெயதேவர், ஐயா அரசனே, நமதிஷ்டதெய்வமாகிய ஸ்ரீபகவான் திருவாய்மலர்ந்தபடி நூதனமாயோர் கிரந்த மேற்படுத்தினேன். அதை பலருங் கேட்கும்படியான இடமிதுவே யாமென்று வந்தேன் இக்கிரந்தத்தை ஓதும்படியான மறையோனிச் சபையிலியாராவ திருக்கின்றாரென் றறையுந் தருவாயில் பகவான் ஓர் பிராமண ரூபந்தரித்து இராஜன் சபையையடைந்து ஓ இராஜேசுவரா, நீ சுகஜீவியாய் வாழ்ந்திருக்கக்கடவாயென் றுசீர்வதித்த அந்தணரை இறைவன் வணங்கி, ஓ சுவாமி, தேவரீரெத்தேசத்திலிருந்து எழுந்தருளினீர் அடியேனிடம் வந்த காரணமென்ன தேவரீருக்குத் தேவையானதென்ன? சீக்கிரந் திருவாய் மலர்ந்தருளுமென் றஞ்சலியஸ்தனாய் நிற்கப் பகவான், ஓ அரசனே, நானிருப்பது கோகுல பிருந்தாவனம் பிறந்தமுதல் இந்நாள் பரியந்தம் கிரந்தபாஷையை வாசித்துச் சகல சாஸ்திரார்த்தங்களுமறிந்து வியாகரண முதலானவைகளிற்றேர்ந்து பண்டிதர்களிற் பசமேஷ்டியெனப் பேர்பெற்று நமக்கு நிகரான வித்வாமிசர்களிவ் வுலகிலியாராவதிருக்கிறார்களா இல்லையாவென பலதேசங்களி லுழன்று ஜெகநாதத்தை யடைந்து உமது பட்டணத்தில் ஜெயதேவென்கிற மகாபண்டித ரிருக்கிறாரெனக் கேள்விப்பட்டவரைக்காண இங்குவந்தேனென் றுரைக்கும்போது ஜெயதேவர் அதிசீக்கிரமா யெழுந்து அப்பிராமணருடைய திருவடிகளிற் பணிந்து, ஓ சுவாமி, அடியேன் பண்டிதனல்ல உமது பாதசே

வைக்குகந்தப் பணியாளனென்று பரிவாகவுரைக்க மாயப் பிராமணன் நீதானே ஜெயதேவ்? நீதானே விஷயபோகத்தைத் தரும்மனைவிக்குயிர்வர அஷ்டபதிகங்கள் பாடினவன் நீதானே? பந்தபாசங்களைக் கொய்தவன் நீதானே? மனைவி மரிக்க மேல் விழுந்து புலம்பினவன் கண்ணீரால வள் தேகத்தை யலம்பினவன் முக்கால் மூடனை முழுமூடன் கொண்டாடினதைப் போலக் கல்வி யறிவில்லா இவ்விறைவன் முதலானவர்களுனக்குச் சுவாமிகளென்றும், பிர்மக் ஞானியென்றும் பிரசண்ட வித்துவா னென்றும் பேர்கொடுத்த மாத்திரத்தில் பண்டிதனாய் விட்டாயோ இதோ உன் வித்வத் திறத்தையும் வாக்கின் தரத்தையும் ஓர் க்ஷணத்திலறிகிறேன் பாரென்று முடுக்கான வார்த்தைக ளாடும்போது ஜெயதேவ், ஓ சுவாமி! அடியேன் ஹரிஓம் என்கிற வாக்கியத்தினர்த்தமே தெரியாதவன், வியாகரணமாதிகள் சற்றுமறியாதவன், யானைக்கிணையான உம்முடன் பூனைக்கிணையான வடியேன் பேசவல்லனோ ஒன்றுமறியா இம்மூடனைத் தாங்களொரு பொருளாய் நினைக்காமலுங் கிருபைகூர்ந் தாட்கொள்ளுமையாவென் றவர்தாள்களில் வீழ்ந்தார். பகவான் மிகவுங் குரோதங்கொண்டு, அடா ஜெயதேவ்! கார்த்திகேயன் பிர்மாவை யெதிர்த்து அகார உகாரமென்னும் திரியாட்சரங்க ளடங்கிய பிரணவாக்ஷரத்தின் அர்த்தத்தைக் கேட்டு அதர்க் கர்த்தஞ் செய்வதற்குக் கூடாமற் றிகைக்கும் அவ்வேதாவைச் சிறைச்சாலையிலடைத்துத் தந்தைக் கவ்வோங்காரத்தினிரகசியத்தை யுபதேசித்து தகப்பன் சாமியென்று பேர் பெற்றதுபோல என்னை ஹரிஓம் என்கிற மூலமந்திரத்தி னர்த்தத்தி னிரகசியத்தைச் சங்கோசமாகக்கேட்டு என்னைவென்று இவ்வுலகத்துக் கரசனாக யுக்திசெய்தாயோ? ஹரிஓம் என்கிற வாக்கியத்தி னர்த்தந் தெரிந்தால் வேதாகம சாஸ்திரங்களை ஓதவேண்டுமோ ஹரிஓம் என்கிற வாக்கியத்தி னர்த்தந்தெரிந்தவனை ஒருவரால் வெல்லக்கூடுமோ, எதிர்த் துத்தரஞ் சொல்லக்கூடுமோ அப்பப்பா ஆரம்பத்திலேயே சூட்டாமற் சூட்டினாய், உன் பராக்கிரமத்தைக் காட்டாமற் காட்டினாய், என்னை வாட்டாமல் வாட்டினாய், இப்படியே அநேக வித்துவாமிசர்களை இப்பட்டினத்திற் றங்காமலோட்டினாய், நானே பண்டிதனென்று நிலைநாட்டினாய், என்னையும் மூடர்களிலொருவனாகக் கூட்டி

ஞய் ஹரிஓம் என்கிற வாக்கியத்தால் மாட்டினுய், எனக்குக் கோபாக்கினியை மூட்டினுய் உன் பெருமையைப் பாராட்டினுய், எதோ என்னைச் செயிக்கிறேனெனக் கைதட்டித்தா, இல்லாவிடி லுன் தலையைவெட்டித் தாவென்று மீசையை முறுக்கிக் கோபத்தைப் பெருக்கித் தோள்களைக்குலுக்கி ஜெயதேவ் மார்புடன் மார்பைச்சேர்த்துக் கரத்தைப்பிடித்திர்த்து ஆர்ப்பரித்து அட்டகாசஞ் செய்தார்.

ஜெயதேவ் இதென்ன வல்லடி வழக்கா யிருக்கின்றது நாம் ஹரிஓம் என்பதே அறியேனென் றுரைத்தால் விபரீதமியாபகங் கொண்டார், பலவார்த்தைகள் விண்டார், மௌனங்கலகநாஸ்தி யென்பதைப்போ லினி நாம் மௌனமாயிருப்பதே நல்ல ஸ்திதியென்று எட்ட நின்று கைகளைக் கூப்பிக் கொண்டு பேசாமலிருந்தார், பகவான் ஓ ஜெயதேவ் கூசாமற் பாசாங்கு செய்கின்ருயோ துன்மார்க்கனைக் கண்டால் தூரமாய் நிற்கவேண்டுமென்கிற பாவனையின்படியே என்னை எல்லோருந் துன்மார்க்கனென் றறிந்துகொள்ள வல்லவோ நீ தூரமாய்ப்போய் நிற்கின்ருய் இந்த சூதுகளாற்ருே என்னை வெல்கின்ருய் நீ தூரமாய்ப்போனுலும் என்னை வெல்பவனுனுலும் உன்னைப் பரீட்சை செய்யாமலும் வாயில் வந்தபடி வையாமலும் நான் போகவேமாட்டேன் என்றவாருகிற்சென்று முழங்கால் மேலுட்கார்ந்து ஹரிஓம் என்கிற வாக்கியத்தினர்த்தத்தை நானறியாதவனென்ருே எண்ணினை தர்க்கம் பண்ணினை ஹரிஓம் என்னும் வாக்கியத்தின் மர்மத்தை நீ பிரமைகொள்ளும்படி யுரைக்கிறேன் பார் என்று சபையை நோக்கி நீங்களனைவோருங் கேளுங்கள் அதாவது பக்தர்கள் பாபங்களை அரிக்கப்பட்ட பகவானுக்கே ஹரியென்று சொல்லப்படும். அப்பகவானே பிரணவ ஸ்வரூபி என்றுச் சொல்லப்படும். பிரணவமென்பது அகார உகார மகாரமென்னுந் திரியாக்ஷரங்கள் கூடிய ஓங்காரமென் றுரைக்கத்தகும். இதினர்த்தம் பூரண பிரமக்ஞானிகளுக்கன்றி மற்றவர்களுக்குத் தெரியாது. பிரமமே ஓங்காரமென்று வேதங்கள் முறையிடுகின்றன. பிரணவத்தி னிரகசியந் தெரியாதவர்கள் சகலவேதாகம சாஸ்திரார்த்தங்க ளறிந்தவர்களானுலும் ஒன்றும் அறியாதவர்களேயாம், பிரணவத்தின் மர்மமறியாதவர்கள் பிரமைக் குள்ளானவர்களேயாம். பூரண பிரமக்ஞானியாகிச்

சாக்ஷாத்கார தசையடைந்த சத்குரு கிருபையாலன்றிப் பிரணவவர்த்தந் தெரிதல் வெகுதுர்லபம், வேதாகம சாஸ்திரங்களெல்லாம் ஓங்காரத்தி னுதாரத்தினுலேயே பிரகாசிக்கின்றது. வேதத்தினுடைய சாரம் பிரணவமென்றே யுறைக்கத்தகும், சர்வசிருஷ்டிக்கு மாதாரமாயும் ஆதேயமாயு மிருக்கின்றது, மூலாக்ஷரமென்றே சொல்லப்படும் பிரணவத்தின் மர்மமறிந்தவனே சுக்ஞானியாகும், அறியாதவனே அக்ஞானியாகும் சகல மந்திரங்களுக்கு முயிராகிநின்ற மூலாக்ஷரத்தின் மர்மமறியாமற் செய்யுந் தபம் செபம் யோகம் தியானம் வேதாத்தியயனம் வேதாந்த சிரவணம் மனனம் நிதித்தியாசனம் சமாதி சாக்ஷாத்காரமும் வீண்முயற்சியாய் முடியும் ஓங்கார சமுத்திரமாகும், வேதாகமங்கள் நுரைகளாகும், பலபலவித்தைகள் பதார்த்தங்களும் ஓங்காரம் லவணமுமாயிருக்கின்றது. ஓங்காரத்தி னிரகசியந் தெரிந்தவர்களே பூதபவுஷ்ய வர்த்தமானமென்னும் திரிகாலங்களை யறிந்த பிரமக்ஞானிக ளென்றுரைக்கலாம். பிரணவார்த்த சோதனையினுலே அஞ்ஞானம் சந்தேகம் விபரீதம் சாஸ்திரவாதனை லோகவாதனை தேகவாதனை முதலானவைகளும் நிவாரணமாய் திடப்பிரக்ஞை யுண்டாகவேண்டும் அஷ்டாக்ஷரத்துக்கும் பஞ்சாக்ஷரத்துக்கும் ஸ்திரமான வலிமை யுண்டாக்குவது பிரணவமேயாம் விருக்ஷங்களுக்குச் சலமும், ஸ்திரீகளுக்கு கற்பும், புருஷர்களுக்கு விவேகமும், மேடைகளுக் கஸ்திவாரமும் எப்படி ஆதாரமா யிருக்கின்றதோ அப்படியே சமஸ்த மந்திரங்களுக்கும் ஆதாரமாயிருப்பது பிரணவமேயாம், தானும் பிரமம் ஜகத்தும் பிரமமென்னும் திடமெவனுக்கு வந்ததோ அவனே பிரணவத்தி னுறுதியார்த்தமறிந்தவனும். புத்தி வந்தனென்றும், யுக்திசாலியென்றும், விற்பன்னனென்றும் முமூட்சுவென்றும் சிரேஷ்டனென்றும் பண்டிதனென்றும் பக்தனென்றும் முக்தனென்றும் சித்தனென்றும் சுத்தனென்றும் பிரணவார்த்த மறிந்தவனையே சொல்லவேண்டும். பிரணவபாவ மறிந்தவ னொருவனே பிரமத்திலே ஏகிகபாவமாயிருப்பான் மற்றவர்கள் மாயையிற் சிக்கினவர்களாம், பிராணவானுபவ மறிந்தவனே பிராந்திரகிதனென்றும் பிராமணனென்றும் அறியாதவனே பிராந்திசகிதனென்றும் ஸ்பவசனென்றும் சொல்லப்படும் பாலுக்

குள் வெண்ணெய்போலவும் எள்ளுக்கு ளெண்ணெய்போல வும் பரிபூரணமாயிருக்கும் பரப்பிரமத்துக்கு லௌகிகபாவமா யிராது வெதிருக்தமாயிருப்பதே பிரமஹத்தியென்றும் பெரி யோர்களுரைப்பார்கள் மாதா பிதாக்களுக் கைக்யமாயிராமல் மாறுபட்ட தநயன் பராதியானதுபோலப் பரப்பிரமத்துக்கு ஊக்யமாய் நானென்பதரூத அகங்காரக் கிரந்தியுள்ள வபரா திக்கு விபரீத குணங்களுண்டாகிப் பிரமத்துக்குத் தவிரா விரோதியாய் மூவர் தேவர் முனிவர்களுக்கும் விரோதியாய் குரோதமோ ருருவாயிருக்கும் ஜீவனே தானுகிஜரா மரணத் தாங்கக் கணங்களிருக்கும் பவசாகரத்துளோர் திரணமாய் வீழ்ந்து கரையேறுவதற்கோர் துறைகாணுமல் கற்பாந்தகா லங்கள் பல கடந்தாலும் தனக்கு சலனமுந் துன்பமும் நீங் காமல் மேற்படி தரங்கங்க ளெத்தெத்திசையிற் ருவுகின்றனவோ அந்தத் திசைகளி லுழன்றலைந்து நிலைகலைந்து இன் பங்குலைந்து யாதொன்றுந் தோன்ருமல் அலைந்து அந்தகா ரத்தி லமிழ்ந்திருப்பான் அன்றி மாயையென்னும் கன்னி கை விளையாடுவதற்கோர் பந்தாய்நைந்து மிகவுநொந்து சிந் தாகிராந்தனுற் பந்தத்தாற்பிணிக்கப்பட்டு க்ஞானவ்ஸ்மரணைகெ ட்டு மோக்ஷமார்க்கம்விட்டு தொன்றுதொட்டு பிர்மப் பிரளய பரியந்தம் சுழல்காற்றிலகப்பட்ட இலவம் பஞ்சுபோலவும், சூழ்ந்தெரியும் வன்னியின் மத்தியிலுற்ற பன்னகம்போல வும், இருபுறமு மெரியும் குழாயினுள்ளிருக்கும் எறும்புபோ லவும் உழன் றுழன்று அலக்கணுற்று இடரடைந்து இறு தியில் நிரையத்துக் காளாவான், ஓ சபையோர்களே! மூன் றரை மாத்திரையான வோங்காரத்தி னம்சமான அகாரம் சாக்ராவஸ்தை யென்றும் பிர்மதேவனென்றும் சொல்லப்ப டும். உபகாரம் சொப்னுவஸ்தை யென்றும் விஷ்ணுவென் றும் ஸ்திதியென்றும் பிந்துவென்றும் எஜுர்வேதமென் றும் சொர்க்கலோகமென்றும் புத்தியென்றும் சொல்லப்படும். மகாரம் சுழுப்தி யவஸ்தை யென்றும் ருத்திர னென்றும் சம்ஹார மென்றும் களையென்றும் சாமவேத மென்றும் பாதாளலோகமென்றும் அகங்காரமென்றும் சொல்லப்படும். அர்த்த மாத்திரையோ துரியாவஸ்தையென்றும் ஆதிசத்தி யென்றும் க்ஞானமென்றும், சாக்ஷி அதர்வண வேதமென் றும் மோக்ஷ லோகமென்றும் சித்தமென்றும் சொல்லப்படும்.

அன்றி, ஓங்காரத்தைப் பிண்டம அண்டம் பிர்மாண்டமென்றும், இச்சாசக்தி கிரியாசக்தி ஞானசக்தியென்றும், சத்வ ரஜதமோ குணங்களென்றும், இடாபிங்கலர் சூழும் நாடியென்றும், கங்கா யமுனா சரஸ்வதி யென்றும், மனம் வாக்கு காயமென்றும், வாணீ லக்ஷ்மீ பவானியென்றும், ஆதிமத்யாந்த மென்றும், மாதா பிதா குருவென்றும் ஆகாய சஞ்சித பிராப்தமென்றும், ஆதியாத்மீக மாதிபௌதிக ஆதி தெய்வீக மென்றும், சந்திர சூரியாக்கினி யென்றும் சொல்லப்படும். அல்லாமல் மனசு என்பதிலே ம-என்னுந் தமோகுணமும், ந-என்னும் ரஜோகுணமும், சு-என்னும் சாத்வீககுணமும் அடங்கியிருக்கின்றது. அதனால் 96-தத்துவங்களாகிய ஒவ்வொன்றில் கிரியாக்ஷராதிபதிகளாகிய திரிமூர்த்திகளுமிருந்து தங்கள்தொழிலை யியற்றுவார்கள் திரிமூர்த்திகளுக்காதாரமான கிரியாக்ஷரங்க ளில்லாதவஸ்து எவ்வுலகத்திலும் எக்காலத்திலும் இல்லையென்றே சொல்லத்தகும்.

அல்லாமல் அகாரம் ஸ்தூலதேக மென்றும், உகாரம் சூட்சுமதேகமென்றும், மகாரம் காரணதேகமென்றும், சொல்லத்தகும். மூன்று தேகங்களுக்குஞ் சாக்ஷியான மகாகாரணமே பிரத்யேகாத்மா வென்றும், ஆனந்தமென்றும், அனுதிகாரணமென்றும், அசியென்னும் ஐக்யபாவத்தை யளிப்பதென்றும், நித்ய சத்ய வஸ்துவென்றும், நிர்வாண பதமென்றும், சஞ்சுத்த யோகீசுவரர்களுரைப்பார்கள். துரிய ராணியோடுங் கூடிச் சுகித்திருக்கும் ஆத்மராமனைத் துரியாதீதனென்றும், பரமாத்மா வென்றும் பராத்பர மென்றும், பரிபூரணனென்றும், பரமேசுவர னென்றும் சொல்லுவார்கள், பகவானென்றும் சொல்வார்கள்.

ஆனாற் றுரியராணியோ ஆனந்த மென்றும், ஆனந்தத்தை யனுபவிப்பனே ஆத்ம ராமனென்று முறைக்கத்தகும், அர்த்த மாத்திரையான மாயையுடன் மற்ற அர்த்தமாத்திரையாய் அவாங் மனோகோசரமாயிருக்கும் பிர்மம்கூடி பலப்படாமலே வோங்காரத்துக் கிடங்கொடுத்திருக்கின்றது நிர்சப்தமான பிரமத்திலிருந்து வோங்காரமுண்டாயிற்று. அதிற் சப்தமும் பதமும் வாக்கும் வார்த்தையும் சுலோகமும் வேதாகமும் உண்டாயிற்று. வேதாகமங்கள் வாச்சியார்த்தமென்

றும், வோங்காரம் லட்சியார்த்தமென்றும், பெரியோர்களுரைப்பார்கள். வாச்சா ஞானிக்கு லக்ஷியார்த்தந் தெரியாதது போல ஜாக்ர ஸ்வப்ன சுழுப்தியி னனுபவமுரைக்கவே சென்று துரியானுபவ முணர்த லதிதுர்லபமென்றுஞ் சொல்ல வேண்டும், அகாரத்தில் நரரும் உகாரத்திற் சுரரும், மகாரத்தில் ராட்சதரும், அர்த்தமாத்திரையில் ஞானிகளும் உற்பத்தியானர்களென்று வேதத்தில் முறையிடுகின்றது, திரிமூர்த்திக ளாகுதலரிதல்ல. பிரமக்ஞானியாதலே அரிதென்றுரைக்கத்தகும், அன்றி, வோங்காரம் சகுண பிர்மமாகவும் நிர்குணப் பிர்மமாகவு மிருக்கின்றது. எப்படியெனில் ஓம் நமோ நாராயணய ஓம் நமசிவாயவென்னும் சகுணபிர்மமான பிரதான மந்த்ரங்களுக் காதியிலிருக்கின்றது வோங்காரமேயாம், வோங்காரத்தை யுச்சரிப்பவன் திரிமூர்த்திகளையும் ஆதிசத்தியையும் பரப்பிரம்மத்தையும் நினைத்ததாகும், நிர்க்குண மர்மமான அம்ஸோஹம் என்னும் அஜபாயமந்திரமே அர்ச்சுனா நீ ஜெயிக்கத்தகுந்ததென்று பகவானும் சிவோஹம் என்னும் அத்வைத மந்திரமே ஸ்ரீராமா நீஜெபிக்கத்தகுந்ததென்று வசிஷ்டபகவானும் போதித்த மகா வாக்கியங்களில் வோங்காரமே ஆதாரமாயிருக்கப் பிரணவத்தின் மகிமையை ஒருவராற் சொல்லக்கூடியதோ? ஓ ஜெயதேவ்! ஓமென்னும் பிரணவத்தினர்த்த மின்னஞ் சொல்லப்புகின் ஓ அதுவென்னும் பிர்மமே அம்நானென்றும் நிர்குணப் பிர்மைக்யத்தைக் காட்டும் அத்வைதபாவமாயிருக்கின்றது எல்லாவற்றிற்கும் வோங்காரமே பிரதானமென் றறிந்துக்கொள் சரீரத்துக்குப் பிரதான மஸ்தகமே பிரமாணமாயிருக்கின்றது எப்படியெனில், ஆதியில் பிரமாவான பரப்பிர்மத்திலிருந்து முதல் முதல் ஓங்கார முண்டானபடியால் நாமும் ஓங்காரத்தையே ஆரம்பத்திலுண்டாக்க வேணுமென்று ஓங்கார ஸ்வரூபமாய் மஸ்தகத்தை யுண்டாக்கிக் களிப்புற்றுப் பின்பவ் வவயவங்களைச் சிருஷ்டித்தான். ஓ ஜெயதேவ்! ஓங்காரத்தின் மர்மம் இன்னும் விரித்துரைக்க வேணுமோ? நானுரைத்தற் கதிகமான யுக்தியுடனுரைக்குஞ் சக்தியுனக்கிருந்தாற் சொல்லு? என்னை வெல்லு யென்று மல்லுசெய்யும் பூசுரனை ஜெயதேவ் வணங்கி இணங்கி, ஓ ஸ்வாமி! சூரியனுக்குமுன் கச்சோதம்போலவும், சந்திரனுக்குமுன் சாலியைப்போலவும், அருந்ததிக்கு முன்

அகலிகையைப்போலவும், சமுத்திரத்துக்குமுன் புற்புதம்போல வும், மேகத்துக்குமுன் திவலையைப்போலவும், கற்புள்ளவளு க்குமுன் கணிகையைப்போலவும் இருக்குமென்னைத் தேவரீ ரொரு பொருளாக நினைத்துக் களைத்துத் தர்க்கஞ்செய்ய யோ சிக்கலாமோ? இதோ அடியேன்கற்ற கல்வியென்று தான் செய்த பாகவதத்தை அவர் கரத்திற்கொடுத்து இதை அங்கீ கரியும் ஸ்வாமியெனத் தொழுது அடக்க ஒடுக்கத்துடன் நிற் கும்போது, அதை மாயாமறையோன் வாசித்துப்பார்த்து ஜெ யதேவ் கரத்தைப் பிடித்தீர்த்து இது முன்னோர் செய்ததா யிருக்க நான்செய்தேனென் றெப்படி யுரைக்கின்று யிவ்விதச் சூதுகளாற்றுனே சாதுவென்று பேரெடுத்தாயென்று கலகல கலவென்று நகைக்கும்போது இராஜன், ஓ ஸ்வாமி இது புராதனராற் செய்யப்பட்டதல்ல, எனது சத்குருஸ்வாமிகளே செய்ததென் றுறுதிகூறப் பகவான் அடா ஜெயதேவ் நீ இது நூதனமாகச்செய்த நூலா நல்லது நீ இதைப் பார்த் துக்கொண்டேவா முதியோர் செய்ததை நான் சொல்லிக் கொண்டே வருகிறேனென்று அவர்கரத்தி லப்பாகவதத்தை யளித்து தன் திருவாக்கினுற் சொல்லத் தொடங்கினர்.

அவர் வாக்கிலிருந்து புறப்படும் சுலோகங்களே தான் செய்த பாகவதத்தில் வரிசையா யிருக்கப் பார்த்துக் கரங்களைச் சேர்த்துப் பிரமித்துக் கம்பித்து ஜெயதேவ் ஒன்றுந் தோன் றுதவரா யசைவற்று நின்றிருந்தார் அப்போது ஜெயதேவ ஸ்வாமிகளின் திருவாக்கினுற் செய்த நவரசாலங்கார அதி மதுரமான திவ்ய சுலோகங்களைச் சொல்லிக்கொண்டே வந்த பகவானுனவர் அவ்வாக்கியங்களிற் றன்னைப்புகழ்ந்து துதித் திருக்கும் அர்த்தசாரத்தில் தன்மனதைச்செலுத்தி ஆனந்த பரவசத்தாற் றன்னைமறந்து சற்றுநேர மசைவற்று நின் ருர். உடனே மாயாரூபம் நீங்கிச் சுயரூபஞ் சகலருக்குங் காணப்பட்ட தன்றிப் பிர்ம ருத்திராதி தேவர்களுக்குஞ் சந் தோஷ முண்டாகியது இதனுல் எள்ளுமடையா வின்பம டைந்த தேவர்கள் ஆகாயத்தி லிருந்தபடி கலகலவெனப் பூமாரியும் பொன்மாரியும் பொழிந்து களிப்புற்ருர்கள் தேவ துந்துமி தாம்தாமென முழங்கிற்று தும்புருநாரதர் தம்புரு வீணையை மீட்டிக்கொண்டே இராஜசபையில் வந்து நின்ரு

ர்கள். ரிஷிசித்தர்களு மங்கடைந்து கானராகங்களைப் பாடும் போது பகவான் தன்னைமறந்து தான் முன்போலவே பிராமணனாயிருக்கிறதாகவே மதித்து ஜெயதேவ் பாடிய பாகவத சுலோகங்களைத் துதிக்கத் துதிக்க இன்பமேலிட்டுத் தம்புரு வீணையி னொலிக்குஞ் சரியாய்ப்பாடி ஆவேச மேறினவர் போ லானந்த நிர்த்தனஞ் செய்யத் தொடங்கினார் தாத்திரியசைத்தாற் சகலமு மசைவதுபோலப் பகவானுடன் சகலரும் ஆனந்தத்தாண்டவஞ் செய்யத் தொடங்கினார்கள்.

இப்படி நான்கு ஜாம பரியந்தம் ஜெயதேவ் முதலானவர்களுந் தன்னை மறந்து இன்பநடனம் புரியும்போது பரமசிவனார் பார்வதி சமேதனாய் ரிஷபவாகனரூடனாய் அச்சபைக்கெழுந்தருளி பகவானிருகரங்களையும் பிடித்துக்கொண்டு ஓ ஜனார்த்தனா! காளிங்க நிர்த்தனா! ராக்ஷஸமர்த்தனா! என்னுடைய மைத்துனா! உம்முடைய மாயையை நீரேயறியாமல் தன்னை மறந்து இன்பம் நிறைந்து தன்னைத்தானே தோத்திரஞ் செய்துக்கொண்டு இப்படி ஆனந்தத் தாண்டவம் புரியலாமோ? உம்முடைய கபடத்தை ஒருவராலறியப் போமோவென்கிற பற்பல பக்ஷவார்த்தைகளாடித் துதிக்கும் போது பக்தவச்சலனாகிய பகவான் கண்களைத்திறந்து தன் சுயரூபந் தனக்கு வந்ததற்காக வாச்சரியப்பட்டுச் சுலோகங்களைச் சொல்வதைவிட்டு ஜெயதேவைப்பார்த்து மார்புடன் சேர்த்து ஓ மாதவனே! பந்தபாசங்க ளில்லாதவனே! உம்முடைய திருவாக்கினாற் செய்தபாகவதத்தை முதல் நானே வாசித்தரங்கேற்ற வெண்ணங்கொண்டு ஓர் பூசுரனாய் வந்தேன். வாசித் தென்னை மறந்தேன், அரிதான சேவைதந்தேன், மிகவுமுவந்தேன் ஆதலாற் பழயபாகவதம் முழுதும் வாசிக்கும் பலனும் நீர் செய்த பாகவதத்திலுள்ள ஓரத்தியாயம் ஓதும் பலனுஞ் சரியாயிருக்கக் கடவதென் றந்தர்த்தானமாய் மறைந்தருளினர். உடனே பரமசிவனார் முதலானவர்களும் பல ஆசிகள் கூறி ஜெயவிஜயீபவாவென்று அந்தரத்தில் மறைந்தார்கள். கேட்டீர்களோ சித்தர்களேயென்று பின்னுஞ்சொல்லத் தொடங்கினார்.

பகவான் பிராமண ரூபமாய்வந்து தரிசனந்தந்த
அத்தியாயம் முற்றிற்று.

பதினொராவது அத்தியாயம்

ஜெயதேவ் செய்த முப்பது அஷ்டகங்களைக் கெங்கையில் விடுத்துப் பரீக்ஷித்தது.

நாபாஜிசித்தர் சித்தர்களை நோக்கிச் சொல்லுவார், ஓ சீலர்களே! சத்சங்கத்துக் கனுகூலர்களே! இப்படி பகவான் மாராவன்பினையளித்து அந்தர்த்தானமாய் மறைந்துபோன பின் ஜெயதேவஸ்வாமி களிக்கடலி லமிழ்ந்தவராய் பகவான் லீலையை அஷ்டகத்தில் அலங்கரித்துப் பாடும்போது ராதாவின் திருவடி பகவான் திருமுடியி லணிந்துக்கொண்டாரென்கிற சொல் தனக்குத்தானே வருவதைக்குறித் தாயாசமடைந்தவராய் வேறு அஷ்டகஞ் செய்ய அதிலுமப்படியே வர இப்படியிருபத்தைந்து அஷ்டகங்கள் செய்ய அதிலுமப்படியே வர, இப்படி அதை வெளிப்படுத்துவதற் கச்சமுற்றவராய் மறைத்துவைத்து இப்படி எந்த நூல்களிலாவது பாடியிருக்கின்றதா? ஆராயவேண்டுமென்றும் பெரியோர்களைக் கேட்டறிய வேண்டுமென்றும் அபிப்பிராயங்கொண்டு யாத்திரைசெய்யப் புறப்பட்டார். அதையறிந்த பத்மாவதியும் இராஜனும் கூடவே தொடர்ந்துபோகையில், மந்திரி பிரதானிகள் ஜெயதேவ் ஸ்வாமிகளை மறித்து, ஓ ஸ்வாமி! ரதகஜதுரக நரவாகனங்கள் வேண்டியதிருக்கக் கால்நடையாய்ப் பிரயாணப்பட்டுப் போகலாமோவென் றுரைக்க ஜெயதேவ் பிரதானிகளை நோக்கிப் புண்ணிய ஸ்தலத்துக்கும் தீர்த்தங்களுக்கும் பெரியோர்கள் தரிசனத்துக்கும் கால்நடையாய்ப் போனாலன்றிப் பலனடையக்கூடாது என்னெனில் ஓர் வாக்கியத்தால் சொர்க்காதி போகங்களையெல்லாங் கொடுக்கும் உத்தமர்கள் பாதசாரியாய்ப் பலவிடங்களிற் றிரிந்துக்கொண்டிருக்க நானவர்களிலும் மேன்மையானவனோ? அற்பமான அரசனிடமே மாந்தர்கள் அடக்க ஒடுக்கத்துடன் கால்கள் கடுக்க நடந்து போவாராயின் மகாத்துமாக்களின் தரிசனத்துக்குப்போகும் நான் ரதசாரதியாய்ப் போகலாமோவென் றுரைத்துச் சகல போகங்களையும் வெறுத்து ஏகாந்தியாய்ப் போகும்போது இராசன் மந்திரிகளை நோக்கி நீங்கள் நமது பட்டினத்தைப் பாதுகாத்துக் கொண்டிருங்கள் நான் ஸ்வாமிகளுடன் போய் வருகிறேனென் றுரைக்கப் பிரதானிகள் பஞ்சுபோன்ற பாதங்கள்நோக எப்படி நடந்துபோவீர்களென்று வாட்டமடைய மன்னன் கஷ்டப்படாமல் சுகமும் நஷ்

டமில்லாமல்லாபமும் நிஷ்டைசாதிக்காம லின்பமும் கிடைக்கவேமாட்டாது. யாத்திரை பலன் வேண்டின ஸ்வாமிகளின் திருவாக்கின்படியே பாதசாரியாய் நடந்தேபோகவேண்டும் ஏனெனின் ஓர்காலத்தில் தர்மர் துரோபதையுடன் சந்தோஷமாய் வார்த்தையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்த அருச்சுனன் அபராதியானேனென் றவ்வபசாரம் நீங்கயாத்திரைசெய்தது பாதசாரியாயல்லவோ? பலராமருக்குக் கிருஷ்ணபரமாத்மாசெய்த சூதால் கோஹத்தி பாதகமேலிட்டு அது நீங்கப் பாதசாரியாய் யாத்திரை செய்தது பொய்யா மெய்யா? எனதிஷ்ட தெய்வமாகிய ஸ்ரீகைலாசவாசகர் தனக்குற்ற பிர்மத்திநீங்க இப்பூவுலகிற் சஞ்சரித்தது கால்நடையா யல்லவோ? ஸ்ரீ மகாவிஷ்ணு ஸ்ரீராமாவதாரத்தில் காட்டிற்சென்றது கால்நடையாயல்லவோ ஓமதி மந்திரிகளே! மகாதேவன் வாசுதேவன் நளன் அரிச்சந்திரன்முதலானவர்கள் கால்கள் கடுக்கக் கற்கள் முட்கள்மேல் நடந்திருக்க நான் நடக்கக்கூடாதோ? ஐசுவரியம் நீர்மேலெழுத்தல்லவோ? விரித்துச்சொல்லவோவென்று மறுத்து இராஜரீகத்தை வெறுத்துப்போகையில் அவர் மனையாளுநங் கூடவே தொடர்ந்து பலதேசங்களிற் றிரிந்தும் ஜெயதேவை விடாமற் றெடர்ந்து வரும்போது ஜெயதேவ் தன்னுடன்வரும் மூவருடைய கஷ்டத்துக் கிரக்கமுற்றவராய் வாரணாசியை யடைந்து காசி விஸ்வநாதரைத் தரிசித்து அங்கிருக்கும் பெரியோர்களின் பாதங்களைப்பரிசித்து ஓர்மடத்திற் பிரவேசித்து தனக்குற்ற சந்தேகநிவர்த்தி யாகாததைக்குறித்து வாட்டத்துடன் நித்திரைசெய்யும்போதுபரமசிவனுர் அவர் கனவிலடைந்து ஓஜெயதேவ் என்பேரில் ஐந்து அஷ்டகங்கள் செய்வாயாயி னுனக்குற்ற சந்தேகத்தை நிவர்த்தி செய்கிறே னென்றறைந்து மறைந்து போனுர்.

உடனே ஜெயதேவ் விழித்து மிகவுங் களித்து உதயமாவதற்குள் காசி விசுவநாதர்மீது ஐந்து அஷ்டகங்கள் செய்தார் உடனே காசிவிசுவநாதர் ஓர் பண்டிதனுய்ப் பல மாணுக்கர்சூழ ஜெயதேவிருக்கும் மடத்திற் பிரவேசித்து ஓர் பிராமணனிடம் சந்தேகநிவர்த்தி குடாரபண்டிதர் வந்தாரென்றுரைத்து வாவென்றனுப்பினுர் அப்பூசுரன் ஜெயதேவிடம் போய், ஓஸ்வாமி! சந்தேகநிவர்த்தி குடாரபண்டித ருமது

தரிசனத்துக்கு வந்திருக்கிறார் சீக்கிரம் வாருமையாவென்ற
றைய அதுகேட்ட ஜெயதேவ் உதயமாகாததற்கு முன்பே
எந்தப் பண்டிதர் வந்தார் அல்லது மகாதேவரே இவ்வுரு
வோடு வந்தாரோவென் றதிதுரிதமாய்ப்போய் அப்பண்டி
தர் பாதங்களிற் சிரசாஷ்டாங்கமாக வந்தனஞ்செய்ய அவ
ரும் வந்தனஞ்செய்து ஜெயதேவ் சயனித்திருந்த இடத்திற்
சென்று புத்தக மூட்டையை யவிழ்த்துப் பகவான் பேரிற்
பாடிய இருபத்தைந்து அஷ்டகங்களை யெடுத்துக்கொண்டு
அவ்வாரணாசியிலுள்ள பண்டிதர்களை யெல்லாம் விளித்து
அஷ்டகங்களை வாசிததுக் காண்பித்து ஓ பண்டிதர்களே!
வேதத்தின் சிரத்தின்மேற் பகவான் பாதங்களிருக்கின்றதெ
னப் பல சாத்திரங்கள் முறையிட இந்த ஜெயதேவ் பகவான்
முடிமேல் ராதாவினடிக ளிருக்கின்றதெனப் பாடி யிருக்கின்
றார் இது உங்களுக்குச் சம்மதமாயிருக்கின்றதாவென பண்டி
தர்கள் சீ சீ இப்படி மூடனும் பாடமாட்டா னென்றறைய
அவ்வாக்கியத்தைக் கேட்ட ஜெயதேவர் அம்பலக் கூத்தன்
சொப்பனத்தில் வந்து நம்மை அம்பலத்தில் வைத்துவிட்
டானென நாணமடைந்து ஓ பண்டிதர்களே நான் மறதியா
ய்ப் பாடிவிட்டேன் க்ஷமியுங்களெனச் சந்தேக நிவர்த்தி
குடாரபண்டிதர் பற்களைக் காட்டிக் கெக்கலிகொட்டி நகை
த்து அடா ஜெயதேவ்! மறந்து பாடின லோரஷ்டகத்திலிரு
க்கும் இருபத்தைந்து அஷ்டகங்களிலுமிருக்குமா? அல்லா
மல் மறைந்து மாதாவை மனையாளென் றுரைக்கக்கூடுமா?
நீதான ஜெயதேவென்னுங் கவீசுவரன், உன்கவி மற்றெந்
தத் தேசத்தில் சிரேஷ்டமடைந்தாலும் இக்காசியில் சிரேஷ்
டமடையுமா முக்கால்மூடனை முழுமூடன் கொண்டாடுவதை
ப்போலக் கல்வியறியாதவர்களியாரோ உனக்கு ஜெயதேவ்
கவியென்கிற பேர்கொடுத்தார்கள் என்கிற பற்பல வார்த்தைக
ளாடி, ஓபண்டிதர்களே இந்தஜெயதேவ் வியாசர்பாடிய பாக
வதத்துக் கிழிவுவர வேறுபாகவதத்தைப் பாடினலும் பகவா
னுலரங்கேற்றினலும் இவைகளெல்லாம் பொய்யாகவே யிரு
க்கும் அப்படிப் பாடியிருந்தாலும் அதிலெத்தனைப் பிழைக
ளிருக்கின்றனவோ எல்லாமிந்த அஷ்டகங்களைக் கங்கையில்
விட்டு எதிர்கொண்டேறுவதன்றி கங்கையும் அங்கீகரித்தே
னென் றுரைக்காவிட்டால் அப்பாகவதத்தையு மிக்கங்கையி

லேயே விட்டுவிடலா மென்றுரைக்கப் பண்டிதர்கள் இதுவே சரியெனச் சம்மதித்துச் சீக்கிரங் கங்கையில் அஷ்டகங்களை விடுமென் றூர்ப்பரித்தார்கள்.

அப்போது பரமசிவனுர் ஜெயதேவுடைய சந்தேகஞ்சீக்கிரம் நிவாரணமாகும்பொருட்டு அஷ்டகங்களைக் கையிலேந்திக்கொண்டு, ஓ கங்காபவானி உனது மணாளன்மீது பாடியிருக்கும் ஐந்து அஷ்டகங்களிலும், பகவான்மீது பாடியிருக்கும் இருபத்தைந்து அஷ்டகங்களிலும் ஓர் தப்பிதமில்லாமலிருக்கின்றது. சத்தியமானுல் உனக்குள் விடு மிவைகளை உன் திவ்ய அஸ்தங்களாலெடுத் தென்னிடந் தாருமென்று பாகீரதியில் விட்டார், உடனே அந்த ஐந்தஷ்டகங்களும் கங்கையில் ஸ்நானஞ்செய்து எதிர்கொண்டேரிப் போகையில் கங்காதேவி நமதுமணாளன் சடைமுடியைவிட்டுநீங்கி வெகு நாளாயிற்று. இன்றைக்கவரைப் பார்க்கும்படியாயும் அஸ்தத்துடன் மதஸ்தகத்தைச் சேர்க்கும்படியாயும் இன்று நேரிட்ட திந்த அஷ்டகங்களாலல்லவோவெனக் களிப்புற்றுச்சுயரூபத்துடன் சகலருக்குங் காட்சிகொடுத்து, ஓ சந்தேக நிவர்த்தி குடார பண்டிதரே! அக்ஷரம் வார்த்தையை சீர்முதலானவைகளிற் குறைவில்லாமற் சிறப்புற்றோங்கிய அஷ்டகங்களுந்தாருமென் றெல்லாவற்றையு மொரேதரமெடுத்துக் கொடுத்தாள். தமது நாயகர் மறைந்து போவாரென்றும் நெடுநாளாய்ப் பிரிந்த கணவனைப் பலதரம் பரிசிக்க வேண்டுமென்னுங் கருத்தாலொவ்வொரு பத்திரத்தை எடுத்து இரண்டு கரங்களாலும் சந்தேக நிவர்த்தி குடார பண்டிதர் கரத்திற் கொடுத்துச் சிவ அஷ்டகங்களை நதும் எனக்குரியதென் றெடுத்துக்கொண்டேனென் றறைந்தாள். அதற்குச் சந்தேக நிவர்த்தி குடார பண்டிதர், ஓ கங்காதேவீ! பகவான் முடிமேல் வாதாவினடிக ளிருக்கின்றதாவெனப் பகீரதி எனக்குஞ் சம்மத மூவர்தேவர் மற்றியாவருக்குஞ் சம்மதமா யிருக்கின்றதென்றுள். அதற்கப்பண்டிதர், ஓ பாகீரதி! நீ சிவன்முடிமேலென்றும் அடிகள் வைத்திருப்பவளாதலால் சம்மதித்தாயெனக்குச் சம்மதமில்லையென்று ராதாவினடிகள் பகவான் முடிமே லிருக்கின்றனவென பாடியிருக்கும் இருபத்தைந்து அடிகள் வறைந்திருக்கும் இருபத்தைந்து பத்திரங்களைக் கோபித்தவர்போல் வீசி யெரிந்தார். உடனே பகவான் ராதா

சமேதனாய்க் கருடவாகனரூடராய்ச் சகலரும் பார்க்க அந்தரத்தில் நின்று இவ்விருபத்தைந்து பத்திரங்களு மெனக்குரியது மற்றவைகளெல்லா மூமக்குரியதென்று கங்கையில் விழாமற் தாங்கிக்கொண்டார். உடனே சந்தேக நிவர்த்தி குடாரபண்டிதர் ரிஷபவாகனரூடராய்ப் பார்வதிசமேதராய்க் காட்சி கொடுத்தார். அப்போது ஜெயதேவ் ஸ்வாமிகள் பகவானைக்கண்டு துதிசெய்யத் தொடங்கினார். எப்படியெனில், அந்திய மில்லாததும் தாண்டக் கூடாததும் காமக் குரோத மோகாதி திமிங்கி லாதிகளால் பயங்கரமாகும் நதியுமாகிய சம்சாரக் கடலைத்தாண்டுவதற்கு ஓடமாகிய அதற்கு சீமைபூமியாகியிருப்பவனும் உபதேசபரம்பரைகளா லறியப்படதகுந்தவனும், அனந்தசக்தியுக்தனும், தேசகால வஸ்துக்களினால் காணக்கூடாதவனும் உண்மைநாம பிரபாவங்களினாலே கர்மயோகஞ் சாதிப்பவர்களுக்கு பலபிரதான சக்திகொடுக்கும்படியானவனும், பிரமாதி சகல ஆத்மகோடிகளுக்கும் மேலானவனும், நிரதிசயானந்தரூபனும், பிரமாதிகளைப்போல காலவசியனாகாமல் சகல சக்தியுக்தனாகி நித்தியமாகி தேஜோமயமாகிப் பிரகாசிக்கும் திவ்வியமங்கள விக்கிரகத்துடன் கூடி ஆனந்தசொரூபியாகி யிருக்குமவனும், பிரதானத்திற்கு சீமைபூமியாகி தேவவைதிகங்களைப் பரிபாலிக்குமவனாகி, பிரதானமும் ஜீவனும் பிரளயகாலத்தில் லயிக்கும் ஸ்தானமாகி சகலத்திற்கும் மேலானவனென்று சொல்லத்தகுந்த காரணத்துவ சேஷத்வயுக்தனாகிய ஆகாசாதி விபுதிரவியங்களில் நிறைந்தவனாகி யிருக்கும் ஸ்ரீவிஷ்ணுதேவா! ஜெகத்திற்குக் காரணமாகும் விராட்புருஷனும், அவனுக்குக் காரணமாகும் ஆங்காரமும், அதற்குக் காரணமாகும் மஹத்தத்வமும் அதற்குக் காரணமாகும் பிரகிருதியுமாகி இத்தத்துவங்களினுடைய முக்கிய காரணங்களாகி காரிய காரணரூபமாக அகப்பட்டிருக்கும் சுபாவங்களும், அனந்தங்களுமாகும் ஞானபல ஐஸ்வரிய சத்திரூப சுசீல வாற்சல்லிய சௌரிய தைரியாதி சகலகல்யாண குணங்களுக்கு இருப்பிடமானவனாகி கிரியாசொரூபங்களினால் கர்த்ரு சொரூபங்களினாலும் சேதனாசேதனங்கள்யாவையும் ரட்சிக்கிறீர். வேதங்களுக்கதிபதியும் வேதவேதாந்த வேதியனும் வேதவேதாந்த சாஸ்திர சொரூபனும் நீயேயன்றி வேறல்ல. சாஸ்திரத்திற் குட்பட்டவனென்றும்விவே

கமதிகரிக்குமென்றும் சொல்லப்படும். இரண்டுவித ஞானங்களும் வேதாத்தி யயனனுகும் பிரமனும் சுருதி அத்தி யயனராகும் மனுவாதிகளும் நீயே பாரபக்ஷங்கள் மூதலான தோஷங்களை விட்டவனும் ஜெனன மில்லாதவனுகி நித்தியனுகும் பரப்பிரமமும் நீயே அப்படிப்பட்ட நீ பக்தர்களைப் பரிபாலிக்கும் பொருட்டு அந்தரவீதியில் நாராயண ரூபியாகிப் பிரகாசிக்கின்ருய் ஆகையாலுன்னை சேவித்து சிந்தித்துசாணுகதியடைந்தவனுகிய என் விஷயத்தில் நற்கிரியா யோகங்களுக்குக் கெடுதியாகும் ராக த்வேஷ லோபமோகாதி துர்க்குணங்கள் சாந்தமாகவேண்டும் என்று பிரம்பாரத்துதி ஜெபித்து நின்ருர். அத்தருணத்தில் மாணுக்கரெல்லாம் ரிஷீஸ்வரர்களாய்விட்டார்கள், தேவர்கள் பூமாரிபொழிந்தார்கள், ரம்பையர் நடனமாடினுர்கள், அப்போது பகவான் தன்கரத்திலிருக்கும் இருபத்தைந்து பத்திரங்களையும் ஜெயதேவ்கரத்திலளித்து, ஓ ஜெயதேவ் என்னுடைய மர்மம் உனக்கொருவனுக்குத் தெரியுமன்றி மற்றவர்களா லறிந்துக்கொள்ளுதல் லேசானதோ? நடந்ததையே பாடினுயாதலால் நீர் பாடிய பாகவதத்தையும் அஷ்டகங்களையு மன்புடனனுதினம் பாராயணஞ் செய்வோர்களி னிருதயத்தில் வாசமாயிருக்க மனமுவந்தே னிது நிச்சயமென் றறைந்து மறைந்தார் பரமசிவனுர், ஓ ஜெயதேவ் நீசெய்த சிவாஷ்டகங்களையும் உன் சரித்திரத்தையும் சிரவணஞ் செய்வோர்களுக் கஷ்டயிசுவரியமுங் கொடுக்க விருப்பமுற்றே னிதுசத்தியமென் றுரைத்து மறைந்தார். தேவரிஷிகள் ஜெயதேவாவென் றன்புட னுரைப்போர்களுக்கு ஜெயமுண்டாகக்கடவதென் ருசீர்வாதம்செய்து தங்கடங்க ளிருப்பிடஞ் சேர்ந்தார்கள்.

பின்பு அவ்வாரணுசியிலுள்ள பண்டிதர்க ளெல்லாம் ஜெய தேவைப் பகவான் என்றே தீர்மானஞ் செய்துச் சகல உபசாரத்துடன் பூசித்துக்கொண்டு வந்தார்கள். ஜெயதேவ் வாசுதேவனையும் மகாதேவனையும் தரிசித்த சந்தோஷத்தாலும் தபமேலீட்டாலும் பகவானைப் பலவாருகத் துதித்தபடியாலும் நிர்மல மனதுடையவராகிப் பேசுதலும் நடத்தலுங்குறைந்து மனதிலானந்தம் நிறைந்து தன்னைமறந்து திக்குதேசாதிகளிறந்து பித்தன் உன்மத்தன் சுபாவத்தையடைந்து காடென்று நாடென்று பாராமல் நடந்து ஓர்வேளை

சோதி சொரூபமாகவும் ஓர்வேளை அபயூபமாகவும் ஓர்வேளை ப்பகவா னுருவமாகவும் பலர் கண்களுக்கும் புலப்பட்டுலாவிக் கொண்டிருக்குங் காலத்தில் பத்மாவதி இராஜனை நோக்கி, ஓ பூபாலனே! ஓதுதற்கரிய சீலனே! ஸ்வாமிகள் தேகஸ்மரணையின்றிச் சாக்ஷாத்காரத்தை யடைந்திருக்கிருர் இனி நம்முடன் பேசுவதுந் துர்லபமேயாதலால் நீர் உமது தேசத்திற்சென்று நீதியுடன் அரசாங்கஞ் செய்துக்கொண்டிருமென்றுரைக்கக் கிரவுஞ்சராஜன் அவ்வுத்தமியின் பாதங்களிற் பணிந்து, ஓ என்தாயே! கக்கினது பாயாசமானுலும் நக்குவாருண்டோ? அதுபோல அற்பமான ராஜாங்கத்தின்மேல் நிராசையாய் அநித்திய வாழ்வைச் சொர்ப்பனத்திலுலும் நினையாமல் அற்புதமான மோக்ஷ வாழ்வைக்கோரிய வென்னையகற்றலாமோ! தந்தை தாய் தாரம் புத்திரர் மித்திரர்களாதி யரசாலும் நித்தியானந்தத்தை யடையப்போமோ? அநித்திய மலபாண்ட தேகத்தைச் சத்தியமென்று நம்பினோர்க்கல்லவோ இராஜபோகம் வேண்டியது, மோக்ஷாபேக்ஷயுள்ளோர்கள் அற்பமான விஷயபோகங்களைப்பரமென நம்புவார்களோ? நம்பி வெம்புவார்களே? ஓமாதாவே! நித்தியாநித்தியவஸ்து விவேகமறிந்தவர்கள் அநித்திய தேகசுகத்தைத் தேடுவார்களோ? இகலோகத்தை நாடுவார்களோ? இகபரயோகவிரகமுள்ளவர்கள் சுரலோகாபேக்ஷ கொள்ளுவார்களோ? சத்குரு சேவையைத் தள்ளுவார்களோ? சமாதிநிஷ்டை சம்பத்துடையோர்கள் மனதெண்ணப்படி நடப்பார்களோ? குருவாக்கினைக் கடப்பார்களோ? விஷயவஸ்துக்களைத் தொடுவார்களோ, வைராக்கியத்தை விடுவார்களோ ஆசிரியரைப் பிரிவார்களோ முனிவுகொள்ள வருவார்களோ? சற்சங்கத்தை நீக்குவார்களோ சன்மசாகரத்துக் குட்பட்டேங்குவார்களோ? முமூட்சுத்வ பாவமறிந்தவர்கள் மோகாந்தகாரத்தில் மூழ்குவார்களோ, ஏகாந்தியாகாமல் வாழ்வார்களோ ஓ என்னன்னையே என்னையும் போகச்சொன்னையே என்றவ்வம்மணியின் றிருவடிகளிற் பணிந்தெழுந்து ஜெயதேவஸ்வாமிகளின் தாள்களின்மேல் வீழ்ந்து, ஓவென்றழத் தொடங்கினர். ஜெயதேவர் அவ்வரசன் மீதிருக்குமன்பின்மேலீட்டா லுனக்கென்னகுறை நேரிட்டதெனக் கருணையுடன்கேட்டார். இராஜன் பணிந்துறைக்கலானுன் கேட்டீர்களோ

சித்தர்களே யென்று நாபாஜி சித்தர் பின்னுஞ் சொல்லுவார்.

அஷ்டகங்களை அரங்கேற்றிய அத்தியாயம் முற்றிற்று.

பன்னிரண்டாவது அத்தியாயம்

பிரமோபதேசம் செய்தது.

நாபாஜிசித்தர், ஓசித்தர்களே! கேளுங்களென்று சொல்லத்தொடங்கினர். கிரவுஞ்ச ராஜனனவன் ஜெயதேவஸ்வாமிகளின் றிருவடிகளிற் பணிந்து, ஓம் நமோ சத்குரு பராத்பரா! சர்வ வ்யாபக நிர்விகார ஆனந்தமளிக்குஞ் சர்வேசுவரா! அடியேனை யாட்கொள்ளும் கருணசாகரா உம்முடைய கிருபை ஆகாமியமே செய்யும் மோகாந்தகாரன்மேல் வருமோ, வந்தாற் பாவனுய்ப் போகமாட்டேனு, ஓ அனுதிகாரணு! சர்வபரிபூரணு! எனக்கு வேண்டியது பிரமக்ஞானமே யாதலால் ஆத்மானுபவத்தையே சொல்லி யாட்கொள்ளும்படியாயும்மை மிகவும் வேண்டுகிறேன், ஓ தீனபந்துவே! தினேதினே என்னுயுளந்தகனுக் கிரையாய்ப் போகின்றது ஓடத்திலேறிச் செல்லுபவர்க்கு ஆறும் சுடுமென்கிற பழமொழிப்படியே ஓர் பிரேதத்தைச் சுமந்துகொண்டுபோகு மித்தூலத்தை யோர்நா ளொருவர் சுமக்கநேரிடும், ஒரு நிமையிலோ, ஒரு மாத்திரையிலோ, ஒரு விகடிகையிலோ, ஒரு கடிகையிலோ, ஒரு முகூர்த்தத்திலோ, ஒரு ஜாமத்திலோ, ஒரு காலையிலோ, ஒரு மாலையிலோ, ஒரு அல்லிலோ, ஒரு எல்லிலோ, ஒரு தினத்திலோ, ஒரு வாரத்திலோ, ஒரு பட்சத்திலோ, ஒரு மாதத்திலோ, ஒருருதுவிலோ, ஒரு அயனத்திலோ, ஓராண்டிலோ, தசாண்டிலோ, கனவிலோ, நனவிலோ, காட்டிலோ, நாட்டிலோ, இடியாலோ, கடியாலோ, புலியாலோ, கிலியாலோ, வலியாலோ, நலியாலோ, கிடக்கும்போதோ, நடக்கும்போதோ, புசிக்கும்போதோ, வசிக்கும்போதோ இந்தப்பிராணன் நீங்குமேயல்லது ஸ்திரமல்ல, வெட்டவெளியில் வைத்த விளக்கைப்போலவும், பழுத்த வுலையைப்போலவும், கனியைப்போலவும், நீர்மேற் குமிழியைப்போலவும், எழுத்தைப்போலவும், சுழல் காற்றைப்போலவும், பம்பரத்

தைப்போலவும், மின்னலைப்போலவும், அறுகுநுனி பனி யைப்போலவும் ஒத்த ஆவியை நம்பிப் பாவியாய்ப்போனேன் நிச்சயமில்லா இம்மலவுடலை மெய்யென்று நம்பிப் பொய்ய னுய்ப்போனேன் நாயும் நரியும் பேயுங் கழுகும் பிடுங்கித் தின்னும் இப்பிணத்துக்கு மணஞ்செய்து பேதையாய்ப்போ னேன், பிரத்தியட்ச நரகமான இத்தனுவுக்குச் சுபங்கொடுத் துப் பலருக்கும் மகவாய்ப் பிறந்தேன் கோதுமையுங் குறுதி யென்பும் நரம்புஞ் சதையும்பொருந்திய இவ்வூனை நானென் றஞ்ஞானியாய்ப்போனேன் லவணஞ் சலமல்லவென்றும், பாண்டம் மண்ணல்லவென்றும் ஆபரணம் பொன்னல்ல வென்றும், ஆயுதம் இரும்பல்லவென்றும் சொல்வாருண் டா? அதைப்போலவே தேக மநித்தியமென்றும் பிரபஞ்சம் மயேந்திர ஜாலமென்றும் சொல்வதே மெய்யன்றிப் பொய் யென்று பிதற்றும் பேதையரைப்போலக் கோதுக்குள்ளா னேன். மெய்ஞ்ஞான சாதனத்துக்குரிய அரிதான வாயுளை வீணாய்ப் போக்கலழகோ? காலனெப்போதிவ் வாயுள்முடியு மென்று காத்துக்கொண்டிருக்கிறான் சூரியனென்னும் நாழி யாலாயுளென்னுந் திவசங்களையுண்டு முடிவிற்றன்னையுமுண் ணுமெமனுக்குத்தப்பி யிவ்வுலகி லியாருமிருக்கவில்லை. குலை பழுத்தவுட னடியோடும் வெட்டித்தள்ளும் வாழைக் கிணை யான யிவ்வேழ்மை யாக்கையைக் கோழை புத்தியால் மாழை யால் வைத்திருப்பது நலனோ? இராஜரீக முதலான வியாபா ரத்தாலும் தேகேந்திரிய மனோவிகாரங்களாலும் தேகவாதை யாலும் மனோவாதையாலும் சஞ்சலமே மிகுதியாய் வளர்ந் துக்கொண்டு வருகின்றது, பொன்னாசை பெண்ணாசை மண் ணாசையென்னும் ஈஷணத்திரயங்களால் கட்டுண்டு வெட்டு ண்டு தட்டுகெட்டுத் தடுமாறித் தலைதெரியாமல் தலைகீழாய் விழுந்து தறிதலையாய்ப் போயினேன். ஒருநாளு மும்மைப் போலானந்தமா யிருந்தறியேன் அஞ்ஞானாந்தகாரத்தாலும் துன்மார்க்க முறவாலும் மனோவிச்சையாலும் பஞ்சேந்திரிய வாசையிற் சிக்கிச்சொக்கிச் சம்சாரமென்னும் சாகரத்திலாழ் ந்தும் தாழ்ந்தும் விழுந்தும் எழுந்தும் அவிந்தும் கரையே றுதற்கோர் துறைகாணாமல் வெகுநாளா யழுதுக்கொண்டிரு க்கின்றேன் பந்தமென்னும் பாசத்தாற் கட்டுப்பட்டேன். மோக்ஷார்த்தத்தையே மறந்துவிட்டேன் ஆ கெட்டேன் அறி

த்தியமான அவ்வித வாசையால் நித்தியத்தைத் தேடாமல் நாசமாய்ப் போனேன். சந்தோஷமோ அணுவளவுமில்லை அனுபவிப்பதோ அளவற்றதொல்லை. ஆனந்தத்தருமநிலையோ தெரியவில்லை நிலைபிரிவதற் கெனைப்போன்றவர்க்கு மிகவுந் தொல்லை. பஞ்சவறிவுள்ள மானிடனுய்ப் பிறந்தும் பூமிக்குப் பாரமான மிருகத்துக் கிணையானேன். மிருகமாவதோர் காரியத்திற்குதவும் நானோ ஒன்றுக்கு முதவாப்பிணமானேன் மரணமோ புலியைப்போல் பயங்காட்டிக்கொண்டு முன்னிற்கின்றது மரணத்தை நினைத்துக்கொண்டாலோ கிடுகிடென்று நெஞ்சம் நடுநடுங்குகின்றது பிறக்கும்போதுள்ள துன்பத்தைவிட இறக்கும்போ தாயிரம்பங்கதிகமான துன்பமிருக்கு மென்பதற்கோர் சந்தேகமேயில்லை. இது கவனத்தில் வந்தாலோ இருதயம் பிளந்துபோகின்றது. பிரமஞ்ஞான மில்லாதார்க்குச் சனனமரணத் துன்பமொழியாதென்றனேக சாஸ்திரங்கள் முறையிடுகின்றது. புருஷஜென்மமாய் நரபதியாய் மெய்ஞ்ஞானத்தை யறியும் விவேகியாய்ப் பிறந்தும் அகண்டானந்தத்தைத் தரும்படியான கருணாநிதியாகிய உம்மைச் சரணாகதியடைந்தும் பவத்தை நீக்குஞ் சிவத்தையடையும் மார்க்கந் தெரிந்துக்கொள்ளாமற் போனால் இனி யெப்பிறப்பில் மெய்ப்பொருளைச் சேர்ந்து இப்பிறவிகளை நீக்கிக்கொள்ளப் போகிறேன் ஓ சுவாமி! நிஷ்காமி சிசுவுக்குத்தாயும் விருட்சங்களுக்குச் சலமும், பக்தர்களுக்குத் தெய்வமும், ஜீவர்களுக்குணவும், பிரஜைகளுக்கிராசனும், தரித்திரர்களுக்குப் பிரபுவும், பகலுக்குச் சூரியனும், ராத்திரிக்குச் சந்திரனும், தர்மத்துக்குச் சாந்தமும், வீரனுக்குத் தைரியமும் வேந்தனுக்குப் படையும், சதிக்குப் பதியும், பதிக்குச் சதியும், தபத்துக்கு வைராக்கியமும், திடத்துக்குச் சிரவணமும், சன்மபாசத்துக்கு நிராசையும், ஸ்திரீகளுக்குக் கற்பும், புருஷர்களுக்குக் கல்வியும், கல்விக்குச் சீவகாருண்யமும், மந்திரிகட்கு உத்தியும், வியாபாரிகட்குத் திரவியமும், உலகத்துக்கு மழையும் துணையாயிருந்து விளக்குவதைப் போல் அடியேனுக்குத் தாங்களே துணையாயிருந்து காக்க வேண்டுமன்றி வேறுவழியில்லை ஏனெனின், அனேக சாஸ்திரங்களை வாசித்தும், இஷ்டதேவதையைப் பூசித்தும், பெரியோர்களை நேசித்தும், அன்பால் விசுவாசித்தும், வறியன்

போல் யாசித்தும் பேரின்பத்தையே ஆசித்தும் ஒருநிமை யானுலும் சஞ்சலமற் ருனந்தமாயிருக்கறியேன். ஆதலால் பிர்மமே ஒருருவான தேவரீரே என்னை யானந்தக்கடலில் ரமித்திருக்கச் செய்யவேண்டுமென்று கண்ணீர்விட்டழுது பல தரந்தொழுது பயபக்தியுடன் நிற்கும்போது கருணுநிதியான ஜெயதேவ் சுவாமிகள் இவனதி தீவரப்பக்குவமுடையோ னென்றறிந்து மார்புடனணைத்துக்கொண்டு, ஓ வேந்தனே! உபசாந்தனே! சக்கரையெனச் சொல்வதால் மதுரந்தோன் றுமா? அன்னமென்றுரைப்பதால் பசிநீங்குமா? பாகீரதி யென் றறைவதாற் பாபநிவாரணமாகுமா? தீபமென்றிசைப் பதா லிருணீங்குமா? கிரியாபக்தியால் நாணற்றுப்போகுமா? வேதாந்தமென்றிசைப்பதால் சகல சந்தேகங்களும் நிவர்த்தி யாகுமா? மந்திரமென்ருேதலால் சித்தியுண்டாகுமா? அவுஷதமெனச் சொல்வதால் பிணிநீங்குமா? குருவெனப்பகர்வதால் கிருபையுண்டாகுமா? தெய்வமெனச் செப்புதலா லன்புண்டாகுமா? அதைப்போலவே வாசாக்ஞானத்தா லானந்தமுண்டாகுமா? ஓ ராஜசிரேஷ்டனே! மோட்சாபேக்ஷையுள்ளவனுக்கு முன்னம் வைராக்கியமல்லா க்ஞானம் நிஷ்பிரயோசனமாய்முடியும் ஆனுல் வைராக்கியங்களநேகவிதமுண்டு, அதேதெனின் சாஸ்திரங்களைக் கேட்கும்போதுமாத்திரம் அப்படியிருக்கவேண்டும், இப்படியிருக்கவேண்டும் பாபஞ்செய்யவே கூடாது புண்யமேசெய்யவேண்டி பகவானை தியானிக்கவேண்டுமென்று நினைப்பது புராணவைராக்கியம் பிரேதத்தைக் கொண்டுபோகும்போதுமாத்திரம் என்னவாழ்வு, என்னசுகம், என்ன சம்சாரம் எல்லாம் நிஷ்பிரயோசனம் பிரபஞ்சம் இந்திரஜாலத்துக் கிணையானது என்று நினைப்பது மசானவைராக்கியம், வேதனைப் பொறுக்கமாட்டாமல் இனிபுருஷனைப்புணரவேகூடாதென் றுறுதியாய் நிச்சயஞ்செய்துக்கொள்ளும் ஸ்திரீயைப்போலக் குடும்பத்திலோர்சங்கடம் வருங்காலத்தில் இகபோகங்களில் துன்பமேயன்றி இன்ப மணுவளவுமில்லை யாதலால் இவ்வாழ்வை நீக்கிப் பேரின்பத்தை யடையவேண்டுமென்று நிச்சயித்துக்கொள்வது பிரசூதவாக்கியம். சம்சாரத்தில் கலகம் நேரிட இனியிவர்களுடன் கூடியிருப்பது கூடவே கூடாதென் றயல்நாட்டையடைந்து கோபமேலீட்டால் தனியனுயிருப்பது சலன வைராக்கியம் அக்கிரமஞ்செ

ய்த இவர்களை வெட்டி இரண்டு துண்டாக வேண்டுமென்கிற குரோதங்கொண்டு தன் பிரதிக்கினையை முடித்துச் சன்யாசியாய்ப்போவது மூடவைராக்கியம் எச்சையான பதார்த்தங்களைப் புசித்து போகபாக்கியங்களி லமிழ்ந்து சோம்பலின்றி இரவும்பகலுமுழன்று எதிர்த்தவர்களை வென்று யாதொன்றுக்குமஞ்சாதவனாய்க் கர்வமடைந்திருப்பது இராட்சச வைராக்கியம். பரமசிவன் தன்னையடைந்த பிர்மத்தியை விஷ்ணுவாலகற்றிக் கொண்டதால் நாராயணனே ஆதிதெய்வமென்றும் திருமாலும், பிரமாவும் அடிமுடியைத் தேடிக் காணாததால் பரமசிவனே ஆதிதெய்வமென்றும், எங்களுடைய சமயத்திற் பிரவேசித்துக் காரணகுருவைத் தொழுதவர்களுக்கே மோட்சமுண்டென்று தேவதைகளை தூஷிப்பது மதவைராக்கியம், காரணகுருவைத்தேடி அவரருளால் தனதெதார்த்த ஸ்வரூபத்தையும் பிரமத்தையு முணராமல் காரிய குருக்கள் போதிக்கும் நானென்பது விர்த்தியடையும் நிலைகளில் நம்பிக்கை வைத்திருப்பது அஞ்ஞான வைராக்கியம் அநித்திய மல பாண்டதேகத்தை என்றைக்கு மழியாமல் வைக்கும்பொருட்டுக் காயகற்பங்களைப் புசித்துப் பிராணவாயுவை யடக்கி நாதாந்தவசமாகிச் சோதியைத் தரிசித்து முடிவில் சூனியபாவத்தையடைவது அடவைராக்கியம், வேதாந்த சாஸ்திரங்களைச் சற்குரு முன்னிலையில் விசாரித்துப் பிரபஞ்சம் நித்தியமென்றும் தான் நித்தியமென்றும் பிர்மமே தானென்றும் எல்லாம் பிர்மமென்றும் திடப்பிரக்ஞையால் ஆனந்தவசமாகும் ஞான நிஷ்டையைச் சாதிக்காமலிறுமாந்திருப்பது அபலவைராக்கியமென்றும் இன்னம்பல அஞ்ஞான வைராக்கியங்களிருக்கின்றது இதனாற் கற்பகாலங்களிலு மானந்தமடையக்கூடாது. ஏனெனின், நானென்னும் மதமானது மதத்தையே தருமன்றி இதத்தையும் சம்மதத்தையும் ஒருநாளுந் தராது. ஞானியானவன் ரணக்களத்தில் தன்னை யெதிர்த்தவனெவனானாலு மவனை யெதிர்த்துச் செயம்பெறும் அதிசூரனைப்போலவும், நியாயசபையில் உற்றோர் மற்றோர் எளியோர் வலியோரென்கிற பாரபட்சம் பார்க்காமற் தீர்க்கும் சத்திய நியாயாதிபதியைப் போலவும், சகலரும் சம்மதிக்கும் சம்மதமான ஞானமார்க்கத்தைக் கண்டிப்பாயுரைக்க வேண்டுமன்றி பக்தியில் சகலருக்குஞ்சமமாகப் படையாது அநீதனை

ப்போலவும், ஈயெறும்புமுதலான ஜீவர்களிடத்துச் சமபாவம் பார்க்காத அஞ்ஞானியைப் போலவும், தன்மக்கள் பிறர்மக்களென்று சிசுக்களிடத்திற் றுவிதபாவமாய்ப் பார்க்கும் லுத்தனைப்போலவும், பிறர்மானம் தன்மானமென்று கருதாப்பாவியைப்போலவும், தன் சீவனைப்போலவே அந்யஜீவர்களைப்பார்க்கா அசடனைப்போலவும், பூஷணைக்கு மகிழ்ந்து தூஷணைக்குக் காதுகொடா அவிவேகியைப்போலவும், மனதிலொன்றும் வாக்கிலொன்றுமாயிருக்குங் குரோதியைப்போலவும், சைவமே முக்கியமென்றும் வைஷ்ணவமே பிரதானமென்றும் சொல்லக்கூடாது ஏனெனின், ஆயிரம் ஞானிகளின் மார்க்கம் ஆயிர விதங்களாயிருக்கும் ஜாக்கிர சொப்பன சுழுத்தி துரியம் துரியாதீதமென்னும் ஐந்தவஸ்தைகளும் சகல ஜீவர்களுக்கும் பொதுவாயிருக்கின்றது.

இவ்வவஸ்தைகளைந்தையும் சத்குருமுன்னிலையில் நன்ருய் விசாரித்தறிந்தா லொழிய ஞானமார்க்கந் தெரியாது. ஞானமில்லாதவர்க்கு நானென்பதற்றுப் போகாது, நானென்ப தற்றுப்போவதே ஞானமென்றுரைக்கத் தகும். ஞானமில்லாப் பத்தியும் சித்தியும் ஞானமில்லா வைராக்கியமும் யோக்கியமும் சூட்சமில்லாத் தியானமும் மோனமும் ஓர் பிரயோசனமுங் கொடுக்காது மோட்சமென்பதை லேசிலடைவதற்கு ஞானவைராக்கியங்கள் முக்கியமாய்வேண்டும். அதாவது அணுமுதல் பிரமாண்டபரியந்தம் பிரமமே நிறைந்திருக்கிறதென்றும், பரிபூரணமாகிய பரப்பிர்மத்தைவிட நானென்பது வேறில்லையே இல்லையென்றும், என்றும் இருப்பது பிரமமென்றும், நானென்னும் அகம்பாவத்தையும் எனதென்னும் அகம்பாவத்தையுட தலையெடுக்காமல் தவளையை யுண்ணும் சர்ப்பத்தைப்போலப் புசித்துவிடுவது பூரண வைராக்கியம், கானற்சலத்துக் கிணையான பிரபஞ்சத்தை சுத்தமாய் மித்தையென்றுன்னி ஸ்திரீயாதி போகங்களைக் காகத்தினெச்சத்தைப்போலெண்ணி மனதில் வருகிற நினைப்புகளையெல்லாம் மாய்த்துக் காமக்குரோதிகளென்னும் கள்வரை அடியோடும் வெட்டிச் சாய்த்துக் குடும்பத்தை விர்த்திசெய்யவேண்டுமென்கிற ஜீவேச்சையைத் தேய்த்து ஆனந்த சமுத்திரத்தில் கருவிகரணாதிகளைத் தோய்த்துத் தன்னையறிந்து பிர்ம்மமாத்திரமாயிருப்பது எதார்த்த வைராக்கியம், ஆசாரியர்

மேலதிகப் பிரீதியுடையவனாய் எப்போதுஞ் சாதுக்கள் கூட்டத்தைவிடாமலனுசரித்து சந்ததம் தான் பிர்மமென்று மனனம் பண்ணி சரீரபாவனையை நீங்கிச் சங்கல்ப விகல்பங்களை போக்கி பாமரத்தை தூளாக்கி அகமுகத்திற் பரப்பிரமத்தை நோக்கித் தன்னைப் பிர்மத்துக்குள்ளாக்கி நிர்விகல்பனாய் அகண்டானந்த நிராமயமான சாட்சியாயிருப்பது சத்பாவ வைராக்கியம் கர்மங்களெல்லாம் குணங்களாற் பிரவர்த்திக்கின்றது. நானோ குணாதிதன் கர்மபக்தி யோகங்களாலோர் பிரயோசனமு மில்லையென்று நிரேதுவாய் ஒன்றையுங் கேட்கா வாக்கு மௌனமும் ஒன்றையும் நினையா மௌனமும் ஒன்றையு மிச்சிக்கா ஜீவமௌனமும் பெற்றுச் சமாதி நிஷ்டாபரனா யத்வைதமாயிருப்பது அபாவ வைராக்கியம், எல்லாவற்றையுஞ் சொற்பனமாய் நினைத்துச் சுகதுக்காதீதனாய் த்வியுக்த சந்துஷ்டனாய் நானீயென்னுந் துவிதபாவமில்லாதவனாய்த் தானே தானாய்ப் பிரபஞ்ச வெத்தனத்தைத் தள்ளி பிரவயிக்ய வெத்தனமே மேலிட்டு சொப்பனத்திலும் இகபோகங்களை நினையாமலிருப்பது ஸ்தான வைராக்கியம் சுகதுக்கமயமான சரீரம் பிராப்தாதீனமென்றும், பிராப்தப் பயனே சுகதுக்கமென்றுந் தேகபோஷணையும் தேகபீதியையும் விடுத்து விதி நிஷேதங்களைத் தள்ளித் துக்கமும் சுகமும்வந்தாற் சமமாய்ப் பாதுகாத்துச் சகல சந்தோஷங்களையும் பேர்த்து துரிய திருஷ்டியை மேவியிருப்பது திடவைராக்கியம் பிராப்தமென்னும் ஆசனத்தின்மீ துறுதியா யிருந்துக்கொண்டு ஞானக்கினியால் அஞ்ஞான ஆபரண விக்ஷேபாதிகளைப் பஸ்பமாக்கிக் காலபயத்தை நினைக்காமல் பித்தன் உன்மத்தன் சிசு இராஜன் சுபாவத்தை யடைந்து நிர்த்தொந்தனாயிருப்பது விச்சிராம வைராக்கியம் ஆலஸ்யம் நித்திரை நிந்தாஸ்துதியை விட்டுத் தேகஸ்மரணை கெட்டு அகண்ட சிரவண மனனங்களாற் பூர்த்தியடைந்து பரமாத்மாவி லைக்யமாய் மவுனமாயிருப்பது சம்மதவைராக்கியம். பேரிடி விழுந்தாலும் பயப்படாமல் நான் விநாசன், அவிசேஷன், அதுலன், அசலன், அனுமயன், பரிபூரணன் ஆதலால் எனக்கு மரணமேது ஜனனமேது பாவமேது புண்ணியமேது நாகமேது மோக்ஷமேது எனக்குள்ளாகவே இப்பிரபஞ்சம் முழுமித்தையாயுதித் தொடுங்குகிறதென்று ஜற்சலனமாயிருப்பது

விசார வைராக்யம். யாதொரு வியாகுலமு மில்லாமல் பிர் மம் ஜர்வசன வனுதி அதற்கே துபாதியென்று நிர்ப்பந்த நிர்ச்சிந்தனுய் அயிக்கிய சுபுத்தி யுடையவனுய்ப் பிரமம் நிர்விகாரம் நமக்கேது விகாரம் என்று கமலநாப ரூபங்களை கொடுத்துச் சுயம்புவாய்ச் சாவகாசமாய் ஒரே நிதானமாய் நிவாத தீபங்கள்போலவும், நிஷ்தாங்க சமூத்திரங்கள் போல வும், இருப்பது நிர்வாண வைராக்கியம் என்று அனேக ஞான வைராக்கியங்கள் சாஸ்திரங்களிற் சொல்லியிருக்கின் றன. இது ஞானயுக்தி வைராக்கியம் இதனுல் வஸ்துலாப பாக்கியம் வஸ்துலாபத்தால் வரும் சிலாக்கியம். தரும் மே லான யோக்கியம் யோக்கியர்க்குரைக்கத் தகுந்தது மகா வாக் கியம் மேற்சொன்ன ஞான வைராக்கியங்களன்றி மற்ற வைராக்கியங்கள் விட்டம்பநம் உத்தண்ட கல்பநம் என்றும் சொல்லப்படும். எதெது மனேவாக்குக் கோசரமா யிருக்கின் றதோ அதுகளெல்லாம் கற்பிதமென்றே நினைக்கவேண்டும். மனேவாக்குக்கோசரமாய் வேதாதீதமாய் மூவரும் தேவரும் மற்றியாவரும் போற்றும் பொருளான தெதுவோ மூகபாவத் தைக் கொடுக்கும் வஸ்தெதுவோ அதுவே சத்யக்ஞானனந்த நித்ய நிர்மலமாயிருக்கும்.

பரப்பிர்மமென்றும், பரப்பிர்மமே ஆதி தெய்வமென் றும், இதில் ஐக்யப்பட்டவர்க்கே ஆனந்தமென்றும் ஆனந் தமே மோக்ஷமென்றும் சொல்லப்படும். சந்திர கிரணத்தை புசித்துத் திருப்தியாகும் சகோர பட்சியைப்போல ஞான ரசனையான பிர்மானந்தத்தைப் புசித்துத் துரியபூமியில் வசி த்து நானென்பது நசித்துத் தேகேந்திரியங்கள் மூசித்து பரப்பிர்மத்தி லைக்யப்பட்டு இளைப்பாற்றி யிருத்தலும் எழுத லும் மறந்து பிர்மானந்தம் நிறைந்து நடத்தலும் பேசலுங் குறைந்து தேகாபிமானத்தையுந் துறந்து சொஸ்தனுய்ச் சகோரபட்சிக் குணவாகியும் எங்கும் சீதளபிரகாசமாய் நிறை ந்திருக்கும் சந்திரனைப்போல உனக்குள்ளே குளிர்ச்சியடை ந்து அந்தக் கரணுதிகளுக்குஞ் சீதளத்தைத்தந்து குறையா மல் பரிபூரண ஸ்வரூபமாகிப் பிரபஞ்ச மயமாகாமல் அதி குப்தனு யிருப்பாயப்பாவென்ற பரமாசாரியராகிய ஜெயதேவ சுவாமிகளின் திவ்விய திருவருட் டாமரைகளிற் பணிந்து இருகண்களையு மணிந்து இவரே பரமேசுவரரெனத் துணி

ந்து நானென்னு மகங்காரந் தணிந்து, ஓ என் சத்குருராய னே! மதுரமொழிகளையுரைக்கும்வாயனே! இவ்வுலகிலுள்ள சகலருமேற்றுந் தூயனே! என்னைப்போன்ற எளியோர்களு க்கு மிகவும் நேயனே! இப்படிக்குப் பதார்த்தமாய்ச் சன்னல் பின்னலாய் திருவாய் மலர்ந்தருளினல் முழுமூடனுகிய அடி யேன் தெரிந்துகொள்வ தெப்படியென்று இராஜன் பிரார்த் திக்க, அதற்கு ஜெயதேவ சுவாமிகள் சொல்லுகிருர், ஓ அர சனே! பிரஜைகளுக்குள் ஸ்ரலனே! பிர்மானந்தத்தை விரு ம்பினவன் முன்னம் சகுனமாகிய திரிமூர்த்திகளையாவது நிர் க்குணமாகிய பரப் பிர்மத்தையாவது அன்பா யுபாசிக்கவேண் டும். இதனுல் அக்கினியில் வீழ்ந்த சருகைப்போலச் சகல ஆகாமிய பாபங்களும் பஸ்பமாய்ப் புண்ணியம்மேலிடும்.

இப்புண்ணிய மேலீட்டால் அநித்தியமாகிய சம்சாரம் துன்பமாய்த் தோன்றுவதன்றி நித்தியமான மோட்சமார்க் கத்தைக்காட்டும். சத்குரு தரிசனங் கிடைக்கும். அந்தச் சத் குருநாதனுக் கன்புடன் பணிவிடை செய்வதால் பெருங்காற் ருற் சிதறிப்போகும் மேகத்தைப்போலச் சஞ்சித கர்மங்க ளெல்லாஞ் சிதறுண்டுபோகும். இதனு லதிக சந்தோஷ முண்டாகும் பின்பாசாரிய ருபதேசிக்கும் மகா வாக்கியத்தை ஏகாந்த ஸ்தானத்திலிருந்து தைலதாரைபோற் றியானிக்க வேண்டும். இதனுற் காற்றில்லா விடத்துள்ள தீபத்தைப் போலச் சகல சஞ்சலங்களும் நீங்கி ஏகாக்கிரசித்த முண்டா கும் பிறகு சத்குரு முன்னிலையில் தேகத்தையும் இதிலிருக் குந் துவாரங்களையு மிதனுளுலாவும் சுவாசத்தையு மிதினி லிருந் துதிக்கு மந்தக்கரணங்களையு மிவைகளையெல்லாம் நா னென்றிருக்குஞ் ஜீவனையு மிதனுக் காதாரமான சுத்த சூன் னியமாகிய அஞ்ஞானத்தையும் ஜாக்ராவஸ்தையில் கருவி களின் சேஷ்டையையுஞ் சொப்பனத்தில் மனக் கூத்தையும் சுழுப்தியிற் சூனியத்தையு மறிந்துகொண்டிருக்கும் சாட்சி யாகிய தானும் இப்படியே சராசரங்களிலுஞ் சாக்ஷியாயிருக் குஞ் சர்வ சாக்ஷியாகிய பிரமமும் ஒன்றே யெனக்காட்டும் மகா வாக்கியார்த்த சிரவணஞ்செய்யவேண்டும். இதனுற் சூரியோ தயத்தால் நீங்கு மிருளைப்போ லஞ்ஞானம் நீங்கிப்போம். பின்பு தேகம் நித்தியம், நாம் நித்தியம், இந்திரியங்கள் துக் கமயம், நாமானந்தமயம், அந்தக்கரணஞ் சலன சுபாவம்,

நாம் நிர்சலன சுபாவம், வாயு தேகத்துக்காதாரம், நாம் சமஸ்தத்துக்காதாரம், ஜீவன் நானெனு மபாவம், நாம் நானென்றபாவம், அஞ்ஞானம் சுத்த சூன்யம், நாம் அகண்ட பரிபூரணமென்று மண்டூகத்தின் கண்டத்தைப் போலவும், சிசுக்களி னுச்சியைப்போலவும், மானிடர்க ளிருதயத்தைப் போலவும் சமாதானம் பண்ணவேண்டும். இதனால் தீர்ப்பானயின் வாதியின் சந்தேகமற்றதுபோலச் சகல சந்தேகங் களுந் தலையெடுக்காமற் சாகும். பிறகு தேகாதிகள் நாமல்லாததால் நமக்குத் தர்மாதர்மபந்த மோட்ச ஜராமரணங்கள் மூக்காலத்திலுமில்லை. பலதுளிகளுங்கூடி வெள்ளமானது போலச் சகல சாட்சிகளின் கூட்டமே சர்வ சாட்சியாகிய பிரமமென்றும், பிர்மமே சாக்ஷிஸ்வரூபமாகிய நானென்றும் ஜனனமில்லா வெனக்கு மரணமேதென்றும், ரூபமில்லாவெனக்கு விகாரமே ஏதென்றும், சங்கல்ப மில்லாமல் எனக்கு விகல்பம் ஏதென்றும், மரணம் இல்லாமல் யெனக்குப் பயமேதென்றும், எங்கும் பரிபூரணமாய் இருக்கும் எனக்குத் தேசமேதென்றும், மூக்காலத்திலுமோ ரியல்பா யிருக்கும் எனக்குக் காலம் ஏதென்றும், என்றைக்கும் அழியாமலிருக்குமென்பால் மூன் னும் பின்னு மித்தையான இந்திரஜால வித்தையைப்போன்ற இப்பிரபஞ்சம் மூழு மித்தையென்றும் என்றுமழியா திருக்கும் பிரமமே நானென்பதற்குச் சந்தேகமே யில்லையெனத் திடமாய் நிதித்தியாசனத்தாற் றெளிக.

இதனால் தீபமேற்றியபின் சர்ப்ப பயம் நீங்கிப் பழுதையென்று காலாற் றள்ளிவிடுவதுபோலப் பிரபஞ்சம் மெய்யென்றும், தேகந்தானென்றும், பந்த மோட்சங்களுண்டென்றும் நினைக்கச்செய்யும் விபரீத பாவனை யொழிந்துபோகும். பிறகு தேகமிருந்தாலென்ன, மரித்தாலென்ன, காட்டிலிருந்தாலும் நாட்டிலிருந்தாலும் பிராப்திதனமான இத்தூலம் சுகத்தையும் துக்கத்தையும் அனுபவித்தே நீக்கவேண்டுமென்றும், பலதர மிரசித்து நினைத்தாலும் வராது வரவே வராது பலதரம் வேண்டாமென்று நிக்கிரகித்தாலும் போகாது. போகவே போகாதென்றும் நிரேதுவாய் சகல இச்சைகளுமற்று புற்றினுள்ளிருந்து புறப்படும் ஈசலைப்போல் உள்ளத்தி லிருந்துதிக்கும் சங்கல்பங்களை இந்திரியங்களின் வழியாய்ச் செல்லாமல் மீனையுண்ணுங் கொக்கைப்போலு

ண்டு இச்சையென்னும் மடுவிலிருக்கும் நினைப்பென்னும் மச்சங்களையெல்லாம் நாசஞ்செய்து இச்சையின் வழியால் மனதைச் செல்லாமல் நிக்கிரகித்து நிஸ்தரங்க சமுத்திரத்தைப்போ லசைவற்றுக் கூடஸ்தம் பிரமமாத்திரமா யிருப்பது சமாதியென்று சொல்லப்படும். இதனாற் சுழுத்தியிலுண்டாகுஞ் சுகத்தைப்போலக்கண் டானந்தமுண்டாகும். இப்பேர்க்கொத்த எல்லையில்லாச் சுகானந்தக் கடலிற் படிந்து தன்னைமறந்து தலைவனிற்கலந்து திக்கு தேசாதிகளிறந்து திருக்ய ஸ்வரூபத்திற் கறைந்து எங்கனும் நிறைந்து மூகபாவத்தை யடைந்து தானின்னானென்றுந் தெரியாமல் சுந்தர சுத்தத்தையுங் குறியாமல் பேசுவது மூண்ணுவதும் சொர்ப்பனத்திற் கண்டுங் காணாத காட்சிபோ லுணர்ந்துமுணராமல் பேயன் பித்தன் உன்மத்தன் சிசுவைப்போலாகி அரிஹராதிகள் பிரத்தியட்ச மானாலும் மாயாமயனென்றறிந்து தலையரிவதுந் தெரியா ஆனந்தாவேசம் மேலிட்டு ஜாக்ர சுழுப்தியின் நிலையைமேவி பிரமமாத்திரமாயிருப்பது சாக்ஷாத்காரம். இதனாற் கற்புள்ள கன்னிகைக்குச்சாயுச்சியங் கிடைப்பதுபோலச் சாலோக சாமீப சாரூப சாயுச்சியமென்னும் நாலு பாதங்களுக் கப்பாற்பட்ட ஐந்தாம் பதமாகிய ஆனந்தமாத்திரமான கைவல்லியங் கிடைக்கும். ஆதலாற் சகல பற்றுக்களுமற்ற இராஜனே! சிறப்புற்ற போஜனே! பிர்மமே இஷ்டதெய்வமென்றும், தெய்வமே சத்குருவென்றும், குருசேவையே சகல கிரியைகளென்றும், குருவுபதேசமே வேதமென்றும், வேதமுடிவே வேதாந்தமென்றும், வேதாந்த சிரவணமே மோக்ஷமார்க்கமென்றும், மோட்சமார்க்கமே தபோபலமென்றும், தபோபலமே மனனமென்றும், மனனமே நிதித்தியாசனமென்றும், நிதித்தியாசனமேசமாதி நிஷ்டையென்றும், நிஷ்டையே சாட்சாத்காரமென்றும், சாட்சாத்காரமே பிர்மமென்றும், பிர்மமே ஆனந்தமென்றும், ஆனந்தமே முக்தியென்றும் நிச்சயமாயறிந்துக்கொள்ள வேண்டுமென்று பின்னுஞ் சொல்லத்தொடங்கினார்.

ஓ நரபதியே! முக்கியமாகப் பரமாசாரியர்மீதும் இஷ்டதேவதையின்மீதும் சிரவணார்த்தங்களின்மீதும் அதி அவசியமாக சிரத்தையானது பூர்ணமாயிருக்கவேண்டும். பரமாசாரியார்மீதிருக்கும் சிரத்தையானது பரமக்ஞானத்தை கொடு

க்கும் இஷ்டதேவதை மீதிருக்கும் சிரத்தை பாபவிமோசன மாக்கும் சிரவணார்த்த சிரத்தையல்லாதவனுக்கு ஞானம் லபிக்க மாட்டாது எப்படி ருதுவாகாக் கன்னிகைக்கு கர்ப்பந் தரிக்காதோ அப்படியே சிரத்தை யில்லாதவனுக்கு ஞானார்த்தம் மனதிற்றரிக்காது சிரத்தையே ருது உபதேசமே பிந்து ஞானமே கர்ப்பம் ஆனந்தமே சிசுவென் றுரைக்கத்தகும் குரு கிருபையில்லாவிட்டால் சிரவணாதிகள் பலிக்கமாட்டாது, தன்னை மறக்கிற பரியந்தம் மேற்சொன்ன மூன்றினிடத்திலும் சிரத்தை பூரணமா யிருப்பவனுக்கே பிர்மானந்த மூதயமாகும். எப்போது ஆசாரியருடைய பரிபூரணக்கிருபை பெறுவானோ அப்போதே உதயமாகும் ஞானப்பிரகாசம் அற்றுப்போகும் அஞ்ஞான பாசம் விஸ்தரிக்கும் ஆத்மவிலாசம் இருக்காது சிந்தனம் லவலேசம் சஞ்சித கர்மங்களாய்ப் போகும் நாசம் தன்னை மறக்கச்செய்து விடுமப்பா பிர்மோபதேசம் சகல பற்றுக்களு மற்றுப்போகும்படிச் செய்யும் பார் சாதுக்கள் நேசம் இவ்வளவு மேன்மையானதுபார் குரு விசுவாசம், ஓ இறைவனே! தேகம் சேதனம் மூடசடம் நீ நித்திய சுக்ஞானசேதனம் தேகம் கண்ட ரூபகாமம் நீ அகண்ட பரிபூரண நிரூப நிர்நாமம் தேகம் விகாரபல துக்கம் நீ நிர்விகார நிர்மலானந்தம் மூத்தமனை வுனக்கேனினி தேகாபிமானம் உன்னுடைய ரூபமென்றைக்கு மொரே நிதானம் உன்னையிப்படி யார் செய்யப்போகிறார்கள் சமாதானம் உன்னுடைய ரூபமியாராலுஞ் சொல்லுதற்கரிய மோனம் இதுவே வேதமுடிவான யதார்த்தக்ஞானம் மற்றவைகளெல்லாம் மூடக்ஞானம் முகபாவத்தை யடைந்திருப்பதே பிர்மத்தியானம் தற்சுதந்தர மற்றிருப்பதே ஆசாரியருக் களிக்குந்தானம் நானென்பதற்றவர்க்கு மூண்டோ ஈனம் நானற்ற பிர்மக்கியானியோ மூவர்க்குஞ் சமானம் நானற்ற பேர்க்குண்டு நாரதாதிகளின் சன்மானம், ஓ மன்னனே! தேகத்தை நடப்பித்து பிராணனை நடப்பித்து ஜீவன், ஜீவனை விளங்கச்செய்வது ஆத்மக்கியானம் ஆதலால் தேகாதிகளை நானல்லவென்றே இருக்கவேண்டும். பிராப்தா தீனமான இத்தேகத்தைக் குறித்துனக் கக்கரையென்ன? தேகாபிமானத்தை இன்றுடன் விட்டுவிடு? உன்னை நீயே நன்றா யாராய்ந்துப்பார்? தனக்குளாராய்பவர்க்கே எல்லையற்ற ஆனந்த

முண்டாகும், தேகாதிகளை அசைவற நிறுத்தினவனுக்கு நித்தியானந்தம் வந்தடைவதுபோல் துரிய திருஷ்டியையே விப் பிரமமாத்திரமா யிருப்பவர்க்கே ஆனந்தோதயமாகும். நித்திரையானது தன்னை மறக்கச்செய்வதுபோல ஆனந்த னித்திரை உன்னை மறக்கச்செய்யும் நீ மூக்காலத்திலும் முக் தனுகவே யிருக்கின்ருய். இனிமேற் சங்கை செய்வாயானுற் பந்தத்துக் குட்பட்டுப்போவாய் திரிகுணங்களும் திரிகுண சேஷ்டைகளும் பஞ்ச பூதங்களும் பஞ்ச கர்த்தர்களும் மாயை யால் நிர்மாணிக்கப்பட்டது மாயையோ மித்தையால் நிர்மா ணிக்கப்பட்டது நீயோ சர்வசாட்சி இவைகளையெல்லாஞ் சாட்சியா யிருந்தறிகிற உனக்கு மாயையும் த்ரிகுணங்களும் பஞ்சபூத விகாரங்களும் ஒருகாலத்திலுமில்லை நீ பிருதிவி, யப்பு, வன்னி, வாய், வாகாசங்களிலும் நிறைந்திருக்கும் பிர்மமேயாம். இவ்வித வைக்கிய வித்விதானுபலத்தினுலே நானென்னுஞ் சீவபாவ மொழிந்துபோமென்கிற பற்பல வேதாந்த ரகசியங்களுரைத்தது. ஓ பூபதியே! இந்த அனு பவமே நான்கு வேதத்திலும் வசிஷ்ட சங்கிதை, சூத சங் கிதை, பகவத்கீதை, ஆத்மகீதை, ராத்மகீதை, உத்தரகீதை, ரிபுகீதை, குருகீதை, பாண்டவகீதை, பிரமகீதை, அஷ்ட வக்கிற கீதையிலும், வேதவியாசருரைத்த பதினெட்டுப் புரா ணங்களில் தச்சி புராணங்களிலும், நான்கு விஷ்ணு புரா ணங்களிலும், உபய மர்ம புராணங்களிலும், சூரியபுராணம், அக்கினிப் புராணங்களிலும், கணபதிபுராணம், சக்திபுரா ணம் முதலான புராதன புராணங்களிலும் சொல்லியிருக் கிறதை தப்பென்று மதபேதத்தால் திரஸ்கரிப்பவர்களுக்கு ரௌரவாதி நரகமே பிராப்தியாகுமென்றறைந்து இராஜன் முத லனைவரும் நம்பும்பொருட்டு ஸ்ரீகாசிவிசுவநாதர் சன் னிதானத்தின்முன் சென்று முன்னம் ஏகம் நாராயணம் துவி தம் நாஸ்தியெனச் சத்தியம் செய்ததுபோலவே ஏகம் பிர் மம் துவிதம் நாஸ்தியெனச் சத்தியஞ்செய்த மாத்திரத்தில் ஸ்ரீ காசிவிசுவநாதரும் விசாலாட்சியம்மையும் திருக்கோயி லிலிருந்து பலபேர்களும் பார்க்க வெளிப்பட்டு இதுவே வேத முடிவான யதார்த்தமென்றறைந்து ஜெயதேவருக்குப் பற்பல ஆசீர்வசனங்கள் புகன்று அந்தர்த்தானமானுர்.

விருத்தம்.

என்னுளே விளங்கியெங்கு மேகமாய் நின்றசோதி
நின்னுளே யடங்குமிந்த நீணிலத் துயிர்கட்கெல்லா
மன்னையா யப்பனாகி யருந்தெய்வங் குருவுமான
நின்னையான் சரணடைந்தே னீசனே நேமிகையா.

உடனே பகவான் கருடவாகனரூடராய் லட்சுமீ சமேத ராயங்கெழுந்தருளி ஜெயதேவை ஆலிங்கனஞ்செய்து இது வே இதுவே என் வாக்கினாலுரைத்த பகவத்கீதா பிரமாணம் இதுவே சத்தியம் இதுவே னித்தியமென்றறைந்து மறை ந்துபோனார். அப்போது நாரதாதி முனீசுவரர்களெல்லா மங்கெழுந்தருளி இதுவே வியாசருரைத்த பாகவதத்தி னந் தரங்கமென் றுரைத்து ஜெயதேவ்மீது புஷ்பங்களை யிறை த்து ஜெயஜெயவென் றறைந்துகொண்டே மறைந்தார்கள். பின்பு இராஜனும் ஜெயதேவும் மற்றவர்களும் வாரணாசியி லிருக்கும் பண்டிதர்களிடம் விடைபெற்றுக்கொண்டு தங்கள் நாட்டையடைந்து பிர்மனிஷ்டையி லெழுந்தருளி ஆனந் தமாயிருந்தார்கள். ஓ சித்தர்களே! இன்னம் ஜெயதேவர் சரித்திரம் மத்தியில் வருகிறபடியால் முடிவு பெறவில்லையெ ன்று நாபாஜி சித்தர் திருவாய்மலர்ந்தருள உத்தவ சித்தர் முதலானவர்களும் பணிந்து ஆ! ஆ! இதென்ன ஆனந்த மான கதையைச் சொன்னீ ரிச்சரிதையைக் கேட்டுக் களிப் படையாதவர்களு முண்டோ வென்கிற பற்பல வார்த்தைக ளாடி உததவ சித்தர் நாபாஜி சித்தரை வணங்கி, ஓ மாதவ னே! ஜெயதேவஸ்வாமிகள் கைகால்கள் வெட்டுண்ட காரண மேதோ தெரியச்சொல்ல வேண்டுமெனப் பணிவாகக்கேட்க, நாபாஜிசித்தர் துக்காராம் சரித்திரத்தில் இதன்விபரம் வரு கின்றதெனச் சித்தர்கள் வணங்கி, ஓ சுவாமி! உண்மையான பிரமக்கியானந் தெரியாமல் சிலர் விஷ்ணுவே பரதெய்வ மென்றும் கிலர் பரமசிவமே ஆதிதெய்வமென்று முரைக்குங் காரணமேதென்று பணிய அதற்கு நாபாஜிசித்தர் சொல்லு வார் முக்குணங்களில் சாந்தகுணம் முதன்மையாதலால் சாந் தனான விஷ்ணுவே பரப்பிரமமென்றும் பஞ்சபூதங்களில் பிருதிவியம்ஸனான பிர்மாவிலும் ஜலாம்ஸனான விஷ்ணு விலும் தெய்வாம்சமான பரமசிவமே மேன்மையாதலால் ருத்திரனே பிரமமென்றும் சொல்லப்பட்டதானாலும் விஷ

ணுவே பிரமசொரூபம் பரமசிவம் பிர்ம்மமென்றும் சொல்லுங்காரணம் சாந்தகுணத்திற் பிரதிபலித்த பரப்பிரமமே விஷ்ணுவென்றும் தமோகுணத்திற் பிரதிபலித்த பரப்பிரமமே சதாசிவமென்றும் வேதாந்தங்கள் முறையிடுவதால் இருவரையும் பிரமமென்றே சொல்லத்தகும் இச்சந்தேகம் இனியுரைக்கும் கபீர்தாஸ் முதலானவர்களுடைய சரித்திரங்களாலே நிவாரணமாகுமெனத் திருவாய்மலர்ந்தினி யுங்களாசிரமங்களுக் கெழுந்தருளுங்களென விடைகொடுத் தனுப்பிப் பிர்மானந்தத்திற் படிந்திருந்தார். இந்த ஜெயதேவர் சரித்திரத்தை அன்புடனனுதினம் பாராயணஞ் செய்வோர்களும் சிரவணஞ்செய்வோர்களும் வாசுதேவன் மகாதேவன் கருணையும் பிரமக்ஞானமும் சாந்தகுணமும் அஷ்ட ஐசுவரியமும் பெற்று சுபமங்களத்துடன் வாழ்வார்கள்.

பிரமோபதேச அத்தியாயம் முற்றிற்று.

சிவபத்தர் வாக்கியம்.

அஞ்சலென்றகரதலமுங் கணபணகங்கணமும்
அரைக்கிசைந்த புலியுடையு மம்புலிச்செஞ்சடையும்
நஞ்சமுண்டமணிமிடறு முன்னூலுமார்பும்
நலந்திகழ்வெண் ணீற்றொளியு மறிமான்மழுவும்
கஞ்சமலர்ச்சேவடியுங் கருணைபொழிமுகமும்
காமனையன் றெரித்ததிருக் கண்களொருமூன்றும்
பஞ்சடிசிற்றிடைமடந்தை யொப்பனைபாகனுமாய்ப்
பால்வண்ண னுளத்திருக்கப் பயமுண்டோவெமக்கே.

என்றுரைத்த பதிக்கவர் சதியுரைத்த வாக்கியம்.

ஆக்கையெனும் புழுக்குரம்பை யணைந்தழியாப் பொருளை
அருளொளியைப் பராபரத்துக் கப்புறமாமறிவை
நீக்கமற மயிர்முனைக்கு மிடமறநின் றிலங்கும்
நிறைந்துநின்ற பெருவெளியை நினைவிலெழுஞ் சுடரைப்
பாங்கியங்கள் செய்தனந்தத் தவக்குறைகண் முடிக்கும்
பழவடியர்க் கருளுதவும் பசுந்துணர் கற்பகத்தை
வாக்குமனவிகற்பத்துக் களவுபடாவொன்றை
மாசற்ற பெருவெளியை மனவெளியி லடைப்பாம்.

வாழிசந்த விருத்தம்.

பூமிமுதலைம்பூதம் பூரணமாய்வாழ்க பொறிகளைந்து நெறியிலகும் புண்ணியர்கள்வாழ்க, நாமிங்குதுதிசெய்ஜெய தேவர்புகழ்வாழ்க நற்சரிதையைச்சொல்லு நாபாஜிவாழ்க, நேமிபுகழ்மாரிமுத்துப் பிர்மம்வாழ்க நீடுமிச்சரிதைதனக் குதவினர்கள்வாழ்க, ஆமிந்தசதுர்வேத சித்தாந்தசபையோ டருள்வாக்குவேங்கட தாசனும்வாழ்க.

ஜெயதேவ ஸ்வாமிகளின் சரித்திரம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீபாண்டுரங்கவிட்டலாயநம:

இரண்டாவது

கபீர்தாசர் சரித்திரம்.

துதி கவி.

தாயாரகட்டிற் பிறக்காதோன் தரையினம்போ லிறக்காதோன்
மாயாவிலாசந் தனைக்கடந்தோன் மனையாடன்னை யயலானுக்
காயாசமிலா தடியர்க்கா வளித்தோன் றனுசன் றலையரிந்தோன்
தூயோன்கபீரா னந்தனைநாந் தொழுதுவினைக்கு விடைகொடுப்பாம்.

முதலாவது அத்தியாயம்.

கபீர் உற்பத்தி.

திருமால் சக்கரத்தைப்போ லிவ்வுலகைச் சூழ்ந்திருக்கும் திரைகள்வீசும் கடலிலிருந்து சூரியோதயமானதும் உத்தவசித்தர் முதலானவர்களும் திவ்வியமான சந்த்ரபாகா நதியில் ஸ்நானஞ்செய்து ஜபதபங்களை முடித்துக்கொண்டு கபீர்தாஸ் முதலான பிர்மக்ஞானிகளது சரித்திரங்களை வடமொழியிற்செய்து அதனாலிவ்வுலகிலுள்ள மானிடர்களை ஈடேற்றும் பிரமாம்சனான திரிகாலங்களை உணர்ந்த நாபாஜி சித்தரிடம்போய் அவருடைய திருவருட்கமலக் கழல்களுக்கனந்தம் வந்தனந்தந்து ஓ மாதவனே! சுகாவதாரனான கபீர்தாஸ் சரிதையைத் திருவாய்மலர்ந்தருளி எங்களைப் புனிதராக்குமையாவென்று வணங்கி நிற்க,

நாபாஜிசித்தர் அகமு முகமுமலர்ந்து சகஸ்த்ராரமான ஆக்னேய சக்கரத்தில் வளியையேற்றி ஒளியைப் போற்றி ஒளியுந் திரிசியமென்றகற்றி பரவெளியாகி ஆனந்தமாத்திரமாயிருக்கும் சித்தர்களே! எனக்குகந்த பத்தர்களே! மூவரையுந் தேவரையும் மற்றியாவரையும் விழுங்கியுமிழா மாயையைக்கடந்த சுகப்பிர்ம ரிஷியினவதாரத்தைக்கேட் டுளங்களியாதவருமுண்டோ? ஓ தன்யர்களே! மிகவுங் கண்யர்களே! தேகமென்னு மரணபூமியில் விஷயங்களென்கிற பதாதிகளையும், இந்திரியங்களென்கிற வீரர்களையும், அந்தக்கரணங்களென்கிற சேனாதிபதியையும், எண்ணங்களென்கிற துரகங்



களையும், மதமச்சரங்களென்கிற கரிகளையும் மானுபிமானங்க ளென்கிற ரதங்களையும், இச்சையென்கிற சாரதிகளையும், ஜீவ த்வமென்கிற அரசனையும், ஞானமென்னும் பாணத்தைதொ டுத்து, கண்டதுண்டங்க ளாகும்படிவிடுத்து தன்னெதிரில் வராமற்கெடுத்து, ஆனந்தத்தை யடுத்து ஆத்மா மாத்திரமா யிருக்கும் முத்தர்களுநம் பாசமென்கிற நாட்டைவிட்டு ஆசை யென்கிற வீட்டைச்சுட்டு காமமென்கிற ஸ்திரீயை நீங்கி நிஷ்காமமென்கிற ஸ்திரீயுடனேங்கி நீந்தலென்கிற மார்க் கத்திற்சென்று ஏகாந்தமென்கிற வனத்தினில் கூடஸ்தபிர்ம மேதாகி தேகாதிகளுக்குக் கோனுகியிருக்கும் சுத்தர்களும் வாழுமிடமாகிய சகலரும் புகழும்படியான கங்காதீரமாகிய காசி தேசத்திலிருப்பவர், பாவிகளை மிகவும் வெறுப்பவர், சஞ்சலமனதை யறுப்பவர், மேல் வீழ்ந்தடிக்கப் பொறுப்ப வர், நித்தியசத்தி நிர்விகார நிராங்கார வஸ்துவாகிய பரப் பிர்மத்தை பரிசுத்த மனதுடன் ஐந்துவேளையு மிடையரு அன்புடன் தியானஞ்செய்பவர் * மோசலமா முனிவராலேற் படுத்திய துலுக்கர்குலத்தி லுற்பவித்தவர் தமாலென்னும் பேருடையவர் விசாலமான வீடுடையவர், தான் ஜீவ இம் சைசெய்யும் துடுக்கர்குலத்தி லுற்பவித்திருந்தும் தன்னுயிர் போல் மன்னுயிரை பார்க்கவெண்ணி எந்நேரமுங் கடவுளை பஜனைபண்ணி நமது ஜீவனம் ஜீவ இம்சையில்லாமல் எத் தொழிலால் நடக்குமென்று யோசித்து, வஸ்திரம் நெய்யுந் தொழிலிலே நலமென்ருலோசித்து நன்ருய்நெய்வோருடன் நேசித்து யாவர்க்கு மிது நல்லதொழிலென் றுபதேசித்து வேறு தொழில்களைத் தூஷித்து நல்லயோசனை வந்ததென சந்தோஷித்து பீதாம்பரம் நெய்வோரைப் பூசித்துப் பரப் பிரம்ம சங்கீர்த்தனங்களைக் கோஷித்து நாணயமாய் நெய் யுந்தொழிலைக் கற்றுக்கொண்டு தனது நாயகியையும் நெய் யும்படியாய் விண்டு கொல்லாவிரதமே நல்ல விரதமென்று ஞானவழியிற் சென்று அஞ்ஞான மனதைக்கொன்று கடவு ளே நமக்குத் துணையென்று நாமென்னு மாங்காரத்தைவெ ன்று பழவர்க்கங்களைமென்று அன்னம் பருப்பேதின்று சா துக்கள் சங்கமேநன்று மற்றவர்களுறவு நன்றன்று எல்லா சமயத்துக்கும் தெய்வம் வொன்று எனப்புகன்று இல்லறத்

* மோசலமாமுனிவரா லேற்பட்டவர்களே மொசல்மான்கள்.

தில் நல்லறத்துட னிருந்து சாதுகளைக் கடிக்கடி விழுந்து அன்பாய்ச்செய்து அகம்பாவத்தைக்கொய்து ஏழைகள்மேற் கருணைமழை பெய்து ஏழைகளை வருத்துவோரை வைது நெய்யுந்தொழிலால் திரவியஞ் சேகரித்து, லோபகுணத்தை திரஸ்கரித்து, சதாகாலமுஞ் சாதுக்கள் பணிவிடை செய்து கொண்டிருக்கிற தருணத்தில்,

ஓர் மகாத்மா இவர்கள்செய்யும் பணிவிடைக் குகந்து இவர்களுக்கெல்லாப் பாக்கியமிருந்தும் புத்திரபாக்கிய மில்லாக்குறையால் சற்றுத் தாழ்வடைந்திருக்கிறார்களென் றன் பின்மிகுதியால் தமால் மனைவியாகிய ஜிஜ்ஜாபீபியை நோக்கி, ஓ அம்மா புண்ணியவதி! உனக்கு முப்பத்திரண்டு லட்சணங்களும் ஈஷ்வர பக்தியும் பிர்மக்ஞானமுமுள்ள ஓர் புத்திரன் கிடைக்கக் கடவனென்றாசீர்வதித்துத் தன்னிருப்பிடம் போக ஜிஜ்ஜாபீபி மிகவும் மனமகிழ்ந்து பெரியோரைப் புகழ்ந்து தன்பதியிடம் வந்து வந்தனந்தந்து ஓ சுவாமி! யாரோ ஓர் மகாத்மா எனக்குப் புத்திரசந்தான முண்டாகும்படி ஆசீர்வதித்துப் போனார் அவர் வாக்கியப்படியே நமக்குப் புத்திரபாக்கிய முண்டாகுமாவென்று கேட்க அதற்கு தமால் பெரு நகைபுரிந்து ஓ பெண்ணே! என்னிருகண்ணே! உனக்கெவ்வன பருவங்கடந்து விருத்தாப்பிய பருவம் நடந்து வருகின்றது இனி யுனக்குப் பிள்ளைபிறக்குமா? உனக்குற்ற எண்ணமிறக்குமா? அப்படி குழந்தை பிறந்தாலும் குழவியால் மோக்ஷமடைவோமா? ஆனந்தம் பெறுவோமா? பாவங்கள் நசித்துப்போமா? இகவெண்ணங்க ளிறந்துபோமா? இல்லையே நீ நினைத்திருப்பது தொல்லையே? நாணமின்றி யுரைத்தா யிச்சொல்லையே? நீ மோட்சமடைகிறவளல்லையே? அடி பாவையே! பூவையே! நமக்குரிய மைந்தன் கொல்லா விரதமே யாதலால் ஜீவகாருண்யத்தைக் கடைபிடித் தொழுகவென்றுரைக்க,

அதற்கு ஜிஜ்ஜாபி ஓ என் பிராணவல்லபா! தெய்வவாக்குப் பொய்த்தாலும் பெரியோர்கள் வாக்குப் பொய்க்காதே? பொய்த்தால் பெரியோர்களென்று சொல்லலாகாதே! அப்படியிருக்க நீரிப்படி சொல்லலாகுமா வெனப்புகல, அதற்குத் தமால் அடிமானே! இன்பந்தருந்தேனே! பெரியோர்கள் வாக்கும்! வேதவாக்கும் மண்ணாசை பொன்னாசை மகவாசை முத

லானதுந் துறக்க வேண்டுமெனச் சொல்லியிருக்க பிள்ளை பிள்ளையென்று பிதற்றுகிறாய் பெரியோராசீர்வாதஞ் செய்தாலும் நமக்குப் பிள்ளைபிறக்கவே பிறக்காது போ போ (பேதமையென்பது மாதர்க்கணிகலம்) என்னுஞ்சொல்லை நிலை நிறுத்தினையென்று நவில, அதற்கு ஜிஜ்ஜாபீபி ஓ என்பிராண நாயகா! எனக்காசிசெய்த பெரியோர் வாக்கியப்படி நமக்குப் பிள்ளைப்பேறு கிடைக்கும் நடவாக்காரியமும் நல்லோரால் நடக்கும். ஏனெனில் முன்னம் ஓர் பெரியோரால் ஓரூர் தலைகீழாய்ப் போனதும் (மன்சூரென்றும்) புண்ணியவானைழைக்க சூரியனோர் பர்வதத்தி லிறங்கினதும் இறந்துபோன குழவி யுயிர்பெற்றெழுந்ததும் உண்மையல்லவா? சாதுக்கள் மகிமையை விரித்துச் சொல்லவா வென்றுரைய அதற்கு தமால் அடி கோதையே, அறிவில்லாய் பேதையே, இகவாசை நீத்தவர்களே புனிதர் மற்றவர்க ளீனமனிதர் என்றுராணத்தில் முறையிடுவதறிந்தும் இகவாசையான மகவாசை கோறினை, வேத வாக்கியத்துக்கு மீறினை மலையைக்கெல்லி எலியை பிடிப்பதுபோல, நெடுநாளாய் என்னுடன் கூடி கடவுளை தியானஞ்செய்தும், இகவெண்ணங்களைக் கொய்தும் துச்சமான இச்சைக்குட்பட்டாய் மகாத்துமாக்கள்பால் கேட்டுக்கொள்வது அநித்தியப் பொருளையா? நித்தியப் பொருளையா எண்ணறக்கற்று எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பின்புத்தி என்கிற பழமொழி யுன்னிடத்திற் பிரத்தியக்ஷமாய்க் கண்டேன், சீ சீ புத்திரவாஞ்சையை யிக்கண மகற்றிவிடென்றுரைத்து தனக்குரிய தொழிற் செய்யப்பட்டு நூலையே ந்திக்கொண்டு கெங்கை கரையிற்சென்று பட்டுநூலின் சிக்கை வாங்கிக்கொண் டிருக்கையில்,

பிள்ளை பேற்றுக்காக அனேகர் கங்கையில் ஸ்நானஞ் செய்து பாகீரதியை நோக்கி, ஓ கங்காபவானி! எங்களுக்கு மகப் பேறுண்டாகும்படியாய் வரமளிப்பாயென்று தோத்திரஞ் செய்கிறதைக்கேட்ட தமாலாச்சரியப்பட்டு ஆஹா குழந்தைகளுக்காக எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள், மகவாசை மகா பெரிதென்றே சொல்ல வேண்டும். இதனாலேயே நமது மனைவி வெகுநேரந் தர்க்கஞ்செய்தாள். க்ஷணபங்கமான இம்மலவுடலை மெய்யென்று நம்பி இழிவான குழலியாசையால் குழம்பும் ஜீவர்களி னஞ்ஞானத்தை குழைந்த மந்தபுத்

தியை எந்த விதத்தினாலும் போக்குவதரிதல்லவா ஓ தெய்வமே மோகாந்தகாரக்குகையிற் சிக்கியிருக்கும் ஜிஜ்ஞாஸியுன்றிருவடி யடைவதெப்படி என்னகாரணத்தா லவளுக்குப் புத்திரபாக்கிய மில்லாமற் செய்தாய் குழப்பமுள்ள மனைவியாளுடன் கூடி வாழ்கிறதைப் பார்க்கிலும் செழிப்புள்ள அடவியிற் போய் தியானஞ் செய்வதே யுத்தமமல்லவா என்றனந்தம்விதங்களா யோசித்துக்கொண் டிருக்கையில்.

கையிலிருந்த பட்டுநூல் நழுவி கங்கையி லடித்துக்கொண்டுபோயிற்று. அதுதெரிந்த தமால், அடா! நம்முடைய பேய்த்தனம் பட்டுநூ லிழந்துவிடச் செய்தது புத்திரனு லென்னபேற்றைப் பெறப்போகிறாள், புத்திரர் பிறப்பது மிருப்பது மிறப்பதுந் துன்பமேயன்றி இன்ப மில்லவே யில்லை அஞ்ஞானிகள்தோறும் நித்தியப் பொருளை மெஞ்ஞானிகள் வெட்கமின்றி வேண்டுவார்களா அன்பாய் மகவைத் தீண்டுவார்களா? பன்றியுடன் சேர்ந்த கன்றுங் கெட்டதுபோல் பாமரரைப்பார்த்து வைராக்கியத்தைத்தோற்று வட்டிக்காசைப்பட்டு முதலிழந்ததுபோல் பாலன் யோசனையாற் பட்டுநூலை யிழந்தேன், வீணெண்ணத்தாற் குழைந்தேன் இப்பட்டுநூலால் ஐம்பது பகிரிகளுக் கன்னமிடலாமே? பிரம்மானந்தமட்படலாமே என்கிற யெண்ணத்துடன் நூலைக் கண்டெடுக்க கங்கையோரமாய்ப் பார்த்துக்கொண்டே மனித சஞ்சாரமில்லாக் காட்டிற் பிரவேசித்து, ஆஹா! இதென்ன பேராசையாற் பேருற்றதுபோ லிருக்கின்றது. அற்பமான பட்டுநூலாசையாற் கால்கள்நோவ நடந்தேன் கானகத்தை யடைந்தேன், ஆயாசத்தா லிடைந்தேன், வேதவாக்கியத்தை கடந்தேன், சீசீ காட்டையடைந்த நாமினி நாட்டையடைவது மாசையே மனக்குறையுள்ள மாதுடன்கூடி வாழ்கிறதைவிட வனத்திலிருந் தரிதான தவஞ் செய்கிறதே உத்தமமென்று அங்கிருக்குமோர் பர்னசாலையில் பிரவேசித்து மெய்ப்பொருளை யாசித்து இரு கண்களையும்மூடி பரப்பிர்மத்தைநாடி பல சங்கீர்த்தனங்களைப் பாடி கடவுளுக்குவாடி தபஞ் செய்யத் தொடங்கினர்.

கேட்டீர்களோ சித்தர்களே, தமாலிப்படி யுத்குருஷ்டமான தபத்திலிருக்கும்போது வைகுந்தத்தில் ஸ்ரீமந்நாராயணர் சுகப்பிரம்ம ரிஷியைநோக்கி, ஓ மாயாதீதனே, தனை

மறந்த அவதூதனே, நாமனைவரும் யோசித்தபடியே நீ இந்தக்ஷணம் புண்ணிய க்ஷேத்திரமான வாரணாசியிற்போய் ஜீவகாருண்யத்தையே விரதமாக பூண்டு நெய்யுந்தொழிலாற் சீவனஞ்செய்யும் மிகவும் புண்ணியவானான தமால் மனைவியின் கர்ப்பத்திற்றங்கி ரிஷி பிண்டத்தைப்போல் ஓர் முகூர்த்தத்திற்குள் காசினியிலுள்ளோ ராச்சரியப் படும்படியா யவதாரஞ் செய்வாயென்றுக்யாபிக்க அதற்கு சுகர் பகவானை பணிந்து ஓ ஆண்டவனே! என்னைத் துர்க்கந்தமான கர்ப்பத்திலிறங்கி ஜெனமித்து மயங்கி மாயையிற்சிக்கி வாட்டத்தாற் சொக்கி இஷ்ட தெய்வமாகிய உம்மையும் அகமமதையைமாற்றும் பிர்மக்ஞானத்தையும் மறந்து அஞ்ஞானம் நிறைந்து தேருருளையைப்போல் பல ஜென்மங்களெடுத் துழலும்படியாய் யுக்தி செய்தீரோ? உமதாசீர்வாதத்தா லடியேனு முமதுமாயையைச் சற்றறிந்தவனே உலகிலுள்ள ஜீவர்களை இரட்சிக்கும்படியான கருணையுமக்குப் பூரணமாயிருக்குமாயி னுமது மாயையென்னுந் திரையைச் சற்றே நீக்குவீராகி ல்க்கணமே சகல ஜீவர்களும் பிர்மக்ஞானத்தால் மோட்சமடைவார்கள் மத்தியிலிப்படி செய்யக்கூடாதென்று லடியேனுக் குத்தாவு கொடு மிக்கணமே யிவ்வுருவுட னகிலத்திற்போய்ச் சகலருக்குஞ் சாந்தகுணரான உம்முடைய திவ்விய திருநாமங்களின் மகிமையையும் மமதங்காரத்தை மாற்றும் பிர்மக்ஞானத்தையும் போதித்து வருகிறேனென்று வணங்கும்போது,

பகவான் சுகயோகியை நோக்கி, ஓ மாதவனே! எந்தெந்தயுகத்தி லெந்தெந்தவிதமா யுலகத்தை ரட்சிக்கவேணுமோ அந்தந்தயுகத்தில் அந்தந்தபடி யவதரித்து, இரட்சிக்காமல் உன்னெண்ணப்படி செய்தால் விபரீதத்துக் கிடமுண்டாகும். அன்றி, நீ இவ்வுருவோ டகிலத்திற்சென்றால் வித்தியாசம்பந்தமுள்ள சிலர்கள் நித்தியத்தையே கோருவதன்றி பட்சிமுகத்தோடு நிர்வாணியா யிருக்குமுன்னைப் பரியாசமே செய்வார்கள். மேலும் கலியுகதர்மத்தை நீ யறிந்தவனேயன்றி அறியாதவனல்ல, மூவர் தேவர் முனிவருருங்களான விக்கிரகங்களை நீக்க இரட்சிக்கும்படியான துடுக்கர் உம்மைமுடுக்காமலெளிதில் விடமாட்டார்களாதலா லென்வாக்கியப்படி நடந்துக்கொள்வதே யுத்தமமென்று திருவாய்மலர்ந்தருள

அதற்கு சுகர் ஓ பகவானே! என்னுயிர் நீங்கினு மாதரத்தில் மாத்திரம் பிரவேசிக்க மாட்டேனென்று சாற்ற, அதற்கு ஸ்ரீமந்நாராயணர் ஓ சுகமுனியே, நான் வாமனவதாரத்திலும், பரசுராம, ஸ்ரீராம, கிருஷ்ணவதாரத்திலும் ஒரோர் புண்ணியவதியின் கர்ப்பத்திலிருந் தவதரித்தது நீயறிந்தது தானே. அல்லாம லிப்போது நானும் அரனயனுதிசத்தியும் ஓர் புண்ணியவதியின் கர்ப்பத்திலிருந் தவதாரஞ்செய்ய யோசித்திருக்கிறோ மிதிலுனக்குச் சந்தேக மிருக்குமாகில் அவர்களையுங் கேட்டுத் தெரிந்துக்கொள்ளுமென்று அம்மூவரும் வரும்படியாய்ச் சிந்திக்க, உடனே சிவனயனம்பிகையும் வைகுந்தத்திற் கெழுந்தருளிப் பகவானிடம் க்ஷேமவார்த்தைகள் பேசியபின் சுகரைநோக்கி, ஓ புண்ணியவானே! ஈண்டிவ்வாண்டவன் புகன்ற வாக்கியப்படியே நாங்களோர் கன்னியி னகட்டிலிருந் தவதரிப்பது சத்திய மெனப்புகல அதற்குச் சுகர் மூவரையும் வணங்கி, ஓ யான்தொழுந் தெய்வங்களே! நீங்கள் மாயாவிளையாட லுடையவர்களாதலால் துர்க்கந்தமான கர்ப்பத்திற் பிரவேசித்தாலும் சேற்றிலுற்ற பூச்சியைப்போல நிர்மலமாகவே யிருப்பீர்களன்றி சர்வக்ஞருள்ள தேவரீர்களெப்படி உற்பவித்தாலு முற்பவிக்கலாம் கிஞ்சிற்று வழிவுள்ள அடியேன் மாயையினுட் பட்டபின் மாயைச்செயிக்க வல்லமையிராது முன்னமோ ரரம்பையை யனுப்பி பரிசோதித்ததின்னும் மறந்துபோகவில்லையென்று தொழ அதற்குப் பகவான் ஓ சுகமுனியே! நீர் சிறு குழவியாய் கங்கையிற் பிரவேசித்து காட்டிற் றவஞ்செய்யும் தமாலுக்குக் குழவியாய்ப்போம் நாங்களு மவதாரஞ் செய்கிறோமென்றுக்யாபிக்க, அதற்கு அரிதாஸனுகிய சுகர், ஓ பகவானே அடியேன் கான்மூளையா யுலகிற்சென்று பிரமக்ஞானத்தையே முக்கியமாய் ஸ்தாபிக்கட்டுமா உமது திருநாமத்தையே ஸ்தாபிக்கட்டுமா வென்று வணங்க, அதற்கு மூவரும் பவானியும், ஓ முனீஸ்வரனே, நிர்க்குணமான பரப்பிர்மத்தைத் தியானஞ்செய்தும் துலுக்கரை சகுணத்தால் வெல்லக்கூடாதாதலா லவர்களை நிர்க்குணத்திலேயே வென்று சகுணத்தையும் நிர்க்குணத்தையு முலகத்தில் ஸ்தாபித்து எங்களைத் தொழாப் பாவிகள்மேல் கோபித்து ஜீவர்களை ரட்சியுமென்று கூற,

அதற்கு சுகர் நிர்க்குணமென்பதுயெது அதனையடியே னுக்குச் சவிஸ்தாரமாகத் தெரியச் சொல்லவேணுமென்று பணிய பகவான் முதலானோரும் சொல்லுவதற்கு யோசனை செய்யும்போது பகவான் மற்றவர்களுடைய கருத்தை யுணர்ந்து சுகரைநோக்க, ஐயா சுகமுனிவரே! நிர்க்குணத் தியான மென்ப தெப்படியெனில், நிர்மல, நிர்விகற்ப, நிரஞ்சன, நிராதார, நிரூப, நிஷ்களங்க, நிர்ப்பேத, நிர்ச்சேத, நிர் நாம, நிஷ்காம, நிர்க்குண, நிராங்கார வஸ்துவாகிய பரப் பிரமத்தி லெக்கியமாயிருப்பதே நிர்க்குணம். அப்பரப்பிர்மம் பொன்னைப்போலவும் மண்ணைப்போலவும் பஞ்சைப்போல வும் அயத்தைப்போலவும் கல்லைப்போலவும் சொர்னத்தைப் போலவும் நிரூபமாகியும் பிரமப்பிரளயத்தி லழியாததாயும் எங்கும் நிறைந்திருப்பதே பிர்மமாகும். அப்பிரம மில்லா விட்டால் மாயையேது அத்திரிகுணப் பிரதிபிம்பரான திரி மூர்த்திகளேது, ஒருவருமேயில்லை, மேலும் அகண்டம் அக ண்டசகனம், அசலம், அனந்தம், அபரமேயம், சின்மயம், தேசோமயம், சித்விலாசம், நித்தியம், சத்தியம், நிஷ்களா னந்தம், பரப்பிர்மம், பரமேஸ்வரம், சயம், துரியம், துரியா தீதம், விஸ்வம், பூரணம், விசுவாததம், விமலம், விசேஷம், வேதாதீதம், சுபம், சுப்தரம், சுயம்பிரகாசமும் பொருந்திய தெதுவோ அதுவே சத்தியக்ஞானனந்த நித்திய நிர்மல மாயிருக்கும் பரப்பிரம்மமென்றும் அப்பரப்பிரமமே ஆதி தெய்வமென்றும் இதிலெக்கியப் பட்டவர்க்கே ஆனந்தமென் றும் ஆனந்தமே மோட்சமென்றும் சொல்லப்படும். சந்திர கிரணத்தைப்புசித்து திருப்தியாகும் சகோரபட்சியைப்போல ஞானரசனையான பிர்மானந்தத்தைப் புசித்து துரியபூமியில் வசித்து நானென்பது நசித்துத் தேகேந்திரியங்கள் மூசித்து பரப்பிரமத்திலெக்கியப்பட்டு இளைப்பாற்றி யிருத்தலும் எழுத லும் மறந்து பிரம்மானந்தம் நிறைந்து நடத்தலும் பேச லுங் குறைந்து தேகாபிமானத்தையுந் துறந்து சொஸ்தனுய் சகோரபட்சிக் குணவாகியும் எங்கும் சீதளபிரகாசமாய் நிறைந் திருக்கும் சந்திரனைப்போல உனக்குள்ளே குளிர்ச்சியடை ந்து அந்தக்கரணாதிகளுக்குஞ் சீதளத்தைத்தந்து குறையா மல் பரிபூரண சொரூபமாகி பிரபஞ்சமயமாகாமல் அதிருப்த மாயிருப்பதே நிர்க்குணத் தியானமென்றுரைதத பகவானைப்

பணிந்து சுகர் மகா பாக்கியமென்று முப்பத்திரண்டு லக்ஷ ணங்களும் வாய்ந்த சிறுகுழந்தையுருவாகி பாகீரதியிற் பிர வேசிக்கையில் அம்மதலையைப்பார்த்த அரனயனுதி சத்தியும் மயங்கி நின்றூர்கள். மாயாவிலாசனுன பகவா னச்சிசுவை சுர நதியிற் பலதரமமிழ்த்தி பிர்ம்மிக்கும்படியாய் செய்ய அப்போ தக்குழவி சானவியிற் பலதரமமிழ்ந்தும் எழுந்தும் திக்குமுக்கிட்டு தட்டுகெட்டு பீதிமேலிட்டு தம்ஸ்மரணைகெ ட்டு முற்பிறப்பை மறந்துவிட்டு காகாவென்று கூக்குரலிட்டு பெருமூச்சு விட்டுக்கொண்டே மந்தாகினியி லடித்துக்கொண் டேபோகையில் பகவான் தமால் மனதிற் பிரவேசித்து புத்திர வாஞ்சையை யுண்டாக்கினுர்.

உடனே தபங்கலைந்து குழந்தையி னழுகுரலைக் கேட்ட தமா லிதேது இச்சுர நதியில் குழந்தையி னழுகுரல் கேட்கின் றதென் றதிசீக்கிரமாய்த் திரிபதகையி னருகிற்சென்று கோடி சூரியப் பிரகாசமான பாலகனைக் கண்டு, ஆனந்தங்கொண்டு ஆச்சரியமென விண்டு ஜிஜ்ஞாபீபி தவஞ்செய்தவளே பண்டு யென்று சொல்லிக்கொண்டு மனமிரங்கி மந்தாகினியிலிறங்கி வாரியெடுத்து மார்புடனணைத்து சுரநதியேறி சுதன் நசை மீறி அப்பனே மகனே, அழகான முகனே, ஒப்பிலாதவனே, ஒளிருமாதவனே, செப்புதற்கரிய செல்வமே, நலமே, இப் புவியேத்து மெழிலே, பொழிலே, துப்புளவடிவே, தாய் மறை மிடிவே, செப்பமே, திருவே, திவ்ய வுருவே, சுப்பிர மணியே, சுரர்மணியே, எப்படி நதியிலிறவாம லிருந்தாய் எப்படி மிதந்தீண்டென்னிடம் வந்தாய் எனக்குன்சேவை யை நீதந்தாய் எனக்கானந்தமீந்த வென்மைந்தாவென்று (கடந்தஞானியுங் கடப்பரோ மக்கண்மேற்காத லென்பதைப் போல) புதல்வனை யேந்திக்கொண்டு ஜலம் நாடினவனுக் கமிர்தமும், சிப்பியைத் தேடுவோனுக்கு முத்தும், வேசியைத் தேடுவோனுக்குப் பதிவிரதையும், பிட்சைக்கேகுவோனுக்கு ராஜரீகமும், எட்டியைத் தேடுவோனுக்குக் கற்பகமும், சூதா டுவோனுக்குப் புராணமும், துன்மார்க்கரைத் தேடுவோனு க்குச் சன்மார்க்கரும், கல்லைத்தேட ரத்தினமும், கழுதையை த்தேடக் குதிரையும், பைசாசைப்பூசிக்க கடவுளும், உலக வியாபாரத்தை நாடக் கடவுள் தியானமும் லபித்ததுபோல பட்டுநூலைத் தேடிவரத் தப்மும், தபத்தாற் சுபமும் கிடைத்த

பாக்கியமே பாக்கியமென்று பலபல விதங்களாயோசித்துமனை யாளிடம்போக ஆசித்து, ஓ அல்லா பிஸ்மல்லா, ஓ கர்த்த னே, பரிசுத்தனே, தெய்வமே கைம்மாரென்ன செய்வமே என்றனந்தம் விதங்களாய் தோத்திரஞ் செய்துக்கொண்டே காட்டைக் கடந்து நாட்டையடைந்து வீட்டினுட்புகுந்து மிகவும் மகிழ்ந்து மனைவியை நோக்கி வாட்டத்தைப்போக் கிக் காதலனைத் தந்து கடவுளைப்புகழ்ந்து அடிபெண்ணே என்னிருகண்ணே, இத்தோற்றலை யாரோ கங்கையில் விடுத் தார்கள் நமக்குக் கொடுத்தார்கள் உன் துன்பத்தைக் கெடுத் தார்கள் என்தபத்தைத் தடுத்தார்கள் ஓ மகனே, இன்பந்தரு ந்தேனே, முப்பத்திரண் டிலட்சணங்களும் வாய்ந்த புத்திர சிகாமணி நமக்குக்கிடைத்தது சிலாக்கியமே நாம் செய்த பா க்கியமேதா, நீ யிருந்த யோக்கியமேதா, பெரியோருரைத்த சத்தியவாக்கியமீதோ, குழந்தையின்மேற் சுகந்த வாசனை வீசும் கோலத்தைப்பார், நமக்குண்டான அனுகூலத்தைப் பார் என்று துள்ளிக் கூத்தாடினர், சங்கீதம் பாடினர் இவ ரிப்படிச் சந்தோஷமேலிட்டுக் கான்முளையகப்பட்ட விந்தை யையும் கற்போன்றிருந்தொரு நொடியிலுருகின சிந்தையை யும் பலர்பாலுஞ் சொல்லிக்கொண்டே திரிகையில்,

ஜிஜ்ஜாபீபி பெரியோர் வாக்கியப்படியே கிடைத்த அழ கான பிள்ளையைப்பார்த்த சந்தோஷத்தாற் றன்னைமறந்து ஆனந்தம் நிறைந்து துன்பமிறந்து அளவற்ற ஆசைபிற ந்து அன்பார்ந்த நெஞ்சுடன் அருஞ்சுதனை மார்பிலணைத் துக்கொண்டாள். உடனே பகவானருளால் பால்சுரந்து வழி ந்தது. வழியவே குழந்தையைத் தான் பெற்றதாகவே மோக மாகி பாலூட்டி நீராட்டி பாராட்டி ஆலங்காட்டி மைதீ ட்டி ஆபரணம் பூட்டி தொட்டிலில் மாட்டி ஓசை கூட்டி தாலாட்டி ஏனையாட்டி துன்பங்களையோட்டி கண்களை நா ட்டி என்கண்ணூட்டி நீ மேட்டானமேட்டி மற்றவர்கள் தோட்டி என்றருமையாய் வளர்த்து அருங்கொழுந்துபோற் றளிர்த்து களிப்பென்னுங் கடலிற்படிந்து ஒன்றுந் தோன் ருதவளா யிருந்தாள்.

தமாலோ தசரதன்மகன் ஸ்ரீராமன் பிறந்தபோதும்வசுதே வன்மகன் ஸ்ரீகிருஷ்ணபகவான்ஜன்மித்தபோதும் அடைந்த சந்தோஷத்தைப்போ லுடலமிருக்க விருக்கப்பூரித்து உச்சாக

மிகுந்து வீட்டினுட்புகுந்து குழந்தையின்மேல் அபீர்வா சனை வீசுதலால் * கபீரென்று பேரிட்டு பந்துக்களுக்கு விருந் திட்டு அதிதிகட்கன்ன மன்புடனளித்து சதிபதி தங்களிற் ருனே களித்து மிகவும் அருமையாய் வளர்த்துவருங் காலத் தில், முன்னம் சுரருலகில் தேவேந்திரன்முன் சுகப்பிர்மரிஷி யைப் பங்கஞ்செய்து வருகிறேனென்று பிரதிக்கினை செய்து சுகராசிர்மத்தை யடைந்தவருடைய பேரழகைக்கண்டு அதி மோகங்கொண்டு தயங்கி மயங்கி அவரை வெல்வதற்குத்தன் னலாகாமல் தேவர்முன்போக நாணமுற்ற அரம்பையான வள் தன்னிச்சையை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டுக் கபீர் வளருங் குலத்தில் தானுமவதரித்து கண்டோர் மயங் கும்படியான மின்னற்கொடிபோ லழகுடன் வளர்ந்துவருங் காலத்தில், அக்கன்னிகையைப் பார்த்த தமாலுஞ் ஜிஜ்ஜாபீ பியும் நமது மைந்தனுக்குகந்த ரதி யிவளேயாமென் றம்மா தின் தாய்தந்தையரை வாஞ்சையாய் விசுவாசித்து மிகவும்நே சித்து திரவியமுதல் வஸ்திராபரணங்களளித்து சம்பந்திகள் மிகவுங்களித்து பலவந்தமாய்ப் பேசும்படியாய்ச்செய்து ஓர் நாள் செல்வனை சிங்காரித்து அழகைக்கண்டு பூரித்து சம்பந் தியின் மனைக் கழைத்துக்கொண்டுபோய், ஓ புனிதர்களே! உங்களுடைய சுந்தரியை நமது மைந்தனுகிய இச்சுந்தரனு க்கு மணஞ்செய்ய வாக்களிக்கின்றீர்களா வென்றுகேட்க, கபீ ரழகைக் கண்ட அவர்களுள்ளங் களிகூர்ந்து நமது கன்னி கைக்கிவனே தகுந்த மணளனெனத் தேர்ந்து வேறொருவர்க் களிக்கலாமென்கிற சந்தேகந்தீர்ந்து உங்கள் தனுசனுக்கெங் கள் வனிதையே மனைவியென ஒற்றுமையுடன் சேர்ந்து உற்ருேர் மற்ருேருடனே நிச்சய தாம்பூலமும் மாற்றிச் சந் தோஷ சாகரத்தில் அமிழ்ந்திருந்தார்கள். கேட்டீர்களோ சித்தர்களே யென்று பின்னும் நாபாஜிசித்தர் சொல்லத் தொடங்கினர்.

---

* கபீர் உற்பத்தியைச் சிலர் வேறுவிதமாய்க் கூறுகின்ருர். ஆனல் இதிற் குறித்தபடியே முன்னேர்செய்த நூலிலிருக்கிறது.

இரண்டாவது அத்தியாயம்.

கபீர் சுன்னத்து செய்கிறதை மறுத்தது.

கேளும் காலனுக் கித்தூலத்தை ஒப்பிக்காத சீலர்களே! இப்படி சுகவாரிதியிலமிழ்ந்திருந்த தமாலுஞ் ஜிஜ்ஜாபீபியும் குலமுறைத் தர்மப்படி கபீருக்குச் சுன்னத்துசெய்ய யோசித்து ஓர் நன்னாளில் காஜி முதலான சகலரையு மழைப்பித்துச் செய்யவேண்டிய கிரிகைகளெல்லாஞ் செய்து முடித்தபின்,

காஜி: கபீருக்குச் சுன்னத்துச் செய்யுமென்று மஞ்சிகனுக் காக்யாபிக்க,

கபீர்: காஜியை நோக்கி, இதென்ன விபரீதச் சடங்கினைச்செய்ய யோசித்தீரென்று வினவ?

குலகுரு: நமது மரபிற் செய்யவேண்டிய கொள்கையென,

கபீர்; இச்சடங்கு ஆண்பிள்ளைக்கு மாத்திரமோ பெண்பிள்ளைக்குங்கூட வுண்டோவென?

ஆசான்: ஆண்பிள்ளைக்கே செய்யவேண்டியதென,

கபீர்: இதனாலடையும் பயனேதென?

ஆரியன்: இதனாற் பரிசுத்தமாகின்றானென,

கபீர்: இதனா லாண்பிள்ளை தான் பரிசுத்தமாகின்றானென பெண்பிள்ளைகளோ வென?

தேசிகன்: மந்திரோப தேசத்தாற் சுத்தமாகவேண்டுமென,

கபீர்: மந்திரோபதேசத்தா லாட்டவன், கிருதார்த்தனாகமாட்டானோவென?

உபதேசி: புருடர்க்கு அனுக்கிரகமுஞ் சுன்னத்துஞ் செய்யவேண்டுமென் றாதியிலிருந்து நமது பெரியோர்களுக்கு கடவுள் விதித்திருக்கிறபடியா லகத்தியம் செய்துக்கொள்ளவேண்டுமென,

கபீர்: கடவுளிட்ட கட்டளையா யிருக்குமாயின் கட்டளையிட்டது முதற்கொண்டு அசுத்தமானதைச் சிருஷ்டிக்கவேமாட்டார் நாளதுவரையிற் சிருஷ்டித்துக்கொண்டே வருகிறபடியா லாண்டவனிப்படி விதித்திருக்க மாட்டாரென்கிறகருத்தைப் பிரத்தியட்சமாய்க் காட்டுகின்றதென,

காஜி: நமக்கு மூதன்மை யாசாரியனான இப்ராயிம் பயம்பர் காலத்தில் கடவுளுத்தரவு செய்திருக்க இல்லையென உனக்குள்ள குழந்தைப் பருவமல்லவா?

கபீர்: இப்ராயிம் என்பவன் கடவுள்மேற் சத்தியஞ்செய்ததைக் காப்பாற்றும லற்பமான விஷயானந்தத்தை யிச்சித்துக் கடந்தபடியா லிவ்வாக்கினை யவனுக்குக் கிடைத்ததேயன்றி கடவுளிட்ட கட்டளையல்லவென.

க்ாரியகுரு: (நம்ருத் அரசன்) அக்கிரமமா யவருக் காக்கினை கொடுத்தானேயன்றி பயம்பர் யாதொருகுற்றமுஞ் செய்தவரல்லவென,

கபீர்: இப்ராயிம் சாராவென்னும் இளையமனையாள்மேற் கொண்ட மோகத்தால் அவளைப்பார்த்துன் னுத்தரவுக்கெதிருத்தரஞ் சொல்லேனென்று கடவுள்மேற் சத்தியஞ்செய்து கொடுத்து மூத்தமனைவியான ஆஜராவென்பவள் மகாபதிவிரதையா யிருப்பதன்றிக் கர்ப்பவதியா யிருப்பதறிந்தும் கடினநெஞ்சை யுடையவனா யிளையாளிட்ட கட்டளையைக்கடவாமல் மனிதசஞ்சாரமில்லாத ஆரண்யத்திற் கொணடுபோய் விட்டுவந்தபின்பு கடவுளருளால் ஆஜராவென்பவட் கொரு தீங்குமின்றி புத்திரனுற்பத்தியா யரசாங்கமுங் கிடைக்கவே அதைக்கேள்விப்பட்ட இப்ராயிம் ஆஜராவிடம்போக அது தெரிந்த சாரா மறுத்தனேக மாக்கினைமொழிகள் புகலவும் கேட்காமற் போனதால் சாராவும் அரசனும்போய் அந்தப் பயம்பரை அவமானப் படுத்தினர்கள். இதன்விபரம் சவிஸ்தாரமாய் உங்கள் சரித்திரங்களில் வரைந்திருக்கின்ற தன்றோவென காஜி, நமருத் என்னும் அரசனாலெங்கள் ஆசாரனுக்கு நடந்தது முதற்கொண்டு மற்றெல்லோரையும் இப்படியே செய்து கொள்ளும்படியாய் கடவுள் கட்டளையிட்டதினாலவர் மரபைச்சார்ந்த நங்குலத்தோர் அசுத்தமானவைகளை களைந்துக்கொண்டு வருகின்றார்களென, கபீர் இப்ராயிம் இரண்டாவது மனைவியான சாராவின் மைந்தனாகிய இசாக்கென்பவனே மறுத்திருக்க நாமெனப்படி சம்மதிக்கக்கூடுமென, காஜி அந்த இசாக்கென்பவன் பைசாசத்தின் வார்த்தைக்குட்பட்டு இபிலிஷ் ஆய்ப்போனான் இவனைப்போலவே நீயும் ஆகவெண்ணங் கொண்டாயோவென கபீர் இசாக்கென்பவன் ஓர்

மதத்துக்குக் காரணகுருவானவ னன்றோவென காஜி * இசா மதத்தோருக்கு ஞானந்தவிர மற்ற பிரம்மதியானம் முதலான வைகளில் சமானமானவராயிருந்தும், சுன்னத்து செய்துக் கொள்ளாமையால் இழிவுள்ளவரானார்களென கபீர் ஞான மில்லாதவர்கள் தியானமுதலானவைகள் செய்வதால் ஓர் பிர யோசனமுண்டு. அதெப்படியெனின், விழியில்லாதவன் வழி யறியாததுபோல் ஞானக்கண் துலங்காதவர் அஞ்ஞானாந்த காரக் கூபத்தி லமிழ்ந்திருப்பார்கள். இது உண்மைதான் இப்பேர்க்கொத்த ஞானமார்க்கம் அறிந்துக்கொள்வதற்கு அனுகூலஞ்செய்யாமல் சுன்னத்து செய்யவந்த காரணமே னென, காஜி வரன்முறை தர்மப்படி செய்துகொள்வதேயன்றி இதனால் ஓர் பிரயோசன மில்லையென, கபீர் பிரயோசனமில் லாக் காரியத்துக்கு நானொருகாலத்து முட்படமாட்டேன் இதை க்ஷமித்து ஞானமார்க்கத்தைப் போதியுமையா வென, காஜி கபீர்பேசும் சாதுரிய வசனங்களைக்கேட் டதிசயித்து அறியாச் சிறுகுழந்தையாகி உனக்கு ஷரீகத் என்றால் சரிதை தரீகத் என்றால் கிரிகை அகீகத் என்றால் யோகம் என்னும் மூன்று மார்க்கத்திற் றேர்ந்தவனன்றோ மாரீபத் என்றால் ஞானமென்னும் மார்க்கத்தை அனுசரிக்கவேண்டும்.

இப்போதுரைத்த முதற்படியான ஷரீகத் என்பதே அறியாச் சிறு குழந்தையாகிய நீ இறுதியான மாரீபத் மார்க் கத்தைக் கேட்கின்றாய், இதைச் சொன்னதினால் நீயடையும் பயனேதென கபீர் ஜனனமரணமும் அஞ்ஞான வகங்காரமும் துன்பமும் சிற்றின்பமும் ஆசாபாசமும் மிருத்தியு பயமும் அபஜயமுமின்றி அகண்ட பரிபூரண சச்சிதானந்த நித்ய நிர்மல சொரூப சாக்ஷாத்கார, சுடம்பிரகாசமாய் விளங்கும் பிர்மத்தை யுணர்ந்து சதாகாலமும் ஆனந்தவாரியில் மூழ்கி யிருக்கலாமென காஜி அப்பப்பா சமஸ்த தர்மங்களறிந்த இச்சிறுவன் நாமென்ன சொன்னபோதிலும் சுன்னத்துசெ ய்துக்கொள்ள மாட்டான். நான் என்னிருப்பிடத்துக்குப் போகிறேன் நீபெற்ற தந்தையாதலால் சுன்னத்து செய்துக் கொள்ள சம்மதிக்கச் செய்து என்னை யழைப்பியுமென்று கூட்டங் கலைந்து தங்கள் தங்கள் இருப்பிடமடைந்து கபீர்

* இலாக்கை ஜஜிக்கென்றும், இவர் மதம் கிறிஸ்து மதமென்றும் சொல்லப்படும்.

பேசிய வார்த்தைகளையெல்லாம் உன்னியுன்னி ஆச்சரியப்ப டத் தொடங்கினர்கள். இங்கே தமாலும் ஜிஜ்ஜாபீபியும் கபீரைநோக்கி, அப்பா ஒப்பிலாமகனே! அறியாக்குழந்தை யாகிய நீ காஜீ முதலான நமது மரபுக்குச் சிறந்த பெரியோர் களோ டெதிர்த்துப் பேசலாமா? குலதர்மத்தை வெறுக்க லாமாவென, கபீர் ஓ என் தாய்தந்தையே! மோக்ஷமடையும் மார்க்கத்தைத்தவிர வேறு காரியங்களுக்கு நானுடன்படவே மாட்டேன். இது நிச்சயமென்று நம்புவீர்களென, தமால் கோபித்து அடா துஷ்டப்பயலே! தாய்தந்தை உற்றோர் மற் ருேர்களின் வாக்கியத்தைத் தள்ளிய உன்னை இப்போதே கொல்லுகிறேனென்று கோபக்குறிகாட்ட கபீர் தந்தையின் கோபத்துக்குப் பயந்து வெளியிலோடிப்போய் ஓரிடத்தில் மறைந்திருக்க ஜிஜ்ஜாபீபி மகன்மீதிருக்கும் அன்பினல் பல விடங்களிற்றேடிக் கண்டுபிடித்து வீட்டுக்கழைத்துக்கொண்டு வந்து பல புத்திகளைச் சொல்லியும் கேட்காத கபீர்மேற்கோ பித்து இவ்வளவு சஷ்ட கல்விகளெல்லாம் பேசும் நீ வேலை செய்தாலொழிய உனக்கு அன்னமிடுகிற தில்லையென்று ஓர் தரியிலுள்ள பட்டுநூலால் வஸ்திரத்தை நெய்யடாவென்று வைதடித்து வஸ்திரம் நெய்யும்படியாய்ச் செய்தான். கேட் டீர்களோ சித்தர்களே! அந்த இப்ராயிம் பயம்பர் உற்பத்தி வெகு விநோதமானது. அதைப் பின்னுலுரைப்பேன் அவர் கடவுளருளால் இவ்வுலகி லவதாரஞ் செய்தது அஞ்ஞானத் தை நீக்கி மெய்ஞ்ஞானத்தைப் போதிக்கவேயாம். பேயுலக ஸ்திரீயின் வார்த்தைக்குட்பட்டு அவருக்கு சுன்னத்துமுதலா னதும்செய்வது வெகு அக்கிரமம், அவரும் சத்தியத்துக்குட் பட்டு அவ்வாக்கினைக் குட்பட்டாரே யொழிய நினைத்தால் நம்ருத் அரசன் முதலானவர்களையும் பஸ்பமாக்கி விடுவார். உத்தமர்க்கும் ஒவ்வொரு காலத்தில் ஓர் தீங்குநேரிடும், வினை யின் காரணத்தையே நோகவேண்டும். இவர்மகிமையை பின் னுல்வரும் அவ்கடஷா சரித்திரத்தில் புலப்படக் காணலாம் என்றுரைத்து பிர்ம்மாவதாரரான நாபாஜிசித்தர் கபீர்சரிதை யைச் சொல்லத் தொடங்கினர்.

மூன்றாவது அத்தியாயம்

பிராமண ரூபமாய்வந்த பகவானுக்கு கபீர் வஸ்திரதானஞ்செய்தது.

விருத்தம்.

ஐயனே யருஞ்சிறிய னென்முன் றோன்றி
 யடையொணு வானந்த மிகவே தந்தத்
துய்யனே தேவர்முதற் றிசை முகனுஞ்
 சுருதியுந் தேடிக் காணு
மெய்யனே மெய்ஞ்ஞான போத மேவு
 மேதினியிற் றெண்டருளந் தங்குஞ் சக்ரக்
கையனே கோதண்ட ராமா நின்றன்
 கழற்கருத வரமளித்துக் காப்பாய் கோனே.

காயமென்னும் வீட்டில் அஞ்ஞான மென்னும் இருளை மாற்றி ஞானமென்னும் விளக்கேற்றி மோனமாயிருக்கும் சித்தர்களே! பரிசுத்தர்களே! சிசுக்களினுச்சி மண்டூகத்தின் கண்டம் மானிடர்களிதயம் விபசாரமங்கையின் நெஞ்சம் நொம்மானுள்ளம்போல சதாகாலமும் பிர்மத்தை தியானஞ் செய்யும் கபீரைத் தறிநெய்யச் செய்தது எப்படியிருக்கிறதென்றால், பதிவிரதையை வேசையுடனும், யோக்கியனை நிந்தகனோடும், ஜீவகாருண்யனைக் கொலையாளியோடும் சந்திரனை ராகு கேதுவோடும் ஞானியை அஞ்ஞானியோடும் சர்ப்பத்தைக் கருடனுடனும், பசுவைப் புலியுடனும், காமக்கன்னியை நபும்ஸகனுடனும், தேவர்களை இராக்கதருடனும் சேர்த்தாப்போலவு மிருக்கிறது.

இப்படிக் குழந்தை மனதுடைய மகா புண்ணியவானான கபீர் கடவுளைத் தியானஞ் செய்துகொண்டே ஒருமுழ வஸ்திரம்நெய்து பிரமக்ஞான மேலீட்டால் தன்னை மறந்திருந்தாரப்போது பகவான் மாயமாய்வந்து கபீருக்குப் பதில் ஒரு முழம் நெய்வார், * அதற்குள் ஜிஜ்ஜாபீபி வந்து கண்களை

* இப்படி பகவான் கபீரை நினையாமுன்னமேவந்து அவர் வேலைக்குதவியான காரணம் சுகப்பிர்ம்மரிஷிக்கு முன் வாக்குக் கொடுத்தவினாலேயாம். இவ்வளவு உபசாரணை பகவான் செய்வது எதுக்கெனில், மாயாதீதனை சுகரை மாயையிலழுத்தலேயாம். விஷபோகமறியா சுகரை தேவர்களாலனுப்பப்பட்ட ரம்பை பலவிதத்திலுஞ் செயிக்கமுடியாமல் அச்சுகரை தந்திரத்தால் வெல்லவெண்ணி ரம்பை சுகர் ஆசிரமத்தினருகில் தபவேஷத்துடன் உக்கிரமான தவம் செய்துக்கொண்டிருக்கையில் இச்சூதறியா சுகர்

மூடிக்கொண்டு தியானத்திலிருக்கும் கபீரை அதட்டி, அடா கபீர்! வஸ்திரம் நெய்யச்சொன்னால் சொஸ்தமாய் தூங்குகிறாயா? காலையிலிருந்து மாலைபரியந்தம் இரண்டுமுழந்தானு நெய்தாய்? சஷ்ட கல்விகளெல்லாம் பேசுமுனக் கிதுமாத்திரந் தெரியாமற் போனதென்ன? நல்லதிந்தக்ஷண மிதையறுத்தெடுத்துக் கொண்டுபோய் கடையில் விக்கிரயஞ்செய்துவந்தாலொழிய உனக்கன்ன மகப்படாதென்றுரைத்து வீட்டுக்குட்சென்றாள். பின்பு கபீர் தறியிலிருக்கு மிரண்டு முழத்துண்டை தறித்தெடுத்துக் கொண்டுபோய் கடையின் தெருமத்தியில் நின்றுக்கொண்டு வஸ்திரத்தை விரித்துக்காட்டி, ஓ புண்ணியவான்களே! புண்ணியவதிகளே! இந்தப் பீதாம்பரத்தை வாங்கிக் கொள்ளுங்களென்று பலதரஞ் சொல்லிக்கொண்டு அக்கடைத்தெருவிற் றிரிந்ததெப்படி யிருந்ததென்றால், சக்ராதிபதியாகிய புரூரவச் சக்கரவர்த்தி வீரகுமாரனுடைய மாதாதா விறகையும், அரிச்சந்திர மகாராஜன் மனையாளையும், மகனையும் விலை கூறியதைப்போலிருந்தது. அல்லாமல் பலவந்தமாயணையவரும் ரம்மியமில்லா ஸ்திரீ புருஷாளைப்போலவும் பலவந்தமாய் விக்கிரயப்படுத்தும் வஸ்துக்களைப்போலவும் இருந்தது.

இப்படி பலவந்தமாய் விலைகூறும் கபீர் கரத்திலிருக்கும் வஸ்திரத்தைப் பார்த்த சிலர் அடடா இதென்ன வலையைப் போ லங்குலத்துக் கோரோரிழை நெய்திருக்கின்றது எவன் நெய்தானென்று பரிகாசஞ் செய்துப்போகையில், பகவான் மாயையாலதை வாங்கவருஞ் சிலர் கண்ணுக்கு மேன்மையான விலையுள்ளதாய் தோன்றப்பட்டு, இதை யெங்களால் வாங்கத் தகுந்ததோவென்று போய்விட்டார்கள். ஏனெனின் பகவான் கைகளால் நெய்த வஸ்திரத்திற்கு மொருவரால் விலைமதிக்கக் கூடுமோ, ஓ சித்தர்களே! கபீர் சூரியனஸ்தமன

ஓர் முனிவனென்றே உன்னி அருகிற்சென்று, ஓ தபயோகியே! வெகுநாளாய் எதைநாடி இவ்வித உக்கிரமான தவஞ்செய்கிறீரென்று வினவ, ரம்பை முனிந்தவள்போல் அந்த இன்பத்தை விக்கினஞ்செய்தபடியால் நீரிந்த க்ஷணம் நான்கோரிய வரமளிக்காவிட்டால் என்சாபம் பெறுவீரென சுகர் நீர் கோரியதளித்தேன் கேளுமென, உடனே ஸ்திரீ ரூபந்தரித்த ரம்பையைப் பார்த்து பிரம்மித்து நல்லது கலியுகத்தில் உன்னிச்சை நிறைவேற்றுவேனென் றுரைத்தபடி கபீராயவதரித்து இரண்டு மகவைப்பெற்றார்.

மாகும் பரியந்தமிருந்தும் யாவரும் வாங்காமையாலிப்பீதா ம்பரத்தை இனிமேலியார் வாங்கப்போகிறார்களென்று வஸ்திரத்தை மடித்து கக்கத்தி லடக்கிக்கொண்டு வீட்டைநோக்கிப்போகையில், பகவானே ரேழைப் பிராமணராய் கபீர்முன் வந்து வெடுக்கென் றத்துண்டைப் பிடிங்கிக்கொண்டோடத் தொடங்கினர். உடனே கபீர், அடா திருட்டுப் பிராமணா! முரட்டுப் பிராமணா! கோபிகா ஸ்திரீகளின் வஸ்திரங்களை யபகரித்துக்கொண் டோடிப்போன திருட்டுக் கிருஷ்ணனைப் போல நாணயமான பீதாம்பரத்தைத் திருடிக்கொண்டாயோ டுகிறாயென்று சொல்லிக்கொண்டே பிராமணனை விடாமற் றொடர்ந்தோடி மடியைப்பிடித்துக்கொண் டசையாமல் நிறுத்தி மிகவும் வருத்தி அருமையான பீதாம்பரத்தைத் தாவென்று பிடுங்கத் தொடங்கினர்.

அப்போது மாயாப்பிராமண ரதைவிரித்துப் பலருக்கும் காண்பித்து ஓ ஜனங்களே! இந்த விலைத்துணி அருமையான பீதாம்பரமாம் இப்பேர்க்கொத்த வஸ்திரத்தை எங்கேயாவது பார்த்ததுண்டாவெனப் பகுந்து இரண்டாய்க் கிழித்துவிட்டார், அதற்குக் கபீர் பிராமணரை நோக்கி சாந்தத்தை நீக்கி, ஓ பிராமணா! நீ வேதமோதும் விப்பிரனாயிருந்தும் மகாவிஷ்ணுவின் மார்பிலணிந்துக் கொண்டிருக்கும் பச்சை பீதாம்பரத்துக்குச் சமானமான விலையில்லாப் பீதாம்பரத்தைக்கிழித்து விட்டாயே, நீ கெட்டாயே! ஊராருடைமைக்குப் பேயாய்ப் பறக்கும் பிராமணர்களைப் படைத்த பிர்மதேவன் எமனைப்படைத்தது நிஷ்பிரயோசன மென்றுரைத்து வஸ்திரத்தைப் பிடுங்கிக்கொண்டார். அப்போது மாயாபிராமணர் அடா கௌபீனத்துக்கு முதவா விக்கந்தையைத் தாமோதரனணிந்துக்கொண்டிருக்கும் பீதாம்பரத்துக்கு மேலானதென்றுரைத்தது எப்படி யிருக்கிறதென்றால், லோபியைப் பாபியும், வேசையை விபசாரியும், கொலையாளி வேட்டையையும், இச்சையுள்ளோன் சம்சாரத்தையும், காமமிகுந்தோன் ஸ்திரீயையும், லுத்தன் தன் வல்லமையையும் புகழ்கிறதைப்போ லிருக்கின்றதென் றுரைத்துப் பெருநகைபுரிந்து பலரும் பரியாசஞ் செய்து கெக்கலிகொட்டி நகைக்கும்படியாய்ச் செய்தார்.

அதற்கு கபீர் பதிவிரதைக்கழகும், குணவானுக்கைஸ்வரியமும், தர்மிக்குத் தபமும், ஜீவகாருண்யனுக்கு விரதமும்,

சாந்தகுணனுக்கு ஜபமும், நிராசையுள்ளோனுக்கு சன்யாசமும், குலஸ்திரீக்குக் காவலும் ஆத்மஞானிக்குத் தியானமும், மனோசுத்தி யுள்ளவர்க் காசாரமும் இல்லாதிருந்தாலும் மேன்மையே யடைவதுபோல இவ்வஸ்திரம் விலையைப்போன்றதாயிருந்தாலும் பட்டுநூலால் நெய்திருப்பதால் மேன்மையானதாகவே யிருக்கின்றதன்றி பச்சைவர்னனை அச்சுதனணியத்தக்கதே யாமென்றுரைத்து வீட்டைநோக்கிப் போகையில், மாயாபிராமணர் மறித்து நானிதை வாங்கிக்கொள்ளுகிறேன் விலையென்ன சொல்லடாவென்று கேட்க, கபீர் எனக்கிதன் விலைதெரியாது நாலுபேருரைப்பதே விலையென்றுசொல்ல, பிராமணர் பலரையுங் கூப்பிட்டு ஓ புண்ணியவான்களே! இந்த வலைக்கந்தைக் கென்னவிலை கொடுக்கலாஞ் சொல்லுங்களென்று கேட்க, வழிப்போக்கரி லொருவனிதற்கு ஒருபணமென்றும் மற்றொருவன் ஒரு வராகனென்றும், இன்னமொருவன் பத்துவராகனென்றும், ஒரு வர்த்தகன் நூறு வராகனென்றுஞ் சொன்னார்கள். அதற்கு மாயாபிராமணர் ஒருகவடிவிலையும் பெருத பட்டுநூல் சிக்காய் வாங்கக்கூடாமல் வஸ்திரமாய் விரித்துக்கொண்டுவந்த விக்கந்தைக்கோர் விலைசெப்பாது பத்து வராகன் நூறுவராகனென்று பரியாசஞ் செய்கிறீர்கள் என்றுரைத்துக் கபீர்தாசரை நோக்கி, ஓ கபீர்! ஓர்கவடிக்குப்பெருத விவ்விலைத்துணிக் கிவ்வளவுவிலை கொடுத்துவிடுகிறேன் நீ யின்றையதினம் இராசன் முகத்தையோ நரிமுகத்தையோ பதிவிரதையின் முகத்தையோ பக்தன் முகத்தையோ பார்த்துவந்தா யென்றுரைத்தும் ஆயிரம் பொத்தலாயிருக்கும் பொத்தைக்கந்தையி லரிதான சொத்தாய் மூடித்துவைத்திருக்கும், இரண்டு சொத்தைக் கவடிகளையவிழ்த்தெடுத்து மெத்த விலையெனப் பதைத்துரைத்துக்கொண்டே கபீர் கரத்திற்கொடுத் தித்தனைவிலை யிப்பொத்தைக்கந்தைக்கு வாங்குவ துத்தமமல்லவென்றார். கபீர் தன்கையிற் கொடுத்த இரண்டு வெள்வரிகளையும் பார்த்த கபீர் ஓ ஜனங்களே! இந்தப் பிராமணன் கூடியமட்டுக்குங் கெட்டிக்காரன்றான் இவன் மிகவும் பிரயாசத்துடனே கொடுத்த மேன்மையான விலையைப் பார்த்தீர்களா சந்தேகத்தை தீர்த்தீர்களாவென்று அந்தப் பலகரைகளை கபீர் வீசியெறிந்துவிட்டார்.

உடனே யம்மறையோன், அடா துஷ்டப்பயலே! பிரஷ்டப்பயலே! எங்கள் மூதாதைகள் சம்பாதித்த ஆஸ்தியை நாஸ்திசெய்யவா யோசித்தாய்? இனி யெவ்வளவு பொருளைத்தா னுசித்தாய்? இதற்கா பிராமணோத்தமாவென்று பூசித்தாய்? வீண்வழக்கை வளர்க்கவா நேசித்தாய்? அடடா சாலக்கிராமத்தையும், லிங்க வுருவத்தையும், மாணிக்கத்தையும், வைடூரியத்தையும், அரியரனுமத்தையும் இந்த க்ஷேமத்தையும் எறிந்துவிடத் தக்கதோவென் றதையெடுத்துகொண்டு வந்து, அடா கபீர் இக்கவடிகளா லுன்னையு மூன்தாதை மூதாதைகளையும் மூவுலகையும் விலைக்குவாங்குவேன், குபேரனுக்கும் மேலாயோங்குவேன், அண்டபிண்ட பிர்மாண்டங்களையுந் தாங்குவேன், எனக்குற்ற தரித்திரத்தைவிட்டு நீங்குவே னிதன்மகிமையை பேய்ப்பயலே நீ யறியத்தக்கதோ மூழுத்தேங்காய் நாய்க்கெட்டாததுபோல கிடைப்பதற்கரிய பொருளை யெறிந்துவிட்டாயென்று சொல்லிப் பலதரங்காட்டி மறைக்க, கபீர் இப்பீதாம்பரத்துக் குன்னையு மூன்னப்பனையும் விற்றாலும் விலைபோதாது போபோ வென்றுசொல்லி இருவரும் வழக்காடும்போது, அங்கு நிற்கும் பலரும் ஒருவரைப் பார்த்தொருவர் சொல்லிக்கொள்ளும் வார்த்தைகளாவது செவிடனுங் குருடனுங் கூத்தைப் பார்க்கவும், பதிவிரதையும் பரத்தையும் திருநாளைப் பார்க்கவும், காமியுந் தர்மியும் பெருமாளைப் பார்க்கவும், விருத்தனும் பாலனும் யுத்தஞ்செய்யவும், மௌனனுங் கலகனும் புராணங்கேட்கவும், கோளனுங் கொடியனும் நியாயந்தீர்க்கவும், திருடனும் பேராசைக்காரனும் வியாபாரஞ் செய்யவும், பாபியும் லோபியும் விபசாரஞ்செய்யவும், குடியனும் வெறியனுங் கூத்தாடவும், பித்தனும் உன்மத்தனுந் தர்க்கஞ் செய்யவும், பாப்பானும் பறங்கியும் பஞ்சாயத்துப்பேசவும் நேரிட்டதைப்போல் இவனிந்த பொத்தக் கந்தைக்கு விலைகூறுவதும் அவனிரண்டு சொத்தைக் கவடிகளைகாட்டி மறைப்பதுமா யிருக்கிறதென்று கெக்கலிகொட்டி நகைத்து, ஓ பயித்தியம் மேலிட்ட பார்ப்பானே! சயித்தியம் மேலிட்ட பஞ்சமனே! உன் னுடைய சண்டியெருதுக் கிணையான கந்தைக்கு நொண்டிக்குதிரைக் கிணையான சொத்தக்கவடிகளே போதுமானவிலையென் றுரைத்தவரவர்க ளலுவலைப் பார்த்துக்கொண் டகன்றார்கள்.

பின்பு பிராமணர் கபீரை நோக்கி, ஓ கபீர்! மேன்மை யான காட்சிக் கவடிகளைக்கொடுக்கும் மாட்சிமையான யெனக்கு இத்தாக்ஷியான கந்தையைக் கொடுக்காமல் பிரஷ்ட சாட்சியைப்போல குளறிக்குளறிப் பேசலாமா? வென்றுசொல்ல, கபீர் பல்லில்லா வாயுள்ள நீ யேதேதோ வாயில் வந்தபடி வெகுநேரமா யுளறிக்கொண்டிருக்கின்ற யிப்பீதாம்பரத்துக்குத் தகுந்த விலைபெறுமற் கொடுத்தா லென் தாயார் வாயில் வந்தபடி வைவாள் சித்ரவதை செய்வாள், போபோ போராசையுள்ள பேயனே! ஏமாத்த வந்த வாயனே யென்று நவில பிராமணர் பின்னுமச் சொத்தக் கவடிகளைக் காண்பித் திதை வாங்கிக்கொண் டதைத்தரலாகாதோவென, கபீர் புழுத்துப் போன வலகுகளுக்காக மடியைத் தருவேன் குட்சி நிறையப் பிட்சை யகப்படாதவன் லட்சாதிபதியைச் சம்பந்தஞ்செய்ய யோசித்ததைப்போல் எங்கேயோ வீழ்ந்திருந்த கவடிகளைக் கொண்டுவந்துகொடுத் தேமாத்திப் போகவந்தீர் நீர் வாங்கிக்கொண்டது போதும் வந்தவழியைப் பார்த்துக்கொண் டேகுமென் றுரைக்க, மாயாபிராமணர் இக்கவடிக ளிரண்டன்றி வேறொரு பொருளு மெனக்கில்லை இவ்வேழைப் பிராமணன்மேற் கிருபைகூர்ந்து தருமார்த்தமாய்ப் பாதிவஸ்திரந் தருவீரானல் கோகுல பிருந்தாவனத்திற் றிருநாளாகும் போது பெருமாளுக் கணிகிறே னிதனாலுமக்குப் புண்ணியமும் புகழு முண்டாவதன்றி எச்சிலைக்கொடுத்த சவரியும், பிடியவல்கொடுத்த குசேலனும் பெற்றபேற்றைப் பெறுவீரென்றுரைக்க, கபீர் இப்பீதாம்பரம் பெருமாளுக்கே யணியத்தக்கதா யிருந்தாலும் யான் தகுந்த விலைவாங்காமற் தருமார்த்தமாய்க் கொடுத்தால் என் தாயுந் தந்தையும் நையவடிப்பார்கள் உயிரை மூடிப்பார்க ளாதலால் மன்னியுமையாவென்று வணங்க,

பிராமணர் ஓ மகானுபாவா! சத்தியநாவா! நீ தருமகுணத்திற் சிறத்தவனென்று பலருஞ்சொல்ல கேள்விப்பட்டதன்றி முகமும் அகமும் குறியுங் குணமுமப்படியே தோன்றுகின்ற தல்லாமல், நீ யிக்காசியிற், சிலநாளிற் றருமக்கொடியை நடுவாய். (விளையும்பயிர் முளையிற்றெரியும்) என்ற பழமொழி பழுதாகாது. ஓ தருமப்பிரபுவே! பெண்டுபிள்ளை பண்டம் பதார்த்தம் நாடு நகர் தாய் தந்தை உற்றோர் மற்றோர்

ஆனை சேனை முதலானதுங் கூடவருந் துணையல்லவே. தர்மம் அனேக ஜன்மங்களுக்குத் துணையாயிருந்து காப்பாற்றுமல்லவா? உனக்கும் விரித்துச்சொல்லவா? தர்மந் தலைகாக்குமென்னும் பழமொழி பொய்யா? மெய்யா? சொல்லையா? மிகு துய்யா? தர்மஞ்செய்யுங் கையாவென்று மிகவும் வேண்டிக்கொண்டார். அதற்கு கபீர் இந்தத் துண்டு வஸ்திரத்தை கொடுக்கலாமென்றால், இப்போதே தாய் வந்துவிடுவாளே? வந்து துன்பந் தந்துவிடுவாளே? இதற்கென்ன செய்யலாமென்கிற எண்ணத்தினாற் கொடுக்க மனம் வராமலும் இல்லையென்றுரைக்க வாயெழாமலும் மௌனமாய் நின்றுக்கொண்டிருந்தார்.

பகவான் ஓ கபீர்! ஜீவர்களுக்குத் தருமமன்றி வேறு துணையில்லையே? மௌனமாயிருப்பது தொல்லையே! நீதரும குண முடையவனல்லையே, அடடா இந்த யேழைப் பிராமணன் முகத்தைப் பார்க்கலாகாதோ, பார்த்தாலுனக்கு லாப முண்டாகாதோ, பாபங்களெல்லாம் பஸ்பமாய் போகாதோ, லோபகுணம் நசித்துப் போகாதோ, ஓ தருமஸ்வரூபனே! திவ்விய சொரூபனே! லோபியைப்போன்ற பாபியில்லையென்கிற பழமொழி யறிவாயே, அறிந்தென்னசி பெறுவாயே! முற்காலத்தில் தருமார்த்தமாய் பரமசிவனார் கொல்லும் விஷத்தைக் குடிக்கவில்லையா, பத்மாசூரன்கேட்ட வரமளித் தவன் துரத்த வோடிப் பதுங்கவில்லையா, வாணசூரனுடைய வாயலைக் காக்கவில்லையா! கும்பகர்ணனும் திரிசூல மளிக்கவில்லையா! ராவணனுக்குத் தன் மனைவியை யீயவில்லையா! அர்ச்சுனனுக்குப் பாசுபதாஸ்திரங் கொடுக்கவில்லையா! மார்க்கண்டனுக்கென்றும் பதினாறுவய தருளவில்லையா! மன்மதன் பஸ்பமா யெரிந்துபோகவில்லையா! ததீசிமகாரிஷி தன் முதுகெலும்பைத் தரவில்லையா! மாபலி பாதாளத்தி லமிழ்ந்துபோகவில்லையா! சிபிச் சக்கரவர்த்தி தன் சரீரத்தை யறுத்தளிக்கவில்லையா! ரகுராஜன் தன்னரசாங்கத்துடன் மனைவிகளையும் நல்கவில்லையா! கர்ணன் தன்னுயிரைக் காக்கும் கவசகுண்டலங்களை யீயவில்லையா! தருமராஜன் தன்னுடன் வந்த சுணங்கனைச் சுரலோகத்துக்குக் கொண்டுபோகவில்லையா! அர்ச்சுனன் ஓர் கந்தர்வனைக்காக்க ஸ்ரீ கிருஷ்ண பகவானோடு போராடவில்லையா! இலட்சுமி பரமசிவனுக்குற்ற பிர்மத்தியைத்

தானேற்றுக் கொள்ளவில்லையா! கலைக்கோட்டுமுனி தசரதனுக்குற்ற புத்திரவாஞ்சையைத் தீர்க்கவில்லையா! தசரதன் தேவர்களைக் காக்கவில்லையா! புரூரவச் சக்கிரவர்த்தி தேவகன்னியை விடுவிக்கவில்லையா! கிருஷ்ணன் பஞ்சபாண்டவர்களுக்குத் தூதாகவில்லையா! அவர்களுக்குச் சாரதியஞ் செய்யவில்லையா! தூருவாசருக் கேவல் செய்யவில்லையா! மாடுபோலிரதத்தை யிழுக்கவில்லையா! கோவர்த்தனகிரியைக் கொடையாக வெடுக்கவில்லையா! குசேலனுக்கு அஷ்டயிஸ்வரியமுங் கொடுத் தடிமையாய்ப்போக எண்ணங்கொள்ளவில்லையா! அம்சத்துவஜன் தன்னுடலை நடுபாதியாயறுத் தியவில்லையா! பாண்டியன் தன் தலையையறுத்து காவேரி நதியிற் போடவில்லையா! நீமாத்திர மித்தூசையளிப்பது தொல்லையா! இதற்குத்தரஞ் சொல்லையா! சற்றே என்முனில்லையாவென்று கூவிக் கதறியுரைத்த வாக்கியங்களைக் கேட்ட,

கபீர் மனந்துலங்கி மிகவுங்கலங்கி இவருடைய தொனியான குரலுக்கிணையான இனிய வஸ்திவ்வுலகத்திலில்லவேயில்லை. ஆஹா தர்மத்தின் நிமித்தியம் எவ்வளவு திருஷ்டாந்திரங்கள் சொன்னார் எத்தனை புண்யபுருஷர்களுடைய திருநாமங்களைப் புகன்றார். ஆ ஹா! அந்த மாபலிபகவான்கேட்ட மூன்றடி மண்கொடுத்து ஸ்ரீமந் நாராயணருடைய திவ்வியதிருவடி தன் சிரமுடியாகக்கொண்டு அழியாச் சிரஞ்சீவிப்பட்டமும் பெற்றார் தேவகுருவான பிரகஸ்பதிக்குத்தெரியாத சஞ்சீவி மந்திரம்பெற்ற சுக்கிரன் தர்மஞ் செய்கிறதைத் தடுக்கப்போய் ஒருகண்ணிழந்து லோபியென்று பேர்பெற்றானிவ்வளவு இழிவான லோபகுணத்தை விடாமல் கேட்போர்க்குக் கொடாமல் யாதொரு லாபமும் பெறுதவனுவேனே? இல்லறத்துக்குத் தருமமும், துறவறத்துக்குத்தபமும், ஸ்திரீகளுக்குக் கற்பும், புருஷர்களுக்கு ஞானமும் முக்கியமென்பது மெய்யல்லவா? வியாபாரஞ் செய்யப் புறப்பட்ட நாமில்லறவா னென்பதற்கோர் தடையுண்டோ? இனி யில்லறத்துக்குத் துணையான தர்மத்தை என்னுயிருள்ளமட்டும் மறப்பேனு? யார்வந்தாலும் வெறுப்பேனு? பசியென்றால் பொறுப்பேனு? பொறுத்துயிருடனிருப்பேனு என்ற பற்பலயோசனையோடுங்கூடின மனதுடன் வழக்கப்படி பிஸ்மில்லாவென்று கொடுக்கப்போனார்.

அதற்கு மாயாமறையோர், அடா நீச்சா! இதுவே தப் பேச்சா! தபத்துக்கும் ஜபத்துக்கும் இகத்துக்கும் பரத்துக் குந் துணையான ஜீவகாருண்யத்தை நிக்கிரகித்து உயிர்களை வதைசெய்துண்ணும்படியான கொடியவார்த்தையை எழுதி யிருக்கும் கட்டுக்கதையான ஓர் புத்தகத்திலுள்ள ஏதோ ஓர் நாமத்தைச் சொல்லிக் கொடுக்கவந்தாய்? ஐயையோ! யாரோ பிராமணப்பிள்ளை யென்றல்லவோ நினைத்தேன். உத்தமனெ ன்று மதித்தேன். பிரபுவேவென்று துதித்தேன், சந்தோ ஷத்தாற் குதித்தேன், சீலனென மனதிற்பதித்தேன் என்று கபீர் தலையை நாலுதிக்கிலுந் திருப்பித் திருப்பிப் பார்த்து அடா உன்னெற்றியிற் சகல மங்களமூம் நிறைந்த திருநாம மணிந்திருக்கின்றதென்றல்லவோ யிருந்தேன். பஸ்பமூம் அணியாப் பாழ்முகனே துடுக்கர் மகனே விஷ்ணுவாம்ச மான திருநாமமாவது சிவாம்ஸமான பஸ்பமாவது அணி யாதிருக்கிற அறிவீனனே! பிருதிவி யம்ஸமான இத்தேகம் பிருதிவியேயாய்ப் போகுமென்று பலரும் அறியக்காட்டும் படியான திருநாமத்தையும் இந்த லலாட ஸ்தானத்தில் பர ஞ்சோதி யிப்படியே இருக்கின்றதைப் பாருங்களென் றனை வர்க்கும் அறிவுணர்த்துந் திருமணியையும் இன்றைக்கே யணிந்துக்கொள். தர்மமே உயிர்க்குத் துணையென்று துணி ந்துக்கொள், துடுக்கரை வெல்லவந்த அடிக்கடி நினைந்துக் கொள், மனதே உன்னெண்ணப்படி நடக்கமாட்டேனென்று கனைத்துக்கொள், திருநாமம் பகவானுடைய திருவடிகளென் றறிந்துக்கொள், பரஞ்சோதியே பரப்பிரம்மமென்றுதெரிந்து க்கொள், பரமாத்துமாவை யுனக்குள்ளாகவே யுணர்ந்துக் கொள், பிரம்மானந்தமே மேலானவின்பமென வுணர்ந்துக் கொள், எப்போதும் ஸ்ரீராமநாமத்தை துதித்துக்கொள். இவ்வுலகங் கானற்சலமென்று மதித்துக்கொள். இப்பிரபஞ் சம் பொய்யென்று யெண்ணிக்கொள். எந்த வஸ்துவைக் கொடுத்தாலுஞ் சீதாராமென்று துதித்துக்கொடு வென்றச் சீலையை வாங்கிக்கொண்டார்.

இவ்வாக்கியங்களைக்கேட்ட கபீர் கருடனைக்கண்ட சர்ப் பத்தைப்போற் கலங்கி சகுண நிர்க்குணங்களில் நிர்க்குணமே யதிகமாயிருக்க, இவர் சகுணத்தையே மேன்மையாகப் பேசு கின்றார். ஆனல் இதினுண்மையை நன்குயறிந்துக்கொள்ள

வேண்டுமென்று மறையவரைநோக்கி, ஓ பிராமணேத்தமரே! நிரூபமாயிருக்குங் கடவுளை இப்பேர்க் கொத்ததென்று சொல்லக்கூடாக் குறையால் பிர்மமென்றும் அனித்தியத்தைக் குறித்து நித்தியமென்றும் மலத்தைக்குறித்து நிர்மலமென்றும் குணத்தைக் குறித்து நிர்க்குணமென்றும் ஆங்காரத்தைக் குறித்து நிராங்காரமென்றும் நிர்நாமமான பரப் பிர்மத்துக் கனேக கற்ப நாமங்கள் வேதத்திற் சொல்லுவதன்றி நிர்க்குணத்தையே மேன்மையாகப் பேசுகின்றது. நீர் அதை விடுத்து வேத வாக்கியத்தைத் தடுத்து சகுணமான சீதாராமென்னுந் திருநாமத்தை மேன்மைப்படுத்திச் சொல்லுங் காரணத்தைச் சவிஸ்தாரமாய்த் தெரியச் சொல்லுமையா வென்று கேட்க, அதற்கு மாயாபிராமண ரிந்தக் கபீரை முன்னஞ் சகுணத்தியானத்தினற் பரிசுத்தனுக்கி பின்பு பிரமக்ஞானத்தை யுணர்த்த வேண்டுமென்கிற தாத்பரியத்தால் த க்கஞ்செய்யாமல் குதர்க்கமாய்ப் பேசத்தொடங்கினர்.

அதெப்படியென்றால், ஓ சித்தர்களே! பகவான் கபீரை நோக்கி, ஓ கபீர், சுத்த சூன்யமாய்ப் பரவெளியான பரப்பிர்மம், வாக்குக்கும் மனதுக்கு மெட்டாதென் றுரைத்த நீ வாக்கையும் மனதையும் மவுனமாக்காமல் சஞ்சலமானதை ஞானேந்திரியங்களிற் செலுத்தி கர்மேந்திரியமானவாக்கின் விவகாரமாடிக்கொண்டு தேகேந்திரிய கரணஜீவனே நானென்றும், இவ்வலைத்துணிமுதலான வஸ்துக்க ளென்னதென்றும் பிர்மைகொண்டுழலும் நீ அகமமதையற்று ஆத்ம ஸ்வரூபமே தானென்றிருக்கும் பிர்மக் ஞானிகளேத்தும் வாக்மனேகோசரமான பரப் பிர்மத்தை நினைத்தாற் பிரயோசனமேதுண்டு தன்னையறிந்த பிர்மக் ஞானி யொரு கர்மஞ்செய்யக் கூடுமா? ஓ அறிவில்லாதவனே! மண்ணின்மேல் மரக்கலமோடுமா? காவலின்றி கட்டுப்பட்டவ ளேகாந்தையன்றிக் காவலாற் கட்டுப்பட்டவள் கற்புள்ளவளாவாளா? சத்கதிக்காகத் தருமஞ் செய்பவனே சத் புருஷனன்றி டம்பத்துக்காகச் செய்பவன் சத்புருஷனுவானு? தன்னை யன்னியர் புகழ்வதே கீர்த்தியன்றி தன்னைத்தானே புகழ்ந்துக்கொள்வது கீர்த்தியாகுமா ஒருவனுக்குத் தானைக்யமா யிருத்தலே வந்தனமன்றி கள்ளக் கும்பிடு வந்தனமாகுமா? அதுபோல எங்கணும் பரிபூரணமாயிருக்கும் பரப் பிர்மத்துக்கு ஐக்யமா யிருப்பதே வந்தனமன்றி

வேறுபட்டு தியானிப்பது வணக்கமாகுமா? நீதான் தெரியச் சொல்லென் றுரைக்க, கபீர் ஓ பழமறை யுணர்ந்த பார்ப்பானே! சகல சந்தேகங்களேயுந் திர்ப்பானே! உடல் பொருளாவி என்னும் மூன்றையுந் தானென்று நினைக்கு மதத்தைச் சிக்ஷைசெய்து நிஷ்கிரிய வஸ்துவாகிய பரப்பிர்மத்துக்கு ஊக்கியமாயிருப்பதே உத்தமதானமென்றும் சத்தாதி வசனுதிகளையடக்கி அகங்காரமனதை மடக்கி நிராங்கார வஸ்துவாகிய பரப்பிர்மத்துக்குள் ஐக்கியமாயிருப்பதே சாந்த நிதானமென்றும் பிபீலிகாதி பிர்மபரியந்தம் பரப்பிர்மமே நிறைந்திருக்கிறதென்றும் அதில் நானென்னும் அகம்பாவ மேதென்றும் பரிபூரண வஸ்துவாயிருப்பதே பிர்மத்தியானமென்றும் நானென்னு மகங்காரத்தோடு கூடி யாதொரு கிரியையுஞ் செய்யாமல் தானே வந்தகாரியங்களேப் பற்றரச் செய்து அகம்பாவத்தை யடியோடு மில்லாமற்கொய்து சிதாகாச மாத்திரமாயிருப்பதே பிர்மக்ஞானமென்றும் சாட்டிய நித்திரையில் நசித்திருந்ததுபோல் பிர்மநிஷ்டையில் மனம் நசித்து நசித்து பிர்மாநந்தாவேசம் மேலிட்டு தன்னை மறந்திருப்பதே மகாமௌனமென்றும் சொல்லலாமிந்த ஞானத்தை யுமதிடங்கேட்கவில்லை சீதாராமென்று சொல்லச்சொன்ன காரணமேதோ அதை தெரியப்படுத்துமையாவென்று தர்க்கிக்க,

மாயாபிராமணர் ஓ அறிவில்லாதவனே! யான் சொல்லும் மர்மமறியாமல் கத்தரிக்காய்க்கு கால்கை முளைத்தாப்போல பிஞ்சில் பழுத்து ராகத்தையிழுத்து தானம் நிதானத் தியானம் கியானம் மோனமென்றுளருகிறுய் உன்னையு முன்னப்பனையுங் கண்ணையுங் கண்ணப்பனையும் விழுங்கியுமிழாமல் தனக்குளோ ரணுப்போல் வைத்திருக்கும் பிரமத்துக்கு நீவேறுபட்டிருந்தா லல்லவோ பிரமத்தை நினைக்கத் தகும் அடா மூடா! சமுத்திரத்தையன்றி துளிவேருகுமா அக்கினியன்றி பொறி வேருகுமா, பிர்மமன்றி நீ வேருமா தானுகவும் வானுகவும் பரிபூரணமாகவும் இருக்கும் பிர்மத்தைத் தனக்கன்னியமாக்கி தியானிப்பது அஞ்ஞானமா மெய்ஞ்ஞானமா குஞ்ஞானமா விஞ்ஞானமா மூக்கால் மூடனைக்கொண்டாடும் முழுமூடனுக் கிணையான மூட்டாளே! ரூபமே தானென்றிருக்கும் நிருபமுள்ள பகவானையே நினைக்கவேண்டும் ஏனெனில் நிருபமாய் நிர்ச்சலனமாயிருக்கும் பிர்மத்தாற் பிரபஞ்ச

முண்டாச்சுதா? மாயாசுரூபனான பகவானாற் பிரபஞ்சமுண்டாச்சுதா? சீக்கிரஞ் சொல்லடாவென்று தலைமேலோர் குட்டு குட்டினார், அதற்கு கபீர் ஓ வேதாந்தந் தெரிந்த விப்பிரனே மறு மாசிலா சுப்பிரனே நிருபமாகிய பரப்ரமம் நிர்ச்சலமாயிருப்பதால் அஃதொன்றையும் நிர்மாணிக்க மாட்டாது. மாயாசொரூபமான பகவானாலேயே நிர்மாணிக்கப்பட்டதானாலும் காரணமான பரப்பிர்ம்மத்தைத் தியானஞ்செய்யாமல் காரியமான விஷ்ணுவை நினைப்பதாற் பிரயோசனமேதுண்டு நாணற்ற பிர்மக்ஞானி மௌனமாயிருக்கவேண்டியது சகஜந்தான் நானென்பதரு தவர் நிஷ்களமான பரப்பிரம்மத்தைத் தியானிக்கலாமென்று பல சாஸ்திரங்களும் முறையிடுகின்றதே நீர்மாத்திரம் வேண்டாமென்று சொல்லுங்காரணமேனென்று நவில,

மாயாவிலாசனான பகவான் ஓ கபீர் சர்வப் பிர்மமயமாயின் தானங் கொடுப்பவன் யார்? வாங்குபவன் யார்? மோட்சம் என்பது எது? மோட்சம் அடைகிறவன் யார்? ஆனந்தமென்பதேது? ஆனந்தத்தை யனுபவிப்பவன் யார்? ஆசான் யார், மாணாக்கன் யார் இகபரமென்பதேது இகபர சவுக்கியங் கொடுப்பவன் யார் ஜனனமரணமேது ஜனன மரண துன்பத்தை யனுபவிப்பவன் யார் பிரபஞ்சமேது பிரபஞ்சத்தைச் சிருஷ்டிப்பவன் யார் சிருஷ்டிஸ்திதியேது ரட்சிப்பவன் யார் ஸ்திதிநாசமேது சங்கரிப்பவன் யார் ஜாக்ர ஸ்வப்பனமேது இதைக் கற்பிப்பவன் யார் சுவப்பன சுழுப்தியேது விகற்பப்படுத்துகிறவன் யார் தாய்தந்தையேது பிறந்தவன் யார் நீயென்பதும் நானென்பதும் யேது மாயையென்பதேது பிர்மமென்பதுதானேதென்று வகுப்பற்றுப்போம் இப்பேர்க்கொத்த பிர்மக்ஞானந் தெரிந்தவன்தானோ இந்தக் கந்தையைக்கொடுத்தால் தாயார் வந்துவிடுவாளே துன்பத்தைத் தந்துவிடுவாளே என்று வெகுநேரங் கொடுக்காமல் பின்னிட்டாய் வாய்ஞானம் பேசுவதற்கு மாத்திரம் முன்னிட்டாய் வாசாக்ஞானம் பேச்சாபீனம் என்கிற தறியாயோ யானுரைக்கு மிரகசியத்தைக் குறியாயோ எதுகாலபரியந்தமொருவனுக்கு ஜாக்ராவஸ்தையிற் சுழுப்திநிலை வராதோ அதுபரியந்தம் நீ நானென்கிற விவகாரந் தொடர்ந்தேயிருக்கும் அன்றி ஊமை பேசுவானா சுழுப்திநிலை யுள்ளவன் ஒன்

றைத் தியானஞ்செய்வானு செய்யமாட்டானுதலால் அத்து வித பாவந்தெரிந்து நீ பிர்மத்தைத் துவிதப்படுத்தி தியானிக்கலாகாது எவனொருவன் அபின்னத்தைப் பின்னப்படுத்துவானே அவன் முன்னம் பிர்மத்துக்கு வேருகவேண்டும் இப்படி வேருக இருப்பவனுக்கு அபின்ன பாவங் கூடவே கூடாது. அபின்னமான பிர்மமே தானுனவன் பின்னபாவஞ் செய்யக்கூடாது பின்னப்பட்டிருப்பவ னத்துவிதத்தைப் பேசலாகாது.

ஏனெனின் பரத்தை பத்மினியாகமாட்டாள் பத்மினி பரத்தையாகமாட்டாள் அதுபோலவே அத்துவித பாவமறிந்த எனக்கு துவிதபாவமேன் துவிதபாவ முள்ளவனுக்கு அத்துவிதபாவமேன் இதுகளின் மர்மம் நன்ருயறிந்துக் கொள்வதற்கு நீசிறுபையன் பாச்சிசோச்சி யென்பவன் வேதங்களை யோதாதவன் சின்னஞ் சிறுபிள்ளை பேசுவதெல்லாஞ்சொள்ளை அறிவில்லாவெள்ளை கொஞ்சிப் பேசுங்கிள்ளை நீயாவாயா யென்போ லாண்பிள்ளையென்று பலவார்த்தைகள் புகன்று மீசையை முறுக்கிக் கோபத்தை பெறுக்கி அடா கபீர்! நான் நீ யென்னும் பாவமுடன் அபிமானமு முள்ள நீ பிஸ்மில்லாவென்னும் மொழியின் மர்மமறியாமற் சொன்னுய் யாவரும் முன்னஞ் சகுணத்தியானத்திற் றேர்ந்து இகபரங்க ளனித்தியமென் றறிந்தெல்லா ஆசையுந்தீர்ந்து தேகாபிமானங்களிலிருந்து பேர்ந்து நிர்க்குணத் தியானத்தைக் கைக் கொள்ளவேண்டும் அப்படிக்கின்றி நின்றபடி யடுத்து தலையையுடைத்துக் கொள்வதுபோல ஒன்றுமறியாச் சிறுவனுகிய நீ ஆதியிலேயே நிர்க்குணத்தைத் தியானித்து இகபரத்துக்குமுதவா பிரஷ்டனுகவேண்டாம் சிறு குழந்தைகள் மணலால் வீடுகட்டி விளையாடுவதற் கிணையான வாசா ஞானம் பேசவேண்டாம் பேசினுலப்படியே யிருக்கவேண்டாமா அப்படி யிருக்காமல் வாய் ஞானத்தாலென்னை வெல்ல வந்தாயே இதற்குத்தரஞ் சொல்லக் கூசிநொந்தாயே யாதலால் இன்றுடன் நிர்க்குணபாவத்தை விட்டு நாரதாதி ரிஷீஸ்வரர்களெல்லாம் எந்த திருநாமத்தைத் தோத்திரஞ் செய்கிருர்களோ எவனுடைய அருளால் நிர்க்குண ஞானத்தை யடைந்தார்களோ எவனுற் சகல பாவங்களும் நசித்துப்போகுமோ அந்தத் திருநாமத்தை யாரிடத்திலாவ துபதேசம் பெற்றுக்

கொண்டு அதை நெடுநாள் தியானஞ்செய்து பரிசுத்த மன துடையவனுகிப் பின்பு நிர்க்குணத்திற் பிரவேசிக்கலா மப்ப டிக்கன்றி நிர்க்குணத்தால் திரிமூர்த்திகளையும் நிக்கிரகித்த தாருகாவன ரிஷிகளைப்போல பங்கப்பட்டுப் போகவேண்டா மென்று பயமுறுத்தி கபீர் மனதை சகுணத்தில் ஸ்திரமாய் நிறுத்திப் போய்வருகிறேனென்று மாயா மறையோன் மாய மாய் மறைந்துபோனர்.

கேட்டீர்களோ சித்தர்களே! இப்படி பலவந்தமாயாண்டு கொண்டு பகவான் மறைந்தபின் கபீர் யோசிக்கின்றூர். நாம் தியானத்தைக் குறித்துக்கேட்க ஞானத்தைப் பேசிப்போனு ரப்படிப் பேசிப்போனுலும் முதற்படியில் கால்வைத்தேருமல் மூன்றும்படியிற்பாய்ந்து நிலத்திற்சாய்ந்து தலையை யுடை த்துக்கொள்வதுபோல சரியை கிரியை யோகமென்னும் மூன் றையுங்கடந்த பிரம தியானத்தையும் பேசினபடி நடக்கக் கூ டாமல் இத்தூசியின்மே லாசையாய் மோசம் போனேனே வாசா ஞானம் அறியாமாந்தரை வெல்வதற் குறியதாகும் அறிந்த அனுபவிகளின்பா லோர்வார்த்தையும் பேசுவதற் குதவாது அன்றிபேச்சின்படி நிற்கப் பெருமூச்சுவரும் ஓதின படி சாதனஞ் செய்யாதவன் பேதையரிலும் அதிபேதையென் பதற் கோரையமேயில்லை சகுணத்தைக்கடந்த நிர்க்குணத்தை பேசின நாம் நிர்க்குணத்தில் நிற்பது மிகவுந் துர்ப்பலந் தான் ஆனாலும் மோக்ஷ இச்சையுள்ளவர்க்கு யெந்தத் தியா னஞ் செய்யவேண்டுமோ நமக்குத் தெரியவேயில்லை இதைப் பரிசுத்தமான ஓராசான்பால் கேட்டுத்தெரிந்துக் கொள்ளும் பரியந்தம் இப்போதுரைத்துப்போன பிராமணருடைய வா க்கியத்தையே நம்பியிருக்கலாமென்று பகவானை அத்தியந்த பக்தியுடன் தியானஞ்செய்துக் கொண்டேயிருந்தார். கேட் டீர்களோ! சித்தர்களே யென்று பின்னும் நாபாஜிசித்தர் சொல்லத் தொடங்கினர்.

பிராமண ரூபமாய்வந்த பகவானுக்கு கபீர் வஸ்திரதானஞ் செய்த அத்தியாயம் முற்றிற்று.

நான்காவது அத்தியாயம்

கபீருக்கு பகவான் பகீரிரூபமாய்வந்து நிஜதரிசனம் கொடுத்தது.

மர்ம ரந்திரத்திற் சுவாசத்தையேற்றி ஜீவகளையை போற்றி நதாந்த வசமாயிருக்குந் தன்யர்களே! மிகவுங் கண்யர்களே! புண்ணியவானை கபீர் இந்தக்கதையின்மேல் வாஞ்சையாயிருந்த நாம் வாசாக்ஞானி யென்பதற்கோர் சந்தேகமேயில்லை வந்தவருரைத்துப்போனதே உண்மையான சொல்லென்று பசுமரத்தாணிபோற் பகவத்தியானத்திற் பதிந்திருக்கையிலிவரை பரிசோதிக்க வேணுமென பகவானோர் பகீரிவடிவுகொண்டு கபீர் பக்கலடைந்து ஓ புண்யவானே! நீ மிகவும் தயாளகுணமுடையவனெனப் பலருஞ்சொல்லக் கேள்விப்பட்டு மெள்ளவராமல் துள்ளிவந்தேன். எனக்கோ வஸ்திரமில்லை உமது கையிலிருக்கும் வஸ்திரத்தைக் கொடுத்தெனக்குள்ள தரித்திரத்தைப் போக்கலாகாதா? உமதஞ்ஞானமடியோடும் வெந்து நீறாகாதா? பாபங்களெல்லாந் தலையெடுக்காமற் சாகாதா? லோபகுணம் குறைந்துபோகாதா? ஓ தருமஸ்வரூபனே? திவ்வியமான கியாபகனே? லோபியைப் போன்ற பாபியும் விபசாரியைப்போன்ற அபசாரியும் இவ்வுலகிலில்லையென்ப துண்மையல்லவா? உமக்கு விரித்துச்சொல்லவா! புருஷனுக்குப் புண்ணியமும் காந்தைக்கு கற்புமின்றி வேறு துணையுண்டா! நான்சொல்லும் வார்த்தையிற் பழுதுண்டா! உம்மை லோபகுணத்தி லமிழ்த்தியதுண்டா! அல்லது வேறே யெண்ணங் கொண்டா வென்கிற பற்பல வார்த்தைகளாடும்போது கபீர் ஓ முற்றுந்துறந்த பகீரியே! இல்லையென்று கேட்கும்பிகாரியே! நீராசைகொண்டது இந்த வஸ்திரத்தின்மீதுதானே இந்தாரும் ஜெயசீதாராமென் றுரைத்துக் கொடுக்கப்போனார்.

அதுகேட்ட மாயாபகீரி மிகவுங் கோபங்கொண்டவர் போல் அடா துர்மார்க்கா! அறிவில்லா மூர்க்கா! நித்ய நிர்மல நிர்விகற்ப நிரஞ்சன நிராதார நிரூப நிஷ்களங்க நிர்ச்சங்க நிர்ச்சேத நிர்நாம நிஷ்காம நிர்க்குண நிராங்கார வஸ்துவாகிய பரப்பிர்மமே ஆதிதெய்வமெனத்தெரிந்திருந்தும் சீதாராம் ஜெயராமென்றோர் மனிதன் பேரைப்புகழ்ந்து கொடுக்கவந்தாய் நிரூபமான கடவுளை விடுத்து வேதவாக்கி

யத்தைத் தடுத்து ரூபமுள்ள தெய்வத்தை நினைக்கலாமா எங்கனும் பரிபூரணமாய் நிறைந்திருக்கும் சச்சிதானந்தக் கடவுளை மறக்கலாமா என்றுங் கேட்காத வார்த்தைச்சொன்னாய் இனியுன்னருகிலும் நிற்கக்கூடாதென் றுரைத்துப் போகும் போது, கபீர் ஓ ஸ்வாமி! உமக்கு தத்தஞ் செய்ததை வாங்கிக்கொண்டுபோகாமல் என்னை அபராதியாக்கிப் போகலாமா ஒருவருக்கு தத்தஞ்செய்த வஸ்துவை வைத்துக்கொண்டு கொடுக்காதவனை எமதூதர்கள் தண்டாலடித்து முடுக்காமற் போவார்களா வாக்கைக்கொடுத் தொருபோக்கைக் காட்டுவோர்கள் நீதியுள்ளவர்களாவார்களா நானறியாக் குழந்தையென்றும் பகவானணியத் தகுந்த இந்தப் பீதாம்பரத்தின்மே லிச்சைகொண்டும் வாங்காமற்போவது நியாயமா என்னை லுத்தனாக்கிப் போவது சகாயமா அறிவில்லாக் குழந்தையின்மேலன்புகூர்ந்து வஸ்திரத்தை வாங்கிக்கொண்டு போமையாவென்று மிகவும் வேண்டிக்கொள்ளும்போது மாயாபகீரி கபீரை நோக்கிப் போ போ வேதவிரோதமான வார்த்தையைச் சொன்ன உன்னிடத்தில் ஒரு கவடி வாங்கினாலும் பாபம் வந்து நேரிடுமென் றுரைக்க.

கபீர் ஓ சுவாமி! நானறியாக் குழந்தையன்றி ஞானமார்க்கம் நன்றாயறியேனாலும் அக்கினியாலுருகி நிரூபமாயிருக்கிற நெய்யும் குளிராலுறைந்து ரூபமாய்த் தெரியும் நெய்யும் வேறாகுமா அன்றி நிரூபமாயிருக்கிற ஆபரணமும் நிரூபமாயிருக்கிற பஞ்சும் நிரூபமாயிருக்கிற வஸ்திரமும் நிரூபமாயிருக்கிற வர்ணமும் ரூபமா யிருக்கிற சித்திரமும் நிரூபமாயிருக்கிறபர்வதமும் ரூபமாயிருக்கிற விக்கிரகமும் நிரூபமாயிருக்கிற இரும்பும் ரூபமாயிருக்கிற ஆயுதமும் நிரூபமாயிருக்கிற மண்ணும் ரூபமாயிருக்கிற பாத்திரமும் நிரூபமாயிருக்கிற ஜலமும் ரூபமாயிருக்கிற லவணமும் வேறாகாததுபோல் நிரூபமாயிருக்கிற பிர்மமும் ரூபமாயிருக்கிற பகவானும் வேறென்று சொல்லக்கூடாது. அன்றி நிரூபமாயிருக்கிற பிர்மத்திலும் ரூபமாயிருக்கும் பகவானே மேன்மையென்று சொல்லத் தகுமாதலால் அந்த பரந்தாமனுடைய திவ்விய திருநாமத்தையே யாதொரு காரியத்துக்குஞ் சிந்தனைஞ்செய்ய வேண்டுமென்றுரைக்க, மாயா பகீரி ஓ கபீர்! ஆசானுக்கு மாணாக்கனுபதேசஞ் செய்கிறதைப்போல சொல்லவந்தாய் யதார்த்தவ

ஸ்து பொன்னு, ஆபரணமா, மண்ணு, பாத்திரமா, பஞ்சா, வஸ்திரமா, அயமா, ஆயுதமா, கல்லா, விக்கிரகமா, ஷ்வர்ன மா, சித்திரமா, நிரூபமா, ரூபமா சொல்லும் பிள்ளாயென்று கேட்க,

கபீர் ஓ பெரியோரே! எனக்குத்தாஞ் சொல்லும் சிறியேனுக்கு நீர் நன்ருய்த் தெரிந்தவராயிருந்தும் அறிவில்லாக் குழந்தையாகிய அடியேனை ஏமாத்துகிறீர் எதார்த்த வஸ்து நிரூபமாகிய பரப்பிர்மமேயானாலும் அதுவே ஆலாங்கட்டியைப்போல் ரூபமாகிப் பகவானென்கிற பேர்பெற்று இவ்வுலகத்தை ரட்சிக்கின்ருர். அன்றி சூரியனுக்குக் கிரணமும், சந்திரனுக்குச் சீதளமும், அக்கினிக்கு உஷ்ணமும், தீபத்திற்குப் பிரகாசமும், ஜலத்திற்கு ருசியும், தனமும் கனமும், சாபமும் கோபமும், பாபமும் ஆசையும், பாசமும் இச்சையுஞ், சென்மமும் கர்மமும், கர்மமுந் தேகமும், தேகமும் நரகமும், நரகமும் துக்கமும், தானமுந் தயவும், நிதானமும் சாந்தமும், ஜபமுந் தியானமும், ஞானமும் மோனமும், நிஷ்டையும் நானென்பதும் அக்யானமென்பதும், மாயையும் பிரபஞ்சமும், நிராசையுஞ் சன்யாசமும், பொறுமையுந் தவமும், ஜீவகாருண்யமும் விரதமும், குருவுந் தெய்வமும், தெய்வமும் பிர்மமும், பிர்மமும் ஆனந்தமும், ஆனந்தமும் மோட்சமும் வேருயிருந்தாலல்லவோ பகவானும் பரப்பிர்மமும் வேறென்று சொல்லக்கூடும். அன்றியும் ரூபமாகிய தேகாதிகளே நானென்றிருக்கும் நாமரூபமாகிய பகவானையே தியானிக்கத் தகுந்ததென் றுரைக்க,

அதற்கு பகீரி ஓ கபீர்! பிர்மப்பிரளயத்தி லழுந்திப் போகும் ரூபத்தையும் க்ஷணபங்க தேகத்தையும் சத்தியமென்று நம்பலாகுமா சகுணத்தியானத்தால் சனனமரணத் துன்பமொழிந்துபோகுமா விஷத்தை அமிர்தமென்று நினைக்குமறிவீனரைப்போல வெகுநேரமாய் குதர்க்கஞ் செய்கிருய் விஷத்தைக் குடித்திறப்பதைப் பார்க்கிலும் அமுர்தத்தையுண்டழியாமலிருப்ப துத்தமமானதைப்போல அநித்திய தெய்வத்தை நம்பி அதோகதியடையாமல் நித்தியானந்தத்தையடையடாவென பலதரஞ் சொல்லியுங் கேட்காத உன் மூடத்தனத்துக்கு நானென்ன செய்யட்டுமென் றுரைக்க,

கபீர் ஓ சாதுவே! மரணத்தைத்தரும் பாம்பின் விஷம் மாணிக்கமானதுபோல சாந்தகுணத்திற் பிரதிபலித்த பிர்ம மாகிய ரூபமுள்ள பகவான் பிரமானந்தத்தோடஷ்ட ஐஸ்வ ரியமுந்தரும் ஆண்டவனுயிருக்கின்ரு ரவரையென்றும் மறக் கவேகூடாது அன்றி பிர்மப்பிரளயத்திலெல்லாஞ் சூனியமா கும்போது சீவர்களுஞ் சூனியமே! சீவர்களை ரட்சிக்குந் திரு மாலின் திருவுருவுஞ் சூனியமே! ஆனாலும் சுழுப்தி யவஸ் தையிலிருக்குமிருளிலும் ஜாக்ராவஸ்தையிலுள்ள கரணங்க ளே மேலானதுபோல நிரூபமாயிருக்கிற பரப்பிர்மத்திலும் பக்தர்கள் நினைத்த வண்ணமான ரூபமெடுத்திரட்சிக்கும் பக வானே முக்கியவானென்றுரைக்க, மாயா பகிரீ அடாமுட்டா ளே! பிர்மமில்லாவிட்டால் மாயையேது திரிகுணங்களேது திரிகுணப் பிரதிபிம்பரான திரிமூர்த்திகளேது நிச்சயந் தெரி யாமலேன் குளறுகிருய் பிர்மத்தையே யுறுதியாய் நம்பியிரும் பிள்ளாயென்றுரைக்க, கபீர் ஓ முழுதுணர்வோரே! பகவான் ஜலரூபமாய் வருஷிக்காவிட்டால் பிரபஞ்சமேது சர்வசராசர ஜீவர்களேது பிர்மமென்று நினைக்கிறவர்களேது, நீரேது, நானேது ஆதலால் ஜலரூபமான நாராயணனை ஒருவர் மற க்கத்தகுந்ததோ? ரட்சிப்பவனைவிட மேலானதெய்வம் ஒன்று ண்டோ? போம்போம் என்ன வார்த்தையைப் பேசுகிறீரெ ன்று நவில,

பகிரி ஓ கபீர்! திரிமூர்த்திகளையும் மாயையும் பிரபஞ்சத் தையும் சுவப்பன காட்சிபோலவும் சுத்திகா ரசிதம்போலவும் நச்சு சர்ப்பம்போலவும் முழுதும் மித்தையென்றும் பிரம்ம மே சத்தியமென்றும் சொல்லும் வேதாந்தத்தை விடுத்து பிர ம்மமே பகவானென்றும், பகவானே நித்தியதெய்வமென்றும் வாயில்வந்தபடி பேசுகிருய், நிரூபமாயிருக்கிற பரப்பிரம்மத் துக்குச் சலனமுண்டா சலனமில்லா வஸ்துவே பகவானுகி பிரபஞ்சத்தை ரட்சிப்பது யெப்படியாகும் சூரியனிலிருட்டும், ஆனந்தத்திற் றுக்கமும், பிரியத்தில் கோபமும், ஆகாயத் தில் ரூபமும், பதிவிரதைக்குச் சலனமும் உண்டாயிருந்தா லல்லவோ நிரூபமாகிய பரப்பிர்மத்திலிருந்து ரூபமாகிய பகவானுண்டாவார், அன்றி நிராங்கார வஸ்துவாகிய பரப் பிரம்மம் ஆங்கார வஸ்துவாகிய விஷ்ணுவெப்படியாகும் உனக்கிந்த பயித்தியம் எத்தனை நாளாய்ப் பிடித்திருக்கிறதெ

ன்று நகைக்க, கபீர் ஒவிருத்தரே! ஆகாயத்திற் சுழல்காற்றும் சுத்த சூன்யமாகிய சுழுப்தியிலிருந்து நினைவும் ரூபமில்லாச் சுக்ல சுரோணிதத்தில்ரூபமும், அண்டத்திலில்லா நானாவித தோகையின் வர்னமும் வித்திலில்லாச் சுகந்தம் புஷ்பத்திலும் விருட்சத்திலில்லா மதுரம் கனியிலும் எப்படி தனக்குத்தானே யுண்டாயிற்றோ அப்படியே நிர்ச்சலன வஸ்துவிலிருந்து தனக்குத்தானே சலனமுள்ள பகவானுண்டாகி இவ்வளவு விசித்திரங்களைச் செய்தார். அல்லாமல் பகவானொருவனில்லாமற்போனால் மாயையேது பஞ்சபூதங்களேது பஞ்சவர்னங்களேது, பிரபஞ்சமேது, மோட்சமும் நரகமும், ஆனந்தமும் துக்கமும், புண்ணியமும் பாவமும், குருவும் சிஷனும், தொழுதலும் துதிப்பதுமேது, அசபசா ஜீவர்களேது, நீரேது நானேது தர்மமேது தானமேது போபோ மூகபாவத்தைப் பேசும் முதுமையனே என்று உரைக்க,

மாயாபகிரி ஓ கபீர்! தருமமேது தானமேதென்று நான் கேட்ட வஸ்திரத்தைக் கொடுக்கமாட்டீரோ வென்று கேட்க, கபீர் நீர் துணிந்து என்னுயிரைக் கேட்கினும் தருவேன், இந்த வஸ்திரம் பெரிதோவென்று கொடுத்து இனியும்மிருப்பிடம்போய்ச் சேருமென்றுபுகல, மாயாபகிரி வஸ்திரத்தை வாங்கிக்கொண்டு ஓ தனவானே! கனவானே! உனக்கின்னம் ஆத்மஞானந் தெரியவில்லை ஏனெனில் கர்மத்திலும் பக்தியிலும் வைராக்கியம் மேன்மை வைராக்கியத்திலும் ஞானமேன்மையென்று வேதத்தில் மூறையிட அதைத்தள்ளி பக்தியையே பிரதானமாகச் சொல்வது அறியாமையாகுமென்றுரைக்க கபீர் ஓ வாசாமுறைபேசும் வாயனே! மேல்கீழாக்கு மூபாயனே! முன்பு பக்தியிற்றேறி பின்பு வைராக்கியத்தைக் கைக்கொண்டு பிரபஞ்சத்துக்கு வேறாகி ஞானசாதனஞ்செய்ய வேண்டும் அப்படிக்கின்றி முதற்படியிலிருந் தேறாமல் மூன்றாம்படியிற்றாண்டி முகத்தை யுடைத்துக் கொள்ளுகிறதைப் போல் பாலியனாகிய நானிப்போதே ஞானமார்க்கத்திற் பிரவேசித்தால் பிரயோசனமேதுண்டு? ஆதலால் முன்னம் பக்தி முதிர்ச்சியினாற் பக்தவச்சலனாகிய பகவானை என் கண்குளிரப் பார்த்து அவருடைய திருவடிகளிலென் திருக்கண்களையுஞ் சேர்த்து மனதையுஞ் ஞானாந்தகாரக் கூபத்தில் விழாமல் காத்து சகல சந்தேகங்களையும் பேர்த்து நிர்க்குண தியானபா

ஞகிப் பந்தபாசங்களைக் கழித்து ஞானநிஷ்டையிற் செழித்து ஆனந்த மேலீட்டாற் றழைத்து அகமமதையா லழியாமற் பிழைத்து தன்னை மறந்த ஆரூடக்ஞானி யாவேனென்று சொல்ல,

மாயாபகீரி ஆஹா! க்ஷணபங்கமான இந்தச் தேகத்தை னித்தியமென்றல்லவோ இவ்வளவு எண்ணங் கொண்டிருக்கின்ருயொருவேளை உன்னிஷ்டப்படி பகவான் முடித்தாலும் முடிப்பார், புண்ணியவானுன நீ நினைத்தபடியே முடியட்டும் ஆனுலும் நிர்ச்சலனமாயிருக்கும் பரப்பிரம்மத்திலிருந்து பகவானுண்டானதும் பகவானுல் பிரபஞ்சமுண்டானது மெப்படியோ அதைச்சற்றே தெரியச்சொல்லு மப்பாவென்று கேட்க, கபீர் ஓ மூதுணர்வோரே! இப்பேர்க்கொத்த தென்று தன் மனதினுல் நினைக்கவும் வாக்கினுற் சொல்லவுங் கூடாததான பரப் பிரமத்தி லிருந்துண்டானது சுழுப்திக்கிணையான அவ்வியக்த மென்கிற மூலப் பிரகிருதி யென்றும் அதிலிருந்துண்டானது முக்குணங்களென்றும் திரிகுணங்களில் முதன்மையான சாத்வீகத்திற் பிரதிபலித்த பிர்மமே பகவானென்றும் சொல்லப்படும். அப்பகவானுல் பிர்மாவுண்டாகி அவனு லிவ்வெழுவகைத் தோற்றங்களான சராசரங்களும் அண்டபிண்ட பிர்மாண்டங்களும் உண்டாயிற்று.

நிரூபமா யிருக்கும்போது பிர்மமென்றும் ரூபமானபோது விஷ்ணுவென்றும் அப்பகவானுக்கே சொல்லப்படும் விஷ்ணு பரப்பிரம சுரூபமென்று வேதத்தில் முறையிடுகின்றது ஆதலால் விஷ்ணுவையே ஆதிதெய்வமென்று நம்பவேண்டும். அல்லாமல் பகவானுனவர் முதல்முதல் ஜல ரூபமாய்ப் பிரகாசித்தார். அதனுலேயே நாராயணன் என்கிற பேர் உண்டாயிற்று (பகவான் பாதத்திலிருந்து கங்கையுண்டாச்சுது என்பதின் தாற்பரிய ஜலரூபனென்பதாம்.) அன்றி ஜலம் வருஷித்ததே எங்கும் பச்சையாய் விளங்குகிறபடியால் பச்சைவர்ணனென்றும் மேகமாய்வருஷித்தது ஆதலால் மேக மேனியனென்றும், சமஸ்த சுபமங்களங்களும் அவர் நினைத்த மாத்திரத்தி லுண்டாகின்றதால் அவருடைய இருதயமான மார்பகத்தில் சுபங்கள் விளங்கிய மஹாலட்சுமி வீற்றிருக்கின்ருளென்றும், ஜலரூபமான அந்த மகானுபாவர் பூமியைச் சக்கரம்போற் சூழ்ந்திருக்கின்றபடியால் அவரு

டைய ஆயுதஞ் சக்கரமென்றும், எப்போதுந் தொனிக்கும் வாரிதியிலிருந்து சமஸ்தங்களுக்கு மாதாரமாகிய அகார, உகார, மகாரமென்னும் திரியாக்ஷரங்களுங் கூடிய பிரணவாக்ஷரமே அவன்வாயிலே யுச்சரிக்கிறபடியால் சங்கையுடையவனென்றும், ஜலத்தின் மத்தியில் இப்பூமியுண்டானதால் பூமியே பிர்மாவென்றும், பிருதிவிக்கு நான்கு திக்குகளிருக்கிறபடியால் சதுர்முகமென்றும், இப்புவியே சிருஷ்டிக்காதி காரணமாதலால் சிருஷ்டிக்கர்த்தாவென்றும், இப்புவி தன் வலமையின லந்தரத்திலிருப்பதால் தன் சக்தியான ஆதிசேஷன் மூடியின்மே லிருக்கிறதென்றும் சக்தியேதனக் காதாரமானதால் ஆதிசேஷன்மேல் சயனிப்பவனென்றும், அக்கினியின் மேல் ஜலரூபனான விஷ்ணுவிருப்பவனென்றும், ஜலாம்ஸ விஷ்ணுவால் அக்கினியாம்ஸனான பரமசிவன் தாபத்தை நீக்கிக்கொண் டிருப்பதைப்பற்றி ருத்ரப் பிரியனென்றும் சமஸ்த ருசிகளுக்கும் ஆதாரமான ஜலமயனானதால் க்ஷீரசாகரனென்றும் பக்தர்களுக்கு வேண்டியவரங்களளித்ததால் வரதனென்றும், எங்கும் வியாபித்திருப்பதால் விஷ்ணுவென்றும், அழியாமலிருப்பதா லச்சுதனென்றும், பாபங்களை அரிப்பதாலரியென்றும், அண்டர்களிருதயத்தி லெப்போதும் ரமிப்பதால் ராமனென்றும், விளையாட்டா யிச்சகத்தை யுண்டாக்கினதால் லீலாவினோதனென்றும், சமஸ்த வஸ்துக்களிலும் ஒட்டியும் ஒட்டாமலிருப்பதால் கபடநாடகனென்றும், தன்னை நம்பினோர்க் கழியாப் பதமீதலால் வைகுந்தநாதனென்றும் இதுவே அவருடைய ரூபமென் றுணர்ந்துக்கொள்ளக் கூடாததால் பிர்மமென்றும், பக்தப் பிரியனாதலால் பகவானென்றும், சமஸ்த லோகங்களுக்கு மதிபதியாதலால் ஜகன்னாதனென்றும், அடியார்களுக் கடிமைசெய்பவனாதலாற் பக்தவச்சலனென்றும், நித்திரை வருவதும் நீங்குவதும் முதலான தன்மாயை யாராலுமறியக்கூடாமற் செய்பவனாதலால் மாயனென்றும், காணுதற் கரியவனாதலாற் பராத்பரனென்றும், நாரதாதி ரிஷீஸ்பரர்களாற் றுதிக்கப்பட்டவனாதலால் ருஷிகேசவனென்றும், மிகவுந் தபஞ்செய்வோர்கள்முன் பிரசன்னமாகிறவனாதலால் மாதவனென்றும், சமஸ்தத்துக்கு மாதாரபுருஷனாதலால் ஆதிமூலமென்றும் சமஸ்த லோகங்களும் ஜலாம்ஸத்தா லுண்டாவதால் சர்வசிருஷ்டியென்றும்,

சமஸ்தலோகங்களுஞ் சலத்தால் ரட்சிக்கப்படுகிறதால் சர்வஸ்திதியென்றும்,

சமஸ்தமும் ஜலமென்னுந் தன்னிலடங்கிப்போவதால் சர்வசம்ஹாரனென்றும், தசாவதாரங்களால் இவ்வுலகில் துஷ்டனிக்கிரகம் சிஷ்டபரிபாலனஞ்செய்தும் செய்பவனுதலால் மச்ச கச்ச வராக நாரசிங்க வாமன பரசுராம ஸ்ரீராம பலபத்ர ராமகிருஷ்ண கற்கியென்றும் பலபேர்கள் துதிப்பதாலும் வேதத்திலும் முறையிடுகின்ற இப்பேர்க்கொத்த பகவானைக் கனவிலும் மறக்கத்தகுந்ததோ! மறக்காமல் சிந்திப்பவர்களுக்கோ ரிடையூறுமுண்டோ பகவானைப் புகழாத வேதாகம சாத்திரங்களுமுண்டோ! ஓ பகீரியே! பிர்மம் பிர்மமென்று பலதரம் பிதற்றுகிறீரே! அந்தப் பிர்மத்துக்குப் பேச்சுண்டா! மூச்சுண்டா! இல்லை, ஆதலாலினி யென்னுடன் குதர்க்கஞ்செய்யாமல் வாயில்வந்தபடி வையாமல் என்னுறுதியைக் கொய்யாமல் என்மனம் வேருகும்படியான சொல்லம்புகளெய்யாமல் உமதிருப்பிடத்துக்குப்போய்ச் சேருமையாவென்று நவில,

மாயாபகீரி இன்னுஞ் சோதிக்கவெண்ணி சபாசு சபாசு நல்லவார்த்தைகளைச் சொன்னுய் அகண்டம், அகண்டாகண்டம், அசலம், அனந்தம், அப்ரமேயம், சின்மயம், தேஜோமயம், சித்விலாசம், நித்யம், சத்யம், நிஷ்களானந்தம், பரப்பிர்மம், பரமேஸ்வரம், சுயம், துரியம், துரியாதீதம், விஸ்வம், பூரணம், விஸ்வாதீதம், விமலம், விசேஷம், வேதாதீதம், சுபம், சுயம்பிரகாசம் என்கிற நிஷ்களங்க நாமங்களுடைய நிராங்கார வஸ்துவாகிய பரப்பிர்மத்தைவிடுத்து ஆங்காரத்துடன் அவுணர்களையெல்லாங் கொன்ற அரியென்பவனை ஆங்காரத்தால் தோத்திரஞ் செய்துக்கொண்டே வந்தாய் நிச்சயமறியா அறிவீனனே! விதை முன்னதா? விருட்சம் முன்னதா? தந்தை முன்னவனு? தனயன் முன்னவனு? ஆண்டவன் முன்னவனு? அடிமை முன்னவனு, தமையன் முன்னவனு, தம்பி முன்னவனு, சொல்லும் பிள்ளாயென்று அதட்டிக்கேட்க,

கபீர் ஓ பிகாரி! பனங்காட்டுநரி சலசலவென்பதற்குப் பயப்படுமா? பதிவிரதை மன்மதபாணத்துக் கிடங்கொடுப்பாளா? வீரன் எதிரிக்கு முதுகுகாட்டி யோடுவானு? பேரின்

பத்தை யாசித்தோன் விஷயானந்தத்தி லமிழ்வானே? திட நிச்சய முள்ளவன் துக்கத்தால் வாடுவானே? தைரியசாலி அவ தைரியத்துக் குட்படுவானே படான். அதுபோல வாய்ஞானம் பேசுமும்மை நானொருபொருளாய் மதிப்பேனே, ரூபத்தில் நிலைக்காதமனம் நிரூபத்தில் நிலைக்குமா? ஆகாயத்திலேணி வைத்தேறக்கூடுமா, விருக்ஷமில்லாமல் விதையென்கிறபேரு ண்டாகுமா, தனயன் இல்லாமல் தந்தையென்கிற பெயருண் டாகுமா, தம்பியில்லாமல் தமையனென்கிற பேருண்டாகுமா, உண்டாகாததலால் அடிமையாகிய எனக்கு ஆண்டவனே துணை, அடிமைத்தனமில்லா உமக்கு ஆண்டவனே யில்லை, நிர்ச்சலன வஸ்துவாகிய பிர்மத்தைத் தியானித்தால் அந் தப் பரப்பிரமம் அசையுமா, பேசுமா, காட்டி கொடுக்குமா, திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை, தாசனுக்குச் சாமியே துணை, அடிமைக்காண்டவ்னே துணை, பக்தனுக்குப் பகவா னே துணை, நரனுக்கு நாராயணனே துணை அன்றி ஆதி மூலமேயென்று கூப்பிட்ட கஜேந்திரனைக்காத்து ரட்சித்தது பகவானே, பரப்பிரம்மமா, பிரகலாதனனைக்காக்கத் தூணிலிரு ந்து புறப்பட்ட நரசிம்மம் பகவானே பிரம்மமா, துரோபதை யின் துகிலுரியும்போது காத்தது துளசிதரனே சுயம்பிர்மமா, ஓ பகிரி! நாராயணனே சகலரையுங் காத்தவ ராதலால் நாரா யணனை நம்பினவனுக்கு நரகமில்லை, துளசிதரனைத் தொழு பவனுக்குத் துக்கமில்லை, விஷ்ணுவன்றி எனக்குவேறுதெய் வமில்லை, ஸ்ரீராம நாமமன்றி நான் வேறு நினைப்பதில்லை, சரணமென்பவர்க்கு மரணமில்லை, பதிவிரதை தன்னுயிர்நீங் கினும் பரபுருஷருக் கிடங்கொடுப்பதில்லை, பக்தனாகிய நான் பகவானையன்றி வேறுதெய்வத்தை வணங்க உடன்படுவதி ல்லை, ஆதலால் விருதாவாய் வெகுநேரமாய் வளவள சள சளவென் றேன்யேசுகின்றீர் உண்மை தெரியாம லேன் பேசுகிறீர் வீணுய்க் கைகளை வீசுகிறீர் தகுந்த உத்தரஞ்சொல் லக்கூசுகிறீ ரினி பேசினது போதும் எழுந்து போமையா வென்று சொல்ல,

மாயா பகிரி ஓ கபீர்! நிரூபமர்ன பரப்பிரம்மத்தைத் துதி க்கும் துலுக்கவம்சத்திற் பிறந்தும் குணத்தை கைக்கொண்டு மகம்மது மதத்தைக் கண்டிப்பது இராக்கதர் வம்சத்திற் பிற ந்த விபீஷணனைப்போல் இருக்கின்றதென்றும் உரைக்க,

கபீர் ஓ பகீரி! நான் பிரகலாதனன் நீர் விபீஷணன் ஆதலால் விபீஷணன் தன் வம்ஸத்தை நாசஞ்செய்தாப்போல நீரும் டைய குலத்தை நாசஞ்செய்யும், நான் பிரகலாதனைப்போல் இரட்சிக்கிறேனென்று நவில, பகீரி ஓ கபீர்! நீ குலத்தோரை ரட்சிப்பது சகுனியைப்போலவே யிருக்கிற தெனப்புகல கபீர், ஓ பெரியோரே, நான் சகுனியல்ல தோலுண்டு கழியுண்டு குற்றமுண்டு ஆக்கினையுமூண்டென் றகலனின்ற விதுரனைப்போ லிருக்கிறேன் நீரேஸ்திரமான சகுனியாம் துலுக்கவமிசத்தை நாசஞ்செய்யக் கங்கணங் கட்டிக்கொண்டு, நீண்ட குல்லாவும், நீண்ட அங்கியும் போட்டுக்கொண் டிருக்கிறீரெனப் புகல, பகீரியாகிய பகவான் ஆஹாஹா சந்தோஷம் என்ன வார்த்தையைச் சொன்னாய், சபாசு சபாசுயென்று நகைத்து துஷ்டர்களையும் பிரஷ்டர்களையும் சிஷ்டைசெய்யவே கங்கணங் கட்டிக்கொண் டிருக்கும் என் சாமார்த்தியத்தை இன்னுஞ் சற்றுநேரத்திற் காட்டுகிறேன் பம்பரம்போ லாட்டிவைக்கிறேன் நல்ல தாகட்டும் சற்றேபொழுதுபோகட்டும் உன்னை யிந்தவிதப் பிரம்பால் பதைக்கப் பதைக்க அடிக்காமலும் முழங்கையா லிடிக்காமலும் வாயில்வந்தபடி திட்டாமலும் தலைமேற் குட்டாமலும் விடப்போகிறேனா பார்! பேய்ப்பயலே என்று வைதுக்கொண்டே அவ்விடம் விட்டுப் போகையில், கபீர் பகவானை நம்பினோர்கள் பகவான்களன்றி வுன்னைப்போன்ற பிகாரியான பகீரியல்ல போம்போம் வீண்வார்த்தைகள் பேசவேண்டாமென்று சொல்ல மாயாபகீரி அடா கபீர்! போபோவென்று என்னை மிரட்டுகிறாயா இப்போதே உன் தாயாரிடம் பலவந்தமாய் வஸ்திரத்தைக் கொடுத்துவிட்டதும் சொந்த மதத்தைத் தூஷித்ததும் சகலருந் தொழும்படியான என்னை யபேட்சித்ததுஞ் சொல்லி இப்போதே அழைத்துக் கொண்டுவந்து உன்னை யுதைக்கும்படியாகவும் சிதைக்கும்படியாகவுஞ் செய்கிறேனென்று மிகவுங் கோபத்துடன் தமால் வீட்டை நோக்கிப் போகத்தொடங்கினார்.

கபீர் அடா இவனென்ன வம்புசெய்யத் தென்புள்ளவனாயிருக்கிறான். குலத்தளவேயாகுங் குணமென்பதைப்போலவும் ஜீவகாருண்யமில்லாத தீயர் துறவிகளானலும் தன் துர்க்குணம் விடாரென்பதைப்போலவும், இந்தத் துடுக்கன்

வெகு மூடிக்காகப் போகிருன். ஒருவேளை நமது மாதா வஸ்திரங் கொடுத்துவிட்டதைக் கேட்டால் கொல்லாமலும் ஈன வார்த்தைகள் சொல்லாமலும் உதைக்காமலும் சிதைக்காமலும் விடுவாளோவென் றேடோடியும்போய் அந்தப் பகீரியின் பாதங்களைப் பிடித்துக்கொண்டு என் தாயினிடத்தி லிவ் வார்த்தையைச்சொல்லி என்னைக்கொல்லாமல் கிருபைசெய்யுமையாவென் று மிகவும் பரிதாபத்துடன் வேண்டிக்கொள்ள, பகீரி! அடா போடாபோ இந்தட்சணம்போ யுன்தாயிடஞ் சொல்லாமலும், உன்னைக் கொல்லாமலும் அரைநாழிகையும் பொறுக்கமாட்டேனென் றெட்டியுதைத்து ஜிஜ்ஜாபீபியிடத்திற்குப் போய்விட்டார்.

பின்பு கபீர் யோசிக்கின்ருர் ஊர்ச்சண்டை கண்குளிர்ச்சியென்பதுபோலவும், தேளுக்கதிகாரங்கொடுத்தால் நாழிக் கொருதரங் கொட்டுமென்பது போலவும் செய்தார் அன்றி நம்முடைய உறிப்பணம்போய் தெருச்சண்டை யிழுத்ததென்பது போலவும், சணப்பன் வீட்டுக்கோழி தானே வந்து மாட்டிக்கொண்டது போலவும், மல்லாந்தபடி உமிழ்ந்து மார்பெல்லாம் எச்சில் ஆக்கிக்கொண்டது போலவும் நமக்கு நேரிட்டது, பகீரி செய்யும் ஆகாத்தியங் கெட்டது இனியென்னவிதமாகச் செய்யலாமென்று பலவிதங்களாலும் யோசித்து ஒன்றுந் தோன்ருமல் ஓர் பாழ்வீட்டிற்குட்போய் பதுங்கிக்கொண்டு பகவானே எனக்கு இந்தச்சமயத்தில் அருகே துணையிருந்து காக்கவேண்டுமென்று, ஸ்ரீமந்நாராயணருடைய திவ்விய திருநாமங்களைத் தோத்திரஞ் செய்துக்கொண்டேயிருந்தார் இப்படியிருக்க பகவாளுகிய பகீர் கபீர்கொடுத்த துண்டு வஸ்திரத்தைக் கரத்திலேந்திக்கொண்டே ஜிஜ்ஜா பீபியிடம்போய், வஸ்திரத்தைக் காண்பித்து ஓ அம்மா பாக்கியவதி! உனது குமாரனுகிய கபீர் விக்கிரயஞ்செய்யக் கொண்டுபோன இந்த வஸ்திரத்தைப் பலவந்தமா யோர் பிராமணனுக்குத் தானஞ்செய்யப் போகும்போது, எனக்குக் கொடுமென்று வேண்டிக்கொண்டேன் கொடுக்காம லிரண்டாய்க் கிழித்து அப்பிராமணனுக்கும் எனக்கும் கொடுத்தான். பாதி வஸ்திரம் வேண்டாமென்று! மறுத்ததற்கு பலவந்தமாகக் கொடுத்து நீரிக்கணம் என்தாயாரிடம்போய் கேட்டால் உமக்குத் தேவையான பெரிய வஸ்திரங்கொடுப்பாளென்றும் நான்

சொன்னதாய்ச் சொல்லவேண்டாமென்றும் உம்முடன் வந்தால் தானே யழைத்துக்கொண்டு வந்ததாய் நினைப்பாளென்றும் நீர் வருகிறபரியந்த மிங்கேயே யிருக்கிறேனென்றும் சொல்லி, ஓர் பாழ்வீட்டில் பதுங்கிக்கொண்டிருக்கிருன். சிறுகுழந்தையாயிருந்து மிவ்வளவு தருமக்குண மிருக்கின்றதே, ஓ அம்மணி நீ என்குறைநீங்க ஓர் வஸ்திரம் தாருமம்மாவென்று கேட்க ஜிஜ்ஜாபீபி அப்படியே கொடுக்கிறேன். கபீரெவ்விடத்திற் பதுங்கிக்கொண்டிருக்கிருன் காட்டவாருமையாவென் றழைக்க, பகீரி வாருமம்மா காட்டுகிறேனென்றவ்வம்மணியை யழைத்துக்கொணடு கபீர் தியானஞ்செய்துக்கொண்டிருக்கும் பாழ்வீட்டிற் பிரவேசித்து இதோ பார்த்தீரா, உம்மைப் பார்த்ததே கண்களை மூடிக்கொண்டான் சிறுபையனுயிருந்துங் கெட்ட திருடனுயிருக்கின்ருன். ஓர்வேளை எந்தப்பக்கமா யோடிப்போனுலும் போய்விடுவானுதலால் நானந்தப்பக்கமாய் வருகிறேன் நீர் இந்தப்பக்கத்திலிருந்து நுழைந்துப் பிடித்துக்கொள்ளுமென் றுரைத்து தான் அந்தப் பக்கமாய்ப்போய் ஓ கபீர் உன் தாயார் வந்துவிட்டாள் சீக்கிர மிப்பக்கமா யோடிப்போவென்றுரைக்க கபீரானவர் பெருங் கோபாவேசங்கொண்டு வருந் தாயாரைக்கண்டு பகீரி நிற்கும் பக்கமாயோடத் தொடங்கினர் உடனே மாயாபகீரி கபீர் தலைமேற்குட்டி கையைநீட்டி எட்டி குடிமியைப் பிடித்துக்கொண்டு, இதோ வோடுகிருன் வோடுகிருனென்று கூக்குரலிட்டார். கபீர் பூனைக்குத் தோழனுயும் பாலுக்குங் காவலானதுபோலவுந் திருடனுக்கு இடங்காட்டி விளக்கைப் பிடிப்பதுபோலவும் செய்வ துமக்குத் தகாது. என் தாயார் அருகில் வராமுன்னமே விட்டுவிடுமையாவென்று வேண்டிக் கொண்டார்.

மாயாபகீரி அடேபோடா திருட்டுப்பயலே உன்னையிந்த மட்டில் விடப்போகிறேனு வென்றுரைத்துச் சீக்கிரம் வாருமம்மாவென்று கூப்பிட்டார். ஜிஜ்ஜாபீபி வந்து கபீர் கரத்தைப் பிடித்துக்கொண்டு அடா துஷ்டா! வஸ்திரத்தை ஏன் கொடுத்துவிட்டாயென் றடிக்கப்போகையில், மாயா பகீரி இந்தத் திருடனை இக்களாசத்தா லடியுமம்மாவென்று தன் கரத்திலிருக்கும் பிரம்பைக்கொடுக்க, ஜிஜ்ஜாபீபி அப்பிரம்பா லிரண்டடி ஆங்காரத்தாலோங்கி வாங்கிவிட்டாள்.

அப்போது ஈயெறும்பு முதலான சகல ஜீவராசிகளும் அசரமான கல்மரம் முதலானதுகளும் ஏனேனென்றுசொல் லும்படியான பூரண நிலையைப்பெற்ற சுகாவதாரனான கபீரா னவர் அடிகளைப்பொறுக்கமாட்டாமல், அரேராம் அரேராம் என்று மிகவுந்துடித்தார் இப்படித் துடிதுடிக்கும்படியா யடி த்த இரண்டடிகளுங் கபீர்மேற்படாமல் பகிரியாய்வந்த பக வான்மேற்பட்டு மிகவுந் துடிதுடித்ததனுற் றன்மாயையை விடுத்து அடப்பாவெனப் புகன்று சுயரூபத்துடன் நின்று கபீரை வாரியெடுத்து மார்புடனணைத்து கண்ணீரைப்பெரு க்கி ஜிஜ்ஜாபீபியின் மனதையும் உருக்கினுர். உடனே அவ்வம் மணி ஆ என்மகனே! அழகான முகனே! உன்னைக் கோபத்தா லடித்து விட்டேனே ஆ கெட்டேனே யென்றலறி கபீரை ஏந்திக்கொண்டுருகியழும் ஜிஜ்ஜாபீபி மணிமகுட குண்டல வாகுவலய சங்குசக்கர துளபத்தார் மார்பகத்துடன் விளங்கும் ஸ்ரீமந் நாராயணரைக்கண்டு ஆனந்தங்கொண்டு ஒன்றுந் தோன்ருதவளாய் பிர்மை பிடித்தவர்போ லசைவற்று தன்னை மறந்திருந்தாள். அப்போது பகவான் ஜிஜ்ஜாபீபியின் கரத்தி லிருக்கும் குழந்தைப் பருவமுடைய கபீரைத் தன் கரத்திலேந் திக்கொண்டு யோசிக்கின்ருர்.

முன்னம் மாபலியைச் சோதிக்கப்போ யனேகநாளவன் வாயிலைக்காக்கும் காவற்காரனு யிருந்தபோதும், அத்திரி மகா ரிஷியின் களத்திரமான அநுசூயாதேவியைச் சோதிக்கப் போயவள் கற்பின் மகிமையாற் புத்திரனு யிருந்தபோதும், மதுகைடவர்கள் இரணியன், இரணியாட்சன், இராவணன் முதலானவர்களோடு யுத்தஞ் செய்தபோதும், பாணமெடுக் காமற் பாரதயுத்தத்திற் சாரத்தியஞ் செய்தபோதும், தர்மர் அஸ்வமேதயாகத்தில் தாமரைத்துவஜன் கக்கத்திலிடுக்கிக் கசக்கும்போதும், தந்தவக்ரன் துரத்தும்போதும், சிசுபால ன், வாணுசுரன் நரகாசூரனுடன் போர்புரியும்போதும், இவ் வளவு சங்கடமடைந்ததில்லை. இக்கபீரைச் சோதிக்கப்போய் இரணடடிபட்டுப் பொறுக்கமாட்டாமல் நமது மாயத்தை விடுக்கும்படியாய் நேரிட்ட தாச்சரியம் அம்மம்மா சலந்தரனு ருக்கொண்டுபோய் பிருந்தையினழகைக்கண்டு மோகமாகி மா யாரூபம் நீங்கி சுயரூபத்துடன் நின்றதைப்போ லல்லவோ நேரிட்டது. ஆஹா நமதுவல்லமையான மாயத்தை நீக்கின

அடிகளைத் தாங்க கபீராற் கூடுமாவென் றன்பின் மேலீட்டா லடா என் கண்மணியே! சிகாமணியே உன் தாயாரடித்த அடிகளாற் பொறுக்கமாட்டாமல் பதைத்தாயோ? ஸ்ரீராமநா மத்தைத் துதித்தாயோ? என்னை யழைத்தாயோ? அடிகளுக் குத் தப்பிப் பிழைத்தாயோவென்கிற பற்பல வார்த்தைகளாடி யுருகும்போது, ஜிஜ்ஜாபீபி பகவான் திருவடிகளிற் பணிந்து நயனங்களை யணிந்து ஓ என்னுண்டவனே! உம்மைக் காணும் பொருட் டனேகர் ஊணுறக்கமின்றி தபஞ்செய்கிறார்களே அவர்களுக்கேன் உம்முடைய அரிதான தரிசனந்தரவில்லை. ஓ அரிபரந்தாமனே! சகஸ்த்ர நாமனே! அனேகருன் திரு நாமத்தை மறக்காமல் சந்தனஞ் சிந்தனஞ்செய் தன்புடன் வந்தனஞ்செய்து இகபோகங்களை வெறுத்து இழிவான எண் ணங்களை மறுத்துப் பசிதாகங்களுக்குப் பொறுத்து குடிலக் குணங்களை யறுத்து உம்மைக்காணத் தேடித்தேடி பலசங்கீர்த் தனங்களைப் பாடிப்பாடி ஆயாசம் மேலீட்டா லடர்ந்திருக்கி றார்களே அவர்களுக்கேன் உம்முடைய தரிசனந் தரவில்லை. ஓ தெய்வமே! உம்முடைய லீலாவினோதங்களைப் புகலும் பரம பக்தர்களைத் தேடிப்பிடித்து அவர்களுக்குற்ற குறைகளைமுடி த்து சதாகாலமுஞ் சேவை செய்துக்கொண்டும் உம்முடைய திருவிளையாடல்களை அன்பாய்க் கேட்டுக்கொண்டு மனேக ரிருக்கிறார்களே அவர்களுக்கேன் உம்முடைய தரிசனந்தர வில்லை.

ஓ புருஷோத்தமா! புண்டரீகாக்ஷா! இல்லறத்திலிருந் தும்முடைய தரிசனம்பெற லரிதென் றதிதிகளால் யாதொரு பற்றுமின்றி முற்றுந் துறந்தோராகி உன்னும பஜனைந்தத் தாளுடலும் பூரித்து மயிர்க்குச்செறிந்து ஆனந்தநிர்த்தனஞ் செய்துக்கொண்டிருக்கிறார்கள் அவர்களுக்கேன் உம்முடைய தரிசனந்தரவில்லை. ஓ மகானுபாவா! தேவாதிதேவா! நாட்டி லிருந்தால் நாட்டத்துக்கு குறைவென்று காட்டையடைந்து இந்திரியங்களை யடக்கி காலைமடக்கி மேன்மூலத்தில் முடுக்கி அதோமுக மாகாமலொடுக்கி கோடிசூரியப் பிரகாசத்தைக் கண்டு நாதானந்தங்கொண்டு அமிர்தபானத்தையுண்டு அரி தான சேவைதரவாவிண்டு என்கிற எண்ணங்கொண்டிருக்கும் பேர்களுக்கேன் உம்முடைய தரிசனந் தரவில்லை. ஓ பகவா னே! தேகேந்திரியாதிகளை நியதிசெய்து மனக்கோட்டத்

தைக் கொய்து சாட்சியாய் ஸ்வரூபமாகி பரமாத்மாவிலேக் கியப்பட்ட பிரமக்ஞானிக ளும்முடைய காட்சிக்காக மாட்சிமையான நிஷ்டை சாதித்துக்கொண்டிருக்கிறார்களே அவர்களுக்கேன் உம்முடைய தரிசனந்தரவேயில்லை. ஓ மகானுபாவனே! தேவாதிதேவனே! நீர்தானே ரட்சிக்குங் கர்த்தர், வேதமுடிவிலிருக்குஞ் சித்தர், நீர்தானே ஸ்ரீமந் நாராயணர், நீர்தானே பிர்ம்மபாராயணர், மணிகர்ணிகையில் வீழ்ந்த குண்டலமும்முடையதுதானே, மக்காவிலிருப்பது உம்முடைய பாதந்தானே, மாபலிசிரத்திற் பதித்தபாதம் இதுதானே, ஓ தீனபந்துவே! உம்மைத் தரிசிக்கும்படியான பாக்கியமேதோ, நான்செய்த சிலாக்கியமேதோ, ஓ பராத்பரா! பரமேஸ்வரா! ஜெகதீஸ்பரா! கருணாசாகரா! மனோகரா! சங்குசக்ரா! தாமோதரா! பீதாம்பரதரா! துளசிதரா! வேங்கடேஸ்பரா! கமலநேத்ரா! சத்குண பாத்ரா! தேவர்கள் தோத்ரா! திவ்வியமானகாத்ரா! ராவண சம்ஹாரா! தசரதகுமாரா! நவநீதசோரா! அகண்ட கெம்பீரா! வீராதிவீரா! நிராங்காரா! சொல்லுதற்கரியதீரா! சுபமங்களாகரா! மூலபலத்தைவென்ற சூரா! அறிவதற்கரிய அபாராவென்று பற்பல விதங்களாய்த் தோத்திரஞ் செய்தேத்தும்போது,

பகவான்! ஜிஜ்ஜாபீபியைக் கருணையுடன் நோக்கி, ஓ பாக்கியவதி! இப்போதுனக்குப் பயந்தோடி எனக்கடிகள் வாங்கிக்கொடுத்த புண்ணியபுருஷனை யாரென்று நினைத்தாய் எனக்கருமையான பக்தனையும் ஜீவன் முக்தனையும் என் திருக்கண்ணினுண் மணியாடு பாவைபோன்றவனையும் எனதாவிக்கருந்துணைவனையும் என்னைமறக்காதவனையும் என்றும் இறக்காதவனையும் என்னை விழுங்கினவனையும் இருக்கும் பிர்மரிஷி யென்று நினைப்பாயாக. இதற்குக் காட்சியான சாட்சிவேண்டியிருப்பதால், நீ கோபத்தாலோங்கி வாங்கின இரண்டடிகளுமுன்மைந்தன் முதுகிற்பட்டதா பாரென்று திருவாய்மலர்ந்தருள, ஜிஜ்ஜாபீபி கபீர் முதுகைப்பார்த் ததிலில்லை யென்றுரைக்க பகவானென்முதுகிற் பாரென்று காட்ட கடவுள் புறத்திலிரண்டடிகளும் பட்டு பழுத்த் தழும்புகளாயெழும்பி யிருக்கக்கண்டு முகத்தின்மே லறைந்துக்கொண்டு மிகவுங் கதறி தேகமெல்லாம் பதறி வாயுலர்ந்து பெருமூச்செறிந்து மூர்ச்சையாய் விழுந்து வாய்விட்டழுது பலதரந்தொழுது ஐயோ

வந்துதே பழுது என்று பிரலாபித்து தெய்வமே வீராதி வீரனாகிய இரணியாக்ஷனும் சூராதி சூரவைராக்கியனான இராவணனும், இந்திரனைச்செயித்த இந்திரசித்தன் முதலானவர்களும் பிரயோகித்த பாணங்களும் சூலங்களும் பிண்டிபாலங்களும் பிண்டாயுதங்களும் படாத மேனியில் இக்கொடிய பாவியடித்த இரண்டடிகளும்பட்டதோ என் குலத்தை சுட்டதோ ஓ வைகுந்தநாதா! லீலாவினோதா! உம்மையு மடியாளடிக்கப்போமா அடித்தினியுமிருட னிருக்கலாமாவென்று தன் மத்தகத்தைப் பூமியிற் பலதரம் மோதிக்கொண்டு சாவுக்கிணையான மூர்ச்சையாய் வீழ்ந்துவிட்டாள்.

கேட்டீர்களோ சித்தர்களே! இப்படி மூர்ச்சையாய் வீழ்ந்த ஜிஜ்ஜாபீபியை பக்தவச்சலனாகிய பகவான் தனது திவ்விய அஸ்தங்களாற்றடவி ஆதரணைசெய்து கருணை மழை பெய்து மூர்ச்சையைத் தெளிவித்து ஓ புனிதவதியே! மாசிலாமதியே! வீணாயேன், உன் பிராணனைவிடத் துணிந்தாய். நீ நல்ல உத்தமி யென்றல்லவோ என் பத்தனை மிகவும் பரிசுத்தனை உன்பா லொப்பிவித்தேன். உனக்குப் பாலுமுண்டாக்குவித்தேன். முதுகைகாட்டி நானே கபீரென்று மெய்ப்பித்தேன் உன்னுடன் கணவனையு முய்வித்தேன் ஆதலானின்றுட னிந்தத் தூயனை எனக்குகந்த நேயனை நானாகப் பாவித்து அன்பாகச் சேவித்துப் பாதுகாப்பீரானால் என் பதவியைப் பெறுவீர்க ளகண்டானந்த வாழ்வை யுறுவீர்கள் என்று திருவாய் மலர்ந்தருளி கபீரை நோக்கி ஓ அபீர்வாசனை வீசுங் கபீர்தாஸனே! உன்னுடைய ஸ்திரமான தியானத்தைக் கலக்கி ஓடிப்போகாமல் மடக்கி அடிகள் வாங்கிக்கொடுத்ததற்காக என்மேற் கோபஞ்செய்யாதே வாயில்வந்தபடி வையாதே சகாதேவனைப்போற் கட்டாதே அரவானைப்போலே தட்டாதே பிருகுரிஷியைப்போற் சாபங்கொடுக்காதே தந்தவக்ரனைப்போல் முடுக்காதே தாமரைத் துவசனைப்போ லடக்காதே தசமுகனைப்போல் மடக்காதே யென்று பற்பல விதங்களாய் வேண்டிக்கொள்ளும்போது கபீர் பகவானுடைய பாசாங்கு வார்த்தைகளைக்கேட்டு உள்ளமுருகி அன்பு பெருகி கரங்களைச் சேர்த்து சந்தேகங்களைப் பேர்த்து பாதத்தில் வீழ்ந்து பலதரந் தாழ்ந்து ஓ சுவாமி என் தாயாரடித்த அடிகளென்மேற்படாமல் தாங்கிக்கொண்டாலும் தாய் கை நோகா

தோ நீர் நினைத்தால் களாசம் வெந்து நீருகாதோ ஏழைக் காக ஏழைப் பகிரியாய்ப் புறப்பட்டீரோ நான் பொறுக்கமாட் டேனென் றடிகளும் பட்டீரோ உமது மாயையும் விட்டீரோ உமதஸ்தங்களால் என்னையுந் தொட்டீரோ ஓ என்னுண்டவ னே! நீர் பகிரியாய் வந்தீரென் றறியாமற் போனேனே தர்க் கித் தபசாரனேனே வாயில் வந்தபடி வைதேனே அடிக ளும் படும்படி செய்தேனே பிகாரியென் றறைந்தேனே கோ பங் கொதித் திறைந்தேனே ஓ கர்த்தனே! பரிசுத்தனே! நா னியற்றிய குற்றங்களை நற்றவமாகக்கொண்டு காத்தாள்வாயா! அன்பர்கள் சகாயா! பிர்மக்ஞானிகள் நேயா, கபடநாடக னுகிய மாயா, நானுவித உபாயா, வெண்ணையுண்ட வாயா, சகலருந் தொழுந் தூயா, கோபாலரைக்காத்த ஆயா, நிருப மாகிய ஆகாயா, நீலமேகச்சாயா, கௌசலையீன்றசேயா, பச் சை வர்ணமுள்ள காயா, அகிலாண்டகோடி பிர்மாண்டநாய கா, ஓ பரந்தாமா, ஓ விஷ்ணு, ஓ பகவான், நீர் எளியேனை வஸ்திரங் கேட்கக்கூடுமோ வென்றனந்தம் விதங்களாகத் துதி த்து ஆனந்தமேலீட்டாற் குதித்து நின்று தயவு முற்றி லும் இப்படியே இருக்கும்படி வரந்தாருமையா சங்குசக்கரக் கையாவென்று வணங்கும்போது,

பகவான் ஓ என்னப்பனே நீ நினைக்காவிட்டாலும் உன் னிழல்போலுன்னைப் பிரியாமலிருக்கும் என்னைப் பிர்மானந்த மேலீட்டால் நீமறக்காமலிருக்க வேண்டுமையாவென்றறைய கபீர் நிர்க்குணமே முக்கியமென்று திருவாய் மலர்ந்தருளிய பகவானைவணங்கி இணங்கி ஓ சுவாமி! சுவப்பனத்திலு முன் னைமறப்பேனு மறந்திவ்வாக்கையோடிருப்பேனு உம்முடைய திருநாமத்தைத் துறப்பேனு துறந்தினிமேலும் பிறப்பே னு ஓ என்னுண்டவனே! உம்முடைய தியானம் மேன்மை யானதோ பிர்மக்ஞானம் மேன்மையானதோ உண்மையை யுரைத் தென்னையாட்கொள்ளும் சுவாமியென்று சிரசாஷ்டா ங்கமாய் வந்தனஞ்செய்ய பகவான் ஓ கபீர் இதைக்குறித்து யானென்றுஞ் சொல்லமாட்டேன். ஏனெனில் சகலருக்கும் பொதுவான வேதாகம புராணங்களில் பக்தி வைராக்கிய ஞானமென்னும் மூன்றையும் அவரவர்கள் பக்குவத்துக்கே ற்றபடி யுரைக்கின்றதன்றி தேகமே தானென்றிருப்பவன் கர் மக் கிரியைகள் செய்யவேண்டும்.

ஜீவனே தானென்றிருப்பவன் பக்திமார்க்கமான தவத்தைக் கைக்கொள்ளவேண்டும். ஆத்மாவே தானென்றிருப்பவன் பரமாத்மாவில் ஐக்கியப்பட்டு தேகஸ்மரணைவிட்டு மௌனசமாதியையடைந்து நான் நீயென்னும் துவிதபாவனையைக் கடந்து துரிய திருஷ்டியை மேவியிருக்கவேண்டும். உன்மனியவஸ்தையையடைந்த பிரமக்ஞானிகள் மேன்மையான பிர்மக் ஞானத்தினாலும் நிர்க்குணத் தியானத்தினாலும் நிரூபமாயிருக்கும் பரப்பிர்மமாகிய என்னைப் பூசித்து ஐந்தாம்பதவியாகிய கைவல்யத்தையே ஆசித்து ஜீவன்முத்தர்களாயிருந்து இறுதியில் விதேககைவல்யத்தை யடைவார்கள். மற்றவர் கர்மபக்தியினாற் சகுணமாகிய என்னைச் சந்தோஷிப்பித்து பரமபதமடைவார்கள். சிலருக்கு ஞானமே சுலபமாயிருக்கும். சிலருக்கு பக்தியே சுலபமா யிருக்கும் ஆனால் பிர்மக்ஞானம் அனந்த ஜென்மங்களில் என்னைப் பூசித்தவர்களுக்கே கிடைக்கும். ஆனந்தமாத்திரமாயிருக்கும் மௌனநிஷ்டையி லிருப்பதெளிதல்ல. திரிவுலகத்தரிலொரு ஞானியென்று சாஸ்திரங்களில் முறையிடுகின்றது கர்மபக்தி ஞானமென்னு மூன்றும் பிஞ்சு காய் கனியைப்போன்றதேயாம். முன்னஞ் சத்கருமங்களால் என்னைச் சந்தோஷப்படுத்தி பக்தியினா லென்னருட் பிரசாதம் பெற்று அவ்வருள் விலாசத்தால் அதிசூட்சமா யிருக்கும் என்னை அந்தரங்கத்தில் க்ஞான சட்சுவாலறிந்து சகல சந்தேகங்களையுங்களைந்து நிர்குணத் தியானபரனாகிய ஆனந்தசாகரத்தி லமிழ்ந்து சத்யக் ஞானந்தமாய்த் தழைத்து தன்னைமறந்து திக்கு திசாதிகள் இழந்து ஆரூடக் ஞானியாகவேண்டும். அப்படிக்கின்றி வாசாக்ஞானத்தால் அகம் பிர்மம் என்கிற பாவத்தையடைந்து தேகாதிகளில் வாஞ்சை வைத்து கர்ம பக்தியுமில்லாமல் மேன்மையான பிர்ம்மானந்த லாபமுமில்லாமல் பிரஷ்டர்களா யனந்த சன்மங்மளெடுத் துழலும் அஞ்ஞானிகளுக் கென்னருட் பிரகாசம் பிர்ம கற்பங்களிலுங் கிடைக்கமாட்டாது. அன்றி முன்சொன்ன மூன்றுக்குஞ் ஜீவகாருண்ய விரதமே துணையாயிருக்கவேண்டும்.

அஹிம்ஸா பரமோதர்மமென்று சுருதியிலுமுரைக்கின்றது. தன்னுயிரைப்போல மன்னுயிரைப் பார்க்கும் தவமே மேலான லாபத்தைக்கொடுக்கும் விசேஷமா யிருக்கின்றது.

சமபாவமுள்ளவனே எல்லாரிலு மதிசீக்கிரமாயென்னை அந்தர்முகத்தில் நிர்க்குணமாகவும் பகிர்முகத்தில் சகுணமாகவும் தரிசிப்பான். ஊனக்கண்களுக்கு ரூபமாகவும் ஞானக்கண்களுக் கரூபமாகவுந் தோன்றப்பட்டு அகண்டானந்தத்தைத் தருபவன் நானேயாம். ஞானக்கண் துலங்காத அஞ்ஞானிகளானலும் அன்புடன் என்னைத் தியானிப்பார்களாகி லுடனே பிரசன்னமாகி அகண்ட சாம்பிராச்சியத்தைக் கொடுப்பேன். என்னை நம்பினவர்கள்பால் வெளி வளியைப் பார்க்கிலும் சமீபமாயிருப்பேன். பக்திமார்க்கத்தி லிருப்பவர்களை குழந்தைகளைக் காப்பாற்றுந் தாயைப்போல பாதுகாப்பேன் வைராக்கியமான யோகமார்க்கத்திலிருப்பவர்களைப் பலவிதங்களாய்ச் சோதித்து சிநேகபாவமாய்ப் பார்ப்பேன். ஞானமார்க்கத்தி லிருப்பவர்களை எனக்குச் சமானமானவர்களைப் போல பாவிப்பேன். பக்திமார்க்கத்திலிருப்பவர் குழந்தைகளாகும். வைராக்கியமுதலான அஷ்டயோகங்களிலிருப்பவர்கள் எவ்வனபுருஷர்களாகும். க்ஞானமார்க்கத்தி லிருப்பவர்கள் விர்த்தாப்பியர்களாகும். குழந்தைகளுக்கும் விர்த்தர்களுக்கும் நானென்பது குறைந்திருப்பதுபோல பக்தர்களுக்கும், க்ஞானிகளுக்கும் அகம்பாவம் குறைந்திருக்கும். வைராக்கியத்துட னடயோகங்களைச் சாதிப்பவர்களுக்கு நானென்பது மிகுதியாயிருக்கும். அதினுலேயவர்கள் என்னுல் மிகவுஞ் சோதிக்கப்படுவார்கள். பக்தர்கள் என்னையே நம்பி எல்லாவற்றிற்கும் பகவானே துணையென்று அகம்பாவமடையாமற் சந்ததமென் பாராயணத்தால் நாட்களைக் கழிப்பார்கள். க்ஞானிகள் பிராப்தாதீனமான இத்தனுவுக்குச் சுகம் வந்தாலும் சந்தோஷமும் வாட்டமும் அடையாமலெல்லா முள்ளபடி முடியுமென்று மௌனநாட்டத்தையடைந்து யாதொன்றிற்கும் அகம்பாவங் கொள்ளாமல் நிராங்கார வஸ்துவில் லயப்பட்டிருப்பார்கள் பக்தர்களுக்கு முக்கியமான தன்பேயாம். சித்தர்களுக்கு முக்கியமானது வைராக்கியமேயாம். முத்தர்களுக்கு முக்கியமானது மௌனமேயாம். அன்பில்லாத பக்தியும் வைராக்கியமில்லாத யோகமும் சாந்தமில்லாத க்ஞானமும் நிஷ்பலமென்று சொல்லப்படும். எல்லா தர்மங்களையும் நாசஞ்செய்வது நானெனு மகங்காரமும் எனதென்னு மமகாரமும் ஜீவஹிம்ஸையேயாம். சுபத்தை விர்த்திக்கச்

செய்தது நிராங்காரமும் அமோகமும் அயிம்ஸையேயாம். ஆதலால் கர்மபக்தி ஞானமென்னும் மூன்றி லெதன்மேலிச்சையோ அதையே உறுதியாய் நம்பவேண்டுமானாலும் குழந்தைப்பர்வமுள்ள உனக்கு தாசத்வமான பக்திமார்க்கம் லபிக்குமானாற் சீக்கிரத்திற் சகல சாஸ்திரார்த்தங்களையுமறிந்த ஓராசானைத் தேடிக்கண் டுண்மையைத் தெரிந்துக் கொள்ளப்பாவென்று கபீருக்கு சொல்லி பகவானவர் மாயமாய் மறைந்துபோனர்.

பின்பு கபீர் கன்றைப்பிரிந்த காராம்பசுவைப்போலவும், கலையைப்பிரிந்த மானைப்போலவும், பதியையிழந்த பதிவிரதையைப்போலவும், படியையிழந்த பார்த்திபனைப்போலவும், பணத்தைப் பறிகொடுத்த பார்ப்பானைப்போலவும், தனயனையிழந்த தாயைப்போல்வும், கண்ணிழந்தவனைப் போலவும், கற்பழிந்தவளைப் போலவும் பரதவித்து, ஓ பகவானே! எனக்கோருறுதிகூருமல் மறைந்துபோகலாமா? நான் சந்தேகத்தோடிருக்கலாமா? ஓராசானையும் தேடலாமா? உமதிடமன்றி மற்றொருவர்பால் நான் உபதேசம் பெற்றுக்கொள்ளப் போமா! இப்படியும் நீர் விள்ளப்போமா! பகையாளியைப்போற்றள்ளப்போமா! ஓபரந்தாமா துளபத்தாமா பரசுராமா ஸ்ரீராமா சகஸ்த்ரநாமா சுதாமா மேகஸ்யாமா திரிவிக்கிரமா புஜபல பராக்கிரமா தேசிகோத்தமா பரமபுருஷோத்தமா புண்ணியபுருஷா புண்டரீகக்கண்ணு சேஷசயனுவென்றும் ஸ்தோத்திரம் செய்துக்கொண்டே தாரைதாரையாய்க் கண்ணீரொழுக அழுது புலம்பும்பொழுது, ஜிஜ்ஜாபீபி பகவானைத் துதித்து கபீரை மார்புடனணைத்து அடா யென்மகனே! அழகான முகனே! உன் பக்தியைக் கலைத்துகெட்டேனே, கோபத்துக்குட்பட்டேனே, ஆ கெட்டேனே! அடாயென் புதல்வா! பக்தியில் முதல்வா! உன்னாலல்லவோ பகவானை தரிசித்தேன், பாதங்களைப் பரிசித்தேன், மோக்ஷ மார்க்கத்தை யனுசரித்தேன், பின்புன்னை யுபசரித்தேன், சகல பாக்கியமும் பெற்றேன், பிரமக்ஞானமும் கற்றேன் என்கிற பற்பல வார்த்தைகளை விண்டு கபீரை எந்திக்கொண்டு துரிதமாய் நடந்து வீட்டையடைந்து கணவனிடம் பலதரம் தாழ்ந்து கபீருடைய பெருமையையும் உரைத்து கணவன் மனதைக்கரைத்து அனலிலிட்ட மெழுகுபோல் கரைந்தழத் தொடங்கினள்.

அப்போது தமால் ஆ பெண்ணே! என்னிரு கண்ணே! ஆண்டவனைக் கண்டாயா ஆனந்தங்கொண்டாயா நீ செய்த பாக்கியமேதோ, நான்செய்த அபாக்கியமேதோ, நீயிழைத்த தவமேதோ, நானிழைத்த அவமேதோ, நீயிருந்த ஆசார மேதோ நானிருந்த அனுசாரமேதோ வென்கிற பற்பல வார்த்தைகளைப் புகன்று, கபீரை நோக்கி, அடா என் கண்மணியே! சிகாமணியே! உன் தாய்க்கு தரிசனந்தந்தகடவுள் எனக்கு தரிசனந் தரமாட்டாரா நீ வேண்டியழைத்தால் வரமாட்டாரா பகவானை யழைப்பிக்க உன்னாலாகாதா அழைப்பித்தாலென் குறைகளெல்லாம் போகாதா அஞ்ஞானம் நீங்காதா மெஞ்ஞானம் ஓங்காதா நான் மாத்திரம் கொடிய பாவியானேனே நரகத்துக்குள்ளாகும் ஆவியானேனே ஓ பகவானே நானென்ன குறை செய்தேன், ஓ வாசுதேவா, தேவாதிதேவா ஆதிதேவா மகானுபாவா மாதவா, யாதவா, கேசவா, வாசுதேவபுதல்வா, யாவர்க்கு முதல்வாவென் றனந்தம் விதங்களாய் துதித்து கபீரைப் பகவானென்றே மதித்து மகவென்னு மெண்ணத்தைச் சிதைத்து மிகவும் வாஞ்சையாய்ப் பாதுகாத்து வந்தார்கள். ஜிஜ்ஜாபீபியோ இந்தக் கபீரே ஸ்ரீமந்நாராயணரென்று உறுதியாய் நம்பி நாடோறும் பூசித்துக்கொண்டே வந்தாள் கேட்டீர்களோ சித்தர்களே என்று விரிஞ்சாவதாரரான நாபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லத் தொடங்கினர்.

கபீருக்கு பகவான் பகீரிரூபமாய்வந்து நிஜதரிசனங் கொடுத்த அத்தியாயம் மூற்றிற்று.

ஐந்தாவது அத்தியாயம்

கபீர்தாஸ் பிரமானந்த சுவாமிகளின் பணிவிடைக்காரர்களால் அடிபட்டது.

ஓ சித்தர்களே! ஜீவன் முக்தர்களே! இவ்விதமாகத் தமாலும், ஜிஜ்ஜாபீபியும் கபீரைத் தங்களுயிரைப்போலவே பாதுகாத்து வருகிற நாளில் ஒருநாள் கபீர்தாஸ் பகவான் குருமுகத்தா லுண்மையை யறிந்துக்கொள்ளென்று திருவாய்மலர்ந்தருளியதை நினைத்துக்கொண்டு சிந்திக்கத் தொடங்கினர். அதாவது இத்தாத்திரியில் கணவனில்லாக் கன்னியும், கர்த்

தனைப் பணியாச் சென்னியும், திலகமணியா நெற்றியும், தெளிவில்லாத புத்தியும், அன்பில்லாத பத்தியும், அகத்தி வில்லாச் சுத்தியும், ஜீவகாருண்யமில்லாத தவமும், சிந்தையி லூன்றாதஜபமும், ஆறில்லாதவூரும், அரசனில்லாப்பாரும், ஞானமில்லாக் கல்வியும், மானமில்லாச் செல்வமும், பக்தி யில்லாப் பூசையும், பணத்தின்மேல் மிகவாசையும், போர் செய்யும் வீடும், புனிதரில்லா நாடும், நீதியில்லா அரசும், நிழலேத்தரா அரசும், பிரியமில்லா மோகமும், பிணியாற்சூழ் ந்த தேகமும், தர்மம்செய்யாக் கையும், சாந்தரைப் பணியா மெய்யும், ஜலமில்லா ஏரியும், சர்ச்சனரைச்சேர்க்கா வோரி யும், மலேபோற்பொழியும் மாரியும், மணாளனைவையும் நாரி யும், விபசாரஞ்செய்யும் மங்கையும், வீட்டிற்றங்கா நங்கையும், என்றுந் திராச்சங்கையும், எளியோரை மோதும் அங்கையும், சங்கம்நீங்காத் துறவும், சந்துருஷ்டியில்லா அறமும், குண் டுணி வேலேயாற் ஜீவிப்பதும், குருவை மனிதனுகப் பாவிப்ப தும், கொடியோர்செய்த சத்கன்மமும், குருவுபதேச மில்லாச் சென்மமும் தாழ்வடைவதுபோல குருவுபதேசமில்லா நாமு ம் தாழ்வடைவோமல்லவா! ஓ தெய்வமே! எனக்குற்ற சங்கை கள் எப்போது நீங்கும், பிர்மானந்த மெக்காலத்தி லோங்கும் என்று தனக்கிருக்கும் சங்கையை நிவர்த்தி செய்துக்கொள் ளும்பொருட்டு ஆசானைத்தேடப் புறப்பட்டு காசிதேசமெல் லாந்திரிந்து அகப்படாமையால் முகங்கரிந்து ராமானந்த ஸ்வாமிகளின் மேன்மையைக் கேள்விப்பட்டு, இனி கிருதார் த்தனுனேனெனச் சந்தோஷப்பட்டு ராமானந்த சுவாமிகளே நமக்காசானெனத் தீர்மானித்து,

இவரே நாம் வணங்கத் தகுந்தவரெனத் தியானித்து, அனேக மாணுக்கர் பணிபவராயும், அருந்துளபத் தாரணி பவராயும், அடியார்களே யாட்கொள்ளும் ஆண்டவராயும், அயிம்ஸாவிரதம் பூண்டவராயும், உபாதிதிடத்தில் மிகுந்த வராயும், உபசரணைசெய்யத் தகுந்தவராயும், ஞானக்கொடி யை நட்டவராயும், நாரியர்போகத்தை விட்டவராயும், அகங் காரத்தைக் கொன்றவராயும், அபிமானத்தை வென்றவரா யும், எனதென்னு மாசையைக் கிழித்தவராயும், இருளணு காமலழித்தவராயும், பிர்மதேசத்தில் விழித்தவராயும், பேத மையோரைப் பழித்தவராயும், மகாவாக்கியங்களறிந்தவரா

யும், மர்மங்களெல்லாம் தெரிந்தவராயும் விளங்காநின்ற ராமானந்த சுவாமிகளை மனதிற் பூசித்து உபதேசம் பெற்றுக் கொள்ளலாமென்கிற எண்ணம்மீறி குருஸ்வாமிகளின் தரிசனத்தைக்கோறி அடியார்கள் நெருக்கத்தா லுள்ளேபோவதற்கு வேசாரி மாலைமட்டுமிருந்தும் கூடாமற்றடுமாறி சுவாமிகளைக் காணுமற்போனேமேயென நொந்து நாளைக் கதிகாலையில்வந்து காணலாமென வீட்டையடைந்து மறுநாளதி காலையிலெழுந்து அடியார் வருவதற்கு முன்பே காணலாமென்று சற்றிருட்டா யிருக்கும்போதே மடத்துட் பிரவேசித்தார்.

அப்போது ராமானந்த ஸ்வாமிகளின் பணிவிடைக்காரர்களாகிய அந்தணர்கள் கபீரைப்பார்த்து அடா துலுக்கப் பயலே! இராத்திரியி லிங்கு திருடவாவந்தாய்? நாங்கள் விழித்திருக்கிறோமென்றோ நொந்தாய், இங்கே முரடரன்றி குருடரில்லையே நீ நினைத்துவந்தது தொல்லையே, இனி உள்ளே வரவேண்டாம் சீக்கிரம் வெளியே போவென்று பதட்டத்துடன் தட்டினார்கள். கபீர், ஐயா பிராமணுேத்தமர்களே உள்ளே வருவதற்கு முனபே சள்ளென்றேன் விழுகிறீர்கள் சாந்தகுணமுள்ள வேதாந்திகளாகிய உங்களுக்கு இவ்வளவு கோபமிருக்கலாமா? சங்கதி தெரிந்துக்கொள்ளாமல் வெறுக்கலாமா? அன்புடன் வந்தவர்களை மறுக்கலாமா? கடினவாளால் நருக்கலாமாவென்று பரிவுடன் பலதரம் வந்தனம் செய்தார்.

அதற்கந்த மறையோர் கபீரைநோக்கி அட போடா முழுமூடா, உன் விண்ணுன வார்த்தைக ளிங்கு நடக்காது, உள்ளே விடுவோமா நாயை மடக்காது என்று மிகவுங் கோபித்துப் போவென்கிற வாக்கியத்தையே ஸ்தாபித்து அதிகாலையில் நீச்சனுகிய உன் முகத்தைக் காட்டாதே, போகாமலெங்களை வாட்டாதே, கஷ்டகல்வி செல்லமாட்டாதே கொல்லுங்கைகளை நீட்டாதே கிணற்றுத்தவளைக்கு நாட்டுவளப் பமும், ஔவையாருக் கரசாங்க விசாரணையும் கோசாயிக்குக் கூத்தாடும் வித்தையும், சாதுக்களுக்குச் சமர்செய்யும் யுத்தியும் விபசாரிக்கு மேன்மையான பக்தியும், கொடியனுக்குக் கூர்மையுள்ள புத்தியும் ஏன்? அதுபோல குலைசெய்யும் குணயீனத் துலுக்கவம்சத்திற் பிறந்த துடுக்கனுன வுனக்கிவ்வ

ளவு முடுக்கான வார்த்தைகளேன் அல்லாமல் ஜீவகாருண்ய பிராமணர்களிடத்தி லுனக்கென்ன காரியம் அடியார்கள் வருகிற வேளையுமாச்சுது வீணாயேன் துன்பத்துக் குள்ளாகிறா யென்று கோபக்குறி காட்டினார்கள்.

அதற்கு கபீர், ஓ அந்தணர்களே! உங்களுக்கு பலதரம் வந்தனம் செய்கிறேன் உங்கள் கிருபையாலுய்கிறேன் கோபஞ்செய்யாதீர்கள் வாயில்வந்தபடி வையாதீர்கள் அடியேனாகிய கொடியேன் பரமானந்த ஸ்வரூபிகளாகிய ராமானந்த ஸ்வாமிகளின் சொத்தைத் திருடவந்தேனென்றா புண்ணிய புருடர்களாகிய நீங்களறைந்தீர்களே மிகவும் இறைந்தீர்களே அடியே னெங்கேயாவது களவு செய்ததுண்டா, அப்படி யாராவது சொன்னதுண்டா, நீங்கள் கேள்விப்பட்டதுண்டா, அல்லது வேறெண்ணங்கொண்டா, விப்பிரர்களாயிருந்தும் தப்புவார்த்தைகள் சொல்லலாமா, என்னைக்கொல்லாமற் கொல்லலாமா, அவயவப்பழுதும் குலப்பழுதும் பாராமல் குணத்தைநன்றா யோராமல் குணவானென்றும் குற்றமுள்ளவனென்றும் செப்பலாமா, ஒருவர் சொன்னாலு மொப்பலாமா, நீங்களறியாத தொன்றுண்டா, அடியேன் சொல்வதிற் பிசகுண்டா, ஆனால் பெரியோர்க ளென்னசொன்னாலும் சிறியோர்கள் பொறுக்கவேண்டியதே அடியேன் வெகு நாளாய் ஸ்வாமிகளின் திவ்விய திருவுருவைத் தரிசனம் செய்யவேணுமென்கிற எண்ணங்கொண்டு நேற்றுக்காலையிலிருந்து மாலைமட்டுக்குங் காத்திருந்தும் அடியார்கள் நெருக்கத்தா லுள்ளேவருவதற்குக்கூடாமல் நேற்றைப்போலவே யின்றும் வாடாமல் அதிகாலையில் சந்தடியில்லாம லிருக்குமென்று வந்தேன் வந்து ஸ்வாமிகளைக் காணாமல் நொந்தேன் ஆதலால் மகானுபாவர்களாகிய நீங்களனைவோருஞ் சேர்ந்து மிகவும் கருணைகூர்ந்து கோழையேனாகிய இந்த ஏழையை ஸ்வாமிகளின் தரிசனஞ் செய்யும்படியாய்ச் செய்தா லுங்களுக்கு வெகு சுகிர்தமுண்டென்று பரிதாப முகத்துடன் புகன்று மிகவும் விண்ணப்பஞ் செய்துக்கொண்டார்.

அதற்கு மறையோர் கற்களைப்போன்ற பற்களைக் காட்டி கெக்கலிகொட்டி நகைத்து பதைத்து, அடா மூடா! வனவேடா! மூடவன் கொம்புத்தேனுக் காசைப்பட்டாற் கிட்டுமா, தென்னங்காயை பூமியிலிருந்தெட்டினா லெட்டுமா, சிறிய

கன்றுக்குட்டியானது புலியை முட்டுமோ, பழிபாவத்துக் கஞ்சாமற் சேகரிக்க பொருளொருவனுக் கெட்டுமோ? அதுபோல உன் வார்த்தைகள் சுவாமிகள்முன் நடக்கவே நடக்காது. சுவாமிகள் தரிசனம் கிடைக்கவே கிடைக்காது நீயெங்கே சுவாமிகளெங்கே மேட்டானமேட்டிகளும் நன்றாய்த்தேறின கோஷ்டிகளும் நெடுநாளாய்க் காத்திருந்தும் வருவார் வருவாரென்று பார்த்திருந்தும் அவர் தரிசன மகப்படவில்லை நீ நினைத்துவந்தது மிகவுந்தொல்லை நீயென்ன அவர்தரிசனம் பெறுகிறதென்ன ஜாண் பயலாயிருந்தும் சஷ்டகல்விகளெல்லாம் பேசவந்தாய் எங்களைக் காணவே கூசிநொந்தாய்சேசே ஓடிப்போவென் றடிக்கவந்தார்கள்.

அதற்கு கபீர் ஓ மாதவர்களே! பிரக்கியாதியர்களே! உங்கள் கைகளா லடியேனடிபட என்ன பாக்கியம் செய்தேன் ஏதுதவம்செய்தேன் எவ்வளவு யோக்கியனானேன் எவ்வளவு பாக்கியனானேன் எவ்வளவு சிலாக்கியனானேனென்று வணங்கி இணங்கி ஓ சுவாமிகளே! மகாவிஷ்ணுவின் தரிசனத்தைக்காணுந் துவாரபாலகரைப்போலவும் பரமேஸ்வருடைய காட்சியைப் பார்க்கும் நந்திகேஸ்வரரைப் போலவும் நாடோறும் ஸ்ரீ சத்குரு ஸ்வாமிகளின் தரிசனம்பெற்று மோட்சமார்க்கங்கற்று கோப லோப தாப சோப பாப சாப ரகிதர்களாய் பிர்மானந்தத்துக்குச் சகிதர்களாய் விளக்கமுற்றிருக்கும் நல்லவர்களே! தபத்தில் வல்லவர்களே சுவாமிகளின் சேவையைக்கோரிய ஏழையேனாகிய கோழையேனெண்ணத்தைமுன்னம்முடித்து பின்புங்கள் கரங்களாலறைந்து துரத்திவிடக்கோருகிறே னென்றவர்கள் தாட்களில் வீழ்ந்தாட்கொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்தார். அதற்கந்தக் கொடியமறைக்கொடியோ ரடா கபீர்! ஸ்வாமிகளின் சேவையால் உனக்கென்ன லாபம் வரும், என்ன சுகந்தரும், யாது காரணத்தால் சுவாமிகளின் மாட்சிமையான காட்சியைக் கோறினாய் வாது செய்ய மீறினாய் உன்கருத்தை வெளிப்படுத்தென் றதட்டிக் கேட்டார்கள். அதற்குக் கபீர் ஓ புண்ணிய புருஷர்களே! அடியேன் சுவாமிகளிட முபதேசம்பெற்றுக்கொள்வதற் காசித்திருக்கின்றேனாதலால் நீங்களெல்லோரு மிவ்வெளியேனைக்குறித்து அன்புடன் விரித்து சுவாமிகளுக் குரைத்து மெழுகைப்போல விருதயத்தைக் கரைத்து எனக்கனுக்கிரகம் செய்

யும்படியாய்க் கருணை கூறுங்களென்று சிரசாஷ்டாங்கமாய் வந்தனஞ்செய்தார். அதற்காதிவருணர் தரித்திரன் இராஜ போஜனத்தையும், கர்மி தேவாமிர்தத்தையும், காமி சன்யாசத்தையும், லோபி சொர்க்கத்தையும், விபசாரி மோட்சத்தையும், அகங்காரி ஞானத்தையும், மிலேச்சன் பிராமணத்துவத்தையும் கோரினதைப்போல் இருக்கின்றது. நீ பசுவைக்கொல்லும் பாமரனுயிருக்க உனக்கு சுவாமிகளுபதேசம் செய்வாரா அஞ்ஞானத்தைக் கொய்வாரா? கருணைமழைபெய்வாரா? பிரஷ்டராய் நைவாரா? அடாடா செல்வத்தில் மிக்க புவிராஜர்களும், கல்வியிற் செழித்த கவிராஜர்களும், தவத்திற் சிறந்த புனிதர்களும், தர்மத்திற்றழைத்த மனிதர்களும், வல்லமையுள்ள சித்தர்களும், மறுமாசில்லாச் சுத்தர்களும், சுவாமிகளிட முபதேசம் பெற்றுக்கொள்ள வேண்டுமென் றனேகநாளாயலைகிறார்க ளவர்கட்கே யனுக்கிரகஞ் செய்யாத தேசிகர் துடுக்கனுகியவுனக் குபதேசஞ்செய்வாரா ஒருபோதும்செய்ய மாட்டார் இதோ அடியார்களும் வந்துவிட்டார்க ளவர்களை ஓர்வேளை தொடப்போகிறாய் தொட்டு துக்கப்படப்போகிறாய் சீக்கிரம் வெளியிற் போபோவென் றறைந்து மிகவுமிறைந்து பேசத் தொடங்கினார்கள்.

அதற்கு கபீர் ஓ வேள்வியாளர்களே! அடியார்கள் வந்தாலென்ன நானொரு பக்கமாய் நின்றிருந்து சுவாமிகளின் திருவுருவத்தைப் பார்த்துப் போய்விடுகின்றேனென் றொரு பக்கமாய் ஒதுங்கி நின்றார். அதற்குவேதியர் முனிவுடனடா பிரஷ்டப்பயலே துஷ்டப்பயலே எட்டப்போடாவென் றுரைத்தால் மட்டிக்குணத்தால் கிட்டவேயிருக்கிறாய். ஒருவேளை உன்னைத் தொட்டுக்கொண்டால் பிரஷ்டப்பட்டுப் பின்னும் ஸ்நானஞ்செய்து வரவேண்டும், பிராயச்சித்தம் பெறவேண்டும் நல்லதனத்தாற் சொல்லுகிறதைக் கேளும் இல்லாவிட்டாற் கலகம் மூளுமென்று ஒருகோலினாற் றள்ளத் தொடங்கினார்கள். அதற்கு கபீர் ஓ இருபிறப்பாளர்களே! மாட்டையோட்டுவதுபோல மனிதனாகிய என்னை ஓட்டவந்தீர்கள் ஆயாசந்தந்தீர்கள் அடியார்களைத் தொடாமலொதுங்கியிருக்கிறேனொருவேளை யென்னைத் தொட்டுக்கொண்டாலுங் கெட்டுப்போவதென்ன? நானும் ஸ்நானஞ்செய்து பரிசுத்தமாகவே வந்திருக்கிறேனிவ்வள வக்ரமஞ்செய்வதுங்களுக்

கடாது. அன்றி மடம் எல்லாருக்கும் பொதுவானயிடம் நீங்களே உரியவர்களென்பது கூடாது இனியென்னருகில் வராமலுங்கள் வீட்டிலிருங்கள் நீங்கள்செய்த சகாயம் போதும் போதுமென் றுரைத்து ஓர் சார்பில் நின்றிருந்தார்.

அப்போதந்த பொறுமையுள்ள பூசுரர்கள் மிகவும் வெகுண்டு பெருங்கோபங்கொண்டு தூஷணவார்த்தைகள் விண்டு, அடா மூர்க்கநாயே! ஆசாரமில்லாதபேயே! உனக்கிவ்வளவு வாயேன். நல்ல மாட்டுக்கொரு சூடு, நற்பெண்டிருக்கொரு வார்த்தையென்கிற பழமொழியறியாயோ எங்கள் வல்லமையைக் குறியாயோ வாயாலதட்டியும் போகாதமாட்டை தடியாற்றட்டி ஒட்டவேண்டும் தட்டியும்போகாத நந்தியை அடித்தே ஒட்டவேண்டும் அதுபோல மாட்டுக்குங் கீழ்மையான எருமை மாட்டுக் கிணையானவனுதலாற் பலதரஞ்சொல்லியுங் கோலாற்றள்ளியும், போகாமலிருக்கின்றாய், திருடனுக்கு மூடனே குருவென்பதுபோலவும், துஷ்டப்பிள்ளைக் கூரார் புத்திசொல்வா ரென்பதுபோலவும், தலையிற்பட்டாற் றாழ்வா ரென்பதைப்போலவும், உன்னை யித்தடியா லடித்தாலொழிய போகமாட்டாயென் றோங்கி யடிக்கவந்தார்கள்.

அதற்கு கபீர் ஓங்கின தண்டத்தைப் பறித்துக்கொண்டு, ஓ ஜீவகாருண்யமில்லாத் தீயர்களே! மெய்ஞ்ஞான மில்லாப் பேயர்களே? நாய்போற் குலைக்கும் வாயர்களே! நன்றுதீத றியா வநியாயர்களே! தேளுக் கதிகாரங்கொடுத்தால் நாழிக் கொருதரங் கொட்டுமென்னும் பழமொழிப்படி செய்தீர்கள். ஆனால் துஷ்டர்களை சிஷ்டை செய்வதே நியாயமென்கிற படி இந்தத்தடியாலடித்து உங்களுயிரை முடித்து, அனைவரையுங் கொன்றுவிடுவேன், ஒருகணத்தில் வென்றுவிடுவேன், மித்திரன் வரவைத் தெரிவிக்க சுத்தத்தினடிகளுக்கு முத்தமிட்ட பரிசுத்தனைப்போல் ஸ்வாமிகளின் பணிவிடைக்காரர்களென்று பணிய நேரிட்டது நீங்கள் செய்யுமக்கிரம மிகவுங்கெட்டது என்று பல நீதிவாக்கியங்களைப் புகன்றத் தடியைத் தெருவிலெறிந்துவிட்டு ஸ்வாமிகளிருக்குந் திசையை நோக்கித் தெண்டனிட்டு சத்குருநாதனுடைய வரவுக்கெதிர் பார்த்துக் கொண்டிருந்தார். அறுதொழிலாளர் கோலைத் தெருவிலெறிந்த கபீர்மேல் விழுந்து துள்ளிக் குதித்தெழுந்து, உதட்டை மடித்து, ரத்தம் புறப்படக்கடித்து, தன்னை

யறியாமற் றடித்து, ஈனவார்த்தைகள் படித்து, அடியடியெ ன்றடித்து, முழங்கைகளாலிடித்து தங்கள் வைராக்கியங்களை முடித்து, அவயவங்களை நெருங்கப்பிடித்து, கசக்கிக்கசக்கி தேகமெல்லாம் இளைக்கவும் நிற்கக்கூடாமல் களைக்கவும் செ ய்து மடத்துக்குள் தங்காமலோட்டிவிட்டார்கள்.

பின்பு கபீர் இவர்கள் சிஷ்டர்களென்றும், நமக்கிஷ்டர் களென்றும், உள்ளேபோய் மானநஷ்டமடைந்தோம், துஷ் டர்கள் கைகளாலிடிந்தோம், சிறுவனுகிய நாமினி ஸ்வாமிக ளைப் பார்ப்பதரிதே. சந்தனமரத்தருகிற் சர்ப்பமும், தாழை யின்பால் முட்களுநம், தர்மர்களிடம் லோபியும், சந்திரனிடம் களங்கமும், புருஷருக்கு அவிவேகமும், ஸ்ரீகளுக்கு விபசா ரமும், வாழ்மனைக்கோர் வன்குரங்கும், இருந்தெப்படி நஷ் டத்தைத் தருகின்றதோ அப்படியே சத்குருநாதனிட மிம் மூர்க்கரிருந்து நஷ்டத்தைக் கொடுத்தார்களென்று பற்பல யோசனைகளோடு நின்றிருந்து அனேக வடியார்களுள்ளே போகிறதைப் பார்த்து அவர்களுக்குக் கரங்களைச்சேர்த்து, தேகநோயைப்பாராமல் பணிவிடையாளர்களால் நைந்துஞ் சோராமல் தொண்டர்கள் கூட்டத்தில் நுழைந்து உள்ளே வந்துவிட்டோமெனத் தழைந்து, மடத்துட் பிரவேசித்து குரு சங்கீர்த்தனங்களைக் கோஷித்து சந்தோஷ முகத்துடன் ஸ்வாமிகளின் வரவுக் கெதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

அதுதெரிந்த துவேஷமுள்ள தொழுகுலத்தோ ரதிக ரோஷத்துடன் கபீருடைய மென்னியைப்பிடித்துத் தள்ளி நகங்களாற் பீறிக்கிள்ளி ஏண்டா குதிக்கிருய் துள்ளி எங்க ட்கு நீயொரு சுள்ளி நறுக்க நீருள்ள முள்ளி ஒடிக்கப்பாலு ள்ள கள்ளி எதிர்க்க நீயாவாயாதெள்ளி ஓடிப்போடா தொள் ளியென்று வெளியிலோட்டி வேணமட்டும் மாட்டி பராக்கிர மங்களைக்காட்டி, நாம் சமர்த்தரென்று பாராட்டி, சிறுகுருவி யின்மேற் பிர்மாஸ்திரம் போட்டதுபோலவும், அபிமன்ன னைச் சூழ்ந்துகொண்ட கௌரவரைப்போலவும், அனுமா ரைச் சூழ்ந்துக்கொண்ட அவுணரைப்போலவும், இளையபெ ருமாளைச் சூழ்ந்துக்கொண்ட நாகபாசத்தைப்போலவும் சூழ் ந்துக்கொண் டாளுக்கோரடியா யடித்தோட்டிவிட்டார்கள். அப்போது பரிசுத்தரான கபீர், ஓ சத்குருநாதனே! மெஞ் ஞான போதனே! உமக்கபயம் உமது தரிசனஞ்செய்யவந்த

அடியேனை இந்தத் துஷ்டப் பிராமணர்களடித்து நஷ்டப் படுத்துகிறார்கள் எனக்காருந் திக்கில்லையா என்று முறையோ முறையென் றோலமிட்டழத் தொடங்கினர்.

அவ்வோசையைக்கேட்ட ராமாநந்த ஸ்வாமிகள் உடனே வெளியிலோடிவந்து கபீரைப்பார்த்து நொந்து ஐயோ இந்தச் சிறு குழந்தையை உதிரம்வடிய யாரடா அடித்தவர்கள் யாரடா மடித்தவர்கள் எனச் சீற்றத்துடன் கேட்டார். அதுவிஷயத்தைக்கேட்ட மறையோர் ஓ ஸ்வாமி, இவன் துலுக்க வம்சத்திற் பிறந்த துடுக்கனான நீச்சன், முடுக்கான பேச்சன், பசுவைத் தின்னும் பறையன் கபடே நிறைந்த வாயன், அரியானைத் தூஷிக்கும்படியான வாயன், அல்லாவைப் பூஷிப்போர் சேயன், மேலது கீழதாக்கும் விகடன், வீணாக யமர்செய்யக்கூடிய கசடன், கர்வத்தில்மிகுந்தகசடன், களங்கமுள்ள கபடன், தங்களிட முபதேசம் பெற்றுக்கொள்ளவந்தானும், ஆசாரியரின்றி நொந்தானும், நாங்கள் தேவரீருடைய மேன்மை விரித்துப் பலவிதங்களாயுரைத்து உனக்குபதேசஞ் செய்யமாட்டார், தபவேஷந்தரமாட்டார், என்பதாயறைந்து பலதரமிறைந்து, வெளியிற் போகச்சொன்னால் கேட்காமல் ஸ்நானஞ்செய்து பரிசுத்தமாயிருக்கும் எங்கள் மேல் விழுந்து முட்டிக்கால்மேல் உட்கார்ந்தெழுந்து, அவமரியாதைச் செய்து வாயில்வந்தபடி வைது, இந்தமடம் பொதுவானயிடம் உங்களுக்கென்ன சொந்தம் என்றனந்தம் தொந்தம் செய்தபடியால் வைது தடியால் அடித்து வெளியிற் றள்ளிவிட்டோம். ஈனவார்த்தைக் கேட்கவு மூட்பட்டோம். தேவரீருக்கிஷ்டமிருந்தால் இந்தத் துஷ்டனை நீச்சப் பிரஷ்டனை சிஷியனாக்கிக்கொண்டு அனுக்கிரகம் புரியுமையாவென்று விண்டு மௌனமாய் நின்றார்கள்.

அவ்வசனங்களைக்கேட்ட ராமாநந்த ஸ்வாமிகளுக்கு முகங்கருகி, கோபம்பெருகி, கோவைக்கொல்லுங் கொடியனுக்கா நானுபதேசஞ் செய்யவேண்டும் சபாஷ் நல்லவார்த்தையைச் சொன்னீர்கள். பக்குவருக்கன்றி அபக்குவருக் குபதேசஞ்செய்யு மாசானும் அனுக்கிரகம் பெற்றுக்கொள்ளு மாணுக்கனும் இரு நரகடைவதற்கோ ரிடையூறுண்டா? சுராபினிறைச்சியைப் புசிப்போர் சொர்க்கமடைவதுண்டா? மந்திரமென்பது கிள்ளுக்கீரையா? உபதேசஞ்செய்தலோரையா?

அனுக்கிரகம் பெற்றுக்கொள்பவன் இகபரபோக விராகனுய் மோகத்தின் மேலதிகாரனுய் வேதமோதிய விவேகனுய் சர்வ சங்க பரித்தியாகனுய் ஆசான்மேன் மிகுமோகனுய் அஷ்டமி ஷ்வரியமுள்ள போகனுய் சாந்த குணத்திற் சிறந்தவனுய் தாமசாதிகளற்றவனுயிருக்கவேண்டும். அப்படிக்கில்லா அற்பசாதியி லுற்பவித்த சொற்பக் குணமுடைய இந்தச் துச்சனுக்கா நானுபதேசிப்பே னிவனை நம்முடைய மடத்துக்குள் விட்டவர்களையும் உள்ளே வரப்பார்த்திருந்த துட்டர் கட்டர்களையும் உதைக்கிறேன், வதைக்கச் சிதைக்கிறேன் யென்று சாந்தத்தை நீக்கி கபீரைநோக்கி அடா துடுக்கா, வெகுமுடுக்கா என்னிடமனுக்கிரகம் பெற்றுக்கொள்ளவும் மோக்ஷ மார்க்கம் கற்றுக்கொள்ளவும்வந்தாயா? மடத்துக்குள் நுழைந்தாயா? இதுதானுனக்குத் தகுதியான தீட்சை உனக்கிய எனக்குள்ள அபேச்சையென்று ஈன வார்த்தைகளை புகன்று கற்களை மாறிமாறிவீசி சுக்கியுண்ட நாய் சீசியென்று மிகவும் ஏசி நீ எனக்கொருதூசி நீ பெறுவா யென்னுசி சமுசாரத் தைரோசி வாராதவனைச் சேர்ப்பானு உபதேசி சண்டாளனுக் குறைப்பானு சன்யாசி கோஹத்திக் காரனுவானு பரதேசி ஆனுற் பொறுக்குமா காசி புண்ணி க்ஷேத்திரமல்லவா வாரணுசி துடுக்கரிடம்போய் நேசி காஜிகளிடம்போ யாசி வித்தியாசாலையிற்போய் வாசி எனக்குகந்த மாணுக்கன் நீயா வாயா யோசி அவமரியாதைச் செய்ய வந்தாயோ தோஷி அடா அற்பசந்தோசி அந்தணர்களோடெதிர்த்த துவேசி அறுத்துவிடச் சொல்லட்டுமா நாசி எனப் பற்பல வார்த்தைகள் பேசி பிராமணர்களை நோக்கி இக்கணமே இவனை நீக்கி விடுங்களென்றறைந்து மிகவு மிறைந்து மடத்துட் போகும்போது, கபீர் திடுதிடென்றோடி ராமானந்த ஸ்வாமிகளை நாடி சேவடிகளில்விழுந்து முத்தமிட்டெழுந்து ஆய்ந்தோரடித்த அடிகளைக்காட்டி, ஓ பரமேட்டி! ஓ கர்த்தனே! பரிசுத்தனே! ஜீவன்முத்தனே! அழியா நித்தனே! அன்பர் தொழு மத்தனே! முடிவான அர்த்தனே, அஞ்ஞான அர்த்தனே, கெடாத புத்தனே! வல்லமையுள்ள சித்தனே! ஞானுதித்தனே! ஆனந்த சொரூபனே! சுயம்பிரகாச தீபனே! சத்சீடருக் குபதேசிக்குங் கியாபனே! மூவுலகேத்தும் பிரதாபனே! ஆனந்தலாபனே! துர்க்குணங்களை யகற்றுந் தூபனே!

அழகுள்ளரூபனே! அகண்டமாகிய நிரூபனே என்று பற்பல விதங்களாய்த் தோத்திரஞ் செய்தேத்தி, கண்மலர்களை சாத்தி, யாருந் துதிக்குங் கீர்த்தி, வசித்த சத்குருமூர்த்தி, பந்தத்தில கப்பட்டு தொந்தரைக்குட்பட்டு சிந்தாக்கினியாற் றகிக்கப் பட்டு இந்தவேளையில் விடுபட்டு எந்தையேயென்று உந்தனை யடைந்தால் மைந்தனைப் பாதுகாக்காமல் மந்தபுத்தி யுடை யோனென நிந்தை செய்யலாகுமா இப்படியு மும்முடைய மனது சதாகுமாவென் றுரைக்கும்போது ராமானந்த ஸ்வா மிகள் என்னடா கத்தரிக்காய்க்குக் கால்கை முளைத்தாப்போல் பிஞ்சிலே பழுத்து ராகத்தைமிழுத்து அத்தனே, யுத்தனே, மூத்தனே, சித்தனே யென்றுளறுகிறாய், வாயில் வந்தபடி குளறுகிறாய்.

நீ யென்ன உன் வயதென்ன உன் வர்னமென்ன உன் கண்யமென்ன மயிருள்ளவள் வாரி முடிப்பதுபோலவும், வாயுள்ளவன் பாடுவதுபோலவும், சஷ்ட கல்வியைக் காட்ட வாவந்தாய், துஷ்ட கைகளை நீட்டவா வந்தாய், வெகுநேர மாய்க் கூச்சலில்லாமற் பேசும் நீச்சப்பயலே இனி யரைக் கணந் தங்காது ஓடிப்போடா மூழுமூடா, குடிகேடா, வன வேடா, நீயா உபதேசம் பெற்றுக்கொள்ளுகிறவன், குருவே யென்று விள்ளுகிறவன், ஓ வேதியர்களே! இந்தத் துலுக்க நாயை அறிவில்லாத பேயை துஷ்ட குணமுள்ள சேயை உதிரம் புசிக்கும் ஈயை அடித்துத் துரத்தி விடுங்களென்று ரைத்து மடத்துட்போயினர். உடனேமேற்குலத்தோர் (வல் லான் வகுத்ததே வாய்க்காலென்னும்) பழமொழிப்படி கண் களை யுருட்டி இடுக்கிடமிரட்டி புழுதிபடியப்புரட்டி தங்கா மல் விரட்டி இந்த மடம் பொதுவானயிடம் என்றுரைத்த உன்வாயைப் பிளந்து மணிக் குடலெடுத்து பருந்துகளுக்கு விருந்திடப் போகிறோம் இனியாவது பேசாமலோடிப்போ வென்று கூசாமல் வைதுக்கொண்டிருந்தார்கள். அவமானப் பட்டோடும் கபீரோ அவதூதர்கள் எமதூதர்களானாற்போல இந்த முப்புரி நூலோர் தூளியென்றால் திர்த்தூளியென்பவர் போலிருக்கிறார்கள்.

அந்தோ! ஸ்வாமிகளைத் தரிசித்தும், பாதங்களைப் பரி சித்தும் அன்பாய்த் தோத்திரஞ் செய்யாமற் போனேமே? வீணாய் துன்பத்திற்குள்ளானேமே? நாம்செய்த கர்மமென்ன

மோ? அல்லது நமது பக்திபின்னமோ? (கற்பகத்தைச்சார்ந்தோர்க்கும் காஞ்சிரங் காயீந்ததென்னும்) பழமொழிப்படி நேரிட்டது. தேகமெல்லாம் ரத்தம்பீரிட்டது, அடடா இனி நாமென்ன செய்வோம். யாரை வைவோம் என்றிடைந்து வீட்டை யடைந்து பரபுருஷனை நாடிய பாபஸ்திரீ காவலிலகப்பட்டதுபோலவும், பதியிறந்தானென்று செப்பக்கேட்ட பதிவிரதையைப்போலவும், யுத்தத்தி லபஜெயமடைந்த வீரனைப்போலவும், மனையாள் விபசாரஞ் செய்தாளெனக்கேட்ட சூரனைப்போலவும், துக்கம் மேலிட்டு கக்கசத்துக் குட்பட்டு தந்தைதாயுடன் பேசாமலிருக்கும் குமாரனைப் பார்த்தமால், அடாமகனே, அழகான முகனே உனக்கேனிக்குறை வந்தது அடிகளால் தேகம் நைந்தது, யாருன்னை யிப்படி யடித்தார்கள் உயிர் நீங்கும்படி மடித்தார்கள் சீக்கிரஞ் சொல்லடா சொல்லடாவெனப் பலதரங்கேட்டும் பேசாமலிருக்கும் தநுசனை வாரியெடுத்து மடிமேல் வைத்துக்கொண்டு சரீரம் முழுதுங் காயமாயிருக்கக் கண்டு ஓ வென்றலறி மிகவுங்கதறி உடலம்பதறி வாய்மொழிகள் குளறி, அடா என்னருமைமைந்தா உயிரிலுஞ்சொந்தா யாரிடமடிபட்டு நொந்தாய் எப்படி நடந்துவந்தாய் உன்னை யடித்தவர்களின் கழுத்தைக்கடித்து இப்போதே வானுலகடையச் செய்கிறேன் துண்டந் துண்டங்களாய்க் கொய்கிறேன் காட்டடா வென்றூர்ப்பரிக்கும் போது ஜிஜ்ஜாபீபி ஐயோவென்று புலம்பி மகனைத் தண்ணீராலலம்பி, அடா யென் கண்மணியே சிகாமணியே! உன்னை யென்னறியாமையா லிரண்டடியடிக்க உன்மேற் படாமல் நாராயணர் மேற்பட்டதே மாயாரூபத்தை நீக்கிவிட்டதே இப்போதிந்த அடிகளெப்படிபட்டது நீ பேசாமலிருப்பது மிகவுங் கெட்டது உன்னையாரிப்படி அலங்கோலஞ் செய்தார்களோ அவர்களை இக்கணங் காட்டுவா காட்டுவா வென்றிழுக்கத் தொடங்கினாள்.

அதற்கு கபீர், ஓ என்தாய் தந்தையே! சொல்லக்கேளுங்களோர் விந்தையே? நஷ்டப்படாமல் லாபங் கிடைக்குமா? சிஷ்டனாகாமலுபதேசங் கிடைக்குமா? கஷ்டப்படாமல் சுகமுண்டாகுமா? நிஷ்டை சாதிக்காமல் நித்தியானந்த மூண்டாகுமா? அதுபோல ராமானந்த சுவாமிகளிட மூபதேசம்

பெற்றுக் கொள்ளப்போ யவருடைய ஏவலாளர்களா லிச்சிஷ்டை யடைந்தேனென்று நவின்றமாத்திரத்தில் தாய் தந்தை அனேகத் துடுக்கரைச் சேர்த்துக்கொண்டு தூஷண வார்த்தைகளை விண்டு ராமானந்த ஸ்வாமிகளிடம் போகப் புறப்பட்டதை யறிந்த கபீர் தாய் தந்தையர்க்கும் வந்த வுறவாளிகளுக்கும் வந்தனம்புரிந்து மிகவும் பரிந்து, ஓ புண்ணியவான்களே! ராமானந்த ஸ்வாமிகளின் பணிவிடைக் காரர்களா லடிபட்ட யெனக்குற்ற பாக்கியமும் நானடையப் போகிற சிலாக்கியமும் பகவான்செய்த ஆசீர்வாத வாக்கியமும் இதுநாள் பரியந்தம் நானிருந்தயோக்கியமும் ராமானந்த ஸ்வாமிகளால் பிரகாசிக்க விருக்க நீங்களேனிதை மறுக்கவந்தீர்கள்.

எனக்கேனிடர் தந்தீர்கள் வீணையேன் நொந்தீர்கள் கோபாக்கினியில் வெந்தீர்கள் (ஆத்திரக்காரருக்குப் புத்திமட்டு) என்கிற பழமொழிப்படி செய்தீர்களென்றுரைக்க துலுக்கர், அடா கபீர்! நீ மஹம்மது மதஸ்தனுயிருந்தும் பிராமணனிடமா யுபதேசம் பெற்றுக்கொள்ளப்போகிருய், (அடாத காரியஞ் செய்தாற் படாதபாடு படவேண்டும்) என்கிற பழமொழிப்படி யுனக்கு நேரிட்டது. இதரமதத்திற் பிரவேசிக்க வெண்ணங்கொண்ட வுன்னைக் கடவுளே தண்டித்தார், அதை நினையாமற் றண்டித்த மறையோர்மேலியாதொரு குற்றமில்லை, நீயே தேடிக்கொண்டாய் தொல்லை, உன் தலைமேலேன் போடாமற் போனுர்கள் பெரிய கல்லை, உன்னையிரண்டுதுண்டாக யேன் வெட்டவில்லை, உடைக்காமற்போனுர்களே பல்லை, எங்கள் செவியாற் கேட்கவும் நேரிட்டதே இச்சொல்லை, நீ மோட்சமடைகிறவனல்லை; பதிவிரதைகடந்து போவாளா தன்னெல்லை, புலி புசிக்குமா புல்லை என்னும் வார்த்தைகளாடி இவனுக்காயேன் வந்தோமோடி என்று தங்கடங்களிருப்பிடம்போய்ச் சேர்ந்தார்கள்.

பின்பு தமாலும் ஜிஜ்ஜாபீபியும் கபீரை ஆதரணைசெய்து இராமானந்த ஸ்வாமிகளைவைது கண்ணீர்விட்டழுது கடவுளேயென்று தொழுது எங்களுக்கும் வருமா பழுது இனியெப்படிப்போகும்பொழுது என்று புலம்பும் தாய்தந்தையரைப்பார்த்து கபீர் கரங்களைச்சேர்த்து துக்கத்தையாற்றி இனிய வார்த்தைகளாலேத்தி எனக்குக் கடவுள் துணையா

யிருப்பாரெனப்போற்றி பற்பல வார்த்தைகளாலே மாற்றி அன்னமுண்டு தாய் தந்தையர்க்குத் தொண்டு அன்பாய் செய்துக்கொண்டு உல்லாசமாய் விளையாடிக்கொண்டிருந்தார். கேட்டீர்களோ சித்தர்களேயென்று பின்னுஞ் சொல்லத்தொடங்கினர்.

கபீர் ராமானந்தசுவாமிகளின் பணிவிடைக்காரர்களாலடிபட்ட அத்தியாயம் முற்றிற்று.

ஆருவது
கபீர் ராமானந்த ஸ்வாமிகளின்
ஆசீர்வாதம் பெற்ற அத்தியாயம்.

இப்படி கபீர் சிலநாள்கழித்து வீணள் அருவதைக் குறித்துத் தன்னைத்தானே பழித்து ராமானந்த ஸ்வாமிகளை நினைந்து கண்ணீரால் நனைந்து ஐயோ வீணைக நாட்கள் கழிந்துபோகின்றதே! முயற்சியாலாகாக் காரியமுமாகின்றதே யாதொரு வித்தையு மாசானின்றி பலிக்காதே ஆரியர்மேலுத்தமர்க்கு மனஞ் சலிக்காதே ராமானந்த ஸ்வாமிகளே ஆசானெனத் தீர்மானித்தபின் வேருசானைத் தேடக்கூடுமா? மற்றொருவர்பால் நாடக்கூடுமா? இப்படி செய்வ துத்தம புருஷருக்கழகல்லவே! நல்லோர் செய்யுங் காரியமல்லவே! தேகம் நீர்மேற் குமிழியாயிற்றே வீணய் நாட்கள் கழிந்துபோயிற்றே நாட்கள் கழிவதற் கவிவேகிகள் சந்தோஷமடைவார்கள். விவேகிகள் பெருமூச்சுவிட் டிடைவார்கள். மானிடப் பிறப்பெடுக்க முற்பிறப்பி லென்னதவஞ் செய்தோமோ பசு, பட்சி, புலி, பூனை, நாய், பேய், நரி, கரி, அரி, பரி, புழு, பூண்டு, ஈ, யெறும்பு, மச்சம், மான், மறை, மாடு முதலானதன்றி பிறவிக் கடலைக்கடக்கும் மனுஷப் பிறப்பெடுத்து துன்மார்க்கங்களை யடுத்து மந்தபுத்தியினல் தந்தை தாய் பெண்டு பிள்ளை நாடு நகர் சொந்தமென நினைந்து பந்தத்தில் நுழையலாகுமா இதனற் பிறவிப்பிணி வெந்துபோகுமா எம்மார்க்கத்தா லின்பவேலையி னுட்படலாம். எவ்விதத்தா லஞ்ஞானகுணங்களை விடலாம். மோட்சமென்னும் நகரிற் புகுக சரிகை கிரியை யோகம் ஞானமெனுஞ் சதுர்

நெறிகளிருக்கின்றனவே சரிகையைச் செய்யலாமெனின் எங்குமிருக்குங் கடவுளெனக் குள்ளும் புறம்பிலு மிருப்பாரல்லவோ இல்லையென்றறையும் மொழிகள் நல்லவோ தனக்குளாதியையறியச் சத்குருவேண்டுமே கிரியை யியற்றுவோமெனின் சகல பிராணிகட்கு மூட்டியுறக்கி உபசரிக்குங் கர்த்தனுக்கு நாமெவ்வித பூசை செய்யல்வேண்டுமோ அதையுணர்தற்கு மாரியர்வேண்டுமே யோகம் புரிவோமெனின் விசுவாச நிசுவாசங்களை யொடுக்கி பிர்மரந்திரத்தில் மூடுக்கி நாதத்தைக்கேட்டு சோதியைத் தரிசிப்போமெனின் அதுவும் வித்யா சம்பந்தமே யிருக்கின்றதே இதைச் சோதித்தறியவு மடிகள்வேண்டுமே ஞானசாதனஞ் செய்வோமெனின் தானே பிர்மம், பிர்மமே தானென்கிற அத்துவித பாவத்தையே யுணர்த்துகின்றதே.

தான் பிர்மமென்கிற சப்தார்த்தத்தின் மர்மந்தெரிதற்பொருட்டு காரணகுரு வேண்டுமே கர்மகாண்டப்படி நடப்போர்க்கே மூக்தியுண்டென்று சிலரும் பக்திமார்க்கத்திற் செல்பவர்க்கே பரமபத மூண்டென்று சிலரும், ஞான நிஷ்டையைச் சாதிப்பவர்க்கே கைவல்லியங் கிடைக்குமென்று சிலரும் நவில்கின்றூர்களதை மேன்மையானதென் றுணரலாம். இதற்கும் ஆசிரியர் வேண்டுமே கர்மானுஷ்டானங்களைத் தவறுமற் செய்பவர்க்கு சத்தியலோகமும், விஷ்ணுவைத் தொழுபவர்க்கு வைகுந்தமும், சிவனை நாடித் தபஞ்செய்வோர்களுக்குக் கைலையும், அத்வைத பாவத்திலிருப்பவர்க்கு மோட்சமுங் கிடைக்குமென் றறையு மிப்பதவிகளிலெஃது மேன்மையானதோ ஆனந்தமயமா யிருப்பதெதுவோ இதை யுணர்த்துதற்கு தேசிகன்வேண்டுமே குருவில்லாத வித்தையும், கொழுநனில்லாத மங்கையும் அபலமென்றுரைக்கின்றூர்களே இதற்கென்ன செய்யலாமென்கிற எண்ணமே மேலிட்டு மிக ஆயாசப்பட்டு முடிவான அர்த்தத்தை நாளைக் காலையிற்போய் ராமானந்த ஸ்வாமிகளைக் கேட்டறியலாமெனயோசித்து எப்போதிரவு வொழியுமென் றூசித்து மனதால் ராமானந்த ஸ்வாமிகளைப் பூசித்து இவரே நமக்காரியரென விசுவாசித்து குருசங்கீர்த்தனங்களைக் கோஷித்து உடனே மடத்தினருகிற் பிரவேசித்து ஸ்வாமிகளினேவலாளரைப் பூஷித்து தன்னைத்தானே தூஷித்து மடத்தி

னுள் வேதாந்தங்களை யேந்திக்கொண் டிருப்பதைக் கேட்டு ஆனந்தக் கண்ணீர்சொரிய நிற்குந்தருவாயில் ராமானந்த சுவாமிகள் சேவல் கூவும் வேளையில் பல மாணுக்கருடன் கங்கா ஸ்நானஞ்செய்யப் புறப்பட்டதைக் கபீர்கண்டு ஆன ந்தங்கொண்டு சுவாமிகளைச் சூழ்ந்து இருப்போரைத் தாழ் ந்து ஆரியர் கழல்களில் வீழ்ந்து இன்பவேலையி லாழ்ந்து பலதரங் கும்பிட்டு பண்புடன் முத்தமிட்டு சுவாமியென முறையிட்டு துன்பத்திலிருந்து விடுபட்டு ஸ்மரணை கெட்டு காயத்தை யசைக்காமற் றன்னை மறந்திருந்தார். அப்போது ராமானந்தஸ்வாமிகள் தாழ்ந்தவன் யாரடா பாதங்களை விட டா எழுந்திருடா மிகவும் மூரடா தன்னை யறியாக் குருடா இரவில் வந்த திருடா சுகஜீவியாய் வாழ்ந்திருடா வென்று ஆசீர்வாதஞ் செய்தார்.

அதுகேட்ட கபீர் களிக்கடலிற் குளித்தவராய் ஓ சுவாமி இன்றைக்கல்லவோ உமதாசீர்வசனம் பெற்றேன் மோட்ச மார்க்கங்கற்றேன். பந்த பாசங்களற்றேன், பிரமானந்தவாழ் வுற்றேன் ஒஎன் சற்குருநாதனே! ஜெகந்நாதனே! வேதனே! வேதாதீதனே! மெய்ஞ்ஞான போதனே! பந்தமில்லவதூத னே! லீலாவினோதனே! கமலம்போன்ற பாதனே! பரிசுத்த மான நீதனே! நவநீதனே! நிர்ச்சேதனே! நிஷ்குரோதனே நிர்போதனே! நிர்வாதனே! துரியாதீதனே என்று பற்பல விதங்களாய்த் தோத்திரஞ் செய்யும்போது ராமாநந்த ஸ்வா மிகள் ஏவலாளரைநோக்கி இந்தப்பாலன் யார் நீங்களறி வீர்களா வென்று வினவ மறையோர் கபீரென்றறிந்து, முகங்கரிந்து மிகவுமெரிந்து கோபம் விரிந்து ஓஹோ ஸ்வா மிகள்மூன் வந்திருந்த நீச்சப்பயலுக்குக் கூச்சமின்றி ஆசீர் வாதஞ்செய்தார், கருணைமழைபெய்தார், தம்முடைய வி ரதத்தைக்கொய்தார்! நாமெச்சும்பொருட் டந்நாள்வைதார், இதற்கென்ன செய்யலாம் யாரைவையலாம், இந்தத் துஷ் டப்பையனுற் பிரஷ்டர்களானோம், கனிஷ்டராய்போனோம் என்று தங்கடங்கள் வாயைத்திறந்து ஆவெனப் பறந்து பேயைப்போல் பிதற்றும்போது ஸ்வாமிகட்குச் சாந்தமிற ந்து முனிவுபிறந்து மிகவும் நிறைந்து ஓசையாயிறைந்து, எட்டப் போடாவென் றறைந்து கபீரைக் கன்னத்திலறை ந்து, ஓ விப்பிரனே! நிசியில்வந்த இத்திருடனை பாதங்களை

விடாத முரடனை நைய வடித்து எலும்புகளை யொடித்து ஓட்டிவிடுங்க ளென்றுரைத்து ஸ்நானத்துக் கெழுந்தருளத் தொழுகுலத்தோர் கபீரைக் கயிற்றாற் பிணித்து வாயிற்றூசை திணித்து அஸ்திகள் மூறிய அடித்து தங்கள் வைராக்கியத்தை முடித்து இக்கள்வனை சூரியோதயமானதே இராஜன்பாலனுப்பலாமென்று தொழுவத்தில் மாட்டி பராக்கிரமங்களை காட்டி ஸ்நானஞ் செய்யப்போனார்கள்.

அப்போது கபீர் தேகநோவுக் காற்றமாட்டாமல் பகவானை நினைந்து கண்ணீரால் நனைந்து ஓம் ஹரிஹரி! நரஹரி! முரஹரி! அம்புசாக்ஷரி! பத்மநாபா! பரம புருஷா! பக்தவச்சலா! வேணு கோபாலா! தேவானுகூலா! ஆதிமூலா! சத்தசீலா! தேவகிதநயா! தசரததநயா! கௌசலை புத்ரா! முனிவர்கள்மித்ரா! புண்ணியக்ஷேத்ரா! ஆனந்தபாத்ரா! மாயாவிலாசா! வைகுண்டவாசா! சுயம்பிரகாசா! அன்பர்கள் நேசா! ருஷிகேசா! பாபவிநாசா! ஓ விஷ்ணு! ஓ பகவான்! ராமானந்த ஸ்வாமிகட் கடியேன்மீ திவ்வளவு வெறுப்பேன் நானென்ன கொடுமைசெய்தேன் யாரை வைதேன் வீணாய் நாட்களைப் போக்கலாகுமா? ஸ்வாமிகளுக் கென்மேலிருக்கும் கோபமா? சகல சந்தேகங்களுந் தலையெடுக்காமற் சாகுமா? நானிவ்வளவிடருற லுமக்குச்சாகமா? இதெனக் குற்ற மோகமா? அனுபவிக்கவேண்டிய போகமாவென் றனந்தம் விதங்களாய் பிரலாபித்து ஓ தெய்வமேயென்று அழுது தொழுது தலை யெடுப்பதற்குமுன் தொண்டர்கள்சகாயனை விண்டுவானவர் கபீர் மஸ்தகத்தின்மேற் றமதஸ்தங்களை வைத் தாசிகள்கூறி கட்டை யவிழ்த்து வாரி மடிமேலேந்திக் கொண்டு பயம்வேண்டாமென்று விண்டு ஓ கபீர்தாஸனே! எனக்குகந்த நேசனே! ராமானந்தஸ்வாமிகளின் தொண்டர்களாகிய லண்டர்கள் கையா லடிபட்டாயோ? தயிரியம் விட்டாயோ? எனக்கு முறையிட்டாயோ? சிறைக் குடன்பட்டாயோவென்று முகமெல்லாந் தடவி கண்ணீர் துடைத்து தோண்மே லேந்திக்கொண் டரைக்கணத்திற் றமால் முன் விடுத்து தன்னை யாரும் பார்க்காமல் மாயையாற் றடுத்து அந்தரத்தில் மறைந்தார்.

கபீர் பகவான் தன்னிமித்தம் வந்து அரிதானசேவை தந்து செய்த உபசாரத்தையும் வீட்டிற் கொண்டுவந்துவிட்ட

உபகாரத்தையும் நினைத்து கண்ணீரால் ஆக்கையை நனைத்து, ஓ சீதாசமேதா! லீலாவினோதா! என்னோடோர் வசனம் பேசலாகாதா! பேசினால் எனக்குற்ற குறைகளெல்லாம் போகாதா! பாவங்களெல்லாம் படுசூரணமாய் வெந்து நீறுகாதா! சந்தேகக் கடலைக் காட்டாமற் சாகாதாவென்று புலம்புகிறதைக்கேட்ட தமால் அடா வென்சுதனே! அரியவற்புதனே! பகவானிங்கு வந்தாரா! பட்சமாய்ச் சேவைதந்தாரா! ஆண்டவனைக் கண்டாயா? ஆனந்தம் நீ கொண்டாயா? அரியை யின்று பார்த்தாயா? ஆயாசத்தைத் தீர்த்தாயா? மாதவனைப் பணிந்தாயா? மலரடிகளை யணிந்தாயா? அடியேன் பார்க்கலாகாதோ? அடியேன்செய்த தீதேதோ? மாயன் செய்யும் வகையேதோ? வறியேன் பாவத்தொகையேதோ? தெரிந்தும் நிரூபம் ஆனரோ? தியங்கச்செய்து போனரோ? அடியேன் பாவியானேனே? அவலமாகிப் போனேனே? வந்து பார்க்கக் குறையேதோ? சேயே நீசெய்த தவமேதோ? கருணைக்கண்ணுற் பாரேனே? கவலைகளெல்லாந் தீரேனே? வென்றனந்தம் வார்த்தைகளாடி பல சங்கீர்த்தனங்களைப்பாடி மகனை வாரியெடுத்து மார்போடணைத்து அங்கமெல்லாந் தழும்புகளா யிருக்கப்பார்த்து ஆகமெல்லாம் வேர்த்து அடா என்பாலனே! அரிதான சீலனே! தேகமெல்லாம் காரியமாயிருக்குங் காரணமேன் பேசாமலிருக்குங் கொள்கையேன் என்று பலதரங் கேட்குந் தந்தைக் குண்மையுரைத்தால் முன்போல் விபரீத முண்டாகுமென் றென்றும் பேசாமலிருக்கும் கபீரைப்பார்த்த, ஜிஜ்ஜாபீபி அடிகளின் வடுவையும் பாசத்தாற்பிணித்த குறியையுங்கண்டு ஆயாசங்கொண்டு, அடா யென்மைந்தா! ஆருயிரிலுஞ் சொந்தா! எங்களையேனிழந்தாய் எவணிவ்வடிபட்டு நொந்தாய்! எப்படி நடந்துவந்தாய் இடரனலாலேன்நொந்தாய் எங்களுக்கே னிடர்தந்தாய் என்றலரும் போதும் பேசாப்பிள்ளையை கொஞ்சுங் கிள்ளையை தமா லாதரணைசெய்து அடித்தவர்களை வைது புறம்போகாமற் கைதுசெய்து வைத்திருந்தார்கள். கேட்டீர்களோ சித்தர்களே யென்று சொல்லத் தொடங்கினர்.

கபீர் ராமானந்த ஸ்வாமிகளின் ஆசீர்வாதம்
பெற்ற அத்தியாயம் முற்றிற்று.

ஏழாவது அத்தியாயம்

கபீர் ராமானந்த ஸ்வாமிகளிட மூபதேசம் பெற்றுக்கொண்டது.

இப்படி சிலநாள் கழிய தாய்தந்தையர் துக்கம்வொழிய கர்மமெல்லாந் தன்னை விட்டுக்கழிய கபீருக்கானந்தக் கண்ணீர் வழிய பகவான் கருணைமழை பொழிய அஞ்ஞானமடியோடும் வெந்தழிய வொருநாளிரவில் கபீர்விழித்து மந்தப் புத்தியை மாயக்கிழித்து ராமானந்த ஸ்வாமிகளிடமோர் மொழியாவது கேட்டுக்கொள்ளவேண்டு மிதற்கென்ன உபாயஞ் செய்யலாமென் றனந்தம் விதங்களாயோசித்து ஆதித்தனைப்போற் பிரகாசித்து அறிவுள்ளவர்க்கறிய தொண்டர் முயற்சியுடையா ரிகழ்ச்சியடைவதுண்டா திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை யல்லவா தெய்வத்தை நம்பினோர்க்குத் தீங்கணுகா தல்லவா இன்றைக் கிதுநாள்பரியந்த மானபடியானாலு மாகட்டும், அல்ல திவ்வுயிர் பிரிந்துபோனாலும் போகட்டும், ஸ்வாமிகளின் மனம் கோபாக்கினியால் வெந்தாலும் வேகட்டும், ஏவலாள ருதைத்துக்கொண்டு செத்தாலுஞ் சாகட்டும், இக்கணமே ஸ்வாமிகளிடம்போ யவரருள் வாக்கிலிருந் தெம்மொழி புறப்படுகின்றதோ அதையே பிர்மோபதேசமாய்க் கொள்வோமென்று மடத்தினருகிற் சென்றுல்லாசமடைந்து உட்போவதற் கிடைந்து புறத்தில் நின்றபடி ஸ்வாமிகளின் வாய்மொழியின்மேற் கவனம் வைத்துக் கொண்டு சேவல் கூவும் பரியந்தங் காத்திருந்து மாரிய ரோருரையும் பேசாமையா லினி ஸ்வாமிகள் ஸ்நானத்துக் கெழுந்தருளுவார். நாம் கட்டத்தின் படிக்கட்டில் படுத்துக்கொள்வோம். தேசிகர் தமது திருவடியை நமது சித்திரன்மேல் வைத்துவிடுவார் ஏதாவதோர் மொழியுஞ் சொல்லிவிடுவார் இன்றைக்குப் பெறும்படியான பாக்கிய மிதுவேயாமெனத் துணிந்து கங்கையினருகிற்சென்று மணி கர்ணிகை கட்டத்தின் படியின்மேற் படுத்துக்கொண்டிருக்கையில், ராமானந்த ஸ்வாமிகள் ஸ்நானஞ்செய்யப் புறப்பட்டு மணிகர்ணிகையினூரேகணத்தின்மே லிறங்குகையிற் கபீரவ ரிறங்குவதற்கு நேராய்ச் சயனித்துக்கொள்ள படிகள் தெரியாமற் கபீர் மஸ்தகத்தில் மிதியடியை வைத்தழுத்தமா யூன்றிவிட்டார். கபீர் அந்தோவென்று கூக்குரலிட்டழத் தொடங்கினார். ஸ்வாமிக

ளறியாமற் குழந்தையை மிதியடியால் மிதித்து விட்டோமே யென்று கபீரைத் தன திருவஸ்தங்களாலுந் தடவி தாம் தாம் ராம்ராம் என்றுரைத்து மற்றச் சோபானங்களிலிறங்கி பகீரதியில் ஸ்நானஞ்செய்து மடத்துட் பிரவேசித்தார்.

கபீர் இன்றைக்கு நாம் செய்த பாக்கியமே பாக்கியம், நமது பெரியோர் செய்த சிலாக்கியமே சிலாக்கியம், நாம் கோரிவந்ததை பகவானே முடித்தார். அன்று மறையவனால் வந்தருளியதையே இன்றெம தாண்டவனு முரைத்தார்வேத முடிவான தாரகமந்திர மிதுவேயாகும், இதனாலேயே சகல பாபங்களும் நசித்துப்போகும், எதையும் நம்பினால் வீடுண்டு நம்பாதார்க்குக் கேடுண்டு, பரமேசன் பார்வதிக்கும், நாரதர், வால்மீகர், பரத்துவாசருக்கும், பராசர் வேதவியாசருக்கும், வியாசர் சுகப்பிர்ம ரிஷிக்கும் சொல்லிய மந்திரமிதுவே யல்லவா, அன்றி அனேக ரிஷீஸ்வரர்களெல்லா மிதைத்தியானித்தே பரமபத மடைந்தார்களல்லவா? இதையன்றி மேலானவாக்கிய முண்டா இல்லையில்லையெனச் சந்தோஷ சாகரத் தமிழ்ந்தவராய்ச் சானவியில் மூழ்கி, ஈரவஸ்திரமுடன் வீட்டையடைந்து தாய் தந்தையர்க்கு வந்தனந்தந்து, ஓ யென்னன்னையே! அத்தனே! இன்றைக்கு ராமானந்த ஸ்வாமிகளிட முபதேசம் பெற்றுக்கொண்டேன் மோட்ச மார்க்கங் கற்றுக்கொண்டேன்.

ஆதலாலின்றுட னவருடைய முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிறேன் நீங்களு மணிந்துக் கொள்ளுங்களென்றுரைத்து பட்டுவஸ்திர மணிந்து ராமானந்த ஸ்வாமிகளிடந் திலகத்தை நெற்றியிற்றீட்டி ஆரியர் பாதங்களில் மனதை நாட்டி துளசிமாலைகளைப் புனைந்து குரு சுவாமிகளுக்கு பூமாலைகளையும் பூசைக்குரிய வஸ்துக்களையு மேந்திக்கொண்டு ஜெயராம் சீதாராமென்னும் தியானஞ் செய்துக்கொண்டே மடத்தினுட் பிரவேசித்து குரு சங்கீர்த்தனங்களைக் கோஷித்து அடியார்க ளனைவருக்கும் சிரசாஷ்டாங்கமாய்த் தெண்டனிட்டு கோமானிருக்குங் கோயிலைநோக்கிக் கும்பிட்டு தொண்டர்களுடன் தானோர் தொண்டனாய்ச் சேர்ந்து களி கூர்ந்து ஸ்ரீராமநாமத்தை ஜபமாலையால் ஜபித்துக் கொண்டிருப்பதைப் பார்த்த தாசர் ஆச்சரியமா யடா இதென்ன விபரீதமாயிருக்கின்றது.

துலுக்கன் சுவாமிகளின் திலகமணிந்து நம்முடனொ த்து வீற்றிருக்கின்ற னிவனுக்காரியா ரனுக்கிரகஞ் செய்தா ராகுமிது தெரிந்துகொள்ள வேண்டுமென் றிரைவன் தொழும்பரை விளித்து கபீரிருக்குங் கோலத்தைக் காண்பிக்க அந்தணர் அடடா இந்தத் துஷ்டப்பயல் நம்மை பிரஷ்ட ராக்க வேண்டுமென்கிற நிஷ்டை பூண்டிருக்கிறதுபோற் காண்கின்ற திக்கனிஷ்டனை இரண்டு துண்டமாய்க் கண்டித் தாலன்றி நமதண்டையில் வராமலிரானென் றுர்ப்பரித்துக் கபீர்மேற் பாய்ந்து, அடா நீச்சா, கோவைக்கொல்லும் மிலே ச்சா, அன்பர்கள்மத்தியி லின்புடன்வந்து அசுசியாக்கிவிட் டாயே நீ கெட்டாயே என்றுனுக்கோர் குட்டுகுட்டி திடுக் கிடமிரட்டி எங்களை யேளனமா செய்யவந்தாய் சுவாமிகளின் திலகத்தை யேனணிந்தாய் துளபமணிகளை யேன்புனைந்தாய் நீயேன் செய்யநினைந்தாயென்று வற்புறுத்திக் கேட்கும் போது கபீர் ஓ பிராமணோத்தமர்களே! வீணுயென்னை யேனி ழுத்து அடித்து அலங்கோலஞ் செய்கிறீர்கள். வேண்டாம் இன்று வைகறையில் சுவாமிகளெனக் கனுக்கிரகஞ் செய்தா ட்கொண்டா ரிதிலுங்களுக்கைய மிருக்குமாயின் தேசிகரை வினவித் தெரிந்துக் கொள்ளுங்களென்று சாற்ற, தொழுகு லத்தோர் கபீரை யிழுத்துக்கொண்டுபோய் ஆரியர் முன்னிறு த்தி ஓ சுவாமி! தேவரீரின்று காலையிலிந்த துடுக்கனுக்குபதே சஞ் செய்திராமே நிச்சயமாவென்று வினவ, தீர்த்தன் மிக வுமுனிந்து கபீர்மேல் மிதியடியை வீசியெறிந்தா ரப்பாது கம் கபீர் லலாடத்திற் பட்டு உதிரம்பெருகச் செய்ததற்கு கபீ ரிடருறுமல் ஆனந்தவாரியி லமிழ்ந்தவனு யாசிரியரைநோக்கி,

ஓ யென்னுண்டவனே! உமது பாதுகை யிவ்வேழையே ன் நெற்றியிற்பட நானென்ன நோன்பிழைத்தேனோ என் னைப்போன்ற பாக்கிய மிவ்வன்பர்களி லியாரும் பெற்றிருக்க மாட்டார்களெனக்குற்ற சிலாக்கியமே சிலாக்கிய மிவ்வெளி யேன்மீ திவ்வளவு கருணையின்று வந்தகாரணமேதோ ஓ எனதையனே! மிகவுந் துய்யனே! அழகானகையனே! ஆட் கொண்ட மெய்யனே! வீடளிக்குஞ்செய்யனே! நான்தொழு மீசனே! பரமேசனே! ஜகதீசனே! குணவாசனே! மிகுநேச நிமலேசனே! என்று தோத்திரஞ் செய்யும்போது ராமான ந்த சுவாமிகட்குச் சற்றே மனதிறங்கி, அடா கும்பிடுங்கள்

ளா! உனக்கு நான் அநுக்கிரகஞ் செய்ததாகச் சொன்னாயா மே எப்போதென்னிடத்துபதேசம் பெற்றுக்கொண்டாய் சொல்லடாவென்று கேட்க, கபீர் ஓ சுவாமி! இன்று வைகறையில் தேவரீர் ஸ்நானஞ் செய்யப் போகையில் மணிகர்ணிகை கட்டத்தின் சோபானத்தில் படுத்திருந்த என் மத்தகத்தின்மேலுமதுத்தம பாதத்தைவைத் தழுத்தமாயூன்றி உபதேசிக்கவில்லையா? சுவாமிகட்குக் கவனமில்லையா? இதற்குள் மறந்துவிட்டீரோவென்று சிரசாஷ்டாங்கமாய் தெண்டனிட்டெழுந்து நின்று தோத்திரஞ் செய்யும்பாடல்.

பகவான் துணை.

பூமாதிளையானும்புரந்தரபிரமனரனும்
நாமாதுமையாளுங்கசைமேயோடுமனுதினமும்
ராமாவெனத்துதிப்பாரதைநாயேற்கருள்செய்தென்
ஏமாதிகடவிர்த்தாட்கொண்டதயவேதறியேனே. 1

தீமாரரிபடிந்தோர்ஜெபஞ்செய்யுந்திருநாமம்
தோமேமமுமேவற்றவிர் துறவோர்துதிகாமம்
ராமாவெனுநாமமதைநாயேற்கருள்செய்தென்
ஏமாதிகடவிர்த்தாட்கொண்டதயவேதறியேனே. 2

கேமாதிகளில்லாவதநீதன்மிகுகுரோதன்
மாமாயையிலுழலும்வான்மீகமுனிநாதன்
ராமாவெனத்தேர்ந்தானதைநாயேற்கருள்செய்தென்
ஏமாதிகடவிர்த்தாட்கொண்டதயவேதறியேனே. 3

ஆமார்கடல்சூழும்புவியாண்டதசரதனார்
மாமோகமுமருண்மாதவர்வாட்டங்களுநீத்த
சீமான்றிருநாமந்தனைதீயேற்கருள்செய்தென்
ஏமாதிகடவிர்த்தாட்கொண்டதயவேதறியேனே. 4

காமாதிகளோங்கிக்ககனத்தோர்க்கிடரீர்ந்து
தாமேபதியாயன்றுறுதசகண்டனைவென்ற
தாமோதரனுமந்தனைதமியேற்கருள்செய்தென்
ஏமாதிகடவிர்த்தாட்கொண்டதயவேதறியேனே. 5

கோமேதமுநரமேதமுங்குரைமேதமுமுடிப்போர்
மாமேவியதபமுஞ்செயவல்லோர்மிகநல்லோர்
ராமாவெனவுரைப்போரதைநாயேற்கருள்செய்தென்
ஏமாதிகடவிர்த்தாட்கொண்டதயவேதறியேனே. 6

போமேபவமரணம்பிணியுரையும்மருட்டிரையும்
போமேமனக்கோட்டம்புவிநாட்டப்பலவாட்டம்
ராமாவெனவுரைத்தாலதைநாயேற்கருள்செய்தென்
ஏமாதிகடவிர்த்தாட்கொண்டதயவேதறியேனே. 7

பூமீதினிற்சுகமாயுறுவாயென்றுபுகன்றே
தேமார்குமுதப்பாதமுஞ்ஜெயமீமிதியடியும்
ராமாவெனும்பொருளுங்கொடுநாயேற்கருள்செய்தென்
ஏமாதிகடவிர்த்தாட்கொண்டதயவேதறியேனே. 8

பாமாலைகள்புனைசாதிகட்டப்படியடியில்
தாமேயடைந்தென்மத்தகமேற்றாட்களைவைத்தினி
ராமாவெனவுரைப்பாயெனநாயேற்கருள்செய்தென்
ஏமாதிகடவிர்த்தாட்கொண்டதயவேதறியேனே. 9

பூமான்களும்வானோர்களுமறியும்பொருட்டாக
சீமானுமதடிபாதுகமென்சென்னியிற்றுக்கி
நாமேகுருவெனக்காட்டியிந்நாயேற்கருள்செய்தென்
ஏமாதிகடவிர்த்தாட்கொண்டதயவேதறியேனே. 10

என்றிவ்விதமாய்த் தோத்திரஞ் செய்துருகும் கபீர்மேல் ராமானந்த சுவாமிகள் மிகவுங் கருணைகூர்ந்து அடா மோசஞ்செய்தாயே நீதானா படுத்திருந்தவன் நீ செய்யவேண்டுமென்றேசெய்தாய் ஆனாலுங் குற்றமில்லை. முடிந்துபோன கருமத்தைக்குறித்து யோசிப்பதாற் பிரயோசனமில்லை யென்று அந்தணரைநோக்கி ஓ சிஷ்ஷர்களே! இவன் சொல்வது உண்மையே யாதலால் இன்றுடனிவனை உம்முளொருவனாய்ச் சேர்த்துக்கொண்டு பாதுகாத்து வருவீர்களாவெனத் திருவாய்மலர்ந்தருள மறையோர் குரோதங்கொண்டு ஓ எங்களாண்டவனே! தெரியாமல் யாரோவென்று வழக்கமான வார்த்தையைச் சொன்னீர் இதனால் இந்நீச்ச னுமக்குமாணாக்கனாய் விட்டானா? பார்ப்பார் பறையனைச் சேர்த்துக் கொள்ளுவார்களா? சிஷனென்றும் விள்ளுவார்களா? இவ்வண்ண மிவ்வுலகிலெங்கேயாவது நடந்ததுண்டா? நடப்பதுமுண்டா? இத்துடுக்கனைச் சேர்த்துக்கொள்வதால் நமக்கு அபகீர்த்தி யுண்டாகுமேயன்றி புகழுண்டாகவே யுண்டாகாதாதலால் இவனை நமது மடத்துக்குள்வராமல் நீக்கிவைப்பதே யோக்கியமென்றுரைக்க ஸ்வாமிக ளுங்களின் இஷ்டப்படியே செய்யுங்களென்றுரைத்து,

கபீரை நோக்கி அடா கள்வா! சூது செய்தென்னிடந் தாரக மந்திரத்தைக் கேட்டுக்கொண்ட காரணத்தால் நீமறை வாயிருத்தலே நன்மை இராவிட்டால் வருந்தின்மை நாளை யோ டிம்மார்க்கமாய் மறந்தும் வரவேண்டா மென்றனுப்பி விட்டு சகலரையும் பார்த்து, ஓசாது பிராமணர்களே! இவன் சிறுகுழந்தையா யிருந்தும் பக்தி விசுவாசம் பரிபூரணமா யிருப்பதுமன்றி, சதுர்வேதங்களை யுணர்ந்த சதுர்முகனைப் போலவே பேசுகின்றார், இவ்வளவு துன்பத்துக் குடன்பட் டென்னிட மனுக்கிரகஞ் செய்துகொண்டவர்கள் யாருமில்லை இவன் முற்பிறப்பில் யாதோ குற்றஞ் சற்று செய்திருப்பான் அதனாலேயே மிலேச்சர் வம்சத்திற் பிறந்தானானாலுங் குண மே சிரேஷ்ட மிழிவான குலத்தோரான வால்மீகர் முதலான வர்களும் மகாரிஷிகளாகவில்லையா? இச்சிறுவனுடைய குண ங்குறி நடைநொடி பாவனைகளை யோசிக்குமளவில் மிகவும் விந்தையாக விருக்கின்றதன்றி யோரவதாரப் புருஷனைப் போலத் தோன்றப்படுகின்ற திராக்கதர் குலத்தில் உற்பவித்த விபீஷணன் பிரகலாதனன் மாபலி முதலானோர்கள் மகா பக் தர்களானதெல்லா மறிந்ததுதானே பகவானுடைய லீலையை யொருவராற் சொல்லக் கூடியதல்லவென் றனந்தம் வார்த் தைகளாடி ஸ்ரீமந் நாராயணருடைய தியானத்தில் எழுந் தருளியிருந்தார். பின்பு கபீர் தன் வீட்டையடைந்து தாய் தந்தையர்க்கு நடந்த வர்த்தமானங்களை நவின்று சந்ததமுந் தாரக மந்திரத்தைச் சிந்தனஞ் செய்துக்கொண்டு காலையிலெ ழுந்து சானவியிற்படிந்து ராமானந்த சுவாமிகளின் திலக மணிந்து, துளபத்தாமங்களைப் புனைந்து ஸ்ரீமந்நாராயண ருடைய திவ்விய திருநாமங்களை யெல்லாங் கோர்த்து பல கீர்த்தனையாகப்பாடி பலருக்கும் விரித்துரைத்துக் கொண்டி ருந்தார். கேட்டீர்களோ சித்தர்களேயென்று நாபாஜிசித்தர் பின்னும் சொல்லத் தொடங்கினர்.

கபீர் இராமானந்த ஸ்வாமிகளிட முபதேசம்
பெற்றுக்கொண்ட அத்தியாயம்

முற்றிற்று.

எட்டாவது அத்தியாயம்.

கபீர் துலுக்கமதத்தைக் கண்டித்தது.

இப்படி கபீர் இருக்கையிற் றுலுக்கரெல்லா மொன்ருய்ச் சேர்ந்து தமாலையும் ஜிஜ்ஜாபீபியையும் விளித்து, நீங்கள் துலுக்கராயிருந்தும் இந்துக்களைப்போல நாராயண ஸ்ரீராமாவென்று கூச்சலிட்டுக்கொண் டெங்கள் தெருவிலிருப்பது தகுதியல்ல இக்கணம் இவ்விடத்தைவிட்டு பேருங்கள், இந்துக்கள் வீதியிற் சேருங்களெனக் கடுகடுத் தறைகிறதைக் கேட்ட கபீர் துடுக்கரை நோக்கி நீங்களுரைத்தால் நாங்கள் போவோமா? ராம் ரயிம் ஒன்றென்றறியாவுங்களுடன் வாது செய்வோமோவென, துலுக்கருள் மிகவுங்கற்ற காஜி, கபீரைப்பார்த்து கரத்தைப் பிடித்தீர்த்து ராம் ரயிம் ஒன்றென்பதெப்படி ராமனென்பவன் தசரதனென்னுமோர் மனிதன் புத்திரனாகும். ரயிம் என்பது ஜனன மரணமில்லா நிரூபமாகிய கடவுளாகும். உண்மையறியா உன்னுடன் பேசுவதாலோர் பயனுமில்லையென, கபீர் ஓ சற்று மறிவில்லாக்காஜியே! நித்திய நிர்மல சொரூபமாகிய பரப்பிர்மத்தி னம்ஸத்தைப்பெற்று லோகங்களை ரட்சிக்குங் கர்த்தாவாகிய மஹா விஷ்ணுவுக்கு சிஷ்டபரிபாலனந் துஷ்ட நிக்கிரகஞ் செய்வதே தொழிலாதலால் துஷ்டனுகிய இராவணனைச் சம்ஹாரஞ்செய்ய தசரதராஜனுக்குப் புத்திரனு யவதரித்தார். அவரை மானிடரென் றெந்தமதிகொண் டறைந்தாயென, காஜி அடா பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேண்டு மப்படிக்கின்றி கடவுள் வேறு உலகங்களை இரக்ஷிக்குங் கர்த்தா வேறென்று நீயொருவன் சொல்லவே கேட்டேனுதலால் வேதமேயில்லா இந்துமததிற் பிரவேசித்த உனக்குண்மைநெறி யெங்ஙனந் தெரியப் போகின்றது. எட்டியுடன் சேர்ந்த இலவுந் தீப்பட்டதுபோ லிந்துக்களுடன் சேர்ந்த நீ நரகத்துக்கே யாளாக வேண்டுமென, கபீர் என் வாயில்வந்தபடி பிதற்றுகிறீர் நிரூபமாகிய பரப்பிர்மமே ஆதிதெய்வமானுலும் அதிலிருந்துண்டான பகவானலேயே மானிடர் முதலான சமஸ்தலோகங்களு முண்டாயிற்று ஆனதால் ஆதியிலிருந்து சகலரும் திரிமூர்த்திகள் ரூபமான விக்கிரகங்களைப் பணிந்துக்கொண்டே வந்தார்கள். அதை மத்தியில் நிக்கிரகித்த இப்ராயீம்

முதலானவர்களுக்குக் கொடிய ஆக்கினை கடவுளே கிடைக்கும்படியாய்ச் செய்த தபத்தமோ, அன்றி ஆதியில் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமதேவனு லுண்டாக்கப்பட்ட வேதங்களே மெய்யானதன்றி நடுவாந்தரத்திற் பிறந்த மஹம்மது என்னும் ஓர் மானிடனு லுண்டாக்கப்பட்ட வேதத்தை மெய்யென்ன நம்பக்கூடுமா இதுதெரியாதா நீயென்னுடன் வம்பு செய்யக் கூடுமாவென, காஜி நிரூபமான கடவுள் நினைத்த மாத்திரத்திலுண்டான இவ்வுலகத்தை ரூபமுள்ள பிர்மாவாற் செய்யப்பட்டதென் றுரைத்து உன் மூடத்தனத்தை எப்படி தெரிவிப்பேனன்றி எங்கள் சத்குருநாதனுகிய மஹம்மதுக்கு கடவுளுத்தாரப்படி தேவதூதர்களால் கொண்டுவந்து கொடுக்கப்பட்ட வாக்கியங்களே சத்திய வேதமாகு மதிலுள்ள நுட்பார்த்தங்க ளுன்னைப்போன்ற லுத்தர்களுக்குத் தெரியப்போகின்றதா வென்று நகைக்க,

கபீர் கடவுளுக்கு நினைப்பிருந்தால் மரப்புமுண்டே இப்படிசங்கற்ப விகற்ப முள்ளவர்க்கு தேகமுமுண்டா யிருக்குமே தேகத்துக்கோர் ரூபமுண்டே நிரூபத்துக்கு ரூபமேது நிர்ச்சங்கல்பத்துக்கு சங்கல்பமேது நிர்விகற்பத்துக்கு விகற்பமேது நிர்ச்சலனத்துக்குச் சலனமுள்ள தொழிலேது சலனமுண்டாகுமா ரூபமில்லாமல் நினைப்புண்டாகுமா நீசொல்வதாகாயத்திற் கப்பலோடுகிறதென்றும் அந்தரத்தில் மரங்களிருக்கிறதென்றும் வெளிக்குச் சலமுண்டென்றும் வளிக்கு ரூபமுண்டென்றும் சொல்வதுபோ லல்லவோ யிருக்கின்றதன்றி சங்கல்ப விகல்பமில்லா நிருவிகற்பராகிய கடவுளுக்கு ரூபமில்லாமலிருக்க தேவதூதர்களுக்கு வாக்கியங்களை எவ்விதமா யெழுதிக்கொடுத்தார் எள்ளுக்குள் ளெண்ணெய் போலவும் எங்கும் பரிபூரணமாயிருக்கும் பரப்பிரமம் எவ்விடத்திலிருந்து தூதர்களுக்கு மஹம்மதிடம் போவென்று கட்டளையிட்டார். மஹம்மதிருக்குமிடத்திற் பரப்பிர்மமில்லாமற் போச்சுதா வடிவும் வாக்கு மில்லாதவர் கொண்டுபோ வென்றெப்படி யறைந்தார் ஆகாயத்திலிருந்தனுப்பப் பூமியிலில்லாதவரோ கடவுள் கருணையுட னேற்படுத்திய வாக்கியங்களான வேதத்தில் ஜீவயிம்சை செய்யும்படியான வாக்கியமிருக்குமோ இவ்வாக்கியங்களிற் சிலதை இப்ராயீம் பயம்பர் குமாரரில் ஒருவனுகிய இஸாக்கென்பவன் தள்ளக்கூடு

மோ? சத்தியவேத மல்லவென்று விள்ளக்கூடுமோ? துலுக்க வம்மிசத்துக் காதித்துணையான இப்ராயீம் பயம்ப ரென்பவர் பலவாறு விரித்துரைத்தும் இஸாக்கென்பவன் சொந்தக் குமாரனுயிருந்தும் பொய் வார்த்தைகளா லென்னை யேமாற்ற வேண்டாமென்று தந்தையைப் பட்டணத்தைவிட் டகற்றக் கூடுமோ? ஓ காஜி! உலகத்தில் தங்கள் தங்கள்பேர் விளங்கும் பொருட்டு ஓரோர் மதத்தை யேற்படுத்தி அதற்கு தகுதியான வாக்கியங்களை யெல்லாஞ் சேர்த்து வேதமென்று நாமமிட்டு தன்னைச் சகலருந் தொழும்படியா யதில்வரைந்து இதுவே சத்திய வேதமென்றும் இதுவே தேவனுடைய கட்டளையென்று முரைத்து மானிடர்களை எந்த வழியாலும் நிற்காமல் செய்தார்களன்றி மோக்ஷமார்க்கத்தை கற்பிக்கவில்லை.

இந்த மதபேதங்களால் மலமே விருத்தியாகின்றதே யல்லாமல் சம்மதமான சாந்த குணம் பிறக்கப் போகிறதே யில்லை. மோக்ஷ மடைபவன் மானிடனைத் தொழுவானேன் தொழுது அழுவானேன் ஜீவகாருண்யத்தைக் கைக்கொண்டு கடவுளை நோக்கித் தவஞ்செய்யாமற் கொலைபாதகத்துக்குட் பட்டு மாயையாற் பங்கப்பட்டு அதோகதிக் காளாகுங் காரியங் களைச்செய்தா லாண்டவனருளை யுகமுடிவிலு மடைவதற்குக் கூடுமோவென, காஜி சச்சிதானந்தக் கடவுளை விடுத்து மும் மூர்த்திகளைத் தியானிப்பது மூடமல்லவாவென, கபீர் மஹம் மது யென்னும் ஓர் மானிடனைப் பணிகிறதைவிட மும்மூர்த் திகளைப் பணிவது மூடமல்லவென, காஜி ரட்சகர்த்தனகிய விஷ்ணு தானேவந்து ராவணனைக்கொல்லலாகாதோ மானி டப் பிறப்பெடுக்குங் காரணமேதோவென, கபீர் தேவர் மூவ ராற் சாகாவரம் பெற்றதற்காக மானிடனு யவதாரஞ்செய்ய நேரிட்டதென, காஜி ரட்சகன் சம்ஹாரஞ் செய்யக் கூடுமோ வென கபீர் ரட்சகனகிய இராஜன் துஷ்டர்களை நிக்கிரகஞ் செய்கிறதைப்போல துஷ்டனன இராக்கதனைக்கொல்ல நே ரிட்டதென,

காஜி சிரேஷ்டமான இவ்வாக்கையின்மேல் மண்ணைக் குழைத்தணிவது மடமையல்லவாவென, கபீர் அனித்திய மான இச்சரீர மெத்தனை நாள் இருந்தாலும் மண்ணேயாய்ப் போகுமென்று மிதை நம்பாதார்களென்று மும்மைப்போலொத்தவர்க் கறிவுணர்த்து மடையாளமானது மடமையைத் தவி

ர்க்குமேயல்லாது மடமையைக் கொடுக்காதெனு! காஜி ஆனு லுங் கல்லைக்கும்பிடுவ தறிவீனமல்லவோவென, கபீர் எங்கும் நிறைந்திருக்கும் பரப்பிரமம் கல்லிலுமிருக்கிறுர் இக்கடத் துக்குள் ளிருக்கிருரென்றும் அபக்குவர்க்கு ரூபமுள்ள திரி மூர்த்திகளை புறம்பில் ஊனக்கண்ணுற் பார்த்துப் பணியவும், பக்குவர்க்கு நிரூபமாகிய பரப்பிர்மத்தை அகத்தில் ஞான சட்சுவாலறிந்து தொழவும், விதித்திருப்ப தறிவீனமல்ல. அசன் உஸன் என்பவர்கள்செய்த அக்கிரமத்தைத் தேவர் கள் பொறுக்கமாட்டாம லவர்களைக் கண்டிக்கத் தேடுகையில் தடாகத்தில் மூழ்கியிறந்த அவர்களின் கரங்களை வைத்துப் பூசிக்கும் மானிடர்களே அறிவீனரென, காஜி உங்கள் வேத த்தில் ஆதிமனிதன் யாரென் றுரைக்கின்றதென. கபீர் பிர் மாவால் மனுவும் மனுவால் மானிடரு முண்டாக்கப்பட்டா ரென, காஜி அதற்கு திருஷ்டாந்தமேதென கபீர் மனுவா லுண்டானதால் மானிடரென்றும் மானிடர்க்குரைத்த நீதி களை மனுநீதியென்றும் சொல்லப்படுகிறதே திர்ஷ்டாந்த மென காஜி கடவுளா லுண்டாக்கப்பட்ட ஆதாரமே ஆதிமனு ஷனன்றி மனுவல்லவென,

கபீர் கடவுளுக்கு ரூபமேயில்லையென் றுரைக்கும் நீ கட வுள் ஆதாமைச் சிருஷ்டித்தாரென்பது சாஸ்திரவிரோதமா யிருந்ததன்றி அனேக சங்கைகட்கு மிடங்கொடுக்கிறது பீதத் தாலுண்டாக்கப்பட்ட பாவையே ஆதாரூபமென்றும், அவ் வோவியத்துக்கு கடவுள் ஊதினுரென்றும் ஆதாம் கடவுள் கட்டளையை மீறினுரென்றும் பூதம் கடவுளுக்கு விரோதமா யிருக்கிறதென்றும் தன் கட்டளையைக் கடந்த ஆதாமை வா னுலகத்திலிருந்து தள்ளிவிட்டாரென்றும் கடவுள் வாக்கி யத்துக்குப் பூதம் மாறுபட்டதென்று முரைக்குஞ் சொற்க ளெல்லாம் குற்றமாகவும் அபத்தமாகவுமே யிருக்கின்ற தெப் படியென்ருல் கடவுளெந்தயிடத்தில் எந்த வுருவாயிருந்தார் ஆவியை யெப்படி ஊதினுர் எந்தவுலகத்திலிருந்து தள்ளி னுர் எல்லாவல்லமையுள்ள கடவுளின் கட்டளையை மானி டன் தவிர்ந்ததென அற்பமான ஒருபூதம் கடவுளை யெதிர்த்த தென்ன? அவருரைக்கு மாறுபட்டதென்ன திரிகாலங்களையு முணர்ந்த கடவுள் பின்னடப்ப தறியாமற்போனதென்ன? பூதத்தை அழிக்காமலிருந்ததென்ன பூதத்தால் கெட்டவர்க

ளுக்கும் நரகத்தையுண்டாக்கினதென்ன நிருபமாகிய கடவுள் எவ்வுலகி லிருக்கிறார் மோட்சமென்பதெந்தலோகத்தி லிருக்கின்றது. நரகமெவ்வுலகி லிருக்கிறதென, காஜி ஓ கபீர்! நீ பேசுவதெல்லா மகடவிகட வார்த்தைகளா யிருக்கின்றதெப்படியெனின் மோட்சமும் நரகமுமில்லையென் றுரைக்கலாமோவென, கபீர் மறுஜென்மமெடுக்காமற் போவதே மோட்சம் ஜென்மமெடுப்பதே நரகமென காஜீ நகைத்து ஓ கபீர்! கறந்தபால் முலையிற் பிரவேசிக்குமா கடைவெண்ணெய் மோரிற் புகுமா? கழித்தநாள் பின்னும் வருமா காய்ந்த இரும்புண்டநீர் கக்குமா இறந்துபோய் பஞ்சபூதமாய்ப் போனபின் பிறக்கக்கூடுமாவென,

கபீர் க்ஷணசிருஷ்டிப்பிரளயம் தினசிருஷ்டிப் பிரளயம் தேகசிருஷ்டிப் பிரளயம் ஜீவசிருஷ்டிப் பிரளயம் பிரம்ம சிருஷ்டிப் பிரளயமென ஐந்திருக்க நீர் ஒன்றுவ தில்லையென் றுரைக்கக்கூடுமோவென, காஜீ இந்த ஐந்தின் விபரமேதென கபீர் க்ஷணசிருஷ்டிப் பிரளயமாவது நினைத்தலு மறத்தலுமாம், தினசிருஷ்டிப் பிரளயமாவது ஜாக்ராவஸ்தையுஞ் சுழுத்தியுமாம், தேகசிருஷ்டிப் பிரளயமாவது ஜன்மித்தலும் மரித்தலுமாம், ஜீவசிருஷ்டிப் பிரளயமாவது ஜீவர்களை உண்டாக்கவும் அழிக்கவும் தேகத்திற் பிரளயமாவது அண்டரண்டங்களுண்டாதலும் ஒடுங்குதலுமாமென, காஜி நீசொன்னதெல்லாஞ் சரியேயானாலும் ஜீவர் மரித்தபின் ஜென்மித்தலென்பது மாத்திரங் கூடவே கூடாதென, கபீர் ஜீவனுக்கு ஜனனமரணமில்லை தேகத்துக்கே ஜனனமரணமென்ன, காஜி மரித்ததேகம் பின்னுஞ் செனிக்குமாவென, கபீர் மரித்த தேகமே ஜெனிக்கும்போது கூடாது வினையின்படியே ஜீவர்களுக்கு சரீரமுண்டாகுமென, காஜி சீவர்கள்செய்த கர்மப்படி நிரையமாவது மோட்சமாவதடைய வேண்டிய காரணமன்றி அடிக்கடி ஜென்மித்தலென்பது கூடாதென,

கபீர் மோட்சமடைந்தவர் கடான் சுகத்தி லிருக்கட்டும் நரகத்தை யடைந்தவர்களுக்கு விமோசன மெப்போதென, கபீர் காஜி எப்போதுந் துன்பத்தையே நுகரவேண்டுமென, கபீர் சற்று தீங்குசெய்தார்க் கென்னகெதியென அவர்கட்கு மக்கதியேயென, கபீர் இப்படி யுரைப்பது சாஸ்திர சித்தாந்தமா வுன்னுடைய யுக்தியோவென, காஜி எங்கள் வேதத்திலிப்ப

டியே யுரைக்கின்றதென, கபீர் நகைத்து இது நல்ல நியாயமா யிருக்கின்றது சற்று வினைசெய்பவனுக்குத் தகுந்த தண்டனை கொடுத்தாட்கொள்ளாம லெக்காலமும் நரகத்திற்றள்ளுவதென் றுரைக்கலாமோ? ஓ காஜி நான் சொல்லும் வார்த்தையைக் கேளும் அதாவது தேகத்தையன்றி வேறு நரகமில்லை தேகத்தையன்றி வேறுமுக்தியில்லை நிச்சயமார்க்கமிதுவே யாமென, காஜி மரித்தபி னுற்பவிப்பதற்குக் காரணத்தைக் காட்டுவாயோவென, கபீர் உற்பவிக்கும்போதே குஷ்டவியாதி முதலான வியாதிகளுடன் பவமெடுப்பதே காரணமென, காஜி தாய் தந்தையின் சுக்லசுரோணித குற்றத்தால் வந்த குறையேயன்றி முன்செய்வினை யென்பது கூடாதென,

கபீர் முன் யாதொரு தீங்குஞ்செய்யாச் சீவனுக்கு தாய் தந்தையரால் நூதனமா யேனிடர்வரும் நோயாளிகள் கர்ப்பத்திற் றங்கவேண்டிய காரணமேன் ரணங்கள் நெருக்குண்ட அன்னை பிதாவுக்கோர் பிணியுமில்லா பிள்ளை பிறப்பதேனென, காஜீ இப்படி ஜனித்தல் ஜகதீஸ்பரனுடைய செயலென, கபீர் யாதொரு குற்றமுஞ் செய்யாக் குழவியின் ஜீவர்க ளதிக பாவங்களைச் செய்வார்களென்றும், இப்படி ஒரு ஜீவனுக்கிடர்தந்தால் பல ஜீவர்கள் பாவஞ் செய்யாமலிருக்கிறார்களா கருணாநிதியான கடவுள் ஓர் கிர்த்தியஞ் செய்வாராகி லதுபழுதாகுமா? அன்றி, குற்ற மில்லாதவனைத் தண்டிக்கும் இராஜனையே தூஷிப்பதற் கிடமுண்டா யிருக்கின்றதேயென, காஜி எங்கள் வேதத்தில் அடிக்கடி ஜென்மிப்பதில்லை கடைசிநாளில் சகலரையும் கடவுளானவரெழுப்பி பாவிகளையெல்லா மொருபக்கமும் புண்ணியவான்களை எல்லாமோர்பாலும் நிறுத்தி நரகமோட்சங் கொடுப்பாரென் றுரைக்கின்றதேயென, கபீர் மனிதரு லேற்படுத்திய புஸ்தகத்திலிப்படியன்றி இனி எப்படித்தான் சொல்லும் இப்படியாக அனேகக் கட்டுக்கதைகளின் புஸ்தகங்களிற் சொல்லியிருக்கின்றதுகளை மெய்யான வேதமென்றும் நம்பி பிரஷ்டர்களானார்களென் றறைந்து நல்லது பாபிகளுக்கு நரகமும், புண்ணியவான்களுக்கு சொர்க்கமும் என்றுரைக்கு முங்கள் வேதத்தில் ஜன்மித் தைந்தாறு வயதில் மரிக்கும் குழவிகளுக்கென்ன கெடுதியென் றுரைக்கின்றதென, காஜி அவர்களுக்கொன்று மில்லையென,

கபீர் நரக சொர்க்கத்துக் குதவாச் சிருஷ்டி ஈஸ்வரன் செய்வாரோவென காஜி சகல ஜீவர்களுக்கும் தங்களுக்கு மரணமுண்டென்றறியவும் பயந்து நல்வழியில் நடக்கவும் அநித்திய வஸ்துக்களை அபேட்சிக்காமலிருக்கவும் செய்யுஞ் சிருஷ்டியென, கபீர் மனிதர் பிறக்கும்போதும் இருக்கும்போதும் இறக்கும்போதும் துன்பமாயிற்றே, முன்வினையே யில்லையெனின் பிறந்து மரிக்குங் குழவி இடையிலனேகப் பிணிகளாற் றுன்பமடைந்து மரிக்குமாயின் கான்முளையடைந்த துன்பதோஷம் யார்மேற் சுமத்துகிறதென, காஜி இது ஈஸ்வரனுடைய லீலையாதலால் ஆர்மீதுஞ் சுமத்தக் கூடாதென, கபீர் அப்படியானால் நாமும் விளையாட்டா யனேகருக்குத் துன்பத்தைக் கொடுத்து லீலையென் றுரைப்போமென, காஜி குழந்தைகட்கு அபமிர்த்தியும் கொடிய வியாதியும் வருவதேனெனின் தந்தைதாய் செய்கர்மம் சந்ததிக்காமென் றுரைக்கக் கூடாதோவென,

கபீர் முறுவல்காட்டி தாய்தந்தை செய்கர்மம் சந்ததிக்குண்டாகுமாயின் பாபிகட்கு புண்ணியவானே னுற்பவிக்கிறான் புண்ணியவான்களுக்குத் துஷ்டனேன் ஜன்மிக்கிறான் பிரத்தியட்சப் பிரமாணமாய் தந்தை ஏவலாளனாயும் சுதன் தளகர்த்தனாயு மிருக்குங் காரணமேன், அவர்கள் செய்த கர்மமவரவர்களே அனுபவிக்க வேண்டுமன்று ஒருவர்செய்தகர்மதர்மம் ஒருவரை யடையாது. ஒருவனுக்குச் சென்மித்த மைந்தர் நால்வரிலொருவன் ஜாரசோரனாகவும், ஒருவன் விவேகனாகவும் ஒருவன் மந்தபுத்தியுடையவனாகவும், ஒருவன் பிணியாளனாகவு மிருக்குங் காரணமேன்? ஒருவன் தனசம்பன்னனாகவும், ஒருவன் தரித்திரனாகவும், ஒருவன் பார்ப்பதற் கருவருப்புள்ள அங்கவீனனாகவும், ஒருவனழகுள்ளவனாகவும் மாறுபட்டிருப்பதேன்? ஓ காஜி! அவரவர்கள் முன்செய் வினைப்படியே நடக்கின்றதன்றி ஈஸ்வரன்செய்யும் லீலையல்ல.

ஏகசொரூபனான கடவுளுக் கொருபோதும் பட்சபாதமிராது ஜீவர்கள் துன்பமடைத லவருடைய லீலையென் றுரைப்ப தவிவேகமேயாம் ஆதியில் பிர்மாவானவர் மனுவைச் சிருஷ்டித்து அம்மனுவின் முன்னிலையில் மனுஷரை யுண்டாக்க மனு நீதிப்படி நடப்போர்க்கும் மறுஜென்மமில்லையென்று மற்றவர்கட்கு மானிட ஜென்மமுங் கிடைத்தலரிதென்று

ரைத்த வாக்குப்படி சிலர் மனுநீதியை யனுசரித்து தேகாதிக ளனித்தியமென் றறிந்து நித்தியமான பொருளைத்தேடி உச் சித மாதவத்தைநாடி அத்தபோபலத்தால் ஞானக்கண்ணைத் துலங்கி கரணங்களின் சேஷ்டையாற் கலங்கி, பிர்மானந் தத்தை ஆசித்து பெரியோர்களை நேசித்து அவர்க ளருளால் சுகவாரிதியிலாழ்ந்து தொடர் பவச் சமுத்திரத்தை தாண்டி மோட்ச மடைவார்கள்.

அநேகர் மனுநீதியை நிக்கிரகித்து விஷயாதி போகங் களை இச்சித்து ராகத்துவேஷங்களாற் கட்டுபட்டு ஜீவகா ருண்ய முதலான நோன்புகளைப் பாதுகாக்காமல் விட்டு அனித்திய மலபாண்ட தேகத்தை மெய்யென் றிறுமாந்து அலக்கணுற் ருக்கையை வளர்க்க இதர ஜீவர்களை இம்சை செய்து அப்பாவங்களாற் பீடிக்கப்பட்டு அவமிர்த்தியுவுக் காளாகி நால்வகை யோனியிற் ஜெனித்து மாயாமோக சாக ரத்தைக் கடந்தேறுவதற்கோர் துறைகாணமல் மயங்கித் தய ங்கி மானிடவாக்கையும் பெறுவதற் கரிதாகி குறிக்கி யோனி களிலுழன் றலைந்து சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமதேவனு க்கு மிடர்கொடுத்தார்கள். முக்கியமான சத்தியவசனமாவது ஜீவர்களெதைக் கோருவார்களோ அதையே ஜகதீசுவரன் கொடுக்க ஆதியில் வாக்கையளித்தார். மனுஷ ஜென்மத்துக் குறுதியான மோட்சவாழ்வைக் கோரா மானிடர் விவேகத் தைக் குறித்து வாட்டமடைந்து அவித்தியா சம்பந்தமுள்ள ஜீவர்களி னிச்சையின்படி விஷயானந்த போகத்தையே விரும்பியுழலும் மிருகாதி ஜென்மங்க ளெடுக்கும்படியாய்ச் செய்தார்.

ஜகதீஸ்வரனுடைய அருட் பிரசாதம் பெருமல் மாயா வாழ்க்கையிற் சிக்கிச்சொக்கி மலத்தை மணமென்றுசித்தது போல மாதராதி போகங்களையே மேன்மேலு மபேட்சித்து மாயாந்தகாரக் குகையில் வீழ்ந்து துக்கசாகரத்தி லாழ்ந்து மரண ஜனன வினையாற் பிணிக்கப்பட்டார்களேயன்றி ஆண் டவனுடைய பட்சபாதஞ் சற்று மில்லவேயில்லை ஒரு தந் தைக்கு மனம்வருமா துஷ்டப்பிள்ளைகளைச் சிஷ்டைசெய்து சிரேஷ்ட மைந்தர்களுக் கின்பமளிக்குந் தாதையைப்போல வே பரமேஸ்வரன் எவரெவர்கள் தர்மங்க ளெவ்வண்ணமா யிருக்கின்றனவோ அவ்வண்ணமான தேகாதி போகங்களைக்

கொடுக்கின்றூர் திரேதுவாக ஜீவர்களுக்கு ஜனனமரணாதி துன்பங்களைக் கொடுப்பாரா நன்ருயோசித்துப் பார்ப்பீரென்று சாற்ற காஜி தந்தை தாய் கூடும்வேளை யெப்படியோ அப்படியே முடியுமென, கபீர் நல்ல வேளையிற் கூடும்போது தரிப்பதும் தீயவேளையிற் புணரும்போது தரிப்பதுமே காரணமாகும்.

அதெப்படி யென்பீரோ நல்வினை முற்பிறப்பிற் செய்திருப்பவன் நல்லவேளையிலேயே தரிப்பான் தீவினை செய்திருப்பவன் தீயவேளையிலேயே கர்ப்பத்திற் றரிப்பானல்லாமல் கர்மிகளுக்கு பிறந்தவன் கர்மியாகவே யிருப்பானெனின் னிது தந்தை தாயின் குற்றமல்லவா அப்படியிருக்க மைந்தனைத் தண்டிப்பானேன் அப்படி தண்டிக்கக் கூடாதாயின் இந்த மைந்தனைப்பெற்ற அன்னை யத்தனையுஞ் சிஷ்டை செய்யக் கூடாதேதெனின் அவர்களையீன்ற தந்தைதாய்க் குற்றத்தால் வந்தவர்களாதலா லவர்களையும் கோபிக்கலாகா திறுதியிலவர்களை யீன்ற மூதாதைகளையுந் தண்டிக்கக் கூடாமல் இருக்குந் தண்டனையே யில்லாமற் போய்விடு மிப்படி விவேகிகள் சங்கைசெய்வாரோ வென்றுரைத்து, ஓ காஜி! அவரவர்கள் முன் ஜென்மத்தில் செய்த நல்வினை தீவினையின் காரணம் தண்டிகையைச் சுமப்பவர்களையும் ஊர்ந்து செல்பவனையும் ஏவலாளர்களா யிருப்பவர்களையும் காட்சிப் பிரமாணமாய்க் கண்டு சந்தேக நிவர்த்திசெய்துக் கொள்ளுவதும் அன்றிப் பொதுவான கடவுளுக்கு இராஜன்செய்த நலமென்ன மற்றவர்கள்செய்த கொடுமையென்ன பட்சபாதகமுள்ள ஈஸ்வரனுக்கு பரிபூரணன் என்றும் கருணாநிதி யென்றும் சொல்லக் கூடுமோ அகமுகமுள்ள ஞானிகட் கரூபமாகவும் பகிர்முகமுள்ள பக்தர்களுக்கு ரூபமாகவும் தோன்றுபவ னொருவனேயன்றி பலரல்ல ஆதலால் நீங்களும் ரூபமுள்ள பகவானை அகத்தியந் தொழுதவ னுசியைப் பெறுவீர்களென, காஜி ரூபத்தைத் தொழுபவனுக்கு ரவுரவாதி நரகமென்றும் கடவுளுக்கு ரூபமுண்டென்பவனை உடனே இரண்டு துண்டாக்க வேண்டுமென்று மெங்கள் வேதத்திற் சொல்லியிருக்கின்றதேயென,

கபீர் இப்பிராயிம் பயம்ப ருற்பத்தியாகாமுன் இவ்வுலகிலுள்ள சமஸ்த மாந்தர்களும் மும்மூர்த்திகளின் சொரூபங்

களைப் பணியவில்லையோவென, காஜி அவிவேகத்தாற் பணிந்தார்கள் இப்பிராயிம் பயம்பர் கடவுளுத்தாரப்படி யவதரித்து அதைக் கண்டித்து கடவுளையே தியானிக்கும்படியாகச் செய்தாரென, கபீர் அந்த இப்பிராயிம் தந்தையானவர் விக்கிரங்களையேசெய்து அதை ஐக்கியப்படுத்தி அவ்விக்கிரகங்களை அன்புடன் பூசிக்கும்படியாய்ப் போதித்துக்கொண் டிருந்தவர்க்குப் பிள்ளையாய் பிறந்த இப்பிரா மென்பவன் தந்தை மனம்நோக வக்கிரக பூசையை நிக்கிரகித்து அப்பட்டினத்திலுள்ளோர்களா லடிப்பட்டு வேறு தேசத்திற் கோட்டமெடுத்து அத்தேசத்திற் சிறந்த ஓர் பட்டினத்திற் பிரவேசித்து தான் குருபரம்பரையி லுற்பவித்தவனுயிருந்தும் இராஜன் புத்திரி தனக்கும் புத்திரி யென்றுரைக்கும் நீதியைத்துறந்து அந்நகருக் கிறைவனுடையமகளாகிய ஆஜராவென்பவளைக் கரவடமாய்க் கவர்ந்து கள்வனுய் மறுதேசத்திற்கோடி அப்பட்டினத்தரசன் புத்திரியான சாராவைமணந்தவள் மீதிருககும் மோகத்தால் அவள் சொற்படி பூரணகர்ப்பவதியாயிருக்கும் தன்னை நம்பிவந்த ஆஜராவென்பவளைக் காட்டிற் கொண்டுபோய்விடுத்து அப்பாவத்தாற் சூழப்பட்டு பின்பவ் வாஜராவிருக்குஞ் சவுக்கியத்தை யாசித்து சாராவுககுஞ் செய்துக்கொடுத்த சத்தியத்தைக் கடந்து ஆஜராவைக் கூடி தலையும் முகமும்குறியும் மொட்டையடிக்கப்பட்டு மேன்மைகெட்டு ஆஜராவுக்குப் பிறந்த இஸ்மாயி லொருவழியாகவும் சாராவுக்குப்பிறந்த இஸாக் ஒருமார்க்கத்திற் செல்லவும் பிரஷ்ட தவத்தையடைந்து இரண்டு மதங்களாகப் பிரிந்து நம்ருத்ராஜா முதலானவர்களாற் றுரத்தப்பட்டு நாட்டைவிட்டுக் காட்டையடைந்து தீவாந்தரங்களிற்சென்று அங்கிருக்கும் மிருகத்துக் கிணையான கிராதகர்களுக்குக் குருக்களாகி மூக்கறுப்பட்டவன் பலர்மூக்கையு மறுக்கத் துணிந்த கதைப்போல அநேக மாந்தர்களைக் கெடுத்து ஜீவகாருண்யத்தோடிருப்பவர்களைத்தடுத்து பாவம்பரவச்செய்து யுக்திவார்த்தைகளால் புத்தகங்களைச்சேர்த்து குரானென்றும் சத்தியவேதமென்றும் பேரிட்டு,

இஸ்மாயில் இஸாக் என்னுமிருவரும் எங்கள்வேதமே சத்தியமென்று முகங்கள் வேத மசத்தியமென்றுந் தர்க்கித்து குதர்க்க வார்த்தைகளாடி அம்மதத்தை நிலைப்படுத்துவதற்

குத் தங்களால் ஆகாமல்மரிக்கும்போது தங்களை யண்டினவர் களுக் குபதேசித்து நரகத்திற் பிரவேசித்தார்கள் பின்பு அப் புத்தகங்களிரண்டையும் ஆதியிலிருந்த நீதியுள்ளோர் ஒரு விதமாயிருக்கக் கண்டு சமுத்திரத்தி லெறிந்துவிட அன்று முதல் உங்களிலேயே தர்க்கம் விழுந்து உங்கள்வேதம் சமுத் திரத்தி லெறியப்பட்டதென்றும் உங்கள்வேதமே சமுத்திரத் தில் மூழ்கிப் போச்சுதென்றும் குதர்க்கங்களாடி இந்துக்களா ல் நீக்கப்பட்ட நீச்சர் மிலேச்சரென்னு மிருவரும் மறுபடி அவ்விந்து மதத்திற் பிரவேசிக்கக்கூடாமல் முன்மாதிரி மிரு கங்களைப்போல் பாலைவனங்களில் அலைந்து திரிந்த இஸ்மா யிலைச் சார்ந்த நீச்சர் மாத்திரம் ஆஜராயிருந்து இடத்தை முக்கிய ஸ்தானமாக்கி மக்காவென்று பேரிட்டு இறுதியில் உண்டான மகம்மதுவால் ஏற்படுத்திய புத்தகத்தை வேத மென்றும் மகம்மதுவே குருவென்றும் நம்பி இப்பிராயமுக் குண்டான சகலவிதமான கஷ்டமுள்ள ஆக்கினைக் குட்பட் டார்கள் நீங்களும் அதுவே வழியானீர்கள் மற்ற இலாக் கைச் சார்ந்தவர்களாகிய மிலேச்சர் நானேதெய்வமென்றறை ந்து கொடிய ஆக்கினைக்குட்பட்ட ஏசுவென்னும் ஓர் மானிட னைக் குருவென நம்பி அவனுடைய சரித்திரங்களையே வேத மென்று உறுதிகொண் டலைகிறார்கள். இப்படி யலையவேண் டுங் காரணம் விக்கிரகத்தை நிக்கிரகித்த இப்பிராயமாலால் வந்ததாம். நடுவாந்தரத்தில் வழிதப்பிப் பிசகினேர்க்கும் மத் தியிலுண்டான புத்தகங்களும் வித்தையிலும் புத்தியிலும் சித்தி வித்தையிலுஞ் சற்றுச் சிறந்தவர்களும் வேதங்களாக வும் குருக்களாகவும் இருக்கவேண்டியது முறைமையேயன்றி சற்றும் பிசகில்லை. ஏனெனில் மஹம்மதுவுக்கும் ஏசுவுக்கும் முன்னிருந்தவர்களுக் கெல்லாம் குருவாரோ வேதமேதோ அதை யுங்களா லறியக்கூடியதுமல்ல சொன்னல் நம்பத்தக் கதுமல்ல. முன்னமே குற்றவாளிகளென் றகப்பட்டவர்கட் குப் போதிக்கவுங் கூடாது கொலைஞனுக்குக் கொலைமறுத்த லைக் கூறினுற் குற்றமாகவே யிருக்குமன்றி அனுசாரனுக்கு ஆசாரத்தையும் விபசாரிக்கு கற்பின் மேன்மையும் விரித்து ரைத்தால் கசப்பாகவே யிருப்பதன்றி போதிப்பவர்க் கயாச மே பிரயோசனமாகுமென் றுரைக்கக்கேட்ட துலுக்கரெல்லா ம் மிகவும் ஆக்கிரம குரோதர்களாய் கபீரை வெட்டென்றுங்

குத்தென்றும் நெருங்கி வரக்கண்ட கபீர் ஓ துலுக்கரே! முன் புபிரகலாதனெங்கும் அரியே நிறைந்திருக்கிறரென்று சொல்லக்கேட்ட இரணியன் இந்தத்தூணிலு மிருப்பானோ வென்றறைந் தத்தூணிலிருந்து வெளிப்பட்ட பகவானலிறந்தது போலுங்களுக்கும் நேரிடும்போ லிருக்கிறதென, துலுக்கர் எதோ அந்த அரியை யழைப்பியும் பார்ப்போமென்று கற்களையுங் கட்டைகளையு மேந்திக்கொண்டு நிற்க,

கபீர் காஜியை நோக்கி, ஓ காஜீ! இவர்களெல்லா முனக்குளைக்யமானவ ராதலால் நீயொருவரே என்னருகில் வந்து பரீட்சை செய்யவேண்டிய மனமுடையவராணற் பரிட்சித்துப்பாரும் எதோ கைகொட்டித்தாரும் என்று ஓர் துளபமணியைப் பிரயோகித்தாரது அக்கினிச் சுவாலையா யெரிந்துவரக் கண்ட துலுக்கரெல்லாம் மூலைக்கொருவரா யோட்டமெடுத்தினியிந்த துஷ்டனிருக்குமிடத்தில் நாமிருக்கவே கூடாதெனத் தங்கடங்கள் வீடுகளைப் பிரிததுக்கொண்டு வேறிடம் போய் தமால் வீட்டைத் தனியாக்கி கபீர் மகா மந்திரவாதியெனத் தீர்மானித்து கபீரைக் கண்டாற்பயந்து நயந்து நடுங்கி ஒடுங்கி இருந்தார்கள். பின்பு கபீர் ஆனந்தமாய் ராம மந்திரத்தைத் தியானஞ் செய்துக்கொண்டு வீட்டைச் சூழ்ந்த நிலத்தில் துளபத்தோட்டமொன் றேற்படுத்தி நாள்கழிக்கத்தொடங்கினர் கேட்டீர்களோ சித்தர்களேயென்று நாபாஜி சித்தர் பின்னுஞ் சொல்லலாயினர்.

கபீர் துலுக்கமதத்தைக் கண்டித்த அத்தியாயம்
முற்றிற்று.

ஒன்பதாவது அத்தியாயம்

கபீர் கோரக்கரை வென்றது.

இவ்விதமாய் கபீர் சுகவாசம் புறம் வருகையிலும் அகத்திற் செல்லுகையிலும் ராமநாமமென்னுந் தாரகமந்திரத்தை மனனஞ்செய்துக்கொண்டு ராமானந்த ஸ்வாமிகளின் பணிவிடைக் காளாவதென்றென்று வாட்டமுற்றிருக்குங் காலத்தில், மச்சேந்திர நாதருடைய மாணக்கனுகிய கோரக்க நாதனென்பவன் சத்திநாதர் சதேகரநாதர், ஆதிநாதர், அநாதிநாதர், வகுளிநாதர், மதங்கநாதர், மச்சேந்திரநாதர், கடேந்

திர நாதரென்னும் எண்மருடன் தானுமொரு சித்தனென்கிற பேர்பெற்று நவசித்தர்களென்னும் சூரியனுக்கு மூன் நக்ஷத்திரங்களுக் கிணையான தபசிகள் பிரகாச மடைவார்களோவென்கிற அகமேலிட்டு, அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈஸத்துவம், வசித்துவமென்னும் அஷ்டசித்திகளையும் ஓர் விளையாடலாய் நினைத்து நீண்ட ஆயுளைப்படைத்து நாட்டிலுங் காட்டிலுமுலாவி யநேகரிஷீஸ்வரர்களையெல்லாம் பங்கப்படுத்தி தனக்கு ளைக்கியமாக்கிக்கொண்டு காசியையடைந்து ராமானந்த ஸ்வாமிகளின் மேன்மையைக் கேள்விப்பட்டு மடத்தினருகிற்சென்று மடத்தின் விசாலத்தையும் அதுவிருக்கும் உன்னதத்தையும் வேதகோஷ்டத்தையும் விஷ்ணு சங்கீர்த்தனங்களையுங் கேட்டாச்சரிய மாச்சரியமுங்கொண்டு, மடத்தின் வாயிலினெதிரிற் சூலத்தை நட்டு அதின் நுனியில் வஸ்திரத்தை விரித்து நிராதாரமான அவ்வஸ்திரத்தின்மேல் வீற்றிருந்து அடா ராமானந்தா! ஆலையில்லாவூரி லிலுப்பைப்பூ சர்க்கரை யென்பதுபோலென்றும் அறியா அந்தணர்களைச் சேர்த்துக்கொண்டு ஆசாரியனெனும்பேர்பெற்று மடத்துக்குளென்னசெய்கிறாய்.

உன்னுடைய தபோபலத்தை இப்போதே காண்பித்தாலாச்சுது இல்லாவிடின் நீயுமிம்மடமும் பஸ்பமாய்ப் போகச் செய்கிறேன் பார். கற்றறிமோழையாகிய நீயுமனேகருக்காசானுனயாமே உன்னுடைய தேசிகத்தனத்தையும் நீசெபிக்கும் மந்திரத்தின் கனத்தையுமறிய நீயாவதுன் சீஷர்களாவது வெளிப்பட் டென்னைப்போல சூலத்தின்மே லிருந்துக்கொண்டு ஜெபஞ்செய்ய வாருங்கள் இல்லாவிடில் எமலோகத்தைச் சேருங்களென்று மிகவும் ஆக்ரோஷத்துட னட்டகாசமிட்டுக்கொண் டனந்தமுறை இரைச்சலுடன் கூப்பிடுகிறதை கேட்ட, ராமானந்த ஸ்வாமிகளி னேவலாளராகிய மறையோரும் மாணுக்கரு மதிககோபதீப்தர்களா யெரிந்து ஆரடா ஸ்வாமிகளைப் பேரிட்டழைப்பவ னுன்னை யிப்போதே எமலோக தரிசனத்துக் கனுப்புகிறோமென் றடங்காக் கோபத்தால் வீறிடும் யானையைப்போலவும், கர்ச்சிக்கும் சிங்கத்தைப்போல்வும், புலியைப்போலவும் பராக்கிரம வார்த்தைகளாடிக்கொண்டு மடத்துள்ளிருந்து வெளிப்பட்டு சூலத்தின் மீதிருக்கும் கோரக்கதாதனைப் பார்த்து வேர்த்து பிர்மித்து

கம்பித்து அடங்கி ஒடுங்கி பயந்து நயந்து ஸ்வாமி நீவிரியா ரென்று வினவ, அதுகேட்ட கோரக்கன் மூனிவுடன் அட டா பிராமணப் பயல்களே! சாதுவென்று பேரெடுத்தவர்களு டன் வாதுசெய்து தோத்தவர்களைச் சிறைச்சாலையிலடைத்து வைக்குங் கோரப்பற்களையுடைய வியாக்ரம பராக்ரம கோரக்க சித்தனென் றறியீர்களோ? உங்களாவியை கொள்ளைகொள் ளும் எமனெனக்குறியீர்களோ? அந்தராமானந்த னென்பவ னெங்கே ஒதுங்கிப் பதுங்கிக்கொண் டிருக்கிறானவனை யென் முன் வரச்சொல்லுங்கள்.

ஓடாமற் சற்று நில்லுங்களெனத் தன் பெருங்குரலைத் திறந்தோசையுட னதட்டும்போது, அந்தணர் புலியைப்பார் த்து கிலியடைந்த பசுக்கூட்டத்தைப்போற் சிதறி அலக்க ணுற் றோட்டமெடுத்து ராமாநந்த ஸ்வாமிகளையடுத்து பரா கக்கிரமங்களை விடுத்து யாவரையும் வெளியிற் போகாமற்றடு த்து ஓ ஸ்வாமி கோரக்கனென்னு மிராக்கதன் வந்துவிட் டான் நமக்குத் துன்பத்தைத் தந்துவிட்டான் இனியென்ன செய்யலா மெவ்விடத்திற் பதுங்கலாமென்று மூலைவீடுகளைத் தேடுகையில் ராமானந்த ஸ்வாமிகள் கிடுகிடென நடுநடுங்கி கருடனைக்கண்ட சர்ப்பத்தைப்போ லடங்கி தெரிமாவைக்க ண்ட யானையைப்போ லொடுங்கி அப்பப்பா அந்தக் கோரக் கன் பொல்லாதவனாயிற்றே நம்முடைய பெருமை இன்றுட னழிந்து போயிற்றேயென் றுதிவருணரை நோக்கி, ஓ விப்பி ரர்களே! இப்போது நாம்செய்யு முபாயமென்ன சாற்றுங்க ளென்னைக் காப்பாற்றுங்களென்று வாயுலர்ந்து நாத்தடுமாறி மனந்திடுக்கிட்டு பீதிமேலிட்டு வாயில்வந்தபடி பிதற்றத்தொ டங்கினார்.

அப்போது வேதியர், ஓ ஸ்வாமி! தேவரீரே அச்சத்தா லச்சைவிட்டு கொச்சை மக்கள்போற் குளறிப் பேசும்போது நாங்களவனை வெல்ல வல்லவர்களா வெல்ல மேன்மையா யுள்ளவர்களா இக்கணம் பின்மார்க்கமா யனைவரு மோட்ட மெடுப்பதே மேன்மை இல்லாவிட்டால் வருந்தீமை யென் றுரைக்க அதற்கு ராமானந்த ஸ்வாமிகள், ஓ தொழுகுலத் தோரே! தபோபலத்தோரே! இத்தருணத்தில் உங்களுக்கு ள்ள பலவித சாமர்த்திய திராணிகள் அனைவற்றையும் காட் டக்கூடாதோ? மந்திரோச் சாடனங்களால் மாட்டக்கூடா

தோ? மாரணபேதத்தால் வாட்டக்கூடாதோ? கோரக்கனை இக்கணம் வோட்டக் கூடாதோவென்று வினவ, அதற்குப் பார்ப்பார், ஓ ஓ சேனைக்கெல்லாந் தலைவனான உத்தரனென்பவன் வீட்டில் பெண்டுகளுக்கு முன் பராக்கிரமங்களைக் காட்டி யுத்தமுனையில் கௌரவருடைய ஆரவாரத்தைப்பார்த் தச்சமுற்றோட்டமெடுக்க நினைத்ததுபோல நீரிதுகாலவரையிலெனக்கு நிகரான ஆசிரியரில்லையென் றனைவரையு மவமதித்திருந்தீ ரிக்கோரக்கனுக்கு பயந்திங்குமங்குமாயோடிப் பதுங்குகிறீர் வயிற்றை வளர்க்கவந்த எங்களைக் காட்டிக்கொடுக்கிறீர் இனியரைக்கணமு மிம்மடத்தி லிருக்கமாட்டோமென் றோடிப்போக எத்தனிக்கையில்,

ஸ்வாமிகள், ஓ விப்பிரர்களே! நீங்களெல்லாம் மேலுக்குப் பக்தாளென்று காட்டி நல்லோரியாருந் தங்கர்மலோட்டி தபத்தில் வல்லவர்களெனப் பாராட்டி இதுநாள் பரியந்தமென்னைச் சீராட்டி இப்போ வெளுத்த பற்களைக்காட்டி வியாகுலத்தா லென்னை வாட்டி வோட்டமெடுக்கவா நினைத்தீர்கள். யுத்தமுனையிலிராஜனை விடுத்தோடிப்போகும் இழிவானபேடிகளைப்போல என்னைக் காட்டிக்கொடுத் தோட்டமெடுப்பது நீதியா? பிரக்கியாதியா இப்படிசெய்தா லனைவரும் நிந்தை செய்யமாட்டார்களா, நகைக்கிடமாக்கி வாட்டார்களா, யுத்தமுனையிற் புறங்கொடுத் தோடுகிறதைப் பார்க்கிலும் எதிர்த்துமரித்தல் புகழல்லவா, துன்பம் வருங்காலத்திற் றுறவியாகிறதைவிட துன்பத்தையே னுகர்தல் தூய்மையல்லவா, ஓ யெனக்குரிய அன்பர்களே! மிகவும் நண்பர்களே! சாட்சிக்காரன் காலில் விழுகிறதைவிட சண்டைக்காரனைச் சமாதானஞ் செய்துகொள்ளல் சள்ளையற்றதுபோல இந்தக் கோரக்கனை ஜெயிக்க வல்லமையில்லா நாமனைவரும் சரணாகதியாவோஞ் சரணமென்பவருக்கு மரணமில்லையென்று சாஸ்திரமு மூறையிடுகின்றதே நீங்களறியாதது மல்லவே?

ஓ மனோதிடமில்லாச் சிஷர்களே! வேசிக்கிணையான வேஷர்களே! ஓடிப்போதல் நன்மையல்ல நன்மையல்ல வென்று மறுக்கவும் தீ வளர்ப்போர் கேட்காமல் போமையா இம்மடத்துடன் நாங்களனைவோரும் பஸ்பமாய்ப் போகுங் காலம் நேரிட்டது உமக்கென்ன கெட்டது நீருமெங்கள் மொழியைக்கடவாமல் ஓடிப்போகுமெங்களைமடக்காமல் கூட

வே வந்துவிடும் இன்றேனுமதாக்கை வெந்துவிடும் வீணாய் மரணகாலம் வந்துவிடும் சமஸ்தமும் பகையாளிக்குத் தந்து விடும் என்றறைந் திறைந்துக்கொண்டே புற்றினிலிருந்து புறப்படும் ஈசலைப்போல் மடத்தின் பின்வழியே புறப்பட்டு நாலு பக்கமுஞ் சிதறுண் டோட்டமெடுத்துத் தனிமடமாக்கி விட்டார்கள்.

அந்தணர்க்குள்ள அச்சத்தை காட்டிவிட்டார்கள் பின்பு ராமானந்த ஸ்வாமிகள் பிரம்மாண்டமான மடத்தினிற்றனி த்திருக்க வெறுவலுற்று ஆஹா ஆபத்துக்குதவாப் புத்திர னும் மித்திரனும் கஷ்டமறியாக் களத்திரமும், கலந்துவரும் பகையாளிகளெனத் திர்மானிப்பதுபோல தன் மாணாக்கரை யெண்ணி பலவாராலோசனைபண்ணி இனி கோரக்கநாதனை நண்ணி பூசிப்போமென்றுன்னி மடத்தைச் சூழ்ந்திருக்கும் மாந்தர்களைப் பார்த்து தேகமெல்லாம் வேர்த்து கரங்களை சே ர்த்து கடவுளுக்குத் தேகாவியைத் தாரைவார்த்து கர்த்தனே காவெனத் தொழுது கண்ணீர்பெருக அழுது எனக்கும் வர லாமா பழுது யாருமில்லையாகழுது என்றச்சப்பட்டு வுணர்வு கெட்டு துக்கம் மேலிட்டு கக்கசத்துக்குட்பட்டு கோரக்கனுக் குப் பயப்பட்டு பலபல எண்ணமிட்டுக் கொண்டிருக்குந் தறு வாயில், கோரக்கர் வந்ததும் ராமானந்த ஸ்வாமிகள் பயந் ததும் மாணாக்கரோடினதும் ஸ்வாமிகள் வாடினதும் பக வானை நாடினதும் பிரஜைகளங்கு கூடினதுங் கேள்விபட்ட கபீர் பட்டுநூற் பந்துகள் கையுடன் ராமானந்த ஸ்வாமிகளை தேடி காலடி புட்டத்திற் படும்படியாயோடி ஸ்வாமிகளை நாடி கோரக்கனென்பவன் பேடி நீரேன் நைந்தீர் வாடி உமக்கா யாசம் வரச்செய்யும் ஜீவர்களையும் தேவர்களையும் மூவர்களை யும் மற்றியாவர்களையும் வெல்லுவேன் எதிர்த்தாற் கொல்லு வேன் என்றுற்பரித்து சிரித்து அந்தணரைத் தூஷித்து ஆரியரைப் பூஷித்து ஆதித்தனைப்போற் பிரகாசித்து கோர க்கன்மேற் துவேஷித்து தேசிகர் பாதங்களிற் பணிந்து திவ்விய வட்சிகளையணிந்து சற்றே கோபந் தணிந்து எழு ந்து கரங்களைக் கூப்பிக்கொண்டு நின்று ஓ என்னாண்டவனே! ஆனந்தத் தாண்டவனே! ஏனழுகிறீர் யாரைத் தொழுகிறீர் இந்தக் கோரக்கனென்பவ னெமக்கெம்மாத்திரம் என்னைச் செயிக்க அவனப்பனாலு மாகாததாம், அடியேன் சொல்லும்

வார்த்தை ஸ்திரம், உமக்கே னிவ்வளவு உபத்திரவம், என் தலைமேற் கருணையுடன் வைப்பீருமதுகரம், அவன்கழுத்தை கொய்யத் தாரகநாமமே அரம், இப்பொழுதே கொய்துவிடு கிறே னவன்சிரம் உமதருளா லடியேற் கிருக்கிறதவ்வளவு உரம், சிவன் நகைக்க எரிந்ததையாழுப்புரம், நீர் நினைத்தாற் சேர்வானிவனெமபுரம், கோரக்கனைக் கொல்லச் சீக்கிரந்தா ரும்வரம், தேவரீரழுதால் போகாதோ நமது பரம், காற்றி னுற் சலிப்பதுமுண்டோ அம்பரம் என்கிற வார்த்தைகளா டும்போது,

இராமானந்த ஸ்வாமிகள் அடடா நீயேனிந்த வேளை யில்வந்து தொந்தரவு செய்கிருய் அரம் பரம் சிரம் கரம் வரம் என்றுளருகிருய் கோரக்க னெம்மாத்திரமெனக் குளறு கிருய் வெளிப்பட்டேதேனும் வம்புசெய்யப்போகிருய் யானை க்கு முன் பூனை நிற்குமா? அரிமாவை யானை வெல்லுமா? செங்கோலுக்குமுன் சங்கீதஞ் செல்லுமா? புலியை புழுகொ ல்லுமா? அந்தக் கோரக்கன் எரிந்து பொரிந்து முகங்கரிந்து கோபம் விரிந்து வந்திருக்கிருன் அவனை நானே சமாதா னஞ் செய்யவேண்டும் எல்லோரு முய்யவேண்டும், நல்ல தனத்தாற் பொல்லாங்கு நேரிடாது, வந்தனம் புரிவர் சந்த தம் வாழ்வார் சாந்தம் மேலான ஆபரணமாகும், உபாயத்தா லாகிற காரியம் பராக்கிரமத்தாலாகாது, சரணமென்பவர்க்கு மரணமேயில்லை, அபயமென்பவ ரபஜெய மடையார்களாதலா லிவ்விடத்தி லியாதொரு சந்தடிசெய்யாம லுன்னிருப்பிடத் துக்குப்போ ஏனெனின் எட்டியுடன்சேர்ந்த இலவுந் தீப்பட் டதுபோ லுன்னுலெனக்கு மிடர்வரும் மலைமுழுங்குவோனு க்கு கதவோ ரப்பளம்போ லஷ்டசித்தியில் மிகுந்தகோரக்கன் முன் நாமோர் கீடகமேயாகும்.

நரி சந்தைக்குப் போனதுபோல நீ கோரக்கன் கண்முன் போகவேண்டாம் கும்பிடத்தகுந்த குருவோடு வம்புசெய்யலா காது வந்தனஞ் செய்யத் தகுந்தவரை நிந்தை செய்யப்போ காது நீ கொடிய வம்புக்காரனு யிருக்கிருய் எறும்பு வீழ்ந் தாற் காயப்படாது யானை வீழ்ந்தால் மிகவுமிடரும், இழி வுள்ளவர்க்கு ஈனமுமில்லை மானமுமில்லை, அதுபோல் நீ இழிவுக்கும் அழிவுக்கும் பயப்படாக் கடின நெஞ்சுடைய வனு யிருக்கின்ருய் இதை யறிந்தா லக்கோரக்கன் மடத்து

டன் பஸ்பமாக்கிவிடுவான், தன்கொடியை நடுவான் உன்வே லையைப் பார்த்துக்கொண்டு போவென்று திருவாய் மலர்ந்தரு ளும்போது,

கபீர் ஸ்வாமிகளின் திருவடிகளிற் சிரசாஷ்டாங்கமாய் வீழ்ந்து பலதரந்தாழ்ந்து ஓ ஸ்வாமி! தங்களுக்குப் பிரதம சிஷ்யனுகிய நானிருக்கும்போது இந்தக் கோரக்கனைச் சொற்பமாயெண்ணுமல் சமானமாக நினைக்கலாமா பணியப்போமோ? இன்னுஞ் சற்றுநேரத்தில் இக்காசியிலுள்ளோர் சிரிக்கவும், கோரக்கனுடைய வஸ்துக்களைப் பறிக்கவும், சகலருமவனுடன் வாதுசெய்து மரிக்கவும், அவன் கந்தையை யில்லாமற் பிரிக்கவும், அவனுக்குள்ளுயின் றோலையுரிக்கவும், எலும் புகளையெல்லா மொருங்கே முறிக்கவும், பஸ்பமாய்ப்போக எரிக்கவும், தேவரீர் நாமதேயத்தைக் கேட்டாலவன் நெஞ் சங்கரிக்கவும், அவன்றேல் தசை குட ரெங்கணுந்தெறிக்கவும் செய்யத் தங்களடியேனிருக்கவும் தேவரீரவனை ஓரற்பமாகவுஞ் சொற்பமாகவு மெண்ணுமல் விற்பன சாலியென்று குப்புறவிழப் போகிறீர் வேண்டாம் வேண்டாம் அடியேன் வார்த்தை சத்தியமென்று நம்பும், என்னுல் வராதோர் வம்பும் என்றடிகளைத் தழுவி கண்ணீராற் கழுவி ஓ வெனதையனே! மிகவுந் துய்யனே! அழிவில்லா மெய்யனே! அழகான கையனே! எனத் தோத்திரம் புரியும்போது இராமானந்த ஸ்வாமிகள் கடுங்கோப மடைந்து துன்பம் மேலிட்டிடைந்து அடா யென்னைக் கெடுக்கவந்த துடுக்கப் பயலே! நீயிவ் வேளையி லெங்கிருந்து வந்தாய், எனக்கிடரேன் தந்தாய், கோரக்கனுக்கிருக்குஞ் சாமர்த்தியத்தி லாயிரத்தி லோர்பங்கு இவ்வுலகில் யார்க்கு மில்லவேயில்லை, கேளடா யென் சொல்லை, நீ யிங்குவந்ததே தொல்லை, உனை வேண்டிக்கொள்ள வில்லை, நீயெனக் குகந்தவனேயல்லை, உன் தலைமேற் போடட்டுமாகல்லை, உடைக்கிறேன் பாருன் பல்லை, நீ சும்மாய்ப் போகிறவனுகக் காணவில்லை. குருடனுற் காக்கக் கூடுமோ கொல்லை என்று கடுகடுத்துப் பேசியுங் கேட்காத கபீரைப்பார்த்து கரங்களைச் சேர்த்து அடப்பா வுனக்கு வந்தனமாவது செய்கிறேன் இவ்விடம்விட்டுப் பேறு, உன்னிருப்பிடத்தைச் சேறு, வீணுயென்னுடன் சண்டைசெய்யாதே, கழுத்தைக் கொய்யாதே அந்தக் கோரக்கசித்தன் அயோனி சம்பந்தன்,

ஈசனை டெதிர்த்தவன், நவ சித்தர்களிலும் மேலானவன் அஷ்ட சித்திகளிலுந் தேர்ந்தவன் என்றுரைக்கும்போது,

கபீர் இராமானந்த ஸ்வாமிகளைச் சூழ்ந்து பலதரம்தாழ்ந்து பாதங்களின்மேல் வீழ்ந்து கோரக்கனைத் துக்கஸாகரத்தி லாழ்ந்துபோகச் செய்கிறேன் இப்போதே கண்டங்கண்டமாய்க் கொய்கிறேனென்று வெளிப்பட்டு ஜனநெருக்கத்தாலரைபட்டு கோரக்கனருகே சென்று எதிர்த்து நின்று அடா கோரக்கா! உன்னுடைய காரடி வித்தைக ளெல்லாம் எனது சத்குரு நாதனாகிய இராமானந்த ஸ்வாமிகளின் முன் செல்லாது, சிம்மத்தை யானை வெல்லாது, நீ வந்தவேளை பொல்லாது, சீக்கிரமோடிப் போ நில்லாது, உன்னுடைய சித்து வித்தைகளைக் காட்டவாவந்தாய் வீண் சம்பத்தை நீட்டவாவந்தாய், யாரை யிங்கே ஆட்டவந்தாய் கலகமா மூட்ட வந்தாய் நீயென்ன உன் திராணியென்ன என்னையறியாயோ உன்னை வெல்பவனெனக் குறியாயோ வென்றுரைக்கும்போது,

கோரக்கன் ஆரடா! அவன் பினத்துகிறவன் தபோநிதிகளுக்கெல்லா மதிபதியான கோரக்கனை யறிவாயோ என்னை யெதிர்த்து மிவ்வுலகி லுயிருட னுறுவாயோ முகத்தைக் காட்டாம லொளிந்து பேசுவானேன், பேசி யேசுவானேன், சீக்கிரமென்முன் வருகிறாயா சாபம் பெறுகிறாயாவென் றிறைச்சலிட்டுப் பேசும் கோரக்கனை,

கபீர் நோக்கி அடா மூடா! குடிகேடா! நீயென்னெதிரில் வாடா! நீயெனக்கொரு சோடா! நான் இராமானந்த ஸ்வாமிகளின் சிஷனுக்குப், உன்னைப்போன்ற மூடர்களை கீழாக்கும், எதிர்த்துப் பேசுவோரைப் பாழாக்கும், சிதலைப் போலுன்னித் தேய்க்கும், இவ்வுலகிலில்லாமல் நீக்கும், எமலோகத்திற் சேர்க்கும், தபசிகளின் றுயரத்தைத் தீர்க்கும், இராமானந்த ஸ்வாமிகட்குக் கரங்களைச் சேர்க்கும், உன்னை யோர் கொசுவாய்ப் பார்க்கும், அபயமென்றவரைக் கார்க்கும், கபீரென்பவனே நான் பினத்துகிறாயேன் என்றுரைக்கும் மொழிகள் நாராசங்களைப்போற் செவியிற் புகுந்த மாத்திரத்தில் கோரக்கன் கோபதீப்தனா யெரிந்துவிழுந்து உதட்டை மடித்து பற்களை நறநறவெனக் கடித்து ஈன வார்த்தைகள் படித்து இக்காசியைப் பஸ்பமாயெரித்து விடுகிறேனென்று ஆர்ப்பரிக்கும்போது, பிரஜைகளெல்லாம் கபீர்மே லெரிந்து

விழுந்து அடா கபீர் தான்கெட்டகுரங்குவனத்தையெல்லாங் கெடுத்ததுபோல நீ நாசமாவதன்றி இக்காசிதேசத்தை நாச மாக்கவா யோசித்தாய் ஒளிந்து பேசுவானேன் கரங்களை வீசு வானேன் எதிரில்நின்று கற்றகவியைக் காட்டடாவென்று தலைமேற்குட்டி அதட்டி கோரக்கநாதனுக்கெதிரில் நிறுத்தி இவன்தான் உம்முடன் அதிகபிரசங்கமாய் பேசினவனெனக் காட்ட, கோரக்கன் அடா நீதானு செய்தாய் இவ்வளவு குறு ம்பு, சற்றே என் பக்கமாய்த் திரும்பு, நீயெனக்கோர் துரு ம்பு, நசுக்கச் சிறிய யெறும்பு, மெல்லுங் கரும்பு, பறக்குந் துரும்பு, மல்லிகையு னரும்பு, நீயாவாயா எனக்கிணையான யிரும்பு என்றரற்ற,

கபீர் அடா துன்மார்க்கா! அறிவில்லா மூர்க்கா! சாந் தர்களியாருஞ் சேர்க்கா! அருட்கண்ணுற் பார்க்கா! தஞ்ஞான த்தைத் தீர்க்கா! தகங்காரத்தைப் போக்கா! தெப்படியானுய் சாது சீக்கிரமாக ஒது யாருடன் செய்யவந்தாய் வாது, என் பால் நடக்காதுன் சூது, இப்படி செய்தலுனக்குத்தீது, நீ யறிவில்லா மாது, ராமானந்த ஸ்வாமிகளையனுப்ப வந்த தூது, உன்னைக்கொண்டு போகிறே னெமலோகத்துக் கிப் போது உனைக் கொல்வதாற் றப்பேது இனி நீ தப்பிப்போ கும் வகையேது, சூலத்தால் மோதினுலும் மோது ஒன்று மூன்னுலாகாது, இவ்வள வகங்காரமாகாது, ராமானந்த ஸ்வாமிகள் சாபம் வீணுய்ப்போகாது, இனி நீதப்புவதில்லை சாகாது என்றறைந்ததைக் கேட்ட ராமானந்த ஸ்வாமிகள் அடா துலுக்கப்பயலே! நானெப்போதடா சாபமிட்டேன் வீணுய்க் கோரக்க நாதருக் கோப மூட்டுகிருய் சகலரையும் வாட்டுகிருய் அறிவீனத்தைக் காட்டுகிருய் அடிக்கடி கைகளை நீட்டுகிருய் என்றுரைத்துக் கொண்டே வெளிப்பட்டு கோர க்க நாதருக்குத் தெண்டனிட்டுப் போகையில்,

கபீர் ஒ ஸ்வாமி! எனக்கு மாணுக்கனுகிய இந்தக் கோரக் கனுக்கு நீர் வந்தனஞ் செய்யக்கூடுமா வென்று மறுக்க ராமா னந்த சுவாமிகள் மிகவும் முனிவுகொண்டு கபீரை எட்டியுதை த்து ஒகோ பாவி வீணுய்க் கலகம்மூட்ட நினைத்தாயே வந்த னம் புரிகிறதைத் தடுத்தாயே என்று நவிலும்போது, கபீர் ராமானந்த ஸ்வாமிகளின் திருவடிகளில் வந்தனஞ்செய்து கோரக்கனிருக்கும் சூலத்தி லறைந்து கீழ் விழும்படியாய்ச்

செய்து தன்கையிலிருக்கும் பட்டு நூற்பந்தின் மேனுனியைப் பூமியிற் ருங்கவைத்து பந்தை ஆகாயத்திலெறிந்து ஜெ ராமானந்த ஸ்வாமியென்று கீழ்மே லாதாரமில்லாமல் நூல்வழியா யேறி ஆகாயத்திற் சென்று நூலின் முனைமேல் நின்று அடா கோரக்கா கீழே யென்னசெய்கிருய் யாரை வைகிருய் இப்போதே என்னுல் நைகிருய் என்னைவெல்ல உனக்குத் திராணி இருக்குமாயின் எனக்கு நேரில்வந் துட்காரும் என்னைச் சோதித்துப்பாரும் வாதித்துப்பாரும் எதோ கைகொட்டித் தாரும் சீக்கிரமாக வாரும் எனக்குக் கோபம்மீறும் உன் பிராணன் எமனுலகைச் சேரும் ராமானந்த ஸ்வாமிகளி ஞசீர்வாதப் பலனைப் பாரும் அவரடிகளி லுனது தலையைச் சேரும் என்னவரம் வேண்டுமோ கோரும் இல்லாவிடி லிடர்வந்து நேரும் இப்போதே எல்லாருஞ் செய்வார் தாறுமாறும் உன்சமர்த்தைக் காட்டினதுபோதும் உனக்குதவியார் வருபவரில்லை ஸ்வாமிகளன்றி யாருமில்லைக் காப்பாரும் என்று சொல்கிறதைக்கேட்ட,

கோரக்கன் தனக்கவ்வளவு சத்தியிருந்தும் அஷ்டசித்திகள் தெரிந்தும் கபீர்செய்த ஆச்சரியத்தைக்கண்டு மாச்சரியங்கொணடு வெட்கி சுட்கி வேறுவிதத்தா லிக்கபீரை வெல்லவேண்டுமென் ருேசித்து ஓ கபீர் ஆகாயத்திற் றனித்துப் பிரசங்கஞ் செய்வதாற் ருேப்பு கெலிப்பு யாரறியப் போகிருர்கள் கீழேவந்துன் சமர்த்தைக் காட்டென் றுரைக்க கபீர் மேல்வருவதற்குச் சக்தியில்லாமல் கீழேவரச் சொல்கின்ருயோ நல்லதப்படியே யாகட்டுமென் றிரங்கிவந்து ஸ்வாமிகட்கு வந்தனந்தந்து அஞ்சலியஸ்தனுய் நிற்க, கோரக்கன் அடா கபீர் என்னை வெல்லுதற் குன்னுற் கூடுமோவென்று ராமானந்த ஸ்வாமிகளின் ரூபமெடுத்து நிற்க, அதையறிந்த சகலருந் திடுக்கிட்டு இதேதிரண்டு ராமானந்த ஸ்வாமிகளிருக்கின்ருரென வதிசயமாய் பார்க்கையில், ராமானந்த ஸ்வாமிகள் பயவாழியி லாழ்ந்திந்த கோரக்கனென்ன விபரீதஞ்செய்வானே இன்று என்னென்ன துன்பப்படப் போகின்றதோ, இவனை வெல்லச் சிறுவனுகிய கபீராலாகுமா ஆகாதே நாமின்ருேடு நசித்துப் போகும்படியாய் நேரிட்டதே இனியென்ன செய்வேன் ஓ கர்த்தனே! ஓ பகவானே! இந்தக் கோரக்கனை வெல்லும்படியான வலிமையை இக்கபீ

ருக்களித்து என்னையு மிக்காசியையும் இரட்சியும் ஸ்வாமி யென்று தோத்திரஞ் செய்துக்கொண்டிருக்கையில் கபீருக்கு அளவற்ற தைரியமும் வலிமையும் மூன்விட எண்மடங் கதி கப்பட்டு சத்குரு நாதனுக்குத் தெண்டனிட்டு ராமானந்த ஸ்வாமிகளைப்போல ரூபமெடுத்து நிற்கும் கோரக்கனை நோக்கி, அடா கோரக்கா! என்னுடைய உருவைச் சற்றே பாரென்று மச்சேந்தர நாத ரூபமெடுத்து நிற்க, கோரக்கன் அடா! கபீர்! நீதொழுந் தெய்வமாகிய விஷ்ணுவே நானுயிருக்க என்னை யுன்னால் வெல்லக்கூடாதென்று பகவானுருவுடன் நின்று உன்னையு முன்னுசாமியு மிச்சக்கரத்தால் துண்டந் துண்டமாய்க் கண்டித்து விடுகிறேனென் ரூர்ப்பரித் தட்டகாசஞ் செய்கையில் கபீர் அடா கோரக்கா! உன் மாயாவித்தைகளைக் காட்டாதேயென் றானுருவாய் நீயேத்தும் ருத்திரனே நானென் றறியென்று உற்று நோக்கி இப்பாசுபதாஸ்திரத்தா லுன்னைக் கண்டங்கண்டமாய்த் துண்டித்து விடுகிறேனென்னண்டையில் வாவென் றறையும்போது கோரக்கன் சிங்கரூபமாய்க் கர்ச்சிக்கையில் கபீர் யாளிரூபமாய்ச் சிங்கத்தினருகிற் செல்ல கோரக்கன் அக்கினிச் சுவாலையை வீசியாருமருகில் நிற்க ஒட்டாமல் நாலுதிக்கையுந் திகுதிகென்றெரிக்க கபீர் மேகரூபமா யானைத்துதிக்கைபோ லக்கினியைத் தலையெடுக்க வொட்டாமலவித்து கோடிசூரியரைப்போற் பிரகாசித்து கோரக்கனைச் சூழ்ந்துக்கொண்டு கிரணங்களால் வாட்டும்போது,

கோரக்கன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள சக்தியற்று பரதவித்து ஓ ராமானந்த ஸ்வாமி! உமக் கபயமபயமென்று முறையிடக் கேட்ட பிரஜைகளும் ராமானந்த சுவாமிகளும் ஓஓ இனி இக்காசிதேசம் பஸ்பமாகும் காலம் நேரிட்டதெனத் தத்தளிக்கும்போது கபீர் நானே ஜெயித்தேன் ஜெயித்தேனென்று சுவாலையைக் குறைத்து அடா கோரக்கா இப்போதென்ன உரைக்கின்றாயடா யென்று வினுவ கோரக்கனென்பவனயர்ந்து ராமானந்த ஸ்வாமிகளி னருகிற் சென்றெனைக் காப்பாற்றுமையாவென்று வணங்க கபீர் தன் சுயரூபத்துடன் தேசிகரருகிற்போய் சிரசாஷ்டாங்கமாய்த் தெண்டனிட்டெழுந்து, ஓ ஸ்வாமி தேவரீர் கட்டளையிட்டா லிக்கணமிக் கோரக்கனை பஸ்பமா யெரித்து விடுகிறேனென்று சாற்ற

கோரக்கன் மடத்துட் பிரவேசித் தென்னை வேறு விதத்தில் வென்ருலொழிய ஜெயமுன்ன தல்லவென்று நவில கபீர் இனி எவ்வித தர்க்கஞ் செய்யலாமென் றறைய அப்போது ராமானந்த ஸ்வாமிகள் கபீரைக்கிட்டி * இருகரங்களாலுங் கட்டி யணைத்துக்கொண்டு சுகஜீவியாய் வாழக்கடாவாவென்று விண்டு எங்களனைவோரை காத்திரட்சித்ததற் கென்ன கைம்மாறு செய்யப்போகிருே மெனப் புகழ்ந்து குருவை நம்பின பெரியோர்கட் கருமையான காரியமு மிருக்கின்றதா? உனதரிதான தவத்தை யறியாமல் கோரக்கனை வெல்லுவாயென்று குறியாமல் துன்பத்திலிருந்து பிரியாமல் அகோ தெரியாமல் இடர்வாரியி லமிழ்ந்திருந்தே னென்று பல பல வார்த்தைக ளாடும்போது.

காசி தேசத்திலுள்ள சகலரும் கபீர் செய்தது விந்தை விந்தையென்றறைந்து ஜெய ஜெய கபீர் கபீரென் றிரைந்து புஷ்பங்களைச் சொரிந்து மிகவும் பரிந்து பல பல விதங்களாய்க் கொண்டாடி ஆனந்தமான கீர்த்தனங்களைப் பாடி கோரக்கனென்பவனைத் திட்டவும் பலருஞ் சூழ்ந் ததட்டவும் தொடங்கினுர்கள். அப்போது ராமானந்த ஸ்வாமிகள் அனைவரையும்விலக்கி இருவரையும் மடத்துட்கொண்டுபோய் ஓகோரக்கநாதரே! மிகவும் விஞைதரே! இந்தக் கபீரென்சொந்த மாணுக்கனுகும் உம்மாலிவனை வெல்லக்கூடுமானு லெவ் விஷயத்திலுந் தர்க்கஞ் செய்யலாமெனத் திருவாய்மலர்ந்தருள, கோரக்கன் கபீரை நோக்கி உனக்கு வயதென்னவென, கபீர் அனேகங்கோடி பிர்மதேவர்களும் அளவற்ற விஷ்ணுக்களும் கோடி கோடி ருத்திரர்களும் என்முன் னிறந்துவிட்டார்களாதலால் என்னுயுட் பிரமாணத்தை உன்னுல் அறியக் கூடுமோவென,

கோரக்கன் அனேகந்தர மிக்காசிக்கு வந்தேன் நீயெங்கிருந்தாயென, கபீர் உன்னை நீயே யறியாமல் மறதியாயிருக்க என்னை நீ யறியக் கூடுமா? சத்யக்ஞானனந்த சொரூபமாகிய பரமாத்மாவே நானுகும், இம்மாட்சியான சூட்சுமமறியா நீ தாட்சியடையாமல் மோட்ச மடைவாயோவன்றி இம்மலவுடலை நானென்றிருமாந் தனேகநாள் வைத்திருப்பதாற் பெரியவ னுனயோவென, கோரக்கன் என்று மிவ்வாக்கை யழியாமல் வைத்திருக்கும் வித்தையே பிரமவித்தை மற்ற வித்தைக

ளெல்லாஞ் சொத்தையும் வித்தையுமல்லவோ ஆதலாலிச்சரீ ரத்தை எத்தனை நாளாய்ச் சித்திசெய்து வைத்திருக்கின்ரு யென, கபீர் நகைத்து பிறந்தவர்க்கே இறந்துபோந் தன்மை யுண்டு பிறக்காதவர்கள் இறத்தலுண்டோ எக்காலத்திலும் ஜன்மமில்லா வெனக்கு மரணமேது, மரணமில்லாத வென க்கு உற்பவமேது, இம்மொழியின் இரகசியத்தை யறிந்தவர் களுக்கே பிரமவித்தை தெரியுமல்லாது மற்றவர்களா லுணர் தற்கரிதென, கோரக்கன் ஆக்கையை அழியாமல் வைத்திரு ப்பதே பிரமவித்தை யல்லாமல் வேறுவித்தை பிரமவித்தைக ளாகமாட்டாதன்றி பிரத்தியட்சமா யுற்பவித்திருக்கும் நீஜென் மிக்க வில்லையென்ப தபத்தமல்லவோவென,

கபீர் பிர்ம்மத்தை யுணர்தலே பிரமவித்தை யெனச்சொல் லப்படுங் காயத்தைக்காத்தலே அவித்தையென் றுரைக்கப் படும் பிரம்மமாத்திரமா யிருப்பவனுக்கு ஜனனமரணந் திரி காலங்களிலுமில்லை இதை யஞ்ஞானிகளா லறியக்கூடியதல் லவென கோரக்கன் யோகதாரணையா லிக்காயசித்தி செய்து நெடுநாள் பிர்மநிஷ்டா சாதனஞ் செய்தாலல்லவோ பிரம மாகலாம் அனித்திய தேகத்தால் மோட்ச சாதனஞ் செய்யக் கூடுமோ பிர்மமாகக் கூடுமோ வாசாக் ஞானத்தால் நான் பிர்மமென்றறைவதால் அப்படியிருக்கும் சமயத்தில் பிர்ம மிவனுய்ப் போவானோ சிறந்த பிர்மக் ஞானிகளாற் சித்திகளை க்காட்டக் கூடுமோவென, கபீர் மலவுடல் முக்காலங்களிலும் நித்தியமே பிர்மம் எப்போதும் நித்தியமேயாம் தேகம் மூன் றுகாலங்களிலுந் தானல்லவேயாம் பிர்மந் திரிகாலங்களிலுந் தானேயாம் தேகாதிகளைத் தானெனப் பிரமித்தல் மாயா சம் பந்தமாகும் பரப்பிர்மமே தானெனத்தெளிதல் பிர்மானந்த மாகும், பரப் பிர்மத்தை நோக்கித் தவஞ் சேய்வோர்க்கே அனேக சித்திகள் விளங்குமாயின் பிர்மமே தாஞயிருப்பவர் கள்பால் சித்திகளுண்டாகாமற் போகுமா ஆனல் அகமம தையற்றவர்க ளொருவல்லமையுங் காட்டமாட்டார்க ளவர்க ளகமுகப்பட் டானந்தமாத்திரமா யிருந்தாலு மவர்களறியா மலே யனேக சித்திகள் விளங்கு மிதை யொருவரால் வகுத் துரைக்கக் கூடியதோவென, கோரக்கன் யோகதாரணையின்றி பிர்மக் ஞானியாதல் வெகு துர்லபம் பிர்மமாவது லேசான தோவென,

கபீர் குருமுகமானவன்றே பிர்மமென் றுணர்ந்துகொண்டு மௌனமா யிருத்தலே பிர்மமா யிருக்கும் வகையன்றி வேறு சாதனைசெய்யக் காரணமில்லையென், கோரக்கன் குருமுகத்தால் தான் பிர்மமென்றுபதேசஞ் செய்துக்கொண்டதால் பிர்மமாய்ப்போவானோவென, கபீர் குருமுகமாகாமுன்னும் பிரமமேயாம், ஆனபின்னும் பிர்மமேயாம் இத்தேகமிருந்தும் பிரேதமேயாம், மரித்தும் பிரேதமேயாம், எங்ஙனமெனின் பூமியை வெட்டுதற்கு முன்னும் ஆகாயமிருந்தது வெட்டினபின்னு மாகாயமே யிருந்ததன்றி அகழ்ந்தபின் ககனமுண்டாயிற் றென்பாருண்டா அன்றி பாத்திரமுடையாம விருக்கும்போதும் மண்ணேயாம், நொறுக்கின பின்னும் மண்ணேயாம் இதை யொருவர் சொல்லவேண்டுமோ பிரம சொரூபமான தன்னை இதுவென் றறிவித்தலே அனுக்கிரகமாக்கும் பிரமனே நானென்ப தெதாவஸ்து வென்றுணர்ந்து கொள்ளுதலே பிரமஞானமாகும் இதிற் சந்தேகஞ் சற்றுமில்லையென, கோரக்கன் தான் பிர்மமென்றறிந்துகொள்வதாற் பிரயோசனமேதென, கபீர்தான் பிர்மமென் றறிந்துகொள்வதால் மரணமுண்டென்கிற காலபயமும் சமுசார சாகரத்தால் வருகிற அபஜயமும் சித்திகளால் வருகிற நயமும் ஜெயமுண்டென்கிற பயமும் நரகவேதனை யென்கிற சமஸ்த குறைகளும் மனோவிகற்பங்களும் மானாபிமானங்களும் காமக்குரோதாதி சேஷ்டைகளும் யோகதாரணை முதலான வேஷ்டைகளுமில்லாமல் மௌனமாய் ஆனந்தசாகரமாய் களித்திருப்பதே பயனென கோரக்கன் என்றைக்கு மித்தேகத்தை யழியாமல் வைத்திருப்பதாற் பிரயோசன மில்லையோவென,

கபீர் மலவுடலை மரிக்காமல் வைத்திருப்பதா லித்தனுமோட்சமடையப் போகின்றதா அன்றி பிர்மாதி தேவர்களுக்கு மாயுட்பிரமாண மிருக்கையில் நீ செய் யோகத்தா லாக்கை மண்ணாகாமலிருக்குமா ஞானமில்லா யோகத்தாலோர் பிரயோசனமு மில்லவேயில்லையென, கோரக்கன் யோகப்பயிற்சியால் சரமண்டலமாதி நாதங்களைக்கேட் டுல்லாசமடைந்து சோதியைக்கண் டுடலம் பூரித்து நாதாந்தவசமா யிருப்பதன்றி கூடுவிட்டுக்கூடுபாய்தல் முதலான அஷ்டசித்திகளைப்பெற்று ஆனந்தமா யிருக்கலாமேயென,

அதற்கு கபீர் சொல்லும் பாடல்.

நாதகீதவோசைகேட்டு நாதனுனேநவிலுவாய்
சோதிதன்னைபேதமின்றி தூயதென்றறிபவன்
ஏதமின்றியார்கோனீ யிசைந்திடென் றுரைக்கவப்
போதமுற்றமாதவர்க்குப் புன்மையாகுமியோகமே. 1

நாதநாதங்கேட்குநாத னவிவினிதிரண்டலோ
சோதிசோதிதன்னையறியுஞ் சோதியீதிரண்டலோ
பேதமாயினீதிபேத போதமாவதெங்ஙனிச்
சூதரிந்துகொள்ளுவாயெ னச்சொல்லிப்பின் மாதவன். 2

உலகமித்தையாயினுலக மெச்சும்வித்தைகற்பதேன்
உலகமித்தையாயினுலக மேவல்செய்யநினைவதேன்
உலகமித்தையாயினுலக வாழ்வைவேண்டிவாடலேன்
உலகமித்தையாயினுடல மழிவுறாதயோகமேன். 3

கூடுவிட்டுக்கூடுபாயின் விட்டுக்கூடுபோன்றதக்
கூடலாதுவேறதோநீ கூறுபிராணநீங்கியோர்
கூடுவிட்டுக்கூடுசேர்வ தன்றிகூடெடுத்திடா
வீடுசேர்வதுள்ளதோ விளம்பிடென்றுகூறினான். 4

மருந்தையுண்டுநோய்கடம்மை மாய்ப்பரிச்சகந்தனில்
மருந்தையுண்டுநோயைவேண்டு வார்கள்போலநீயேனோ
பெருந்தவர்கள்செய்துதேக பிணியைமாய்ப்பர்மாதவர்
பெருந்தவங்கள்செய்துதேக பிணிவளர்க்கவேண்டினாய். 5

அருந்தவங்கள்செய்வருலக மாள்வதற்குமானிடர்போல்
அருந்தவங்கள்செய்துவறுமை யடையவேண்டினோர்கள்
அருந்தவங்கள்செல்வர்நா னெனுமகந்தைநீங்கிட
அருந்தவங்கள்செய்துநீ யகந்தைவேண்டியலைகிறாய். 6

வேறு.

ஞானமின்றியவில்லறமருண்ஞானமின்றியதுறவறம்
ஞானமின்றியகல்வியுமுயர்ஞானமின்றியசெல்வமும
ஞானமின்றியசரிதையும்மிகுஞானமின்றியகிரியையும்
ஞானமின்றியவஷ்டசித்தியும்ஞாயமாவன்னியாயமே. 7

ஞானமின்றியயோகமும்பரஞானமின்றியயாகமும்
ஞானமின்றியதியாகமுஞ்சயஞானமின்றியபுந்தியும்
ஞானமின்றியஞானமுஞ்சுசிஞானமின்றியதியானமும்
ஞானமின்றியநற்றவங்களும்ஞானமாவன்னியாயமே. 8

ஞானமின்றியபுத்தியுமெழில்ஞானமின்றியபக்தியும்
ஞானமின்றியசித்தியுஞ்சுகஞானமின்றியவிந்தையும்
ஞானமின்றியசுத்தியுஞ்சுயஞானமின்றியமுத்தியும்
ஞானமின்றியகற்செயங்களும்ஞாயமாவன்னியாயமே. 9

ஞானமின்றியசிரவணந்தெருள்ஞானமின்றியமனனமும்
ஞானமின்றியதெளிவுடன்முடிஞானமின்றியநிஷ்டையும்
ஞானமின்றியமோனமுஞ்சுடர்ஞானமின்றியவானமும்
ஞானமின்றியசாத்திரங்களும்ஞாயமாவன்னியாயமே. 10

என்றிவ்வண்ணமா யுரைத்து ஓ கோரக்கநாதரே! பிர்மக்ஞானிகள் சர்வம் பிர்மமயமாய்ப் பார்த்து தம்மையறிந்தவர்கட்கே கரங்களைச் சேர்த்து அகம்பாவம் வராமற்காத்து சர்வ சந்தேகங்களையும் பேர்த்து சின்மயமாய்த் தேஜோமயமாய் சித்களானந்தமா யிருப்பார்களன்றி தேகமே மேலானதென குமாரசுவாமிகளுடன் அத்திரி, ஆங்கீரசன், சிருங்கி, பிருங்கி, மார்க்கண்டன், வசிஷ்டன், புலஸ்தியன் முதலான முனிவர்களிற் சிறந்த அகஸ்தியமுனிவர் பன்னிரெண்டாண்டு வாதித்து, ஞானமே முக்கியமானதென் றறிந்தார். அன்றி ஓர் காலத்தில் பிர்மதேவன் தனதாயுளுக் கிணையானவ ரிவ்வுலகத்தில் யாருமில்லையென் றிருமாப்புற் றரியின் பக்கலடைந் தெனக்கு நிகரான ஆயுட்பெற்றவர்க ளிருக்கிறார்களோ வெனக்கேட்க பகவான் குஞ்சிறிப்புட னறைந்து கவி,

வேறு.

உலகநீபடைத்திடுவையாதலாலுனதுவாயுளுக்கணியிலை
பலயுகங்கணீயுறுவையுன்னுயர்பராக்ரமங்களென்னொருவனுற்
சொலுவதாலொருபயனிலையுனைப்போன்றமேலோரிருப்பிடம்
கலமதாகநாம்போய்வினுவவந்காதருன்புகழ்கூறுவார். 1

என்னவேபிரமனன்னதேசெயவுமெண்ணினன்கலுழன்மேலரி
அன்னமேற்பிரமனூர்ந்துபோயருள்விலாசரோமரிஷிதன்னையே
முன்னமேத்தவம்முனிவிழித்தரியைமுந்திபேத்திகல்லயனையும்
பின்னையேந்திசீர்வந்தகாட்சிகற்பிரமவின்பிணைத்தங்கதே. 2

என்னுமாமுனியைநோக்கிமாதவன்இன்பவீட்டிணையடைந்தவர்
உன்னதாயுளின் அளவிவற்குரைத்தருளவாயெனவுமம்முனி
என்னதாயுளோர்பிரமன் மாய்ந்திடிலெனதுரோமமொன்றென்னகர்
தன்னைவிட்டிதிர்ந்திடுமிவ்வண்ணமேதமியனுக்கைக்கேசங்களே. 3

கோடிமூன்றரையுதிரமூன்றரைக்கோடிபிர்மரும்மாண்டபின்
நாடியேயுனைத்தொழுதுமோக்ஷநாண்ணுமேவனெனவிண்டுவும்
கோடிபிரமருமாளுமட்டுமுன்கூடியிருந்ததுக்கோர்சிறு
விடுகட்டிடாதேதெனச்சொலமேன்மைமாதவனோதுவான். 4

வீடுகட்டியிவ்வுடலைக்காப்பதேவிசிதமாயினேனதையவிக்
கூடுநீர்க்குமிழாமிதற்கொருகூடுவேண்டுவதோவுனை
நாடினோர்களிவ்வாக்கைமேனைகநண்ணுவார்களோபலயுகங்
கூடியிருப்பதாலென்னமேன்மையோகூறுவீர்த்தயவோடாளுவீர். 5

ஆளுவீரெனும்மாமுனிக்கருள்வாக்கியம்பலவியம்பிமா
வேளைதந்தருளாயனார்முனிவிடைகொடுத்தருளென்னவெந்
நாளினுன்றனைக்காண்பனோவெனநைந்திடந்தெழின்முனிபெரு
மாணையேத்திநற்றாளில்வீழ்ந்துபின்மாயனுக்குவிடைதந்தனன். 6

தந்தமேதயரியுமயனுடனருடஷ்டகோணரிஷிவாழ்ந்திடும்
விந்தையானதாமேவவேநலமேன்மைமாதவன்புளகமாய்த்
தந்தையுமகனும்வந்தவாச்சரியமென்னமோதமியனறிகிலேன்
பந்தநீத்தெனையாளுமெந்தையுன்பாதமேகதியென்றனன். 7

பாவமேசெயும்பண்பினேனுனைப்பார்க்கவென்செய்தேன்பாக்கியம்
தேவரீரெனையுன்னுவீரெனிற்றேவர்லோகநாவருவனே
பாவியேனிடந்தேவரீர்வரும்பண்பியாதியானறிவதற்
காவலாகினேனையனேயதையருள்செய்வாயெனக்கண்ணனும். 8

உன்னதாயுளினளவையானறிந்திடவுரைத்திடென்றோதவே
என்னதாயுளின்முடிவுநீயறியாததோவிரைப்பேனினி
என்னதாயுளோவென்னகந்தனிலேயிருந்திடுமஷ்டகூன்
அன்னதானதோநிமிருறும்பொழு தாயுளென்றனுக்கந்தமே. 9

பெத்தக்கூனுனக்கெவணநீங்கிடும்புகலெனச்சொல்லினுன்றனற்
புத்திரர்பலர்மாழ்குமாரெனின்போகும்ரோமரிஷிதன்னுயிர்
சத்தரோமருற்பவமெடுத்திடிற்றமியனேனுனதுகருணையால்
சுத்தபிர்மவுருவாயிருப்பனெனத்தூயமாயனிவைசொல்லுவான். 10

பெரியவாயுளைப்படைத்தவாருபேதவேதையையுடைத்தவா
பிரமமோருருவானவாவருட்பேறெனும்பொருளானவா
சருமமாகுமித்தேகமோடுநீர்தரணிதன்னிலுற்றிடுமள
வொருமையாகவோர்பர்ணசாலையிலுகந்திருத்தியென்றோதவே. 11

நீரின்மேலெழுத்தாகுமிவ்வுடலனித்யமென்றிதற்கிதமதாய்ப்
பாரின்மீதிலோர்பர்ணசாலையைப்பண்ணவேயடியனெண்ணினால்
நீசெலாவுயிரைக்காத்திடுங்கடனிச்சயமிலாதாகுமே
தாரமார்பனேமேகவண்ணனேசங்குசக்ரனேயென்றுபின். 12

உடலைநானெனவுன்னியேயிதையொருமையோடுநான் காத்திடின்
மடமைநீங்குமோவென்னதாயுளோர்மாதரையேலதுபெரியதோ
சடமதாகுமிவ்வாக்கைநானெனச்சாற்றினேபிரமநானெனத்
திடமதாயிருப்பானென்றோதிய தீக்கையைமறப்பாக்குமே. 13

நானெனுமகமுடையபேர்க்கிருணரகமின்றியருள்வாய்க்குமோ
தீனரேத்திடுஞானவாதவாதேவதேவமிருமாதவா
ஞானமென்பதற்குரையகந்தனைநாஸ்திசெய்தலென்றோதினை
யானதாலுடற்கிடமியற்றிலேனையனேவெனவுரைத்தனன். 14

உரைத்திடுமிகவாயுளுள்ளமாமுனிவனுக்குபசாரமாம்
பரத்தைமேவிடும்மோனவார்த்தைகள்பலவுரைத்தரிமுனிவனே
இருத்தியிவ்விடம்போவநாமெனவிசைக்கமாமுனியுமின்னமோர்
தரத்திலுங்களைக்காண்பதென்றெனச்சரணமாயிரஞ்செய்தனன். 15

சரணமாயிரஞ்செய்தபின்னர்போமென்றுசாற்றவேமாயவன்
கரணமற்றவாபுரணமற்றவர்காட்சிபெற்றுருடாட்சியா
பரணமற்றவாமரணமற்றவாபத்தியோடுநற்சித்தியா
பரணமற்றவாயிங்கிருத்தியேலென்றுதம்பதஞ்சேர்ந்தரோ. 16

சேர்ந்துநாரணனயனைநோக்கினன்றேவதேவனென்றுங்களி
கூர்ந்தெனக்கிணையாயுளுள்ளபேர்கூழினில்லையென்றோதினுப்
தேர்ந்துஞானமுற்றதுவுமின்றருள்சேர்ந்ததுமடியார்களை
சார்ந்துமின்பமுற்றதுவுநீமுனஞ்செய்தபோபலமென்றனன். 17

வேறு.

நானெனுமகங்காரத்தாற் பாணிலைநண்ணினர்யார்
நானெனுமகங்காரத்தா னன்பினைநண்ணினர்யார்
நானெனுமகங்காரத்தா னரகத்தையடைந்தாரன்றி
நானெனுமகங்காரத்தா னல்லுணர்வடைந்தாருண்டோ. 18

அகமதைவிடுவாயென்றே யரிசொலவயனுந்தாழ்ந்தென்
னகமதைநீக்கியாண்டவண்ணலேநின்றூற்றாய
புகழுடனருளும்பெற்றே புராதனர்சேவைபெற்றேன்
இகபரத்திச்சையற்றே னின்பவீடடைந்தேனென்றான். 19

ஆகலாற்கோரக்காநீ யகந்தனையழித்துஞான
மாதபோதனரைப்போற்றி மகிழ்வுடனிருத்தியென்று
போதனைசெய்யப்பின்னும் புகலுவன்சித்தநாதன்
நீதிநீரெனக்குரைத்த னியாயமன்றெனவிசைப்பான். 20

ஓ கபீர் அட்சர லட்சணமுதல் அவஸ்தைப் பிரயோகம் ஈறாகிய ஆகிய 64 கலைகஞானங்களை அறிந்த என்முன் சின்னஞ்சிறுவனாகிய நீ அணடத்தைக் குஞ்சி யேளனம் செய்வ

துபோ லேதேதோ சொல்ல ஆரம்பித்தாய் இது பிரமாவை யெதிர்த்த பிராமணனைப்போ லிருக்கின்ற தென்றாற்ற, கபீர் ஓ கோரக்கனே அறுபத்துநான்கு சித்திகளிற் றேர்ந்த சித்த னென் றுன்மத்த மடையவேண்டாம் ஏனெனி லுன்னைப் போன்ற சகல வித்தைகளிலுந் தேர்ந்த நவகோடி சித்தர்களி ருப்பதன்றி பிர்மசிருஷ்டிக் கெதிர்சிருஷ்டிசெய்யும் அனேக ரிஷீஸ்வரர்களு மிருக்கிறார்களிதை நீ நன்றாயறிந்தவனே முற்காலத்தில் சற்று விஸ்வாமித்திர ரகங்கொண்டதாற்றேவ சபைக்கு வரத் தடைப்பட்டு நெடுநாள் தலைமறைவாயிருக்க நேரிட்டது அன்றியும் பிரமாவானவர் சிருஷ்டிகர்த்தனாயிருந் தும் குற்றஞ்செய்ததா லோர்தலை வெட்டுண்டு அதைச்சிருஷ் டித்துக்கொள்ளத் தன்னாலாகாமற் றாழ்வடைந்தா னாதலாற் பிர்மாதி தேவர்களாயினுங் குற்றஞ் செய்வாராயின் ஜகதீஸ் வரனுடைய ஆக்கினைக் குள்ளாகவேண்டும், குறைசெய்யா தோர்க்கென்றும் பயமில்லை இது வுண்மையான தாதலால் நீமகாசித்தனென்று அகம் மேலிட்டுத் தபோதனர் முதலிய வர்களைப் பங்கப் படுத்திக் கொண்டுவந்த காரணத்தால் குற் றத்துக் குட்பட்டாயிது நிவர்த்தியாகும்பொருட்டெங்களாசா னுக்குப் பனிரெண்டாண்டு பணிவிடை செய்துக்கொண் டிரு வென் றுரைப்பதைக் கேட்ட ராமானந்த ஸ்வாமிகள் கபீரை நோக்கி அப்பா கபீர் நல்லோருக்கு நெல்லெத்தனை ஈனச் சொல்லே மேலான தண்டனையாம் அப்படியிருக்க இப்படி சொல்லலாமா வென்றறைந்ததைக் கேட்ட கோரக்கன் நல்ல தாகட்டும் இக்கபீரைச் சிலநாளில் விசாரித்துக் கொள்ளுவே னென்று மாயமாய் மறைந்து தன்னிருப்பிடஞ் சேர்ந்து கபீரை வெல்லவேண்டுமென்னுங் காஞ்சையால் மகாவுக்கிர மான தபஞ்செய்யத் தொடங்கினான். இங்கே ராமானந்தஸ் வாமிகள் கோரக்கநாதன் கபீருக்கச்சமுற்று மறைந்துபோனு னவனை ஓர் கடிகையிற் செயித்த கபீர் நமக்கு மாணக்கனாயிரு க்க என்னதவஞ் செய்தோமோ ஏதுபாக்கியஞ் செய்தோமோ வென்று கபீரைப் பலதர மாலிங்கனஞ் செய்துக்கொண்டென் கண்மணியே உன்னாலல்லவோ கொடிய கோரக்கனைச் செயித் தேன் ஆசானென்னும் பெயரையும் வகித்தேன் உன்பெரு மை யறியாதிகழ்ந்த என்னறிவீனத்தை க்ஷமித்துக்கொள்ள வேண்டுமென்றிரந்து கூறும்போது கபீர் தேசிகரி னடிகளிற்

றன் முடியைச் சாய்த்து ஓ என் சத்குருநாதனே மெய்ஞ்ஞான போதனே வும்முடைய ஆசீர்வாதபலத்தாற் கோரக்கனை வென்றதன்றி இவ்வேழைக் குழந்தையால் வெல்லக்கூடுமோ உமது மகிமையை நீரறியாமலென்னைப் புகழ்தல் நீதியாகுமா? ஓ எனையாட்கொண்ட தெய்வமே முற்றிலுமென்னை ரட்சித்தருள வேண்டுமெனத் தொழுதேத்தும்போது ராமானந்தஸ்வாமிகள் சந்தோஷசாகரத்தில் மூழ்கினவராய் கபீர் தாய்தந்தையை யழைப்பித்து கபீரகப்பட்டதுமுதற் சகலமுங் கேட்டறிந்து மகாத்மாவெனத்தெரிந்து ஓ தமால் நீசெய்த பாக்கியமே பாக்கியம் உன் மைந்தனுடைய யோக்கியமே யோக்கியம் நான் செய்த சிலாக்கியமே சிலாக்கியம் இவன் வாய்மொழிகளே மகாவாக்கியம் ஆஹா! பன்றி பலகுட்டிகள் போட்டதாற் பிரயோசனமென்ன யானையின்குட்டியொன்றே போதும் பல நட்சத்திரங்களாற் பிரகாசமுண்டாகாது ஒரு சந்திரனாலேயே பிரகாசமுண்டாகும் அதுபோல் உலகத்திலனேக மைந்தர்களைப் பெறுகிறதைப் பார்க்கிலும் இப்பேர்க்கொத்த ஒரு குழவியாற் சகல லாபங்களையும் பெறலாமெனப் புகழ்ந்து மிகவும் மனமகிழ்ந்து ஓர் நிமைநேரமுங் கபீரை மறவாமலிருந்தார். கேட்டீர்களோ சித்தர்களேயென்று பின்னும் நாபாஜி சித்தர் சொல்லத்தொடங்கினர்.

கபீர் கோரக்கரைவென்ற அத்தியாயம் முற்றிற்று.

பத்தாவது அத்தியாயம்.

கபீர் விவாகம்.

இப்பால் தமாலுஞ் ஜிஜ்ஜாபீபியும் ராமானந்த சுவாமிகளின் திருவடிகளிற்பணிந்து விடைபெற்றுக்கொண்டு கபீரை நோக்கி அப்பா புத்திரசிகாமணி வீட்டுக்கு வந்து எங்களைப் புனிதராக்கக் கடவாயென்று நவில கபீர் ராமானந்த ஸ்வாமிகளின் திருவடிகளிற் பணிந்து அடியேனுக்கென்ன கட்டளையென்று அஞ்சலியஸ்தனாய் நிற்க, ஸ்வாமிகள் காலைமாலைவந்து தரிசனந் தந்துபோமென்று திருவாய்மலர்ந்தருள, கபீர் நாம் செய்த பாக்கியமே பாக்கியமென்று சிரசாஷ்

டாங்கமாய் வந்தனைப்புரிந்து மிகவும்பரிந்து தந்தைதாயுடன் போயாசாரியர் கட்டளைப்படி அந்திசந்தி வந்து தேசிகரைத்தாழ்ந்து பல சங்கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டு நாள் கழிக்கத் தொடங்கினர். பின்பு கபீர் பதினாறு வயதை யடையவே பகவான் கபீருக்கு ரம்பாவதாரமான சுந்தராவை பாணிக்கிரகணம் செய்யவேண்டுமென் றுன்னி ஒருநாள் தமால் கனவிலடைந்து ஓ தமால் உனது மைந்தனுக்கு மணஞ்செய்யப் பேசின் சுந்தராவென்னும் பெண்ணின் தாய் தந்தையரை நேசித்து கலியாணகாரியத்தை சீக்கிரம் முடிப்பாயென் றறைந்து மறைந்துபோக உடனே தமால் விழித்து தன் நாயகியை விளித்து அடிபெண்ணே! நமது கான்முளைக்கு வேட்டல் செய்யும்படியாய்க் கடவுளென் கனவில் வந்துரைத்தா ராதலால் முன் நமது தனுசனுக்குத் தங்கள் புத்திரியை யளிக்கின்றோமென வாக்கைக் கொடுத்தவர்கள்பாற் போய்க் கேட்டவர்க ளபிப்பிராய மறிந்துவாவென் றுரைக்க, ஜிஜ்ஜாபீபி மகாபாக்கியமென்று வைகறையி லெழுந்துபோய் சம்பந்தியின் வீட்டையடைந்து க்ஷேமவார்த்தைக ளாடினபின் பெண்ணைக்குறித்துப்பேச, அவர்கள் சுன்னத்து செய்துகொள்ளாப் பிரஷ்டனுக்குக் கொடுப்பதில்லையென்று மறுக்க,

ஜிஜ்ஜாபீபி அதற்குத்தாஞ் சொல்லக்கூடாக் குறையால் வாட்டத்துடன் நம் வீட்டை யடைந்து கொழுனனைத் தொழுது சம்பந்திகளின் வாய்மையை யுரைக்கக்கேட்ட தமால் வேஷ்டை மேலிட்டு இனிமேல் என்னசெய்யலாம் என்று எல்லாவற்றிற்கும் நம்முடைய பகவானே முன்னின்று முடிப்பிக்க வேண்டுமென்று ஆகுலத்துடனே நாட்களைக்கழிக்கத் தொடங்கினர். பின்பு ரம்பாவதாரமான சுந்தராவின் தந்தைதாய் பருவமடைந்த நமது பெண்ணை யார்க்காவது வதுவைசெய்துக் கொடுக்கவேண்டுமென் றுன்னி கன்னியைக் கேட்கும் பலபேர்க்குள் ஒருவனுக்குக் கொடுக்கச் சம்மதித்து மங்கலத்துக்குரிய சகல சாமக்கிரியைகளையுஞ் சேகரஞ் செய்யத்தொடங்கினர்க ளன்றிரவு பகவானோர் பகீரியாயவர்களின் கனவிலடைந்து மாதை கபீருக்கன்றி மற்றவர்க்களிப்பீரே லுமது வம்மிசம் நாசமாய்ப் போகுமென்றுரைத்து மறைய, உடனே சதிபதிகளிருவருந் துயிலொழிந்து தங்கள் கண்டகனவை ஒருவரோடொருவ ருரைத் துசாவி

அச்சமூற் றதிகாலையிற் றன்னினத்தோரைக் கூவித் தாங்கள் கண்ட சொற்பனத்தைப் புகல இனத்தோர் கடவுள்வந் துங்கள் சொற்பனத்திற் கபீருக்களிக்கச் சாதித்தாலும் நமது மரபுக்கோர் குறைவறச் செய்யலாகாதென்று மறுக்க, அவ்வசனங்களைக்கேட்ட சுந்தரா மிகவும் மூனிவுடன் சொல்லும் மொழியொன்று முன்னம் கபீருக் கென்னை மனைவியாக வாக்கையளித்து மற்றொருவனுக்கு மணஞ்செய்யக் கருதுவது மஹா குற்றமாகும் அன்றி அக்கபீரை நீக்கி மற்றொருவரை நான் விவாகஞ் செய்யமாட்டேனெனின் கபீரை நமக்குக் கணவனெனத் திர்மானித்த நான் வேறுபுருடனை மணஞ் செய்ய ஆசிப்பேனாகில் பெண்தன்மைக்குரிய கற்பழிந்து நிறையபத்துக்குள்ளாவேன் பதிவிரதையிற் சிறந்த சதியானவளொருவனை பதியெனத் தீர்மானித்து பின்பனுமானித்து வேருடவனைக் கருதுவாளா கருதுபவள் கற்புள்ளவளாவாளா இவனே நமக்குகந்த மணாளனெனச் சிந்தித்துவந்தித்து வேறெண்ணங் கொள்வாளாகில் வேசைக்குங் கீழ்மையான விபசாரியிலு மபசாரியென்றே சொல்லவேண்டுமென்று நவில்கிறதை கேட்ட சகலரு மாச்சரியங்கொண் டிப்பெண் பருவமடைந் தோராண் டாகவில்லை இப்போழ்தே சதியென்றும் பதியென்றும் வாஞ்சையுடன் பேசுகின்ரு ளிதை நன்ரு யோசிக்கையில் விபரீதமாக விருக்கின்ற தென்றறையும்போது அக்கன்னிகை இனத்தோரை நோக்கி ஓ புனிதர்களே! ஒருவனை மணவாளனென் றுன்னிப் பின்பொருவனை நண்ணின மங்கையி னங்கையினுற் சலபானஞ் செய்யவேகூடாது ஏனெனில் இவனே நமக்குக் கணவனெனப் பாவித்து மனதாரச் சேவித்து தன்னுக்கையை யவனுக்குத் தாரைவார்த்து ஐக்கியமானபின் மற்றொருவனை வாஞ்சிப்பாளாகி லவளை நான்கறிவுள்ள மிருகங்களி லிழிவான கர்த்தபமென்றே உன்னவேண்டும் ஐந்தறிவுள்ள மனிதஜென்மமெனப் புகலத்தகாது பத்மினி தன்னுயிர் நீங்கினு மொருபுருஷனையன்றி மறுபுருஷனை வாஞ்சிக்காள். கனவிலுங் கடிசெய நினையாளுத்தமிக் கோர் புருஷனேயாம் சித்தினிக்குப் பல புருஷர்களேயாம் இனி பலவாறு நான் செப்புதலாற் பயனின்று முடிவு அக்கபீரையன்றி வேறு புருஷனை என்னுயுள் பரியந்த மிச்சிப்பதேயில்லை. இது சத்தியவசனமாகும் கபீரைவிடமற்றுமுள்ள

மாந்தர்களெல்லாம் எனக்குத் தந்தைகளுஞ் சகோதரர்களு மாக வேண்டுமாதலா லக்கபீருக்கே என்னை மன்றல் செய்ய வேண்டும் கபீரே எனக்குப் பதியன்றி வேறுகதி யில்லையென் றியம்ப இனத்தோர் ஓ சுந்தரா தாய் தந்தையரும் உற்றோ ரும் மற்றோருஞ் சேர்ந்து யாருக்கு மணஞ்செய்கிறார்களோ அவனையே காவலனெனப் பாவிக்கவேண்டுமே யல்லது நீயா யோர் புருடனைக் கருதுவது மகா குற்றமாயிற்றே உன் னுல் பந்துக்களின் மானம்போயிற்றே இனியிப்படி பேசா மல் பெண்மைக்குரிய நாணத்துட னிருப்பாயென விளம்ப, சுந்தரா எப்போதென் தாய்தந்தை கபீருக்கு என்னை வேட் டல் செய்ய வாக்கையளித்தாரோ அன்றே நானவருக்குரிய மனைவியாய் விட்டேன் ஆனபின்சொட்டேன். மனமணமே மணமன்றி இனமணத்தா லோர் பிரயோசனமுமில்லை பத்தி னிக்கோர்பதியாம் இப்பண்புளாளே நற்சதியாம். கபீரைக் கோருவதென் விதியாம். விதியின்படி நடப்பதே மதியாம். ஆதலால் நீங்களென் விரதத்தைக் கெடுக்காதீர்கள். கெடுத் தெனக் கிடர்கொடுக்காதிர்கள் என்கிற வார்த்தைகளாடும் போது இனத்தோர் ஓ ஓ அக்கபீர் இவளழுக்காக மோகித் தேதோ வித்தையைப் பிரயோகித்ததுபோற் ரேன்றுகின்ற தினி யிவள் யார் மொழியையும் கேட்கமாட்டாள் தாய் தந் தையரையும் பார்க்கமாட்டா ளென்றறைந்தவள் தாய்தந்தை யைநோக்கி இவளை வெகு பத்திரமாய் காக்கவேண்டுமென் றுரைத்துத் தங்கள் வீட்டையடைந்தார்கள். பின்பச் சுந்தரா வின் தந்தை தாய் புத்தியை நோக்கி அடி சுந்தரா நீயெ ன்ன உன் வயதென்ன உன் விவேகமென்ன நமது வர்னத் திற்கு விகற்பமாய் நடக்கும் இந்து மதத்தைச் சார்ந்தவனை வாஞ்சித்தாய் உன் வசனம் கேட்கும் பலருக்கும் நகைக்கிட மாய்விட்டது. எங்களுக்கிருந்த பெருமை போய்விட்டது. உன்னெண்ண மிகவும் கெட்டது. இனத்தோர் மனதைச் சுட்டது. அடி துர்மார்க்கி பெண்மைக்குரிய நாணத்தை நீக்கி வாயில்வந்தபடி பிதற்றுகின்ருய் ஈனவார்த்தைகளும் புகன்ருய். வேசியாய் புறப்பட்டாய் நீ கெட்டாய் இனி யிவ் வார்த்தைகளைக் கூசாமல் பேசுவையாகில் இரண்டு துண்ட மாக வெட்டிவிடுவோம் வாயில்வந்தபடி திட்டிவிடுவோம் என் றதட்டி ஓரறையிலடைத்துக் காவல்வைத்தார்கள்.

பின்பந்த சுந்தரா பகவானை நோக்கித் தவஞ்செய்யத் தொடங்கினாள். இப்படி சிலநாள் கழிய, ஒருநாள் பகவானோர் பகீர் வடிவமாய் பல மாணாக்கர் சூழ சுந்தராவின் வீட்டையடைந் தவள் தந்தைபணிய ஆசீர்வதித் தெங்களுக்குன்னால் விருந்து செய்யக் கூடுமோவென அதற்கவன் தடையின்றி அனைவருமே வீட்டிலுண்டு போகலாமென, மாயா பகீரி, ஆ ஆ இவ்வாரணாசியில் நமது குலத்தில் சிறந்த தர்மப்பிரபு தமாலொருவனே யிருக்கிறானென நினைத்திருந்தேனவனைவிட நீமேலானவனா யிருக்கின்றா யவனுக்கு சம்பந்தியான உன்பாலும் நற்குணமிருப்பதற் கையமில்லையென அவ்வார்த்தையைக் கேட்ட சம்பந்தி நானப்பிரஷ்டனுக் கெப்படி சம்பந்தியாவே னினி யவன் நாமத்தை என் வீட்டிலிருந்து வெளிப்படும் வரையில் சொல்லாதீர்கள் கவனம் வைத்துக்கொள்ளுமென, பகீரி தமால் மிகவும் சிரேஷ்டனாயிருக்க பிரஷ்டனென் றேனுரைத்தீரென, நமது குலமுறை தர்மத்தைக் கடந்து சுன்னத்துச் செய்துக்கொள்ளாக் கபீரெண்ணப்படி நடந்து இந்துமதத்தை யடைந்து குலத்தோர்பால் வருவதற்கிடைந்து இருப்பவன் பிரஷ்டனல்லவோ வென, பகீரி தமாலிடம் நாங்களனைவரு மைந்தாருண்டுக்குமுன் போயிருந்தோ மப்போழ்தவ னெங்களை வேண்டி வருந்திடப் புசிக்குந்தருவாயி லோர் பகீரிவந்து தமால் புத்திரன் சுன்னத்து செய்துக்கொள்ளா மிலேச்சனாயிருக்கின்றானிவன்வீட்டி லன்னமுண்ணத் தகாதென்று மறுக்க நாங்களும் நிச்சயந்தானென் றுண்ணாதெழுந்த தருணத்திற் கபீருடனே சுன்னத்து செய்துக்கொண் டெங்களுக்கன்ன மூட்டினான் பின்பு நாங்களனைவருங் கபீரை நோக்கி நீ இந்துக்களைப்போல் திருமணியணிந்துக்கொள்ள தகாதென்றுரைக்க அன்றுடன் திலகமு மணியாமல் சந்தனமணிந்து அரி நாராயணாவெனத் தியானிக்காம லல்லாவையே தியானித்துக் கொண்டிருக்கிறானிதை நீரறிய மாட்டீரோ? இனியேன் கபீருக்குப் புத்திரியைத் தரமாட்டீரோ? வென்றனந்தம் பகீரிகளைக்கொண்டவன் மனதைக்கரைத்து இனிய வார்த்தைகளுரைத்து கபீருக்களிக்கும்படியாய்ச் செய்து அவனுக்குற்ற சந்தேகங்களைக் கொய்து துலுக்கரையும் காஜி மௌலியையும் வரவழைத்து அவர்களுக்கு முன்னுரைத்தவண்ண முறை

த்து உங்க ளனைவோருக்குஞ் சுந்தராவைக் கபீருக்குக் கொடுத்து வேட்டல்செய்ய சம்மதிதானே வெனக்கேட்டு, மௌலி முன் னிந்துமதத்தைச் சார்ந்து இப்போது நம்முடன் சேர்ந்து பெண்கேட்டால் கொடுக்கலாமாவென, பகீரி மதத்தை விடுத்து நம்மதத்தை யடுத்து வெகுநாளாயிற்றே யென, மௌலி அவன் சுன்னத்து செய்துக்கொண்ட துண்மைதானாவென பகீரி சுன்னத் சுன்னத்தென்று பலதரங் கேட்கின்றீர் நங்குலத்திற் காதியான ஆதாமுக்குச் சுன்னத்து செய்த துண்டோவென, மௌலி ஆதாமுக்கில்லாவிடினு மவர்பின்னுண்டான இப்ராயீம் பயம்பர் காலத்திலிருந்து நம் பரம்பரைக் குண்டாச்சுதல்லவோவென, பகீரி, ஷாம், காபூல், பகார அரப், பஞ்சாப், டில்லி, ரூம்முதலான சப்தநகரங்களிற் சிறந்த நமது சக்ரவர்த்தியின் ஸ்தானமான ரூம் நகருக்கிறைவனாகச் செய்யும் அரையர்களெல்லா மங்கலனுடைய பரிசங் கொள்ளாமல் சுன்னத்துஞ் செய்துக் கொள்ளாமல் சிம்மாசன மேறி சகலர்மீது மாக்கினை செலுத்த வில்லையோ நம்முடைய மர்மத்தை நாம் வெளிப்படுத்தல் தர்மமோ இப்ராயீம் பயம்பர் இளைய மனைவிக்குச் செய்துகொடுத்த வாக்கைக் கடந்தபடியா லிவ்வாக்கினைக்கு நாமனைவோரு முட்பட்டு நடக்கும்படியாய் நேரிட்ட தப்படியே கபீரு முட்பட்டான் இனியவனுக்குச் சுந்தராவை விவாகஞ் செய்கிறதைமறுத்து தமாலை வருத்துவது தகாதென, மௌலி, தாய்தந்தையர் நிச்சயிக்கா முன்ன மொருவனை யிச்சிப்பவள் மணத்துக்குவர வெங்களுக் கிஷ்டமில்லவே யில்லையென,

பகீரி மைது பரம்பரைக்கு முதல்வனான இஸ்மாயில் பயப்பர் மாதாவாகிய ஆஜராவென்னு மூத்தமி தன்தாய்தந்தை உற்றோர் மற்றோரும் மறுத்துங் கேட்காமல் இப்பிராயீம் பயம்பரை தன்னெண்ணப்படி இச்சித்தவர்பின் னேகவில்லையா! அப்படிசெய்ததா லாஜராவை நாம்வெறுக்கலாமோ? அன்றி நமக்குப் பூர்வ தாயாதிகளான இசாக்பயம்பர் பரம்பரையோ ரிக்காலத்திலும் ஸ்திரீ யெவனை யிச்சிக்கின்றுளோ அவனுக்கே மணஞ் செய்துக் கொடுக்கவேண்டுமென்று விதித்திருக்கிறூர்களல்லவோ அன்றி, ஒராடவனை யிச்சித்தவட்குவேறொரு புருஷனை மணஞ்செய்தல் மகாகுற்றமல்லவோ சகலமும் தெரிந்த உமக்கும் விரித்துச் சொல்லவோவென் றனேக நீதி

வாக்கியங்களை யுரைத்து எல்லோரையும் மாயையால் மயக்கி சம்மதிக்கச்செய்து சந்தேகங்களைக் கொய்து மன்றல்செய்யும் நாள் நாளைக்கெனத் தீர்மானித்து தன்னுடன் வந்த பகீரிகளை அவ்விடம்விட்டுத் தான்பேர்ந்து தமால்வீட்டைச் சேர்ந்து தமாலைக்கூவி அவன் வணங்க இணங்கி, ஓ தமால்! நீங்கள் கபீருக்கு வேட்டல் செய்யக் கேட்ட சுந்தராவுக்கு நாளைக்கு வதுவை யாவதற்குங்களை இன்றைக்கே வரும்படியாய்ச் சொன்னார்கள், நானச்சுந்தராவுக்கு பெரியதந்தையாகவேணுமென்று நவிலக்கேட்டு, தமாலும் ஜிஜ்ஜாபீபியும் மிகவும் வாட்டமுற் றையையோ அந்த சுந்தராவதியை வேறொருவனுக் களித்தால் நமது மைந்தனுக்குகந்த ரதியகப்படுவதரிதென்று கண்ணீரொழுக அழும்போது மாயாவிநோதனை பகவான் ஓ தமால்! சுபக்காரியத்துக்கழைத்தால் ஏனழுகிறீர் பிரம்மா நினைத்தால் ஆயுளுக்குக் குறைவில்லாததுபோல நானினைத்தால் அப்பெண்ணை உமது தனுசனுக்கே கொடுப்பிப்பேன் அப்படி கொடுப்பித்தா லெனக்கென்ன கொடுக்கிறீரென அவ்வாக்கியத்தைக்கேட்ட தமால் மிகவுஞ் சந்தோஷசாகரத்தில் மூழ்கினவனாகப் பெண்ணை எங்கள் காண்முளைக் களிப்பீரே லென்னாயுள்பரியந்த மூமக்கேவல்செய்கிறேனென் றுறுதிவசன மென்றியம்ப, மாயாதுலுக்க னீதுண்மையாயினின்றுடன் விஷ்ணு நாமத்தை துதியாம லிருங்களென, அவ்வசனத்தைக்கேட்ட கபீர் அத்துலுக்கனை நோக்கி அப்பெண்ணும்வேண்டா முங்கள் சம்பந்தமும் வேண்டாம் போபோவென்றிசைக்க, நாராயணனாகிய பகீரி முன்னம் வாக்கையளித்து பின்போர் போக்கைக்காட்டுவோர் படுபோக்கிரிகளல்லவா உனக்கே அப்பெண்ணைக் கொடுப்பிப்பேன் என் வாக்கை மெய்ப்பிப்பேன் நீங்களெனக்கின்றுட னேவல் செய்ய வேண்டுமென, கபீர், என் தந்தை வாக்களித்தபடி ஏவல் செய்வோமல்லது ஸ்ரீராமநாமத்தைத் துதிக்காம லிருக்கமாட்டோமென, பகீரி நிரூபமான பரப்பிரமத்தைவிட்டு ஓர்மனிதன்பேரை யுன்னிக் கேட்டு நிறையத்துக் காளாவ தழகோவென, கபீர் என்னாண்டவனை மனிதனென் றிப்போதுரைத்ததுபோ லினியுரைப்பையாயி னுன்மென்னியைக்கடித் துதிரங் குடிப்பேனென, மாயாதாரி தன் மனைவியை இராக்கதனெடுத்துப்போக சீதா சீதாவென் றடவியி லலைந்து திரிந்த

அறிவில்லா மானிடனை தெய்வமென நம்ப லறிவீனமல்லவோ உள்ளதைச் சொன்னால் சள்ளென்று விழுவ தழகோவென, கபீர் அம்மொழியைக்கேட் டதிக கோபதீப்தனாக யெரிந் தப்பக்கீரியின்மேல் வீழ்ந் தடா இனி யரைக்கண மீண்டிருப்பையாயி லெமலோக தரிசனத்துக் கேகுவாயென, கபட நாடகனாகிய பகவான் அடா பிரஷ்டைப்பயலே! துஷ்டப்பயலே! நான் சுபத்தைச்செய்ய நினைத்தால் விபத்து செய்ய வந்தா யச்சுந்தராவினுடன் கூடச் சுகமனுபவிப்பது நானா நீயா அடா பேயாவென் றேசிப் பேசத்தொடங்கினார்.

கபீர் அச்சுந்தராவையுத் தீண்டே னவட்கா யுன்னையும் வேண்டே னினி வம்புசெய்யாம லுன்னிருப்பிடஞ்சேரென அவ்வேஷதாரி, அச்சுந்தராவை நீ மிகவும் வேண்டவும், அவட்கா யென்னடிகளைத் தீண்டவும் செய்கிறேன் பாரென, கபீர் குலுங்க நகைத்து ஆஹாயென்ன ஆச்சரியமான வார்த்தையைப்புகன்றாயவளைத் தீண்டேனென்று மவட்காயுன்னை வேண்டேனென்று மூறுதிகூறல் வேண்டுமோவென, அச்சுதன் பேசப்பேசப் பிழையென்பதுபோல இவனச்சுந்தராவைத் தீண்டேனென்று சத்தியஞ் செய்தாலுஞ்செய்வா னிவனெண்ணத்தை ஒருவரால் மாற்றக்கூடியதல்ல இவனையங்கு கொண்டுபோகும்படியான சூட்சிசெய்ய வேண்டுமென்று யோசித்து நாரதரை நினைத்து ஓ யாழ்வல்லோனே! நீயும் பரம பாகவதர்களும் ராமானந்த ஸ்வாமிகளும் மாணாக்கருமாய் வாருங்களென, அப்படியே அவர்கள் சூரியனஸ்தமன மாகுஞ்சமயத்தில் ராமானந்தஸ்வாமிகளின் வடிவுடன் பலமாணாக்கர்சூழ தமால் வீட்டையடைந்து ஓ கபீர், ஓ கபீரெனக்கூவ உடனே சத்குரு ஸ்வாமிகளின் குரலைக்கேட்ட கபீர் திடுக்கென்றோடிவந்து ஸ்வாமிகளின் திருவடிகளிற்பணிந்து நாங்களின்றுசெய்த பாக்கியமே பாக்கியமென்று இல்லிற்கொண்டு போ யுபசாரஞ் செய்யத்தொடங்கினா ரப்போது ராமானந்த ஸ்வாமிகள் தமாலை நோக்கி நாளைய உதயத்திலுமது மைந்தனுக்கு விவாகமெனக் கேட்ட நீங்களேனிப்படி இருக்கின்றீர்களென, தமால் மணப்பெண்ணின் பெரிய தந்தைவந்து இக்கபீருக்கு அப்பெண்ணை மன்றல் செய்யப்பேசி அவமரியாதையடைந்து நிற்கின்றாரினி அவ்வனிதை கிடைத்தலரிதென, ராமானந்த ஸ்வாமிகள் முன்னங் கொடுப்பதாக வாக்

களித்து பின்பெப்படி மறுக்கின்றூர்களென்னுடன் வாரும் நானே பேசி முடிப்பிக்கின்றேனென, தமாலுமிச்சாதுக்கள் கூட்டத்துட னங்குசென்று லவமரியாதை நேரிடுமென, ஸ்வாமிகளப்படியாவென்று பகீரி வேடங்களைப்பூண்டு வாரணாசியிராஜனை அழைப்பித்து கபீருக்கே அப்பெண்ணைமணம் செய்விக்கிறேனென்றூர் சிஷனை இராஜன்பாலனுப்ப உடனே பகவான் மாயையால் வாரணாசியி னிறைவன்போலாகி பல தாளமேளங்கள் தாம்தாமென்றுமுழங்க தமால் வீட்டையடைந்து சமஸ்த சம்பிரமத்துடன் ராமானந்தஸ்வாமிகளைக் கண்டு வணங்கி நிற்க,

மாயா ராமானந்தஸ்வாமிகள் மாயா இறைவனைநோக்கி எனக்குகந்த மாணாக்கனாகிய கபீரை நாமனைவோருமழைத்துக்கொண்டுபோய் விவாகஞ்செய்து வரலாமென்று கபீரைமணக்கோலஞ்செய்தனேக துலுக்கர் சூழப்பட்டு சுந்தராவின்வீட்டையடைந் தங்கிருக்கும் சகலரும் தங்களுக்கு மரியாதைசெய்துவணங்க இதோ ராஜன் வந்துவிட்டானென் றிணங்க சுந்தராவைச் சிங்காரித்து இருவர்க்குஞ் செய்யவேண்டிய சடங்குகளெல்லாஞ் செய்து சூரியோதயமானவுடன் விவாகத்தைமுடித்து தங்களிருப்பிடஞ்சேர்ந்தார்கள்.

பின்பு தமால் களிப்படைந்து சுந்தராவை யழைத்துக்கொண்டு தன் வீடுசேர்ந்து சகல பந்து ஜனங்களுக்கும் விருந்துசெய்து ஆனந்தமாயிருந்தார் இவரிப்படியிருக்க, கபீர் ராமானந்த ஸ்வாமிகளின் தரிசனத்துக் கென்றும்போவதுபோ லன்றும்போக அப்போது சுந்தரா கபீரை வணங்கி, ஓ ஸ்வாமி! ராமானந்த சுவாமிகளின் தரிசனஞ்செய்ய வெகு நாளாய் வாஞ்சித்திருக்கிறேன் இன்றைக்கவருடைய தரிசனந்தருவித் தென்னைக் காக்கவேண்டுமெனப் பணிய, அவ்வாக்கியத்தைக்கேட்ட கபீர் புளகாங்கிதமடைந்து ஓ சுந்தரா! நீ துலுக்க வம்மிசத்திற் பிறந்தவளாயிருந்தும் ராமானந்த சுவாமிகளின் தரிசனத்தைக் கோரினை உனக்கவர்மீது பக்தி வந்ததைக்குறித்து வெகு சந்தோஷமடைந்தேன். ஆனால் என்னுடன் கூடியிருக்கிறவளாகில் என் வாக்குக்கு மறுவாக்குறைக்காமலிரு இதுவே உன்பாலியான் கேட்டுக்கொள்ளும் வாக்கு இதை உன்னுயிருள்ள பரியந்தங் காப்பாற்றக் கூடுமோவென,

சுந்தரா ஓ சுவாமி பதிவாக்கை மறுத்த சதிக்கு நற்கதியுண்டா? பதிவிரதையின் வாக்கிரண்டா? பதி வார்த்தையை மறுத்தவருமுண்டா? இப்படிக்கேட்ட துமக்கையங்கொண்டா? பதிமொழியின்படி நடக்காதவளு மொருபெண்டா? பதி வாக்கைக் கடக்காம லிராவணன்பின் பார்வதி போனுளெனச் சாஸ்திரங்களில் முறையிடுகிறதைக் கேள்விப்பட்ட நான் உமது வாக்கைக் கடப்பேனே? பதிவிரதையல்ல வென்கிற பேரையெடுப்பேனே? ஓஎன் பிராண நாயகா! ஸ்ரீ அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகராகிய ஸ்ரீரகுநாதர் ஒருதரமின்றி இருதரம் சொல்லும் அக்கினியிற் குளித்து வாவென்றுரைத்த சீதாபிராட்டி கோதண்ட அஸ்தனைத் துதித்து அக்கினி குண்டத்திற் குதித்து அக்கினிதேவனை யெரித்து திரிலோகங்களிலுந் தன் கீர்த்தியை விரித்துக் காட்டியதைச் சிரவணஞ்செய்த அடியாளுமது வாக்கை மறுப்பேனே? மறுத்திவ்வுலகிலிருப்பேனே ஓ பிராணவல்லபா! பதிவார்த்தையைக் கடக்கா சதியே பதிவிரதையன்றி கடந்தவள் பதிவிரதையாவாளா? கணவன் வாக்கியத்தைக்கடந்த காந்தை கற்பழிந்தவளன்றிகணிகைக்குங் கீழ்மையானவளென்றே யுரைக்கத்தகும் என்கிற பற்பலவாக்கியங்க ளுரைக்கக்கேட்ட கபீர், சந்தோஷ சாகரத்தில் அமிழ்ந்தவராய் ஓ சுந்தரா! நீ நல்ல பத்தினியென்றே மணஞ்செய்ய ஒத்துக்கொண்டேன் சாதுக்கள் சேவையிற் சிறந்த உத்தமியே எனது சத்குருநாதனைப் பணிய வாவென் றன்புடனழைத்துக் கொண்டின்புடன்போய் ராமானந்த ஸ்வாமிகளின் றிருவடிகளிற் பணிந்து பயபக்தியுடனிற்க சுந்தரா ஸ்வாமிகளின் றிருவடிகளிற் சிரசாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு பலதரம் முத்தமிட்டு இவரே பகவானென நினைத்து கண்ணீராலவர் பாதங்களை நனைத்து வெகுநேர மடிகளைத் தழுவினபடி கிடக்கையில் ராமானந்தஸ்வாமிக ளதிசயித்து எழுந்திருக்கக்கடவா யம்மாவென் றறைந்து கபீரை நோக்கி, ஓ புனிதனே! சூரியாஸ்தமான வேளையிலியாருடைய ஸ்திரீயை யழைத்துக்கொண்டிங் கடைந்தாயெனக்கேட்க, கபீர் ஓ ஸ்வாமி! தாங்களே நேற்று மாலையில் மாணுக்கருட னெழுந்தருளிவந்து இக்கன்னியை எனக்கு மணம் செய்துவைத்து மறியாதவர்போல் கேட்குங்காரணமேதோவென்று வணங்க,

ஸ்வாமிகள் ஆச்சரியப்பட்டவராய் ஓ கபீர்! நானுனக்கு வதுவையானது மறியேன் இம்மங்கை உன்மனைவி யென்றுந் தெரியேனென, கபீர் ஓ ஸ்வாமி! தேவரீர் திருக்கூட்டத்தோ டெழுந்தருளினதுமன்றி இராஜனையுமழைப்பித்து இன்று காலையிற்றானே வேட்டல் செய்தீர் இதற்குள் மறந்து விட்டீரோ வென்று பணிய, ஸ்வாமிகள் ஓ அபத்திகனே! நானுன்பால் வரவுமில்லை இராஜனை விளிக்கவுமில்லை வதுவைசெய்து முடிக்கவுமில்லை யென்றறைந்து சுந்தராவை நோக்கி, ஓ அம்மா! பாக்கியவதி நானுங்கள் விவாகத்துக்கு வந்தேனோ நீ என்னைப் பார்த்தாயா நிச்சயவார்த்தையைச் சொல்லுமென, அதற்கந்த உத்தமி தன் கணவனை வணங்கி, ஓ ஸ்வாமி! நமது சத்குருநாதன் நிச்சயத்தைக் கேட்கின்றாரே சொல்லட்டுமாவென, கபீர் சதிக்குப்பதியே தெய்வம், பதிக்குப் பரமாசாரியரே தெய்வம், ஆதலால் சத்குருமுன்னிலையி லசத்தியம் பேசுவோர் சண்டாளராதலா லுண்மையையே யுரைப்பாயென, சுந்தரா ஸ்வாமிகளைத் தொழுது, ஓ ஸ்வாமி! ஓர் பகீரி பலமாணுக்கருடன் வந்து கலியாணத்தை முடித்தார்கள். அப்போது இராஜனும் வந்திருந்தா னீதுண்மை வசனமென்றுசொல்ல, கபீர் பகீரியாய் பலமாணுக்கருடனெழுந்தருளினவரே நீர் என்னுயிர் நீங்கினு மசத்தியம் பேசமாட்டேனெனத்தொழ, ராமானந்தஸ்வாமிகள் ஓ கபீர்! இப்பெண்ணிருக்கு மழகைக்குறித் தாசைப்பட்டு விவாகஞ் செய்துக்கொண்ட மோகத்தாலல்லவோ தன்னை மறந்துப் பொய்மொழி பேசத்தொடங்கினு யாரம்பத்திலே இப்படியான நீ சமுசாரஞ் சிலநாள் செய்வையாயின் பலதுர்க்குணங்கள் நிறைந்து அபகீர்த்திக் குள்ளாவாயென் றறையும்போது கபட நாடகனுகிய பகவான் ராமானந்த சுவாமிகளின் முன்னெழுந்தருளி காட்சிகொடுத்து ஓ ராமானந்தா! நானே உன்னுருகொண்டு என் பக்தனுக்கு மணஞ்செய்துவைத்தே னீதுண்மையென் றறைந்து தன் திவ்ய அஸ்தங்களால் கபீருக்கும் சுந்தராவுக்கும் பூமாலைகள்சூட்டி தனக்கிருக்குமன்பை வெளிப்படக்காட்டி கபீரென்கண்மணிக் கிணையானவனெனப் பாராட்டி ஜகதீசுவரனுகிய பரமேட்டி அந்தரத்தில் மறைந்தார், அவ்வற்புதத்தைக் கண்ட ராமானந்த சுவாமிகள் களிக்கடலி லமிழ்ந்தவராய் ஓஓ ஸ்ரீமந்நாராயணரை இன்று கா

ணும்படியான பாக்கியமென்ன செய்தேனோ? ஓ என் ஆண்டவனே! உன்னருமைப்பக்தன் வார்த்தையை மெய்ப்பிக்கவந்தாயோ? அரிதானசேவை தந்தாயோ? கண்ணாரக்கண்டும் ஆனந்தங்கொண்டும் அன்புடன் துதிக்காமற் போனேனே? வாயில்லா ஊமையானேனே? எனப் பற்பல வார்த்தைகளாடி சங்கீர்த்தனங்களைப்பாடி கபீரை ஆலிங்கனஞ் செய்துக்கொண்டு தனயன் நீயேயென விண்டு ஓ அரிபக்தனே! ஜீவன் முத்தனே! நீயசத்தியனென்றுரைத்த வென்மேல் முனிவுகொள்ளாதே உண்மை யறியாதவனெனத் தள்ளாதே என்று பணிவாக உரைக்க, கபீர் அவரம்புயவடிகளில் வணங்கி ஓ என்னுண்டவனே! உம்முடைய பாதமே கதியென்று நம்பியிருக்குமென்னை இப்படி துதிக்கலாமோவென்று கரைந்தழுது பகவான் கருணையை நினைத்து ஒன்றுந் தோன்றாதவரா யிருந்தார். அப்போது சுந்தரா ஒருநாளும் பார்க்காப் பெருமானைப் பார்த்த நமது பாக்கியமே பாக்கியம் நமது கணவனுடைய யோக்கியமே யோக்கியம் இந்த சுவாமிகளின் வாக்கியமே வாக்கியம் நாமின்றடைந்த சிலாக்கியமே சிலாக்கியமெனத் தன்னை மறந்துநின்றாள். இப்படி நிற்கும் சதிபதிகளை ஆரியராசிர்வதித்து நாடோறு முங்களிருவருடைய தரிசனந் தரல்வேண்டுமென விடைகொடுத் தனுப்பினர். கேட்டீர்களோ சித்தர்களேயென்று நாபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லுவார்.

கபீர் விவாக அத்தியாயம் முற்றிற்று.

பதினோராவது அத்தியாயம்.

கபீர் பசுவின்கன்றைக் கொல்லாமல் மறுத்தது.

ஆக்கத்திற் சிறந்தவரும் ஊக்கத்தில் நிறைந்தவரும் ஏக்கமுந் தூக்கமும் நீங்கினவரும் நீக்கமு நோக்கமும் ஓங்கினவரும் வாழுமிடமாகிய வாரணாசியென்னுங் காசிபட்டணத்தில் ஜீவவதை செய்கிறதை விலக்கி சகலர்க்கும் மெஞ்ஞானத்தைத் துலக்கி அஞ்ஞானிகளின் மனதைக்கலக்கி பிர்மத்திலொன்றுபட்டிருக்கும் நிலைக்கு பலவந்தமாயனேகரை வரும்படியாகச்செய்து பந்தபாசங்களைக் கொய்து அகமென்னும்

வியாக்ரமமேலம்பெய்து அயிம்ஸையான வஸ்திரம் நெய்து சகல சீவர்கள்மீதுங் கருணைமழை பெய்து நட்சத்திரங்களிற் சிறந்த சந்திரனைப்போலவும் பசுக்களிற் சிறந்த காமதேனுவைப்போலவும், விருட்சங்களிற் சிறந்த கற்பகத்தைப்போலவும், மாந்தரிற் சிறந்த தருமவானைப்போலவும் ஸ்திரீகளிற் சிறந்த கற்புள்ளவளைப்போலவும் விரதத்திற்சிறந்த ஜீவகாருண்ணியத்தைப்போலவும் பூசையிற்சிறந்த மானசபூசையைப்போலவும் விவேகத்திற்சிறந்த சாந்தத்தைப்போலவும் பிரம்மக்ஞானிகளிற் சிறந்த கபீரானவர் தனக்கு மணமானபின் தன் சிறியதந்தையானவர் தன் மாதாபிதா மனையாள் முதலானோரையும் விருந்துக்கழைத்து தன்னைக் கூப்பிடாக் குறையால் மிகவும் வாடி தாய்தந்தையரை நாடி கூப்பிட்டுக்கொண்டேயோடி தெருக்களெல்லாமோடி விஷ்ணு சங்கீர்த்தனங்களைப்பாடி சிறியதந்தை செய்ததுமோடி என்றெழுந்தெழுந்துகூத்தாடி சிறியதந்தையின் வீட்டினுட்புகுந்து என்னையேன் விளிக்கவில்லையென்றறைந்து அங்கு கூட்டமாயிருக்கக் கண்டு ஆச்சரியமேதென்றவர்கொண்டு கணத்துட் புகுந்து நின்று அனியாயமீதெனப் புகன்று நிற்கவே, பசுவின்கன்று நாலுபேர் பிடிக்கநின்று கண்ணீரொழுக நின்று இவர்கள் நம்மைக்கொன்று பல்லாற்கடித்துமென்று ருசிருசியெனவே தின்று இன்புறுவர்களிதுநன்று வீணாய்ப்போதல் நன்றன்று நமக்குத் துணையாமொன்று நாமறியாமல் தொன்றுசெய்த தீவினையாமொன்று இதற்குச்சாக்ஷி யோர்குன்று இனி நான் மனதைவென்று சேரலாஞ் சிற்சுகமருளென்னுஞ் சொற்களைப்புகன்று பகவத் ஸ்மரணையோடு நிற்பதையும் துடுக்கரெல்லாஞ் சூழ்ந்து நிற்பதையும் கபீர்பார்த்து தேகமெல்லாம்வேர்த்து கோதனத்தை மார்புடன்சேர்த்து அபயந்தந்தேனெனப்பேர்த்து கொல்வ தழகல்லவென ஈர்த்து தன்னுயிரதற்குத் தாரைவார்த்து உயிர்பெற் றுய்வாயெனக்காத்து இபிலீஷ் தனக்குத் தோர்த்து ஓடிப்போகின்றதை நோக்கி துலுக்கரைக் கொலைக்குள்ளாக்க ஜீவகாருண்ய விரதத்தை நீக்கி மோட்சமார்க்கத்தைப்போக்கி உன்வசத்திலானோரைப் பாழாக்கி ஈடேறுமற் கீழாக்கி நரகஞ்சேர்வதற் காளாக்கி செய்தாய் இம்மையேசாக்கி ஆதலாலுனையிப்போது தாக்கி இவ்வனலிற்போட்டுக் கரியாக்கிவிடுவேன் பாரென்றோங்கி முகம்மீ

தோரறைவாங்கிவிடவே, இபிலீஷேங்கி உயிர்போனதுபோற்றேங்கி உம்மாலென்னுயிர் நீங்கிப்போதல் நன்றே அருட்சீலனே! அகட்டிற்பிறக்காப் பாலனே! கருணைக் கடற்கோர் மூலனே! சகல ஜீவர்களுக்கு மனுகூலனே! துடுக்கரை வெல்லுங்கோலனே! எனக்குக் காலனே! திரிசூலனே! கதிர்வேலனே! பரிபாலனே என்று தோத்திரம்புரிந்து மிகவும்பரிந்து அருவாயிருந்ததோ குருவாகி ஓ அருட்சொரூப தர்மமே! ஓ சுகபரப்பிரமமே! இது நீயறியா மர்மமே இது முன்செய்த கர்மமேயென்று தன்னந் தன்னையிழுத்து தாடிகளெல்லாம் பழுத்துநிற்போரே இதன்கழுத்து அறுப்பீரிது முன்கொழுத்து செய்துகொண்டதெழுத்து அதனுற்படிமீதழுத்து காஜீ கடவுளை வழுத்துவென்பதைக் கேட்ட துடுக்கர்சொல்லு முன் சொல்லும் முடுக்கர் அங்கே வந்துரைக்கும் பூதத்தின் முகத்தில் கொட்டில்லாமல் நீண்ட சொக்காயும் நீண்டகுல்லாயும் வெளுத்தமுகமும் வெளுத்த நரையும் பல்விற்கரையும் சொல்லிற் குறையும் உள்ளவனுயிருக்கவும்,

மொசல்மான்கள் தன் குலததிலுற்பவித்த மூத்த கிழவனெனத் தீர்மானித்து நிற்போரிற் றமால்மாத்திர மனுமானித்து குலத்தோரைப்பார்த்து கரங்களை சேர்த்து ஓ அன்பர்களே! எனக்குகந்த நண்பர்களே! இவ்விருத்தன் யாதோ விபரீதபூதத்தைப்போற் காண்கின்றது ஆதலாற் கிஞ்சிற்றடியேன்மேற் கருணைகூர்ந் திக்கன்றுக்குட்டியைக் கொல்லாமலிருங்களென்று வேண்ட அதற்கக்கிழவன் நகைத்து தமாலைப் பகைத்து ஓ தமால் நீ துலுக்கனுயிருந்தும் சகலமுந் தெரிந்தும் அல்லா செய்கிறதை வெறுக்கின்றாய் குரான் மொழியை மறுக்கின்றாய் சகல ஜீவர்களையும் மனித ருபயோகத்திற்காகவே கடவுள் படைத்தார் அதிலாடுமாடு முதலாகியதைப் புசிக்கவே உண்டாக்கினர் இப்படி கடவுளாலனுப்பப்பட்ட வேதத்தில் முறையிடுகின்றது இதோ இக்காஜியும் மௌலியும் ஆதிவேதமான குரானைத் தீர்க்கமாய் வாசித்து சகல மார்க்கத்தினுந் தேர்ந்திருக்கின்றார்கள் இவர்களைவிட நீயுமுன் சுதனுமோதினவர்களோ வேதத்தி னிரகசியத்தை யறியாவுங்களுடன் வாதுசெய்வதற் கிவர்களே போதும் நீங்களகடவிகடஞ் செய்கிறீர்களெப்போதுங் என்று நவில்கிறதைக்கேட்ட கபீர் ஓ மாயாபூதமே நீயுரைப்ப தபவாதமே உன்னை நம்பி

னோர்க்கபராதமே செய்ததெல்லா நீதமே நல்லோர்க்கு மிகவும்பேதமே விரோதமே வெகுசேதமே மிகுகுரோதமே மருட்போதமே என்னையாவெருவச்செய்ய வந்தாகலியே நீயின்றைக்கானாய் பலியே, ஞானப்பூசை யுண்ணெலியே துடுக்கருக்கெல்லாம் புலியே இப்போதுனக்கு நான்வலியே சற்றுமுன்னடைந்தாய் கிலியே என்முன் செல்லாதுன் வலியே கொலைஞரைக் கொள்ளைகொண்ட நலியே, ஆணும் பெண்ணுமல்லா அலியே என்றக் கன்றைநோக்கி இடர்வேண்டாமெனப்போக்கி, வசுமஸ்தகத்தின்மேற் தனதஸ்தத்தைத்தாக்கி, கொற்றிக்குச் சுகமுண்டாக்கி, மார்புடணைத்துக்கொண்டு ராமராமாவெனவிண்டு என்ன கர்மஞ்செய்தாய் பண்டு, ஆனாலும் பகவானை அண்டு, பயமில்லை யென்வாக்கல்ல ரெண்டு, காசியில் நட்டிருக்கின்றேனீண்டு, இந்த இபிலீஷெனக்கோர் பெண்டு, வெட்டுதற்குத் துரும்பின் துண்டு, உனக்குச்செய்யச்சொல்லுகிறேன் தொண்டு அயிம்ஸா விரதம்கொண்டு இருக்கையாற் கொல்லு மித்தண்டு, என்றங்கிருக்குமோர் கோலையெடுத்துவீசினார் சுவ்வகரென்று பேசினார், கன்றுக்குச் சந்தனம்பூசினார், நானெனல் நமக்கேனெனக் கூசினார், அப்போதந்ததடியானது சரேலென்றெழும்பி வருவதா லிபிலீஷ் மனம்குழம்பி மௌலியின் பின்னாலோடி நீங்களெல்லாங்கூடி கொடுத்துவிட்டீர் தாடி ஆதலாலானீர் பேடி, ஆகாவிடி னீண்டோடி தடியைப் பிடியுங்கள் நாடித் தமால் கபீரைக் கொண்டாடி இவ்விதஞ் செய்தானென வாடி குரான் சுலோகங்களைப்பாடி அலால் செய்வார்த்தைகளாடி கொலைசெய்வோர்களைத் தேடி அதிசீக்கிரமா யோடிப்போய்விடவே, மொசல்மான்களெல்லாங் கோபதீப்தர்களாயெரிந்து பொரிந்து, கபீரைப் பார்த்துக் கரத்தைப் பிடித்தீர்த்து அடா கபீர்! எங்குலத்திலுற்பவித்தவிருத்தனை வருத்தப்படுத்தி ஏனோட்டிவிட்டாய் நீகெட்டாய் கோதனத்தை அலால்செய்வதைத் தடுத்தாய், அனைவருமூண்பதைக் கெடுத்தாய் சுயமதத்தை விடுத்தாய் இந்துமதத்தை யடுத்தாய் எங்களை வெல்லவோ சலந்தொடுத்தாய், அனேக துன்பங்களைக் கொடுத்தாய், நீ இங்கேன் வந்தாய் வம்பேன் தந்தாய் என்று முடுக்கிச் சகலருமடக்கி வாயில்வந்தபடி பிதற்றத் தொடங்கினார்கள். அதற்குக் கபீர் ஓ கொலைஞரே! ஜீவகாருண்யமில்லா வலைஞரே! ஓர் சீவனைப் பதைக்க

வதைக்கலாமா? உயிர் நீங்கச் சிதைக்கலாமா? பஞ்சமாபாதகத்தில் முந்தினது கொலையல்லவா? பலதரம் சொல்லவா? கொலைபாதகமொன்று செய்பவன் களவு கட்காம குருநிந்தையும் செய்தவனுமே? ஜீவகாருண்யத்தால் மோட்சமடையலாமே? ஜீவஹிம்ஸை செய்பவருக்கு முத்தியில்லையெனல் சத்தியமா? அசத்தியமா? ஐயையோ ஓ தேறித்தெளிந்த மௌலியே! கல்வியில்வல்ல காஜியே! நீங்களாவது போதிக்கலாகாதா? உமக் கருளுண்டாகாதா! ஓர் பிராணியைக் கொல்வதுஞ் சந்தோஷமா? கொல்லென்றுரைப்பதும் சந்தோஷமாவெனப் பல பரிதாபவார்த்தைகளாடும்போது, மௌலி எங்கள் வேதத்தில் விதித்திருக்கிறபடி அலால் செய்வதை கன்றின் கழுத்தைக் கொய்வதை மறுத்தலுனக்குத் தகவேதகாது ஜீவகாருண்யமொழிகளெங்கள் செவியிற் புகவேபுகாது ஏனெனின்பசுவினுதிரஞ் சுண்டுதலாலுண்டாகும் பாலையுண்போர் தசையைப் புசிக்கலாகாதோவென, கபீர் தாயின்பாலையுண்ணுஞ் சகலரு மவ்வன்னையின் மேதையையு முண்ணலாமோவென, மௌலி மானிடருக்கும் மிருகங்களுக்கும் பேதமில்லையா அன்றி மாந்தருக்காகவே படைத்த மிருகங்களைக் கொல்வதால் பழுதில்லவே யில்லையென, கபீர் சகலஜீவர்களையு மேகக்கண்ணுற் பார்க்கும் ஜகதீசுவரன் பாரபட்சமாய்ப் பார்ப்பாரா? பாரபட்சமாய்க் காப்பாரா? மிருகங்களுக் கிருக்கின்ற விவேகம் மானிடர்களுக் கிருக்கின்றதா? அதை யொருவராலறிந்துக் கொள்ளத்தக்கதா? நம்மைப்போல் மிருகம் யுத்தியுஞ் சத்தியுங் காட்டுமாயின் நம்மாற் கொல்லக்கூடுமோ! கொல்லென்று சொல்லக்கூடுமா? கோவாலல்லவோ, பலதானியங்களும் வெகுமானியங்களும்பெறலாம், பால்தயிர் நெய்முசர் முதலானதுண்டு சுகமுறலாம், சகாயஞ் செய்வதைக் கோறல் நலமோ? வதைத்தால் யமக்குற்ற பலமோ? அல்லதாணவபலமோ? பாவஞ்செய்தலுஞ் சலமோ? அலால்செய்தலே குதமே? ஆச்சரியம்! தன்னுயிரைப்போல் மன்னுயிரைப்பார்க்கத்தேவையில்லையா? ஜீவகாருண்யம் மேலானதவமல்லவா? இதற்குத் தகுதியான யுத்திரஞ்சொல்லையா? சொல்வியென்னை வெல்லையா? வென்றிக்கோதனத்தைக் கொல்லையாவென, மௌலி கடவுளைத்துதித் துயிர்வதைசெய்வதாற்பாபமில்லையென, கபீர் மனோவாக்குக் காயமென்னுந் திரிகரண

சுத்தியோடுங்கூடிக் கடவுளைத் துதிக்கவேண்டுமே யல்லது கொலைபாதகஞ் செய்யும்போதுண்ணல் மிகவு மபராதமென, மௌலி கடவுளைத் தியானித்தலால் செய்ததே புசிப்பதற்கு யோக்கியமான தன்றி மற்றது கூடாதென, கபீர் நாற்காலிருகாலுள்ள ஜீவர்களை அலால் செய்ததாலதின் கர்ப்பத்துக்குற்ற குட்டியும் முட்டையும் பாலாலானதல்லவே யதைப்புசிப்பதேனென, மௌலி கருவிலுருங் கொற்றியையு மண்டத்தையுமலால்செய்யக் கடவுள் விதிக்க வில்லையேயென,

கபீர் நிரூபமாய் நிஷ்களமாயிருக்குங் கருணாகரக்கடவுள் ஓர் பிராணியைப் பதைபதைக்க சிதைத்து வதைக்கும்படி கட்டளைக்கொடுப்பாரா? கொடுத்துக் கருணாநிதியென்கிற தன் பேரைக்கொடுப்பாரா? கொலைசெய்தோர் நரகத்திற் புகுவதைத்தடுப்பாரா? ஜீவரட்சணையை விடுப்பாரா? கொல்லக் கட்டளையிட்டவர்களுக்குக் கருணாகரனென்கிற பேர் கூடுமோ? அவராக்கினைக்குட்படுவ தாடும் மாடுமோ? ஓ காஜி! நான் சொல்லுவதைக்கேளு மதாவது ஜலம் அசரஜீவன்களுக்கும் சரஜீவன் சரஜீவர்களுக் காகாரமாகப் பகவான் செய்திருக்க அதைவிடுத்ததோகதிக் காளாக்குங் கொலை செய்துண்ணக் கட்டளையிட்டாரென் றுரைக்கும்மொழி விபரீதமாயிருப்பதன்றி மிகவுமபராதத்துக்கும் ரவுரவாதி நரகத்தையடைவதற்கு மிடமாயிருக்கின்றதேயென, மௌலி கடவுள்கொலைசெய்யும் கொடியமிருகங்களை உண்டாக்கின காரணமேதென, கபீர் தன்தாயைபுணருமிருகத்தின் செய்கையைச் சாத்திரத்திற் பேசக்கூடுமோவென, மௌலி ஜீவனெல்லாவற்றிற்கு முண்டோயென, கபீர் சரவசரங்களிற் பேதமில்லையோவென மௌலி ஜலமெல்லாம் ஜீவமயமா யிருக்கின்றதேயென கபீர் ஈதுண்மையாயினலால்செய்யுங் காரணமேதென, மௌலி கொலைசெயல்கொடியபாபமாயி னிந்துக்கள் பலியிடுவது பாபமல்லவோவென, கபீர் பாமரர்க ளிஷ்ட காமியார்த்தநிமித்தம் துஷ்டதேவதைகட்குப் பலியிடுகின்றார்கள் அதுவுங் கொடியர்செய்யுங் கொடுங்காரியமே அவர்கட்கு நரகமே பிராப்தியாகுமென, மௌலி தேவதைகளிலு மிரண்டுவித முண்டோவென,

கபீர் பிரமருத்திராதியர் சிரேஷ்ட தேவதைகளென்றும், காளி வராகி சத்திகள் துஷ்டதேவதைகள் என்று சொல்லப்படுமதில் துஷ்ட தேவதைகளைப்போல சிரேஷ்ட தேவதை

கள் பலியைக்கோராமல் தூபதீப நைவேத்தியங்களாற் சந்தோஷப்படுகின்றார்களென, மௌலவி அஸ்வமேதாதியாகங்களிற்கொன்ற பிராணியி னவிர்ப்பாகத்தை விஷ்ணுமுதலானவர்கள் இச்சிக்க வில்லையோவென, கபீர், பிரமம், தெய்வம், பூதம், பிதுர், மானுஷமென்றைந்து யாகமுண்டதில் வேதமோதல், பிரமயாகம், வோமம் வளர்த்தல், தெய்வயாகம், பலியிடல், பூதயாகம், தர்ப்பணமுடித்தல், பிதுர்யாகம், இரப்போர்க் குணவுமுதலிய வீதல், மனுஷயாகமென் றுதிவேதத்தில் முறையிடுகின்றதனால் பலியேற்றுக் கொள்ளுதல் பூதத்தின் கொள்கையாம். பிரம்மாதி தேவர்கள் மந்திரோச் சாடனங்களால் மரித்த ஜீவனை அக்கினிஷ்டோமங்களாற் பஸ்பமாக்கி அப்பூதியையும் மற்ற வஸ்துக்களையு மவிர்ப்பாகமாகக் கொண்டு பின்னுமச்சீவனை மந்திரபலத்தா லெழுப்பவேண்டுமின்றே லதற்கு மேலான பதவியைக் கொடுக்கவேண்டும். கொல்லவும் எழுப்பவும்வல்லவர்கள் பூதயாகஞ்செய்யவேண்டும். யாகமந்திரஞ்செபிக்கும் பூசுரன் அவ்யாக முடியும்பரியந்தம் நித்திராகாரமின்றி யிருக்கவேண்டுமென்றும், பூதயாகம் காமியார்த்தத்தின் நிமித்தமேயென்றும், மது மாமிசத்தின்மே லிச்சையுள்ளோர்க்கே உரியதென்றும் இதற்குடன்படுவோர் மாயாசம்பந்த முடையவர்களே யென்றும் இதையெவ்வளவு சிறப்புடன் செய்தாலும் சாகினி டாகினி முதலான பூதங்கள் களிப்படையும் பூதயாகமேயென்றும் சொல்லும் வேதத்தின்கருத்து பலியிடும் யாகத்தை விலக்கியதன்றிசெய்யச்சொல்லவில்லையே உங்கள் குரானிலோ மாயாரகிதமாய் நிரூபமாய் நிர்பேதமாயிருக்கும் பரப் பிர்மத்தை தியானித்து யிர்வதைசெய்தால் பாபமில்லையென்று மிதுகடவுள் கட்டளையென்று முரைக்கின்றதே அவை மெய்யென்று நம்பி நம்பி பேதமையுடைய மானிடர்கள்கொல்லும் புழுவைவையைப்போல் நாளொன்றுக் கனேகங் கோஹத்திசெய்து நிரையத்துக்காளாயிருக்கிறார்களே! இந்துக்கள் சகஸ்திர வருஷங்களிலோர் யாகஞ்செய்த லரிதாயிருக்கின்றதே நீங்களரை நாழிகையிற் சகஸ்திர கோக்களைக் கொல்லுகிறீர்களே அன்றுப் பசுவைத் தானு வதைசெய்துண்ண வேண்டும் கோமேதமாதி யாகங்களைச் செய்வோர்க்கு மாயாசம்பந்தமான லோகங்களின் பிராப்தியேயல்லது மோட்சமில்லையென்றும், சூரியானது பயிர்

தின்றல் முதலாகிய தீங்குசெய்யுமாயின் அதை வாயாலதட்டி ஓட்டவேண்டுமென்றும் கையாற்றட்டி ஓட்டக் கூடாதென்றும், ஓர்வேளை தட்டியோட்டுவதா லொரு ரோமமுதிருமாயினதனால் நிரையத்துக் காளாகவேண்டுமென்றும் ஆதிவேதத்தில் முறையிடுகிறதே அல்லாமல் அசுரமான வித்தையையே புசிக்கவேண்டாமென் றுதாமுக்குத் திருவாய்மலர்ந்த கருணாலயன் அலால் செய்யுங்களென்றும், செய்யும்போ தென்னைத் துதியுங்களென்றும், துதித்தால் பாகமுமக் கில்லையென்றும் உரைத்திருப்பாரா? வாயில்லாயேழை மிருகங்களை வெறுப்பாரா? கொலைபாதக மொருவரைவிட்டு நீங்குமா? அதிலும் கோகத்தி கொடியநரகத்தி லமிழ்த்தாமல்விடுமா? ஐயையோ உங்கள் குரானி லிவ்வநீதத்தைச் சொல்லியிருப்பதன்றி இசாக்கென்பவனுக்குரிய வேதத்தில் நிர்க்குணமாய் நிர்மலமாய் நிராங்காரமாயிருக்கும் பராபரத்துக்கு மிருகங்களைப் பலியிடவேண்டுமென்றும், அப்படி பலியிடுவதால் மாந்தர்களின் பாப விமோசனமாய்ப் பரிசுத்த மாவார்களென்றும் இதுதேவனுடைய கட்டளை யென்றும் சொல்லி யிருக்கின்றதோ அனியாயம் அனியாயம் மிருகங்கள் பயன்படுவதென்ன? மனுஷர் பரிசுத்தமாவதென்ன? அந்தோ! இதைமெய்யென்றும், தேவனுடைய கட்டளையென்றும், நம்பலாமா நம்புவோர் மோட்சமடையப்போமா? பூதமேற்றுக்கொள்ளும் பலியை கருணாசாகரனான பரமேசுவர னேற்றுக்கொள்ளுவாரா? மிகவும் பரிசுத்தமான பரப்பிரமக் கடவுள் மிகவும் அசுத்தமான உதிரத்தை யிச்சிப்பாரா? கொலைசெய்யும் கொடிய பாவிகளை ரட்சிப்பாரா? அன்றி கொலைசெய்யவும் பலியிடவும் உண்டாக்கிய கட்டளை தீனதயாபரனான பரமேஸ்வரனிட்ட கட்டளையா? ஆதாமைக்கெடுத்த பைசாசத்தின் கட்டளையா? மாமிசேச்சையுள்ள மாந்தர்களெழுதிவைத்த கட்டளையா நன்றாயோசிக்குமிடத்துக் கொடிய மூதேவிக்குணமுள்ள பூதத்தினுடைய மாயைக்குட்பட்ட மனிதர்வரைந்த கட்டளையாகவே யிருக்குமிதிற் சந்தேகமேயில்லை அப்படிக் கையமிருக்குமாயின் சொல்லும் மௌலியென,

அதற்கு மௌலி கடவுளிட்ட கட்டளையேயன்றி மற்றவர்களின் கற்பனையேயல்ல இக்கட்டளை இப்பிராயிம் பயம்பர் காலத்திலேயே உண்டாயிற்று அதற்கனேக திருஷ்டாந்தங்

கள் குரானிற் சொல்லியிருக்கிறதென்ன, கபீர் இக்கொடிய கட்டளை இப்ராயிம் காலத்திலுண்டான துண்மையேயா மெப்படியெனின் ஆஜராவின் குமாரனாகிய இப்ராயிம் ஆட்டைப் பலிகொடுத்துத் தன்னைச் சேர்ந்தவர்களுக் கூட்டிப்பிரஷ்டர்களாக்கின னதை இஸ்மாயி லினிமே லெப்போழ்து மிப்பலி தன் மதத்தோர் கடவுளுக்குக் கொடுக்கும்படியா யந்தரங்கமாய்ப் போதித்துவந்தா னதாவது கடவுளைத் துதித்து ஒருயிரை வதைத்தால் கடவுளுக்குப் பலியானதேயன்றி வீணாகவில்லை. எப்படியென்றால் சகலருங்கேட்க, ஓ கடவுளே! உனக்குப் பலிகொடுக்கிறே னென்றுரைத்தலும் ஒருவருங்கேட்காமல் கடவுளைத் தியானித்தறுத்தலும் ஓரார்த்த மின்றி உயர்வல்ல எப்போது ஜகதீசுவரனுடைய திருநாமத்தைவழுத்தி வதைசெய்தானோ அது ஈசுவரனுக்கே அர்ப்பணமாயிற்று இதை மெய்யென்று உறுதிப்படுத்த் இஸாக்காலுண்டாகியவேதமே போதுமான சாட்சியாயிருக்கின்றது. அதேதென்றால், இப்பிராயீம் இளைய மனைவியாகிய சாராவென்பவள் தன்னுயிர்போல் பாதுகாத்து வளர்த்த பசுவின் கன்றைப் பலிகொடுத்து இஸாக் கென்பவனைப் பெற்றாள் அவன் வயது மேலிட்டு சிலருக்கு அரசனாகித் தன் தாய் கொடுத்தபடி தன்னைச்சார்ந்தவர்கள் அனைவரையுங் கடவுளுக்குப் பலியிடும்படியாகக் கற்பித்தா னன்றுமுத லவர்கள் பலியிடத்தொடங்கினார்கள். இசாக்கென்பவன் பகிரங்கமாய் பலியிடும்படியாகக் கட்டளையிட்டான், சகலருமறிய விபசாரம் செய்பவளைப்பார்க்கிலும் ரகசியமாய் விபசாரஞ்செய்பவள் மிகவுங் குற்றத்துக்குட்பட்டவளாவா ளதுபோல் அந்தரங்கமாக பலியிடுமுங்களுக் கதிகாக்கினை கிடைக்காமற் போகாது, இவ்வித குற்றங்களுக் காளாக்கிவிட்டது ஆதாமைக்கெடுத்த மாயாபூதமேயாம், துஷ்டர்க ளிஷ்டகாமியார்த்தமாகக் கனிஷ்டதேவதைகளுக்கிடும் பலியைச் சிரேஷ்டமான மாயாதீத பரப்பிரமத்துக்கிடல் மாயா சம்பந்தமின்றி ஞானசம்பந்த மல்லவேயல்ல. எங்ஙனமெனின் எள்ளுக்கு ளெண்ணெய்போலவும் பாலுக்குள் வெண்ணெய்போலவும் பரிபூரணமாய் நிறைந்திருக்கும் நிரூப நிராங்கார நிர்விகார நிர்மல நிரதிசயானந்த கடவுளுக்குப் பலியிடல் கொடிய செய்கையல்லவா? பலதரஞ் சொல்லவா? உங்கள் தாயாதிகளால் இசாக் மதத்தோர் பரா

பரமான பரிசுத்தபரமேசுவரனுக் கோரோர் காலத்தில் நரபலி யுமிடுகிருர்களதுவே பூதத்தின் செய்கையெனக்காட்ட போது மான சாட்சியாயிருக்கின்றது. துஷ்டதேவதைகளுக்குப் பலி யிடவும் கடவுளுக்குப் பலியிடவும் நேரிட்டகாரணம் நரகம் புகவும் பலர்வேண்டியதைக் குறித்தேயாம் (நோன்பென்பது கொன்று தின்னுமை) பரமாத்மா ஸர்வஜீவாத்மா அயிம்ஸா பரமோதர்மா தன்னுயிரைப்போல் மன்னுயிரைப்பார்த்தால் தவம் என்கிற வாக்கியங்களை நன்ருயோசித்துப்பாரும், குரு னில் நான்காம் வகுப்பை வாசித்துப்பாருமென்றுரைத்து, ஓ மௌலி! கொலை செய்வோருக்குக் கொடிய நரகமென்பதற் கு மாட்சிமையானசாட்சி கொடுக்கிறேன் பாருமென் றக்கன் றின் மஸ்தகத்தின்மேற் றனதஸ்தத்தை வைத்து ஓ கொற் றியே! கொலை செய்வோர்களுக்கு கொடிய நரகம் பிராப்தியா தல் சத்தியமா சொல்வாயெனத் திருவாய்மலர்ந்தருள,

அக்கோதனமானது கபீ ருபய பாதங்களின்மேற் றன் தலையைச்சாய்த்து வந்தனஞ்செய்து கண்ணீர்விட்டழுது ஓ ஸ்வாமி! என்னுடைய சரித்திரத்தைச் சற்றே கருணை கூர்ந்து கேட்டருள்வீரேல் தேவரீர் வினவுக்குப் போது மான சாட்சியாகும் நரகமென்பது வேறிடத்திலில்லை. தசை என்பு நரம்பு தோல் மயிர் பச்சை மலசலம் பீளை முதலான வைகளும் நிறைந்திருக்கும் இத்தேகமே நரகமென்னப்படும். இதற்குற்ற குன்மம் குஷ்டம் க்ஷயம் வாதவிரோதம் முதலான கொடிய ரணவியாதிகளே எமதண்டனையெனச் சொல்லப் படும் ஈதுமக்குத் தெரிந்ததே இனி என் வரலாற்றைச் சொ ல்ல வெகு ஆச்சரியமும் பெருந்துக்கமுமாயிருக்கும். அதா வது நான் முற்பிறப்பில் மிகவுங் கற்றறிந்த பிராமணனுகும், நானோர்காலத்தில் இமோர் பர்வதத்தின் சமீபமாக ஓர் காரி யார்த்தமாய் போகையிலங்கு சிலமாந்தர்களோர் மானைக்கொ ன்று அதின் தசைகளை வதிர்ந்து பங்கிட்டுக்கொண்டிருந்த தைக்கண்ட வெண் கண்களின் வழியாய் மாயா சம்பந்தமான மனம் வெளிப்பட்டந்த அரிணத்தினூன்மே லிச்சைகொ ண்டு என்னைப் போகவிடாமல் நிறுத்திவிட்டது பின்பம் மனதை எதிர்த்து நான்சொன்ன வாக்கியங்களாவன ஓ மாயா மனதே! உன்தேகத்தின்மே லுனக்கெவ்வளவு இச்சையோ

அப்படியே சகல ஜீவர்களுக்கு மிச்சையிருக்குமல்லவா அது பதைக்கக் கொன்று தின்று பருத்துப் பெருத்துக்கொழுத்து இவ்வுலகி லெத்தனை நா ளிருக்கப்போகிருய்? புல்லைப்புசித்து வளர்ந்த பிராணியை யறுத்துண்பதா லுனக்கு நிறையமின்றி பிணிகளாற் சூழப்பட்டு வாத பித்த சிலேட்டுமங்களென்கிற காலன் எமதூத னென்பவர்க் கைக்யமாய்த் தாழப் போகிருய்?

ஓர் சீவன் மேதை தனக்குற்ற ஓர் புண்ணுக்கிணையானதென்றுன் கண்ணுற்பார்த்து மஞ்ஞான சம்பந்தத்தால் வாஞ்சித்தாய்? ஐயோ கொல்பவர்க் கொருபங்கு முண்பவர்க் கெண்பங்கு பாபமென்றுரைக்கும் வேதங்களை யோதியிருந்தும்மது மாமிசங்களை மறந்தும் நினையாமலிருப்பதே பிராமணுசாரமென்றறிந்து மடமைக்குணத்தால் மாங்கிஷத்தை இச்சித்த போதே பட்சித்தாயே அந்தோ! ஒருநாளன்றி மறுநாள் புசிக்கத்தகாத புழுக்கள் நெளிந்த புலாலைப் புசிப்போர்மீது புங்கவன் பூரணகடாட்சம் வருமோ ஓ பேதமை மனதே! யானைத் துதிக்கைபோல் நெய்சொரிந்து கோடி ராஜசூயயாகம் செய்வதிலும் ஒருயிரைக் கொன்று தின்னுதிருக்கும் ஜீவகாருண்ய விரதம் மேலானதல்லவோ வென்னுமிவ்விதி நீதிகளைப் பலவாருேதி என் மதிக்குப் போதித்துக் கொண்டிருக்கையில் அதைக்கேட்ட சாரங்கத்தின் தசையைப் பங்கிட்டுக் கொண்டிருந்த மிலேச்சருக்கு மேன்மையான ஜீவகாருண்யம்பிறந்து ஐயோ அறியாமையா லரிணத்தைக் கொன்று பாவத்துக்குள்ளானோமே இப்பரு யெவ்விதத்தால் நீக்கிக் கொள்ளப்போகிருேமென் றலக்கணுற்றயர்ந்து பெருமூச்சு விட்டு என்னை நோக்கி, ஓ பிராமணோத்தமா நீயிச்சித்த மேதையை நீயேபெற்றுக் கொள்ளென் றென்மேலெறிந்து தங்களிருப்பிடஞ் சேர்ந்தார்கள். பின்பு நான் என்மேலெறிந்த மாமிசங்களைப் பார்ப்பதற் கசக்கியமு மச்சமுற்றவனுய்க் கண்களை மூடிக்கொண்டு நிற்கையில் அங்கொரு கலைமான் வந்து பிரலாபித்துத் தன் பிணையைக்கொன்றவன் நானேயெனத் தீர்மானித்துக் கூர்மையான கொம்பாலென்னைக் குத்திவீழ்த்திக் கதறிக்கொண்டே போய்விட்டது பின்பு நானெழுந்து நடக்கச் சக்தியற்றவனு யம்மலையருகில் நகர்ந்துகொண்டே போய் ஓர் குகையிற் றங்கியிருக்க அர்த்தராத்திரியிலோர் தவ

யோகி அக்குகைக்குள்ளிருந்து வெளிப்பட் டென்னுடைய தேகமெல்லா முதிரமயமா யிருப்பதைப்பார்த் தருகில் வந்தென்னை யாதரணைசெய்து நீயா ரிவ்விதத் துன்பமேன் வந்த தென்று வினவ,

ஓ ஸ்வாமி நான் வேதபாராயணஞ் செய்யும் வேதியன் என்வரலா றிவ்விதமென மேல் நடந்த யாவுஞ்சொல்லவே அத்தபோதனன் மறையோனுயிருந்து மாங்கிசத்தை இச்சித் தாயா நீ யிக்குகையிலிருந்தா லெனக்கும் பாபம்வந்து நேரிடுமெனத் தன் சூலத்தாற் குத்தித் தூரமா யெறிந்துவிட்டான். பின்பு ஓர் முட்புதரில் வீழ்ந்த நான் கதறியழுது ஓ ஸ்வாமி! யான்செய்த தீவினை தீரவும் சீக்கிரமென் பிராணன் நீங்கவுங் கருணைபுரியுமையாவென்று தோத்திரஞ் செய்யும்போது அக் கருணுசாகரனை முனிசிரேஷ்டன் யாது காரணத்தாலோ அதிசீக்கிரமா யென்னருகி லோடிவந்து, ஓ பிராமணுேத்தமா யான்செய்த குற்றத்தை மன்னியும் தவத்துக்கு ஜீவகாருண்யமே விரதமெனத் தெரிந்திருந்தும் உன் தீவினையான தெனக்கு முனிவு வரும்படியாகச்செய்து உனக்குற்றபாபத்தி லெனக்குப் பாதிவந்தடைந்தது அதை நீக்கிக்கொள்ளும் பொருட்டுக் கங்காதீரத்திற் றவஞ்செய்யப்போகிறே னுனக் கேதாவ துபதேசஞ் செய்வேனுகில் மற்றப் பாதிபாவமும் ஏற்றுக்கொள்ளவேண்டியதாகு மினி உன்பா லரைக்கணமுந் தங்கேனென்று, ஓ காசிவிசுவநாதா! பூதகணநாதா வென்றுரைத்துக்கொண்டே வாரணுசியைநோக்கி ஓடத்தொடங்கினுர். உடனே என் பிராணனும் அக்காசிநாதனை தியானித்துக்கொண்டே உடலைவிட்டு நீங்கிக் காசியையடைந்து புண்ணிய ஜென்மமான கோவின் கர்ப்பத்திற் பிரவேசித்து 10-மாதங்கள் பரியந்தம் விஸ்வநாதரைப் பூசித்துப் பின்பிப் பூவுலகிற்பிறந்து யாதும் மறந்து மாமிசத்தை இச்சித்த குற்றத்தால் இந்த துடுக்கர் கையிலகப்பட்டுக் கக்கசத்துக்குட்பட்டு நிற்குந்தறுவாயில் பிரமமே ஒருருவான நீர்வர உம்மைத் தெரிசித்துப் பூர்வக்ஞானம் பிறந்து கண்ணீர் விட்டழுதேன் கடவுளையுந் தொழுதேன் பின்புமது அஸ்தமென தஸ்தகத்தின்மேல் வைக்கவே எல்லாப் பாபங்களும் நீங்கிப் பரிசவேதியால் நவலோகங்கள் களங்கம் நீங்கிப் பசும்பொன்னுனதுபோலப் புண்ணியவானுனேன்.

ஓ பரமபுருஷா! பரமசொரூபா! என்மேல் உமக்குக் கருணைவந்த காரணம் முற்பிறப்பில் பிராணன் நீங்குங் காலத்தில், தவயோகியின் தெரிசனங் கண்ட பலனல்லவோ இனி நான் மோட்சவாழ்வைப் பெற்றேன் பாசபந்தங்களற்றேன். ஓ சுகயோகியே! ஆனந்த போகியே ஜீவகாருண்யத்தைக் கைவிடாதே ஜீவயிம்சை செய்வோர்களைத் தொடாதே காருண்யமில்லார்க் குன்பாதங்கொடாதே, காருண்யமில்லாக்கை யேதுக்கென் றெடாதே என்கிற வாக்கியங்களை யுரைத்து மாயமாக மறைந்து பரமபதத்தை யடைந்தது கேட்டீர்களோ சித்தர்களே! இவ்விதமாகக் கோதனம் மறைந்தபின் அங்கு நிற்கும் பலரும் கபீரும் கன்றுக்குண்டான பாக்கியத்தைக் குறித்தானந்த பரவசராய் தன்னைமறந்து சற்றுநேரமிருந்து பின்பு தெளிந்து தோத்திரஞ்செய்து மௌலி முதலானவர்களை நோக்கி ஓ சீலர்களே கொற்றியுரைத்த வாக்கியங்களைக் கேட்டீர்களோ சீவகாருண்யத்தைக்குறித்து முற்காலத்திலோர் விசித்திரமான கதை நடந்திருக்கின்றது. அதாவது நேபாள நகரத்துக் கருகாயிரா தின்ற ஓர்பட்டணத்துக் கிறையவனும் அமைச்சனும் தன்னகருக் கிருகாத தூரத்திலிருக்கும் ஓர் பத்திரகாளியின் கோயிலுக் கிரவில் இருஜாமங்கழிந்தபின் இருவரும் போய்க் காளியைப் பூசித்துத் தங்கள் இஷ்டகாமியார்த்தத்தை முடிப்பிக்கவேண்டுமென்று பிரார்த்தனை செய்துக்கொண்டே வந்தார்கள். இப்படிப் பனிரெண்டு வருஷங்கள் கழிய ஒருதினம் பத்ரகாளி நராதிபன்முன் பிரசன்னமா யிக்கணத்திலெனக்கோர் நரபலிகொடுப்பையாகி னுன்னிஷ்டகாமியர்த்த முடியுமென்று நவில, அரசனமைச்சனை நோக்கி, ஓ மதிமந்திரி இதற்கென்ன செய்யலாமென அமாத்தியன் நாம் நகரிற் போய்க்கொண்டு வருவதற்குள் சூரியோதயமாகும் தடையின்றி என்னைப் பலிகொடுத் துமதிஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ளுமெனப் பார்த்திபன் நாமிருவரல்லோ சுக மனுபவிக்க பனிரெண்டு வருஷமாய் பூசித்துவந்தோம் அப்படியிருக்க நீர் இப்படிசொல்வது தகாது. வேறு மனிதனையே தேடவேண்டுமெனத் துணைவன் நாமிருவரன்றி வேறு மனிதரில்லை யென்ன செய்யலாமென்னப் பூபதி அர்ச்சனைசெய்யு மந்தணனிருக்கிரு னவனைப் பலியிடுவோமெனத் துண்ணியன் ஸ்ரீஹத்தியிலும் சிசுவத்தி கொடியது. சிசுவத்தியிலும்

கோஹத்தி கெட்டது. இதனிலும் குருஹத்தி தீயது. இத னிலும் பிர்மஹத்தி பொல்லாதென்றுரைக்கும் நீதிநூலைக்கற் றறிந்த நாம்பிர்மஹத்திக் குட்படலாமோவென நரேந்திரன் நீர் சொல்வது நிச்சயமானாலும் விருத்தப் பிராமணனைக் கொல்வதால் வரும்பாபம் அவன் தனயனுக்கு நமக்குக்கிடை க்கும் வரத்திற்பாதி கொடுப்பதால் விமோசன மாகாதோ வென ஏனுதிய னர்ச்சகனை விளித்து இராஜன் கருத்தை யறி வித்தனன். வேதிய னரசனு மமைச்சனு மொன்றானபின் நம்மொழி நடப்பதரிதென் றென்று மூரைக்கா திருந்தனன். நிருபன், ஓ பூசுரனே! எங்கள் மொழிக் கிணங்குவையாயி னுனது தனயனுக்கென் னிராச்சியத்திற் பாதிகொடுப்பத ன்றி இப்போது பெரும் வரத்திற் பாதிகொடுக்கின்றேன். மறுக்கவேண்டாமென ஆதிவருணன் இனி நமக்கு முடிவுகா லம்வந்ததாயினும் நெடுநாளாயன்புடன் பூசித்துவருமென் னைத்தானு இக்காளி பலிகொள்ள வேண்டுமென் றுன்னிக் கோயிலிற் பிரவேசித்துக் கோபமேலீட்டால் காளியின் கன் னத்திலறைந்து அடீ சாமுண்டி சண்டிகை! காளி வேதாளி! திரிசூலி! மிகுநீலி! ஏழாண்டிலிருந் தெழுபதாண்டு வரையிற் பூசித்த என்னைத்தானு பலிகொள்ள ஆசித்தாய் நீயுமுன்கோ யிலும் பாழாய்ப் போகவென் றிறைந்தறையும்போது,

அம்மறையோன்முன் காளி பிரசன்னமாகி ஓ விப்பிர னே! நீ முற்பிறப்பில் சூத்திரனாயிருந் துன்னிஷ்ட காமியா ர்த்தமா யிரண்டாடுகளைக் கொண்டுவந் தென்முன் னிருத்தி வாளாலிரண்டையு மொரேவெட்டாய் வெட்டி மடித்தா யவ் விரண்டு மிவ்வூருக்கரசனு மமைச்சனுமாகி இப்போதுன்னை வெட்டத் துணிந்தார்க ளவர்களிருவரு மேககாலத்தி லுன் னைப் பலிகொடுக்காவிடி லின்னமோர் ஜென்மமெடுத்துப் பலி யாகவேண்டியதாய் நேரிடுமதினாலேயே நீ எனக்குப் பலியா னாய் வீணாய்க் கோபஞ்செய்யாதே யென்றுரைத்து மறைந் தெதாவுருவாய் நின்றுளுடனே அம்முப்புரிநூலோன் ஆல யத்திலிருந்து வெளிப்பட்டு அரசனமைச்சனை-நோக்கி நீங்க ளிருவரும் ஏககாலத்தி லென்னை வெட்டுகிறேனென்று வாக் கைக் கொடுத்தால் உங்களிஷ்டத்துக் குட்படுகிறேனென அமைச்சனை நோக்கி, ஓ ஸ்வாமி! அருணமிரண்டு மரசனு மமைச்சனுமானதும் அவைகளை வெட்டின வந்தணனுய்ப்

பிறந்ததும் ஏழுவயதிலிருந்து எழுபது வயதுமட்டும் வணக்கமாய்ப் பூசித்தும் கொலைபாதக முதலியது விடாமலவ்வாட்டின் பிறப்பான நம்மிருவராற் பலிக்குட்படும்படியாய் நேரிட்டதே ஐந்தறிவுள்ள மறையோனை மாரணஞ் செய்யவும் பாவம் நம்மை எக்கதியிற் கொண்டுபோய்விடுமோ நமக்கு வரமும் வேண்டாம் வாழ்வும் வேண்டாமென் றுரைப்பதைக்கேட்ட, அதிபன் நம்மா லிம்மறையோன் மரண மிப்போ தாகாமலினி யோர்காலத்தி லாவானுதலாற் றுணிந்து வெட்டலே நலம். பின்பிவ்வேதியன் நம்மைக் கொல்லாமற் செய்துக்கொள்ளு முபாய மூரைக்கின்றேனென் றமைச்சனைச் சம்மதிக்கச்செய்து வேதபாரகனை இருவரு மொரே வெட்டாய் வெட்டிக் காளியைத் துதித்தார்களுடனே திரிசூலி பிரசன்னமாகி என்னவரம் வேண்டுங் கேளென்று நவில, அண்ணல் எனக்கிவ்வந்தணனை யெழுப்ப வரந்தாரும், என் மந்திரிக்கிஷ்ட காமியார்த்தத்தைத் தாருமென்று பணியவே அதிபனுடைய யுக்தியைக்குறித் தம் மாதங்கி மிகவுஞ் சந்தோஷமுற்று இரண்டு வரமுந் தந்தே னினியோர் வரங்கேளென, பூபாலன் வணங்கி, ஓ அம்மணி! எங்கள் மூவர்க்கும் மோட்ச பாக்கியம் கொடுப்பாயென, அக்கங்காளி அப்படியே கொடுத்தே னின்றுடனிம்மந்திரத்தைத் தியானஞ்செய்துக்கொண்டு வாருங்களென் றோர்மந்திரத்தை யுபதேசித்து மறையோனையுமெழுப்பி மறைந்தாள். பின்பு மூவருங் களிக்கடலி லமிழ்ந்து தம்நகரை யடைந்து தமது பட்டணத்தில் யாராவது ஜீவயிம்சை செய்வார்களாகில் அவர்களை வீரமாகாளிக்குப் பலியிடுவேனென்று பறையறைவித்து ஜீவகாருண்ய விரதத்தைக் கைக்கொண்டு மூவரு மொத்திருந் திறுதியில் மோட்சவீட்டை யடைந்தார்களாதலால் சீவகாருண்யமே மேலான விரதமென் றுரைக்கத்தகும். அன்றி ஜடபரதர் சீவகாருண்யத்தாலேயே பிர்மானந்தத்தை அடைந்தாரெனத் தமால் அதெப்படியென கபீர் ஜடபரதர் காதையை சொல்லத்தொடங்கினர்.

பாடல்.

முன்னமோர்காலந்தன்னில் முனிவுகொண்டையோதிய
மன்னவன்சிவிகைதாங்கு மாசடபரதன் றன்னைத்
தன்னகவலியான்மேன்மேற் றயவிலாதடிக்கும்போழ்தில்
தன்னையுந்தலைவர்தன்னைத் தரிசித்தோனதலாலே. 1

சடபாதனுந்தூயோன் றண்டிகைசுமந்துகொண்டே
அடிபலமிகவும்பட்டே யங்கமேலாசைவிட்டே
முடியுடைமன்னன்மீது முனிவிலாதுறவிகேடம்
மடியுமாயிடினென்செய்வே னென்றவன்மயங்கிநின்றான். 2

மயங்கியோர்சீவனேனு மாழ்குறு திருக்கவெண்ணித்
தயங்கியேபுழுங்கியந்தச் சற்குணனாற்றானாகி
முயங்கியாரடித்தபோழ்தும் முடியினையரிந்தபோதும்
நயங்கொடாச்சீவயிம்சை நாயினேன்செய்வதுண்டோ. 3

தன்னுயிர்போலவிந்தச் சகந்தனிலிருக்குமெல்லா
மன்னுயிர்தன்னைநோக்கி மாதவமுயல்வதன்றி
இன்னலீயெனதாகத்தின் யிச்சைவைத்தசையுமாவி
தன்னைமாய்த்தென்பெறற்கென் றருட்சடபாதன்சொன்னான். 4

சொன்னபினருளிலாத்தீத் தோன்றலுமச்சமாகித்
தன்னையாய்ந்தறிவையுற்ற சாந்தனென்றவனையேந்தி
என்னைநீர்முனியாவண்ண மெனக்கொருவரமேதந்துன்
பொன்னருட்பாதம்போற்றும் போதமீயெனவேதூயோன். 5

யம்பையீக்கொலையாற்றாய வானவராகிலும்மிவ்
வம்புவிதன்னின்மாள்வா ராதலாலருள்கைக்கொண்டு
தம்பிநீகொலையையென்றுந் தவிர்த்திடென்றுரைத்துதன்னை
நம்பினபேரைக்கொல்வோர் நரகத்திலமிழ்வரென்றான். 6

தன்னைச்சிற்றுறவிதீண்டி னக்கணமதனைக்கொய்வார்
தன்னகநொந்ததைப்போற் சகலமுநோகுமென்றே
உன்னியேநோக்கமாட்டா ருலகத்தின்மாந்தரந்தோ
என்னவாறடைவார்முத்தி யிறைவனேசொல்லக்கேளே. 7

சீவகாருண்யமின்றிச் சீவனைவதைத்தபேர்கள்
பாவநீங்குவதுமில்லை பரத்துவமடைதலில்லை
சீவனைவதைத்தயோதன் றேகத்தைக்காத்தலாலே
ஆவதொன்றுளதோவிந்த வாக்கையாலென்றுரைத்தே. 8

திமிரினையகற்றித்தன்னை தெளிவித்தும்போவென்றோத
நிமிச்சக்ரவர்த்தியென்னு நிருபன்றாழ்ந்தகலப்பின்னர்
அமைவுளவுளத்தனான வருட்சடபாதன்பிர்ம
நமைவிடவேறேவென்னு நாட்டத்திலிருந்தான்றானே. 9

ஆரண்யந்தன்னிற்சென்று மறையன்றண்டிகைசுமந்தும்
காருண்யமில்லாமன்னன் கையினாற்படைக்கநொந்தும்
காருண்யந்தனைவிடாமற் காத்தனனதனானீவிர்
காருண்யந்தன்னைக்கொண்டே கதிபெறவேண்டுமென்றான். 10

அயன்றலையறுத்தான்ற னலந்தனன்பலநாண்முன்னே
பயன்றவன்வாலிதன்னைப் பதுங்கிருந்தம்பாற்கொன்ற
நயந்தருமிராமர்தன்னை நன்கதாமறுஜென்மத்தில்
ஜெயமுளவேடனுகிக் கிருஷ்ணனைச்செயித்திட்டானே. 11

குருபத்தன்றனையயோத்தி மன்னவன்செகுத்தலாலே
அரியவென்மைந்தாமைந்தா வென்றனுருயிரிழந்தான்
அரிணமாப்புணருந்திவ்ய வமுதந்திமுனியைக்கொன்றே
உரியநல்லுயிரிழந்தா னுத்தமப்பாண்டுராஜன். 12

சிவகாருண்யமின்றிச் சிறுவயதினிற்செய்தீமை
மேவிமாண்டவ்யர்போல்லா வேதனைக்கழுவிலுற்றூர்
பூவுலகினிற்றவஞ்செய் புனிதரைக்கொன்றதாலே
ஆவிநீங்கிடவாதாபி யகத்தினுற்குணவானுனே. 13

சிவகாருண்யமில்லார் செயுந்தவமவமாய்ப்போகும்
சிவகாருண்யமில்லார் செயுமறம்மரமதாகும்
சிவகாருண்யமில்லார் சேருவரந்தகாரம்
சிவகாருண்யமில்லார் தீமைசெய்கிருதராமே. 14

சிவகாருண்யமில்லாச் சென்மமேமிருகஜென்மம்
சிவகாருண்யமில்லாத் தீயரேபிணியாற்சூழ்வார்
சிவகாருண்யமுள்ளோர் தமைத்தொழுஞ்ஜீவன்யாவும்
சிவகாருண்யமுள்ளோர் சேருவர்மோட்சந்தானே. 15

சிவகாருண்யமுள்ளோர் செய்வதேதன்றபஜபங்கள்
சிவகாருண்யமுள்ளோர் செய்வதேதன்றியானந்தானஞ்
சிவகாருண்யமுள்ளோர் செய்வதேதன்யாகம்யோகம்
சிவகாருண்யமுண்டேற் சிற்சுகமடையலாமே. 16

ஆவியையேத்தினுலென் னுதித்தன்மயமானுலென்
சேவைசெய்தின்புற்றுலென் திருக்கவாம்விழிபெற்றுலென்
ஓவியம்போதுற்றுலென் னுத்தமோத்தமனுனுலென்
சிவகாருண்யமின்றேற் றீயனென்றுரைக்கலாமே. 17

ஆவியைக்கொன்றுற்றோர்க ளாக்கையைக்காத்தலாலே
ஆவிநீங்கிடும்போதுற்ற வல்லறீர்த்தின்பீவரோ
ஆவிநீங்கிடினுந்தீய வழல்புகுந்திடினுங்கொன்மா
பாவியென்கிறபேர்வேண்டாம் படிதனின்முடிவிதாமே. 18

என்றிங்ஙன மூரைக்கும் ஜீவகாருண்ய வாக்கியங்களைக் கேட்ட தமா லானந்த சாகரத்தி லமுழ்ந்தினவனுய் கபீரைக் கட்டி யணைத்து முத்தமிட் டென்னையனே! உன் மதுரமொழிகளைக்கேட் டின்பமடையாதவர்களு முண்டோவென் றக்க

ணம் மனையாள் முதலானவருடன் தன் வீட்டை யடைந்து சீவகாருண்ய விரதத்தைப்பூண்டு பகவவ்ஸ்மரணையால் காலங் கழிக்கத் தொடங்கினர்கள்.

துலுக்கரோ கபீர் நவின்ற மொழிகளெல்லா மூத்தமமா கவேயிருக்கின்றதென்னுஞ் சீவயிம்சைசெய்வதற் கிடைந்தி ருந்தார்கள். கேட்டீர்களோ சித்தர்களே கபீருரைத்த ஜீவ காருண்ய மொழிகளைக்கேட்பவர்க் கிம்சை செய்யும்படியான மனம் வருமோ வராது வருமாயின் தீவினைக்காளாவார்கள் என நாபாஜி சித்தருரைத்துப் பின்னுஞ் சொல்லத் தொடங் கினர்.

கபீர் பசுவின் கன்றைக் கொல்லாமல் மறுத்த
அத்தியாயம் முற்றிற்று.

பன்னிரண்டாவது அத்தியாயம்

கபீர் தன் மனைவியை வர்த்தகனுக் களித்த[illegible].

இப்பால் கபீர் சிலநாளில் தர்ம விஷயத்தில் தன்தந்தை சம்பாதித்து வைத்திருந்த ஆஸ்தியை யெல்லாம் நாஸ்தி செய்து நெய்யுந்தொழிலாற் சீவனம் செய்துக் கொண்டிருக் கிற காலத்தில் ஒருநாள் வஸ்திரமும் விலை போகாமல் புசிப் புக்கு மொன்றுமில்லாமல் காலையிலிருந்து மாலைமட்டும் பட் டினியாயிருக்கும்போது, பகவான் கபீரை சோதிக்கவெண்ணி நூறு சாதுக்களாய்க் கபீர் வீட்டையடைந்து ஓ புண்ணிய வானே! இன்றையத்திவசம் சூரியோதயமான முதற்கொண்டு எங்களுக்கெங்கும் அன்னம் அகப்படாக்குறையால் பலவிடங் களிற்றிரிந்து மிகவும் நொந்து தருமத்திற்சிறந்த பிரபு நீ ரெனக்கேள்விப்பட் டும்மிடமடைந்தோம் ஓ சீமானே! இட் சணம் பட்சத்துடன் எங்கள் குட்சி நிறையப்பட்சண மிடுமை யாவெனத் துதிக்கும்போது, கபீர் தன்னாயகியை விளித்து ஓ என்னுயிர்த்துணைவியே! தாய் தந்தையர் பட்டினியால் வாட் டமடைந் திருப்பதற் காயாசமேலிட் டிருக்கும் நம்பால் அனேக சாதுக்கள்வந்து அன்னங்கேட்கிறார்களே இல்லை யென்போற் கில்லையென லில்லறத்தாற்குரிய தர்மமல்லவே

இரந்தும் பரந்துக்கிடுவெனத் தர்ம சாஸ்திரம் முறையிடுகின்றதே ஓ மாதரசே! இச்சாதுக்களின் குட்சிபாதை நீங்குவதற்கேதேனும் பொருளிருந்தால் விக்கிரையஞ்செய்து அடியார்களுக் கன்னம்படைப்பாயென, சுந்தரா ஓ சுவாமி! உம்மையறியாமலும் ஒரு வஸ்துவை நானொளித்து வைத்திருக்கின்றேனா இல்லையே இவ்வீட்டை விற்றுத் தொண்டர்களுக்குத் தொழும்பு செய்யலாமென்றாலும் ஒருவருக்கடமானமாகவிருக்கின்றதே மங்கிலியத்தைக் கொடுப்போமென்றால் குழாயன்றி மற்றதெல்லாம் விக்கிரையப் படுத்திவிட்டோமே மாங்கிலியக் குழாயைக்கொண்டுபோய் விற்றால் இத்தனை சாதுக்களுக்குத் தேவையான பதார்த்தங்களகப்படமாட்டாதே என்னும் பற்பல வார்த்தைகளுரைத்து முடிவில் ஓ என் பிராணவல்லபா! அடியாள் கடைத்தெருவுக்குப் போகும்போதும் வரும்போதும் ஒரு வர்த்தகன் என்மேற் சிறிய கல்லை யெறிவதன்றி ஓ பெண்ணே! நீ யென்னிடமோர்நாள் வருவையாகில் தேவையான திரவியமகப்படும் என்று சொல்லுகிறார் ஆகையால் இந்த மூகாந்திரமாய் நடந்தால் சாதுக்கள்குறையும் தங்கள் வியாகூலமும் நீங்கும் மனைவியை விற்பது மானபங்கமெனக் கருதவேண்டாம் நவகண்டங்களையாண்ட அரிச்சந்திர மகாராஜன் தருமார்த்தமாய்த் தன் நாயகியையும் கான்முளையையும் விற்று புலையனுக் கடிமையாய்ப் போனாரெனப் புராணங்களில் முறையிடுவது நீரறியாத தல்லவென்றுரைக்க,

அதுகேட்ட கபீர் சந்தோஷ சாகரத்திற் படிந்தவராய்த் தன் காந்தையைப் பலதர மாலிங்கனஞ்செய்து அன்புடன் முத்தமிட்டு ஓ என் குலவிளக்கே! கோதிலாமதியே! தீதிலா வமுதே! குணபூஷணமே! சுந்தரமே! சோபிதமே! நீ நல்ல உத்தம பத்தினியாதலால் இத்தருணத்திற் பரிசுத்தமொழியைப்புகன்று என்னைக் காத்தாய் அடியார்கள் பசியைத் தீர்த்தாய் வாழ்க்கைக்குத் துணையான மனையாளிருக்கும்வீடு கற்பகவிருட்சங்களடர்ந்த சுரநாடு எனச்சொல்லப்படும். அருந்ததிக்கிணையான திருந்திய தேவியாகிய நீ எனக்குத் துணையியாயிருக்க எனக்கோர் குறைவுமுண்டாகுமோ ஓ மதியிற்சிறந்த புனிதவதியே! இக்கணம் அவ் வர்த்தகனைக்காட்டி என் வியாகுலத்தையோட்டிப் பத்தர்களைப் பாராட்டி விருத்தாப்

பிய தாய்தந்தையரைச் சீராட்டி இல்லற தருமத்தை நிலைநாட்டிவைக்கச் சீக்கிரம் புறப்படுமென்றழைக்கும் கணவனைச் சூழ்ந்து பலதரந் தாழ்ந்து வியாபாரியைக் காண்பிக்கிறேன் வாருமென் றழைத்துக்கொண்டுபோய்த் தன்மேற் காதலாயிருக்கும் வர்த்தகனைச் சுட்டிக்காட்டினள் கபீர் அவ்வணிகன்பாற்சென்று ஓ தனவானே! கனவானே! இவளென்மனையாளாகும் தாங்கள் இவ்வனிதையின்மேற் கொண்டிருக்குமவா நீங்க இவளை உமக்கொருநாள் கொடுக்கிறேன் பதில் சத்புருஷர்கள் புசிக்கத்தகுந்த தவசங்களளித்து என்னைக்காப்பாற்றுமையா வெனத்துதிக்க, வர்த்தகன் காமத்துக்குக் கண்ணில்லை காமிக்கு முறையில்லை யென்னும் பழமொழிப்படி காமாந்தகாரத்தால் சுந்தரா தன்னருகில் நிற்பதைக்கண்டு அடங்கா விகாரங்கொண்டு கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற்போலவும், மார்க்கத்தில் மாணிக்கங் கிடைத்தாற்போலவும் பூரித்துக் கபீரை நோக்கி, ஓ கபீர்! நூறுபேருக்களிப்பேன் இப்பெண்ணை யென்னிட மொருதாஞ் சயனித்திருக்கக் கருணைகூறுவாயெனத் துதித்தான்.

கபீர் ஒருதரமே இன்று இராத்திரிக்கெல்லாம் வைத்திருந்து மறுநாளனுப்பலா மிதுசத்தியமென நம்புமென் றுரைத்து நூறு சாதுக்களுக்குத் தேவையான பதார்த்தங்களைக் கொண்டுபோய் மனைவியைத் துரிதமாகப் பாகஞ் செய்யும்படியாகச்செய்து சாதுக்களின் பசியாறப் படைத்துத் தாய்தந்தையரை நோக்கி ஓ மாதா பிதாவே! சாதுக்களுக் கின்னஞ் செய்யவேண்டிய பணிவிடை செய்துகொண்டிருங்கள் ஓர் கணத்தில் வருகிறேனென்றறைந்து தன்மனையாளை நன்றாய் சிங்காரித்துக் கொள்ளச்செய்து அழைத்துக்கொண்டு துரிதமாய் வர்த்தகன் வீட்டை நோக்கிவருகையில், வர்த்தகன் தன் பள்ளியறையை நன்றாய்ச் சிங்காரிக்கச்செய்து தானும் ஆடையாபரண அலங்கிர்தனகச் சாந்து சவ்வாதுகளைப் பூசிக்கொண்டு சுந்தரா எப்போது வருவாளோவெனக் காத்திருக்குந் தருணத்தில் கபீரும் சந்தோஷசித்தனாய் அங்கடைந்தார். அவரையும் சுந்தராவையுங்கண்ட வணிகன் சந்தோஷ சித்தனாக வாருமென் றழைத்துக் கொண்டுபோய்ப் பள்ளியறையிற் பிரவேசித்துக் கபீருக்கோர் மோகனமாலையைக் கொடுக்க வந்தான்.

கபீர் ஓ புண்ணியவானே! சத்சாதுக்களுக் கன்னமளித்த உமது குணத்தை நானெக்காலத்தில் தீர்க்கப்போகிறேனோ வென்கிற வாட்டத்துடனிருக்குமெனக் கீதளித்து மனக்கோட்ட மடையச்செய்யாமல் உமது மனோபீஷ்டத்தை முடித்துக் காமவேஷ்டையை நிவர்த்தி செய்துக்கொள்ளுமையா வெனப்பகர்ந்து அவ்விடம்விட்டு நகர்ந்துபோகவெண்ணங் கொண்டு தன்னுயகியை விளித்து ஓ மாதரசே! இன்றிராத்திரி இவரிஷ்டத்துக்கோர் நஷ்டம் வராமல் நடந்துக்கொள்ளென்றுரைத்துத் தன்வீட்டையடைந்து சாதுக்களுக்குச் சேவை முதலானதுஞ் செய்துக்கொண்டிருந்தார். வர்த்தகனோ மூடவன் கொம்புத்தேனுக் காசைப்பட்டாற்போலவும், விபசாரி பரமபதத்தைக் கோரியதைப்போலவும், துரோபதையை யிச்சித்த கீசகனைப்போலவும், தமயந்தியையிச்சித்த கிராதனைப்போலவும், புரூரவச்சக்கிரவர்த்தியின் காந்தையையிச்சித்த ஓர் வர்த்தகனைப்போலவும், கபீர் மனைவியின்மேல் மோகங் கொண்டு ஓ பெண்ணே! என்னிரு கண்ணே! அன்புள்ளமானே! இன்பந்தருந் தேனே! பஞ்சுபோன்ற பாதங்கள் நோக என் நிற்கின்றாய் பஞ்சணைமேல் வீற்றிருப்பாயாக எனக்குற்ற காமதாகத்தைத் தீர்ப்பாயாகவென் றுரைத்துக்கொண்டே அவ்வறையின் கதவை மூடினான். உடனே பகவான் அவ்வூர் கொத்தவால் வேஷத்துடன் வந்து அடா துன்மார்க்கா! அறிவில்லா மூர்க்கா! கதவைத்திறடா பரஸ்திரீகமனஞ்செய்யுந்திருடாவென்றக் கபாடத்தை எட்டியுதைத்து அதட்டினார். வணிகன் சுந்தராவைக் கட்டிலின்கீழ் ஒளித்துக்கொள்ளென் றுரைத்துப் பயங்கரத்துடன் அரணத்தைத்திறந்து புறம்போந்து கொத்தவாலைக் காணமல் கதவை மூடிக் கபீர் மனைவியினருகிற்சென்றான். பகவான் முன்போலவே அதட்டினார். பின்னுமவ்வாணிப னச்சமுற்றவனாய் வெளிப்பட்டுச் சுற்றுப்பக்கங்களிலும் பார்த்துப் பின்னுமுட்போ யடங்காக் காமவிகாரத்தால் அப்பத்தினியை ஆலிங்கனஞ் செய்யப்போனான். பகவான் கொத்தவாலுருவுடன் அக்கதவு உடைப்படும்படியா யுதைத்துத்தள்ளி வர்த்தகன்மேல்குதித்து கீழே தள்ளி மிதித்து அடா பஞ்சமாபாதகா எமகாதகா! சத்குருவின் மனைவியும் சாதுவின் மனைவியும் தன் தாயல்லவோ? இவ்வுத்தமியைக் காமவிகாரத்தோடும் பார்த்த உன்னிரண்டு

கண்களையும் பிடுங்கியெறிவேன் ஆலிங்கனஞ்செய்ய வெத்தனித்த கரங்களைத் துண்டிப்பேன் இப்போதே உன் சிரத்தைக்கண்டிப்பேன் பெண்ணேயென் றழைத்த வாயைப் பிளந்து மணிக்குடலெடுத்து எமலோகத்துக் கனுப்புவேனென மாறி மாறியடித்து முழங்கையாலிடித்து மூர்ச்சையாய் விழச்செய்து சுந்தராவின் கரத்தைப்பிடித் திழுத்துக்கொண்டே போய்க் கபீர் வீட்டினுள் தள்ளி மாயமாய் மறைந்து காற்றுமழையுங் கலந்தடிக்கச்செய்தார்.

சுந்தரா ஐயோ அர்த்தமளித்த வர்த்தகன் அனியாயமாயடிபட்டானே மானங்கெட்டானே பழிவந்து நேரிட்டதே என்னவென்று பதிக்குரைப்பேன் சங்கதி யெப்படி தெரிவிப்பேன் என்கிற அச்சத்தால் சற்றுநேரம் நின்று ஒன்றுந் தோன்றாதவளாயுள்ளபடி முடியட்டுமென்று பிரவேசித்தாள் சாதுக்களுக்குப் பணிவிடை செய்துக்கொண்டிருக்கும் கபீர் தன்னாயகியைக்கண்டு பெருங்கோபங்கொண்டு வெளியிலழைத்துவந்து மிகவும் நொந்து அடி பேதாய்! அறிவில்லாக் கோதாய்! வர்த்தகனை மோசஞ்செய் தென்னிடமேன் வந்தாய்! எனக்கேனிடர்தந்தாய்! ஆ! ஆ! என் வாக்கைத்தடுத்தாயே! துன்பத்தைக் கொடுத்தாயே! பதிவிரதத் தன்மையை விடுத்தாயே! தயிரியத்திட னென்னை யடுத்தாயே! நெடுநாளாய்ச் செய்துவந்த நோன்பைக் கெடுத்தாயே! பஞ்சமாபாதகங்களுக்கு விமோசனமுண்டு வாக்கைமறுக்கும் பேர்க்கோர் போக்குங்காணேமே வாக்கைக் காப்பாற்றும் நிமித்தம் அரிச்சந்திரன் வெகு கஷ்டப்பட்டுத் தன் மனைவியை வெட்டத்துணிந்தான். தசரதனும் கர்ணனும் தன் பிராணனை யிழந்தார்கள். பரமசிவன் பத்மாசூரன்துரத்த வோட்டமெடுத்தான். அருச்சுனன் கிருஷ்ணருடன் போர்புரிந்தான் வாக்கைக் காப்பாற்றும் நிமித்தமேயல்லவோ பாஞ்சாலன் கட்டுண்டான். அடி பாதகி! எமகாதகி! என் வாக்கை வீணாக்கி நரகத்துக்காளாக்கிவந்துவிட்டாயே! நீ கெட்டாயே எனப் பற்பல வார்த்தைகளாடி நிந்திக்கும்போது, சுந்தரா காவலனடிகளில் வணங்கி, ஓ ஸ்வாமி! சத்புத்திரனுக்கு மாதா பிதாக்களே தெய்வம், சத்சீடனுக் காரியனே தெய்வம், இராஜனுக்கு நீதியேதெய்வம், பதிவிரதைகளுக்குப் பதியேதெய்வம், நற்புதல்வனுக்குத்தந்தை தாய் வாக்கே வேதம், மாணாக்கனுக்குக் குருவாக்கே

வேதம், இறைவனுக்கு நீதிவாக்கியமே வேதம், பதிவிரதைக்குக் கொழுனன் வாக்கே வேதம் எனத் தெரிந்திருந்தும் உம்முடைய வாக்கை மரணம் வந்தாலும் மறுப்பேனு தாங்களென்னை வர்த்தகன் வீட்டில் விட்டுவந்ததும் உளவறிந்த இவ்வூர் கொத்தவால் வர்த்தகனையடித்து மூர்ச்சையாய் விழச்செய்து என்னைப் பரபரவென் றிழுத்துக்கொண் டிவ்விடம்விட்டுப்போய்விட்டான் நானென்செய்யட்டுமென்று மூறையிட்டு ஓவெனக் கூவியழுதாள்.

அவ்வழுகுரலோசையை சாதுக்களும் தாய் தந்தையுங் கேட்டு ஓடோடியும் வந்து என்னகுறை நேரிட்டதெனக் கேட்க, கபீர் அடங்காக் குரோதங்கொண்டு ஓர் பெரிய தண்டத்தைக் கையிலேந்திக்கொண்டு என்மனையாளை நானொருவனுக்குப் பிரியத்துடன் கூட்டிக்கொடுத்தால் இந்தவூர் கொத்தவால் தடுக்கும்படியான காரணமென்ன இக்கணமே அவனைக்கொல்லாமல் சற்றும்பொறுக்கமாட்டேனென்று மனையாளையழைத்துக்கொண்டோர் கணத்திற்சென்று கொத்தவால்வீட்டின் கதவைத் தடியாலடித் துடைத்து, அடா துன்மார்க்க கொத்தவாலே! நானென் மனையாட்டியை வர்த்தகனுக்குக் கூட்டிக்கொடுத்தால் நீயாரடா மறுக்கிறவன் வணிகன் பதைக்க அடிக்கிறவன் சீக்கிரம் வெளியிற்புறப்படு இல்லாவிட்டால் உன்னையும் உன் களத்திர புத்திர மித்திரர்களையு மித்தடியாற்கொன்று ஒருகணத்தில்வென்று என்பராக்கிரமத்தைக் காட்டிவிடுவேன் எமலோகஞ்சேர வாட்டிவிடுவே னென்றிறைந்துறைத்து முனிவுடனிறைந்து அதட்டும்போது அப்பேதமைக் கொத்தவால் திடுக்கென்றெழுந்து அவர் சேவடியில் விழுந்து அப்பனே சரணம், ஒப்பிலாஞான வுத்தமாசரணம், செப்புதற்கரிய செல்வனேசரணம், இப்புவியோர்களேத்துவோய்சரணம், அற்புதாசரணம் அரியனேசரணம், விற்பனமெய்த்தவ விமலனே சரணம், தப்பிதஞ் செய்யாத் தமியனை நீர் கோபிப்பது நலனோ பிரானே சரணம், சரணமெனத்துதித்து ஓ மாதவனே! நானொரு சேதியுமறியேன் என்ன காரணம் யார்செய்தார் குறைகள் என்னையேன் வீணுச் சபிக்க வந்தீர் துன்பந் தந்தீரென்று சேவகருடன் புறப்பட்டு வர்த்தகன் வீட்டையடைந்து மூர்ச்சையாய் வீழ்ந்துகிடக்கும் வர்த்தகனுக் குபசரணைசெய்தெழுப்பி என்னகாரணமென்று கே

ட்க, வணிகன் கொத்தவாலைக் கண்டவுடன் கிடுகிடென்று நடுநடுங்கி என்னைக் கொல்லப் பின்னும் வந்தாயாவெனக் கூவிப் பலபக்கங்களிற்றுவி மூர்ச்சையடையவே, கபீர் ஆக்கிரநிக்குரோதனாய் ருத்திரரூபத்தைக்காட்டி அடா கொத்தவாலே நீயே யிக்காரியஞ் செய்தா யிதற்கிவ்விருவரும் சாட்சி இதோ இத்தண்டத்தா லுன்மண்டையைச் சிதறப்புடைக்கிறேன் பாரெனத் தடியை ஓங்கவே ஸ்ரீமந் நாராயணர் பிரசன்னமாகி ஓ கோசதிபத்தில் மிகுந்த கபீர்தாஸனே! மூகவிலாசனே! அந்தக் கொத்தவால் வர்த்தகனை யடிக்கவில்லை. இந்தக் கொத்தவாலே அடித்தானாதலால் அவன் மேலோங்கின தடியை என்மே லோங்கியடித்து உன் வைராக்கியத்தை முடித்துக் கொள்ளென்று நவரத்ன கசிதமான கிரீடத்தைத் தாழ்த்தி முதுகைக் காட்டிக் குனிந்துநின்றார். ஸ்ரீமந் நாராயணனைக்கண்ட கபீர் கையிலிருந்த தடியை எறிந்துவிட்டுப் பலதரஞ்சூழ்ந்து பாதங்களிற் றாழ்ந்து ஓ அனாதரட்சகா! அகிலாண்டகோடி பிரமாண்டநாயகா! ஸ்ரீராமா பரந்தாமா! சகஸ்திரநாமா! ஓ பகவான் ஓ தெய்வமே! அடியேனுக்காகக் கொத்தவால் வேஷமுந் தரித்தீரோ,

வர்த்தகன்மே லார்ப்பரித்தீரோ? வர்த்தக னுமது கரங்களா லடிபட என்னபாக்கியஞ் செய்தானோ? ஏதுதவஞ்செய்தானோ? அடியேனை வோரடி அடிக்கலாகாதா? எனக்குற்ற குறைகளெல்லாம் நீங்கிப்போகாதோ? அடியேனுக்காகக் குனிந்து நிற்கலாமா? யாவரும் வணங்காமுடியைத் தாழ்த்தப்போமா? சுந்தராவைக் காக்கவந்தாயோ? அரிதான சேவை தந்தாயோவெனப் பாதங்களிற் பணிந்தபடி பலபல விதங்களாகத் தோத்திரஞ் செய்யும்போது, பகவான் ஓ கபீர்! உலகில் தன் ஸ்திரீயை ஒருவன் தொடுவானானா லவனைக் கொல்லத் துணிவார்கள். கொன்றுவிடுவார். அப்படியிருக்க நீரிப்படி செய்யலாமா? உனக்கு மானமில்லையா? ஈனமில்லையா? நீர் புருஷனல்லவா? விரித்துச் சொல்லவா? தர்மார்த்தமாய் தன் ஸ்திரீயைப் பலவந்தமாய்க் கூட்டிக்கொடுக்கலாமா? புருஷனுக்குள்ள அபிமானத்தை விடுக்கலாமா? பதிவிரதையைக் கெடுக்கலாமா? அபகீர்த்தியை யடுக்கலாமா? இப்படி பரமசிவனும் ரகுராஜனும் பிறருக்குத் தன் மனைவியர்களைக் கொடுக்கவில்லையா? வெனச் சங்கை செய்வீரோ? அவர்கள் ஒருவர் வாஞ்சி

த்த வஸ்துவை வைக்கலாகாதெனக் கொடுத்து விட்டார்க ளப்படிசெய்ததும் அவர்களுக்குற்ற ஞானப்பயித்தியமாகும். நீர் ஒருவர் கேட்காமலிருக்க பலவந்தமாகக் கூட்டிக் கொடுத் தீர் நாணத்தை விடுத்தீர் சொற்பமான தானியதவசங்களுக் காகத் தாரத்தை கொடுத்தவர்களு மூண்டா அடியார்களுக் கன்னமிட அருந்ததிக்கிணையான அரிவையை மனந்துணி ந்து பிறனுக் களிக்கலாமா? இப்படி இவ்வுலகில் நடந்திருக் குமாவெனப் பற்பல வார்த்தைக ளாடும்போது,

கபீர் பகவானை நோக்கி ஓ மாதவனே ! என் மானம் உன் மானம் நான் நீ என துனது என்னும் விகற்பங்க ளெல்லாம் உமது லீலையான மாயாசம்பந்தமல்லவோ வாசாக்ஞானத்தா லும்மை வெல்லவோ உமதரிய சேவைபெற்றவர்களுக்கு ஞா னாந்தகார கூபத்தி லமிழ்ந்திருக்கு மக்கிரந்தி யுள்ளவர்களுக் கியல்பான மானவீனமு மிருக்குமோ? அருச்சுனனுக் குடன் பிறந்தானை பலராமருக்குந் தெரியாம லிணங்க வைத்த தின மல்லவோ அப்பார்த்தனை அசுவத்துடன் பூ பிரதட்சணஞ் செய்தகாலத்தில் ஓர் தினமிரவில் காமவிகாரத்தால் கலக்கமுற் றிருக்க சுமித்திரைபோயவனை உல்லாசப்படுத்தின தினமல் லவோ உமது கபட நாடகத்தை விரித்துச்சொல்லவோ மர்ம மறிந்தவர்களுக்கு மானமில்லை இச்சை பிறந்தவர்களுக்கீன மில்லை என்னும் பழமொழி மெய்யா பொய்யா யிருக்கட்டும் சாதுக்களுக்குதவிய வர்த்தகனை வீணாயேனடித்தீர் என்வாக்கு தத்தத்தை யேன் கெடுத்தீர் என்று பணிய,

பகவான் ஓ கபீர் சாதுக்களுக் கன்னமளித்த இவ்வர்த்த கன் உமது மனைவியைத் தொடுவானானா லுடனே பஸ்பமா யெரிந்து போவதற்கோர் ஐயமுளதோ உமக்குதவிசெய்தவ னுயிர்நீங்குதல் தர்மமோ உமது மனைவியையடுத்துயிர்விடுத் தெமபுரம்போதலைத் தடுத்து அடித்தது கர்மமோ உமக்குந் தெரியாத மர்மமோ வெனப்புகல, கபீர் ஓ ஸ்வாமி! அடியே னிசைந்து கொடுத்தபின் வணிகன்மேற் குற்றமென்ன அவ னென்றும் பலாத்காரம் செய்யவில்லையே யெனத் தொழப் பகவான் ஓ அரிபக்தனே! அவனுக்கு விருப்பமிருந்த கார ணத்தாலல்லவோ நீர் கொடுக்க நேரிட்டது அன்றி எரியும் நெருப்பை விருப்பத்துடன் தொட்டால் சுடாமலிருக்குமா நீரவனுக்குச் சொந்தமாகக் கொடுத்தாலும் சொந்தவிளக்கெ

ன்று மூத்தமிடலாமா? பரஸ்திரீயை விகாரத்துடன் தொட லாமா? பரஸ்திரீகமனஞ் செய்தவர்களெல்லாம் வாழ்விழந் து தாழ்வடைந்தார்களேயன்றி மேன்மையடைந்ததுண்டோ பலவந்தமா யணையவரும் ஸ்திரீ பரத்தையென்றும் அவள் முகம் பார்க்கவேகூடாதென்றும் வேதமுறையிடுவது பொய் யா பரஸ்திரீயை இச்சித்த மாத்திரத்தில் மலைப்பாம்பாய்ப் போகும் சாபத்தைப்பெற்ற நகுஷராஜனுடைய சரித்திர மறி யர்தவரோ? பரஸ்திரீகமனஞ் செய்தவன் இகபரத்துக் குத வாதவனென்றும் பரஸ்திரீகமனஞ் செய்பவன் பாவிகளிற் சிறந்த கொடும்பாவியென்றும் பாதாரகமனன் குடும்பம் பாழா ய்ப் போகுமென்றும் பரதாரகமனனுக்கு ரவ்ரவாதி நிரை யமே பிராப்தியாகுமென்றும் பிறர் மனையாளைப் புணர்ந்தவ னே பேடியாய்ப் பிறப்பானென்றும் பிறர்மனையாளை விகார மாய்ப் பார்த்தவனே கண்ணிழந் திறப்பானென்றும் அயலா ன் மனைவியை ஆலிங்கனஞ் செய்தவனே அறத்தால் கரங்க ளறுபட்டு மடிவானென்றும் அயலான்மனைவிக் கர்த்தமீந்த வள் கற்பையழிப்பவனே அநீதமாய்க் கொலைக்குட்பட்டழி வானென்றும் பெரியோர்களாலுரைக்கப்பட்ட வாக்கியங்க ளபத்தமோ? ஒருவர் குடும்பத்தை இடும்பா லலக்கணுறச் செய்வது நீதியோ? கற்பழிந்த காந்தை கார்த்தபமென்பது பொய்யோ? நீர் சாதுக்கன்னமளித்துப் புனிதனுனீர்கள் வர் த்தகனுமது நாயகியின்மேல் மோகித்து நரகத்துக் காளா னன் பலவந்தமாய் வணிகனுக்குமது மனைவியைக் கொடுத்த வனே அந்தகாரத்துக் காளாக்குதல் நன்மையோவெனத் திரு வாய் மலர்ந்தருளக் கபீர் ஓ என்னாண்டவனே உமது கரங் களா லடிபட்டவனுக்கும் நிரையத துன்பமுண்டா? அனேக காலந் தவஞ்செய்தவர்களுக்குங் கிடைத்தற் கரிதான உம் மைக் கண்ணாரக் கண்டவர்களுக்குமோர் குறையுண்டா, ஓ அச் சுதனே! உச்சிதனே! என்வாக்கை எவ்விதமாய்க் காப்பாற்று வே னதற்கோர்மார்க்க முரைக்கவேண்டு மெனப்பணிய, பக வான் ஓ மாதவனே! உனக்குச் சொந்தமான முத்திக்காந்தை யை அவனுக்களித்து அவளுடன்கூடி இன்புற்றிருக்கும்படி யாகச்செய்வீர் ஏனெனில் உத்தமர்களைப் பகைத்தவர்களும் முத்தர்களாவாரெனும் மொழி யறியாதவரோ வென்றறைந்து மறைந்துபோயினர்.

பின்பவ்வர்த்தகன் கபீர் திருவடிகளிற்பணிந்து நயனங்களையணிந்து ஓ என் சத்குருநாதனே மெய்ஞ்ஞான போதனே! உமது மகிமையை யறியாமல் யானியற்றிய குற்றத்தை நற்றவமாகக் கொண்டென்னை யாட்கொள்ளுமையாவெனத் துதித்துச் சுந்தராவின் தாட்டாமரைகளிற் சிரசாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு ஓ என்னையீன்றதாயே! நின்னைப்பார்த்த கண்களின்னம் கெடாமலிருக்கின்றனவே ஆச்சரியம் உம்மைப்போலொத்த பத்தினி யிருப்பதினாலேயல்லவோ கரையிலாமற் கடலும் நிற்கின்றதே கணிதப்படி சூரியனு முதயமாகின்றான் ஓ என்னம்மணி! உன் பொறுமைக் காகாயத்தையுமளவிடப்போமோ தாத்திரியின் கனத்துக் கிணையான ஓர் வரையுமுண்டோ ஸ்ரீமந் நாராயணருடைய அரியசேவையை அரைக்கணத்திற் றருவித்த என் மாதாவே! என்மேல் முனிவுகொள்ளாம லிட்சணமே ரட்சியுமெனத் தொழுதழும் போது, சுந்தரா கருணைக் கண்களைச் சாத்திப் பரமபக்தனாகக் கடவாயென வாழ்த்தித் தன் கணவனைப் பார்த்துக் கரங்களை சேர்த்து ஓ சுவாமி! மணாளனாய்வந்து மகனாய் முடிந்தானென்னுங் கதையின்படி நமக்கு புதல்வனாகச் சரணமடைந்த இவ்வர்த்தகனை அன்புடன் நோக்கி துன்பங்களைப் போக்கிக் காத் தாட்கொள்ளுமையாவென்று வணங்க, கபீர் அவ்வணிகன் நாக்கினில் தாரக வாக்கியத்தை எழுதி நிஷ்காமியாகக் கடவாயென் றாசீர்வதித்து மோட்ச வநிதையைக்கூடும் மார்க்கத்தைப் போதித்து பேரின்பவாரியில் மூழ்கியிருக்கும்படியாய்ச் செய்து பந்தபாசங்களை கொய்து மனைவியுடன் வீட்டை யடைந்து அங்கு நாரதாதி முனீசுவரர்களுடனெழுந்தருளியிருக்கும் பகவானைக்கண்டு ஆனந்தங்கொண்டு ஆஹா இப்போழ் தங்கு மாயமாய் மறைந்து உடனே இங்கு நாரதாதி முனீசுவரர்களுட னிறைந்து காட்சி கொடுத்த கருணையேதோ நான்செய்த தவமேதோவெனத் துதித்துருகிக் கண்ணீர் பெருகிக் களிப்பின்மேலீட் டானந்தமா யரிபரந்தாமனைத் தோத்திரம் புரியும்போது பகவான் கபீர் மஸ்தகத்தின் மேற் றன் னஸ்தத்தைத் தாக்கி ஓ பரம பாகவதனே! நீரில்லற தர்மத்துக் குறுதித் துணையான தர்மத்தை காப்பாற்றுகின்றீரோ இல்லையோ வெனச் சோதிக்கவேண்டி நானே யிந்த முனீஸ்வரர்களுடன் வந்தும்மை அன்னங் கேட்டும்

மனைவியை அயலானுக் களிக்கும்படியாகச் செய்து ஆனந்த மடைந்தேன்.

சுராசுரருக் கோரோர் காலத்தில் சுரலோகத்தைக் கொடுத்ததுபோலப் பரதாரகமனம் முதலான பாவஞ் செய்வோர்களுக்கு மும்மா லிக்காலத்தில் மாட்சிமையான என் காட்சியைக்கொடுக்க நேரிட்டதென் றுரைத்து ஜிஜ்ஞாபீபியையும் தமாலையும்நோக்கி, ஓ புனிதர்களே! இனி யிந்நாட்டைவிட்டுக் காட்டை யடைந்து தபத்தா லென் பதவியை யடையுங்களென் றாக்கியாபித்து மறைந்தருளினர். பின்பு தமால்மாதாபிதா மறையோர் துறவோர் பத்தர் சித்தர் பரப் பிரமஞானிகளாகிய முத்தர் முதலானோருடைய வாக்கிற் சிறந்தது குருவாக்கியம், குருவாக்கிற் சிறந்தது தேவவாக்கிய மாதலால் ஸ்ரீமந்நாராயணருடைய வாக்கியத்தைக் கடந்தவரு முண்டோவென் றன்புள்ள மகனை வாரியெடுத்து மடிமீதிருத்திக்கொண்டு சில நியாயங்களைச் சொல்லத்தொடங்கினர். அது ஏதென்றால், ஆ என்மகனே அழகானமுகனே பகவான் நமக்கடிக்கடி பிரசன்னமாகிறாரென எண்ணங்கொள்ளாதே தெய்வசகாயத்தினாலாவது குருசகாயத்தினாலாவது மோட்ச மார்க்கந்தெரியுமன்றி மற்றை யோகம், த்யாகம், தியானம், தானம், மோனம், ஞானம், தபம், ஜபம், மந்த்ரம், யந்த்ரம் முதலானவைகளால் தன்னையறிவது கூடாது ஆரியர்க் கிருபையன்றி ஞானதிருஷ்டியில் மனது நாடாது உபாயத்தாலாகிற காரியம் பராக்கிரமத்தா லாகிறதென்கிற நியாயமுனக்குத் தெரிந்ததே சிலர் நீர்மேல் குமிழியான இத்தேகத்தைச் சுழுத்தியவஸ்தையிற் பிரேதமாய்ப் பார்ப்பார்களன்றிச் சாக்ராவஸ்தையிற் பார்க்கமாட்டார்கள். எதினாலென்பையோ மலமூத்திர மாமசக்கிருமிகள் சிரழித்த நரம்பென்பு தோல் மச்சை மயிர் மூளை கோளை நஞ்சு குடர்களுஞ் சேர்ந்தோருருவாயிருக்கும் இந்த ஸ்தூலதேகத்தை நானென்கிற அபிமானம் பூண்டு தன்னை மறந்திருக்கும் அவிவேகிகள் அஞ்ஞானாந்தகாரக் குகையிற்சிக்கி நரகவீடாகிய இத்தனுசிற் சொக்கி வியாதிகளால் முக்கி அன்னப்பாலுந் தக்காமல் கக்கி எமனுக்கினைக்குள் புக்கிச் சிருஷ்டிகர்த்தன் முன்வெட்கி அன்னக்கருவிலுள்மட்கித் தாசனென்று பெரெடுத்து உற்பவித் தவதூதன் சீரெடுத்து மானசாதிகள் வளர மனமென்னும் மாயையும்

வளர்ந்து பயவழியும் விடுத்துப் பாலப்பருவமடுத்து நாருசிக்கே போர்கொடுத்துக் கௌமார தசையையடுத்து விளையாடலாதிகளைத் தொடுத்து எவ்வனமெடுத்துக் காந்தையால் பகவான் ஸ்மரணையைக் கெடுத்து மாயாசம்சார பாரத்தையெடுத்துத் தனைமறக்கும் பிர்மக் ஞானத்தைத் தடுத்து விருத்தாப்பியமடுத்துத் தாரபுத்ர மோகத்தை கொடுத்து எமனுக்குரிய சொத்தாகி மறுஜென்மத்துக்குவித்தாகியிருப்பார்களவர்களே ஆயுளின்னமிருக்க,

மோட்சவார்த்தை இப்போதே அபேட்சித்தல் சுயேட்ச்சையல்லவென்று காட்சிப் பிரமாணத்தில் சுடுகாட்டுக்குப் போகும் காயத்தை என்னமாயத்தால் நம்புகிறார்களோ அவர்களுக்கே வருஷப்பிரமாணம் வாசாக் ஞானிகளுக்கே மகிப்பிரமாணம், முமுட்சுகளுக்கு நாட்பிரமாணம் அப்பியாசிகட்குக் கடிகைப் பிரமாணம், ஆருடர்களுக்கு மூச்சுப் பிரமாணமாதலால் பகவான் ஓர் முகூர்த்தத்துக்குள் முப்பத்தாறுதரம் பிரசன்னமானாலும் போதாதென்றே யிருக்கவேண்டும் மாயையானது தன்னிழல்போற் பிரியாதிருந்துக்கொண்டெக்காரியத்தால் நமக்கு ஊக்யமாவானோ நமது பிரபஞ்சரூப நாமத்தைக் கடக்கும் மார்க்கத்தைத் தேடுவானோ வென்கிற எண்ணத்தாற் கற்சேருவதுபோல நம்மைக் கலக்கி மோட்சமார்க்கத்தைவிலக்கிச் சுழல்காற்றிலகப்பட்டுழலும் சருகைப்போல ஜனனமரண தரங்கங்கள் வீசும் வாரிதியிற் படிந்திருக்கும்படியான வகைக்குரிய காரியங்களைச்செய்து களித்திருக்கும்படியாய்ச் செய்கின்றது. அதையே மாயாபூதமெனச் சொல்லப்படும் அன்றி, அப்பா ஒப்பிலாமகனே! தெய்வத்திலுங் குருவே! பெரியவரென்றே சாஸ்திர சித்தாந்தஞ் சத்தியமேயாம். பகவான் முனிவு பரமாசாரியராற் றீர்ந்துபோம் குருசாபத்தை அறியாற்றீர்ப்ப தரிதாகும். ஆயினும் காரிய காரணங்களென்கிற உபயமார்க்கத்தைத் தெரிவிக்கு மாரியர்களில் காரணகுருவே கர்த்தனாகும். காரணக் குருவின் லட்சணம் சுலட்சண மானவர்களுக்கே தெரியுமெனப் பெரியோர்களுரைக்கின்றார்கள் இகவெண்ணங்களிறந்து தன்னை மறந்திருக்கும் காரணகுருவே பரப்பிரமமென்று சொல்லத்தகும்.

மாத்ருதுரோகி பித்ருதுரோகி தெய்வ துரோகியென்றுரைக்காமல் குருத்துரோகியென்றே உலகத்தில் மிகவும்வழ

ங்குங்காரணம் தனுமனதனங்களைத் தாரைவார்த்து நிமையும் பிரியாமற் கட்டிக்காத்துக் காற்சவை முதலானவைகளாற்றே கம்வேர்த்து எப்போதும் மஸ்தகத்தின்மே லஸ்தங்களைச் சேர்த்துக் குருநாமத்தை மனேசூத்திரத்தாற்கோர்த்து வாஞ்சன விஷயத்திற்போகும் மனதை அறுத்து நிர்ச்சங்கல்பனுய், நிர்விகல்பனுய், நிர்நாம பரப்பிர்மமாய், மனதுக்கெட்டா மர்மமாய், வாக்காலுரைக்கத் தர்மமாய், திரிகரணங்களாற்செய்யா நிஷ்காமமாய், ஆனந்தமாத்திரமாயிருக்கும் நிலையைத் தெரிவித்த நிர்மல குருவுக்குச் செய்யுங் கைம்மாறுமொன்றன்றே ஆரியர் பணிவிடையைவிடப் பிர்மநிஷ்டைமேலானதோ நாவு துய்யமென்னு முபய விஷயானந்தத்துக்காக காக்கையைப்போலவும் சுணங்களைப்போலவும் சுழலுஞ்சீவர்கள் தேகசுகத்திலும் இந்திரிய சுகமே மேலானதென்றறிந்தபடியே மனேசுகத்திலும் சீவசுகமே மேன்மையென்றுணர்தல் கூடாதோ சீவசுகம் பிர்மானந்தமேயன்றி வேறேர் பிர்மானந்தத்தையளிக்கும் ஆசாரியர்க்கா யுழைக்கலாகாதோ பாடங்களெல்லாம் படுசூர்ணமாய் வெந்துபோகாதோ தேகசுகம் ஸ்மரணை தப்பும் பரியந்தமல்லவோ இந்திரியசுகம் மயக்கமட்டுமல்லவோ மனேசுகம் மறதிமட்டுக்கு மல்லவோ சீவசுகம் மரணமட்டு மல்லவோ மரணகாலத்தில் தேகசுகம் இந்திரியசுகம் மனேசுகத்தையும் வாஞ்சிக்காமல் ஜீவசுகத்தைத் தேடுதல் பொய்யோ சுழுத்தியில் அனேகவிதமான பிர்மானந்த சுகமன்றி வேறு மொன்றுமுண்டோ அச்சுகத்தை யிப்போதே தேடுதல் நன்றன்றோ சங்கல்பமே பிறப்பு விகல்பமே இறப்பு என்னும் வாக்கியம் சத்தியமோ தேக மசத்தியமென்றிருந்தவர்க ளரைநிமை யிவ்வுலகில் நாட்டத்திலிருப்பார்களோ காட்டத்திற்சென்று ஏகநோட்டத்தி லிருப்போர்க்கினியோர் வாட்டமுண்டோ வாங்கோஷ்டமும் மனேவேஷ்டையும் நீங்கினேர்களுக்கோர் சேஷ்டையிருக்குமோ காஷ்டமௌனத்துக் கப்பாற்பட்டவர்கட்கன்றோ கைவல்யஞ் சித்திக்குமெனத் தித்திக்கு முத்தாரஞ்சொல்லுங் கர்த்தவ்ய காரணகுரு உபதேசிக்கின்றார். அத்துவித வஸ்துவைக் கைத்தல நெல்லிக்கனிபோற் காட்டுங் கருணாநிதி அவரல்லவோ திரிகரணங்க ளசைவற நிற்கும் சூட்சும மார்க்கத்தால் மோட்சமடையச் செய்பவ ரெப்பேர்க்கொத்தவரென்றால் என்னே

காட்டிற்போய்த் தவஞ்செய்ய வுத்திரவளித்த இப்பேர்க்கொத் தவரென்றறைந்து கபீர் பின்மறைந்துநிற்கும் மகாவிஷ்ணு வைச் சுட்டிக்காட்டினர்.

உடனே கபீர் பின்திரும்பிப் பகவான் சீதாசமேதனுக விருக்கக்கண்டு ஆனந்தங்கொண்டு தந்தையைப் பார்த்துக் கரங்களைச் சேர்த்து ஓ எனதையனே அன்னமூட்டின கைய னே! என்னைப் பிரிந்துபோக வெண்ணங்கொண்டீரோ இப் பகவானையன்றி நமக்குப் பரசுகமும் பரமுத்தியு மளிப்பவ ரொருவருண்டோ இங்கும் அங்கும் எங்குந் தங்கியிருப்பவ ரித்துங்கனல்லவோ வென்றுரைக்க, தமால் ஓ என்னப்பனே! எங்குமிருப்பவ ரிப்புங்கவனுனலும் இகலோகத்துக்கும் பர லோகத்துக்கும் எவ்வளவு பேதமுண்டோ அப்படியே நாடு நாடு என்பதிலும் பேதமுண்டு இனிச் சுகசீவியாய் வாழ்ந் திருக்கக் கடவாயென்றுரைவழங்கி எழுந்துபோகையில், கபீர் பிதாவுக்குத் தன்மேல் எவ்வளவு வாஞ்சனை யிருக்கின்றதோ அவ்வளவு வாஞ்சனை தனக்கு மிருக்குங் காரணத்தால் சரே லெனப் போவதற்குக் கூடாமல் மனம் மகன்மீது தனு தப சின்மீது மிருக்கின்றதெனக்காட்டும் பிதாவின் பின்னேடி ஆலிங்கனம் செய்துக்கொண்டழும்போது (கடந்தஞானியுங் கடப்பரோ மக்கள்மேல் காதல்) என்னும் பழமொழிப்படி, தமால் மகன்மீது தனக்குற்ற அன்பைப் பலருமறிய கண்ணீ ராலலம்பினர்.

அப்போது ஜீஜ்ஜாபீபியைச் சுந்தரா ஆலிங்கனஞ் செ ய்து நளமகாராஜனைப் பிரிந்த தமயந்தியைப்போற் புலம் பினள் இப்படி நால்வருங் கலந்தழும்போது, ஸ்ரீராம பிரானும் சீதாபிராட்டியாரும் அவர்களுடன் தாங்களும் சொந்தமுடையவரைப்போல் கலந்து பகவான் கபீரையும் தமாலையும் கட்டிக்கொண்டு மகாலட்சுமி சுந்தராவையும் ஜிஜ் ஜாபீபியையுங் கட்டிக்கொண்டு ஓவெனக் கூக்குரலிட்டழத் தொடங்கினர்கள். தாத்திரியசைந்தால் சகலமும் அசைவது போலக் காசியிலுள்ள மாந்தர்களெல்லாரும் கிடந்தபடி நட ந்தபடி வாரணசியிலுள்ள பசு பட்சிகள் முதலானவைகளும் கண்ணீர்விட் டழுதுக்கொண்டிருந்தால் இவர்களைத் தேற் றுவார் யார்? இப்படி இரண்டுசாமபரியந்த மிருக்கும்போது ஸ்ரீ காசிவிஸ்வநாதர் பார்வதி சமேதராய்க் கபீர் வீட்டை

யடைந்து பகவானையும் பார்க்கவியையும் நோக்கி ஓ திரிலோக நாயகா! தேவாதிதேவா! செல்வத்திற்சிறந்த சீதாதேவியே பெருமையிற்சிறந்த பூமாதேவியே! இதுவென்ன கபடநாடகம் இதுவென்ன மாயம் அம்பெய்தையோ வென்பவைப் போல இவர்களுக்குன் மாயமோகத்தைக் கொடுத்துத் துக்கத்தையெடுத்து அழச்செய்ததுமன்றி நீருமோசமுள்ளவர் போலழுது இக்காசியில் இருஜாமமாய் அழுகுரலுண்டாக்கினீர் உம்மை நீர் மறந்திரோ நாராயண னென்கிறதைத் துறந்திரோ நீரே தமாலுக்குப் பிறந்தீரோ காசியில் துக்கமயமாய் நிறைந்தீரோ,

இவ்வித லீலைசெய்வது நான் மெச்சவா? தேவர் தமால் மெச்சவா, கபீர் மெச்சவா, சொல்லும் பகவானே எனப் பலதரம்கேட்டு பேசாத பீதாம்பரனை விலக்கிக் கபீர்தாசனை நோக்கி, ஓ நிராசையிற்சிறந்த நிர்மலனே! மோகமில்லா விவேகனே! தந்தையாசை சாதுக்களுக் கிருக்கலாமா, இப்படியும் துக்கத்தைப்பெருக்கலாமா, உன்னுடன் பகவானும் வெகு நேரமா யழுதுக்கொண்டிருக்கிறரே அவரையும் என்னையும் பார்க்கலாகாதோ வெனத் திருவாய்மலர்ந்தருளின மாத்திரத்தில் கபீர் கண்ணைத்திறந்து ஆலிங்கனஞ்செய்திருந்த பிரியாத தந்தையையும் அன்புள்ள தாயையும்காணுமல் ஒன்றுந் தோன்ருமல் ஓ ஓ தாய்தந்தை கானகத்தை யடைந்தாரென் றலரும்போது, பகவான் ஓ கபீர்! உன் தாய்தந்தை கானகத்தையடையவில்லை என்னுடைய வானகத்தை யடைந்தார்கள் நானே யுன்தந்தையாகும். இலக்குமியே யுன்தாயாகும், அவர்களை மானிடர்களென்றே வறிந்தாய். உன்னை நீ யறிவாயாகில் என்மனைவியையு மின்னுளென் றறிவாய் நீ இப்புவியிற் பிறப்பதற்குமுன்பே அன்னைவயிற்றிற்பிறக்க உன்னை உன்னிதமாய்வளர்க்க அன்னை தந்தையாய்ப் பிறந்திருந்தோ மவ்வுருவை இன்னமோர்தரம் பார்ப்பாயாகவென தமாலுருவெடுத்து நிற்க, உடனே இலக்குமி ஜிஜ்ஜாபீபியாகத் தரிசனந்தந்தாள். அப்போது பரமசிவனும் பார்வதியும் பகவான் செய்யுந் திருக்கூத்தைக்குறித் தானந்தமடைந்து மாயாநடனத்தைக் கற்றுக்கொள்ள வாஞ்சித்தவர்போல அசைவற்று நின்றிருந்தார்கள். அப்போது பகவானும் பார்க்கவியும் தமால் ஜிஜ்ஜாபீபி ரூபமாய்த் தரிசனந் தந்தபின் மாய

மாய் மறைந்தார்கள், கபீர் பகவானுமிலக்குமியும் நமக்குத் தாய்தந்தையராய்ப் பிறந்திருந்தார்க ளினி நாமன்னை யத்த னுக்காயழுவ தக்ஞானமே யாமெனத் துணிந்து துக்கந்தணிந்து பரமேசுவரனையும் பார்வதியையும்பணிந்து இருநயனங் களையுமணிந்து, ஓ ஸ்வாமி, நீலகண்டா, நிடலாட்சா, அன்னை தந்தை யாசையாலழுந் தாட்சியுள்ளவனுக்கு மாட்சிமை யான காட்சி கொடுக்கலாமோ வெனத்துதித்து, ஓ விசாலாட்சி அன்னபூரணி, நாரணி, காரணியெனப் பார்வதியைத் துதித்துருகும்போது விசுவநாதரும்பகவதியும் பல ஆசிகள் செய்து ஓபரமபக்தனே! ஜீவன் மூத்தனே! இனிபிரமக்ஞான திருஷ்டியாற் பரமானந்த சாகரத்திற் படிந்திருக்கக் கடவா யென் றந்தர்த்தான மானார்கள் பின்பு கபீர் தாய்தந்தையர் பிரிவாற்றுமையாற் கலக்கமுற்றிருந்து மறுநாள் ராமானந்த சுவாமிகளாற் றேர்ந்து களிகூர்ந்திருந்தார். கேட்டீர்களோ சித்தர்களேயெனப் பின்னும் நாபாஜீசித்தர் சொல்லத்தொடங்கினர்.

கபீர் மனைவியை வர்த்தகனுக்களித்த அத்தியாயம் முற்றிற்று.

பதின்மூன்ருவது அத்தியாயம்

கபீர் குமாரனுகிய கமால் யாத்திரை போவது.

இப்படி கபீர் நாள்கழிக்குங் காலத்தில் பகவானுடைய மாயையாலும் சுந்தராவின் அபேட்சையாலும் முன் னரம்பைக்குன் இஷ்டத்தை ஓர்காலத்தில் நிறைவேற்றுகிறேனென வாக்களித்திருந்ததாலும் சுந்தராவினழகினுலும் மோகமோங்கி மருவித்தெரிவையின் மனங்களிக்கச்செய்ய சுந்தரா கர்ப்பவதியாகிப் பூரணமானபின் நாரதருடைய அம்சமேயந்தமுப்பத்திரண் டிலக்கணங்களும் வாய்ந்த ஓர் புத்திரனைப் பெற்ருள். அக்குழவியைக் கண்ட தாயுந்தந்தையும் மிகவுங்களிப்புற்று அருமையுடன் வளர்த்து கான்முளையின் முகங் கமலம் போலிருப்பதால் கமாலென்றுபேரிட்டு அடியார்களுக்கு விருந்திட்டு நெய்யுந் தொழிலாற் சீவனஞ் செய்துக்கொண்டிருந்

தார்கள். இப்படி ஏழு வருஷங்களாக ஒருநாள் கமால் தன் தந்தையை வணங்கி, ஓ என்னையனே! அடியேன் தீர்த்தயாத்திரை செய்துவரவேண்டுமென்கிற எண்ணங்கொண்டேன் கருணையுடன் விடைகொடுத்தருளல வேண்டுமெனத் துதிக்க, கபீர் மகனைவாரித் தன் மடிமேல் வைத்துக்கொண்டு, ஓ என்னப்பனே! நீ அறியாத குழந்தையாயிற்றே தீர்த்தயாத்திரை செய்துவர உன்னுலாகுமா துணையின்றித் தனியாய் உன்னையனுப்ப என் மனந்துணியுமா இன்னஞ் சிலநாள் பொறுத்து யாத்திரை செய்யப் போகலாமென்று மறுத்தனர். கமால் தாதையின் பாதங்களை மூத்தமிட்டு, ஓ என்னையாவே! நீர்மேற்குமிழியான இக்காயத்தை நிலையென்று நம்பியிருப் போரல்லவோ நினைத்தகாரியத்தை நிமைக்குப்பின் செய்யலாமென யோசிப்பார்கள்.

க்ஷணபங்குரமென விச்சரீரத்தைத் தீர்மானித்தரைக்கணமும் வீண்காலத்தைக் கழிப்பார்களோ இப்படி யென்னைச் சோதிக்காமல் அன்புடன் விடைகொடுத்தருளல் வேண்டுமெனப்பணிய கபீர், ஓ என் கண்மணியே! எள்ளுக்கு ளெண்ணெய்போலவும், பாலுக்குள் வெண்ணெய் போலவும் பரிபூரணமாய் நிறைந்திருக்கும் பகவானை யிருப்பிடத்திற்கண்டு களிப்புறுமல் தேசங்கள்தோறும் ஓடித்திரிவதா லுண்டாகும் பயனென்றுளதோவென்று மறுக்க, கமால் ஓ என் தந்தையே! தாங்களுரைப்பது சத்தியமே ஆயினும் புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்தால் புண்ணியமேலிடுமென்றும் பரிசுத்த தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்தால் பாபம் க்ஷீணமாகுமென்றும், சாதுக்களைத் தரிசித்தால் சகல சங்கைகளும் நீங்குமென்றும், பல தேசங்களைப் பார்ப்பவர்களுக்குப் புத்திவிளக்க மடையுமென்று சொல்லும் வாக்கியம் மெய்மையாதலால் யாத்திரை செய்ய யோசித்தேன். தடைசெய்யாமல் தயவு கூர்ந்தனுப்ப வேண்டுமெனத்துதிக்க, கபீர் மகனுரைக்கும் வாக்கியங்களுக்கு மகிழ்ந்தவராய் ஓ என்னருமைப் புத்திரனே! தனித்தன்னியர் வீட்டுக்குட்போகும் ஆடவனும் அலக்கணுறுவாராதலால் ஒரு சாதுவின் துணைப்பற்றிச் சந்தோஷமாய்ப் போய் வரலாமென்றறைய, கமால் ஓ என்னரும்பிதாவே! ஸ்ரீராம நாமமென்கிற வாளும் சத்குணங்களென்கிற தோழர்களும் எனக்கருந் துணைவர்களாயிருக்க வேறுதுணையும் வேண்டுவ

தோ நீரிப்படிச் சொல்வது என்மேலிருக்கு மன்பின் மேலீட்டாலல்லவோவென் றத்தனடிகளில் அன்புடன் பணிந்து, அன்னையைத் தொழுது போய்வருகிறேனென்று துதிக்க, சுந்தரா ஓ என்னருட்பாலனே! தவத்திற்சிறந்த சீலனே! சத் கருமத்தைத் தடுக்கக் கூடாதாதலால் நீயாத்திரைசெய்ய யோசித்ததைத் தோத்திரஞ்செய்ய நானெம்மாத்திரம் தாதாவைக் கேட்டுத்தரவு பெற்றுக்கொண்டபின் மாதாவைக் கேட்கவேண்டுமோ சுபமங்களத்துடன் போய்வாருமப்பாவென விடைகொடுத்தனுப்பிவிட்டுத் தன்தனயன் சிறுபிராயத்தில் யாத்திரைசெய்யப்போனதைக் குறித்தாச்சரியப்பட்டுத் தன்கணவனை நோக்கி, ஓ ஸ்வாமி! இவ்வுலகிலிவ்வளவு சிறுகுழந்தை தனித்து யாத்திரை செய்யப்போனதுண்டா? நீர் கேள்விப்பட்டதுண்டா? தேவரீர் ஐந்து வயதில் ஆதாம் வருணத்தாருடன் தர்க்கஞ்செய்து வென்றதைப் போலவே உமது மைந்தன் ஏழுவயதில் பல தேசங்களிற்போய் பல மதபேதங்களைக் கண்டித்துவர எண்ணங்கொண்டான். தன்னூரில் தந்தைபேரெடுத்தால் அயலூரில் தனயன் பேரெடுக்கப்போனான். இப்பேர்க்கொத்த விந்தை எந்தயுகத்திலும் நடந்திருக்க மாட்டாதென்றே நினைக்கிறேனெனத்தொழ கபீர் ஓபெண்ணே! தசரத தனயனாகிய ஸ்ரீரகுநாயகர் பனிரெண்டுவயதானபின்பே யாத்திரை செய்யப்போனார். நமது மைந்தன் சிந்தையால் நினைந்தது விந்தையாகவே யிருக்கின்றது, ஆயினும் பதிவிரதா சிரோன்மணியாகிய உன் ஆசிப்பெற்றுப்போன தனயன் யாதொரு சங்கடமு மடையாமல் சந்தோஷத்துடன் யாத்திரை செய்துவரக் கடவனென்றுரைத்துப் பகவானைத் தியானஞ்செய்துக்கொண்டிருந்தார். இவர்களிப்படியிருக்க,

கமால் நாட்டைக்கடந்து கங்காதீரத்தை யடைந்து அக்கரைக்கேக யோசித்துப் பாகீரதியைப் பூசித்து, ஓ ஸ்ரீமந்நாராயணருடைய திவ்யபாதத்தை விட்டுப் பிரிந்தோமென்கிற ஏக்கங்கொண்டிருக்குந் திரிபதகையே! பார்வதியின் பயத்தால் சங்கர சடாபாரத்திற் பதுங்கிக் கொண்டிருக்கும் கங்காபவானியே! கார்த்திகேயனைப்பெற்றுப் புத்திரவாஞ்சையை நீக்கிக் கொண்ட மந்தாகினியே! பார்த்தன் பப்பிர வாகனனுக்குத் தோற்றுப் போகும்படியாய் சாபமிட்ட சானவியே! பகீரதனு

டைய தவத்துக்கிரங்கி அவன்பின் தொடர்ந்துவந்த பாகீரதியே! சகரராஜன் புதல்வர்களின் சாபத்தை நிவர்த்திசெய்த சரநதியே! ஆயுருவாயண்டத்தைக்கடிக்க இரணியனால் பாருலகில்வந்த ஆகாயகங்கையே! எனக்குள் மூழ்குவோர் பாபத்தை நீக்குவேனெனப் பகீரதனுக்கு வரமளித்த வரநதியே! என்தந்தையை யிக்கரையிற் சேர்த்து ரட்சித்தபடியே என்னை அக்கரையிற் சேர்த்துக் காப்பாயாகவென் றக்கங்கையி லிறங்கிப்போவதைக்கண்ட பிரஜைகள் அடா கமால் ஆழியை நீந்துவதும் சாமர்த்தியத்துடன் இக்கெங்கையை நீந்துவதும் ஒன்றென்றே நினை ஆழியினுழத்திலு மாழமுள்ள கங்கையில் நடந்து கடந்துபோனவர்களுமுண்டோ வேண்டாம் வேண்டாம் ஓடத்தின்மேற் சகலருமேறிப்போவதுபோல் நீயுமக்கரையிற்செல்லு இல்லாவிடின் கங்கைக் கிரையாவாயென்றிரைந் தரைந்துக்கொண் டிருக்கும்போதே கங்கையிற் சற்றுதூரம்போ யப்பால் போவதற்குக்கூடாம லசந்துநிற்கையில், அப்போது கங்காதேவி பிரசன்னமாகிக் கமாலுக்குக் காட்சிகொடுத்து எனதஸ்தங்கள்மேல் நடந்துபோய்க் கரையேறுவாயென் றழைத்துக் கமால் பாதங்களைத் தாங்க. கமால் களிக்கடலிலமிழ்ந்தவனாய் கெம்பீரத்துடன் கங்கையினங்கைகளின்மேல் இருகாலையு மூன்றவைத்துத் தன்னைக்கூவும் பிரஜைகளை நோக்கி ஓ சிலர்களே! யுத்தஞ்செய்யப் புறப்பட்டு எதிர்த்துவரும் சேனுபலத்தைப்பார்த்துப் பின்னிடைபவன் வீரனுகுவானு? கற்பைக்காக்க விரதம்பூண்டு மாரனெய்யும் பஞ்சபாணங்களாற் கலக்கமுள்ளவள் பதிவிரதை யாவாளா? சன்னியாசியாய்ப் புறப்பட்டுச் சரீராதி வாதனைகளுக் கயர்ந்து சபதபங்களை விட்டவ னவதூதனுவானு அதுபோல் கங்கையின் துணையா லக்கரை யேறுவேனெனத் துணிந்திறங்கி ஆழத்துக் கச்சமூற்றுப் பின் திரும்புவேனுயின் கபீருக்குரிய புத்திரனுவேனு வென்றறைந்து பாகீரதியைத் துதித்துக்கொண்டே அத்திரத்திலேறிப் போகும்போது பகவான் நாரதாதி முநீசுவரர்களுடன் சாதுவேஷங்க டரித்துக்கொண்டு கமால் பக்கலடைந்து அடா கமால் எங்கேபோகிருய் சொல்லடாவென்று மறுக்க,

கமால் பணிந்து ஓ ஸ்வாமி! அயோத்தியா கயா பத்ரி நாராயணம் பிருந்தாவனம் அரித்துவாரம் முதலான புண்

ணிய ஸ்தலங்களிற் சென்ற ஸ்ரீபகவானை தரிசித்து அங்கிருக்கும் பரமபாகவதர்களின் பாதங்களைப் பரிசித்துப் பரிசுத்தனாக வேணுமென்கிற எண்ணங்கொண்டு போகிறேனென்று பணிவாக வுரைக்க, பகவான் சாதுக்களைநோக்கி ஓ சாதுக்களே! இச்சிறுவனை நீங்களறிவீர்களா? இவன் துலுக்கரிலும் இந்துக்களிலும் கூடாமல் நடுநாடனாயிருக்கும் கபீரென்பவனுடைய புத்திரனாகும். அக்கபீருடைய தாய்தந்தை தாரம் துலுக்கராகும் ஆசானோ ராமானந்தனாகும். குலமோ துலுக்கக்குலம் மதமோ இந்துமதம் வேஷமோ துலுக்கர் வேஷம் ஆசாரமோ பிராமணாசாரம் பேசுவதோ பிர்மக்ஞானம் செய்வதோ பகவத்தியானம். சீஷர்களுக்குரைப்பதோ அத்வைதம் தானிருப்பதோ த்வைதம் இப்படி இரண்டுவழியிலுமில்லாப் பிரஷ்டனுக்குப்பிறந்த பிள்ளையாகிய இவன் கத்திரிக்காய்க்குக் கால் கைகள் முளைத்தாற்போல ஜானுண்டு பயலாயிருந்தபோதிலும் ஒருவர் துணையும் வேண்டாமல் தனியனாய்ப் புறப்பட்டுப் பலதேசங்களிற்சென்று அங்கங்கிருக்குஞ் சாதுக்களுடன் வாதுசெய்து வென்று ஷண்மதங்களையுங்கண்டித்து அத்வைதத்தை ஸ்தாபித்துவரப்போகிறானிது கலிகால மகிமையல்லவோ உங்களுக்கும் விரித்துச்சொல்லவோ வென்றறைந்து முப்பத்திரண்டு பற்களைக் காட்டிக் கெக்கலிகொட்டி நகைத்துப் பலபரியாச வார்த்தைகளாடும்போது, கமால் சற்றே முனிவுகொண்டு ஓகோ கள்ளச்சாதுவே! நீர் ஓதியது ஒருவிஷயத்தில் நீதியாகவும் ஒருவிதத்தில் அநீதியாகவும் இருக்கின்றது எப்படியெனில் உம்முடைய வாக்கிலிருந்து புறப்பட்ட சொற்களையெல்லாம் பூஷணமாகவும் தூஷணமாகவும் பிறருக்குங் காட்டியதன்றி அகடவிகடமாகவும் தோன்றப்பட்டது ஆனால் உள்ளதைச்சொன்னால் சள்ளென்றுவிழுபவன் வெள்ளறிவனாகும் நீருரைத்ததெல்லாம் உண்மையே எப்படி யென்பீரோ எங்களுக்குஞ் சாதிபேதமில்லை. காரணம் மச்சகந்தியின் புத்திரனாகிய வியாசனுக்குப் பேரனாகிய அர்ச்சுனனுக்கு ஆயர்குலத்தி லுற்பவித்த எங்கள் பகவான் பெண்கொடுத்தார் சாதிபேதமிருந்தால் கொடுப்பாராவென, பகவான் அடா கமால்! ஓர் க்ஷத்திரியனுடைய வீரியத்தை ஓர் மச்சம் விழுங்கி கெர்ப்பமடைந்து மச்சகெந்தியை யீன்றதால் அம்மச்சகந்தி வலையர்குலத்தா

ளாவாளா க்ஷத்திரியனாகிய வசுதேவருக்குப்பிறந்த கிருஷ்ண ரை ஆயர் வளர்த்ததால் இடையனுவானோவென,

கமால் அயோனிசம்பந்தராகிய எனது பிதாவைத் துலு க்கரெடுத்து வளர்த்ததால் துலுக்கனாகி விட்டானா சாதியிற் கெட்டானா ஆஹா சாதுக்கள் சாதிபேதங்களைப் பேசலாமோ கௌசிகர்செய்த பல கொடுமைகளையு மனுபவித்த அரிச்சந் திரன் அவ்விசுவாமித்திரரைத் தூஷித்திருப்பானா லௌகீக த்தை நாடிய அரசனே தூஷணைசெய்யப் பயந்திருக்க வை திக தர்மத்தை நாடிய நீர் பரமசாதுவாகிய என் தந்தையை நிந்தை செய்யப்போகுமா ? சாதிபேத மிவ்வுலகுக்கன்றி பரமார்த்தத்துக்குண்டோ பேதமற்றவன் பிர்மக் கியானியல் லவா ஆசாரமே குலமல்லவா அபேதமே அத்வைத மதமல் லவா எங்களிஷ்ட தெய்வமாகிய பகவான் அர்ச்சுனனுக் குபதேசித்த பகவற்கீதையில் துவிதத்தையும் அத்வைதத்தை யும் கலந்து பேசவில்லையா துவிதமோ முக்கியமாயின் அத் வைதத்தை யேன் கண்டிக்கவில்லை. இரண்டையுங் கண்டிக் காமல் சமமாய்ப்பேசின பகவத் வாக்கியம் பொய்யோ அத் வைதத்தைப் பேசினாலும் தன்னை மறக்கும் பரியந்தம் துவி தத்தி லிருந்தவனே யல்லவோ சாக்ர சுழுப்தி நிலைவந்தவ னோ் தியானஞ்செய்யக் கூடுமோ அந்நிலைவராதவன் துவித பாவமடைந்தவனே வேதவியாசரா லுரைக்கப்பட்ட பாகவ தத்திலும் துவிதாத்வைதங்களைச் சமமாய்ப் பேசவில்லையா தேகஸ்மரணமா யிருக்கும்பரியந்தம் இஷ்ட தெய்வத்தையும் ஆரியரையும் மறக்கலாகுமோ நீர் நியாயமான சாதுவானா லிப்படிப் பேசுவீரோ அகங்காரத்தைக் காட்டுவீரோ என்னை வாட்டுவீரோ ஜம்பத்தை நீட்டுவீரோ சிவாம்ஸமான சுகப்பிர மரிஷியே என் தந்தையல்லவோ தேவரம்பையே என்தாயல் லவோ சட்சக்ரேஸ்வரா ரறுவரு மோருருவான ஷண்முக ரம் ஸனே நானல்லவோ அபிமன்னனுக்குச் சுந்தரியைக் கூட் டிக்கொடுத்த ஸ்ரீமந் நாராயணர் நீரல்லவோ இவர்களெல் லாம் நாரதாதி முனீஸ்வரர்களல்லவோ இன்னம் விரித்துச் சொல்லவோ சுத்த அத்வைதமான பகவத் கீதையில் துவித பாவத்தையும் வைத்திருப்ப தும்முடைய சூதல்லவோ உமது ரூபம் மச்சமா, கச்சபமா, வராகமா, வாமனமா, பரசுராம, ஸ்ரீராம, பலபத்ராராம, கிருஷ்ண, பரமாத்ம, ஸ்வரூபமா,

உமக்கெந்தரூபம் மெய்யெனச்சொல்வது, சொல்லியாரைவெல்வது, உம்மையன்றி வேறுவஸ்து ஒன்றுண்டானாற் காட்டும் எதோ உமதஸ்தத்தை நீட்டும் ஒரு ராமர் பலராமராய் நின்று மூலபலத்தை வென்றபோது அப்பலராமரெங்கிருந்து முளைத்தார்.

ஒரு கிருஷ்ணரே பல கிருஷ்ணராய்ப் பதினாராயிரங் கோபியர் வீட்டிற்றங்கி நாரதரை நாணமடையச்செய்தபோது அப்பால் கிருஷ்ணரெங்கிருந்து கிளைத்தார், துரியோதனன் சூதுசெய்து பாதாளத்தி லமிழ்த்தினபோ துமக்கு விஸ்வரூபமெப்படிவந்தது, அயனரனாதியர் நடுங்கத்தகுந்த ரூபத்தைக் கண்ணாரக்கண்டும் கௌரவர்விரோதித்திருந்த சூதியார் செய்தது, ஒரு புத்திரனுக்காயயர்ந்த அர்ச்சுனனுக்குப் பதினாயிரம் புத்திரராகிய வெண்கலரதக்காரரைப் பறிகொடுத்த நீர் தைர்யமுரைத்த காரணமென்ன, உமக்குப் புத்திரரிருந்தாற் சோகமுண்டாகாதோ, நீர் விஷயானந்த சகிதராமானால் பாலபிரமசாரியென்கிற பேருண்டாகுமோ, உமது கர்ப்பத்தி லிவ்வண்டபிண்ட பிர்மாண்டங்களெல்லாம் ஓர் அணுமாத்திரமாயிருந்தால் இலங்கை உமது கர்ப்பத்திலில்லாமல் வேறேயிருந்ததோ, லோகநாயகியை இராவணனெடுத்துப் போக எங்கிருந்து வந்தானோ, ஏகாலியனுரைத்த வாக்கியத்தாற் குரோதித் திரண்டுதுண்டா யிச்சானகியை வெட்டிவாருமென்றுரைத்த நீர் இராவணனெடுத்துப்போனகாலத்தில் காட்டினில் வேஷ்டையா யழுதீரெனுமொழி மெய்யென்று நம்பத்தக்கதோ, இராமாயண பாரதம் முதலானவைகள் பிள்ளைகள் மணலால் வீடுகட்டி விளையாடுவதற் கிணையானதல்லவோ, எங்கும் பரிபூரணமாய் நிறைந்திருக்கும் நீ அயோத்தியில் மதுரா பிருந்தா வனத்திலேயே யிருந்தீரென் றுரைக்கப்போமோ, இப்படி மாந்தர்களின் மதியை மயக்கினதும் உமது மாயையல்லவோ, நிரூபமாய் நிர்நாமமாய் நிர்குணமாயிருக்கு முமக்கு ரூபநாமகுணங்களேற்படுத்தியது முமது மாயையல்லவோ, பரப் பிரமமே நீயன்றி வேறென்றுரைக்கத்தகுந்ததோ, வேறென்றுரைக்க எந்த ரூபமுள்ளவரோ, காலத்துக்குத் தகுந்த வேஷந்தரித்துக் கபட நாடகமாடும் உமது மாயையு மறிந்தவருண்டோ அறியாக் குழந்தையைச் சோதிக்கவும் வாதிக்கவும் வரலாமோ, தரிசனந்தரலாமோ,

ஓ அனுதரட்சகா! அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகா! ஆதிமத்யாந்தரகிதா சோதி நித்யானந்த சகிதா! ஓ பகவான்! ஓ விஷ்ணுவெனத் துதித்துருகும்போது, பகவான் கருட வாகனரூடராய் சீதா சமேதராய் பரதசத்ருக்க லட்சுமணரு டன் காட்சிகொடுத்து அஸ்தமஸ்த சையோகஞ்செய்து கரு ணைமழைபெய்து ஓ கமால்! சபானுகிய கமால் தந்தைக்குப தேசித்த கார்த்திகேயனைப்போல் கபீருக் குபதேசிக்கும்படி யான மர்மங்களெல்லா முனக்குத் தெரியும்படியான வரமளித் தேன் இனியோர் தடையுமின்றிச் சகலரையும்வென்று சாது விருத்தியைப்புகன்று எனக்குந் தேவையான காணிக் கையைக் கொண்டுவரக் கடவாயென் றுறைந்து மறைந் தருளினர்.

பின்பு கமால் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினவராய் நைமிசாரண்ய முதலான வனங்களிலும் இமயகிரி முதலான பர்வதங்களிலும் அரித்துவாரம் முதலான ஸ்தலங்களிலும் சென்று தர்க்கித்தவர்களைவென்று வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம் முதலான ஷட்சமயங் களையும், உலகாயுதம், புத்தம், சமணம், மீமாஞ்சை, பாஞ்சராத்திரம், பட்டாசாரியம் முதலான பகிர் சமையங்களாறை யும் அத்வைதத்தாற் கண்டித்து அனுபவ மில்லாதவர்க ளைத் தண்டித்து இறந்தவர்களை யெழுப்பி மறந்தவர்களையு மெழுப்பி ஓ பண்டிதர்களே! ஜீவனென்பதேது? ஜீவனை யுண்டாக்கினவ னியார்? ஜீவனுக்கு மரணமுண்டா வில்லை யா? ஜீவனித்தனுவுடன் கூடின காரணமென்ன? ஜீவனுக்குப் பந்தம் வந்த காரணமென்ன? ஜீவன் பலரூபமடையு முபாயமென்ன? கைவல்யம் எந்த லோகத்திலிருக்கின்றது? ஜீவனெவ்வித மிருந்தால் இன்பமடையலாம்? ஜீவசப்தத் துக்கர்த்தமென்ன? ஜீவன் மாயாசம்மந்தமா? பிர்ம சம்மந் தமா? ஜீவனெந்த ஸ்தானத்திலிருந்து வருகின்றது? எந்த ஸ்தானத்தை யடைகின்றது? ஜீவன் போச்சுது வந்த தென்றுரைக்கும் விந்தையென்ன? நரக சொர்க்கமடைவது ஜீவனு தேகமா? தேகமென்றுரைப்பவரு முண்டா? ஜீவனெ னின் அதற்கு ரூபமுண்டா? சுத்த சூன்யமான ஆகாயத்தை வெட்டிப் பிளக்கக்கூடுமா? அப்படி செய்பவனுக் காயாசமே பலனல்லவா? ஜென்மமே நரகம் ஜென்ம ரகிதமே முக்தியல்

லவா ? பிராந்தியே பந்தம் பிராந்தி ரகிதமே விமோசனமென் றுரைக்கும் தேவவாக்கியம் பொய்யா? பிர்மப் பிரளயமாயும் ஜீவனுக்கு ஜென்ம விமோசன மில்லையென்பதின் கருத்து அகம்பாவத்தை நாசஞ்செய்ய வல்லவர் அகம்பாவ நீத்தலே மாயா நாஸ்தியாகுமே சூன்யமான மாயையைக் கடந்தவர்க ளல்லவோ பூரணமான பிரமத்தி லயிக்கியப்படுவார்கள். அரு ணனுதயமானதே இருளெப்படி நீங்குமோ அப்படியே அகம் பாவமென்னு மந்தகார நீங்கினமாத்திரத்தில் பூரணஜோதி தோன்றப்படும்.

அபேதமான பரஞ்சோதி லைக்யப்பட்டபின் இருளைத் தேடினலு மிருக்கின்றதோ சூரியனல் பிரகாசிக்குங்கண் அக ண்டமல்லவோ ஊனக்கண்களுக்குத் திரையுண்டு ஞானக்கண் ணுக்குந் திரையுண்டோ ஞானசட்சுவை மறைந்திருக்குந் திரையே மாயையென் றுரைக்கப்படுமல்லவா? அத்திரையின் மறைப்பாலல்லவோ மதிமயங்கிப் பிரமதேவன் தலையிழந் தான்.

ஸ்ரீமகாவிஷ்ணு வாலியிவன் சுக்ரீவனிவனென்பதறியா மற் றயங்கி நின்றான். மகாதேவன் மோகினியாய் வந்த மாத வனை மருவவிச்சித்தான். அண்டபிண்ட பிர்மாண்டங்களும் மாயா விலாசமல்லவோ? அகண்ட பரப்பிரமத்தி லத்துவித மாயிருப்பவர்க் கண்டரண்ட மனேக மவலேச மல்லவோ? க்ஷணபங்குரமான அங்கம் பங்கமெனப் பங்கமடையலாமோ? அனித்தியமல துக்கமயமான தேகாதிகளை நானென்றிருமாப் படையலாமோ? திரிகரணங்களை யசைவற நிறுத்தி அரை நிமை பிரம்மமயமாயிருப்பதும், திரிகரணங்களா லாயிரஞ் சதுர்யுக மருந்தவம்புரிதலும் சமானமாகு மல்லவோ? சற்றே யிச்சையுள்ளோர் சாக்ராவத்தையிலும் மிகவும் வாஞ்சையுள் ளோர் சாகா சொப்னவஸ்தையிலும் ஜபம்செய்வார்கள். சுழு ப்தியிற் ஜபஞ்செய்யக் கூடுமோ, திரியவஸ்தைகளினு மலுப் பின்றி உலாவிக் கொண்டிருக்கும் அம்ஸமே அஜபா மந்திர த்தை அனேகந்தரம் ஜபித்துக்கொண்டிருக்க அதையறியக் கூடாமல் சஞ்சலமுள்ள நெஞ்சகத்தோடு ஜெபிக்கும் மந்திரத் திற்குள் கூர்பவர் யாரோ? நமன் கைக்குத்தப்பி மீள்பவர்யா ரோ? சரீரமே நானென்றிறுமாந்து எமன் கையாலே மாய்ந்துப் போகலாமோ? இந்திரிய போகங்களையிச்சித்து இதா ஜீவர்க

ளைப் பட்சித்து இடரடையலாமோ? மனதிலெண்ணப்படி நடந்து மாயாவாரியிற் கிடந்து மறதியுற் றிருக்கலாமோ? அந்தந்த இந்திரிய அந்தக் கரணங்களிலந்த தேவதைகளிருந்தாட்டி எமனுக்குக் காட்டிவைப்பதை மறக்கத் தகுந்ததோ? பூஜை செய்பவனுக்கு மறுயோசனையைத் தொடுக்கும் அகக்கரண புறக்கரண தேவதைகளின் சமர்த்தை எதிர்த்தழைக்குமுபாய மௌன நிஷ்டையன்றி ஸ்நானம் கானம் தியானமென்னுந் திரிகரணங்களாற்செய்யுங் கர்மங்களாகுமோ? கர்மங்களுக்கு மேலானது, நிஷ்கர்மங்களுக்கு மேலானது தர்மம், தயா தர்மங்களுக்கு மேலானது மர்மம், அகங்காரக் கிரந்தியோர்க் குரைக்கக்கூடா அதிகுப்த மர்மத்துக்கு மேலானது பிரமம்.

ஆனந்த மாத்திரமாயிருக்கும் அகண்ட பரப்பிரமமே தானுயிருக்க அதனை வேறுபடுத்தி யுரைக்கத் தானேர் மூதண்டா யிருந்தாலல்லவோ அவாங் மனேகோசரமான வஸ்துவென்றுரைத்தும் அதைத் தியானித்து மோட்சமடையவேண்டுமென்கிற எண்ணங்கொள்ள நாணமாயில்லையோ தியானிக்கும் மானசத்திலில்லாதவரோ வென்றனந்தம் வார்த்தைகளால் மறுவார்த்தை பேசாமலடக்கி கபீரனுக்கிரகம்பெற்றுக்கொள்ளுங்களென்று மடக்கி ஸ்ரீராமருடைய பராக்கிரமத்தை இராவணனுக்குக்காட்டி இராக்கதரை வாலால் மாட்டியிழுத்த அனுமாரைப்போலவும் அரியென்னுந் திருநாமத்தின் மகிமையை இரணியனுக்குப் புலப்படக் காட்டிய பிரகலாதனைப் போலவும், தன்பிதாவின் பரிபூரண க்ஞானத்தைப் பலருமறியக்காட்டி எதிர்த்தவர்களையெல்லாம் வாட்டி ரூம், ஷாம், காபூல், பஞ்சாப், மக்கா, அரப் முதலான பட்டணங்களிற் பிரவேசித் தங்கிருக்கும் மகா மது மதஸ்தர்களை நோக்கி ஆனையி னடிசப்தத்தையும் எரும்பூருஞ் சப்தத்தையுங் கேட்கும் கடவுளுக்குக் காதுசெவிடென்றே வாயை ஆவெனத் திறந்து ஊவெனக் கூவுகின்றீர்கள்.

நிர்நாமமான வஸ்துவுக்கு நாமமுண்டாக்கினவர்களியார்? எள்ளினு ளெண்ணெய்போலவும் பாலினுள் வெண்ணெய்போலவும் எங்கும் பரிபூரணமாயிருக்கும் பரப்பிரம்மம் ஏழாமண்டலத்தி லிருக்கின்றுரென்று எழுதினவன்யார்? வாயுமண்டலம், வருணமண்டலம், சந்திரமண்டலம், சூரியமண்

டலம், நட்சத்திரமண்டலம், அக்கினி மண்டலமென்னும் ஆறுமண்டலத்துக் கதிபதியான விசுமாமித்திரனையே சுட்டிக் காட்டுகின்றீர்களோ உமது வம்சத்துக்காதியான கௌசிகனுல் காட்சியடைய யோசிக்கின்றீர்களோ பிரமத்தை நோக்கி மர்மமாயிருக்காமல் உங்களுக்கும் பல கர்மங்களேற்படுத்தினது மாயையல்லவோ ஏகக்கடவுளிலே லவுகீக பாவமாயிருக்கும் மார்க்கமறியாமல் மோட்சமடைதற் கிலேசானதோ மேற்கே நோக்கித் தீர்க்கதெண்டனிடு மூமது மார்க்கத்தில் கிழக்கில் கடவுளில்லையென வழக்கைக் காண்பித்ததோ மதியிலுற்ற மயக்க சங்கல்பமே மாயாபூதங்க ளென்றறியாமல் வலதிட துதோளை மாறிமாறிப் பார்ப்பதென்ன மதிமோசமோ பசுபாசமோ குணரகிதனுன கடவுளை வழித்திக் குக்கிட மூதலானதுகளின் கழுத்தை யறுத்தலென்ன மாயாசம்பந்தமோ ஈதியாருக்குத்தான் ஒப்பந்தமோ வாக்கில்லாக் கடவுள் மஹம்மது முதலான பயம்பர்களுட னெப்படி பேசினுர் வாழ்த்துத லெப்படிசெய்தார் மறைந்திருந்தெப்படி யுத்தரந்தந்தார் வாக்கிருந்தால் நாக்குமுண்டே நாக்கிருந்தால் நாளு அவயவமுண்டே அவயவத்துக்கு ரூபமுண்டே ரூபத்திற்கு ஜென்மமுண்டே யென்கிற சங்கைகள் பலசெய்து அனுபவார்த்த அம்புகளெய்து ஓ மொசல்மான்களே! ஆணும் பெண்ணுமல்லவா அலியென்னும் அகண்ட வஸ்துவி லயிக்கப்பட்டிருக்கும் வலியென்னும் பிரமக்ஞானிக ளனுபவத்தைச்சற்றே விசாரித்தறிய லாகாதோ அதனுலனுபவ க்ஞானம் தெரிந்து போகாதோ ஆமைபோ லூமைபோலிருக்கும் ஆனந்தாவேசமேலிட்டவர்க ளனுபோக மார்க்கத்தை நீக்கி மேற்கேநோக்கி ஆயுளைப் போக்கிவிடலாமோ அனுபவ க்ஞானமின்றி மோட்சமடையப்போமோ ஆனந்தமூறப்போமோ மஹம்மத்யென்னும் வாக்கியார்த்தம் மஹாபெரிய மத்மதம் ஆக மகாமதம் பிடித்தவனென்கிற அர்த்தத்தைக் காட்டுகின்றதறியீரோ அகப்பாவமாகா தென்பதனைக் குறியீரோ அகங்காரமுள்ள ஓர் அரசன் மாயமான் பின்றொடர்ந்து காட்டையடைந்து வேஷ்டையாற் கிடந்திருக்கையில் அவனை மறுதேசத்துக் காவலர் வந்து சூழ்ந்து பிணித்துக்கட்டிப் பட்டணத்திற் கொண்டு போய்க் கள்வனெனக் கரங்கால்களை வெட்டியெறிய அவ்வரசன் அகந்தையைக் கடந்து சாந்தத்தில் நடந்து வரும்

போது தனக்குத்தானே வெட்டுண்டவைகள் வளர்ந்தனவென்றுங்கள் சாஸ்திரங்களில் முறையிடுவ தபத்தமோ அப்படியிருக்க சிலநாளுக்கு முன்போரேழைக்குடும்பத்தி லுற்பத்தியான மகம்மது யென்பவன் இடும்பால் கொலைத்தொழிலை இயற்றும்படி எழுதிவைத்ததைச் சத்தியமென்று நம்பி நிறையத்துக்குள்ளாகுதல் நன்மையோ சகல சீவராசிகளையும் மானிடர் புசிக்கவே கடவுள் படைத்திருக்கின்றாரென்கிற கட்டளைமெய்யென் றெத்துக்கொண்ட நீங்கள் மானிடர்களைப் புசிக்கும் மிருகங்களைக் கடவுளேன் சிருஷ்டித்தாரென் றுங்களுக்கு ளொத்துப் பார்த்துக்கொண்டு இதுதப்பென்றும் அயிம்ஸையே நமக்குரிய ஒப்பென்று முணர்ந்துகொள்ளக் கூடாதோ கோடிநாள் தவஞ்செய்து கொலை யொன்று செய்யின் தபமெல்லா மோடிவித்தையாய்ப் போகாதோ அக்கிரமமான குருனிலெழுதியிருக்குங் கட்டளைப்படி அனுபவ க்ஞானியாகிய யமன் உன்னைச் சூலத்தின்மேலேற்றி அவர் வாக்கினுற் சொல்லும் மகா வாக்கியத்தை மாற்றுமுபாயம் பலசெய்தும் அவரங்கத்திலிருந் துதிர்ந்த உதிரத்துளிகளெல்லாம் அனுபவ மகா வாக்கியத்தை யுரைக்க அவரங்கத்தையும் சிந்தின உதிரத்தையும்சேர்த்து எரித்துச் சாம்பலாக்கினபின் அப்பூதியும் வேதமா வாக்கியத்தைப்புகல அதையோர் கும்பத்திலடக்கிவைத்திருக்க அப்பட்டணத்தரசன் புத்திரி யதை மோர்ந்ததே கர்ப்பவதியாய்க் கர்ப்பத்திலும் அச்சப்தமே உச்சரித்துக் கொண்டிருந் துற்பவித்து அவ்வாக்கன்றி மறுவாக்கை யுரைக்காமல் அப்பட்டணத் தரசன் புதல்வன் மடிந்து போக, அச்சுதனை அவ்வாக்கியத்தா லெழுப்பின துடுக்கர் செய்யுந் துன்பத்துக்காகத் தேகத்தின் சர்மத்தைவாங்கி மொசல்மான்களுக் கொப்பித்துச் சூரியனை வரவழைத்து மெய்ப்பித்து உங்கள் குமாரன் தப்பிதமெனக் காட்டவில்லையோ அப்பட்டணத்தை உஷ்ணத்தால் வாட்டவில்லையோ வென்கிற பற்பல காதைகளைக் காட்சிப் பிரமாணமாகக் காட்டி அனுபவ க்ஞானமொழிகளால் மாட்டிக் கபீரை பாராட்டித் தந்தை பெருமையை நீட்டி ஜகத்தை உத்தாரணம் செய்யும் நிமித்தம் சுகப்பிரமமே சப்தலோகங்க ளெல்லாம் இரண்டு ஒருருவமாய் இவ்வுலகத்தில் வந்திருக்கின்றார் அவருக்குத் தாய் தந்தையில்லை ஜாதிபேதமில்லை மானயீனமில்லை நம்

புங்களென் சொல்லை யென்றுரைத்துச் சமஸ்த மதாபிமானி களையுங் கரைத்து அங்கிருந்து புறப்பட்டுத் தந்தைதாயிருக் கும் வாரணாசியை நோக்கிவரும் மார்க்கத்திலுள்ள ஓர் பட்ட ணத்திற்றங்க அப்பட்டண வாசியாகிய ஓர் வர்த்தகன் கமால் மகிமையைக் கேள்விப்பட் டவரைப்பார்த்து வரும் பிரஜை களைநோக்கி ஓ மாந்தர்களே! அறியாக் குழந்தையாகிய கமா லென்பவனிடமென்ன மகிமை யிருக்கின்றதென்று போகின் றீர்கள் அவனிடம் போனால் பிணி நீங்குமா பீடை நீங்குமா பெருமை யுண்டாகுமா திரவிய மகப்படுமா ஜென்ம சாபல்ய மாகுமா ஒரெறும்பின்பின் பலபிபீலிகைபோகும் காரணத்தை போல் அவிவேகி ஒருவன் மெச்சினால் பலரும் மெச்சிப் பட் டணமெல்லாந் திரண்டு கும்பல் கும்பலாய்ப் போகின்றீர்கள் போன பலருக்குள் எவன் குறையாவது நீங்கிற்று இன்ப மெவனுக்காவ தோங்கிற்று சொல்லுங்களென கேட்கப் பிர ஜைகள் ஓ கனவானே! கற்பகத்தருவைச் சார்ந்த காகமும் அமிர்த முண்ணும் என்னும் பழமொழிப்படியே கமாலைத் தரிசித்துக் குறைநீங்கிக் கொள்ளாதவர்களுமுண்டா எனக் குக்குறை தீர்ந்தது எனக்கிவ் வாஞ்சனை நீங்கிற்றென்றுரைக் கும்போது, அவ்வார்த்தைக ளதிசயித்து எனக்குற்ற பவுத் திர வியாதியை நீக்குவாராயின் அவருக்காயிரம் பொன் விலை யுள்ள ஓர் பச்சையைக் கொடுக்கிறேனென் றுறைத்தபோதே அப்பிணி நீங்கிற்று.

உடனே சிறை நீங்கினவன்போல் களிப்படைந்து நவ நிதிகளிற் சிறந்த விலையுயர்ந்த ஓர் பச்சையை ஓர் தட்டிலேந் திக்கொண்டு கமாலிடம் போய் மிகவும் உபசரித்துப் பேசுஞ் சாதுரியத்தைக்கண் டதிசயித்துச் சிரசாஷ்டாங்கமாகத் தெண் டனிட்டெழுந்து நின்று, பெற்றால் இப்பேர்க்கொத்தபிள்ளை யல்லவோ பெறல்வேண்டும் பிள்ளையென்பதில் அணிப்பி ள்ளை கீரிப்பிள்ளை கிளிப்பிள்ளை முதலான பிள்ளைபட்டம் பெற்றதற் கிணையான பிள்ளைகள் பிறந்தால் பிரயோசனமுண் டோ பால்கொடாத பசுக்கள் பலவிருந்தாற் பயனேதேனு முண்டோ உன்மத்தமுள்ள பத்துப் பிள்ளைகள் பிறந்திருப்ப தால் கணக்கிடுவதற்கே யல்லவோ வித்தையிற் சிறந்த உத் தமமைந்தனொருவ னிருந்தா லுலகத்தை யாளலாம் இப்பே ற்கொத்த புத்திரனைப்பெறாத நாம் எப்பேற்கொத்த பாக்கியத்

தில் நிறைந்திருந்தாலும் குறையற்றவனே யென்கிற பற்பல வெண்ணங்களோடும் கூடிநிற்கையில் கமாலவ் வர்த்தகனை நோக்கி ஓ தனவானே! உனக்குற்றபிணி நீங்கிற்றே என்னைப் போன்ற புத்திராபேட்சையால் தன்னை மறந்து நிற்கின்றீரோ என்னை யுமது புத்திரனாகப் பாவித்துக் கொள்ளலாகாதோ உமது குறைநீங்கிப்போகாதோ வென்றவ் வணிகனை ஆலிங் கனஞ் செய்துக்கொண் டாசனத்தின்மீதி லிருத்திக்கொண் டன்புள்ள வார்த்தைகளாடும்போது அவ்வர்த்தகன் தான் பெற்ற புத்திரனாகவே யெண்ணி இனி யிக்குழந்தையைப் பிரிவது கூடாதென நண்ணி உச்சிமோந்து முத்தமிட்டினி நமது வீட்டுக்கு வாரும்ப்பாவென் றழைக்க, கமால் சம்மதித் தவ்வணிகன் மனைக்கெழுந்தருளி ஓ மகானுபாவனே! உமது தந்தை இவ்விடத்தி லுமக்காகச் சில பச்சைகள் புதைத்திரு க்கின்றா ரதைக்கெல்லி யெடுமையாவெனத் திருவாய்மலர்ந்த ருள அப்படியே அவ்விடத்தில் வெட்டிப் பார்க்கையில் சிறு குழந்தை யணியத்தகுந்த பச்சைகற்கள் பதித்து செய்திருக் கும்பல ஆபரணங்களகப்பட அதைக்கண்ட வணிகன் ஆன ந்த மடைந்தவனா யிப்பணிக ளணியும்படியான சிறு குழவி யில்லா வேழையேனுக் கிதையேன் காணுறச் செய்தீரெனக் கண்கலங்கி நிற்கையில் கமால் பணிகளணியத் தகுந்தச் சிறு குழந்தையா யழுகிற குரலோசையென்னும் நாதாந்தத்தில் அவ்வர்த்தகனைச் சொக்கும்படியாகச் செய்தார்.

அவ்வணிகன் கமாலைக் காணமல் கான்முளையைக் கண்டு ஆனந்தங்கொண்டு கமாலே நமது புத்திரவாஞ்சையைத் தீர் த்தருளினரென்று பாலனை வாரியெடுத்து மார்புடனணைத் துத் தனது நாயகியை விளித்து, ஓ பெண்ணே! என்னிரு கண்ணே நமக்குற்ற புத்திரபாக்கியம் நீங்க விசித்திரமானமக னுற்பவித்தான் பசியாற் கதறுகிறான் பணியாலுதறுகிறான். அங்கையாற் சீக்கிரமெடுத்துக் கொங்கையையூட்டி அனங்க னைக் காப்பாற்றென்று போற்ற உடனே அவ்வரிவை தனய னைசையா லதிசீக்கிரமாய் வந்தெடுத்து மார்புடனணைத்துக் கலையை நீக்கி முலையைக் கொடுக்கக் கடவுளருளால் பாலுண் டாகக்கான்முளை அகடுநிறையப் பாலுண்டன்னை தந்தையின் வதனங்களைப் பார்த்து அவர்களகம் அக்கினியைக் கண்ட

அரக்குபோ லிருக்கும்படியாய்ச் சிரித்து அளவிலா மோகக் கடலிலமிழ்த்தித் தன்னை மறக்கச்செய்ய அப்போது அவ்வர்த்தகன் சந்தோஷ மேலீட்டால் சகலருக்கும் பஞ்சதாரையைப்பங்கிடும்போது பலரும் என்னகாரணத்தால் சர்க்கரையைப் பங்கிடுகிறார்களெனக் கேட்டு கமால் வர்த்தகனுக்குப் புத்திரனாகச் சிறுகுழந்தை வடிவுட னிருக்கின்றானென்ற விந்தையுரைக்குக் களித்துக் கமால் வீற்றிருக்கு மிடம்போயங்கு எதாவுருவோடிருப்பதைக் கண்டு ஆச்சரியங்கொண்டு புத்திரபாக்கிய மில்லாதவர்க ளெல்லோரும்போய் ஓ கமால் எனக்குப் புத்திரனாகக்கடவாய் எனக்குமைந்தனாகக் கடவாயெனத்தோத்திரஞ்செய் துருகும்போது பணிகள் பூட்டிய பல புத்திரராய்க்காட்டி சகலருடைய புத்திரவாஞ்சையையும் நீக்கிக் குறைவென்பதைப் போக்கி வாரணாசியை நோக்கிப் போகையில் வணிகன் கேள்விப்பட்டு கமாலுக்கென் றெடுத்துக்கொண்டு போன பச்சையை இச்சையுடன் வைத்திருக்கலாமா இப்பேர்க்கொத்த புண்ணியவானுக்கல்லவோ நமதுடல் பொருளாவியைத் தாரைவார்த்தல் வேண்டும் புத்திரபாக்கியமில்லா மாந்தாதாவுக்குப் புத்திரபாக்கிய மளிக்க நாரதராற் கூடாமற்போயிற்று தசரதனுக்குப் புத்திரகாமேஷ்டியாக முன்னிலையில் வசிஷ்டர் புத்திரபாக்கிய மளித்தார் அதுவுங் கலைக்கோட்டு முனிவரால் நடந்தது இவ்வளவு அரிதாகக் கிடைக்கும் புத்திரபாக்கியத்தை அனேகருக் களித்துக் களிக்கும்படியாய் செய்த கமாலை நானினிப்பிரிந் துயிர்தரிப்பேனோ கமால் காருண்யம் பெற்றவன் காயத்துடன் சுவர்க்கம் அடைவதற்கோர் தடையுண்டோ பெருத்தமேடைகட்டி வாழ்வதா லுயிர்போந்தருணத்திற் கூடவரப் போகின்றதா பெண்டு பிள்ளைகளை தன்னுயிர்போல் காக்கினும் நமது பாபபுண்ணியத்துக் குடன்படப் போகின்றார்களா எல்லோரும் பணமிருந்தால் மணமாய்ப் பார்ப்பார்கள் பணமில்லாவிடின் பிணமேயென் றியாரும் பேசமாட்டார்கள் கனகமிருந்தால் தாய்தந்தை அண்ணன் தம்பி புத்திர மித்திரர்கள் பட்சமாய்ப் பாராட்டுவார்களன்றி மிகவுஞ் சீராட்டுவார்கள் அது வில்லாவிட்டால் எங்கிருக்கின்றாயென்று வாய்பேச்சும் பேசமாட்டார்க ளல்லவா மாந்தர் துர்விஷயத்திற் செலவழிப்பதுபோல நல்விஷயத்திற் செலவழிக்க மாட்டார்கள்.

எவர்களுந் தங்கள் தங்கள் தாரபுத்திராதிகளைக் குறித்துத் தழைத்துழலுகின்றார்களே யல்லாமல் பகவத் பக்தர்களைக்குறித் தரைக்கணங் கஷ்டமெடுத்துக் கொள்ளமாட்டார்களல்லவா தனுமன தனங்களைச் சாதுக்களுக்குத் தாரைவார்த்து இகபோக வாசையை நீத்துப் பரலோக சாம்பிராச்சியத்தை ஆசிப்பவர்களே மாந்தரிற் சிறந்த மகானுபாவர்களளென்றுரைக்கத்தகும். தன் பராக்கிரமத்தாற் காட்டுக் கதிபதி யாதொரு சஞ்சலமற்றுழலும் அரிமாவைப்போலத் தனமிகுதியால் நாட்டுக்கு அதிபதியாகவும் எதேச்சையுடனே ஸ்திரீயாதி போகங்களில் ரமித்துக் கொழுத்துப் பழுத்துக் கொக்கொக்கென்கிற இருமல் முதலான பலவித வியாதிகளாற் பீடிக்கப்பட்டு இகபரங்கெட்டு குறுக்கி யோனிகளிற் சிக்கி எமவாதனையாற் சொக்கி அலக்கணுறல் நன்மையோவென்றிவ்விதங்களா யோசித்துத் தன் மனைவியை நோக்கி நீ இக்குழவியுடன் உன் தந்தைவீடு சேர்ந்து சுகமாயிரு. நான் கமால்பின் போய்வருகிறேனென் றுரைத்துத் தனது ஆஸ்தியெல்லாம் தர்மவிஷயத்தில் நாஸ்திசெய்து மேடை மாளிகைகளையு முத்தமர்க்குத் தாரைவார்த்துக் கமாலுக்குரிய பச்சை ஒன்றுமாத்திர மேந்திக்கொண் டதிதுரிதமாய்க் கமால் பக்கலடைந்து வந்தனம்புரிந்து மிகவும்பயந்து ஓ என்னுண்டவனே! ஆனந்தத் தாண்டவனே! என்னைவிட்டேக உமக்கு மனமும் வந்ததோவென் றழத்தொடங்கினர்.

கமால் ஓ தனவானே! கனவானே! நானே குழந்தையுருவாகி யுமதகமிருக்கப் பிரிந்துபோவதாக நினைக்கலாமோ நீர் வந்துவிட்டால் அங்கு என்னைக் காப்பாற்றுவார் யார் என் மொழியை மறுக்காமல் என்னம்சமாகிய குழவியை ஆதரணை செய்யச் சீக்கிரம் புறப்பட்டுப் போமென்றறைய வர்த்தகன் நீர் வந்தாலன்றி நான் போகமாட்டேனென்றுரைக்க கமால் உன்னைப் போலவே இச்சரீரத்தைப்பெற்ற கபீர் வாஞ்சைகொண்டிருக்கின்றார். அவருக் கிவ்வுருவைக் காண்பித்து அகத்தியம் வருகின்றேன். நீர் ன் வாய்மையை மறுக்காமல் வீட்டைச் சேருமென் றுரைக்க, வர்த்தகன் உமதிஷ்டப்படியே செய்கிறேன். இக்காணிக்கையை யேற்றுக்கொள்ளுமெனக் கமால் ஓ மகானுபாவனே! நானிதை யிச்சித்தேனாகில் ரவ்ரவாதி நரகத்துக் காளாவதற்கோர் தடையுண்டோ?

உமக்குற்ற ஆஸ்தியையெல்லாம் தர்மவிஷயத்தில் நாஸ்தி செய்துவிட்டீர்.

தாரித்ரியத்துக்குட்பட்டீர் இதையாதரவாய் வைத்துக் கொண்டு சீவனார்த்தம் நடப்பித்துக்கொண்டிரும் சிலநாளில் வருகிறேனென் றகலும்போது வர்த்தகன் கமாலுடன் பேசிக்கொண்டே அவருக்குத் தெரியாமல் அப்பச்சையை மூந்தாணியில் முடிந்து, போய்வருகிறேனென்று விடைபெற்றுக் கொண்டு தன் மாமனார் வீட்டையடைந்து கமால் கருணையாலுற்பவித்த மைந்தன்மீதிருக்கும் நகைகளிற் சிலதை விக்கிரயப்படுத்தி அதனால் வியாபாரத்தை நடத்தி முன்னிலும் மேடைமாளிகை முதலானவைகளிற் செழித்துக் கமால் வரவை யெதிர் நோக்கிக்கொண்டிருந்தார். இங்கிப்படி யிருக்கக் கமால் தந்தைதாய்மேலுற்ற அவாவால் பச்சையை முடிந்திருக்கும் விந்தையைச் சிந்தையுட்கொள்ளாம னடந்து கன்றைநாடிச்செல்லும் பசுவைப்போலப் பாகீரதியைக் கடந்து வீட்டையடைந்து தந்தை தாயை வலம் வந்து வந்தனஞ் செய்து யாத்திரைபோய் வந்த விர்த்தாந்தங்களைச் சவிஸ்தாரமாய் சொல்லத்தொடங்கினார். கபீர் தனயன்மேலிருக்கும் பேரன்பால் பலதரந் தழுவி யணைத்து அங்கவஸ்திர மூந்தானையில் முடிந்திருக்கும் பச்சையை யவிழ்த்துப் பார்த்துத் தேகமெல்லாம் வேர்த்து முகந்திருப்பிக்கொண்டு பூசாவிக்கிரகத்தின் முன்னின்று துக்கசாகரத்தில் மூழ்கி ஓவென்றழத் தொடங்கினார். சுந்தரா என்னகாரணமென வாய்விட்டு பிரலாபிக்கத் தொடங்கினாள். காரணந்தெரியாக் கமாலுமழத் தொடங்கினார். அப்போது கபட நாடகனாகிய ஸ்ரீமந்நாராயணன் ராமலட்சுமண பரதசத்ருருக்க சீதாசமேதராய் வந்து கமால் கபீர் சுந்தராவையுங் கட்டிக்கொண் டோவென்றழுது புலம்பத்தொடங்கினார். இது சங்கதிதெரிந்த ராமானந்த சுவாமிகள் தனது மாணாக்கருடன் புறப்பட்டுக் கபீர்வீட்டை யடைந்து ஓ கபீர்! கதவை மூடிக்கொண்டு யார் கூப்பிட்டாலும் பேசாமல் வெகுநேரமா யேனழுதுக்கொண்டிருக்கின்றீர் நான் கூப்பிட்டும் பேசாமலிருக்கலாமோவெனக் கூவுகிறதைக்கேட்ட கபீர் இதோவந்தேன் ஸ்வாமியென்று கண்களைத்திறந்து கடவுளமும் பாசாங்கைப்பார்த்துக் கரங்களைச்சேர்த்து அதிசீக்கிரமாயோடி அறணந்திறந்து ராமானந்த ஸ்வாமிகளைத் துதி

த்து உள்ளேவாருமென்றழைக்க, அகத்தில்வந்த ராமானந்த ஸ்வாமிகள் ஸ்ரீராமலட்சுமண பரதசத்துருக்க சீதாபிராட்டியைக்கண்டு ஆனந்தங்கொண்டு இன்றும்மை காணும்படியான பாக்கியமேதோ நாம்செய்த சிலாக்கியமேதோ இக்கபீருடன்கூடி நீரழுங்காரண மேதோ அவ்விர்த்தாந்த மெமக்குத் தெரியாததோ உம்மால் நீங்காக்குறையு முண்டோ ஓ பகவானே என்றுருகும்போது ஓ இராமானந்தா! என்னுடைய மார்பகத்தி லணிந்துக் கொண்டிருக்கும் இப்பதக்கத்தில் நடுநாயகமாகப் பதிக்கப் பச்சையொன் றகப்படாமல் வெகுகாலமாய் வாஞ்சைகொண்டிருந்தது.

இக்கமால் யாத்திரை போகும்போது காணிக்கை கொண்டுவரும்படிச்சொல்லி யனுப்பினேன் என்வாக்கை மறுக்காமல் இப்பச்சைகொண்டுவந்தான். அதற்காகவே இக்கபீரழுதான் நாங்களுமழுதோம். இப்பச்சையை நீர் தருவிப்பீரேல் எக்காலமும் உமது கியாபகமிருக்குமென் றுரைக்கும்போது கபீர் கரத்திலிருக்கும் பச்சையை ராமானந்த ஸ்வாமிகளுக்குக் காண்பித்து ஓ ஸ்வாமி! பகவான் பச்சையைக்கொண்டுவந்த கமாலை பரியாசஞ் செய்கிறாரேயன்றி உண்மையாய் நம்பத்தக்கதல்ல இல்லாதவரல்ல. பகவானிப்படி சொல்ல, ஓ என்னுண்டவனே! கஸ்தூரியை கொடுத்துப் புழுதியும் வேதாந்த சாஸ்திரங் கொடுத்துக் களாசாஸ்திரமும் கங்கையை ஊற்றிவிட்டுச் சுராபானமும் சந்தனக் கட்டையைக்கொடுத்து எட்டியையும் அசுவததைக் கொடுத்துக் கர்த்தபத்தையும் அமிர்தத்தைக் கொடுத்து விஷத்தையுங் கொண்டுவந்ததைப்போலப் பகவான் திருநாமங்களை விற்பனைசெய்து அற்பமான கல்லைக் கொண்டுவந்தான் இதனால் நிரையத்துக்குள்ளாகும்படியாய் நேரிட்டது. எவ்வளவு உயரப் பறந்தாலும் பருந்து கருடனும் தீபங்க ளெத்தனையானாலுஞ் சூரியனும் நட்சத்திரங்க ளெத்தனையானாலும் சந்திரனும் பசுக்களெல்லாங் காமதேனுவும் விருட்சங்களெல்லாங் கற்பகமும் ஆகாததும்போல இக்கமால் எவ்வளவு பிரயாசப்பட்டு யாத்திரை செய்துவந்தாலும் நிராசையுள்ளோனுக்குச் சமானமாகான் இனியிவன்முகத்தில் விழிக்கலாகாது. நம்முடனிவன் கூடியிருக்கத்தகாது. ஓ சுந்தரா! இக்கணமிவனை வெளியிலனுப்பிவிடு மென்றுரைக்க, அதுகேட்ட கமால் ஓ என்தந்தையே!

நீருரைத்தது வெகு விந்தையே இந்த அற்பக்கல்லின்மேல வாக்கொண்டேனென்று நிச்சயமாய் நினைக்காதீர் புலி எவ்வளவு பசியாயிருந்தாலும் புல்லைத்தின்னாது சிங்கம் எவ்வளவு உதராக்கினியால் வாட்டமுற்றிருந்தாலும் நரியிறைச்சியை யுண்ணாது விவேகி யெவ்வளவு சங்கடமடைந்தாலும் லோபியைக்கேளான் புண்ணியவானுக்கெவ்வளவு வறுமை வந்தாலும் தர்மஞ்செய்ய யிடையான் வீரன்மேலெவ்வளவு சேனைகள் திரண்டுவந்தாலும் முதுகுகாட்டி ஓடான் பதிவிரதைக்கெவ்வளவு காமவிகாரம் மேலிட்டாலும் பரபுருடனை நாடாள் யோகி தனக்கெவ்வளவு மதமிருந்தாலும் ஸ்திரீ முகம்பாரான் அதுபோலவே விராகமுள்ள நான் இச்சொற்பக்கல்லின்மே லிராகங்கொள்ளுவேனு எனக்குத் தெரியாமல் என்மேல் வாஞ்சையுள்ள ஓர் வர்த்தகன் மூடிந்திருப்பான் அறியாமலு மொருவர் சொத்தை அபகரிக்கக்கூடாது. இக்கல்லினுலல்லவோ சகலரும் அழும்படியாய் நேரிட்ட திதோ அரைக்கணத்திற் கொண்டுபோய்க் கொடுத்து வருகிறேன் சகலருக்கும் சந்தோஷந்தருகிறேன் என்றக்கல்லை வாங்கிக்கொண்டு அதிசீக்கிரமாய் நடந்து வர்த்தகனிருக்கு மூரையடைந்து வர்த்தகன்பாற் சென்று ஓ தனவானே! இப்பச்சையை நானறியாமல் முடிந்தென்னை யவமானப்படுத்தினீ ரிப்படி செய்யலாமோ? என் மிடற்றைக்கொய்யாமல் கொய்யலாமோ வென்றீந்து அரைக்கணத்தில் தந்தைபாற்சேர்ந்து ஓ என்னையனே! பச்சையை வர்த்தகனுக் களித்துவந்தேன் இனியும தாயாசம்நீங்கிற்றோ துக்கம்போயிற்றோவென, கபீர் ஓ கமால் ஒரு முகூர்த்தத்துக்குள் வர்த்தகன்பாற் சென்று வந்தாயா நிச்சயமாவென, பகவான் ஓ கபீர்! நானிச்சித்த பச்சை நிச்சயமாவென, பகவான் ஓ கபீர்! நானிச்சித்த பச்சை நிச்சயமாய்க்கொண்டுபோய்க் கொடுத்துவந்தான் நான் சந்துருஷ்டியடைவதைப்பார்க்கிலும் உங்களுடைய வைராக்கியம் மேலானதோவென்றறைய கமால் ஓபகவானே! கடைத்தேங்காயைத்திருடி வழிப்பிள்ளையார்க் குடைத்தால் பிரயோசனமில்லாததுபோல் வர்த்தகன் சொத்தை உமக்களிப்பதால் யாங்களடையும் பயனேது நீ ரித்துச்சமான பச்சைமே லிச்சைகொண்டது நிச்சயமோவென்றறையும் மகனைப்பார்த்த கபீர் இறந்த மக்கள் எழுந்துவரக் கண்டவர்களைப்போலவும், முழுகிப்

போன கப்பல் கரையில் வரக்கண்ட வர்த்தகனைப்போலவும் களிப்புற்று விருப்புற்று ஓ என்னருங் குழந்தாய்! உன்னை நான் பெறும்படியான பாக்கியமேதோவென் றுலிங்கனஞ் செய்து ஸ்ரீமந்நாராயணரை நோக்கி, ஓ என்னாண்டவனே! உமக்கப் பச்சையின்மே லிச்சையிருந்தாற் சொல்லு மிப்போதே அடியேன்போ யவ்வர்த்தகனுக் கேவல் செய்துக்கொண்டு வருகிறேனெனப்பணிய பகவான் ஓ கபீர்! உங்களைச் சோதித்தேனன்றி மற்றப்படி இச்சை கொண்டவனல்ல உங்களுடைய அன்பே இன்புள்ளதென் றறைந்து மறைந்து போனார். பின்பு ராமானந்தஸ்வாமிகள் கபீர் வீட்டில் நடக்கும் விந்தையைக் குறித்து மிகவும் வியந்து விடைபெற்றுக் கொண்டு தன்னிருப்பிடஞ் சேர்ந்தார். கபீருங் கமாலுஞ் சுந்தரராவும் சாதுக்களுக்குப் போதுமான வஸ்துக்களைக் கொடுத்துக்கொண்டு பகவத்தியானமதிலும் பிர்மக்ஞானத்திலும் சிறப்புற்றிருந்தார்கள். கேட்டீர்களோ சித்தர்களேயென்று நாபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லத் தொடங்கினார்.

கமால் யாத்திரை அத்தியாயம் முற்றிற்று.

பின்பு கபீர்தாசர் தர்மார்த்தமாய் தனயன் தலையையரிந்ததும் முண்டம் கூத்தாடினதும் பகவான் அருளால் உயிர்த்தெழுந்ததும் பின்னும் கோரக்கர்வந்து காசியில் எங்கும் ஜலமில்லாமற் செய்ய கபீர் இருந்தவிடத்தில் பெருவிரலால் பூமியை அழுத்துவோர்க்கெல்லாம் ஜலம் புறப்படச்செய்ததும் மரித்ததந்தைக்கர்க்கிய நீரளிக்கும் ஓர் பண்டிதனுடைய தந்தை வாரணாசியிலுள்ள ஓர் வணிகன்வீட்டில் இருகண்ணிழந்த ரிஷபமாயிருப்பதைக்காட்டி அந்தப்பண்டிதனை யாட்கொண்டதும் நீயும் சம்சாரி நானும் சம்சாரி யெனக்கேன் பகவத்தரிசனங் கிடைக்கவில்லையென்று கேட்ட ஓர் பிராமணனுக்கு தன் மனைவிமக்களின் குணோத்தமத்தை வெளிப்படுத்தி அப்பிராமணனை யாட்கொண்டதும் நானக்ஷாவோடு தர்க்கஞ்செய்ததும் ரோயிதாசரோடு தர்க்கஞ்செய்து கணபதி பிரம்மா ஆதிசக்தி ருத்திரனையும் சீதாராமென்று சொல்லச் சொன்னதும் ராமதாசருக்கு பகவானின் தரிசனந்தருவித்ததும் முதலானவத்தியாயங்கள் பின்வரும் பக்தர்கள் சரித்திரங்களின் தொந்தார்த்தமாய் வரும் அதையங்கங்கே காணலாம்.

கபீர்தாசர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ
ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்.

மூன்றாவது

துளசிதாசர் சரித்திரம்.

பகவான் துதி.

விருத்தம்.

உலகமளிக்குஞ் சதுர்முகனை யுந்திக்கமலத் தளித்துலகை
இலகவளிக்கும் பெரும்பார மேற்றுக்கொண்ட தயையவராற்
சொலுதற்காகு மீன்றழித்தல் சலபங்காத்த லரிதென்றோ
அலையிற்றுயிலு மச்சுதனே யடியேனுன்ற னடைக்கலமே.

துளசிதாசர் துதி.

விருத்தம்.

அளவில்காமத் திருந்தவனை அரியைத்தேடித் திரிந்தவனைக்
களவாயனுமான் றனைக்கண்டு கட்டியிழுத்த மாதவனைத்
துளசீதரனைப் பார்த்தவனைத் தொண்டுசெய்ய வைத்தவனைத்
துளசிதாஸ னெனுநாமத் தோன்றலுபய வடிதொழுவாம்.

முதலாவது அத்தியாயம்.

துளசிதாசர் உற்பத்தி.

மூலாதாரமுதலாறுதாரங்களையுந் தரிசித்து நாதானந்த வசமாகி சோதியைக்கண்டு அச்சோதியைக் காணும் பரஞ்சோதியாகிய பரப்பிரம்மத்தைக் காணுமற்கண்டு பரமானந்தக் கடலிற் படிந்திருக்கும் உத்தவசித்தர் முதலானவர்களும் மறுநாட்காலையில் ஸ்நானஞ்செய்து சபதபங்களை முடித்துக்கொண்டு வால்மீகாவதாரமான துளசிதாசருடைய கதையைக்கேட்கவேண்டுமென்கிற அவாவால் விரிஞ்சாவதாரமான நாபாஜி சித்தரிடம் போய்ப்பணிய அவர் களிப்புடன் துளசிதாசருடைய சரிதையைச் சொல்லத் தொடங்கினர்.

ஓ சித்தர்களே! ஸ்ரீகிருஷ்ணபகவானுக்குகந்த அன்பர்களாகிய பாண்டவர்களரசுபுரிந்த இடமாகியும் ஸ்ரீவாசுதேவர் தன் சுயரூபமாகிய விசுவரூபங் காட்டின ஸ்தானமாகியும் விளங்காநின்ற அஸ்தினபுரமென்னும் டில்லி நகரத்திலிருப்பவர், திவ்ய திருநாமந்தரிப்பவர், உத்தம பிராமண குலத்



மதுரை நகர் (வடக்கு தொகுதி)

பகுதி (லோகாலிட்டி) நிர். 26

ஓட்டர் வரிசை நிர். 1617

பெயர் இந்திரா

தெரு & டோர் நிர். மாமணிதபுரம் ரோடு, 270

இனம் சௌராஷ்டிரர்

ஆண்

பெண்

சௌராஷ்டிரா ஸ்கூல்

[illegible]

திற் பிறந்தவர், சாதுக்கள் சங்கமே சாயுச்சிய பதமெனத்தெளிந்தவர், சாந்தர் சேவைக் குகந்தவர், வேதாந்தத்தெளிவில் மிகுந்தவர், சந்தோஷவாரியிற் றோய்ந்தவர், இந்தாவென்றதிதிகட்கீந்தவர், கல்வியில் மிகவுஞ் சிறந்தவர், செல்வந்தன்னில் நிறைந்தவர், துரியந்தன்னில் விழித்தவர், துரிசுகளெல்லா மழித்தவர், தயாரசத்தால் மகிழ்ந்தவர், ஜெயாவெனப் பலரும் புகழ்ந்தவர் ஆகிய ஓர் பிராமணர் துலுக்கர்முதலாகிய சகலருக்கும் ஆத்மாவே அல்லா, நான் சொல்வது பொய்யல்ல, ஆத்மாவே அழியாப்பொருள். ஆத்மாவே அஷ்டாட்சரத்துக்காதி. ஆத்மாவே பஞ்சாக்ஷரப் பிரக்கியாதி. ஆத்மாவே சைவ வைஷ்ணவ ரகசியம். ஆத்மாக்களே இனியே னுங்களுக்குச் சமுசயம். ஆத்மாவே மனுவெழுத்தென்னும் மவ்யோமம். ஆத்மாவே தாரகமென்னு நாமம் என்றும் ஆத்மாவே ராமா வேறென்றுலகந்தைபோமாவென்றுஞ் சொல்லிக்கொண்டேயிருப்பதால் சகலரு மப்பிராமணோத்தமரை ஆத்மாராம் என்றழைத்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது டில்லிநகருக்கரசனான அக்பர் பாதுஷாவென்பவன் அந்த ஆத்மாரா மென்பவருடைய வித்வத்திறத்தையும் சத்குணத் திறத்தையும் சாதுரியத்தையும் அத்வைதக்ஞானத்தையும் சகலரையும் அனுபவ க்ஞானத்தா லடக்குகிறதையும் மறுதரஞ் சொல்லாமல் மடக்குகிறதையும் கேள்விப்பட்டு ஆத்மாராமை யழைப்பித்து தன்னிடத்தில் யோசனைக்குரிய பிரதானியாக வைத்துக்கொண்டு ஆத்மக்ஞானத்தை பயபக்தியுடன் சிரவணஞ் செய்துக்கொண்டு நமக்குக் காரண குருவானவ ரிவரேயென விண்டு ஆத்மக்ஞானத்தை மனனம் பண்ணிக்கொண்டு அத்தியந்த பக்தியுட னிருந்துக்கொண்டு யாதொரு காரியத்துக்கும் ஆத்மாராமை ஆதார புருஷனெனச் சொல்லிக்கொண்டு வெகு உபசரணையோடும் பராமரித்துக்கொண்டு மாதாந்தரம் ஆயிரம் பொன் சம்பளங் கொடுத்துக்கொண்டு வருகிற காலத்தில், மரா மரா வென்னும் மந்திரத்தாற் றேர்ந்தவர், தராதலத்திலழியாத தபசைச்சார்ந்தவர், சகல சாஸ்திரங்களையும் பார்த்தவர், சகல சந்தேகங்களையும் பேர்த்தவர், ராமா வெனும் மொழி வராமல் வைதவர், ராமாயணத்தைச் சுலோகமாகச் செய்தவர், பரத்துவத்தை யறிந்தோர்களில் முன்னவர் பரத்.

துவாசருக்கருள் வாசிஷ்டஞ் சொன்னவர் ஆகிய நால்வேத முணர்ந்த வால்மீக முனியானவர் பகவா னுத்திரவின்படி இவ்வுலகை யிரட்சிக்கும் நிமித்தியம் ஆத்மாராம் பத்தினியாகிய உத்தமியின் கர்ப்பத்திற்றங்கி பூரணமானபின் பூரணசந்திரனைப்போ லழகுடன் பிறந்தார்.

அப்போது ஆத்மாராமென்பவர் அழகுள்ளமைந்தனைப் பார்த்து, கண்களில் சேர்த்து ஆனந்தவாரியிற் குளித்தவராய் ஆனந்தோப் பிரமத்திற் களித்தவரா யன்பாய்ப் பாராட்டி இன்பாய்ச் சீராட்டி ஆசையாற்பொங்கி அனுசன்பால் தங்கி (கடந்த ஞானியுங் கடப்பரோ மக்கள்மேல் காதல்) என்பதைப்போல மிகவுங் காதலாய் வளர்த்து அருங்கொழுந்துபோற்றளிர்த்து துளசிதாஸென்றுபேரிட்டு சகலருக்கும் விருந்திட்டு உபநயனஞ்செய்து கருணைமழைபெய்து நான்கு வேதம் ஆறு சாஸ்திரம் பல இதிகாச வியாகரணம் முதலானவற்றையும் உணர்த்தி வயது முதிர்ந்தபின் தன் குலத்தின் நீண்ட குழலும் நிறைமதி முகமும் கமலக் கண்களும் கற்கண்டு மொழிகளும் பவளவாயும் பரிமளவுடலும் அன்ன நடையும் சின்ன யிடையும் அதிகச் செல்வமும் அதிகக் கல்வியும் உள்ள மமதாதேவி யென்னும் ஓர் கன்னிகையைப் பேசி சகலர்க்குஞ் சவ்வாதுபூசி உற்றவோர் மற்றப் பெரியோருடனே சகலரும்மெச்சச் சந்தோஷத்துடனே அரசனும் வரிசை யன்பாய்க்கொண்டு அருகினில் நிற்கப் பல நரர் மொய்க்க உறவினர் களிக்க பன்னீரிற் குளிக்க விந்தையாக ஸ்ரீ ராமன் திருமணம்போல கலியாணஞ்செய்து நாடோறுந் துளசிதாசனை அரசனிட மழைத்துக்கொண்டுபோய் அரச நீதிகளையும் பார்த்துக்கொண்டு வரும்படியாய்ச்செய்து மற்ற வேளையி லருகிலிருத்திக்கொண்டு அப்பா துளசிதாசா! அரசர்களும் பாம்பும் சரியென்று சொல்லப்படும். ஆதலால் அக்கினியினிடங் குளிர்காய்வதுபோல மிகவும் ஒற்றுமையாய்ச் சேராமல் வெறுப்புடனும் பேசாமல் சமமாயிருக்கவேண்டும். கொலுமண்டபத்திற் சென்றபின் அரச நீதிகளிலேயே மனதை நிலைத்திருக்கச் செய்யவேண்டும். நியாயத் தீர்ப்புகளில் எளியோர் வலியோரென்கிற பாரபட்சம் பாராமல் அனியாயமாய்த் தீர்க்காமல் அறத்தைக் காக்கவேண்டும். இராஜனே தாவதோர் வார்த்தையைக் கேட்பானாயி னதைத்

தீர்க்கமா யோசித்துரைக்கவேண்டும். ஏனெனில், அநீதியான மந்திரியால் ராஜாங்கங்குன்றிப்போம். ஓரரசாட்சியை நிலை நிறுத்துவது வெகுதுர்லபம். அழித்தல் சுலபம். தன்னுயிரைப்போல் மன்னுயிரைப் பார்த்துப் பாதுகாப்பதே பிரதானிக்குரிய தர்மம். அரசன் அநீதிக்குட்படுவானாயின் பலவித திருஷ்டாந்தங்களெடுத்துக்காட்டி தர்மத்தை நிலைநாட்டி சகலரும் புகழும்படியான கீர்த்தியைச் சம்பாதிக்கவேண்டும். உத்தமர்க் கரும்பொருள் கிடைத்தாலதனால் சத்கருமங்கள்செய்து எப்படி மேன்மையும் புகழும் சம்பாதித்துக்கொள்வாரோ அப்படியே தனக்கதிகாரமிருக்கும்போதே நாட்டைச் சீர்ப்படுத்தி தர்ம விஷயத்தைப் பெருக்கி கர்மங்களியாருஞ் செய்யாமற் றடுத்து நியம நிஷ்டையுள்ளோரை மிகவும் விசுவாசித்து இறைவன்முதல் சகலருக்கும் சத்காலத்தில் காலங்கழிக்கும்படியாய்ச்செய்து, கொலை களவு காமம் குருநிந்தை முதலான துஷ்ட காரியங்கள் நடக்காமற் றன்னாக்கினையை செலுத்தி யதார்த்தவானெனப் பேரெடுத்து அதிதிகளை ஆதரணைசெய்து யதீசுவரர்களுக்கு ஸ்நானங்களேற்படுத்தி அவர்கள் மனங் குறைவுறாமல் பாதுகாத்து அவர்களாசீர்வாதமரசனுக்குத் தருவித்து அரசர் மரபுக்குக் குற்றம் வராமல் நிலைக்கச்செய்யவேண்டும்.

ஏனெனின், இல்லறத்தோர்களுக்குத் துறவறத்தோர் செய்யுந் தபமே துணையென் றுரைக்கத்தகும் தபத்துக்கு சம்சாரிகளின் தர்மமே துணையென் றுரைக்கத்தகும். ஆதலால் பக்தர், சித்தர், முக்தர், சித்தங் கலங்குமாயின் பட்டணம் பாழாய்ப் போவதற்கோர் குறைவில்லை. மேலோ ராசீர்வாதத்தால் சூனியமான நகர் துலக்கமடையும். சந்திர சூரியர்களால் பட்டணம் பிரகாசிப்பதல்ல. சாதுக்களாலேயே பட்டணம் பிரகாசிக்கும். வசிஷ்டபகவா னயோத்தியி லிருந்தபடியால் தசரதமகாராசனை அனேக நாள் பாதுகாத்தார். சாதுக்களில்லா நாடு நரி புலி வாழுங் காடென்றே சொல்லத்தகும். சாதுக்கள் கூட்டமே சந்தோஷ கோஷ்டமென்று பெரியோர்க ளுரைப்பார்கள். முக்கியமாய் அமைச்சனுக்குப் பொறுமையும் சுசனபுத்தியும் யுக்தியு மிருக்கவேண்டும். சாந்தஞ் சாகரத்திலும் பெரிதென்று ஓர் மகாத்மா எழுதிக்கொடுத்த ஓர் சீட்டாலும் பிரதானியி னுத்தியாலும் ஓரரச னதிக சந்

தோஷமடைந்ததன்றி ஸ்ரீஹத்திக்குள்ளாகாமல் புகழ்பெற்ற ணதெப்படியெனின், ஓர் பட்டணத்தில் ஓர் சாது சமூசாரத் திலிருந்தே பிரம நிஷ்டையைச் சாதித்துப் பிர்மானந்தத்தை யனுபவித்துக் கொண்டிருந்து நிரியாண திசையடையுங் கா லத்தில் அவர் தனயன் விவேகத்தால் ஓ என்தந்தையே! என் சீவனார்த்தத்துக்கும் மணத்துக்கும் அரைப் பணஞ் சம்பா தித்து வைக்காமற் போனீரே இனி நானெவ்விதமாய்ச் சீவ னஞ் செய்வேனென்று பிரலாபிக்க, அச்சாதுவானவர் (சாந் தஞ் சாகர) மென்றெழுதிக்கொடுத் திதைப் பத்திரமாக வைத் திருந்துனக்கோர் குறைவருங் காலத்தில் இப்பட்டணத்துக் கதிபதியினிட மிதைக் கொடுப்பையாயி னுன்குறை நீங்கு மென் றுரைத்துப் பரம சமாதி யடைந்தார். பின்பவர் தன யன் தந்தைக்குச் செய்யவேண்டிய கிரியைகளையெல்லாஞ் செ ய்து முடித்து மறுநாள் சீட்டைக்கொண்டுபோ யரையனிடங் கொடுக்க, அத்தோன்றல் சாந்தஞ் சாகரத்திலு மதிகமென் றெழுதியிருக்கும் சாதுவின் கையெழுத்தை தன் சந்திராயுத உறையிற் சொருகி, அச்சாதுவின் மைந்தனுக்குத் தேவை யான தளித்தனுப்பி, அரசன் நெடுநாள் சென்றபின் ஒரு நாள் வேட்டையாட நாட்டைவிட்டுக் காட்டிற்செல்ல, நா ட்டில், வேந்தன் படுக்கையைச் சிங்காரிக்கும் வேவுகாரன் வெகுநாளாய் நரபதியின் மலரணைமேற் சயனிக்க வெண் ணங்கொண்டிருந்தவ னாதலால், அன்று வெகு விநோதமா யலங்கரித்து, அப்பஞ்சணைமேற் படுத்து மெதுவான பீதாம் பரத்தைப் போர்த்துக்கொண்டு என்று மறியாதா னின்பத் தை யனுபவிப்பதுபோல துயிலாற் றன்னை மறந்து நித்திரை செய்தான்.

அத்தருணத்தி விராஜபத்தினி அரசனறையிற்சென்று இறைவர் அனந்தல் செய்கிரு ரென்றவன் பக்கத்திற் சயனி த்து அனந்தல் மேலீட்டாற் றன்னை மறந்தாள். அத்தறு வாயில் காட்டில் வேட்டையாடப்போன பூபாலன் நாட்டை யடைந்து மந்திரியுடன் அரண்மனையிற் பிரவேசித்து சயன அறையிற்சென்று தன்னணையின்மேற் றூங்குஞ் சதியையும் ஆடவனையும்பார்த்து தேகம் வேர்த்து அடங்காக் கோபத் தா லிவர்களிருவரையு மிரண்டு துண்டாக வெட்டிப் பலியிடு கிறேனென்று சரேலென்று சந்திராயுதத்தை யுருவினான்.

அப்போது உறையிலிருந்த சாதுவின் சீட்டு ஆகாயத்திலிருந்து வீழ்ந்ததைப்போ லந்நரபதி அதிசயிக்க முன்னேவீழ்ந்தது. சதிபதி அச்சீட்டைக் கையிலெடுத்துச் சாந்தம் சாகரத்தினும் பெரிதென்று எழுதியிருப்பதை நோக்கிச் சாதுவின் கைச்சீட்டென்னுங் கியாபகமின்றி இது அந்தரத்திலிருந்து வந்ததென்றே தீர்மானித்து வெட்டுதற் கச்சமுற்றவனுய்ச் சந்தடியின்றிப் புறப்போந்து தன் மந்திரியை விளித்து யாரும் புகன்று தண்டிக்குந் தருணத்தில் ககனத்திலிருந் திச்சீட்டு விழுந்ததெனப் புகல, அம்மதி மந்திரி யூகித்து, ஓ அண்ணலே! உமது சங்கை நீங்க ஒருபாயஞ் செய்கிறேன் பார்ப்பீராகவென்று ஓர் பக்கமாய் வரையனை நிறுத்தித் தான் பள்ளியறையின் வாயிலில் நின்று மெதுவாய்க் கையைத்தட்டினுன். அக்கையொலியைக் கேட்ட, இராஜஸ்திரீ விழித்து, மந்திரியை நோக்கி, அதிசீக்கிரமாக வெழுந்து குன்றின குரலோடு இராஜனும் நானும் சயனித்திருக்கும் அறைக்குளச்சமின்றி வரலாமா? இது உத்தமர்க்கழகாவென் றுரைத்துக் கொண்டே தன்னறைக்குட்போகத் தொடங்கினுள்.

மந்திரி அப்பதிவிரதையின் பின்சென்று காட்டிற்போன காவலர் நாட்டிலெப்போது வந்தார் தெரியச்சொல்லுமென, இராணி, அரசற் முதற் சாமத்திலேயேவந்து சயனித்துக் கொண்டாரென்முள். மந்திரி, நிருபன் வந்ததை நீர் பார்த்திராவென, அவ்வுத்தமி அவர்வந்தது நானறியேன். காட்டிற்போன ஆயாசத்தால் எவ்வழியாக வந்தோ தன்னை மறந்து தூங்குகின்ருர் நீர் நல்ல விவேகியா யிருந்தும் அறியாதவர்போல் அந்தப்புரத்தில் வந்ததன்றி என்னை தொடர்ந் திவைகளெல்லாங் கேட்கத்தகாது, எவ்வளவு துரிதமான காரியமிருந்தாலும் ஏவலாளரா லெழுப்பவேண்டு மன்றித் தனித்து வரலுமாகாது. இராஜனே அயர்ந்து நித்திரை செய்வதா லெழுப்பவுந் தகாது. தடாக்கருமமாயிருந்தா லெழுப்பலாமென்று தன்னறையிற் பிரவேசித்தாள்.

பின்பு துண்ணியன் இவள் மகா பதிவிரதையெனத் தெரிந்துகொண்டு பஞ்சணையிற் றுயிலும் வேவுகாரனைத் தட்டியெழுப்பினுன். உடனே பணியாளனெழுந்து அமைச்சனை நோக்கி திடுகிடென்று நடு நடுங்கினுன் அமாத்தியன் உன் பக்கத்தில் யார் சயனித்திருந்தார்க ளுண்மைசொல்லென்றச்.

சங் காட்டினான். தொழும்பன் நானொருவனே துயின்றே னன்றி மற்றொருவரு மிதிற் படுக்கவில்லையே யென்றான். ஏனாதியன் நீயே யிறைவனணையிற் படுத்தாயென்றான். ஏவலாளன் எனக்கு நெடுநாளாயிருந்த விச்சைபாற் படுத்தேனென்றான். தேர்ச்சித் துணைவன் அவனை காவலுக்குள னுப்பி அரையனை நோக்கி, உமக்குற்ற சங்கை நீங்கிற்றோவென்று பணிய, இன்னஞ் சோதிக்க நினைத்த தோன்ற லென் னையமின்னம் நீங்கவில்லையென்று இராணியை விளித்து பரிசாரகனோடு நீ துயின்ற காரணத்தால் கொதிக்கும் எண்ணெய்க் கொப்பறையில் நீ குளித்து வந்தா லென்னுடன் கூடி சுகிக்கலாம். இன்றேல் உன் தந்தைவீட்டைச் சேரலாமென, அதற்கவ்வுத்தமி அன்னிய புருஷனாற் றீண்டப்பட்ட இத்தேகமிருந்தாற் பழுதாதலால் அனலில் மூழ்குவதே உத்தமமென்று அக்கணமே எண்ணெயைக் கொதிக்கவைத்து அதிற் குதிக்க எத்தனித்தாள். கோமான் தன் தேவியின் திடத்துக் கிரக்கமுற்று, ஓ பெண்ணே! உனக்காக இச்சீட்டு பகவானருளா லென்முன் விழுந்தபடியால் உன்பேரில்குற்றமிராது நீ இதிற் குதிக்கவேண்டாமென்று மறுத்தான். அப்பதிவிரதை அன்னிய புருஷனாற் றொடப்பட்ட அசுத்தமான இத்தேகத்தை பரிசுத்தமான நீர் தொடாமலிருமென்று வணங்கி அதிற் பாய்வதற் காயத்தமானாள்.

ஏந்தல் தன் தேவியைப் பாங்கிகளாற்றடுத்து உனக்காகவே இச்சீட்டு என்முன் தெய்வகடாட்சத்தால் வீழ்ந்தபடியால் இதை தீயாற்கொதிக்கும் எண்ணெயிற்போட்டு பரீட்சிக்கிறேனென்று அதைத் தயிலத்திற் போடப்போகையில், மந்திரி ஓ பூபதியே! இச்சீட்டு ஓர் சாதுவின் நந்தனன் உமக்குக் கொடுத்ததாகுமே, அதை இதிற்போட் டெரிந்துபோமாயின் உமக்கதிக சங்கைக்கிடங்கொடுக்கும். அப்படியல்ல, சாந்தம் சாகரத்தினும் பெரிதென்னும் வாக்கியமும் இப்பதினி கற்பழியா உத்தமியும் சத்தியமானால் போட்டபடியேயிருக்கக் கடவதென்று போடுவதே உத்தமமென் றுரைக்க அரையன் இதுவேசரியென்று தனது இஷ்ட தெய்வத்தைச் சிந்தித்து வந்தித்து அத்தயிலத்திலெறிந்தான். அது போட்டபடியே கொதித்துங் கொப்பறை எண்ணெயில் மிதந்துங் கொண்டிருந்தது. அவ்வாச்சர்யத்தைச் சகலரும்பார்த்துக்

கொண்டிருக்குஞ் சமயத்தில் அரசன் தேவி சீட்டப்படி யிரு ப்பதால் நான் பரிசுத்தமானேனா? இல்லையே; என்று அக் கொப்பறையிற் பாய்ந்தாள். உடனே அக் கனற் றயிலம் பனி நீர்போற் குளிர்ச்சியடைந்து எறியும் அனலும் அவிந்து போயிற்று ஆகாயவாசிகள் பூமாரி சலசலவென்று பொழிந் தார் தேவதுந்துபி தாம் தாம் என்று முழங்கிற்று, பின்பவ் விறைவன் தன்னாயகியைக் கட்டியணைத்து உன்னைப்போன்ற உத்தமிகளிவ்வுலகி லிருப்பதனாலேயே சந்திர சூரியர் பிச கின்றி உதிக்கிறார்கள் பருவகாலந் தப்பாமல் மழையும் பொழி கின்றது பூமியுமந்தரத்தில் நிற்கின்றதெனத் துதித்து மதி மந்திரியை நோக்கி யூகத்திலொப்பிலா வென்னப்பனே நீ என் சந்தேகம் நீங்கும்படியான யுக்தி செய்யாதிருந்தால் இப் பத்தினியை என் வாளுக்கப்போதே இறைகொடுத்திருப்பே னேயெனத் துதித்து சாந்தம் சாகரத்திலும் பெரிதென்றெ ழுதிக்கொடுத்த சாதுவின் குமாரனுக்குப் பாதிராச்சியமளி த்து மிகவுங் களித்திருந்தார்க ளாதலால் ஓ துளசிதாசனே! பிரதானிகளதிக யுக்தி புத்திகளிற் சிறந்தவராக விருப்பதன் றிச் சாந்தமென்னும் ஆபரணத்தையே பூஷணமாக வணிந் திருக்கவேண்டுமென் றிவ்வித பல நீதிகதைகளை ஓதி சாதுக் களுடன் கூடித் தீர்த்தயாத்திரை செய்யப்போனார். பின்பு துளசிதாசன் அக்பர் பாதுஷாவினிடத்தில் அத்தியந்த பக் தியுடனிருந்துக்கொண்டு தன் பராக்கிரமத்தால் முக்கிய பிர தானியாகி தன்னையே அரசனாகச் சகலரும் நினைக்கும்படி யான நீதிச்செங்கோல் செலுத்தி அன்னசத்திரங்கள் சாதுக் கள் வாசஸ்தானமான மடங்கள் விசாலமான குளங்கள் நீ ண்ட கோபுரங்கள் முதலானவைகளியற்றித் தன் தந்தையி லும் சமர்த்தனெனப் பேரெடுத்து சாதுக்கள் சங்கத்தையடு த்து நாள்கழிக்கத்தொடங்கினார். கேட்டீர்களோ சித்தர்க ளேயென்று நாபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லுகிறார்.

துளசிதாசர் உற்பத்தி அத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவது அத்தியாயம்

பகவான் துளசிதாசனைக் காமத்தில் அழுத்தியது.

இப்படி நீதியுடன் முக்கிய பிரதானியாயிருக்கும் காலத்தில் பகவானுடைய மாயையால் துளசிதாசன் சத்சங்கத்தை விடுத்து துர்ச்சங்கத்தை யடுத்து துஷ்டர்கள் கூட்டுறவாலும் எவ்வர்ன பருவத்தாலும் தாசிகள்வீடே கெதியாய் வீட்டுக்கும் வராமல் அரசாங்கத்துக்கும் போகாமலிருந்தார். அதையறிந்த ஆத்மாராம் பத்தினி மிகவும் நொந்து துளசிதாசனைத் தேடிக்கொண்டேபோய்த் தாசியின் வீட்டிலிருக்கக்கண்டு மாச்சரியங்கொண்டு அடாமகனே! அழகானமுகனே! உன் தந்தையானவர் மகா யோக்கியரென்று பேரெடுத்திருக்க நீ இப்பேர்க்கொத்த அயோக்கியமான பேரெடுக்கலாமா? வேசையர் வீட்டுக்குப் போகலாமா? காசாசையாலதிக பாசமாயிருக்கும் வேசையர் வெகு மோசக்காரிகளாயிற்றே! ஐயோ நமது மானம்போயிற்றே! பலருக்குப் பிணைப்பட்டிருக்கும் பரத்தையர் மேற் சிரத்தை கொள்ளலாமா? மாதாவாக்கியத்தை தள்ளலாமா? பணமில்லா விட்டா லேன் பிணமேயென் றிக்கணிகையர் கேட்பார்களே வீட்டிலுஞ் சேர்ப்பார்களா? முற்பிறப்பில் பலபுருஷர்கள்மே லிச்சைகொண்டு பதிமுதலானோரச்சத்தால் துச்சகுணத்தோடும் பிறரறியாமற் புணர்ந்து தன்னிச்சை நிறைவேறாமல் ஏக்கங்கொண் டிருந்திறப்பவளன்றோ; மறுபிறப்பில் பலர் வாங்கும் விலை மகளாய்ப் பிறந்து நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு யென்னும பெண்மைக்குரிய குணங்களின்றிப் பயனிலாப் பெண்ணெனப் பேரெடுத்துத் துஷ்டகுணங்களிற் சிறந்த ஆடவரால் வேசிதாசி யென்றழைக்கப்பட்டு மான வீனமின்றிப் பொருளை விழித்திருக்கும்போதே கொள்ளைக்கொள்ளும் பொது மடந்தையரைத் தொடலாமா? வைராக்கியத்தை விடலாமா? யாத்திரை செய்து உன் தந்தைவந்து இச்சங்கதியைக்கேட்டால் உன் பற்களைத்தட்டி விடுவாரே! இரண்டு துண்டாக வெட்டிவிடுவாரே! பலரும் அறியாமுன்னமே வீட்டுக்கு வந்துவிடென்று வெகு பணிவாயுரைக்கும்போது துளசிதாசனென்றுஞ் சொல்லாமலிருக்க அத்தாய் மிக முனிவுகொண்டு அடா துஷ்டா!

தாசிகளைப்புணரும் பிரஷ்டா! வேசிகள் வலையிற்சிக்கின பேயா! நான் வந்தழைத்தும் வீட்டிற்கு வராமலிருக்கிறாயாவென்றதட்டியும் வராமையா லினிநம்மா லிவனைத்தேற்றக்கூடாதென்று வாட்டத்துடன் வீட்டையடைந்து மிகவுமிடைந்து பெற்றதாயாதலால் மறுநாளும்வந்து துளசிதாசனைப்பார்த்து நொந்து, அடா என்கண்மணியே! சிகாமணியே! அனலானது புனலாலவிந்துபோம் இக்காமக்கனல் வரைமீதேறி யொளிப்பினுஞ் சுடுமே விசாலமான தடாகத்திற் குளித்திருப்பினுஞ் சுடுமே சப்தமெழுந்ததே குப்தமாய் வந்து கொல்லுங் குண்டுக்கிணையான கோதையர் மாயையிற் பட்டுப் பேதையாய்ப்போனாயே யென்கிற பல வார்த்தைகளுரைத்தும் வராமைந்தனை நிந்தைசெய்து சொந்தவீடுசேர்ந்து சிந்தாகுலத்தால் மிகவும் நைந்திருந்தாள்.

துளசிதாசனோ பகவானுடைய லீலா விநோதத்தால் காமதுறந்தரனாய் தாசிகள் மயக்கத்திற் சிக்கி மிகவுஞ் சொக்கித் தாயை மறந்திருந்தார். இவரிப்படி இருக்கிற நாளில் யாத்திரைக்குப்போன ஆத்மாராம் சொந்தநாட்டிற் பிரவேசித்து வீட்டையடைந்து மைந்தனிருக்கும் விந்தையைக்கேட்டிடைந்து துளசிதாசனிருக்கும் தாசியின் வீட்டுக்குப்போய் மருமானிருக்குங் கோலத்தைப்பார்த்து தாலமெல்லாம் வேர்த்து அடே துன்மார்க்கா! அறிவில்லா மூர்க்காவென்று மிகவும் கோபித்துத் தனயனை யழைத்துக்கொண்டு நாட்டிற்போகநாணமடைந்து பாதுஷாவின் சோலையிற் பிரவேசித்து, அநேக ஏவலாளர்களால் ஸ்திரீகளை உள்ளேவிடாமல் காவல்வைத்துத் துளசி தாசனைப்போன்ற சில எவ்வன பிராமணவாலிபர்களை அழைப்பித்து வேதாத்தியயனம் பண்ணிக்கொண்டு சதாகாலமும் ஜபதபங்களைச் செய்துக்கொண்டு வரும்படியாய்த்திட்டஞ்செய்துதானும் பிரம்ம நிஷ்டையைச் சாதித்துக்கொண்டிருந்தார். இப்படி இருக்கிற காலத்தில் பகவான் துளசிதாசனைச் சோதிக்கவேண்டி ஓர் தேவகன்னியை விளித்து, ஓ மாதரசே! நீ இக்கணம் டில்லி நகருக்குப்போய் பெருஞ்சோலையிற் றபஞ்செய்துக்கொண்டிருக்கும் துளசிதாசனைப் பங்கப்படுத்தி நீதிவாக்கியங்களுரைத்து வாருமென்றனுப்ப அக்கன்னிகை மகாபாக்கியமென்று அக்கோடறத்திற்போய் அனேகருடன் தவஞ்செய்துக்கொண்டிருக்கும்துளசி

தாசனை எவ்விதமாய்க் காணலாமென்று யார் கண்ணுக்கும் புலப்படாமல் அப்பொழிலி லுலாவிக்கொண்டிருக்க, அத்த ருணத்தில் துளசிதாசனும் வாலிபத்தோழர்களும் ஸ்நாநஞ் செய்யவேண்டி அவ்வுத்தியானத்திலுள்ள ஓர் தடாகத்திற் பிரவேசிக்க அத்தறுவாயில் சுரமாது அச்சரசி னருகிலிருக் கும் ஓர் விருட்சத்தின்கீழ்ப்போய் மதிமயங்கும்படியாய் நிற்க இப்படி சரசசல்லாப உல்லாச ஒயிலுடனிற்கும் இளம்பிடி யைக்கண்ணுற்ற துளசிதாசன் மதிமயங்கி மிகவும் தயங்கி ஆ ஆ என்ன ஆச்சரியம், ஓ ஓ என்னருமைத் தோழர்களே! இதோ மனோரஞ்சிதமான வஞ்சியென்னும் ஓர் புட்பக்கொடி நிற்கின்றதைப் பாத்தீர்களா ஆஆ முப்பத்திரண்டிலட்சணங் களும்வாய்ந்த சிற்பசாஸ்திரிகளா லெழுதுவதற் கரிதான பதுமையைப் பார்த்தீர்களா ஆனந்தம் ஆனந்தமென்றுரை த்துக்கொண்டே அக்காந்தையினருகிற்சென்றார். அதற்கந்த காரிகை சினந்தவள்போல ஆத்மாராமிருக்கும் ஸ்தானத்தை நீங்கித் தருக்கள் நெருக்கமான விடத்திற்போய் நின்றாள். துளசிதாசன் அவள்பின் சாயைப்போற்றொடர்ந்து அச்சுந் தரியின் சமீபத்தில் நின்று தன்னுடன்வந்த தோழர்களை நோக்கி ஓ என்னன்பர்களே! இதோ சகல விசித்திர வர்னங் களாற்சூழப்பட்டு அழகோங்கி விளங்கிய ஓர் தோகை நிற்கி றது பார்த்தீர்களா ஆ ஆ புலவராற் புகழ்வதற்கரிதான ஓர் மங்கை இங்கே நிற்கின்றாள் பார்த்தீர்களா இவ்வுலகிலுள்ள அழகெல்லாம் திரண்டொரு வுருவாகி மின்னற்கொடி போ ன்ற ஓர் ஒய்யாரி நிற்கின்றாள் பார்த்தீர்களா தேவர் மூவர் மற்றியாவருடைய மதியையும் மயக்கும்படியான ஓர் மோக னங்கி வந்திருக்கிறாள் பார்த்தீர்களா? தன்னை மறந்து திக்கு தேசாதிகளிறந்து அந்தர்முகத்திற்சென்று பிரமானந்தத்தை யனுபவிக்கும் பிர்மக்ஞானிகளு மிச்சிக்கும் ஓர் சோபிதமான சுந்தரம் வந்திருக்கின்றது பார்த்தீர்களா? சாஸ்திரங்களிற் சொல்லியிருக்கும் அம்புயக்கண்ணாளான இரம்பை இதோ வந்துநிற்கின்றாள் பார்த்தீர்களா பார்த்தீர்களா புற்புதம்போ லற்புதமாயிருக்கும் திரண்ட கொங்கைகளைச் சுமக்கக் கூடா மல் துவண்டு நிற்கும் அங்கனைமேலன்பைச் சேர்த்தீர்களா வென்று பற்பல வார்த்தைசொல்லி புளகாங்கமாய் மயிர்க்குச் செறிந்து ஸ்மரணைதப்பி மூர்ச்சையடைந்தார். ஓ சித்தர்

களே! இப்படி அம்மாதைப் புகழுவதும், அத்தெரிவை நீதி யுரைக்கும்:

சந்த விருத்தம்.

மண்ணின்மீதரை நாழிமூர்ச்சை வசத்தனுகி விழித்தெழில்
விண்ணுறும்மதி யோகருங்குழன் மேகமோதுதல் பிறையதோ
கண்ணருங்கதிர் வாளதோமொழி கன்னலோவாய் பவளமோ
கண்ணினுலிவ டன்னைக்காணுதல் முற்பவத்தவ மென்றனன். 1

தேவலோக வரம்பையோ திகழ் மின்னலோவிந்தி ராணியோ
ஆவியுண்வலி காலனேவென தாவியுண்டிட வந்தவிப்
பாவையாரென வறிவமென்றவள் பக்கமுற்றன மேயென
தாவியேயிவண் வந்தவாறடி யேற்கியம்புக வென்றனன். 2

என்றபோதவ டுளசிதாசனை யேத்தியான் சுரகன்னிகை
உன்றன்றந்தையி னடிவணங்கிட வுன்னியிவ்விடம் வந்தனன்
என்றபோதெழி லன்னமேயெளி யேனையாட்கொளுஞ் சொர்னமே
என்றன் கண்மணி யேயிவ்வேளை யெனக்கிணங்குக வென்றுமின். 3

வேறு.

என்னமாதவஞ்செய்தேனேவிங்குநீவருதற்கந்தோ
தன்னைநேருற்றபெண்ணே தயவுகூர்ந்தென்னையாள்வாய்
என்னவேதேவரம்பையிந்தவன்யாயவார்த்தை
என்னிடஞ்சொல்லலாமோயென்றிறைஞ்சியம்பலுற்ருள். 4

யானுன்றன்றந்தைதன்னையிறைஞ்சிழிவகற்றவெண்ணி
வானுலகான்றிங்குற்றேன்மாதவனருள்குமாரா
ஆனதாலடியாண்மீதிலருள்செய்வதன்றிநல்ல
மோனவார்த்தைகளாலென்றன்மூடத்தைநீக்குமென்ருள். 5

நீக்குமென்றேதும்பெண்ணேநினக்குறுமஞ்ஞானத்தைப்
போக்குவனன்றிவிஞ்சைபோதிப்பனெளியேன்றன்னை
நீக்கிடாதிணங்கியின்பநிறைவித்தாற்கண்ணேபெண்ணே
மோக்கநீசேர்வையென்றமொழிந்திடமறுத்துசொல்வாள். 6

வேறு.

அயலான்றன்னைப்புணர்ந்ததனுலடைந்தாள்பழியைத்தாராவும்
அயலான்தனைப்பார்த்ததிசயித்தேயதமாய்ப்போனுள்ரேணுகையும்
அயலான்தனையாசித்ததனுலடைந்தாள்பழிசுக்கிரன்மகளும்
அயலான்றனைக்கண்ணுற்பார்க்காதடைந்தாள்பெறுமைசீதையுமே. 7

அயலான்தன்னையாசித்ததாக்கியானசூர்ப்பனகை
அயலானதன்னுற்செவிமூக்குமறுபட்டையோமிகநொந்தாள்
மயலீவிண்டுசலந்தானுய்வந்துமயக்கமயங்காமல்
அயலானென்றேயறிந்துகொண்டாளறிவினுயர்ந்தபிருந்தையுமே. 8

தேவர்முனிவர்புகழ்ந்தவளாம்திருப்பாற்கடலிற்பிறந்தவளாய்
தேவபஞ்சகன்னியரிற்சீரும்பெருமுள்ளவளாய்த்
தேவராஜன்கௌதமருந்திகழ்மாதழகாயிருவருளம்
பாவையெனக்கென்றனக்கென்றேபயிலவைத்ததூயவளாய். 9

இருவர்தம்மிற்கௌதமருமீரைஞ்சோரான்டொருமனதாய்
மருவித்தவத்தைச்செய்தபின்னர்மகிழ்ந்துமணஞ்செய்திட்டவளாய்த்
தரணிதனில்வாழ்தையலரிற்றூனேயழகிற்சிறந்தவளாய்த்
தெரிவையென்னுமகலிகையாள்சேதிசொல்லக்கேளெனச்சொல்வாள். 10

பொல்லாவிந்த்ரன்றனைமருவிப்போகித்ததனாற்கௌதமராற்
கல்லாயமைந்தாளிப்போதுங்கலியாணஞ்செய்வோர்களெலாம்
பொல்லாவிபசாரஞ்செய்தேபோனுள்சிலையாயாதலினால்
நல்லாயுதைப்பாயகலிகையாங் கல்லையென்றுநவில்கின்றார். 11

நீசன்புதல்வியானாலுநிமலக்கற்பினதனாலே
தேசம்போற்றவருந்ததிதான்றிகழ்கின்றாள்வான்றனிலுடுவாய்த்
தேசுளவவடன்வடமீனைச்சிறப்புற்றின்றுமண்வரையிற்
பாசமுடையமணப்பெண்ணேபாரென்றுடுவைகாட்டுகிறார். 12

வேறு.

புருடனேதெய்வமென்றுபுகலுநான்மறைபுராணம்
புருடனைதெய்வமென்றுபுருடனைச்சேர்ந்தகன்னி
இருணரகடைவதன்றியெழிலருட்பெறுவதுண்டோ
இருளிலாதவன்குமாராவியம்பெனவியம்பலுற்றான். 13

இணங்கியென்னுசைதீர்த்தாலெழின்மயிலேயிப்பாவம்
கணந்தணிற்றீர்க்குமார்க்கங்கழறுவேனென்றுசொல்ல
அணங்கிடவந்தபோழ்திலரம்பையுமுனிந்துதீயக்
குணந்தவிர்க்காதோய்துூரநில்லெனக்கூறலுற்றாள். 14

புத்தியில்லாதவட்குப்புத்தியையுரைத்துமேலாம்
முத்தியையளிப்பாயென்றுமுன்னின்றேன்மோகமாகிப்
பித்தரைப்போலென்மீதுவிழ்ந்துநீபிதற்றலானற்
புத்திகளுனக்கின்றேங்கப்புகலுவேன்கேளுமென்றாள். 15

அயலான்மனைவிதனையாசித்தவமாய்ப்போனன்றசக்கிரீவன்
அயலான்மனைவிதனைப்பார்த்தேயழிந்ததொருமத்தகமயனுக்
கயலான்மனைவிதனையாளத்தாவியிழந்தான்கீசகனும்
அயலான்மனைவிதனைப்பார்த்தேயளகேசன்றன்கண்ணிழந்தான். 16

சுரகன்னிகையாற்சுந்தோபசுந்தரனுவித்துறந்தார்கள்
சுரவிந்த்ராணிதனைப்புணரத்துணிந்தேநகுஷன்பணியானன்
குருவின்மனைவிதனைக்கூடிக்குஷ்டமானன்சந்திரனும்
அரியின்மனைவிகளையாசித்தழிந்தானரகாசுரனன்றே. 17

பரதாரத்தையிச்சித்துப்பாரிலழிந்தான்கிம்மீரணன்
பரதாரத்தையிச்சித்துப்படியின்முடிந்தான்வஸிவாலி
பரதாரத்தையிச்சித்துப்பஸ்பமானனடல்வேடன்
பரதாரத்தையிச்சித்துப்பதியிலிறந்தோர்க்கிலக்குண்டோ. 18

வேறு.

தானமும்யாகமும்பலசெய்துக்தவமிகச்செய்தடைகின்ற
வானவர்வாழுஞ்சொர்க்கலோகத்துமனவனுகுமிந்திரனும்
ஞானவானனகௌதமரிஷியினன்மனையாடனைப்புணர்ந்தோர்
யோனியாசையினலுடலோராமும்யோனியையடந்தனனென்றாள். 19

வேறு.

இவ்விதமனேகநீதியிசைந்திடத்துளசிதாசன்
கொவ்வையங்கனிவாயாளுன்கோதிலாமுகத்தைநோக்கித்
திவ்வியநீதிகற்றுந்தேசினைப்பெற்றபெண்ணே
எவ்விதமேனுமென்னையிணங்கெனவருகிற்சென்றான். 20

அருகுறத்தேவரம்பையறிவிலார்க்கறிவுணர்த்த
அரனரியயனுலாகாதலாலுனக்குமின்னே
அறையிமையிருக்கலாதாதென்றருதேவலோகம்
விரைவுடன்போனள்பின்னர்நடந்ததைவிளம்புவோமே. 21

கன்னிகைசினந்துபோகக்கனமுளதுளசிதாசன்
தன்னையுமறந்தான்பெற்றதந்தையைமறந்தான்சிந்தை
பின்னமதாகிநொந்தான்பித்தரைப்போலலைந்தான்
என்னமாயிருப்பேனென்பானேங்கியேபதைபதைப்பான். 22

மலரணிகுழலாளென்முன்வருவளோவென்பானெந்தத்
தலமதிலிருக்கின்றாளோதமியனேனறியேனென்பான்
கலைமதிமுகத்தாடன்னைக்காண்பனோவென்பான்கும்ப
முலையுளமாதேமாதேயென்றுமூர்ச்சித்துவீழ்வான். 23

இப்படிதுளசிதாசனேங்கியேயிருக்கக்கூட
ஒப்பமாய்வந்ததோழரோலமிட்டழுதுநொந்து
செப்பருங்கலைகள்கற்றதிவ்வியகுணனேயெங்கள்
சொற்படிகேட்கவேண்டுமென்றொருதோழன்சொல்வான். 24

காமத்தைநீக்கிநித்யகருமத்தைமுடிக்கவேண்டித்
தாமரைக்குளத்தில்ஸ்நானஞ்செய்யெனத்துளசிதாசன்
காமமேபெருந்தடாகமதிற்களித்திருத்தலாலே
தாமரைத்தடாகந்தன்னைச்சார்ந்திலேனென்றுசொன்னான். 25

மற்றொருதோழன்காமமயக்கத்தைநீக்கமேலோர்
கற்றவஞ்செய்வாயென்றுகவின்றிடத்துளசிதாசன்

மற்றொருநினைவிலாதவ்வனிதைதயைக்கூடவேண்டி
நற்றவஞ்செய்வேனென்றுநவின்றனனசையிலானே. 26

அந்தமாதியுமிலாதவாண்டவன் பாதத்திற்கு
வந்தனஞ்செய்வாயென்னமகிழ்ந்தந்தத்துளசிதாசன்
சுந்தரவதனமுள்ளதோகையிவ்விடம்வந்தெய்தால்
வந்தனஞ்செய்வேனென்றான்மற்றொருதோழன்சொல்வான். 27

மேலவனுயிருந்தும்வெட்கமில்லாமலிந்தக்
கோலத்தையடையலாமோகூறெனத்துளசிதாசன்
மேலவனதாலேவெட்கப்பூட்டினையுடைத்திக்
கோலத்தையடைந்தேனென்றுகூறிடமற்றோர்தோழன். 28

பரமனுர்தமக்குநீயும்பயப்படாமையினுற்றீய
நரகத்தையடைவாயென்றுநவின்றிடத்துளசிதாசன்
சுரகன்னிகையினுலென்னைச்சூழ்ந்தவக்கினியினுலே
நரகத்தையெரிப்பேனென்னநவிலுவன்மற்றோர்தோழன். 29

மோக்கநீயடையவேண்டின்மோகத்தையிப்போதேநீ
நீக்குவாயென்றுசொல்லநேயனுர்துளசிதாசன்
மோக்கமுமடைவேனன்றிமுன்வந்தகன்னிவந்தால்
பாக்கியனுவேனென்னப்பகருவன்மற்றோர்தோழன். 30

திவ்வியம்போன்றவுன்றன்சிந்தையெங்கொளித்ததையோ
திவ்வியவருட்குமாராசெப்பெனத்துளசிதாசன்
திவ்வியசிந்தைதன்னைதிருடிக்கொண்டகன்றுணல்ல
திவ்வியகன்னியென்னச்செப்புவன்மற்றோர்தோழன். 31

கந்தமாதிகளைவென்றுகர்த்தனைத்துதிக்குமுன்றன்
தந்தைபால்வாவாவென்னத்தாழ்ந்தந்தத்துளசிதாசன்
கந்தம்வீசியமெய்யாளைக்கண்டவிவ்விடத்தைவிட்டுத்
தந்தைபாலணுகேனென்றுசாற்றினன்றேழர்க்கெல்லாம். 32

வசனம்.

ஓ சித்தர்களே! துளசிதாசனுக் கருந்துணையான தோழர் இன்னம் பலபல நீதிவாக்கியங்களை யுரைத்தும் பயன்படாமல் ஓ துளசிதாசனே! இச்சங்கதியை யுன்தந்தையினிடம் போயுரைத் திக்கண மழைத்துக்கொண்டு வருகிறோமென்றொருநொடியிற்போய் பிரமநிஷ்டையாற் றன்னை மறந்திருக்கும் ஆத்மாராமைப் பணிந்து ஓஸ்வாமி! தங்களுடைய குமாரனுகிய துளசிதாசன் ஆகாயத்திலிருந்துவந்த ஓர் கன்னிகையின்மேல் மோகித்து அவளைப் பலவந்தம் செய்தான். அம்மாது பல நீதிவாக்கியங்களைப் போதித்து ககனமார்க்க

மாய்ப்போனுள்பின்பு துளசிதாசன் அந்தரம்பையின் மோகத்தாற் றன்னை மறந்து வாயில்வந்தபடி பிதற்றிக்கொண்டிருக்கின்றான் ஆதலாற் சீக்கிரம் தேவரீர் வந்து மயக்கத்தை நீத்து ஆட்கொள்ளுமையாவென்றதைக்கேட்ட ஆத்மாராம் ஆச்சரியத்திலுமாச்சரியங்கொண்டு அதி துரிதமாயோடி காமாக்கினியாற்றகிக்கப்பட்டுஸ்மரணைகெட்டு பெண்ணே கண்ணே யெனும் வார்த்தைகளாடிக்கொண்டிருக்கும் அழகான புதல்வன் வதனத்தை ஆசையோடும் பார்த்தார் கேட்டீர்களோ சித்தர்களேயென்று பின்னும் நாபாஜிசித்தர் சொல்லுவார்.

துளசிதாசரைக் காமத்திலழுத்திய அத்தியாயம்

முற்றிற்று.

மூன்றாவது அத்தியாயம்

இராகம் நீங்குதல்.

ஓ சித்தர்களே? பகவான் முன்னம் தாசிகள் மயக்கத்தில் விழச்செய்து வேசிகளைக் கனவிலும் நினைக்காமல் மறுத்து இனி பரஸ்திரீகமனந் தீதென்றறிந்து நீங்க மாயவலையாற் பிணிக்க அதனாற் சொக்கியிருக்கும் துளசிதாசன் முகத்தை ஆத்மாராம் அன்புடன் பார்த்துச் சொல்லும்,

கவி.

பார்த்தெனதருள்குமாராபரசுகமடைந்ததுயோர்
ஏத்திடுங்கண்ணேபெண்ணாலிப்படியலையலாமோ
வூத்தையுமுதிரஞ்சீயுமொழுகிடும்புண்ணுந்தோலை
நாற்றமென்றகற்றிடாதேகண்ணிடலாமோவென்றான். 1

குடல்வழும்பென்புந்தோலுங்குருதியுநரம்பிறைச்சி
கொடுமலசலமுமீனக்கோழையுங்கொழுப்புமுற்றுச்
சுடுபிணமணத்திக்கெட்டதுர்க்கந்தம்வீசநின்ற
மடந்தைமீதாசையாதல்வளமதோமகனேயென்றான். 2

அப்பனேமகனேயென்றனரியமாதவத்தால்வந்த
ஒப்பிலாநிதியேதூயவுணர்வுளதுளசிதாசா
செப்பருங்கலைகள்கற்றசெல்வமேபெண்ணினால்நீ
இப்படியலையலாகாதினியிதையகற்றுவாயே. 3

முன்னொருகாலந்தன்னிற்பிருகுமாமுனிவனிஷ்டை
தன்னையுற்றிருக்குங்காலந்தனிலவன்மைந்தனானோன்
துன்னருங்கலைகள்கற்றோன் சுக்கிரனென்போன்றேவ
கன்னியைகண்டுகாமக்கடலில்வீழ்ந்தவசமுற்றான். 4

அவசநீத்தெழுந்தத்தூயவரம்பையைக்காணுநொந்து
சவந்தனைப்பிதாப்பால்வைத்தோர்சடத்தினோடண்டஞ்சென்று
உவமையிற்றேவமாதையொப்புடனணைந்தனேகப்
பவமெடுத்துழன்றாணந்தப்பாவனைபோனீசெய்தாய். 5

மூவருமறையுணர்ந்தமுனிவருஞ்சொர்க்கலோக
தேவருமஞ்சத்தக்கதிவ்வியவிசுவாமித்ரன்
பாவையையோர்நாட்கூடிப்பண்ணியதவமிழந்து
மூவர்மாமுனிவர்தேவர்முன்செலநாணமுற்றான். 6

சுரர்குருபுதல்வனானகஜமுனிசுக்கிரன்பால்
உரியநற்பணிகளாற்றியுயிர்தருமந்திரத்தைப்
பிரியமாய்ப்புகாளிக்கப்பெற்றுவானேகுமப்போ
தருள்புகர்புதல்விதன்பாலணுகுவதறிந்துநின்றான். 7

நின்றிடமாதுசொல்வாநின்னைநானையவேண்டி
யுன்றன்பாலடைந்தேன்மாற்றமுறைத்திடாதிணங்கென்றோத
என்னையேயீன்றதாயேயிம்மொழிக்கிணங்கேனென்று
சென்றபோதுயிரைநீயுந்திருமந்திரம்பலிக்காதென்றாள். 8

பக்குவக்கஜன்பயந்துபாவியென்றழுதுநொந்து
சுக்கிரன்பால்போய்ச்சொல்லித்துன்பத்தைநீக்கிக்கொண்டு
சொர்க்கத்தையடைந்துநல்லசுகந்தனையடைந்தாற்போல
பக்குவதுளசிதாசாபாவைமாமயனீக்கென்றான். 9

சுகப்பிர்மரிஷிதவத்தைத்தொலைத்திடுவோமென்றெண்ணி
அகப்பிர்மையோடுதேவரரம்பையையனுப்பக்கன்னி
சுகப்பிர்மரிஷியைச்சூழ்ந்ததொண்டர்கடவமழித்து
சுகப்பிர்மரிஷிமுன்னின்றாள்தூயனுமவளைக்கண்டான். 10

கண்டுநீயாரென்றோதக்கதிதரும்ரம்பையென்ன
அண்டரைநீக்கியென்பாலணுகினதேதாவென்றான்
ஒண்டியாயிருந்துநீசெய்யுயர்தபோபலத்தாலென்றுங்
கண்டமில்பரப்பிரமத்தின்காட்சியையுணராயென்றாள். 11

ஒண்டியாயிருப்பதன்றியுதவியும்வேண்டுமோசொல்
கண்டமில்பரப்பிரமத்தின்காட்சியையுணர்தற்கென்றால்
அண்டர்கள்ரிஷிகணீலகண்டனோடயன்மால்தூய
விண்டுவுஞ்சமுசாரத்தின்மேன்மையாற்காட்சிபெற்றார். 12

ஆதலாலெனைநீகூடியணைந்தின்பமடைந்திவ்வில்ல
நீதியாற்பிரமானந்தநேயனைக்காண்குவாயென்
றோதிடமுனிமுனிந்துன்னுதிரமாந்துர்க்கந்தத்தை
மாதவர்நோக்கார்யாரைமயக்கிடவந்தாயென்றான். 13

வந்தனன்மயக்கமீயமயக்கத்தைதீர்த்தார்யாவர்
உந்தனைவலிந்தணைந்தேயும்பர்பாற்செல்வேனென்று
பந்தமாமொழிகண்மெத்தப்பகர்ந்தொருபயன்படாமல்
இந்தநற்றாயதேகமின்பமீசுகந்தமென்றாள். 14

உகிரினல்வயிற்றைக்கீறியுத்தமமுனிக்குக்காட்டி
சுகந்தவீசிடுமென்றேகந்துர்க்கந்தமென்றுசொன்னை
சுகந்தத்தைக்கண்டதானீசுகந்தரயணைவாயென்ன
றுகந்தருகினிற்செல்போதிலுத்தமமுனிவனானோன். 15

தோகையர்களிலேநற்றாயவளாயினும்மென்
ஆகநீங்கிடினுமுன்னையணைந்திடமாட்டேனென்று
மோகமில்லாமலிந்தமோகினிதன்னைநீத்தான்
மோகினிமோசம்போனேனென்றவண்மொழியலுற்றாள். 16

அரிவையர்மோகமாயினணைந்திடவேண்டுமென்ன
உரியமாமறைகள்சொல்லவுத்தமமுனியேயென்னைப்
பிரியமாயணைந்திடாமற்பின்னிடற்றருமமாமோ
பிரியமாயணைவாயென்றுபித்தரைப்போன்மேல்வீழ்ந்தாள். 17

பித்தரைப்போலவீழ்ந்தபேதையைமுனிவன்கோபித்
தித்தலத்துற்றாயென்றாவிடுவனான்சாபமென்றான்
மற்றொருமொழிபேசாமன்மங்கைவானுலகடைந்தாள்
உத்தமசுகர்சமாதியுற்றருள்வடிவாய்நின்றார். 18

துரியமாநிலையுணர்ந்ததூயமாமுனிவர்போற்ற
உரியநற்சொர்க்கலோகத்தும்பர்களெல்லாம்வாழ்த்த
புரமெரித்தோன்மால்வேதன்போற்றிநின்றேவல்செய்து
கரங்குவித்திருந்தாரென்றார்சுகர்கனமென்னசொல்வேன். 19

சுகர்போன்றபிள்ளையன்றோதுரியமாம்பொருட்குச்சொந்தம்
இகபரபோகநீத்தவிணையிலாச்சுகர்போனீயும்
மிகுமயலீந்தகன்னிமேலிச்சைவிடுத்துஞானச்
சுதந்தனையடைவாயென்றுதூயமாதவனுரைத்தே. 20

வருகவென்றழைக்கமைந்தன்மறுமொழிசொல்வாயின்றி
சுரகன்னிநினைவினோடுந்தூயமாதவன்பின்செல்ல
சுரகன்னிமேல்விருப்பந்தொலைந்ததேயில்லையென்று
அருள்வடிவானவாத்மாராமருளாற்கண்டானே. 21

வேறு.

கண்டுசோகமடைந்துதொண்டர்கருத்திவற்கெங்காளிலே
அண்டர்கோனருளால்வருமெனவாத்மராமன்றுனிவனைந்
தண்டரும்பலமுனிவருமயனாதியோர்களுமேத்திடுங்
கண்டமின்றியகர்த்தனேகருணாலயத்தனுசுத்தனே. 22

தற்பதந்தனையுறுபுதல்வனைப்பெறுவர்மாதவரென்றுமா
நற்பதந்தருமாரணஞ்சொலுநாயினேற்கென்பாவமோ
வற்பவறிவிவர்தனிலுமீனமடைந்தபுத்ரனைமைந்தனன்
ஒப்பிலாப்பரமேஸனேயுபாடியருளமதில்வாசனே. 23

எங்குமோரியல்பாய்நிறைந்தருளிறைவனேயெளியேற்கரு
டங்கவருளியமெய்யனேயுபசாந்தனேவேதாந்தனே
எங்குமாரற்கிந்தவிதிவரலேதுவோயிதுநீதியோ
சங்கரன்மாதேவனும்பணிசாமியேயெனநைந்தனன். 24

இவ்விதமாக ஆத்மாராம் நொந்து இனி நமது மைந்தனுக்குற்ற மோகத்தை எவ்வித உபாயத்தால் நீக்கலாமெனப் பலவாறு யோசித்து ஆ ஆ இப்போதந்த தேவகன்னிகை வருவாளா, இனி இவனுக்கிருக்கும் காமமயக்கத்தை ஓர் கணத்தில் மாற்றுவேனென்றனும்போது பக்தர்களைக்காக்கவே கங்கணம் பூண்டிருக்கும் பகவான் துளசிதாசனை மோகத்திலமிழ்த்திவந்த கோதையை விளித்து நீ இக்கணம் போய் துளசிதாசனை மன்மதநோயினுற் றகிக்கச்செய்து வருவாயென்றனுப்ப மகாபாக்கியமென்றம்மாது சோதி மின்னலைப்போல் துளசிதாசனெதிர்வந்து நிற்க, ஆத்மாராம் அக்காரிகையை நோக்கிப் பிரமித்து நீயாரென்று வினவ, அவ்வொய்யாரி வணங்கி, ஓ மகாத்மாவே! நான் தேவலோகத்துக் கன்னிகை நாடோறுமிச்சோலையிற் சஞ்சரிப்பவளாதலாலின்றும் வந்தேனென்று சொல்ல, அப்போ தம்மங்கையைப் பார்த்த துளசிதாசன் அதிக மோகமாய் ஸ்மரணையின்றி மூர்ச்சையாய் நிலத்திற் சாய்ந்துவிட்டார். உடனே வாலிபப் பிராமணன் ஆத்மாராமை வணங்கி, ஓ ஸ்வாமி! இந்த கன்னிகையே முன்வந்து துளசிதாசனை மயக்கிப்போனவளென்றறைய, ஆத்மாராம் அம்மாதரசை வினயத்துடனருகிலழைத் திருத்திக்கொண்டு தனக்குத் தெரிந்த தந்திரங்களிலோர் தந்திரத்தா லச்சுந்தரியினுக்கையிலிருக்கு முதிரத்தையெல்லாம் வாங்கி ஓர் பாத்திரத்தில் நிரைத்தவுடனே அத்தையலினழகுகுன்றிக் கன்னம் ஸ்தனம் யாவும்வற்றி வெளு

த்துப் பிரேதத்துக் கிணையாகிச் சிங்காரநடையும் மெலிவான இடையுந்தளர்ந்து அடிபெயர்த்து வைத்து நடப்பதற்கும் கைகால்களை மடக்குவதற்குங் கூடாமல் ஒருலர்ந்த விருட்சத்தைப்போலசைவற நின்றுவிட்டாள். அப்போது ஆத்மாராம் துளசிதாசனுடைய மூர்ச்சையைத் தெளிவித்துக் கன்னிகையினருகில் நிறுத்திச் சொல்லும்,

கவி.

உதிரமுற்றிடுபொண்டமும்மகன்முன்னம்வைத்துயர்மைந்தனே
மதுரமாகியமாதைநீமிகமனமகிழ்ந்தணைகுவையென
அதிகவச்சமசங்கியம்முடனாழ்ந்தகண்ணுடன்வற்றிய
அதரகன்னமுந்தனமும்பார்த்தவளாசைவிட்டவனுணமாம். 25

என்னசெய்தனமென்றயர்ந்திடவென்றன்மைந்தனேகன்னிகை
கன்னமுங்கனதனமும்பார்த்தலோகாமமர்கினையிப்பொழு
தென்னமாயிக்கன்னியாகினளென்னிரத்துருவாகிய
கன்னியாகியபிரேதமீதினில்காமமாகினையேனடா. 26

அசங்கியமுளரத்தமீதினிலாசையாகினையேனடா
அசங்கியமுளதசையின்மேன்மிகவாசையாகினையேனடா
அசங்கியச்ரலதாரையில்விழவாசையாகினையேனடா
அசங்கியமலநரகில்மூழ்கிவாசையாகினையேனடா. 27

வேறு.

பெண்ணாசையுளோர்க்கறிவில்லைபெண்ணாற்றவமுஞ்சுகமுமில்லை
பெண்ணாசையுளோர்க்கறமில்லைபெண்ணாற்சற்சங்கமுமில்லை
பெண்ணாசையினாற்றுறவில்லைபெண்ணாற்சீரும்பேருமில்லை
பெண்ணாசைக்கோர்துரையில்லைபெண்ணாற்றீங்குவருமகனே. 28

பெண்ணான்மானமுண்டாகும்பெண்ணாலீனமுண்டாகும்
பெண்ணான்முறைகண்மாறிவிடும்பேதஞ்சூதுமுண்டாகும்
பெண்ணால்வினைகளேறிவிடும்பிறப்புமிறப்புமுண்டாகும்
பெண்ணாலன்றோபாரதமும்பெரியராமாயணமாச்சே. 29

பெண்களாலேவருங்கஷ்டம்பெண்களாலேவருநஷ்டம்
பெண்களாலேவருங்கஷ்டம்பெண்ணாநரகம்வந்தொட்டும்
பெண்களாலேவரும்சண்டைபெண்ணாலுடையுந்தலைமண்டை
பெண்களாலேகெட்டவர்கள்பேரையுரைக்கவிலக்குண்டோ. 30

அரியநூல்களுணர்ந்தாலென்னைக்யபாவமறிந்தாலென்
துரியபாவனைக்குநித்தாலென்தூயஜெபங்கள்செய்தாலென்
உரியமனைவிதனையன்றியுவகையோடுமயலானுக்
குரியஸ்திரீயைப்புணர்ந்தோனேலோகோகொடியபாவியே. 31

பரஸ்திரீகமனந்தன்னைச்செய்தேபாவியானோரனேகராம்
பரஸ்திரீகமனந்தன்னைநீத்துப்பரத்தையடைந்தோராரியராம்
பரஸ்திரீதன்றாயெனுமெண்ணமுடையோன்றனக்குப்பணிசெயலாம்
பரஸ்திரீகமனம்பண்ணும்பாவிமுகத்தைப்பார்க்கலாகாதோ. 32

பரஸ்திரீகமனந்தன்னைச்செய்வோன்பண்ணுந்தவங்கள்பலிக்காவாம்
பரஸ்திரீகமனந்தனைச்செய்வோன்பண்ணுந்தர்மங்கர்மமாம்
பரஸ்திரீகமனந்தனைச்செய்தேபரத்தையடைந்தாராரையோ
பரஸ்திரீகமனமில்லாதோன்பரமஞானியெனலாமே. 33

பரஸ்திரீகமனஞ்செய்வோர்க்குப்பரமுமிகமுமிலவாகும்
பரஸ்திரீதன்னைப்பார்த்தவனேபடியிற்குருடனாய்ப்பிறப்பன்
பரஸ்திரீதன்னைப்புணர்ந்தவனேபாரிலலியாய்ப்பிறப்பானேல்
பரஸ்திரீகமனந்தீதன்றோபண்பிற்சிறந்தபாலகனே. 34

வேறு.

பரபுருஷனைப்பார்க்காதபத்தினிதனையிச்சித்தால்
எரிவிழுங்கிடுமேதீயவீடணுகிடுமேயென்றும்
நரகணுகிடுமேகொல்லும்நமனணுகுவனேயிந்தத்
துருசினையகற்றிக்காமத்துகளினையகற்றுவாயே. 35

பத்தினிமனதுநோகப்பாழாச்சோர்யாகமப்பா
பத்தினிநினைக்கப்பூமிபடீலெனவெடித்ததப்பா
பத்தினியுரையால்வன்னிபடிகமாஞ்சலமாச்சப்பா
பத்தினிமுனிவால்வேடன்பஸ்பமாய்ப்போனனப்பா. 36

உத்தமிகளினாலன்றோவுலகத்தின்மழைபெய்கின்ற
உத்தமிகளினாலன்றோவுயிர்ந்தவந்தானமோங்கும்
உத்தமிகளினாலன்றோவுலகரசாட்சியோங்கும்
உத்தமிகளினாற்சந்த்ரசூரியருதிக்கின்றாரே. 37

மதிகதிர்மறைந்திட்டாலும்மண்டலங்கீழானாலும்
பதியரசளித்திட்டாலும்பரமன்வந்துரைத்திட்டாலும்
நிதிமிகவளித்திட்டாலும்நியமநிட்டைகள்சொன்னாலும்
பதிவிரதத்தைநீங்கார்பத்தினிமார்களென்றான். 38

என்றிவ்விதமாகிய பல நீதிவாக்கியங்களைத் துளசிதாசனுக்கு ஆத்மாராம் ஓதிக்கொண்டிருக்கையில் அசைவற்று நிற்கும் தேவகன்னிகை ஆத்மாராம்செய்த தந்திரத்துக்காச்சரியமும் மாச்சரியமுங்கொண்டு ஆயாசமடைந்து மனமிடைந்து ஸ்ரீமந்நாராயணரை உள்ளத்திற் சிந்தித்து வந்தித்து ஓ பகவானே! ஆதரவற்றிருக்கும் அடியாளை இப்போதே ஆட்கொள்ளாமற்போனால்வெகு துன்பத்துக்குள்ளாவேனெ

ன்று முறையிடுவதறிந்த கபட நாடகனாகிய பகவான் அம்மா துக்கு போதுமானரக்தபுஷ்டியை யளித்தமாத்திரம் தேகவலி வந்து ஆத்மாராம் முன்னிற்பதற்குப் பயந்து நயந்து சரே லென்றெழும்பி ககனத்தில்மறைந்தாள். பின்பு ஆத்மாராம் துளசிதாசனுக்கு நீதிமார்க்கங்களை யோதிட தேவகன்னிகை யின் மயக்கத்தைப்போக்கி மகா விஷ்ணுவின் மாயையை நீக்கி அப்பா மகனே! இன்றுடன் உன் மனைவியையன்றி வேறு ஸ்திரீயைக் கருதாதே கருதி மிகவும் உருகாதே என் வாக்கியத்தைத் தள்ளாதே பரஸ்திரீகமனங் கொள்ளாதே கொண்டால் மிகவும்பொல்லாதே தாசிகள் தெருவில் நில்லா தே மறந்து மத்தெருவில் செல்லாதே எப்போதும் பொய் சொல்லாதே ஒரு சீவனையுங் கொல்லாதே பாவம்முன் தன் வலி செல்லாதே மிகவும் ஸ்திரீயைக் கூடாதே கூடிப்பின் னல்வாடாதே அழியும்பொருளைத் தேடாதே தேடிப்புவியில் ஓடாதே ஜபதபங்களை மறக்காதே தெய்வபக்தியைத் துறக் காதே கர்மத்தொழில்கள் செய்யாதே கபடால்வாடி நையாதே தர்மகுணத்தை நீக்காதே சண்டாளர் தம்மைச் சேர்க்காதே தெருக்கள்தோறுந் திரியாதே தீனர்கள் தம்மைப் பிரியாதே குருக்கள்மாரை வையாதே குமாராவென்சொல் மெய்யிதே என்கிற வாக்கியங்களை யுரைத்துத் துளசிதாசனுடைய மன தைக்கரைத்து அக்பர் பாதுஷாவினிடத்தி லிவனையினி யிரு க்கக் கூடாதென்று தானும் தங்கள் பெரியோரும் வாழ்ந்த ஊராகிய ராஜாபூருக்குச் சமுசாரத்துடன் பிரயாணப்பட்டுப் போய்ச்சேர்ந்து தன்மனைவியைநோக்கி ஓ பெண்ணே! உன் குமாரனை வெகு பத்திரமாய்க் காப்பாற்றுவதன்றி நமது மரு மகளாகிய மமதாதேவியை யழைப்பித்துக்கொண்டு சுகமாயி ருங்கள் நான் அனேக சாதுக்கள் வாழும் நைமிசாரண்யத் திற் போய்த் தபஞ்செய்ய வேண்டுமென்றுரைக்க, அதற் கவர் மனைவி ஓ சுவாமி! உம்மைவிட்டு அடியாள் பிரிந்திரு க்கமாட்டேனென்று தானும் பிரயாணத்துக் காயத்தமாக ஆத்மாராம் ஓபெண்ணே! நமது மைந்தனோ சிறுவயதுடை யவனாயிருக்கின்றான் நீயுமென்னுடன் வந்துவிட்டால் குமா ரனை யாராதரிப்பார்கள் என் வார்த்தையைத் தள்ளாமல் மறு மொழி விள்ளாமல் மைந்தனைப் பாதுகாப்பாயாக என்சொற் படி நடப்பதே உனக்கு முக்கியமான தவமும் விரதமும் பதி

வார்த்தையைக்கடவாத சதிக்குப் பரமபத மூண்டென்று பல சாஸ்திரங்கள் முறையிடுகின்றது. நானோ சகல சாஸ்திரார்த்தங்களறிந்தும் வோதினபடியே சாதனஞ் செய்யாமல் கோதுக்குள்ளாயிருந்தேன் இனி யென்னுடன் வாதிக்கவேண்டாம் சமுசாரத்திலிருந்தடைந்த பலனெனக்குப் போதும் உனக்கோர் குறை நேரிடுமாயின் நைமிசாரண்யத்திற்குத் தடையின்றிவரலாம் சாதுக்கள் தரிசனம்பெறலாம் பிரமானந்தமுறலாம் எனதாசிரியரால் போதிக்கப் பெற்றுக்கொண்ட ஞானநிஷ்டைக்கும் இல்லறதர்மத்துக்கும் வெகுதூரம் எனக்கோ தன்னை மறந்து திக்குதேசாதிகளிறந்து பிரமானந்த வாரியில் மூழ்கியிருக்கும்படியான ஞாபகம்மேலிட்டு மானிடப் பிறப்புக் குறுதித்துணையான தவஞ்செய்யாதவர்கள் சவத்துக்குச் சமானமதேகமோ நீர்மேற்குமிழி ஓதாத பேதைமானிடரைப்போல நானிருப்பதழகல்ல பவசாகரத்தைக் கடக்கும் புணையானது தவமேயாம் தேகேந்திரிய பிராண கரண சீவவிருளைக் கடந்து சுழுப்தி நிலையையடைந்து ஆத்மா மாத்திரமாயிருக்கும் சமாதிநிஷ்டை சமுசாரத்திலிருந்து சாதித்தல் வெகுதுர்லபம் மனமரும்பொருளைப் பற்றமாட்டாது சாதுக்கள் கூட்டத்திலிருந்து சேர்ந்தாலன்றிச் சகஜ க்ஞானத்தையடையக்கூடாது. அற்பமான சொர்க்காதி போகங்களுக்கே அற்புதமான தபஞ்செய்வார்களாகில் செப்புதற்கரிய ஒப்பிலாக் கைவல்யமடைவதற் கெத்தனை பாடுபடவேண்டும். திரிவுலகத்தரிலொரு க்ஞானியென்றுரைக்கும் பழமொழி பொய்யா மெய்யா வென்றுரைத்து நைமிசாரண்யத்தை நாடிப் போகையில் துளசிதாசன் தந்தையுரைத்த விரக்தி வார்த்தையைக்கேட்டு மனந்துலக்கமூற்றுத் தந்தையினிடம் போய் அவரம்புய வடிகளிற் பணிந்து நயனங்களை யணித்து ஓ என் தந்தையே! அடியேனும் மும்முடன் வருகிறேனென்று பின்றொடர அந்த ஆத்மாராம் ஓ என்னருமைக் குழந்தாய் நீஎன்னுடன்வர இச்சித்தது நன்மையே ஆனாலும் சகல விஷய போகங்களையு மனுபவித்து விரக்தியடைந்து சன்யாசியாக வேண்டுமன்றி ஒருவர் போதனையால் விரக்தியடைந்தவன் சிலநாளில் விஷயபோக எண்ணங்களாற் பீடிக்கப்பட்டு இல்லறதர்மமுங்கெட்டு பிரஷ்டத்துவ மடைவான் அது எப்படி யென்றால்,

அபசாரத்திற் சிறந்த விபசாரி ஒருவர் போதனையால் விபசாரஞ் செய்யாதிருந்தாலும் சிலநாளிற் றன் சுயகுணத்தையே யடைவாள். தானே இது கூடாதென்றும் இச்செய்கையால் நரகத்தை யடைவோமென்றும் அற்பமான ஓரிந்திரிய சொற்ப சுகத்தையே வெல்லாத நாம் வஞ்சகமான சஞ்சலமுள்ள நெஞ்சகத்தை வெல்வதெங்கே பகவான் றிருவடிகளை யடைவதெங்கே தசேந்திரியங்களில் ஓரிந்திரியத்தை யடக்காமல் மானமிழந்து ஈனமடைந்துதிரியும் நாம் தசேந்திரியங்களை வெல்வதெப்போ பரிசுத்த மனதுடன் பகவானைத் தியானிப்பதெப்போ இனி கற்பைக் காப்பதே நமக்குரிய தபம், செபம், ஓமம், நியமம், விரதம், சீலம் என்று திட நிச்சயங்கொண்டவள் தன்னுயிர் நீங்கும் பரியந்தம் பதிவிரதைத் தன்மையைக்காத்து சஞ்சலமனதைப்பேர்த்து லேசில் பரமபதத்தை யடைவாள் உண்மை இப்படியாகும் நீ சிறுபிள்ளை விஷய ஞாபகமுள்ளவன் உன்னுடைய ஸ்திரீயோ அறியாதவள் அவளை விட்டென்னுடன் வருவது கூடாது இன்னுஞ் சிலவருஷங்கள் உன்னுடைய ஸ்திரீயுடன் கூடியிருந்து விரக்தியடைந்து மோட்சமார்க்கத்தில் நடந்து சமுசார சாகரத்தைக்கடந்து விஷயாதி போகங்களுக் கிடைந்து சாதுக்களுடன் றொடர்ந்து உண்மை நிலைமையையறிந்து ஆனந்தத்தை யடைவதே உனக்குகந்த யோக்கியமென்றறைந்து தனயனைப்பிரிந்து நைமிசாரண்யஞ்சேர்ந்து சாதுக்களுடன்கூடி களிகூர்ந்து பந்தபாசங்களிலிருந்து பேர்ந்து பிரம நிஷ்டையைச் சார்ந்து நிச்சல சமாதியிற் றோர்ந்து சகல சந்தேகங்களுந் தீர்ந்து பிரமானந்தவாரியிற் படிந்திருந்தார். கேட்டீர்களோ சித்தர்களேயென்று நாபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லத் தொடங்கினர்.

இராகம் நீங்கு அத்தியாயம் முற்றிற்று.

நான்காவது அத்தியாயம்.

துளசிதாசர் ஸ்திரீவாஞ்சனை.

ஆத்மாராம் நைமிசாரண்ய மடைந்தபின் அவர்மனைவி தன் மருகியை யழைப்பித்து குமாரன்பா லொப்பித்து அப்பாமகனே! இன்றுடன் உன் மனைவியையன்றி வேறு ஸ்திரீ·

யைக்கனவிலும் நினைக்காதே யென்றுரைத்துப் பதிபதங்களை மதியிற்பதித்து துதித்துக்கொண்டே நாள்கழிக்கத் தொடங்கினாள். துளசிதாசர் பகவானுடைய மாயையால் தன்மனைவியின் மோகத்திலமிழ்ந்து தேவரம்பையே இவளாமென்று மேடைவிட்டு வெளிவராமல் ஒருவருக்குந் தரிசனந்தராமல் சிற்றின்பமே பேரின்பமென்று காமக்கடலில் மூழ்கி ஒன்றுந் தோன்றாமல் மாழ்கி நாள்கழிக்கத் தொடங்கினார். இப்படிச் சிலநாள் கழிய அக்பர்பாதுஷா நடந்தயாவும் கேள்விப்பட்டுத் துளசிதாசனைப் பார்க்கவேண்டுமென்று ஆசைகொண்டு தண்டிகையையும் பல ஏவலாளரையும் அனுப்பினார். அவர்கள் ராஜாபூருக்குப்போய்த் துளசிதாசனைப் பணிந்து பாதுஷா உம்மை யழைத்துக்கொண்டு வரும்படியாகக் கட்டளையிட்டாரெனச் சாற்றினார்கள். அதற்குத் துளசிதாசன் பாதுஷாவிடம்போனால் பின்னும் இங்கு வருவதற்கு நாள்செல்லும் அதுவரையில் நமது மனையாளைப் பிரிந்து நம்மாலிருக்கக் கூடுமாவென்கிற தாற்பரியத்தாற் காவலரைநோக்கி, இப்போது வரக்கூடியதல்ல போமென்றார் தொழும்பர் மகாபாக்கியமென்று டில்லியடைந்து பாதுஷாவுக் குறைத்து தொழுதார்கள். அரசன் சிலநாள்சென்றபின் முன்போலவே காவலரை யனுப்பினான். வந்தழைக்கும் காவலருக்கு முன்போலவே துளசிதாசர் விடைகொடுத்தார். இப்படிபலதரம் இராஜனனுப்பியும் துளசிதாசன் மறுத்த காரணத்தால் நிருபன் ஆச்சரியமு மாச்சரியமுங்கொண்டு யோசிக்கின்றான் இவ்வுலகில் ராஜனென்றால் எப்பேற்கொத்தவர்களும் அச்சப்படுவார்கள் பயந்துவருவார்கள் அல்லாமல் பூமியினாசை யாலாவது கண்ணியத்தைக் குறித்தாவது தனத்தை நாடியாவது ஆக்கினைக்காவது வராதவர்களில்லை. ஓ மந்திரி பிரதானிகளே! சாதுசற்சனர்களே! நான் துளசி தாசனென்பவனை அநேகந்தரம் வரவழைத்தும் வராமலிருக்குங்காரணமென்ன? இப்படிமறுப்பது சிறுவயதாலோ? ஐசுவரிய கர்வத்தாலோ? வித்தியா மதத்தாலோ? அவித்யா சம்பந்தத்தாலோ? தாய் தந்தையைப் பிரிந்த சிந்தையாலோ? யாராவது செய்த நிந்தையாலோ? என்ன விந்தையாலோ? நிற்சிந்தையாலோ? என்னால் ஏதாவது குறைநேரிட்டதோ? மாசாந்தரங் கொடுக்கும் ஆயிரம் பொன்னை நிறுத்திவிட்டீர்களோ? குரோதங்

கொண்டீர்களோ? விரோதங் கொண்டீர்களோ? தெரியச்சொல்லுங்களென்று கேட்டான்.

அதற்குப் பிரதானிகள் வணங்கி, ஓ ராஜராஜாதிபா! துளசிதாசன் வித்தை புத்தியிற் சிறந்தவனுயிருந்தும் புத்தியிற் குறைந்தவனு யிருக்கிறுன். புத்தி யில்லாதவனுக்கு வித்தையும் புத்தியும் அபிவிர்த்தியா யிருந்தாலும் சிரத்தையில்லா பக்திக்கிணையானதல்லவோ! அவரிங்கு வராமலிருப்பது தன் ஸ்திரீயின்மேலிருக்கும் மோகமே காரணமாம். முன்னம் தந்தைக்குப் பயப்படாமல் தாசிகள்வீடே கெதியாயிருந்தான் அந்த துர்க்குணதைத நீக்கும் பொருட்டு ஆத்மாராம் நமது சோலையிற் கொண்டுபோய் வைத்திருக்கையி லங்கேயுமோர் மங்கைமேல் மோகித்துத் தந்தையைச் சிந்தாகுலத்தால் நைந்துபோகும்படி செய்தான் அதனுலேயே ஆத்மாராம் சமுசாரத்தோடு ராஜாபூருக்குப்போய் விரக்தியடைந்து நைமிசாரண்யத்தை அடைந்தார். அவர்போனபின்னிக்கோலத்தை யடைந்திருக்கிறுனென்று சாற்ற, பாதுஷா ஆச்சரியப்பட்டு ஆ ஆ நீங்கள் சொல்லும் மொழிகள் வெகுவிந்தையாயிருக்கின்றன ஓர் நாழிகையும் நாயகியைப் பிரியாமலிருப்பது நிச்சயந்தானு வென்றறைந்து இதைச் சோதித்துப் பார்க்கவேண்டுமென்கிற யோசனையோடுங் கூடியிருந்தார்.

அப்போது ஆத்மாராம் மனைவி துளசிதாசனைவிளித்து அப்பா ஒப்பில்லாமகனே! ஒளிவான முகனே! இராஜனுன்னைப் பார்க்கும்பொருட்டுப் பலதரந் தண்டிகையை யனுப்புகின்ருரே நீ போகாமலிருக்கலாமா? பலதரங் காவலரைத் திருப்பலாமா? உப்பிட்டவரை உள்ளளவும் மறக்கலாகாதென்கிற பழமொழி யறியாயோ? மாசாந்தரம் ஆயிரம் பொன்கொடுப்பதைக் குறியாயோ நெடுநாளாய் நம்மைக் காக்கும் தர்மப்பிரபு வேண்டியழைத்தால் போகாமலிருப்பதழகோ உன்னுயுளையெல்லாம் காமாந்தகாரத்திலேயே கழித்துக்கொண் டிருக்கின்ருயே நன்ருயோதி யுணர்ந்தவனுயிருந்தும் சகல நியாயங்களுந் தெரிந்தும் இப்பேர்க்கொத்த அபகீர்த்திக்குள்ளாகலாமா சகலரும் உன்னடத்தையைக் குறித்து நிந்தையாய்ப் பேசுகிருர்களே பேசி யேசுகிருர்களே சதி புருஷர்கள் சேர்ந்திருப்பது பிறரறியலாமா அரசன் மனமும் முறியலாமா

புண்ணியவான்கள் காக்கையைப் போன்றவர்களென்றும் பாபிகள் நாயைப் போன்றவர்களென்றும் சிலர் கருடனைப் போன்றவர்களென்றும் சீலமிலார் குக்கிடத்தை போன்றவர்களென்றும் சாஸ்திரங்களிற் சொல்லியிருக்கின்றதே நீயதையறியாதவனல்லவே என்றுரைத்து வாட்டமனதுடன் மமதாதேவியைக் கூவி அடிபாவி! நீ இக்கணமுன் தந்தைவீட்டுக்குப் போவென்றுக்யாபிக்க மமதாதேவி மகா பாக்கியமென்று கணவன் பக்கலடைந்து மாமியார் கட்டளையை யுரைக்கத் துளசிதாசன் சிந்தாக்கிரந்தனைப் பெருமூச்சுவிட் டுணர்வு கெட்டு ஓ பெண்ணே என்னிருகண்ணே! உன் தந்தைவீட்டிலிருந் தழைப்பித்த நாள்முதற்கொண்டு உன்னை அரை நிமை பிரிந்தேனா அரையன் பலதரமழைப்பித்து போனேனா இப் பேர்க்கொத்த காமியென் றறிந்திருந்தும் என்னைவிட்டுப் பிரியலாமா? நீபோனால் உயிர்தரித்திருப்பேனா? ஓ மனோரஞ்சிதமே! மாது சிரோன்மணியே! மாணிக்கப் பொக்கிஷமே! மன்மதசொரூபமே! மரகதக்குன்றே? உன் மாமியாருடைய கோபத்தை க்ஷமித்திருக்கக் கடவாயென்று வேண்டிக்கொண்டார். அதற்கந்த வுத்தமி பதிவாக்கைக்கடவாப் பத்தினியாதலால் தாய்தந்தையரை மறந்திருந்தாள்.

இப்படி சதியும் பதியும் ஒற்றுமையோ டிருக்கிறநாளில் அக்பர்பாதுஷா துளசிதாசனைப்பார்க்க எண்ணங்கொண்டு சதுரங்கசேனைகளுஞ் சூழப் பிரயாணப்பட்டு ராஜாபூருக்கருகாயிருக்கும் ஓர் சோலையிலிறங்கி மந்திரிகளை நோக்கித் துளசிதாசனுக் கென்வரவைத் தெரிவித்து சீக்கிரமழைத்துக்கொண்டுவாருங்களென்றனுப்ப, மந்திரிகள் மகா பாக்கியமென்று துளசிதாசன் மேடைக்குப்போய்ப் பாதுஷாவானவ ரும்மை பார்க்க வந்திருக்கின்றார் வாருமையாவென் றுவிளிக்க, துளசிதாசர் நாம் போவோமானால் அதிபதி டில்லிக்கழைத்துக் கொண்டுபோய் விடுவான். இங்கு வருவதற்கு நாள்செல்லும் என்கிற எண்ணத்தாலும் காம மயக்கத்தாலும் வரமாட்டேனென்று மறுத்துவிட்டார். அதற்கந்த வமைச்சர் குரோதங்கொண்டு தூஷண வார்த்தைகளை விண்டு அரையன் பக்கலடைந்து நாங்கள் துளசிதாசனைப் பலவித வுபசரணையோடு மழைத்தும் வராமற்போனான் ஆதலாலத் துஷ்டன் முகத்தைத் தேவரீர் பார்க்கலாகாதென் றுரைத்தார்கள். பாதுஷா

பிரதானிகள் முனிந்து பரஸ்திரீ கமனஞ்செய்யும் பாவிகள் முகத்தைப் பார்க்கக்கூடாதே யல்லாமல் குலஸ்திரீயின்மேல் மோகித்திருப்பவன் முகத்தைப் பார்ப்பதற்கியாதொரு குற்ற மில்லை யென்று தன் பட்டத்து யானைமீது ஊர்ந்துகொண்டு சகல சேனைகளுஞ்சூழத் துளசிதாசன் மேடைக்குப் போகும்போது யோசிக்கின்றார் ஆச்சரியம் இவ்வுலகில் இவ்வளவு காமக் குணமுடையவர்களியாரு மிருக்கமாட்டார்கள். ஆத்மாராமுக் கிப்பேர்க்கொத்த புதல்வனுபிறந்தான் அவர் மிகவும் விவேகமுடையவ ராயிற்றே அவரைவிட இவர்கல்வி யிற் சிறந்தவராயிற்றே புலியின் வயிற்றிற் பிறந்தகுட்டி பூனை யாகுமா (பண்ணிய பயிரிற் புண்ணியந்தெரிமென்று) சாஸ்திரங்கள் முறையிடுகின்றதே ஒருவேளை நாமே வந்தழைக்க வில்லையென்ற எண்ண மிருக்குமோ அதுவும் இன்றைக்குச் சோதித்து விடுவோமென்று துளசிதாசன் மேடைக்கருகில் வந்து ஓ ஸ்வாமி! என் சத்குருநாதன் தனயனே! உம்முடைய தரிசனத்தை கோறிய எனக்கும் மரிய சேவை தாராமலிருக்க லாமா? உம்முடைய தந்தை என்மீது அதிகப் பிரீதியோடிருந்தது நீரறியமாட்டீரா? என்மேலிவ்வளவு கோபமாயிருக்க லாமோ? என்னுல்வந்தகுறையேதோ அவையாவது சொல்ல லாகாதோவென்கிற பற்பல வார்த்தைகளாடி பரிவுடன் கூப்பிட்டார்.

அப்போதந்த துளசிதாசன் ஓ ஓ இன்றைக்கு நமது மனைவியைப் பிரியும்படி நேரிட்டதே நான் பாதுஷாவிடம் போனுல் அவர் தம் பட்டணத்துக் கழைத்துக்கொண்டு போகாமல் விடுவாரோ என்கிற கருத்தால் பாதுஷாவைப் பார்ப்ப தற்கும் வராமல் ஓரறையிற் புகுந்துகொண்டார். அதுசேதி ஆத்மாராம் மனைவிக்குத் தெரிந்து துளசிதாசன் மேடையிற் போய் அடா துஷ்டா! காமத்தால் நைந்த பிரஷ்டா! இவ்வுலகையாளும் பாதுஷா நெடுநேரமாகக் கூப்பிடுகிறாரே ஒரு வார்த்தையும் பேசாம விருக்கலாமாவென்று கடிந்துபேசி அங்கு நிற்கும் மமதா தேவியைப் பார்த்துக் கோபத்தால் வேர்த்து அடீ பஞ்சமாபாதகி! என் மைந்தனைக் கெடுத்த தோதகி! நீயாவதுரைத் தனுப்பக்கூடாதாவென் றதட்டிக் கடின வார்த்தைகளாடினுள். உடனே மமதாதேவி பொறுக்கமாட்டாமல் கணவனருகிற் சென்று ஓ சுவாமி! நீர் இன்று

இராஜனைக்கண்டு பேசிவராவிட்டால் இக்கணமே என் பிராணனை விட்டுவிடுவேனென்று சத்தியஞ் செய்தாள் அதுகேட்ட துளசிதாசன் திடுக்கிட்டு ஓ ஓ பிராணனைவிட்டால் நமது தந்தை சொற்படி வேறு ஸ்திரீயைத் தொடக்கூடாதே இன்றிவளைப் பிரியலாச்சுதேவென்கிற ஏக்கத்துடன் பாதுஷாவினருகிற் போனருடனே, அக்பர் பாதுஷா ஆனந்த மடைந்து ஆத்மாராமென்றே நினைந்து தன் பட்டத்து யானையின் மேற் றுளசிதாசனை யேற்றிக்கொண்டு டில்லியை நோக்கிப் பிரயாணப்பட்டார்.

அப்போது துளசிதாசன் தன்னைப்போன்ற வாலிபர் பலர் புடைசூழ்ந்து வருகிறதைப் பார்த்துக் காமச்சிந்தையாலும் காந்தையைப் பிரிந்ததாலும் மிகவும்நொந்து பாதுஷாவிடத்தில் யாதொரு வார்த்தையும் பேசாமல் மௌனமாய்ச் செல்வாராயினர். அங்கே ஆத்மாராம் மனைவி மமதாதேவியை நோக்கி அடீ மமதாதேவி! நீ இக்கணம் உன் தாய்வீடுபோய்ச் சேரென் றுக்கியாபித்தாள். மமதாதேவி மகாபாக்கியமென்று உடனே தந்தைவீடுபோய் சேர்ந்து தாய் தந்தையரை வணங்கி க்ஷேமவார்த்தைகள் பேசிக்கொண்டிருருக்கும்போது, மமதாதேவியை முன்னமறிந்த தோழிகள் வந்துசூழ்ந்து ஆ ஆ நீயுன் மணவாளனைப் பிரிந்து வந்தது மிகவும் விந்தையாயிருக்கின்றது உன்னை பிரிந்துன்னாயகன் உயிர்தரித்திருப்பானே? நீ உன்னாயகனைப்பிரிந் தோர்நாழிகையிருப்பாயா? உங்களைப்போன்ற காமிக ளிவ்வுலகி லில்லவேயில்லை. உலகத்தில் ஸ்திரீபுருஷர்கள் சேர்ந்திருப்பதிப்படியா? நாயைப்போல நாலுபேர் நகைக்கப்பேரெடுப்பதா பெருந்தகைமையோர் கழகன்றென் றுரைத்ததன்றியுந் தோழிகளாதலாற் பலபரியாசவார்த்தைகளு மாடத்தொடங்கினர்கள் அதற்கு மமதாதேவி ஓ பாங்கிகளே! என்றைக்கோர் புருஷனுக்குத் தாய்தந்தையர் தத்தஞ் செய்தாரோ அன்று முதல் புருஷனே தெய்வம், கணவன் மொழியே வேதம், காவலனிச்சைப்படி நடப்பதே விரதம் எனவேதங்கள் முறையிடுகின்றனவே மணுள னெண்ணப்படி நடக்கும் என்னைப் பரபுருஷனை கூடும் பாவியை நிந்திப்பதுபோலேன் நிந்திக்கிறீர்களெனக் கேட்க அதற்கந்த தாதிகள் நகைத்து ஓ அம்மணி! எந்நேரமும் சதிபுருஷாள் கூடிக் காம இச்சையினலேயே நாள்கழி

க்கவேண்டுமென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றனவா? பருவகாலமன்றி மற்றகாலங்களில் சதிபுருஷாள் சேரலாமா? வேதவாக்கியத்தை மீறலாமா? மிருகமும் அகாலத்திற் கூடுகிறதில்லையே? உங்களை யிவ்வுலகெல்லாம் நிந்திக்கின்றதே உன்னைவிட்டுன் நாயகன் ஓர் கணமும் பிரிந்திருக்கமாட்டாராமே புருஷன் அவிவேகியாயிருந்தாலும் கற்புள்ள ஸ்திரீ தர்மாதர்மங்களைப் போதித்து சகலமுஞ் சாதித்து நன்மார்க்கத்திற் கொண்டுவர வேண்டாமா? இப்படி யனேகம் பெண்கள் தங்கடங்கள் பத்தாவுக்கறிவுணர்த்தி விவேகிக ளாக்கவில்லையா? நீமாத்திரஞ் செய்வது தொல்லையா வென்றுரைத்து க்ஷேமவார்த்தைகளாடித் தங்களிருப்பிடஞ் சேர்ந்தார்கள்.

பின்பு மமதாதேவி வாட்டமடைந்து ஓ பகவானே! என்னையெல்லாரும் எளிதஞ்செய்து நகைக்கும்படி செய்துவிட்டாயே? ஐயோ எனது கணவன் செய்யும் கர்மானுஷ்டானம், சந்தியாவந்தனம் வேதமோதுதல், ஓமம் வளர்த்தல் முதலான ஒரு நற்கிரியையும் ஒருநாளுஞ் செய்ததில்லை. இப்பேர்க்கொத்த விகாரத்தை என் பத்தாவுக் களிக்கலாமோ? வீணாக நாளைக் கழிக்கலாமோ? இவ்வுலகில் இவ்வளவு காமக்குண முடையவர்களுமுண்டோ? ஓ தெய்வமே! வேதவிதிப்படி நடந்தா லாடவர்க்கபவருக்கமும் கேள்வ னெண்ணப்படி நடந்தால் அரிவையர்க்கு முத்தியும் கிடைக்குமென்றல்லவோ வேதம் முறையிடுகின்றது எப்போது பலர் தூஷிக்கத்தொடங்கினார்களோ அப்போது நிறையமடைந்ததற்குச் சமானமல்லவா என்மீதிருக்கும் மோகத்தினாலல்லவோ நாலுபேர் நகைக்க வுடம்படுத்தாரெனத்தொழுது கண்ணீர்விட்டழுது இனி யெவ்வித உபாயத்தாலாவது நமது துணைவனை நன்மார்க்கத்திற் கொண்டுவரவேண்டுமென்று உறுதிக்கொண்டு இருந்தார். அங்கே பாதுஷாவுடன் போகும் அந்த துளசிதாசர் தனது நாயகியை நினைந்து நினைந்து மிகவுமுருகி முகங்கருகிப் பாதுஷாவினிடம் பலவந்தமாகச் செல்லும் மார்க்கத்திலேயே செலவு பெற்றுக்கொண்டு கன்றை நாடி வரும் பசுவைப்போலவும் அதி சீக்கிரமாய்த் தன் மேடையிற் பிரவேசித்து மனைவியைநாடிப் பலவிடங்களிற் தேடிக் காணமல் வாடித் தாயிடம் வோடி மமதாதேவி யெ

ங்கேயெனக் கேட்டார். அதற்கந்த அம்மணி அப்பா ஒப்பிலா மகனே! உன் மனையாள் தன் தாய் தந்தையைப் பார்க்கப்போனாள். நாளைக்கு வருவாள் அதற்குள்ளேன் பதைத்து தைத்துக் கொள்ளுகிறாயென்றதட்டினாள். துளசிதாசர் கரையெடுக்கவந்தால் திரையலைக்குங் கப்பலென்பதைப்போல் சிற்றின்பம் நீங்கிப் பேரின்பம் ஓங்குங் காரணம் வந்ததாலும் மனைவியைப் பிரிந்துபோகும் நாளன்றே யானதாலும் தாயுரைத்த மொழியைக்கேட்டு வாட்டத்துடன் வீட்டைவிட்டு வெளியிற் புறப்பட்டுக் காமநோய்க் காற்றாதவனாய் ஸ்திரீ வாஞ்சையை மாற்றாதவனாய் வலைக்குளகப்பட்டு விடுபட்டோடுங் கலைமானைப்போலவும் நெருப்பை மிதித்தவனைப்போலவும் தன் மனைவியிருக்கும் ஊரை நாடி கால்நடையாய் அதிக பரபரப்போடும் ஓடத் தொடங்கினார். அப்போது பகவான் காந்தையைப் பிரியும் நாளிந்நாளேயாம் சமுசாரத் தலையைத் தறிக்குந்தின மித்தினமேயாம். ஆதலால் ஆகாயகங்கையில் ஸ்நானம் செய்வாயென்றக் காற்றும் மழையும் கலந்தடிக்கும்படியாகச் செய்தார். அதை அந்தப் பரமபாகவதன் சட்டை செய்யாமல் காலடி பிட்டத்திற் படும்படியாய் வோடத்தொடங்கினார். இப்படியோடுந் துளசிதாசனைப் பார்த்த சகலரும் எனிப்படி யோடுகிறீரென்றுத் தடைசெய்யவும் மன்மதனின்றன்றி மறுநாள் நமது ஜெபஞ் செல்லாதென்று வலிகொண்டு பஞ்சபாணங்களெய்யவும் மழையானது தடைசெய்து மேன்மேலு மிகவும் பெய்யவும் காமநோயைக் கழிக்கும் நாளாதலால் துளசிதாசனுக்கு மன மிகவும் நையவும் மெய் மறந்து வெட்க முதலானதுந் துறந்து மதனநோயினாற் றுனிறந்து வயினதேயனைப்போற் பறந்து முத்துமாலைகள் கழன்று விழவும் முகத்தைப் பார்த்தோரெல்லாந் தொழவும் அங்கவஸ்திரம் சேற்றில் புரளவும், அகமும் நாவும் வரளவும் ஊரைக்கடந்து வோட்டமாய் நடந்து யமுனாநதியையடைந்து அதை கடப்பதற்கிடைந்து பொழுதுபோய் ஜாமமானதாலும் நிலவில்லாத காலமானதாலும் மேகக்கூட்டத்தி னிருளாலும் காற்றுமழையுங் கலந்தடிக்கு மருளாலும் கறையழிந்து ஜலம்பெருகிப் போவதாலும் எப்பேர்க்கொத்தவர்களுக்கும் நதியை நீந்தத் தடையாவதாலும் யமுனாநதியிலிறங்கித்தயங்கி என்ன செய்யலாமென்றியங்கி அக்கரைச்

சேர்க்க இங்கியாருமில்லையாவென வழங்கி ஆற்றிலடித்துக் கொண்டுபோகும் பிரேதத்தை முயங்கி ஆற்றிலிரங்கி ஆழற் ருற்றியங்கி மன்மதநோய் மீறி மமதா தேவியைக்கோரி சுய குணங்கள் மாறி துரிதத்துக்குத் தடையாச்சென் றேமாறி ஆற்றில் விழுந்து அமிழ்ந்தெழுந்து ஏகாந்தியாய் நீந்திக் கொண்டு இன்னமெவ்வளவு தூரம் புனலிருக்கின்றதென விண்டு ஆயாசந் தெரியாதவனாய் அரியின் லீலையையறியாத வனாய் ஆற்றைக்கடந்து அதிவேகமாய் நடந்து மாமனார் வீட்டையடைந்து உட்போக வழியில்லாததற் கிடைந்து நடுராத்திரி யென்றறிந்தும் மமதாதேவியைப் பிரிந்து எப் படி யிருப்போமெனநொந்து அம்மனையைப் பலதரம் வலம் வந்து கதவுகளெல்லா மடைபட்டிருக்கின்றனவே மாரிமென் மேலும் பெய்கின்றனவே காமாக்கினி தகிக்கின்றதேகதவுகள் தடுக்கின்றதே எப்படிப்போவோம் நாயகியை எப்போது பார் ப்போம் அவாவை எப்போது தீர்ப்போம் மனதை யின்பத்தி லெப்போது சேர்ப்போம் மமதாதேவியைக் கூப்பிட்டுப்பார்ப் போமென்று ஓ மமதாதேவி மமதாதேவி யென பலதரங்கூப் பிட்டும் பேசாக்குறையால் ஓ ஓ காற்று மழையுங் கலந்தடிக் கும் வோசையாற் கேட்கவில்லையாக்கும் கேட்டால் வராம லிருப்பாளா நான் மாரியால் நனைகிறதைப்பார்த் துயிர்தரிப் பாளா இனியென்ன செய்வோம் எவ்வித உபாயத்தாலுள்ளே போவோம் என்று மேடையின் சுற்றிலுமிருக்கும் சாளரங்க ளாவது திறந்திருக்கின்றனவா வெனப் பார்த்துக்கொண்டு வருகையில் ஓர் பலகணிதிறந்திருக்கக் கண்டு ஆனந்தங்கொ ண்டு உற்று நோக்கிப்பார்த்து இவ்வளவு உயரமான சுவற் றின்பேரி லேறுவதெப்படி யென்றெண்ண மிட்டுக்கொண்டே நிற்கையில் அவருடைய பரிதாபமறிந்த பகவான் ஓர் நீண்ட சர்ப்பமாகிச் சாளரத்துக்கும் துளசிதாசனிருக்கும் ஸ்தானத் துக்கும் ஓர் கயிற்றைப்போற் றொங்கினர். அதைச் சர்ப்பமெ ன்றறியா துளசிதாசன் கயிறென்றே தீர்மானித்து அதை பிடித்துக்கொண்டேறி உள்ளே குதித்து அங்கு சயனித்தி ருப்பவரை மிதித்து ஓ மமதாதேவியே, என் சொந்த ஆவி யே, மயிலே, குயிலே, மானே, தேனே, மதியே, கதியே, மணி யே, அணியே, மலரே, தளிரே, மனமே, கனமே, மங்கையே, நங்கையே, மணமே, குணமே, வண்டே, செண்டே, மைய்

லே, தையலே, அன்னமே, சொர்னமே, அரிவையே, தெரிவையே, அன்பே, இன்பே, பாசக்கயிரே, பட்சமாமுயிரே, ரதியே, சதியே, கோதையே, பேதையே, பார்வையே, பூவையே, கொடியே, பிடியே என்று காம மயக்கத்தால் ஓசையாக பேசத்தொடங்கினர். இப்படி கூசாமற் பேசும் துளசிதாசன் தங்கமயமான அங்கமெல்லாஞ் சேறு நிறைந்திருப்பதாலும், தலைவிரிகோலமா யிருப்பதாலும், மாமன் மாமி மைத்துனர் முதலானவர்களும் இதுவென்ன பேதமோ பூதமோ பேயோ சாயோ காளியோ கூளியோ வென்று மூலைக்கொருவரா யெழுந்தோடத் தொடங்கினர்கள்.

அப்போது மமதாதேவி கணவறென்றறிந்து மிகவும் நாணமடைந்து நாமினி கூசத்தால் பேசாமலிருந்தால் பசாசமேயாய் விடுவாரென்று திக்கென்றெழுந்து சேவடியில்விழுந்து நாதனே வாரும் பிராண நாதனே வாரும் நீதனேவாரும் கமலபாதனே வாரும் எனத்தோத்திரஞ்செய்யும் மமதாதேவியைத் துளசிதாசன் தன் மாமன் மாமி மைத்துனர் முதலானவர்களு மருகிலிருக்கவும் கிஞ்சித்தேனு நாணமின்றி மோகாந்தகாரத்தால் அடிபெண்ணே! என்னிரு கண்ணே! அழகு சுந்தரமே! என் மோகனமே! பரிமளமருவே! பாக்கியத்திருவே! கற்பகத்தருவே! களங்கமில்லுருவே! கொஞ்சுங்கிளியே! கோகிலாவொளியே! மல்லிகையரும்பே! ரசமுள்ளகரும்பே! இதுகாலபரியந்த மென்னைவிட் டெப்படிப் பிரிந்திருந்தாய்! சீக்கிரமென் மோகத்தைத் தீர்க்கவா கார்க்கவாவெனக் கரத்தைப் பிடித்திழுக்கும் துளசிதாசனைப்பார்த்த சகலரும்வாயில் வந்தபடிபேசி மிகவுமேசிக் கீழரைக்குட்போய் விட்டார்கள்.

அப்போது மமதாதேவி நாணமும் லச்சையும் அடைந்து கூடுவதற்கிடைந்து ஓ ஸ்வாமி! நீ ரெவ்விதமா இம்மேடைக்குட் பிரவேசித்தீரென, துளசிதாசன் ஓ என் குலவிளக்கே! என்னுருயிரே! நான்வந்து வெகுநேரமாயுள்ளே வருவதற்குத் தடையாய் நின்று பின்பிச்சாலகத்திற் ரொங்கும் வடத்தைப் பிடித்துக்கொண்டேறிக் காமம் மிகவும்மீறி வந்தேனதலால் இக்கணமே என்னையாட்கொள்வாயென மிகவும் கெஞ்சிக் கொஞ்சும் நாயகனைப்பார்த்து மமதாதேவி புகல்கின்ருள். ஓ ஸ்வாமி! இந்நுழைவாயிற் பழுதை தொங்குவ

தேது பார்க்கலாம் வாருமென் றவ்வாதாயனத்திற் பார்க்கையில் பருத்து நீண்ட ஓர் சர்ப்பந் தொங்கக்கண்டு அச்சங்கொண்டு ஆ என்னுசை நாயகனே! பிராணநாதனே என்மீதிருக்கும் வாஞ்சையா லல்லவோ மழையால் நனைந்து காற்றுலலைந்து ஆற்றைக்கடந்து அதிவேகமாக நடந்து காமம்மீறிடக் கட்செவியின் மீதேறிட வீட்டில் நுழைந்து பலர்மேல் விழுந்து மனநாணமின் றெழுந்து நானிலையெனவந்து மிகவும் நைந்து பின்பெணைக்கண்டு மிகு மோகங்கொண்டு வாயில் வந்தபடி பிதற்றினீர் என்பேரிலிருக்கும் வேட்கையை நீத்து விகாரத்தைப் போர்த்து ஸ்ரீமந்நாராயணன்மே லன்புடையீரானல் ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகராகிய பகவான் பிரசன்னமாகிக் காமக்கவலையை நீக்கிக் களங்க நெஞ்சினைப்போக்கிப் பாமரத்தைத் தூளாக்கிப் பரமானந்த பதத்தைத்தாக்கி மேலான பேரின்பத்தைக் கொடுப்பார் நிறையத் துளமிழ்வதைத் தடுப்பார், சிற்றின்பத்திலும் பேரின்பமல்லவோ மேன்மையானது முனிவர் தேவர் புகழும் பிரமானந்த போகத்தை விடுத்துத் துர்க்கந்தமான வென்னையடுத்து வேதவாக்கியத்தைத் தடுக்கலாமா வைராக்கியத்தைக் கெடுக்கலாமா பலர் நகைக்க உடம்பெடுக்கலாமா இப்படியுஞ் சலந்தொடுக்கலாமா 800 - வருஷம் பெண்போகமின்றி வைராக்கியத்தாற் பீஷ்மரென்று பேரெடுத்த பீஷ்மாசாரியின் வைராக்கியத்தையும் பலவந்தமாயணையவந்த வரம்பையினபிப்பிராயத்துக் கிடங்கொடுக்காமல் பேடியாகச் சாபம்பெற்ற அர்ச்சுனனுடைய வயிரத்தையும் நாளதுவரைக்கும் ஸ்திரிமயக்கத்திற் சிக்காதிருக்கும் அனுமார் திடத்தையும் இதுகாலபரியந்த மணமும் மோகமில்லாதிருக்கும் விக்னேசுவரனுடைய அடத்தையும் நன்று யூகித்துப்பாரும் மாயாவிலாசனுன பகவான் மன்மதனென்னும் புத்திரனு லல்லவோ மாதவஞ்செய்யும் முனீசுவரார்களையும் தன்மாயையி லமிழ்த்தி மயக்கித் தன் பதவியை யடையாமல் மறுத்திருக்கின்றூர் அம்மாரனை ஞானக்கண்ணுலெரித்த பரமசிவனுடைய மாட்சிமையை ஒருவராற் புகழத்தக்கதோ சகல தாட்சிகளையுங் கொடுக்கும் சம்பராரியை உம்மைப் போன்றவர்களால் வெல்லத்தக்கதோ காமமென்னும் மதயானையை லேசிற்கொல்லத் தக்கதோ சித்தசனைசெயிக்கும் வித்தையீதென் றெருவராற் சொல்லத்தக்கதோ காம

த்தால் தேவாமிர்தத்தை இராக்கதர் இழந்துபோக வில்லையோ காமத்தாற் பாண்டுராஜன் களேபரமாகப் போகவில்லையோ காமத்தால் யயாதிராஜன் முதுமையுங் கபரோகமுமடையவில்லையோ காமத்தா லட்டவசுக்களும் சமர்த்துக்குள்ளாகவில்லையோ அன்றிக் காமமே நரகம், பந்தம், ரோகம், சோகம், மரணம், முதலியவை கொடுக்கும் என்பதற்கோ ரைய முண்டோ வலியாற் சிறந்த மதகரியானது காமத்தாலல்லவோ படுகுழியில் வீழ்ந்து மானிடரைத் தாழ்ந்து ஆனை யென்னும் பேர்மாறிப் பூனை யென்னும் பேர் பெற்றிருக்கின்றது. காமவலையிற் சிக்கினபேர்களுக்குப் பரகதியடையும் மார்க்கந் தெரிவதோர்காலத்திலுமுண்டோ? விந்துவிட்டனை நொந்துகெட்டனை யென்னும் பழமொழி மெய்யோ பொய்யோ வென பற்பல நிதிவாக்கியங்களை ஓதினுளென்று நாபாஜி சித்தர் பின்னுஞ் சொல்லுவார்.

ஸ்திரீ வாஞ்சனு அத்தியாயம் முற்றிற்று.

ஐந்தாவது அத்தியாயம்

துளசிதாசர் வைராக்கியம்.

ஓ சித்தர்களே! சிரவணத்துக்குகந்த பத்தர்களே! மம்தாதேவி இவ்வித நீதிகளை யோதியதைக் கேட்ட துளசிதாசன். கலுழ னெலியைக் கேட்ட உரகமும் கேசரியின் கெர்ச்சனையைக் கேட்ட குஞ்சரமும் தாக்குவின் முழக்கத்தைக் கேட்ட பசுக்கூட்டமும் கலங்குகிறதைப் போலக் கலங்கி மனந் துலங்கி ஆ ஆ என்னுடைய மந்தபுத்தியாலல்லவோ சகலரும் வாயில்வந்தபடி பேசவும் பேசி யேசவும் உடம்பெடுத்தேன் தந்தைசொல்லிய வாக்கியத்தையும் தடுத்தேன் மாதாவுக் களவிலாத் துன்பங்கொடுத்தேன் நாணமும் மானமும் விடுத்தேன் முன்னம் நந்தந்தை விந்தையான ஓர் சுந்தரியின் மோகத்தைத் தந்திரத்தால் பிந்தச்செய்து அந்த ரம்பையைச் சொற்பனத்திலும் நினைக்காமற்செய்தார். அன்றியும் சற்சங்கத்தால் தாசிகளினுசையை நீக்கி பலநீதி வாக்கியங்க ளுரைத்து அரக்கைப்போல மனதைக் கரைத்து விஷயபோகங்களை வெறுத்து பந்தபாசங்களை யறுத்து தேக

மனித்தியமெனக் கானகத்திற்சென்று கருவி கரணுதிகளைவென்று தவயோகியானர். இகத்தைத் திரணமாக நினைத்துப் போனர், அப்பேர்க்கொத்த தந்தை நிந்தைசெய்யவும், தாயார்மனம் நையவும், மனையாள் வெறுக்கவும் நீதிவாக்கியங்களுரைக்கவும் நேரிட்டதல்லவா? ஓ ஓ அஞ்ஞான மனமே! உன்னலல்லவா அபகீர்த்திக் குள்ளானேன்? பேதையாய்ப் போனேன்! உன்மீதுங் குற்றமில்லை, நானே தேடிக்கொண்டேன் தொல்லை, எனக்கெதன்மேலிச்சையோ அதையே அடிக்கடி நினைந்து என்னைக் கெடுத்தாய், இப்போதே எனக்கு ஸ்ரீமந்நாராயணன்மே லாசையாய்விட்டது, உன்னெண்ணப்படி நடப்பது கெட்டது, இனிமேல் மரணபரியந்தம் கொஞ்சிப் பேசும் வஞ்சியரைக் கனவிலும் நினைக்காதே, கோதையரைப் பார்த்துக் களைக்காதே, அரியின் திருநாமங்களை மறக்காதே, தாதையாகிய நீதியைத் துறக்காதே என்று பற்பல வார்த்தைகள் பகர்ந்து காமவிகாரமிறந்து கர்த்தன் பக்தி நிறைந்து பாமரகுணங்கள் குறைந்து பாவியானேனெனப் பறந்து மமதாதேவிக்கு வந்தனம்புரிந்து நீயே குருவெனப் பரிந்து இன்றுடன் நீ தாயென்றறிந்து இகவின்பமெல்லாந் துறந்து கச்சிதக் கதவைத்திறந்து கர்த்தனைக்காண நடந்து வீதியிற் போகையில் உடனே மமதாதேவி நாயகா வெனக் கூவி அன்பன்பால் மேவி ஆர்வலா நீரென்னுவி, அடியாள் மிகவும் பாவியென் றவரைப் பலதரஞ் சூழ்ந்து பாதங்களில் வீழ்ந்து பண்புடன் தாழ்ந்து ஓ ஸ்வாமி! பக்தி மார்க்கத்தையுரைத்தால் என்னைத் தாயென வெறுக்கலாமா, அளவிலா அன்பை சுருக்கலாமா, அடியாள் கழுத்தை நறுக்கலாமா, இப்படியும் அடத்தைப் பெருக்கலாமா? இல்லற தர்மத்தை மறுக்கலாமா என்றயரும்பொழுது,

துளசிதாசன் ஓ மமதாதேவி! இன்றுட னுனக்குமெனக்குமுள்ள சம்பந்தம் போய்விட்டது, காமவிகாரம் மிகவுங் கெட்டது, என்மனதைச் சுட்டது, பகவத்தியானம் நேரிட்டது, ஆ ஆ நான் செய்த தபசாரம் நீசெய்த துபகாரம், நானியற்றிய தபசாரம், நீ யியற்றிய துபகாரம், உன்னை மறப்பேனு, உயிருள்ளமட்டும் வேறுப்பேனு, நீ தாயென்பதுறுதி நீ நன்றுகப்பார் கருதி இதுவென் மனவுறுதி இது வேதத்தினிறுதி இனி யென்னுசையை விடுத்து இழிவுள்ள

மனதைத்தடுத்து இகபோகத்தைக் கெடுத்து இறைவன் பாத த்தைப் பிடித்து இருப்பாயென்று மறுத்துப் பெண்ணுசை யில்லாதறுத்து அட வைராக்கியத்தைப்பூண்டு அரியைப்பார் க்க அவாக்கொண்டு நாட்டைக்கடந்து காட்டில் நடக்கத் தொடங்கினர். இவ்வாச்சரியத்தைப் பார்த்து மாமன் மாமி மைத்துனர் பந்துக்கள் முதலான சகலரும் துளசிதாசனைப் புகழ்ந்து மிகவும் மனமகிழ்ந்து மமதாதேவியை யிகழ்ந்து விந்தையிதெனத் திகழ்ந்து ஒன்றுந் தோன்ருதவர்களாய் நின்ருர்கள், மமதாதேவியோ கணவன்முன் சென்று பட்ச வார்த்தைகளைப் புகன்று ஓ பிராணநாயகா! பிராணவல்லபா என்னைவிட்டுப் பிரியவும், மனம்வந்ததோ நானுரைத்த கடுஞ் சொற்களால் மனம் வெந்ததோ வீட்டுக்குவாரும் அன்புடன் சேரும் இன்பத்தைத் தாரும் கிருபை கூறும் என்று போகா மற் றடுத்தாள் விடாசலந் தொடுத்தாள், துளசிதாசன் ஓ மமதாதேவி! நான் தாயென வெறுத்தபின் நீ மறுத்து வருத் துவதா லென்கருத்துப் பிறழாதெனச் சிரித்துக் காமனையெரி த்தவன்போல் காந்தையைநோக்கிச் சாந்தத்தை நீக்கி இக் கண முன் தந்தை வீடுசேரு பகவான் பாதத்தைக் கோரு பதி யே தெய்வமெனுஞ் சதி நீயானுல் என்வார்த்தை தள்ளாதே யாதொரு மொழியும் விள்ளாதே என்றுரைக்கும் பதியின் பா தங்களிற் பணிந்து நயனங்களையணிந்து பலதரம் முத்தமி ட்டு உம்மையும்விட்டு நானுயிருடனிருப்பேனு? மனமும் பொ றுப்பேனு? உமக்கு மெனக்குமுள்ள சம்பந்த மின்றுடன் தீர் ந்துவிட்டதோ? நான் உரைத்த கடினசொற்களுமமைச் சுட் டதோ? எவ்விதமாக மறந்திருப்பேன்? துக்கந்தணிந் தெப் படி யிருப்பேன்? தனித்தெப்படி வுயிருடனிருப்பேன்? பட்ச மாய் இனி யாருடன் பேசுவேன்? சந்தனுதிக ளெவர்க்குப் பூசுவேன்? யாருடனுடுவேன்? எவருடன் பாடுவேன்? நாயகா வென்று யாரை யழைப்பேன்? எப்படி பிழைப்பேன்? யாருட னகைப்பேன்? எவருடன் பகைப்பேன்? யாருடன் கொஞ்சு வேன்? எவர்பால் கெஞ்சுவேன்? இனியெனக்குப் பூமாலைக ளேன்? முத்துமாலைகளேன்? சிங்காரக் கொண்டையேன் செ ஞ்சதங்கைத் தண்டையேன்? என்னழகைப் புகழ்ந்து மகிழ்ப வர்யார்? யாரெனப் பெருமூச்சுவிட் டயர்ந்து ஆயாசத்தால் மூர்ச்சையாய் நிலத்தில் சாய்ந்துவிட்டாள்.

இதுகளையெல்லாம் பார்த்திருந்த துளசிதாசன் சற்று மிடருருமல் அரிவையின்காமம் நீங்கி அரிமேற் காமம் ஓங்கி அச்சுதனைப் பார்க்க ஏங்கி அரைக்கணம் நிற்கப் பின்வாங்கித் தன்னெதிரில் யார்வந்து மறித்தாலும் ஓ ஐயமாரே! நீங்களானந்தமா யிருக்கிறீர்களே அரியைப் பார்த்தீர்களா? அவரடியிற் றலையைச் சேர்த்தீர்களா? ஆசைகளையெல்லாம் மாய்த்தீர்களா? அடியோடகந்தையைச் சாய்த்தீர்களா? அரியிவ் வழியாய் வந்தாரா? அரியசேவை தந்தாரா? அரியைக்கண்டு புகழ்ந்தீரா? அன்பாயுருகி மகிழ்ந்தீரா? அரி நீ யென்முன் வாராயோ? அரியசேவை தாராயோ? அடியேன்மேற் கிருபை கூருயோ? அருட்கண்ணு லெனைப்பாராயோ? ஐயோ வீணுய் நாள்போச்சு அடியேனுயுள் வீணுச்சு, மெய்யோர்க்கிது மிகவுமேச்சு, விதியோவென்று பெருமூச்சு அடிக்கடி விட்டுக்கொண்டே பேயன்போலவும் பித்தன்போலவும் பேசிக்கொண்டே கன்றையிழந்த பசுவைப்போலவும், புதல்வனையிழந்த பூவையைப்போலவும், பதியையிழந்த பதிவிரதையைப்போலவும் பதறிக் கதறிக்கொண்டு அரிஹரி யென்கிற வார்த்தையல்லாமல் வேறுவார்த்தை சொல்லாமல் எங்குந்தங்கி நிற்காமல் கற்களென்றும் முட்களென்றும் பாராமல் காடென்றும் நாடென்றும் தேருமல் கர்த்தனைக்காண நடந்தார் அப்போது மமதாதேவி மூர்ச்சை தெளிந்தெழுந்து கணவனைக்காணுமல் பின்னும் பூமியில் வீழ்ந்து புரண்டு மருண்டு கதறிப் பதறி ஓலமிட்டழுது ஓ கர்த்தனேயெனத் தொழுது ஐயையோ செய்தேனே பழுது இனி யெப்படிப்போகும் பொழுது எனப்புலம்பிக் கண்ணீராற் றேகத்தை யலம்பிக் கணவனைக் காணக் காட்டை நாடிப்போகத் தொடங்கினுள். அப்போதவ் வுத்தமியின் தந்தை தாய் பலவாருகத் தேற்றித் துககத்தை யாற்றி நீ வீட்டிலிரு சற்றேபொறு நாங்களழைத்துக் கொண்டு வருகிருேமெனத் திடப்படுத்தினுர்கள் அதற்கு மமதாதேவி நீங்கள்போய் எனது மாமியாரை அழைத்துக்கொண்டு வந்தா லவ்வம்மணி தன்சுதனை மறித்து நாட்டுக்கழைத்துக்கொண்டு வருவாளென்றுரைக்க மமதாதேவி சகோதரர் க்ஷணத்தி லழைத்துக்கொண்டு வருகிருேமென்ருேடி யமுனு நதியைக் கடக்கக்கூடாமல் வாடிச் சூரியோதயத்தை நாடி நின்ருர்கள், துளசிதாசனே இரவிலேயே நாட்டைக்கடந்து

காட்டிற் புகுந்தும் சேற்றிற் புதைந்தும் புதருகளாற் சிதைந்தும் சூரியாஸ்தமனமாவதற்கு முன் ஓர் மலைமேற் பிரவேசித்து ஆயாசமேலீட்டா லயர்ந்து சற்றுத் தங்கியிருந்து பகலவன் வந்ததே அம்மலையை யிழிந்து பலநாடுகளிலும் காடுகளிலும் புகுந்து இன்றைக்கரியை காண்பேனா இன்பாபரணம் பூண்பேனா இன்றைக் கென்முன் வருவாரா எளியேன் விரதம் முடிப்பாராவெனக் காலையிலிருந்து உச்சிமட்டும் பலவிடங்களிலுஞ் சொல்லிக்கொண்டே திரிந்து மனம்நொந்து இப்போது பதினைந்து நாழிகையாய்விட்டதே இனிமேல் கமலக்கண்ணன் வருவானா விமலபதத்தைப் புகழ்வேனா மேலாமின்ப மடைவேனாவென்று தேவாலயங்களிற் பிரவேசித்துப் பகவா னிவரேயாவாரா பகவானானாற் பேசாரா மகிழ்வோடெழுந்து வாராரா மலர்ப்பாதங்கள் தாராராவென வெகுநேரந் தோத்திரம் புரிந்து அசையாத விக்கிரகங்களைப் பார்த்து மார்புடன் சேர்த்து ஓ ஸ்வாமி! நானும்மைக் காண வேண்டி காடு நாடுமலைந்து திரிகின்றேனே கால்கள் மிகவு நோவுகின்றனவே பாதங்கள் தேய்ந்துபோயினவே பொழுதுமிதோ போச்சுதே நீரசையாமலிருக்கின்றீரே நானிரவும் பகலு மோலமிட்டுக் கூப்பிடுகின்றேனே நீர் வாய்திறந்து பேசாம லிருக்கின்றீரே இதுவுமக்குத் தர்மமோ அல்லது வேறே மர்மமோ நான்செய்த கர்மமோ நீரசையாப் பிரமமோவெனத் துதித்து சூரியாஸ்தமானதே ஆலயத்தில் சயனித்து அரி கனவில் வருவாரா அரிய சேவை தருவாரா உரிமையாக்கிக்கொள்வாரா உபதேசஞ்செய்வாரா கமலபதங்கள் பார்ப்பேனோ களிசாகரத்திற் குளிப்பேனோ நிமலாவென்று துதிப்பேனோ நிச்சலனாகி யிருப்பேனோ பண்ணோடுருகிப் பணிவேனோ பவசாகரத்தைக் கடப்பேனோ கண்ணாற் பார்ப்ப தெந்நாளோ கவலைகள் தீர்ப்பதெந்நாளோ வெனத் தியானஞ் செய்துக்கொண்டே நித்திரைசெய்து பாதியிரவிலேயே விழித்து கோயிலிலிருந்து வெளிப்பட்டு ஓ ஓ பகவானே நீ யென்னெதிரிற் பிரசன்னமாய்ச் சேவைதரல் வேண்டும். கண்களாற்பார்த்து மகிழவேண்டும் மனங்குளிரப் பேசவேண்டும் என் மனவாட்டங்க ளறவேண்டும் ஆனந்தமுறவேண்டும். நிர்த்தனஞ் செய்யவேண்டும் தன்னை மறந்து திரியவேண்டும் எனப்புகன்று பகவானைக் கனவிலும் மறக்கா

மல் அரிஹரியென்கிற வாக்கியத்தைத் துறக்காமல் அனேக நூதன பஜனைகள் பாடிக்கொண்டே பல தேசங்களிற்றிரிந்து மிகவும் பரிந்து கால்களெரிந்து முகங்கரிந்து காசிபட்டணத்திற் பிரவேசித்து விஸ்வநாதரைப் பூசித்து சாதுக்களை நேசித்து அரியின் கதைகளை வாசித்து விஷ்ணு சங்கீர்த்தனங்களைக் கோஷித்துப் பக்தியில் விசேஷித்து நாள்களைக்கழிக்கத் தொடங்கினர்.

இவரிப்படியிருக்கத் துளசிதாசன் தாய் சூரியோதயமாகியும் புதல்வன் வரக் காணுமையால் வாடி வீதிகளிற்போய்த் தேடிப் பல திசையிலும்வோடி பாலனைக் காணுதற்கு நாடி யமுனாநதியின் கரைக்குவந்து கடந்து போவதற்கு நொந்து துக்காக்கினியால் வெந்து மிகவுஞ் சிந்தை நைந்துவோடத்தின் மீதேறி மகனைக் காணக்கோறி இக்கரைகடந்து அக்கரையையடைந்து சம்பந்தியின் புதல்வரைப் பார்த்து என்னருமைக்குமாரன் வந்தானாவெனக் கேட்க அவர்கள் சகலமும் சவிஸ்தாரமாக வுரைக்க அவ்வசனத்தைக்கேட்ட தாய் பூமியில்விழுந்து புரண்டெழுந்து அதிசீக்கிரமாகச் சம்பந்தியின் வீட்டிற்சென்று மமதாதேவியைக் கூப்பிடவே உடனே மமதாதேவி மாமியைத்தொழுது வோவென்றழுது நீரென்னையிங்கே அனுப்பாமலிருந்தா லிக்குறை யெனக்குவருமா துன்பந்தருமாவெனத் துக்கித் தலறும்போது அத்தாயும் கூடவே புலம்பி ஆ என்மகனே! அழகான முகனே! என்னையும் மறந்தாயோ உன்மனைவியைத் துறந்தாயோ எத்திசையிற் சென்றாயோ எங்கே யிருக்கின்றாயோ பசிவேதனைக் கெப்படி பொறுப்பாய் கால்கள்நோக நடந்தெப்படி உயிர் தரிப்பாய் மோகஜன்னி மேலிட்டதோ மனைவியின் வாய்மொழிகள் சுட்டதோ இல்லறங் கசப்பாய்விட்டதோ மதிமயங்கிவிட்டதோ விதிபிரித்துவிட்டதோ இவ்வூர்தான் கெட்டதோ உன்முகத்தைக்காட்டாமற் போய்விட்டாயே என்னைப் பாவியாக்கி விட்டாயே உன்னைப் பார்க்காமலெப்படி யிருப்பேன் எவ்விதமாய்ப் பொறுப்பேன் ஓ ஓ மோசஞ்செய்தாயே என் கழுத்தைக் கொய்தாயே எனப் புலம்பிக்கொண்டிருக்கும்போது சம்பந்தி அத்தாயை அன்புடன் நோக்கி இதோ என் புதல்வர்களாலிப்போதே யழைப்பிக்கிறேன் துன்பப்பட வேண்டாமெனத் தேற்றித் துன்பத்தையாற்றிப் புதல்வரையும் ஏவலாளரை

யும் துளசிதாசனைத் தேடியழைத்துக்கொண்டு வரும்படியாக அனுப்பினன்.

அவர்கள் காடு நாடு மலை வனாந்தரங்களிலெல்லா மலைந்து திரிந்து அங்கங்கே துளசிதாசனுடைய சங்கதியைக் கேள்விப்பட்டு வாரணாசியையடைந்து அங்குள துளசிதாசனைக்கண்டு பித்தனாய் விட்டானென்று தன்னூரிற் சென்று துளசிதாசனிருக்குங் கோலத்தைப் புகன்று முறையிட்டார்கள். அதுகேட்ட தாய் மிகவும் பிரலாபித்துத்தானும் மருகியும் தண்டிகைகளின் மேலூர்ந்து ஏவலாளருடன் பிரயாணபட்டு வாரணாசியையடைந்து தேகத்தின்மீதும் வஸ்திரம் முதலான சகல சொகுசுகளின்மீதும் வாசையின்றி ஓரிடத்திலும் நில்லாமல் அரிஹரி யென்கிற மொழியல்லாமல் வேறு வார்த்தை சொல்லாமல் பரதேசியைப்போற் கிழிந்த ஆடையைத் தரித்துக்கொண்டு குடுமியை விரித்துக்கொண்டு பாதங்கள்வெடித் துதிரம் புறப்பட நடந்துகொண்டு பகவானை வோசையுடன் கூப்பிட்டுக்கொண்டு மஸ்தகத்தின்மே லஸ்தங்களை கூப்பிட்டுக்கொண்டு தெருக்களிற் றிரிந்துக்கொண்டு மழையென்றும் வெயிலென்றும் பாராமல் யாரிடத்தும் பேசாமல் ஊமையாகி அங்கங்கறுத்து கோடைக்குப்பொறுத்து எறும்பு மாத்திரமாகி நிச்சல சித்தனாகி மேடை மாளிகையிலிருந்ததுபோய் மடஞ் சத்திரங்களிற் றங்கிப் பஞ்சணைமேற் சயனிப்பதுபோய்ப் புழுதியி லனந்தற்செய்து பேய்பிடித்தவன்போலும் சேயிருப்பதுபோலும் இருக்குமைந்தனைகண்ட தாயானவள் தாரை தாரையாய்க் கண்ணீர்விட்டழுது பாதங்களின்மேல் வீழ்ந்து தொழுது ஓ என்னருமைப் பாலனே தவத்திற்சிறந்த சீலனே உனக்கு மிப்பேர்க்கொத்த விதிவந்ததோ உன் மனைவிசொன்ன கடுஞ்சொல்லால் மனம் நொந்ததோ அஞ்ஞானம் நாசமாய்ப் போகாதோ ஓ என்னருமைக் குழந்தாய் உன் தாதையு மெனைப் பிரிந்தாரே நீயும் பிரிந்து விட்டாயே நான் தனித்திருப்பேனு உன்னைப்பிரிந் துயிர் தரிப்பேனுவெனப் பற்பல மொழிகளைப் புகன்று இரண்டு கரங்களையும் பிடித்துக்கொண்டு வயிற்றிற் றலையை வைத்து வோவென்றழத் தொடங்கினர்.

அதற்கந்த பரமபாகவதன் பணிந்து ஓ என் தாயே நாராயணனைப் பார்த்தாயா நயனங்களவர் பதத்திற் சேர்த்தா

யா இழிவான எண்ணங்களைப் பேர்த்தாயா எல்லா! ஆயாசங் களையுந் தீர்த்தாயா அடியேனரியைக் காணவில்லை அதனு லொன்றுந் தோணவில்லை கொடியேன்மேலருள் கூறவில்லை கோதுகளின்னுந் தீரவில்லை பச்சைவண்ணனைக் கமலக்கண் ணனைச் சுதாற்புதனை அரசனுர்சுதனை கோதண்ட அவ்ஸ்தனை குறைவிலாச் சொஸ்தனை சீதைமணவாளனைத் தேவர்கண்ணு ளனைப் பத்மநாபனை பரமசொருபனை கதிதரு முதல்வனைக் கௌசலை புதல்வனை ஆதிமூலனை அன்பரனுகூலனை மாத வர்நேயனை மதிதரும் மாயனைக் கண்குளிரக்கண்டு ஆனந்தங் கொண்டு பலவரங்களைப் பெற்றுகொண்டு இதோவருகிறேன் இன்றைக்ககத்தியப் பகவான் வருவார் தரிசனந் தருவார் இன்றைக்கென் விரதம் நிறைவேறும் சமஸ்த குறைகளுந் தீரும்யெனப் பற்பல வசனங்களாடி அரியைத்தேடிக் காணு மல் வாடிப் பல கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டிருந்தார்.

அப்போது மமதாதேவி கணவனைச் சூழ்ந்து அடிகள் மேல் வீழ்ந்து பலதரந்தாழ்ந்து ஓ ஸ்வாமி! நான் செய்த குறையை க்ஷமித்து வீட்டுக்குவாரும் தாயைக்காரும் ஆ ஆ இத்திவ்ய திருவடிகள் நேரக நடக்கவும் நேரிட்டதோ புழு தியிலுஞ் சயனிக்கலாச்சுதோ உமக்குள்ள அபிமானமெங்கே பிரிந்து போச்சுதோ இப்பேர்க்கொத்த விதியும் வாச்சுதோ ஓ கொடுங்காலமே! ஓ கடுந்தெய்வமே! என்னை இப்படியும் சோதிக்கலாமோவெனப் பன்முறை முகத்தி லறைந்துக்கொ ண்டு கல்லும் உருகக்கரைந்தழுக தொடங்கினுள். அதற்கந்த ஹரிதாசன் ஓ மமதாதேவி! நீசெய்த உபதேசப்படி இன்னும் ஹரியேன் வரவில்லை ஏனவர் தரிசனந் தரவில்லை இன்னும் எத்தனை நாள் செல்லும் எனக்கோருபாயம் நீ சொல்லும் என்று விபீஷணனைக் காத்தவனை ராவணனை மாய்த்தவனைக் கும்பகர்ணனை வென்றவனை மூலபலத்தைக் கொன்றவனை அயோத்தியை யாண்டவனை எனக்கு முனக்கு மாண்டவனை இதோ பார்த்து வருகிறேன் நீ மனைக்கேகென் றுரைத்து ஸ்ரீராமா பரந்தாமா துன்பத்தாமா சகஸ்ரநாமா பரசுராமா பலபத்ரராமா நீலமேகஸ்யாமா புஜபல பராக்கிரமமா திரிவிக் கிரமா புருஷோத்தமா நரசிம்மாவெனத் தோத்திரஞ்செய்து கொண்டே இச்சைப்படி பலவிடங்களிலுந்திரியும் காவலனை

மமதாதேவி மறுக்காமல் மாமியாரை நோக்கி இனி இவரை நாமழைத்துக்கொண்டு போவதருமையாதலால் இவ்வாரணசியில் ஓர் பெரிய மடம் ஏற்படுத்தி அதில் நாமிருந்துக்கொண்டிவருடைய தரிசனஞ் செய்துக்கொண் டிருக்கலாமெனப் புகல, அதற்கவ்வம்மணி ஓ மமதாதேவி! நீ நமக்குள்ள ஆஸ்தியையெல்லா மழைப்பித்து உன்னிஷ்டப்படியே செய்து துளசிதாசனுக் கன்னவஸ்திர முதலானதுகளுக்குக் குறைவராமற் பாதுகாத்துக்கொண்டிரு நானுனது மாமனாரிடஞ் சென்றவரை யிங்கழைத்துக்கொண்டு வருகிறேன் வராவிடினவரிடத்திலேயே மரணமடைகிறேன் ஏனெனின் என்னருமைப்பாலன் முன்னிருந்த சிங்காரத்தைக்கண்டு களிப்புற்ற கண்கள் இப்போதிருக்குங் கோலத்தைகண்டு பொறுக்கமாட்டேனென்கிறது பெற்றவயிறே பற்றி யெறிகின்றது உடல் பதறுகின்றது மனம் நடுங்குகின்றது துயரமோ ஆறேனேன்கிறதென் றுரைத்து மகனைக் கட்டியணைந்து முத்தமிட்டுப் பிரியாத்துயரால் ஓவென்றழுது காசிவிஸ்வநாதரைத் தொழுது ஓ பரமேசுவரா! ஜகதீசுவரா! நீயாவதென் பாலனுக்குற்ற சிரத்தாபத்திக் கிரங்கலாகாதோ காட்சி கொடுக்கலாகாதோ என்னுயுளெல்லாம் துன்பத்திலேயே கழிந்துதே யென்று துதித்துப் பல காவலர்கள் சூழ சிவிகைமே லூர்ந்துக்கொண்டு நைமிசாரண்யத்தை நோக்கிப்போய் காவலனிடஞ் சேர்ந்து பாதங்கள்மேல் வீழ்ந்து பிரலாபிக்கத்தொடங்கினள்.

ஆத்மாராம் திடுக்கிட்டுக் கண்களைத்திறந்து மனைவியை நோக்கி, ஓ பெண்ணே! துளசிதாசனெங்கே மைந்தனைப் பிரிந்தென்பால் வந்த காரணமென்ன சீக்கிரஞ் சொல்வாயென்று கேட்க, அதற்கவ்வுத்தமி துளசிதாசனுடைய வரலாற்றை ஆதியோடந்தமாகப் புகன்று முறையிட்டாள். அதுகேட்ட ஆத்மாராம் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினவராய் ஆனந்தம் ஆனந்தம் என்ன சுபவார்த்தைப் புகன்றாய் நமது மைந்தனும் இகபோகங்களை வெறுத்துச் சஞ்சலமனதை மறுத்து அரியைத்தேடி திரிகின்றானா தேடிக்காணமை லுறுகின்றானா எதோ பார்ப்போம் வாவென் றாரணியத்தைக்கடந்து துளசிதாசனைக்கண்டு ஆனந்தங்கொண்டு மயக்கத்தைப் பேர்த்து மார்புடன்சேர்த்து மகவாசை யோங்கி மனம் மிகத்தேங்கி

அப்பாமகனே! அழகான முகனே! நீயும் விஷயபோகங்களை வெறுத்தாயா! இவ்வளவிடருக்கும் பொறுத்தாயே ஆ என் கண்மணியே! ஆ சிகாமணியே! ஆ என்புத்திரா! அடியார்க்கு மித்திரா! ஆசைப் பெருக்கே! அடியேனன்பே! என்னுருயிரே! என்மனத் தெளிவே! ஜீவசஞ்சீவியே! தெருள் சிரஞ்சீவியே! மாசிலாவுருவே! மகிழ்தருதிருவே! நீ யிப்படியலைவதாற் பஞ்சுபோன்ற பாதங்கள் நோகாதோ என்னுயிர் பிரிந்துபோகாதோ சும்மா விருக்கலாகாதோ துரிசுகளெல்லாஞ் சாகாதோ நீயுமென்போலானாயோ எலும்பாய் வாடிப்போனாயோ நீயுமிச்சீரை யணியலாமா எளியேன் கண்களாற் பார்க்கப் போமா ஐயோ தேகமெல்லாம் புழுதியாயிருக்கின்றதே என்தேகம் மிகவும் பதறுகின்றதே உன்னைப்பெறும் பாக்கியமென்ன செய்தேனோ அதிக சிலாக்கியனானேனே அரியைத் தேடித் திரிகின்றாயோ அரியைக்காண வுருகுகின்றாயோ இப்போதல்லவோ என் தபம் பலித்தது இப்போ தல்லவோ மோட்ச சாம்பிராச்சியத்தை யடைந்தேன் இனி இவ்வுலகிலெனக்கோ ராசையுமுண்டோ உன்னைப்பெற்ற எனக்கோர் குறையுமுண்டோ என்னை உன் மார்பிறுகத் தழுவிக்கொண்டே என்னுவியை விடுவதே நன்மை, இப்படி விடுவதால் வராதொருவின்மை, ஆ ஆ ஆனந்தமடைந்தேன், ஆக்கையோடிருக்க விடைந்தேன் பந்தபாசங்களற்றேன் பரமானந்தத்தைப் பெற்றேன், உன் திவ்விய அவ்ஸ்தங்களா லென்னைப் பாகீரதியி லெறிந்துவிடு இனி யுனக்கோர் குறையுமில்லை, ஸ்ரீமந்நாராயணரைப் பார்க்கக்கடவாய், பரிபூரண க்ஞானியாகக்கடவாய், பிரமானந்தத்தாற் றன்னைமறந் திருக்கக்கடவாய், மோட்சபாக்கியத்தைப் பெறக்கடவாய் என்று பல ஆசிகள்செய்து மைந்தனைக்கண்ட சந்தோஷத்தாலே ஆக்கைமேலுற்ற நிராசையாலோ, விக்கைவல்ய மடையும் படியான எண்ணத்தாலோ, மகனை மார்புடன் புல்லிக் கொண்டிருக்குமானந்தத்தாலோ தனயனிருக்கு மலங் கோலத்தைப் பார்க்கக் கூடாமையாலோ, சுதன்மீதிருக்கும் வாஞ்சையாலோ, விதியின் முடிவாலோ யாதுகாரணத்தாலோ துளசிதாசனைத் தழுவினபடியே தேகேந்திரிய கரண சீவவிருளையுங் கடந்து ஆத்ம ஸ்வரூபமாகி விராட்டிரண்ணிய கர்ப்ப அவ்யாகிர்தத்தையும் கடந்து பரமாத்மாவி லைக்யப்பட்டு ஸ்மரணைகெட்டு

தாத்திரியிற்சாய்ந்து ஆனந்தம் ஆனந்தம் என்றுரைத்துக் கொண்டே ஆவியை விட்டுவிட்டார்.

அப்பிராணனானது குளிர்ந்த பூரணச் சந்திரன்போற் பிரகாசித்து ககனத்தில் மறைந்துவிட்டது அப்போதவர் மனைவி ஆ இதென்ன பிள்ளைவரத்துக்குப் போய்ப் புருஷனைப் பரிகொடுத்தாப்போலாச்சுதெனப் பதை பதைப்புடன் மெய்மறந்து மூர்ச்சை யடைந்தாள் அப்போதந்தத் துளசிதாசனுக் குற்ற துயரத்தை ஒருவராற் சொல்லமுடியுமோ மாதாபிதாவும் மனையாளு மடைந்ததுயரம் வோரனுவும் அவ்வரிதாசனடைந்த துன்பம் மகமேருவென்றே சொல்ல லாம் எப்படியெனில் கரைகாணவிடர் கடலில் மூழ்கித் தந்தையின்மேல் வீழ்ந்து ஓ என் தந்தையே! இதுவென்ன விந்தையே! ஆலிங்கனஞ் செய்துக்கொண்டே உயிர்விட்டவர்களு மிவ்வுலகிலுண்டோ தேரித்தெளிந்த ஞானியா யிருந்தும் சமஸ்த தர்மங்களறிந்தும் அடியேன்மீ திவ்வளவாசையுட னிருக்கலாமா அரைக்கணத்தி லுமதாவியை விடுக்கப் போமா என்பால் வருவதே தடையாயிருந்ததோ முகம் பார்த்ததே ஆயுளின்முடிவு வந்ததோ பாவியின் தரிசனமே மரணந் தந்ததோ பந்தத்தில் நானிருந்தபோதும் நிந்தைசெய்யாமற் போனாயே ஆக்கையை ஆரண்யத்திலும் ஆவியை என்னிடத்திலும் வைத்திருந்தாயோ ஆ பட்சத்துடன் ரட்சித்த தந்தையே என்னை யிழந்தையே இனியென்னை மகனே யென்றழைப்பவர் யார் நீதிகளைப் புகல்பவர்யார் யாரென்றோவென் றழத் தொடங்கினர். இப்படித் துளசிதாசன் பிரலாபித்த காரணம் தந்தைமீது வைத்திருந்த தயவேயாம் பட்சமுள்ள தந்தையை மறந்தவரு முண்டோ தந்தை மரித்தாலழாமைந்தரு முண்டோ ஓ சித்தர்களே! துளசிதாச னிப்படியிருக்க ஆத்மாராம் மனைவி மூர்ச்சை தெளிந்தெழுந்து கணவன்மேல் விழுந்து கல்லும் வுருகக் கரைந்தழுவதைக் கண்ட ஹரிதாச னினி நமது பிதாவுரைத்தபடி கங்கையிற் போடாவிட்டால் துக்கமிகுந்து மாதாவும் மரிப்பாளென்கிற எண்ணத்தாலும் (தந்தைசொன்மிக்க மந்திரமில்லை) யென்னும் வாக்கியமறிந்தவ ராதலாலும் பிதாவைத் தோள்மேலேந்திக் கொண்டுபோய் பாகீரதியைத் துதித்துக் கங்கையில்

விட்டுவிட்டார் விட்டு தன்சுயநிலை கெட்டார் கண்ணீரைப் பெருக்கினர் சகலருடைய மனதையுமுருக்கினர்.

அப்போது துளசிதாசன் தாய் பதியுடன் பகீரதியிற் குதித்திறக்க வெண்ணங்கொண்டு மகனைக்கட்டி யணைத்து பலதரம் மூத்தமிட்டு ஓ என்னருமைப் பாலனே! தவத்திற் சிறந்த சீலனே! நீ முன்னமிருந்த சிங்காரத்தைக் கண்டு களித்த கண்கள் இப்போதிருக்குங் கோலத்தைப் பார்த்துப் பொறுக்கமாட்டே னென்கிறதே அங்கமெல்லாம் என்பாய் விட்டதே முகங்கருகிப் போய்விட்டதே இப்பேர்க்கொத்த உன் துயரத்தையும் பார்த்தும் உன் தந்தைபோல் நானும் மரிக்காமற் கடின நெஞ்சத்துட னிருக்குங் காரணமென்ன மோ நீ பரதேசியா யலைந்து திரிவதைப்பார்த்து மென்னு யிர் பிரியாதிருக்குமோ நீ இச்சைகொண்ட அச்சுதனுக்கா ளாகக்கடவது பிர்மக் ஞானியாகக்கடவது என்றுரைத்துக் கங்கையிற் குதித்து மறைந்துவிட்டாள். ஓ சித்தர்களே! இத் தருணத்தந்ததாசன் எவ்விதமாய் புலம்பியழுதானோ? அதை யென்ன லுரைக்கப்போமோ? இவ்வளவு உருக்கமுள்ள சரி தையை நீங்கள் கேட்டதுண்டோ? மகனே மகனேயென்ற மாதாபிதாக்கள் மரித்தபின் ஹரிதாசன் கங்கையின் கரையில் வெகுநேரம் மரம்போல நின்றிருந்து ஒன்றுந் தோன்றுதவ ராய் நாமுமிக் கங்கையில் விழுந்து மரிப்போமாவென்பார், அரியைத் தேடப்போவோமாவென்பார், சற்றுதூரம் போ வார், பின்னுமவ்விடத்தில் வருவார், நமதுமாதா நிச்சயமா யிதில் வீழ்ந்திறந்தாளாவென்பார், ஒருமொழியாவது பேசா மற்போனேமே யென்பார், மாதுர் துரோகியானேமே யென் பார் மறலி நாமேயானேமே யென்பார், மாதாமரித்த காரண மேனென்பார், இவ்வயணம் நமக்குத் தெரியாமற் போனதே னென்பார் என்றிவ்வித பற்பல மொழிகள் பகர்ந்துக்கொண் டிருந்தார்.

ஓ சித்தர்களே! இவ்வுலகில் பிள்ளையின்மீ திவ்வளவு பிரியம் வைத்தவர்களுமுண்டோ, இவர்களிப்படியிறந்த கார ணமேனெனின் பரமபாகவதோத்தமனுகிய துளசிதாசனுக்கு இவ்வுலகிலுள்ள எல்லாப்பற்றுகள் நீங்கியும் தந்தைதாயிரு வருந் தன்முன் சமர்ப்தமாக வேண்டுமென்கிற வாதனையொ ன்று மாத்திரம் வேதனை செய்துக்கொண்டிருந்த தாதலாலப்

படியே பக்தவச்சலனுன பகவான் முடித்துவிட்டார் ஓ சித்தர்களே! துளசிதாசன் கங்கையிற் குதித்திறப்போமென் றெண்ணங் கொள்ளுகிறதும் இன்றைக்குப் பகவானைப் பார்த்து நாளைக்கிறப்போமென விள்ளுகிறதுமாய் வெகுநேரமிருந்து பகவானைப் பார்த்தேமரிக்க வேண்டுமெனத் திடசித்தஞ்செய்துக்கொண்டு ஆ ஆ நமது தாதை நெடுநாள் தவத்திலிருந்தபடியால் மேலானபதவியே யடைந்திருப்பார், நமது தாயோ நம்மால் நாளது பரியந்தம் வாட்டத்தை யடைந்திருந்தாளன்றி ஓர் தவஞ் செபம் செய்யவேயில்லை, தநயன்முற்றுந் துறந்த சன்னியாசியானுலல்லவோ தாய்க்கு மோட்சமுண்டென சாஸ்திரங்களிற் சொல்லியிருக்கின்றது, அப்படிதன்னைமறந்த சன்னியாசியாகாமற் போனேமே அதிக பட்சம் வைத்திருந்த அன்னைக்கென்ன கைமாறு செய்வோம் எனப் பற்பல விதங்களா யோசித்து முடிவில் கங்கையை நோக்கி ஓ பவானி! நீயறிய எனையீன்றுட்கு இதுகால பரியந்தஞ் செய்தவமெல்லாந் தாரைவார்த்தே னுதலாலெனைப் பயந்தவளை என் தந்தையடைந்த லோகத்திற் சேர்ப்பாயென்றுரைக்க அதற்கந்த பாகிரதி அசரீரியாய் நீயின்னு மிப்பேர்க்கொத்த தவம் பனிரெண்டாண்டு செய்தாலொழிய உன் தந்தை யடைந்த கைவல்யத்தை உன் தாயடையமாட்டாளென்றறைய அவ்வாக்கியத்தைக் கேட்ட துளசிதாசன் இதோ இன்று நாளைக்குள் பகவானைப்பார்த்துச் சமஸ்தகுறைகளுந் தீர்த்துக் கொள்ளுகிறேனென் றவ்விடம் விட்டுப்போர்ந்து தந்தைதாய் கிலேசந்தீர்ந்து முன்போலவே பகவானைத் தேடத்தொடங்கினுர். அப்போது அக்காசியிலுள்ள ஓர் விப்பிரர் துளசிதாசன் மகாபத்தனென்றவரை பலவந்தமா யழைத்துவந்து தன்மனையி லிருத்திக்கொண்டு ஓ அரி பக்தனே! என்வீட்டி லொருவருமில்லை உன்னைப்போல் நானுமோர் தியாகிதான் ஆதலாற் கருணையுட னிங்கெழுந்தருளிப் பகவானைப் பஜனைசெய்யுமையாவெனப் பணிய துளசிதாசன் சாதுக்கள் சங்கம் நலமெனச் சம்மதித்துப் பகலெல்லாம் பலவிடங்களிற் றிரிந்தாலும் இரவி லவ்வீட்டில் வந்துதங்குவாரிவரிப்படியிருக்க ராஜாபூருக்குப் போயிருந்த மமதாதேவி காசியையடைந்து மாமன் மாமி மரித்துப்போனதைக் கேள்விப்பட்டு மிகவும் வியாகுலப்பட்டு இவைகளெல்லாம் நம்

மால் வந்ததேயெனத் துக்கித்து முன் தான் நினைத்தபடியே ஓர் விசாலமான மடமொன்றேற்படுத்தி அதிலனேக சாதுக் கள் தங்கும்படியாகச் செய்ததன்றி தன் கொழுநனுக்கு மியா தொரு விஷயத்திலுங் குறைவராமற் பாதுகாத்துக் கொண் டிருந்தாள். கேட்டீர்களோ சித்தர்களேயென்று பின்னுஞ் சொல்வார்.

துளசிதாசர் வைராக்கிய அத்தியாயம் முற்றிற்று.

ஆறுவது அத்தியாயம்

துளசிதாசர் பூததரிசனம்.

ஓ சித்தர்களே! துளசிதாசர் அப்பிராமணோத்தமர் வீட் டில் பனிரெண்டு வருஷகாலமா யிருந்துக்கொண்டு பகவா னைப் பிரார்த்தனை செய்யுங்காலத்தில் ஒருநாள் நாடோறும் போல் மலோபாதைக்குப்போய் மிகுந்த ஜலத்தால் வழக்கப் படி அங்கிருக்கும் ஓர் பெருத்த கல்லின்மேல் நின்று கால லம்பும்போ தக்கல்லிலிருந்தோர் பூதம் வெளிப்பட்டுத் துளசி தாசரைக் கும்பிட்டு ஓ பிராமணோத்தமா! உமக்கென்ன வரம் வேண்டுமோ கேளுந் தருகிறேனென்றுரைக்க பாகவதன் நீ யாரென்றுவினவ, வெறி ஓ வேதியரே! நானிக்கல்லிலிருந்த பூதமாகும் நீர் பனிரெண்டு வருஷங்களாய் எனக்குற்ற சாபம் நீங்கும்படி நான் வாசமாயிருந்த இப்பாஷாணத்தின்மேல் உமது திவ்ய சரணங்களை அலம்பிக்கொண்டே வந்தபடியா லும்மீதெனக்குக் கருணைவந்தது உமக்கழகு சுந்தரமான கன் னிகை வேண்டுமா? இராஜரீகம் வேண்டுமா? சப்தசமுத்திரத் துக் கப்பாற் கொண்டுபோக வேண்டுமா? திரவியக் குவியல் வேண்டுமா? மாணிக்கங்கள் வேண்டுமா? எதுவேண்டுமோ சீக்கிரஞ் சொல்லுமையாவென்று பணிய துளசிதாசர் நகை த்து நீயா எனக்கு வரமும் பொருளுந் தருகிறவன் கற்பகத் தை நாடினவன் காஞ்சிரங் கொடியையும் காமதேனுவை இச்சித்தவன் கழுதையையும் சொர்க்கத்தை யாசித்தவன் நிறையத்தையும் விரதசீலனான பிரமசாரி வேசையையும் ஆசாரமுள்ளவன் விபசாரஞ் செய்யவும் கற்புடைய சதியான வள் பதிவஞ்சனை செய்யவும் வாஞ்சிப்பார்களா? அதுபோல

ஸ்ரீமந்நாராயணரை நாடினநான் நாய்க்குங் கீழ்மையுள்ள பேயான வுன்னை ஆசரிப்பேனு அன்றிப் பேரின்பத்தை அபேட்சித்தவன் சிற்றின்பத்தையும் அமிர்தத்தைக் கோறினவன் விஷத்தையும் பிரபுத்துவத்தை வாஞ்சித்தவன் யாசகத்தையும் கோறுவானே! அதுபோல மோட்சமார்க்கத்தை விரும்பின நான் கொடுக்கிறேனெனப் பகர்ந்த அற்பபொருளுக் காசிப்பேனே! போ போ பயித்தியம்பிடித்தபேயே கடைகெட்ட நாயேயெனப் புகல பேயானது ஓ மாதவனே! என்மீது முனிவுகொள்ளவேண்டாம் உமக்கு ஸ்ரீமந்நாராயணன் சேவைதானே வேண்டும் அவன்சேவை உனக்குக் கிடைக்கும்படியாகச் செய்கிறேனென்பின் வாவென்றழைக்க, அரிபக்தன் சித்தினிவார்த்தையைப் பத்தினியும் கற்பழிந்தவள் மாற்றத்தைக் கற்புள்ளவளும் அஞ்ஞானியின் மொழியைச் சுஞ்ஞானியும் பொய்யன் பேச்சை மெய்யனும் லோபியின் வாய்மையை தர்மியும், கோளன் நீதியைக் குணவானும் குரோதியினுத்தியை அவிரோதியும் கேட்பானு! அல்லது நம்புவானு! அதுபோல உன் உரையைக் கேட்கவுமாட்டேன் நம்பவுமாட்டேன் வீணுயேன் வற்புறுத்திப் பேசுகின்றனை உன் காரியத்தைப் பார்த்துக்கொண்டுபோ என்னை மறிக்கவேண்டாம் வீணன வார்த்தைகள் விரிக்கவேண்டாம் நான் அரியைத் தேடப்போகவேண்டும் வீணுன பொழுதைப் போக்கிவிட்டேன் ஆயுளை வீணுக்கிவிட்டேன் துன்மார்க்கர் சேர்க்கை மிகவுங்கெட்டது சீசீ என்னருகில் வராதே யெனச் செப்ப அலகையானது ஓ பிராமணேத்தமரே! சிறியகண்ணினல் பெரியமலையைப் பார்ப்பதும் சிறிய ஒரு அக்கினிப் பொறியினுல் மலையையொத்த பஞ்சுமூட்டைகளை யெரிப்பதுபோல அற்பமான வென்னுல் ஸ்ரீமந்நாராயணனைத் தரிசிப்பீர் இதிலெவ்வளவுஞ் சந்தேகமிராது நான் பலவாறுமக்குப் பகர்வதிற் பயனில்லை. இக்கணமென்பின் வருவீரேல் எங்களுக்கிறைவனுகிய வேதாளத்தினிடத்திற் கொண்டுபோகிறேன் அவராலுமக் கரிதரிசனங் கிடைக்குமென்றறைய,

துளசிதாசர் ஓ பூதமே! நீயெனக்கு நாராயணனைக் காட்டுவது அபத்தமேயாம் பேயை நாடினவன் நாய்க்குச்சமானமாகும் நாய்க்கு வேண்டுவது பசையிலா எலும்பைப்போல உனக்கிணையான துஷ்டதேவதைகளைப் பூஜித்துக் கனிஷ்ட

வஸ்துக்கள்மே லிஷ்டமாகும் பிரஷ்டகர்களையே மாற்றப் பலியை யபேட்சிப்பாயாக என்னை மோசஞ்செய்ய நீ நேசித்தா லுன்னை விசுவாசிப்பேனே? ஸ்ரீமந்நாராயணரை காட்டுமுபாயமுனக்குத் தெரிந்திருந்தால் உனக்குற்ற பேய்த்தனத்தை தீர்த்துக்கொள்ள மாட்டாயா? பரமபதம் பெறமாட்டாயா பயங்கரவுருவுட னிருப்பாயா அசுத்தவிடத்தில் வாசஞ் செய்வாயா போபோவென,

பிசாசம் ஓ அந்தணரே! அவரவர்கள் செய்த தீவினையை அவரவர்க ளல்லவோ அனுபவித்து நீக்கவேண்டும் இராஜ னரண்மனைக்குப் போகும்வழி தெரிந்திருந்தாலும் குற்றமுள்ளவன் போகக்கூடுமோ? மோட்சசாதன மறிந்திருந்தாலும் திரவிய வாஞ்சையுள்ளவன் நன்மார்க்கத்தில் நடக்கக்கூடுமா வேதாந்தத்திற்றேர்ந்த நிபுணனானாலும் சமுசாரத்திற் சஞ்சலமற்றிருக்கக்கூடுமா கற்பின் மேன்மையை எவ்வளவு விஸ்தரித் துரைத்தாலும் விபசாரி பதிவிரதாத் தன்மையைக் காப்பாற்றக்கூடுமோ அதுபோலவே எனக்கு ஸ்ரீமந்நாராயணனைத் தரிசிக்கும்படியான உபாயந் தெரிந்திருந்தாலும் யான் முற்பிறப்பிற் செய்த குற்றமென்ன பேயான வண்ணமென்ன என்னல் நீ புனிதமான காரணமென்ன தெரியப்படுத்தென்று வினவ, குணபாகி ஓ விப்பிரனே! நானிந்த வீட்டுக் குடைவேனாகிய பிராமணனுடைய மனையாளாகும் நானென் எவ்வர்னகாலத்தில் அதிகக் காமக்குண முடையவளாய்க் கணவனைச் சட்டைசெய்யாமல் மோகத்தால் கண்ணுக்கினிய புருஷர்களைப் புணர்ந்து பதிக்கும் பகவானுக்கும் பயப்படாமல் பதிவிரதைகட்குரிய நீதிக் குட்படாமல் மானவீனமாகுமென் றுணராமல் பாமரமனதைச் செயிக்காமல் அற்பமான விஷயானந்தத்தைக் கருதி, உழன்றுக்கொண்டிருந்தேனிதனல் கொழுனன் அன்புட னென்னையழைத் தருகிலிருத்திக்கொண்டு ஓ பெண்ணே! உன்னுடைய கொடிய செய்கையானது என்னை வெளியிற் போகாமலும் ஒருவனுடன் பேசாமலும் செய்ததன்றி சகலரும் கெக்கலிகொட்டி நகைக்கும்படியாயுமாய்விட்டன. எல்லாவற்றிலும் விபசாரங்கெட்டது என்மீதுனக்கு அன்பிருக்குமாயின் இனிமேலாவது நற்குண நற்செய்கை யுடையவளாய் பகவானுக்கு பயந்து இல்லறதர்மம் நடாத்து இல்லையெனில் என்வீட்டைவிட்டு உனக்

கிஷ்டமான விடத்திற் போயிரு ஏனெனில் காலையிலெழுந்து விபசாரியின் வதனத்தை பார்ப்பவனுக்கு வேசரியின்குணம் நேரிடுமென்றும் பதிவிரதா பங்கமானவளிருக்கும் வீடு பரத்தையர்வீட்டிலு மிழிவானதென்றும், கற்பழிந்தவளுடன் கூடியிருப்பவனுக்குகர்மம் பலிதமாகுமென்றும் விபசாரியினாலப் பரம்பரையின் விர்த்தி நாசமடையுமென்றும், பதியை வஞ்சிப்பவள் பரம்பரைக்குக் குற்றமுண்டாகுமென்றும் விபசாரி வேசைக்குங் கீழ்மையானவ ளென்றும், விபசாரியின்பால் கொலை களவு கள் காமம் பொய் நிந்தை வெறுப்பு அருவருப்பு சஞ்சலம் வாது சூது தாரித்திரம் நோய் வஞ்சனை நாணமின்மை மூதேவி முதலானவைகள் குடியிருக்குமென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றது அன்றி மானமில்லா மங்கையுடனிங்கிதமாயிருந் தினமடைவதைப்பார்க்கிலும் கானமடைந்து பகவத்தியானத்தால் ஞானியாகி மோனமாயிருப்பதே உத்தமமல்லவோ நீ இம்மனையைவிடுத் தேகுவையாகில் நான் சகல பற்றுக்களுமற்ற நற்றுறவியேயாம் இனி மானத்துடனில்லஞ் செய்கின்ருயா ஈனத்துடன் பிறர்மனைக் கேகின்ருயா வெனக் கேட்கும் பதிக்கு வந்தனஞ்செய்து நானுரைத்ததாவது இனி எனக்கு மதிவந்தது பதிவிரதத் தன்மையைக் காக்கின்றேனென்று சாற்ற என்மணாளன் களித்து நீ இன்றுடன் வீட்டைவிட் டென்னுக்கினையைக் கடந்து பிறர்மனைக் கேகாதே ஆடவர்முன் போகாதே நாணமின்றிப் பேசாதே என்னை யேசாதே தெருக்களிற்போய் நிற்காதே சூது வார்த்தைகள் கற்காதே எனப் பலநீதிகளுரைத்து தெய்வமும் ஜலமும் அரசனும் ஆசானும் மூன்று பிழை பொறுப்பதுபோல் நானும் உன் துர்நடத்தை நீங்க பலதரங் கோபக்குறி காட்டினேன் ஜாடை வார்த்தைகளால் வாட்டினேன் ஒரு சாக்கிட்டுப் பல கடுஞ்சொற்களால் மாட்டினேன் இன்றைக்கு வாய்திறந் தென்னபிப்பிராயத்தை நிலை நாட்டினேன் இனிமேற் குற்றஞ் செய்வாயாயின் சற்றும் பொறுக்கமாட்டேனென் றுறுதிகூறி, என்னைப் புறம்போகாமலும் ஆடவருடன் பேசாமலும் கட்டுதிட்டஞ்செய் தன்புடன் வைத்துக்கொண் டிருக்குங்காலததில் நான் சிலநாள் என் மணாளன் போதித்த நீதியிலிருந்து பின்பு தவிர்ந்து என் கொழுனன் குட்சியினிமித்தம் பிட்சைக்குப்போய் வரு

வதற்குள் தூதிகளாலெனக்கிஷ்டமான புருஷனை யழைப்பித்து என்னிச்சையை நிறைவேற்றிக்கொண்டு என்னுயகன் வந்ததே வெகு நன்னடத்தையும் ஒடுக்கமும் அடக்கமுமுள்ளவளைப்போ லபிநயித்துப் பதிவஞ்சகஞ் செய்துகொண்டிருக்கிற நாளில் ஒருநாள் நானும் என் கள்ளபுருஷனும் கூடிக்குலாவிக் கொண்டிருக்கும் வேளையில் என் காந்தன் வந்துபார்த்து மிகவும் வெகுண்டு ஓ காமப்பேயே! நீ பேயாய்ப்போகக் கடவதென்று ஜபித்து வாட்டத்துடன் காட்டை நோக்கிப் போகையில் நானதி துரிதமாயோடி என் காதலனை மறித்து பாதங்களில் வீழ்ந்து எனக்கிட்ட சாப நிவர்த்திக்கோருபாயஞ் செப்பாமல் முனிவுடன் போகலாமோ யான் செய்த தீவினையால் பாவியாய்ப் பைசாச மானேன் நிறையத் துக்காளாய்ப் போனேன் என்று முறையிட் டழும்போது சாந்தகுணமுள்ள என் காதலன் கோபந்தணிந்து ஐயோ கோபஞ் சண்டாளமென்கிற பாபத்தாற் சாபமிட்டேனே ஆ கெட்டேனே என்றறைந்து வியாகுலமடைந்து ஓ பெண்ணே! உன்னுடைய தீமையே எனக்குக் கோபம் வரும்படி செய்தது, என் தபமெல்லாம் பாழாகப்போகச்செய்தது. அடி பேதையே! அறிவிலாக் கோதையே! நீ இக்கங்கையிற் குதித்திறந்து பேயுருவாகி நமது வீட்டிலிருக்கும் பெருங்கல்லிற் றங்கியிருந்து நல்லோர் பாதநீரிற் ஸ்நாநஞ்செய்து பாததரிசனத்துக்குப் பாத்திரமாய்ப் பன்னிரெண்டாண் டிருப்பாயாகின் உனக்குற்ற சாப நிவர்த்தியாகுமென் றுரைத்துக் காட்டை நாடிப்போகாமல் நாட்டையடைந்து வீட்டிற் பிரவேசித்து என் சாபநிவர்த்திக்கேதுசெய்யக் கருத்தைக்கொண்டார்.

நாணே தலையிற்பட்டாற் றுழ்வாரென்பது போலவும், கண்கெட்டபின் சூரிய நமஸ்காரஞ்செய்ய வாரம்பித்தது போலவும், என்பதியின் பதங்களையு மதியிற்பதித்துத் துதித்துக் கங்கையிற் குதித்துப் பேயுருவாகி இக்கல்லிற் பிரவேசித்து சாப நிவர்த்தியை ஆசித்திருக்க என் காவலன் இவ்வீட்டைச் சாதுக்களுக்குரிய பொதுமடமாக்கி அனேக சாதுக்களைச்சேர்த்து இக்கல்லின்மீது காலலம்பும்படியாகச் செய்தார் மகாத்மாவாகிய நீர் 30 வருஷங்களாய் இக்கல்லிலிருந்த என்னைப் பனிரெண்டுவருட மிங்கிருந்து காலலம்பிப் பாதபரிசமும் எனக்குக் கொடுத்ததால் எனக்குற்ற சாப நிவர்த்தியாப்புண்

ணிய லோகத்துக்குப் போகின்றேன் இவ்வளவு உபகாரஞ்செய்த உமக்கோர் சகாயஞ் செய்யாமற்போக மனம் வாராமையாலும்மைவருந்தி யென்பின் வரும்படி வேண்டுகிறேன் தடையில்லாமல் வாருமையா வென்றழைக்க, துளசிதாசர் யோசிக்கின்றார் இது பூதமாயிருந்தும் அனேக நீதிவாக்கியங்களுரைத்தது நமக்கு யாராலாவது பகவான் தரிசனங்கிடைத்தால் போதும் ஜன்மத்தினாலும் அவயவப்பழுதினாலும் ஒருவனையிகழலாகாது குணத்தைப் பார்த்தே நிக்கிரகிக்க வேண்டுமன்றி தசரத மகாராஜனுக்குற்ற புத்திரபாக்கியம் ஓர்பூதமேந்திக்கொண்டுவந்த பாயாசத்தினாலல்லவோ நீங்கிற்று என்று ஓ மண்ணையே! வேதாளத்தினிடம் போகலாம் வாவென்றழைக்க உடனே அக்குணங்கனரிதாசனையழைத்துக்கொண்டு வேதாவமிருக்குமோர் காட்டிற் பிரவேசித்து வேதாளத்தை தோத்திரஞ்செய்ய அது ஓ குணபாசியே! என்னை ஏன் துதிக்கின்றாய் உனக்குற்ற குறையேதென பிரேதம் ஓ ராஜ பூதமே! என்னைப் பவித்திரமாக்கிய இவ்விப்பிருக்குன் தரிசனந்தந்து ஸ்ரீமந் நாராயணனைத் தரிசிக்கும்படியான உபாயஞ் சொல்ல வேண்டுமென, அதற்கந்த சோகு என்னால் அனுமாரைக் காட்டிக்கொடுக்கும்படியான சக்தியுண்டன்றி பகவானைத் தரிசிக்கும்படியான உபாயஞ்சொல்ல என்னாற் கூடாது. இது மாருதியாலாகும், ஆனாலும் அவ்வாஞ்சனேயர் தரிசனம் தபத்திற்சிறந்த புண்ணியவான்களுக்கு கிடைக்கும் ஆதலால் அனுமாரைச் சேவிக்கும்படியான தபம் இவ்வேதியர் செய்திருக்கின்றாராவென ரோகு ஓ இறைவனே! இவர் பனிரெண்டாண்டாய் அரிதான தவஞ்செய்துக்கொண்டிருக்கிறாரிது சத்தியமென கருது அப்படியாவென்று துளசிதாசர் முன் பிரசன்னமாய்ப்பணிந்து ஓ பூசுரரே! பெண்ணாசையாலலையும் பேயருக்கும் மண்ணாசையா லுழலும் மாந்தருக்கும் பொன்னாசையாற் றிரியும் புருடருக்கும் அஞ்சனை குமாரன் தரிசனங்கிடைக்கமாட்டா திம்மூன்றையு மகற்றினரோவென,

துளசிதாசர் ஓ மருளே! மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை உலகாசை தேகாசை முதலானவைகளும் நீங்கி துவாதச வருஷங்களுக்கு மேலாய்விட்டது. இப்பனிரெண்டாண்டாய் பகவானாசையே பெரிதாய்விட்டது, இது அப்பகவானுக்கே தெரியுமென, சோகு சந்தோஷத்துடன் ஓ

ஸ்வாமி! இக்காசியில் அசியென்னும் வீதியில் ஓர் புராணிகர் வால்மீகரா லுண்டாக்கப்பட்ட ராமாயணத்துக் கெல்லாம் ஞானார்த்தமே செய்துக்கொண்டு வருகிறார், அவர் சொல்லும் வாக்கியங்கள் பரமானந்தத்தைத் தருதலால் அதைச் சிரவணஞ்செய்ய அநுமார் ஓர் பிராமணரூபமாய் வருகிறார் அவ்விடத்தில் அநுமாரைத் தரிசிக்கலாமெனத் துளசிதாசர் நகைத்து நவவியாகரண பண்டிதராகியும், அறுபத்து நான்கு சித்திகளில் வல்லவராகியும் வேதாந்தத்தெளிவில் நிபுணராகியும் விளங்காநின்ற ஆஞ்சநேயர் ஓர் மறையோன் சொல்லும் ராமாயணத்தைக்கேட்க வருவாரா? மித்தையான வார்த்தையைச் சொல்லவந்தாய் பேரை நாடினவன் நாய்க்குச் சமானமென்கிறபழமொழியை நிலைநிறுத்தினை யென்றறைய, பூதாதிபன் வணங்கி ஓ புண்ணியவானே! எவ்விடத்திற் சாதுக்கள் கூடிப் பகவானுக்குப் ப்ரீதியான வசனங்களைப் பேசுகின்றார்களோ? அவ்விடத்தில் ஸ்ரீமந்நாராயணரே மாருதிரூபங்கொண்டு வந்திருப்பாரென்பது பொய்யா மெய்யா காரணந்தெரியாமல் கோபிப்பது நீதியா நானொருபோதும் பொய்சொல்லமாட்டேன் நீர் பகவானைத் தரிசிக்கும்பொருட்டுப் பூண்டவிரதம் உன்னுமிடத்தில் மிகவும் விந்தையாயிருக்கின்றது அகத்தியமின்னு மிரண்டு மூன்று நாளிற் பகவானைத்தரிசிப்பீர்? பாதங்களைப் பரிசிப்பீர் என்றுரைத்த வாக்கியத்தைக்கேட்ட துளசிதாசர் பகவானைத் தரிசித்ததுபோலவே புளகாங்கமடைந்து மயிர்க்குச்செறிந்து ஆனந்தக்கண்ணீரைச்சொரிந்து ஓவியந்தாமே!. பலமறையோர் வருமிடத்தில் அநுமாரைக் கண்டு பிடிப்பதெப்படியென அறிவழி ஓ மாதவனே! அநுமார் நாடோறும் எல்லாப் பூசுரருக்கும் முன்வருவதும் பாராயணம் முடிந்தபின் எல்லோருக்கும் பின்போவதும் வழக்கம் அன்றி தாரகமந்திரம் பலர்கேட்கப் பலதரம் சொல்வதன்றி ஆனந்தமேலீட்டால் நடக்கும்போது தங்கித்தங்கி நடப்பார் இதுவே அவரைக் கண்டுபிடிக்கும் அடையாளமென்றுரைத்துத் துளசிதாசருக்கு வந்தனம்புரிந்து இரண்டு பேய்களும் மறைந்துவிட்டது கேட்டீர்களோ சித்தர்களே யென்று பின்னுஞ் சொல்லுவார்.

துளசிதாசர் பூததரிசன அத்தியாயம் முற்றிற்று.

ஏழாவது அத்தியாயம்

துளசிதாசருக்கு அனுமார் தரிசனந்தந்தது.

கேளுங்கள் சித்தர்களே யென்று நாபாஜிசித்தர் சொல்லுவார் அலகைகளிரண்டும் மறைந்தபின் துளசிதாசர் மாலை பரியந்தம் மாதவனைத் தேடித்திரிந்து சூரியாஸ்தமாகும் தருணத்தில் பாராயணமாகும் வீட்டுக்கெதிரி லிருந்துகொண்டு அனுமார்வரவை யெதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அத்தருவாயில் அனுமார் யதாப்பிரகாரம் ஓர் விருத்தப் பிராமணர் போல் வேதாளஞ்சொன்ன குறிகளுடன்வர அவரைக்கண்ட துளசிதாசர் வேதாளமுரைத்தது மெய்யென்று நம்பி அவ்வேதியனை வலம்வந்து பணிந்து, ஓ ஸ்வாமி! நீரெவ்வீதியிலிருக்கிறவரென்றுவினவ, அனுமார்மாறுத்தரஞ்சொல்லாது பாராயணம் நடக்கும் வீட்டுக்குட் பிரவேசித்தார். துளசிதாசர் பாராயணமாகுமட்டும் காத்திருந்து எல்லா வேதியர்க்கும் பின்போகும் அந்தணரை மறித்து ஓ ஸ்வாமி! உம்மைநோக்கின் மிகவும் புண்ணியபுருஷராகத் தோன்றுகின்றது ஆதலா லும்மிருப்பிடத்துக்கடியேனும் வருகிறேனென்றுபணிய ஆஞ்சனேயர் என்னிருப்பிடம் வெகுதூரம் அன்றி நான் தனித்திருக்கிறவன் ஒருவனுடைய சங்கஞ் செய்வதேயில்லை யென, அரிதாஸ் ஓ மாதவனே, உமதிட மனுக்கிரகம் பெற்றுக்கொள்ள வாஞ்சித்தேனாதலா லென்னைக்கருணையுடனுமதாசீர்மத்துக் கழைத்துக்கொண்டு போமையா வென்று வணங்க, இராகவதூதன் நானேழைப்பிராமணன் எனக்கேன்வந்தனஞ்செய்கிறாயல்லாமல் எனக்கோர் மந்திரமுந் தெரியாது இப் புராணிகர் மகாக்ஞானவான் அனேகருக்கு உபதேசமும் செய்கிறார் அவரை யடுத்தாயானால் உன்னிஷ்டப்படி நடக்குமென் றறைந்து பிராமணக் கூட்டத்திற் புகுந்து மறைந்து போனார்.

உடனே அரிபக்தன் மறையோர் கணத்திற்புகுந்து ஒவ்வொருவராய்ப் பார்த்துக்கொண்டேவர அந்தணர்கள் என்னடா மூடனா யிருக்கின்றாய் எல்லாரையும் மறித்து மறித்து முகத்தை யுன்னியுன்னிப் பார்த்துக்கொண்டே வருகிறாயென்று வாயில் வந்தபடி பேசத்தொடங்கினார்கள். துளசிதாசர் அவருரைக்கும் பன்மொழிகளைக் காதுகொடுத்துக் கேட்கா

மல் எல்லாரையும் பார்த்தும் விருத்தரைக் காணாமையால் அம் முதுமறையோ னனுமாரே யாமென நிச்சயித்துக்கொண்டு மறுநா ளந்திவேளைவந்து அனுமார் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அனுமார் வழக்கப்படியே வந்து துளசிதாசரைப் பார்த்து அடா இவனின்றைக்கு மிவ்விடத்தி லெமனைப்போலக் காத்துக்கொண் டிருக்கிறானென்று வதனத்தைக் காட்டாமல் அப்பக்கமாகத் திரும்பிக்கொண்டு அதிதுரிதமாய்ப் புராணிகர் வீட்டுக்குட் புகப்போகையில், துளசிதாசர் இதோ நம்மைப் பார்க்காமல் அதோ போகிற அந்தணரே அனுமாரென் றவரருகிற்சென்று பாதங்களைப் பிடித்துக்கொண்டு ஓ ஸ்வாமி! நீர் நேற்று மோசஞ்செய்து பிராமணக்கூட்டத்திற் புகுந்து மாயமாய்ப் போய்விட்டது போ லின்றைக்குப் போகிறதைப் பார்க்கிறேனென் றசையாமல் நிறுத்திவிட்டார். அதற்கஞ்சனை புதல்வன் முனிவுகொண்டு அடாமூடா! பாராயணங் கேட்கப்போகும் என்னையேன் மறித்து வருத்துகிறாய் என்னடிகளை விட்டுவிடு நானுனக்குபதேசஞ்செய்ய ஏதாவதோர் மந்திரம் இப்புராணிகரிடங் கற்றுக்கொண்டு வருகிறேனென, அரிதாசர் ஓ ஸ்வாமி! நீர் யார்? எவ்விடத்திலிருக்கிறவர் உமது பெயரென்ன பகவானறிய உண்மையைச் சொல்லுமையாவென்று வருந்திக்கேட்க, அனுமார் இதென்ன வல்லடி வழக்கா யிருக்கின்றது. நான் யாரானாலுனக்கென்ன உனக்கெனக்கு மேதாவதோர் சப்பந்த மிருந்தாலல்லவோ இப்படி கேட்கவேண்டும் நடுக்கொள்ளைக்காரன்போ லிரண்டுநாளா இவ்விடத்திலிருந்துக்கொண்டு தொந்திரவு செய்கிறாய். சீ போவென்று கடினவார்த்தைகளாட பாகவதன் உம்முடைய எதார்த்தத்தை நானறிந்துக் கொள்ளுகிற பரியந்தம் விடமாட்டேனென்று பலாத்காரஞ்செய்ய,

அனுமார் கோபித்துக் கால்களைத் திமிறிப் பிடுங்கிக்கொண்டு, மிகவும் பதைத்துத் தூரமாகக் குதித்து மனங்கொதித்து நான் புராணங் கேட்கப்போவதைத் தடுக்கிறாயா? சலத்தைத் தொடுக்கிறாயா? என் விரதத்தைக் கெடுக்கிறாயா? துன்பத்தைக் கொடுக்கிறாயா? பலவந்தமா யடுக்கிறாயா? இனி இப்படி செய்வையாயின் வாயில்வந்தபடி திட்டிவிடுவேன் பற்களைத் தட்டிவிடுவேன் தலைமேற் குட்டிவிடுவேன் துண்டாக.

வெட்டிவிடுவேன் என்றுரைத்துப் புராணிகர் வீட்டுக்குட் போய்விட்டார். துளசிதாசர் இவர் அனுமாரே யாமென நிச்சயித்துக்கொண்டு பாராயணங் கேட்டுவரும்போது தொடர்ந்து உண்மையறிந்துக் கொள்ளலாமென் றாஞ்சநேயர் வரவைப் பார்த்துக்கொண்டிருக்க, மாருதி புராண பாராயணம் முடிந்ததும் மறையோரெல்லாம் போனபின்பும் வெகுநேரமிருந்து துளசிதாச னிருக்கின்றனோ இல்லையோவென் றெட்டிப்பார்த்தார். பரம பாகவதன் வாரும் ஸ்வாமி நான் வெகுநேரமா யுமதுவரவுக் கெதிர் நோக்குற்றிருக்கிறேனென்று புராணிகர் வீட்டுக்குட் புகுந்தார். அனுமார் ஓ ஓ இவன் சூதறிந்த கள்ளனா யிருக்கின்றான் இவ்விடத்திலென்ன விபரீதஞ் செய்வானோவென வெளிப்பட்டு மாயமாய் மறைந்தார். துளசிதாசர் பலபக்கங்களிற் றேடிப்பார்த்துக் காணக்குறையால் நல்லதாகட்டும் நாளைக்கு ஓர் மார்க்கமேற் படுத்திக் கொள்ளுகிறேனென்றறைந்து தன்னிருப்பிடஞ்சேர்ந்து மறுநாளையிலங்கு வந்திருந்தார். அனுமார் நேர்வழியிற் சென்றால் துளசிதாசர் வம்புசெய்வாரென்று மாயமாய் புராணிகர் வீட்டிற் பிரவேசித்து இராமாயணத்தை அன்புடன் கேட்டுக்கொண்டிருந்தார். அரிபக்தன் வெகுநேரங் காத்திருந்தும் விருத்தப் பிராமணர் வரக்காணமையால் வியாகுலத்துடன் புராணிகர்வீட்டி லெட்டிப்பார்த்து முதுமறையோ ரிருக்கக்கண்டு ஆனந்தங்கொண்டு அவரருகிற்சென்று ஸ்வாமியெனப் புகன்று வந்தனஞ்செய்து, ஓ ஸ்வாமி! நேற்றைந்தவழியாய்ப்போனீ ரின்றெவ்வழியாக வந்தீர் கருணையுடன் சொல்லுமையாவெனப் பணிய,

அதற்கனுமார் அடடா இவனுள்ளேயும் வந்துவிட்டானேயென்று உடல்நெளிந்து முகஞ்சுளித்து கண்வெறித்து மனங்கொதித்து மிகப்பதைத்து தலையையசைத்து முழங்கையாலிடித்து துளசிதாசருக்கு முதுகைகாட்டி துளசிதாசரை பார்க்காமலும் மாறுத்தரஞ்சொல்லாமலும் கண்களை மூடிக் கொண்டு ஸ்ரீராமகாதையை சிரவணஞ் செய்துகொண்டிருந்தார். பாகவதன் அனுமார் காதருகிற்றலைசாய்த்து ஓ ஸ்வாமி! அடியேன்மீ திவ்வளவு வெறுப்பேன் அருவருப்பேன் சற்றே கண்களைத் திறந்து முனிவைத்துறந்து சொல்லலாகாதோவென மாருதி சிரவணத்துக்கு விரோதம் வருகிறதென

குரோதங்கொண்டு மௌனமாகவே யிருந்தார் துளசிதாசர் முன்போலவே பலதரங்கேட்டார். அனுமார் அடடா மூட்டாளே! பக்தியுடன் இராமாயணத்தைக் கேட்கும்போது முணமுணென் றென்னென்னமோ உளறிக்கொண் டிருக்கின்றாய் எட்டப்போ யுட்காரும் பிள்ளாயென்றார் துளசிதாசர் எளியேனெட்டப்போனால் நீர் பொட்டெனப் போய்விடுவீர். உம்மைவிட்டுப் பிரியாமல் கிட்டவே யிருப்பேனென் றுரைத்தார் ஆஞ்சநேயர் இதென்னடா சள்ளையா யிருக்கின்றது கொள்ளப் போனவிடத்திற் பிள்ளையைப் பறிகொடுத்தாற் போல இக்கள்ளனிட மகப்பட்டுக்கொண்டு வெள்ளறிவனானேமெனச் சள்ளென் றுவிழுந்து கீழேதள்ளியெழுந்து வேறிடத்திற் போயிருந்தார். அரிதாசர் தாயைப்போல் கூடவே தொடர்ந்து அவரருகில் வீற்றிருந்து ஏழையின்மீதிவ்வளவு கோபமேனையா வென்று முன்போலவே எந்தவழியாக வந்தீரெனக் கேட்கத்தொடங்கினார். இராகவதூதன் அடா இதென்ன கோரமாயிருக்கின்றது நானெந்த வழியாவது வருகிறேன் எம்மார்க்கமாயாவது போகிறேன் இதைக்குறித்து நீ யாரடா கேட்கிறவன் சிரவணத்தை மீட்கிறவன் எட்டிக்கிணையான மட்டிப்பயலே யென்றறைந்து இராமாயணங் கேட்பதில் சித்தத்தை வைத்திருந்தார்.

அரிதாசர் ஓ ஸ்வாமி! இன்றைக்காவது கருணைகூர்ந்து ஆட்கொள்ளும் நேற்றைப்போல் காற்றாய் மறைந்து போக வேண்டாமெனப் பலதரங் கெஞ்சத் தொடங்கினார். அனுமார் என்னடா முழுமூடனா யிருக்கின்றாய் வஞ்சியர்பால் கொஞ்சுவதுபோற் கெஞ்சுகிறாய் அன்புடன்கேட்டு இன்பமடையும் வேளையில் தென்புடையவனைத் துன்பங் கொடுத்துக்கொண்டிருக்கிறாய் எலும்புகள் முறிய முன்போலுதைத்துப் பின்பாவது கேட்கட்டுமா யென்றெழுந்து வேறிடத்திலுட்கார்ந்தார் அரிதாசர் கூடவேதொடர்ந்து அவரருகிலுட்கார்ந்து ஓ ஸ்வாமி நிஷ்காமி முனிவுகொள்ளவேண்டாம் நீர் அனுமாரென்பதிற் சந்தேகமேயில்லை அடியேன் பணிரெண்டாண்டாகப் பகவானைக்காணும்பொருட் டவாக்கொண்டிருக்கிறேனாதலால் அப்பராத்பரனுடைய தரிசனமெனக்கு கிடைக்கும்படியாகக் கருணைகூறல்வேண்டுமென மிகவும் பிரார்த்தித்தார், அனுமார் இதென்ன கர்மமாயிருக்கின்றது இவனுக்

கெத்தனை விதங்களா யுரைத்தபோதிலும் கேட்காமல் சளசள வளவளவென்றேயாம லென்னென்னமோ பிதற்றிக்கொண் டிருக்கிறான் ராம ராம இதற்கு நானென்ன செய்யட்டுமென வாட்டமுற்றார். அரிபக்தன் ஓ சுவாமி இப்போது தாங்கள் துதித்தசெந்த மகானுபாவரையோ அவரையே யான் காணும் பொருட்ட திக அவாக்கொண்டிருக்கிறே னவருடைய தரிசன மெனக்குக் கிடைக்கும்படியாய் செய்வீரே லும்மை என்னுயுட் பரியந்தம் மறக்கவே மாட்டேனெனச் சத்தியஞ்செய்தார் அதற்காஞ்சனேயர் அடப்பா உனக்கு வந்தனமாவது செய் கிறேன் சற்றுநேரம் பேசாமலிரு பாராயணமுடிந்தபின் கூசா மற் பலவார்த்தைகள் பேசலாமென்றார் துளசிதாசர் வந்த னஞ்செய்து ஓ மகானுபாவா சத்தியநாவா நீரே இராமா யணத்துக் காதிகாரணரா யிருந்தும் ஒருவர் சொல்லக்கேட்க வும் வேண்டுமோவென அவ்வாக்கியத்தைக்கேட்ட வாயுகுமா ரன் பிரமித்து ஓ ஓ இவன் நமது மர்மமெல்லாமறிந்த பிர்ம தேவனைப்போல் பேசுகின்றான் ஒருவேளை இச்சபையி லுள் ளோர்க்கு நாமனுமானெனத் தெரிந்தா லிவனைப்போலவே நமக்கு வேஷ்டை யுண்டாக்குவார்க ளிவனுக்கெவ்வித உபா யத்தாற் றப்பித்துக் கொள்ளலாமென்கிற யோசனைகளோடு கூடியிருந்து மறுமொழி யுரைக்காமல் புராணம் முடிந்தபின் பிராமணக்கூட்டத்திற் புகுந்து மாயமாக மறைந்தருளினார்.

உடனே அரிதாச னந்தணர்கணத்திற் புகுந்தோடி வாயி லின் மத்தியில் நின்றுக்கொண்டு ஒவ்வொருவருடைய வதன த்தை யுன்னிப்பார்த்து நீரல்ல நீரல்லவென் றுரைக்கும்போ து ஆதிவருணர் முனிவுகொண்டு தூஷண வார்த்தைகள் விண்டு இவனென்ன சுங்கக்காரனைப்போல் தடுத்து எல்லா ரையும் சோதனைசெய்து விட்டுக்கொண்டிருக்கிறான் இவன் கன்னத்திலறைந்து மென்னியைப் பிடித்துத் தள்ளிவிடுங் கள் நகங்களாற்பீறிக் கிள்ளிவிடுங்கள். ஆளுக்கோ ருதை கொடுங்கள். பஸ்பமாய்ப்போக சாபமிடுங்கள் நெருக்கிக் கட் டிக்கொண்டுபோய் சூலத்தில் நடுங்கள் என்றுரைக்கு மொழி களை அரிபக்தன் செவிகொடுத்து கேட்காமல் அனுமாரைக் காணவேண்டுமென்னு மவாவால் தீரமுள்ள வீரனாய் ஒருவ ரையன்றி இருவரைவிடாமல் அனுமாரை நாடிக் காணமல் வாடி விரைவாயோடி பல பக்கங்களிற்றேடி எல்லாருடைய

கண்களை மூடி எத்திசை போனரோடி எனப் பலவார்த்தைக ளாடித் தன்னிருப்பிடம் வந்து மிகவும் நொந்து துக்காக்கி னியால் வெந்து நாளைக்குக் கட்டிப் பிடிக்கிறே னென்று வந் து மறுநா ளந்திவேளையிற்போய் காத்துக்கொண்டிருந்தார். அப்போ தனுமார் எப்போதும்போல் புராணிகர் வீட்டுக்குள் வந்து இராமாயணத்தைக் கேட்டுக்கொண்டிருந்தார். துளசி தாச ரோர்புறத்தில் வெகுநேரங் காத்துக்கொண்டிருந்து பின்பு பாராயண சபையிற் புகுந்து விருத்த விப்பிரரைப்பார்த் துக் கரங்களைச் சேர்த்து ஓ மாயா விநோதனே! உம்மை கண்டுபிடிக்க என்னாலாகுமோ உம்மாலன்றிப் பிறரால் என் றுயர் போகுமோ கருணைகூர்ந்து இன்றைய தினமாவது ஸ்ரீராமருடைய தரிசனம் அடியேன் பெறும்படியாக செய்ய வேண்டுமென் கர்த்தனே யென்றவன் தாள்களில் வீழ்ந்து ஆட்கொளல் வேண்டுமெனத் தோத்திரஞ் செய்யத் தொடங் கினர்.

மாருதி அடா மட்டிப் பிராமணு! கொடாக் கண்டகனை விடாக் கண்டகன் பிடித்தாற்போல என்பின் தொடர்ந்தாய் ஸ்ரீராமர் வைகுந்தத்தி லிருக்கிருர் நீ யவர்மீ ததிக பக்தியு டையவனு யிருப்பது மெய்யானல் வைகுந்தத்திற்போய் பார் த்துவா இவ்விடத்தில் ஸ்ரீராம ரெங்கிருக்கிருர். உனக்குச் சயித்தியம் மேலிட்டுப் பயித்தியம் பிடித்திருக்கின்றது. இது தீர வயித்தியரிடத்திற்போ என்னருகில் வரவேண்டாம் ஒரு வார்த்தையும் பேசவேண்டாம், எதிரிலும் நிற்கவேண்டாம் போபோவென் றுரைக்க துளசிதாசர் ஓ என் சத்குரு நாதனே மெய்ஞ்ஞான போதனே! உமது கருணையினல் வைகுந்தத் திற்குப்போய் ஸ்ரீ மகா விஷ்ணுவையும் பார்த்து வருவேன் இதுவோர் பெரியகாரியமா வைகுந்தம் கைலாயம் திஷத்திரி இயமகிரி முதலானதுகளைத் தாண்டிப்போய்ப் பூமியிலாயிர மியோசனை தூரம் பதிந்தும் விண்ணில் ஆயிரமியோசனை தூர முயர்ந்தும் மிகவும் விசாலம் பொருந்தியுமிருக்கும் சஞ் சீவி பர்வதத்தை ஓர் கரத்தில் தாங்கிக்கொண்டு ஓர்கணத்தில் வந்து இராம லட்சுமணுதியரைக்காத்த வீராதிவீரன் நீ யல் லவா? இப்பேர்க்கொத்த அதிசூரனுகிய உம்மை யடைக்கலம் புகுந்த எனக்கோர் முறையு முள்ளதோ வென்று தும்தும் யெனக்குதித்துக் கூத்தாடினர், பல சங்கீர்த்தனங்களை பாடி.

ஞர், அப்போ தஞ்சனை குமாரன் அடடா என் துள்ளிக்குதிக்கிருய் வேண்டாம் வேண்டாம் நீ கற்ற சஷ்ட கல்வியையும் புஷ்டி பலத்தையும் துஷ்ட குணத்தையும் பிரஷ்டத்தனத்தையும் என்னிடந்தானு காட்டவந்தாய் ஜம்பத்தை நீட்ட வந்தாய் போதும் போதும் இனி இவ்விடத்திலிருந் தெழுந்துச் சட்டமாய் வெளியிற்போய் உன்னைப்போன்றவர்களிட முன் சிரேஷ்டத்தைக் காட்டென்று கடுகடுத்துரைக்க துளசிதாசர் ஓ மாதவனே! இனி உம்மை விட்டென் னுயிருடன் பிரிவேனே நீர் மிகவும் பூததயாளமுடையவரா யிருந்தும் வெகுநாளா யலைந்து திரியும் என்னை வெறுக்கலாமா அருளான மனதைச் சுருக்கலாமா அடத்தைப் பெருக்கலாமா எளியேன் செய்த அபசாரத்தை உபசாரமாகக்கொண்டு எவ்விதமேனு மின்று பகவானைக் காண்பித்தருளல்வேண்டு மென்னையனே! அழிவிலா மெய்யனே! மிகவுந் துய்யனே! அஞ்சனுதேவி புத்திரனே! நல்லோர் மேலதிக மித்திரனே! வலிமையில் வீரபத்திரனே! சகல சங்கைகளை நீக்குமுத்தமனே எனப் பற்பலவிதங்களாகத் தோத்திரஞ்செய்யத் தொடங்கினுர். அதற்கிராகவதூதன் ஏதேது பக்தி மிஞ்சிப்போய்விட்டது யாருரைக்கினுந் தடைபடாது போ லிருக்கிறதே இருக்கவிருக்க விண்ணுன வார்த்தைகள் புறப்படுகின்றதே இந்தமட்டும் வஞ்சியைப்போற் கொஞ்சிக் கொஞ்சிக் கெஞ்சினது போதும் போதுமெனப் புகன்று புராணிகர் சமீபத்தில் வெகு நெருக்கமான விடத்திற்போய் வீற்றிருந்தார்.

அரிபக்தன் ஓ ஓ இவர் நேற்றைப் போலவே மோசஞ்செய்து காற்ருய் பறந்தோடிப்போக யோசித்திருக்கிரு போற்ருேன்றுகின்றதென்று கூடவேசென்று அவரருகில் நின்று அன்பாய் மொழிகளைப் புகன்று நம்பிக்கையில்லாக் காரணத்தால் தன தங்கவஸ்திரத்தாலவ ரிடதுகையைக் கட்டத்தொடங்கினுர். அதற்கனுமார் ஓ ஓ மோசம் வந்தது, இதென்ன நாராயணனைப் பாராயணஞ் செய்யுங் காலத்தில் திருடனைக் கட்டுவதுபோ லென்னை யிம்முரடன் கட்டவந்தான் யாருக்கு மிவ்வளவு துணிவிருக்கலாகாது நானிஷ்டமாய் கேட்பதை நஷ்டப்படுத்தவந்த கனிஷ்டனே இதுபரியந்தம் முஷ்டியாற் சாகாமற் றப்பியிருப்பதுன் நல்லதிஷ்டமே இனியா

கிலுமென் கிட்டவராமல் எட்டப்போடாவெனப் படபடென தலைமேற்குட்டி வாயில்வந்தபடி திட்டி மென்னியைப் பிடித்து நெட்டி கீழேவிழும்படி எட்டி யுதைத்தார். அரிதாசர் பக்கத்திலிருந்த வேதியர்மேல் விழுந்து உடனே யெழுந்து உடல் பூரித்து மயிர்க்குச்செறிந்து அஞ்சலியஸ்தனாய் நின்றுக்கொண்டு ஆ ஆ இனி கிருதார்த்தனானேனென் றெழுந்தெழுந்து கூத்தாடி விஷ்ணு சங்கீர்த்தனங்களைப் பாடி, அங்கு மிங்குமாயோடி, அனுமாரைக்கொண்டாடி, இனி யும்மை விடமாட்டேனென நாடிப் பின்னுமவர் கரத்தைச் சிரத்தையுடன் கட்டத் தொடங்கினார். அப்போ தருகுற்ற தொழுகுலத்தோர் துளசிதாசரைநோக்கி என்னடா விருத்த பிராமணனோடு போராடுகிறாய், வாயில் வந்தபடி பாடுகிறாய், அங்கு மிங்குமா யோடுகிறாய், வேசியைப்போற் கூத்தாடுகிறாய், சீ நாயேபேயே நாளையோடு இச்சபைக்குள் வரவேண்டாமென் றதட்டத் தொடங்கினார்கள். அதற்குத் துளசிதாசர் மாறுத்தாஞ் சொல்லாமல் அனுமார் கையைத் தன் வஸ்திரத்தாலிறுக்கிக் கட்டிக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு ஓ ஸ்வாமி! நீரினி யோடிப்போவதைப் பார்க்கிறேனெனச் சந்தோஷமேலீட்டாற் சிரித்தார், ஆஞ்சனேயர் ஓ ஓ இவன் சூதறிந்த கள்ளனா யிருக்கின்றான் நம்முடைய சூதை யாரோ இவனுக் குரைத்ததுபோற் காண்கிறதினி நம்மை யிவன் விடப்போறதில்லை சகாதேவனிடமு மரவானிடமு மகப்பட்டுக்கொண்ட ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவைப்போல நாமிவனிட மகப்பட்டுக்கொண்டோ மினிச் சாந்தமாகவே யிருந்து தப்பித்துக் கொள்ளவேண்டுமென் றெண்ணித் துளசிதாசரை நோக்கி ஓ பிராமணோத்தமா! பாராயண காலத்திற்பேசினாற் ரோஷம்வரும் சீதாராமென்று தியானஞ்செய்துக்கொண்டு சந்தடிசெய்யாமலிரு புராணம்முடியும்பரியந்தம் பொறு பகவத் பாராயணமே சகல பாக்யமுந்தரும் கற்பகத்தரு சகலருக்கும் ஸ்ரீமந் நாராயணரே பரமகுருவென் றுரைத்துச் சிரவணத்தில் சித்தத்தைப் பக்தியுடன் வைத்திருந்தார்.

அரிதாசர் ஓ சுவாமி! ஸ்ரீமந் நாராயணரை நீர்போகும் போது எனக்குத் தரிசனந் தரும்படியாக செய்கிறீராவென்று வணங்க வாயுகுமாரன் இப்போதொன்றும்பேசாதே எல்லாம் புராண முடிந்தபின் பார்த்துக்கொள்ளலாமெனப் பரமபாக

வதன் போகும்போது பார்த்துக்கொள்வோமென்பது சந்தேக வார்த்தையல்லவா நிச்சயமாய்ப் புராண முடிந்தபின் ஸ்ரீபரமாத்மாவைக் காட்டுகிறேனெனச் சத்தியஞ் செய்தாலொழிய எனக்குத் திருப்தியாகாது ஆதலால் ஸ்ரீமந்நாராயணர்மேலாணையிடுமையாவெனப் பலாத்காரஞ்செய்ய அதற் கிராகவதாதன் இது நல்ல அகட விகட சாமார்த்தியந்தான் கூடிய மட்டு மிவன் கெட்டிக்காரன்தான் இருக்க விருக்க ஆயாசத்தையே கொடுத்துக்கொண்டு வருகின்றான் இனி யிவனிடம் பேசாமலிருப்பதே உத்தமமென்றோர் மொழியுமாடாமலிருந்தார் துளசிதாசன் ஓ சீதாபிராட்டியின் சோகநாசனே! இப்படி பேசாமற் பாசாங்குசெய்துதானே என்னை மோசஞ்செய்துக்கொண்டே வந்தீர் உம்முடைய வேஷத்தை நானறிந்துகொண்டேனினி துவேஷமில்லாமல் ருஷிகேசனைக் காண்பித்தே நீர் போகவேண்டுமென்று மற்றொரு கரத்தையுங் கட்டத் தொடங்கினார். அஞ்சனேயர் அதிகோபத்துடன் துளசிதாசர் முகத்திற் காறியுமிழ்ந்து அடா எமகாதகா, பஞ்சமாபாதகா, உன்னைப்போற் சீயுஞ் சுரணையுமில்லா மட்டிச் சென்மத்தை நான் பார்த்ததே யில்லையென வைது அந்தணர்களை நோக்கி ஓ இராமாயணத்தை யத்தியந்த பக்தியுடன் கேட்கும் பூசுரரே! இந்த முரடன் இரண்டுமூன்று நாளாய் இவ்விடத்திற் பலாத்காரமாக வந்து என்னை இராமாயணத்தைக் கேட்கவிடாமற் றொந்திரவு செய்கிறானிவனை யாருந் தண்டிக்கிறவர்க ளில்லையா? கண்டிக்கிறவர்க ளில்லையா? இவனுக்கென்னையன்றி யாருமகப்படவில்லையா? நான் செய்துக்கொண்ட தொல்லையாவெனக் கூக்குரலிடத் தொடங்கினார்.

அப்போதருகிலிருந்த மறையோர் துளசிதாசரைப் பார்த்து கரத்தைப்பிடித் தீர்த்து நீ இரண்டு மூன்று நாளாகவிருந்த மறையோனை அலங்கோலஞ் செய்வதன்றிச் சிரவணத்தைப் பங்கப் படுத்திக்கொண்டு வருகின்றாய் உன்னை இவ்விடத்தில் மரியாதையுட னழைத்துக்கொண்டு வந்தவனையும் உன்னையும் இப்போதே வெளியிற்றள்ளி விடுகிறோமெனப் புகல, அப்போது புராணிகர் ஆம் ஆம் இந்தப் பிராமணன் வெகு இடக்கனாகவே யிருக்கின்றா னாதலா லிவனுடைய கொர்வத்தை நீங்களனைவோருங் கூடி யடக்கி வெளியிற் றள்ளி விடுவதே நன்மையென் றறையச் சபையிலுள்ள யாவரும்

என்ன சந்தடியென்று இருவரையும் வெயிளிற்றள்ள ஆரம்பித்தார்கள் அப்போ தனுமார் ஓ பிராமணோத்தமர்களே! விருத்தாப்பியமுள்ள என்னை இந்தத் துஷ்டனிடத்திற் காட்டிக் கொடுப்பதுங்களுக் கழகோ வென்றம்மறையோர் கூட்டத்தில் நுழைந்து அங்கு மிங்கு மோடத் தொடங்கினார், துளசிதாசர் ஆஞ்சனேயர் கைகளிற் கட்டியிருக்கும் வஸ்திரத்தை விடாம லுறுதியாய்ப் பிடித்துக்கொண்டு கூடவேவோடத்தொடங்கினார். அனுமார் துளசிதாசரைச் சோதிக்கவேண்டி அதிக வேகத்துடன் அந்தணர்களைக் கீழே தள்ளிக்கொண்டே பல பக்கங்களி லோடும்போது துளசிதாசருக்கு வீட்டின் சுவரும் ஸ்தம்பங்களும் பூசுரர் மஸ்தங்களுமிடிபட்டு உரத்திலும் சிரத்திலு மிரத்தம் புறப்பட்டு தட்டுகெட்டு தடுமாறிகொண்டே வஸ்திரத்தை விடாமல் கூடவேதொடர்ந்தார். அனுமார் புராணிகர்வீட்டில் வோவென்னுங் கூக்குரலுண்டாக்கிவெளிப்பட்டு வாயுவேகத்தை பார்க்கிலு மதிவேகமாயோடும்போது அரிதாசரவருடன் வோடுவதற்குக் கூடாமல் வஸ்திரத்தை விடாமல் கீழே வீழ்ந்து தரையில் தேகமெல்லா முராய்ந்து தேய்ந்து வோய்ந்து சாய்ந்து ஸ்மரணைகெட்டு ஒரு பக்கத்தில் மூர்ச்சையாய் வீழ்ந்துவிட்டார். உடனே மாருதி மாயமாய் மறைந்து துளசிதாச ரடைந்த ஆயாசத்துக் கயர்ந்து, வைராக்கியத்தைக் குறித்து வியந்து இனி தரிசனந்தரல் வேண்டுமென நயந்து ஒரு பக்கத்தில் நின்றிருந்தார். பின்பு துளசிதாசர் நெடுநேரம் மூர்ச்சை யடைந்திருந்து அனுமாரைக் காணவேண்டுமென்னு மவாவாற்றெளிந்து ஆஞ்சநேயரைக்காணாமல் நொந்து சோகம் மிகுந்து இனி இத்தேகத்தை வைத்திருப்பதிலும் மரணமாவதே உத்தமமெனத் துணிந்து, தரையிற் றலையை மோதிக்கொள்ளப் போனார். உடனே கருணைநிதியாகிய மாருதி தனதிரு அஸ்தங்களால் துளசிதாசருடைய மஸ்தகத்தைத் தாங்கிக்கொண்டு அப்பா ஒப்பிலாபக்தனே! என்னைக் காணும்படியான யுக்தனே! எனக்குள்ள வழக்கமான முரட்டுத்தனத்தை காண்பித்துனக் கதிக துக்கத்தைக்கொடுத்தேன் இதைக் குறித்தென்மேல் முனிவுகொள்ளாமல் க்ஷமிப்பாயென்றன்பான உரையாடினார். அப்போது துளசிதாசருக்குற்ற ஆயாசங்களெல்லாம் நீங்கி ஆனந்தமோங்கி திக்கென்றெழுந்து சேவடியில்

விழுந்து ஓ மாதவனே! கொடியேனுகிய வடியேனுக் கும் முடைய தரிசனந் தந்தீரோ? ஆட்கொள்ளவு முவந்தீரோ? ஆ ஆ உம்மையின்று தரிசனஞ்செய்ய என்னபாக்கியஞ்செய் தேனே? எத்தவஞ் செய்தேனே எவ்வளவு யோக்கியனுனேன் எவ்வளவுசிலாக்கியனுனேன் என்கிற பற்பலவுரைகள் பகரும் போது அனுமாரதிக சந்தோஷ சித்தராய்த் துளசிதாசரை மார்புடனணைத்துக்கொண்டு, ஐயா துளசிதாசனே! முகவிலா சனே! என்னுலாகவேண்டிய காரியமென்னவோ தெரியச் சொல்லுமென அரிதாசர் ஓ என்னுண்டவனே! ஸ்ரீ ராமரு டைய தரிசனமே யெனக்கு வேண்டியதென, அஞ்சனை தன யன் நீர் நெடுநாளாகத் தபஞ்செய்தும் பிரசன்னமாகாப் பக வான் நான் சொல்லுவதாற் றரிசனந் தருவாராவெனப் பரம பாகவதன் பகவான் தரிசனம் பார்க்காப் பாவியேனுடைய ஆவியிருந்ததாற் பிரயோசனமேதென வாயு குமாரன் பகவா னனேக வவதாரங்களெடுத்தாலும் அரூபமா யிருக்கிறவரா யிற்றே, நிரூபமாயிருக்கிற பரமாத்மாவை எப்படி தரிசிக்கக் கூடுமென அரிபக்தர் பகவான் பக்தன் நினைத்த வண்ண மான ரூபத்துடன் தரிசனந் தருபவராதலால் தேவரீருபதே சித்த ஸ்ரீராமர் சீதா சமேதனுய்க் கருடவாகன ரூடனுய்ப்பரத சத்துருக்கருடன் வந்து காட்சி கொடுத்தாலொழிய என்தாட் சி நீங்காதென அனுமார் திரேதாயுகத்திலெடுத்த அவதாரத் தை இக்கலியுகத்திலெப்படி காணக்கூடுமென அரிதாசர் பிரக லாதனனுக்காய் நரசிங்கரூபமுடன் ஓர் தூணிலிருந்துவெளி ப்பட்ட பகவான் ஸ்ரீராமாவதாரத்துடன் வருவது துர்லய மோ? அன்றி, மச்ச, கச்ச, வராக, வாமனமாகவும், மோகினி யாகவும், மூலபல நாசத்துக்காக அனேக ராமராகவும், நார தரைப் பங்கஞ்செய்ய பல கிருஷ்ணராகவும், இன்னமனேக வடிவங்களாகவும் அவதாரஞ்செய்த மாயாவிலாசன் அடி யேன் கோரிய ரூபத்துடன் வருவதற்கோர் தடையுண்டோ? சீக்கிரம் பகவானை வரவழையுமையாவென அனுமார் நினை த்த மாத்திரத்தில் கபட நாடகனுகிய பகவான் பிரசன்னமாக லேசானவரோவெனத் துளசிதாசர் இக்கணம் அந்தப்பராத் பரனுடைய தரிசனங் கிடைக்காவிடின் என்னுயிர் தரியாது. உமக்கிது தெரியாதோவென ஆஞ்சனேயர் துளசிதாசருடை ய தீவிரத்துக்கு மெச்சி ஓ புண்ணியவானே! நாளையத்தினம்

நீரிருக்கும் தெருவில் பகவானை வரும்படியாகச் செய்கிறேன். ஸ்ரீராமரைத் தரிசனஞ்செய்து ஆனந்தமடையலா மென்ற றைந்து மறைந்து தன்னிருப்பிடஞ் சேர்ந்தார். கேட்டீர்க ளோ சித்தர்களேயென்று நாபாஜிசித்தர் பின்னுஞ்சொல்லத் தொடங்கினர்.

அனுமார் தரிசன அத்தியாயம்
முற்றிற்று.

எட்டாவது அத்தியாயம்

துளசிதாசருக்கு ஸ்ரீராமர் தரிசனம்.

கேளுங்கள் சித்தர்களே! பிர்ம பட்டத்துக் கெதிர் நோக்கிக் கொண்டிருக்கும் ஆஞ்சனேயர் மறைந்தபின் துளசிதாசர் ஆனந்தவாரியில் மூழ்கினவராய்த் தன்னிருப்பிடஞ் சேர்ந்து எப்போது சூரியோதயமாகும் பகவானெப்போது பிரசன்ன மாவார் யாருக்கிணையென மதிப்பேன் பகவானைப்பார்க்க மூற் பிறப்பி லென்ன தவஞ் செய்தேன் எப்புண்ணியஞ் செய்தேன் உண்மையாய் நமக்குப் பராத்பரனுடைய தரிசனங் கிடைக் குமா கருணையுடன் கடவுள் நம்முன் பிரசன்னமாவாரா நாட் டைவிட்டுக் காட்டிற்சென்று தரிபோ லனேகவருஷம் தபஞ் செய்யும் தபோதனர்களுக்குந் தரிசனந்தராப் பகவான் யா தொரு நற்கிரியையுஞ் செய்யாக் கொடியோனுகிய வடியேன் முன் வருவரா ஆண்டவனைக் காணும்படியாகச்செய்யும் ஆஞ் சனேயர்க் கென்ன கைம்மாறு செய்வேன். அனுமாரை யறி வித்த பூதத்துக் கென்னவுபகாரஞ் செய்யப்போகிறேன் அனு மாருரைத்துப்போன வாக்கியம் மெய்யாக விருக்குமா? மிக வும் உத்தமராகிய ஆஞ்சனேயர் பொய்சொல்வாரா பிரமருத் திராதியருங் காணுதற்கரிய ஸ்ரீமந்நாராயணர் அனுமாருரைக் குடன்படுவாரா என்கிற பற்பல வார்த்தைகளாடிக்கொண்டே இரவெல்லாம் நித்திரை செய்யாமல் தெருவில் வந்து பார்த் தனும் வீட்டினுட் புகுவதுமாயிருந்தார்.

இவரிப்படியிருக்கச் சூரியோதய மானவுடன் அனுமார் வைகுந்தத்திற் கெழுந்தருளி விரஜா நதியில் ஸ்நானஞ்

செய்து ஜபதபங்களை முடித்துக்கொண்டு ஸ்ரீமந்நாராயணரு டைய பக்கலடைந்து வலம்வந்து பணிந்து திவ்விய பாதாம் புயங்களிற் றனதிருநயனங்களை யணிந்து ஓ ஸ்வாமி! உமக் கத்யந்த பக்தராகிய வால்மீகாவதாரமான துளசிதாசர் கோரி ய ஸ்ரீ ராமாவாதாரத்துடன் இன்றையதினம் பிரசன்னமா யவரை ரட்சிக்காமற்போனால் உமதுபக்த னுயிர்தரியானிது நிச்சயம். உமக்கில்லா அக்கரை எனக்கேனோவென்று பல பல விதங்களாகத் தோத்திரஞ்செய்யத் தொடங்கினார். அத ற்கு ஸ்ரீமந்நாராயணர் புன்னகைகாட்டி ஓ ஆஞ்சனேயா! பக்தன் பதைக்க எட்டி யுதைக்க உனக்கு மனமும் வந்ததோ வெகுநாளாகத் தவஞ்செய்தும் உனக்குள்ள மூராட்டுக்குணம் இன்னம் நீங்காமலிருக்கின்றதே யென்கிற பல பரியாசவார்த் தைகளாட அனுமார் வெட்கி, ஓ ஸ்வாமி! அடியேன்செய்த குற்றத்தைப்பொறுத்து மகானுபாவராகிய துளசிதாசருக்கு உம்முடைய திவ்விய தரிசனந்தரச் சீக்கிரம் வாருமென்னை யனே யென்று வணங்க, பகவான் பின்னும் நகைத்து இலட் சுமியை நோக்கி, ஓ மாதரசே! இந்த அனுமார் யாதொரு குற்றமுஞ் செய்யாத துளசிதாசரை யுதைத்த காரண முனக் குத்தெரியுமா? அதென்னவென்றால் துளசிதாசர் முற்பிறப் பில் வால்மீக ராமாயணத்தை இருபத்துநான்காயிரம் சுலோ கத்தில் முடித்திருந்தார். அதை இந்த அனுமாரிரட்டித் துப்பாடி வால்மீக ராமாயணத்தை யாரும் பார்க்காமற் செய் தாரதையறிந்த வால்மீகரென்னிடம் முறையிட்டார் நானே இந்த அனுமாரை யழைத்து நீர்பாடிய ராமாயணத்திற் சுந் தர காண்டத்தை வோதுங் கேட்போமென்றேன் இவர் தன் னைத்தானே புகழ்ந்துக்கொண்டேவந்தார். அதற்கு நான் நகைத்தேன். இவர் ஏன் ஸ்வாமி நகைக்கின்றீரென்று பல தரங்கேட்டார் நானும்மை நீரே புகழ்ந்துக்கொள்வது நியா யமோவென்று கேட்டேன் அதற்கிவர் நாணமுற்று இவர் பாடிய ராமாயணத்தைச் சமுத்திரத்தி லெறிந்துவிட் டிவ் வால்மீகனோர்காலத்தி லெனக்கு மாணாக்கனாக வேண்டுமென வுன்னினார். அப்படியே இப்போது நேரிடத் துளசிதாசரை பலவிதங்களாகச் சோதித்து மிகவும் போதித்து தன்கோபம் நீங்க உதைத்துத் தன் பகையை தீர்த்துக்கொண்டார். இது ஞாயமாவென்று குலுங்கக் கலகலவென நகைத்தருளினார்.

கூடவே இலட்சுமி கலீரென்று நகைத்தாளப்போது சபையிலுள்ள தேவரிஷிகள் யாவரும் பெருநகை புரிந்தார்கள். அதற்கனுமார் மிகவும் லச்சையடைந்து பகவானைபணிந்து ஓ என்னுண்டவனே தேவரீரே என்னை பரியாசஞ்செய்து மந்தகாசஞ் செய்தால் மற்றியார்தா மேளிதஞ் செய்யமாட்டார்கள் ஆயினுங் குற்றமில்லை தேவரீர் இத்தினம் துளசிதாசர் முன் பிரசன்னமாய் ரட்சித்தருளல் வேண்டுமெனத் தொழுதார். பரந்தாமன் எனக்கில்லா அக்கரை உமக்கேன் நீரும்மிடத்திற்போம் எனக்கிஷ்டமானபோ தென்பக்தனுக்குத் தரிசனந் தருகிறேனென, அனுமார் அடியே னின்றைக்குனக்குப் பகவான் தரிசனந்தருவாரெனத் துளசிதாசரிடத்திற் சொல்லிவிட்டே னுதலால் என் வசனம் பொய்யாகாமலகத்யமின்று தரிசனந் தரல்வேண்டும் ஸ்வாமீ யென்று பணிய, பகவான் என்னபிப்பிராயந் தெரிந்துக்கொள்ளாமல் நீரெப்படி வாக்குத்தத்தஞ் செய்தீரெனத் திருவாய்மலர்ந்தருளிப் பின்னுஞ்சொல்லுவார். ஓ அஞ்சனை தனையா! அந்தத் துளசிதாசன் மிகவும் காமக்குண முடையவனன்றிக் கொடிய செய்கையுள்ளவன் ஆதலாலின்னம் பனிரெண்டாண்டு தவஞ்செய்தாலொழிய என்னுடைய தரிசனந் தாமாட்டேன் போபோவென்றுரைக்க,

அதுகேட்ட இலட்சுமி அனுமாரை நோக்கி, ஓ என்னரும்புதல்வனே! சிரஞ்சீவிகளின் முதல்வனே! உன்னெண்ணப்படியே இன்று பரமபக்தனுகிய துளசிதாசனுக் கெங்கள் தரிசனந் தருகிறோம். இனி யுன்னிருப்பிடத்துக்குப் போவென்றறைய, அனுமார் பகவானுக்கும் பார்க்கவிக்கும் வந்தனம்புரிந்து தன்னிருப்பிடஞ் சேர்ந்தார். பின்பு பகவானை இலக்குமி நோக்கி, ஓ ஸ்வாமி, பனிரெண்டாண்டாய் நம்மை நோக்கித் தவஞ்செய்யும் துளசிதாசர்முன் இன்று அகத்தியம் பிரசன்னமாக வேண்டுமென வணங்கிச் சீதையுருவெடுத்து நின்றுர் அப்போது பக்தவச்சலனுகிய பகவான் கபட கியாபகத்தோடு ஸ்ரீராம லட்சுமண பரத சத்துருக்கரின் வடிவெடுத்துக் கருடனை விளித்து அதன்மே லூர்ந்துக் கொண்டு துளசிதாசரிருக்கும் வீதியில் யாருக்கும் புலப்படாமல் வந்தார். இதற்குமுன்பே பகவானைத் தரிசிக்க அவாக் கொண்டு வீதியில் வந்து நிற்குந் துளசிதாசர் இன்றைக்ககத்

தியம் பகவானுடைய தரிசனங்கிடைக்கும் அந்தப் பராத்பர னுடைய அழகு சுந்தரமும் கோதண்ட அஸ்தமும் பச்சை மேனியும் கமலக்கண்களும் கமலபாதமும் பார்க்கும்படியான பாக்கியமேதோ வென்று ஸ்ரீராமாவதாரத்தை வர்ணிக்கத் தொடங்கினர். எப்படியென்றால், ஓ தேவர்க்கு முதல்வா! தசரதன் புதல்வா, கோதண்டகையா, கோதிலா மெய்யா, வசிஷ்ட விசுவாசா! விசுவாமித்திர நேசா, தாடகையை யழித்தவா! அகலிகையை யளித்தவா, ஜனகர் கண்ணுளா! சீதை மணவாளா! பரசுராமபங்கா! பசியமாவங்கா! தந்தைமொழிக் குகந்தவா, தாயுரைக்கு மகிழ்ந்தவா, மகுடம்புனைய மறுத்தவா, மாவுரிதரிக்கப் பொறுத்தவா, கோசலையுருக நைந்தவா, காந்தையுருக நொந்தவா, லட்சுமணனோடு நடந்தவா, நல்ல வயோத்தியைக் கடந்தவா, நடந்தறியாத நாரணா, நற்குகன் போற்றும் பூரணா, விதிதுணையென்று விண்டவா, நதிகடந் தின்பங்கொண்டவா, பாதம்பணியுமுன்னவா, பட்டணம் போவெனச் சொன்னவா, அத்திரிபோற்ற மகிழ்ந்தவா, அகஸ்தியர் தம்மைப் புகழ்ந்தவா, காக்கையின் கண்ணைக் கழித்தவா, கவந்தனுயிரை யழித்தவா, கன்னியிச்சிக்க பழித்தவா, கரதூஷணர்தமை யொழித்தவா, மாரீசனைக் கொன்றவா, வஞ்சிக்கா யயர்ந்துநின்றவா, சடாயுவைக்கண்டு மூச்செறிந்தவா, சடாயுவாற் சகலமுமறிந்தவா, சவரியினெச்சிலைத்தின்றவா, சந்தோஷமொழிகளைப் புகன்றவா, அனுமான்மேற் களிகூர்ந்தவா, ருஷ்யமூகந்தையிற் சேர்ந்தவா, மரங்களே ழையுந் துளைத்தவா, வாலிவீழ்ந்தேத்த இளைத்தவா, அனுமான்றனக் குறைவிரித்தவா, அவனுவிலங்கையை யெரித்தவா, விபீஷணன்றனக்கருள் செய்தவா, மேலாமருண்மழை பெய்தவா, அசுரர்மேலம்புகளெய்தவா, அவுணர் கரங்களைக் கொய்தவா, கும்பகர்னனைக் கொன்றவா, கொடிய மாபலங்களை வென்றவா, அரிவையைக் கண்டவா, ஆனந்தங்கொண்டவா அயோத்தியையாண்டவா, அறநோன்பு பூண்டவாவென்று ஸ்ரீராமாவதாரத்தை வர்ணித்துக்கொண்டே வீதியில் வருகிறவர் போகிறவர்களாகிய யாரையும் பார்க்காமல் பகவானுடைய வரவையே நோக்கிக்கொண்டு புளகாங்கத்துடன் அஞ்சலியஸ்தராய் ஜெயராம் சீதாராம் ஜேஜோம் எனத் தியானஞ் செய்துக்கொண்டே யிருந்தார்.

அப்போது பகவான் துளசிதாசருடைய பக்திக்கிரக்க மூற்றும் அவரைச் சோதிக்கவேண்டி அவராருகில் வரும் போது ஸ்ரீராமரூபத்தைமறைத்து தோணற்பாகையும் நீண்ட தாடியும் கற்களின் தாவடங்களுமுள்ள துலுக்கரூபமானரு டனே பரதசத்துருக்க லட்சுமணரு மப்படியேயாய்விட்டார் கள். கருடனே அசுவமாய்விட்டது இலட்சுமியோ ஸ்ரீரா மாவதாரத்தை வர்ணித்துக்கொண்டே நிற்கும் துளசிதாச னுக்கிரக்க மூற்றுப் பரமபாகவதனுக் கென்னவர மளிக்கலா மென்கிற யோசனையோடுங் கூடியிருந்தார். இப்படி சற்று நேரம் துளசிதாசன்முன் பகவான் நின்று இலட்சுமியை நோக்கி, ஓ மாதரசே! இந்தத்துளசிதாசனுடைய மடமை யையறிந்துகொண்டாயா என்னைப் பார்க்காவிட்டாலும் உன் னைப்பார்க்கவாவ தருகில் வாரமற்போன னினி யிவன்முன் நிற்கவே கூடாதென்றுரைத்து அந்தர்த்தானமானர். துளசி தாசர் தன்முன்வந்து நின்றவர்கள் யாரோ துலுக்கரெனத் தீர்மானித்துப் பராமுகமா யிருந்து பகவான் மாயை யறியா மல் பகவான் வருவார் வருவாரென் ஞெருசாமம் ராத்திரி மட்டுங் காத்திருந்து ஓ ஓ அனுமார் வாக்கியப்படி ஸ்ரீமந் நாராயணன் வாரமலிருக்குங் காரண மேதோவென்று சரே லெனப் பாராயணச் சபையைமேவி அனுமாராகிய விருத்தப் பிராமணருடைய பாதங்களில் வீழ்ந்து பலதரந் தாழ்ந்து முறையோவென் றோலமிட் டழத்தொடங்கினர். அவ்வழு குரலோசையைக்கேட்ட சகலரும் அச்சமூற்றவர்களா யீது வென்ன விபரீதமென்று பாராயணத்தைவிட்டு விருத்தப் பிராமணரை நோக்கி இதுவென்ன கூக்குரலென் றோசையா ய்ப் பேசத் தொடங்கினர்கள்.

துளசிதாசருடைய மகிமையைப் பலருக்கும் புலப்படக் காட்ட வெண்ணங்கொண்ட அனுமார் அப்பா துளசிதாசா பகவானை இன்று தரிசனஞ் செய்யவில்லையாவெனத் துளசி தாசர் காலையிலிருந்து மலைபரியந்தங் காத்திருந்துங் கர்த்தன் வரவில்லையென வலக்கணுற அனுமார் ஓ ஓ மோசம் போ னையே அசுவத்தின் மீதிலூர்ந்து சீதாசமேதராகத் துலுக்க வேஷமாய் வந்து உன்முன் சற்றுநின்று மறைந்தவர் பக வானல்லவோவென அரிதாசர் ஓ ஸ்வாமி! எனக்கெப்படி தெரியும் சுயரூபத்துடன் தரிசனந்தரப் பரந்தாமனுக்குப் பய

மோ இப்படி மாறுவேஷமாய்வந்து மோசஞ்செய்துப் போகலாமோ பகவான் என்னெதிரில் வந்தும் தரிசனந் தந்தும் பார்க்காத பாவியானேனே? மோசம் போனேனே? ஓ தெய்வமே! இதற்கு நானென்ன செய்யட்டுமென் றோலமிட்டழத் தொடங்கினர். அப்போ தனுமார் ஓ தொண்டராகிய துளசிதாசரே! நாளையத்தினம் உமது மனையாள் கட்டிய மடத்துக்கு நானே பகவானை யழைத்துக்கொண்டு வருகிறேன் பயப்படவேண்டாமென்றறைய, அரிபக்தர் ஈதுண்மையான வார்த்தையாவென வணங்க ஆஞ்சநேயர் ஓ அரிதாசரே! உம்மைப்போன்றபக்த ரிவ்வுலகி லியாருமில்லை நாளைக்ககத்தியம் பகவானுடைய தரிசனம் கிடைக்கும். இது சத்தியமென்றறைந்து சகலருக்குந் தன் சுயரூபத்தைக்காட்டி மாயமாக மறைந்தருளினர். அவ்வாச்சரிய வசனங்களைக்கேட்ட, சகலரும் துளசிதாசருடைய திருவடிகளிற் சிரசாஷ்டாங்கமாகப் பணிந்து தங்களுடைய நயனங்களை யணிந்து நீர் மிகவுந் தன்யர் சொல்வதற்கரிய கண்யர் எனப் பற்பல விதங்களாகத் தோத்திரஞ் செய்துக்கொண்டே மமதாதேவியின் மடத்திற் பிரவேசித்து அனுமாறறைந்துபோன அற்புதவசனத்தை மமதாதேவிக்கும் காசியிலுள்ள இராஜன் முதலானவர்களுக்குந் தெரிவித்தார்கள்.

அதுகேட்ட இராஜன் முதலானவர்களும் மமதாதேவி மடத்தில் பகவான் வந்து துளசிதாசருக்கு தரிசனந்தருகிறாம் நமக்கும் பகவானுடைய தரிசனங் கிடைக்குமென்று காசிபட்டண முழுதும் அலங்கரித்து வாழைகள் நட்டு மலர்ப்பந்தல்போட்டு வீதிகளிற் றோரணங்கள்கட்டி சூரியோதயமானவுடன் துளசிதாசரையும் மமதாதேவியையும் தண்டிகையின்மேலேற்றிக் கங்கையிற்கொண்டுபோய் ஸ்நானம்செய்வித்து நல்ல வஸ்திராபரணங்க ளணிந்து சுகந்த பரிமளாதிகளைப் பூசி யானையின்மேலேற்றி ஊர்கோலம் செய்வித்து இவரே நாராயணர் இவரே வேதபாராயணர் இவளே சிதேவி இவளே பூதேவியெனத் தோத்திரம்செய்து மேளதாளங்கள் தாம்தாமெனமுழங்கவும், தேவதாசி நாட்டியமாடவும் சோபனம்பாடவு மங்களார்த்திகளெடுக்கவும், கைலாகு கொடுக்கவும் தூபதீபங்களைக் காட்டவும், வீணை முதலானவைகளை மீட்டவும் வேதியர் வேதகோஷ்டங்க ளோதவும், மடத்துள் பிர

வேசித்து பீடங்களிலிருத்தி பற்பல விதங்களாக தோத்திரஞ் செய்துக் கொண்டிருந்து ஸ்ரீ மகா விஷ்ணுவையும் ஸ்ரீ மகா லட்சுமியையும் கொண்டாடும் இவ்வளவு வைபவத்துடனிங்கிருக்க, அனுமார் வைகுந்தத்திற்சென்று ஸ்ரீமந் நாராயணரை வலம்வந்து பணிந்து ஓ அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகா! அதனுதரட்சகா! இப்படியும் பக்தர்களை மோசஞ் செய்யலாமோ! அடியேன் மீதருள் கூர்ந்து துளசிதாசருக் கிட்சணஞ் சேவைதந்து பாதுகாக்கவாரும் ஸ்வாமியென்று தோத்திரஞ் செய்யக் கபட நாடகனுகிய கர்த்தன் கோபித்தவர் போலப் போபோ நான் நேற்று அத்துளசி தாசனிடம் போய்ப் பங்கமடைந்து வந்ததுபோதாம லின்றைக் குன்னுடன்வந்து குறைவடைய வேண்டுமோ பக்குவா பக்குவம் பார்க்கத் தேவையில்லையோ இன்னும் பனிரெண்டு வருஷங்கள் பரிசோதித்த பின்பே வருவேன் என்னுடைய சேவையைத் தருவேன் அன்றி என்னுடைய தரிசனம் லேசில் கிடைக்குமோவென்று திருவாய் மலர்ந்தருள ஆஞ்சனேயர் வணங்கி, ஓ சுவாமி! உம்முடைய கட்டளைப்படி உம்முடைய திவ்விய திருநாமங்களை நரவுலகிற் பிரசித்தபடுத்த அவதாரஞ்செய்து வெகுநாளாயுமது திவ்விய சேவையைக் கோரியிருக்கும் துளசிதாசருக்கு சேவைதராமற் பின்னிடைந்தால் தேவரீர்க் கொருவர்சொல்ல வல்லவருமுண்டோ? ஓ தெய்வமே! என்வாக்கியம் பொய்க்காமல் துளசிதாசரைக்காப் பாற்றவாருமையாவென்று பற்பல விதங்களாக தோத்திரஞ் செய்தார். பகவான் கூடவே கூடாதென்று மறுத்துவிட்டார் அதற்கு மாருதி துளசிதாசரிருக்குந் தீவிரத்துக்கும் பகவான் செய்யுந் தாமஷத்துக்கும் மிகவு மாயாசமடைந்து மிகவு மிடைந்து பகவானைநோக்கி, என்னாண்டவனே! நீரிப்படி தாமதஞ் செய்வீரே லிவ்வைகுந்தத்தை அடியோடும் பேர்த்தெடுத்துக்கொண்டுபோய்க் காசியில் வைத்துவிடுகிறேன் பிறகும்மைக் கும்பிடுகிறே னென்றறைய பகவான் நகைத்து இலட்சுமியை நோக்கி, ஓ மாதரசே! இந்த அனுமானுரைத்த முரட்டு வார்த்தையைக் கேட்டாயோ முன்னம் இராவணன் கயிலையை அடியோடு மெடுக்க வெண்ணங் கொண்டதைப்போ லல்லவோ விருக்கின்றது இப்படி பக்தர்கள்பேசக் கூடுமாவென்று திருவாய் மலர்ந்தருள அதுகேட்ட இலட்

சுமி பெருநகை புரிந்து பகவான் வதனத்தை நோக்கி, ஓ சுவாமி! இந்த வைகுந்தத்திலும் பத்துப்பங்கதிகமான சஞ்சீவி பர்வதத்தைப் பந்தைப்போல் ஓர் கரத்திற் றூங்கிக்கொண்டுவந்த என் தனயன் இந்தப் பரமபதத்தைப் பேர்த்தெடுத்துக்கொண்டு போதலோர் பெரிதோ ஆனையைச் சுமப்பவனுக்குப் பூனை பெரிதா யிருக்குமோவென்று நவிலப் பகவான் அப்படியே செய்யட்டும் நான் துளசிதாசனிடம் வரவேமாட்டேனென்றறைய அதுகேட்ட அனுமார் வாக்கைக் காப்பாற்றும் பொருட்டு மன்மத னனலா யெரிந்துபோனன் தசரத னுயிரிழந்தான். நமக்கு மப்படியானலு மாகட்டும் உயிர் பிரிந்து போனலும் போகட்டுமெனத் துணிவுற்றுப் பகவானை வலம்வந்து வணங்கி, ஓ சுவாமி! வைகுந்தம்பேர்த்தெடுத்துககொண்டு போகட்டுமாவென, பகவான் கயிலையைப் பேர்த்தெடுக்க நினைத்த தசக்ரீவன் பரமசிவனர் பெருவிரலாலாயாசமடைந்ததை நன்கு யோசித்துப்பாரென் றுரைக்க அனுமார் பிறர்க் கிதஞ்செய்ய நினைத்த அடியே னும்மாலிடரடைந்தாலு முத்தமமேயெனப் பணிந்து விஸ்வரூபமெடுத்து அண்டகோளத்தில் தன் சிரந்தாக்க நிமிர்ந்து வாலை வளர்த்திப் பரம பதத்தையும் பேர்த்தெடுக்க எத்தனித்தபோது அண்ட கடாகங்கள் கிடுகிடென நடுநடுங்கத் தலைப்பட்டன. சப்த சமுத்திரங்களும் அல்லோல கல்லோலங்களாய்த் தன்னெல்லை கடந்தன. அப்போது ஸ்ரீ மகாலட்சுமியும், தேவரிஷிகளு மிதுவென்ன விபரீதகாலம் நேரிட்டதென்று பரந்தாமனைப் பலபல விதங்களாகத் தோத்திரஞ் செய்யத் தொடங்கினர்கள். அப்போது பகவான் அனுமாருடைய வைராக்கியத்தை குறித்து வியந்து பயந்தவர்போல் நயந்து ஓ அனுமானே! என்ன விபரீதஞ்செய்ய நினைத்தாய் பிரளய காலருத்திரன் நியேயானய் இனி இந்த வைராக்கியம் வேண்டாம். உன்னிஷ்டப்படி துளசிதாசனிடம் போவோம் வாவென்றழைக்க, அனுமார் ஓ என்னுண்டவனே! இக்கண மிந்தப் பரமபதத்தை என் வாலினலும், கைலையை யோர் கரத்தினலும் பேர்த் தெடுத்துகொண்டுபோய் வாரணசியில் வைத்துப் பின்புமக்குச் சிரசாஷ்டாங்கமாக வந்தனஞ் செய்கிறேனென்று வணங்க. பகவான் இவன் முரடனுதலாலிப்படிச்செய்தாலுஞ் செய்வான் நம்முடைய ஆசீர்வசனமே

உறுதித் துணையா யிருக்கின்றது. பக்தர்களை செயிக்க நம்மா லாகாது. ஓர்வேளை விபரீதங்கள் நேரிட்டாலும் நேரிடுமென் றனுமாருக்குப் பிரிய வசனங்களுரைத்து மனதைக் கரைத்து விஸ்வரூபத்தை நீங்கச்செய்து கருடவாகனரூடராய் பரத சத்துருக்கர் லட்சுமண சீதா சமேதராக முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணுயிரம் ரிஷிகள் சித்த வித்தியாத ரர் கருட காந்தருவர்களும் புடைசூழ மேனகை ஊர்வசி முதலான கன்னிகைகள் மனதைக் கரைத்து நாட்டியமாடத் தும்புரு நாரதர் முதலானவர்கள் வீணை முதலான வாத்தி யங்களை முழக்கத் தேவதுந்துமி தாம் தாமென் றொலிக்க அனுமார் முன்னே நடக்கப் பூமாரி பொழிய பொன்மாரி சொரியத் துளசிதாசரிருக்கும் மேடைக்குச் சரியாக ஆகாய மார்க்கத்திலிருந் திறங்கும்போது, காசிதேச இராஜன் முத லானவர்களும் ஆ! ஆ!! ஆச்சரியம் ஆச்சரியம், ஆனந்தம் ஆனந்தம், இந்தத் துளசிதாசர் எத்தனை காலங்களாகத் தவ ஞ்செய்தவரோ முற்பிறப்பி லெந்த முனிவரா யிருந்தவரோ அல்லது இவ்வுலகை ஆட்கொள்ள வந்தவரோவெனப் பற் பலவிதங்களாகத் துதித்து தோத்திரஞ்செய்யத் தொடங்கி னார்கள்.

அப்போது துளசிதாசர் பகவான் வரும் விந்தையைப் பார்த்து தேகம் வேர்த்து ஆ! ஆ!! என்றண்டவன் இவ் வளவு வைபவத்துடன்வந்து தரிசனந்தா நானிழைத்த தவ மேதோ எங்கள் பெரியோர் செய்த புண்ணியமேதோ ஓ! ஓ!! எத்திசையிலுந் தேவர்கள் நிறைந்து வருகிறார்களே நான் முன் நீ முன்னென்றனேக ரிஷிக ளதிக துரிதமாக வருகிறார் களே இதோ அனுமாரும் வந்துவிட்டாரே அதோ பக வான் சீதா சமேதனுகப் பரத சத்துருக்க லட்சுமணருடன் வருகிறாரே யெனப் புளகாங்கமாக மயிற்குச் செறிந்து உல் லாசத்தாற் றிரிந்து அடிக்கடி வந்தனம் புரிந்து மிகவும் பரி ந்து சந்தோஷம் விரிந்து மெய்மறந்து மனங்கரைந்து ஆன ந்தக் கண்ணீரால் நனைந்து என்னமாகத் துதிப்பேனென நினைந்து ஒன்றுந் தோன்றுதவராகத் தன்னைமறந்து அசை வற்று நின்றிருந்தார். அப்போது பகவானங்கெழுந்தருளித் துளசிதாசரை மார்புட னணைத்துக்கொண்டு வெகு கஷ்டப் பட்டாயென விண்டு ஓ ஒப்பிலாவென் னப்பனே! உன்னைப்

போன்ற பக்தி வைராக்கியத்திற் சிறந்தவர்கள் இவ்வுலகிலியாருமில்லை. உன் பக்திக்குமிகவும் மெச்சினேன் ஆதலால் சீக்கிரமுன்றிருவாக்கைத் திறந்து என்னவரம் வேண்டுமோ கோரும், இராமாவதாரத்தைப்பாரும், உனக்குற்ற கவலைகளெல்லாந்தீரும், ஆனந்தம் மீறும், இழிவான குணங்கள் மாறும், பக்திசெய்ததுபோதும், உடலாதியைத் தாரைவாரும், மமதாதேவியும்நீரும், மோட்சலோகத்தைச் சேரும், எதோ உம்முடைய திருவஸ்தத்தைத் தாரும், பூவுடன் கூடிய நாரும், மேன்மை பெறுவதுபோ லெல்லோரும் உம்மாலென்னைத் தரிசிப்பார்கள் பாரும் என்று பற்பல வார்த்தைகளாடிப் பாதாதிகேச பரியந்தந் தன் திவ்விய அஸ்தங்களாற் றடவின மாத்திரத்தில் துளசிதாச னனந்த பரவசத்தாற் பகவானைப் பலதாஞ் சூழ்ந்து திவ்விய திருவடிகளில் வீழ்ந்து பலதரந்தாழ்ந்து, ஓம் ஹரி நரஹரி முரஹரி அம்பு ஜாட்சிஹரி மாதவா யாதவா ராகவா கேசவா வாசுதேவா தேவதேவா ஆதிதேவா மகானுபாவா இராவணமர்த்தன காளிங்க நிர்த்தன ஓ ஜனர்த்தன பச்சைவர்ண கார்வண்ண கருடவாஹன கோபியர் மோஹன சேஷசயன கமலநயன நாராயண பிரம்ம பாராயண அம்புயகரண கௌஸ்துவாபரண ஓ பகவானே ஓ விஷ்ணு ஓ தெய்வமே இன்றைக்குத் தானுனது கருணைவந்ததோ இத்தனை நாளென்முன்வர கனம் நொந்ததோ அனுமார் பலவந்தத்தால் வந்தீரோ அல்லது நீரே சேவைதந்தீரோ ஆஞ்சநேயர் மொழிக்குட்பட்டீரோ அல்லது நீரே புறப்பட்டீரோ மாருதிக்கபயஸ்தங் கொடுத்தீரோ அதனால் ஸ்ரீ ராமாவதார மெடுத்தீரோ நேற்று வந்தும் தரிசனந் தராமற்போன காரணமேதோ யான்செய்த தீதோவென்று பலபல வார்த்தைகளாடி அன்பு மேலீட்டால் பின்னுந் தோத்திரஞ் செய்யத் தொடங்கினர்.

இராமாயணச்சுருக்கம்.

விருத்தம்.

அத்துவிதானந்தமாதவா ஆதியுமந்தமில்லாதவா
சுத்தவறிவருள்யாதவா தோன்றமொடுக்கமில்லாதவா
பத்திசற்றுமில்லாப்பாவியேன் பார்தனிலென்றவஞ்செய்தனன்
இத்தினஞ்சீதாசமேதன யின்புடன்வந்தெனையாளவே.

சத்தியதேவரீடேறவேதசரதனார்குறைதீரவே
புத்திரனாகியமாயனேபுண்ணியரேத்திடுந்தூயனே
புத்திசற்றில்லாதபாவியேன்பூமியிலென்றவஞ்செய்தனன்
இத்தினஞ்சீதாசமேதனாயின்புடன்வந்தெனையாளவே. 2

தத்திவகௌசிகன்வாக்கினாற்றாடகைதனையழித்தவா
வித்தககௌதமன்றேவியைவேவியசாபந்தவிர்த்தவா
சுத்தஜனகனைபார்த்தவாதொல்பவத்தென்றவஞ்செய்தனன்
இத்தினஞ்சீதாசமேதனாயின்புடன்வந்தெனையாளவே. 3

வத்திபஞ்செய்வில்முறித்தவாவைதேகியைமணஞ்செய்தவா
பத்தபரசுராமன்றனுன்மத்தமறித்தநக்கொற்றவா
சித்தசன்மாலிலிருந்திடுந்தீயனெனன்மாதவஞ்செய்தனன்
இத்தினஞ்சீதாசமேதனாயின்புடன்வந்தெனையாளவே. 4

உத்தரவீந்தநற்கைகயினோர்மொழியான்வனஞ்சேர்ந்தவா
மித்திரனாகுங்குகன்றன்பான்மேவிவாம்பலவீந்தவா
அத்திரிமேலருள்கூர்ந்தவாஆதியிலென்றவஞ்செய்தனன்
இத்தினஞ்சீதாசமேதனாயின்புடன்வந்தெனையாளவே. 5

சித்திரகூடத்தினின்றவாதீயவரக்கரைக்கொன்றவா
சித்திரமான்பின்னேசென்றவாசீதையெங்கேதம்பியென்றவா
குத்திரவாலியைவென்றவாகோழையேனென்றவஞ்செய்தனன்
இத்தினஞ்சீதாசமேதனாயின்புடன்வந்தெனையாளவே. 6

கைத்தலமீந்துசுக்ரீவனேகாசினிகாவென்றகாரணா
அத்திசூழ்லங்கைக்கேகெனவாஞ்சனேயற்கருணாரணா
உத்திக்கணைசெய்தபூரணாஉலகினிலென்றவஞ்செய்தனன்
இத்தினஞ்சீதாசமேதனாயின்புடன்வந்தெனையாளவே. 7

புத்திவிபீஷணன்காவெனப்பொன்னிலங்கையாளென்றசீலனே
சித்திலட்சுமணாவிந்திரசித்தனைக்கொல்லென்றபூபனே
முத்தியைவேண்டிடாப்பாவியேன்முற்பவத்தென்றவஞ்செய்தனன்
இத்தினஞ்சீதாசமேதனாயின்புடன்வந்தெனையாளவே. 8

பத்தியுள்ளகும்பகர்னனைப்பாரின்மேல்வீழ்த்தியநாதனே
யுத்தஞ்செய்மூலபலங்களையோர்கணையால்வென்றநீதனே
ருத்திரமேசெயும்பாவியேன்யின்புடன்வந்தெனையாளவே
இத்தினஞ்சீதாசமேதனாயின்புடன்வந்தெனையாளவே. 9

பத்துத்தலையனைபாரினிற்பாணத்தாற்கொன்றவுதாரனே
எத்தலமும்புகழ்தாயினையெரியிற்குளியென்றசூரனே
பத்தினிநீயென்றவீரனேபாவியேனென்றவஞ்செய்தனன்
இத்தினஞ்சீதாசமேதனாயின்புடன்வந்தெனையாளவே. 10

சத்துருக்கன் பரதன் றனைச்சபாசென்றுமெச்சினநாதனே
இத்தலமேத்தவயோத்தியையாண்டரவிகுலவேந்தனே
முத்தியளிக்கும்வேதாந்தனேமூடனேனென்றவம்செய்தனன்
இத்தினஞ்சீதாசமேதனுயின்புடன்வந்தெனையாளவே. 11

பத்தர்தமைக்காக்குநேமனே பாபவிநாச ஸ்ரீராமனே
நித்தியநிர்மலநாமனே நிர்ப்பபேதனுபராந்தாமனே
எத்திசையுப்புகழ்வியோமனேயென்றவஞ்செய்தனன்சோமனே
இத்தினஞ்சீதாசமேதனுயின்புடன்வந்தெனையாளவே. 12

என் றிவ்விதமாகத் தோத்திரஞ் செய்துருகும் துளசிதாசருடைய மஸ்தகத்தின்மேற் பகவான் தனதிரு ஹஸ்தங்களைவைத்துப் பத்தியில் மிகுந்த சித்தத்தினுடைய உத்தமனாகிய எனக்கொத்த பக்தனே! உன் பக்திப் பிரதாபத்துக்கு வந்தேன் என்னவரம் வேண்டுமோ கேளுந் தருகிறேனென திருவாய் மலர்ந்தருளின பச்சைவர்ணனை அச்சுதனுடைய உச்சிதபாதங்களை உச்சியின்மே லேந்திக்கொண்டு ஓ என்னாண்டவனே! இவ்வுலகிலுள்ள ஆவிகளுள் பாவியேனெப்போதும்மை நினைக்கின்றேனோ அப்போதே என்தாயாகிய சீதாசமேதனுய்வந்து தரிசனந் தரல்வேண்டுமன்றி எல்லா ஆனந்தங்களுக்கு மேலான ஆனந்த மியாதோ எல்லாப் பதவிகளிலும் மேலான பதவியாதோ எதனாலுன் றிருவடியை லேசிலடையலாமோ எந்தச் சாதனத்தாற் கொடிய விந்திரிய சேஷ்டைகளொடுங்கிப்போமோ என்ன உபாயத்தால் மனோவேஷ்டைகளடங்கிப்போமோ நாரதாதி ரிஷீஸ்வரர்களெல்லாம் எந்த நிலையிலிருக்கின்றார்களோ அந்த நிலையையடியேனுக்கனுக்கிரகஞ்செய்யும் சுவாமியென்று துளசிதாசர் வணங்கும்போது பகவான் துளசிதாசரைக் கருணையுடன் பார்த்து மார்புடனே சேர்த்து ஓ பரமபாகவதனே ஓதுதற்கரிய வேதரகசியங்களை நீ தவிர இப்பூதலத்தி லறிந்த மாதவருண்டோ? ஓ ஞானபோதனே! பற்றில்லா அவதூதனே சிரத்தையிற் சிறந்த பாத்துவாசருக்குப் பரத்துவத்தை வசிஷ்ட சங்கிதையில் விரித்துரைத்த வால்மீக ரிஷியல்லவாவென்று க்ஞானதிருஷ்டியைக் கொடுத்த மாத்திரத்தில் துளசிதாசருக்குப் பூர்வஞானம் பிறந்து முற்பிறப்பிற்றான் வால்மீகரென்றறிந்து ஓ ஓ நாம் இவ்வுலகிலுள்ள மாந்தர்கட்குப்

பக்தியும் ஜீவன்முக்தியும் போதிக்க அவதரித்துப் பூர்வக்ஞானம் மறந்து உலகிலுள்ள மானிடர்களுஞ் செய்யாக் கொடும் பாவமாகிய காமாந்தகாரக் குகைக்குட்பட்டு ஞானநிலை கெட்டு உலகந்தூஷிக்க உடம்பெடுத்தேனேயென்று பலவாறாக வுன்னி பகவானைச் சூழ்ந்திருக்கும் நாரதாதி ரிஷீசுவரர்களைப் பார்க்க நாணமடைந்து பகவான் முன்னிற்பதற்கிடைந்து ஸ்ரீமந்நாராயணனை வலம்வந்து பணிந்து ஓ கர்த்தனே! தங்களுடைய பரிபூரண கடாட்சம்பெற்ற அடியேன் கொடியேனாகிக் காமவலையிற்சிக்கி அசங்கிதமான விஷயானந்தத்திற் சொக்கி பிரமக்ஞானத்தை மறந்து நின்னும பஜனையைத் துறந்து உபாதி வைராக்கியமிறந்து துர்க்குணங்கள் நிறைந்து மாயா திரையில் மறைந்து சொல்லுதற்கரிய துன்பத்தாற் குறைந்து பாமரனான காரண மென்னமோ தெரியச்சொல்லும் ஸ்வாமியென்றிரந்து கூறும் அரிதாஸனைப் பகவானுதரனை செய்து ஓ பரம பாக்வதசிகாமணி! பரப்பிரமக்ஞானி நான் திரேதாயுகத்தில் ராமாவதாரமெடுத்து பூர்வக்ஞானம் மறந்து மிகவுமயர்ந்து வசிஷ்டராற்றெரிந்து சகல தோஷங்களுமிறந்து சங்கல்ப விகல்பங்களைத் துறந்து அநேகநாள் அரசுபுரிந்து நாட்டிற் றருமத்தையும் காட்டிற் றவத்தையும் நிலைநிறுத்தி எதாஸ்தானமடைந்தேனாதலால் மாயாசம்பந்தமான ஜென்ம மெடுப்பவர்களெல்லாம் துக்கமே பலிதமாகும் நீரும் மாயையின் சாமர்த்தியத்தாலேயே விஷயபோகத்தையிச்சித்து வெகு அவஸ்தைகளுள்ளானீர் காமத்தைவென்றவர்கள் திரிலோகத்திலுமில்லை நீரிதைப் பாராட்டிச் சஞ்சலப் படவேண்டாம்.

ஏனெனில் இதோ நிற்கும் நாரதருடைய சரிதையைக் கேட்பீரேல் வெகு ஆச்சரியப்படுவீரதேனென்றால், முதல் யுகத்தில் இந்த யாழ்வல்லோன் உபாதியினால் சுரநாட்டை விட்டுக் காட்டையடைந்து பதினான்கு திவ்விய வருஷங்கள் தவஞ்செய்து காமாதிகளை வென்றோமெனக் கிஞ்சித்து கர்வமடைந்து சொர்க்கலோகத்திற் சென்று தவமே மேலானதெனப் புகன்று சத்தியலோகம்போய்ச் சதுர்முகனை நோக்கி நாட்டிலிருப்பதிலுங் காட்டிலிருப்பதே உத்தமமென் றறைந்து கயிலையிற் சென்று பரமசிவனைப் பணிந்து காமதகனஞ்

செய்பவர்க்குக் காடே திவ்விய ஸ்தானமென நவின்று வைகுந்தமடைந்து என்னைப் பலவிதங்களாகத் துதித்து ஆனந்த மேலீட்டாற் குதித்து ஒ மாயாவிலாசா! வைகுண்டவாசா! உம்முடைய மாயை தவத்திலிருப்போரை யென்னசெய்யுமெனப் புகல நான் சுழுப்தியிலிருக்குஞ் சுகங் கனவு கனவிலிருப்போர்க் கெப்படி வருமென்றுகேட்க, இவர் எப்பொழுதும் நனவிற் சுழுப்தி நிலையிலிருப்போர், சாக்ரத சொப்பன சேஷ்டைகளால் வேஷ்டையை யடையமாட்டார்களென நான் சாகாத சுழுப்திநிலையை எப்போதும் மேவியிருத்தலரிதல்லவாவென இவர் சகஜ க்ஞானமுள்ளோர் சந்ததமுஞ் சாதிநிஷ்டையிலே யிருப்பார்களென நான் இவரைப் பரிசோதிக்கும்பொருட்டு ஓ நாரத மகாரிஷியே! நம்மைப்போன்ற திவ்வியக்ஞானிக ளிவ்வுலகிலுண்டோ உம்மைக் காமதகனஞ் செய்த கறைமிடற் றண்ணலென்றே யுரைக்கவேண்டுமெனத் துதிக்க இவரகமடைந்து அடியேன் காட்டிற்குப்போய் தவஞ்செய்து நாள் கழிக்கிறேனென்று வணங்கிக் கானகத்தை நாடிச்சென்றார் அப்போது நான் இவர் போகும் மார்க்கத்தில் மாயையால் ஓர் பட்டணமுண்டாக்கி அந்நகருக் கிறைவனுக்கோ ரழகுள்ள கன்னியிருக்கவும், அப்பெண்ணுக்கு சுயம்வரம் நடக்கவும், அன்பத்தாறுதேசத் தரசர்களுமங்கு வந்திருக்கவும், அந்நங்கையின் றாதை சோதிஷம்பார்த்தெந்த மன்னனுக் கென்புத்திரி மாலையிடுவாளெனக் கேட்க, வெதிர்பார்த்துத் தவஞ்செய்யப்போகும் இவரைமறித்துப் பலவந்தமா யழைத்துக் கொண்டுபோய்த் தன் புதல்வியை யழைத் திவரெதிரில் நிறுத்தி ஓ மஹாநுபாவா! இந்தப் பெண் ணெத்தேசத்தேந்தலை மாலையிடுவா ளெனக்கேட்கவும் செய்ய இந்தநாரதர் கும்பிடப்போன தெய்வங் குறுக்கே வந்ததுபோற் களித்து அச்சுந்தரியை யுற்றுப்பார்த்து பரிவுகொண்டு பிரமித்து ஸ்தம்பித்து மனமுருகி அன்புபெருகி இவள் நரலோகப் பெண்ணல்லவென் றுன்னி தான் மணஞ்செய்ய நண்ணி அரசனை நேசித்து மிகவும் விசுவாசித்து ஓ மகாராஜனே! இந்தப் பெண்ணுக்குரிய ஆடவன் தேவலோகத்திலிருந் தினியோர் முகூர்த்தத்துக்குள் வருகின்றான் உங்களுக்குத் தரிசனந்தருகின்றான் அவனுக்கே உமது கன்னிகையைக் கொடுத்து வதுவை செய்வீரென் றறைந்து

அம்மாதை நோக்கி ஓ பெண்கள் நாயகமே! உனக்கெவ்வித புருஷன்மேலிச்சை யென்று வினவ, அதற் கவ்வனிதை ஓ முனிசிரேஷ்டரே! எனக்கு மகாவிஷ்ணுவுக்கு நிகரான புருஷன்மே லிச்சையென்று வணங்க, இந்த யாழ்வல்லோன் இப்போது வரும் புருஷன் மகா விஷ்ணுவைப்போலவே யிருப்பானென்றோதி அந்நாட்டைக் கடந்து காட்டையடைந்து கன்னியென்னும் வன்னி தன் சென்னியைக் கொளுத்துவதால் காமச் சிந்தையால் நொந்து நாணமிழந்து ஓ ஓ இத்தருணத்தி லெந்த ரூபத்துடன் சென்றால் நம்மை யம்மாது வாதுசெய்யாமல் மாலை சூட்டுவாள், பாராட்டுவாள், இன்பத்தை யூட்டுவாள், களிமுகத்தைக் காட்டுவாள், ஆ ஆ அக்காந்தையின் முகவிலாசமேவிலாசம், இப்பேர்க்கொத்தவளுடைய நேசமே நேசம், அவளுடைய கூந்தலே கூந்தல், அவளை யணையும் ஏந்தலே யேந்தல், அவளுடைய ரூபமே ரூபம், அவளாலிங்கனலாபமே லாபம், அவளுடைய வசனமேவசனம் அவளைத் துதிக்கும் பஜனமே பஜனம், அவளுடையபார்வையே பார்வை, எனக்கு கிடைத்த சேவையே சேவை அவளுடைய நடையேநடை இப்பேர்க்கொத்தவட் கீயுங்கொடையேகொடை எனப் பற்பல வார்த்தைகளாடி மாரன் செய்யுங் கோரத்தால் தவஞ் செய்யப்போகுந் தீரத்தைவிட்டு நேரத்துக்குட்பட்டு பக்த வச்சலனாகிய என்னை நினைந்து ஓ பகவானே! இவ்வேளை வந்து உன்னுடைய ரூபத்தைதந்து பாதுகாக்காமற் போனால் காமாக்கினியா லெரிந்து போவேனென்றறியாயோ? ஓர் கன்னிகையால் நாரதன் மரணமடைந்தானென்னும் பழிநிலை நிற்குமெனக் குறியாயோ? உன்னுடைய மாயையை வென்றவர்களு முண்டோ? நான் சொல்லும் மொழியிற் பிசகுண்டோ? சீக்கிரம் வருவாய் உன்னுடைய ரூபத்தைத்தருவாயென் றுருகும்போது நான்தரிசனந்தந்தா லென்சேவை பலத்தால் காமவிகாரம் நீங்குமென்று அந்தர்த்தானமாகவே யிருந்து ஓ முனிசிரேஷ்டரே! நீரிச்சித்தபடி என்னுருவைக் கொடுத்தேன் சீக்கிரம்போ யும்முடைய இச்சையை நிறைவேற்றிக் கொள்ளுமென் றுரைக்க, உடனே இந்தமுனிவர் தனக்குப் பச்சை நிறமும், பீதாம்பரமும் கௌஸ்துவாபரணங்களு மடைந்ததே களிப்புற்று பகவானையும் புருகூதனையும் தனக்குத் துவாரபாலகராகி வா

நினைத்தமாத்திரத்தில் உடனே அவர்களிருவரும் ஸ்ரீ வைகுந்தவாசலைக் காக்கும் துவார பாலகரைப்போல வடிவெடுத்திவர் பக்கலடைய உடனே இந்த மகாத்மா வெகு அவசரத்துடன் அப்பட்டணத்திற் பிரவேசிக்க அத்தறுவாயில்தான் அவாக்கொண்ட வடிவழகி பூமாலையைக் கையிலேந்திக்கொண்டு விசாலமான சபாமண்டபத்தி லெழுந்தருளி யிருக்கும் ஐம்பத்தாறு தேசத்தரசர் மையல்கொள்ள சபையில் நின்றிருப்பதைக் கண்ட இந்த யாழ்வல்லோன் அதிக ஆவலாய் அவளருகிற்சென்று ஆயிரங்கண்ணு லரியணையை வரவழைத்ததில் வீற்றிருந்து அடங்காக் காமவிகாரத்தா லவ்வரிவையைநோக்கி நாணயத்தை நீக்கிப் பூதலம் போற்றும் ஓ மாதரசே! நீ தவிர எனக்காதரவில்லாமையால் என்னை யிக்கணமே காப்பாய் கடைக்கண்ணுற் பார்ப்பாய், என்னை உன்னிரு கரங்களாலும் மார்பிற் சேர்ப்பாய், என் மையலைத் தீர்ப்பாய், என்றின்புள்ள வார்த்தைகள் அன்புடன் உரைக்க அதுகேட்ட அப்மோகனாங்கி காருக வதனமுள்ள இவரை நோக்கிக் கலீலென மந்தகாசம் செய்து மன்னர்கள் அருகிற் செல்ல இம்முனி நாதர் அவள்மேல் இருக்கும் பேராசையால் அருகிற் சென்று கரங்களைக் குவித்து நின்று ஓ அழகு சுந்தரமே! ஆசைப் பெருக்கமே! உனக்குத் தகுந்த மணாளன் நானன்றி வேறொருவருண்டா இல்லை இல்லை ஆதலா லன்புடனெனக்கே மாலையிட்டு மகிழ்வடையக் கடவாயென் றவ்வஞ்சியைப் பற்பல விதங்களாகக் கெஞ்சி கெஞ்சி கொஞ்சி கொஞ்சி வேண்டியும் வேண்டா அம்மங்கை மேலுள்ள வாஞ்சையாலும் மாரனெய்யுங் கோரமான வுபத்திரத்தினு முபத்திரத்தாலும் அவன்மேல் வீழ்ந்து ஆலிங்கனஞ்செய்து ஓபெண்ணே என்னிரு கண்ணே! உன்னை வணங்கினே னிப்போதே என்னிணங்க வாவென்ன பலவந்தஞ்செய்ய அம்மாது முனிந்து கடின வார்த்தைகளாடி எட்டிப்போய் நிற்க இவர் மோகாந்த காரத்தால் பின்னு மவளைப்பலவந்தஞ்செய்ய அக்கன்னி இவர்க்ககப்படாமற் புறம்போக இவரவள் பின்செல்ல அவளச்சமுற்றுப் பலதிக்குகளிலுமோட இவரவளை விடாமற்றொடர்ந்தோட முடிவி லப்பேதை ஓர் தடாகத்திற் குதிக்க, இவரு மச்சரசிற் குதிக்கப்போய் அவ்வாவியிற் றெரியும் தன்னுடைய சாயையைப் பார்த்து ஆ! ஆ!! நம்முடைய வத

னம் யூகத்தின் மாத்திரமா யிருப்பதினுலல்லவா இம்மோக ஞங்கி வெறுப்புற்ருள்.

இது காரியத்தை ஆயிரஞ் சோதியனும் ஆயிரங் கண் ணனும் புலப்படுத்தாமற் ருங்களுங் கெக்கலிகொட்டி நகைத் துப் பங்கப்படுத்தினுர்களல்லவா வென்று முனிவுகொண்ட மாத்திரத்தில் கேணியும் கன்னியும் பட்டணமும் இராஜர்க ளும் மாயமாய் மறைந்து காரடவியான மாத்திரத்தில் ஓ ஓ நம்மைப் பகவான் பரிசோதித்தார் நம்முடைய திரமானமன தைப் பேதித்தார் இது தெரியாமல் அவர் மாயைக் குட்பட்டு தபநிலை கெட்டுச் சூரனுஞ் சுருசீரனும் கெக்கலி கொட்டி நகைக்கும்படியாக நேரிட்ட தல்லவாவென வெகுண்டு ஓ கதிரவனே! காரியவனே நீங்களிருவரும் வானரத்தின்மேல் மோகமாகி வானரங்களாகி ஒரு ஸ்திரீயைப் புணர்ந்து ஆயு ஷ்பரியந்தம் பகையாளிகளாய்ப் போகக்கடவீர்களெனச் சாப மிட்டார் அதுகேட்ட இந்திரனும் எழ்பரியோனுங் கைகுவி த்து ஓ மாதவனே! குற்றமில்லா எங்களுக்கு விபரீத சாபமிட் டீரே இச்சாபநிவர்த்திக் கேதுவுரைத் தாட்கொள்ளுமையா வென்று வணங்க இந்த யாழ்வல்லோனுக்குச் சற்றே தயை பிறந்து ஸ்ரீமந் நாராயணருடைய தரிசனத்தா லுங்களுக் கிட்ட சாபநிவர்த்தியா மென்றுரைத் தனுப்பிவிட்டு அன்று முதல் என்னைப்பிரியாமல் என் றரிசனம் பரிசனபலத்தால் நிஷ் காமியா யிருக்கின்ருரெனத் திருவாய்மலர்ந்து ஓ அரிபக் தனே! ஜீவன் முக்தனே! எப்பேர்க் கொத்தவர்களும் மாயை யை வெல்வதரிது இந்த மாயா விசேஷத்தினுலேயே பூர்வ ஜன்மத்தி லுன் மனைவிக்கு நீதியுரைத்தது போல இச் சென்மத்தி லுன்தேவி யுனக்கு விவேகமூளாக்க நேரிட்டது. இப்படி மேல்கீழ் கீழ்மேலாக்குவது மாயையின் சுபாவமாம் இப்படிசெய்வதே மாயையன்றி வேறேமாயையென்ப தொன் றுண்டோ? அறிவூன்றி யூகிக்கின் சுத்த சூனியமாய்ப் போ கும். மாயையை கடக்கப் பிரமாதி தேவர்களாலுங் கூடாது என்றறைந்த பகவான்றிருவடிகளில் துளசிதாசர் வணங்கி ஓ சுவாமி உம்மையன்றி மாயை யென்பது வேறேயொன் றுண்டாயிருக்க வஸ்து யிண்டா? ஓ பகவானே! சகல லோ கங்களையுஞ் சிருஷ்டித்து உமது மாயையி லழுத்தி வாட்டுகிற வரும் நீரே சகல ஜீவர்களையும் காமக் குரோதங்களிற் பிரவே

சிக்கச்செய்து பலவிதங்களா யாட்டுகிறவரும் நீரே விஷயா னந்தத் துக்கமயமா யிருக்கவும் மேன்மேலு மின்ப போகமா கக் காட்டுகிறவரும் நீரே ஸ்தம்பமுதல் சகல சீவராசிகளுக் கும் எட்பிரமாணம் பிசகின்றி அவரவர்கள் வினைப்படி சுகது க்கங்களை யூட்டுகிறவரும் நீரே சமுசாரமென்னும் நரக மே டையைவிட்டு வெளிப்படாமல் ஞானக்கதவைப் பூட்டுகிற வர் நீரே பாபபுண்ணியமென்னும் சுமை சுமக்கு மாளாக்கி மாட்டைப்போ லோட்டுகிறவரும் நீரே ஆட்டுக்கடாக்களைப் போல் ஒருவரோ டொருவரெதிர்த்து யுத்தஞ்செய் திறக்கும் படியாய் மூட்டுகிறவரும் நீரே பக்தியுடன் வேண்டிக்கொள் ளும் பரம பாகவதர்களைச் சீக்கிரம் பாதுகார்க்காமல் என்னைய ன்றி காக்க வேறு தெய்வமில்லை யென்கிற பெருமையை நீட் டுகிறவரும் நீரே பக்தர்களின் மனம் நோகச்செய்யும் மாபா விகளின் மனம் நடுங்கக் கோரரூபங்களைக் காட்டுகின்றவரும் நீரே நம்பின அடியார்க் கோரிடையூறு வராமற் பாராட்டுகிற வரும் நீரே நானென்னு மகத்தைச் சிகிச்சைசெய்து மௌன முற்றிருக்கும் பிரமக்ஞானிகட் ககண்டானந்தத்தை ஈட்டுகிற வரும் நீரே என்று பற்பல விதங்களாகத் துதிக்கும் துளசி தாசரைப் பகவா னன்புடன் பார்த்து மார்புடனணைத்து அப் பக்த சிகாமணி பரபிரமக்ஞானி நீ யறியா மர்மமொன்று மு ண்டோ மாயை யென்னையன்றி வேறுண்டோ நீ ராமராம வென் றுரைத்துப் பாராபரத்தை யுணர்ந்த பரம சாதுவாச் சுதே இனிமேலான பிரமானந்த லாபத்தைப் பெற்றுச் சுகஜீ வியாய் வாழக்கடவாயென் றாசீர்வாதஞ்செய்து இனி நாம் போகிறோ மெனப் புகலத் துளசிதாசர் ஓ தெய்வமே! பிரமக் ஞானம் ஒருவர் போதிக்கப் பெற்றுக் கொள்ளவேண்டுமெ ன்று வேதங்கள் முறையிடுகின்றதன்றி சுயேச்சையா லறிதற் குக் கூடாமையான பிர்மக்ஞானத்தை அடியேனுக்குபதேசித் தாட்கொள்ளும் ஸ்வாமீ! என்று பணிய, பகவான் ஓ அரிதா சரே! என்றுஞ் சிரஞ்சீவியாய் அனேக சாதுக்களின்சங்கத்தி லிருந்து தேர்ந்த நவவியாகரண பண்டிதரான இந்த அனு மாரிடம் பிரமோபதேசம் பெற்றுக்கொண்டு ஆனந்தமாயிரு வென்றறைய துளசிதாசர் மகாபாக்கியமென்று துதித்துத் தேவரீர் திருவிளையாடல்களில் எதை நூதனமாகச்செய்து பாராயயணஞ்செய்தால் புத்தியும் பக்தியும் சித்தியும் முத்தியு

மெளிதிற் கிடைக்குமென்று தொழப் பகவான் ஓ பரமபாகவ தனே ஜீவத்துவமான தாஸத்வமுடையோர்க்குப் பக்கவிலா சமும் ஆத்ம தத்துவமான ஐக்யதத்துவ முள்ளவர்க்குப் பிர மக்ஞானமு முக்கியமாயிருக்கும். ஆதலால் தாஸத்வ முள்ள வர்க்குப் பிரமக்ஞானமு முக்கியமாயிருக்கும். ஆதலால் தாஸ த்வ முள்ளவர்க் கானந்தம் வரச்செய்யும் என் திருவிளையாட லாகிய ஸ்ரீராமாயணத்தை மூன் ஜென்மத்தில் தேவபாஷை யிற் செய்ததுபோல் இப்போது இந்துஸ்தானி பாஷையிற் செய்து துளசிராமாயண மெனப் பேரிட்டு அனேகம்பேரைப் பாராயணஞ் செய்யும்படியாய்ச் செய்து என் பதவியை யடை யும்படியாகச் செய்யெனத் திருவாய்மலர்ந்து பல ஆசிகள் கூறி அந்தர்த்தானமானார். தேவரிஷிகள் ஜெய விஜயீபவா வென் றறைந்து தங்கடங்க ளிருப்பிடஞ் சேர்ந்தார்கள். கேட் டீர்களோ சித்தர்களேயென்று நாபாஜிசித்தர் பின்னுஞ்சொல் லத் தொடங்கினர்.

ஸ்ரீராமர் தரிசனந்தந்த அத்தியாயம் முற்றிற்று.

ஒன்பதாவது அத்தியாயம்.

ஞானோபதேசம்.

கேளுங்கள் சித்தர்களே! ஸ்ரீமந் நாராயணன் மறைந்த பின் துளசிதாசர் அந்த மடத்தில் அனேக சாதுக்களுட னிருந்துக்கொண்டு பகவான்பேரில் அனேக கீர்த்தனைகள் அஷ்டகங்கள் கவிகள்பாடி தேவபாஷையிலுள்ள வால்மீக இராமாயணத்தை இந்துஸ்தானி பாஷையிற்செய்து துளசி இராமாயணமெனப் பேரிட்டு வடதேசத்தி லுள்ளவர்களெல் லாம் பாராயணஞ்செய்ய மகிழ்ந்து தாஸத்வ மார்க்கத்திற் சிலநாள் கழித்துச் சாதுக்கள் சங்கத்தாலும், பகவத் தியா னத்தாலும், விஷயபோக நிக்கிரகத்தாலும் அன்னதானபல னுலும், வேதபாராயணத்தாலும், தேகேந்திரிய கரணவேஷ் டைகளை மாற்றவேண்டிய பாவத்தாலும், நனவிற் சுழுப்தி யைப் பெறவேண்டு மென்கிற வாஞ்சையாலும், கர்மகாண்டம் பக்தி காண்டத்திலும் க்ஞான காண்டமே முக்கியமென வே தத்தில் விதித்திருப்பதாலும், பிரமானந்தமன்றி கருவி கரண சேஷ்டைகளிறக்காதென்கிற தாற்பரியத்தாலும், அஞ்ஞான

குணங்கள் கீழ்ப்பட்டு மெய்ஞ்ஞான குணங்கள் மேலிட்டு ஓர் நாள் யோசிக்கின்றூர். ஆ ஆ மேலான பிம்க் ஞானத்தை எனது சத்குருநாதராகிய அனுமாரிடம் அநுக்கிரகம் பெற்றுக்கொள்ளெனப் பகவான் திருவாய்மலர்ந்தருளி யிருந்தும் அஞ்ஞான புத்தியினுல் வெகுநாளாக மெஞ்ஞானத்தை மறந்திருந்து விட்டேனே ஆ கெட்டேனே யென்று வாட்டமடைந்து மிகவு மிடைந்து ஸ்ரீமந் நாராயணனைப் பலபல விதங்களாகத் துதித்து தனது சத்குருநாதனுகிய அனுமாரைச் சிந்தித்து வந்தித்து ஓ ருத்ராவதார வாயுகுமாரா அஞ்சனுதேவிதநயா, ஸ்ரீ ராகவதூதா, சீதாசோகவினுசா சுயம்பிரகாசா, இராக்ஷஸகாலா, இலங்கையைக் கொளுத்தின சீலா, சஞ்சீவியைத் தந்தவனுகூலா, பக்தபரிபாலா, விசுவசொரூபா, க்ஞானதீபா, ஸ்ரீராம லட்சுமணரைத் தாங்கினவா, இராவணன் மார்பிலுள்ள தந்தங்கள் வெளிப்படக் குத்து வாங்கினவா, கடலைக் கால்வாயாகத் தாண்டினவா, சீதாபிராட்டியின்பா லோர்வரம் வேண்டினவா, தசரத தநயர்போட்ட முத்துமாலையி லோரோர் முத்தாகக் கடித்துப்பார்த்து ஞானரச மில்லையென் றெறிந்துவிட்டவா, சீதாபிராட்டியின்பால் ஞானுர்த்தங்க ளறிந்துக் கொண்டானந்தத் துட்பட்டவா, கதிரவன்பால் நவவியாகரணங்கள் கற்றவா, என்று மழியாச் சிரஞ்சீவித் தன்மையைப் பெற்றவா, சஞ்சீவி பர்வதத்தை யளித்தவா, தானவரைக்கொன்று களித்தவா, பரத சத்துருக்கரைக்காத்தவா, பரப்பிரமத்தைத் தனக்கு ளாராய்ந்து பார்த்தவா, துப்புருநாரதர் கர்வபங்கஞ் செய்தவா, தொந்தங்களனைத்தையுங் கொய்தவா, பீமனுடெதிர்த் தவனுக் கருள் தந்தவா, சுதர்மன்விட்ட சுழல்பாணத்தாற் சுழலுமருச்சுனன் தேரைநிறுத்திக் களிப்படைந்தவா அடியேனுக்கனுக்கிரகம் புரிந்தவா, அனுபோகமனைத்துந் தெரிந்தவாவென்றுபற்பல விதங்களாகத் தோத்திரஞ்செய் தேத்தும்போது,

அதுதெரிந்த அனுமார் உடனே ஸ்ரீ மந்நாராயணனுக்கு மிகவும் நேசனே, சாதுக்கள்பால் மிகவும் விசுவாசனே, இராமாயணத்தை நவநவமாய் விரித்துரைத்த விலாசனே, ஓ துளசிதாசனே, இதோ வந்தேன் வந்தேன் இதுகால பரியந்தம் சிந்திக்காம லிருந்ததற்கு நொந்தேன் நொந்தேன், இப்போதென்னை நினைத்ததற்கு வந்தேன்

வந்தேன், என்னுடைய தரிசனமிதோ தந்தேனென்றுரைத்துக்கொண்டேவந்து பிரசன்னமாக நின்று பிரமானந்தம் விளங்கிய முகத்துடன் பல ஆசிகள் வழங்கி ஆதித்தனைப் போற்றுலங்கி நிற்கும் ஆஞ்சநேயர் திருவடிகளிலரிதாசன் சிரசாஷ்டாங்கமாக வந்தனம் புரிந்து மிகவும் பரிந்து அத்தியந்த பக்தியுடன் அனுசரித் தண்டிப்போற்றி புகழ்ந்து பொங்கிப்பூரித்து மகிழ்ந்து ஓ என் சத்குருநாதனே மெய்ஞ்ஞான போதனே! கமலம்போன்ற பாதனே! மூற்றுந் துறந்த அவதூதனே! அரிஷ்ட வர்க்கத்தைவென்ற நீதனே! என்னை யிப்போதே யாட்கொள்ளும் ஸ்வாமியென்று அஞ்சலியஸ்தனாய் நிற்கும்போது ஆஞ்சனேயர் துளசிதாசரை பட்சமாகப்பார்த்து மார்புடன் சேர்த்து ஓ அரிபக்தனே! ஜீவன்முக்தனே! என்னையேன் நினைத்தீர் என்மனதை என் கரைத்தீர் அபயமென்றேனுரைத்தீர் நெடுநாளாக மறந்திருந்தின்றைக்கேன் விளித்தீர் சீக்கிரமுமக்குற்ற குறையைசொல்லும், அஞ்ஞான மனதைக் கொல்லும் காமாதிகளை வெல்லும், க்ஞான த்ருஷ்டியில் நில்லும், ஜாக்ராவஸ்த்தையான எல்லும் சுழுப்தி யவஸ்த்தையான அல்லும் அற்ற ஆத்மாவைபுல்லும், ஆனந்தமேடையிற் செல்லும் என்றிவ்விதமாய்ச்சொல்லும் தாதராயன் புதல்வனைக் கல்வியிற்றெளிந்த மூதல்வனைத் துளசிதாசர் பணிந்து பாதங்களில் நயனங்களையணிந்து ஓ ஷ்வாமி! கருவிக ளொடுங்குவதாகியும், காதலெல்லாமடங்குவதாகியும், நானென்பதற்றதாகியும், நாளுமோரியல்புற்றதாகியும், இருளஞ்ஞான மில்லாததாகியும், அருள்மெய்ஞ்ஞான முள்ளதாகியும் பிரபஞ்ச சேஷ்டைகளில்லாததாகியும், பிரமமாத்திர முள்ளதாகியும், துன்பமெப்பொழுது மில்லாததாகியும், இன்ப மெப்பொழுதுங் குறையாததாகியும், என்றும் நிறைவானதாகியும், ஆதிமத்தியாந்த ரகிதமாயும், சோதி நித்யானந்த சகிதமாகியும், அற்புதமாகியும், நித்யமாகியும், சத்தியமாகியும், நிஷ்களமாகியும், புஷ்களமாகியும், எல்லாமாகியு மெல்லாமல்லாததாகியும், விலட்சணமாகியும், சுலட்சணமாகியும், நிர்விகாரமாகியும், நிரூபமாகியும், சொரூபமாகியும், யாதொரு வஸ்துவுண்டோ அந்தப் பரம்பொருளை அடியேனுக் கனுக்கிரகபுரிந் தாட்கொள்ளுமையாவென்று தாட்களில் வீழ்ந்த அரிதாஸனை,

அநுமார் அன்புடன் நோக்கி துன்பிணைப் போக்கி அப்பா ஞான பொக்கிஷமே! மெய்ப்பொருளுரைப்பது கச் சகமே! ஆயினும் நீர் முன்சென்மத்திலுரைத்த இராமாயணமே நீர்கேட்ட மெய்ப்பொருளையறியும் சூட்சமம், இதை யாராயிலுண்டாகும் மோட்சம், எப்படி யென்பாயே லிக்காசியில் நாராயணன் கதையான இராமாயணத்தைப் பூராயமாய்ப் பாராயணஞ்செய்து தராதலம்புகழும் புராணிகராகித் தராதரத்தையும் பராபரத்தையும் கரதலா நெல்லிக்கனிபோலுணர்ந்த உத்தவதாஸென்னும் பிர்மக்ஞானியானவர் இராமாயணத்துக்கெல்லாம் ஞானுர்த்தஞ் செய்வதைக் கேள்விப்பட்டுப் பந்தபாசங்களிலிருந்து விடுபட்டு நானென்னு மகங்காரங்கெட்டுச் சங்கல்ப விகல்பமும் கெட்டு அங்கமேலாசையும் விட்டு அரியரஸ்மரணையும்விட்டு தேகஸ்மரணையுந் திக்குதேசாதிகளிறந்து அனேகர் தறிபோற் சமாதி யடைந்திருக்கிருர்கள். நானுமப்படியே பிரமானந்தத்துள் மூழ்கி பிரமைகளெல்லா மாழ்கித் தன்னை மறந்திருந்தவன் உன் தோத்திரமென்னும் வன்னியென் சென்னியைக் கொளுத்த மெள்ள வராமற் றுள்ளிவந்தேனென் றறைய, துளசிதாசர் ஆஞ்சநேயர் திருவடிகளில் தன் முடியை வணங்கி என்னை பிணங்கியிருக்கும் நுணங்கினற் சுனுங்கி உணங்கினே னென்னை யிணங்கிய குருவே! எழிலலர் தருவே! இன்பமா முருவே! ஏகமாம் அருவே! பரிமள மருவே! பாக்கியத்திருவே! பயனருள் தெருவே! பண்பருள் சருவே! தனை நிகரான அந்தணரும் தேவரீருஞ் சிரவணஞ்செய்த ஞான இராமாயணத்தை அடியேற் குபதேசித்தாட்கொள்ளும் ஸ்வாமியென்று வணங்கிய துளசிதாசரை அநுமார் மார்புடனணைத்து ஒ அரிதாஸரே! சுவிசேஷனே! காட்சியைக் கொடுக்கும் மாட்சிமையான நீட்சிக் குழலுள்ள விசாலாட்சி வீற்றிருக்கும் இவ்வாரணசியிலிருந்தால் விசேஷமென்று வசிஷ்டர் ஓர் பூசுரனுக வந்து உத்தவ தாசனெனப் பேர்பெற்று அத்தியாத்ம இராமாயணத்தைப் பாராயணஞ் செய்வதை நாட்டைவிட்டுக் காட்டிலிருக்கும் ஓதுதற்கரிய மாதவரெல்லாம் அந்தணர்களாகச் சிரவணஞ் செய்ய இக்காசியில் வந்ததை யானறிந்து நானுமிங்கடைந்து அத்தியாத்ம இராமாயணத்தைச் சிரவணஞ்செய்து சமஸ்த வாசைகளையுங் கொய்து பரவசமா

னேன், அதைச் சுருக்கமாக வரைகின்றேனிற்சலமனது டன் கேட்டு உற்சாகமடைவீரெனச் சொல்லத்தொடங்கினர்.

எப்படியென்றால், மோட்சமென்னு மயோத்தியில், பிரமமென்னும், தசரதன் ஞானசத்தி இச்சாசத்தி கிரியாசத்தியென்னும் மூன்று மனைவியருடன்கூடி வாழ்கையில் க்ஞானசத்தி யென்னும் கௌசலையின் கர்ப்பத்தில் ஆத்மாவென்னும் ஸ்ரீராமன் பிறந்து அவ்வியக்தமென்னும் பால்யத்தாற் றன்னைமறந்து அஞ்ஞான மயனை சீவனே தானாகித் தேகேந்திரியாதிகளுக்குக் கோனாகிச் சிரவணமென்னும் வசிஷ்டரையடைந்து மனனமென்னும் விசுவாமித்திரரைத் தொடர்ந்து வைராக்கியமென்னும் லட்சுமணருடன் நடந்து பஞ்சமா பாதகமென்னும் பர்வதங்களைக் கடந்து காடு, மலை, வனம், வனாந்திரங்களைக் கடந்து ஆத்மாராமனென்னும் பரமேட்டி ஞானமென்னும் பாணத்தைத் தீட்டி ஆவரணமென்னுந் தாடகையை மாட்டி அடியோடு மிறந்துபோக வாட்டி இச்சையென்னும் மாரீசனுக்குப் பயங்காட்டி என்னெதிரில் வந்தால் சாவாயென்றோட்டி விபசாரமென்னும் பாறையை மிதித்து ஆசாரமென்னு மகலிகையை துதித்து ஏகாந்தமென்னு மிதுலையிற் சேர்ந்து சாந்தமென்னுஞ் சனகரைச் சார்ந்து பொறுமையென்னுங் கார்முகத்தை யொடித்து ஆனந்தமென்னும் ஜானகியின் கைபிடித்து மதமென்னும் பரசுராமனை யெதிர்த்து யென்றும் மதமெழாமல் விதிர்த்து மோட்சமென்னு மயோத்தியிற் புகுந்து ஜீவன் நானல்லவென்றுவந்து பிரமமென்னுந் தசரதனைக்கூட ஜீவத்வமறலென்னும் மகுடாபிஷேகத்தை நாடகக்கிரியையென்னுங் கைகையினுடைய சலனமென்னு மேவல் வந்தடைய பிரமமென்னுந் தசரதனைப் பிரிந்து மோட்சமென்னு மயோத்தியைத் துறந்து வைராக்கியமென்னும் லட்சுமணனுடனே ஆனந்தமென்னும் வைதேகியுடனே சித்தமென்னுஞ் சரயுநதியைத் தாவிப் புத்தியென்னுங் குகன்றனைமேவி விசேபமென்னும் வனத்தினுட்சென்று தபமென்னும் சித்திரகூடத்தில் நின்று அகங்காரமென்னும் விராதனைகொன்று மனமென்னும் காகாசுரனை வென்று சங்கல்பமென்னும் கண்ணைக்கெடுத்து நிருவிகல்பமென்னுங் கண்ணைக் கொடுத்து வீரமென்னு மகஸ்தியரைக் கண்டு தீரமென்னு மஸ்திரம் பெற்றுக்கொண்டு

காமமென்னுஞ் சூர்ப்பனகையைத் தண்டித்து ஆகாமியமென்னுங் கரதூஷணுதியரைக் கண்டித்து இச்சையென்னும் மாரீசனுலே ஆனந்தமென்னுஞ் சீதையைப் பிரிந்ததாலே இராசதமென்னு மிராவணனடுத்து ஆனந்தமென்னுஞ் சீதையையெடுத்து இன்பமென்னும் வைதேகியையுருக்கும் துன்பமென்னும் லங்கையிலிருக்கும் அசுபவாசனையென்னு மிராக்கதர் மொய்க்க எண்ணமென்னும் அசோகவனத்தில் வைக்க ஆத்மாவென்னும் ஸ்ரீராமன் கடுகி இச்சையென்னும் மாரீசனை மூடுகி நிராசையென்னும் பூமியின்மேற் சாய்த்து என்றைக்குந் தன்முன் வராமல் மாய்த்து ஆனந்தமென்னு மைதுலியால் வந்து இல்லாம லாத்மா இராமன் நொந்து வைராக்கியமென்னும் லட்சுமணனுட னயர்ந்து விட்சேபமென்னுங் கானகத்திலலைந்து சிந்தனையென்னும் கவந்தனைக்கொன்று சந்தோஷமென்னுஞ் சவரிபாற்சென்று நித்தியாசனமென்னு மனுமானைக்கூடி ஆனந்தமென்னுஞ் சீதையைப்பாடி ஜனனமென்னுஞ் சப்த தருக்களைக்கொய்து பயமென்னும் வாலிமே லம்பெய்து அபயமென்னுஞ் சுக்ரீவனை காத்து சுபவாசனை யென்னும் வானரங்களைச் சேர்த்து நித்தியாசனமென்னும் அனுமானைத் தூண்டி மோஹமென்னுஞ் சமுத்திரத்தைத்தாண்டி லோபமென்னு மலகணியை தொலைத்து அசுப வாசனையென்னு மிராக்கதரைக் கலைத்து ஆனந்தமென்னுஞ் சீதையைக்கண்டு உல்லாசமென்னு மனுபூதி மேற்கொண்டு எண்ணமென்னு மசோகவனத்தையழித்து அஞ்ஞானமென்னும் மாலியவானைக் கிழித்து சந்தேகமென்னும் மட்சயனைக் கழித்து விபரீதமென்னு மிந்த்ரசித்தனைப் பழித்து மயக்கமென்னும் பாசத்தை வெதிர்த்து இராசதமென்னு மிராவணனை யெதிர்த்து மௌனமென்னும் மக்கினியைப் பெருக்கித் துன்பமென்னும் லங்கையைக் கருக்கி மோகமென்னும் வாரியைச் சுட்டித் திடமென்னு மணையைக் கட்டிச் சாத்வீகமென்னும் விபீஷணனைக் கிட்டி இங்கே தாமஸமென்னுங் கும்பகர்ணனை வெட்டி இது இராசதமென்னு மிராவணனை யதட்டி விபரீதமென்னு மிந்த்ரசித்தனை மூட்டி மயக்கமென்னும் பாசத்தால் மயங்கி வைராக்கியமென்னு மிலட்சுமணனுடனுயங்கி நீத்தியாசனமென்னும் அனுமார் களிக்க நிஷ்டை யென்னுஞ்

சஞ்சீவியை யளிக்க வைராக்கியமென்னும் லட்சுமணர் கதிக்க விபரீதமென்று மிந்திரசித்தனைச் சிதைக்கச் சஞ்சிதமென்னு மூலபலமெதிர்க்க திரமென்னு மோகனுஸ்திரம் வதைக்க அசுபவாசனை யென்னு மிராக்கதர் முடிக்கச் சுபவாசனையென்னும் வானரங்கள்கெடுக்க ஆத்மாவென்னும் ஸ்ரீராமன் கடுத்துக் கெம்பீரமென்னுங் கோதண்டமெடுத்து இராசதமென்னு மிராவணனை யடுத்து ஞானமென்னும் பாணத்தைத் தொடுத்து நானென்னுங் கலசத்தை யுடைத்துத் தசேந்திரியங்களென்னுந் தசமஸ்தகங்களை யுடைத்து ஆனந்தமென்னுஞ் சீதையைகண்டு மௌனுக்கினியிற் குளியென்றுவிண்டு பிரமமென்னுஞ் சதரதனை நாடி ஆனந்தமென்னுஞ் சீதையைக் கூடி மோட்சம் யென்னும் அயோத்தியிற் புகுந்து ஜீவத்வமற லென்னும் மகுடாபிஷேகம் புனைந்து பிரமமென்னுந் தசரதனை தானுகி மோட்ச மென்னு மயோத்தியிற் புகுந்து ஜீவத்வமற லென்னு மகுடாபிஷேகம் புனைந்து பிரம மென்னுந் தசரதனை தானுகி மோட்ச மென்னுமயோத்திக்குக் கோனுகிக் கேவல கைவல்ய பிரமானந்த சொரூப சாட்சாத்காரமாய் பிரகாசித்தாரென்று ஞாயரேத்து மாஞ்சனேயர் பகர்ந்து சந்தோஷ மேவீட்டா லானந்த நிர்த்தனஞ் செய்யத் தொடங்கினர்.

இந்தப்படி க்ஞான ராமாயணத்தைகேட்ட துளசிதாசர் தன்னை மறந்து ஆனந்தத் தாண்டவஞ் செய்யத்தொடங்கினர். அதைக்கேட்ட யாவரும் புகழ்ந்தார்கள், தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள், மூவர்கள் கொண்டாடி மகிழ்ந்தார்கள், ரிஷிகளெல்லாம் மடத்தில் நிறைந்தார்கள், சித்தர்களிதுவே மோட்ச மார்க்கமென் றறைந்தார்கள், சகலருந் துவிதயானையைத் துறந்தார்கள், மெழுகைப்போற் கறைந்தார்கள், பிர்மத்திலிறந்தார்கள், பிரமஆவரூபமா யிருந்தார்கள், தேவர்களெல்லா மங்கேயே கூடினூர்கள், ரம்பையர் நடனமாடினூர்கள், தும்புருநாரதர் சங்கீதம்பாடினூர்கள் அனுமாரைக் கொண்டாடினூர்கள், அப்போ துண்டாகிய வேதகோஷ்டங்களினுலும் சிவ சங்கீர்த்தனங்களினுலும் விஷ்ணு சங்கீர்த்தனங்களினுலும் அனுமாருந் துளசிதாசரும் தங்களுடைய ஆனந்த நடனம்நீங்கிப் பிரமானந்தமோங்கித் தேவரிஷிகள் பாதங்களைத் தாங்கி இன்பமேலீட்டாற்றேங்கி.

வேதாந்த வார்த்தைகளாடி நிர்க்குண கீர்த்தனங்களைப்பாடி ஆஞ்சனேயர் முதலானவர்களும் துளசி தாசரிடம் விடை பெற்றுக்கொண்டுதங்கள் தங்களிருப்பிடஞ்சேர்ந்திருந்தார்கள் கேட்டீர்களோ சித்தர்களே என்று பின்னும் நாபாஜிசித்தர் சொல்லத்தொடங்கினர்.

ஞானோபதேச அத்தியாயம் முற்றிற்று.

பத்தாவது அத்தியாயம்

துளசிதாசர் மடத்திற்கு பகவான் காவலாயிருந்தது.

கேளுங்கள் சித்தர்களே! சற்சங்கத்துக்குரிய பக்தர்களே! ஆஞ்சநேயர்முதலானோர் தங்கடங்களிருப்பிடம் சேர்ந்தபின் காசிதேசத்திலுள்ள சகலரும் துளசி தாசரை வணங்கி இணங்கி, ஓ சுவாமி நீரே எங்களுடைய சற்குருநாதன் நீரேமெஞ்ஞானபோதன் நீரேசகலரும்தொழும் ஜகநாதன் நீரே சுத்த சாஸ்விதவினோதன் நீரே எங்களுடைய பாபங்களைப்பரிகரிக்கும் நீதன் என்று தோத்திரஞ்செய்தேத்தும்போது துளசி தாசர் அனைவரையு மன்போடு வுபசரித்து அத்தியந்த பக்தியுடனனுசரித்து மடத்திலிருக்கும் சாதுக்களைப்பார்த்து கரங்களைச்சேர்த்து இன்றுமுத லிம்மடத்திலிருக்கும் வஸ்துக்களை வேண்டினவர்க்களித்து நீங்களுங் களித்துப் பகவத்பாராயணஞ் செய்துக்கொண் டன்புடனிருங்களெனத் திருவாய் மலர்ந்தருளி வார்த்தையாடலுங் குறைந்து ஏகாந்தஸ்தானமடைந்து தானம், நிதானம், தியானம், க்ஞானமெனும் நான்கையுங்கடந்து மௌனத்தைநாடிப் பிரமநிஷ்டையைக் கூடி பரமானந்த வாரியிற் படிந்திருந்தார். இங்ஙனம் சில நாள் கழிவுற ஒருநாளிரவில் துளசிதாசர் மடத்தில் நெடுநாளாயிருந்த சாதுக்களில் நால்வர் மேல்வருங் காரிய மறியாதவர்களாய் மடத்திலிருக்கும் சில வற்புதவஸ்துக்களைச் சொற்பமாயுன்னாது கரவடமாக வெடுத்துக்கொண்டு நடுராத்திரியில் பிறரறியாமல் மடத்திலிருந்து வெளிப்படுந் தறுவாயிலிதையறிந்த பகவான் ஸ்ரீராமலட்சுமணராய் வந்து சாதுக்களைத்தடுத்து யாரடா நீங்கள் துளசிதாசருடைய சொத்துக்

களை ஆசையால் மோசஞ்செய்து எடுத்துக்கொண்டு போகி றீர்கள் நில்லுங்கள் நில்லுங்கள் காவற்காரர்களாகிய எங்க ளுக் குத்தாரஞ்சொல்லுங்கள் சொல்லுங்களென் றதட்டினார் கள். அதற்கந்தப் புரைசாதுக்கள் இருட்டினால் ஸ்ரீராமலட்சு மணரென் றறியாமல் யாரோ சேவகர் மறிக்கிறார்களெனப் பயந்து நயந்து முன்னிட்டகாலைப் பின்னிட்டு மடத்துட் பிரவேசித்து சற்றுநேரம் யோசித்து மற்றோர் வழியாக அதிக பரபரப்போடும் வெளிப்பட்டுப் போகும்போது அங் கேயும் ஸ்ரீராமலட்சுமணர் வந்து மறித்துக் கொக்கரித்துக் கரவடர்மேற்குதித்துத் துளசிதாசரைத துதித்து அடா திருட்டுக் குருட்டுப் பிரட்டு முரட்டுக் காவடரே! காருண்ய மில்லாக் குரவரே! என்னடா கொண்டுபோகிறீர்களென மிர ட்டினார்கள்.

அதற்கத்தேவர் ஒருபாலொதுங்கிப் பதுங்கி மயங்கித் தயங்கி மடத்தினுள்வந்து மிகவும் நொந்து சாதுக்களுக்குப் புலப்படாமுன்னமே வெளிப்படவேண்டு மென்னுங் கருத் தால் வேறுவழியாகச் சந்தடியின்றி வெளிப்பட்டு மெள்ளப் போகும்போது அங்கேயும் ஸ்ரீ ராமலட்சுமணர் சந்தேகமி ன்றி அவராருகிற்சென்று எதிரில் நின்று மெதுவாய் அடா கள்ளப்பயல்களே! மெள்ள எங்கேயடா போகிறீர்களெனத் தடுத்தார்கள். அப்போது பிறர்செய்த தப்பிதத்தால் பிரமித் துக் கம்பித்து ஸ்தம்பித்து மர்மம் வெளிப்படும்போ லிருக் கின்றதே யென் றாகித்து அச்சேவகரை நோக்கி, ஓ காவல ரே! நீங்களும் நாங்களும் இதைப் பாகித்துக் கொள்ளலாம் வருவீர்களென் றழைத்தார்கள். அதுகேட்ட ஸ்ரீ ராமலட்சு மணர் ஓ அந்தணர்களே! இப்போது நாம் பாகித்துக்கொள் வது பணத்தையா பாபத்தையா சொல்லுங்களென மறை யோர் பணத்தையும் பாபத்தையும் பாகித்துக் கொள்ளுவோ மென இராம லட்சுமணர் எங்களுக்குப் பணம்மாத்திரங்கொ டுத்தால் சம்மதமின்றிப் பாபத்தை யேற்றுக்கொள்ள சம்மத மில்லையெனப் பூசுரர் அப்படி சொர்னத்தையே பங்கிட்டுக் கொள்ளுமென இராமலட்சுமணர் நீங்கள் விப்பிரர்களாயிரு ந்துந் தப்புக்காரியங்கள் செய்தல்தை நாங்கள் பிரத்தியட்சமா யறிந்திருந்தும் தப்பித்துக் காத்தல் செய்ததில் பாதி கவர்ந் தால் பாபம் வந்தடையும் அது நீங்களிதுகால பரியந்தம்

துளசிதாசருக்குச் சேவைசெய்த புண்ணியத்தை எல்லாந் தாரைவார்க்கின்றீர்களாவென ஆதிவருணர் அப்படியே ஆகட்டும் சீக்கிர மிவ்விடம்விட்டுப் புறப்பட்டு வாருங்களென ஸ்ரீராம லட்சுமணர் நாங்கள் இவ்வூரரசன் கட்டளைப்படி மகானுபாவராகிய துளசிதாசருடைய மடத்துக்கு காவலாளரா யிருக்கின்றோ மாதலா லிவ்விடம்விட்டு மூன்றுஞ்சாமம் வரையி லடிபெயர்த்து வைக்கமாட்டோம் அன்றி நீங்களிக வின்பிணைத் துச்சமாக நினைத்துச் சொச்சரூபமான பாமபதத்தை யிச்சித்து வெகுநாளாகத் துளசிதாசருடைய சேவை செய்து அபகரித்த வஸ்துக்க ளிவ்வளவுதானோ வென புரையோர் ஓ காவலரே விபசாரிக்கு நீதியுரைப்பதுபோலக் கள்வராகிய எங்களுக்கு மூத்தி விவரணையைச்சொல்ல வந்தீர்கள் சாதுக்கள் விழித்துக்கொண்டால் மானம்போகும் சீக்கிரம் இவ்விடம்விட்டு நீங்கலாமென இராமலட்சுமணர் நீங்கள் கொண்டுவந்த வஸ்துக்களை யெல்லாங் கொடுத்து நீங்கள் செய்த புண்ணியத்தையெல்லா மெங்களுக்குத் தாரைவார்த்தாலன்றி உங்களை விடமாட்டோமென அதற்கு ஆசையில் மிக்க பூசுரர் நீங்களிருவரும் நடுக்கொள்ளைக்காரர்களாக வந்தீர்கள் பேராசையுள்ள நீங்க ளேவலாளரென்ப தபத்தம் எங்களைப்போன்ற உங்களுக்கு பாகமே கொடுக்கலாகாது அப்படியிருக்க புண்ணியங் கொடுக்கக் கூடுமோவென ஸ்ரீராமலட்சுமணர் பலவந்தமாக பாகங் கொடுப்போமென்று நீங்களே யுரைத்து எங்களைக் கள்வராகத் தீர்மானித்தீர்க ளினிப் பங்கும் வேண்டாம் பாபமும் வேண்டாம் உத்தமோத்தமராகிய துளசிதாசருடைய சொத்துக்களை அவருக்குக் கொடுப்பிக்குங் காரியமே எங்களுக் குரியதென முப்புரிநூலோர் அப்பப்பா இத்தருணத்தில் எங்களைத் தப்பிக்காமல் சோரரென மெய்ப்பிப்பது தப்பிதமல்லவா எப்படியாகிலும் தப்பிப்பீர்களென வேண்டக் கோதண்ட அஸ்தர் அப்பப்பா விபசாரிகளிடமும் கள்வரிடமும் பொய், கொலை, நிந்தை, கோபம், குரோதங் கொண்டிருக்கு மாதலா லிவ்வுலகில் சோரரைப்போன்ற நேரஸ்தரியாருமில்லை உங்களை விட்டா லெங்களுக்குவரும் பெருந்தொல்லை இனி நீங்களிருவரும் இவ்வெல்லை கடந்து போக வேண்டாமென மெங்கள்சொல்லைக் கடக்கவே வேண்டாமென் றறையப் பார்ப்பார் ஓ காவலரே! எங்களைக் காட்டாம

லும் வாட்டாமலும் இவ்வஸ்துக்களையும் நாங்கள் செய்த எல்லாப் புண்ணியத்தையும் கைக்கொண்டு விட்டுவிடக் கிருபை கூறுங்களெனத் தானவநாசர் விபசாரியையும் சோரரையும் விடக்கூடாதென வேதம் முறையிடுகின்றதே யெனவேதியர் நாங்கள் விப்பிரர்களாதலால் எங்கள் தப்பிதம் பார்க்காமல் மன்னியுங்க ளெனப் பக்த பரிபாலனர் சோரஞ்செய்த அகலிகை முதலான ஸ்திரீகளும் சோரஞ்செய்த அஷ்டவசுக்களும் சாபத்துக் குள்ளானார்க ளன்றித் தப்பிப்போக வில்லை யாதலால் கள்வருக் குபகாரஞ்செய்தவர்கள் கடுநரகடைய வேண்டுங் காரணத்தா லுங்களை விடுவ தினி யில்லை யில்லை யென் றறையப் பூசுரர் தெரியாம லிக்குற்றத்துக் கானோம் இனி எங்களாயுள் பரியந்தம் களவுசெய்ய மாட்டோமென்று வணங்கத் தசரத புத்திரர் விழியில்லாதான் வழியறியாததுபோலச் சாஸ்திர மறியாதவர்களே தப்பு வழியில் நடப்பார்கள். நீங்கள் வேதாதிகளை வோதியிருந்தும் அநீதிக்குட்பட்ட காரணத்தால் விடுவதில்லை மடத்துக்குள் நடப்பதே யோக்கியமென முடுக்கினார்கள். அதனால் அச்சத்தில் மிகுந்த அந்தணர்க ளபகரித்துவந்த அறிய வஸ்துக்களை அவ்விடத்தி லெறிந்து குடுகுடுவென மூலைக்கொருவரா யோட்ட மெடுத்தார்கள். உடனே ஸ்ரீராம லட்சுமண பரத சத்துருக்கரானவர்கள் பின் திடுதிடென்றோடி நால்வரையுங் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டுவந்து அவர்கள் கொண்டுவந்த பொருள்களை அவர்கள் மஸ்தகத்தின்மே லேற்றி அடா சோரரே! வீரராகத் திரம்பேசிக்கொண்டு மெள்ளப் போகாமல் துள்ளியோடி வொளிக்க எத்தனித்தீர்களோ எல்லா வற்றிலும் ஈனச் செய்கைக் குட்பட்டதால் அபகரித்தபொருளும் புண்ணிய மனைத்துந் தத்தஞ்செய்ய வொப்புக் கொண்டீர்கள் நயமொழிகள் விண்டீர்கள் கொடியோராகிய உங்களுடைய புண்ணியமும் பாபமே யல்லவோவென் றுரைத்துக் கழுத்தைப் பிடித்து நெட்டி மடத்துக்குட் டள்ளி ஓ ஓ கள்ளர் புகுந்தார்கள் என்று ஓசையாகக் கூச்சலிட்டு மடத்திலுள்ள சகலரும்விழித்துக் கொள்ளும்படியாய்ச்செய்து மாயமாய் மறைந்தார்கள்.

உடனே சாதுக்கள் வெளிப்பட் டோடிவந்து கரவடஞ்செய்த நால்வரையும் தள்ளிக்கொண்டே மடத்துட்கொண்டு

போய்த் தீபவெளிச்சத்திற் பார்க்கையில் தங்களிற்சேர்ந்தவர்களா யிருக்கக்கண்டு பெருங்கோபங்கொண்டு அடா விசுவாச துரோகிகளே! அவிவேகிகளே! இகபோகிகளே துன்பரோகிகளே! அற்பமோகிகளே என்றடித்து வைது கவர்ந்த சொத்துக்களுடன் துளசிதாசரிடங் கொண்டுபோய் நிறுத்தி ஓ ஸ்வாமி! இந்த மூடாத்மாக்கள் தங்களுக்குத் தேவையானதெங்களைக் கேட்டெடுத்துக்கொண்டு போகாமல் வவ்வுதல் செய்து போகும்போது காவலர்கள் கண்டுபிடித்து எங்களிடமெய்ப்பித்துப் போய்விட்டார்கள் இவர்களை உதயமானதே அரையனிட மொப்பிக்கிறே மென்றுரைக்க, துளசிதாசர் சாதுக்கள்மேல் முனிந்து அந்த கள்ளச்சாதுக்களைப் பணிந்து ஓ விப்பிரரே! இந்தச் சாதுக்கள் செய்த தப்பிதத்தை மன்னித்து என்மேல் கருணைகூர்ந்து உங்களுக் கிஷ்டமானதை யெடுத்துக்கொண் டிப்போதே போகலாமென வணங்க அதுகேட்ட சாதுக்கள் ஓ ஸ்வாமி! நாங்கள் களவுசெய்து இவ்வஸ்துக்களைக் கொண்டுபோகத் துணிந்து இராத்திரியெல்லாம் பட்டபாடு சொல்லமுடியாது அது நினைவில் வந்தால் எங்கள் நெஞ்சம் பிளந்துபோகின்ற தன்றேவென்றழத் தொடங்கினார்கள். அதற்கவ் வரிதாசர் மிகவும் முனிவுகொண்டு உமக்கிஷ்டமான தெடுத்துக்கொண்டு போவதைத் தடுத்துங்களுக் கஷ்டங்கொடுத்த துஷ்டர்கள் யாரென்றார். பூசுரர் ஓ ஸ்வாமி! நமதுமடத்து வாயில்களி லியாரோகாவலிருந்துகொண்டு தூஷணவார்த்தைகள் விண்டு புறம்போகாமற் றடைசெய்து வெகுநேரமாய்க் கைதிசெய்து வைத்ததன்றிப் பலருமறியக்காட்டி கரமுஷ்டிகளா லெங்களை வாட்டிமானத்தைவாங்கி ஈனத்துக்குட்படச் செய்தார்களென தொழ அரிதாசர் வெகுண்டு ஓ பரமசாதுக்களே! உங்களை வைததார் அவர்களைக் காண்பியுங்க ளிப்போதே இறுகக்கட்டி இரண்டு துண்டாகவெட்டி எமபுரத்துக் கனுப்புகிறேனென்றார் வாளையேந்திக்கொண்டு வெளியே புறப்பட்டார்கள் உடனே கள்வர்கள் நால்வரும் நெடுந்தடிகளெடுத்துக்கொண்டு தீவட்டிகளுடன்புறப்பட்டு மடத்துநான்கு வாசலிலும்பார்த்து காவலரைக்காணமல் இப்போதிருந்தவர்க ளெங்கேயோ மறைந்தார்களென் றுரைத்தவர்க்ளைக் கைப்பிடியாகப் பிடிக்கவேண்டுமென்கிற ஆவேஷத்தாற் பல பக்கங்களிலுந் தேடலுற்றார்கள்.

துளசிதாசர் காவலரைத் தேடும் வேதபாலகரை விளித்து உங்களைத் தடுத்து அடித்தவர்களின் மண்டை சிதறப் புடைக்கிறேன் சீக்கிரங் காட்டுங்க ளென்று ஆக்ரோஷத்துடன் அட்டகாசஞ்செய்து தெருவீதியில் நின்றிருந்தார் மேற்குலத்தோர் நாற்றிசையினுந் தேடிக் காணுமல் அரிதாசர் பக்கலடைந்து காவலரைக் காணேமென்ருர்கள். பரம பாகவதன் அந்தக் காவலர்க ளெவ்வித ரூபமுடையவர்கள் என்ன ஆயுதத்தைப் பிடித்துக்கொண் டிருக்கிறவர்களென்று கேட்கும்போது இவ்வித ரூபமுடையவர்கள் தானப்பாவென்று ஸ்ரீராம லட்சுமண பரத சத்துருக்கர் நால்வரும் துளசிதாசர் முன்னின்று தாங்களே உம்முடைய அன்பர்களை மறித்தவர்களாதலால் எங்களை உமது கைவாளால் வெட்டிவிடுமென் றுரைத்துத் தங்கள் கையிலிருக்கும் அம்பு வில்லுகளை கீழேவைத்து குனிந்து நின்ருர்கள். அப்போது அரிதாசர் தன் கையிலிருந்த வாளைக் கீழெறிந்து அஞ்சலியஸ்தராய் நின்றுக்கொண்டு ஓம் அரி அரி முராகரி நரகரி அம்புஜாக்ஷரி மாதவா யாதவா ராகவா கேசவா ஸ்ரீராமா பரந்தாமா பத்மநாபா பரமசொரூபா கார்வண்ண கமலக்கண்ண அனுதரக்ஷகா அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகா இராவணமர்த்தன ஒ ஜனுர்த்தன வெனப் பற்பலவிதங்களாகத் தோத்திரம் புரிந்து மிகவும் பரிந்து ஓ என்தெய்வமே நீ யென்றறியாமற் போனேனே ஆதரவற்றவ னுனேனே முன் னுனக்குட்பட்டேனே இப்போது மறந்துவிட்டேனே கோபத்துக்குட்பட்டேனே ஆ கெட்டேனே யென்று பற்பல வார்த்தைகள்புகன்று பாதங்கள்மேல் வீழ்ந்து ஓவென்ருேலமிட்டமுந் துளசிதாசரை ஸ்ரீராமர் வாரியெடுத்து மார்புடனணைத்துக்கொண்டு ஓ மெய்ஞ்ஞான விலாசனே! எனக்குரிய நேசனே! சுயம்பிரகாசனே! துளசிதாசனே! பிரமக்ஞானத்தாலென்னை மறந்துவிட்டாயா வென்று திருவாய் மலர்ந்தருள அதற்குத் துளசிதாசர் ஓ தெய்வமே! நீயன்றிப் பிரமமென்பது வேறுண்டோ? உமது வட்சஸ்தலத்தில் வீற்றிருக்கும் சீதாபிராட்டியன்றி ஆனந்தமென்பது வேருென்றுண்டோ? வேறுண்டென்பவர்க்கு மோட்ச வீடுண்டா உம்மை நம்பினேர்க்குங் கேடுண்டா? உம்மை வெட்டும்படியான வாளுண்டா? உம்மைப் பிரிந்த நாளுண்டா? ஓ பகவானே!

பகவானே! அடியேனியற்றிய குற்றங்களை நற்றவமாகவும் அடியேன் செய்த தூஷணைகளைப் பூஷணமாகவும் கொண்டு என்னையாட்கொண்டு உமக்குகந்த தொண்டுசெய்வதே தனை விண்டு கருணை கூறுமென்று பலதரம் வணங்கும் அரிதாசரைப் பகவான் கருணையுடன் நோக்கி ஓ பரம பாகவதனே! பரப்பிரம்மக்ஞானியே! உம்மை யறியாமல் எமது சொத்துக்களைக் களவு செய்துக்கொண்டு போகுங் கள்வரை மறித்தோமே யல்லது வேறுபசாரஞ் செய்யவில்லையே! ஓ உபகார புருஷனே! நன்மை செய்தவர்கட்குத் துன்மை செய்வது போல எங்களை வாளால் வெட்டத் துணிந்து வரலாமோ? நாங்கள் துன்பமுறலாமோ? ஓ சீவகாருண்யமுள்ள சீமானே உமக்கிவ்வளவு கோபமிருக்கலாமோவென்று கேட்க,

அரிபக்தன் ஓ அரிபரந்தாமா! ஸ்ரீரகுராமா வென்றுள்ள முருகி ஆனந்தக் கண்ணீர்பெருகிப் பலதரஞ்சூழ்ந்து பாதங்களிற் ருழ்ந்து ஓ ஸ்வாமி! புண்டரீகாக்ஷா! பூரணமருள் சூக்ஷா! அனேக கோடிகாலந்தவஞ்செய்தாலுங் கிடைப்பதற்கரிதான உமது திவ்விய தரிசனந்தந்து திருவாயால் வைது உத்தம அவ்ஸ்தங்களாலடித்து ஆட்கொண்ட புனிதர்களான இந்தச் சுதர்களோ அற்பமான சொத்துக்குரியவர்களாக மாட்டார்களோ? உம்முடைய அரிய தரிசனத்திலும் இச் சொற்ப வஸ்துக்க ளுயர்ந்ததோ? உமதுதிவ்விய கரங்களாலடிபட்ட இவ்விப்பிரர்கள் செய்த ஒப்பிலா மெய்த்தவமேதோ? என்னையனே நின்னுடைய திருவிளையாட்டைப் பிரமாதி தேவர்களாலுந் தெரிந்துக்கொள்ளக் கூடாதென்றால் என்னு லறிந்துகொள்ளக் கூடுமோ இவ்வுத்தமர்களை அடித்த திவ்வியாஸ்தங்களா லென்னை யோரடி அடிக்கலாகாதோ? அடித்தாற் சகல கர்மங்களும் நீங்கிப் போகாதோ? இவர்கள் செய்த புண்ணியமேதோ? நான் செய்த பாவமேதோ வென்னும் பற்பல வார்த்தைகளாடும் பரம பாகவதனை ஸ்ரீமந்நாராயணன் அஸ்த மஸ்த சையோகஞ்செய்து கருணை மழை பெய்து ஓ துளசிதாசரே! இந்தப் பார்ப்பார் நெடுநாளாக உம்மைச் சேர்ந்து பின்னு மூலகியலைச்சார்ந்து கர்மிகளாய் போகாமற் றடுத்தோம் ஆட்கொள்ள சலந்தொடுத்தோம் அல்லாமல் நல்லோரை யடுத்தவர்கள் பொல்லா நரகமடையலா

மா? ருக்மாங்கதன் பட்டணத்திலிருந்தவர்களெல்லாம் பரம பதமடையவில்லையா? உமக்குதெரியாதது மொன்றுண்டோ வென்றுரைக்க துளசிதாசர் ஓ மாதவனே! அடியேனுகிய கொடியேன்மீது உமது கருணை இப்படியு மிருக்க நானியற் றிய தபமேதோ? என்னைப்போல் பாக்கியமுடையவர்க ளிவ் வுலகி லொருவருண்டோ ஓ தெய்வமே! அரூபமாகியும் ஆன ந்த மாத்திரமாகியு மிரானின்ற பரப்பிரமமும் அடியார்கள் நினைத்தவண்ணமான ரூபமெடுத் தாட்கொள்பவரும் நீரன்றி வேறொருன்றுண்டா, பாரில்லாமல் நீருண்டா! உம்மையன்றி மெய்த்தெய்வ மொன்றுண்டா? உண்டெனச் சொல்வாருண் டா? அப்படி யுரைத் துமது மாயையை வெல்வாருண்டா? வெல்வதற் கொருவ ராதரவுண்டா? ஓ தேவாதிதேவா! வாசு தேவா? மகானுபாவா வென்று துதித் திருகும்போது பக வான் மிகவுமகிழ்ந்து, ஓ என்னன்பனே! மேலானயின்பனே! இனிமே லுன் சொத்தை யாருக்காவதுகொடு நாங்கள் தடை செய்ய மாட்டோ மெனப் பகர்ந்து அந்தர்த்தானமானுர்கள். பின்பு அரிதாசர் அரியின் திருக்கரங்களா லடிப்பட்டசாதுக் களி னடிகளிற்குழ்ந்து ஸ்ரீமந்நாராயணருடைய அஸ்தங் களா லடிபட்ட தனவான்களே! அரியி னரிதானதரிசனம் பெற்ற தனவான்களே! ஆண்டவன் திருவாக்கா லேசக்கேட் கும்படியான உங்கள் செய்தவமேதோ உங்கள்மீ திவ்வளவு காருண்யம் பகவானுக்கு வந்த காரணமேதோ? ஓ ஸ்வாமி களே! நிஷ்காமிகளே? நெடுநாளாய்ப் பகவானைப் பார்க்கா திருந்த இக்கொடியேனுக்கு அரியின் தரிசனந் தருவிக்கவும், உமது தபோமகிமையைச் சகலருக்குந் தெரிவிக்கவும், அற்ப மான இச்சொத்துக்களைக் கவர்ந்தீர்களோ? உங்களுடைய அற்புதமான தபத்தையறியாப் பாவியானேனே? தெரியா மையா லுங்களுக்கு சேவை செய்யாமற் போனேனே இனிமே லாவதென்னுற் ரொண்டு அன்புடன் செய்வித்துக்கொண்டு பேரின்ப மொழிகளை விண்டு முழுதுமென்னை யாட்கொண்டு கிருபை கூறுங்களென விண்டு அவர்கள் கரங்களைப்பிடித்துக் கொண்டு மடத்தினுள் வாருங்களென வேண்டிக்கொண்டு மடாதிபதிகள் நீங்களே யெனப் பகர்ந்து ஸ்ரீமந்நாராயண னைத் துதித்து ஆனந்த மேலீட்டாற் குதித்துப் பிரமானந்

தத்திற்சொக்கி மோட்ச வீட்டிற்புக்கி தன்னைமறந்திருந்தார். கேட்டீர்களோ சித்தர்களே யென்று பின்னுஞ் சொல்லத் தொடங்கினர்.

பகவான் காவலாயிருந்த அத்தியாயம்
முற்றிற்று.

பதினேருவது அத்தியாயம்
துளசிதாசரை சோதித்தது.

கேளுஞ் சித்தர்களே! துளசிதாச ரிப்படியிருக்குங் காலத்தி லோர்நாள் மமதாதேவி அனேக சாதுக்களுக் கன்னமிட எண்ணங்கொண்டு சுத்த ஏகாதசியின் மறுநாளிரண்டாயிரம் பிராமணர்களுக்குச் சந்தர்ப்பணஞ்செய்து சகலரும் அன்னம்புசிக்குந் தருவாயில் பகவானே ரந்தணனுகி மடத்துட்பிரவேசித்து துளசிதாசருக்கு வந்தனஞ்செய்து ஓ சுவாமி! ஏழைப்பிராமணனுகிய அடியேன் மிகவும் பசியோடும் வந்திருக்கின்றேன் அன்னமகப்படுமாவென்று கேட்க, உடனே மறையோர் குலமுறை விசாரித்துப் பந்தியில் வைத்துக் கொண் டுண்ணப்போகையில் மாயா மறையோன் சகலரையும் நோக்கி, ஓ சாதுக்களே! நீங்களெல்லாம் மிகவும் புனிதர்களா யிருக்கின்றீர்கள் நானே மிகவும் பாவியா யிருக்கின்றேன் அதேனென்று கேட்பீரோ நான் பிரமக்ஞானியாகிய ஓர் விப்பிரனை அறிவீனத்தாற்கொன்று அப்பிரமத்தியைமேற் கொண்டு அது தீர இக்கங்கையில் ஸ்நானஞ்செய்து பசிவேதனை பொறுக்கமாட்டாம லிங்கடைந்தேன். ஆதலால், அடியேனுங்களுட னுண்ணும்படியாக ஒப்புக்கொள்வீர்களோ அல்லது தள்ளிவிடுவீர்களோ (உற்றது சொன்ன லற்றது பொருந்தும்) என்கிறபடி உண்மையைச் சொல்லிவிட்டேன் என்றுரைத்த மாத்திரத்தில் பூசுரரெல்லாமெழுந்து அம் மறையோன்மேல் விழுந்து அடித்து இடித்து அவமரியாதை செய்து வெளியிற் போகும்படியாக விரைந்து பேசத் தொடங்கினர்கள். அதற்குத் துளசிதாசர் சாதுக்களையமர்த்தி வந்த வேதியனைபார்த்து கரங்களைச்சேர்த்து ஓ பிராமணோத்தமா! சீக்கிரஞ் ஜெய சீதாராமென்று சொல்லும். உம்மையடைந்த பிர்மத்தி முதலான மகா பாதகங்களெல்லாம் நிவர்த்

தியாய்ப் பரிசுத்த மாவீரென்றறைய அதற்கம் மாயாவேதி யன் சற்றுநேரம் மௌனமுற்றிருந்து ஐயா துளசிதாசரே! ஏழைகட்கு நேசரே! இப்போது நீருரைத்த வாக்கியத்தை என் வாக்கினுற் சொல்லவேமாட்டேன் சொல்லவோ நாவெழாது ஏனென்பீரேல் நானனேக வேதசாஸ்திரங்களைப் பாராயணஞ்செய்தேனதிலிந்த நாமமில்லவேயில்லை. அன்றி இவ்வளவு சிக்கானவார்த்தையை இதுபரியந்தம் நான் கேட்டதேயில்லை சொல்லலாமென்றால் தடமாட்டமாயிருக்கின்றது இதற்கு நானென்ன செய்யட்டுமென் றுயாசமடைந்தவர்போ லபிநயித்திருந்தார்.

அதுகேட்ட சாதுப்பிராமணர்கள் சகலரும் வெகு லேசாயுரைக்கும் ஜெய சீதாராமென்னுந் திவ்விய நாமத்தைக் கொடும்பாவியான உன் நாக்கிற் சொல்வாயா? பிரமத்தி சூழ்ந்த உனக்குச் சொல்லவும் வருமா? சொன்னாலும் பயன்தருமா? சீக்கிர மிவ்விடம்விட்டு வெளியிற்போடா துஷ்டா? எங்களுட னுண்ணத்தகாத பிரஷ்டா? பஞ்சமர்களிலுங் கனிஷ்டாவென்று வைததைக்கேட்ட துளசிதாசர் சாதுக்கள்மேல் முனிவுகொண்டு அப்பூசுரனருகிற் சென்று, ஓ பிராமணோத்தமா! வேதங்கள் புகழுந் தாரக மந்திரத்தை யாருஞ்சொல்ல நீர் கேட்டதில்லையோ? அப்படி கேட்டிருக்காவிட்டால் அடியேன் இன்னமோர்தரஞ் சொல்லுகிறேன் கேளுமென்று அவர் காதருகிற் றன்வாயைவைத்து ஜெய சீதாராமென்று சொல்லுமையாவென்றார். அதுகேட்ட மாயாவேதியன் ஜெயவென்பது நல்லவார்த்தையே அதற்கு பின் சொன்னமொழிகள் மிகவும் கெட்டதாயிருக்கின்றது. ஆதலாலதை நீரும் மற்றியாவரும் நினைக்கவே கூடாதென்றுரைக்க, துளசிதாசர் வியப்புற்றவராய், ஓ பிராமணோத்தமா! இக்காசியில் மரிக்கும் பரிசுத்தன் வலதுகாதில் பரமசிவனுருபதேசிக்கும் திவ்விய திருநாமத்தை யேன் நினைக்கக் கூடாதென்று மறுக்கின்றீரென விப்பிரன் மரித்த பிரேதத்தைச் சுமந்துகொண் டேகும்போதும் மரிக்கும்போதும் ஓதும் இழிவான வார்த்தையைச் சுபமாக ஜீவித்திருக்குங் காலத்தில் நினைக்கலாகுமா? அவ்வார்த்தை அமங்கலத்துக் குதவுவது சுமங்கலத்துக் குதவுமா? சீ சீ இனி அவ்வார்த்தையைச் சொல்லவே வேண்டா

மென, துளசிதாசர் அனுதினம் பரமசிவனுதியோர் தியானிக்கும் திவ்விய நாமத்தை வெறுக்கலாமா? மற்றொன்றால் பிரமத்தி பாவம் நீங்குமா? சீக்கிர மித்திருமந்திரத்தைச் சொல்லுமையாவென மறையோன் வேண்டாமென்கிறவன் கழுத்தில் லிங்கம் கட்டுவதுபோல நான் மறுத்தும் நீரிரட்டித்துரைத்தால் என்மதி திரும்பமாட்டாது நான் சொல்லமாட்டேனென அரிதாச னச்சமுற்று நீரெந்த தெய்வத்தைத் தியானிக்கின்றீரெனப் பூசுரன் பரமசிவனை பஜிக்கிறேனென அரிபக்தன் சிவபத்தரானால் விபூதியணியாமல் திருநாம மணிந்திருக்கும் காரணமேனென ஆதிவருணன் என்னமோ மறந்து குருக்காயிடுவதை நெடுக்கா யிட்டுவிட்டேன்.

முக்கியமாக நானீசுவரனையே தியானிக்கிறேனென பரம பாகவதன் சிவநாமமான அராவென்றும், சத்திநாமமான உமாவென்றுஞ் சொல்லுமையாவென முப்புரி நூலோன் மிகவுஞ் சந்தோஷித்து, அரா அரா உமா உமாவென்று பலதாஞ் சொல்ல அரிபக்தன் அ உ என்பதை நீக்கி மற்றிரண் டக்ஷரங்களையுங் கூட்டிச் சொல்லுமையாவென மேற்குலத்தோன் இதென்ன விபரீதம் உயிரெழுத்துக்களை நீக்கிநிற்கச் சீவமான எழுத்துக்களைக்கூட்டி எதையோ சொல்லும்படி யுரைக்கிறீர். சீ சீ உயிரெழுத்தில்லாப்பேரை நான் கனவிலும் நினைக்கமாட்டேனென இனி சாதுக்கள் பொறுக்கமாட்டார்களென்று துளசிதாசர் பகவானுடைய திருநாமத்தை யுரைக்காவிட்டாலும் அன்புடன் கேட்டாற் போதுமெனப் பலதரமுரைத்து இனியும்முடைய பாவங்களெல்லாம் பஸ்பமாய் போய்விட்டது. கிருதார்த்தனாய் விட்டீரென்றறைந்து பலவந்தமாகப் பார்ப்பானைத் தன்னருகில் வீற்றிருக்கச்செய்து சகலரையு மன்னமுண்ணும்படி ஆக்கியாபித்தார் அதற்கந்தச் சாதுப்பிராமணர்கள் சம்மதிக்காமல் ஓ சுவாமி! ஜெய சீதாராமெனச் சொல்லுவதாலும் கேட்பதாலும் சகல பாபங்களுக்கும் மேலான பாபமாகிய பிரமத்தி நீங்குமா இதுநீங்க அநேகநாள் ஜெபஞ்செய்யவேண்டும் ஓமம் வளர்க்கவேண்டும் பிராயசித்தஞ் செய்யவேண்டும். பிறகல்லவோ நம்முடனுண்ணவேண்டும் அப்படிக்கிருக்க இப்படிசெய்வது நியாயமல்லவென்று மறுக்க,

துளசிதாசர் ஒருதரம் இராமாவென் றுரைத்தாலும் அல்லது கேட்டாலும் சகல பாபங்களும் நிவாரணமாகுமெனச் சுருதி ஸ்மிருதி இதிகாசங்களு மூறையிடுகின்றன இம்மறையோன் பலதரம் இராமாவென் றுரைத்ததைக் கேட்டாரே இன்னம் பிரமத்திபாபம் நீங்காம லிருக்கின்றதாவென சாதுக்கள் யாவரும் ஒரு சீவனைக் கொல்லலாகாது கொன்றாலதற்குத் தகுதியான பிராயச்சித்தஞ் செய்துக்கொள்வதன்றி அனேகநாள் ஜெபஞ் செய்யவேண்டுமென்று வேதம் மூறையிடுகின்றது. அன்றி, ஸ்திரீஹத்தி சிசுஹத்தி கோஹத்தி முதலான பாபங்களிலும் கொடிய பாபமல்லவா பிரமத்தியன்றி பதிவிரதை தன்னையறிந்த சீவன் முக்தன் பரம பக்தனாகிய இவர்களின் மனதையே நோகவைக்கலாகாது. அப்படிக்கிருக்க இவன் பிரமத்தையுணர்ந்த பிராமணனைக்கொன்ற கொடிய பாபியாயிற்றே இவனைத் தீண்டலாமா அன்னமுண்ண வேண்டலாமா அதிபாதகனாகிய இவனுடைய நாக்கில் இராமாவென்கிற வாக்கியம் புறப்படுமாவென அரிதாசர் இம்மறையோன் அரா அரா உமா உமாவெனப் பலதரமுரைத்ததை நீங்கள் காதினால் கேட்கவில்லையோ அரா உமாவென்பதே இராமாவென்னுந் தாரக மந்த்ரமாகும். எப்படியென்றால், தசரத மகாராஜனுக்குப் புதல்வனாகப் பிறந்த ஸ்ரீ மகாவிஷ்ணுவுக்கு என்ன நாமகரண மிடலாமென யோசித்த வசிஷ்டர் அரா வென்னும் ஈசுவர நாமத்தையும் உமாவென்னும் பார்வதியின் நாமத்தையும் ஒன்றாகச்சேர்த்து ராமாவென்கிற நாமதேயமிட்டார் அன்றி நீங்கள் ராம நாமத்தின் மகிமையை யறிந்தவர்களாதலால்வெகுநேரமாகவா துசெய்யத் தொடங்கினீர்கள் அன்னியர்களது மனதில் ரமிப்பவராகிய ஸ்ரீராமருடைய நாமதேயத்தின் பலனையுரைக்க வெகு விரிவாகும். அதேனெனின், ரா-சகல பாபங்களையும் வெளிப்படுத்தும். மா-வெளிப்பட்ட பாபங்கள் தன்னையடையாமல் நிக்கிரகிக்கும், அதற்குத் திருஷ்டாந்தம், ரா-வென்றால் வாய் திறக்கும், மா-என்றால் வாய்மூடுவதேயாம். ஓ சாதுக்களே! ரா-ஆதிசிவன், மா-ஆதிசத்தி, ரா-பரப்பிரம்மம், மா-சிற்சத்தி, ரா-ஆத்மா, மா-சீவன், ரா-வென்றால் பரப்பிரமத்தைத் துதித்ததாகும். மா-வென்றால் மும்மூர்த்திகளை நினைத்ததாகும். ரா-வென்றால் பாபங்களணுகாது, ரா-மா வென்றால் எமன் நடுங்

குவான், ராமாவென்றால் எமபாசந் துகளாகும். ராமாவென்றால் நரகவேதனை நீங்கிப்போம். ராமாவென்றால் குஷ்டம் முதலான வியாதியகன்றுபோம். ராமாவென்றால் வறுமை சிறுமை நீங்கி அஷ்டயிசுவரியமுமுண்டாகும். ராமாவென்றால் கோரிய யெண்ணங்களெல்லாம் பலிதமாகும். ராமாவென்றால் பிரமஹத்தி முதலான சகல பாபங்களும் நீங்கி மோட்ச சாம்பிராச்சியத்தை யடையலாம். ராமாவென்றால் ஆயுள் விர்த்தியாய்ச் சகல வித்தைகளும் சம்பவிக்கும். ராமாவென்பதே தாரகமந்திரம். ராமாவென்பதே மோட்சமடையும் தந்திரம். ராமாவென்பதே அண்ட சராசரங்களிலும் நிறைந்திருக்கும் நிரந்தரம் என்றுசொல்லியும், அந்தச் சாதுக்களின் சந்தேகம் நீங்காமையால் பிர்மத்திசெய்த பிராமணருக்கு வட்டித்திருக்கும் பத்திரத்தைத் தன்கரங்களா லேந்திக்கொண்டு, ஓ சாதுக்களே! ராமாவென்னுந் திருமந்திரத்தின்பலனை உங்களுக்குக் காட்டுகிறேன் வாருங்களென்று ஸ்ரீ கைலாசவாசகராகிய விசுவநாதர் திருக்கோயிலிற் பிரவேசித்து கல்லுருவான ரிஷபத்தின்முன் பத்திரத்தை வைத்துப் பலதரங் பரமசிவனைச் சூழ்ந்து சிரசாஷ்டாங்கமாகத் தாழ்ந்து ஓம் அரகரா! மஹாதேவா! வாமதேவா! நீலகண்டா! நீரணிமுதல்வா! சாம்பவா! சங்கரா! மசானவாசா! கயிலாசவாசா! உமாபதி! பசுபதி! திரிநேத்ரா! திரிபுரதகனு! சர்வேஸ்வரா! பரமேசா! சர்ப்பாபரணு! சர்வாபரணு! காலகாலா! திரிசூலா! ஆதிமூர்த்தி! கபாலமூர்த்தி! விஸ்வநாதா! பூதகணநாதா! கசிதரர! சடநாதா! நந்திவாகனு! கங்கைமோகனு! தாண்டவா! ஆண்டவாவென்று பற்பலவிதங்களாகத் துதித்து ஆனந்தமேலீட்டாற் குதித்து லிங்கமூர்த்தியி னெதிரிலிருக்கும் நந்திகேசுவரரைப் பணிந்து, அவரது பாதங்களில் தன் திருநயனங்களை அணிந்து, ஓ நந்திகேசுவரா! ரா-என்பது பரமசிவனும், மா-யென்பது ஆதிசத்தியுமாகி இந்தச் சத்தி சிவனே ஆதிமூலப் பொருளாகிய ஸ்ரீமந் நாராயணராகிய ரா-யென்னு மோரட்சரத்தினாலேயே பிரமத்தி முதலான மகா பாதகங்களெல்லாம் நிவாரணமாகுமென்பதும் சத்தியமானல் இந்த பாத்திரத்திலுள்ள அன்னம் முதலான பதார்த்தங்களையும் புசித்து இந்தச் சாதுக்களின் சந்தேகத்தை நீக்கி பிரமத்திசெய்த பிராமணனைக் கிருதார்த்தனுக்கி ராமமந்திரத்தின் பலனை பலருமறி

யக்காட்டி என்னை யாட்கொள்வாயென் றுரைத்த மாத்திரத்தில் கல்லுருவாயிருந்த ரிஷபமானது எழுந்துநின்று பலதரமுக்காரம் போட்டுப் பிராமணரூபமாய் நிற்கும் பகவானைப் பார்த்து முன் கால்களைச்சேர்த்து வந்தனஞ்செய்து, அன்னமுதலான சகல பதார்த்தங்களையுமுண்டு பத்திரத்தையு முட்கொண்டு சாணம்போட்டு ராமநாம மகிமையைப் பலருமறியக்காட்டி பழையபடி கல்லுருவான மாத்திரத்தில் தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். தேவதுந்துமி தாம்தாமென முழங்கிற்றுபின்பு துளசிதாசர் நந்திகேசுவரனையும் பரமேசுவரனையும்தொழுது இன்னமுமிவர்க்குண்டாபமுது சொல்லுங்கள் சாதுக்களே யென்றுரைத்துக் கடின நெஞ்சத்தைக் கரைத்து ஓ சாது பிராமணர்களே! ரா-என்னும் ஓ ரட்சரத்தினாலேயே சகல பாபங்களும் நிவாரணமாகுமென்று இந்தரிஷபம் பகர்ந்து பத்திரத்தோடு சகல பதார்த்தங்களுமுண்ட விந்தையைப்பார்த்தீர்களா? உங்களுக்குற்ற மாச்சரியத்தைத் தீர்த்தீர்களா? வெண்ணெயை விட்டு நெய்யைத் தேடுவதுபோலவும், உள்ளங்கையைவிட்டு முழங்கையை நக்குவதைப்போலவும், ராமாவென்னுந் திவ்ய திருமந்திரத்தை நம்பாமல் ஓமம்வளர்க்கவேண்டும் பிராயச்சித்தம் செய்யவேண்டுமென்று வெகுநேரந்தர்க்கஞ்செய்தீர்களே? பூசுரனை வாயில்வந்தபடிவைதீர்களே? அடியேன்மொழியை நம்பாமற்போனீர்களே? சந்தேகத்துக் குள்ளானீர்களே? ரா யென்னும் சம்மாரத்தின் மகிமையே இவ்வளவிருக்குமாயின் ராமாவென்னு மோரட்சரத்தினு லெவ்வளவு நன்மை யடையலாகும். ஜெயசீதாராமென்றன்போடுந்துதிப்பவர்பால் பாபமெட்டிப் பார்க்கக்கூடுமோராம நாமத்தை நம்பினவர்களை எமன் பாசத்தாற் கட்டிப் பிடிக்கக் கூடுமோவென்று பற்பல வார்த்தைகளாடி ராம சங்கீர்த்தனம் பாடி ஆனந்த நிர்த்தனஞ் செய்யத்தொடங்கினர்.

சாதுக்கள் ஆச்சரியப்பட்டுத் தங்களுக்குற்ற மாச்சரியங் கெட்டு ஜெய சீத்தாராமெனத் தோத்திரஞ் செய்துக்கொண்டே இன்ப நடனஞ்செய்தார்கள் இப்படி வெகுநேரம் தாண்டவம்புரிந்து துளசிதாசரைப் பணிந்து, ஓ சுவாமி! ராமநாம மகிமையை இன்றையத்தின மறிந்தோம் பற்பலபாகங்களும் பஸ்பமாகுமெனத் தெரிந்தோம் இனி இப்பிராமணனைத்தமரு

டன் அன்னம் புசிப்பதற்கு வாரும் சுவாமியென் றழைத்துக் கொண்டுமடத்திற் பிரவேசித்து பிரமத்தி செய்துவந்த வேதியர்க்கு வந்தனம்புரிந்து மிகவும்பரிந்து துளசிதாசரைப் பகவானெனத் தீர்மானித்து அப்பூசுரர்க்கு ஓர் பத்திரம் போட்டுச் சகல பதார்த்தங்களையும் வட்டித்துத் தங்கடங்கள் பத்திரங்களில் வீற்றிருந்து நமக்குச் சமானமானவர்க ளில்லையென் றிருமாப்படைந்து இது துளசிதாசருடைய பிரசாதமென்று சந்தோஷத்துடன் தின்று சகல தீவினைகளையும் வென்று அடைக்காயிலைகளை மென்று ஒருவருக்கொருவர் சந்தணம் பூசிவந்த அந்தணர்க்கு சவ்வாதுபூசி விசிறியால்வீசித் துளசிதாசரைக் கொண்டாடி விஷ்ணு சங்கீர்த்தனங்களைப்பாடிப் பிரமக் ஞானத்தை நாடிப் பரமானந்தைத்தேடி, அரிதாசர் கீர்த்தியைக் கொண்டாடத் தடுமாடி, நம்மாலாகாதென வாய் மூடி, அஞ்ஞானங்களைச் சாடி, பிர்மத்தி விரண்டறக்கூடி வீணுள் கழித்ததற்குவாடி, பிர்மானந்த மேலீட்டாற் கூத்தாடி, நாம்செய்த தபமே கோடானுகோடி எனச் சங்கல்ப விகல்பமற்று சகசானந்தத்தையுற்று என்றுமடையா வின்பினைப்பெற்று நானென்பது செற்று சித்திர தீபத்தைப்போல வசைவற் றிருந்தார்கள்.

அப்போது கபடநாடக சூஸ்திராவதாரியாகிய ஸ்ரீமந் நாராயணரும் சந்தோஷசாகரத்தில் மூழ்கினவராய் க்ஞான திருஷ்டியால் நம்மையறிந்து கொள்ளுவார்களோ வென்கிற சந்தேகத்தால் சஞ்சல மனதோடுங்கூடி அடிக்கடி கண்களைத் திறந்து பார்ப்பதும் மூடுவதுமாயிருந்தார். இப்படி அந்திவேளை பரியந்தமட்டும் நிஷ்டையிலிருந்து பிறகு தெளிந்து சாதுக்கள் அனைவோரும்சேர்ந்து சந்தியாவந்தன முதலான துஞ்செய்யப் பாகீரதியை யடைந்தார்கள். அத்தறுவாயில் மமதாதேவி நாடோறுந் துளசிதாசரை காலைமாலை பணிந்து போகும் வழக்கப்படிவந்து வந்தனந்தந்து அருகே வீற்றிருக்கும் மாயா மறையோனையும் வணங்கினுள். அந்தணர் மமதாதேவியின்மேல் மோகித்தவர்போ லபிநயித்து பெருமூச்செறிந்து ஓ பெண்ணே என்னிருகண்ணே எனக்குன் மீதுற்ற ஆசையைத் தீர்த்து இப்போதே யென்னைக்காத்து ரட்சிக்க வேண்டு மென்னுவியே! மமதாதேவியே யென்றுரைத்துக் கொண்டே மூர்ச்சையாய் விழுந்துவிட்டார்.

உடனே துளசிதாசர் திக்கென்றெழுந்து அவரது சேவடியில் விழுந்து மமதாதேவியினல் பன்னீரை வரவழைத்து உபசரணை செய்தெழுப்பவே அப்பூசுரான் ஓ அரிதாசரே! இந்த மங்கையின்மேலெனக் கிச்சையாய்விட்டது காமவிகாரங்கெட்டது இவளியாருடைய மனைவியாயிருந்த போதைக்கும் நீர் கருணைகூர்ந்தெனக் கிணங்கும்படியாகச் செய்யவேண்டுமென மிகவும் பரிதாபத்துடன் பன்முறை வேண்டிக் கொண்டார். துளசிதாசர் சாதுக்களறிந்தா லிவருடன்வாது செய்வார்களெனச் சுற்றுப்பக்கமும் பார்த்து யாருமில்லாமையாற் கரங்களைச்சேர்த்து ஓ பிராமணோத்தமா! சந்தடிசெய்யாதே சாதுக்களறிந்தால் விபரீதத்துக் கிடமாகும். உமதுயிர் பிரிந்துபோகும். ஜாமராத்திரியானபின் இந்த மங்கையையுமக்கிணங்கச் செய்கிறேன் அவசரப்படாமல் பொறுத்திருமையாவென் றுபசரித்தார். அவ்வேதியர் சற்றுநேரமிருந்து சந்தியாவந்தனஞ்செய்யப்போன சாதுக்களெல்லாம் வந்ததே துளசிதாசரைப்பார்த்துக் கரங்களைச் சேர்த்து ஓ ஐயா! பேதமிறந்த பிர்மக்ஞானியே! கோபமில்லா நிதானியே! எனக்கோ காமவிகாரம் மேலிட்டது. அங்கத்தை யெல்லாஞ் சுட்டது, இனியென்னாற் பொறுக்கக்கூடாது, இப்போதுவந்த மாதிருக்கும் வீடெது, சீக்கிரஞ் சொல்லுமையாவென்றார், துளசிதாசர் சாதுக்களறிந்துக் கொள்ளப் போகிறார்களென்று கண்ணாலுங் கையாலுஞ் சாடைகாட்டி மௌனமாயிருக்கும்படி வேண்டிக்கொண்டார். விப்பிரன் ஐயோ மன்மதனையெரித்த மகாதேவனும் கங்கையின்மேல் மோகமாகித் தயக்கமுற்றாரென்றா லென்னாற் பொறுக்கக்கூடுமா? இதுதெரிந்த நீரென்னை இப்படி வெறுக்கக்கூடுமா? அந்த மமதாதேவி எங்கேபோனாள் எனக்கு மோகமுண்டாக்கி எங்கே மறைந்தாள் எங்கே பறந்தாள் எனக்குவந்த காமமிச் சாதுக்களுக்கு வரலாகாதா? துன்பந் தரலாகாதாவென்று பரபரப்போடும் வெறிகொண்ட மர்க்கடம்போலவும், பலவிதமான சொறியுற்ற சுணங்கனைப் போலவும், சாமார்த்தியமான ஆசியக் கூத்தனைப்போலவும், கோளன் நாக்கைப்போலவும், சூதமிலாக்குடுமிபோலவும்,பித்தனைப்போலவும், சித்தினியைப்போலவும் பதைபதைத்து அங்குமிங்குமாயோடி மமதாதேவியைத் தேடத் தொடங்கினர். சாதுக்கள் அந்தணன்மேல் முனிவுகொண்டு தூஷண

வார்த்தைகள் விண்டு, அடா மூர்க்கா! துன்மார்க்கா! உண்ட வீட்டில் ரெண்டகஞ்செய்யும் கண்டகனுகிய உன்னை இப்போதே துண்டந் துண்டமாய்க் கண்டங் கண்டமாக வெட்டிப் பலியிடுகிருேம் பாரென்று துள்ளிக் கீழேதள்ளி நகங்களாற் பீறிக்கிள்ளி அடா தொள்ளியெனத் தாருமாறுஞ் செய்யத் தொடங்கினுர்கள். துளசிதாசர் சாதுககள்மேல் மிகவும் வெகுண்டு பெருங்கோபங்கொண்டு அந்தணனை யழைத்துக்கொண்டு தன் மனைவிபாலடைந்து மமதாதேவியிடஞ் சொல்வதற்கிடைந்து மௌனமாய் நின்றுர். மமதாதேவி மணுளனை வணங்கிப் பதிவார்த்தைக் கிணங்கி, ஓ ஸ்வாமி! இப்பிராமணுேத்தமரை என்பா லழைத்துக்கொண்டு வந்தவிதமறிவேனுதலா லுமதபிப் பிராயத்தைப் புலப்படுத்துமையாவென்று பணிந்து நின்றுள். அரிதாசர் ஓ மமதாதேவியே! இவர் சொந்த ஆவியே! என்னுடைய அன்புனக்குத் தேவையாயிருக்குமானுல் நீ நல்ல குலஸ்திரீயானுல் பதியின் வார்த்தையைக் கடக்கா பதிவிரதையானுல் மோக்ஷார்த்தம் வேண்டியிருக்குமானுல் இந்த அந்தணருடைய அவா நீங்கும்படிக் கூடிக்குலாவி யிருப்பாயாகவென் றழைத்தார். மமதாதேவிபணிரெண்டாண்டாகப் பட்சமாகப்பேசாமலிருந் திப்போது பட்சமாகப்பேசும் பதியைத் துதித்து, ஓ என்னுர்வலனே! உமக்குரிய வஸ்துவை ஒருவருக்குத் தானஞ்செய்தால் மறுப்பவருமுண்டோ? மனைவிபதிக்கு வேருனதுண்டோ? உம்மிஷ்டப்படி நடந்துக்கொள்ள எனக்கோதடையுமிராது ஏனென்ருல் பரமசிவன் பார்வதியை இராவணனுக் களிக்க அப்பத்தினி மறுத்துரைத்ததுண்டா? ஆனுல் மடத்திலிருக்கும் சாதுப் பிராமணர்களால் இவ்விப்பிரருக்கே இடையூறுவாராமல் பாதுகாக்கவேண்டிய பாரமுமக்குத் தானென்றறைந்து வேதியர் பாதங்களில் வந்தனஞ்செய்து, ஓ ஸ்வாமி! ஐயமின்றி சையோகஞ்செய்யச் சீக்கிரம் வாருமென் றழைத்தாள். அப்போது சாதுக்க ளாளுக்கோர் தடியெடுத்துக்கொண்டு அந்தமாயா பிராமணர்மேல் வீழ்ந்து அடா பரமதுரோகி! பதியின் வார்த்தையை கடவாயிப் பத்தினியையா பெண்டாளப் போகின்ருய். சீ சீ நாயே! அறிவில்லாபேயே சீக்கிரம் இம்மடத்தைவிட் டோடிப் போடா, இல்லாவிட்டா லுன் தலை மண்டையை யுடைத்து மூளை சிதறப் புடைத்துக்

கொன்று விடுவோம் ஒருகணத்தில் வென்று விடுவோமென் றூர்ப்பரித்து அட்டகாசஞ் செய்து தடிகளைச் சுழற்றி யெறிந் தார்கள், துளசிதாசர் அத்தண்டங்களைக் கரத்தால் மறித்து சாதுக்கள்மேல் மிகவும் முனிவுகொண்டு ஓர் வாளை யெடுத் துக்கொண்டு ஓ சாதுக்களே! உங்களுடைய பிராணன்மீ துங் களுக்கு அவாவிருக்குமாயின் இக்கணமே இவ்விடம் விட்டுப் பேர்ந்து வோடிப்போய்க் களிகூர்ந்து சீவனைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள் இல்லாவிடிலென்வாளுக் கிரையாகுங்களென் றதட்டிச் சாதுக்கள்மேல் குதித்து மிதித்து வதைக்கிறேனெ ன்றூர்ப்பரித்தார். சாதுப் பிராமணர்கள் ஓ சுவாமி! உமது கைவாளா லெங்களை வெட்டினாலும் இந்தத் துஷ்டனைமாத் திரம் மமதாதேவியினருகிற் போகவிடமாட்டோமென் றம்ம றையோன் குடுமியைப் பிடித்திழுத்து முழங்கைகளாலிடித் துப் பற்களாற் கடித்துத் தண்டங்களாலடித்து மூர்ச்சையாய் விழும்படி செய்தார்கள்.

அரிபக்தர் மிகவுங் கோபதீப்தனு யெரிந்து பொரிந்து முகங்கரிந்து அந்தணர்மேல் விழுந்து ஆக்கிரம நிக்குரோத னுய்ப் பல்லை நறநறவெனக் கடித்து மீசைகள் படபடெனத் துடிக்கும்படியாய் மிகவும் உக்கிராகாரனுய்க் காலருத்திரனைப் போலாகித் தன்னை மறந்து ஜீவகாருண்ய மிறந்து தப்பிதஞ் செய்த விப்பிரர்களின் தாள்களையுந் தோள்களையும் கரங்களை யும் சிரங்களையுங் கண்டங்கண்டமாகத் துண்டந் துண்டமாக வாளால் வெட்டிச்சாய்த்து, மூடுகளைப்போலத்தேய்த்து உதி ரப்பிரவாகத்திற்றோய்த்து, ஒருவரைவிடாமல் மாய்த்து மாய ப்பிராமணர் மூர்ச்சையடைந்ததைக் குறித்துப் பாதவித்துக் கரங்களைக் குவித்துத் தன் மனைவியை யழைத்து ஓ கற்புள்ள மாதே! சீக்கிரமிவ் வேதியரின் மூர்ச்சையை தெளிவித்துப் பன்னீரிற் குளிப்பித்து அவரிச்சைப்படி நடந்துக்கொள்ளெ ன்றுரைத்து அன்பான மொழிகளால் மமதாதேவியின் மன தைக் கரைத்துப் பார்வதி வாசமாயிருந்த பன்னகசாலையி லியாரும் போகாமற் காவலிருந்த விக்கினேசுவரரைப் போல வும், வாணுசுரன் வாயிலைக்காத்த வாமதேவனைப் போலவும், மாபலியின் வாயிலிற் காப்புசெய்த வாசுதேவனைப் போல வும், பஞ்சபாண்டவர்களைப் பாதுகாத்திரட்சித்த பத்மநாப னைப்போலவும், பிறகு மயிலிராவணன் இராமலட்சுமணரை

மோசஞ்செய்துவிடப் போகிருனெனக் காவலிலிருந்த அனுமந்த வீரனைப்போலவும், புஜத்தின்மேல் வாளை யேந்திக்கொண்டு மகிமைபெற்ற துளசிதாசர் காவலிலிருக்குந் தறுவாயில் மமதாதேவி மூர்ச்சையடைந்திருக்கு முதியோர்மேல் பன்னீரைவீசி விசிறிக்கொண்டுவீசி ஓ சுவாமியெனப் பலதரங் கூப்பிட்டும் பேசாமலிருக்கும் அந்தணரை அரிதாசர் விட்டினுட் கொண்டுபோய் மலரணைமேற் படுக்கவைத்து உபசரணைசெய்து வெளியேவந்து நந்திகேசுவரரைப் போலவும், துவார பாலகரைப் போலவும் காவலிருந்தார் மமதாதேவி மணுளன் வாக்கியப்படி கதவை மூடிக்கொண்டு நடு இராத்திரி பரியந்தம் அப்பூசுராருக் கனேக விதங்களாக உபசரணை செய்யச் செய்ய அம்மாயாமறையோன் பிரேதம்போலசைவற்றிருந்தார். மமதாதேவி கணவனை விளித்து ஓ சுவாமி! இவ்வேதியர் மரித்துப் போனதுபோற் ருேன்றுகின்ற தென்றறைந்து அழத்தொடங்கினுள். பரமபாகவதன் வீட்டினுட்போய் பூசுரனைப் புரட்டிப் பார்த்து அங்கம் வேர்த்துப் பிராணன் போய்விட்டதெனத் தீர்மானித்து இடும்பு செய்யும் கொடும்பாவிகளாகிய முப்புரிநூலோர் தண்டத்தாலடித்துக் கொன்றுவிட்டார்கள், நன்றி கெட்டார்கள், இனி நானென்ன செய்வேன் தெய்வமே யென்று தொழுது, கோவென்றழுது, வந்ததே பழுது, இனி யிருப்பதேன் கழுது என்று புலம்பி கண்ணீராற் றேகத்தை யலம்பி ஒன்றுந்தோன்ருதவராய்த் தன் கைவாளால் தன் கழுத்தை யறுத்துக் கொள்ளப்போனுர்.

அதுதெரிந்த பக்தவச்சலனுகிய பகவான் பிரேதம்போலசைவற் றிருந்ததுபோய்த் திடுக்கென் றெழுந்து ஸ்ரீராமாவதாரத்துடன் பிரசன்னமாகித் துளசிதாசனுடைய கரத்தைப் பிடித்து ஓ மனைவியைக் கூட்டிக்கொடுக்க மனமுவந்த மாதவனே! சுயம்பிரகாச ஆதவனே உன்னை யெந்த விஷயத்தை குறித்துக் கொண்டாடுவேன் ஓ ஓ உன்னைப்போன்ற தயாளகுணமுடைய பக்தனை எந்த யுகத்திலு மறியேன், உனக்கென்ன வரமீயலாமென தெரியேன், பட்சத்துடன் பாரியைக் கொடுக்க மனம்வருதல் லேசானதோவென்று பற்பல வார்த்தைகள் பகர்ந்து அரிதாசரை மார்புட னணைத்துக்கொண்டு சுகஜீவியாய் வாழ்ந்திருக்கக் கடவாயென விண்டு இறந்து

கிடக்கும் அந்தணர்களை யெல்லா மெழுப்பி, ஓ துளசிதாசா! உன்னை சோதிக்கும்பொருட்டு இவ்வித வேஷமெடுத்து பற்பல விதங்களாக நடித்தேன் இதைக்குறித் தாயாசப்படவேண்டாம், இனி யுன் மனையாளுடன் கூடிச் சுக போகங்களை யனுபவித்து இறுதியில் நீங்க ளிருவரும் என் பதவியைப் பெறுங்களென்று திருவாய் மலர்ந்தருள, அரிபக்தர் ஓ பகவானே பனிரெண்டு வருஷங்களாய் மனைவியுடன் பேசாமலிருந்தயென் வைராக்கியத்தைக் கெடுத்து மதிமருளும்படியாகத் தொடுத்துக் கபடஞ்செய்த காருத்தனே! கக்கினது பாயாசமானாலும் நக்குவாருண்டா? சன்யாசமானபின் சமுசாரத்துக் குட்பட்டவரு முண்டா? பூண்டவிரதங் கெடலாமா? பேரின்பத்தின்மே லிச்சையான பின் சிற்றின்பத்தைக் கனவிலும் நினைக்கலாமா? சொர்க்கத்தை நாடினவன் நரகத்தை நாடுவது போலும், கற்பைக் காக்கும்விரதம் பூண்டவள் கணிகையானது போலவும், அல்லவோ இருக்கின்றது ஓ தெய்வமே உன் திருவடிகளை நாடின அடியேன் கோடியேனானாலும் இவ்விஷய போகத்தைக் கனவிலும் நினைப்பேனா? ஸ்திரீயை மறந்து முபசரிப்பேனா? என்றைக்கு வீட்டைவிட்டுப் புறப்பட்டேனோ அன்றே சிற்றின்பத்தைமறந்தேன், மனக்கவலையைத் துறந்தேன் யானனுபவித்த விஷயபோகத்தால்வந்த சுகம் போதும் போதும் அப்பப்பா கன்னியர் மாயையிற் சிக்கினவனுக்குப் பரமபக்தியு முண்டா, பாரந் தலைகொண்டவர்க் கல்லல்விடும் பரிசமுண்டா கோதையர் மாயையிற் சிக்கின பேதையர்க்கு வேதையின் பலனன்றி வேறுசுக மனுபவிப்ப துண்டா? அசுணப்பட்சி யானைவிட்டிற்பூச்சி மீன் வண்டென்னும் ஐந்தும் சப்த ஸ்பரிச ரூப ரச கந்த மென்னும் ஐந்து விஷயங்களிலொன்றொன்றினால் தன் பிராணனுக் கேடுவருவித்துக்கொள்ளுமானால் ஐம்புலனு மயங்கச்செய்யும் ஆயிழையார்மேல் அவாக்கொண் டிருப்போன் அழிவதற்கோர் தடையுண்டா? சிலந்தியை வருட அப்போது சுகமாயிருந்து பின்பு பெருவாதனைக் குட்படுத்துவதுபோல நிமைநேர் சுகத்தை யிச்சித்த ஆடவன் அக்காமத்தால் பலநாளுந் துன்ப மனுபவிப்பதற்கோ ரையமுண்டா? உமது சிருஷ்டியைக் காமாந்தகாரத்தால் விர்த்தி யடையச்செய்து தெரிந்த அடியேன் உமது

பூரணகடாட்சம் பெற்றிருந்தும் நரகக்குழியிற் புகுவேனு? ஜலதாமரையில் ஸ்நானஞ் செய்வாருமுண்டா மலத்தில் அழுந்துவாருமுண்டா? குஷ்டம் முதலான வியாதிகளால் நஷ்டப்படுத்துவது காமமே யல்லவா? பரந்தாமனுகிய உமது நாமருசியை யனுபவித்தோர்கள் காம ரசத்தை இச்சிப்பார்களா தெரிந்தும் விஷத்தைப் பட்சிப்பார்களா? உமது கபட நாடகத்தை நானும் சற்றறிந்தவனே ஆதலா லிவ்வார்த்தையை இனி சொல்லாமல் சந்திர சூரிய ருள்ளமட்டும் ஸ்திரீயைப் புல்லாமல் நின் ஞமபஜனை யல்லாமல் வேறுவார்த்தை சொல்லாமல் காலங்கழிக்கும்படியாக கருணைகூர்ந் தாட்கொள்ளுமையாவென்று பணிந்து பற்பல விதங்களாகத் துதிக்கத் தொடங்கினர்.

பகவான் பரமபாகவத னிருகரங்களையும் பிடித்துக் கொண்டு தந்தை வாக்கை மறுக்காமற் றயை வெட்டின பரசுராமரைப் போலவும், தாய்வார்த்தையைத் தள்ளாமல் சகோதரர் மனைவியரைக் கூடிய வேதவியாசரைப் போலவும், துரோபதையைக் கூடின பஞ்சபாண்டவர்களைப் போலவும், தன்னுயிரைக்கொடுத்த கர்ணமகாராஜனைப்போலவும், என் வார்த்தையைத் தள்ளாமல் யாதொரு மொழியும் விள்ளாமல் பதிவிரதா சிரோன்மணியாகிய மமதாதேவியுடன் கூடிச் சில நாளில்லறத் தர்மத்திலிருந்து பின்பென் பதவியை யடைவாயப்பா வென்றுரந்து கூறும் பகவான் பாதங்களில் அரிபக்தர் வணங்கி ஓ என்னுண்டவனே! இதையன்றி வேறெது சொன்னுலும் கேட்பேனன்றி உன் திருவடி சாட்சியாக ஸ்திரீபோகத்தை மாத்திர மிச்சிக்கவேமாட்டேன் தேவரீரை நம்பின மமதாதேவியை இப்போதே தேவரீர் பரமபதத்துக்குக் கொண்டுபோ மையாவென்று பணிய பகவான் இனி எவ்விதமாக உரைத்தாலும் துளசிதாசர் சமுசாரத்திற் குடன் படமாட்டாரென் றறிந்திருந்தும் பின்னுஞ் சொல்லுவார் அப்பா துளசிதாசா முற்பிறப்பில் நீ மரா மரா வெனத்தியானஞ் செய்துக்கொண்டே தபத்தி லிருந்தபொழு துன்மனைவியுன்பாலடைந்து காமவிகாரங்கொண்டு உன்னைப் பலவந்தஞ் செய்ய நீ இவ்விஷயபோகம் பொல்லாதென் றிகழ்ந்துகூற உன் மனைவி கூடாதெனப் பலவந்தஞ்செய்ய நீ சிலநாட் சென்றபின் னுன்னிஷ்டப்படி நடக்கிறேனென் றுரைத்து

அப்போது தப்பித்துக்கொண்டு அவள் கண்ணுக்குப் புலப் படாமல் காட்டில் மறைந்து அடர்ந்த புதருகள் சூழ்ந்த ஓரிடத்திற் றபநிலேயி லிருந்துவிட்டாய் உன் மனேயாளுன் மேலிருக்கும் மோகத்தால் பலதிசைகளிலும் தேடித்தேடித் திரிந்து கலேயிரிந்த மான்போற் கதறிக்கதறி பதறிப்பதறி ஆவியைவிட்டுவிட்டு என் பதவியையடைந்து நீ துளசி தாச ரவதாரமெடுத்ததே தான் மமதாதேவியாய்ப் பிறந்தவ ளாதலா விவளிச்சைதீர நீ முற்பிறப்பிற் சொன்ன வாக்கியத் தின்படி கூடியிருக்க வேண்டுமல்லவாவென, அரிபக்தன் ஓ தெய்வமே! நான் முற்பிறப்பிற் சொன்ன வாக்கியப்படியே இம்மமதாதேவி வெறுக்குங்கால பரியந்தங் கூடியிருந்து அவளாய் வெறுத்தபின் நானும் வெறுத்து விராகத்தை யடைந்தேன் பிளந்தக்கல் கூடாததுபோல் இனியொருபொ ழுதுங் கூடாதென்று வணங்க, பகவான் துளசிதாசர்மேல் மிகவும் வாஞ்சையாயிருக்கும் மமதாதேவி யம்மையாரை நோ க்கி, ஓ அம்மா பாக்கியவதி! உனக்கு இகபோகம் வேண்டுமா? பரபோகம் வேண்டுமா? உனதபிப்பிராயத்தை வெளிப்படுத் தென்று கேட்க, மமதாதேவி ஓ பகவானே! வேண்டாமென் கிறவர் கழுத்தில் லிங்கங்கட்டுவதாற் பிரயோசனமேதேனு முண்டா? அதுபோல் மிகவும் விரக்தியடைந்திருக்கும் என் கணவனே வேண்டி என்னேச் சேர்த்தபோதிலும் அவரொற் றுமையா யிருக்கப்போகிறதில்லே ஆயினு மவரை இணே பிரியாமல் பார்த்திருப்பதே எனக்குப் போதுமான இன்ப மென்று வணங்கத், துளசிதாசர் ஓ மமதாதேவி! நீயென் சொற்படி பரமபதத்தைச்சேரும் சிலநாட்சென்றபின் நானும் வருகிறே னென்வாக்கியத்தை மறுத்தலுனக் கழகல்லவென, மமதாதேவி உமதிஷ்டப்படியே நடக்கின்றேனெனப் பணி ந்து நிற்கப் பகவான் தாரகனே நினைக்க, உடனே அத்தாரகன் ஓர் புஷ்பவிமானத்தைக் கொண்டுவந்து நிறுத்த பகவானதி லெழுந்தருள மமதாதேவி மகா பாக்கியமென்று தன் கொழு னன் றிருவடிகளிற் பணிந்து, ஓ ஸ்வாமி! இதுநாள் பரியந் தம் நாணறியாமலியற்றிய குற்றங்களேயெல்லாம் நற்றவமாகக் கொண்டு முற்றிலுமென்னே யாட்கொள்வீரெனப் பற்பலவித ங்களாகத் தோத்திரஞ்செய்து உம்மைவிட் டெப்படி பிரிவே னென்று அழுதகண்ணுந் தொழுதகையுமாய் நிற்கத் துளசி.

தாசர் ஓ பாக்கியவதி! எனக்குகந்த யோக்கியவதி! நீ நல்ல உத்தமியானபடியினுலேயே உனக்காகப் பகவான் வந்து எனக்குத் தரிசனந்தந்து பலரும்பார்க்கப் புஷ்பவிமானத்தை வரவழைத்து பரமபதத்துக்கு வரும்படியாய்த் திருவாய்மலர்ந்தருளினர். இப்பேற்கொத்த பேறு இப்புவியிலியாருக்குங் கிடைக்கமாட்டாதென் றுரைத்துக் சீக்கிரம் பகவான் லோகத்துக்குப்போ நானும் வருகிறே னிதுசத்தியமெனக, மமதாதேவி இன்றும்மைப் பிரியலாச்சுதோவென் றேலமிட்டழுதுக்கொண்டும் பதிவாக்கைக் கடக்கக்கூடாக் குறையால் விமானத்திலேறின மாத்திரத்தில் தேவதுந்துபி தாம்தாமென்று முழங்கிற்று, தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள் பகவான் துளசிதாசருக் காசிகள்செய்து தாரகனை எச்சரித்தார் தாரகன் அரைக்கணத்தில் வைகுந்தத்திற் கொண்டுபோனர்.

இவ்வாச்சரியத்தையறிந்து மடத்திலுள்ள சாதுப்பிராமணர்கள் என்றும் அடையா வியப்படைந்து துளசிதாசர் முன்னிற்பதற் கிடைந்து மமதாதேவியைப் புகழ்ந்து அரிதாசரைப் பற்பல விதங்களாக கொண்டாடி மகிழ்ந்து ஐயோ பகவானென்றறியாமல் இப்படிவருமெனக் குறியாமல் ஸ்ரீமந்நாராயணர் பதைபதைக்க அடித்தோமே ஒரே வயிராக்கியம் பிடித்தோமேயென்று தங்களைத் தாங்களே யிகழ்ந்து துளசிதாசருடைய மகிமையையும் மமதாதேவி வைகுந்ததத்தையடைந்த விந்தையையும் பலவிடங்களிற் சொல்லிக்கொண்டே திரிந்தார்கள், அதுகேட்ட காசிதேசத்தரசன் முதலானவர்களுமதிசயித்து துளசிதாசர் பக்கலடைந்து பற்பல விதங்களாகத் துதித்து நீரிப்பட்டணத்தி லெழுந்தருளியிருக்கும்படியான பாக்கியம் நாங்களென்ன செய்தோமோ நாங்கள் செய்ததவமே மாதவமென்றுரைத்து அவரை அரைக்கணமும் பிரியாமலிருந்தார்கள் துளசிதாசரோ பகவான் வந்து செத்துப்போன விந்தைகளை நினைந்து நினைந்து ஒன்றுந்தோன்ருதவராய் ஆனந்தவாரியில் மூழ்கித் தன்னை மறந்திருந்தார்: கேட்டீர்களோ சித்தர்களேயென்று பின்னுஞ் சொல்லத்தொடங்கினர்.

துளசிதாசரைப் பகவான் சோதித்த அத்தியாயம்
முற்றிற்று.

பன்னிரண்டாவது அத்தியாயம்

பகவான் துளசிதாசனுருவாய் வந்து பிரேதமான பிராமணனை எழுப்பியது.

கேளுங்கள் சித்தர்களேயென்று நாபாஜிசித்தர் சொல்லுவார், இவ்விதமாகத் துளசிதாசர் பற்பல தேசங்களிற்றன் பேர் விளங்கப் புகழ்பெற்றிருக்குங் காலத்தில் டில்லி நகருக்கரசனுன அக்பர் பாதுஷா துளசிதாசருடைய மகிமையைப் பலருஞ் சொல்லக் கேள்விப்பட்டுப் பார்க்கவேண்டுமென்கிற வாஞ்சையால் வாரணசியையடைந்து அரிபக்தரைத் தரிசித்துப் பாதங்களைப் பரிசித்து மகானுபாவரெனப்பூசித்து அத்தியந்தபக்தியுடன் விசுவாசித்து அவருரைக்கும் பிர்மக்ஞானத்தைச் சிரவணஞ் செய்துக்கொண்டிருக்குங் காலத்தில், அக்காசியிலோர் உத்தமபிராமணர் பிராரப்தபோக மனுபவித்துத் தீர்ந்ததே இவ்வாக்கை அரைநிமை யிருக்காதென்கிற வேதவாக்கியப்படி, தேகவியோகமடைந்து பிதுர்லோகத்திற் பிரவேசித்தார். அவர்மீது தன்னுயிர்போல வாஞ்சைகொண்டிருந்ததுமன்றி இன்னஞ்சுகபோகங்களை யனுபவிக்கவேண்டுமென்கிற அதிக அவாக்கொண்டிருந்த மகா பதிவிரதையாகிய அவர் பத்தினி தன்காவலன் மரித்ததைக் குறித்து மிகவும் புலம்பிக் கண்ணீராற் கணவனை யலம்பிப் புருஷனின்றி இனியெப்படி போகும்பொழுது விதவையானபின் இவ்வுலகிலிருப்பது மிகவும் பழுதென்று பகவானைத் தொழுது தேம்பித்தேம்பியழுது ஓ தெய்வமே! சின்னஞ்சிறுவயதுள்ள கன்னிகையாகிய என்னை கைமையாக்கி விட்டாயே, இவ்வேழையைக் கைசோரவிட்டாயே, பதியே தெய்வமென்றும், பதிசேவையே மோட்சமென்றும், பழமறையிலெழுதிய பகவானே இனியாரைத் தெய்வமாகப்பாவிப்பேன் யாருக்குசேவை செய்து பூசிப்பேன், இப்படி பல சீவர் புலம்பியழுவ துனக்குச் சந்தோஷமோ? துக்கமயமான இப்பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்துப் பட்சியினிறகுபோல் பன்முறை பரதவிக்கும்படியாகச் செய்வதாலுனக்கு வரும் மேன்மையேதோ என்னைப் போலேழ்மையை யுடைய மாதர்களெத்தனைபேர் வேதைக்குட்பட்டிருக்கின்றூர்களோ? அரி அரி ஆண்பால் பெண்பாலெனச் சிருஷ்டித்து அதிற் பெண்பா லாடவனுக் கடக்கவொடுக்கமாயிருக்கச்செய்து ஒருவரைவிட்டொருவர் நிமைபிரியாம

லிருக்க அத்தியந்த இச்சையை யுண்டாக்கி ஒருவரை யழைத்துக்கொண் டொருவரை அயர்ந்தலரும்படியாகச் செய்வது காருண்யக் கடவுளாகிய உமக்கழகோ? இப்படி ஒருவரைவிட் டொருவர் பிரிவாற்ருமல் பேய்பிடித்தவர்போல் மதிமயங்கிப் பிரேதத்துக் கிணையாயிருக்கும்படிச் செய்வதா லுமக்கு வரும் பயன் யாதோ? ஓ தெய்வமே! பூதபவுஷிய வர்த்தமானமென்னுந் திரிகாலங்களிலும் நடக்குஞ் செயல்களெல்லா மறிந்த நீரே சீதையை இராவணனெடுத்துக்கொண்டு போனபோது சொல்வதற் கபாரமான துக்கசமுத்திரத்தி லமிழ்ந்தீரென்ருல் அறியாப்பேதையான நானிப்பிராமண நாயகனைப் பிரிந்து பிராணனுட னெப்படியிருப்பேன் சகல சத்திகளிலும் வல்லமையான சீதாபிராட்டி உமது பிரிவாற்ருமல் அழலில் வைத்த மெழுகைப்போல கதறிக்கதறிப் பதறிப்பதறிக் கரைந்தழுதிருப்பாளானுல் ஒருவல்லமையு மில்லாவென்னுல்பிராண நாயகனைப் பிரிந்துயிருட னிருக்கலாகுமோ? ஓ என்னுண்டவனே! என்னைப்போல் பலசீவர்கள் கலக்கமடையநீர் ஆனந்தமாயிருந்தால் நலனே? இப்படி ஜீவர்கள் துயரமடைவது தீவினைப்பலனே? நீபடைத்தஜீவர்களுக்கு நீயறியாமல் தீவினைவந்தணுகுமா? அப்படியடைய நீ பூர்ணத்திற் குறைந்தவனே? ஆ ஆ உன்னுடைய மாயைசெய்யும் விந்தைக்கு வியப்படையாதவர்களு முண்டோ? ஓபராத்பரா! துன்பத்திலிருந்துயிர்தரிப்பதிலும் இறத்தலழகல்லவோ? பிராண நாயகனைப்பிரிந்தபதிவிரதைகள் அரைநிமை பிராணனுடனிருப்பார்களோ! பின் வரும்பழிக் குட்படுவார்களோ! பதினைந்து வயதுப் பருவமுள்ள நான் பதியிழந்தபின் இவ்வுலகிலிருந்தாலும் பழிவந்தடையாதோ! காமவிகாரத்துக்குந்தடையேதோ பிர்மாதி தேவர்களாலும் ஜயிக்கக்கூடா மாரனை என்னுற்ஜெயிக்கக்கூடுமோ! காமக்கடலைக் கடக்க லேசானதோ? பதியின் பட்சத்தைப் பட்சிகளே சகிக்காமல் தட்சணம் மரிக்குமாயின் ஐந்தறிவுள்ள நான் மரணமடையாமல் இருந்திவ்வுலகிலிடையாமல் ஒரேதுதேட வேண்டியதே முக்கிய காரணமல்லவோவென்று கங்கையில்போடக் கொண்டுபோகும் கணவனுடன்போய் தானும் பாகீரதியிற் குதித்திறப்பதே சத்தியம் இறவாமலிருப்பதே பயித்தியம் இத்தேகமெத்தனை நா ளிருந்தாலும் அனித்தியம் பதியுடனிறத்தலே நித்தியம் எனத்து

ணிந்து துக்கந்தணிந்து கங்கையை நாடிப் போகின்றவள், துளசிதாசருடைய மடத்தில் அக்பர்பாதுஷா முதலானவர் களுங்கூடி ஏககூட்டமா யிருக்கக்கண்டு இந்த மகாத்மாவைத் தரிசனஞ்செய்துக்கொண்டு பதியைத் துதித்துக் கங்கையிற்கு தித்து மோட்ச காட்சியை யடைவேனென்று மகாசபையில் நாணமில்லாமற் சென்று துளசிதாசர் முன்னின்று பகவா னேயெனப்புகன்று சிரசாஷ்டாங்கமாகத் தெண்டஞ்செய்ய அப்போது அக்பர் பாதுஷாவுடன் பிரமக்ஞான வார்த்தை களை ஆனந்தத்தோடும் பேசிக் கொண்டிருக்கும் துளசிதாசர் சந்தோஷமேலீட்டால் அந்தப்பிராமண ஸ்திரீயைநோக்கி, ஓ அம்மணி! நீ அஷ்டயிசுவரியமும் அஷ்டபுத்திர பாக்கிய மும்பெற்றுச் சுபமாங்கலிய ஸ்திரீயாய் வாழ்ந்திருக்கக்கடவா யென் றாசீர்வாதஞ் செய்தருளினர். அவ்வசனத்தைக்கேட்ட பிராமணோத்தமி நகைத்து, ஓ ஸ்வாமி! விந்தையான வசன த்தைப் புகன்றீர். என் கணவனிறந்து ஒரு ஜாமமாயிற்று, என் மங்களமும் போயிற்று, என் கணவனைக் கங்கையில்போ டக் கொண்டுபோகிறார்கள். நானுமவருடன் பாகீரதியிற்குதி த்திறக்க எண்ணங்கொண்டு கூடவே தொடர்ந்துவந்து இவ் விடத்திலேக்க் கூட்டமாயிருக்கக்கண்டு உம்மைத் தரிசனஞ் செய்துக்கொண்டு பிராணனை விடலாமெனத் துணிந்துவந் தேன். வந்தவிடத்தில் தேவரீர் கேட்டவர்களெல்லா மதி சயிக்கும்படியான ஆசீர்வசனம் புகன்றீர் புருஷனிறந்தபின் எனக்கெங்கிருந்து புத்ரபாக்யமுண்டாகும், இனிசோரபுருஷ ரைச் சேர்ந்து பிள்ளைகளைப் பெறவேண்டுமோ! இதர புரு ஷர்களைப் புணர்ந்து மானங்கெட்டு ஈனமடைந்து எமதண் டனைக் குட்படுவதைப் பார்க்கிலு மிறந்தா லழகல்லவோ உமக்கும் விரித்துச் சொல்லவோ அல்லாமல் பதிவிரதைத் தன்மைகெட்டுப் பரபுருஷனைக் கூடி நான் பல பிள்ளைகளைப் பெற்றாலும் நான் சுபமங்கிலிய ஸ்திரீயாய் வாழ்வதெங்கே? தேவரீர் செய்த ஆசீர்வாதப்பலனெங்கே? பகவானைப் பல ருக்குந் தரிசனந் தருவித்த மகானுபாவராகிய தேவரீர் வாக் கில் நிஷ்பலமான வாக்கியம் பிறக்கமாட்டாதே பெரியோர் களி னாசீர்வாதப்பலன் பெற்றவர்க் கியாதோர் வியாகுலமும் வரமாட்டாதே உத்தமர்க ளாசீர்வாதப்பலன் ஒருபோழ்தும் தப்பிப் போகமாட்டாதே? நான் கைமையாகுங் காரணமிருந்

தா லிப்பேர்க்கொத்த வாக்கியம் புறப்படமாட்டாதே யெனப் பற்பல வார்த்தைகளாடி ஓ பகவானே! நீர் செய்த ஆசீர்வா தப்படியே நான் சுபமங்கிலிய ஸ்திரீயாய் அஷ்டபுத்திரரை பெறச் சீக்கிரமென் காவலனைப் பிழைப்பிக்க வாரும் கடைக் கண்ணுற் பாரும் மாங்கல்ய பிட்சையைத் தாரும் கிருபை கூரும் என்றேத்திப் பணியும்போது அக்பர் பாதுஷாவும் அவனுடைய மந்திரிபிரதானிகளும் சேனைகளும் இப்போது தான் துளசிதாசருடைய மகிமையைப் பிரத்தியட்சமாய்ப் பார்க்கவேண்டும் இறந்தவர்களை எழுப்ப வொருவராலாகு மா? சகல சாமர்த்தியமு முள்ளவரெனப் பலரும் புகழ்ந்த தசத்தியமோ? சத்தியமோ, எல்லாம் ஓர் நாழிகையிற் றெரிய வருகிறதென்று துளசிதாசருடைய வதனத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். துளசிதாசரோ பிராமண ஸ்திரீயுரை த்த வாக்கியங்களைக் கேட்டுத் திடுக்கிட்டு மோசம் வந்தது இப்பேர்க்கொத்த அபாரமான வார்த்தை என் வாக்கிலேன் பிறந்தது இவள் மனமேன் நொந்தது எனக்கேனவமானந் தந்தது இறந்தவர்களை எழுப்ப ஒருவர்வசமா எழுப்ப ரிஷி கள் வங்கிஷமா மேன்மையான மகிமை யுடையவர்களாலும் விதியைத் தடுக்கக்கூடுமா விதியைத் தடுக்கும்படியான வாக் கை கொடுக்கக்கூடுமா வெனப் பற்பல விதங்களாயோசித்துப் பகவானை மனதிலேயே பூசித்து அந்தப் பதிவிரதையைப் பார்த்துக் கரங்களைச் சேர்த்து ஓ அம்மா! இப்போதென் வா க்கிலிருந்து புறப்பட்ட ஆசீர்வசனம் நானுக சொல்லவில்லை ஸ்ரீமந்நாராயணரே என் வாக்கிலிருந்துரைத்தார். இதற்கு நானென்ன செய்யட்டும் உள்ளபடியே முடியட்டும் என் வா க்கு பொய்த்துப் போனாலும் போகட்டும் இனி யெப்படியா னுலு மாகட்டும் நீயுன் கணவனிடம் போய்ச் சேரென்றுரை த்துப் பிரமவிலாசமான முகங் கறுத்து அக்பர் பாதுஷா வின் வதனத்தைப் பார்க்க நாணமடைந்து யாதோர் மொழி யும் பேசுதற்கிடைந்து தலையை தாழ்த்திகொண்டு பகவானை வாழ்த்திக் கொண்டிருக்கையில் பக்தவச்சலனுகிய பகவான் கங்கையிற் போடக்கொண்டுபோகும் பிரேதத்தினிடம் துளசி தாசர் வடிவுடன்வந்து சுமந்து செல்வோர்க்குத் தரிசனந் தந்து ஓ இறந்த பிராமணா! தன்னை மறந்த பிராமணா! உன் மனையாளுக்கு நான் செய்த ஆசீர்வாத வாக்கியப் பிரகாரம்

யெழுந் தென்னுடன் வருவாயாக வென்றறைந்த மாத்திரத்தில் பிரேதமாய்ப்போன பிராமணன் உயிர் பெற்றிதோ வருகிறேன் சுவாமீயென் றுரைத்தமாத்திரத்தில்,

அவனை யெடுத்துக்கொண்டு போகும் அந்தணர்களதிசயித்துப் பிரமைகொண்டு மரித்த மறையோனை நோக்கி, இறந்துபோன நீ மறந்து தூங்கினவனைப்போ லெழுந்தகாரணம் யாதோவெனக் கேட்டுக் கட்டுகளை யவிழ்த்துவிட்டவுடனே அம்மாதவன் சந்தோஷ முகத்துடனெழுந்து துளசிதாசர் பாதங்களில் விழுந்து ஓ என் ஆண்டவனே என்னை யாட்கொள்ளும் பொருட்டு மடத்தைவிட் டிவ்வளவு தூரம் நடந்து வந்தீரோ, அரிதான சேவை தந்தீரோ வென் றுரைத்துக்கொண்டே அவர்பின் நடந்துபோக மாயா துளசிதாசர் அப்பிராமணனை யழைத்துக்கொண்டு துளசிதாசர் மடத்திற் பிரவேசிக்க அப்போது கங்கையிற் குதித்திறக்க வெண்ணங்கொண்டு வரும் பிராமணோத்தமி துளசிதாசரும் மரித்தமணாளனும் சபையில் வருவதைக் கண்டு ஆனந்தங்கொண்டு அங்கிருந்த துளசிதாச ரிங்கெப்படி வந்தாரென்றும், என் கணவனுக் குயிரெங்ஙனந் தந்தாரென்றும், ஆச்சரியப்பட்டு மாச்சரியங்கெட்டு ஆனந்தக்கண்ணீர் சொரிய அவர்கள் பின்றொடர்ந்துபோய் அக்பர் பாதுஷாவை நோக்கிச் சந்தோஷத்தைப் போக்கி ஓ பாதுஷாவே நானிப்போ தாசீர்வாதஞ் செய்த பிரகாரமே மரித்த பிராமணன் இதோ வுயிர்பெற்றெழுந்து வந்தான். அவன் மனையாளுக்கு மாங்கல்யந் தந்தான் ஆதலால் இராமநாமமும் மெய்யே. துளசிதாசனென்னும் என்வாக்கும் மெய்யே யென்றறைந்து மாயமாய் மறைந்தார். உடனே தேவவாத்தியம் தாம் தாமென முழங்கிற்று. சுரர் பூமாரி சலசலவெனப் பொழிந்தார்கள். அக்பர் பாதுஷா திடுக்கிட்டு ஐயபுத்திகெட்டு தலையைத் தாழ்த்திக்கொண்டு தன்னெதிரி லெழுந்தருளியிருக்கும் துளசிதாசரையும் தன்னெதிர்வந்து நின்று சிலமொழிகள் புகன்று மாயமாய்ப் போன துளசிதாசரையும் இறந்த பிராமண னுயிர்பெற்றெழுந்துவந்து நிற்பதையும் அவன் பக்கத்தில் நின்றுகொண்டனந்தம் விதங்களாகத் துதிக்கும் பிராமணோத்தமியையுங் கண்டு விந்தையென்று விண்டு இனி இவர்க்குத் தொண்டு செய்வேனென் றுட்கொண்டு மடத்தில் நடுவே நின்று இவர்

சொல் மொழிகளே கற்கண்டு இவர் முன் நம் மதத்தோர் பெண்டு இவரைத் தூஷிப்போர்களைச் செய்வே னிரண்டு துண்டு என்கிற பற்பல வார்த்தைகளைப் புகன்று பயபக்தி யுடனெழுந்து நின்று சிரசாஷ்டாங்கமாய் வந்தனம் புரிந்து ஓ ஸ்வாமி! உம்முடைய மகிமையை என்னொருவனுலுரைக் கப்போமோ இவ்வுலகிலுள்ள மானிடர்க ளனைவராலும் விரிக்கப்போமோ ஓ என் சற்குருநாதன் தன்யரே! யாவரும் போற்றும் வினயரே! பூனைபோலிருந்து புலிபோற் பாய்ந்த தென்னும் பழமொழிப்படி காமியாயிருந்து நிஷ்காமியாயுயர்ந்து இறந்தவர்களை எழுப்பின மஹானுபாவரே யான் தொழுந் தேவரே இனியோர் கணமு மும்மைவிட்டுப்பிரிந்தென்னுயிருடனிருக்கமாட்டேன் எமது சொந்த நாட்டுக்குவந்து நாடோறுஞ் சேவைதந்து எங்களை யாட்கொள்ள வாருமென் றறைந்து யானையின்மே லேற்றிக்கொண்டு காசிராஜனை நோக்கி, ஓ அரசனே! என்னுலிடிக்கப்பட்ட கோயில் குளங்களைக் கட்டி முன்னிலும் தர்மதானங்கள் நடக்கவும் பல சத்திரங்கள் கட்டவும் பத்துக்கோடி பொன்னளித்தேன் பெற்றுக்கொள்ளுமென் றறைந்து விடைபெற்றுக்கொண்டு டில்லியையடைந்து அங்கும் ஸ்ரீராமர் கோவில் முதலான ஆலயங்களை ஏற்படுத்தி சாதுப் பிராமணர்களுக்குக் குறைவில்லாமற் கேட்டதளித்து இராமநாமத்தைத் தியானஞ் செய்துகொண்டு சத்விஷயத்திற் காலங்கழிக்கத் தொடங்கினான்.

துளசிதாசரோ பகவான் தன் வாக்கைப் பரிபாலனஞ் செய்யத் தன்னுருவெடுத்து வந்து இறந்தவனுக் குயிர்தந்து தன்னைக் காத்து ரட்சித்ததை அடிக்கடி நினைந்து ஆனந்த பாஷ்பங்களால் நனைந்து ஓ சுஜனபரி பாலனே தானவர் காலனே உற்பத்தி ஸ்திதி லயங்களுக்கும் காரணமாயிருக்குங் கர்த்தனே ஸ்தூல சூட்சும காரணமென்னுந் திரிதேகங்களுக்கதீதமாயிருக்கும் பரிசுத்தனே இத்திரைய தேகங்களுக்கு விலட்சணோத்தமனுய் விவேக க்ஞானசீல ரிருதயகமலாசனத்தில் வீற்றிருக்கும் தேவனே ஜனன மரண ராகத்வேஷ சுக துக்கங்களை யடையாமல் கண்டானந்தாமிர்தத்தில் மூழ்கும் படியான கடைக்கண் கிருபையை யளிக்கும் வாசுதேவனே சுலட்சண சுகிர்த சுபமங்கள சோபித சுந்தர சுயம்பிரகாச சுத்தாத்புத மோட்ச யாதனுனுஷ்டான தியானபிரர்களுக்

கந்தரங்கமான இஷ்டதெய்வமே சாட்சாத்கார சதானந்த சகோதய சமாசாந்த சாஸ்வித சலட்சண சந்தோஷாமிர்தத்தை யளிக்குஞ் சகநாதனே மோகாந்தகாரக் குகையிற் சிக்கி அஞ்ஞானதிமிரேற்றி அதோகதிக் காளாகும் அடியேனை உஜ்ஜீவிக்கும்படி முற்றிலுமென்னை இப்படியே ஆட்கொள்ளக் கடனுமதாகுமெனப் பற்பல விதங்களாகத் தோத்திரஞ் செய்து பிரமானந்தவாரியில் மூழ்கியிருந்தார் கேட்டீர்களோ சித்தர்களேயென்று நாபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லத்தொடங்கினர்.

பகவான் துளசிதாசனுருவால் வந்து பிரேதமான பிராமணனை எழுப்பிய அத்தியாயம் முற்றிற்று.

பதின்மூன்றுவது அத்தியாயம்

துளசிதாசர் அக்பர் பாதுஷாவைப் பங்கஞ் செய்தது.

கேளுங்கள் சித்தர்களே! அஷ்டாட்சரத்தி னிரண்டாமட்சரமும் ஸ்தூல பஞ்சாட்சரத்தி னிரண்டா மட்சரமுங் கூடியபோ தெந்தநாமம் விளங்குகின்றதோ அந்த திவ்விய திருநாமஸ்மரணையும் விஸ்வதை சந்பிராக்ஞ விராட்டிரண்ய கர்ப்ப அவ்யாகிர்தத்துக் கப்பாற்பட்ட பரிபூரண சர்வ சாட்சியாயிருக்கும் சாட்சாத்கார தசையையும் பெற்றுத் தொந்தா தொந்தங்களையும் அரிஷ்ட வர்க்கங்களையும் சடூர்மிகளையுங் கடந்து சாந்தம் சாம்பவனை சந்தோஷம் உபாதி ஜகத்விலட்சணம் சம்சார வெதிருக்தம் அந்தர்முகம் அகண்டானந்தத்தையுந் தரும் நியதி மார்க்கத்தை யடைந்து சகசானந்தத்தாற் பூர்த்தியாய் விஸ்ராந்தியை மேவி ஜன்ம கர்ம சூன்யராய் விளங்கியிருக்கும் சர்வ சத்குணலங்கிர்தராகிய துளசிதாசரை வீரம் தீரம் கெம்பீரம் தாத்ருத்வம் தாசத்வம் தைரியம் சௌரியம் முதலான குணங்களிற் சிறப்புற்றோங்கி இவ்வுலகத்தைத் தாங்கி யுக்தி பக்தி சுபத்தியுமுள்ள அக்பர் பாதுஷாவானவர் அனுதின மன்பா யின்பமாய்ப் பூசித்து வணங்கிப் பகவான் திருநாமங்களை ஸ்மரிப்பதற் கிணங்கி மஹம்மது மதத்தோருடன் பிணங்கி எத்திசையிலும் சிவா

லயம், விஷ்ணுவாலயம், அன்னசத்திரம், தடாகம் முதலிய வைகள் அபரிமிதமாக ஏற்படுத்திக் கோவதையை விலக்கி, அனுமக்கொடிகளையும் கருடக்கொடிகளையும் நட்டு இந்து மதத்துக்குட்பட்டுப் பரமசாதுவாயிருக்கும் நாளில் மோசல மாமுனிவனு லேற்படுத்திய மொசல்மான்கள் சகலருங்கூடி பாதுஷாவின் நடத்தையைக் குறித்து முகம்வாடிப் பற்பல விதங்களா யோசித்துப் பாதுஷாவுடன் கபடமாக நேசித்து துளசிதாசரை வாயாற்பூசித்துத் தாங்களும் வைகுந்தனு தனை மேலுக்கு விசுவாசித்துச் சிலநாளிருந்து ஒருநாள் பாதுஷாவைநோக்கி, ஓ அரசனே! வேந்தரிற் சரசனே வெகுநாளாய்ப் பூசிக்கும் நமக்கு விஷ்ணுதரிசன மில்லாமற் போச்சுது வீணுக நாள்களைக் கழிக்கலாச்சுது பரமபக்தனு கிய உமக்கு ஸ்ரீ ராமதரிசன மகத்தியமாகும் உம்மைப்போ லொத்த புருஷோத்தமர்க்குப் பகவான் தரிசனம் கிடைக்கா மற்போனுல் எம்போலொத்த பாவிகட்குக் கிடைக்குமா துள சிதாச ருமதுபேரி லத்தியந்த பிரீதியுடையவரா யிருப்பது மெய்யாகில் ஒரு கணத்தில் ரகுநாயகரை வரவழைப்பார் தரி சனந்தருவிப்பார் நீர் இக்கணம் அரிபக்தனிடம்போய் இன் றையோடு மூன்று தினத்துக்கள் ஸ்ரீமந் நாராயணரை வரவ ழைத்து தரிசனந் தருவித்து என்னையாட்கொள்ளு மையா வென வணங்கி நீர் மேடைக்கெழுந்தருளும் நாங்களெல் லோரும் அவர் மனமிரங்கும்படியான பட்சமான பற்பல வார்த்தைகளுரைத்துக் கன்னெஞ்சரைக் கரைத்து ஒருநொ டியிற்பகவானை வரவழைக்கிறோமென்று உசுப்பேற்றி அனுப் பினுர்கள்.

பாதுஷா பகவானைப் பார்க்கா இக்கண்களும் பகவான் பாதங்களைப் பரிசிக்கா இக்கரங்களும் பராத்பரனை வணங்கா இச்சென்னியும் இருந்தாற் பயனேதேனு முண்டாவென வுன்னித் துளசிதாசரை நண்ணி, ஓ மகானுபாவா! யாந் தொழுந்தேவா! இக்கொடியேன்மே லருள்புரிந்து ஸ்ரீ ரகு நாயகரை வரவழைத்து அடியேனுக்குத் தரிசனந் தருவித்து ஆட்கொள்ளுமையா வென்றுவணங்க, அரிபக்தன் ஓ அர சனே! பனிரெண்டாண்டு பகவானை நோக்கி தவஞ்செய்த எனக்கே அப்பரந்தாமனுடைய தரிசனங்கிடைக்க வெகு துர் லபமாச்சுது என்னுலாகாப்போச்சுது அனேக வருஷங்கள்

தறிபோற் றபத்திலிருக்குந் தபோதனர்களுக்குந் தரிசனந் தராப்பகவான் நானழைத்தவுடன் வந்து உனக்குத் தரிசனந் தந்து ஆட்கொள்வாரா, கோஹத்தி சூழ்ந்த இப்பட்டினத்திலும் வருவாரா, லேசில் விஷ்ணுவின் தரிசனங் கிடைக்குமா, அவர்முன் வொருவர் திராணி நடக்குமா, என்னலாகாக் காரிய மாகுமென் றொருபோழ்துஞ் சொல்லமாட்டேன் வீண் சம்பத்தைக் காட்டேன் இன்னஞ் சில நாள் சென்றபின் பகவான் கருணைகூர்ந் தாட்கொண்டால் கொள்வாரேயன்றி இப்போது கூடாதென்று மறுத்துவிட்டனர். பாதுஷா ஓ ஸ்வாமி! வெகுநாளாக அத்தியந்த பக்தியுடன் அனுதினம் பஜிக்கும் என்முன் பகவான் வருவதற்கோர் தடையுமிராது. நீர் நினைத்த காரியத்துக்கோ ரிடையூறும் வராது, வாரணாசியிலுள்ள மாந்தர்களெல்லாம் பார்க்கவந்த பக்தவச்சலன் நானொருவன் பார்க்க வருவதற்கு தடையேன், பிர்மா நினைத்தா லாயுளுக்குக் குறைவில்லாததுபோல் நீர் நினைத்தாலகத்தியம் பகவான் வருவார் ஏழையேனுக்குத் தரிசனந் தருவார் இன்றையோடு மூன்றுதிவசத்துக்குள் பகவானை வரச்செய்து எனக்குற்ற பந்த தொந்தங்களை கொய்து பாதுகாத்தருளுமையாவெனப் பணிந்து இனி நமக்குப் பகவான் தரிசனந் தருவாரெனத் துணிந்து மந்திரி பிரதானிகளுரைத்த வண்ணம் தன்னிருப்பிடஞ் சேர்ந்து பிரஜைகளை நோக்கி நீங்களெல்லாம்போய் துளசிதாசருடைய மனதைக் கரைத்து ஸ்ரீமந்நாராயணரை வரவழைத்து என் குலத்தைப் பரிசுத்தப்படுத்துங்களென் றுக்யாபித்தான்.

துடுக்கர் மூடுக்காய்த் துளசிதாசர் பக்கலடைந்து ஓ அரிதாசரே! நீரிப்போது பகவானை யாங்கள் பார்க்க வரவழைக்காவிடின் நீர் முன்னம் ஸ்ரீமந்நாராயணரைக் கண்டதும் அவருமக் காசிர்வசனங்கள் விண்டதும், நீரானந்தங்கொண்டதும் சுத்தப் பொய்யாகும் ஆதலால் சீக்கிரம் பராத்பரனை வரவழைப்பீரென்று பலவந்தஞ் செய்யத் தொடங்கினர். அரிதாசர் நகைத்து ஓ மொசல்மான்களே! நான் சொல்வதைக்கேளுங்க ளதேனென்றால் பகவானே கருணைகூர்ந்து காட்சிகொடுக்க வேண்டுமேயல்லது நம்முடைய பலவந்தத்தால் தரிசனந் தரவேமாட்டார் இது சத்திய வசனமாகுமிதை உங்க ளிறைவனுக் குரைத்து இவ்விட மழைத்துக்

கொண்டு வாருங்களென் றியம்பத் துலுக்கர் ஓ ஸ்வாமி! அரசன் வார்த்தையை மறுத்து உமது மொழிக்குச் செவிகொடுத்துத் தண்டனைக் குடன்படுவோமோ, பகவானை வரவழைக்காவும்மை கொஞ்சத்தில் விடுவோமா, நீர் தொழும் ஸ்ரீராமரை வரவழைக்கும் பரியந்தமும்மை இச்சிங்காசனம் விட்டெழுந்திருக்கவொட்டோம் உம்மாலெங்கள் குலதர்மங் கெட்டோம் மஹம்மதுவைக் கும்பிடுவது விட்டோம் அநீதிக் குட்பட்டோம் பாதுஷாவிட மும‌து பாசாங்கு நடக்குமேயன்றி எங்களிடம் நடக்காது உம்மைக் கொஞ்சத்தில் விடமாட்டோம் நடக்காது வெனப் பற்பல வார்த்தைகள் பகரலுற்றார்கள். அரிபக்தன் ஓ துடுக்கரே! சன்மார்க்கங் குறைந்து துன்மார்க்கம் நிறைந்து வாது செய்வோர்க்கு ஜெகநாதன் தரிசனங் கிடைக்குமா, என்னை வருத்துவதுங்களுக் கடுக்குமா, இனி நானிஷ்டமான விடத்துக்குப் போகவிட்டு விடுங்களென் றறைந்து சிம்மாசனம் விட்டெழுந்தார். மொசல்மான்கள் அரியணையி விருந்தெழுந்த அரிதாசரை எழுந்திருகக வொட்டாம லவ்வணையின்மே லழுத்திச் சீக்கிரம் பகவானை வரவழைத்தாலன்றி உம்மை யிங்கிருந்து பெயர விடமாட்டோம் ஜீவன் பிரிந்தாலும் முதுகு காட்டோம் மஹம்மதியர் வைராக்கிய மறியீரோ இதுமாத்திரந் தெரியீரோவென்று பல வார்த்தைகள் படபடவெனப் பிதற்றலுற்றார்கள். அரிபக்தன் ஓ மொசல்மான்களே! இவ்வித பலவந்தத்தாற் றானே பகவானைப் பார்க்கப் போகிறீர்கள், இப்பேர்க்கொத்த துஷ்டர்களுக்குப் பக்வானுடைய தரிசனங் கிடைக்குமா சாதுக்களிடமொருவர் பலம் நடக்குமா இனி யென்னைத் தீண்டாமல் பகவானைக்குறித்து வேண்டாமல் உங்க ளிருப்பிடஞ் சேருங்கள் சீக்கிர மிவ்விடம் விட்டுப் பேருங்களென் றறைந்தார், துலுக்கர் ஓகோ துர்க்குணமுள்ள சாதுவே உம்முடைய துஷ்ட குணத்தையும் பிரஷ்டத் தனத்தையும், எங்களிடங் காட்ட வேண்டாம், வீண் ஜம்பத்தை நீட்டவேண்டாம், அரச ளுக்கினைப்படி அரியணையைவிட் டசையவேண்டாம் ஒருமொழியும் பேசவேண்டாம், நகங்கள் வளர்ந்த கரங்களை நீட்டி வீசவேண்டாமென்று தடிகளாலும் கர்ச்சனை யிடிகளாலும் பயங்கரங்காட்டிக் கோபத்தை மூட்டி மூன்றுநாள் பரியந்தம் சிங்காசனம்விட் டெழாமலும் அசையாமலும்

மலசல விசர்ஜனுதிகட்குச் செல்லாமலும் அன்னபானுதிகளை உட்கொள்ளாமலும் அதட்டி வாயில்வந்தபடி பிதற்றி வெகு தொந்தரவுசெய்யத் தொடங்கினுர்கள்.

அதனுல் துளசிதாசர் உடல் வாட்டமும் மனக் கோட்டமு மடைந்து மிகவு மிடைந்து ஓ மஹம்மதி யரே! உங்க ளிஷ்டப்படி பகவானை வரவழைக்கின்றேன் பாதுஷாவை அழைப்பியுங்களெனத் துலுக்கர் முன்னம் ஸ்ரீ ராமரை வரவழைத்தா லொழிய இராசனைக் கூப்பிட மாட்டோமென் றுரைத்து அடிமேலடியடித்தால் அம்மி யும் நகருமென்கிற பழமொழிப்படி உம்மாலொரு கணத்தில் பகவானை வரவழைக்கிறேம் பாருங்களென் றின்னம் தொந் தரவுசெய்யத் தொடங்கினுர்கள். இவர்களிங்கு இவ்விதகோ ரஞ்செய்ய அங்கே பாதுஷா துளசிதாசரிடம் பகவான் தரிச னத்துக் குறைத்துவந்து மூன்று நாளாகின்றதே என்ன சங் கதியென்று தன்னருகிலிருக்கும் பிரதானிகளைக் கேட்டான். மந்திரிகள் இதுபரியந்தம் நம்மவர்செய்த தந்திரத்தாலும் தொந்தரவாலும் பக்தியாலும் சக்தியாலும் பகவானை வரவ ழைக்கிறேனென் றுரைத்தாராம் இன்னம் மூன்று ஜாமத்து க்குள் பொழுதுவிடியும் அதற்குள் பகவானும் பிரசன்னமா வார் சற்றே பொருத்திருமென் றறைந்தார்கள் பாதுஷா சந் தோஷமடைந்து எப்போது சூர்யோதயமாகும், எப்போது பகவான் வருவார், தரிசனந் தருவாரென்கிற எண்ணத்தோடு கூடியிருந்தான் அங்கே துளசிதாசர் துடுக்கர் செய்யும் வேத னைக் காற்றுமல் இக்கொடியரை அனுமாரால் சிகிச்சை செய் விக்க வேண்டு மேனெனின் இத்துடுக்கருக் காதிகாரணனை மோசலமா முனிவரை ஓர் குலத்தால் குடல்களெல்லாம் குதத் தின் வழியாக வரச்செய்தவர் அனுமாரேயாம் அவரே இவர் களுடைய மடமையைப் போக்கடிப்பவ ரென் றுன்னித் தனக் குற்ற வேதனையைப் பொறுக்கமாட்டாமல் இன்பமாயனுமா ரைத் தோத்திரஞ்செய்யத் தொடங்கினுர்.

அநுமார் அநுபூதி.

சீரார்தாளுந்தேனூர்மொழியுந்
தாரார்புயமுந்தடமார்புமுள
சூராவிரைவாத்துணையாவருவாய்
வீராவினைவீறடுமாருதியே. 1

அடல்வவ்வலறிவழிராகம்பாடி
மடமாதியல்கேசரியின்மதலாய்
முடிவென்றுமிலாமுதல்வாவடியே
னிடர்தீர்த்தருள்வாயிறைமாருதியே. 2

இனியேசுசியஞ்சனையீன்றருளும்
பொறையேயுருவாகியபுண்ணியனே
குறையேபுரிதிக்குணனேலமிடும்
முறைகேட்டருளென்முதுமாருதியே. 3

முகிலோரணுவாமணுவும்மலையாம்
பகவானுனிலப்பதமேயிரவும்
பகலுந்துதியாப்படிறேனெனினும்
பகைதீர்த்தருள்வாய்மிளிர்மாருதியே. 4

மிளிராதவனைமிகுகற்பலமென்
றிளமைப்பருவத்தின்புற்றதுபோ
லுளவொன்றறியாதிடருற்றனனுன்
களிமெய்திடக்காகாமாருதியே. 5

கார்த்தாட்கொள்வாய்கருணைக்கண்ணாற்
பார்த்தாட்கொள்வாய்படிறேன்வினையைத்
தீர்த்தாட்கொள்வாய்திமிரும்மருளும்
பேர்த்தாட்கொள்வாய்ப்பிரியமாருதியே. 6

பிரியத்துடனெம்பெருமானனருட்
டுரியத்திலெனைச்சேர்க்கும்படிசெய்
தருமைப்பொருளாக்கியவாண்டவவென்
மருளச்சமகற்றுவைமாருதியே. 7

அகமும்புறமும்அணுவுங்குறையா
தகரக்கரநேரமலப்பொருளீ
சுகநற்றவசுந்தரசோபிததே
சிகவற்புத்திண்ணியமாருதியே. 8

நியமப்படியோர்நெறிதன்னினிலாப்
பயனற்றவனாயினன்பண்பருள்வாய்
ஜயசித்கனனேஜயநிஷ்களனே
ஜயபுஷ்களனேஜயமாருதியே. 9

ஜய ஸ்ரீ ராகுநாயகவித்தகனே
ஜயவாரிதிதாண்டியசத்துவனே
ஜயலங்கணியட்சயகூற்றுவனே
ஜயமாமறைவாசகமாருதியே. 10

ஜகசாட்சியிருந்தொருசார்புசெல
விகலாட்சியர்வாழ்மிகுலங்கையைப்பா
வகனேயுண்வாலகநீட்டியகான்
மகனேயிவண்வாவரமாருதியே. 11

வரலானுயர்மாவணைசெய்தவுணன்
மேலோனுப்பல்விடைகூறினவா
மாலோனுழிபோய்வைதேகியின்சீ
ராலோசனையுமறைமாருதியே. 12

அறையாயவுணர்க்கதமீந்திளவல்
குறைநீங்குமருந்துகொணர்ந்ததலத்
துறைராவணனுட்புகுதாவகைமாச்
சிறையாற்றியதிண்புயமாருதியே. 13

புயகாலந்தோன்போர்விட்டிரிய
மயில்ராவணன்மாய்ந்திடமோதினவா
சுயவச்சுதசுப்பிரனேவடியேன்
மயனீங்கிடவாவிவண்மாருதியே. 14

வண்ணம்முளமாவைதேகியைச்சூ
ழெண்ணங்களேதீத்தினபீர்ந்தவுணே
நண்ணித்தொழுமிந்நாயேற்கருள்விண்
மண்ணுந்துதிசெய்மாமாருதியே. 15

மாமேவியகோசலம்வாழ்பரதன்
ராமாஜகதீச்வரசாட்சியெனத்
தீமூழ்கிறபோதணுகித்திடமும்
ஆமோதமுமீயருண்மாருதியே. 16

அருளார்க்கதிராதவன்பாற்கலைமெய்ப்
பொருளோதியநுன்னியபுந்தியினு
விருளால்விரகமிழிவுமழிவும்
மருளேதமுநீக்கியமாருதியே. 17

நீக்கப்படும்வல்வினைநீடளையைப்
போக்கப்படும்வெம்புறையார்குறையை
ஆக்கம்புகழீயனுமானெனவே
மூர்க்கனெனுமம்முதுமாருதியே. 18

முதுசொலுரைதும்புருநாரதன்முன்
மதமுற்றுணைநாடிவரத்தனையோ
டடமுற்றிடவின்னிசைமீட்டியவவர்
மதநீக்கியதேவகமாருதியே. 19

தேவாதிகளேத்தியதேசிகனே
காவாவிஜயன்களைதீர்த்தவனே
மூவாவுலகும்புகழ்மூர்த்திகனே
வாவாவிடர்நீக்கிடுமாருதியே. 20

படரும்வினையும்பழியுமிழிவும்
தொடரும்பவமுந்தொடராதெனையே
கொடையுந்துதிமெய்க்குறியுமறியும்
நடையுந்தருவாய்நயமாருதியே. 21

நயனேபாரந்தநாயேன்மீதில்
பயநீங்கிடநீபார்த்தாட்கொய்ய
நயனேச்சலநானடையும்வகைநிர்ப்
பயனேசுயபண்குதமாருதியே. 22

பண்டோரேத்தும்பகவானேயுன்
தண்டாமரைத்தாட்டணைநீதருவாய்
எண்டோளினனீயெண்ணேக்கினன்கோ
தண்டாச்சுதநீசரண்மாருதியே. 23

சரணம்விசுவாகாராட்சபனே
சரணம்விருகோதான்முன்னவனே
சரணம்மகயேரிணைதாஷ்டிகனே
சரணஞ்சுகதாண்டவமாருதியே. 24

சுகமோரணுவாந்துயர்வாரணமாம்
ஜகமீதறியாதவர்யாரறிவுற்
றிகமேயாசித்திடாதலையும்
அகமேவரவேவணமாருதியே. 25

ஏனேவுனதன்பிலையுண்டெனிலென்
கோனேவருவாய்குறைதீர்த்தருள்வாய்
நானேவுனைநம்பினனம்பினனே
ஞானேதயனேநலமாருதியே. 26

நலமும்நீயேநாயேன்விரதப்
பலமும்நீயேபரமானந்தப்
பலமும்நீயேபரமேசுவரநிர்ச்
சலனும்நீபேசதுர்மாருதியே. 27

சதுரப்படையாசம்ப்ரப்பிரியா
துதிசத்குரவா துகளில்லுருவா
அதிகத்தியவாயடியேன்முன்வா
மதிதத்துவமா தவமாருதியே. 28

தவமேசெயினுந்தவமேசெயினும்
பவமேபுரினும்பழியேபெறினும்
அவதூறெருடுசேரடியேற்குளதோ
அவிகாரனேநீயருண் மாருதியே. 29

இக்கணமிங்கிசியோர்மருள
வாய்ததமிழைத்தருள்வாயருள்வாய்
தாயொத்ததயாபரவுன்னடியயன்
சேயொத்தவன்சீர்தருமாருதியே. 30

என்றிவ்விதமாகத் தோத்திரஞ் செய்திருக்குந் துளசிதாசருடைய பரிதாபமறிந்து அனுமார் துடுக்கர் செய்யும் அக்கிரமத்தை நிக்கிரகிக்கு நிமித்தம் தனது சேனைகளாகிய வானரங்களை நோக்கி, ஓ யூகக்கூட்டங்களே! உங்களில் பதினாயிரம் மந்திரிகள் டில்லிநகரிற் பிரவேசித்து எத்திசையினும் பிரகாசித்துத் துடுக்கர் நடுக்கங்கொண்டு பல திக்குகளிலோட்டமெடுக்கவும், துளசிதாசரைக் கெஞ்சியடுக்கவும், அக்பர் பாதுஷா பயந்தேங்கவும், துளசிதாசருக்குச் சந்தோஷமோங்கவும், அஸ்தினாபுரத்தை அல்லோல கல்லோலங்கள் செய்து வாருங்களென் றறைந்தமாத்திரத்தில் பர்வதாகாரமான பதினாயிரம் வானரங்கள் ஓர் கணத்தில் டில்லிநகரையடைந்து தோப்புகளையும் சிங்காரத்தோட்டங்களையும் பாழாக்கி அங்கிருக்கு மேடைகளைத் தூளாக்கிப் பட்டினத்துட்சென்று கரங்களைக்கொட்டி நிமிர்ந்து நின்று முன்னாளில் நம் மூதியோர் இலங்கையைப் பாழாக்கினதுபோ லின்று இந்நகரையழித்து எதிர்த்தவர்களைப் பழித்துக் கீழேதள்ளி மிதித்துப் பிராணன் நீங்கும்படி சிதைத்து ஒருவரையும் விடாமல் வதைத்து இம்மாளிகைகள் சரிந்து விழும்படியாக வுதைத்துத் தூளனஞ் செய்துவிடுவோமென்று மேடைகளையிடித்து பஸ்பமாகப் பொடித்து மானிடர்களை யடித்துக் கரங்களால் எட்டிப்பிடித்து மூர்ச்சையடையக் குத்திப் பட்டணம் நடுங்கக் கத்திக் கிறுகிறெனச்சுற்றிப் பட்சிபோல் பறக்க வெற்றிப் பாதுஷா நகரையடைந்த காவல்களெல்லாங் கடந்து பட்ட

த்தரசிகளைப் பார்த்துக் கூந்தலைப்பிடித்து ஈர்த்துப் பற்களைத் திறந்துகாட்டிப் பாணியாலறைந்து வாட்டி இராஜனைக்க ண்டு நகைத்து நீயா அரசனெனப்பகைத்து நெஞ்சம்பிளக்க மருட்டி நிலமேற் பலதரம்புரட்டி வதனத்தில் மலத்தைப் பூசி மாதர்மேல் மரியைவீசித் துளசிதாசர்பால் வந்து சொகு சாக வந்தனந்தந்து சூழ்ந்திருப்பவர்களை மடக்கிக் கக்கத்தில் பலரை யடக்கி நசுங்கும்படியாகச்செய்து நகங்களாற் சிரங்க ளைக்கொய்து வாலாலடித்துக்கொன்று ஓடுவோர் முன்னோடி நின்று அமர்செய்யலாமெனப் புகன்று அநேகரைக் கணந்த னில்வென்று சுற்றுப்பக்கங்களிலோடிப் பதுங்கினோர் தம் மையுந் தேடிப்பிடித் தாகாயத்திலெறிந்து பலர்மேல் கற்களை யெறிந்து பட்டணத்தைப் பாழாக்கி மேடைகளைத் தூளாக் சிப் பல திக்குகளிலும் பரவும்போது சிரங்களுடைந்தவர்க ளும், கரங்களறுந்தவர்களும், உரங்களெறிந்தவர்களும், தோ ள்கள் முறிந்தவர்களும், தாள்களறுந்தவர்களும், கண்கள் கெ ட்டவர்களும், புண்கள் பட்டவர்களும், குடல்கள் சரிந்தவர் களும் இடைகள் முறிந்தவர்களும், மூக்கறுந்தவர்களும், ரணக்களத்திற் சாய்ந்தவர்களும், தலைவிரிகோலமாய் மூலைக்கு மூலை பதுங்கி ஒதுங்கிக் கூகாவெனக் கூக்குரலிட்டு ஸ்மரணை கெட்டுத் திக்கு முக்கிட்டுத் தட்டுகெட்டு டில்லிநகரை விட்டுப் பல திக்குகளிலு மோட்டமெடுத்தார்கள் அங்கும் வானரங்க ளைக்கண்டு தைரியத்தை விடுத்தார்கள், தெண்டனென் றுரை ப்பார்கள், தொண்டனென் றுரைப்பார்கள், மூர்ச்சையாய் விழுவார்கள், முறையோவென் றழுவார்கள், தெய்வமேயெ ன்று தொழுவார்கள், திருத்தாட்களில் விழுவார்கள், நடுங்கு வார்கள், ஒடுங்குவார்கள் இவ்விதமாகத் துடுக்கர் நடுக்கம் கொள்ளும்படியாகச் செய்த வானரங்கள் அட்டகாசஞ்செ ய்து கெக்கலிகொட்டி நகைத்து, டில்லிநகரை யழிக்கும்போ து, துளசிதாசர் அக்பர்பாதுஷாவின்மேலிருக்கு மன்பினல் அதிசீக்கிரமா யந்தப்புரமடைந்து அரசரிருக்கு மலங்கோலத் தைக் கண்டிடைந்து, ஓ அரசனே! உனக்கைக்யமாயிருக்கும் மாந்தர்களாலல்லவோ இவ்வளவு வேதனைவந்து ஆயாசம் தந்தது என்றுரைக்கும்போது பாதுஷா துளசிதாசர் பாதங் கள்மேல் வீழ்ந்து பலதரந் தாழ்ந்து இந்த வானரங்களெங் கிருந்து வந்தது, சீக்கிரஞ்சொல்லும் ஸ்வாமியென்று பணி

யர் துளசிதாசர் ஓ இராஜனே! ஸ்ரீராமருடைய சேனைகளி லாயிரம்பங்கில் ஓர் பங்குவந்தது மற்ற 999 பங்கு இனிவரும் பின்னால் ஸ்ரீ ராமர் வருவார் தரிசனந் தருவாரென்றறையப் பாதுஷா நடுங்கிப் பூனைபோலொடுங்கி ஓ ஸ்வாமி! ஸ்ரீ ராமருடைய தெரிசன மெனக்குத் தேவையில்லை. அவரு டைய சேனைகளாகிய யூகங்களைத் தன்னிருப்பிடம் போகக் கடாட்சித்தருளும் ஐயனேயென்று பன்முறையும் வேண்ட அரிதாசர் அப்படியே யாகட்டுமென்று அனுமாரைத் தியா னஞ்செய்து உம்முடைய படைகளைக் கூப்பிட்டுக் கொள்ளும் ஸ்வாமீயென்று பிரார்த்திக்க, உடனே அனுமார் மாயமாய ங்கடைந்து அசரீரிவாக்காய் ஓ துளசிதாசரே என்னைத் துதி த்துப்பாடிய பாடல்களை யாராவதன்புடன் துதிசெய்வார்க ளானு லவர்களுக்குற்ற விக்கினங்கள் நீங்கிச் சுகசீவியாக வா ழ்ந்திருப்பார்களென் றறைந்து கவிகளையெல்லாங் கூட்டிக் கொண்டு மறைந்துவிட்டார். பின்பு டில்லி நகரிலுள்ள துடுக்கரெல்லாம் துளசிதாசர் பக்கலடைந்து ஓ ஸ்வாமி! சிறியோர்கள்செய்த குற்றங்களையெல்லாம் நற்றவமாகக்கொ ண்டு எங்களை யாட்கொள்ளுமையா வென்று சிரசாஷ்டாங்க மாகத் தெண்டன் சமர்ப்பிக்கக் கருணைநிதியான அரிதாசர் பயப்படாதிருங்களென் றபயஸ்தங்கொடுத்துத் துன்பத்தைக் கெடுத்துப் பாதுஷாவைநோக்கி, ஓ இராஜனே! துஷ்டபிள் ளைகளுக்கூரார் புத்திசொல்வாரென்கிற பழமொழிப்படி இந் தத் துன்மார்க்கப் பிரஜைகள் மந்திரிகளால் மிகவும் நொந் தார்கள். அரசமரத்தைப் பிடித்த சனியன் அனுமாரையும் பிடித்ததென்பதுபோலவும் பிரஜைகள்செய்த பாவம் இராஜ னைப் பிடிக்குமென்பதைப்போலவும் உமக்குத் துன்பம்வந்து நேரிட்டது. துஷ்டர்கள் நேசங்கெட்டது என்று பற்பல வார்த்தைகளாடித் தன்னிருப்பிடஞ் சேர்ந்து பிரம நிஷ்டை யைச்சார்ந்து துன்பத்திலிருந்து பேர்ந்து மிகவுங் களிகூர் ந்து சகஜக்ஞானத்தில் விஸ்ராந்தி யடைந்திருந்தார். கேட் டீர்களோ சித்தர்களேயென்று பின்னுஞ் சொல்லத் தொடங் கினர்.

துளசிதாசர் அக்பர் பாதுஷாவைப் பங்கஞ்செய்த அத்தியாயம் முற்றிற்று.

பதினொன்காவது அத்தியாயம்

துளசிதாசர் அக்பர் பாதுஷாவுக்கு அனுக்கிரகஞ்செய்தது.

இப்பால் அக்பர் பாதுஷா தன் மந்திரி பிரதானிகளை நோக்கி ஓ மந்திரிகளே! தந்திரிகளே! நீங்கள்செய்த அக்கிரமத்தால் பட்டணம் பாழானதன்றிப் பலபேர் நகைக்கும்படியான கீழ்மையை யடைந்தேன் இப்பேர்க்கொத்த துஷ்டர்களாகிய நீங்களென் பட்டினத்திலிருந்தால் வெகுநஷ்டமுண்டாகும் பரமசாதுவாகிய துளசிதாசருடைய மனம் நையச் செய்யத்தகாத காரியங்களைச் செய்தீர்கள். என் கழுத்தைக் கொய்யாமற்கொய்தீர்கள். துன்பத்துக்குள்ளானீர்கள். துளசிதாசருடைய அருமை தெரியாமற் போனீர்களாதலாலினியோர் கணமுமென் நாட்டிற்றங்காமற் பேருங்களென்றறைந்து தன்மன மிகவுங்கரைந்து துன்பம் மிகவும் நிறைந்து சமஸ்த மேன்மைகளிலுங் குறைந்து துளசிதாச ரிருப்பிடமடைந்து முன்போவதற் கிடைந்து புறத்திலிருந்துக்கொண்டே பலபல விதங்களாகத் தோத்திரஞ் செய்யத் தொடங்கினார். துளசிதாசர் தப்பிதமறியாத தராபதியைப் பிரியத்துடனழைத்து அருகிலிருத்திக் கொண்டு பட்சமான வார்த்தைகள் பல புகன்று ஓ இறைவனே! உனக்கோர் குறையும் நேரிடாது. அரசன் அஜாக்கிரதையா யிருத்தலடாது. உத்தமர்கள் சித்தக்கலக்கம் கிஞ்சித்தில்விடாது சாதுக்களைத் தணலுஞ் சுடாது இனி சுகத்துடன் வாழ்ந்திரும் நான் பல தேசங்களிற்சென்று சஞ்சாரசமாதியால் சகஜ க்ஞானத்தைப் பூரணமாயடைய வேண்டுமென்று உன் பட்டணத்திலுள்ளவர்கள் மதபேதத்தால் அபேதஞான மறிந்துக்கொள்ளாமல் அகக்கிரந்தியால் பொறுமைகொண்டிருக்கிறார்கள். இதனால் ஒவ்வொருகாலத்தில் என்னுடன் வாதிப்பார்கள் உன்னையும் போதிப்பார்கள் இதற்குத் திருஷ்டாந்தமான சரித்திர முங்களிலேயே நடந்திருக்கின்றது அது ஏதென்பீரேல் மனிதரைச் சூலத்திலேற்றினதும் தோலுரிய களாசத்தாலடிக்கவேண்டுமெனத் தீர்மானித்ததேயாம். அப்படிக் கிறைவன் மந்திரிபிரதானி பிரஜைகளுக் கனந்தம் விதமாயவர் பெருமையை விரித்துரைத்தும் அன்பான வார்த்தைகளால் மனதைக் கரைத்தும் கேட்காமல் சூலத்திலேற்றினார்கள். அப்போதும்

மகாத்மாவின் அங்கத்துற்ற துங்கமான ரத்தத்துளிகளெல்லாம் அலக்யென்னும் மகா வாக்கியார்த்தத்தையே யுரைக்க அதைச் சுட்டுச் சாம்பலாக்கி யோர் கலசத்தி லடைத்துவைக்க அத்திருநீறு மப்படியே யுரைத்துக் கொண்டிருந்தது அவ்வூராரையன் மகளதை யவிழ்த்துப்பார்த்தலே அக்கன்னிகையின் கற்பத்திற் பிரவேசித்துப் பூரணமாய்க் குழந்தையாய்ப் பிறந்து அவ்வாக்கியமே புகன்றுக்கொண்டிருந்து அவ்வேந்தனுடைய மகன் மடிய அக்குழவியை அவ்வாக்கியத்தாலெழுப்ப அதனால் மாந்தர்களனைவரும் வெட்கி நமது குமாரனுக்கு விரோதமான வாக்கியத்தா லெழுப்பினானென்று தோலுரிய அடிக்க எத்தனிக்கையில் இப்புருஷோத்தமன் தோலை யுரிந்தவர் முன்னெரிந்து சூரியனையழைத்துப் பட்டினத்தை நடுங்கச்செய்து அத்வைத க்ஞானத்தைப் புலப்படக்காட்டி மதபேதத்தை வாட்டி அரைக்கணமு மவ்வூரிற் றங்காமல் புறநாட்டிற் சென்றுரிதை நீர் கேட்டுமிருப்பீர். அப்படியே எனக்கும் நேரிட்டதன்றி இன்னமும் நேரிடும் இதனாலுனக்குக் குறைவுண்டாகும் சந்தோஷமாக விடைகொடுத்தனுப்பு மென்றறையப் பாதுஷா அவர் பாதாம்புயங்களில் தனதிருநயனங்களை யணிந்து சிரசாஷ்டாங்கமாகப் பணிந்து ஓ ஸ்வாமி! எனக்கோர் மார்க்கமறிவிக்காமல் எழுந்தருளினால் நான் மகம்மது மார்க்கத்திலும் நில்லாமல் இந்துக்கள் நெறியிலுஞ் செல்லாமல் நடுநாடாய்த் தடமாடிக்கொண்டிருக்கமாட்டேனோ? இப்படிச் சந்தேகத்தில் வைத்துப்போவதழகோ? காருண்ய மூர்த்தியாகிய தேவரீரே என்னைக் கைசோரவிட்டால் காப்பவ ரொருவருண்டோ வென்று மிகவுங் கரைந்தழத் தொடங்கினர்.

அரிதாசர் ராசனை ஆலிங்கனஞ் செய்துக்கொண்டு ஓ வேந்தனே! சத்துவகுணத்திற் சிறந்த சாந்தனே! குரானிலுரைப்பதும் வேதத்திலுரைப்பது மொருபொருளன்றி வேறில்லை. ஆயினும் ரூபத்தைத் தொழுவோர் இந்துக்கள். நிரூபத்தைத் தொழுவோர் மகம்மதியர். இப்படிப் பேதமாயிருந்தாலும் ஒன்றையே தொழுததாகும் எப்படியென்பீரேல் லவணத்தைப் போன்றது ரூபம் ஜலத்தைப் போன்றது நிரூபம் ஜலமே லவணமன்றி வேறல்ல அதுபோல நிரூபம் ரூபமன்றிவேறல்ல அவிவேகத்தால் வேறுபடுத்துவதன்றி விவே

கத்தா லூன்றிவிசாரிக்கின் சம்மதமாகவேயிருக்கின்றது ஆத லால் நீரிதுகாலபரியந்தம் தியானஞ் செய்துக்கொண்டுவந்த நிரூபமாகிய பரப்பிரமத்தையே தியானஞ்செய்துக் கொண்டி ருப்பதன்றி அப்பரபிரமத்தை உமக்குள் நீரறிந்தும் சந்தோ ஷசாகரத்தில் மூழ்கியிருப்பீராகவென் றவ்ஸதசமஸ்த சையோ கஞ்செய்து மகா வாக்கியோப தேசஞ்செய்து தேகேந்திரிய கரண பிராண ஜீவவஞ்ஞானங்க ளீதிதென்றுணர்த்திச் சாக்ர சொப்ன சுழுப்தியின் நிலவரங்களைத் தெரிவித்து சின்னுளி ருந்து பிரமநிஷ்டையிலிருக்கும் மர்மத்தையும் அந்தர்மூகத் தில் மனஞ்சென்று ஆனந்த நித்திரையில் ரமிக்குங்குறியும் புலப்படக்காட்டி அத்வைத க்ஞானத்திற் பூர்த்தியடையும் படியாய்ச் செய்து ஒருநாள் இறைவனை நோக்கி, ஓ அர சனே! உமக்கு ஏதேனுஞ் சந்தேகமிருந்தால் கேளுமென்று அறையப் பாதுஷா தன்னுடைய பட்டினத்திலிருக்கும் அனேக பகீரிகளுரைக்கு மார்க்கமும் அரிதாசர் சொன்ன மார் க்கமும் ஒற்றுமையாயிருப்பதால் யாதொன்றுங் கேட்கக்கூடா மல் சற்றே மௌனமுற்றிருந்து பின் தனக்குற்ற ஓர் சங்கை நீங்கப் பரமபாகவதனைத் தொழுது ஓ ஸ்வாமி! எங்களில் மஸ்தானென்றும் வலீயென்றும் புகழ்பெற்ற பேர்படைத்த உத்தமர்கள் சொல்லும் நெறியும் தாங்கள் புகன்றவழியும் அபேதமாயிருப்பதாலும், பிரத்யட்சமான அனுபவக்ஞான த்தாலும் சந்தேகமொன்றுமில்லை ஆயினும் இவ்வுலக மெவ் விதமாயுண்டாயிற்றோ, எவ்விதமாயொடுங்குமோ என்கிற சங் கைமாத்திரம் நிவர்த்திசெய்யக் கோருகிறேனென வணங்கத் துளசிதாசர் ஓ பாதுஷாவே! அனுதினஞ் சகலருக்கு மனு போகமான நித்திரையி னுற்பத்தியையும் நாசத்தையும் சொ ல்வதற்கே கூடாமையாயிருக்கப் பிரபஞ்சோற்பத்தி லயத்தை யொருவரா லுரைக்கத்தகுமோ ஆயினும் சகல மதஸ்தரும் ஒப்புக்கொள்ளும்படியான வேதாந்த சாஸ்திரத்திலுரைக் கும் பிரபஞ்சோற்பத்தி லயத்தைப் பெரியோர்களால் கேள்வி ப்பட்டபடியே யுரைக்கின்றேன் சற்றே கவனமாகக் கேளும். அதேதென்றால் அகண்ட பரிபூரண சச்சிதானந்த நித்திய நிர்மல சொரூப சாக்ஷாத்கார சுயம்பிரகாசமாகிய ஒப்பற்ற பரப்பிரம வஸ்துவானது நாமரூப ரகிதமா யிருக்கின்றபடி யால் இப்பேர்க்கொத்ததென்று மூவர் தேவர் மற்றியாவரா

லுஞ் சொல்லக் கூடாததா யிருக்கின்றது சொல்லப்புகின் பிரமைக்குள்ளாகு மாதலால் அத்வைதமான நிற்குணவஸ்துவுக்குப் பிரமமென்கிற நாமமூண்டாயிற்று. இப்படியே பல காரணங்களாற் பல நாமங்களேற்பட்டது நிராங்காரமாகிய பரப்பிரமம் நிலாத்தீபம்போலவும், நிஷ்தாங்க சமூத்திரம் போலவும், ஓவியம்போலவும், காந்தக்கல்போலவும், சலனமற்றிருக்க அதன் சந்நிதானத்தில் காந்தக்கல்மூன் இரும்பூசிகளைப்போலவும், அக்கினியிற் சூடுபோலவும், விளக்கின் நிழலைப்போலவும், நச்சு சர்ப்பம்போலவும், கானல் சலம் போலவும், சலனமே சுபாவமான மூலப் பிரகிருதியென்றும், அவ்வியக்தம் என்னும் பேருடைய ஓர் மாயாசக்தி யுண்டாயிற்று இதின்வடிவம் இருளேயாம். எங்ஙனமெனின், சந்திர சூரிய ருற்பத்தியாகாமூன் எங்கும் அந்தகாரமே நிறைந்திருந்தது. அந்த அந்தகாரமே மாயையென் றுரைக்கத் தகும். ஓ ராசனே! அகண்ட பேரொளியின் பரப்பிர்மம் ஓர் தீபமாம். அத்தீபத்தின் நிழலேமாயையாம். ஏகபெருவெளியின் பிரமத்தினிடத்தில் வந்தியா பு திரனைப்போல அணுவுக்கு அணுவான மாயையென்னு மிருட்டெப்போ துண்டாயிற்றோ அப்போதே ஒன்றுண்டானு லதிலனேகமூண்டென்கிற சம்பவப் பிரமாணப்படி முழுதும் மித்தையான மாயையிற் பிரதிபலித்த பரப்பிரமத்திற்கு அரோபமாய் ஈஸ்வரனென்கிற பொதுப் பெயருண்டாயிற்று அனேக விசித்திர ரூபமான மாயா பிரதிபிம்பனுன ஈஸ்வரனுக்கு மனேக விசித்திரரூபமுள, அதெப்படியென்றால் சலனமே சுபாவமான மாயாந்தகாரத்தில் சுத்ததன்மாத்திரையான அரூப ஆகாயமூண்டாயிற்று அதிற் பிரதிபலித்த பிரமத்திற்கு சதாசிவனென்றும் அரூபமான ஆகாயத்தில் சத்தத்துடன் பரிச தன்மாத்திரையான வாய்வுண்டாயிற்று. அதிற் பிரதிபலித்த பிரமத்திற்கு மயேசுவரனென்றும் ரூபாரூபமான வாயுவில் சப்தஸ்பரிசத்துடன் ரூப தன்மாத்திரையான தேயுவுண்டாயிற்று. அதிற் பிரதிபலித்த பிரமத்திற்கு ருத்திரனென்றும் ரூபமுள்ள தேயுவில் சப்த ஸ்பரிச ரூபத்துடன் ரச தன்மாத்திரையாகிய அப்புவுண்டாயிற்று.

அதிற் பிரதிபலித்த பிரமத்திற்கு விஷ்ணு வென்றும் ரூபமுள்ள நிலத்தில் சப்த ஸ்பரிச ரூபத்துடன் சத்த தன்

மாத்திரையான பிருதிவியுண்டாயிற்று அதிற் பிரதிபலித்த பிரமத்திற்குப் பிரமாவென்று சொல்லப்படும் பஞ்ச பூதங்களும் மாயாம்ஸமாம் பஞ்சகர்த்தாக்களும் பிரமாம்ஸமாம் பிரபஞ்சோற்பத்திக்குக் காரணமான மாயை பிரமத்திலோ ரணுவெனச் சொல்லப்படும் மாயையென்னுஞ் சாயையில் விசாலமான ஆகாயமும் ஆகாயத்தில் வாயுவும், வாயுவில் தேயுவும், தேயுவில் அப்பும், அப்புவில் பிருதிவியுமடக்கமாயிருக்கும், நிர்ச்சலமான ஆகாயத்துக் கிணையாயிருக்கும் பரப்பிரமத்தினிடத்தில்தனக்குத்தானே யுண்டாகிச் சுழலும் சுழல் காற்றுக்கிணையான மாயையானது பஞ்ச பூதங்களிடமாயிருந்தொன்றுட னொன்றைச் சேர்க்கும்.

ஈசுர பிரயோகத்தால் அனேக அண்டங்களாகி மயில் முட்டையைப்போல் நானுவிசித்ர ரூபங்களால் விளக்க முற்றிருப்பின் அல்லாமல் ஸ்படிகம் நிஷ்களங்கமாய்ச் சுத்த துல்லியமாயிருந்தும் பஞ்சவர்னக் கோட்பாட்டால் பலவித வர்னங்களாக எப்படி தோன்றப்படுமோ அப்படியே அரூபமுள்ள ஆகாயத்திற் பிரதிபலித்த பரப்பிரமம் அரூபமுள்ள சதாசிவனுகவும், ரூபாரூபமுள்ள வாயுவிற் பிரதிபலித்த பரப்பிரமம்ரூபாரூபமுள்ள மயேசனுகவும், ரூபமுள்ள தேயு அப்புபிருதிவியிற் பரப்பிரமம் ரூபமுள்ள ருத்ராரி பிரமாவாகவும் விளங்கின பிருதிவி சொரூபமான பிரமாவானவர் ஐந்து குணமுள்ள பிருதிவியா லனேக அண்ட பிண்டங்களை யுண்டாக்கினுர். விஷ்ணுவானவர் நான்கு குணமுள்ள அப்புவால் பிரமாவா லுண்டாகினதை ரட்சிக்கத் தொடங்கினுர். ருத்திரன் மூன்று குணமுள்ள தேயுவால் அரியால் ரட்சிப்பதைச் சம்மாரஞ் செய்யத் தொடங்கினுர். மஹேசுவரன் இரண்டு குணமுள்ள வாயுவால் மாயாம்ஸமான ஜீவர்களுக்கு மயக்க முண்டாக்குவார் சதாசிவன் ஏககுணமுள்ள ஆகாயத்தில் ஜீவர்களுக்குத் தெளிவைக் கொடுப்பார். மாயை பஞ்சபூதாம்ஸமான தேகேந்திரியாதிகளே நான் நானென்னும் அகங்காரக் கிரந்தியை விளைவிக்கும்பிர்மம் தேகாதிகளுக்கும் இவைகளையே நானென்றிருக்கும் சிதாபாசனுக்கும் விலட்சணமாய் எல்லாவற்றிற்கும் சாட்சியா யறிந்துக்கொண்டு சுலட்சணமாகித் திருக்குவாகிய ஆத்மாமாத்திரமா யிருக்கும், பிரம்மா ஜாக்ராவஸ்தையாய் ஜீவனை நானுவித போகபோக்

கியங்களி லலயச்செய்யச் செய்வார். விஷ்ணு சொப்னவஸ் தையாய் ஜீவனுக் கனேகவித லீலையைக்காட்டுவார் ருத்திரன் சுழுப்தி யவஸ்தையாய் எல்லாவற்றையுஞ் சூனியமாக்கி ஜீவனைத் தனியாக்குவார் மயேசன் ஜீவனுக்குந் துரியாவஸ்தைக் கிணையான ஓர் மயக்கமுண்டாக்குவார் சதாசிவன் ஜீவனுக்குத் துரியாதீத அவஸ்தைக்கிணையான ஓரானந்தமுண்டாக்குவார் மாயை சுகத்தை மறைத்துச் சுத்த சூன்யமாய்ப் பிர்மிக்கச்செய்யும் பிரமம் சுயம்புவாய் அறிவானந்தமாயிருக்கும் பரப்பிரமமான இந்த ஆத்மானந்தத்தை மாயாவிசேஷத்தாலறியாச் சீவன் துக்கத்தையே சுகமாக நினைத்து அளவற்ற ஆசைக்குள்ளாகி இச்சா சொரூபமான அனந்த தேகங்களெடுத்து ஜனன மரணமென்னும் வாரிதியிலமிழ்ந்து கரையேறுதற்கோர் துறைகாணமல் துக்கததையே யனுபவித்துக் கொண்டிருக்கும் பஞ்ச தன்மாத்திரைகள் பஞ்ச பூதங்கள் இவைகளாலுண்டான அண்ட பிண்ட பிரமாண்டங்களும் மாயையினுடைய லீலையன்றி வேறில்லை விவேகத்தாலறிவூன்றி விசாரிக்கில் ஜீவசப்தமேயில்லை எங்ஙனமெனின் தேகாதிகளைப் பஞ்ச பூதாம்சமென்று நியதிசெய்து பார்க்கையில் நானெனுஞ் சீவசப்தம சூன்யமாகும் தேகாதி நானென்றகங்கரித்து நிற்கும் பிரமையே ஜீவனன்றி வேறில்லை சாட்சியாகிய ஆத்மாவே பிரமமாகும் இந்த கூடஸ்த பிரமமே சுயம்பிரகாசமாய் ஜாக்ர சொப்ன சுழுப்தியிலுள்ள விஷயபோகங்களையும் நானு பேத விசித்திரங்களையும் சூனியத்தையும் ஜீவனுக்குள்ள மயக்கத் தெளிவையும் விலட்சணமாயிருந் தறிந்துக்கொண்டு அவைகள் நானுபேதப்பட்டாலும் தானபேதமாய் அவைகள் சத்தானலும் தானழியாச் சத்தாய் அவைகளஞ்ஞான மயமானலும் தான் ஞானமயமாய் அவைகள் துக்கமயமானலும் தானனந்தமயமாய் நிர்மலமாய் நிர்விகாரமாய் நிரூபமாய் ஏகப்பிரகாசமாய் பெருவெளியாய் அகண்ட பரிபூரணமாய் விளங்கியிருக்கும் மாயை ஓர்காலத்தில் விசித்ரரூபங்களாய் அனிருத சட துக்கமாயிருக்கும் இந்த மாயையை நாடினேர்களுக்கு விசித்திரமான சித்திகள் சித்தித்தாலும் நானற்ற பிரமக்ஞான மில்லாமையால் அகங்காரம் விர்த்தியடைந்து இறுதியில் துக்கமே பலிதமாகும் பிரமத்தை நாடினேர்களுக்குச் சித்திகளனேகம் பலிதமாவதன்றி அக

ண்டானந்தமுண்டாகி இறுதியில் கைவல்யங்கிடைக்கும் பிர ம்மாம்ஸமான பஞ்ச கர்த்தாக்களில் யாரைப் பரதெய்வமென நம்பித் தியான தோத்திரங்கள் செய்தாலும் அந்தப் பரப் பிரமத்தையே தியான தோத்திரஞ் செய்ததாகும். அதனு லேயே அனேகர் எந்த தேவதையை இஷ்டதெய்வமெனத் தொழுதார்களோ அதையே தேகவியோக பரியந்தம் நம்பி அத் தேவதையினருளால் மோட்ச மடைந்தார்கள். ரூப முள்ள தேவதைகளைத் தள்ளி நிரூபமான பரப்பிரமத்தைத் தியானித்தல் வெகு துர்லபமாயிருக்கும் ரூபத்திலேயே நிலை க்கா மனம் நிரூபத்தில் நிற்ப தருமையாதலால் சுலபமாய் மூக்தியை நாடும் வழி ரூபமென அனேகர் அங்கீகரித்தார்கள்.

இதிலிருந்து தேர்ந்து நிரூபமான பரப்பிர்மத்தை நாடி னோர்களைப்போல எல்லோரும் ரூபத்தைவிட்டு நிரூபத்தை தியானஞ்செய்வதால் நிஷ்பிரயோசனமே பலிதமாகும் உறு தியான மனதாற் றியானிப்பதற்கோர் தடையுமில்லை தடை சொல்வாருமில்லை பரப்பிரமமே சிருஷ்டியாதி கிருத்தியங்க ளியற்றுகின்றதென்றுல் நிர்ச்சலன வஸ்துவென்றுரைத்தல் கூடாது நினைத்தமாத்திரத்தில் சகலமு முண்டாயிற்றென் ருல் நினைப்பிருந்தால் மறப்புமிருக்கும் இவ்விரண்டுமிருந் தால் விகாரமுமிருக்கும் ரூபமுமிருக்கும் விகாரமும் ரூபமு மில்லாப் பரம்பொருளுக்கு நினைப்புண்டென்பதே எல்லாச் சங்கைகளுக்கு மிடமாயிருக்கின்றதாதலால் திரிமூர்த்திகளா லேயே சிருஷ்டி ஸ்திதி லயங்கள் நடக்கின்றது ஆதலா லிவர்களையு முக்கியமாகத் தொழல்வேண்டும் திரிகரணசுத்தி யோடும் திரிமூர்த்திகளையாவது பரப்பிரமத்தையாவது பஜிப் பவனே பரம பக்தனென் றுரைக்கத்தகும் இந்தச் சிரத்தா பக்தியோடு சர்ப்பத்தைப்போல சுவாசத்தையுண்டு நீண்ட ஆயுளைப்படைத்து அனேக சித்திகளால் பூர்த்தியடைந்து நிர்வியாகூலத்துட னிருப்பவன் மாட்சிமையான சித்தனென் றுரைக்கலாம் பகவத் பக்தியும் யோகப்பயிற்சியும்செய்த பலத் தால் சித்திப்பதென்னவெனில் ஜீவன்முத்தித் தன்மையாம். ஜீவன் முத்தியென்பது தேகாதிகளை நியதிசெய்து தன்னை யறிந்து தானே பிரமமென்றுணர்ந்து பிர்ம நிஷ்டாசாத னத்தினுல் விஸ்ராந்தியடைந்து தன்னை மறந்து பரப்பி

மத்துக்கு ஐக்யமாய் ஆனந்தவாரியில் மூழ்கி தானின்னு னென்றுணராமல் ஆரூட க்ஞானியாதலேயாம் கேவலம் மௌடீகப் பசுவைப்போ லிருப்பவனினும் மூர்த்தித் தியானஞ் செய்பவனதிகம் அவனிலும் பரப்பிரமத்தைத் தனக்குளறிபவனதிகம் அவனிலும் அப்பரம்பொருளா யிருப்பவனதிகம் அவனிலும் அகண்டானந்தத்தாற் றன்னை யின்னுனென் றறியாமல் சாட்சாத்காரத்தை யடைந்திருப்பவனதிகம் அவனிலும் துரிய திருஷ்டியைமேவித் திக்கு தேசாதிகளிறந்து பேய் பிடித்தவன்போலவும் சேயிருப்பதுபோலவுமிருக்கும் சகச ஞானிகளைத்தேடிக் கண்டுபிடித்து அன்னபானாதிகளூட்டிக் குற்றேவல் செய்பவனதிகமாகும். ஓ இராஜனே இப்பேர்க்கொத்த மேலான லாபத்தை விடுத்துத் துன்பத்தையடுத்து அரிதான ஆயுளைக்கெடுத்துக் கர்மமென்னும் பெருமூட்டைகளை யெடுத்துப் பசுவைப்போலிருக்கும் மானிடர்கள் நாளை எமன் வந்தடுத்தால் என்ன செய்வார்களோ யாரை வைவார்களோ யானறிகிலேன் ஓ வேந்தனே! எத்தனை நாளிருந்தாலு மொருநாளி லழிந்துபோகும் இத்தேகத்தை பொய்யெனத் தீர்மானித்து மெய்வாழ்வுக் குடன்படாமலரை நிமை வீண்காலம் போக்கலாமோ? மண்ணினற் செய்தபாண்டம் உடைந்தும் மண்ணே, இருந்தும் மண்ணேயானது போலப் பரமபக்தியும் ஜீவன் முக்தியு மடையாதவர்களினுக்கை இருந்தும் பிரேதமே மரித்தும் பிரேதமே யல்லவோ? ஆ! ஆ! மந்தமதியோர்க் கெந்தவிதமா யுரைத்தாலும் அந்தகாரமே நிறைந்திருப்பதாகக் காண்பதைப்போலப் பந்தத்துக்கு ளகப்பட்டு வெகு தொந்தரைக் குட்பட்டிருக்கிறார்களே மதபேதவாதிகள் வாதுகளாடி வேதைக்குட்பட்டுத் தாங்கற்ற கல்வியாலோர் பயனடையாமல் சம்மதத்துக் குட்படாமல் உங்கள் வேதம் பொய்யென்றும் எங்கள் வேதம் மெய்யென்றும் உங்கள் தெய்வம் அசத்தியமென்றும் எங்கள் தெய்வம் சத்தியமென்றும் - தூஷண வார்த்தைகள் விண்டு மதாபிமான மேற்கொண்டு சம்மதத்துக் குட்படாமல் தன்னை யறியாமல் தனக் குள்ளிருக்கும் ஆனந்தத்தையும் அனுபவிக்காமல் உத்தமர்களைப் பழித்து வீணாய் நாளைக்கழித்து எமன் வருங் காலத்தில் தந்தங்களைக் காட்டிச் சூழ்ந்திருப்போரையும் வாட்டிச் சொல்லொணுத் துயரத்தையூட்டி நரகப்பட்ட

ணத்துக்கு மேட்டான மேட்டிகளாகிறது நன்மையோ நன்மையோ தனக்குள் மெய்ப்பொருளைத் தேடாமல் தெரிவிப்பவர்பாலு மோடாமல் பகவத் பக்தியையும் நாடாமல் பரமபாகவதர்களையுங் கூடாமல் வீணுய்த் தர்க்க குதர்க்கங்களால் நாள்கள் கழிக்கலாகுமோ? இதனு லகமமதை பிரிந்துப் போகுமோ? க்ஷணபங்கமான இவ்வங்கத்தைத் தங்கத்தைப்போலெண்ணலாமோ? பாபகர்மங்களைப் பண்ணலாமோ?

ஓ அரசனே! மதபேதகர்க்குச் சதுர்வேதமும் சங்கையேயாகும், சம்மதமுள்ள சாதுக்களுக்கு ஓர் மொழியேபோதும், முடிவு எழுவகைத் தோற்றங்களான சராசரங்களெத்தனையுகமிருந்தாலும் ஓர் காலத்தில் பூமியி லடங்கிப்போரும், பூமியோ சூரிய னுஷ்ணத்தாற் சுண்ணமாகிப் பிரசண்ட வாயுவாற் றூசாகி வருணபகவானல் ஜலமயமாய்போகும், ஜலமோ அக்கினியால் வற்றிப்போகும், அக்கினியோ வாயுவாலில்லாமற்போகும், வாயுவோ ஆகாயத்தி லடங்கிப்போகும், ஆகாயமோ இருள் மயமான மாயையி லடங்கிப்போகும், மாயையோ தன் சாமர்த்தியங் கெட்டுச் சூரியனைக்கண்ட பனியைப் போலவும், சுழல்காற்றி லகப்பட்ட இலவம்பஞ்சுப் போலவும், அக்கினியில் வீழ்ந்த சருகைப்போலவும் சுத்த சூன்னியமாய்ப் பிரமத்தி லில்லாமற் போகுமானுல் நம தாக்கையை ஓர் பொருளாய் மதித்தகமடைந் திருக்கலாமோ? ஓ பூபதி! மாயை யிவ்விதமா யொடுங்கியும், பரப்பிரமம் பதிஆதிமத்தியாந்த ரகிதமாய் நாமரூப விகார ரகிதமாய் அகண்டானந்தமாய் நித்த சுத்த புத்த முத்தமாய் நிஷ்கள நிராமயமாய் நிர்ச்சேத நிர்பேத நிராவர்ணமாய் என்று முள்ளபடியேயிருக்கும் ஆதலால் தனக்கு ளிப்போது மந்தலட்சணத்தோடிருக்கும் பரமாத்மாவைச் சற்குருவாலறிந்து கூடஸ்த பிரமத்தையே சுகச ரதிக விசாதிக சுவகத பேதாசிகமென்றும், அண்டபரிபூரண ஸ்வரூபியென்றும், சத்திய க்ஞானனந்த வஸ்துவென்றும், தேவரும் மற்றியாவரும் போற்றும் ஆதி தெய்வமென்றும், முத்தரும், பத்தரும், சித்தரும் வணங்கும் பரம் பொருளென்றும், சித்விலாச சின்மய சுயம்பிரகாச தேஜோமயமென்றும், திவ்ய மங்களாற்புத போதமென்றும், இதையடைந்தவர்களுக்கே ஜனன மரண துக்கமாம் பரையொழியுமென்றும், சகல பாபகர்மங்கள் விமோசன மாகுமென்றும்,

நாகவேதனை யில்லை யென்றும், மோட்சானந்தங் கிடைக்குமென்றும் சொல்லப்படும் இதிற் சந்தேகமே யில்லை சந்தேகமுள்ளோர்க் களவற்ற தொல்லை ஓ இராஜனே! இந்தப் பிரமக்ஞானம் லேசிலடைவதற்குச் சற்குரு கிருபையும் இஷ்டதேவதையின் வரப்பிரசாதமும் அவசியம் வேண்டும் இன்றேல் நிஷ்பிரயோசனமாய் முடியும் ஆதலால் இன்றுடன் தெய்வ பக்தியும் சற்குரு சிரத்தையும் சாதுக்கள் சேவையும் செய்து சுகமுற்றிருப்பாயாக வென்றறைந்து அக்பர் பாதுஷா விடத்தில் விடை பெற்றுக்கொண்டு மதுரா பிருந்தாவனம் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களிற் சஞ்சரித்து ஆனந்த மேலீட்டாற் றன்னை மறந்து சகஜஞானத்தாற் பூர்த்தியடைந்து ஆரூடக்ஞானியாய் சிறப்புற்றிருந்தார். அக்பர் பாதுஷாவோ அன்றுடன் பகவத் பக்தியில் விசேஷித்துப் பிரமக்ஞான நிஷ்டையையும் சாதித்துக்கொண் டானந்தமாயிருந்தார். கேட்டீர்களோ சித்தர்களே! பின்னும் துளசிதாசரால் அனேக விசித்திரங்கள் நடந்ததுண்டு அவையனைத்தும் பக்தவிஜயத்தின் மத்தியி லங்கங்கே வரும் கேட்டுச் சந்தோஷ மடையலா மென் றுரைத்துப் பின்னுஞ் சொல்லுவார். இந்தத் துளசிதாசருடைய சரித்திரத்தை அன்புடன் பாராயணஞ் செய்தவர்களுக்கும், சிரவணஞ் செய்பவர்களுக்கும், பகவத் பக்தியும், நிஷ்காமியமும், பிரமக்ஞானமும் அகண்டானந்தமும், அஷ்டயிசுவரியமும், தீர்க்காயுசும், நோயற்ற வாழ்வும், சத்தியமாகச் சித்திக்கும், ஓ சித்தர்களே! நான் உத்தவ அவதாரமான நாமதேவர் சரித்திரத்தைச் சொல்லுவேன் அதுவெகு உசிதமாயிருக்கும். இனி உங்களுடைய ஸ்தானத்துக் கெழுந்தருளி நாளை அதிகாலையில் வாருங்களென் றுக்யாபித்து நாபாஜிசித்தர் பிரமானந்தத்திற் படிந்திருந்தார். உத்தவசித்தர் முதலானவர்கள் தங்கடங்க ளிருப்பிடஞ் சேர்ந்து யோகநிஷ்டைகளி லெழுந்தருளிக் களிகூர்ந்திருந்தார்கள்.

துளசிதாசர் திருவடிகளே சரணம்.

காலாயிரப் பிரபந்தத் திருவாய்மொழியில்

விஷ்ணுபக்தர் வாக்கியம்.

நின்றவொன்றையுணர்ந்தேனுக்கதனுணோர்மையதுவதுவென்
றென்றுமொருவர்க்குணரலாகாதுணர்ந்துமேலுங்காண்பரிது
சென்றுசென்றுபரம்பரமாயாதுமின்றித்தேர்ந்தாலு
நன்றுதீதென்றறிவரிதாய்நன்றாய்ஞானங்கடந்ததே.

நன்றாய்ஞானங்கடந்துபலநல்லிந்திரியமெல்லாம்நீத்
தொன்றாய்க்கிடந்தவரும்பெரும்பாழுலப்பிலதனையுணர்ந்துணர்ந்து
சென்றாங்கின்பதுன்பங்கள்செற்றுக்களைந்துபசையற்றால்
அன்றேயப்போதேவீடுஅதுவேவீடுவீடாமே.

சிவபக்தர் வாக்கியம்.

அஞ்சலிலென்றகரதலமுங்கணபணகங்கணமும்
அரைக்கிசைந்தபுலியுடையுமம்புலிச்செஞ்சடையும்
நஞ்சையுண்டமணிமிடறுமுன்னூலுமார்பும்
நலந்திகழ்வெண்ணீற்றொளியுமறிமானுமழுவும்
கஞ்சமலர்ச்சேவடியுங்கருணைபொழிமுகமுங்
காமனையன்றெரித்ததிருக்கண்களொருமூன்றும்
பஞ்சடிசிற்றிடையடைந்தயொப்பனைபாகனுமாய்
பால்வண்ணனுளத்திருக்கப்பயமுண்டோவெமக்கே.

என்றுரைத்த பதிக்கவர் சதியுரைத்த

வாக்கியம்.

ஆக்கையெனும்புழுக்குரம்பையனைந்தணையாப்பொருளை
அருளொளியைப்பராபரத்துக்கப்புரமாமறிவை
நீக்கமறமயிர்முனைக்குமிடவறவிவ்வுலகை
நிறைந்துநின்றபெருவெளியைநினைவிலெழுஞ்சுடரைப்
பாக்கியங்கள்செய்தனந்தத்தவக்குறைகண்முடித்த
பழவடியார்க்கருளுதவும்பசுந்துணைக்கற்பகத்தை
வாக்குமனவிகற்பத்துக்களவுபடாவொன்றை
மாசற்றபெருவெளியைமனவெளியிலடைப்பாம்.

துளசிதாசர் சரித்திரம்

முற்றிற்று.



ஸ்ரீ

ஸ்ரீமத் விட்டலதேவாய நம.

நான்காவது

நாமதேவர் சரித்திரம்.

பகவான் துதி.

விருத்தம்.

பாண்டவர்க்காத்தூதுசென்றபத்மநாபாபரந்தாமா
நீண்டவுலகமுழுதுண்டநெடியமாலேயுனையன்பாய்
வேண்டிடாமலுலகியலைவேண்டுஞ்சிறியநாயேனை
ஆண்டுகொள்வாயச்சுதனே அடியேனுன்றனடைக்கலமே.

நாமதேவர் துதி.

விருத்தம்.

அன்னைவயற்றிற்பிறக்காதோனரியைக்கணமுமறக்காதோன்
அன்னமாலுக்குண்பித்தோனரியவருத்தந்தருவித்தோன்
சொர்னஞ்செய்தற்பலதந்தோன்சுராபிக்கன்றுக்குயிர்தந்தோன்
உன்னற்கரியநாமதேவனுபயவடிகடமைத்தொழுவாம்.

முதலாவது அத்தியாயம்

நாமதேவர் உற்பத்தி.

பிரமரந்திரத்தில் சுவாசத்தை யேற்றிக் காலபயத்தை மாற்றித் தேகமான வாதைகளில்லாச் சித்தர்கள் காலையிலெழுந்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு புராதனசித்தரான நாபாஜிசித்தருடைய ஸ்தானத்தை யடைந்து அவருடைய தாட்டாமரைகட்கு வந்தனந் தந்து, ஓ ஸ்வாமி! உத்தாவதாரமான நாமதேவருடைய திவ்விய சரித்திரத்தைக் கிருபைகூர்ந் தருளுமையா வென்று வணங்க, நாபாஜிசித்தர் களிகூர்ந்து ஓ சித்தர்களே! அண்டர்கள் மகிழும் தொண்டர்கள் திகழும் இந்திரன்புகழும் சந்திரன் தவழும் சுந்தரமான சந்திரபாகா நதிக்கருகான எண்டிசைபோற்றும் விண்டு வீற்றிருக்கும் பண்டரபுரத்திலிருப்பவர் புண்டரம் நெற்றியிற்றரிப்பவர் சுப்ரகுணத்திற் சிறந்தவர் மெய்ப்

பணிதன்னில் நிறைந்தவர் தப்புகளெல்லாந்துறந்தவர் இப்புவியாசை யிறந்தவர் கைப்புளயெண்ணம் மறந்தவர் செப்பருநம்பத்தியி லுரைந்தவர் ஒப்பிலாவின்பிற் கறைந்தவர் துப்புளகுணத்திற்குறைந்தவர் எப்பொழுது மரியின் பதத்தில் மறைந்தவர் தைப்பவர் குலத்திற் பிறந்தவர் ஆகிய ராமராமமென்னும் வாக்குள்ள தாம்ஷேட்டி யென்பவர் மனோ விகாரங்களை மாய்த்த குனுபாயி யென்னும் மங்கையுடன் இங்கிதமாயில்வாழ்க்கையி லிருந்து செல்வாக்குகளறைந்து அனுதினம் கனவிலும் அன்பாய் இன்பாய் ஆயனே மாயனே நேயனே உபாயனே சகாயனே என்றறையும் சுஜனரோடுங் கூடிப் பஜனை பற்பலபாடிப் பண்டர புரத்திலிருக்கும் விண்டுக்கு நாடோறுந் தப்பாமல் நைவேத்தியங் கொண்டுபோய் செய்து அஞ்ஞான மனதைக்கொய்து தையல்வேலை விடாமல் வேறு வேலையைத் தொடாமல் எண்ணங்களுக்குத் தன் மனதைக்கொடாமல் கோபத்துக் குட்படாமல் வீண்தொழில் செய்து கெடாமல் நலத்தில் நாள்களைக்கழித்துப் பஜனை செய்யாதவர்களைப் பழித்து லோபஞ் சற்று மில்லாமலழித்துப் பகவான் பக்தியிற்செழித்து வாழ்கிறகாலத்தில் தனக்கு அறுபது வயதாயும், தன் மனைவிக் கைம்பதுவயதாயும், பிள்ளையில்லாமையாற் கள்ளிபோல வளர்ந்தோமே யென்று சதியும் பதியும் துக்கம்மேலிட்டு கக்கசத்துக்குட்பட்டு பாலனுக்காகவழுது பாண்டுரங்கனைத் தொழுது நாடோறும் தாம்ஷேட்டி அதிகாலையிலெழுந்து சந்திரபாகா நதியிற்போய் ஸ்நானஞ்செய்து ஈரவஸ்திரத்துடன் கோயிலி நூற்றெட்டுதரம் அங்கப்பிரதட்சணஞ் செய்து பண்டரிநாதனைப் பணிந்து, ஓ என்னுண்டவனே ருக்மணி மனோகரனே எனக்கோர் மைந்தன் பிறக்க வரந்தந்தாண்டருளுமையா வென்று தோத்திரஞ் செய்துக்கொண்டே வந்தார்.

இவர் மனைவியாகிய குனுபாயி தன் கொழுனன் நித்திரைவிட்டெழுந்து போவதற்கு முன்பே ஸ்நானஞ் செய்திருந்து அவர் ஆலயத்திற்கு வருவதற்குள் தான் பண்டரிநாதன் கோயிலுக்குப்போய், ஓ பண்டரிநாதா! பாண்டவர்தூதா! எனக்குற்ற பிள்ளை கலியைத் தீர்க்கலாகாதோ வென்று தொழுது கண்ணீர் விட்டழுது தன் வீட்டில் வந்திருப்பாள் இப்படி சிலநாள்கழிய ஒருநாள் இரவில் குனுபாயி சொர்ப்பனத்

தில் பகவான் ஓரந்தணனாய் வந்து தரிசனந்தந்து ஓ குணு பாயி! நீ பொழுது விடிந்தவுடனே பிள்ளையைப் பெறுவா யென்றறைந்து மறைந்தார். உடனே குணுபாயி, நித்திரை விட்டெழுந்து தன் பதியின் பாதங்களில் விழுந்து, ஓ ஸ்வாமி! யாரோ ஓர் பிராமணர் என் கனவில்வந்து நீ சூரியோதய மானதே குழந்தையைப் பெறுவாயென்றறைந்து மறைந்து போனார். அவர்வாக்கியப்படி நான் பிள்ளையை பெறுவேனு வென்றாள். அதுகேட்ட தாம்ஷேட்டி குலுங்க நகைத்து, அடி பெண்ணே! என்னிருகண்ணே! பத்துமாதஞ் சுமந்தல்லவோ புத்திரனைப் பெறவேண்டும். அப்படிக்கிருந்தாலும் நரைத்த கிழவியாய்ப்போன நீ எப்படி பிள்ளையைப்பெறு வாய் உனக்குற்ற தனயனுசையின் நினைவே கனவாய்வந்தது நனவிற் காண்பதே பொய்யாயிருக்கக் கனவிற்கண்டது மெய் யாயிருக்குமா? ஓர்வேளை நீ கண்ட சொர்ப்பனம் மெய்யாயி ருந்தால் பகவானருளால் நமக்கெங் கிருந்தாவது குழந்தை யகப்படுமென்று இக்கிழவியான நீ இனிக் கிழவியைப்பெறு தற் கிச்சையாயிருப்பது யுச்சைக்கிடமல்லவோவென, அதற் குக் குணுபாயி நாணமடைந்து மறுத்து பேசுவதற்கிடைந்து நாடோறும்போவதுபோல் ஆலயத்திற்குச்சென்று பகவான் முன்னின்று ஓ பாண்டுரங்கா! ஸ்ரீரங்கா! என் கனவில்வந்த அந்தணர் நீரோ மற்றியாரோ யாராயிருந்த போதைக்குப் எனக்குற்ற பிள்ளைகலியை இத்தினந் தீர்த்தருளல்வேண்டு மென்று மிகவுந் துதித்துப் பகவான் றிருத்தாட்களை மன திற்பதித்து மைந்தனுசை தீருமென்றுமதித்துச் சந்தோஷ மேலீட்டாற் குதித்து வீட்டில் வந்திருந்தால் தாம்ஷேட்டி யென்பவர் அதிகாலையில் நாடோறும் போவதுபோல் ஸ்நா னஞ்செய்யச் சந்திரபாகா நதியை நோக்கிப் போகையில் பக வானோர் விருத்தப்பிராமணராயவரருகிற்சென்று, ஐயா தாம் ஷேட்டியாரே! உமக்கின்றையதினம் மைந்தன் பிறந்தானு வென்றுகேட்டார். அதுகேட்ட தாம்ஷேட்டி நகைத்துத் திகைத்து ஓ! ஓ! நமது மனைவி நம்முடன் இராத்திரி பேசிய மொழிகளை இவர் கேட்டிருந்ததுபோற் றோன்றுகின்றது. நாமும் நம் மனைவியும் விருத்தாப்பிய மேலிட்டும் குழந்தையா சையாற் குளறிப்பேசினேமே இவருக்குத்தரஞ்சொல்லக் கூசி னேமேயென்று யோசித்துக்கொண்டிருந்தார்.

அப்போது மாயா மறையோன் தாம்வேஸட்டியின் கரத்தைப் பிடித்துக்கொண்டு, ஓ ஐயா! அரிபக்தரே! நான் சொல்லப்பட்ட வார்த்தை யுமக்குக் கேட்கவில்லையோ? உமக்குக் காதுசெவிடோ? இப்படிக் காதுச் செவிடான நரைத்த கிழவனுக்கும் பிள்ளையாசை கொள்ளையா யிருக்கின்றது கேட்டீர்களோ ஜனங்களேயென்று பலருங்கேட்கப் பலதர முரக்கக்கூவிச் சொல்லத் தொடங்கினர். அதனால் தாம்வேஸட்டி கோபித்துக் கையைத் திமிறிப் பிடுங்கிக்கொண்டு அந்தணரை நோக்கி ஏனையா பரிகாசஞ் செய்கின்றீர். தள்ளாத கிழவனாகிய வெனக்குப் பிள்ளை யெண்ணமிருக்குமா? உமது வேலையை பார்த்துக்கொண்டு போகாமல் பிரயோசனமில்லா மொழிகளைப் பேசுகின்றீர் வீணையேசுகின்றீர் ஈதுமக்குத்தகாத காரியமென, விப்பிரர் ஓ ஐயா பகவத்பக்தரே! பிறரறியாக் குப்தரே! உன்மனையா ளிப்போது தான் மகவையீன்ருள் நான்பார்த்தே வந்தேன் உள்ளதைச் சொன்னல் வெள்ளறிவன் சள்ளென்று விழுவானென்பதைப்போல் நிச்சயத்தைச் சொன்னல் குச்சிதங்கொள்ளுகிறீர் தூஷணவார்த்தைகள் விள்ளுகிறீர் என் வாக்கியத்தைப் பரிசோதிக்கச் சீக்கிரம் வீட்டுக்குவாரும் புத்திரனைப்பாரும் பத்திரமாய்க்காரும் எனக்கு தட்சணைதாரும் என்று பின்னுமவர் கையைப்பிடித்திழுக்கத் தொடங்கினர். தாம்வேஸட்டி முனிவுடன் நீயாரையா வெகுநேரமாக என்னை மரித்து வருத்துகின்றீர் பொய்மொழி புகன்றீர் பருவகாலங் கடந்த விருத்தை கர்ப்பமெப்படி யுறுவாள் சுதனையெப்படி பெறுவாள் மூத்தோள் குமாரனை பெற்றதை யாராவ திவ்வுலகில் பார்த்த துண்டா அல்லது கேள்விப்பட்ட துண்டா? ஒருநாளு மறிமுகமில்லா நீரிப்படி ஏளனம் செய்யலாமா மோடனம் பண்ணலாமாவென, மாயாமறையோன் ஓ ஓ என்னை நீர் நாடோறும் பார்த்துக்கொண்டிருந்தும் கரங்களைச் சேர்த்துக்கொண்டிருந்தும் இன்றைக்குத்தான் நூதனமாயறிந்தவர்போல் நீர்யாரென்று கேட்கின்றீர் நெடுநாள் சினேகத்தை மீட்டுகின்றீர் ஓஓ காதுசெவிடானலுங் கண்ணுங்குருடோ? அல்லது முருடோ? இப்படி கண்கெட்ட குருடனுக்குங் காளையாசை யிருக்கலாமா? சுதன் வாஞ்சையைப் பெறுக்கலாமா வென்றுரைக்கத் தாம்வேஸட்டி அந்தணரை வுற்றுநோக்கிச் சாந்தத்தை நீக்கி ஏனையா குரு

டன், திருடன், மூருடன், கரடன், என்றேசுகிறீர், பேசாதெல்லாம் பேசுகிறீர் அப்படி என்பெண்சாதி பிள்ளையைப்பெற்ருலும் நீரிப்படிப் பேசக்கூடுமா? பேசியேசக்கூடுமா? வெகுநேரமாக விகடவார்த்தைகள் படபடவென்று சொல்லிக்கொண்டு குடுகுடு, திடுதிடு வென்றங்கு மிங்குமாக யுலாவிக்கொண்டு பலர்முன் என்னைத் தூற்றுகிறீர் ஏமாற்றுகிறீர், இச்சகம்பேசிப் பிட்சையெடுத்துண்ணும் துச்சகுணத்தைக் காட்டாமல் லச்சைசெய்வது விட்டு இட்சணமே யும்மிடஞ் சேருமென்று கடுகடுத்துரைத்தனர்.

வேதியர் என்னைப் போமென்றிசைத்த தாம்ஸேட்டியாரே! நீர் நாட்டோறுந்தப்பாமல் என்குட்சிநிறையப் பிச்சையிடுவதும் நிச்சயமே இனிமேலுன்றன் சொந்த மைந்தன் என்றவனுக்குப் பிச்சையிடுவதும் நிச்சயமே ஓ சித்தனே! பிறந்த மைந்தனுக் கென்ன நாமகரணமிடப்போகிறீர், பெயரிடும்போதென்னை மறந்துவிடப் போகிறீர், வேறேரந்தணனைத் தொடப்போகிறீர், தொட்டுத் துக்கப்படப்போகிறீர், துக்கப்பட்டுக் கெடப்போகிறீர் ஜாக்கிரதை ஜாக்கிரதை யென்றுசொல்ல, தாம்ஸேட்டி இதென்ன சள்ளையாயிருக்கின்றது பேயில் பிராணப்பேய் பிரம்மராட்சசப் பேயென் றுரைப்பதுபோல அதிகாலையிலிருந்து கூடவே தொடர்ந்தார், சூழ்ந்த கொடியைப்போலப் படர்ந்தார் ஸ்நானஞ் செய்யப்போகாம லடர்ந்தார் என்று தாபமுள்ளவர்க்குக் கோபமதிக மென்றுரைப்பது போல ஸ்வாமியென்று பூசித்ததுபோய் நாயே பேயேயென்று தூஷிக்கத் தொடங்கினர். வேஷதாரி வேதியன் துவேஷங்கொண்டதுபோல தாம்ஸேட்டியின் மார்புடன் தன் மார்பகத்தைச் சேர்த்துக் குடிமையைப் பிடித்திர்த்து மீசையை முறுக்கிக் கோபத்தைப்பெருக்கி அடா கந்தைகளிலுள்ள ரந்திரங்களைக் காலையிலிருந்து மாலைபரியந்தம் தைக்கும் கடையா! அறிவில்லா மடையா! நான் சுபத்தை சொல்லவந்தால் விபத்தென்று நினைத்து மேன்மேலுங் களைத்து சாந்தமே வேதாந்தமென்று வாசித்துபோய்ப் பிராமணே மமதேவதா யென்று விசுவாசித்துப்போய்ப் பூஷிப்பதை விட்டு வாயில் வந்தபடி தூஷிக்கிருயா? அந்தணர் புகழும் சந்திரன் தவழும் இந்தச் சந்திரபாகாநதியறிய உனக்கு மைந்தனுசை எந்தநேரமுமில்லையா? பாசபந்தனே சொல்லடாவென்று தாம்

ஷேட்டியின் கன்னத்திலறைந்து மிகவு மிறைந்து பேசத் தொடங்கினர்.

தாம்ஷேட்டி இதென்ன கர்மம் தர்மசங்கடமாயிருக்கின் றது பிரமிக்கும்படி நமது மர்மமெல்லாம் நாலுபேரறிய மே லுமேலும் பேசுகின்றுன். ஒண்டியாயிருந்தால் கண்டகோ டாலியால் கண்டங்கண்டமாகத் துண்டந் துண்டமாகக் கண் டித்து விடுவேன். சூரியோதயமாய் வெகுநேரமாய்விட்டது. பகவானுக்கு நைவேத்தியஞ் செய்யத் தடங்கலாய்விட்டது. நன்மை தின்மையுங்கெட்டது. இப்பிராமண ராகாத்திய மிக வுங் கெட்டது என்று கோபங்குதித்து மிகவுங் கொதித்துப் பற்களை நறநறவெனக் கடித்து அதரத்தைமடித்து உதிரம் புறப்படக்கடித்து மிகவுந்துடித்து ஈனமொழிகளைப் படித்து மரக்கிளையை ஒடித்து வோங்கி ஓரடி வாங்கப்போனர். கபட நாடகமாடும் ஐயன் ஓ ஜனங்களே! எனக்குரிய இனங்களே! இந்த்விருத்தன் மிகவும் பருத்த மரத்தின் கிளையை முறித்து நான் வருத்தமுற அடித்தான் பார்த்தீர்களா பார்த்தீர்களா வெனக் கூக்குரலிட்டுக் கோபமேலிட்டுத் தாம்ஷேட்டியைக் கீழேதள்ளி நகங்களாற் கிள்ளி மேன்மேலுங் குத்தத் தொட ங்கினர். தாம்ஷேட்டி அதிக கோபதீப்தனுக மீசைகள் பட படென்று துடிக்கக் கண்களில் நெருப்புப் பொறிகள் பறக்க மகாவுக்கிரங்கொண்டு வேதியர் முகத்திலும் மார்பகத்திலும் கைமுஷ்டியிற்குத்தி அவ்விருத்தப் பிராமணரைக் கீழேதள்ளி வெற்றியடைய வேண்டுமென்கிற எண்ணத்தால் தன் பலங் கொண்டமட்டும் போர்செய்து புரட்டிப் பார்த்தும் தன்னுலா காமல் பற்களாற் கடித்து நகங்களாற் கீறித் தட்டுக்கெட்டுத் தடுமாறி மிகவும் வேசாறி மெதுவாகத் தப்பித்துக்கொண்டு ஆற்றின்பக்கமாய் ஓடத்தொடங்கினர். மாயாவிலாசன் தாம் சேட்டியை விடாமற் றொடர்ந்தோடிக் கழுத்தைப்பிடித்து நெ ட்டிக்கொண்டே தலையில் குட்டிக்கொண்டே ஆற்றிற் குப்புற விழும்படி யதட்டிக்கொண்டே வாயில் வந்தபடி திட்டிக்கொ ண்டே நின்றுர். தாம்சேட்டி நதியில் தலைகீழாய் வீழ்ந்து திக்குமுக்கிட்டு நொந்து துக்காக்கினியில் வெந்து இன்று நமக்குப் பொல்லாத காலமாதலால் இந்த முரட்டுப்பிராம ணன் நம்மைத் தரையிற் புரட்டித் தன் பலங்கொண்டமட்டு மடித்துவிட்டான். வைராக்கியத்தை முடித்துவிட்டான். வல்

லடிவழக்கு சொல்லடிமாமி யென்கிறபடி வீணயித்துவ்ஷ்டனி டங் கஷ்டப்பட்டோம். நதியிலிறங்கிவந்து தொந்தரைசெய்தாலுஞ் செய்வானென்று தூரமாகச்சென்று அந்தணருக்குப்புலப்படாமல் நின்று அதிசீக்கிரமாய் ஸ்நானஞ் செய்யத் தொடங்கினர்.

அப்போது பகவான் தாம்சேட்டியை யடைந்து வேஷ்டையைத் தீர்க்கவும் மைந்தன் வாஞ்சையைப் போக்கவும் உத்தவரை நினைத்தார். உடனே உத்தவர் பரமபதத்தை விட்டுப் பகவான் பக்கலடைந்து பற்பல விதங்களாகத் துதித்து என்னை யழைப்பித்த காரணமேதோ திருவாய்மலர்ந்தருளும் ஸ்வாமியென்று வணங்கி நின்றார். பகவான் உத்தரவைநோக்கி, உத்தவனே! இதோ நமக்குநேரே அதோ ஸ்நானஞ் செய்யும் உத்தமர் தன்வீட்டுக்குப் போவதற்குள் அவருடைய சதியின் கர்ப்பத்திற்றங்கி ரிஷி பிண்டத்தைப்போல இவ்வுலகிலுள்ளோரியாவரும் ஆச்சரியப் படும்படியாய்ப் பிறந்து மாந்தர்களுக்கென் பக்திப்பிரதாபத்தை விரித்துரைப்பாயாக வென்று திருவாய்மலர்ந்தருளினர். அவ்வாக்கியத்தைக்கேட்ட உத்தவர் திடுக்கிட்டு ஓ என்னுண்டவனே! உனது பரிபூரணகடாட்சம்பெற்ற அடியேனை நரகத்தை யடையச்செய்யலாமோ? உதராக்கினி காமாக்கினி கோபாக்கினி யென்னும் திரியாக்கினியும் புகைந்தெரிந்து மலம் ஜலம் வழும்பு முதலானவைகளுஞ்சேர்ந்து புழுக்கள் நெளித்து துர்க்கந்தமான சுரோணிதம் வழிந்து மச்சைக் கொழுவாற் றழைந்து இருக்கும் கர்ப்பக்குழியையன்றி வேறு நரகமொன்றுளதோ ஜன்மமில்லாமலிருப்பதன்றி வேறுமோட்ச மொன்றுளதோ கருப்பைக்குள் கட்டுப்பட்டுப் பெருமூச் செறிவதும் நெருக்க வழியில் தலைகீழாய்த் தள்ளாடிக்கொண்டு வருவதும் பிரசூத வாயு வேதைசெய்ய அயர்ந்தழுவதும் மாயையென்னும் நீரில்மூழ்கியிருப்பதும் சொல்லக்கூடாத துன்பமல்லவா? துன்பமே நரகமல்லவோ? தேவரீருக்குமடியேன் விரித்துச்சொல்லவோ? எமதண்டனையும் நரகக்குழியும் கர்ப்பத்திலிருப்பதேயன்றி வேறே யெவ்விடத்திலாவது எமதண்டனையும் நரகக்குழியும் இருக்கின்றதோ? ஓ என்தெய்வமே! மோட்சமடைந்தநான் நரகத்தையடைந்து நாட்சியடையலாகுமோ? அடியேன் நரகடையமறந்தும் தேவரீர் நினையீரென்றிருந்தேனே

இப்படி அதிக நம்பிக்கையோடு மிருந்த என்னைப் பாழ்நரகிற் றள்ளலாமோ? அடியேன் றுன்பங்கொள்ளலாமோ? நரகலோகமென்பது இந்நரலோகமன்றி வேறுண்டோவென்றுரைத்துருகும் உத்தவரைப் பகவான் கருணையுடன் பார்த்து மார்புடன் சேர்த்து ஓ எனதன்பனே! உன்னைப்போன்றவர்களாலேயே என்னுடைய திருநாமத்தின் மகிமை இவ்வுலகில் விளங்குமன்றி மற்றவர்களாற் றுலங்காதாதலால் சீக்கிரங் குழந்தையாகித் தாம்சேட்டியினிடஞ் செல்லுமென்றறைய உத்தவர் ஓஸ்வாமி? உமதாக்கினையின்படியே மைந்தனுய் ஜலத்தில் மிதந்துக்கொண்டுபோய்த் தாம்சேட்டிக்குத் தனயனுகின்றேன். ஆனல் அடியேனிப்போது எடுக்கும் ஆக்கையைவிட்டுப் பரமபதத்தை யடையும் பரியந்தம் உமது பக்தி பெருமையுடன் சிறந்திருக்கவேண்டும். என்னுடன் கூடித் தேவரீர் நாடோறு முண்ணவேண்டும். தாரித்திரம் என்றென்றைக்கும் அணுகாம லிருக்கவேண்டும். நான் நினைத்தபோதெல்லா முமது காட்சி கொடுக்கவேண்டும். தாழ்ச்சி தவிர்க்கவேண்டும். என்கிற வரங் கேட்டுக்கொண்டார்.

பகவான் ஓ உத்தவா! நீ கேட்ட வரங்களெல்லாங் கொடுத்ததன்றி உனக்குத் தோழனுகவும், பணியாளனுகவு மிருக்கின்றேன். சீக்கிரங் குழந்தையுருவாகிப் போவென்று திருவாய் மலர்ந்தார். உத்தவர் மகா பாக்கியமென்று அழகுள்ள குழவியாய் ஓர் நீண்ட சிப்பியிற்றங்கிச் சந்திரபாகா நதியில் மிதந்துக்கொண்டே கரகரவென்கிற சப்தத்துட னழுதுக்கொண்டே தாம்வேஸட்டியினருகில் வந்தார். தாம்வேஸட்டி குழந்தையைக் கண்டதே கொப்பென் றெழுந்து வாரியெடுத்து மார்புடனணைத்துச் செப்புதற்கரிய ஒப்பிலாமணியாகிய என்னப்பனே! இச்சலத்தில் எப்படி மிதந்து வந்தாய் எனக்கே னுன்னிட சேவை தந்தாய் என் றம்மகவை எடுத்துக்கொணடு தன் வீட்டை நோக்கி வோடத் தொடங்கினர். அப்போது பகவான் தாம்வேஸட்டியின் பின் தொடர்ந்தோடி, அடா திருடா? அடா குருடா? குழத்தை யேதடா எதடா நீ இதுபரியந்த மென்னுடன் செய்தது வீண் வாதடா வாதடா? உன் பக்தி மிகவுஞ் சூதடா சூதடா? குழந்தையை யெங்கே கொண்டுபோகிரு யோதடா ஓதடா? அப்பா இவ்வளவு துரிதமா யோடுதற் குனக்கெங்கிருந்து வந்தது

பலம், இக்குழவிக்காகத்தானே வெகுநாளாக கோயிலை வலம் வந்தாய், இச்சுதனை லுனக் கென்னடாவரும் நலம், இம் மலையாற்றுனே ஈடேறு மூன்குலம், மகப்பேறில்லாமையாற் றுனே படைந்திருந்தாய் சஞ்சலம் என் றுரைத்துக்கொண் டே காற்றைப்போல அதிவேகமாயோடும் தாம்ஸெட்டியின் முன்னேடி மறித்து, அடா தையற்காரா! இச்சுதன் யார் பெ ற்ற பாலன், எவர்பெற்ற சீலன் என்ன திருவிளையாடல் செய் யவந்தகோலன், எப்பேர்க்கொத்தவர்க் கனுகூலன், குழந்தை யைத் தாரும் பார்ப்போமென்று பலவந்தமாகப் பிடுங்கத் தொடங்கினர். பகவானுடைய மாயையா லக் குழவியின்மே லதிக ஆவல்கொண்ட தாம்ஸெட்டிக்குத் தாபமும், கோப மும், சோபமும், லோபமும், மேலிட்டு அப்பிராமணேத்தம ருடன் வாதாடப் பின்னிட்டு, ஓ ஸ்வாமி! நீர் மேலான வரு ணம் ஆதலாற் செய்கிறேன் சரணம் ஓடிவருதலால் நோகு மும மது சரணம், இப்போதென்னை மறுக்காத்தருணம், மறித் தா லுமக்குவரும் மரணம், நீரெனக்கோர் திரணம், சாந்த மாய் வந்தாற் றருவே னனேகாபரணம், ஆதலா லென்னைத் தடைசெய்யாதீர் செய்யாதீர், வாயில்வந்தபடி வையாதீர் வை யாதீர் என்றுரைத்துக்கொண்டே குழந்தையைக் கொடுக்கா மல் அங்குமிங்குமா யோடத்தொடங்கினர்.

மாயாப்பிராமணர் தாம்ஸெட்டியின் மடியைப் பிடித்துக் கொண்டு அசையாமல் நிறுத்தி மிகவும் வருத்தி அடா தாம் ஸெட்டி! குழந்தையேது சொல்லு, ஓடாமற் சற்று நில்லு, ஏன்செய்கிறுய் மல்லு, நீயெனக்கோர் புல்லு, நசுக்க ஒருவா ட்டிச் செல்லு, நறநறென்றேன் கடிக்கின்றுய் பல்லு, கோப த்தாலென்னைக் கொன்றுலுங் கொல்லு, இத்தர்ப்பையே உன் னைக்கொல்லும் வில்லு, உன்னைப் புடைக்க என் கரமுஷ் டியே பெரியகல்லு, உன் பலமூதச் சிதறும்பதர்நெல்லு, இப் பாலனுக்காகவா நாடோறு மல்லும் பகலும் பண்டரிநாத னுக்கு நைவேத்தியஞ் செய்துக்கொண்டு வந்தாய் அடா மோட்சத்தின் சூட்சமான மார்க்கமறியா மூர்க்கநாயே! அறி வில்லாப் பேயே! உனக்கும் வாயேனென்று கான்முளை நசுங் கிக் காகாவெனக் கூக்குரலிட்டழத் தாம்ஸெட்டி பலதரந் தொழ அவர்மீதிருக்கும் பேரன்பால் மார்புடன் மார்பைச் சேர்த்து பலதிக்குகளிலீர்த்து அங்கம் வேர்த்துத் தாம்சேட்டி

தோர்த்துப் போகும்படியாயும் மனங்கொதித்து வேகும்படியாயும் பகவானுக்கு முறையிட்டு நோகும்படியாயும், சின்னபின்ன மாகும்படியாயும், குடிமிடியைப்பிடித்துப் பலதரமிழுத்து, முழங்கைகளாலிடித்து, வீட்டுக்குப் போகாமற் றடுத்தார். விடாச்சலந் தொடுத்தார் அதனுல் தாம்சேட்டிக்குக் கோபம் மிகவும் ஓங்கி பெருமூச்சுகள் வாங்கிச் சண்டை செய்யப் பின்தாங்கி என்னசெய்யலாமென் றேங்கிக் கைகால்களை அடிக்கடி யுதறி அங்கமெல்லாம் பதறி வாய் தடுமாறக் கதறி அந்தணர்முகத்தி லெச்சில் சிதறி விழும்படியாய்ப் பேசி மிகவும் யேசி அடா லச்சைகெட்டுப் பிச்சையெடுத் துழலும் பேயனே! துர்மொழிகள் பேசும் வாயனே! கலியாணப் பந்தலில் கரடியைவிட் டோட்டினதுபோலவும், யானை நிழலைப்பார்க்கத் தவளை கலங்கினதுபோலவும், எனக் கிம்சைதர வந்தாய், வாதாடி நொந்தாய், என்று தூஷித்துப் பின்னும் சந்தோஷமாய் வீட்டுக்கு வாரும் என்ன வேண்டுமோ கோரும், கோரினதளிப்பேன் பாரும், கொடுக்காவிட்டார் செய்வீர் தாருமாரும், வழக்காடியது போரும், சற்றே கிருபை கூறும் என்கிற மொழிகளால் பூஷிக்கும்போது மாயாப்பிராமணன் அடா போடா குடிகேடா! முழுமூடா! வனவேடா! எனக்குத் தேவையான திக்குழந்தையே வாக்குக் கொடுத்தபடியா லிக்குழவியை யிழந்தையே யென்று சுதனைக் கொடுக்கும்படி வம்புக்கு நின்று மெய்யன் வீறிட்டழத் தாம்சேட்டியை கீழேதள்ளிப் பரபரவென்று பல பக்கங்களிலிழுக்கத் தொடங்கினுர்.

தாம்சேட்டி தனயனுக்குக் காயம்படாமல் மார்பில் சேர்த்துக்கொண்டு இதுவென்ன கோரமென்று விண்டு, சோகம் மிகுந்து, மிகவும் நொந்து தனதிஷ்ட தெய்வமாகிய பண்டரிநாதனை நினைத்து, கண்ணீரால் நனைத்து ஓ பண்டரிநாதா! அண்டர்கள் நாதா! தொண்டர்கள் நாதா! புண்டரீக பாதா! பாண்டவர் தூதா! ருக்மணி சமேதா! லீலாவினோதா! வேதகீதா! ஓ மதுசூதா! நானுமதிடம் குசேலனைப்போல் பாக்கியமும், விபீஷணனைப்போல் சிரஞ்சீவித் தன்மையும், அனுமாரைப்போல் பிரமபட்டமும், துருவனைப்போ லழியாப்பதமு மர்ச்சுனனைப்போல் படைத்துணையும், பிரகலாதனைப்போல் வம்சரட்சணையும், ருக்குமாங்கதனைப்போல நே

கர்க்குப் பரமபதமும், அம்பரீஷனைப்போல் பத்தவதார மெடுக்கவும், தேவர்களைப்போல் அமிர்தத்தையும், விதுரனைப் போல தன்னுடன் விருந்துண்ணவும், பரமசிவனைப்போல பிர்மத்தியை நீக்கவும், பார்வதியைப்போல மானபங்கத்தைக் காக்கவும், இலட்சுமியைப்போ லுமது வட்சஸ்தலத்திற் சேர்க்கவும், நாரதரைப்போ லுமது வடிவத்தையும், இந்திரனைப் போல் பலதரமிராக்கதரோடு போர்செய்யவும், முசுகுந்தனைப் போல் நீண்ட ஆயுளையும், வாணுசூரனைப்போல் யுத்தஞ் செய்யச்சம்மதிக்கவும், உத்தவரைப்போல் பேரின்பத்தையும், குப்ஜாவைப்போல் சிற்றின்பத்தையும், அனுசூயைப்போல தனக்கும் புத்திரனாகவும், தேவகியைப்போலப்பிரமக்ஞானம் போதிக்கவும், தூருவாசரைப்போல் கடின பணிவிடைக் காளாகவும், துரோபதையைப்போல் பல வஸ்திரங்கள் தரவும், கஜேந்திரனைப்போல் முதலையைச் சம்ஹாரஞ் செய்யவும், உமதிடம் நானிச்சிக்க வில்லையோ? நானுசித்ததிக் குழந்தையைத் தானே, ஓ எம்பெருமானே! தந்தையின்படியை இச்சித்தனுகூலப்படாத துருவனுக் கழியாப்பதமளித்த பகவானே! மூவுலகை வாஞ்சித்த மாபலிக்கு மோட்சவுலகை யளித்த பகவானே! ஐசுவரியத்தைக் கோரிய குசேலனுக் கடிமையாய்ப்போக எண்ணங்கொண்ட அச்சுதனே! எச்சிலைக் கொடுத்த உச்சிதனே! பத்மநாபா! பரமசொரூபா! பரந்தாமா! ஸ்ரீ ராமா! பரமேசுவரா! ஜகதீசுவரா! பரிபூரணு! சர்வகாரணு! வெங்கடரமணு! சங்கடஹரணு! சகஸ்திர நாமா! நீலமேக சாமளா! ஓ பகவான் ஓ விஷ்ணு! ஓ தெய்வமேயென்று தோத்திரஞ்செய் தேத்தும்போது பக்தவச்சலனுகிய பகவான் தாம் சேட்டி செய்யுந் தோத்திரத்தினுல் தனக் காத்திரமடங்கி ஆனந்தமேலிட்டு ஸ்மரணைகெட்டுச் சித்திரம்போ லசைவற்றிருந்தார். அத்தருணத்தில் தாம்சேட்டி கான்முளையை யேந்திக்கொண்டு காலடிபிட்டத்திற் படும்படியாய் அதிகபரபரப் போடும் தன்வீட்டை நோக்கி, ஓடத்தொடங்கினுர். உடனே பகவான் கண்களைத்திறந்து தாம்சேட்டியைக் காணுமற் பறந்து தாம்சேட்டி தன் வீட்டில் நுழையுந்தருணத்தில் ஓடிப் போய் மறித்துக் கொக்கரித்து வாயிலில் நிறுத்தி வீட்டுக்குட் போகாமல் வருத்தி மென்னியைப் பிடித்தழுத்திக் குப்புற விழுத்திப் பிள்ளையைப் பிடுங்கிக்கொண்டு அடா நான் அநே

கநாளாய்த் தவஞ்செய்து பெற்ற பாலகனைக் கதிர்வடிவேலனை யேன் திருடிக்கொண்டு வந்தாய் எனக்கேனிடர் தந்தாய் நீயு முன் மனைவியுங் கிழப்பிணங்களாயிற்றே உங்களுக்குக் குழந்தையேது? செய்யவேண்டாம் வீண் வாது என்றோசையாய்ப் பேசத்தொடங்கினர்.

அப்போது குனுபாயி வெளியில்வந்து சகலமும் மணாளனாற் கேட்டறிந்த அந்தணர்மேற் சீறிவிழுந்து இதுநல்ல அகடவிகட மென்றறைந்து ஓ அந்தணரே! பகவானென் சொப்பனத்தில் வந்துரைத்த வண்ணம் எங்களுக்ககப்பட்ட மதலையை நீயார் வாங்கிக்கொள்ளுகிறவன் விருத்தரைப் பிடித்துத் தள்ளுகிறவன் என்னுடைய சுதனென்று விள்ளுகிறவன் கோபமேலிட்டுத் துள்ளுகிறவன் என்று சிறுவன் சீறியழவும் விடாமல் பிடுங்கத் தொடங்கினள். அதற்கு மாயா மறையோன் ஓ கிழப்பிணமே! உடைக்கிறேன் பாருன்பல்லையிக்கணமே நீ னரைத்த விருத்தையானபின் உமக்கேன் மகவாசை வீட்டினுட்போ பசாசேயென்று வாயில்வந்தபடி பேசத்தொடங்கினர். அதுகேட்ட குனுபாயி அடாலச்சைகெட்டுப் பிச்சை யெடுத்துக் குட்சியை நிறப்பும் துச்சகுணத்தையா காட்டினுய், வீண் ஜம்பத்தையா நீட்டினுய், ஐயையோ சிறுகுழந்தை பசியால் பதறுகிறது, வாதுசெய்ய நீயெங்கிருந்து வந்தாய், எங்களுக்கே னிடர்தந்தாய், எங்கள் சாபத்தாலேன் வெந்தாய், ஓடோடி வந்தேன் நொந்தேன்யென்று இரைச்சலிட்டுப் பேசும்போது வழியிற்போகும் பலருங்கூடி வழக்கைத் தீர்க்க மாட்டாமல் வாடி மாயா மறையோனுடன் வாதாடி இவர் பேசுவதும் நமக்குத் தெரியாமோடியென்று தங்கடங்க ளலுவலைநாடி பின்னிடைந்தார்கள். அப்போது பராத்பரன் குனுபாயின் பாபங்களெல்லாம் பஸ்பமாய்ப் பரிசுத்த மாகும்பொருட்டு எட்டியுதைத்து தாம் வேஷ்டியைக் கைமுஷ்டியிற் சிதைத்துத் தனது திருக்கோயிலைநோக்கி யோடத் தொடங்கினர். சதிபதிகள் கூடவே தொடர்ந்தோடி ஆலயத்தின் சந்நிதானத்தில் எங்கள் குழந்தை உங்கள் குழந்தையென்று போராடும்போது மாயாவிலாசனை பண்டரிநாதன் கான்முளையைக்கசக்கி முற்பிறப்பின் நிலைமையையும் பிர்மக்ஞான நிலையையும் மறக்கும்படியாய்ப் பூமியில் தொப்பென்றுபோட்டு மாயமாய் மறைந்தார். உட

ணே குணபாயி காகாவென்று கூக்குரலிட்டழும் மகவை வாரி யெடுத்து ஸ்தன்னியத்தைக் கொடுத்துத் தன்னை மறந்து நின்ருள். உடனே பகவானருளால் குணபாயின் கொங்கை களில் பால் பொங்கி வழிந்தது. அதனல் சதிபதிகளிருவ ரும் தாங்கள் பெற்ற தனயனைப்போல மோகித்து வீட்டிற்செ ன்று திஷ்டி தாங்கினதெனப் புகன்று நீராட்டி ஆலங்காட்டி பக்தர்களுக்கு மேட்டி இவனென்று பாராட்டிப் பாலூட்டித் திலகம் நெற்றியிற் றீட்டிப் பல ஆபரணங்களையுஞ் சூட்டி வியாகுலத்தை விழக்காட்டிப் பாலன்மீதில் மனதைநாட்டி வேறு நினைவுகளை வோட்டி விருத்திக் கதவுகளைப் பூட்டித் தையற்காரனுகிய தாம்ஸேட்டி லோபகுணத்தை வாட்டிக் கேட்போர்க்கு நிறைந்த கரத்தை நீட்டிக் கான்மூளையை யரு மையாகக் காப்பாற்றிப் பண்டரிநாதனைப்போற்றிக் கடவுளே காதலனைத் தந்தாரென் றெங்குந் தூற்றித் தள்ளாமை யென் பதை மாற்றிப் பந்துவர்க்கங்களைக் கூப்பிட்டும் பட்சத்துட ன் விருந்திட்டு மறையவரைக் கும்பிட்டு மதலைக்கு நாமதே வென்று பேரிட்டு அருமையாக வளர்த்து ஆனந்தமாய்க் களி த்து அதிதிகட் கனேகந் திரவியமளித்து அருங்கொழுந்து போற்றளிர்ந்து அகமும் மலர்ந்து இன்புற் றிருந்தார்கள் கேட்டீர்களோ சித்தர்களேயென்று நாபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லத்தொடங்கினர்.

நாமதேவர் உற்பத்தி அத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவது அத்தியாயம்

நாமதேவர் பகவானுக்கு அன்னமூட்டியது.

வாருங்கள் விநோதமான காதையை மனோரதமாகக்கே ட்கும் மஹானுபாவர்களே! ஸ்திரமான ஜீவர்களே! இவ்வித அன்புடன் சதிபதிகள் மனமொத்துத் தனயனைப் பாதுகாக் கும்நாளில் நாமதேவ் நான்காம் வயதைக்கடந்து, ஐந்தாம் வயதை யடைந்து பிள்ளைகளுடன் துள்ளி விளையாடிக்கொ ண்டிருக்கும் நாளில் ஓர்நாள் தன்மனைவியை நோக்கித் தாம் ஸேட்டி சொல்லுகின்றூர். ஓ பெண்ணே! இன்றையதினம் நானுன் அநுஜனிருக்கு மூருக்குப்போய் மாலைக்கு முன்வரு

கின்றேன் சீக்கிரம் சகல பதார்த்தங்களையுஞ்செய்து நமது மைந்தனிடங் கொடுத்தனுப்பிப் பண்டரிநாதனுக்கு நைவேத்தியஞ் செய்துவரும்படித் திட்டஞ்செய் தனுப்புவாயென் றறைந்து நாமதேவரைப் பார்த்து அப்பா ஒப்பிலாமகனே! இன்றுனது அழகான கைகளால் பாண்டுரங்கனுக்குப் பூமாலைகளைச் சாத்திப் பத்மநாபா! பரமசொரூபாவென் றேத்தி நைவேத்தியஞ்செய்து எங்களுக்குற்ற பந்தபாசங்களைக்கொய்து பத்திரமாய் வீடுவந்து சேர்ந்து பின்பு விளையாடலாற் களிகூர்ந்து இருப்பாயாகவென் றுரைத்துத் தன் தம்பியிருக்கும் ஊரைநோக்கிப் போனார்.

பின்பு குணபாயி நாடோறும்போல் பகவானுக் கனுப்பும் வஸ்துக்களனைத்தையும் ஓர் தட்டில் வைத்து நாமதேவுக்கு நீராட்டிப் பூசூட்டிப் பட்டுவஸ்திரம் புனைந்து இத்தோன்றல் பாலசுப்ரமண்யனேயென்று நினைந்து நைவேத்தியங்கொடுத்து அப்பா மகனே! அழகான முகனே! பண்டரிநாதனுடைய திவ்விய சந்நிதானத்துக்குப்போய் நைவேத்தியஞ்செய்து உன் தாதையோதினபடி வழியிலெங்குந் தங்காமல் யாரையுந் தீண்டாமல் பாண்டுரங்கா ஸ்ரீரங்காவென்னுந் திவ்விய திருநாமத்தைத் தியானஞ்செய்துக்கொண்டே பண்டரிநாதனுடைய திவ்விய சந்நிதானத்துக்குப்போய் நைவேத்தியஞ்செய்து அதிசீக்கிரமாய் வீட்டுக்கு வாருமப்பாவென் றனுப்பினாள். நாமதேவ் அதிக சந்தோஷ சித்தனாய் நைவேத்திய தட்டை யேந்திக்கொண்டு பாண்டுரங்கா ஸ்ரீரங்காவென்று பஜனை செய்துக்கொண்டு வீதியில் வந்து அங்கு பந்தாடிக் கொண்டிருக்கும் பாலகரைக் கண்டு ஆனந்தங்கொண்டு அசைவற்று நின்றார். பாலர் விளையாடும் பந்தானது தவறி நைவேத்ய தட்டின்மேல் விழுந்தது அதனால் நாமதேவ் பந்தாடும் பாலரை முனிவுடன் நோக்கிச் சாந்தத்தை நீக்கி அடா துஷ்டப்பயல்களே! நைவேத்தியத்தட்டின் மேல் பந்தையெறிந்தீர்களே! தெய்வபக்தி யுங்களுக்கில்லையா மூடாத்மாக்களேயென்று வைதார். அம்மொழியைக் கேட்ட சிறுவர் நாமதேவைச் சூழ்ந்துக்கொண்டு அடா நாமா! சாப்பாட்டுராமா! கந்தைகளையும் பொந்தைகளையும் தைக்கும் தையற்காரரும் நைவேத்தியஞ் செய்வதுண்டா? அடா பக்தியிற் சிறந்த தொண்டா? நைவேத்தியங் கொண்டுபோகு

மூனக்கு விளையாட்டின்மேல் கியாபகமேன்? வெகுநேரமா இங்கு நின்றதேன்? அசுத்த மில்லாமல் பரிசுத்தத்தோடும் ஒதுங்கிப் போயிருந்தால் பந்தேன்விழும் என்றுரைத்து நைவேத்தியத்தைத் தீண்டிப் பந்தை யெடுத்துக்கொண்டார்கள். அதனல் நாமதேவ் முனிவுகொண்டு தூஷண வார்த்தைகள் விண்டு நைவேத்திய மசுத்தமாகப் பந்தைப்போட்ட தல்லாமல் தையற்காரரும் நைவேத்தியஞ் செய்கிருர்களாவென்று விகட வார்த்தை யறைந்தீர்கள் பகவானுக்கு நைவேத்தியஞ் செய்யாம லுண்ணும் பசுவுக்கொப்பான உங்களைப்போலெங்களையும் நினைத்துக் கொண்டீர்களோ வென்றரையச் சிலர் ஒருவரைப் பார்த்தொருவர் நகைத்து நாமதேவைப் பகைத்து அடா நாமா! உன்னைப்போன்ற பக்தர்க ளிவ்வூரி லியாருமில்லை, நீ பண்டரிநாதனைவிட் டொருநாளும் புசித்ததில்லை, மொட்டைப்பையனு யிருந்தும் வெகு கெட்டவனுயிருக்கிருய் எங்கள் கைமூட்டியால் உன் தலைபிளக்கக் குட்டிவிடுவோம் பற்களைத் தட்டிவிடுவோம் சண்டைக்கு வாடாவென்று துஷ்டத்தனஞ் செய்யத் தொடங்கினர்.

நாமதேவ் நைவேத்தியத் தட்டைத் தெருத் திண்ணையில் வைத்து அதிக கோபதீப்தனு யெறிந்து பொரிந்து சண்டை செய்பவன் யாரடா வென்று பாலர் கூட்டத்தில் புகுந்து முனிவு மிகுந்து அடித்தும், இடித்தும், குத்தியும், எத்தியும், மிதித்தும், குதித்தும், தட்டியும், முட்டியும், விழுந்தும், எழுந்தும், பன்னியும், தோள்களைத் தட்டியும், கொக்கரித்துத் தட்டியும், யானைத்திரளிற் பிரவேசித்த சிங்கக்குட்டியைப்போல் சிலர் முறிந்தோட யுத்தஞ்செய்தார். அது தெரிந்த குனபாயி வெகுண்டு நாமதேவிடஞ் சென்று அடா நாமதேவ் பகவானுக்கு நைவேத்தியஞ்செய்து வரச்சொன்னல் தெருத்திண்ணையில் தட்டைவைத்துப் போர் செய்துக்கொண்டா யிருக்கின்ருய், இனி அந்த நைவேத்தியம் பகவானுக்கேறுமா? அனேக நாளாகச் செய்துவந்த விரதத்தைக் கெடுத்தாயே எங்கள் வாக்கைத் தடுத்தாயே துன்பத்தைக் கொடுத்தாயே ஆசாரத்தை விடுத்தாயே வீண்சண்டை தொடுத்தாயே அடா நாயே அறிவில்லாப்பேயே என்றுரைத்துக்கொண்டே சமீபத்தில் வருமுன் நாமதேவ் பயந்து இதோ நைவேத்தியஞ் செய்துவருகிறேனென்று சந்நிதானத்தை நோக்கி

ஓடும்போது குனபாயி அடா துஷ்டா! அடா பிரஷ்டா பல ரால் தீண்டப்பட்ட நைவேத்தியத்தையா பகவானிடங் கொண்டுபோகிருய் வேண்டாம் வேண்டாமென்று மறுக்கவுங் கேட்காமல் அதிசீக்கிரமாய் ஆலயத்திற் பிரவேசித்துச் சந்தன புஷ்பங்களாற் பூசித்துப் பாண்டுரங்கா! ஸ்ரீரங்காவென்று கோஷித்து வினயமாய் விசுவாசித்து பண்டு பலாதிகளைப் படைத்து மூக்கண்காயை யுடைத்து தூபதீபங்காட்டி எங்களிஷ்ட தெய்வமாகிய பரமேட்டி உமது வலக்கையை நீட்டி நைவேத்திய முட்கொள்ளுமென்று பாராட்டிப் பகவான் பாதத்தில் மனதை நாட்டித் தன் கரத்தா லோர் பிடியன்ன மெடுத்தூட்டி உண்ணுக் கண்ணைப் பார்த்து இரண்டஸ்தங்களையுஞ் சேர்த்து ஓ பாண்டுரங்கா! இந்த நைவேத்திய மசுத்தமாய் விட்டதென்றோ உண்ணாம லிருக்கின்றீர் வேறு நைவேத்தியத்துக்குப் போனல் என் தாயார் வாயில் வந்தபடி வைவாள் சித்திரவதைச் செய்வாள் ஆதலால் அடியேன்மீ தருள்கூர்ந்து ஓர் பிடியன்னமாவ துட்கொள்ளவேண்டும் ஸ்வாமியென்று பன்முறை கெஞ்சிக் கெஞ்சிக் கொஞ்சும்போது பக்தவச்சலனுகிய பகவான் சற்றும் அசையாதிருந்தார். நாமதேவ் விக்கிரகத்தின் காதருகிற் றன் வாயை வைத்து ஓ பண்டரிநாதா பாண்டவர்தூதா தானிசைக்கும்மொழி கேட்கவில்லையோ? உம்முடைய காது செவிடோ? ஓர் பிடியன்ன முண்ணும்படி பலதரஞ் சொல்லச் சொல்ல அசையாக் கல்லைப்போ லிருக்கின்றீர் நீர் சகல ஜாதியாருக்கும் பொதுவானவராயிற்றே யார் கொண்டுவந்தாலும் பேதமின்றிப் புசிக்கவேண்டுமன்றோ நீர் உண்டாக்கின ஜீவர்களன்றி மற்றெந்த ஜீவர்க ளிந்த நைவேத்தியத்தை தீண்டிக்கொண்டார்கள்? உமக்குச் சாதிபேத முண்டா? அதாவது சொல்லலாகாதா? பேச வாயில்லையா? என்னல் வந்த தொல்லையா? அல்லது தூங்குகிறீரா வேளை தப்பிப் போய்விட்டதா புசித்து வயிறு நிறைந்து விட்டதா நைவேத்தியங் கெட்டதா என் கைகள் கெட்டதா உள்ளபடி கள்ளமின்றிச் சொல்லலாகாதோ? என்முன் சாப்பிட லாகாதோ? இவ்வள வன்னம் போதாதோ? நீர் நினைத்திருக்குஞ் சூதேதோ வென்கிற மொழிகள் பல வுரைத்தும் பகவா னசையா திருக்கும்போது இதென்னடா வருவதெல்லாம் வம்பா யிருக்கின்

றது. எனக்கோ மிகவும் பசியா யிருக்கின்றது. இந்தத்தெய்வமோ முரட்டுத்தெய்வமா யிருக்கின்றது யென்று, ஓ ஸ்வாமி நீரென்முன் னுண்ணுமலிருக்கத் திருடனு? எனக்கு கோபம் வந்த பின்னுண்ண முரடனு? நைவேத்தியம் வைத்திருப்பதறியாக் குருடனு? என்னை யேமாத்திப்போகப் பறக்குங் கருடனு? ஓ முரட்டுத் தெய்வமே! நல்லதனத்தாற் சாப்பிடு இல்லாவிட்டால் என் முரட்டுத் தனத்தையுங் காண்பிப்பேன் உனக்கு நைவேத்தியங்கொண்டு வந்தல்லோ ஈனர் கரங்களாலடிபட்டும் புழுதியில் வீழ்ந்துதைபட்டும் அலங்கோலப்பட்டும் நானணிந்துக்கொண்டிருக்கும் இவ்விலையுயர்ந்த பட்டும் சின்னு பின்னமாகக் கிழிந்து நேரமாய்ப் போகுதென்றோடோடியும்வந்து கால்கள் நோகின்றது இதேபொழுதும் போகின்றது நான் வெகு நேரமாய் வருந்தியழைக்கின்றேனே கெஞ்சிக் கெஞ்சி மிகவு மழைக்கிறேனே சீக்கிரமெழுந்துவருவாய், உன்னுடைய அரிய சேவை தருவாய், உண்ணலாகாதா வொருவாய், உண்டாலென் துதிபெறுவாய், இன்றே லெனக்குவரும் கோபம், உண்டாலுனக்குவரும் லாபம், இப்படிசெய்தாற் பெறுவாயென்சாபம், அசையா திருப்பதுதானே உன் பிரதாபம், நானறியாச் சிறுபிள்ளை நீருண்ணு திருப்பதுவெகு சள்ளை, வலியவூட்டுவது முனக்குக்கொள்ளை, வம்புசெய்யும் நீதானு ஆண்பிள்ளை உன்னுடைய அறிவெல்லாம் வெள்ளை, பலதரஞ்சொல்ல நீயாவாயா கிள்ளை ஓ பாண்டுரங்கா! எத்தனை தரந்தான் கெஞ்சுவேன், எளியேன் முன்னுண்டாலல்லவோ கொஞ்சுவேன், உன் பக்கத்தில் மிஞ்சுவேன், மெய்த் தெய்வமென் றஞ்சுவேன் என்னும் பற்பல பட்சமான வார்த்தைகள் பகர்ந்தும் பரந்தாமன் எதாப்பிரகார மிருக்க ஆயாசமடைந்து மிகவு மிடைந்து ஆ ஆ நம்முடைய பிதா அனுதினம் நைவேத்தியஞ் செய்து வருவாரே பகவான் சேஷமென்று தருவாரே அவர் கொண்டுவா உண்ட அண்ட ரேத்தும் விண்டுவாகிய இப்பண்டரிநாதன் நான் கொண்டு வந்ததைத் தீண்டாமல் வேண்டா மென்பதைக் காட்டினுரே, முரட்டுத் தெய்வமென்பதை நிலைநாட்டினுரே, பக்தனல்லவென்று நீக்கிவிட்டாரே, என்னைப் பாவியாக்கி விட்டாரே, இனி இவ்வாக்கையோ டிருக்கலாமா வைராக்கியத்தைச் சுருக்கலாமா வென்று பாண்டுரங்கனைப் பணி

ந்து, பாதங்களிற் றன திருநயனங்களை யணிந்து, ஓ பண்டரி நாதா! நீ இக்கண முண்டாலாச்சுது, இன்றே லென்னுயிர் பிரியலாச்சுது, உனக்கபகீர்த்தி வாய்ச்சுது, நீயே தேடிக்கொள்ளலாச்சுது, இட்சணம் என் தலையை உன் பாதங்களின் மேலிடிப்பேன், என்னுயிரை மடிப்பேன், வைராக்கியத்தை முடிப்பேன், பிர்மராட்சகனு யுன்னைப்பிடிப்பேன், ஊரிலுள்ளோர்பாலு மடுப்பேன், உன் சன்னிதானத்துக் கியாரும் வாராமற் கெடுப்பேன், அப்பா! உனக்கிவ்வளவு கடுப்பேன் யென்று பாண்டுரங்கனைப் பக்தர் போற்றுந் துங்கனைப் பசிய மாவங்களைப் பலதரம் ஆலிங்கனஞ்செய்து திருட்டுத் தெய்வமே யென வைது கண்ணீர்விட்டழுது கடவுளே யென்று தொழுது இதோ போச்சுது பொழுது உன்னால் வந்ததே பழுது என்று பகவான் பாதங்களின்மேற் றலையை மோதிக் கொள்ளப்போனர்.

உடனே பகவான் நிஜரூபமாய் நின்று, அடா என்னப்பனே யெனப்புகன்று நாமதேவ் மஸ்தகத்தைத் தனதிரு அஸ்தங்களாற் ரூக்கிக்கொண்டு, அப்பா நாமதேவ்! உன்பக்திப்பிரதாபத்தைச் சோதிக்கவேண்டி இவ்வளவு தாமதஞ் செய்தேன் இதைக் குறித்துக் கோபஞ்செய்யாதே, வாயில் வந்தபடி வையாதே, அடா என் கண்மணியே! சிகாமணியே மாசிலாமணியே! மரகத அணியே! தேகமெல்லாம் புழுதியாயிருக்கின்றதோ? அதிதுரிதமாய் வந்ததாற் பாதங்கள் நோகின்றதோ? நைவேத்திய மேந்திக்கொண்டுவந்ததால் கைகள் நோகின்றதோ? சிலர் அடித்த அடிகளால் அங்கமெல்லாம் நோகின்றதோ வென்று பற்பல பட்சமான வார்த்தைகளாடித் தன் கரத்தால் புழுதியைத் துடைத்துப் பாதாதி கேச பரியந்தம் தடவித் தன்மீதிருக்கும் பீதாம்பரத்தை யணிந்துக் கொள்ளச்செய்து நாமதேவ் தரித்துக் கொண்டிருந்த பீதாம்பரத்தைத் தானணிந்துக்கொண்டு அப்பா நாமதேவ்! உனக்கதிக பசியாயிருக்கின்றதோ? வெகு நேரமானதால் களையாயிருக்கின்றதோ வென்று அன்னத்தை பிசைந்தூட்டி உன்னுடைய திவ்ய அஸ்தத்தாலெனக் கன்ன மூட்டப்பா வென்று திருவாயை திறந்தார் நாமதேவ் துன்பத்திலிருந்து பேர்ந்து இருதார்த்தனுனேமெனத் தேர்ந்து பகவானோ டொன்ருய்ச்சேர்ந்து மிகவும் களிகூர்ந்து ஸ்வாமிக்கு நாதேவ

ரூட்ட நாமதேவருக்குப் பகவானூட்டச் சகல பதார்த்தங்களையும் புசித்தபின்பு ஸ்ரீமந் நாராயணமூர்த்தி நாமதேவருக்குப் பரிமள சந்தனாதிகளைப்பூசி அடைக்காயிலையையென்று கொடுத்து அப்பா நாமதேவ்! நீ வந்து வெகுநேரமாய்விட்டது சீக்கிரம் வீட்டுக்குப்போய் நாளை நைவேத்தியங் கொண்டுவாவென்றறைந்து மாயமாய் மறைந்து கல்லுருவா யிருந்தார். பின்பு நாமதேவ் சந்தோஷமடைந்து மெதுவாய் நடந்து வீட்டிற்புகுந்து தாயைப் புகழ்ந்து வெருந்தட்டைக் கொடுத்து அம்மா இன்றைக்கு நேரமானதைக் குறித்தும் பகவான் மிகவும் வெறுத்து நைவேத்தியமுண்ணாமல் மறுத்துச் சற்றுநேரம்பொறுத்துச் சகல பதார்த்தங்களையு முண்டார் ஆனந்தங்கொண்டார் அன்பானமொழிகள் விண்டார்.

ஆதலால் என்மேற் கோபங்கொள்ளாதே தூஷணவார்த்தைகள் விள்ளாதே யென்று நடுவீட்டி லுட்கார்ந்துக்கொண்டு அடைக்காயிலையை மென்றுக்கொண்டு பகவானணிந்த பீதாம்பரத்தைப் பார்த்துக்கொண்டு பகவான் கொடுத்த பீதாம்பரத்தைப் பாருமம்மாவென விண்டு, சந்தோஷ மேலீட்டாலடிக்கடி நகைத்துக்கொண்டு மிருந்தார். குணபாயி வெறுந்தட்டைக் கொண்டுவந்ததையும் பகவானணிந்துகொண்டிருந்த பீதாம்பர மணிந்துகொண் டிருப்பதையும் பூமாலைகள் புனைந்துக்கொண்டிருப்பதையும் பார்த்துக் கோபமேலிட்டு, அடா நாமதேவ்! பழவர்க்கமெங்கே? நைவேத்தியமெங்கே? நீ அணிந்துகொண்டுபோன பீதாம்பரமெங்கே? உண்மையைச் சீக்கிரம் சொல்லடாவென்று கோபக்குறி காட்டினாள். நாமதேவ், ஓ என்னம்மணி! உண்மையாய் பகவானே சகல பதார்த்தங்களையும் உட்கொண்டார். பசிமிகுதியால் நானுமிரண்டொரு பிடியன்னம் புசித்தேன். எனக்கினி யன்னம் வேண்டியதில்லையென்று வயிறு நிறைந்திருக்கிறதைப் பாரென்று வயிற்றைக் காட்டினார். குணபாயி, அடா துஷ்டப்பயலே! பகவானென்ன நைவேத்திய முண்பதென்ன, சாணுண்டு பயலே! நீ வயிறுநிறையப் புசித்து எல்லாவற்றையும் ஸ்வாமியே அருந்தினாரென்று அசத்தியம் பேசுகின்றாயா? இப்போதே அசத்தியம்பேச ஆரம்பித்தாயாவென்று அருகிலிருந்த ஓர் கோலையெடுத்து வீசியெறிந்தாள். நாமதேவ் இதென்னடா வம்பாயிருக்கின்றது. நான் மெய்சொன்னால்

பொய்யென் றெரிந்துவிழுகின்ருள். அபாயம் நேரிட்டது போலழுகின்ருள் என்று தெருவிலோடிவந்து நின்று என்னுயிர்போனாலும் அசத்தியம் பேசேனெனப் புகன்று அந்த மூரட்டுத்தெய்வம் வெகுநேரம் அழச்செய்து நைவேத்தியமுட்கொண்டு என்னை வேண்டிப் புசிக்கச் சொன்னால் பகவான் வாக்கியத்தைத் தள்ளக்கூடாதென்று இரண்டொரு வாயருந்திவிட்டேன், அபசாரத்துக் குட்பட்டேன் வீட்டிலிருக்கும் பதார்த்தங்களையெல்லாம் நீ புசிக்கலாகாதா? விருத்தையாயிருந்து சகலமும் தெரிந்து உண்மையறியாமல் ஆலோசனை பிரியாமல் மிகவுங் கோபித்து உன் வார்த்தையையே ஸ்தாபித்து உரக்கப் பேசுகின்ருய், வாயில் வந்தபடி யேசுகின்ருய், கோலையெடுத் தென்மேல் வீசுகிருய் என்று கடுகடுத்துப் பேசினர். குணபாயி, அடா துஷ்டா! அடா பிரஷ்டா! உன் தந்தைவரட்டு மூன்னை யிரண்டு துண்டாய்க் கண்டிக்கச் செய்கிறேன் கண்டங் கண்டமாகக் கொய்கிறேன் என்றுரைத்துக் கொண்டே. பகவானுக்கு வேறு நைவேத்தியஞ் செய்துக்கொண்டிருந்தாள். நாமதேவ் இதென்ன கர்மமாயிருக்கின்றது இன்றைக்கெல்லாம் வியாகுலத்தாலேயே பொழுதுபோயுமின்னந் திராமலிருக்கின்றது இனி அந்தக்கிழவன் வந்தால் என்னசெய்வானே என்கிற எண்ணத்தோடுங்கூடிப் புறத்திலேயே மரம்போலசைவற்று நின்றிருந்தார். இப்படி நிற்குந்தருணத்தில் தாம்ஸேட்டி வந்து தெருவில் நிற்கும் நாமதேவை யெடுத்து மார்புடனணைத்து அடா என்னருமைக்குழந்தாய்! நமதாண்டவனுகிய பண்டரிநாதனுக்கு நைவேத்தியம் படைத்துவந்தாயா? உன் தாய்க்குச் சந்தோஷந் தந்தாயாவென்று கேட்க, நாமதேவ் நைவேத்தியஞ் செய்துவந்தேனென்றுரைக்கத் தாம்ஸேட்டி உன் சிறிய அஸ்தங்களாற் பாண்டுரங்கனுக்குப் பூசைசெய்துவர நானென்னபாக்கியஞ் செய்தேனேவென்று உச்சிமோந்து முத்தமிட்டுக் கைகளா லேந்திக்கொண்டு வீட்டுக்குட்போனர். குணபாயி அந்தத் திருட்டுப்பையலை விடாமல் கட்டி இரண்டு துண்டாக வெட்டிவிட வேண்டுமென் றறையத் தாம்ஸேட்டி மனைவியை நோக்கி, ஓ பெண்ணே! நான் பிரிந்த மூன்று ஜாமத்துக்குள் உனக்கு வெறுப்பு வரும்படியான காரியமென்ன செய்தான், யாரை வைதான் சீக்கிரஞ் சொல்வாயென்று கோபக்குறிகாட்டக் குண

பாயி, நாமதேவ் நைவேத்தியத்தட்டை வீதியிற்கொண்டு போய் வைத்ததும், சிறுவருடன் போர்புரிந்ததும் மத்தியானத்துக்குமேல் பலராலுந் தீண்டப்பட்ட நைவேத்தியத்தைச் சந்நிதானத்துக்குக் கொண்டுபோனதும் மூன்றுஞ்சாமத்தில் வெறுந்தட்டைக் கொண்டுவந்ததும், பகவானருந்தினரென்று விண்டதும், பகவானணிந்திருந்த பீதாம்பரத்தைத் தான் தரித்துக்கொண்டுவந்ததும் முதலான சங்கதிகளையெல்லாம் சொல்லிமுடித்தாள். உடனே அவ்வசனங்களைக்கேட்ட தாம்ஸேட்டி கோபதீப்தனாய் எதோ வாளைக் கொண்டுவா? இவனை இரண்டு துண்டாக வெட்டி யெறிகிறேனென் றார்ப்பரித்தார்.

அதனால் நாமதேவ் பயந்து தெருவீதியி லோட்டமெடுத்தார் தாம்ஸேட்டி தொடர்ந்தோடி அடா துஷ்டப்பயலே விளையும்பயிர் முளையிற் றெரியுமென்கிற பழமொழிப்படி சிறுபொழுதிலேயே பொய்யுங் களவும் கற்றுக்கொண்டிருக்கின்ற நீ பெரியவனானல் வெகு துன்மார்க்க காரியங்கள் செய்வாய் ஆதலாலினியுன்னை உயிருடன் வைத்திருந்தால் என் குலத்துக்குப் பழுதுவந்து நேரிடும், பாபம் மீறிடும் என்றுரைத்துக்கொண்டே பிடிக்கவந்தார். நாமதேவ் இவனும் அக்கிழவியைப் போன்றவனேயாதலால், அகப்படாமல் ஓடிப்போவதே நன்மையென்று நமக்கு யாருந் துணையில்லையென்று பண்டரிநாதனைத் தியானஞ் செய்துக்கொண்டே பல பக்கங்களிலோடி மிகவும் வாடிப் பாண்டுரங்கன் சந்நிதானத்தை நாடி ஆலயத்தினுட்போய்ப் பண்டரிநாதனை ஆலிங்கனஞ் செய்து பின்பக்கத்தி லொளித்துக்கொண்டார் தாம்ஸேட்டி கூடவே தொடர்ந்து ஆலயத்திற் பிரவேசித்து பகவான் பின்பதுங்கியிருக்கும் நாமதேவின் கரத்தைப் பிடித்துக்கொண்டு தூஷணவார்த்தைகள் விண்டு, அடா நாமதேவ்! நைவேத்திய மென்னசெய்தாய், தெய்வ சந்நிதானத்தில் அசத்தியம் பேசாதேயென்று வற்புறுத்திக் கேட்டார். நாமதேவர் சத்தியமாய் இப்பண்டரிநாதனே நைவேத்திய மருந்தினரென்றார், தாம்ஸேட்டி நல்லது பகவானணிந்த பீதாம்பரத்தை நீயேன் தரித்துக்கொண்டாயென்றார், நாமதேவர் பகவானே என்னை யணிந்துக்கொள்ளச் சொன்னதால் நான் தரித்துக் கொண்டேனென்றார். தாம்ஸேட்டி அதிசயித்துப் பகவா

னுக் கின்னமோர்தரம் என்முன் நைவேத்தியத்தை யூட்டு கிருயா வென்ருர் நாமதேவர் ஒருதரமின்றிப் பலதரம் பாண் டுரங்கனுக்கு நீர் பார்த்திருக்க அன்னத்தை யூட்டுகிறேன் உமக்குப் புலப்படக் காட்டுகிறேன் நைவேத்தியத்தை கொண் டுவாருமென்ருன், தாம்ஸெட்டி நல்லதாகட்டும் உன்னை இப் போதே பரிட்சித்துச் சிட்சை செய்கிறேன் என்னுடன் வா வென்று வீட்டுக் கழைத்துக் கொண்டுபோய் நைவேத்திய மேந்திக்கொண்டு வந்து பகவான்முன் வைத்து அடா நாம தேவா! சீக்கிரம் பகவானை நைவேத்திய முண்ணும்படியாகச் செய், இல்லாவிட்டால் உன் காலைவாரிப் பூமியிலறைந்து பகவானுக்குப் பலியிடுகிறேனென்று புலியைப்போலக் கர்ச் சித்து அடங்காக் கோபத்துடன் வாயிலின் மத்தியில் நின் ருர். நாமதேவர் பகவான் பாதங்களிலும் சிரத்திலும் புஷ் பங்களைச் சொரிந்து தூப தீபங்களைக்காட்டி நைவேத்தி யத்தைத் திறந்து, ஓ பாண்டுரங்கா! ஸ்ரீரங்கா! முன்போற் ருமசம் செய்யாமல் என் கழுத்தைக் கொய்யாமல் யாருந் தீண் டாப் பரிசுத்தமான இந்த நைவேத்தியத்தைச் சீக்கிரம் புசி யுமையா அண்டரேத்துந் துய்யாவென்று தோத்திரஞ் செய் தார். பகவான் முன்போலவே அசையாதிருந்தார், நாம தேவர் ஓ ஓ இந்த முரட்டுத்தெய்வம் மத்தியானத்தைப்போ லவே உண்ணுமற் கோபித்துக்கொண் டிருக்குமோ வென்கிற பீதி மேலிட்டு, ஓ பண்டரிநாதா! புண்டரீக பாதா! என் பிதா முன்னிலையிலுண்டு என்னை மெய்யனுக்க வேண்டுமன்றி பொ ய்யனுக்குவ துமக்குத் தர்மமல்ல நான் பலதரஞ்சொல்ல நீர நீயாதயரல்ல இதோ நிற்கிரு ரென்னைக் கொல்லவென்று ஓர்பிடி யன்னமெடுத்துப் பாண்டுரங்கன் வாயில் வைத்தார். மாயாவிலாசனுகிய பகவான் அசையாக்கல்லுருவா யிருந்தார்.

நாமதேவர் கோபித்து, ஓ மூரட்டுத்தெய்வமே! நீ மெய் த்தெய்வமா யிருந்தாலல்லவோ திருட்டு புரட்டுகளு மில்லா மலிருக்கும் பொய்த்தெய்வ மானதாலும் என்னைப் பொய்ய னுக்கிவிட்டாய், நீ கெட்டாயென்று தூஷித்தார், அவ்வச னங்களைக்கேட்ட தாம்ஸெட்டிக்குச் சாந்தமிறந்து கோபம் பிறந்து அடா திருட்டுப்பயலே! பகவானை மரியாதையில்லா மல் திருடன் முருடன் யென்று பிதற்றுகின்ருய் அசத்திய முரைக்கும் வாயா நீ நன்ருய்த்தின்று பகவானே தின்ருரெ

ன்று பொய் மொழிகளைப் புகன்று பயப்படாமல் நின்று துன்மார்க்கமொழிகள் பேசுகின்றாயாவென்று கோபமேலீட்டால் அடிக்கிறேன் உதைக்கிறேனென் றருகில்வந்தார். நாமதேவர் நடு நடுங்கிப் பூனைபோலொடுங்கி, ஓ பகவானே! என் வசனம் பொய்யாக்காமல் சீக்கிரம் நைவேத்திய மருந்துகின்றாயா இல்லையாவென்று தன்தலையைப் பகவான்பாதத்தில் மோதிக்கொள்ளப்போனார். உடனே பகவான் நிஜரூபமாய் நின்று நாமதேவர் சிரத்தைத் தன் கரத்தாற் பிடித்துக்கொண்டு, ஓ என்னருமைப்பாலனே! பக்தியிற்சிறந்த சீலனே! சகலருக்கு மனுகூலனே! சகல லட்சணங்களும்வாய்ந்தகோலனே! உன் பக்திப் பிரதாபத்தை உன் தாதையறியாமல் வேதைசெய்யத் துணிந்தானோ? உன்தாய் கோலாலடிக்க வந்தாளோ? இதனால் நீ மனங்குழைந்து நொந்தாயோ? ஆதரிப்பார்யாருமில்லாம லென்பாலோடி வந்தாயோ? இனி சந்தோஷமாய் உன் திருக்கரத்தால் முன்போலவே எனக்கன்ன மூட்டுவாயென்று வாயைத்திறந்து நாமதேவர் ஊட்ட உண்டு, தானும் நாமதேவருக்கூட்டி நாமதேவர் பிரதாபத்தைத் தாம்ஷேட்டி பிரத்தியட்சமா யறியக்காட்டி ஜகதீஸ்வரனாகிய பரமேட்டி கல்லுருவாயிருந்தார்.

அவ்வாச்சரியத்தைப் பார்த்த தாம்ஷேட்டி தனக்கிருந்த மாச்சரியத்தை நீக்கிப் பக்தவச்சலனாகிய பண்டரிநாதனை நோக்கி, ஓ பாண்டுரங்கா! ஸ்ரீரங்கா! கார்வண்ணா! கமலக்கண்ணா! கருடவாகனா! மதுசூதனா! பரிபூரணா! சர்வகாரணா! ராட்சசமர்த்தனா! காளிங்க நிர்த்தனா! ஓ ஜனார்த்தனா! உம்மை இந்தப்பாவியேன் கண்ணாரப்பார்க்க என்ன பாக்கியஞ் செய்தேனோ? ஏதுதவஞ்செய்தேனோ? உமதருமைப் பக்தனாகிய இந்த நாமதேவருரைத்த வாக்கியத்தை என்னஞ்ஞான புத்தியாற் பொய்யென்று நினைந்தேனே? கொல்லவுந் துணிந்தேனே? வாயில்வந்தபடி வைதேனே? மனங்குழையச்செய்தேனே? அபசாரத்துக் குள்ளானேனே? படுபாவியாய்ப் போனேனே? என்று பற்பல விதங்களாயுரைத்து ஓவென் றலறியழத் தொடங்கினார். பகவான் அசரீரியாய் ஓ தாம்ஷேட்டி இன்றுமுதல் இந்த நாமதேவரை நானாகப்பாவித்து அன்புடன் சேவித்து வருவாயாகவென்று திருவாய் மலர்ந்தருளினார். அவ்வாக்கியத்தைக்கேட்ட தாம்ஷேட்டி பகவானைப் பலபல

விதங்களாகத் தோத்திரஞ்செய் தேத்திட நாமதேவுக்குச் சிரசாஷ்டாங்கமாக வந்தனஞ்செய்து, அப்பா நாமதேவா! உன் வசனத்தை மெய்யென்று நம்பாமல் பொய்யென்றெண்ணிப் பொல்லா அபசாரத்துட்பட்டேன் நன்றி கெட்டேன் நானியற்றிய அபசாரத்தை உபசாரமாகக்கொண்டு என்னை யாட்கொள்ள வேண்டு மென்னப்பனே யென்று வாரியெடுத்து மார்புடனணைத்துப் புஜத்தின்மேலேந்திக்கொண்டு வீட்டையடைந்து குணபாயிக்குச் சகலமும் சவிஸ்தாரமாயுரைத்து அவ்வுத்தமியின் மனதையுங்கரைத்து சதிபதிக ளிருவரும் நாமதேவரைப் பகவானென்றே தீர்மானித்து அத்தியந்த பக்தியுடன் விசுவாசித்து அன்றுமுதல் நாமதேவரிடத்தில் நைவேத்தியத்தை அனுப்பிக் கொண்டிருந்தார்கள். நாமதேவர் நாடோறும் நைவேத்தியங் கொண்டுபோய் பகவானுக் கூட்டி பகவானுட்டத்தானுண்டு அகமகிழ்ந் திருந்தார்கள் கேட்டீர்களோ சித்தர்களே யென்று பின்னும் நாபாஜிசித்தர் சொல்லத் தொடங்கினர்.

நாமதேவர் பகவானுக் கன்னமூட்டிய அத்தியாயம் முற்றிற்று.

மூன்றுவது அத்தியாயம்.

நாமதேவருக்கு பகவான் விவாகஞ்செய்தது.

வாருங்கள் சித்தர்களே! நாமதேவரைச் சதிபதிகளிருவருந் துதிசெய்துக் கொண்டன்புடன் பாதுகாக்குங்காலத்தில் அரிபரந்தாமன் தாம்ஸேட்டியின் கனவிலடைந்து பதினறு வயதை யடைந்தும் கலியாணஞ் செய்யாமலிருப்பது தகுதியல்ல சீக்கிரம் நாமதேவருக்கு உமது குலத்தி லுற்பவிக்கும் ராஜாபாயென்னும் கன்னியை மணம்புரிந் தின்பமடையுமென்று திருவாய் மலர்ந்து மாயமாய் மறைந்தார். உடனே தாம்ஸேட்டி விழித்துத் தன் மனைவியை எழுப்பி, ஓ பெண்ணே! பகவானென் கனவில் வந்து தரிசனந்தந்து ராஜாபாயென்னு மங்கையைப்பேசி நாமதேவருக்கு விவாகஞ் செய்யும்படியாகத் திருவாய் மலர்ந்தருளினர், ராஜாபாயென்னுங் கன்னிகை உனக்குத் தெரியுமாவென்று கேட்டார். குணபாயி

ராஜாபாயென்பவள் நமதுகுலப் பெண்ணானாலும் லக்ஷாதிபதியின் மகளாயிருப்பதால் நமது மைந்தனுக்குக் கிடைப்பதரிதென் றுரைத்தாள். தாம்ஸேட்டி பகவானே சொற்பனஞ் சாதித்தபின் நாமப்பெண்ணை அகத்தியங் கேட்க வேண்டுமென்று அதிகாலையிலெழுந்து செய்யவேண்டிய நியமங்களெல்லாஞ்செய்து முடிந்தபின் ராஜாபாயின் தந்தையிடம்போய் தன் கருத்தைத் தெரிவித்தார். அவன் நிச்சய தாம்பூலத்துக்காக ஆயிரம் பொன்னோடும் வந்தென்னிடம் பேசலாமென்றறைந்தான். தாம்ஸேட்டி அவ்வசனத்தைக் கேட்டதே மனங்கூசி விவாகஞ்செய்ய மனம்ரோசி வீட்டை யடைந்து வியாகூலத்தா லிடைந்து மனைவியை யழைத்து, நாம் மிகவும் உழைத்துப் பொருள் சேர்த்தாலும் ஆயிரம்பொன் சேரப்போகிறதில்லை. இனி யென்ன செய்யலாம் மகனுக்கு மணமெப்படி செய்யலாம் திரவியத்துக்காக யாரைப்போய் யாசிப்போம், எவரைப்போய் நேசிப்போம், பகவானையே பூசிப்போம், பின்னால் நன்று யோசிப்போம் என்று பகவான் சன்னிதானத்துக்குப்போய் ஓ பாண்டுரங்கா! ஸ்ரீரங்கா! தேவரீர் கிருபையினாற் கிடைத்த மைந்தனுக்குத் தாங்களென்கனவில் வந்துரைத்தபெண்ணை மணஞ்செய்யப் பணமில்லாமையால் தடையாச்சுது, லட்சாதிபதியின் சம்பந்தம் வாய்ச்சுது, இதற்கு நானென்ன செய்வேன் கர்த்தனே யென்று வீட்டை யடைந்து சதிபதிகள் பலவாறு யோசனையோடுங் கூடி சூரியனஸ்தமானமா யிருஜாம மாகியும் திரவியக் குறையாலெண்ண மிட்டுக்கொண்டு நித்திரை செய்யாமல் கதவை மூடிக்கொண்டு பகவான்கீர்த்தியைப் புகழ்ந்துக்கொண்டுபணமில்லாதவர்கள் நடைப்பிணமே யென் றுரைத்துக்கொண்டிருந்தார்கள், இப்படி இவர்கள் நித்திரைசெய்யாமல் தோத்திரஞ் செய்துக்கொண்டிருந்தது தோத்திரம் பகவானுக்கு வெகு கசப்பாயிருந்தது ஏனெனில் நாமதேவர் விவாகத்துக்குத் தடையில்லாமல் பொன் செங்கல்லுகளைக் கொண்டுவந்து தாம்ஸேட்டி வீட்டில் போடுவதற்காய் வந்த பகவான் வீட்டின் தடையால் வெளியி லிருந்தபடி ஓர் பொன் செங்கல்லை வாசலி லெறிந்தார்.

விழித்திருந்த தாம்ஸேட்டி யாரடா என் முற்றத்திற் பயமின்றிக் கற்போட்டவன் அடா மடையா கடையாவென்

றுவைதார், பகவான் மடையா கடையாவென்றாலுஞ் சம்ம திதான் இடையா கொடையா வென்றாலும் சம்மதிதானெ ன்று மற்றோர்கல்லை வீட்டின்மேற் போட்டார். தாம்ஸேட்டி கோபங்கொண்டு அடாதிருடா, அடா முருடா, துடைப்பக் கட்டைக்குப் பட்டுக்குஞ்சங் கட்டினதுபோல் பிறர் வீட்டிற் கல்லெறியும் துஷ்டனாகிய உன்னைத் தருமத்திற் சிறந்தகொ டையாளனென் றுரைக்கப்போமாவென்றார். பகவான் கொக் கரித்துத் திக்கரித்து அடா தாம்ஸேட்டி அடா திருடா அடா முருடா அடா கிம்புருடா அடா புண்ணிய புருடா வென்றும் என்னைச் சொல்லலாமென்று மற்றொரு செங்கல் லைக் கதவிற் படும்படியாய் வீசியெறிந்தார். உடனே தாம் சேட்டி ஓர்தண்டத்தை யெடுத்துக்கொண்டு அரணந்திறந்து வெளிப்பட்டு அடா கிம்புருஷா அடா புண்ணிய புருஷா சற்றே நில்லுமென் றார்ப்பரித்தார் பகவான் ஓர்பொன் செங் கல்லைத் தடிமேல் வீசியெறிந்து மற்றோர் கல்லை வீட்டினுள் வீசியெறிந்தார் குணபாயி அடா துஷ்டா அடா பிரஷ்டா வென்று வைது கூகூவென்று கூச்சலிட்டாள். பகவான் கூகூவெனக் கூச்சலிட்டதால் இரண்டுகல்லைப் போடுவேனெ ன்று இரண்டுகனகக்கற்களைப் போட்டார். தாம்சேட்டி ஆக் கிரம திக்குரோதனா யெரிந்துவீழ்ந்து இந்த மூர்க்கனையந்தப் பண்டரிநாதனறியக் கொன்று விடுகிறேனென்று ஜெயவிட் டல் ஜெயவிட்டலென் றுரைத்துக்கொண்டே தெரு வீதியில் வந்தார் பண்டரிநாதன் பயந்தவர்போலோடி மாயமாய்மறை ந்தார்.

தாம்சேட்டி பகவானுக்குப் பயங்காட்டி அரைநிமைதங் காமலோட்டி நான் மேட்டான மேட்டி அறிந்தாயா சீமா ட்டி ஓடிப்போனான் காமாட்டியென்று மனைவிக் குரைத்துக் தலைமூடிக்கொண்டு நித்திரைசெய்தார் குணபாயி வழக்கப் படி அதிகாலையிலெழுந்து முற்றந்துலக்க வாசலில் வந்து கற்களெல்லாம் பொன்மயமா யிருக்கக்கண்டு ஆனந்தங்கொ ண்டு விந்தையென் றுவிண்டு நாம் தவஞ்செய்தவர்களே பண் டுயென்று மனங்களித்து மணாளனை விளித்துக் கற்களைக்கா ண்பித்து இது பகவான் கிருபையென் றுரைத்துக் கற்களை யெல்லாம் ஓரிடத்தில் புதைக்கும்படியாய்ச் சொன்னாள் தாம் சேட்டி கனகத்தைக்கண்ட களிப்பால் புருஷோத்தமனைத்

தூஷித்தது மறந்து இன்பம் நிறைந்து அவைகளை மூலை வீட்டினுள் புதைக்க ஆரம்பித்தார். இங்கிப்படியிருக்கப் பகவானும் ருக்மணியும் அதிகாலையிலேயே தாம்சேட்டியைப் போலவும், குணபாயியைப் போலவும் வடிவெடுத்து ஆயிரம் பொன்னெடுத்துக்கொண்டு ராஜாபாயின் வீட்டுக்குப் போய்ச் சம்பந்தியைக் கூப்பிட்டார். இவர்கள் வரவையறிந்த அந்த லட்சாதிபதி கெக்கலிகொட்டி நகைத்துக்கொண்டே வெளியில் வந்து ஆயிரம்பொன்னுக்கே வழியில்லா அல்கலரே என்ன காரணத்தைக்குறித்து வந்தீர்களென்றான் பகவானும் ருக்மணியும் தாங்கள் கொண்டுவந்த ஆயிரம் வராகனையுங் கொடுத்து உமது பெண்ணுக்குப் பதினாயிரம் வராகன் பணிகளணிகிறோம் கலியாணச் சிலவுக்கிருபதினாயிரம் வராகன்தருகிறோம் நல்ல முகூர்த்தநாளாகிய இன்றைக்கே வதுவை செய்ய ஆரம்பிக்கலாமென் றறைந்து புறம்போந்து மறைந்து ஆள்கள்வசம் முப்பதினாயிரம் வராகனைக் கொடுத்தனுப்பி சந்தோஷப்படுத்திப் பெண்ணைக் கொடுக்க இணங்கச்செய்து பகவான் ஓரந்தணனைப்போல் வடிவெடுத்துப் பின்னுமங்கடைந்து தாம்சேட்டி கையுடனும்மை யழைத்துவரும்படி யென்னை யனுப்பினனென் றறைந்து அச்சம்பந்தியை யழைத்துக்கொண்டு தாம்சேட்டி வீட்டுக்குட்புகுந்து சதிபதிகள் மெய்மறந்திருக்கச்செய்து புதைத்த பொற்கல்லுகளையெல்லாம் பலவந்தமாக வெடுத்துச் சம்பந்தி களிப்படையவவர் முன்னம் வைத்தார் அவைகளைப்பார்த்த சம்பந்தி சந்தோஷ சாகரத்திலமிழ்ந்தவனாய் தாம்சேட்டியை நோக்கி, ஓ கோட்டீசுவரனே! அறிவில்லார் பெருமையைக் காட்டுவார் அறிவுள்ளாரடக்கமா யிருப்பாரென்பதுபோலவும், பெருத்த வச்சிரங்கள் மறைந்து சிறுத்த வயிரங்கள் வெளிப்படல்போலவும், பதிவிரதையும் பரமபக்தனும் குப்தமாயிருக்க விபசாரியும் வேஷதாரியும் பயிரங்கப் படுவதுபோலவும், நம்மிருவருடைய செய்கையிருக்கின்றது இவ்வளவு அடக்க மொடுக்கமுள்ள உம்முடன் சம்பந்தஞ்செய்ய நானென்ன பாக்கியஞ் செய்தேனோவென்றறைந்து நாமதேவைப்பார்த்து பிர்மித்து ஆ! ஆ!! இவருடைய சவுந்தரியம் மன்மதனுக்கு மிருக்காது இவர்க்கு என் கன்னியைக்கொடுக்க நானிழைத்த தவமோ ராஜாபாய் செய்துக்கொண்டு வரும் விரதபலனீதோவென்று

களிசாகரத் தமிழ்ந்தப் பொற்கற்களையும் தாம்சேட்டி குணபாயி நாமதேவர் தூதுவந்த பிராமணோத்தமரையும் வண்டியிலேற்றிக்கொண்டு போய்த் தன் வீட்டை அலங்கரித்து ராஜாபாய் நாமதேவரையுஞ் சிங்காரித்துக் கிரமப்பிரகாரம் வதுவைசெய்து ஆனந்தமடைந்தான். தாம்சேட்டியும் களிசாகரத் தமிழ்ந்தவராய் மருகியையும் மகனையும் சம்பிரமத்துடன் தன் வீட்டுக் கழைத்துக்கொண்டுபோய் சம்பந்திக்கும் பந்துக்களுக்கும் விருந்திட்டுச் சகாயஞ்செய்த அந்தணர்க்களவற்ற திரவியங் கொடுத்துத் தெண்டனிட்டு இன்புற்றிருந்தார்கள். கேட்டீர்களோ சித்தர்களேயென்று நாபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லத் தொடங்கினர்.

நாமதேவருக்கு பகவான் விவாகஞ்செய்த
அத்தியாயம் மூற்றிற்று.

நான்காவது அத்தியாயம்

பகவான் லட்சவராகனளித்தது.

கேளுங்கள் சித்தர்களே! தர்மசொரூபரான பகவான் பிராமண ரூபத்துடன் வந்து நாமதேவருக்கு மணஞ்செய்து முடிந்தபின் நாமதேவரைநோக்கி, சில வாக்கியங்கள் சொல்லத் தொடங்கினர். அதாவது ஓ பரம பாகவதோத்தமனே! அன்னதானம், வஸ்திரதானம், சொர்னதானம், வித்தியாதானம், கன்னிகாதானம் முதலான அநேக தானங்களிலும் அன்னதானமே மேலான தானமென்றுரைக்கத்தகும் ஆனலன்னதானஞ் சீரணம் வித்தியாதானம் அசீரணமென்கிற வாக்கிய மிருந்தாலும் பரம பாகவதோத்தமர்களுக் கொருதின மன்புடன் அன்னம் படைப்பவனுக்கு அழியாப்பதம் சித்திப்பதற்கோர் தடையில்லை. அதற்குத் திருஷ்டாந்தமே தென்பாயேல் பாரதயுத்தத்தில் அர்ச்சுனனால் விடப்பட்ட பாணங்களாற் களையடைந்து தன் ரதத்தின் ஸ்தம்பத்தின் மேற் சாய்ந்து அரிபாந்தாமனைத் துதிக்கும் கர்ணன் விஜயனுக்குத் தர்மராஜனைப்போல் தோன்ற அத்தருணத்தில் ஸ்ரீ கிருஷ்ணதேவர் கவசகுண்டலன்செய்த தர்மத்தையெல்லாம் கவர்ந்துக்கொள்ள ஓரந்தணன்போலாகி அங்கர்கோமானை

யாசிக்க அதற்கக் கச்சைக்கொடியோன் ஓ பிராமணோத்தமா! இந்த அந்தியகாலத்தில் இல்லையென்கிறவாக்கை நானுரையாமலென்பாலிருக்கும் வஸ்து ஏதாகிலுங் கேட்டு வாங்கிக் கொள்ள லாகுமென்று வணங்கக் கர்ணன் ஓ கர்ணனே! உன்னிடத்திலிருக்கும் வஸ்துவையே கேட்கவந்தே னென்றறையக் கர்ணன் மனமகிழ்ந்து ஓ அந்தணா! நீரிச்சித்ததென்னுயிராகிலுங் கொடுப்பேன் சீக்கிரங் கேளுமென்றறைய ஸ்ரீ கிருஷ்ணன் எனக்குன்னுயிர் வேண்டியதில்லை உன்னுயிர்க்குத் துணையான நீசெய்துவந்த தர்மமனைத்தையும் எனக்குத்தத்தஞ் செய்வாயென்றுகேட்கக் கவசகுண்டலன் களிப்புற்று ஓ வேதியரே! நீராசித்த புண்ணியத்தைத் தத்தஞ்செய்வேன் எனக்கிப்போதடைந்த களைநீங்க ஜலங்கொண்டுவந் தூட்டுமையாவென்று வேண்ட பகவானப்படியே யாகட்டுமென்று கச்சைக் கொடியோனைக் கரங்களை நீட்டெனப்புகன்று ஜலத்தையூற்ற அவனஸ்தத்தில் வீழ்ந்த புனல் பொன்மயமாயொளிபெற்று விளங்கக் கர்ணன் அதிசயித்து ஓ பூசுரரே! என் கரதலத்தில் வீழ்ந்தஜலம் கனகமாய்ப் போகின்றதே ஆயாசம் மேலிடுகின்றதே இதுவென்ன காரணமென்று பணியத் தாமோதரன் ஓ சொர்ன குண்டலனே! நீ செய்ததெல்லாம் சொர்னதான மானதால் நீதொட்டதெல்லாம் பொன்னாகின்றது அன்னதான மொருகாலத்திலும் செய்யவில்லையோவெனக் கர்ணன் நான் அன்னதான மொருநாளுஞ்செய்ததில்லை ஆனாலொரு காலத்தில் ஓரந்தணன் என்னைப் போஜனங் கேட்டார். நான் அதோ தர்மராஜன் அன்னதானஞ்செய்கின்றார் அவ்விடத்திற் பொமென்று சுட்டுவிரலாற் காட்டினதுண்டென் றுரைத்தான். கோவிந்தன் ஓ கர்ணா! அன்னதான யிடத்தைச் சுட்டிக்காட்டின சுட்டுவிரலை உன்வாயில் வைத்துக்கொண்டால் அன்னதானயிடத்தைக் காட்டின பலனால் ஜலம்பெருகி உமது தாகத்தைத் தணிக்குமென் றறைந்தார். அப்படியே சூரியகுமாரன் தன் சுட்டுவிரலைத் தன் வாயில் வைத்துக்கொண்ட மாத்திரத்தில் ஜலம்பெருகித் தாகத்தைத் தணித்தது பின்பு கர்ணன் அவ்விப்பிரருக்கு முழுதர்மத்தையுந் தாரைவார்த்துக் கடல் வண்ணனைக் கண்ணாரக கண்டு களிசாகரத் தமிழ்ந்தான். ஆதலால் அன்னதான பலனுக்கு எந்தபலனு மீடாகாது. அதுவுமல்லாமல் அட்சய

பாத்திரத்தில் ஒட்டியிருந்த ஓர் அன்னத்தை நந்த நந்தனன் உண்டபலத்தால் துறுவாசரும், அவருடன் வந்த அனேக முனிவர்களும் திருப்தியடைந்தார்களாதலால் நீ யின்றுடன் அன்னதான மளித்தும் புனிதனுகக்கடவாய் சன்யாசத்துக்குத் தவமும் சம்சாரத்துக்குத் தர்மமுந் துணையென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றது அன்றித் தன்னைமறந்த பிரமக்ஞானிகளும் பக்தியிற் சிறந்த பரமபாகவதர்களும் அன்னத்தையன்றி வேருெரு பொருளையும் கனவிலு மிச்சியார்கள் என்று பற்பல வார்த்தைகளுரைத்து நாமதேவரிடம் விடைபெற்றுக்கொண்டு அவ்விடம்விட் டகன்று மாயமாய் மறைந்தார்.

அப்பால் நாமதேவர் அந்தணருரைத்த வாக்கியங்களை மனதிற் பதித்துப் பகவானைத் துதித்து அன்றுமுதல் நூறு இருநூறு சாதுக்களுடன் போஜனஞ்செய்து சின்னளில் வறுமையடைந்து நல்லுறவு பொல்லாதென் றிடைந்து எல்லாவற்றிற்கும் பகவானே துணையெனத்துணிந்து இல்லையென்கிற துக்கந் தணிந்து பண்டரிநாதனைபணிந்து அவர் திருவடிகளிற் றன் திருவட்சிகளையுமணிந்து வீட்டுக்கும் வராமல் ஆலயத்திலே வாசமாயிருந்தார். தாயுந் தந்தையும் விருத்தாப்பிய மேலிட்டும் தையல்வேலை செய்து பகவானுக்கு நைவேத்தியந் தப்பாமல் கொண்டுவந்து கொடுத்துக் கொண்டிருந்து வொருநாள் நைவேத்தியத்துக்கும் வழியில்லாமல் சம்பந்தியிடமுஞ் செல்லாமல் ஒருவருடனும் சொல்லாமல் பண்டரிநாதன் கோயிலையடைந்து ஓ பகவானே! நைவேத்தியத்துக்கும் வழியில்லாமற் போச்சுதே பொல்லா வறுமை எங்களுக்கு வாய்ச்சுதே நாமதேவர் பட்டினியாயிருப்பாஞ ஒருநாள் பொறுப்பாஞ நாங்களினி யென்னசெய்வோம் எப்படி யுய்வோமென்று கண்ணீர்விட் டழுதார்கள். அதுதெரிந்த நாமதேவர் தந்தையை வணங்கி ஓ என் மாதாபிதாக்களே! விருத்தாப்பியப் பருவமுள்ள நீங்களிருவரும் பட்டினியாயிருக்க எனக்கென்ன இந்தப் பகவானுக் கென்ன ஐயோ பசியால் வாட்டமுற்றிருந்தும் இவ்வளவு தூரம் தள்ளாடித் தள்ளாடி என்னைத் தேடி பகவானை நாடி வந்திர்களோ வென்றுரையாடிப் பகவத் கீர்த்தனைகளைப் பாடிகொண்டிருந்தார். தாய் தந்தையிருவரும் மிகவும்நொந்து பண்டரி

நாதனுக்கு வந்தனந் தந்து எந்தையாகிய கடவுளே இந்த மைந்தன் பட்டினியால் நைந்திருக்கலாமோ பசிவேதனை ஒருவரால் பொறுக்கப்போமோ வென்றறைந்து தன் வீட்டையடைந்து வாட்டமுற்றிருந்தார். அத்தறுவாயில் பகவான் ஓர் சேவகனைப்போல வேஷந் தரித்துக்கொண்டு கருடனை ரிஷபமாக்கி ஓர் பெருத்த கோணியில் லட்சம் விராகன் நிறைத்துக் கலுழன்மேலேற்றி தாம்ஸேட்டி வீட்டுக்கெதிரில் ஓட்டிக்கொண்டு வந்துநின்று ஓ நாமதேவரே என்று பன்முறை கூப்பிட்டார் குனாபாயி யாரையா நாமதேவரைக் கூப்பிடுகிறதென்றாள், சேவகனாகிய பகவான் ஓ அம்மா! நான் நாமதேவரை நாடி வெகு தூரதேசத்திலிருந்து வந்தேன் நடந்து நடந்து நொந்தேன் அவரெங்கே சீக்கிரமனுப்புமென்றார். குனாபாயி யாரோ விருந்துக்கு வந்ததாக தோன்றுகின்றது இனி யிவனிடம் பேசினால் மாட்டுக்கும் தனக்கும் உணவு கேட்பான் நமது வீட்டிலோ ஒன்றுமில்லாம லிருக்கின்றது என்று தனக்கிருக்கும் வறுமையாலும் பட்டினியாயிருக்குஞ் சிறுமையாலும் இங்கே நாமதேவரில்லை அவரெங்கேயோ போயிருக்கின்றார் அவருட னுனக்கென்ன காரியம் வந்தவழியைப் பார்த்துக்கொண்டு போமென்றாள், பகவான் யாரம்மா வீட்டில் வெளியில் வந்துபார்த்தும் அன்பாய்ப் பேசாமல் சற்றுங் கூசாமல் வீட்டிற்சென்று வெய்யலில் நொந்து வந்திருக்கும் எனக்குத தாகத்துக்காவது கொடாமல் கடுகடுத்துப் பேசுகின்றாய் தன்னை நாடி வந்தவர்கட் கிப்படித்தானோ உபசாரஞ் செய்கின்றது நானுங்கள் வீட்டு விருந்தைச் சட்டை செய்து வரவில்லை உனக்குத் துன்பந்தரவில்லை பணமில்லாதவன் பிணமென்பதற்குச் சந்தேகமில்லை தாரித்திரத்தைப் போன்ற கொடியவியாதி யில்லவேயில்லை, வறுமையுற் றிவ்வுலகி லிருப்பதைப் பார்க்கிலும் மரணமடைவதே யுத்தமமென்று சொல்லலாம். நல்குரவால் நலிவுற்றிருக்கும் உங்கள் முகத்தைப் பார்க்கவே கூடாது, ஆனாலும் எஜமானுடைய உத்தரவால் இங்குவர நேரிட்டது அந்த நாமதேவர் வருகிற பரியந்தம் இருந்துபோகிறேன் நீங்கள் கோதுக்குணத்தாலொருவேளை வாதுசெய்யப் போகிறீர்களென்று பற்பல மொழிகள் பகர்ந்து வாயில் மத்தியி லுட்கார்ந்துக்கொண்டு அடிக்

64

கடி கணைத்துக்கொண்டு மிருந்தார், அவ்வசனங்களைக் கேட்ட குணபாயி குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு மென்பதைப்போலக் குரோதங்கொண்டு விரோதமாய் அச்சேவகன்பால் வந்து யாரடா நீ பங்காளியைப்போலவும் கடன்காரனைப்போலவும் வாசற்படியிலுட்கார்ந்து என்னென்னவோ கடபடவென் றுளருகிறாய் சீக்கிரமாக யிவ்விடம் விட்டெழுந்து போவென் றறைந்தாள்.

பகவான் அடா! இவர்கள் கொடும்பாவிகளா யிருக்கிறார்கள் கடவுள் இப்பேர்க்கொத்த மூடர்களை ஏன் சிருஷ்டித்தாரோ வீட்டிலொன்றும் இல்லாவிட்டாலும் வந்தவர்களுக்குத் தாகமாவது கொடுத்துச் சந்தோஷப்படுத்தலாகாதா நாமதேவர் வர எந்நேரஞ் செல்லுமோவென் றுரைத்து குணபாயைச் சட்டைசெய்யாதவர்போல காண்பித் திருமாந்து அசையாமல் வாசற்படியிலேயே வீற்றிருந்தார் குணபாயி ஓ அகங்காரத்திற் சிறந்தவனே! உனக்கதிக தாகமாயிருந்தால் அதோ கேணியிருக்கின்றது அதிற் சேந்தி சாப்பிட்டுச் சாந்தியாய்ப் போகலாம் எழுந்திரு வழிவிடு வென் றிறைந்து பேசினாள். பகவான் ஓ நரைத்த விருத்தியே! தாகத்துக்குக் கேட்காமுன்னமே கேணியைக்காட்டிக் கைகளை நீட்டி விண்ணான வார்த்தைகள் பேசுகின்றாய் நானுங்கள்வீட்டில் தாகத்துக்குக் கொள்ளும்படியான தபமும் நீங்கள் செய்தீரோ பஞ்சபாதகங்கள் செய்யுங் கொஞ்சக் குணமுள்ள உங்கள் வீட்டினருகில் நிற்கவேகூடாது. இப்படிதானா நரைதிரை வருமட்டும் சமுசாரஞ்செய்தாய் பிள்ளையைப்பெறா மலடியாகிய உனக்கும் ஜீவகாருண்ய மிருக்குமா? உங்களுக்கு செல்வம் பெருக்குமா? கெடுகாலி படுநீலியென் றுரைத்தார். அவ்வசனங்களைக்கேட்ட தாம்ஷேட்டி கோபித்து யாரடா அவன் வன்புந்துன்புமாய்ப் பேசுகின்றவன், வழிபோக்கனாகிய நீ துன்மார்க்க வார்த்தைகள் பேசக்கூடுமா, சீக்கிரமிவ்விடம் விட்டு எழுந்துபோ இல்லாவிட்டாலோங்கி வோரரை வாங்குவேனென்று கடுகடுத்து பேசத் தொடங்கினார். பகவான் அடா கிழவா! இதுதானோ ஞாயம் இதற்காகவா செய்ய வந்தேன் சகாயம், இப்போதே உன்னையும் இக்கிழவியையும் வெட்டி பலியிடுவேன் நாமதேவர் முகத்தைப் பார்த்தல்லவோ சும்மாயிருக்க நேரிட்டது அடடா இப்பேர்க்கொத்த

பரம லோபிகளுக்குத்தானா அந்தக் கேசவ சவ்கார் இத்தனை திரவியங் கொடுத்தனுப்பவேண்டும். இவர்களுக் கென்னு யிர் நீங்கினும் லட்சவராகனைக் கொடுப்பேனேவென்று மாட்டைத் தட்டி யோட்டிச் சிலவராகன் கோணியிலிருந்து சிந்தும்படியாகவும் செய்தார்.

அதுதெரிந்த குணபாயும் தாம்ஷேட்டியும் வோடோடியும் ரிஷபத்தை மறித்துச் சேவகன் மோக்கட்டையை பிடித்துக்கொண்டு அப்பா எங்களுக்குற்ற தாரித்திரத்தாலும் பசிவேதனையாலும் விருத்தாப்பிய மேலீட்டாலும் வொன்றுந் தோன்றுமல் யேதேதோ பேசிவிட்டோம் நன்றிகெட்டோம் கொண்டுவந்த வராகன்களைக் கொடுக்காமல்கோபித்துக்கொண்டேன்போகிறீர் நாங்கள்செய்த அபசாரத்தை உபசாரமாகக் கொண்டு திரவியத்தைக் கொடுத்துவிட்டுப் போமையா குற்றங்களைப் பொறுத்தருளு மெய்யா சாந்தத்தில் மிகுந்த துய்யா தருமங்களையெல்லாம் செய்யுங் கையாவென்று பலதரம் வேண்டிக்கொண்டார்கள். பகவான் ஓ ஜனங்களே! கேட்டீர்களோ இப்போ திவர்கள்செய்யும் மரியாதை எனக்காகவா திரவியத்திற்காகவா சொல்லுங்கள் சற்றே நில்லுங்கள் யாரேனும் பட்டினியால் வாடி இவர்கள் வீட்டைநாடி வந்தார்களானல் வேஷ்டையுற்று வாட்டமடைந்து பசிபசியென்று பறந்து பிராணனிழந்தல்லவோ போகவேண்டும் தாரித்திர காலத்திலல்லவோ தர்மகுணத்தையும் மனைவியின் மர்மத்தையும் சினேகிதர் வாஞ்சையையும் பந்துக்கள் விசுவாசத்தையும் ஆராய்ந்தறியவேண்டும் என்கிற பழமொழிப்படி தர்மகுணத்திற் சிறந்த இவர்கள் தாரித்ரம் வந்தடைந்தமாத்திரத்தில் தாகத்துக்கு மளிக்காமல் சகாயஞ் செய்யவந்த என்னைத் தாறுமாறுஞ்செய்து சஞ்சலத்துக் குள்ளாக்கினுர்கள். தாரித்திரகாலத்தில் தர்மகுணமும் அதிகாரகாலத்தில் அகங்காரக் குறைவும் துன்பம் வரும்காலத்தில் தைரியமும் அவமான காலத்தில் சந்தோஷமும் உள்ளவர்களையல்லவோ புருஷ சிகாமணிகளென்றும் வறுமையுள்ள காலத்தில் மணாளன்பக்தியும் காவலில்லாக் காலத்திற் கற்பென்னுங் காவலும் பதி கோபஞ்செய்யும் வேளையில் சாந்தமும் அதிதி அப்யாகதிகட்கு அன்னமிடுவதி லுற்சாகமும் உள்ள பெண்களையல்லவோ பதிவிரதைகளென்றும் சொல்லலாம்.

அப்படியிருக்க இப்படிச்செய்யும் இவர்களைப் புண்யோத்தமரென்றும் விரதசீலரென்றும் இவ்வூரிலுள்ளோர் சொல்லுங் காரண மியாதோ பாகமாச்சுதில்லை யென்பதற்கு ஓரான் னமே காட்டுங் கொள்கையைப்போல் இவர்கள் துஷ்டர்களென்று ஒரு காரியத்தாற் றெளிந்துக்கொண்டேனென்று பின்னும் மாட்டைத் தட்டி யோட்டினூர். தாம்ஸேட்டியும் குணபாயும் ஓ பொறுமையிற் சிறந்த புண்ணியவானே! கோபம் பாபமறியாதென்கிறபடி எங்களுக்குற்ற வறுமையாலும் மைச் சிறுமைப் படுத்திவிட்டோம் தர்மகுணங் கெட்டோம் இதை மனதில் வையாதீர் அவமரியாதையைச் செய்யாதீர் என்று பல மரியாதையான வார்த்தைகளாடத் தொடங்கினூர்கள். மாயாவிலாசன் ஓ பிரஜைகளே! இப்போதிவர் செய்யும் பாசாங்கைப் பாருங்கள், இவ்வழக்கைத் தீருங்கள் அகப்பட்டாற் றலைமுடி இல்லாவிட்டால் காலடி இவர்கள் தர்மபக்தர்கள் தர்மசூத்தர்கள் பணவாசைக் குகந்த கிழப்பிணங்களாகிய இவர்களுடன் பேசவுந் தகுமோவென்று லோபிகளே! கொடும் பாபிகளே! துவேஷிகளே அவிசுவாசிகளே எனக்கூறி வந்தவழியாக மாட்டைத்திருப்பி இழுத்துக்கொண்டு போகத் தொடங்கினூர். குணபாயி அப்பா வொப்பிலாதவனே வீட்டினுள்வாரும், ஏழைகள் முகத்தைப்பாரும், ஆசனத்திலுட்காரும், ஆயாசந்தீரும், ஏளனஞ்செய்தது போதும், இனி நாங்க ளீடேறும்படியாகக் கிருபைகூறும், கொண்டு வந்த திரவியத்தைத் தாரும், நாங்க ளுய்யக்காரும், என்கிற வார்த்தைகளாடி சேவகனுடைய இரண்டு காங்களையும் பிடித்துக்கொண்டு பலவந்தமாய் வீட்டினுட் கொண்டுபோய் ஆசனத்திலிருத்திக் கேசவ சவ்கா ரெந்தவூர் அவருக்கும் நாமதேவருக்கும் எத்தனை நாளாய்ப் பரிட்சை சொல்லுமப்பாவென்றூள். கபட நாடகன் ஆ ஆ இவ்வுலகில் பணமென்றல் பிணமும் வாய்திறக்குமென்பது கட்டுக் கதையென்று நினைத்திருந்தேன். இப்போது பிரத்தியட்சமாகக் கிழப் பிணங்களாகிய உங்களால் பணத்தாசையைப் பரீட்சித்தேன் அகத்தியம் பிணமும் பணத்துக்காக வாய்திறக்கும் மானம் போய் வெகுமானங் கிடைத்தால் நலமென்றெண்ணும் மாந்தர்க ளிவ்வூரிலிருக்கும் நீங்களன்றி வேறெங்கணு மிருக்க மாட்டார்கள். ஓ பொருளாசை யென்னும் மருள்கொண்டு

இருக்கும் புலையரே! சிவகாருண்யமில்லா வலையரே! புண்ணியமறியாத லுத்தரே! அனியாயஞ் செய்யுஞ்சுத்தரேயென்றுரைத்துக்கொண் டிருந்தார். தாம்ஷேட்டி மாட்டை வீட்டின்வாசலி லோட்டிக்கொண்டுவந்து ஓர் சார்பிற்கட்டி ஓவேவுகாரரே! வீணுய்க்கோபங் கொள்ளாதீர், ஏழைகளைத் தள்ளாதீர், தூஷணவார்த்தைகள் விள்ளாதீர், வாலிபத்தால் துள்ளாதீர், கேசவசவ்கார் நாமதேவருக்குத்தானே இந்த திரவியத்தைக் கொடுத்தனுப்பினர் அப்படியிருக்க சேவகனுகிய நீரிப்படிப் பேசலாமா ஆயினும் குற்றமில்லை. கேசவசவ்கா ரெந்தவூர் எத்தனைப்பை கொடுத்தனுப்பினர். ஓரோர் பையி லெத்தனைவரா னிருக்கின்ற தென்று கோணிப்பையைக் கீழேதள்ளினர், சிதறி வாசலெல்லாம் பொன்மயமான தாற் றள்ளினர், பாண்டுரங்கனைப் பாடினர், பரமானந்தம் மேலிட்டாடினர், அதைப்பார்த்த பகவானுங் களிப்படைந்து ஓ தாம்ஷேட்டி! கேசவசவ்கா ரிருப்பது வைகுந்தபுரம் நாமதேவரைச் சிறுபோழ்திருந்தறிவார் அவரனுப்பியது பத்துப்பை ஒவ்வொருபையிலும் பதினுயிரம் வராகனிருக்கின்றது. நீர் யெண்ணிக் கொள்ளும் நானிம்மாட்டைச் சந்திரபாகாநதியிற் குளிப்பித்து நானும் ஸ்நானஞ்செய்து பண்டரிநாதன் ஆலயத்துக்குப்போய் நாமதேவருடன் பேசிவருகிறேனென்றுரைத்து ரிஷபத்துடன் வெளிப்பட்டு அந்தர்த்தானமானர். பின்பு தாம்ஷேட்டியும் ராஜாபாயும் வராகன்களை யெண்ணி லட்சம் வராகன் சரியா யிருக்கக்கண்டு ஆனந்தங்கொண்டு சில வராகன்களுக்குத் தேவையான வஸ்துக்கள் வாங்கிக்கொண்டு அதிசீக்கிரமாய்ப் பதார்த்தங்கள் சமைத்து ராஜாபாயை நல்ல வஸ்திராபரணங்க ளணிந்துக்கொள்ளச் செய்து நாமதேவருக்குத் திவ்வியமான வஸ்திராபரணங்களும் பகவானுக்குக் கைத்தல், தித்தித்தல், புளித்தல், உவர்த்தல், துவர்த்தல் காத்தல் என்னும் அறுசுவை யுண்டியுடன் அணிவர்க்கங்களும் கொடுத்தனுப்பித் தாங்கள் திரவியத்துக்குக் காப்பு செய்திருந்தார்கள்.

ராஜாபாய் மிகுந்த களிப்புடன் நைவேத்தியத் தட்டையும் வஸ்திராபரணங்களையு மேந்திக்கொண்டு வீதியிலுள்ள ஆடவரும் மாதரும் இருள் ரம்பையோ இந்திராணியோ கலைமகளோ மலைமகளோவென்று மயங்க அன்னம்போலவும்

கரிணியைப்போலவும், மெதுவாக நடந்து பல வீதிகள்கடந்து, சரணம்நோவதா லிடைந்து, சன்னிதானத்தை யடைந்து, பாண்டுரங்கன்முன் பசியால்வாடிப் பகவானை நாடிப் பக்தியைக்கூடிப் பரமானந்தத்தைத் தேடி, இருகண்களை மூடி, விஷ்ணு சங்கீர்த்தனங்களைப் பாடி, எழுந்தெழுந்து கூத்தாடிக்கொண் டிருக்கும் தன்கணவனைச் சூழ்ந்து பலதரந் தாழ்ந்து ஓ சுவாமி! பசியால் வருத்தமடைந்தீரோ? பாடியாட விடைந்தீரோ? இதோ நைவேத்தியங் கொண்டுவந்தேன் பாண்டுரங்கனைக் கண்டுவந்தேன் சீக்கிரம் பண்டரிநாதனுடைய பாதங்களுக்கு நீராட்டும், தூபதீபங்களைக் காட்டும் அன்னத்தை யூட்டும், பஜனை பிறகாகட்டும் என்றுபணிவாக வுரைக்க நாமதேவர் கண்ணைத்திறந்து காந்தையைப் பார்த்து மெய்மறந்து ஓ பெண்ணே! உச்சிதமான வஸ்திரங்களேது, திவ்வியமான ஆபரணங்களேது, பற்பல பலகாரங்களேது, அநேகவித கனிவர்க்கங்களேது, சீக்கிரமாக ஓதுவாயென்று கேட்க, ராஜாபாய் ஓ சுவாமி! தங்களுக்குப் பால்ய சினேகிதராகிய வைகுந்த புரத்திலிருக்கும் கேசவ சவ்கா ரென்பவர் ஓர் ரிஷபத்தின்மீது லட்சம் வராகன்களையேற்றி ஓராளுடனனுப்ப அச்சேவகன் நமது வீட்டிற்குவந்து உம்மைக்காணுமல் நொந்து, கனகங்களைத்தந்து, உம்மைக் காண விங்குவந்து ஓர் ஜாமத்துக்கு மேலாயிற்றே அவரைத் தேவரீர் காணவில்லையோ வென்றுவணங்க, அவ்வாக்கியங்களைக் கேட்ட நாமதேவர் ஓ ஓ பகவானே நமக்காகத்திரவியம் கொண்டுவந்ததுபோற் ருேன்றுகின்ற தென்று துன்பங்களகன்று சந்தோஷமெனப் புகன்று சற்றுநேர மசையாமல் நின்று ஆடையாபரணங்கள் தரித்துக்கொண்டு நைவேத்தியத்தட்டை வாங்கிக்கொண்டு சந்நிதானத்தினுட் பிரவேசித்துச் சந்துஷ்டியோடும் பூசித்து நாடோறும்போல நைவேத்தியமுட் கொள்ளுமையா வென்று தோத்திரஞ் செய்யத் தொடங்கினர். உடனே பகவான் பிரசன்னமாய் ஒன்றுமறியாதவர்போல் இன்று வெகு சம்பிரமமாக விருக்குங்காரணமேதென நாமதேவர் ஓ தெய்வமே! அடியேனுக்காக ஆட்காரனுகலாமோ என் தாய்தந்தையர்பா லேகலாமோவென்று பணியப் பகவான் ஓ நாமதேவரே நீ வெகுநாளாய்ச் சன்னிதானத்துக்குக் காவலாயிருப்பதன்றி அன்னமூட்டுஞ் சேவக

னையு மமர்ந்திருக்கின்றாய் அதற்குச் சம்பளங்கொடுக்காமல் நெடுநாளாக மறதியாயிருந்து விட்டேன் இதினிமித்தம் முனிவு கொள்ளாமல் இனிமே லப்போதப்போது சம்பளம் பெற்றுக்கொண்டு அன்புடனெனக் கன்னமூட்டப்பா வென்று பின்னுஞ் சொல்வார். ஓ அரிதாசனே! முகவிலாசனே இனிமேல் இராக்காலத்தில் வீட்டிலும் பகற்காலத்தி லிவ்விடத்திலும் இருந்து நாள்கழிப்பாயாகவென் றறைந்து மறைந்தருளினார். பின்பு நாமதேவர் பகவான் கட்டளையின்படியே நாள் கழிக்கத்தொடங்கினார். கேட்டீர்களோ சித்தர்களே யென்றுபின் னுஞ் சொல்லத் தொடங்கினார்.

பகவான் லட்சம் வராகனளித்த அத்தியாயம் முற்றிற்று.

ஐந்தாவது அத்தியாயம்

பகவான் கூலியாளனாய்வந்து பணிசெய்தது.

வாருங்கள் சித்தர்களே! இப்பால் நாமதேவர் பகவான் கொடுத்துப்போன வராகன்களைக் கண்டு ஆனந்தங் கொண்டு விந்தையென விண்டு இனி பக்தர்களுக்குத் தொண்டுசெய்தாலின்பமுண்டு என்றதாக வுட்கொண்டு அந்தணர் சாதுக்கள் அப்யாகதி முதலானோர்க்கு அன்னதானம் சொர்னதானம் முதலியவைக ளன்புடனளித்து இன்புடன் களித்து வராகன்களை யெல்லாஞ் செலவழித்து லோபிகளைப் பழித்து வீட்டையும்விற்று மேலோர்க்கீந்து சபதப முபாதி சந்தோஷத்தையுஞ் சார்ந்து முன்போலவே ஆலயத்திற் பிரவேசித்துப் பண்டரிநாதனைப் பூசித்து நாள்கழிக்கத் தொடங்கினார் ராஜாபாயும் தாய் தந்தையும் தையல்வேலையால் பகவானுக்கு நைவேத்திய மனுப்பிக்கொண்டு இருப்பதற்கு வீடில்லாமையால் ஓர் பந்தல் போட்டு அதில் வாசமாயிருக்கிற நாளில் ராஜாபாய் கர்ப்பவதியாய் பூரணமானபின் நல்ல சுபமுகூர்த்தத்தில் பூரணச் சந்திரனைப் போன்ற ஓர் ஆண்குழந்தையை பெற்றாள். அப்போது பண்டரிநாதன் நாமதேவர் முன் பிரசன்னமாய் அப்பா நாமதேவ்! உனக்கொப்பிலாப் புதல்வன் பிறந்தா னதலாற் சீக்கிரம்போய்ப் பார்த்து நாளைவாவென்று பலவந்தமா யனுப்பினார். நாமதேவர் கடவுளுத்திரவின்படி

யே தமதிருப்பிட மடைந்து குழந்தையைப் பார்த்து வந்து உடனே சந்நிதானத்துக்குத் திரும்பினார். அதுதெரிந்த குணபாயும் தாம்ஸேட்டியும் அப்பா ஒப்பில்லாமகனே! உனக்கருமையான மைந்தன் பிறந்தானே இன்றைக்காவ திங்கிருக்கலாகாதா வென்று வேண்டிக்கொண்டார்கள். நாமதேவர் நல்லதென் றப்பந்தலினோர் பக்கத்தில் சயனித்துக்கொண்டார். அப்போது மழைத்துளிகள் விழ ஆரம்பித்தது அதனால் தாம்ஸேட்டி நாமதேவரை நோக்கி, அப்பா நாமதேவ்! பின்னுக்குதவு மென்றோர் காசும் வைக்காமல் ஆபரணம் முதல் வீட்டையும் விற்றுச் சம்பந்தி முதலானோர் நகைக்கப் பந்தலில்சமுசாரம் செய்யும்படியாக செய்துவிட்டாயே அதிக மழைவந்தால் இளங்குழந்தையும் தாயும் விருத்தாப்பியமுள்ள நாங்களும் நனைய மாட்டோமா! குளிரால் வாதைபட மாட்டோமா? ஆதலால் யாரையாவதழைப்பித்து இப்பந்தலைச் சற்றே செம்மையாகக் கட்டிவையப்பா வென்று சொல்ல, நாமதேவர் இப்பந்தலுக்கு மூன்றுகாலே யிருக்கிறது மேற்புல்லு மில்லை ஆதலால் ஒருகாலும் புல்லும் இவ்விரவில் எங்கிருந்து கொண்டுவரட்டும் யாரிடம்போய்க்கேட்கட்டும் அப்படி இவைகளகப்பட்டாலும் கட்ட என்னாலாகுமா? கூலியாளரை யழைப்பித்தால் அவர்களுக்குக் கூலிகொடுக்க என்னிடம் பணமிருக்கின்றதா? இதற்காகத்தானா என்னை யிருக்கச் சொன்னீரென் றெழுந்து சந்நிதானத்துக்குப் போகத்தொடங்கினார்.

குணபாயி நாமதேவரை மறுத்து அப்பா மகனே உன்னை நாங்களெவ்வளவு அருமையாய்க் காப்பாற்றினோமோ அவ்விதமாகவே உன்மைந்தனை நீ பாதுகாக்க வேண்டியதில்லையா! மனைவி மகனைக் காபபாற்றுவதுந் தொல்லையா? நாங்கள் விருத்தாப்பிய மேலீட்டால் யாதொன்றுஞ் செய்யக்கூடாமல் தடுமாறுகிறோமே நீ யறியாதவ னல்லவே யென்று நவில, நாமதேவர் ஓ அம்மா! எல்லாருக்கும் பகவான் துணையாயிருக்க, ஒருவரையொருவர் காப்பாற்றுவதென்பது கர்த்தன் பக்திக்குக் குறைவல்லவா ஈயெறும்புமுதல் சகல சீவராசிகளுக்கும் சுகதுக்கமறிந்தூட்டும் கர்த்தவ்யம் இக்குழந்தையைக் காக்காமல் கைசோர விடுவாரா? தமக்குத் துன்பந்தா வுட்படுவாராவென்கிற பலமொழிகள் பகர்ந்து ஜாமராத்திரிக்கு மே

லானதாலும் தாய்தந்தையர் வாக்கைத் தடுக்கக்கூடாமையா லும் சயனித்துக்கொண்டு பகவானை தியானஞ்செய்துக்கொ ண்டு மழை காற்றுவீசுவதால் நித்திரை வராமல் விழித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது காற்றுமழையும் பலமாயடி க்கவே தாம்ஸேட்டியும் குனுபாயும் மருகியாகிய ராஜாபாயும் குழந்தையும் நனையாமலிருக்கும்படிக்கு காற்றெழுந்தெந்தப் பக்கமாக வீசுகின்றதோ அந்தப் பக்கத்தில் தட்டிகளை யெடு த்து வைத்துக்கொண்டிருந்து மழைவிட்டபின் ஓர்பக்கத்தில் சயனித்துக்கொண்டு ஓ பகவானே! பலமாகக் காற்றும் மழை யும் வந்தடித்தால் பந்தல் வீழ்ந்துபோகுமே சிசுவுக்குந்தாய் க்கும் வேதனையுண்டாகுமே இதற்கு நாங்களென்ன செய் வோம் ஓ பண்டரிநாதா! நீயே துணையென்று தோத்திரஞ் செய்துக்கொண்டே கண் வளர்ந்தார்கள். அப்போது பக்த வச்சலனாகிய பாண்டுரங்கன் கூலியாளனாகப் பந்தலுக்கோர் காலும் புல்லும் ஏந்திக்கொண்டு வந்து ஓ நாமதேவரேயெ ன்று பன்முறை உரக்கக் கூப்பிடத் தொடங்கினார்.

நாமதேவர் இதென்னடா சள்ளையா யிருக்கின்றது கர்த் தன் பக்திக்குத் தடை வந்துக்கொண்டிருக்கின்றது அரிகரி இந்நேரபரியந்தம் இந்த விருத்தனும் விருத்தையும் குணு குணு முணுமுணென் றென்னென்னமோ பிதற்றிக்கொண் டிருந் திப்போதுதான் அனந்தல் செய்தார்கள் அவர்களையெ ழுப்பவும் என்தியானத்தைக் கலைக்கவும் எவனோ வந்து கொ ள்ளை கொடுத்தவன்போல் கூக்குரலிடுகிறான். சம்சாரம் சாகர மென்கிற வசனம் மெய்யன்றிப் பொய்யல்லவென் றனந்த வித யோசனையோடுங்கூடி மௌனமுற்றிருந்தார். பகவான் நாமதேவ ரருகிற்சென்று அடா நாமதேவ்! நான்வந்து பல தரங் கூப்பிட்டும் கண்திறந்து பார்த்தும் மௌனமாயிருக்கி ன்றாயா? நீயாருக்காகச் சஞ்சாரஞ் செய்கின்றாய்? பேரின்பத் தையும் பிள்ளையைப்பெற்றுச் சள்ளையென் றுரைக்கின்றாய்? உனதுமாமனார் பந்தலுக் கோர்காலும் புல்லும் கொடுத்தனு ப்பக்கூடாதா? லட்சாதிபதிக் கிதுவோர் பாரமா? அரி அரி சிசுவுந்தாயும் ஈரத்தால் ஜன்னிக்கண்டு ஓர்வேளை இறந்து விடப் போகிறார்களென்று பக்கத்து வீட்டுக்காரனாகிய நான் பெருத்த குடும்பியாதலால் ஜீவகாருண்யத்தால் பந்தலைச் செ வ்வையாக நிறுத்திக் காற்றும் மழையும் உட்பிரவேசிக்காமல்

ஓர்காலும் புல்லும் நாறும் கொண்டுவந்து துணையாயிருந்து கட்டுதற்கோர் துணைவேண்டி வெகுநேரமா யுன்னையழைக்கின்றேனே? நானொருவனா யுழைக்கின்றேனே என்று மூன்று காலிலிருந்த பந்தலை நாமதேவர்பேரில் விழும்படிசெய் தடா நாமதேவே! பந்தல் வீழ்ந்துவிட்டது உன்னுடைய எண்ணங்கெட்டது சீக்கிரமெழுந்து வாவாவென்று கரத்தைப் பிடித்திழுத்தார், நாமதேவர் பந்தலின்கீ ழகப்பட்டுக்கொண்டு வெளிப்படுவதற்குக் கூடாமல் வெகு கஷ்டத்துடன் புறம்போந்து கூலியாளனை நோக்கி அடா மூருடா, அடா குருடா, நீ பந்தலை என்மேற் றள்ளவேண்டுமென்றே தள்ளினாய், உபகாரஞ் செய்யவந்தேனென்கிற கர்வத்தாற் றள்ளினாய், அதிக கருணையோடும் வந்த நீவோராளையு மழைத்துக்கொண்டு வரலாகாதா பந்தலைக் கட்டிப் போகலாகாதா வென்றுரைக்கப் பகவான் ஓ நாமதேவா! கோபஞ்செய்யாதே வாயில் வந்தபடி வையாதே நானுமுங்களைப்போ லேழையன்றி மகராஜனோ வோராளுக்குக் கூலிகொடுக்க என்னிடத்தில் பணமெங்கிருக்கின்றது உனது தாய்தந்தையரை வெகுநாளாய்ச் சினேகித்திருக்கும் வாஞ்சையாலும் உன்மனைவியும் மகவும் படுந்துயரத்தாலும் உபகாரஞ்செய்யவந்தேன் நீ சற்றே துணையிருந்து கட்டுமப்பாவென்று பலவந்தமாகப் பந்தலை வோர்பக்கந் தாங்கச்செய்து தான் வோர் காலை நட்டுக் காவணத்தைச் செவ்வையாக நிறுத்திப் புல்லைப்பரப்பி நாருகளாற்கட்டி நாலுபக்கங்களிலும் தட்டிகளை நிறுத்தி நாமதேவை உள்ளிருத்திப் புறத்திலிருந்த பகவான் மூங்கில்களால் பலமாயிருக்கிக் கட்டி அடா நாமா! சாப்பாட்டு ராமா! பந்தல் செவ்வையா யிருக்கின்றதாவென் றுரைத்துக்கொணடே உள்ளிருப்பவர் வெளிவருவதற்கு வழியில்லாமல் செய்து அலுப்பவர்போல் அப்பப்பா இராத்திரியெல்லாம் நித்திரையில்லாமல் இந்த மூடாத்மாக்களுக்காக வெகு கஷ்டப்பட்டேன் இனியிவர்கள் கூலி கொடுப்பதெப்போ நான்போய் நித்திரை செய்வதெப்போ வென்றுரைத்து அடா நாமதேவா! நானின்னேரவேளையில் வந்து மழையில் நனைந்து பந்தலைக் கட்டினதற்கு சீக்கிரங் கூலிகொடு ஓர் காலுக்கும் புல்லுக்கும் நாருக்கும் விலைகொடு எனக்கதிக நித்திரை வருகின்றது ஆயாசந்தருகின்றது என்றுசொல்லத் தொடங்கினர்.

நாமதேவர் சபாசு நன்ருயிருக்கின்றது காலும் புல்லும் நாரும் நானுன்னைக் கொண்டுவரச் சொன்னேனு? கஷ்டத்துடன் கட்டச்சொன்னேனு? வீண் வாதுசெய்ய நீயெங்கிருந்து வந்தாய்? ஏன் எனக்காயாசந் தந்தாய்? என்னிடம் கூலியேது? விலையேது போபோவென்ருர் பகவான் அடா நாமா கூலியும் விலையுங் கொடுக்காமற்போனு லுன்னைக் கொஞ்சத்தில் விடுவேனு? நஷ்டத்துக் குட்படுவேனு? இப்போது சுகப்பட்டது உன் மனையாட்டியா? என் மனையாட்டியா? உன் மகவா? என் மகவா? உன் தாய்தந்தையா? என் தாய்தந்தையா? நீயிக்கணம் கூலிகொடுத்தாலாச்சுது இல்லாவிட்டாலிப் பந்தலுக்கு நெருப்பை வைத்துப் பஸ்பமாக்கி விடுகிறேன் ஒருவரும் புறப்படுவதற்கு வழியில்லாமல் முன்னமே தடைசெய்திருக்கிறேன் இதோ தீயைக்கொண்டுவருகிறேன் பச்சைக்குழந்தையும் தாயும் துன்பப்படப் போகிருர்களென்று சகாயஞ்செய்த வெனக் குபசாரமுஞ் செய்யாமல் அபகாரஞ் செய்கிருயா இப்பேர்க்கொத்தத் துஷ்டனுகிய உன்னையும் உன் குடும்பத்தையும் எரித்துவிடுவதால் எனக்கோர் பாபமும் அணுகாது நாணமில்லா நாயே பிரியமில்லாப் பேயேயென்று வைதுக்கொண்டே சற்றுதூரம்போய் மாயமாய் மறைந்தார். உடனே நாமதேவர் பந்தலிலிருந்து வெளிப்பட நாலுபக்கத்திலும் சுற்றிப்பார்த்து வழியில்லாமல் ஓஓ நெருப்பிட் டெரிப்பதற்கோ யிப்படிச்செய்தான் நமது கழுத்தைக் கொய்தான் இனி உள்ளபடி முடியட்டும் பொழுதுவிடியட்டுமென்று பகவானைத் தியானஞ் செய்துக்கொண்டே ஓர் சார்பிற் சயனித்துக்கொண்டார். அப்போது ராஜாபாய் நாமதேவை நோக்கி, ஓ ஸ்வாமி! கஷ்டப்பட்டவனுக்குக் கூலியுங் கொடுக்காமல் சமாதானமுஞ் சொல்லாமல் பந்தலைக் கொளுத்திவிட்டால் விடட்டும் நமக்கென்னவென்று உமக்குள்ள பக்தியின் பிரதாபத்தால் சட்டைசெய்யாமல் சயனித்துக்கொண்டீர் தள்ளாமையர்ன உமது தாய்தந்தையும் நமது கான்முளையும் அக்கினியால் திக்குமுக்கிட்டு இறந்துபோவதாற் பாபஞ்சம்பவிக்காதோ இப்படிசெய்வது நீதியோ வென்றுரைத்துத் தனது மாமன் மாமியாரையும் எழுப்பிநடந்த விருத்தாந்தங்களனைத்தையும் புகன்று பாலனை எடுத்துக்கொண்டு பந்தலைவிட்டு வெளிப்படுங்களென்றுரைத்தாள். அதற்கு குணபாயும் தாம்

சேட்டியும் பயந்து நாமதேவரைநோக்கி அப்பா நாமதேவா இதுவென்ன விபரீதம் நேரிட்டது வாயலில்லாமல் கட்டும் போது நீயேன் பார்த்திருந்தாய் சீக்கிரம் வழிசெய்து நாமிப் பந்தலிலிருந்து வெளிப்பட்டுப் போவோம் வாருமப்பாவென் றிறுக்கிக் கட்டியிருக்கும் தட்டிகளிலொன்றை அவிழ்க்க ஆரம்பித்தார்.

அது அவிழ்க்கப் பலமாயிருந்ததல்லாமல் வெளிப்படுவதற்கு வழியுண்டாகாமற் போச்சுது அதனால் தாய்தந்தை மிகவுங் கிலேசமுற்றுத் தங்களாலானமட்டும் கரங்களாலவிழ்த்தும் பற்களாற் கடித்தும் முழங்கைகளாலிடித்தும் காலாலுதைத்தும் தலையால் மோதியும் மார்க்கமுண்டாகாமையா லினி வன்னிக் கிரையாவோமென்று தீர்க்கமாயோசித்துக் கூகூவென்று கூச்சலிடத் தொடங்கினார்கள். அப்போது நாலாஞ் சாம ராத்திரியாதலால் பலரும் விழித்தெழுந்துவந்து என்ன சங்கதியென்று கேட்டு ஓர் பக்கத்திலுள்ள தட்டியை யவிழ்த்து நாங்களெல்லோரு மிருக்க நெருப்பிடுகிறவ னெவன் பயப்படாம லிருங்கள் நாங்கள் சூரியோதயமாகும் பரியந்தம் இருக்கிறோ மென்றுரைத்தும் பற்பல வார்த்தைகளாடத் தொடங்கினார்கள். நாமதேவர் சள்ளை யொழிந்ததென்று வெளிப்பட்டுச் சந்திரபாகா நதிக்குப்போய் ஸ்நானஞ்செய்து பண்டரிநாதன் சன்னிதானத்துக் கெழுந்தருளிப் பாண்டுரங்கனைப் பற்பல விதங்களாகத் துதித்து இராத்திரியெல்லாம் அனந்தல் செய்யாமையால் அயர்ந்து ஓர் சார்பிற் சயனித்துக்கொண்டு நித்திரைசெய்தார். இங்கே சூரியோதயமாவதற்கோர் நாழிகையிருக்கையில் சகலரும் இனி யாரும் வரமாட்டார்கள் நெருப்பை யிடமாட்டார்கள் துன்பந் தரமாட்டார்கள் என்றுரைத்து ஸ்நானஞ்செய்யச் சென்றார்கள். அப்போது குணபாயும் தாம்சேட்டியும் வெளிப்பட்டு பந்தல் கட்டியிருக்கும் ஒழுங்கைப்பார்த் ததிசயித்து உள்ளேபோய் பார்க்கையில் ஒருகாலும் நாரும் அடியிலிருக்கும் புல்லும் பொன்மயமா யிருக்கக்கண்டு இது பகவானுடைய திருக்கூத்தென்று தீர்மானித்து ஓர் துண்டு புல்லைக்கொண்டுபோய் விக்கிரயஞ்செய்து ஓர் வீட்டை வாடகைக்குப்பேசி அதிலிவைகளையெல்லாங் கொண்டுபோய் மறைத்துத் தானிய வர்க்கங்களை வாங்கி நிறைத்துப் பலவித பலகாரங்களுடன் அன்ன

மும் சமைத்துத் தாம்சேட்டி நைவேத்திய மேந்திக்கொண்டு போய் நாமதேவை விளித்துச் சீக்கிரம் பகவானுக்குப் பூசை செய்து அன்னமூட்டி வீட்டுக்கு வாருமப்பாவென்றுரைத்து வீட்டிற்போய்ப் பொன்னையெல்லாம் துண்டுகளாக்கிக்கொண்டிருந்தார்.

நாமதேவர் அனேக பதார்த்தங்களுடனிருக்கும் நைவேத்தியத்தை பார்த்தாச்சரியங்கொண்டு இன்றைக்கு வெகு ஜம்பமா யிருக்கிறதெனவிண்டு, பண்டரிநாதனிடம் போய் புஷ்பங்களை யணிந்து அன்புடன் பணிந்து ஓ ஸ்வாமி! மகாவுன்னிதமான பலகாரங்கள் வந்திருக்கின்றன உட்கொள்ளுமையா வென்று தோத்திரஞ் செய்தார். பகவான் பிரசன்னமாய் அப்பா நாமதேவா! இராத்திரி கூலியாளனாய் வந்து பந்தலைக் கட்டினதற்குக் கூலிகொண்டு வந்தாயாவென்று கேட்க, நாமதேவர் ஓ பகவானே! பகவானே! உமக்குக் கூலிகொடுக்கும் எஜமான் நானாக யென்னையாக்கி விட்டீரோ? அசங்கிதமான குழந்தையையுந் தொட்டீரோ? கூலியாளனாகவும் புறப்பட்டீரோ? பந்தலைக்கட்டவு முட்பட்டீரோ? எங்களுக்கிருந்த தரித்திரத்தைக் கெடுத்தீரோ, அளவற்ற வின்பைக் கொடுத்தீரோ, பகவானென்கிற பெருமையை விடுத்தீரோ? கூளங் குப்பையும் வாரி யெடுத்தீரோ? இவ்வளவு கஷ்டமெடுத்துக் கொள்ளலாமோ? கூலியாளனென்றும் விள்ளலாமோ? பலதரம் கூலி கொடுமென்று நீர் கேட்கலாமோ, நானில்லை யென்றுஞ் சொல்லலாமோ வென்கிற பற்பல வாக்கியங்கள் பகர்ந்துக்கொண்டே அன்னத்தை யூட்ட பகவான் சந்தோஷத்துடன் புசித்து, ஓ நாமதேவா! பிறந்த மைந்தனுக்கு விஷ்ணு தாஸனென்று நாமதேய மிடுமென்றறைந்து மாயமாய் மறைந்தார். நாமதேவர் நைவேத்தியத் தட்டுடன் பாகுகை வீட்டை யடைந்து வீடெல்லாம் பொன் துண்டுகள் நிறைந்திருக்கக் கண்டு ஆனந்தங்கொண்டு மைந்தனை வாரியெடுத்து மார்புடனணைத்துப் பந்துவர்க்கங்களைக் கூப்பிட்டுச் சந்தோஷமாக விருந்திட்டுப் பண்டரிநாதனுரைத்த வண்ணம் விஷ்ணுதாஸனென்று பேரிட்டு நாளொன்றுக்கு ஆயிரம் இரண்டாயிரம் பேர்களுக்கு அன்னதானம் வஸ்திரதானம் கோதானமுஞ் செய்யத் தொடங்கினர். அதனால் குனபாயும் தாம்ஸேட்டியும் வேஷ்டையுற்று இருக்குந்

திரவியத்தை யெல்லாம் ஒருநாளுக்குள் தானஞ்செய்துவிட்டால் அடிக்கடி திரவிய மெங்கிருந்து கிடைக்கும் பந்தலுக்கோர் காலும் புல்லும் அகப்படாமல் எத்தனை நாள் வாதையும் மனவேதையும் பொருந்தி மிகவும் வருந்தி யிருந்தோம் அதை இப்போது நினைக்கத் தேவையில்லையா! நமக்கு பகவான் எத்தனை தரந்தான் பாக்கியமளிப்பார்! உனக்குத் தெரியாதது நாங்களென்ன சொல்லப் போகிறோமென் றுரைத்துத் தானஞ் செய்ததுபோக மிகுதியான பொன்னை வேறிடத்தில் புதைத்து வைக்கவேண்டுமென்று வாதாடத் தொடங்கினார்கள். நாமதேவர் தந்தையை நோக்கிப் புண்ணியத்தால் வரும் பலனைச் சொல்லத் தொடங்கினார்.

விருத்தம்.

இல்லையென்றுகேட்குமவனிந்தவுலகதிலீனனிவனிலீனன்
இல்லையென்றுரைக்குமவனிசைபெறநன்மனதோடுமீகுவோனை
விலகச்செய்பவனவரிலிழிவீனனீவனென்றிறைந்துபின்னர்
அலைவித்துமீதலிலன்மிகவீனனன்னவரேநரகிலாழ்வார். 1

அரசாட்சியீந்துமரசிற்குரியவன்பானசுதனையீந்து
சரசத்தையீயுமனைதனையீந்துஞ்சாயுச்சியபதவிசேர்ந்தோர்
பிரமபதமடையவெனுமனப்பொரியோரென்றுமிகப்பேரேயுற்றும்
திரணமுமேயீயநெஞ்சமுறாச்சிறியோர்நரகமெனுந்தீயேசேர்ந்தார். 2

முதுகென்பளித்தமுடலைத்தராசிலுயிரோடளித்துமுநியோர்
சதுர்வேதனாதிமிகுதேவர்போற்றுசாயுச்சியம்பெற்றனர்
முதுமெய்த்தவத்தினால்வந்தசெல்வமதில்வாஞ்சைவைத்துமூகர்
அதிதிக்குத்தூசுகாசுங்கொடாமலமிழ்வார்கணிருநரகிலே. 3

உலோபத்தைவென்றுமோகத்தையீந்துமொளிபெற்றனன்மாபலி
உலோபத்தினாலேகுருடராயிவ்வுலகிலொளியற்றனன்சுக்கிரன்
உலோபத்தினாலேசாபங்கொடுப்பருறுவார்கள்சாபம்பெற
உலோபத்தினாலேதுயராதலாலவ்வுலோபம்பொலாதையனே. 4

தருமந்தவத்தினிலுமேலதாகும்சாயுச்சியபதமளிக்கும்
தருமம்பலர்க்குமுபகாரமாகுமிகுசங்கடங்கடீர்க்கும்
தருமஞ்செயாதவுடலப்பிரேதமல்லாதுதகமையுளதோ
தருமம்வினாசற்கருமஞ்சகத்தினுளதோமென்னருடந்தையே. 5

தருமஞ்செயாதபேரேகரங்களில்லாமலவதரிப்போர்
தருமம்மனேகஜனனங்களுக்குத்துணையாகிவந்திடுவதாம்
பொருணடுங்கரமும்பெண்டுபிள்ளையுயிர்போகதுணையாகுமோ
அருள்செய்யுமென்னையேவென்றறைந்துமன்பாகவேதுதித்தே. 6

சரணத்தி னிற்பணிந் தெந்தாயுனக்குத் தமியேனுரைத்த றகுமோ
புராணத்தையியும் புண்யத்தை யீட்டல் புனிதற்குகந்ததன்றி
தருணத்தி லுதவுந் தருமத்தி னியலேச் சாற்றைத் தவிர்ப்பையுன் றன்
ஸ்மரணத்தை யென்று நாமதேவனிந்த வணமேயுரைக்கலுற்றான். 7

வேறு.

தருமஞ்செய்தோர்க் கிடரில்லை தருமஞ்செய்தோர்க் கழிவில்லை
தருமஞ்செய்தால் வறுமையில்லை தருமஞ்செய்தாற் பிணியுமில்லை
தருமஞ்செய்வோ ரைசுவரியந் தாழாதோங்குஞ் சமனணுகின்
தருமமெதிர்த்துச் சமர்புரிந்து ஜயம்பெற்றுயிரைக் காத்திடுமே. 8
தருமந்தலேகாத் திடுமென்றே சார்ந்தருரைப்பர் கர்னன் மிகத்
தருமஞ்செய்த காரணத்தாற் சமரிற்கொடிய வம்புகளேத்
தருமந்தடுத்த தல்லாமற் சாகாவரமு மளித்ததனல்
தருமங்கவர்ந்து தனதரிய சேவையளித்தான் ஜெகதீசன். 9

வேறு.

தருமஞ்செய்யாமற்பொல்லாச் சண்டாளலோபத்தாலே
தருமற்றுரியோதனன் றுழ்வுவநிறைபஞ்சேர்ந்தான்
தரணியையிழந்தபோதுஞ் சங்கடமடைந்தபோதும்
தருமமேஜெயமென்றெண்ணித் தருமரிவ்வுலகையாண்டார். 10
உயிர்த்துணையான தம்பியர்நால்வ ருயிர்க்குயிராகியமனேயாள்
உயிரிழந்ததையுமொருவனுரைதையு முத்தமப்பதியனுகாதும்
தைரியஞ்சொல்லுதற்கியாருமில்லாதுஞ் சகலமுநினைந்துசெல்போதில்
பயந்தருநதியைக்கண்டதைத்தாண்டப் பலன்சற்றுமின்றியங்கிருந்தான்.
அங்கொருநாய்வந்தக்கரைபோக வங்குமிங்கலேவதையறிந்தே
அங்கையாலெடுத்தம்புயத்தினில் வைத்தவாற்றினிலிறங்கிடப்புனல்மேற்
பொங்குகருமட்டுறவிடருற்றப்புண்ணியன் சுணங்கனேத்தலைமேல்
சங்கையில்லாமற்றூங்கிச்செல்போதிற் சாரவேயன்றணுப்புழுக்கள். 12
கண்ணில்வாய்செவி மூக்கிலும்புகுந்திடக் கனமுளவுதிட்டிரனென்றும்
எண்ணிடாததனே விட்டிடாதன்னன்ன திக்கரையேறியன்னுயைப்
புண்ணியன்விடுத்தான்பெரும்புகழடைந்தானெந்தையேபுண்ணியஞ்செய்த
ற்,கெண்ணுவனெவனேவவன்புகழென்னுளிசைத்திடற்கெளிதலவென்றான்
தேவரைக்கார்க்கவல்லோவனங்கன் தேவன்மேற்கணேதொடுத்தழிந்தான்
தேவரைக்காக்கவல்லோகடுவைச் சிவன்புசிதிரங்கினன்முன்னாள்
மூவரும்போற்றுமகத்தியர்க்கன்ன மளித்திடாதண்டர்மாமுனிவர்
மூவருஞ்சுந்தாருகாவனத்துமுனிவர்களுயிரிழந்தாரே. 14

என்று தருமத்தின் மேன்மையைப் பலவிதங்களா யுரைத்து மாதா பிதாக்களின் மனதைக் கரைத்து இருந்த பொன்னேயெல்லாம் அருந்தவர்க்களித்து மிகவுங் களித்துப் பண்

டரிநாதன் கோயிலே சொந்தவீடாக வெண்ணிப் பண்போடு பஜனைப்பண்ணி இன்புற்றிருந்தார். கேட்டீர்களோ சித்தர்களேயென்று நாபாஜிசித்தர் சொல்லத் தொடங்கினர்.

பகவான் கூலியாளனாய் வந்த அத்தியாயம் முற்றிற்று.

ஆருவது அத்தியாயம்

நாமதேவர் தநயனுக்கு மயிர்வாங்கிக் காதுகுத்தும்போது பகவான் வரிசை கொண்டுவந்தது.

வாருங்கள் சித்தர்களே மிகவும் பரிசுத்தர்களே இவ்விதமாகப் பொன்னை யெல்லாம் அன்னதானம் முதலியவைகளிற் சிலவழித்து லோபிகளைப் பழித்துப் பாண்டுரங்கன் திவ்விய சன்னிதானத்துக்கு நாமதேவர் போனபின் குனபாயும் தாம் பின் குனபாயும் தாம் வேஸட்டியும் ஐயையோ நாமதேவர் அறியாமல் ஒருபுல்லையாவது ஒளித்து வைக்காமற் போனேமே முன்போலவே வறுமைக் குள்ளானேமே யென்று மன வேதையுற்றுச் சிலநாள் வாங்கி வைத்திருந்த தவசங்களாற் காலங் கழித்துப் பின்பு தாரித்திரமடைந்து தையல் வேலையால் ஜீவனஞ்செய்யத் தொடங்கினர்கள். அப்போது ராஜாபாயின் தந்தையாகிய லட்சாதிபதி தன் மகள் மகனைப்பெற்றதும் குழந்தை பிறந்ததே அளவற்ற திரவிய மகப்பட்டதும் நாமதேவன் ஒருநாளிலே அதிதிகட் களித்ததும் கேள்விப்பட்டுத் தாம்வேஸட்டி யிருக்குமிடத்தை யடைந்து பட்சமான வார்த்தைகளாடி அவருத்தரவால் தன் மகளை யழைத்துகொண்டு தன்னரண்மனையிற் சென்று குழந்தையை அன்புடன் வளர்த்து (11) மாசமானதே மயிர்வாங்கி காதுகுத்தவேண்டுமென்றெண்ணி வோர் வேவுகாரனை நோக்கி நீ தாம்வேஸட்டியினிடம்போய் நாளையத்தினம் குழந்தைக்கு காதுகுத்துஞ் சடங்காதலால் நீங்களனைவோரு மதிகாலையி லிங்குவரவேண்டுமென் றுரைத்து வாவென்றனுப்ப வேவுகாரன் தாம்வேஸட்டியி னிடம்போய் எஜமானுரைத்த வண்ணம் பகர அதுகேட்ட தாம்வேஸட்டியும் குனபாயும் அப்படியே யாக

ட்டுமென் றறைந்தனுப்பியபின் நாளை நாம் போகும்போது தகுந்த வரிசைகளுடன் போகாமல் வெறுமையாய்ப்போனல் பலருக்கும் நகைக் கிடமாவதன்றிச் சம்பந்தியும் ஏளனஞ் செய்வானே அப்படி செய்யாமல் இவ்விடத்திற்கு ராஜாபாயும் குழந்தையு மழைப்பித்துக்கொண்டு சகல பந்துக்களையும் வரவழைத்துச் சம்பிரமத்துடன் நாமே செய்யலாமென்றால் ஒருகாசு மில்லையே ஓ தாரித்திரந் தொல்லையேயென்று மிகவுஞ் சிந்தாக்கிரந்தர்களா யிருக்குந்தறுவாயில் இதை யறிந்த பாண்டுரங்கன் ஒரு சவ்காரைப்போல் வேஷந் தரித்துக்கொண்டு வேவுகாரருடன் தாம்வேலட்டியினிடம்போய் க்ஷேம வார்த்தைகள் பேசியபின் நாளையத்தின மூமதுபோனுக்குக் காதுகுத்துஞ் சடங்கு செய்கிறார்களாமே நீரென்ன ஒருவஸ்துவும் வாங்காமல் வறுமையுற்றவர்போல வாடியிருக்கின்றீர் உங்களுடைய சகாயத்தால் லட்சாதிபதியா யிருக்கும் என்பால் வேண்டிய திரவியம் கடனாய் வாங்கிக்கொண்டு காரியத்தை நிறைவேற்றும் வாங்கிக்கொண்ட திரவியங்கொடுக்க நேரிடுமென்கிற அச்சம் வேண்டாம் பதினாயிரம் வராகன் உமக்கிப்போதேகொடுக்கிறேன் அதை எனக்கு நீங்கள்கொடுக்கவேண்டாம் அக்கரையோடிவ்வளவு திரவியமுங்களுக்கு நான் கொடுக்குங் காரணம் ஏனென்றால் சில வருஷங்களுக்குமுன் வணிகனயிருந்தும் சாதுவேஷந் தரித்துக் கொண்டுவந்து நாமதேவிடம் இருபதினாயிரம் வராகன் வரையில் தர்மார்த்தமாய் வாங்கிக்கொண்டேன் அதனாலேயே லட்சாதிபதியானேன் உபகாரஞ் செய்தவர்களுக்குடனே உபகாரஞ் செய்ய வேண்டுமென்கிறபடி சகாயஞ்செய்ய வந்தேன் என்கிற பற்பல மொழிகள் பகர்ந்து வேவுகாரரை விளித்து இக்கணம் நமது வீட்டுக்குப்போய் பதினாயிரம் வராகன் கொண்டுவந்திவருக்குங் கொடுங்களென் றுரைத்தனுப்பி தானும் புறப்பட்டு மாயமாய் மறைந்து மாயா சேவகரிடம் பதினாயிரம் வராகனையனுப்பி, நாமதேவைச் சோதிக்கவெண்ணி, சன்னிதானத்திலிருக்கு நாமதேவை யழைத்து, அப்பா நாமதேவ்! நாளையதினம் உனது மைந்தனுக்கு மயிர் வாங்கி காதுகுத்த வேண்டுமாம்.

அதற்குத் திரவியமில்லாமல் உன் தாய்தந்தை சிந்தைநைந்திருக்கிறார்கள். நீ சீக்கிரம்போய் அவர்களுக்குற்ற வியா

குலத்தை நீக்கி வாருமப்பா வென்றனுப்ப, நாமதேவர் மகா பாக்கியமென்று வீட்டையடைந்து தந்தை தாயைப்பணிந்து வியாகுலத்தோடிருக்குங் காரணமேனென்று கேட்கத் தாம் ஷேட்டி அப்பா நாமதேவா! நாளைக்குனது மைந்தனுக்குக் காது குத்துவதால் அதற்கு ஏதேனும் வரிசைகொண்டுபோவ தற்கு ஓர் காசுமில்லை வெறுங்கையோடு போவதற்குஞ் சமா தானமில்லை இது உன்னால்வந்த தொல்லை நீ சமுசாரத்துக் குகந்தவனல்லை யென்றுரைக்குந் தருணத்தில் பகவானனுப் பிய பரமபாகவதராகிய இரண்டு வேவுகாரர் தாம்ஷேட்டி யின் முன்வந்து பதினாயிரம் வராகன் சரியா யிருக்கின்றதா எண்ணிக்கொள்ளு மென்றறைந்து இரண்டு மூட்டைகளை யவிழ்த்து வைத்து ஓர் பக்கத்தி லுட்கார்ந்தார்கள். நாம தேவ் தந்தையை நோக்கி, ஓ என் தந்தையே! இந்தத் திரவி யம் யாரனுப்பினர்களென்று கேட்டார் தாம்ஷேட்டி சொல் வதற்கிடைந்து மௌன முற்றிருந்தார். அப்போது திரவி யங் கொண்டுவந்த வேவுகாரர் எங்கள் சவ்கார் சாதுவேஷந் தரித்து தங்களிடம்வந்து சில நாட்களுக்கு முன் இருபதி னாயிரம் பொன் தானம் வாங்கிக்கொண்டு இதனால் லட்சாதி பதியானார். அவர் தற்காலத்தில் நீங்கள் வருமையுற்றிருப் பது தெரிந்த வித்தருணத்தி லிவ்வளவு திரவிய முதவி செய் தார். உத்தமர்க் குதவினால் இப்படியே சகாயஞ் செய்வார்க ளென்றறைந்தார்கள். அவ்வசனத்தைக்கேட்ட நாமதேவர் கர ங்களாலிருசெவிகளையுமூடிகொண்டு அரிகரியென்ன பாவத்து க்குட்பட்டேன் தானஞ்செய்வதை பின்னும் வாங்குவதுமுண் டோ? வாங்குவோர் பரமபதமடைவதுண்டா? ஓவேவுகாரரே! இக்கணம் இத்திரவியத்தைக் கொண்டுபோய் உமது சவ்காரு க்குக் கொடுங்கள் தடுத்துப் பேசுவதை விடுங்களென் றறைந் தார். அதற்குத் தாம்சேட்டி நாமதேவை நோக்கி, அப்பா நாமதேவா! உபகாரஞ்செய்த உனக்கு உதவிசெய்த சவ்கார் மனமுறியத் திரவியத்தை அனுப்பக்கூடுமா? இது நமக்கு யோக்கியமாவென்று புகன்றார். அதற்கு நாமதேவர் பிதா வைவணங்கி, ஓ என் தாதையே! தானஞ்செய்ததை இச்சித் தால் அருநரகடைவதற்கேதுவாகும். இதுதெரிய உதாரண சரித்திர மேதென்றால், ராவணாதிகளைச் சம்மாரஞ்செய்த ஸ்ரீ ராமர் லங்கையின் முகவாயிலையடைந்து அங்கிருக்கும் ஓர்

விலையுயர்ந்த கல்லைப்பார்த்து இதை அயோத்திக்குக் கொண்டுபோக வேண்டுமென் றிசைத்ததை ஜாம்புவந்தர் கேட்டுக் காகுத்தனைப் பணிந்து, ஓ பகவானே! திரிபுரசம்மார மாகும் போதும், திருப்பாற்கடல் கடையும்போதும் தட்சகன்சிவனை நோக்கி யாகஞ்செய்தபோதும், பார்வதி இமோர்ப் பர்வதராஜனுக்கு மகளாய்ப் பிறந்து பரமசிவனைக் கலியாணஞ்செய்த போதும், இரணியன் இரணியாட்சன் சோமுகாசூரன் முதலானவர்களை நீ வென்றபோதும், பிர்மா ஐந்து சிரங்களுடனிருந்தபோதும், காமனை யெரித்தபோதும், காலனையுதைத்தபோதும், சிவசுப்பிரமணியர் பிறந்தபோதும், ஐங்கரனும் சங்கரனும் யுத்தஞ் செய்தபோதும், பத்மாசுரனுக்குப் பயந்தோடும் பரமசிவனை நீர் காத்தபோதும் நானிருந்தே னது காலந்தொடங்கி இதுகாலபரியந்தம் ஒருவருக்குக்கொடுத்தது அமிர்தத்துக் கிணையானதாலும் பின்னும் இச்சித்த ராஜர்களைப் பார்த்ததேயில்லை இன்றும்மை தான் பார்த்தேனென்றுரைத்து லங்கைக்குள் போகாமற் றடுத்துவிட்டார். அவ்வசனத்தைக்கேட்ட ஸ்ரீ ராமர் ஓரடியும் பெயர்த்து வைக்காமல் நின்றுவிட்டார். ஆதலால் கொடுத்தவஸ்துவை வாங்குவது நரகத்துக் கேதுவாகு மல்லாமல் ரகுராஜன் கொடுத்த வஸ்துவை வாங்குவது கூடாதென்றோர் மறையோனல் வெகு துன்புற்றிறுதியில் மேன்மையை யடைந்தா னச்சரித்திரத்தைக்கேளுமென்று சொல்லத் தொடங்கினர்.

விருத்தம்.

வீரியந்தனிகல்விண்டுவைசெயித்தோன் மேன்மையிலரன் றனைச்செயித்தோ
ன், ஆரியபக்தியினின்மிகநிறைந்தோனன்ன தானம்மிகச்செய்வோன்
பாருயிரிடர்கடனதெனனினைப்போன் பரிதிபோலனைவரைப்பார்ப்போன்
சூரியவம்சந்தனிலவதரித்தோன்சுகுணமாம்ரகுவெனும்பெயரோன். 1

ஒருகுடைநிழற்கீழுலகெலாம்புறப்போனுத்தமவயோத்தியையாள்வோன்
ஒருதினம்வழுவாதறமிகச்செய்வோனுயர்மனைவியர்முப்பதுடையோன்
ஒருதினமறையோர்மறையவர்வறுமையுற்றவர்தமையதுவிளிப்பித் [ன்
தொருபொருளவையாதனைத்தையுமீந்தோனுதவுகோவணத்துடனிருந்தா

இருக்கின்றபோழ்தோர்மறையவன்வந்தானேதுவேண்டுமெனவறைய
னுருக்கமாவினவலட்சமாணிக்கமுதவவேண்டுமெனநிருபன்
சுருக்குடனகர்சென்றுயர்தனதாரத்தோகையர்மாதுறும்பணிகள்
சுருக்குடன்வாங்கிலட்சமாணிக்கஞ்சுத்தசாத்விகத்துடனளித்தான். 3

அளித்தெனதைபாலின்னமேதேனுமாசையுண்டோவெனமறையோ
னளித்தநல்லரசேயினமொருபொருண்மேலாசையாகினனதைநீவி
ரளித்திடுவீரோவெனப்பதியெளியேனுவியைக்கேட்கினுந்தடையின்
றளித்திடுவேனென்றுரைக்கநின்மனைவிகளிலொருத்தியையளியென்றான்.

மன்னவன்மகிழ்ந்தம்மங்கையர்தம்மைமறையவன்முனமழைத்தெழிலா
ரின்னவர்தம்மிலியாவர்வேண்டிடுமெனவேலவார்குழலியர்மீது
அன்னவனுசித்தரசனையையாறரிவையரையுமுன்பெனவே
மன்னவனந்தமங்கையர்தம்மைமறையவர்க்களித்தின்பமடைந்தான். 5

முப்பதுபேரையின்றுமக்களித்தேன்முனிவனேயினமவர்யேதோ
செப்பனச்சுகத்திலிருந்தவித்தூயச்சேயிழையார்தமைக்காக்க
ஒப்பிலாநிதியைக்கொடுமெனமன்னனுளமகிழ்ந்தையனேயின்றே [ன்.
டெப்பொருள்களுமிவ்வுலகினைத்தாங்குமெழிற்குடையையுமுமக்களித்தே

இனியிந்தவுலகமனைத்தையும்புலந்திங்கிருவெனப்பணிந்தடவியிற்போய்த்
தனியனுப்பகவான்றனைப்பணிந்தேத்திச்சலனமற்றிருந்தனன்மறையோ
னினிதுடனுலகம்யாவையுமாண்டிங்கிருந்தனன்சிலதுநாளோர்நாள்
முனிவரின்மிகுந்தநாரதமுனிவன்மோகமிலயோத்தியையடைந்தான். 7

வந்தயோத்தியையாளிரகுவின்வளப்பமகிழ்வுடன்கேட்டதிசயித்தவ்
வந்தணன்மீதுமிகமுனிந்துரையனனுகிடுங்கானடைந்தனபா
யுந்தநல்லறத்தின்மாட்சியென்னொருவனுனுறைத்திடற்கெளிதாமோ
பந்தமில்லாதோயென்றவன்கரத்தோர்பழங்கொடுத்தஃதினைப்பகர்வான், 8

இக்கனிபுசிப்போனுகமிவ்வுலகத்தெதன்றுமுற்றிடுமெனவறையன்
பக்குவப்பழமீநாரதமுனியின்பதம்பணிந்திடமுனியரசே
இக்கனிபுசித்திங்கிருவெனவகலவெழிறவமிகுத்தவன்னிருபன்
இக்கனியுண்டியானென்பெறக்காமித்தெழின்மறையவன்றனக்களித்தால்.

இக்கனிபுசித்திவ்வுலகினைப்புரந்திந்திரவிவாழளவுமிங்கிருப்பான்
பக்குவமிதுவென்றந்தணன்பாற்போய்ப்பதத்தினிற்குணந்தனையுரைத்தே
இக்கனிபுசிப்பாயெனமறையோனென்னன்பனேமாரணமின்றி
இக்குவலயத்தினியானுறுமளவில்வேலவார்குழலிருமிருக்க. 10

முப்பதுபலங்கனெப்படியேனுமோசநீசெய்திடாதளிப்பா
யொப்பிலாவரசேயெனப்பதிமறையோனுபயநல்லடிகளைத்தொழுதென்
அப்பனேயோர்மண்டலங்கெடுவளித்தாலட்டியில்லாமனற்கனிகள்
முப்பதுங்கொடுப்பேனெனப்பணிந்தடவிதனிற்சென்றுமோகமிலரசன்.

மண்டலமாயின்மொழிதப்புமென்பான்மறையவன்முனிவனென்றயர்வா
னண்டர்களைத்துமத்தனேயென்பாலபயமென்றலறிவீழ்ந்தழுவான்
தொண்டனுக்குற்றதுரிசினையகற்றுந்தூய்மையாரில்லையோவென்பான்
எண்டிசைபோற்றுநாரதமுனிவனென்றன்பாலருளுடன்வந்தே. 12

கொடுத்தநற்குறையாலடுத்தவிக்குறையைக்கூறுவதெவர்கள்பாலன் பான்
சடத்தினைவிடுத்தனடுத்தரமென்பான் சடத்தினைவிடுத்தினியடுத்த
சடத்தினிற்கொடுக்கலாமெனச்சொல்வான்சடத்தினைவிடுவினிச்சடமே
கிடைத்திடலரிதென்றடிக்கரிநினைப்பான் கிலேசமுற்றயர்ந்துமூர்ச்சிப்பான்.

இவ்விதத்துன்பத்திருக்குமன்னவன்பாலெழிலருணாதரடைந்து
திவ்வியவரசேயென்றுயரென்னத்திருவடிகளிற்பணிந்தேத்தி
அவ்வியநீத்தேதாய்நீமுனமெனக்கோரருங்கனியளித்ததுபோலத்
திவ்வியக்கனிகள்முப்பதுந்தந்தென்றீவினையகற்றெனமுனிவன். 14

உம்பர்வாழ்சொர்க்கத்தொப்பிலாச்சோலையொன்றுளதங்குநீவந்தா
லம்புவியில்லாக்கனியதுகிடைக்குமென்றந்தவனந்தனிற்கொடுபோ
யும்பர்களருந்தும்பலங்களையளித்திவ்வுலகினில்விடுத்தவக்கணமே
அம்புயவரையனேயாத்திரைவடைந்தவ்வந்தணன்பதம்பணிந்தேத்தி. 15

அந்தணற்கையாறருங்கனியளிக்கவயன்முகத்தோன்மகிழ்ந்தரசே
இந்தநற்பலங்களிருப்பிடம்பெண்களோடெனைக்கொண்டுபோமென்ன [புற்
செந்தணல்மெழுகாயறையன்மூச்செறிந் தென்செய்குவனிதற்கெனத்துன்
றந்தணன்பதத்தில்வந்தனஞ்செய்தென்னையனேகேளெனச்சொல்வான்.

இந்தநற்கனிகளிருப்பதண்டர்பாலித்தெரிவையர்களோடுனையும்
அந்தச்சொர்க்கத்துக்கறிவிலேனெங்ஙனறிவிப்பேனெனச்சினமாகி
அந்தணனுரைப்பானரும்பலமிருக்குமண்டத்திற்கொண்டுபோகாயேல்
உந்தனமாதரோடுலகினையுமுந்தனுக்களித்தியான்காணில். 17

செல்லுவனெனவவ்வந்தணன்றுளிற்றெண்டனிட்டையனேகானில்
செல்லுதலபூகோசிலதினந்தனிலத்தேவலோகந்தனையடைய
வல்லநற்றவத்தைச்செய்துமைவானில்வளப்பமாவைப்பனென்றுறுதி
சொல்லியவ்வரசனடவியிற்றனித்துத்தூயமாதவங்களைச்செய்தே. 18

அந்தணன்றனையுமரிவையர்தமையுமண்டர்வாழுலகினைச்சேர்ந்தவ்
வந்தணற்குற்றசாறநீங்கிடவிவ்வகிலத்தைப்புரந்திடவிசைந்தா
னெந்தமையீன்றோய்விச்சுவாமித்திரர்க்கிவ்வண்மேயனைத்தினையுந்
தந்தானுரைத்துமளித்ததைப்பெறச்சங்கடமடைந்தனனரிச்சந்த்ரன். 19

என்று பல நீதிவாக்கியங்களைப் புகன்று வேவுகாரரைப் பதினாயிரம் வராகனையுங் கொண்டுபோகும்படியா யுரைத்துத் தந்தையின் மனதைக் கரைத்து இன்னம் பற்பல நீதிகளை யோதி இந்த அண்ட பிண்ட பிர்மாண்டங்களையெல்லாங் காக்கும் பரந்தாமன் நமது பங்கிலிருக்க நமக்கோர் குறையுண்டாகுமோ தேவரீர் பாண்டுரங்கன்மேல் பாரம்போட்டுச் சந்ததமும் கோவிந்தநாதனை வந்தனஞ் செய்துக்கொண்டிருக்கவேண்டுமல்லது சிந்தைநைந் திருக்கலாமோவென் றறைந்து

இரண்டாஞ்சாம ராத்திரியானதால் வீட்டிலே சயனித்துக் கொண்டு விஷ்ணு சங்கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டிருந் தார். நாமதேவர்பாடுங் கீர்த்தனைகளைத் தாம்ஷேட்டியும் குண பாயுங் கேட்டுச் சந்தோஷசாகரத்திற் படிந்தவர்களாகி வெகு நேரஞ் சென்றபின் அயர்ந்து நித்திரைசெய்தார்கள் நாம தேவருங் கண்வளர்ந்தார் இவர்களிப்படியிருக்கப் பதினாயிரம் வராகன் கொண்டுவந்த பரமபாகவத ரிருவரும் சன்னிதான த்தை யடைந்து பாண்டுரங்கனைப் பணிந்து நடந்த வர்த்த மானங்களைப்பகர்ந்து நாமதேவரை மிகவுந் துதிக்கத்தொட ங்கினார்கள். பகவான் சந்தோஷமடைந்து நாலாஞ்சாமத் தில் அநேகம் பரமபாகவதர்களும் தேவகன்னிகைகளும் பல பல வஸ்துக்களை யேந்திக்கொண்டு தன்னைச் சூழ்ந்துவரத் தாளமேளங்கள் தாம்தாமென்று முழங்க முனிவர்கள ந்தணர் களாசிகூறப் பகவான் நாமதேவர் வீட்டையடைந்து ஓ நாம தேவாவென்று கூப்பிட உடனே நாமதேவர் விழித்து வெளி யில் வந்துபார்க்கையில் சாட்சாத் ஸ்ரீமந்நாராயணனே சகல சம்ப்ரமங்களுடன் வந்து நிற்பதைக் கண்டு ஆனந்தங்கொ ண்டு பகவானைத் துதிக்கப் பகவான் நாமதேவனை யருகிலழை த்து உனக்குமாத்திர மென் நிஜரூபந்தோற்றும் மற்றவர்களு க்கெல்லாம் ஓர் வர்த்தகனைப்போல் காணப்படும். இதைக்குறி த்து நீ சங்கைகொள்ளாமல் சீக்கிரமாய் ஸ்நானஞ்செய்து ஆடையாபரணங்க ளணிந்துக்கொண்டு உனது மாதாபிதா வையும் அணிந்துக் கொள்ளச்செய்து என்னுடன் இந்தரத த்தின்மீதி லமர்ந்து உனது சம்பந்தியின் மனைக்குப்போ வோம் வாருமென்றறைந்து நாமதேவனன்றி மற்றவர்கட் கெல்லாம் ஓர் சவ்காரைப்போல் தோன்றித் தாம்ஷேட்டி குண பாயியையும் அழைத்துக்கொண்டு பண்டரபுரம் கிடுகிடென்று நடுநடுங்கத் தோற்கருவிகளைக் கொட்டச்செய்து துளைக்கருவி களை யூதச்செய்து கண்டோர் களிப்புறக் கன்னிகளை நடனம் புரியச்செய்து கேட்டோர் மதிமயங்கப் பதங்கள் பாடச்செ ய்து, எத்திசையிலும் பரிமளவாசனை பரவச்செய்து, இந்த வர்த்தகன் யாரென் றெண்ணுவோர்க்கெல்லாம் நானிருப் பது வைகுந்தபுரம் என்னுடைய நாமம் கேசவ சவ்காரென் றுரைத்துக்கொண்டே நாமதேவர் மாமனார் வீட்டையடை ந்து அங்குள்ளயாவரும் பிரமைகொள்ளும்படி ஆடையாபர

ணங்களளித்து அதிதிகட்கும் அற்தணர்க்கும் அளவற்றசொர்ண தானம் வஸ்திரதானம் கோதானங்கொடுத்து ராஜாபர்யிக்கும் அவளையீன்ருளுக்கும் குணபாயிக்கும் அநேக ஆடையாபரணங்களைப்பூட்டி நாமதேவர் மைந்தனுகிய விஷ்ணுதாசனுக்கு மயிர்வாங்கிக் காதுகுத்தி நவமணிகளழுத்திய அநேகாபரணங்களைச் சூட்டி சம்பந்தியின் வீடெல்லாம் தங்கமயமாக்கி அதிதிகட்கும் விருந்தாளிகட்கும் முப்பத்திரண்டுவகை பதார்த்தங்களுடன் அன்னம்படைத் துண்டபின் சகலருக்குஞ் சாந்து சவ்வாதுகளைப்பூசி பன்னீரைவீசிப் பூமாலைகளை புனைந்து களிக்கடலி லமிழச்செய்து சம்பந்திக்கு முத்துமாலை மோகனமாலையைப் பூட்டி ஓ லட்சாதிபதியே! நானுமது மருமகனுக்குப் பால்ய சினேகனுதலால் அவரைப் பார்க்கவந்து அவர் மைந்தனுக்கின்று காதுகுத்துஞ் சடங்கெனக் கேட்டுவந்து என்னுலான வரிசை கொண்டுவந்தேன். எனக்குண்டானமட்டுந் தந்தேன், நாமதேவர் மணத்துக்கே வரலாமென்றிருந்தேன், அப்போது கூடாமையாயிருந்ததா லிப்போதிங்கடைந்தேன், இனியெனக்கு விடைகொடுத் தனுப்புமென் றுத்தரவு பெற்றுக்கொண்டு அவனுல் செய்யப்பட்ட உபசரணையை யேற்றுக்கொண்டு தாம்ஸேட்டியும் நாமதேவரையும் நோக்கி, இனி நீங்கள் சவுக்கியமாகச் சந்தோஷமாயிருங்கள் நான் பண்டரிநாதனுடைய சந்நிதானத்துக்குப் போய் பாண்டுரங்கனைத் தரிசனஞ் செய்துக்கொண்டு வைகுந்தபுரத்திற்குப் போகிறேனென் றறைந்து விடைபெற்றுக்கொண்டு பட்டணத்துக்குள்ளிருந்து வெளிப்பட்டுச் சகலருடன் மாயமாய் மறைந்தார் பின்பு ராஜாபாயின்தந்தை களிசாகரத்திலமிழ்ந்தவனுய் தாம்ஸேட்டி நாமதேவர் முதலானவர்களுக்கும் மரியாதைசெய்து தன் வீட்டிலேயே வைத்துக்கொண்டிருந்தார் தாம்ஸேட்டி சிலநாள் சம்பந்தியின் வீட்டிலிருந்து பிறகு தன் வீட்டுக்குச் சகலருடன் சென்று ஆனந்தமாயிருந்தார். நாமதேவர் நாடோறும் பகவானுக்கு நைவேத்தியமூட்டி தானுமுண்டு வருங்காலத்தில் ஒருநாள் பகவான் நாமதேவர் எண்ணமறிந்திருந்தும் அறியாதவர்போல் அப்பா நாமதேவ் நானுனக்குப் பலதரம் சொர்னமளித்ததன்றிக் கூலியாளனுய் வந்து வேதையுடன் பந்தலைக்கட்டினேன் அதற்கிதுவரையில் கூலிகொடுக்காமற் போனதன்றிப் பதிலுபகார

மொன்றுஞ் செய்யாமலிருக்கின்ரு யுனக்கழகா யிருக்கின்ற தோயென்று கேட்டார் நாமதேவர் பகவானைப்பணிந்து ஓ என்னுண்டவனே! எல்லாமும்முடைய சொத்தாயிருக்க நானு மக்கெந்த வஸ்துவைக்கொடுப்பேன் அன்றி உம்மைவிட என்னையோ ரெஜமானுக்கிக் கூலிகேட்கத் தகுமோ? உமக்கட க்கமாயிருக்கு மென்னை வேருக்கி யுபகாரஞ்செய்யென்று கேட் கக்கூடுமோ? நீர்கேட்கும் விகட வினவுக்கு என்னுல் சமாதா னஞ் செய்யக்கூடுமோ? நீர்கேட்பதற்கு முன்னமே என்னு டல் பொருளாவியை உமக்கு தத்தஞ்செய்திருகக நீரென்னை வேறுபடுத்தலாமோ? நீர் பேதப்படுத்தினுலும் நான் பேதமா யிருப்பேனே? தேவரீரிவ்விதமொழி விள்ளலாமோ? என்னைத் தள்ளலாமோவென் றுருகும்போது பகவான் மந்தகாசம்புரி ந்து மார்புட னணைத்துக்கொண்டு ஐயா நாமதேவா! உன் னெண்ண மிப்படியா யிருக்கின்றது நானறிகிலே னென்று ரைத்தார் நாமதேவர் ஓ மாயாவிலாசனே! சுயம்பிரகாசனே! பாலினுள் வெண்ணைபோலவும், எள்ளினுள் எண்ணைபோல வும், எங்கும் பரிபூரணமாயிருக்கும் நீர் என்னெண்ணமாத்திர மறியமாட்டீரோ? உமது மனேபாவத்தை பிர்மருத்திராலு மறிந்துகொள்ளக் கூடாதென்ருல் என்னுலறிந்து கொள்ளக் கூடுமோ? ஓ பரந்தாமா! ரகுராமா! சகஸ்ரநாமா! நீலமேக ஸ்யாமா! பக்தவச்சலா! பாண்டுரங்காவென்று தோத்திரஞ் செய்யும்போது பகவான் நாமதேவுக்குப் பல ஆசிகள்கூறி நீ யானந்தமாயிருப்பாயாக வென்றறைந்து மறைந்து விக்கிர ரூபமாயிருந்தார் நாமதேவ் பண்டரிநாதன் கோயிலே சொந்த வீடாக இரவும்பகலு மிருந்துக்கொண்டு சந்தோஷமாய் நா ள் கழித்துக்கொண்டிருந்தார். கேட்டீர்களோ சித்தர்களோ யென்று நாபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லத்தொடங்கினர்.

பகவான் வரிசை கொண்டுவந்த அத்தியாயம்

முற்றிற்று.

பகவான் துணை.

ஸ்ரீ நாமதேவர் க்ஞானேஸ்வரனேடு யாத்திரைபோய் அக்பர் பாதுஷாவால் கொல்லப்பட்ட பசுவின் கன்றையெ

மூப்பினதும் மார்வாடி தேசத்தில் ஓர் நதிப் பிரவாகத்தை யுண்டாக்கினதும், நாகேஸ்வரர் கோயிலை மேற்கு முகமாகத் திருப்பினதும், ஆகாயத்திலிருந்து கொடிகள்வர நாகேஸ்வரர் கோயிலில் நாட்டியதும், யாத்திரைசெய்து பண்டரபுரத்தையடைய ஸ்ரீபாண்டுரங்கன் விருந்துசெய்ததும், விடோபாவினிடம் பிர்மோபதேசம் பெற்றுக்கொண்டதும், பாரிசபகவத்தாசனை ஆட்கொள்ள அவனிடமிருந்த பரிசவேதியை நதியிலெறிந்து அவன்செய்த பலவந்தத்தால் சந்திரபாகா நதியில்மூழ்கி அரசன் முதலானவர்களும் களிக்க அளவற்ற பரிசவேதிகளைக் கொடுத்ததும் முதலான அத்தியாயங்கள் பின்வரும் பக்தர்களின் சரித்திரங்கள் தொந்தார்த்தமாய் வரும் அதையங்கங்கே இரண்டாம் புஸ்தகத்திற் காணலாம். சுபம், அகிலாண்டகோடி பிர்மாண்ட நாயகனே! ஆதிமத்யாந்த ரகிதனே! தந்தையின் மடியில் வீற்றிருப்பதற்கு அபாக்கியனான துருவனுக்கு அழியாப் பதமளித்தது போலவே ஒரு சரித்திரமே செய்வதற்குத் திறமையில்லா பாத்திரனாகிய அடியேனுக்கு 700 சரித்திரங்களும் அடியேன் செய்யும்படியான வரமளிக்க உனது தாட்டாமரைகட்கும் உனது வட்சஸ்தலத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீதேவியின் கமலக் கழல்களுக்கும் உனது பக்தர்களின் பாதபதுமங்களுக்கு மனேக வந்தனம் செய்யும் தாசானுதாசனாகிய வேங்கடதாசனது மந்தமதியை எந்தவிதத்தினாலாவது திருத்தி உனது சொந்த பக்தர்களது விந்தையான சரித்திரங்களை முழுதும் முடித்தாட்கொள்வது உமதுபாரமாகும் ஸ்ரீமந்நாராயணரது திருவடிகளேசரணம்.

நாமதேவர் திருவருட் கழல்களே துணை.

விருத்தம்.

வித்தைதந்தபுத்திதந்து விக்கினங்கள்நீங்கும்
வேழமாமுகவனது விமலபதம்வாழ்க
பத்தரதுமனோரதத்துக் கனுகூலமாகும்
பகவான்றிருவடிகள் பல்லாண்டுவாழ்க
சத்துவத்தையளித்தடியார் ரிச்சைநிறைவேற்றும்
சங்கரன்றன்றூண்மலர்கள் சந்ததமும்வாழ்க
உத்தமர்கள்சரிதைதனை யுவப்புடனேசெய்ய
உதவியாயிருக்குமாறு முகனடிகள்வாழ்க.

நாமதேவர் சரித்திரம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமத் விட்டல தேவாய நம:

ஐந்தாவது

ஞானேசுவரர் சரித்திரம்.

பகவான் துதி.

தவமார்முனிவர்சுரரேத்துஞ் சடையோன்முகநாலுடையோனும்
தவமோங்கிதனைமறந்தோரும் சகநாதாவுன்மாயக்கூத்
தெவர்தானறிந்தார்நானறிய வெந்தாயகநாயகமேநான்
அவமாகாதாளச்சுதனே அடியேனுன்றனடைக்கலமே.

ஞானேசுவரர் துதி.

வேறு விருத்தம்.

மச்சகச்சபலராமவாமனநரசிங்க
உச்சிதபரசுராமவுயரிராகவகோவிந்தா
கொச்சகுண்டலனுமானசுவாமியோருருவாய்வந்த
சச்சிதானந்தஞானேசுவரன்சரண்டலைமேற்கொள்வாம்.

முதலாவது அத்தியாயம்

ஞானேசுவரர் தநயனாகிய விடோபா யாத்திரை போவது.

ஆத்மா மாத்திரமாயிருந்தும் அணிமா மகத்துவமீயும், மகிமா தன்னுக்கை கண்டிதமின்றிக் கண்டிப் புள்ளவற்றை யுருவ வல்லமையளிக்கும், கரிமா, இலகுத்துவங் கொடுக்கும், இலகிமா வேண்டுவனவ்ளிக்கும், பிராத்தி, நிறையுடனிருத்தும், பிரகாமியம் ஆட்சியுடனிருத்தும, ஈசத்துவம் எல்லாவற்றையுந் தன்வசமாக்கும், வசித்துவம் என்னும் அஷ்டசித்தியால் விசிஷ்டமடைந்திருக்கும், உத்தவசித்தர் முதலானவர்களும் சேவல் கூவுமுன்னெழுந்து சந்திரபாகா நதியில் ஸ்நானஞ்செய்து ஜபதபங்களை முடித்துக்கொண்டு விரிஞ்சாவதாரனை நாபாஜி சித்தரிடம்போய் அவரை வலம் வந்து பணிந்து, ஓ மாசிலாமணியே! குருசிகாமணியே! மும் மூர்த்திகளும் ஆதிசத்தியு மவதாரஞ் செய்த சரிதையை

நாங்கள் கேட்டு இன்படையத் தாங்க ளன்புடன் அனுக்கிரகம் புரியுமையா வென்று துதிக்கப் பீபாஜிசித்தரின் நேசராகிய நாபாஜிசித்தர் சந்தோஷ சித்தராய் உத்தவசித்தர் முதலானவர்களை நோக்கி, ஓ யோகீசுவரர்களே! பக்தர்கள் அல்லது ஜீவர் முக்தர்கள் திருவிளையாடல்களாகிய திவ்ய சரித்திரங்களை அன்புடன் சொல்பவர்களும், இன்புடன் கேட்பவர்களும், சீவகாருண்யம், சாந்தம், சம்பாவம், சற்சங்கம், உபரதி, சகுணத்தியானம், நிற்குணத்தியானம், பிரமக் ஞானம், அகண்டானந்த மோனமு மடைவதற்கு லேசில் சித்தி புத்திகளுஞ் சித்திக்கப்பெற்று முத்தி மார்க்கங்கற்றுத் தாட்சிகளற்று மாட்சிமையுற்றுப் பிர்மானந்த மடைவர்களாதலால் பக்த முக்தர் சரிதங்களுக் கிணையான பொருளொன்றுண்டென் றுரைத்தல் கூடாது எப்படியென்றால் இந்தப் பக்தவிஜயமானது அஞ்ஞான விருளை நீக்கி மெய்ஞ்ஞான தேஜஸைக் கொடுத்தலால் ஜகசாட்சிய னென்றும், சாந்தமென்னுஞ் சீதளத்தை நிறைத்துத் துவேஷமென்னும் அக்கினியைத் தணித்தலால் தண்சுடரென்றும், நிஷ்களங்கமான மனதைக் கொடுத்து அரிஷ்டவர்க்களைத் தடுத்தலால் ஆரியனென்றும், அறிவில்லாதவர்க்கு மெய்யறி வுண்டாக்கலால் இரணிய கர்ப்பனென்றும், பாபகர்மங்களில் விழாமற் றடுத்தளித்தலால் வனமாலி யென்றும், நானெனதென்னும் அகங்காரக் கிரந்தியை நாசஞ்செய்வதால் நிடலாட்சனென்றும், பகிர்முக விஷயாதி போகங்களி லமிழ்ந்து மயக்க முற்றிருக்கும் ஜீவனை அந்தர்முக பேரின்பானுபூதியிற் சொக்கியிருக்கும்படியாய்ச் செய்தலால் மயேஸனென்றும், கனவிலுஞ் சிற்றின்ப முன்னுது பேரின்பாமிர்த மூட்டுதலால் சதாசிவனென்றும், நான் நீ எம தும தென்னும் விகற்பத்தை நீத்து நிர்ச்சலனமா யிருத்துவதால் பரப்பிரம்ம மென்றும் சொல்லலாம். அன்றி யிந்த க்ஞானேசுவரர் சரித்திரத்தைச் சொல்பவர் கேட்பவர்க்குற்ற பாக்கியத்தி னளவையே என்னுலுரைக்கக் கூடியதல்ல வென்றால் க்ஞானேசுவரர் சரித்திரதின் மாட்சிமையை யென்னு லுரைக்கப்போமோ ஓ சித்தர்களே! இச்சரித்திரத்தை அத்தியந்த பக்தியோடும் கேட்பீராக வென் றெச்சரித்துப் பகவான் றிவ்விய திருநாமங்களை யுச்சரித்து சொல்லத் தொடங்கினர்.

எப்படியென்றால் ஓ புனிதர்களே! வேதாதிகள் புகழும் கோதாவரி நதிக்கணித்தாகிய மாபோதகர் பரவும் ஆபெகா மென்னுமூரில் மகாவிந்த நாதனைத் துதிக்கும் கோவிந்த பண்டித னென்பவர் சொரூப விசாரணை செய்த நிரூபா யென்னும் மனைவியோடு சபதபாதிகளை விடாமல் சஞ்சலத்துக் குட்படாமல் கர்ணீகப் பிராமணராதலால் இராஜனிடங் கணக்கெழுதும் உத்தியோகத்தி லிருந்துக்கொண்டு அன்னதானஞ் செய்துக்கொண்டு லோபிகளைப் போன்ற பாபிகளில்லையெனவிண்டு உத்தமர்க்கன்புடன் தொண்டுசெய்வதே விரதமாகக்கொண்டு தனக்கெல்லாச் சம்பத்திருந்தும் புத்திர சம்பத்தில்லாக் குறையால் தானும் மனைவியும் தனது குலதெய்வமாகிய பகவானைத் தோத்திரஞ் செய்துக்கொண்டு வருகிற காலத்தில் கடவுளருளால் ஓர் ஆண் குழந்தை பிறந்தது அக்கான மூளையை அன்பாய்ப் பாராட்டி இன்பமாய்ச் சீராட்டி விடோபாவைத் தியானஞ்செய்ததினு லுற்பவித்த மைந்தனுக்கு விடோபாவென்று நாமதேயமிட்டு வயது முதிர்ந்தபின் உபநயனஞ்செய்து சகல வித்தியாப்பியாசமுஞ் செய்வித்துப் பால்யதசை நீங்கிக் கௌமாரதசை யடைந்ததே கலியாணஞ் செய்ய யோசிக்கும் தாய் தந்தையரை விடோபா வணங்கி ஓ என் தாய் தந்தையே! விவாகஞ்செய்ய யோசித்ததை நிறுத்தி யான் யாத்திரைசெய்து வரும்படியாக கிருபை கூறுங்களென்று தோத்திரஞ் செய்ய அன்னையு மப்பனும் சிந்தாக்கிரந்தர்களாய் ஓ எங்களருமைப் பாலனே! சொல்வதற்கரிய சீலனே! சம்சார விச்சை யில்லாதவர்களும் தந்தைதா யில்லாதவர்களும் செய்யத்தகாத பாவஞ் செய்தவர்களும் சஞ்சல மனதுடையவர்களும் அவசியம் செய்யவேண்டிய யாத்திரையை மிகவுஞ் சிறியனுகிய நீ யிச்சித்தது வெகு ஆச்சரியம் தாய்தந்தையராகிய எங்களைப் பிரிந்துபோக உனக்குத் துணிவு வந்ததோ யாதுகாரணத்தா லிங்கிருக்க உன் மனம் நொந்ததோ சவுக்கியமா யிருந்துக்கொண்டு மணஞ் செய்துக்கொண்டு நல்லறமான இல்லறத்தி லிருந்துக்கொண்டு விருத்தரான எங்களைப் புனிதராக்குமப்பா வென்றுபகர்ந்த தந்தை தாயைப் பணிந்து விடோபா சொல்லுகிறார், ஓ மாதா பிதாவே! இவ்வாக்கையோ தரங்கமென்றும், க்ஷணபங்குர மென்றும், செல்வமோ நீர்மே லெழுத்தென்றும் சுவரின்மேற்

சுண்ணமென்றும், இளமையோ நீர்மேற் குமிழி யென்றும், சூரியனை மறைத்த மேகமென்றும், ஆயுளோ வில் நாணியை விட்ட அம்பென்றும், விசையாயோடுங்காற்றென்றும், பிராண னோ விருட்சமேலுற்ற பட்சியென்று வெட்டவெளியில் வைத்த விளக்கென்றும், மனதோசஞ்சல நிறைந்தகுடமென்றும், சன்மசாகரத்தி லமிழ்த்தும் வடமென்றும், விவேகமோ மின் மினியி னொளியென்றும், வெளியிறு வளியென்றும், பற்பல தர மொருவர்க்கொருவ ருரைத்துக்கொண்டிருக்கும் நீங்கள் சம்சாரியானபின் யாத்திரை போகலாமென் றெனக்குரைத்த லழகோ? அமாவாசை நிசியினிருட்டோர் திரணமாயதிலும் கணித விசாலமான அவிவேகவிருளாற் சூழப்பட்டுத் தொ ன்றுதொட்டுப் பவசாகரத்துட்பட்டு மெய்ஞ்ஞான நிலைகெட்டு தட்டு கெட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கும் ஏழ்மையான கோ ழையேன் சம்சாரத்துக் குட்படுவேனோ? தையலரையுந்தொடு வேனோ? அந்தோ இல்லறமென்னுந் தொல்லையிலகப்பட் டோர்க் கல்லலன்றிச் சொல்லச் சுகமுண்டோ? ஓ அன்புள்ள அன்னையே! இன்புடன் வளர்த்த எந்தையே! சம்சாரமென் னும் சாகரத்தில் மூழ்கினவன் சுகதுக்கமென்னுந் திரைகளா லலக்கணுற் றழிவதேயல்லது மோட்சமடையுஞ் சூட்சுமந் தெரிவிக்கும் சாட்சிஸ்வரூபமாயிருக்கும் மாட்சிமை பொருந் திய குருஸ்வாமிக் கேவல் செய்யக்கூடுமோ? இது கூடினும் ஞான சாஸ்திரங்களைச் சந்தேகமறத் தெளியக்கூடுமோ? இது வந்தாலும் தெளிந்தபடி நிர்ச்சலனமாய் இருக்கக்கூடுமோ? இருந்தாலும் ஆனந்தாவேத மேலிட்டுத் தன்னை மறக்கும நனவிற் சுழுப்தி நிலையை யடையக்கூடுமோ? இதை யடைந் தால் கிர்கஸ்தாசிரமத்துக் குதவமாட்டுவனோ? இவ்வளவு அரி தான சகஜானந்தானுபூதியை யடைந்தவர்போல் பேசும் வா சாக் ஞானிகளடையும் பயன் வார்த்தை மாத்திரமன்றிப் பர மார்த்தத்தை யடையக்கூடுமோ வென்கிற பல வார்த்தைக ளாடி ஓ மாதா பிதாக்களே! வைராக்கிய மில்லாதவனுடைய சாஸ்திர விசாரணையும், ஞானமில்லாதவனுடைய விவேக மும் விதவஸ்திரீயின் யெவ்வர்ணமும் பலமில்லாதவன் தேக புஷ்டியும், பதிவிரதத்தன்மை யில்லாதவளுடைய அலங் காரமும், சற்கர்மஞ்செய்யாமற் கழியும் ஆயுள்நாளும், விப சாரியிருக்கும் ஆசாரமும், பக்தியில்லாத பூசையும், குரு நிந்

தனை செய்யும் தியானமும், சஞ்சல மனதுடையவன் செய்யுஞ் சபமும், பிரயோஜன மில்லாததுபோல எவ்வர்னகாலத்தில் மோட்ச மார்க்கத்தைத் தேடாத புருஷனும் பயனடையான். ஆதலால், எனக்கு வதுவையாகு முன்னமே பலதேசங்களிற்றிரிந்து ஜலஸ்தல பரிசன தரிசனஞ்செய்து உத்தமர்களிடம் ஞான சாஸ்திரார்த்தங்க ளறிந்துகொண்டு இரண்டோராண்டில் வந்து உங்களிஷ்டப்படி நடந்துக்கொள்ளுகிறேனென் றுரைத்து வணங்குந் தனயனைத் தாயுந்தந்தையும் பல ஆசிகள் கூறி, ஓ எங்களரும்பாலனே! விரதசீலனே! சன்மார்க்கத்திற் செல்பவனைத் தடுப்பவர்க்கும் ஈவதை விலக்குபவர்க்கும் சொல்லொணு துன்புண்டென்று வேதமுறையிடுகின்ற தாதலால் யாத்திரை போகுமுன்னே நாங்கள் தடுக்க மாட்டோம் ஆனல் ஓராண்டுக்குள் யாத்திரைசெய்து உன் அழகான முகத்தை யாங்கள் கண்டு களிப்படையும்படியாக வாக்களித்துச் சுகமாய்ப்போய் வாருமப்பா வென்றறைந்த மாத்திரத்தில் விடோபா சந்தோஷவாரியில் மூழ்கினவராய் தேவரீர்களுரைத்த வண்ணமே ஓராண்டுக்குள் வருகிறேனென்றறைந்து, விடை பெற்றுக்கொண்டு, துவாரகா, மச்சதீர்த்தம், பிண்டராகம், சுதாம்புரி, ருக்குமணி யம்மாளுக்கு வதுவையான ஸ்தானமாகிய மூதமாதவம், ஸ்ரீ கிருஷ்ணர் சமாப்த விடமாகிய பாலுகரதீர்த்தம், பிரபாஸ்தீர்த்தம், முசுகுந்தரிஷி அனந்தற்செய்த ஸ்தானமாகிய சோரதி, சோமநாதம், தவளபுரி, சப்தசிருங்கி, அருணு, வருணு, மமலேசுவரம், திரியம்பகநாதம், குஜாவர்த்தகம், சங்காதுவாரம், பிர்மகிரி பர்வதம், பீமாசங்கரம் முதலான ஸ்தலங்களுக்குச் சென்று சகரதீர்த்தத்துக்கு வந்து ஸ்நானஞ்செய்து ஜபதபங்களை முடித்துக்கொண்டு அத்தீர்த்தத்துக்குச் சமீபமாகிய அலங்காவதியிற் செல்லுகையில் அவ்வூரிலிருக்கும் சீதோபந்து என்னும் மறையோன் நாடோறும் சக்கர தீர்த்தத்துக்குப்போய் ஸ்நானஞ்செய்து கர்மானுஷ்டானங்களை முடித்துகொண்டு அங்கு வந்த யாத்திரை பிராமணர்க ளெத்தனைபேரானலு மவர்களை அழைத்துக்கொண்டுபோய் அன்னமூண்பித்தனுப்பும் வழக்கப்படி அன்றும் பூசுரரைத் தேடிக் காணுமல்வாடி விடோபாவைக் கண்டு ஆனந்தங்கொண்டு அழகு சுந்தர அடக்க ஒடுக்கத்துக்கு வியந்து, அவரைத் தன் இல்லறத்துக்கழைத்

துக்கொண்டுபோய் அன்ன மூண்பித்து வேத ரகசியங்களைப் பேசிக்கொண் டானந்தமாயிருந்தார்கள்.

கேட்டீர்களோ சித்தர்களேயென்று நாபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லுவார். கேளுஞ் சித்தர்களே! இப்பால் சீதோபந்து விடோபாவை நோக்கி, ஓ பரம பக்தனே! எளியேன் மேற் றயைசெய்து இரண்டுநாளிங்கிருந்து போமப்பாவென்று தன் வீட்டிலே நித்திரை செய்யும்படியாயுரைத்து வெகு நேரம் வேதாந்த வார்த்தைகளாடித் தெளிந்தவனெனக் கொண்டாடி நடுராத்திரியானதால் அனந்தல் செய்யும்படியாய்ப் புகன்று தானுங் கண்வளர்ந்தார்.

அப்போது பகவான் சீதோபந்து சொர்ப்பனத்தில் வந்து ஓ உத்தமனே! இப்போதுன்னருகில் படுத்திருக்கும் விடோபாவுக்கு உன் புத்திரியை நாளையத்தினமே மன்றல் செய்து மகிழ்ச்சி யடையக் கடவாயென்று திருவாய்மலர்ந்து மறைந்தார். உடனே சீதோபந்து விழித்து இதென்ன விந்தையாயிருக்கின்றது இப்புண்ணியனைப் போன்றவனுக்கே நமது கன்னிகையை மணஞ்செய்ய வேண்டுமென்று நினைத்த நினைவே இப்படிக் கனவாய் வந்ததோ அல்லது பகவான் சங்கல்பமே இப்படி இருக்கின்றதோ வெனப் பலவிதங்களா யோசித்துக் கொண்டிருந்து மூன்றும் சாமத்தினிறுதியில் விடோபாவை யெழுப்பி, அப்பா! உனக்கென்னருங் கன்னியைக் கொடுத்து மன்றல் செய்யும்படியாய்ப் பகவா னென்கனவில் வந்துரைத்தார். ஆதலால் பகவான் வாக்கியத்தைத் தள்ளாமல் யாதொரு மொழியும் விள்ளாமல் என் புதல்வியைக் கலியாணஞ் செய்துக்கொண்டு களிப்புடனிருப்பாயாக வென்ன அவ்வசனத்தைக் கேட்ட விடோபா திடுக்கிட்டு இதென்ன கிணறு வெட்டப்போய் பூதம்புறப்பட்டாற்போலவும் பிள்ளைவரத்துக்குப்போய் புருஷனை பறிகொடுத்தாற்போலவு மிருக்கின்றது. தந்தைசொல் மிக்க மந்திரமில்லை யென்றறிந்திருந்தும், தந்தை வாக்கியத்தை தள்ளிப் பல தேசங்களிற் றிரிந்துவந்து இந்தபிராமணருரைத்தபடி பந்தத்தில் நுழையலாகுமாவென் றுணங்கிப் பிணங்கிச் சீதோபந்துவை வணங்கி இணங்கி, ஓ ஐயா! என் குலம் கோத்திர மறியாதவராயிருந்தும் இப்படிப் பேசலாமா, மூன்னம் கணிகையரிருவர் காமரசத்தை கலைக்கோட்டு மகாரிஷிக்கூட்டிக் காட்டிடைவிடு

க்கவும் நாட்டையடுக்கவும் செய்ய, அந்நாட்டின் ஏந்தல் தன் கன்னியரிருவரை அவருக்கு மணம்புரிய செய்வித்ததுபோல எனக்கன்பா யன்னமூட்டி இன்பத்தைக்காட்டி இகபோகத் திலமிழ்த்த யோசித்தீர் இதற்காகத்தானே இப்படி விசுவா சித்தீர் இனி இவ்வார்த்தையை என்னுடன் சொல்லாமலிரு க்க மிகவுமும்மை வேண்டுகிறேனெனச் சீதோபந்து விடோ பாவினிடம் நயவார்த்தைகளாடிக் கோத்திர முதலானதும் விசாரித்துத் தன்னினத்திற் சேர்ந்தவனாயிருக்கக் களிப்புற்று அப்பா விடோபா! நீயே என் புதல்விக்குகந்த மணாளன் இப்படி கூட்டிவைத்ததே குரு கடாட்சமா யிருக்கின்றதெ ன்று தன் மனைவியை விளித்து, ஓ பெண்ணே! நமது மரு மகனைக் கண்டாயா ஆனந்தங் கொண்டாயாவென்று களிப் பின் மிகுதியாய் பற்பலவார்த்தைகளாட அதுகேட்ட விடோ பா இதென்ன திருடப்போய் குருடனானதுபோலவும், பரம பக்தனைப் போய்ப் பைசாசத்தாற் பீடிக்கப்பட்டதுபோலவு மிருக்கின்றது. ஓ ஐயா பிராமணோத்தமரே! நான் சன்னியா சியா யிருக்க எனக்கு மணஞ்செய்ய நினைக்கலாமா? ஒருவர் விரதத்தைக் கெடுக்கலாமோ? எடுக்காப்பார மெடுக்கலாமா? வேண்டா மென்பவற்குப் பெண் கொடுக்கலாமா? ஒருவர் யாத்திரையைத் தடுக்கலாமாவெனச் சீதோபந்து, அப்பா மருமகனே! அழகான முகனே! இராஜன் வார்த்தையைத் தடுத்தாலும், மாதா பிதாக்கள் வார்த்தையைத் தடுக்கலாகாது மாதா பிதாக்கள் வாக்கைத் தடுத்தாலும் குருவாக்கைத் தடு க்கலாகாது. ஆரியர் வாக்கைத் தடுத்தாலும் தெய்வ வாக் கியத்தைத் தடுக்கலாகாது. ஆதலால், தெய்வ வாக்கின்படி செய்ய நினைந்த என் மொழியைத் தடுக்காமல் வியாகுலத் தைக் கொடுக்காமல் இன்றைக்கே விவாகஞ் செய்துகொண்டு நீருமுமது மனைவியும் இஷ்டமான ஸ்தலஜல தரிசன பரி சனத்துக்குப் போகலாம் சீக்கிரம் எழுந்திரும் ஸ்நானஞ் செய்யும் திவ்யமான வஸ்திராபரணங்க ளணிந்துக்கொள் ளும் என, விடோபா இதென்ன குளிக்கப்போய்ச் சேறுபூசிக் கொண்டது போலவும் கும்பிடத்தகுந்த குருவோடு வம்பு செய்வதுபோலவு மிருக்கின்றது என்றுன்னிச் சீதோபந்து வைப் பார்த்து, ஓ ஐயா! உமக்கு சொற்பனஞ் சாதித்த பக வான் என் கனவில் வந்துரைக்கமாட்டாரா திவ்வியதரிசனந்

தரமாட்டாராவெனச் சீதோபந்து அகத்தியம் பகவான் உன் கனவிலும் வந்துரைப்பார். ஆதலால் இன்றிராத்திரிக் கிங்கேயே நித்திரை செய்யுமென் றுரைத்துச் சூரியோதயமான தேசக்கரத் தீர்த்தத்திற் சென்று ஸ்நானஞ்செய்து ஜெபதபங்களை முடித்துக்கொண்டு வீட்டையடைந்து போஜனஞ்செய்து நல்ல வார்த்தைகளாடிப் பகவான் கீர்த்தனைகளைப்பாடி ஜாமராத்திரியானபின் கண்வளர்ந்தார்கள். இரண்டாஞ்சாமத்தில் பகவான் விடோபாவின் கனவிலடைந்து, அப்பா விடோபா! இந்தச் சீதோபந்து புதல்வியாகிய பதிவிரதைகளில் முதல்வியை விவாகஞ் செய்துக்கொண்டு சுகமாயிருமென்றறைந்து மறைந்தார்.

உடனே விடோபா விழித்து ஓ ஓ மோசம் வந்தது. நமது ஜென்மாயுசுக்கு மணஞ்செய்ய லாகாதென்கிற வைராக்கியத்தைக் கடவுளே கெடுப்பதுபோற் காண்கிறது. அன்றி தாய் தந்தைய ரறியாமல் நாமே மன்றல் செய்துக்கொண்டால் மாதா பிதாவின் மனம் நோகும் இதனுல் நரகத்தையடைதற் கேதுவாகும் அல்லாமல் சொர்க்கத்திற் சென்றவன் நரகத்தையும், சுகத்திலிருப்பவன் துக்கத்தையும், அமிர்தம் புசிப்பவன் விஷத்தையும், இராஜரீகஞ் செய்பவன் யாசிக்கவும், சம்பாவமுள்ளவன் ஆசிரியரை நிந்திக்கவும், நித்தியவஸ்துவை யடைந்தவன் அனித்தியப் பொருளையும், நரஜென்மத்தின்அருமை யறிந்தவன் வீணுள் கழிக்கவும், பரிமளாதிகளைப் பூசிக்கொள்பவன் மலத்தை யணிந்துகொள்ளவும், சமாதிநிஷ்டாசாதனஞ் செய்ய விருப்பமுள்ளவன் சஞ்சல வியாபாரத்திற்குட்படவும் வாஞ்சிப்பானே வாஞ்சியான். அதுபோலவே சந்நியாசியாகவே வெண்ணங்கொண்ட நாம் சமுசாரத்துக் குட்படலாமா? மரண பரியந்தம் பேய்கொண்டாலும் கொள்ளலாம் பெண் கொள்ளலாகாதென்று பழமொழி யிருப்பதன்றி சப்தத்தால் அசுண்ட பட்சியும், ஸ்பரிசத்தால் யானையும், ரூபத்தால் விட்டிற் பூச்சியும், ரசத்தால் மீனும், கந்தத்தால் வண்டும், ஒவ்வொரு விஷயமிருந்தே மரணமடைகிற தென்றும், இந்த ஐந்து விஷயங்களுங்கூடி ஒருருவாய் வந்து மயக்கந்தந்து மாந்தரைவாட்டும் மாதர்கள் தோதகத்து ளகப்பட்டவன் விடுபடுவது ஜென்மாந்தரங்களிலுங் கூடாதென்றும் சாஸ்திரங்களில் முறையிடுகின்றது.

அப்பப்பா இந்த தப்பிதத்துக் குட்பட்டால் தனம் வேண்டும், கனம் வேண்டும், மனை வேண்டும், மக்கள் வேண்டும், பந்துக்கள் வேண்டும், பலஜெந்துக்கள் வேண்டும், இது தெரிந்தும் தீயில் விழுவேனே இகத்தோரைத் தொழுவேனோவென்று பலவிதங்களா யோசித்து இனி பொழுது விடியுமாயின் விபரீதம் விளையும் என்று கள்ளனைப்போலவும், விபசாரியைப்போலவும் மெள்ள நடந்து தெருவீதியிற் போனார். அத்தருவாயில் சிதோபந்து புத்திரியாகிய ருக்மாபாயி நல்ல விவேகஞான புருஷனையே மணம் புரிய வேண்டுமென்றனேக நாளாய்ப் பார்க்கவியை ஸ்தோத்திரஞ் செய்துக்கொண்டிருந்தபடியே தனக்கு மணவாளன் கிடைத்ததற்கு நாம் செய்த பாக்கியமே பாக்கியம், நாமடைந்த சிலாக்கியமே சிலாக்கியம், இனி எப்போது பொழுது விடியும் விவாகமெப்பொழுது முடியும், இவருட னெப்போது பேசுவோம், சந்தனுதிகளை யெப்போது பூசுவோம், என்கிற யெண்ணங்களாற் பீடிக்கப்பட்டுத் துயில்வராமல் விழித்துகொண்டிருந்து விடோபா சந்நதியின்றி வெளியிற் போகிறதைக்கண்டு சந்தேகங் கொண்டு இவருடைய மனைவியென்று நம்மை நமது தாய் தந்தை எப்போது தீர்ப்பு செய்தார்களோ அப்போதே இவருக்கு நாம் மனைவியானோம். அப்படியிருக்க இப்படி நம்மை மோசஞ்செய்து துவேஷங்கொண்டு போகிறதுபோற் காண்கின்றது, சன்யாசி பயணம் திண்ணை விட்டாலாச்சுது என்கிறது பொய் மொழியா? நாம் செய்த புண்ணிய பலத்தாற் கிடைத்த புருஷோத்தமனை யிழத்த லறிவீனமல்லவா? பகவான் நமது தந்தையின் கனவிலுரைத்த வண்ணம் இவருடைய சொற்பனத்திலுஞ் சாதித்திருப்பார்.

இதனாலேயே இவர் மனம் வேறுபட்டுப் போகின்றார். ஒருவேளை பகவான் இவர் சொற்பனத்தில் வந்துரைக்காவிட்டாலும் இவர் மணம் வேண்டாமென்று மறுத்தாலும் இவரே பதி நானே சதியென்றெப்போதெண்ணங் கொண்டேனோ அப்போதே என் கற்பழிந்தது யாரால் கற்புக்கழிவு வந்ததோ அவரே கணவனாகும். கணவனுக் கைக்யமான காந்தை கணவனைப் பிரிந்திருப்பதுமுண்டா வென்கிற பல வெண்ணங்களோடு மவர் பின் தொடர்ந்து கற்புள்ள பெண்களுக்குரிய நாணம் மடம் முதலான குணங்களாற் சிறப்புற்

ரேங்கிய உத்தமி யாதலால் விடோபாவை மறிப்பதற்கும் கூப்பிடுவதற்குங் கூடாமல் அதி சீக்கிரமாயோடி அவரைப் பலதரஞ் சூழ்ந்து பாதங்களில் வீழ்ந்து, ஓ ஸ்வாமி! எங்கே கள்ளனைப்போல் மெள்ளப்போகிறீர் இங்கிருக்க உமக்கிஷ்டமில்லா திருந்தால் தாங்கள் நாடிய தேசத்துக்கு நாமிருவரும் போகலாம் என் தந்தையிடம் உத்திரவு பெற்றுக்கொள்ளுமையாவென விடோபா ருக்மாபாயின் சௌந்தரியத்தைக் கண்டு பிரமைகொண்டு நீயாரென்று வினவ, ருக்குமாபாயி ஓ ஸ்வாமி! என்னையே உமக்கு வதுவைசெய்ய என் பிதா பேசி உம்மைத் தன்னருகில் சயனிக்கச்செய்து தன்னை மறந்து தூங்குகின்றார் அவரறியாமல் நீர்போவதறிந் தும்மை மறுத்து வீட்டுக் கழைத்துக்கொண்டு போகவந்தேன் கிருபைகூர்ந்து மனைக்குள்வாரும் ஸ்வாமியென அவ்வசனத்தைக் கேட்ட விடோபா திடுக்கிட்டு ஸ்மரணைகெட்டு அறிவழிந்து உடனே தெளிந்து, ஓ மாதரசே! தந்தைதாய் ஒருவனுக்கு விவாகஞ்செய்யும் பரியந்தம் மாதா பிதாவே தெய்வமென்றும், தனித்தோர் புருஷரோடுரையாடாம லிருப்பதே விரதமென்றும், அயல்வீடறியாம லிருப்பதே அழகென்றும், கற்பைக் காத்தலே தபசென்றும், பெண்களுக்கு லட்சணஞ் சொல்வார்கள்.

அப்படியிருக்க நீ இப்படி செய்யலாமா? வழிப்போக்கனாகிய என்னை இந்த நடுராத்திரியில் தனித்துவந்து மறுக்கலாமா? இப்படி வேசையுஞ் செய்யாள் இப்பேர்க்கொத்த அவலட்சண குணமுடைய உன்னை யான் விவாகஞ் செய்துக்கொண்டபின் நரகடைய வேறோர் பாவமுஞ் செய்யவேண்டுமா? எப்போது தனித்து ஒரு புருஷனுடன் பேசத்துணிந்தாளோ அப்போதே விபசாரியானாளென்று பெரியோர்களுரைக்கின்றார்கள். அந்தக் குணமுன்னிடத்திற் பிரத்தியட்சமாய்க் கண்டபின் உன் முகத்திலும் விழிக்கலாமா? இப்பேர்க்கொத்த அபசாரிகளின் முகத்தில் விழித்தலன்றி வேறோர் தோஷமுஞ் செய்யவேண்டுமா? சீசீ போபோவென்கிற கடினவார்த்தைகளுரைத்துப்போக ருக்மாபாயி விடோபாவைமறுத்துப் பாதங்களிற்பணிந்து, ஓ என் பிராணநாயகா! பிராணசினேகா! எப்போது என் தாய்தந்தை உமக்கு விவாகஞ்செ

ய்ய நினைந்து உம்முடன்பேசினர்களோ எப்போது பகவான் கனவில் வந்துரைத்தாரோ எப்போது நான் உம்மைக்கணவனென்று பாவித்தேனே அப்போதே விவாகமாய்விட்டது எல்லாவற்றிற்கும் மனமே காரணமன்றி இம்மணம் மணமாகுமா? நாலுபேரறிய விவாகஞ்செய்தாற்ருனு சதி புருஷர்கள் உமக்கு என் தாய் தந்தையிடம் சொல்லிப்போக மனமில்லாவிட்டாலும் நானினி உம்மைப் பிரிந்திருப்பதில்லை இது சத்தியமாகும் ஒருவேளை நீர் பலவந்தமாயென்னைத் தள்ளிப்போனு லென்னுயிரை உமக்கர்ப்பணஞ்செய்வேன் இதற்குத் தடையில்லையென அவ்வாக்கியங்கேட்ட விடோபா ஆ ஆண்டவனே! இதென்ன வல்லடி வழக்கா யிருக்கின்றது ஓ பெண்ணே! உலகத்தில் அநேகருக்கு பெண்கொடுக்க தாய் தந்தையர் யோசிப்பார்கள் பலரை விசுவாசிப்பார்கள் அவர்களுக்கெல்லாம் அப்பெண் மனைவியாவாளா? நிச்சயதாம்பூல முதலான சடங்குகள் நடந்தும் விவாகந்தவிர்ந்து போகிறதில்லையா? ஈதுனக்குத் தெரியாத தொல்லையா? நீ தெரியாமையினுலிப்படிப்பேசினை? இதை யாராவதறிந்தால் நிந்தைக்கிடமாகும் சீக்கிரம் வீட்டுக்குப்போய்ச் சந்தோஷமாயிரு நான் நாடோடி மனிதன் அன்றி எனக்கு சம்சாரவிச்சையில்லை ஸ்திரீகள் கடக்கக் கூடாது தன்னெல்லை சன்யாசியான என்னை மணஞ்செய்ய விரும்பலாமா? நீபயித்தியம் பிடித்தவள்போற் காண்கின்றதென் றறைந்துபோக ருக்மாபாயிமறுத்து ஓ ஸ்வாமி! கற்புள்ளவள் ஒருவனைக் கணவனெனத் தீர்மானித்த பின் அவனையன்றி மற்றொரு புருஷனைக் கனவில் நினைத்தாலும் அவள் கழுதையேயாம் அவள் முகத்தில் விழித்தால் தாங்களுரைத்தபடி பாபம்வந்துநேரிடும் ஆதலால் நீரேபதியென்றும் நானும்முடைய சதியென்றும் தீர்மானித்த பின் உம்மைப்பிரிய எனக்கு நீதியா ? உம்மையன்றி வேறு புருஷனைக் கருத எனக்கென்ன கொடிய விதியா ? இப்படி நினைக்க எனக்குக் கெட்டமதியா? நாலுபேரறிந்தால் நிந்தைக்கிடமாகுமென்றீரே யாரும் அறியாமற் போய்விடலாம். வாரும் ஸ்வாமியென அதுகேட்டு விடோபா ஓ அரிவையே! விவேகமில்லாத் தெரிவையே! நீசொல்லும் வார்த்தை உனக்குத் துன்பம் வந்தால் வரட்டும் எனக்கின்பம் வந்தால் போதுமென்கிறதுபோ லிருக்கின்றது நல்லகாரியம் தன்யோசனைப்படி

நடப்பது சுகம், குருபுத்தி விசேஷசுகம், மரபுத்தி விஞசகாலம், ஸ்திரீபுத்தி பிரளயம் என்கிற பழமொழியை உன்பால் சோதித்தேன் யாரும் அறியாமல் நீயென்னுடன் வருகிறதென்ன நாணழைத்துக்கொண்டு போகிறதென்ன (எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பின்புத்தி) யென்கிறது சரியாயிருக்கின்றது அருமையாகப் பெற்று வளர்த்த தாய் தந்தையரை வஞ்சித்து வழிப்போக்கனுகிய என்னுடன் வரத்துணிந்த கொடிய பாதகியாகிய உன்னுடன் பேசக்கூடாது. இனி யென்முன் நிற்காதே யென்னை மறுக்காதே மாதா பிதாக்களை வெறுக்காதே இங்கிருக்க வென்மனம் பொறுக்காதே என்றுசொல்ல, ருக்மாபாயி ஓ ஸ்வாமி! நீர் பதியென்றும், நான் சதியென்றும் கடவுள் முன்னமே அமைத்திருந்த காரணத்தாலேயே என் தாதையின் சொற்பனத்தில் வந்துரைத்தார் உம்முடையகனவிலும் வந்துரைத்திருப்பார் தெய்வ வாக்குக்கும் மேலானவாக் கொன்றுண்டோ? தெய்வ வாக்குத் தப்புவதுமுண்டா? தப்புவதற்குத் தெய்வ வாக்கு இரண்டா? தெய்வவாக்கைத் தள்ளினோர்க் கின்பமுண்டா? நீரிப்படிசெய்து என்னைச் சோதிக்க வெண்ணங் கொண்டா? ஓ என் பிராணநாதரே! மெய்ஞ்ஞான போதரே! தெய்வ வாக்கின்படி நடக்கும், என்னை நிந்தித்தாலும் துன்மார்க்கியென்று சிந்தித்தாலும் எனக்குச் சந்தோஷமேயாம். ஏனென்பீரோ உம்முடைய சொத்தை நீரெப்படி யெண்ணினுலும் துன்பமுறப் பண்ணினுலும் வாயில்வந்தபடி வைதாலு மல்லது சித்திரவதை செய்தாலும் செய்யலாமென்ன விடோபா ஓ ஓ இதென்ன பிராமணன் யாத்திரைபோய்ச் சூத்திரனுனதுபோ லிருக்கின்றது. நாம் வந்த எத்தனமென்ன? இனி இவளைச் சந்தோஷ வார்த்தைகளால் நிறுத்தி நமது வைராக்கியத்தை விருத்திசெய்யலா மென்றுன்னி ஓ கோதையே! விவேகமில்லாப் பேதையே! உன்னுடைய சவுந்தரியத்துக்குகந்த மணுளன் நானுகுமா? உன்னை நான் மணம்புரிதல் சந்திரனைக் கிரகணம் பிடிப்பதொக்கும் உன் காலழகுக் கிணையாகாவென்னை யிச்சிக்க உனக்கு லச்சையா யிருக்கவில்லையா? சகல லட்சணங்களும்வாய்ந்து கண்டோர் மயங்கும்படியான மேனியுள்ள நீ அவலட்சணமாயிருக்கு மென்னைக் கனவிலும் நினைக்கலாமா? விவேகமற்ற உன் தாதை அறிவீனத்தால்

உன்னை எனக்கு மன்றல்செய்ய யோசித்தார். நீ விவேகசிகா மணியாயிருந்தும் பிச்சைக்காரனாகிய என்னுடன் லச்சை செய்யலாமா? யாராவது வந்தால் கெக்கலிகொட்டிக் கரங்களைக்கொட்டி மந்தகாசமும் பரிகாசமும் செய்வார்கள் வாயில் வந்தபடி வைவார்கள் சீக்கிரம் வீட்டுக்குள் போ போவென்றுரைத்துப்போக ருக்மாபாயி ஓ ஸ்வாமி! கற்புள்ள ஸ்திரீ இவனே நமக்குகந்த கணவனெனத் தீர்மானித்தபின் அவன் மூடனாய்த் தரித்திர முடையவனாய் ரோகியாய்க் குரூபியாயிருந்தாலும் அவனையன்றி மற்றொருவன் மன்மதனுக்கிணையானவனா யிருந்தாலும் இச்சைகொள்வாளா? நளாங்கினி தன் கணவன் குஷ்டரோகியாய்க் குரூபியானபோதும் வெறுத்தாளா, அம்பா பீஷ்மரை இச்சித்து அவர் மறுத்ததால் மரண மடைந்தாளன்றி மற்றோராடவனைப் புணர்ந்தாளா, தமயந்தி நளமகாராஜனைப்போலவே தேவர்கள் வந்து பல வித தந்திரஞ்செய்தும் அந்த நளமகாராஜனையன்றித் தேவர்கள்மேலாசைகொண்டாளா, இந்த ஞாயங்களெல்லாமறிந்த நான் என்னுயிர் நீங்கினும் வேறோராடவனைத் தொடுவேனா நரகவேதனைக் குட்படுவேனாவென விடோபா ஓ தெய்வமே! என்னைப் பழிக்காளாக்கி விட்டாயே, சுடாமற் சுட்டாயே, இந்தவம்புக் கென்னசெய்வேன், எப்படியுய்வேன் யென்று துக்கித்துச் சற்றே கோபம்பிறந்து தன்னைமறந்து ஓ அரிவையே! அறிவில்லாத் தெரிவையே என்னை நல்லதனத்தால் விடுகிறாயா? அல்லதென் சாபம் பெறுகிறாயாவென்று கடுகடுத்துரைக்க ருக்மாபாயி அவர் பாதங்களிற் றொழுது கண்ணீர்விட்டழுது, ஓ ஸ்வாமி! நல்லோர்களை அண்டின புல்லோர்களும் மேன்மை யடைவார்களென்கிறபடி தேவரீரை யடைந்த அடியாளைக் கருணையுடன் இரட்சித்தாலும் அல்லது சாபமிட்டுச் சிட்சித்தாலும் ஏற்றுக்கொள்ளுகிறேன் உமது சித்தம், எனது பாக்கியம். என்று அடி பெயர்த்து வைக்காமல் மறுத்து ஓவென்றழ,

அதனால் விடோபா கோபங்கொண்டு தூஷணவார்த்தைகள் விண்டு முகமறியா வென் கரத்தைப் பிடித்த மூதேவி உன்னையும் அடைவாளா சீதேவி நீலிக்கு நிமையிலே கண்ணீரென்கிற பழமொழிப்படி தாரை தாரையாகக் கண்ணீர்விட்டழுகிறாய் அடிக்கடி காலில் விழுகிறாய் சீ நாயே துர்க்குண

முள்ள பேயேயென் றுரக்கக்கூவிச்சொல்ல, இவ்வரவத்தால் சீதோபந்து மவர் மனேவியும் விழித்து வெளியிலோடிவந்து விடோபாவிடஞ் சென்று எதிரில் நின்று ஓ வேதமோதிய விப்பிரனே! நீதிகளறிந்த சுப்பிரனே யாருமறியாமல் இப் பெண்ணே வெளியிலழைத்து வரலாமா எங்களுக்குத் துன் பந்தரலாமாவென அவ்வாக்கியத்தைக் கேட்ட விடோபா செவிகளேக் கரங்களால் மூடிக்கொண்டு அரி அரி என்னவார்த் தையைச் சொன்னீர்கள் இப்பெண்ணே நானிச்சித்திருப்பேனு கில் நொந்துவந்தவர் மூகத்தைப் பார்க்காத லோபியும் குரு வைக்கண்டெழாத கொடியனும் நம்பினேனென்கிறவர்களேக் கைவிட்ட நரனும் ஏழைகளோடெதிர்த்த கோழையும், ஆரி யரோடெதிர்த்துப்பேசு மசடனும், கர்த்தனே துதியா கசட னும், தந்தையைக்கொன்ற சண்டாளனும் பரஸ்திரீ கமனஞ் செய்யும் பாவியும் சகோதரியைப் புணரும் சபலனும் பரபுரு ஷனே இச்சிக்கும் பாவையும் தெய்வத்தையிகழுந் தீயனும் தியருறவ்வநாடின பேயனும் குருவை நிந்தை செய்பவரோடு கூடினவனும் பேடியாயிருந்தும் பெண்ணே மணம்புரிந்த பிர ட்டனும், ஒருவர் குடியைக்கெடுக்க நினைத்தவனும், பெரி யோர்களின் மனம் நடுங்கச் செய்தவனும், பிட்சை யெடுப் போரை வைதவனும், ஐயமிடாம லுண்டவனும், அறிவுள் ளோர்மேல் விரோதங் கொண்டவனும், குண்டுணிவேலேசெய் பவனும், கோவதை செய்து வுய்பவனும் போகிற கதியிற் போவே னென்றறைந்து சீதோபந்துவை நோக்கி, உம்மால் இவ்வளவு மேன்மை பெற்றதுபோதும் இம்மட்டில் என்னே விட்டு விடுமையாவென் றவ்விடம் விட்டுப்போக அப்போது சீதோபந்து ருக்மாபாவைப் பார்த்து, அம்மா பதிவிரதாசிகா மணி விழித்திருந்தடுத்து விடாச்சலந் தொடுத்து இவரைப் போகாமற்றடுத்து எனக்குவரும் வியாகுலத்தைக்கெடுத்து என் னேப் புனிதனுக்கினுயே இனி நீ வீட்டிற்செல்லு நானிவருக் குச் சமாதான முரைத்து அழைத்துக்கொண்டு வருகிறே னென்றறைந்து விடோபாவை நோக்கி, அப்பா என்னருமை மருமகனே! பகவான் உன் சொற்பனத்தில் வந்தேதாவ துரைத்தாரா இல்லேயாவென்று கேட்க, விடோபா பகவான் பிரத்தியட்சமாய் வந்தென்னே விவாகஞ்செய்துக்கொள்ளும் படியாய்ப் புகன்றுலும் செய்துக்கொள்ளமாட்டே னுமது

வேலையைப் பாருமையாவென் றதிசீக்கிரமாய் நடக்கச் சீதோபந்து மறுத்து அப்பா விடோபா! கடவுள்வாக்கியத்தை மறுத்தல் மிகவுங் குற்றத்துக்கிடமாகும் நீயறியாதவனல்ல பலதரஞ் சொல்லச் சந்தோஷமாய்வந்து ருக்மாபாயை மணந்து இச்சையான விடத்திற்குப் போகலாம் வாருமையாவென்று கரத்தை பிடித்திழுக்க விடோபா சீதோபந்துக்கு வந்தனஞ் செய்து ஓ ஐயா! என்னுயிரைக் கேட்கினுந் தருவேன் இக்காரியத்துக்கு மாத்திரஞ் சம்மதப்படமாட்டேன் மன்னித்தருளுமையா வெனச் சீதோபந்து அப்பா விடோபா! உன்னால் என் மகளை இழந்து விடலாயிற்று. ஏனென்றால், நீயென் புத்திரியை மணம்புரியாமல் மறுத்து போவாயானால், என் புதல்வி உடனே மரிப்பாள் நானும் பிராணனிழந்து விடுவேன் இதனால் உனக்கு ஸ்திரீஹத்தி பிர்மத்தி நேரிடும். ஹத்தியை மேற்கொண்டபின் உன் யாத்திரை பலிக்குமா, தபஞ்சிரக்குமா மோட்சமடையக் கூடுமாவென இவ்வசனங்களைக் கேட்ட விடோபா கோபமுற்று ஓ கர்த்தனே! பரிசுத்தனே! அருளத்தனே! மிருசுத்தனே! என்விரதத்தை இப்படிக் கெடுக்கலாமா? இவரென்னைப் போகாமற்றடுக்கலாமா? விடாச்சலந் தொடுக்கலாமா? சாபங்கொடுக்கலாமா? வென்றுருக அப்போது கடவுள் அசரீரியாய் ஓ விடோபா! இவ்வுத்தமர் புத்திரியை மணந்து சுகமுற்றிருப்பாய் என் வாக்கை மறுக்காதே யென்றுரைக்க, விடோபா அவ்வாக்கியத்தைக் கேட்டு திடுக்கிட்டு இனி யென்னசெய்வேன் தெய்வமேயென் றசைவறநிற்கச் சீதோபந்து அருள்வாக்கைக் கேட்டுப் பொங்கி ஆனந்தந்தங்கி விடோபாவின் கரத்தைப் பிடித் தழைத்துக்கொண்டுவந்து இப்பேர்க்கொத்த பரமபக்தருக்கென் புத்திரியைக் கொடுக்க என்ன பாக்கியஞ் செய்தேனோ ருக்மாபாயி என்னதவஞ் செய்தாளோவென்று உடலம்பூரித்து இருவரையுஞ் சிங்காரித்துச் சகல பந்துக்களுடன் சந்தோஷமாய்க் கலியாணஞ்செய்து ஆனந்தமடைந்தார். விடோபா விவாகமான மூன்றுநாள் மாமனாரை பார்த்து கரங்களைச் சேர்த்து, ஓ ஐயா! வேண்டாமென்கிறவன் கழுத்தில் லிங்கங்கட்டியது போலவும், முறையோவென்று வெறுப்பவனுக்கு முத்திரைப்போட்டது போலவும், எனக்கு மணஞ்செய்து மன மகிழ்ந்தீர். கடவுள் வாக்கியப்

படியே முடிந்துவிட்டது, என் யாத்திரை கெட்டது, பாதி யாத்திரைசெய்வதற்குள் பந்தத்துக்குட்பட்டேன், வைராக்கியங் கெட்டேன், தடைசெய்யாது விடைகொடுத்தால் மற்ற யாத்திரை செய்து வருகிறேன் லாபம் பெறுகிறே னென்றுரைக்கச் சீதோபந்து மருகனை நம்பாக்குறையால் தானுங் கூடவே பிரயாணப்பட்டுப் பண்டரிபுரம், அஹோபலநரசிம்ஹம், திருவேங்கடம், கோகர்ணம், கோலாபுரம், ராமேசுவரம், சிதம்பரம், தட்சிண கைலாசம், கண்டி, கதிர்காமம், சுப்பிரமணியம், தணிகாசலம், திருக்கழுக்குன்றம், மகாபலிபுரம் முதலான திவ்விய ஸ்தலங்களும் தரிசித்து புண்ணிய நதிகளில் ஸ்நானஞ்செய்து அலங்காவதியை யடைந்தார்கள். விடோபா மாமனார் வீட்டையடைந்த நாலாநாள் மாமனரைப் பணிந்து ஓ ஐயா! என் தாய் தந்தையைப் பிரிந்து வெகுநாளாயிற்று விவாகமானதுந் தெரியாமற் போயிற்று ஆதலால் நாளையததினம் ஆபேகாமுக்குப் பிரயாணமாக வேண்டுமெனச் சீதோபந்து அப்படியே யாகட்டுமப்பாவென்று மறுநாள் காலையில் சகலருடன் பிரயாணப்பட்டுச் சில நாள் நடந்து படு நாடுகளைக்கடந்து ஆபேகாவை சேர்ந்து களிகூர்ந்து வீட்டிற் பிரவேசித்துச் சம்பந்தியை விசுவாசித்து மிகவும்நேசித்தார் விடோபா மாதா பிதாக்களின் மலரடிதனிற்பணிந்து அட்சிகளிரண்டையு மணிந்து பற்பலவிதங்களாகத் தோத்திரஞ் செய்யலுற்றார்.

சீதோபந்து மனைவியும் மகளும் வந்தனஞ்செய்து நின்றார்கள். தநயனைக்கண்ட கோவிந்த பண்டிதனும் நிருபாயும் மகனைக் கட்டியணைத்து முத்தமிட்டு ஆனந்தமேலிட்டுத் தங்களை மறந்து பின்னுந் தெளிந்து அப்பாமகனே! அழகான முகனே! உன்னுடன் வந்த இவர்கள் யாரப்பாவென்று கேட்கச் சீதோபந்து விடோபா யாத்திரை வந்ததும், தன்வீட்டில் கண் வளர்ந்ததும், பகவானிருவர் சொர்ப்பனத்திலும் வந்துபகர்ந்ததும், விடோபா வெறுத்ததும், பகவான் அசரீரிவாக்கால் மறுத்ததும் விவாகமானதும், பின்னும் யாத்திரை செய்ததும், சவிஸ்தாரமாக வுரைக்க அதுகேட்ட நிருபாயி ருக்மாபாயின் முகவிலாசமும் அழகு மேனியும் அடக்கமொடுக்க முதலானவைகட்கு மெச்சி, வைதேகியைப் பார்த்தானந்தமடைந்த கௌசலைபோலவும், பாஞ்சாலியைப் பார்த்

துப் பரிவுகொண்ட குந்தியைப்போலவும், சந்தோஷித்து மருகியையும் அவள் மாதாவையும் அன்புடன் ஆதரணை செய்தாள். கோவிந்த பண்டிதன் சீதோபந்துக்கு வந்தனஞ் செய்து, ஓ உத்தமரே! உமது கிருபையாலல்லவா என்னருமைப்பாலகனை கண்குளிரப்பார்த்தே னுமக்கென்ன உபகாரஞ் செய்யபோகிறேன் மகனைக்கண்ட களிப்பாலுமக்கு வந்தனஞ் செய்யாமலிருந்தேன் இதைகுறித்து மன்னித்தருளுமையாவெனச் சீதோபந்து கோவிந்த பண்டிதரைப் பணிந்து, உம்முடைய அருமையாகிய புத்திரனுக்கு என்னுடைய சிறுமியைக் கொடுக்க என்னபாக்கியஞ்செய்தேனோ எதுதவஞ்செய்தேனோ கடவுள் அசரீரியாய்ப் பலருமறியத் திருவாய்மலர்ந்த திருவாக்கைக்கேட்ட போதடைந்த களிப்பிலும் உம்மைக்கண்ட களிப்பே அதிகமென் றுன்னினேன் பரம சாதுவாகிய உம்முடன் சகவாசஞ்செய்யக் கூட்டிவைத்தது குருகடாட்சம் என்றுரைத்துச் சகலரும் அன்யோன்யமாய்க் களிப்புற்றிருந்தார்கள். கேட்டீர்களோ சித்தர்களேயென்று பின்னுஞ் சொல்லத் தொடங்கினர்.

விடோபாவின் யாத்திரை அத்தியாயம் முற்றிற்று.

மூன்றாவது அத்தியாயம்

சன்னியாசி விடோபா.

வாருங்கள் சித்தர்களே! இவ்விதமா யனைவருஞ் சில நாள் ஒற்றுமையோடிருந்து சீதோபந்தும் அவர் மனைவியும் கோவிந்த பண்டிதரிடம் விடைபெற்றுக்கொண்டு ருக்மாபாயிக்குச் சொல்லவேண்டிய புத்திமதிகளை யுரைத்து அலங்காவதியைச்சேர்ந்து களிகூர்ந்திருந்தார்கள் இங்கே விடோபா மணமாய் ஐந்தாறு வருஷங்களாகியும் ஓர்நாளும் ருக்மாபாயியைக் கண்ணெடுத்துப் பாராமல் மாரனுக்குத் தோர்க்காமல் வேதாந்த சிரவணங்களாலும் சாதுசங்கத்தாலும் வைராக்கியமடைந்து சம்சாரத்தி லிருப்பதற்கிடைந்து, எப்போது சந்யாசியாவோம் எக்காலத்திற் றன்னை மறந்திருப்போமென் றேக்கங் கொண்டிருக்கிற நாளில், வருஷகாலம், சீதளகாலம், வேனிற்காலம் என்னும் மூன்றுகாலங்களுக்குச் சமானமான

பாலயவ்வன விருத்தாப்பியமென்னும் மூன்று பருவங்களுந் தேகத்துக் குடையதுபோல கோவிந்த பண்டிதனும் நிரூபமாயும் மூப்பும் பருவமடைந்தும் மழை குளிர் வெய்யிலென்னும் மூன்று காலங்களிலும் ஒரேவிதமா யிராநின்ற ககனத்தைப் போல, பால, எவ்வன, விர்த்தமென்னும் மூன்று பருவங்களும் தானுகிய ஆத்மாவுக் கில்லையென் றுறுதிக்கொண்டிருந்தும் ஜனித்தது மரிக்குமென்னுங் காரணத்தால், சதிபதிகளிருவரும் சமாதி னிஷ்டையிலிருந்தபடி தேகவியோகமடைந்து மீளாக்கதி யடைந்தார்கள். விடோபா தாய்தந்தை யிருவரும் கைவல்லிய மடைந்ததற்கு வியப்படைந்து செய்யவேண்டிய கிரியைகளெல்லாஞ் செய்து முடித்துச் சிலநாளிருந்து ஒருநாள் தன்மனேவியை நோக்கி, ஓ பெண்ணே! நானென்தந்தையின் அஸ்திகளைக் கொண்டுபோய்க் கங்கையில் விடவேண்டும். நான் போனபின்னிங்கு நீ தனித்திருக்கமாட்டாய் ஆதலால் உன் தந்தையிடங் கொண்டுபோய் விட்டுப் போகிறேனென் றறைந்து, தன் தந்தை சம்பாதித்த திரவியத்தைக் காண்பித்து உனக்கெவ்வளவு இச்சையோ அவ்வளவெடுத்துக்கொண்டு மற்றவைகளெல்லாம் இன்றையதினமே அதிதிகட் களிப்பாயென் றுரைக்க ருக்மாபாயி கணவன் கட்டளைப்படி அன்றையதினமே வீடுமுதலானவைகளையு மதிதிகட் கர்ப்பணஞ்செய்து வணங்க, விடோபா ருக்மாபாயி மங்கிலியந்தவிர மற்றவைகளை யெல்லாந் தானஞ்செய்ததற் கதிசயித்து, இவளுத்தமியே யென்றுன்னி ருக்மாபாயையழைத்துக்கொண்டு அஸ்திகளையு மேந்திக்கொண்டு பல நாடுகளைக் கடந்து அலங்காவதியை யடைந்து மாமனூர்வீட்டிற் பிரவேசித்து மாமன் மாமியைப் பூசித்துத் தன் கருத்தைப் புகலச் சிதோபந்து சிலநாளிருந்து போய்வாருமப்பாவென ருக்மாபாயி தாய்தந்தையை வணங்கி, மாதாவுடன் தன்கொழுநனுடைய வைராக்கியத்தைப் பகர்ந்து அவர் நம்மைப் பிரிந்து போனு லினிவருவ தசாத்தியம், ஆதலால் நாமனேவருங் கூடத்தொடர்ந்து போவதே உத்தமமென, இணைபிரியாமலிருக்க விடோபா சிதோபந்தை வணங்கிப் பன்முறை கங்கைக்குப் போக விடைகேட்டும், தனித்துப்போக விடைகொடுக்காமையால், சிந்தாக்கிரந்தனாய் ஒருநாளிரவில் யோசிக்கின்றூர். அதாவது நமது தாய்தந்தை மரித்துப்போனதைப் பிரத்தி

யட்சமாயறிந்திருந்தும் தேகமனித்தியமெனத் தெரிந்திருந்தும் மோட்சமடையும் மார்க்கத்தை நாடாமல் சத்குருவைத் தேடாமல் பலதேசங்களி லோடாமல், சற்சன சங்கத்தைக் கூடாமல், மேல்வரும் எமவாதனைக்கு வாடாமல் வெகுநாளாய்ச் சமுசாரத்திலிருந்துவிட்டேனே ஆ கெட்டேனே என தறிவீனத்தை என்னவென்றுசொல்லுவேன் சஞ்சலமனதை எப்போது சொல்லுவேன் அகமமதைகளை எக்காலத்தில் வெல்லுவேன், அந்தர் மூகநிஷ்டையி லெத்தினஞ் செல்லுவேன், ஆ ஆ நானினி அரைக்கணமும் சம்சாரத்திலிருக்கலாகாது, அது சங்கதி சிதோபந்துக்குத் தெரிந்து அநித்தியத்தை நித்தியமென்று நம்பியிருக்கும் அறிவீனர்களன்றி வேறு மூடர்களுமுண்டா? எல்லாச் சென்மங்களிலும் இந்த மானிடசென்மம் அரிதானதல்லவா? இந்த மனுஷப் பிறப்பெடுக்க என்னதவஞ் செய்தேனோ இப்பிறவியகன்றால் இனியெப்பிறவி கிடைக்குமோ? இப்பிறப்பே கிடைத்தாலும் பிறப்புப் பிறப்புக்கிச் சங்கடந் தவிர்வதுமுண்டா? இவ்வளவு வறியாமல் மேற்பிறப்பில் மோட்சமடையலா மென்றுன்னலென்ன மதிகொண்டோ? இம்மதி யனேகர்க் கென்ன காரணத்தாலிருக்கின்றதோ? இதைத்தான் மாயையின் சாமர்த்தியமென்றுரைக்கத் தகும், அல்லாமல் மானிடரை யேமாற்றிப் பொருள்பறிக்கும் வேசிகளைப்போன்ற மாயையினது மாந்தர்களை யேமாற்றி மறலிக்குணவாக்கிப் பல ஜென்மங்களைக் கொடுத்துச் சனன மரணமென்னும் சுழலிலகப்பட் டுழலும்படியாகச் செய்யும் சாமர்த்தியமே சாமர்த்தியம். மாயையைக் கடத்தல் அரிதென்று பெரியோர்க ளுரைப்பதினாலேயாம். அம்மம்மா! அநித்திய காரியத்தை மெய்யென் றிருமாப்படைந்து எமனுக்கிரையாகும் பேதை மானிடரைப்போல நானிருக்கலாமா? கோடிபொன் அளித்தாலும் அரைநிமை உயிர் தரிப்ப தரிதென்பதபத்தமா? மரணமடைவ தசத்தியமா? முற்பவப் புண்ணிய பலத்தாற்கிடைத்த மானுஷ ஆயுள் நாளை வீணாளாகக் கழிக்கலாமா? அந்தோ! நாடுநகர் பெண்டுபிள்ளை பண்டம் பதார்த்தம் முதலானதும்கூட வருவதுண்டா, மறுபிறப்புக்காவது உதவியாகுமா என் அஞ்ஞான புத்தியாலல்லவோ மெஞ்ஞானத்தைத் தேடாமல் பொய்ஞானத்திலிருந்துவிட்டேனென்று பற்பல யோசனைசெய்து தன்மனைவியை

விளித்து ஓ பெண்ணே! இனியெனக் கிவ்வாழ்க்கை வேண்டியதில்லை. நான் சந்நியாசியாக வெண்ணங் கொண்டிருக்கிறேன். வஞ்சகஞ்செய்துப்போகும் கொஞ்சமனிதரைப்போல உனக்குப்புலப்படுத்தாமல் போகக்கூடாதென் றெண்ணத்தையுரைத்தேன். ஆதலால் உதயமானதே உன் தந்தை தாயாரிடம் வினவி, என் மனதின்படி போக விடைகொண்டு வாவென்றறைய ருக்மாபாயி வாக்கை மறுத்துரைக்கக் கூடாக்கொள்கையால் மகா பாக்கியமென்று வணங்கித் தன் தாய் தந்தையருக்குரைத்து வாட்டமுகத்துடன் நின்றாள்.

சிதோபந்து விடோபாவை நோக்கி, அப்பா மருமகனே இளமைப்பருவமுள்ள நீ இப்போதே சன்னியாசியாகவெண்ணங்கொள்ளலாமா பிரியமுள்ள மனைவிபாலிப்படியும் விள்ளலாமா என்று எழுபத்தைந்து வயதுக்குமேல் சந்நியாசியாக வேண்டுமென்று சாஸ்திரம் முறையிடுகிறது அதறிந்த நீ இப்படி செய்யக்கூடுமா எவ்வர்னகாலத்தில் இந்திரியங்களிறத்தலென்பது கூடாது. ஒழுக்கமல்ல. சூதாடல் வாதாடல் முன்னம் இனிப்பாகத்தோன்றிப் பின்னெப்படி இடையூறுகட் கிடமுண்டாகுமோ அதுபோலவும், கோபத்தால் யாத்திரைபோய் தாபத்தை யடைவதெப்படியோ அதுபோலவும், சன்யாசமாகும்போது வெகு சந்தோஷமாகவே யிருக்கும். ஆனபின் இந்திரிய சேஷ்டையாலும் அந்தக்கரண வேஷ்டையாலும் வாட்டமடைய நேரிடும். நனவிற் சுழுப்தி நிலையையடைந்தவனே சன்யாசியென் றுரைக்கப்படும். காஷாய வஸ்திரங்களா லலங்கரிக்கப்படுவது சன்யாசமல்ல மனுயாசங்களை மாய்ப்பதே சன்யாசமாகும். பிர்மக்ஞானி யானதால் லேசானதென்று நினையாதே. திரிவுலகத்தரிலொரு க்ஞானியென்கிற பெரியோர்கள் வாக்கியத்தின் மர்மத்தை நன்றாயூகித்துப் பாரும் பூசையில் மானச பூசையே சிரேஷ்டமானது போல சன்யாசிகளில் மனநாச சன்யாசியே சிரேஷ்டமுள்ளவனாகும். மாயையைச் செயித்த நாரதனும் ஓர் மங்கையால் பங்கமுற்றான். பிரம்மசிருஷ்டிக் கெதிர் சிருஷ்டிசெய்த விசுவாமித்திரனும் ஒரு கோதையால் வேதையுற்றான் சுரகுருவான பிரகஸ்பதியும் அசுரர் குருவான சுக்கிராச்சாரியும் மாதர்களாசைக் குள்ளானார்கள். மாயாதீதரான திரிமூர்த்திகளும் அரிவையராசைக்குள் சிக்கினார்கள். எமனைச் செயித்.

தாலும் செயிக்கலாமன்றி மாரனைச் செயித்தல் மிகவுந் துர்லபம் சம்சாரத்தி லிருந்துக்கொண்டே சிரேஷ்ட மடைவது யோக்கியமல்லவா நீர்தெரியாதவரல்ல பலதரம்நான்சொல்லவென்கிற பல வாக்கியங்களுரைக்கும் மாமனுரை விடோபா வணங்கி, ஓ ஐயா! யுத்தகளத்திற் சென்ற வீரன் பகைவரை செயிக்கக் கூடாமற்போனாலும் புறங்காட்டியோடாமல் போர் புரிந்து மரணமடைந்து வீரசொர்க்க மடைவதுபோல் அடியேன் யதியானபின் தன்னை மறக்காச் சஞ்சலனுயிருந்தாலும் அகக்கருவி புறக்கருவிகளுக் கிடங்கொடுக்காமல் மனமென்னும் பகைவனை யெதிர்த்து வெதிர்த்து மேன்மையையேயடைவேன் பசியால் வாட்டமுற்ற சிங்கமானது அருகிலிருக்கும் சிறு கலைமானைக் கொன்று புசிக்காமல் யானையைத் தேடுவதுபோல விகாரமடைந்த நான் பேரின்பங் கிட்டாமற்போனுலும் அதையே நாடியிருப்பேனன்றிச் சிற்றின்பத்தைக் கோருவேனு மலத்தைம் பரிமளமென்று பூசிக்கொள்ளு மறிவீனனைப்போலத் துர்க்கந்தம்வீசும் தோகையர் போகத்தைக் கனவிலுஞ் சிந்திப்பேனுவென்கிற பல மொழிகள் புகன்று, அஸ்திக ளேந்திக்கொண்டு மாமன் மாமியாரைப் பணிந்து வைராக்கியத்தாற் றுணிந்து யார் மறுத்தாலுங் கேட்காமல் வெறுத்து வாரணாசியை நோக்கிப் போகலுற்ருர்.

அதனுல் ருக்மாபாயி அலக்கணுற் றழுதுக்கொண்டே மணாளன் பின்தொடர்ந் தோடலுற்ருள். தனையை தலைவிரிகோலமா யோடுவதைக்கண்ட தாயும் தந்தையும் பின்தொடர்ந்தோடி மனமுருகிவாடி விடோபாவுக் கனந்தம் நயனவார்த்தைக ளுரைத்துப் போகாமல் மறுத்தார்கள். விடோபா அவ்வசனங்களைக் கேட்காமல் சற்றுந் தங்காமல்போக ருக்மாபாயி தன் கொழுனன் ருள்களில் வீழ்ந்து பலதரந்தாழ்ந்து ஓ என் பிராணநாயகா! உம்மைப்பிரிந் துயிருடனிருக்கயென்னுலாகுமா. ஒருவரா லென்குறை போகுமாவென்று கறைந்தழத் தொடங்கினுள். விடோபா, ஓ பெண்ணே! நீ பதிவாக்கியங் கடக்காச் சதியானுல் என் வாக்கைத் தள்ளாமல் மறுத்தோர் மொழி விள்ளாமல், தந்தையின்பா லிருவென்றறைந்து அதிவேகமாய்நடந்து மறைந்தார். ருக்மாபாயி அவ்வாக்கியத்தாற் கட்டுப்பட்டு ஸ்மரணைகெட்டு நிலத்திற் சாய்ந்து மூர்ச்சை யடைந்தாள். அதுதெரிந்த தாயுந்தந்தை

யும் அலக்கணுற்று ருக்மாபாயிக் குபசாரணை செய்தெழுப்ப, ருக்மாபாயி மூர்ச்சை தெளிந்தெழுந்து தந்தையின் றாளில் விழுந்து இனி யென்னசெய்வேனென் றலறியழுது கடவுளைத் தொழுது தன் பிராணனை விடுவதற்கு முயற்சிகொண்டாள். அதனல் சிதோபந்து மிகவுந் துக்கித்து, ஓ அம்மா! பதிவிரதா சிரோன்மணி விருத்தாப்பியப் பருவமுள்ள எங்களைப் பரதவிக்கவிட்டு நீ உயிர் விடுத்தால் நாங்களும் உயிர் பிரிந்து பிராணனை விடமாட்டோமா இத்தோஷம் உன் மணாளனைச் சேராதா இப்படி கணவனுக்குக் கர்மம் சம்பவிக்கச் செய்யும் காந்தை யுத்தமியாவாளாவென, ருக்மாபாயி ஓ என் தந்தையே! கணவனைப் பிரிந்த நானுயிருடனிருப்பதனற் பிரயோசனமேது பிராண நாயகனைப் பார்க்காமல் நானிருக்கவே மாட்டேன். அவரைத் தேடிப்போகின்றேனென்று நடக்கச் சிதோபந்து மறுத்து, ஓ என்னரும் புதல்வியே! இறந்து போன சத்தியவானை விரதத்தாலெழுப்பிய சாவித்திரியைப் போல நீ சிலனுள் கௌரி விரதத்தை அனுஷ்டித்து வருவாயானல் உனது கணவன் உன்பாலடைவதற்குத் தடையில்லவேயில்லை. பெண்கள் வைராக்கியத்தின் முன் ஆடவர் வைராக்கியம் அணுவுக்கிணையாகும். இறந்தவனை எழுப்பிய விரதம் கணவனைக் கைவசப்படுத்தமாட்டாதா ஸ்ரீ பரமசிவனை மணஞ்செய்ய ஆசித்த பார்வதியும், ஸ்ரீகிருஷ்ணரை ஆசித்த ருக்மணியும் கௌரி விரதத்தாலல்லவோ கோரிக்கைகளீடேறக் களிப்புற்ருர்கள். அவ்விரதத்தை நீயு மனுஷ்டிப்பாயானல் அகத்திய முன்கொழுனன் இங்கடைந்து உனமனதுக் கிசைந்திருப்பான் என்று விரதமிருக்குந் தன்மையை யுரைக்க ருக்மாபாயி சற்றே யோசித்து நாமிப்போது கணவன்பின் தொடர்வதால் பதி வாக்கியத்தைக் கடந்தவளாவதன்றி அவருடனன்புற்றிருப்பதற்கு கூடாது விரதமிருந்து மணாளனைச் சேர்வதே உத்தமமென் றுறுதிகொண்டு விரதானுஷ்டானத்தில் பசுமரத்தாணிபோல் விருப்புற்றிருந்து காலங்கழிக்கத் தொடங்கினுள். விடோபாவோ அலங்காவதியைவிட்டு நீங்கிப் பலகாடுகளையும் நாடுகளையுந் தாண்டி வாரணுசியை யடைந்து கங்கையில் ஸ்நானஞ்செய்து மாதா பிதாக்களின் அஸ்திகளைப் பாகீரதியில் விடுத்துக் காசி விசுவநாதரைப் பணிந்து, ஞானுசாரியரை நாடிச் சிலனுள்தேடி அங்கு

திகம்பரராகியும், மாயா தீதராகியும், தேகஸ்மரணை யிறந்தவ ராகியும் பிர்மானந்தம் நிறைந்தவராகியும் விளங்கா நின்ற ஸ்ரீபாத ஸ்வாமிகளைக் கண்டு ஆனந்தங்கொண்டு அவரை வலம்வந்து பணிந்து அவர் பாதங்களிற் றன் திருநயனங் களை யணிந்து, ஓ சாந்தனே! உபசாந்தனே! ஞானவேந் தனே! வேதவேதாந்தனே! நாத நாதாந்தனே! யோகாந் தனே! ஏகாந்தனே! எனத் தோத்திரஞ்செய்து, அழுதகண் ணுந் தொழுதகையுமாய் நிற்கும் விடோபாவை, ஸ்ரீ பாத ஸ்வாமிகள் அருட்கண்ணுற் பார்த்து மார்புடன் சேர்த்து ஓ பவபந்தநாசனே! அருள்முக விலாசனே! என்னைப் பரப் பிர்மமாய்ப் பாவித்து அன்புடன் சேவித்துப் பலதரமேன் தொழுகிருய் கண்ணீர்விட்டே யழுகிருய் உனக்கென்ன குறை நேரிட்டது உரைப்பா யப்பாவென, அவ்வாக்கியத் தைக் கேட்ட விடோபா களிக்கடலிற் படிந்தவனாய் ஓ என் சத்குருநாதனே! மெய்ஞ்ஞான போதனே! பவப்பிணிக்கயர் ந்துவந்து உமது பக்கலடைந்தேன் பவசாகரத்தைக் கடந் தேன் முற்றிலு மென்னைக் காப்பாற்றுமையா களங்கமில்லா துய்யாவென்று போற்ற ஸ்ரீபாதஸ்வாமிகள் இம்மானிட ஜென்மத்தா லுனக்கென்ன அவஸ்தை நேரிட்டது இதோ சகலரும் சந்தோஷமாய் விஷய போகங்களை அநுபவித் துக்கொண்டு இதுவே மேலான போகமென விண்டு களிப் புற்றிருக்க நீமாத்திரம் துக்கமென்றேன் வெருப்புற்றுயென.

விடோபா ஓ ஸ்வாமி! நிஷ்காமி விஷங்களென்னுந் தோள்களும் இந்திரியங்களென்னும் சர்ப்பங்களும், காமக் குரோதங்களென்னும் வியாக்கிரங்களும், எண்ணங்களென் னும் மந்திகளும், அகங்காரமென்னும் யானைகளும் அபி மானமென்னும் முட்பன்றிகளும், இச்சையென்னும் கோ நாய்களும், அஞ்ஞானமென்னும் இருட் கூட்டங்களுஞ் சூழ்ந்த தேகமென்னும் காட்டிலகப்பட்டுக்கொண்டு தப்பிப் போக வழியில்லாமல் வெகுகாலமாய் வருத்த முற்றிருக்கு மென்னை இக்கணமே தேவரீர் பாதுகாக்க வேண்டுமென்று பணிய, ஸ்ரீ பாதஸ்வாமிகள் அப்பா இவ்விஷயேந்திரிய கரணாதி மிருகங்களைக் கண்டிக்குங் கடகமும் அஞ்ஞான விருளை நீக்கும் மார்க்கமும் அறியாமல் அதையருளும் தேசி

கஸ்வாமியை நானே வெகு நாளாய்த் தேடித் திரிகிறேன் என்னைப்போல் நீயும் நொந்து வந்தாயோ, நீங்காஜயந் தந்தாயோ, இனி இதைப் பகுத்துரைக்காமல் வேறேதேனுங் கேள் தருகிறேன் என விடோபா அகக்கரண புறக்கரணங்களை யொடுக்கும் உபாயமொன்று மாத்திரம் கிருபை கூர்ந்தால் எல்லாங் கொடுத்ததேயாகும். ஆதலால் ஏழையை வருத்தும் இந்திரியங்களை வெல்லும் அந்தக் கரணங்களைகொல்லும் தந்திர வித்தையை மாத்திரம் தந்தருளுமையாவென்று வணங்க, ஸ்ரீ பாதஸ்வாமிகள் ஓ பரிசுத்தனே! பரமபக்தனே! எனக்குத் தெரிந்த மேலான ராஜவசிய மந்திர முபதேசிக்கின்றேன் அதை வோர் மண்டலம் ஜபிப்பாயானல் இராஜன் வசமாவான் அதனல் ஸ்திரீபோகங்களினாலும் தண்டிகை சவாரிகளாலும், ருசியான போகங்களாலும் மேலான யோகங்களாலும், சுகமுற்றிருக்கலாம் இதை விடுத்துச் சன்யாசத்தை யடுத்துச் சங்கடமே னடைகிருயென, விடோபா, அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுற்சன், புரூரவன், கார்த்த வீரியன் என்னும் சக்ரவர்த்திக ளறுவரும் பட்டபாட்டைச் சாஸ்திரங்களி லறிந்த தென்ன பிரத்தியட்சமாய் அனேக ராஜர்களடையும் துன்பத்தையுங்கண்ட நான் இராஜபோகத்தை வேண்டுவனே? மோட்ச விருப்ப முள்ளோர் விஷயபோகத்தின்மே லிச்சை கொள்வாரோவென,

ஸ்ரீ பாதஸ்வாமிகள் ஓ வைராக்கியனே! போகத்தை யிகழ்ந்த அபாக்கியனே! எக்கியபல சித்தி மந்திர முரைக்கின்றேன் இதனு லில்லறத்தி லிருந்துக்கொண்டே யாகங்கள் செய்து மேலான சொர்க்கத்தை யடைந்து ரம்பாமிர்தாதி போகங்களாற் சுகித்திருக்கலாம் அதை நீக்கி இறந்துண்ணும் யதிதி ஆசிரமத்தையேன் கோருகின்ருயென, விடோபா தேவர்களுக்கதிபதியான தேவேந்திரன் ஓர் காலத்தில் பிரமஹத்திக்கயர்ந்து தண்டாமரைத் தண்டின் நூலில் நுழைந்திருந் தலக்கணுற்று மேகவாகனு யிருந்தும் தனது நந்தவனத்துக்கு ஜலமின்றி வாட்டமுற்று இருந்ததன்றி இராக்கதர்களால் பலதரம் பீடிக்கப்பட்டு இந்திர பதவியை விட்டு ஓடி வொளித்திருந்தானென்று சாஸ்திரங்களில் முறையிடுவ்

தன்றி நான் பொன்னுலகை யாசிப்பேனோவென, ஸ்ரீ பாத ஸ்வாமிகள் ஓ சீலனே! தவபரிபாலனே வேதங்கள் புகழும் அஷ்டாட்சரத்தை யுபதேசிக்கின்றேன் அதைச் சிலனாள் தியானஞ்செய்து வருவாயானால் ஸ்ரீமந் நாராயணர் வாசஸ்தானமாகிய பரமபதத்தை யடையலாம் இந்தப் பரமாம்சத்தையேன் வாஞ்சித்தாயென, விடோபா ஓ மாதவனே அஞ்ஞானவிருளை நீக்குமாதவனே பரம பதமடைந்த ஜெய விஜயாள் சனக சனந்தனாதிகளால் சாபமடைந்து இராட்சச சென்மமெடுத்து துன்மார்க்கரெனப்பேர்பெற்றதால் திருமால் பதவியும் வேண்டிலேனென பாதஸ்வாமிகள் அரியயனுந் தேடிக்காணாப் பரமசிவனார் வாஸஸ்தானமாகிய கைலாசத்தை யடையச்செய்யும் பஞ்சாட்சரத்தைப் போதிக்கின்றேன் இதனால் பரம பக்தனாகலாமென விடோபா கைலாசவாசராகிய பரமசிவனார் பிரமஹத்திக்கயர்ந்து பிச்சையெடுத்துழன்றதாலும், பார்வதி தட்சகப்பிரமாவின் யாகத்தில் வீழ்ந்திறந்து பர்வதராஜனுக்கு மகளானதாலும் சிவனார் பதமும் வேண்டிலேனென ஸ்ரீ பாதஸ்வாமிகள் ஓ புண்ணியவானே! அஜபா மந்திரமும் யோகப் பயிற்சியு முணர்த்துகின்றேன் அதனால் சித்த புருஷனாகி வேண்டிய சித்திகளை யடைந்து கற்பாந்தரங்களிலும் நசியாத் தூலம்படைத் திருக்கலாமென விடோபா சாகாமற் கற்பதேகல்வி செத்தாற் பிறவாமலிருப்பதே காட்சியானாலும் சூட்சமத்தில் மோட்சமார்க்க முணர்த்தும் ஞானதேசிகராகிய தேவரீரிருக்க யோகப் பயிற்சியைக் கற்றுக்கொண்டு பிராணனைக் கும்பித்து ஸ்தம்பித்துப் பிரத்தியட்ச எமவாதைக் குட்பட்டு ஸ்மரணைகெட்டுத் தறிபோலிருப்பதைப் பார்க்கிலும் பக்தனாவதே மேன்மை யாதலாலும் தேகமுத்தி யடையக் கூடாமையாலும் அசத்தியப் பிரபஞ்சம் மெச்சும் காரடிவித்தைக்குச் சமானமான பலசித்திகளும் அகத்தைவளர்க்கும் மகத்துவமானதாலும் அறுபத்துநாலு சித்தியும் முத்தியைக் கொடுக்காமையாலும் தாமசாதிகளை நீக்கும் மோட்சமார்க்கமே அனுக்கிரகம் புரியுமையாவென்று பணிய ஸ்ரீபாதஸ்வாமிகள் ஓ புண்ணியவானே! வேதத்தில் முறையிடும் மந்திரங்களையும் தந்திரங்களையும் பதங்களையும் இதங்களையும் நீக்கிவிடாமல் வேறேதனைக் குபதேசிப்பேன் இதற்குமேலான தெனக்குத் தெரியாது வேறே ஆசானைத்

தேடென் றுரைத்து, மௌன நாட்டத்தை யடைந்திருந்தார் கேட்டீர்களோ சித்தர்களே யென்று நாபாஜி சித்தர் பின்னுஞ் சொல்லுவார்.

சன்னியாசி விடோபா அத்தியாயம் முற்றிற்று.

நான்காவது அத்தியாயம்.

விடோபா ஞானோபதேசம்பெற்றது.

கேளுங்கள் சித்தர்களே! இப்படி ஸ்ரீபாத ஸ்வாமிகள் மௌனமுற்றிருக்க, விடோபா அவரை இணைபிரியாமல் பல நாள் தொடர்ந்து ஓர்நாள் சோபமிகுந்து அவரை வணங்கி ஓ என் சத்குருவே! உம்மையன்றி வேறோ ராசானை சரணமடையேன், காரணம் பதிவிரதையிற் சிறந்த உத்தம பத்தினி கணவனையன்றி மற்றைத் திரிமூர்த்திகள் வந்தாலும் வணங்குவாளன்றீ இணங்குவாளா? காவலன் அயோக்கியனுயிருந்தாலும்யோக்கியனை நாடுவாளா? நாடாள். அதுபோல உத்தமன் ஓர் அடிகளையடைந்து. இவருக்கு ஞானமார்க்கந் தெரியவில்லை யோக்கியருமல்லவென்று வேறு குருவைத்தேடான், தேடுவதினுல் மோட்சலட்சுமியைக் கூடான் தன்பதி என்ன துர்க்குண முடையவனுனுலும் அவனைச் சகதீசுவரனுகப்பாவிக்கும் விரதசீலியல்லவோ மேன்மையை யடைவாள்? அவ்வுத்தமியன்றி மற்ற விபசார மாதருக்கு இருணரகன்றி இகபரமும் கிட்டுமோ ஓ என்னையனே! மூன்று சங்கவருஷம் இராஜரீகஞ்செய்து வேதோப நிஷதபங்களும் இயற்றிய திருச்சங்குமகாராசன் தனக்காதி குருவான வசிஷ்டரைவெறுத்து விசுவாமித்திரரை யடுத்துச் சண்டாளனுய்த் தான் நாடிய சொர்க்கத்துக்குஞ் செல்லாமல் இகலோகத்திலும் நில்லாமல் தலைகீழாயிருக்கும் அவாந்திர லோகத்தில் அயர்ந்திருப்பான். இச்சூசனையை யறிந்த இவ்வடியேன் நீரே எனக்குகந்த ஆரியனென்று உமதடைக்கலம் புகுந்தபின் உம்மையன்றி வேறோ ரடிகட் கடிமையாவேனே என்னையேன் பரிசோதிக்கின்றீர். உமக்குத் தெரிந்திருக்கும் பிர்மக்ஞானத்தைப் போதித்து அஞ்ஞான மனதைச்சோதித்து, மமதகங்காரங்க ளறும்படியாகவும், பிரமானந்த வாரியில் மூழ்கும்படி

யாகவும், தேகஸ்மரணை யிறந்து திரியும்படியாகவும், கருணை கூர்ந்தாட்கொள்ளுமையா வென்றிரந்து கூறும் விடோபாவை ஸ்ரீ பாதஸ்வாமிகள் அன்புடன் பார்த்து மார்புடன்சேர்த்து ஓ சீலனே! உன்னைப் போலொத்த தீவிர வைராக்கியமுடையவனையே நான் தேடித்திரிகின்றேன் ஆதலால் நீவிவாகமான கிரகஸ்தனு விஷயபோக மறியாப் பிரமசாரியாவென்றுகேட்க விடோபா கிரகஸ்தனென்ருல் உபதேசங் கிடைக்கத் தடையாகுமென்றும் நிச்சயமாய்த் தாம் ஸ்திரீபோக மறியா பிர்மசாரியே யாமென்றுரைக்க ஸ்ரீ பாதஸ்வாமிகள் உன் தாய்தந்தை ஜீவித்திருக்கிருர்களாவென விடோபா யில்லையென ஸ்ரீ பாதஸ்வாமிகள் சந்தோஷ சித்தராய் ஓ விடோபா! உனக்கு வேதோப நிஷதமான பிரமோபதேசஞ் செய்கிறேன். ஏகமனதுடன் கேட்பாயாகவென்று அஸ்தமஸ்தசையோகஞ்செய்து பிராணவாதி மந்திரங்களும் மேன்மையாகியும் அசரீரி வாக்கியமாகியும், பல சித்திகளை லேசில் கொடுப்பதாகியும், நிர்க்குணத் தியானத்துக் குகந்ததாகியும், அத்வைத மந்திரமாகியும், வேதமுடிவாகியும், தேகபீடைகளை யெரிப்பதாகியும், மனுசஞ்சலங்களை யகற்றுவதாகியும், சதுர்வேதங்களுண்டாவதற்குக் காரணமாகியும், தானேபிர்மமென்னுஞ் சந்தோஷத்தை யளிப்பதாகியும் மூவரும் முனிவரும் சிந்திப்பதாகியும், அழியாப்பதவியை யளிப்பதாகியும், திரிபதார்த்தங்களாற் பூர்த்தியடைந்ததாகியும், தன்னை மறக்கும் ஐக்யபதத்தைக் காட்டுவதாகியும், சைவ வைஷ்ணவாதி சண்மதங்களை வாட்டுவதாகியும், அஞ்ஞான சந்தேக விபரீதங்களை நீக்குவதாகியும், மமதாகங்காரங்களை அடியோடும் போக்குவதாகியும், எல்லையற்ற அகண்டானந்த வாழ்வைத் தருவதாகியும், தியானித்தவனைச் சிரேஷ்டமான சம்பாவனையிற்கொண்டு வருவதாகியும் விளங்காநின்ற மகா வாக்கியத்தை உபதேசஞ் செய்தருளினுர். விடோபா தேசிகஸ்வாமிகளின் திருத்தாட்டாமரைகளிற் ருெழுது ஓ என்னையாவே! இவ்வற்புதமான மகா வாக்கியத்தின் மர்மத்தை விரித்துரைத்தாட்கொள்ளுமையா வென்று பணிய, ஸ்ரீ பாதஸ்வாமிகள் நமக்குகந்த மாணுக்க னிவனேயாகும் இப்பேர்க்கொத்த அதிதீவிர வைராக்கிய முடையவனுக் ககத்தியம் சொல்லவேண்டுமென்று உன்னி அப்பா விடோபா! நீமிகவும் புண்ணியவா

னதால் உனக்கிந்த மகா வாக்கியார்த்தஞ் சொல்லத் தொட ங்கினேன் ஏனெனில் பன்னிரண்டாண்டு பரிசோதித்த பின் பே பெரியோர்களின் மர்மம் வெளிப்படுத்துவார்கள் பாறை யின்மேல்விதைபோட்டாற்போல்* அபக்குவர்க்குரைக்கினபலமாய்ப் போவதன்றி உரைப்பவர்க் காயாசமும கேட்பவர்க் கதோகதியும் பலமாகும் நீ யிதற்குகந்தவ னென்றுரைக்கச் சம்மதித்தேன் நீசெய்தபாக்கியமே பாக்கியம், ஏகமனதுடன் கேட்பாயாக, மறப்பின்றி மனதிற் றரிப்பாயாக அதேனெனில் ஞானமே பிர்மமென்னும் ஓர் மொழியினர்த்தமே இருக்கு வேதம் முறையிடுகின்றது வேதபுருஷனுல் நாலு வாக்கியங் களுக்குறை நாலு வேதங்களால் விரித்துரைத்தும் அதற்கர்த்தமாகாமல் தயக்கமுற்ருன் தேவர்களுக்குக் காரணகுருவான பிரகஸ்பதி யென்பவரும் மற்ற ரிஷிகளும் ஞானகாண்டத்தில் தன்னுலானமட்டும் மகா வாக்கியார்த்தத்தை விரித்துரைத்து முடிவுபெருமல் தியக்கமுற்ருர்கள் அப்பேர்க்கொத்த வாக்கிய லட்சணத்தை என்னுலுரைக்கப்போமோ ஆயினும் என தாசாரியாருளோடுரைக்க நான் சிரவணஞ் செய்தபடி விரித்துரைக்காமல் சங்கிரகமாகப் புகல்கின்றேன் அதாவது ஞானமென்பது ஆத்மா, பிர்மமென்பது பரமாத்மா, ஞான ஸ்வரூபமே பிர்மமென் றுரைக்கப்படுவதே இதனந்தார்த்தமென்றுரைக்க, விடோபா ஞானமென்பதெது பிர்மமென்பதெது ஆத்மாவே பரமாத்மாவான தெவ்வண்ணம் விரித்துரையு மையாவென்று கேட்க, ஸ்ரீபாதஸ்வாமிகள் அப்பா விடோபா ஞானமென்து விஷயங்களையறியும் இந்திரியங்களையும், இந்திரியங்களையறியும் அந்தக் கரணங்களையும், அந்தக்கரணங்களை யறியும் சிதாபாசனையும் இதுகளெல்லா மொடுங்கும் அவித்தையும் சாட்சியாயிருந்தறிவதெதுவோ அதையே ஞானமென்றும் இப்படியே சமஸ்த வஸ்துக்களிலுமிருந்தறியும் சர்வசாட்சியே பிர்மமென்றும் வேதம் முறையிடுகின்றது.

அன்றிக் கூடஸ்தன் பிரத்யேகாத்மா திருக்குரோதம், சைதன்யம், சித்து, சத்து, ஆனந்தம், நித்தியம், நிர்மலம்,

* வாசிஷ்டம் இயற்குணஞ்சோதித்து முன்னேபின்னே யாவையுமாம். பிர்மம் நீயென்னல்வேண்டும் வியற்புறுமாசைபி லுழல்வாரச் இவ்வாறேதில் விழாத நிரகத்தில் வீழ்ந்ததாகும்.

நிர்க்குணம், நிர்விகாரம், நிரஞ்சனம் என்கிற பல நாமங்களுக் காதாரமாகிய சாட்சியே ஞானமே ஆத்மாவென்றும், பரப்பிரமம் பரிபூரணமே பராபரம், பரமேசுவரம், பரஞ்சோதி, பராத்பரம், நிரூபம், நிர்நாமம், நிஷ்களங்கம், அசலம், அகண்டாகண்டம், அட்சயம், ஆதி, அனாதி என்கிற பல நாமங்களுக் காதேயமாகிய சர்வசாட்சியாகிய பிர்மமே பரமாத்மாவென்றும் ஈசுவர வாக்கிய மிருக்கின்றதென் றருள, விடோபா ஓ ஸ்வாமி! ஓர் தேகத்திலிருக்கும் சாட்சியாகிய ஆத்மா சர்வசாட்சியாகிய பரமாத்மா எப்படி யாகுமென்று சங்கைசெய்ய ஸ்ரீபாதஸ்வாமிகள் திரிதீவட்டியென்று நாமம் வேறுபட்டாலும் பிரகாசமொன்றா யிருப்பதுபோல் ஆத்ம பரமாத்மா வென்கிற நாமத்தால் வேறுபடாமல் சுபாவமொன்றாகவேயிருக்கிறது எப்படியென்றால் பெரியதாயிருப்பதால் ஏரியென்றும், சிறியதாயிருப்பதால் மடுவென்றும், பெரியதாயிருப்பதால் நதியென்றும், சிறியதாயிருப்பதால் ஓடையென்றும் பல மனிதர்களுக்குக் கூட்டமென்றும், ஒரு மானிடனுக்கு மனுஷனென்றும், பல விருட்சங்களுக்குத் தோப்பென்றும், ஓர் தருவுக்கு விருட்சமென்றும், நாமம் விகாரப்பட்டதால் ஜல, மனித, விருட்ச, பாவம் வேறுபடாம லேகீகபாவமாயிருப்பதுபோல் அனேக சரீரங்களைக்குறித்து சர்வசாட்சி பரமாத்மாவென்றும் ஓர் சரீரத்தைக்குறித்துச் சாட்சி ஆத்மாவென்றும் உபாதி பேதத்தால் நாமம் வேறுபட்டதே யன்றி ஆத்மா பரமாத்மாக்களில் சற்றும்பேதமேயில்லை, பரமாத்மா சர்வ ஜீவாத்மாவென்கிற வேதப்பிரமாணமு மிருப்பதன்றி ஆத்ம பரமாத்மாவில் பேதப்படுத்தினவன் ரவ்ரவாதி நரகத்தையடைவானென்றுவியாசர் விஷ்ணுபுராணத்திலும், இவ்வியாசர் தந்தைக்குப் பாட்டனான வசிஷ்டர் வாசிஷ்டத்திலும், வால்மீகர் அத்தியாத்மீக ராமாயணத்திலும், மகாவிஷ்ணு பகவற்கீதை உத்தரகீதையிலும், ருத்திரன் சிவகீதையிலும், பிர்மா பிர்மகீதையிலும், ஸ்ரீராமர் ராமகீதையிலும், திருவாய்மலர்ந்திருப்பதன்றிச் சுகப்பிர்மரிஷிக்கு நாரதரும், சனக சனந்தனாதியர்க்குச் சாம்பவனும், பரத்வாசருக்கு வால்மீகரும், ஸ்ரீராமருக்கு வசிஷ்டரும், சுக்ராசாரியருக்குப் பிருகு ரிஷியும், பிரகலாதனன் அர்ச்சுனன் உத்திரவாதியோர்க்குப் பகவானும், சுவேதகேதுவுக்கு உத்தாலகரும், இந்திரனுக்

குப் பிரகஸ்பதியும் விதுரனுக்கு மயித்திரேயரும் தருமருக்குத் துருவாசரும் மாபலிக்கு சுக்ராச்சாரியும், அனுமாருக்குச் சீதையும், அகஸ்தியருக்குச் சுப்பிரமணியரும், புஜண்டருக்கு அம்பிகையும், சதானந்தருக்குக் கௌதமரும், பகீரதனுக்கு திரிதுவரும் தேவஹூதிக்குக் கபிலரும் போதித்திருக்கின்றார்கள்.

ஆதலால் மறந்தும் ஆத்ம பரமாத்மாக்களின் பின்னபாவஞ் சொல்லக்கூடாதென்றறைய விடோபா ஓ ஐயனே! ஆத்மாவே பரமாத்மாவானல் மூத்தியடைவதெது (1) பந்தததிவிருப்பதெவர் (2) ஆத்மாவுக்குக் கைவல்யங் கொடுப்பவர் யார் (3) மீளாக்கதிக்கு முயற்சிசெய்யுங் காரணமேன் (4) சாதுக்கள் சேவையேன் (5) புண்ணியத்தை யீட்டுவதேன் (6) சாஸ்திர விசாரணையேன் (7) குருவிசுவாசம்யேன் (8) ஈசுவர பக்தியேன் (9) என்கிற பல சங்கைகட் கிடமாகின்றதே, அறிவிலேனுக் கன்பாயனுக்கிரகம் புரியுமையாவென்று துதிக்க ஸ்ரீபாத ஸ்வாமிகள் ஓ விவேக விஸ்தீரணனே! முக்தியடைவது ஜீவனென் றுரைக்கத் தகும் (1) அச்சீவனை மிகத் தெளிவுடன் ஆராய்ந்து நன்ருயறிவூன்றி விசாரிக்கில் சுத்த சூன்யமாயிருக்கும் நிழலோடு போராடுவதுபோல் மதபேதகர் புறக்கரண அகக்கரணுதிகளின் கூட்ட விசேஷத்தால் நானென் றபிமானம் பூண்டிருக்கும் ஜீவத்வத்தைச் சிறுபிள்ளைகள் விளையாடலில் இவனிராஜன் இவன் மந்திரியென்கிற பல கோட்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டு விவகரிப்பதுபோல இல்லாத ஜீவத்தை ஏற்படுத்தி அதன்மேற் பாரத்தைச் சுமத்தி அநித்தியமான மாயா சம்சாரத்தில் மனப்பிரமைகொண்டு இல்லாததை யுண்டாக்கும் மாயா சம்பந்தத்துக்குள்ளாகி ஜனனமரண சாகரத்துக்கு ளமிழ்ந்திருக்கிறார்கள். தான் சச்சிதானந்த ஸ்வரூபமாகிய ஆத்மாவாயிருக்க மாயாந்தகாரத்தால் மறந்து தானல்லாத தேகாதிகளைத் தானென்று யிருமாப்புற்று நாடு நகர் பெண்டுபிள்ளை பண்டபதார்த்தங்களைச் சதமென்றும், சுகந்தரு மிதமென்று நம்பிப் பிரத்தியட்சத் துக்காத்யமான விவைகளை நித்யானந்தமாகப் பாவித்துத் தன்னலே தான் கெட்டால் அண்ணவி யென்ன செய்வானென்கிற பழமொழிப்படி க்ஷணபங்கமான காயத்தைக் காப்பாற்றிக் காந்தையரைப் போற்றித் தானின்னவஸ்

துவென் றறியாமல் தேகேந்திரிய பாவமடைவதே பந்தம் இவர்கட்குத் துக்கமயமான சரீரமே கற்பகாலங் கடந்தும் சொந்தம் தானல்ல வாக்கையைத் தானெனப் பிரமிப்பதே பவதொந்தம் ஸ்தூலசூட்சும காரணமென்றும் திரி சரீரத்தை யாராய்ந்தறியாதே மதிமந்தம். (2) என் தேகம், என் கண், என் செவி, என் வாய், என் மனம், என் பிராணன், என் சீவனென்றுரைக்கும் நீ வேருயிருந்து சாக்ராவஸ்தையில் இந்திரிய வியாபாரத்தையும், சொப்ன வஸ்தையில் மனோ வியாபாரத்தையும், சுழுப்தியவஸ்தையில் சுத்தசூன்யமாயிருக்கும் ஜீவத்தன்மையையும் சாட்சியா யறிந்துகொண்டிருக்கும் உன்னைக் கரதல நெல்லிக்கனிபோலக் காட்டுங் காரணகுருவே மோட்சமளிக்கும் ஜெகதீசுவரனுகும். (3) வைகுந்தமாதி யடைந்த ஜயவிஜயா ளாதியோர்க்குப் பின்னும் ஜன்மம் வந்ததுபோல் தனக்குப் பிரத்தியட்ச நகரமான தனுவுண்டாகாமல் ஜாக்ர சுழுப்தி நிலையையடைய முயற்சிப்பதே பரமாத்மாவி லைக்யப்படுங் காரணமாகும். (4) துர்க்கந்தமான விஷயானந்த போகத்தில் மலத்தை யாசித்த சிறு வண்டைப் போலவும், பன்றியைப் போலவும், அமிழ்ந்து இடையூறு செய்யும் எமனுக்கு இரையாகும் சரீர வாஞ்சையையும் துக்கத்தைச் சுகமாகக் காட்டும் இந்திரிய போகத்தை மேன்மேலும் வாஞ்சிக்கச்செய்யும் துர்ச்சங்கம் நீங்கி இந்திரிய நீக்கி வைராக்கிய சீலராய்ச் சமாதி நிஷ்டானுபூதியால் அகண்டானந்தத்தால் திருப்தி யடையச்செய்யும் சற்சங்க சகவாசஞ்செய்ய வேண்டுவதவசியமாகும். (5) அனித்தியமாகிய தேகத்தைக்காக்கும் புண்ணியத்தை யளித்து நித்யமான பிரமபதத்தை அபேட்சித்து ஸ்ரீ ஹரி பரந்தாமனை அந்தியகாலத்தில் தரிசித்து மறுஜெனனத்தில் சிறுத்தொண்டனுய்ப் பிறந்து கார்த்திகேயரால் பிரமக்ஞான முபதேசிக்கப்பெற்று புண்ணிய பதவிகளைத் தரிசித்து விதேக கைவல்யத்தை யடைந்த கர்ணனைப்போலத் தர்மத்தைப் பெருக்குவதே உத்தமர் துதிக்கும் முத்திக்கு வழியாகும் (6) மூட சிரோன்மணிகளாகிய சிலர் காரியகுருக்கள் போதிக்கும் யாதாமோர் நிலையில் மனதை நிறுத்தி எதையோ ஒன்றைத் தியானித்து மற்றோர் மார்க்கத்தைச் சிரேஷ்டமாய்ப்பேச அதில் வாஞ்சைகொண்டு முன்னும் அனுஷ்டித்ததை வெறுத்துச் சஞ்

சல மடையச்செய்யும் அவிவேகஞானத்திற் புகாமல் மனோ திடத்தையும் சம்பாவனையும் சந்தோஷத்தையும் சாந்தத்தை யும் ஏகத்தியானத்தையும் நிர்ச்சல சித்தத்தையும் அனுபவக் ஞானத்தையும் திரியாவஸ்தைகளின் மர்மத்தையும் மனோ வுற்பத்தி நாசத்தையும் பவபந்தம் வந்த சம்பந்தத்தையும் பலசாஸ்திரமான கர்ம காண்டத்தையும் நானீ யென்னும் அகம்பாவத்தையும் மாற்றும் ஞானசாஸ்திர விசாரணையை அகத்தியஞ் செய்யவேண்டும். (7) மரணபவமென்னும் கால நேமியிற் சுழன்றலுத்து துன்பம் வலுத்து மோகாந்தகாரக் கூபத்திலமிழ்ந்து நன்கு தீதறியாப் பசுவைப்போலாகிய பசு வென்ற பேரையேயடைந்து மேலுமேலு மூழாமல் ஊனக் கண்களை மறைத்து ஞானக்கண்களைத்திறந்து அநேக ஜன் மங்களுக்கு வித்தான சஞ்சித கர்மத்தைப் பஞ்சுமூட்டை பற் றிய ஊழித்தீயைப்போ லெரித்துத் தாதாகாரமாயிருந்து சதா காலமும் ஆனந்தமயமா யிருக்கச்செய்யும் ஆசிரியர்மேல் விசுவாசம் அசத்திய மிருக்கவேண்டும். (8) அபமிர்த்தி யுவாதிகளை நீக்கி அதோகதிகளாக்கும் கொடிய மனத்தைப் போக்கிப் பூரண க்ஞானியாகாமல் மரித்த உத்தமருக்கு மறு ஜென்மத்திற் றெளிவளித்து அப்பா பிரகலாதனே இனிப்பிற வாவரங் கேளென் றுரைத்ததுபோ லுரைத்தும் சங்கடமான காலத்தில் பிரசன்னமாய் வந்து களிப்படையும்படியான வர ங்களைத்தந்து காத்து இரட்சிக்கும் இஷ்ட தேவதைமேல் பூரணபக்தியு மிருக்கவேண்டும். (9) என்று விடோபா கே ட்ட நவசங்கைகட்கும் உத்தரமுரைத்து இனி நீ தேகாதி களை நியதிசெய்து ஆத்மாவாகி ஆத்மாவே பரமாத்மாவென நம்பி ஆனந்த மடையலாமென்றறைய விடோபா ஆத்மா வே பரமாத்மாவென் றறிந்ததனுல் ஆனந்த மடையலாமோ வென ஸ்ரீபாதஸ்வாமிகள் மந்தகாசம்புரிந்து நீ யானந்த ஸ்வரூபமாயிருக்க வேறு ஆனந்தத்தைத் தேடுவானேனென விடோபா நான் ஆனந்தஸ்வரூப மெப்படியாவேன் ஆனந் தமாயிருப்பவனுக்கு இந்தத்துக்க மிருக்குமோவென, ஸ்ரீபாத ஸ்வாமிகள் உனதெதார்த்த ஸ்வரூபத்தை இன்னம் நீ யறி யாமல் அஞ்ஞான மயமாகவே யிருப்பதால் ஆனந்தமயமாக வில்லையென விடோபா தேகேந்திரிய கரண பிராண ஜீவவி ருளையறியும் ஆத்மாவே நானென்றறிந்துகொண்டும், ஆன

ந்தமுதயமாக வில்லேயேயென ஸ்ரீபாதஸ்வாமிகள் தேகாதிகள் தானல்ல ஆத்மாவே தானென்றறிந்தபடி ஆத்மஸ்வரூபமா யிருந்தாலல்லவோ ஆனந்தரூபமாவாயென,

விடோபா ஆத்மஸ்வரூபமாவதெப்படி அதற்குச் சாதனமென்ன திருவாய்மலர்ந் தருளுமையாவென, ஸ்ரீபாதஸ்வாமிகள் தேகாதிகள் தானல்லவென்று நியதி செய்தவண்ணம் தேகாயாசங்களுக்கும் இந்திரிய கரணங்களுக்கும் மனோராச்சியங்களுக்கும் இடங்கொடாமல் நிக்கிரகஞ்செய்து ஆத்மாவே தானுகி விஷயாதிகளை யடக்குங் கோனுகி மானுபிமானங்களைக் கடந்து மௌனமுத்திரையை யடைந்து சங்கல்ப விகல்பத்துக் குட்படாமல் நிர்விகல்ப சமாதியைவிடாமல் இருப்பதே பிர்மானுசந்தானமென விடோபா பகிர்முக திருஷ்டி நீங்கி அந்தர்முக திருஷ்டி ஓங்கி நிர்ச்சலனமா யிருப்பதால் அகண்டானந்தத்தை யனுபவிக்கக் கூடுமாவென, ஸ்ரீபாதஸ்வாமிகள் நனவிற் சுழுப்தி நிலையையடைவதே ஆனந்தமென விடோபா நியதிசெய்து சூனியமாக்கிச் சாட்சிஸ்வரூபமாகி அசையாச் சித்திரம்போலிருந்தும் ஆனந்தமுதயமாக வில்லேயேயென, ஸ்ரீபாதஸ்வாமிகள் கருவிகரணுதிகளொழிந்த சுழுப்தி எவ்விதமா யிருக்கிறதென, விடோபா ஆனந்தமாயிருக்கிறதென, ஸ்ரீபாதஸ்வாமிகள் என்ன காரணத்தால் ஆனந்தமாயிருந்ததென, விடோபா பிரபஞ்சவியாபாரமும் மனோவிகல்ப மில்லாமையால் ஆனந்தமா யிருந்ததென ஸ்ரீபாதஸ்வாமிகள் சுகதுக்கங்கள் மனதிலிருப்பதாலும் மனம் சுழுப்தியவஸ்தையில் மறைந்தாலும் வேறு கருவிகளில்லாமல் எல்லாஞ்சூனியமாகி ஆத்மா ஒன்றுமாத்திரமிருந்ததால் ஆனந்தமாயிருந்தது அவ்வானந்தமே ஆத்மஸ்வரூபமென விடோபா இந்தச் சாக்ராவஸ்தையில் ஆனந்தமாயிருப்பதெப்படியென ஸ்ரீபாதஸ்வாமிகள் அகக்கரண புறக்கரணங்களெப்போதும் துக்கமயமேயாகும். ஆத்மா எப்போதும் ஆனந்த மயமேயாகும் இது தெரியாமல் தேகாதிகளின் பீடையை ஆத்மாவின் மேலேன் சுமத்துகிறுயென, விடோபா தேகேந்திரியாதிகளின் துன்பங்களால் ஆத்மானந்தம் மறைபடுகிறதேயென ஸ்ரீ பாதஸ்வாமிகள் மரணபரியந்தம் தேகாதிகளுக்குச் சுகதுக்கம் வந்துக்கொண்டே யிருக்கும் ஆத்மானுபவ முடையவனுக்கு அச்சுகதுக்கங்கள் சொற்பன

காட்சிபோல் தோன்றியுந் தோன்ருமலிருக்கும் இப்படி தோன்றுவதும் அப்யாசிக்கல்லாமல் ஆரூடனுக் கொன்றுந்தோன்ரு ஆனந்தமாகவே யிருப்பானென விடோபா இப்படி ஆனந்த மயமாயிருப்பவன் தானே மோட்சபாக்கியம் பெறுபவன் மற்றவர்களடையக் கூடாதோவென ஸ்ரீ பாதஸ்வாமிகள் பிரமவித்து பிரமவான் பிரமவாரியான் பிரமவரிஷ்டன் என்கிற நால்வரும் மோட்சமடைபவர்களே யானாலும் நானின்ன தேசத்திலிருக்கிறதும் தானின்னுனென்பதும் மலசல விர்ச்சனையாவதும் சட்ரசங்களின் சுவையும் அறியாப் பிரமவரிஷ்டனே இவனே பிர்மானந்த வாரியில் மூழ்கித் தன்னைமறந்து ஜீவன்முத்தித்தன்மையை கரதலக்கனிபோல அடைந்தவன் அவ்வரிஷ்ட பதத்தையே நீயடைந்து ஆனந்தானுபோகம் பெறக்கடவாயென விடோபா ஜீவனிருக்கும் போதே மோட்சமடையக் கூடுமாவென ஸ்ரீ பாதஸ்வாமிகள் மோட்சமென்பதி னர்த்தம் மோசனமாம் மோசனமென்பது பந்த விமோசனமாம் பந்தமே நரகம் பந்த நிவர்த்தியே மோட்சம் துக்கமே நரகம் பிரமானந்த மோட்சமன்றி வேறு மோட்ச ஸாதனம் எங்குமில்லை. ஆதலால் துக்கமயமான வியாபாரங்க ளொழிந்து சதா ஆனந்தமயமா யிருப்பா யப்பாவென விடோபா அடியேன் பேரின்பவாரிதியில் மூழ்கி ஜீவன் முக்தியடைய எத்தனை நாள் செல்லுமோ தேவரீருடைய பரிபூரணதயை எக்காலத்தில் வருமோவென் றயர்ந்து நிற்க, ஸ்ரீ பாதஸ்வாமிகள் அப்பா ஒப்பிலா பிரமக்ஞானியே! என்னிரு கண்மணியே ! இன்றுடன் தேகாபிமானத்தை விடுத்து வலிமையான இச்சையைத் தடுத்துக் குட்சி பாதையி னிமித்தங் கிடைத்ததுண்டு உன்னை யண்டினோர்க் காத்மானுபாவத்தையே விண்டு மன வெண்ணங்களை மாய்த்து மானுபிமானங்களைத் தேய்த்து ஆத்ம ஸ்வரூபமாய்ப் பரமாத்மாவி லைக்யமாய்ப் பரிபூரணமாய்ப் பரமானந்த பரவசனாய் மௌன சமாதியை யடைந்திருக்கக்கடவாய் யென்று பூரணாபிஷேகஞ்செய்து சைதன்ய சுவாமியென்கிற பேரைக் கொடுத்துத் தானும் பரமசமாதியடைந்து ஆனந்த மேலீட்டாற் றன்னைமறந்து அசைவற்றிருந்தார். விடோபா ஆசாரியருடைய பூரண கடாட்சம் பெற்றுக்கொண்டதால் பஞ்சு மூட்டையில் நெருப்புப் பற்றியதுபோலச் சங்கல்பங்களும்

பஸ்பமாய்ப் பரமானந்த நிஷ்டையிற் பசுமரத்தாணிபோற் பதிந்து தன்னைமறந்து தலைவனிற் கலந்து பேய்பிடித்தவன் போலவும் சேய் இருப்பது போலவும் வாரணாசியில் பிரகாசித்துக் கொண்டிருந்தார். கேட்டீர்களோ சித்தர்களே யென்றும் பின்னும் நாபாஜிசித்தர் சொல்லத் தொடங்கினர்.

விடோபா ஞானோபதேச அத்தியாயம் முற்றிற்று.

ஐந்தாவது அத்தியாயம்.

விடோபா கிரகஸ்தாசிரமம்.

வாருங்கள் சித்த சிகாமணிகளே! என்னிரு கண்மணிகளே விடோபா வாரணாசியில் இவ்விதமாயிருக்கையில் அலங்காவதியில் சீதோபந்து ஓ பகவானே! என்னருமைப் புத்திரியைச் சம்சார விச்சையில்லா விடோபாவுக்குப் பாணிக்கிரகணம் செய்யும்படியாய்ச் செய்து என் கழுத்தைக்கொய்து சதிபதிக ளொற்றுமையோ டிருக்காமல் பிரித்துவிட்டாயே! ஒப்பிலாப் பதிவிரதையாகிய என் தனையை படுந்துயர்பார்க்க என்னாலாகவில்லையே! தீராத தொல்லையே! ஓ தெய்வமே! இனியென்ன செய்வேனென்று தியானஞ் செய்துக்கொண்டே வந்தார் அவர் மனைவியோ விடோபாவும் ருக்மாபாயும் சந்தோஷமாய்க் கூடிக்களித்திருக்கக் கருணைகூறுவாயென்று இலட்சுமியைப் பூசித்துக்கொண்டே வந்தாள். ருக்மாபாயி நாடோறும் அதிகாலையி லெழுந்து சக்கரதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து யீரவஸ்திரத்துடன் அரசும் வேம்புங் கலந்திருக்கும் விருட்சத்தை நூற்றெட்டு தரம் பிரதட்சணஞ்செய்து தன் பதியின் திருநாமமாகிய விடோபா வென்னுந் திருநாமத்தையே பதினாயிர முருவேற்றி மூன்றுஞ் சாமத்தில் வீட்டையடைந்து ஓர்பொழுதுண்டு தரையிற் புரண்டு நல்லவஸ்திராபரண மணியாமல் தாய் தந்தையரோடும் பேசாமல் கூந்தல் சடைகளாய்த் தொங்க பார்த்தோர் பராசத்தி யென்று வணங்க பேய் பிடித்தவள்போல் குணம் வேறுபட்டுக் கிரகஸ் தாசிர்மத்துக்கு மாறுபட்டு நாள் கழிக்கத் தொடங்கினாள் இப்படி பதினாறு மதிகள்கழிய தாய்தந்தை தனையை யென்னும் மூவர் செய்யும் தபோபலமானது விடோபாவின்

மனதிற் பிரவேசிப்பதனுற் பயனில்லையென்று அவருக்கு சன்யாசங்கொடுத்த ஸ்ரீபாதஸ்வாமிகளின் மனதிற் பிரவேசித்து அவருடைய ஆரூடக்ஞானத்தைக் கலைத்து சஞ்சார சமாதி செய்யும்படியான சலனத்தைக் கொடுத்து அஃதறியா ஸ்ரீபாத ஸ்வாமிகள் சஞ்சாரசமாதி செய்யவேண்டுமென்கிற எண்ணங் கொண்டு வாரணுசியைவிட்டு அலங்காவதியை நோக்கிப் புறப் பட்டுப் பல நாடுகளைக் கடந்து சக்ரதீர்த்தத்தை யடைந்து அதற் கருகாயிருக்கும் அரசவிருட்சத்தின்கீழ் ஆயாசத்தால் சயனித்துக்கொண்டு ருக்மாபாயின் கோறிக்கையை யீடேற்ற வந்த ஜகதீசுவரன்போல பிர்ம்மானந்த நிஷ்டையி லெழுந் தருளியிருந்தார்.

இப்படி மறுநாள்பரியந்தம் அசைவற்று ஆனந்தபர வசத்தில் தன்னை மறந்திருக்கும் அற்புதத்தைக்கண்ட ருக்மா பாயி இவர் யாரோ மகாபுருடனென்றும் இப்பேர்க்கொத்த மகாத்மாவால் தீராக்குறையு மூண்டோவென்றும் அதிசீக்கிர மாய் வீட்டையடைந்து பலகாரமும் பரமான்னமு மேந்திக் கொண்டு நமது சஞ்சலம் நீங்குமென்றுவந்து அவாருகிற் சென்று பயபக்தியுடன் நின்று ஓ ஸ்வாமி! அன்னமில்லா ஆயாசத்தால் களைத்திருக்கின்றீரோ அல்லது பிர்மானந்த மேலீட்டால் தன்னை மறந்திருக்கிறீரோ ஓ பகவானே! அடி மை கொண்டுவந்த பலகார பரமான்ன மூட்கொண்டு ஆயா சந் தீர்த்துக்கொண்டு பிர்மநிஷ்டையி லெழுந்தருளி யிருக்க லாம் எழுந்திரும் சுவாமியென்று இனியகுரலோடு அவர் நிஷ்டை பிரஷ்டமடைய கூப்பிட்டாள் குயிலோசைபோன்ற தொனியைக்கேட்ட ஸ்ரீபாதஸ்வாமிகள் நிஷ்டைகலைந்து கண்களைத்திறந்து ருக்மாபாயைப் பார்த்து கரங்களைச் சேர் த்து ஓ அம்மா தபவேடமாயிருக்கின்ற நீ யார் என்னகுறை யால் வாட்டமுற்று தபநாட்டத்தி லிருக்கிறுயென, ருக்மா பாயி ஓ ஸ்வாமி! எனக்குற்ற குறையைப் பின்னுல் சொல்லு கிறேன் பலகார பரமான்ன மூண்டு ஆயாசந் தீருமையா வெ ன்று வணங்க ஸ்ரீபாதசுவாமிகள் பசிமிகுதியால் புசித்து உன் குறையைச் சொல்லுமம்மாவென, ருக்மாபாயி எனக்குப் புத் திரபாக்கியம் வேண்டுமென, ஸ்ரீபாதஸ்வாமிகள் ருக்மாபாயி செய்த உபசரணைக்குச் சந்தோஷப்பட்டு ஓ அம்மா! உனக்கு

நான்கு சிசுக்கள்பிறக்க வரமளித்தேன் இவ்வேஷத்தை மாற்றி உன் கணவனோடு சந்தோஷமாகக்கூடி யிருப்பாயாக சமஸ்த சுபங்களும் பெற்று வாழ்ந்திருப்பாயாகவென அதுகேட்ட ருக்மாபாயி நமதுகணவன் வரலாற்றை யுரைக்குமுன் நான்கு கான்முளையைப்பெற வரமளித்து விட்டாரே நமது காவலனைக் காண்பதெப்போ களிப்புடன் சேர்வதெப்போ தனயரைப் பெறுவதெப்போ சந்தோஷ முறுவதெப்போ வென்று நகைத்தாள் ஸ்ரீபாதஸ்வாமிகள் ஓ அம்மணி! என் வாக்குப் பொய்யாகுமென உன்னியா நகைத்தாய் திரிமூர்த்திகள் தடுத்தாலும் என்னாசீர்வாதத்துக்குத் தடைவராமல் மாந்தாதாவின் பத்தினிக்கு நான்கு புத்திரபாக்கியமளித்த ஓர் முனியின் வாக்கியத்தி னுறுதிப்பிரகாரம் நீ நான்கு பிள்ளைகளைப்பெற்றுச் சுகமுற்றிருப்பாயென, அவ்வுறுதி வாக்கியத்தைக்கேட்ட ருக்மாபாயி இப்படியும் நமக்கனுகூலகாலமுண்டாகுமா நிச்சயமென்ன நம்பலாகுமாவென்று களிப்பின் மிகுதியால் மேன்மேலும் மந்தகாசம்புரிந்து ஆனந்தக்கண்ணீர் சொரிந்து ஒன்றுந் தோன்றாதவளாய் பதுமைபோ லசைவற்று நின்றாள் ஸ்ரீபாதஸ்வாமிகள் சந்தேகங்கொண்டு ஓ அம்மா! நீ நகைத்துக் கண்ணீர்விட் டழுங்காரணமேன் தெரியச்சொல்லுவாயென்று வற்புறுத்திக்கேட்க, ருக்மாபாயி ஓ என்னாண்டவனே! உமது வாக்கியப்படி சுபமங்கிலியத்துடன் சகல சாம்பிராச்சியமும் பெற்றுவாழ்வது நிச்சயமாயினும் அக்கினியில்லாமல் பாகமாகுமா? எண்ணெயில்லாமல் விளக்கெரியுமா? ஜலமில்லாம லங்குரம் புறப்படுமா? விருட்சமில்லாமல் பலமுண்டாகுமா? புருடனைப்பிரிந்த நான் புத்திரரைப் பெறக்கூடுமாவென, ஸ்ரீபாதஸ்வாமிகள் ஓ அம்மணி உன் கணவன் வெறுப்பா லுன்னைப்பிரிந் தெங்கிருந்தாலும் என்னாசீர்வாதப் பலனால் உன்மேல் விருப்பங்கொண்டு வந்துன்னைச் சேர்வான் இனி அவதியுறப் படாதேயென ருக்மாபாயி ஓ சுவாமி! சமுசாரத்தி லிருந்தபோதே தொடாத என் கணவன் இப்போது சன்னியாசியா யிருக்கின்றாரே அவர் சமுசாரத்துக் குட்படுவாரா காரணஞ் சொல்வதற்கு முன் அவசரப்பட்டு ஆசீர்வாதஞ் செய்தீரே கருணைமழை பெய்தீரே உமது வாக்கியப்படி நடப்பதற்குச் சன்யாசியான என் கணவன் சமுசாரியாக வேண்டுமேயென,

ஸ்ரீபாதஸ்வாமிகள் ஓ! புண்ணியவதி ஆயிரம் பேர்க ளுக்குத்தான் சிஷனுகலா மன்றி ஒருவனுக் காசானுவது கூடாது ஏனெனில் சப்த நரகங்களுக்கு அக்கினி வைப் பதும், சிஷனுக் கிருக்கும் எழுவகைப் பிறவிகளை மாற்று வதும் ஒப்பாகும், காரணம் ஏழுபட்டணங்களை எரிப்பத ஞல் உண்டாகும் பாவத்தை நீங்குவது லேசாகவும் அனேக ஜன்மங்களுக்கு வித்தாயிருக்கும் மாணுக்கனுடைய சஞ்சித கர்மத்தைப் பஸ்பமாக்குவது கடினமாகவும் இருக்கும் ஒரு சிஷ்யனை ஜன்மசாகரத் தமிழால் மோட்சமடையச் செய் தல் எளிதானதல்ல ஒருவனை கிர்தார்த்தனுக்க ஆசான் தான் செய்த தபத்தை யெல்லாம் தாரைவார்க்க வேண்டும் இதை யறியாக் காரிய குருக்கள் டம்பத்துக்காகவும் பணிவிடைக்காக வும் அர்த்த நிமித்தமாகவும் அனேகரைச் சிஷர்களாக்கிக் கொண்டு அதோகதிக் காளாகிருர்கள் அதுபோல உனது கணவன் சம்சாரியா யிருக்கச் சன்னியாசங் கொடுத்த ஆசா னெவன் அப்படி சன்னியாசங் கொடுத்த தேசிகனும் காஷா யம் பெற்றுக்கொண்ட மாணுக்கனும் குற்றத்துக்குள்ளாவார் கள் நல்லதுன் கொழுநன் எந்தத் தேசத்தி லிருக்கிருன் யா ரிட முபதேசம் பெற்றுக்கொண்டான் சொல்லுமம்மா வென ருக்மாபாயி ஓ சுவாமி! இப்போது காசிதேசத்தி லிருக்கின் ருர் உபதேசம் யாரிடம் பெற்றுக்கொண்டாரோ யானறிகிலே னென ஸ்ரீபாத ஸ்வாமிகள் ஓ பாக்கியவதி! என்ன காரணத் தா லுன்னைப் பிரிந்துபோனுன் பிரிந்தெத்தனை நாளாயிற்று பதிவிரதையான நீ அவனைத் தொடர்ந்து போகாமலிருக்க காரணமென்ன சொல்லுமம்மா வென, ருக்மாபாயி தன் கணவன் தந்தைதாய் விவாகஞ்செய்ய அதைத் தடுத்து யாத் திரை வந்ததும் அலங்காவதியை யடைந்ததும் தன் வீட் டில் சயனித்ததும் தன் தந்தைக்குப் பகவான் சொர்ப்பனஞ் சாதித்ததும் மறுநாள் கணவனுடைய கனவி லுரைத்ததும் ஆர்வலன் நடுராத்திரியி லெழுந்து போனதும் தான் மறித் ததும் அசரீரி விவாகஞ் செய்துக்கொள்ளென்று பகர்ந்த தும் தந்தை பலவந்தமாய் பாணிக்கிரகணஞ் செய்ததும் ஐந் தாறு வருஷங்களாகத் தன்னை யேரிட்டுப் பாராமலிருந்ததும் தன் தாய் தந்தை மரித்த சாறிகை மூன்னிட்டுக்கொண்டு கா சிக்குப் பிரயாணப்பட்டதும், தன் தந்தை கூடவேதொடர்ந்·

ததும் பின்பு சன்னியாசியாக இச்சை யிருப்பதை வெளியிட்டதும், பதிவாக்கியத்தை மறுத்தல் பதிவிரதைக் கழகல்லவென்று தன்னை மறித்துப்போனதும் சொல்லி முடித்து ஓ என்னையயனே! என் நாயகன் என்னைப் பிரிந்து பதினாறு திங்களாயிற்று பதிவாக்கைக் கடக்கக்கூடாக்குறையால் அவரை தொடர்ந்து போகாம லிருந்துவிட்டேன் காரணங்க ளிப்படியிருக்க யான் புத்திரரை யெவ்விதமாய் பெறுவேனென.

ஸ்ரீபாதஸ்வாமிகள் ஓ விரதசீலியே! அதிதிகட்கனுகூலியே! உன் மணாளன் குணங்குறிரூபம் வயது சொல்வா யம்மாவென, ருக்மாபாயி அவர் குணாதிசயங்களைச் சொல்லிக்கொண்டேவர, அதுகேட்ட ஸ்ரீபாதஸ்வாமிகள் அம்பலத்தில் கொண்டுவரப்பட்ட விபசாரியின்மனம்போலவும் தண்டனைக் குட்பட்ட குற்றவாளியின் நெஞ்சம்போலவும் உள்ளங்கலங்கிப் பித்தசுரக்காரனுக்கு மதுரமான சர்க்கரை கசப்பதுபோலவும் விட நாயகிக்கு நிஷ்காமியான கணவன்மேல் வெறுப்புறுவதுபோலவும் துவேஷமுற்பவித்து ஓ பதிவிரதையே! உன் ஆர்வலன் நாமதேயம் என்ன சொல்லுமென ருக்மாபாயி கணவன் திருநாமம் வாக்காற் சொல்லக்கூடாக் குறையால் தரையில் வரைந்து அத்திவ்ய நாமத்துக்குச் சிரசாஷ்டாங்கமாய் வந்தனஞ்செய்ய, அதைக் கண்ட ஸ்ரீபாதஸ்வாமிகள் தனது மாணாக்கன்மீது அதிககோபங்கொண்டு தூஷணவார்த்தைகள் விண்டு இக்கணம் அந்த விடோபா வென்னும் பொய்யனைப் பஸ்பமாய்ப்போக ஜபித்துவிடுவேன் ஆ ஆ உனக்குக் கொடுத்த ஆசீர்வசனத் தடையாலல்லவோ என்னிடம் சன்யாசம் வாங்கிக்கொண்ட உன் கணவனுக்குச் சாபங் கொடுக்காமல்பொறுக்க நேரிட்டது சொல்வதற்கரிய பத்தினியாகிய உன்னைமோசஞ்செய்து என்னிடம் சத்தியம்பேசி என்னைக் குற்றத்துக் குள்ளாக்கிவிட்டான் இப்போதே காசிக்குப் போய் அவனை உதைக்கிறேன் நையும்படி சிதைக்கிறேனென் றுக்ரோஷத்தோடும் வாரணாசியை நோக்கிப்போக ருக்மாபாயி ஓ பகவானே! இதென்ன விபரீதம் நேரிட்டது. இதற்கு நானென்ன செய்வேனென்று அதிசீக்கிரமாயோடி அவர் பாதாம்புயங்களில்வீழ்ந்து பலதரந்தாழ்ந்து ஓ எங்களாண்டவனே! என்பதி பிராணனே டிருக்கிறுரென்கிற கேள்வியே எனக்குச் சகல பாக்கியமுங் கிடைத்ததற்குச் சமானம் அதை

யும் இழக்கும்படியான காலம் நேரிட்டதோ அதனாலேயே உமக்கிவ்வளவு கோபம் வந்ததோ எனக்குப் புத்திரபாக்கியமும் அஷ்டயிசுவரியமும் வேண்டியதில்லை மாங்கல்ய பிட்சையேகொடுத்தாட்கொள்ளும் சுவாமியென்று பிரலாபிக்க ஸ்ரீபாதஸ்வாமிகள் ஒகுணோத்தமியே! உன்பதி சுகசீவியாயுன்னோடு சந்தோஷத்துடன் கூடியிருப்பான் என்வாக்கியப்படி நான்கு குழவிகளையும்பெறுவாய் நீ யாதொன்றுக்கும் வியாகுலப்படாமல் சிலநாள் என்வரவுக் கெதிர்நோக்கிக் கொண்டிருப்பாயாகவென்றுரைத்து நாடு காடுகளைக்கடந்து வாரணாசியையடைந்து விடோபாவிடஞ்சென்று ஓ அசத்தியனே யெனப் புகன்று அடா சைதன்யா! உனக்குச் சமுசாரமிருக்கின்றதா இல்லையா? உண்மையைச்சொல். இன்றேல் அகஸ்தியர் தன் சிஷனுக்குப் பர்வதாகாரமாகவே யிருக்கச் சாபமிட்டதுபோலவும், பிரகஸ்பதி தன் மாணாக்கனுக்கு குஷ்டரோகியாய்ப் போகச் சாபமிட்டதுபோலவும் ஜபித்துவிடுவேன் கோபாக்கினியாற் றகித்துவிடுவேன் என்று தூருவாசரைப்போல்கோபாவேசத்தாற் றுவேஷிக்கத் தொடங்கினர்.

விடோபா இராஜன்முன் குற்றவாளியும் மாமியார்முன் மருகியும் வித்யாகுருவின்முன் மாணாக்கனும் பதியின்முன் விபசாரியும் நடுங்குவதுபோலக் கிடுகிடென்று நடுநடுங்கிப் பூனைபோ லொடுங்கி வாய்குளறி நாத்தடுமாறி ஓ தெய்வமே! அகப்பற்றற்றவனுக்குப் புறப்பற்றென்னும் சமுசாரமேது நானென்னும் மேன்மையேது எனதென்னும்பான்மையேது பெண்டுபிள்ளை தாய்தந்தை தமரென்னும் பந்தமேது இவர்கள்மே லபிமானங் கொண்டிருக்குந் தொந்தமேது அப்படியிருக்க நமது சுவாமிகள் நகைமுகம் வேறுபட்டு மிகவும் வெகுளிமேலிட்டு உண்மை தெரிந்தவர்போல் உனக்குச் சமுசாரமுண்டா இல்லையா நிஜத்தைச் சொல்லென்று கேட்கின்றீரே மித்திரனிடத் தசத்தியம்பேசினால் விரோதமும், பிரஜைகளிடமும் கைதவமுரைத்தால் அவமரியாதையும், இராஜனிடம் பொய்பேசினால் தண்டனையும், ஆசானிடம் அபத்தம் புகன்றால் நரகப் பிராப்தியு முண்டாகுமென்று சாஸ்திரமிருக்கின்றதல்லாமல் பொய்யானது பஞ்சபாதகத்தி லொன்றாய்ப் பாபங்களுக்கெல்லாம் மூலமாயிருக்கின்ற காரணத்தால் உண்மையே சொல்லவேண்டும். அன்றித் தாய்தநதை சாபத்தால்

எடுத்த தேகத்துக்குப் பீடையும் பெரியோர்கள் கோபத்தால் பல ஜென்மங்களுக்குப் பீடையும் ஆசாரியர் சீற்றத்தால் ரவ் ரவாதி நரகமும் உண்டாகுமே தாய்தந்தை பெரியோர் தெய்வ மூமிட்டசாபமும், குருசுவாமிகளால் நிவர்த்தியாகும் ஆசா னிட்ட சாபத்தை அரியராதிகளாலும் அகற்றக் கூடியதல்ல வே இப்போது சமூசார மூண்டென்றுரைத்தால் முன்னில் லையென் றுரைத்ததைக் குறித்துக் கோபம் வருமே ஆரியரிட மசத்தியமும் பேசலாகாதே இதற்கென்ன செய்யலாமென்று பலவிதமான வெண்ணங்களோடுங் கூடி உத்திரஞ்சொல்வ தற்குத் தடமாடிக் கண்ணீர்விட்டழுது அடியற்றபனைபோல் அவரடிகளில் வீழ்ந்து தொழுது ஓ என்னாண்டவனே! உடல் பொருள் ஆவியென்னும் மூன்றையும் முன்னமே உமக்குத்தத்தஞ் செய்திருக்கிறபடியினாலே இவ்வேழையேன் சிரத்தைத் தறித்துவிட்டாலும் சாம்பலாய்ப்போக எரித்து விட்டாலும் தேவரீரை நம்பின வடியேனுக் குறையுண்டாகு மோ? அப்படி குறைநேரிட்டாலும் உமக்கன்றி எனக்கென் கிற சுதந்தரமுண்டோ? ஓ சாந்தஞ்சேர்ந்த சதுர்வேதாந்த உபசாந்தபோதனே! நாதனே! நீதனே! விநோதனே! அதீ தனே! அவதூதனே! நித்தனே! நிமலனே! நிர்க்குண சர ணம், சத்யனே சாந்தனே சத்குணசரணம், சுத்தனே! சுகிர் தனே சோதியே சரணம், ஆத்தனே! அமூகனே! ஆதியே சரணம், கர்த்தனே! கடவுளே! காரணசரணம், புத்தனே! புனி தனே! பூரணசரணம், நிச்சயப்பொருளான நீதியே சரணம், அச்சுதாத்வித வனுபூதியே சரணம், சுந்தரானந்த சுய துரி யனே சரணம், அந்தமாதியிலாத வரியனேசரணம்! மோட்ச மீந்தெனையாண்ட முத்தனே சரணம், சாட்சியாயிலகு நிர்ச் சாந்தனே சரணம், கருவிகரணாதிகளை வென்றவா சரணம், அருவாகியருளாகி நின்றவா சரணம், மமதகந்தையுமிலா மாதவாசரணம், சமதமாதிகளீந்த ஆதவாசரணம், காட்சியரு ளிய ஞானக்கண்மணியே சரணம், தேவரேத்தித் துதிசெய் சீலனேசரணம், மூவரோருருவமான மூலனே சரணமென்று பற்பல விதங்களாகத் தோத்திரஞ் செய்யத்தொடங்கினார்.

அப்போது விடோபாவைச் சூழ்ந்திருக்கும் தொண்டர் களும் ஸ்ரீ பாதசுவாமிகளின் பாதங்களிற் பணிந்து, பற்பல விதங்களாகத் துதிக்கலுற்றார்கள். ஸ்ரீ பாதசுவாமிகள், விடோ

பா தேம்பித் தேம்பி யழுகிறதையும் அவருடைய பணியாளர் தோத்திரம் புரிந்தேத்துகிறதையும், நோக்கி கோபத்தை நீக்கி ஓஓ கோபமல்லவா பாபங்களுக்கெல்லாம் மூலம், பொறுமை கடலினும் பெரிதல்லவா? அன்றி ஒருவனைக் கொல்வதா கொலை, மனம்நோக வைப்பதே கொலை, ஒருவனைப்புணர்வதாவிபசாரம், மனதில் வாஞ்சைகொண்டதே விபசாரம், வாக்கினாற் ஸ்தோத்திரஞ்செய்வதா பூசை, மனதிலுள்ள அன்பேபூசை, ஒருவரையொருவர் தழுவுவதா ஆசை, மனதிலுள்ள பிரியமே ஆசை, அனேக பதார்த்தங்களோ டூட்டுவதா அமிர்தம், அன்புடனன்னப்பா லூற்றுவதே அமிர்தம், பணிவிடைசெய்வதாபக்தி, பயத்துடனிருப்பதே பக்தி, கங்கையில் மூழ்குவதா ஒருதிவ்யஸ்நானம், களங்கமற்றிருப்பதே ஸ்நானம் மடியோடிருப்பதா ஆசாரம், மாடகூடங்களோ டிருப்பதா கெம்பீரம், தியானஞ்செய்வதா நிஷ்டை, திவ்ய மோனமுற்றிருப்பதே நிஷ்டை, கலைக்ஞானங் கற்பதா வித்தை, பிரமக்ஞானங் கற்பதே வித்தை, கோபமா கொடியது குரோதமே கொடியது, வாயிலுள்ளபற்களா கெட்டவை வயிற்றிலுள்ள பற்களே கெட்டவை ஆதலால் சாந்த மென்னுமாபரணம் பூண்டு சாதுவென்று பேரெடுத்தநாம் சாந்தமாயிருக்காமல் சத்சிடன்செய்த குற்றத்தைப் பொறுக்காமல் சன்யாசியாகியும் சமுசாரியைப்போல் கோபத்துக் குட்பட்டேனே, தபநிலைகெட்டேனே, கோபத்தினாலல்லவோ அனேகம் ரிஷிகள் தவ மழிந்துவிட்டார்கள், நரகத்துக்குட்பட்டார்கள், விஸ்வம்பரனை பரப்பிரமத்துக்கு மிகவும் நேசனான விசுவாமித்திரனை வசிஷ்டர் சாந்தத்தாலல்லவோ வெற்றி பெற்றார். சாந்தமே ஏகதியானமும் பிரமக் ஞானமுமாகும். அன்றியும் மோக்ஷ யிச்சையுள்ளவன் நானென்னு மகங்காரமும் எனதென்னும் மமகாரமும் அற்றவனன்றி மற்றவனுகான் நானென்பதற்றவன் எனதென்னும் சுதந்தரமொன் றுண்டென்றுரைப்பானு நானெனதற்றவனே ஞானியன்றி மற்றவர்கள் ஞானிகளாவார்களாவென் றனந்தம் விதங்களா யோசித்து, விடோபாவை நேசித்து, அப்பா விடோபா உன் வரலாற்றையெல்லாம் அலங்காவதியி லிருக்கும் ஓர் பதிவிரதையால் கேள்விப்பட்டேன். அசரீரி வாக்கியத்தை மறுக்காமலல்லவோ பாணிக்கிரகணஞ் செய்துகொண்டாய் நானுபதேசஞ்

செய்யமாட்டே னென்றல்லவோ பொய்மொழி புகன்றாய் நீ யாதொன்றுக்கும் அஞ்சாமல் என்னுடன்வா மறுத்தொன் றும் பேசாதே யென்றழைத்துக்கொண்டு அலங்காவதியிற் சென்று சிதோபந்து வீட்டின் முன்னின்று அம்மா ருக்மா பாயியென்று கூப்பிட்டார். அந்திவேளையில் அந்திவண்ண னைப்போல் வந்து கூப்பிடும் ஸ்ரீ பாதஸ்வாமிகள் இனிய தொனியைக்கேட்ட ருக்மாபாயி அதிதுரிதமாய் புறம்போ ந்து ஸ்ரீ பாதஸ்வாமிகளின் பாதங்களுக்கு வந்தனஞ்செய்து அவர்பின் ஜடாமகுட காஷாய வஸ்திராவதாரியாய் நிற்கும் தன் கொழுநன் திருவடிகளிற் பணிந்து பரமசிவமேயென துணிந்து அழுத கண்ணுந் தொழுத கையுமாய் நின்றாள். விடோபா தன் மனையாள் தன்னைப்போலவே ஜடைகள் வள ர்த்து சரீரந் தளர்ந்து பரமசாதுவா யிருப்பதற் காச்சரியப் பட்டுச் சத்குருநாதனிவளுடன் கூடியிருக்கச் சொல்வாரோ வென்று பயப்பட்டு அரசன் முன்னிற்குந் திருடனைப்போல வும் விபசாரஞ்செய் தகப்பட்டுக்கொண்ட அபசாரியைபோல வும் தலை குனிந்து நின்றிருந்தார். அத்தருவாயில் ஸ்ரீ பாத ஸ்வாமிகள் அப்பா விடோபா இவ்வுத்தமி யாருடைய பத் தினியென்றுகேட்டார். விடோபா ஒன்றுஞ் சொல்லாமல் மௌனமுற்றிருந்தார். ஸ்ரீ பாதஸ்வாமிகள் ஓ விடோபா அருந்ததி அனுசூயை சந்திரமதி நமயந்தி முதலான பதி விரதைகளிற் சிறந்த இவ்விரதசீலியை நீக்கி மேல் வேஷ மான சன்யாசத்தா லென்னலாபம் பெறப்போகிறாய் ஆயிரஞ் சன்யாசிகள் ஓர் இல்லற ஞானிக் கிணையாவார்களா? கற்பு ள்ள மாதுசிரோன்மணியால் கைவல்யமடைவ துண்மையல் லவா? விரித்துச்சொல்லவா? இவ்வுத்தமியின் கற்பென்னும் அக்கினியால் நாமிருவரு மெரிந்துபோக மாட்டோமா? சிருஷ்டி ஸ்திதிசம்ஹாரஞ்செய்யும் திரிமூர்த்திகளும் அனு சூயாதேவியின் கற்பால் தங்கள் வல்லமைகுன்றிக் குழந்தைக ளாய்ப் போகவில்லையா? பிருந்தையின் கற்பென்னும் பலத் தால் சலந்தரன் திரிமூர்த்திகளையும் ஜெயிக்கவில்லையா? நளா ங்கினியால் ஏழுநாள் சூர்யோதயமாகாம லிவ்வுலகை இருள் மூடிக்கொள்ளவில்லையா? உனக்குத் தெரியாத தொல்லையா? பதிவிரதைகளின்மனதை நோகவைத்தால் ரவ்ரவாதி நரகத் துக் கிடமில்லையா? அழகான வாய்திறந் துண்மை வார்த்

தையைச் சொல்லையாவென்று அவர் கரத்தைப் பிடித்துக்கொண்டு ஓ என்னப்பனே! இந்த அற்புத குணமுள்ள கற்பிற் சிறந்த காந்தையைத் தள்ளாமல் என் வாக்கை மறுப்பதற் கெண்ணங் கொள்ளாமல் நல்லறமாகிய இல்லறத்திலிருந்து பிர்மக்ஞானியாய் மோட்ச மடையக்கடவாய் அகத்துறவன்றிப் புறத்துறவாலோர் பலனுண்டா? குருவாக்குக் கெதிர்வாக்குரைத்தவரு முண்டா? ஆசானை அவமதித்தவருமுண்டா? ஆசிரிய ராசீர்வாதம் பெற்றவர்க்கோ ரிடையூறும் வருவதுண்டா? ஓ குருபக்தியிற் சிறந்தவனே! பிர்மக்ஞானிகள் கட்டிற்பிறந்தவனே! ஆசையை யணுவும் வைக்காமற் றுறந்தவனே! ஆசாரியரே நீரே கெதியென் றறைந்தவனே! அஞ்ஞானத்திற் குறைந்தவனே! மெய்ஞ்ஞானத்தில் நிறைந்தவனே! அகமதை யிறந்தவனே! ஆனந்தத்தில் மறைந்தவனே பிரபஞ்ச வியாபாரம் மறந்தவனே! என்றனந்தம் வார்த்தைகளாடி மிகவுங்கொண்டாடிக் காஷாயத்தை நீக்கி ஜடாபாரத்தைப்போக்கி ஆடையாபரணங்களைச் சிங்காரித்து அழகில் மதனெனப்பூரித்து ருக்மாபாயியையும் அலங்கரித்து அன்பாயுபசரித்து மகா வாக்யோபதேசஞ்செய்து மாசுகளனைத்தையுங் கொய்து மூவருந்தேவருந் தொண்டு உங்களுக்குச் செய்யக்கடவதெனவிண்டு பாக்கியஞ் செய்தவர்களென்று பற்பல வார்த்தைகள் புகன்று இனி நான். போய்வருகிறேனென்று அவ்விடம்விட் டகன்றுபோகலுற்றார். அப்போது விடோபா, ஸ்ரீபாதஸ்வாமிகளின் பின் தொடர்ந்துபோய் பலதரஞ்சூழ்ந்து பாதங்களில் வீழ்ந்து ஓ என்னாண்டவனே, ஆனந்தத்தாண்டவனே, நிசாரமாகிய இச்சமுசாரசாகரத்திலென்னையழுத்தி சள்ளையொழிந்ததொன்று சற்றுந்தங்காமல் நம்பின என்னை கைநழுவவிட்டேகுதலால் என்னுயிருடனரைக்கணமிங்கு தங்கியிருப்பேனோ, அடியேன்மீதிவ்வளவு அருவருப்பேனோ? இக்குவலயத்தில் நீரன்றி எனக்கோர் திக்குமுண்டோ? தாயைவிட்டகன்ற கன்றுமுண்டோ? அருளே குருவாகி என்னை யாட்கொள்ளவந்த என்ஐயனே! கரதல நெல்லிகனிபோல் கைவல்யமளித்த மெய்யனே! சுரர்நரரேத்துந் துய்யனே! துரிசுகளகற்றிய அய்யனே என்று தோத்திரஞ்செய்து தாட்டாமரைகளை தழுவி கண்ணீராற் கழுவி பிரிவாற்றாமையால் ஓவென்றழுதுக்கொண்டே தோத்திரஞ் செய்தார்.

குரு ஸ்துதி.

விருத்தம்

உலகம்புரக்குந்திருமாலுமுயர்வேதாவுஞ்சங்கரனும்
இலகுமுலகீரேழேத்துமெழிலாலருள்தேசிகஸ்வாமீ
நலமென்றுமிலாநாயேனைநயந்தாட்கொண்டநாயகனீ
பதியலாரெனக்குத்துணையுண்டிங்கடியேற்கருளியகல்வீரே. 1

அகலவைத்தாலெளியேனையஞ்சேலென்பாரிவண்யாரே
முகமனுரைத்திங்கிருவென்றூன்முகுராமில்லாமூடனைப்போல்
பகலுமிரவுந்துதித்தேத்தும்பகவானேயுன்றிருவடியை
அலகித்தெங்ஙன்மறந்திருப்பேனந்தோவெந்தாயறியேனே. 2

அறியாமையினுளில்லமெனுமளற்றிலமிழ்ந்தேனலக்கணுற்றேன்
பிரியாவினையோபெண்ணெனும்பேய்பிடித்தாள்விடுக்காதெனைக்கெடுத்தாள்
முறையோமுறையென்றெனைநீவிர்மோசஞ்செய்திண்டிவண்விடுத்துப்
பிறியேல்பிறியேலருட்குருவேபேரின்பளித்தபெருமானே. 3

பெருமானேயென்பிறவியெனும்பிணிக்கோர்மருந்தேயருந்தவமே
கருமால்விழியார்மயல்வேண்டேன்கனகம்வேண்டேன்கயிலையொடு
திருமால்பதமும்யான்வேண்டேன்றிமிரம்மருளுமகற்றியவுன்
அருளார்பதமும்வேண்டுமெனக்களிப்பாயளிப்பாயனுதினமே. 4

தினமுமுனதுதிருச்சேவைசெய்தோர்க்குண்டோதீங்குனைவிட்
டனமுஞ்செலுமோவரைமாத்திரையுமுன்னைப்பிரியவுமே
மனமும்வருமோமகிழ்வுறுமோமறந்துமிருக்கமதிப்பேனோ
கனமுந்தனமுங்கதிபதியுநீயென்றுன்னுங்கடையேனே. 5

உன்னற்கரியபேரொளிநீபுணர்வுக்குணர்வுமுயிர்க்குயிர்நீ
மன்னுந்தவமுமாட்சியுநீமனக்கண்டறக்கன்னருட்கணுநீ
சொர்னமரசுதூய்மையுநீசுரருண்ணமுதுஞ்சோபிதநீ
அன்னைதந்தைதெய்வமுநீஎன்றேயிருந்தேனருட்குருவே. 6

அருளேஞானமணிவிளக்கேஆவித்துணையேயச்சுதமெய்ப்
பொருளேன்பூரணபுண்ணியமேபுனிதஸ்படமேபோதகமே
மருளேன்மனதினுட்டெளிவேமணமார்சுகமேமாதவமே
இருணீக்கிடுமாப்பேரொளியேஎளியேனன்பேதென்பொருளே. 7

தென்பேசிற்றின்புனைவேண்டாத்திருக்குவாக்கித்தெளிந்தோர்கள்
அன்பேயகண்டாகாரவருணானேருவமென்றகலாநல்
இன்பேமுப்பாழ்கடந்ததப்பாலேகப்பொருளில்வழித்தோர்கள்
துன்பேதுமிலாவுபசாந்தத்தூய்மையளிக்கும்வாய்மையனே. 8

வாயுமனமுமௌனமுமாம்வகையன்றுவகையோடருளிச்
சேயென்றெனையாட்கொண்டவருட்டேவேகோவேமருளிருளும்

மாயும்படிசெய்தெனைமறந்துமாறுவனுபூதியுமேற்கொண்
டோயும்பொழுதில்பழுதுறநீயுன்னத்தகுமோமென்னிறையே. 9

இறையேயன்னம்பகிர்ந்துகரமெட்டிப்பிடித்தூண்தடுத்தாப்போல்
முறையோடறையக்கப்பாற்போய்மோகத்தைக்யமாக்கியபின்
குறைநானுறவென்றீவினையோகுருவேதுணையென்றிருப்போர்க்கோர்
குறையேதறைவாய்நிறைவானசோனேச்சுகரார்நிகரோனே. 10

நிகரில்பதத்தையடைந்தோர்கணிலையில்வாழ்வைமதிப்பதுபோல்
சிகியென்றறிந்தும்மதிப்பதுபோல்தேனைப்பொசித்துக்கடுவுண்டு
மிகவோர்காளம்செய்வதுபோய்மிடியேற்கடுத்ததந்தோவான்
இசமுமிழந்தேனெனைப்போன்றவேழையுலகிலிலையிலேயே. 11

இல்லந்துறந்துன்றனையிறந்தவென்னைமறந்துன்றனைமறந்தே
அல்லலிறந்தின்பினையடைந்தவங்கந்தனைக்காத்தலுங்கடந்து
தொல்லையன்றேயகமுகத்திற்றாங்குமென்னைப்பகிர்முகமா
இல்லத்திருந்துமல்லலுறவேனீர்வாஞ்சையானீரே. 12

என்றிவ்விதமாகத் தோத்திரஞ்செய்து முறையோவென்றோலமிட்டழும் விடோபாவை ஸ்ரீபாதஸ்வாமிகள் வாரியெடுத்து மார்புடனணைத்துக் கடந்த மனமுருகி கண்ணீர்பெருகி ஒப்பிலா வென்னப்பனே இதுகாலபரியந்தம் நான் செய்துவந்த தபோபலமெல்லாம் உனக்குத் தத்தஞ்செய்தேன் உனது முன்னேழு பின்னேழு மரபினர் பாவத்தைக் கொய்தேன் உனக்குத் திரிமூர்த்திகளும் ஆதிசத்தியும் புத்திரராய் பிறக்க வரமளித்தேன். உனக்குபதேசஞ் செய்ததால் மிகவுங் களித்தேன. நீ பிர்மானந்தத்தால் தன்னை மறந்திருப்பாயாக அகண்ட சாம்பிராச்சியத்தைப் பெற்றிருப்பாயாகவென்றானந்தமேலீட்டாலனேகவரந் தந்து, மிகவுமுவந்து ஓ விடோபா என்மொழி தள்ளாமல் சந்தேகங்கொள்ளாமல் ருக்மாபாயுடன் சேர்ந்திரு சிலநாள் பொருத்து சஞ்சாரமாதி செய்து வந்துன்னைப் பிரியாமலிருக்கின்றேன் இதைச் சத்திய வசனமென்று நம்புவாயெனப்புகன்று போவதற்கு விடைகேட்டார் விடோபா குருவாக்குக் கெதிர்வாக் குரையாக்குரையால் ஓ ஸ்வாமி சஞ்சல சுபாவமான இச்சமுசாரமுஞ் சமாதிநிஷ்டையைத் தவிர்த்துவிட்டாற்றானே பிர்மமென்கிற திடம் நீங்கி மடம் வோங்கி மாயாந்தகாரத்தில் மறைந்திருக்க நேரிடுமே அதை நீக்குதற் குபாயமேதென்று பணிய, ஸ்ரீபாத

ஸ்வாமிக ளதுநீங்கப் பிர்மத்தைத் தியானஞ் செய்வாயென் றுரைத்த வாக்கியம்.

பரப்பிரம ஸ்துதி.

விருத்தம்.

திருமாலீசனயன்போற்றுந்தேஜோன் மயமாய்ப்பரப்பிர்மம்
சித்தர்பத்தர்நற்றவருஞ்சீவன்முத்தர்பணிபிரமம்
அரியரனுர்வசிஷ்டர்க்கருள்பிர்மம்அகண்டானந்தபரப்பிர்மம்
அரியஜனகர்சுகமுனிவர்க்கன்போடறைந்தபரப்பிர்மம். 1

அருவாயருவுருவாயைம்பூதமுமாம்பரப்பிர்மம்
அருளாய்பொருளாயனுபவமாயதுதானுயபரப்பிர்மம்
குருவாம்பிர்மம்குணபிர்மங்குணமுங்கடந்தபரப்பிர்மம்
குறியில்பிர்மந்தனைத்தொழுதுகொடியதடைக்குவிடைகொடுப்பாய். 2

திருவருட்பொருளாகியபரப்பிர்மந்திருக்குவாகியபரப்பிர்மம்
திசைமுகன்முதலானவர்பணிபிர்மந்தெருண்மறைகாணும்பிர்மம்
அரன்றனக்காசானருள்பரப்பிர்மம்அசிபதத்தொளிர்பரப்பிர்மம்
அருட்சுகர்க்கெழினுரதருட்பிர்மம்அனுமகத்தாகியபரப்பிர்மம். 3

திரிகாணத்தாலறியொணப்பிர்மந்திருபுடிகுணமிலாபிர்மம்
சித்தர்முத்தர்களுந்தேடிடும்பிர்மந்திக்குதேசாதியில்பிர்மம்
துரியமாநிலையிற்றுறங்கியபிர்மஞ்சுயம்பிரகாசமாப்பிர்மம்
சுகப்பிரமந்தனையனுதினமுந்தொழுதருட்பிரமமாயிருப்பாய். 4

வேறு.

உலகமெலாம்நிறைபொருளையுயிர்க்குயிராகும்பொருளைவொழிவுக்கப்பால்
இலகியநிர்க்குணப்பொருளையிதுவதுவாகப்பொருளையெழிலார்வேத
பலகலைக்கெட்டாப்பொருளைப்பரமானந்தப்பொருளைப்பழையஞான [ய்
தலமாறுங்கடந்தேழாந்தலத்திலுறும்பொருளையன்பாய்த்தாழ்ந்துவாழ்வா

வேறு.

பொன்னுலகோரும்போதனும்பிரகலாதனும்போற்றியபொருளை
மன்னுநிஷதவாகமமறையாவாக்கிதத்தந்தமாம்பொருளை
உன்னுதற்கரியயோகமாதிகள்செய்யுத்தமர்க்கரியவான்பொருளைத்
தன்னையாராயுந்தவத்தினர்க்கெளியதத்பரப்பொருளையேதொழுவாய். 6

அந்தமாதியுங்கீழ்மேலிலாப்பொருளையற்புதவத்விதப்பொருளைப்
பந்தமில்சுகருக்கெங்குமேநின்றபரப்பிர்மப்பொருளைமாவாக்யத்
தைதந்துமாப்பதங்கட்குலட்சியப்பொருளையகணிதப்பொருளைஞானிகட்கே
சொந்தமாம்பொருளைசுகந்தரும்பொருளைதுரியமாம்பொருளையேதொழுவாய்.

நனவினிற்கவர்சூழ்ந்திடவிருதையனடித்திடநகைத்திடும்பொருளைக்
கனவினிலொருவிசியன்புரியோரைக்கண்டுங்களித்திடும்பொருளை
நினைவில்விப்பிரமத்தொருவருமறியாநீவியைப்புணர்ந்துயரின்பந்
தனையுறும்பொருளைச்சாட்சியாம்பொருளைச்சந்ததஞ்சிந்தனைசெய்வாய். 8

ஊமையன்கண்ட கனவினைப்போலவுரைப்பதற்கரியதாம்பொருளை
ஆமையைப்போலவந்துபூதத்தையடக்கெனவுறும்பரம்பொருளை
நாமரூபங்கள்குணங்குறிபாசநாசமில்லாதவான்பொருளைச்
சோமசூரியர்களொளிபலமழுங்குஞ்சோதியாம்பொருளையேதொழுவாய். 9

வேறு.

பிரமங்கருத்தாஜகநாதன்பிரானந்தாதிபிறப்பில்லான்
பரமம்பரமேச்சுரன்முதலோன்பகவன்விமலன்வேதார்த்தன்
தருமக்கொடியோன்சர்வேசன்சர்வவியாபிதனிக்கோலான்
கருணாலயனாதியநாமக்கடவுடனைப்பணிவாயே. 10

வேறு.

பூவலம்வந்துங்காணாப்புண்ணியஞ்செய்துங்காணா
நாவினாற்றுதித்துங்காணாநற்கிரியையினுங்காணா
ஆவியைமறித்துங்காணாஅஷ்டசித்தியினுங்காணா
மூவருங்காணாமோனமுதல்வனைவணங்குவாயே. 11

குகைதனிலிருந்துங்காணாக்கோயிலுட்புகுந்துங்காணா
மகம்பலசெய்துங்காணாவாழ்வினைத்துறந்துங்காணா
அகமுகமுறுமானந்தவறிவினர்கண்டுங்காணாப்
பகவனையகண்டானந்தபரமனைவணங்குவாயே. 12

வேறு.

அரனரியயனுமேத்திடும்போதவ்வசரீரியுரைத்தமந்திரத்தைத்
தருமநற்சனகஸனந்தருக்கன்றுசங்கரனுரைத்தமந்திரத்தை
அருள்புலஸ்தியர்நாரதர்பிருகுவுக்குமயன்மகிழ்ந்திசைத்தமந்திரத்தைப்
பிரகலாதனாதியாக்கரிமொழிந்தபிர்மமந்திரத்தினைச்செபிப்பாய். 13

ஞானமாம்பொருளேமோனமென்றுணர்த்திநற்சுகமீயும்வாக்கியத்தைத்
தானெனும்பொருளேவானமென்றுணர்த்தித்தன்மயமீயும்வாக்கியத்தை
மோனமாம்பொருளேஞானமென்றுணர்த்திமுத்தியையீயும்வாக்கியத்தை
நானேநீநீதானென்னும்வாக்கியத்தைநாடோறுந்தியானஞ்செய்துய்வாய்.

என்று விலட்சண லட்சண பாவத்தைக் கொடுக்கும் துவிதாத்வித தியானத்தை உபாசித்து மாயாமயக்கத்தை நீத்து மோன நிஷ்டையாற் பிரகாசித்து பரமாத்ம ஸ்வரூபமாய் விளங்கியிருக்கக் கடவாயென்று திருவாய் மலர்ந்தருளி என்

கும் குருரூபமாய்த் தெரியும் குரு துரியானுபாவத்தை யுபதேசித்து ஸ்ரீபாதஸ்வாமிகள் சஞ்சார சமாதிசெய்ய அவ்விடம் விட்டகன்றார். இப்பால் விடோபா ஜீவதுரியம் பரதுரியமுங் கடந்த மூப்பாழுக்கப்பாலான குரு துரியானுபாவத்தால் எங் கணும் குருஸ்வரூபத்தையே கண்டு ஆனந்தங்கொண்டு மௌனஸ்திதியை யடைந்திருந்தார். ருக்மாபாயி ஸ்ரீபாதஸ்வாமிகளை அனேகவிதமாகத் துதித்து அவருபதேசித்த மகாவாக்கியத்தை மனதிற்பதித்துத் தன்கொழுனன் றிருவடிகளிற் பணிந்தழைத்துக் கொண்டுபோய் வீட்டினுள் வீற்றிருக்கச் செய்து அறுசுவை யுண்டிகளைச் சமைத்து அதிமதுரபாகமாக சமைத்துத் தாய்தந்தை ஆர்வலனுக்கும் படைத்து ஆனந்த சமுத்திரத்தில் மூழ்கினவள்போலக் களிப்புற்றிருந்தாள். கேட்டீர்களோ சித்தர்களே யென்று பின்னும் நாபாஜிசித்தர் சொல்லத் தொடங்கினர்.

விடோபா கிரகஸ்தாசிர்ம அத்தியாயம் முற்றிற்று.

ஆறுவது அத்தியாயம்

திரிமூர்த்திகளும் ஆதிசத்தியு

மூற்பத்தியானது.

கேளுங்கள் சிததர்களே விடோபா குருவாக்கினையைக் கடவாமல் மனைக்கு ளெழுந்திருக்கும் அற்புதத்தைக் கண்ட சிதோபந்து ஆனந்தவாரியிற் குளித்து அளவிலா வின்புடன் களித்து அருங்கொழுந்துபோற் றளிர்த்து அழகுள்ள பூங்கொடிபோற் றளிர்த்து மருகன்வந்த சந்தோஷத்தால் மறுநாள் அலங்காவதியிலிருக்கும் உறவினர்க்கும் மற்றைப் பிராமணர்களுக்கும் விருந்துசெய்ய யோசித்து சகல பதார்த்தங்களோடு அன்னமுஞ்சமைப்பித்துப் பந்துக்களையும் பார்ப்பாரையும் விருந்துண்ண அழைத்தார். அப்போ தவ்வூரிலிருக்கும் அந்தணரெல்லாம் அவரகத்தில் வந்துகூடி சிதோபந்தை நோக்கி, ஓ அந்தணு! உன்னுடைய மருமகனாகிய விடோபா வாரணசிக்குப்போய்ச் சன்யாசம் வாங்கிக்கொண்டு கண்டோர் வீட்டிலுண்டு பிரஷ்டனாய்ப்போன துஷ்டனை வீட்டில் வைத்துக்கொண்டு எங்களை விருந்துக் கழைத்துத்

தான்கெட்ட குரங்கு வனத்தையெல்லாங் கெடுத்தது போல நீ கெட்டதன்றி எங்களையுங் கெடுக்கவா நினைத்தாய் அமிர்தம் புசிப்பவன் சுராபானம் புசிப்பதுபோலவும், வேதமோதுபவன் களாசாஸ்திரம் வாசிப்பது போலவும், பிராமணனுயிருந்தவன் நீசனுனவன்போலவும், சன்யாசியானவன் சமுசாரியாகிச் சகலரையுங் கெடுக்க உகந்தவனே உன் வீட்டிலிருந்திப்போதே ஓட்டிவிட்டாற்றுன் நாங்களனைவருய் வந்தன்னமுண்ணுவோம் இன்றேல் உன்னைச் சாதியி லிருந்து விலக்க எண்ணுவோம் மறுத்துப் பேசினுலுனக்குப் பிராயச்சித்தமும் பண்ணுவோம் பண்ணினபின்பே உன்னைப் பந்தியில் வைத்துக்கொண் டுண்ணுவோம் என்கிற பற்பல வார்த்தைகள் காகூவென்று இரைச்சலிட்டுப்பேசத் தொடங்கினுர்கள் அப்போது சீதோபந்து ஓ பிராமணுேத்தமர்களே! உங்களனைவோருக்கும் வந்தனஞ்செய்கிறேன் விபரீத வார்த்தைகள் பேசாமல் விடோபாவைப் பந்தியில் வைத்துக்கொண்டுண்பதற்குக் கூசாமல் யாதொரு சந்தேகமுங் கொள்ளாமல் ஏழையேன்செய்த விருந்தைத் தள்ளாமல் கிருபை கூறுங்களென்று சகலரையும் வேண்டிக்கொண்டார். அதற்குத் தப்புள்ள விப்பிரர் சீதோபந்தை நோக்கி, அடா பிரஷ்டா! அடா துஷ்டா! நீசெய்யும் உபசாரத்தால் அபசாரத்துக்குட் படுவோமா? வர்ண வைராக்கியத்தை விடுவோமா? இந்த அனுசாரத்தைத் தொடுவோமா? உன்னையழைத்தினி யன்னமுமிடுவோமா? சீ சீ நாயே நாயே பேயேயென்று வாயில் வந்தபடி வைது அங்கொருவரையு முண்ணுமற்செய்து தங்களிருப்பிடஞ் சேர்ந்தார்கள்.

அதுதெரிந்த விடோபா ஓ ஓ பிரபஞ்ச ஆசையிற் சிக்கி விஷயானந்த போகத்திற் சொக்கி மாயையென்னுஞ் சுழலிலுழலும் உன்மத்த னென்னும் பமித்திய மேலிட்டோர் ஆக்குரோஷத்தோடு கூக்குரலிட்டு ஓடுகின்ருர்கள் ஓர்வேளை இங்கடைந்து கோபமென்னும் வாயால் குரோத மென்னும் பற்கள் பதிய விரோதமொழிக ளென்பதனுற் கடித்தால் அபிமான மென்னும் விஷந்தலைக்கேறி அகங்கார மென்னும் மயக்கம்மீற அஞ்ஞான மென்னும் நரகத்தை யடைந்து பிரபஞ்சமென்னும் துக்கத்தா லிடைந்து மெஞ்ஞான மென்னும் விவேகங் கலைந்துபோகும் ஆதலாலிதற் கிக்கணமே தப்

பித்துக்கொண்டு போய்விடுவதே உத்தமமென் றுன்னிச் சிதோபந்தை வணங்கி, ஓ துய்யனே! முதற்பிடி சாதத்திலே யே பல யீக்கள் மடிந்திருக்கக்கண்ட சீலன் அருவருப்பின்றி யதை யுண்பதற்கும் விவாகமானவன்றே உதையுங் குத்தும் பிரயோகஞ்செய்த அறிவில்லா ஆடவனுடன் மெலிவான பொய்யையுடைய மங்கை இங்கிதமாய் கூடியிருப்பதற்கும் பேசின நாளே பெரும்போர் செய்யும் சம்பந்தியோடு மிகவும் மானவஸ்தனுகிய விவேகி யுறவு செய்யவும் பழகின நாளே பழி போட்டு அம்பலத்தில் கும்பல்கூட்டி வாட்டப்படுத்தின துஷ்டனுடன் அறிவிற் சிறந்தோன் சகவாசஞ் செய்யவும் வாஞ்சைகொள்ளக் காரணம்போல் வீட்டையடைந்த மறுநாளே மனக்கோட்ட மூண்டாகிய இந்நாட்டில் வேட்கையுற்றிருக்காமல் காட்டையடைவதே எனக்குறுதியான வபீஷ்டமென்ன சேஷ்டையில்லாக் காட்டைநோக்கிப் போகலுற்ருர்.

அப்போது வாட்டமுற்ற ருக்மாபாயி கோஷ்டத்துடன் கொழுநன்பின் தொடர்ந்தாள் சிதோபந்து விடோபாவை மறுத்து அந்தணரால் நமக்கக்கரையென்ன நமது வீட்டில் சுகமாயிருப்போம் வாருமப்பாவென் றழைத்தார். விடோபா மாமனுரை வணங்கி ஊரிலிருக்கப் பிணங்கி, ஓ ஐயா! அடியேன் பிரஷ்டனுன துஷ்டனென்ப துண்மையேயாதலா லிக்கொடியேனுல் தாங்கள் குடும்பத்துடன் பிரஷ்டமடைவது தகுதியா? இது விவேக மிகுதியா? பெரியோர்க் குறுதியான பகுதியா? வர்ணுசிரமதர்மம் கடக்கத்தகுந்தொகுதியா நான் காட்டையடைவதே உத்தமம் என்று போகலுற்ருர் சிதோபந்தும் அவர் மனைவியும் நாங்களும் கூடவேவந்து காட்டிலிருக்கிறேமென்று பின்தொடர்ந்தார்கள் ருக்மாபாயி ஓ என்தாய் தந்தையே! தள்ளாமையான நீங்கள் காட்டிலிருந்து காலங்கழித்தல் வெகு துர்லபம் என்வாக்கை மறுக்காமல் நாட்டிலேயேயிருங்கள். அடியாள் பன்முறைவந்து பார்த்துப் போகிறேனென் றுறுதிகூறிக் கணவன் பக்திமீறிப் பதியோடு கூடியிருப்பதற்குக் கோரிப் பிரபஞ்சிகளோடு பேசுவதற்கு வேசாரி கணவனைத் தொடர்ந்துபோனுள். விடோபா நாட்டுக்கொரு நாள் பயணத்திலிருக்கும் ஓர் மலைக்குகையில் தங்கி ஆனந்தம் பொங்கிப் பிரபஞ்ச வெண்ணமிறந்து பேதாபேதங்களைத் துறந்து தன்னை மறந்து தலைவனிற்கலந்து மௌன சமாதியி

லெழுந்தருளியிருந்தார். ருக்மாபாயி கணவன் சமாதி நிலையிலிருக்கும்போது தான் நாட்டையடைந்து மாதா பிதாக்களைப் பணிந்து வேண்டிய பதார்த்தங்கள்கொண்டுவந்து ஆர்வலனுக் குண்பித்துவந்து ஆனந்தமயமாயிருந்தார்கள். காட்டிலிவர்களிப்படியிருக்க ஸ்ரீபாதஸ்வாமிகள்ஒருநாள்மனமொத்த மாணாக்கனுகிய விடோபாவை நினைத்துத் திரிமூர்த்திகளும் ஆதிசத்தியும், மகவாய்ப் பிறக்க நாம் வரங்கொடுத்திருக்கிருேமே அப்படியாகிறது வெகு அருமையிலு மருமையல்லவா? சத்சிஷன்மேல் வந்த சந்தோஷத்தாலல்லவோ இப்படி வரமளித்து விட்டோம் வரங்கொடுத்தபடி மைந்தர்கள் பிறக்காவிட்டால் நமது வாக்கியம் அசத்தியமாய்ப் போகுமே இதற்கென்ன செய்யலாமென்று யோசித்து நால்வரும் பிரசன்னமாகும் பொருட்டுப் பரப்பிரமத்தை ஏகாக்கிர சித்தத்தோடு தைலதாரைபோல தியானஞ்செய்யத் தொடங்கினர். இப்படி ஒருமுகூர்த்தம் தியானஞ்செய்யவே ஆதிசத்தியும் திரிமூர்த்திகளும் பிரசன்னமாய் ஓ பேதமிறந்த பிர்மக்ஞானியே நிர்க்குணத் தொனியே எங்கள் வரவைக்கோரிய காரணமேதென்று கேட்க, ஸ்ரீ பாதஸ்வாமிகள் நால்வருக்கும் வந்தனஞ்செய்து, ஓ ஜகத்ரட்சகரே! தேவரீர்களை எளியேனென்ன காரணத்தால்வரத் துதித்தேனே அது வுங்களுக்குத் தெரியாததோ தெரிந்து மிவ்வடியேனை கேட்கலாமோ நானுங்களை வரும்படியாகக் கோரியது நீங்கள் நால்வரும் எனது மாணாக்கனுகிய விடோபாவுக்குக் குழவிகளாய்ப் பிறக்கவேயாம் எங்களை வரவழைத்த காரணமேதென்று வினவியபோதே என் கோரிக்கையை நிறைவேற்றினீர்கள் காருண்யக்கடவுளாகிய நீங்கள் எம்போலொத்த எளியோர் வாக்கைக் காப்பற்றல் வேண்டுமல்லவோ வென்று பற்பல விதங்களாகத் தோத்திரஞ்செய்ய அவர் தோத்திரத்துக் கிரக்கமுற்ற பகவான் ஓ அவதூதனே நாங்களிவ்வுலகி லவதாரஞ்செய்து வர்ணுசிரம தருமங்களையும் சகுண நிர்க்குண தியானங்களையும் நிலைநிறுத்த முன்னமே யோசித்திருக்கின்றேம் அது நிறைவேறவே உமது வாக்கி லிப்பேர்க்கொத்த வாக்கியம் பிறந்தது. ஆனல் விடோபாவை யாரென்று நினைத்தீர் அவர் சாட்சாத் வசிஷ்டாம்சமாகும் அதெப்படியென்றல் அயோத்தியில் அறுபதினுயிர வருஷம் அரசுபுரி

ந்த தசரத மகாராஜனுக்கு நானுமெனது சயனமும் சங்கு சக்கரமும் புதல்வராகப் பிறந்து அத்தசரதனுர் மடியில் நான் வீற்றிருக்கும்போது மற்ற பரத சத்துருக்க லட்சுமணனும் பால்ய பருவத்தால் தாங்களும் தசரதன் மடியில் வீற்றிருக்க இடம்போதாமல் ஒருவரையொருவ ரடித்துக் கலக்கப்பட்டு கண்ணீர்விட்டு ஓவென்றழுத காரணத்தால் தசரதர் இருவரை மடியிலும் இருவரைத் தோள்களிலும் வைத்துக்கொண்டார் மடியில் வீற்றிருந்த லட்சுமணனும் அவ்வரசன்தோண்மே லுட்காருதற் காசித்து பரத சத்துருக்கனிருவர் கரத்தையும் பிடித்திழுத்தோம் அவ்விருவரும் புஜத்திலிருந் திறங்காமல் தந்தையின் கழுத்தை உறுதியாகக் கட்டிப் பிடித்துக் கொண்டு சற்றும் அசையாம லிருந்தார்கள்.

அப்போது நான் முன் பக்கமாய் நின்றும் லட்சுமணன் பின்பக்கமாய் நின்றும், ஆதலால் தசரதனுர் மிடற்றைக் கட்டிப் பிடித்துக்கொண்டு நால்வரும் நான்குபக்க மிழுக்கத் தொடங்கினேம் அதைப் பார்த்துக் கொண்டிருந்த கௌசலே சுமித்திரை கைகையும் சந்தோஷமேலீட்டால் காங்களைக் கொட்டி நகைத்தார்கள் தசரதனே தனக்கனேக நாளாய்ப்பிள்ளைகளில்லாமல் ஏககாலத்தில் நால்வர் பிறந்து சுகமாய் வளர்ந்து இருவர்தோள்களி லேறிக்கொண்டும் ஒருவன்முதுகின்மீதும் ஒருவன் மார்பின்மீதும் பாதங்களைத் தாங்கிக்கொண்டு மிடற்றைப் பிடித்துக்கொண்டும் தொங்குவதால் புளகாங்கனுய் மயிர்க்குச்செறிந்து ஆனந்த பரவசத்தால் என்னைத் தழுவிக்கொண்டு கண்ணீரைத் தாரைதாரையாய்ப் பெருகவிட்டார். அவ்வதிசயத்தை அருகிலிருக்கும் வசிஷ்டர் பார்த்து இராசன் சந்தோஷ மேலீட்டால் ஆனந்த பாஷ்பங்களைச் சொரிந்தார் இவ்வுலகில் புத்ரபாக்கியமே பாக்கியம் என்று தந்தை மார்பிறுகத் தழுவிக்கொண்டிருக்கும் என்னைத் தன் தோள்மேல் வைத்துக்கொண் டின்புற வெண்ணங்கொண்டு தன திருகரங்களால் எடுத்துக்கொண்டும் ஓர் தோண்மேலிருத்திக்கொண்டும் லட்சுமணனையும் ஓர் தோளிலிருத்திக்கொண்டும் இராஜனுயாசத்தை நிவர்த்திசெய்பவர்போல அபிநயங் காட்டித் தனக்குற்ற புத்ரவாஞ்சை வெளிப்பட்டு ஓ ஸ்ரீ ராமா பரந்தாமா உன்னையும் நான் புத்திரனுகப் பெறும்படியான நற்காலமும் வருமோ ஆனந்த பரவசமூந் தருமோவென்று

தன் கண்ணீரால் என் பாதத்துக் கபிஷேகஞ்செய்தார். உட னே அவ்வசிஷ்ட ரழகிய அட்சிகளுக்கு நான் திரிமூர்த்தி ஸ்வரூபமாய்த் தரிசனந்தந்தேன் வாஞ்சை யென்னும் வாரி தியைக்கடந்த அவ்வசிஷ்டர் ஓ பகவானே! திரிமூர்த்திஸ்வ ரூபமாய்த் தோன்றும் நீ ஏகனாயிருந்தும் என் கண்ணுக்கு மூவராய்த் தோன்றின காரணத்தால் அத்திரி மகாரிஷிக்கு மூவருட புதல்வராய்ப் பிறந்தபடியே எனக்குப் பிறந்து இத் தசரதனைப்போல் என்னைக் களிப்புறச்செய்வ தெப்போவெ ன்று என் கழலுக்கு முத்தமிட்டார் உடனே பிர்மக்ஞானம் பிறந்து தானுடிய வார்த்தைகளைத் தானே மறந்து தசரதனை நோக்கி, ஓ இராஜனே! நீசெய்த பாக்கியமே பாக்கியம் இப் புத்திரபாக்கியம் கலைக்கோட்டு மகாரிஷியினாலல்லவோ உமக் கேகிடைத்ததென்று பகர்ந்தார். தசரதன் வசிஷ்டரை வண ங்கி ஓ என் குலகுருவே! கலைக்கோட்டு மகாரிஷியை வரவழை த்ததும் புத்ரபாக்யந் தருவித்ததும் நீரே யென்று முடியைச் சாய்த்து ஓ பகவானே! உமக்கே புத்திரவாஞ்சை மேன்மேலு மிருக்க என்போலியர்க் கில்லாமற் போகுமோவென் றுரை யாடிக் குருசங்கீர்த்தனங்களைப்பாடி வசிஷ்டரைக் கொண்டா டினார். பிரபஞ்ச பாசமில்லா வசிஷ்டர் சற்றுநேர மிருந்து எங்களிருவரையும் இராஜன் மடியிலுட்காரவைத்து அரசன் பால் விடைபெற்றுக்கொண்டு தன்னிருப்பிடஞ்சேர்ந்து தன் மனைவியான அருந்ததியை நோக்கி ஓ பெண்ணே! எனக்கெ ன்றுமில்லாப் புத்ரவாஞ்சை இன்று வந்தது. அவமானந் தந்தது அதாவது திரிமூர்த்திகளையும் மைந்தர்களாய்ப் பெற எண்ணங் கொண்டேனென்றார் அதுகேட்ட அருந்ததி ஓ சுவாமி! தெய்வசபையில் நாரதர் அநுசூயாதேவியைப் புகழ் ந்தபோது திரிமூர்த்திகளையும் நான் புத்திரராகப் பெறுவ தெப்போவேன்றும் பார்வதி இமோற்பர்வத ராசனுக்கு மக ளாகிப் பரமசிவனைக் கலியாணஞ் செய்தபோது இப்பாசத் தியை நானெக்காலத்தில் புத்திரியாய்ப் பெறுவேனென்றும் வாஞ்சை கொண்டிருக்கிறேனென்றார் அத்தருணத்தில் நார தர் அவர்பாலடைந்து வசிஷ்டரை நோக்கி ஓ முனிசிரேஷ் டரே! உம்முடைய இச்சையும் உமது மனைவியினிச்சையும் மற்றனேக ரிஷிகளினிச்சையும் கலியுகத்திற்றீரும் புத்ராருக் காய்ப் பேசியது போதுமென்றார் வசிஷ்டர் நாரதரறிந்தால்

நாற்றிசையும் அறியுமே யென்று அந்த யாழ்வல்லோனைத் தொழுது, ஓ பகவானே! நானும் என்மனைவியும் திரிமூர்த்திகளையும் ஆதிசத்தியையும் மகவாகப் பெற்றெடுக்கக் கலியுகத்தில் மானிடராய்ப் பிறக்கும்போது நீரெங்களுக்கு ஆசானாக வரவும் அக்காலத்திலேயே இவ்வார்த்தையை உமது வாக்கா லுரைக்கவும் அதுவரையில் மறைத்துவைக்கவும் வேண்டுகிறேனென்றார் அப்படியே செய்வேனென் றுரைத்த நாரதராகிய நீரிக்கலியுகத்தில் பிறந்து ஸ்ரீபாத ஸ்வாமிகளென்று பேர்பெற்றீர் வசிஷ்டரும் அருந்ததியும் விடோபாவாகவும் ருக்மாபாயாகவும் பிறந்தார்கள் நானுமிவர்களும் உன்வாக்கியப்படி விடோபாவுக்குப் புத்திரராய்ப் பிறக்கப் போகிறோம். நீரவதயிரியப் படவேண்டா மென்று திருவாய்மலர்ந்தருளி மூவருடன் அந்தர்த்தானமாய் வைகுந்தமடைந்தார். அவ்வற்புத வசனங்களைக் கேட்ட ஸ்ரீபாத ஸ்வாமிகள் பிர்மித்து மர்மம் வெளிப்படுத்தாமல் பிர்மக்ஞானத்தில் சொக்கியிருந்தார் இப்பால் பரமசிவனைப் பகவான் நோக்கி, ஓ மகாதேவா நீர் முந்திப்போய் விடோபாவுக்கு மைந்தனாய்ப் பிறந்து களிப்புறச்செய்வீர் நாங்கள் மூவரும் உமக்கிளையவரா யுற்பவிக்கிறோமென.

அதற்குப் பரமேசன் ஓ பகவானே! உமதிஷ்டப்படிக்கு நானே சீக்கிரமாக முந்திப்போய் விடோபாவுக்குப் புத்திரனாகின்றேன் ஆனால் நான் துருவாசனாதி யவதாரங்களெடுத்து என்னையே புகழ்ந்துக்கொண்டேன் நீரோ வியாசாதி அவதாரங்களெடுத்து உம்மையே சிரேஷ்டப் படுத்தினீர் இதனையே வற்புறுத்தி அனேக ரிஷிகள் சைவவைஷ்ணவமென்னும் இருபிரிவாகப் பிரித்து சதுர்வேதங்களைப் பிறருக்குப் போதிக்காமல் மறைத்து ஆறு சாஸ்திரங்களிலும் பதினெண் புராணங்களிலும் தங்கள்கருத்தை வெளிப்படக்காட்டிச் சகுணத் தியானத்தையே விஸ்தீரணஞ் செய்து நிற்குணத் தியானத்தை மறைத்து உபநிஷதங்களில் காட்டாமற் காட்டின காரணத்தால் பிரமக்ஞானம் மறைந்து அஞ்ஞானம் நிறைந்து கர்மகாண்டத்தால் கட்டுப்பட்டு ஆத்மாவை யாராய்ந் தறியு மூணர்வுகெட்டு ஞானக்கண் துலங்காமல் ஊனக்கண் மலங்காமல் நிர்க்குண தியானிகளாகிய இஸ்மாயில் இஸாக்கென்பவரா லேற்படுத்தப்பட்ட மதங்களி ல

னேகர் பிரவேசித்து அரியாகிய நம்மைத் தூஷித்து பிரஷ்டத்துவமடைந்தார்கள் இதுகாரணத்தால் நாமிப்புவியிலவதரித்து நிர்க்குணத்தையே விஸ்தீரணமாகப் போதித்து ஈனமதஸ்தரை வாதித்துக் கொலையாதி பஞ்சபாதகங்களை நிக்கிரகித்து நமக்குப் * பூசனை செய்யும்படி செய்யவேண்டுமென்றுரைத்தார். அதற்குப் பிரமாவும் ஆதிசத்தியும் இப்படிச் செய்வதே உத்தமமென்றறைந்தார்கள். அதற்குப் பகவான் நானுமுங்களிஷ்டப்படியே நடந்துகொள்ளுகிறேன் ஆனால் தன்னையறிந்த பிர்மக்ஞானியும், சகுணதியானத்தால் பரவசமடைவதால் சகுணத்தையும் பலர்க்கு விளங்கச்செய்து நிர்க்குண தியானிகளாகிய புறமதஸ்தரைச் சகுண தியானிகளால் பங்கப்படுத்துவோம் இதனால் சகுணத்தியானத்தை வெறுக்கும் நிர்க்குண தியானிகளும் சகுணோபாசனைக் குட்பட்டுக் கிர்தார்த்தராவார்கள் ஆகாயத்தை எட்டிப் பிடிப்பதுபோல் ரூபமாகிய பரப்பிரமத்தை அபக்குவர்கள் தியானித்துப் பலனடையாமலும் ரூபமாகிய நம்மைத் துதித்து வருகாமல் துவேஷித்து நரசென்ம மடையாமலும் குறுக்கி யோனிகளிற் சுழன்று அதோகதிக் காளாகினார்கள். அன்றிப் பேதமிறந்த பிரமக்ஞானியும் உலகோபகார நிமித்தம் ஜபதபதியான தானாதிகள் அவசியம் செய்யவேண்டுமென்று முன்னமே அனேக சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறதென்று பலவார்த்தைகளாடி ஓ வாமதேவா! நீர்போ யவதரித்துப் பிரமக் ஞானத்தையும் நிர்ச்சலமான மோனத்தையும் விளக்குவீ ராகவென்று மற்ற இருவருக்கும் விடை கொடுத்தனுப்பினார். இப்பால் பரமேசன் தன்னம்சத்தை விடோபாவின் வீரியத்தில் பிரவேசிக்கச்செய்து அவருடைய நிஷ்டையைக் கலைத்து ருக்மாபாயுடன் கூடும்படியாகச்செய்து அவ்வுத்தமியின் கர்ப்பத்திற்றங்கிப் பூரணமானபின் இகலோகமும் பரலோகமும் ஈடேறும்பொருட்டு அவதரித்தார் உடனே அக்குழவியின்மேல் தேவர்கள் சலசலவென்று பூமாரிபொழிந்து தேவதுந்துபியை முழக்கினார்கள். அழகான புத்திரனுற்பத்தியானதும் ககனத்திலிருந்து பூமாரி பொழிந்ததும் பார்த்த விடோபாவும் ருக்மாபாயும் களிசாகரத்திற் படிந்தவர்களாய் அன்பாகப் பாராட்டி

* சிறப்பொடு பூசனை செல்லாது வானம்,
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு. குறள்.

இன்பாகச் சீராட்டி எல்லாவற்றையும் வெறுத்த பரமஹம்ச னைப்போல் அசையாமல் தறிபோலெப்போழ்து மிருக்கும் குழந்தைக்கு நிவர்த்திசாதுவென நாமகரணமிட்டு பாதுகாத்துவந்தனர்.

பின்பு பகவானம்சம் விடோபாவை மயங்கச்செய்து ருக்மாபாயின் கர்ப்பத்தடைந்து விர்த்தியாய் ஜனிக்கும்போதே தந்தை களிக்கும்படியான ஞானவார்த்தைகளாடிக்கொண்டே பிறந்தார். அதனால் சதிபதிகளதிசயித்து அக்குழவிக்கு ஞானேசுவரரென்று பேரிட்டுக் களிப்புற்றிருந்தார்கள். பின்பு பிரமாம்சம் ருக்மாபாயின் அகட்டிலடைந்து வளர்ந்து உற்பவிக்கும்போது உலர்ந்த விருட்சங்கள் பச்சையாகி தளிர்ந்தபடியாலும் இறநது கிடந்த ஈ எறும்பு முதலானதும் உயிர்பெற் றெழுந்தபடியாலும் தாய்தந்தை இப்பாலன் நன்னிமித்தத்திற் பிறந்த காரணத்தால் சோபான் தேவென்று நாமமிட்டு வளர்த்தார்கள். இப்பால் ஆதிசத்தியினம்ஸம் ருக்மாபாயின் வயிற்றிலடைந்து வளர்ந்து உற்பத்தியாகும்போது மோனமே முக்தியென் றுரைத்துக்கொண்டே பிறந்த காரணத்தால் முக்தாபாயென்று நாமமிட்டு நான்கு சிசுவையும் அன்பாய்ப்பாலித்து ஆனந்தவாரியிற் படிந்திருந்தார்கள். கேட்டீர்களோ சித்தர்களேயென்று பின்னும் நாபாஜிசித்தர் சொல்லத்தொடங்கினர்.

திரிமூர்த்திகளும் ஆதிசத்தியு முற்பத்தி முற்றிற்று.

ஏழாவது அத்தியாயம்

விடோபா சஞ்சலத்துக்காற்றுமல்

பரப்பிரமத்தைத் துதித்தது.

ஸ்ரீமந் நாராயணருடைய திவ்விய திருத்தாட் டாமரைகளை அத்தியந்த பக்தியோடு தியானஞ்செய்தேத்தும் சித்தர்களே! ஸ்ரீகயிலாசவாசனும் ஸ்ரீ வைகுந்தவாசனும் பிரமதேவனும் ஆதிசத்தியும் தனக்குக் குழவிகளாயவதரிக்கும்படியான பாக்கியம் பெற்றும் பத்தர் சித்தர்களுக்கு மரிதான பிரமவித்தையைக் கற்று அகண்டிதமான பிரமானந்தத்திற் பொருந்திப் பேதாபேதங்களில்லாமற் றிருந்திப் பெருந்தவத்தில்

மன நாட்டமூற்றிருந்த விடோபாவானவர் (கடந்தஞானியுங்
கடப்பரோ மக்கள்மேல் காதலென்கிற) பழமொழிப்படியே
பிள்ளைகள் வாஞ்சைமீறிப் பிரமக் ஞானம் மாறிக் காளைகளா
சையாற் கட்டுண்டிருந்தார். ருக்மாபாயி வாரத்துக்கோர்தரம்
நாட்டிற்சென்று தந்தை வீட்டிலிருக்கும் பண்டங்களைக்கொ
ண்டுவந்து பாகஞ்செய்து பதிக்கும் பாலருக்கும் படைத்துக்
கொண்டிருந்தாள். இப்படி ஆறுவருஷங்கள் கழியத் தந்
தையி னஸ்தியெல்லாம் நாஸ்தியாய்ச் சீதோபந்து பிட்சை
யெடுப்பதற் காரம்பித்ததறிந்த ருக்மாபாயி தன் பதியைப்
பணிந்து ஓ ஸ்வாமி! நம்மால் எனதுதந்தை பிட்சையெடுத்
துண்பதற் காரம்பித்தார். இனிக் காட்டிலிருந்து இக்குழந்
தைகளைக்காக்க நம்மாலாகாது ஆதலால் நாட்டிற் செல்வதே
உத்தமமென்று வணங்க, விடோபா சம்சாரத் தொல்லையா
லல்லவா சமாதிநிலை தவிர்ந்தது என்றுன்னிச் சண்டிக் குதி
ரைக்குச் சறுக்கினதே சாக்கென்பதுபோல் ஓ பெண்ணே! நீ
குழந்தைகளோடு நாட்டிற் சென்று சுகமாயிரு நான் காட்டி
லேயே காலங்கழிக்கிறேனென ருக்மாபாயி ஓ என் பிராண
நாயகா! காட்சியளிக்கும் மாட்சிமையாகிய கொழுநனைப் பிரி
ந்த குலமங்கைய ருலகிலுண்டா? பிரிந்து துணிந்திருப்பவர்
க்குப் பரகதியுண்டா? நீரிப்படிச் சொல்வது தவத்தின்மே
லாசைகொண்டா? அல்லது வேறெண்ணங் கொண்டா? பிள்
ளைகளாலல்லவோ இச்சள்ளை நேரிட்டது குழந்தைகளைக்கொ
ண்டுபோய்விட்டு வருகிறேனென விடோபா கும்பிடப்போன
தெய்வம் குறுக்கே வந்ததைப்போலச் சந்தோஷித்து இவள்
நாட்டிற் சென்றவுடன் நாம் காட்டிற் போகலாமென்கிற
எண்ணத்தால் இது நல்லவுபாயம் இவள் செய்வது சகாயம்
என்று ஓ பெண்ணே! என்னிருகண்ணே! நாட்டிற் கொண்டு
போய்ச் சீக்கிரம் விட்டுவாவென, ருக்மாபாயி பதிவார்த்தைக்
கெதிர்மொழி சொல்லாமல் மக்களையும் அழைத்துக்கொண்டு
நாட்டை யடைந்தாள். உடனே, விடோபா இது நல்ல
தருணம் இந்த சமுசாரத்துக்குச் சரணம் நமக்கேன் இந்த
ஆவரணம் இதனாலல்லவோ ஜனனமாணம் என்று துணி
ந்து சத்குரு நாதனைப் பணிந்து தபோவெண்ணம் ஓங்கி
அவ்வரையை நீங்கி மக்களாசையினாலே ஏங்கிக் காட்டிற்
செல்லப் பின்தாங்கி மலையினருகே வருவார் யாருக்கார் துணை

யென்று காட்டிற் செல்வார் காலெழாக் குறையால் பர்வதத் தண்டை வருவார் விவேகமேலிட்டாற் பின்னுங் காட்டிற்செல்வார் இப்படி வெகுநேரம் உஞ்சலலைவதுபோல் மலைக்கும் கானகத்துக்கும் பலதரமலைந்துதிரிந்து முடிவில் மக்களாசையிறந்து மனதிற் றெளிவுபிறந்து மனதின் விருத்திகள்குறைந்து பிரமக் ஞானம் நிறைந்து பேரின்பத்தின் மனமுறைந்து அடர்ந்த காட்டிற் பிரவேசித்துக் கடவுளை மனதிற் பூசித்து இது நல்ல ஸ்தானமென்று யோசித்துச் சமுசாரத்தைத் தூஷித்துச் சன்யாசத்தைப் பூசித்துக் குரு சங்கீர்த்தனங்களைக் கோஷித்துப் பிரமானந்த நிஷ்டையிலிருக்க ஆசித்துப் பத்மாசனத்தில் வீற்றிருந்து தேகத்தை அசைக்காமல் ஊனக்கண்களைமூடி ஒன்ருன பிரமத்தைபாடி ஓயாத வெண்ணங்களால் வாடி உவகையிற் பிர்மத்தை நாடி இந்திரியங்கள் விஷயங்களைப் புல்லாமல் மடக்கி மனவெண்ணங்க ளோங்காமலொடுக்கி மனதைக் கூடஸ்தப் பிரமத்திலொடுக்கி மாறெண்ணம் வராமல் முடிக்கி ஞானக்கண் ஒளிபெற்றுத் துலங்க நானென்னு மகங்காரங் கலங்க மாயையிலிருந்து வெளிப்பட்டு அனேக காலமாகத் தொன்றுதொட்டு வரும் வாசனைகளொன்றுபட்டு ஆகாமியத்தைக் கொன்றுவிட்டுச் சஞ்சிதத்தை ஞானக்கினியாற் சுட்டுப் பிரமானந்தத்தி லொன்றுபட்டுப் பிராலபதமென்னும் தேகஸ்மரணை அடிபட்டுப்போகும் படியாகச் சித்திரதீபம்போலவும் நிவாத தீபம்போலவும்பிர்ம நிஷ்டையிற் றிகழ்ந்திருந்தார்.

இவரிங்கிப்படியிருக்க ருக்மாபாயி குழந்தைகளை யழைத்துக்கொண்டுபோய்த்தந்தை தாயைக்கண்டு எந்தையே என்னை வளர்த்த தந்தையேதாயே என்னையீன்ற ஆயே இக்குழந்தைகளை நீங்களே பாதுகாக்கவேண்டுமல்லது வனத்திலிருக்கும் எங்களாலாகாது ஆதலாலிங்கு விட்டுப்போக வந்தேனெனச் சீதோபந்து ஓ என் செல்வப்புத்திரியே! கற்பிற் சிறந்த தாத்திரியே! மக்களுக்காக மகாரிஷிகளெல்லாம் மாதவஞ் செய்ய அருமையான தபோபலத்தாலும் ஆசிரியர் ஆசீர்வாதத்தாலும் பிறந்த குழந்தைகளைப் பிரிந்து விடோபா எப்படி மனந்துணிந்திருப்பார், நீதான் எப்படி துணிவுற்றிருப்பாய் அரைக்கண முன்னைவிட்டு இப்பாலகர் எப்படி யிருப்பார்களென்ன ருக்மாபாயி தந்தையை வணங்கி இக்கான்மூலைக

ளால் என் பதிக்குள்ள பிர்மக்ஞானந் தவிர்ந்து போகும்படி யாயிருக்கின்றதேனெனின் எந்நேரமு மிவர்களுக்காகபண்டு பலாதிகள் வரவும், ஆழ்ந்த சுனைசென்று ஜலம் கொண்டுவரவும், மிருகங்களாற் சேதம் வராமற் பார்க்கவும், பாதுகாக்கவும் சரியாயிருக்கின்றது. இதனால் அங்கங் கறுத்து மனம் வெறுத்து வெகுநாளாய்ப் பொறுத்து மக்கள் பாசத்தை யறுத்துக் குழந்தைகளை நாட்டில் விட்டுவாவென்று வாய் விட்டறைந்தார். கொழுநன் வாக்கியத்தை மறுத்தல் மதி தனில் மிகுந்தபதிவிரதைகளுக்கடாது. மறுத்தால் தோஷம் விடாது. அன்றி நான்வீட்டுக்குவந்து போவதற்குள் அவர் சமாதிநிஷ்டையில் தன்னை மறந்திருந்தால் மக்களை மிருகங்கள் கொன்றுவிட்டாலும் கொன்றுவிடும் தின்றுவிட்டாலும் தின்றுவிடும் அல்லாமல் சத் புத்திரர்களுக்குத் தந்தை வாக்கே வேதம் சத்சிஷர்களுக்கு சத்குருவாக்கே வேதம் பதிவிரதைகட்குப் பதியின்வாக்கே வேதம் ஆதலால் பாலகரைகொண்டுபோய் இவர்கள் பாட்டனரிடம் விட்டுவாவென்றறைந்த வாக்கியத்தை நான் மறுக்கலாமா? சற்றும் பொறுக்கலாமா? பதியை வெறுக்கலாமா? தவத்தைச் சுறுக்கலாமாவென்று பணியச் சிதோபந்து உன் பதியை நாட்டி லழைத்துக்கொண்டுவந்து சுகமுற்றிருக்கலாமே தவத்தைப் பெறுக்கலாமே காட்டிலிருப்பானேனென, ருக்மாபாயி பதிவாக்கியம் மறுக்கவும் மறுத்தோருரை யுரைக்கவும் பதியைப் பிரிந்திருக்கவும் கூடாதாதலால் சீக்கிரம் நானவரிடம் போகவேண்டுமென்று குழந்தைகளுக்கு முத்தமிட்டுக் கண்ணீர் தாரை தாரையாய் விட்டுத் தாய் தந்தையைக் கும்பிட்டு நாட்டிலிருக்கப் பின்னிட்டுக் காட்டிற் செல்ல முன்னிட்டுப் போகும்போது குழந்தைகள் அம்மா அம்மாவென்று கூப்பிட்டுக்கொண்டே மறுக்கவும் கண்டோர் மக்களைவிட மணாள னதிகமாவென்று வெறுக்கவும் தாயானவள் குழைந்தைகளுன்னை விட்டெப்படி யிருக்குமென்றழவும் தந்தை யெங்களுக்கிவ்வித சங்கடந் தரலாமோவென்று தெய்வத்தைத் தொழவும் பார்த்த ருக்மாபாயி பதியினைப் பிரிந்திப் பார்தனில் பாவையரிருக்கலாமா? இது நீதியாகுமாவென்று மக்களை வெறுத்து மணாளனை யடுத்துக் கற்பினிலைமையைக்காட்டிய தமயந்தி அற்பமானவளா பிரபஞ்சத்தோர்க் கச்சமுற்றுப் போனவளாவென்று பட்ட

ணத்தை விட்டு வெளியே புறப்பட்டுத் தோப்பு துறவுகளை
யுங் கடந்து கொஞ்சதூரம் நடந்து மக்கள் வாஞ்சையா
லிடைந்து சொல்லொணுத் துன்பமடைந்து காதலராசை
மீறி காயலனுசைமாறி மைந்தரைபார்க்க ஆசித்துமண்டலத்
திற் பிரவேசித்து ஙமந்தரை வாரியெடுத்து மாருத் துன்பத்
தைக்கெடுத்துச் சற்றுநேரமிருந்து கணவனை நினைத்து கண்
ணீரால் நனைந்து மக்களைப்பிரிந்து மணவாளன்பாற் போ
கத் துணிந்து பாம்பைப் போலவும் கொடிகளைப் போலவும்
பன்னிப் பிடித்துக் கொள்ளும் பாலரை விட்டுப் பிரிவதற்கும்
கணவன்பாற் செல்லுதற்குங் கூடாமல் இருபுறமும் அக்
கினி மூண்டெரியும் மூங்கிற் குழாய்களிலலையும், எறும்பைப்
போலக் காட்டுக்கும் நாட்டுக்கும் பன்முறை யலைந்து பாலரா
சை தொலைந்து மலைச்சாரலிற் சென்று வாசஸ்தானத்திற்
போய் நின்று மணுளனை நாடிக் காணுமல் வாடிச் சுற்றுபக்
கங்களி லோடி அதிக பரபரப்போடுந் தேடிப் புதருகளில்
நுழைந்து களையால் கீழ்விழுந்து ஐயோ பொழுதுபோச்சு
தே எனக்கே துன்பம் வாய்ச்சுதே என்று செடிகளில் மயிர்
சிக்கவும் தோள் புயங்க ளிடிக்கவும் மூட்களாலுதிரம் பெருக
வும் கற்களால் கண்ணீர் பெருகவும் உடல்வேர்த் துருகவும்
உள்ளங் கலங்கி யுருகவும் கரடியும் புலியும் மிரட்டவும் கரியு
பெருமையு மதட்டவும் நடுங்கி ஒடுங்கி குருதியாலுங் கண்ண
ராலும் நனைந்து கொழுநனை அடிக்கடி நினைந்து ஓ என்
பிராணநாயகா! பிராண சினேகா! சர்வசங்க பரித்தியாகா!
சதானந்தபோகா! நீ யிப்படி மோசஞ்செய்வா யென் றறியா
மற் போனேனே ஆருத்துயரத்துக் குள்ளானேனே மணம்
வேண்டா மென்று மறுத்தவா மாதா பிதாவையும் வெறுத்த
வா காமக்கடலைக் கடந்தவா காசினித் தலங்களுக்கு நடந்த
வா மோட்ச வீட்டில் நுழைந்தவா மோனுனந்தத்திற் றழை
த்தவா மிருகங்களின் கர்ச்சனையால் மனம் நடுங்குகின்றதே
உன்னைக் காணுக் குறையால் பிராணனும் ஒடுங்குசின்றதே
இருட்டால் வழியுந் தெரியவில்லையே ஏனோதந்தாயிவ்வளவு
தொல்லையே இன்னம் உனது மனமிரங்கவில்லையே எனக்
குன் அருமைத் தரிசனந்தரவில்லையே மாதரச்சத்தால் மரண
முடைவாரே மணுளன்மே லிச்சையால் மிகவும் இடைவாரே
என்னை நீ யிவ்விதஞ் சோதிக்கலாமோ இருளிலு மறைவுற்

றப் பேதிக்கலாமோ ஓ புருஷோத்தமா புண்ணிய புருஷா பூததயாளா புண்டரீகத்தாளா ஓ என் தெய்வமே என்னுயிரே தனித்திவ்விருளி லுன்னைத் தேடித்தேடித் திரிகிறேனே பதறிக்கதறி வெகுநேரமாய்ப் புலம்புகிறேனே ஏனென்று பேசலாகாதோ இன்னமோர்கணத்தி லென்னுயிர் போகாதா இன்னம் ஒளித்திருப்பதற் கிச்சையா எளியாளுடன் பேசவும் லச்சையா என்கிற பலவார்த்தைகளாடிக்கொண்டே இராத்திரியெல்லாந் தேடிச் சூரியோதயமானதே மலைகளின் குகைகளிலும் புதருகளிலும் பர்ணசாலைகளிலும் அடர்ந்த சோலைகளிலும் பார்த்து அங்கம்வேர்த்து ஓ மயில்களே குயில்களே என் மணாளனைக் கண்டீர்களா ஓ கரிகளே நரிகளே என் காவலனைப் பார்த்தீர்களா ஓ புலிகளே புனுகு பூனைகளே என் கணவனிங்கு வந்தாரா ஓ காகங்களே யூகங்களே என்னார்வல னுங்களுக்குத் தரிசனந் தந்தாராவென்று மிருகங்களையும் பட்சிகளையுங் கேட்டுக்கொண்டு வாயில்வரும் மொழிகளை விண்டு பிள்ளைக ளாசையாலல்லவோ பிராணநாயகரை யிழந்தேன் பிரியாத்துன்பத்தாற் குழைத்தேன் ஓ கர்த்தனே பரிசுத்தனே பரமேசனே ஜகதீசனே பரிபாலனே மறைமூலனே பிள்ளைகளாலென்ன பேற்றைப் பெறவெண்ணியோ பிராணநாதனைப் பிரிந்தேன் இடரால் வயிறெரிந்தேன், ஓ பகவானே! பகவானே! என் பிராணநாயகனை மிருகங்கள் கொன்றதோ அல்லது தின்றதோ வெருப்பால் வேறிடம்போனாரோ வேஷ்டையால் தனியனானாரோ ஒன்றுந் தெரியவில்லையே ஒன்றுந் தோன்றவில்லையே ஓ தெய்வமே! மனந்துணிந் தெப்படியிருப்பேன் என்மேலுனக் கிவ்வளவறுவறுப்பேன் எனக்குற்ற தீயவிதி யிவ்வுலகி லியாருக்காவதுண்டா யாருஞ்செய்யாப் பாவம் நானொருத்தியே செய்ததுண்டா பதினாலு வருஷங்களாய்த் துக்கமே துணையாயிருக்கின்றதே விசனமே குடியாயிருக்கின்றதே ஓ ஆதிகாரணா! சர்வபரிபூரணா! அனந்தசயனா! கமலநயனா! பாண்டுரங்கா! ஸ்ரீரங்கா! நாராயணா! பரமபாராயணாவென் றிவ்விதமாகத் தோத்திரஞ் செய்துக்கொண்டே அக்காரடவியில் ஓலமிட் டழுதுக்கொண்டே பார்த்தவிடங்களிலேயே பலதரம்பார்த்து வாட்டத்தோடிருக்கும்போது நாட்டில் அன்னையைப் பிரிந்த பாலர் நால்வரில் நிவர்த்திசாமி இதோ வருகிறேனென்று போன மாதா மறு·

நாள் மாலைபரியந்தம் வராக்குறையாலும் மார்மேலுந் தோண மேலு மேந்திக்கொண்டிருந்த தந்தையைப் பிரிந்ததாலும் மனம்மயங்கி மிகவுந்தயங்கி ஓ தந்தையே தந்தையே என்னை வளர்த்த எந்தையே எந்தையே ஓ என்னருமைத் தாயேதாயே என்னையீன்ற ஆயே ஆயே எங்களைவிட் டெங்கேபோனீர்கள் போனீர்கள் எங்கள்மேல் நிராசையே ஞனீர்கள் ஆனீர்களெ ன்கிற பலவார்த்தைக ளாடிக்கொண்டே தாய்போன மார்க்கத் தைநோக்கிப் போகலுற்ருர். அப்போது ஞானேசுவரர் ஓ ஐயா ஐயா எனைக்காத்த மெய்யா மெய்யா எனதன்புள்ள ஒள வையேஔவையே எனைப்பயின்ற கௌவையே கௌவையே உங்களைவிட்டு நாங்களிருப்போமா இருப்போமா இருந்து யிர் தரிப்போமா தரிப்போமாவென் றுரைத்துக்கொண்டே தமையன்பின் ருெடர்ந்து போகலுற்ருர் அத்தறுவாயில் சோ பானதேவ் ஓ அத்தனே அத்தனே வாஞ்சையுள்ள கர்த்தனே கர்த்தனே அன்னமூட்டின அன்னையே அன்னையே இதோ வருகிறேனெனச் சொன்னையே சொன்னையே இதுபரியந்தம் வாராமலிருககுங் காரணம் ஏதோ ஏதோ எவரால் வந்த வாதோ வாதோவென்று கண்ணீர்வடிய முன்னேர் பின்ன கவே செல்லலுற்ருர். அத்தருணத்தில் முக்தாபாயி ஓ தா தையே தாதையே இதுவென்ன வார்த்தையே வார்த்தையே ஓ அம்மனே அம்மனே பாலூட்டுந் தம்மனே தம்மனே ஓ அம்மா அம்மா நீ வருகிறேனென்று போனது சும்மா சும் மா ஓ எங்களம்மை அம்மை நீபிரிந் தெங்குபோனய் எம் மையென் றழுதுக்கொண்டும் தாயைப்பார்க்க ஏக்கங்கொண்டு முன்னவர் பின்னவர் ஓடத்தொடங்கினுர்கள். அதையறிந் தச் சிதோபந்தும் அவர் மனைவியும் அதிக பரபரப்போ டும்போய்க் குழந்தைகளை மறுத்துக் கொடிய விதியைவெறு த்து அப்பா ஒப்பிலாச் சிகாமணிகளே என்னிரு கண்மணி களே உங்கள் தாய்தந்தை இதோ ஒருநொடிக்குள் வருவார் கள் தரிசனந் தருவார்கள் இதற்குள்ளேன் வோடுகிறீர்கள் சோபமுற்றேன் வாடுகிறீர்களென்று நால்வரையும் வீட்டிற் கொண்டுவந்து பண்டுபலாதிகளைத்தந்து சந்தோஷப்படுத் தினுலும் கண்ணீர்விட்டு ஐயா ஐயா அம்மா அம்மாவெ ன்று தாயைப்பிரிந்தது முதற்கொண்டு மறுநாள் சாயந்திர பரியந்தம் அழத் தொடங்கினுர்கள். அதனுல் சிதோபந்து

வின்மனங்கலங்கி ஓ தெய்வமே! எங்களையும் இச்சிசுக்களையும் இவ்விதமாய்ப் பரதவிக்கச்செய்வதுனக்கழகோ அந்தவிடோ பாவை நாட்டிற் கொண்டுவந்து சேர்க்கலாகாதா உனதருட் கண்ணு, விப்பாலகரைப் பார்க்கலாகாதா ஆகாரமும் நித்திரையுமின்றி அறியாக் குழந்தைகளன்னை யப்பனைப் பிரிந்திருக்கமாட்டாமல் கதறுகின்றூர்களே கதறிப் பதறுகிறூர்களே உனக்குக் கருணையில்லையா நாங்கள் செய்துக்கொண்டதே தொல்லையா ஓ கண்ணிலாத தெய்வமே கதறுங் கான்முளைக் கென்ன செய்வமோ ஓகர்த்தனே கர்த்தனே பரிசுத்தனே சுத்தனே ஓ பகவானே பகவானே மகவானே மகவானே என்று கண்ணீர் விட்டழத் தொடங்கினர்.

அவர் மனைவியும் கனலிலிட்ட மெழுகைப்போற்கரைந்தழத்தொடங்கினள் இவ்விதமாக நான்குகுழந்தைகளும் சீதோபந்துமவர்மனைவியும் மனம்புழுங்கி யிருக்குங்காரணத்தாலும் கானகத்தி லொருத்தியாக தனித்து ஓலமிட்டுருகும் ருக்மாபாயின் சோகத்தாலும் அடர்ந்த கானிற்சென்று அருந்தவத்திலிருக்கும் விடோபாவின் சமாதி நிஷ்டை கலைந்துவிட்டது ஏனென்றால் திரிமூர்த்திகளும் ஆதிசத்தியும் கலக்கமுற்றால் கலங்காத தொன்றுண்டோ தாத்திரை யசைந்தால் சகலமுமசைவதுபோல விடோபா மனக்கலக்கமுற்று தனயர்மேல் வாஞ்சையுண்டாகி அத்வைத மாயிருந்த மனமிரண்டாகி அனலிலிட்ட அரக்குபோலுருகி கண்ணீர் தாரைதாரையாய் பெருகி அடிக்கடிக் குழந்தைகளை நினைந்து வோயா கண்ணீரால் நனைந்து ஓ பரமாத்மாவே! தேவாதிதேவா வேண்டாமென்று மறுத்த வெனக்கு விவாகமேன் செய்துவைத்தாய் சன்னியாசியாய்ப் போனவென்னைச் சம்சாரமேன் தொடர்ந்திருக்கவைத்தாய் உனதிஷ்டமான வென்னைக் குலப்பிரஷ்டனைக வேனமைத்தாய் நிஷ்காமியான வெனக்கு அடங்காக் காமத்தையேன் ஜனிக்கவைத்தாய் மகவை வேண்டாதவெனக்கு நான்கு மைந்தரேன் பிறக்கச்செய்தாய் ஒருநாளும் பிரியாப் பாலரைப் பிரியும்படி யேன் செய்தாய் சஞ்சலமில்லா வெனக்குஞ் சஞ்சல மேன் பிறப்பித்தாய் என்கிற பற்பலமொழிகள் பகர்ந்து பாலரைப் பார்க்க வாஞ்சையாகி மனையாள் மேல் மிகுமோகமாகி ஓ நிவர்த்திசாதுவே உன்பரிசம் பட்ட

மாத்திரத்தில் அனேகநாள் நிஷ்டையிலிருந்தும் சஞ்சல முற்றிருக்கும் நெஞ்சமானது ஒரு கணத்தில் நிர்ச்சலனமாய் மௌனானந்தத்தைக் கொடுக்குமே அகண்டானந்த மென்னை யடுக்குமே இப்பேர்க்கொத்த மைந்தனாகிய உன்னைப் பிரிந்த காரணமேதோ யான் செய்த தீதோ ஓ க்ஞானேசுவரா! உன் பாத பரிசம் பட்ட மாத்திரத்தில் மாயா மயக்கங்களெல்லாம் மாண்டுபோகுமே ஓயாக் கவலைகளெல்லா மோய்ந்து போகுமே என்றுங் காணா இன்பஞ் சுரக்குமே என்னையின்னானென் றறியாமல் மறக்குமே இப்பேர்க்கொத்த புத்திர சிகாமணியாகிய வுன்னையேன் பிரிந்தேனோ பிரிந்திங்கு தனித்து ஏனிருந்தேனோ ஓ சோபானதேவா! மஹானுபாவா! உன்னை என் அஸ்தங்களாற் றொட்டமாத்திரத்தில் ஆகாத வேதாந்தங்களெல்லா மரைக்கணத்திலாகுமே அகலாச் சங்கைக ளகன்று போகுமே மாரு வனுபூதிவந்து வாய்க்குமே மனதிலானந்தம் வந்து தேக்குமே ஓ முக்தாபாயி என்னைப்பெற்ற தாயி உன்னை என்மடிமே லிருத்திக்கொண்டால் அஷ்டசித்திகளின் அனுபவந் தோன்றுமே அளவிலா வின்ப மகத்திற் றோன்றுமே நிஷ்டையில் நெஞ்சம் நிலைத்திருக்குமே, நிமையில் பாழ்மனதினை மிகவுருக்குமே யென்பார் தன் விவேக மேலிட்டால் தனயரை வெறுத்து மௌன நிஷ்டையிலிருப்பார் சஞ்சலப்பட்டுப் பிரம நிஷ்டை கெட்டு மனைவியைக் கொண்டாடுவார். ஐயோ பிரிந்துவந்து விட்டோமே யென்று வாடுவார் தன்விசார ஞானத்தால் மனைவியின் வாஞ்சையை நீக்குவார் சற்றுமில்லாமற் போக்குவார் சற்றுநேரம் நிஷ்டையிலிருப்பார் பின்னுங் கண்களைத்திறப்பார் சமாதி நிலையை மறப்பார் தன்னைத்தானே வெறுப்பார் அந்த இந்த வடவயி லேன்வந்தேனென்பார் மனைவியைப் பிரிந்தேனென்பார். இவ்விதமாக நிஷ்டையிலிருப்பதும் பிரபஞ்ச வியாபாரத்தால் விழித்திருப்பதுமாயிருந்து முடிவில் சஞ்சலசித்தனாகிப் பிதற்றும் பித்தனாகி விகற்பத்திலுஞ் செல்லாமல் நிருவிகற்பத்திலும் நில்லாமல் சங்கல்பத்திலும் போகாமல் நிர்ச்சங்கல்பத்துக்கு முள்ளாகாமல் அசரீரி யுரைத்ததும் வைராக்கியம் பின்னப் பட்டதும் சன்யாசம் நீங்கினதும் குலப்பிரஷ்ட மடைந்ததும் தாரித்திர மடைந்ததும் தாய் தந்தையரைப் பிரிந்ததும் சமாதிஞானங் கலந்ததும் ஆகிய

இவைகளை நினைத்து நினைத்து ஒன்றுந் தோன்றாதவராய் பரப்பிர்மத்தைத் தன் வாய்விட்டுத் தோத்திரஞ் செய்யத் தொடங்கினர்.

பரப்பிரம ஸ்துதி.

சந்த விருத்தம்.

அம்பரகோசப்பரங்காலங்கிதிங்களெங்குமாய்ச்
சம்புகேமிசவுயம்புசாமிசதாசிவன்பணிதுங்கமாய்க்
கம்பநீக்கியகம்பமாக்கியகற்பவாழ்வருடுங்கமாய்ப்
பிம்பமாகியபிம்பமாகியபிர்மமேபரப்பிர்மமே. 1

பூதமும்மனமாதியும்முயிர்போதமேதவிர்போதமே
நேதியும்மிகுநீதியுந்தவிர்நீதமேநவநீதமே
நாதமும்ஒளிபேதமும்உணர்நாதமேஜகநாதமே
பேதையேகவிரோதமேபரப்பிர்மமேபரப்பிர்மமே. 2

தன்னையாய்ந்தவருன்னையாய்ந்தவர்சாந்தமேபவசாந்தமே
கன்னலேயுயிர்மின்னலேயருட்காந்தமேகல்லேகாந்தமே
என்னையாரிடர்தன்னையாரோடியம்புவேனேசுயம்புவே
பின்னமாகியபின்னமாகியபிர்மமேபரப்பிர்மமே. 3

தஞ்சமென்பவர்பாநிரஞ்சனசாட்சியேசர்வசாட்சியே
வஞ்சமின்றியகெஞ்சில்வாழிருவாட்சியேயுயர்காட்சியே
அஞ்சலென்றனைகெஞ்சினேற்கருளாட்சியேமிகுசூட்சியே
பிஞ்சகன்றெழுமாட்சியேபரப்பிர்மமேபரப்பிர்மமே. 4

அந்தரந்தனினேக்குவோர்க்கறிவானசின்மயகோலமே
சிந்தைதனைந்துணையேத்துவோர்மனசேட்டைநீக்கிடுஞ்சீலமே
நொந்துவந்துனையண்டினேர்க்கருணைக்கமீந்தறிவாக்குவாய்
பிந்துநாதமுணர்ந்தகேசுவபிர்மமேபரப்பிர்மமே. 5

சட்சுவாதிகள்சேஷ்டைநீங்குமோசத்துவக்குணமோங்குமோ
பட்சமின்றிமாதர்மேலுறுபட்சமெத்தினநீங்குமோ
இட்சணமெனையாண்டிடாவிடினென்மனந்துயர்தாங்குமோ
பிட்சையேற்றவரங்கமேபரப்பிர்மமேமரப்பிர்மமே. 6

அன்னைநீயலோதந்தைநீயலோஅன்புமின்பமுநீயலோ
சொன்னநீயலோயன்னநீயலோஸ்தூலமூலமுநீயலோ
என்னையாள்பவனீயலோவிடர்தன்னைக்காப்பவநீயலோ
பின்னையுங்குருநீயலோபரப்பிர்மமேபரப்பிர்மமே. 7

அண்டரும்நவகண்டருந்தொழுமாதியேயருள்வீதியே
தொண்டருக்கருடண்டருஞ்சயஞ்சோதியேயனுபூதியே
ஒண்டியாகியகண்டமாகியஒதியேமிருநீதியே
பிண்டமாகியபிண்டமாகியபிர்மமேபரப்பிர்மமே. 8

அண்டரண்டமழியினுமழியாவகண்டிதகாலமே
விண்டரனயன்செய்கையீந்தவவேலைமாற்றிடுமூலமே
தொண்டருக்கெனைதொண்டனுக்குவைத்தான்றலைசுருக்கநாள்
பிண்டஞானமளித்திடும்பரப்பிர்மமேபரப்பிர்மமே. 9

செய்வதொன்றுமறிகிலேனொருதிக்கிலாக்கொடும்பாவியேன்
உய்வதற்கொருமார்க்கமின்றிவணொண்டியாயுனையண்டினேன்
தெய்வநீயலதிந்தவேளையிற்றீயனென்றுயர்மாயவே
பெய்வியாருண்மாரியைப்பரப்பிர்மமேபரப்பிர்மமே. 10

ஆயனேமிகுமாயனேயுனையண்டினேனேழைத்தொண்டனேன்
தூயனேயருட்காயனேதொழும்சோமனேபலகாமனே
நாயினேற்கிகபோகவின்பொருநாளும்வேண்டிலேன்வேண்டிலேன்
பேயனேற்கினிநேயமேயருட்பிர்மமேபரப்பிர்மமே. 11

அருமையாந்தவஞ்செய்குவோர்க்கறிவானபேர்க்கனுகூலமே
தருமசாந்தசகந்தமம்புகழ்ச்சத்சுகம்விளைஞாலமே
கருமகூபத்தளற்றிலாழ்ந்திவண்கண்கலங்கியவென்னையாள்
பிரமனும்பணிசுந்தரானந்தபிர்மமேபரப்பிர்மமே. 12

வித்தையாலுனைக்காணலாமெனில்வேதமுன்னையறியுமோ
சித்தியாலடைதற்குநீயெந்ததிசையிற்றங்கியிருந்தலே
பத்தியாயுனையுன்னுவோமெனிற்பாழ்மனநிலைநிற்குமோ
பித்தனேற்கருண்முத்தநீயருள்பிர்மமேபரப்பிர்மமே. 13

ஆசையும்பசுபாசமுந்தவிரார்த்தலம்பரிசுத்தமே
நேசமும்விசுவாசமும்மருணித்தமேயெனும்புத்தமே
மோசமங்கையர்நேசம்நீத்தருண்முத்தமேபிரசித்தமே
பேசுதற்கரிசத்தமேபரப்பிர்மமேபரப்பிர்மமே. 14

பரிதியிந்துவும்பார்புலன்கனல்பாயும்வாயுவின்மூலமே
காரணசிவவிருட்புலன்பொறிகாமமாமிந்த்ரஜாலமே
தருணமீதெனையாளுவாய்சமசாந்தசாஸ்விததற்பத
பெருமைமாதவமீகுவாய்பரப்பிர்மமேபரப்பிர்மமே. 15

அன்னைதந்தையுமில்லையேயுறவாளருமிவணில்லையே
சொன்னந்தானியமில்லையேயருதோழருமெனக்கில்லையே
பின்னையோர்துணையில்லையேபிறகுன்னருள்வரவில்லையே
பின்னையாருளரென்னையாள்பவர்பிரமமேபரப்பிர்மமே. 16

அச்சுதானந்தநச்சினோர்முகத்தந்தமேமுதலந்தமே
மெய்ச்சுகோமயநற்சுணையரவிந்தமேமகாவிந்தமே
துச்சனேற்குருபொய்ச்சுழக்கடற்றோந்தமேதவிர்சொந்தமே
பிச்சையேற்றுணுமுச்சிதர்க்கருள்பிரமமேபரப்பிர்மமே. 17

அன்பனேமிகுநண்பனேயெனதாவியேசஞ்சீவியே
துன்பமீயுமிவ்வாழ்வினாற்பலதுன்பமுற்றனனிக்கணம்
இன்பமீந்தெனையாண்டிடாவிடினென்னதுன்பம்விளையுமோ
பின்பியாரெனையாளுவார்பரப்பிர்மமேபரப்பிர்மமே. 18

யாருந்திக்கிலையிக்கணத்தெனையாண்டுகொண்டருளாண்டவா
ஊரிலுள்ளவராலுமென்றயரோயுமுத்துத்தாண்டவா
சீரிலங்கியதேவநீயவன்றீயனென்றெனைநீக்கினா
பேரிழந்திருள்வாரிமூழ்குவன்பிர்மமேபரப்பிர்மமே. 19

சுத்தசாஸ்விதசுந்தராவருட்டீயரேததிமெந்திரா
முத்தர்நெஞ்சினிரந்தராபரமோனமீயுஞ்சுதந்தரா
முத்தியீயுஞ்சுதந்தராவெகுமுக்கியமாம்பிர்மரந்திரா
பித்தனுக்கருடந்திராபரபிர்மமேபரப்பிர்மமே. 20

வையினுங்கழலாலுதைத்தெழின்மத்தகம்பிளப்பாகவே
கையினாலறைந்தாவிநீங்கிடக்கண்கலங்கிடவேகுறை
செய்யினுங்குருபக்திமேவியசிலர்சொன்முனமேமழை
பெய்யுமேயவர்க்கேவல்செய்யருள்பிர்மமேபரப்பிர்மமே. 21

ஆசைவெட்கமறியுமோபலவாணையாற்றடையாகுமோ
நேசர்சொல்லினுமோயுமோவருநிஷ்டைகூடினுமாயுமோ
ஈசனேயிடராசைநீத்தருளேகபாவனையீகுவாய்
பேசிலாமறைவாசனேபரப்பிர்மமேபரப்பிர்மமே. 22

அந்தமாதியில்காரணாவடியார்கள்பாற்பரிபூரணா
விந்தையாகுமுதாரணாவருண்மேவினோர்க்கருடாரணா
சொந்தமாகியகாரணாமிகுதூய்மையீய்ந்திடுமாரணா
பந்தநீக்கிடும்பாரணாபரப்பிர்மமேபரப்பிர்மமே. 23

மாடகூடமுயானையும்பரிமாவுஞ்சேனைதளங்களும்
கூடுநீங்குயிரேகுநாளினிற்கூடவேகுவதின்றெனம்
பாடுபட்டருட்பாதைபெற்றிருட்பாதைபுக்கினயேழையாய்
பீடையுற்றனனென்கொலோபரப்பிர்மமேபரப்பிர்மமே. 24

முன்னம்யான்செய்ததீமையோமதிமோசமோவென்னமோசமோ
தன்னையாய்ந்தவரென்றனுக்கிட்டசாபமோயென்னபாபமோ
என்னமாயமோவுன்னையான்மறந்தீனனாகினநேகமோ
பின்னுமுன்னுமில்லாதசின்மயபிர்மமேபரப்பிர்மமே. 25

பாதகமறுள்தானமேயருட்பாதைகாட்சிநிதானமே
மாதவமருடானமேமகாவாக்கியத்துறுமோனமே
நேதிசெய்திடுஞானமேசுயஞேயமாகியவானமே
பேதமின்றியதியானமேபரப்பிர்மமேபரப்பிர்மமே. 26

வேதமேத்திடுங்கற்புமேவியமெல்லியர்மனம்நொந்ததோ
சோதிவீடருள்கோதிலாக்குருசுவாமியார்மனம்நொந்ததோ
யாதுகாரணமோமனோவிருளென்னைச்சூழ்ந்தகலாமலே
பீதிமீவதுணர்த்திலேன்பரப்பிர்மமேபரப்பிர்மமே. 27

எந்தநாளினிற்பந்தமாமணமின்பவீட்டைவிரும்புமோ
விந்தையாகியவிந்தவாழ்வினின்மேவிடாமல்விரும்புமோ
முந்தநீயெனையாண்டுகொண்டவன்மோசஞ்செய்தனியாயமே
பந்தமீவதென்மாயமோபரப்பிர்மமேபரப்பிர்மமே. 28

அருடருமிகுநேசமேகதிராதியாம்பிரகாசமே
மருளரும்புவிவாசமேவிசுவாசர்பால்விசுவாசமே
இருடரும்பவநாசமேயெனுமேகமானவாகாசமே
பிர்மைநீக்கும்விலாசமேபரப்பிர்மமேபரப்பிர்மமே. 29

ஆயிதென்னவதிசயம்மென்னதாயுளிலறியாதவோர்
மாயவிந்தையைக்கண்டனனிதுமாயையென்றுமறிந்தபின்
தீயதென்றிதைநீக்கிடாதருமேடநின்னருணைக்கிடாப்
பேயனுனதென்மாயமோபரப்பிர்மமேபரப்பிர்மமே. 30

ஊரும்வேண்டிலன்பேரும்வேண்டிலனுலகவாசையும்வேண்டிலன்
பாரும்வேண்டிலன்பதியும்வேண்டிலன்பசியபொன்னையும்வேண்டிலன்
சீரெலாந்தருமுன்னருட்டொடர்தியானமொன்றினைவேண்டினன்
பேருமூருடன்யாதுமின்றியபிர்மமேபரப்பிர்மமே. 31

தேகமிந்திரியம்மநம்முயிர்ஜீவனையுணர்தீபமே
மேகலோகபவகோரசோபமுழுநீக்கிடுந்தூபமே
ஏகபோகவுற்சாகம்யாகமுமின்பமீந்திடும்லாபமே
பீகரந்தருயோகமேபரப்பிர்மமேபரப்பிர்மமே. 32

வணங்கியேயுனைவாழ்ந்திடாதிகவாழ்வினுலறிவீனனு
உணங்கினேனொருதிக்கிலாதிவனோலமிட்டழுதேத்தினேன்
இணங்கியேயாண்டிடாவிடினியாவரென்முறைகேட்பவர்
பிணங்கினேன்குறைதீர்க்கவாபரப்பிர்மமேபரப்பிர்மமே. 33

சோடுநீங்கியபேடுபோற்பிணிகொல்லைவாலமும்பிள்ளைபோல்
வீடுநீங்கியநங்கைபோவெளிவீட்டிலேயுறுமங்கைபோல்
வாடுகின்றனனையனேயென்றன்வாட்டந்தீர்த்தருடய்யனே
மீடுதந்தருள்மெய்யனேபரப்பிர்மமேபரப்பிர்மமே. 34

நிஷ்டருக்கனுபோகமேயருணைசர்வாழ்பரலோகமே
சிஷ்டர்நெஞ்சினுற்சாகமேமுத்திசித்தியீயும்விவேகமே
துஷ்டனைக்குலபிரஷ்டனையிவண்சோதியாதருண்மோனமாம்
பெட்கமேயருயாகமேபரப்பிர்மமேபரப்பிர்மமே. 35

லச்சையும்பணத்திச்சையுமவலட்சணம்மிகுபட்சணம்
மிச்சையால்விஷயேச்சையும்விபசாரமும்மபசாரமும்
குச்சிதமொழிமிச்சமுமுளகோதைமார்களைவிட்டெனும்
பிச்சையேற்பதுலட்சணம்பரப்பிர்மமேபரப்பிர்மமே. 36

நீதிசற்றுமிலாதவன்குருநிந்தகன்ஞானவந்தகன்
நாதியற்றவனுதியாகியநாயினேன்றனையிக்கணம்
ஆதியாகியதேவதேவநீயாண்டிடாவிடினேழையாய்ப்
பீதியாழியிலாழுவேன்பரப்பிர்மமேபரப்பிர்மமே. 37

மத்தருக்கதிதூரமேயொருமாசிலாதகெம்பீரமே
நித்தமர்க்கதிபாரமே தருநேசர்நெஞ்சிற்கர்ப்பூரமே
புத்திமேவியட்சிரமேகுருபூதியீந்திடுஞ்சாரமே
குற்றநீக்குபகாரமேபரப்பிர்மேமபரப்பிர்மமே. 38

அந்தமாதியில்விந்தையாகியவாதவாமிகுமாதவா
எந்தமக்குற்றபந்தமாமிடரேகுமோபெரிதாகுமோ
சொந்தமாயுனைநம்பியேபலதோத்திரம்புரிந்தேத்தினேன்
பந்தநீக்குஞ்சுகந்தமேபரப்பிர்மமேபரப்பிர்மமே. 39

தருமதானமுஞ்செய்திலேனருட்சாதனங்களாலுய்கிலேன்
குரவனற்பதமேத்திலேனிருட்கோசபாசமுநீந்திலேன்
கருமபாமரநீக்கிலேனுடற்கள்ளஞானமும்போக்கிலேன்
பிரியமோடெனையாள்வையோபரப்பிர்மமேபரப்பிர்மமே. 40

சுந்தரானந்தசோபிதகுருசுவாமியேசுயமேகம
அந்தமாதியிலாதனுயறிவானசின்மயமேகம
தந்தைதாய்குருதெய்வமேசர்வசாட்சிதன்மயமேகம
பந்துவாகியகந்தவாகமபிர்பமேபரப்பிர்மமே. 41

அச்சுதாத்விதவஸ்துவேகமவற்புதப்பொருளேகம
உச்சிதப்பரவஸ்துவேகமவுண்மைமெய்ப்பொருளேகம
சச்சிதானந்தவஸ்துவேகமசாந்தமாம்பொருளேகம
பிச்சர்நெஞ்சுறுவஸ்துவேகமபிர்மமேபரப்பிர்மமே. 42

முத்தமேபரிசுத்தமேகமமோனவாழ்வேகமோகம.
புத்தமேபிரசித்தமேகமபோதவாழ்வேகமோகம
அர்த்தமேமறையர்த்தமேகமவாதிவாழ்வேகமோகம
பெத்தநீக்கிடுஞ்சத்தமேகமபிர்மமேபரப்பிர்மமே. 43

என்று நாற்பத்திமூன்று சுலோகங்கள் பாடி மனங் குழைந் துருகிப் பிர்மத்தைத் தோத்திரஞ் செய்தமாத்திரத் தில் அசரீரி ஓ விடோபா! உனக்குற்ற சமஸ்த குறைகள் நீங் கவும் அகண்டானந்த யோங்கவும் வரங் கொடுத்தது மன்றி இப்பிரமஸ்துதியை அன்புடன் தோத்திரஞ்செய்தவர்களும் உனக்களித்த வரம்பெறக்கடவர்களென் றறைந்த மாத்திரத் தில், விடோபாவுக்குற்ற சமஸ்த சங்கல்பமும் நிவர்த்தியாய் பிரமானந்தம் பூர்த்தியாய்த் தன்னை மறந்து தலைவனிற் கல ந்து சவ்விகற்ப சமாதியி லசைவற்றிருந்தார். இவ்விதமாய் விடோபா நிருவிகல்ப சமாதியி லெழுந்தருளி யிருக்கையில் பரப்பிர்மத்தி னருளால் ருக்மாபாயி விடோபா வீற்றிருக்கும் ஸ்தானத்துக்குச் சரியாய் நடந்து வந்து மணாளனைக் கண்டு ஓ என் பிராணநாயகா! பிராணசிநேகா! என்னை யிப்படி மோ சஞ்செய்து வரலாமா நான் சோகமுறலாமோவென் றுரை த்துப் பதியின் பாதங்களில் வீழ்ந்து பலதரந் தாழ்ந்து ஓல மிட்டழத் தொடங்கினள் மனோவிகாரங்க ளிறநது தன்னை மறந்து ஆனந்தத்திற் சொக்கியிருக்கும் விடோபா கண்களைத் திறந்து மனைவியைப் பார்த்து ஓ பெண்ணே! இக்காரடவியி லெப்படி வந்தாய் என்னைத்தேடி யேன் நொந்தாய் குழந்தை களை எங்கே விடுத்தாய் என்னையே னடுத்தாய் தவத்தையேன் கெடுத்தாய் சஞ்சலத்தையேன் கொடுத்தாய் இனி யென்மே லிருக்கும் வாஞ்சையை விட்டுவிடுவதே நன்மை விடாமலிருப் பதே தின்மை இக்கணம் நாட்டுக்குப் போவதே நல்ல ஸ்திதி பாலகரைக் காப்பதே நல்லமதி காட்டிலிருக்க உனக்கென்ன கொடியவிதி கற்புள்ளவளுக்குக் கணவனே பதி இப்படி நிச் சயித்திருப்பவளே சதி இது பதிவிரதைக்குள்ள மதி நாட்டி லிருந்துக்கொண்டு தெய்வத்தைத் துதி உனக் குண்டாகும் நல்லகதி உனக்கு மெனக்குங் கடவுளே அதிபதி தபம்செய் யும் எனக்கு நீயுகந்தாதி ஆதலால் சீக்கிரம் நாட்டிற்கு சென்று அவ்விடத்தில் மக்களுடன் இருப்பா யென்று கண்ணைமூடிக் கடவுளை நாடி அகமுகமாயோடி ஆனந்தத்தை தேடிப் பிர்மநிஷ்டையி லெழுந்தருளி யிருந்தார். ருக்மா பாயி மக்கள்மேல் மிகவும் வாஞ்சை கொண்டிருந்தும் கண வனை நம்பாக்குறையால் கணமும் பிரியாமல் பண்டுபலாதிக ளைக் கொண்டுவந்து காவலனுக்குத் தந்து நாள்கழிக்கத்

தொடங்கினுள். இப்படி மூன்று நாள்செல்ல விடோபாவுக்குக் கருணைபிறந்து திருவாக்கைத் திறந்து ஓ பெண்ணே! விருத்தாப்பிய பருவமுள்ள உன் தாய்தந்தை எவ்விதமாய் வருந்துகிருர்களோ பாலர் நம்மைக் காணுமலெவ்விதமாயலைகிருர்களோ நான் முன்னிருந்த விடத்தில்வந்து தங்கியிருக்கிறேன் நம்புவாயென்று உறுதிகூறி மனைவியோடும் முன்னிருப்பிடமடைந்து ஓ மாதரசே! நீ சீக்கிரம்போய்க் காதலரைப் பார்த்து அவர் வியாகுலத்தைத் தீர்த்து வருவாயாகவென் றனுப்பினுர். ருக்மாபாயி கணவன் கட்டளையைக் கடவாமல் நாட்டையடைந்து தனயரைக்கண்டு, ஆனந்தங் கொண்டு இரண்டுநாளிருந்து பாலரைத்தேற்றி மாதாபிதாவைப் போற்றிப் பின்னும் வருகிறேனென் றுரைத்து மைந்தர் மனதைக் கரைத்துப் பதியின் பக்கலடைந்து குழவிகளின் வாஞ்சையை யுரைத்திடந்து நாட்டுக்கும் காட்டுக்கும் போக்குவருத்தா யிருந்துக்கொண்டின்புற்றிருந்தாள் விடோபா விவேகமேலீட்டால் மக்கள் வாஞ்சைக்குள்ளாகாமல் பிர்மாநந்தத்திற் சொக்கி யிருந்தார். கேட்டீர்களோ சித்தர்களேயென்று நாபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லத்தொடங்கினுர்.

விடோபா சஞ்சலத்துக்காற்ருமல் பரப்பிர்மத்தைத்
துதித்த அத்தியாயம் முற்றிற்று.

எட்டாவது அத்தியாயம்

ஞானேசுவரர் அந்தணரை

அவமானஞ்செய்து ஐசுவரியம்பெற்றது.

வாருங்கள் சித்தர்களே! பரிசுத்தர்களே! விடோபாவும் ருக்மாபாயும் காட்டிலிப்படி களித்திருக்க நாட்டில் சீதோபந்து நாம் சம்பாதித்து வைத்திருந்த ஆஸ்தியெல்லாம் நாஸ்தியாய்விட்டதே இக்குழந்தைகளை எப்படி காப்பாற்றப் போகிருேமென்கிற ஏக்கத்தினுல் நோக்கமுற்று வீதிகளிற் சென்று ஆதிசினேகரைக் கண்டு தனக்குற்ற அபாக்கியத்தை விண்டு மனைவிபால் கொடுத்தேங்கித் துக்கம் மிகவும் ஓங்கிப் பட்டினியால்வாடி தூங்கிக் கேட்டோரை கேட்பதற்குப் பின் வாங்கிவீடுவீடாகப்போய் பிட்சையெடுக்க ஆரம்பித்தார். ஒரு.

76

நாள் க்ஞானேசுவரர் பாட்டனர் படுந்துயாந்திரப் பலரும் மோட்சவீட்டைச்சேர ஞானமார்க்கத்தைச் சேரப் பாசங்கள் நாசமாயீடேறச் சிதோபந்துடன் தானும்போய்ப் பிட்சை யெடுக்க ஆரம்பித்தார். அரிபாரந்தாமனுகிய ஞானேசுவரரை க்கண்ட தருமத்திற்சிறந்த உத்தமர்களும் கற்பிற்சிறந்த உத் தமிகளும் சிதோபந்தைப் பார்த்துக் கரங்களைச்சேர்த்து அந் தோ இச்சிறுபால்யனை அகோரமான வெய்யலில் ஏனழைத் துவந்திர் குழந்தைகளுக்கேன் ஆயாசந் தந்திரென்று குழவி யினழகுக்கும் கல்விக்குமெச்சி உச்சிமோந்துமுத்தமிட்டு சாம க்கிரிகை முதல் தவசமும் எதேஷ்டமாய்க் கொடுத்தார்கள். சிதோபந்து அதையெடுக்க மாட்டாமல் ஓர் தெருத்திண்ணை யில்வைத்து இதையெப்படி யெடுத்துச்கொண்டு போவேனெ ன்று வாட்டமடைய அதுதெரிந்த க்ஞானேசுவரர் நான்பாதி எடுத்துக்கொண்டு வருகிறேனென்று சாமார்த்திய வசனங்க ளைப்புகன்று பாதிபகிர்ந்து தன் வஸ்திரத்தில் வ்ஸ்திரமாயிரு க்கிக்கட்டித் தலையேலேந்திக்கொண்டு சற்றுதூரம் நடந்து காலிடரிக் கீழேவீழ்ந்து பாட்டனர் பார்த்தால் முனிவுகொள் வாரென்கிற பயத்தால் சிந்திச் சிதறின தானியத்தை அதிசீக் கிரமாயோரிடத்திற் சேர்த்துக்கொண்டும் மூதாதையை அடிக் கடி பார்த்துக்கொண்டுமிருந்தார். சிதோபந்து திரும்பிப்பார் த்துக் கோபத்தால் தேகம்வேர்த்து அடா க்ஞானதேவ் வே ண்டாமென்று பன்முறை மறுத்துங் கேட்காமல் பலவந்த மாய் வாங்கிக் கட்டிக்கொண்டு தரையிற் கொட்டிவிட்டாயே ஆயாசத்துக் குட்பட்டாயே என்று கடினவார்த்தைக ளாடிக் கொண்டே பசிமிகுதியாலும் வறுமை மேலீட்டாலும் அடிக் கிறேன் இடிக்கிறேனென் றருகில்வந்து தலைமேலோர் குட்டு குட்டினர். க்ஞானேசுவரர் வெகுண்டு பலங்கொண்டு சிதோ பந்தைத் தள்ளினர். விருத்தப் பருவத்தாலும் பலவீனத்தா லும் கீழேவிழுந்த சிதோபந்து மிகவும் முனிந்து அடாதுஷ் டப்பயலே என்னையிப்படி அவமரியாதை செய்யத்தானு உன் னை அருமையாகவளர்த்தேன் மட்டிப்பயலே! உன்னை எட்டி யுதைக்கிறே னென்றெழுந்தார். க்ஞானேசுவரர் பாட்டனர் சீற்றத்துக்கஞ்சி மூட்டையைவிட்டு ஓடத்தொடங்கினர்.

சிதோபந்து தீவிரமாக நடுத்தெருவில் இரண்டு மூட் டையிலுள்ள தவசங்கள் சிதறுண்டதால் வெகுளிக்கு இடங்

கொடுத்துப் பிறகு பின்தொடர்ந்தோடி க்ஞானேசுவரரைப் பிடித்துக்கொண்டு தூஷணவார்த்தைகள் விண்டு முதுகின் பேரில் தும் தும் மென்று குத்தத் தொடங்கினர் அடிக்கடி பின் திரும்பிப்பார்த்துக் கொண்டோடின காரணத்தா லகப் பட்டுக்கொண்ட க்ஞானேசுவரர் பாட்டனர்க்குப் பயந்து நய ந்து ஓவென்றழத்தொடங்கினர். அதை ஆகாயத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த தேவர்கள் க்ஞானேசுவரர் திருக் கூத்துக் காச்சரியப்பட்டு ஓம் அரிஹரி முராஹரி நரஹரி அம்பு ஜாட்சரி பச்சைவர்ண கமலக்கண்ண கருடவாகன கோபியர் மோஹன நாராயண பரம பாராயண ஓ சுவாமி முன்னம் பூமிபாரந் தீர்த்தக்காரண அனந்தசயன வாமன கிருஷ்ண ஜனர்த்தன ராவணமர்த்தன காளிங்கா நிர்த்தன நந்தநந் தன மதுசூதன பரிபூரண சர்வகாரண பத்மசரண வெங்கட ரமண சங்கட நிமித்தம் கிருஷ்ணவதாரமெடுத்து தந்தவக் ரன் துரத்த ஓட்டமெடுத் தகப்படாத நீர் இவ்விருத்தருக்கு தப்பித்துக்கொண் டோடாம லகப்பட்டுக்கொண்ட காரண மேதோ தந்தவக்ரனைவிட இம்மறையோன் சமர்த்தனே நீர் செய்யும் லீலாவினேதமா மகாவல்லமை சாலியாகிய இரணி யாக்கனை வென்ற நீர் இந்த விப்பிரன் கையிலகப்பட்டுக்கொ ண்டடிபடல் நியாயமோ இதென்ன மாயமோ அந்தி இரணி யாக்கனிலும் இவ்விருத்தன் வலியுள்ளவனே கோவர்த்தன கிரியை ஓர் விரலாற்றூங்கின உமக்கு இத்தானிய மூட்டை பளுவாய் விட்டதோ உமக்கிருந்த பலங்கெட்டதோ ஓவென் றழுங்காரணம் பீஷ்மாச்சாரியர் முதலானேர்விட்ட அம்பு களால் தேகம் ரணமாயிருக்கின்றதோ அல்லது கோபிகா ஸ்திரீகளா லடிபட்டுப் புண்ணயிருக்கின்றதோ அதனல் பொறுக்கக்கூடாம லழுகின்றீரோ உம்மை நீர்மறந்துவிட்டீ ரோ பக்தாமுன் பலம் நடக்கவில்லையோ கதறுவது கலியுகத் தின் தொல்லையோவென்று பற்பல விதங்களாகத் தோத் திரஞ் செய்வதைக் கேட்ட க்ஞானேசுவரர் ஆனந்தமடை ந்து பாட்டனர்க்கிடைந்து ஓதாதா இனிமே லெப்போதும் இப்படி செய்யமாட்டேன் உமக்குத் துன்பந் தரமாட்டேன் என்கிற பாசாங்கு வார்த்தைகள் கூசாமற்செய்து பேசாமலிரு ந்தார். அப்போது வீதியிற்போகும் பலரும் ஓதோபந்தை நோக்கி வீணுக சிறு குழந்தையை அடிக்கிறீர் வேண்டாம்

வேண்டாமென்று விலக்கிவிட்டார்கள். சீதோபந்து சற்றே கோபந்தணிந்து சாமக் கிரிகைகளை ஓர்கூலியாளன்மேல் வைத்து வீட்டிற்கொண்டுவந்து மனைவிபாற்றந்து க்ஞானேசுரர் செய்த துடுக்கைப்பகர்ந்து கோபத்தாலடித்துவிட்டேனென்றயர்ந்து சமைத்த பதார்த்தங்களை நுகர்ந்து வறுமையை யிகழ்ந்து நாள்கழிக்கத் தொடங்கினர்.

இப்படியிருக்கிற காலத்தில் ஒருநாள் ஓரிடத்தில் சந்தர்ப்பணம் நடக்க அங்குச் சீதோபந்துவும் குழந்தைகள் நால்வரும் சீதோபந்து மனைவியும்போய் ஓர் பக்கலுட்கார்ந்தார். பால்யரைக் கண்ட விப்பிரர் சீதோபந்தை நோக்கி அடா பிரஷ்டப் பிராமணா பிரஷ்டனுக்குப் பிறந்த இத்துஷ்டப் பிள்ளைகளை அழைத்துவந் தெங்களோடு பந்தியி லுட்காரவைத்து எங்களையும் பிரஷ்டராக்கவா நினைத்தாய் இக்கணம் இச் சிறுவரைத் தூரமாகப் போகும்படிச் செய்யாவிட்டாலுன்னையும் பந்தியிலிருந்து எழுப்பி விடுவோ மென்றறைந்து மிகவுமிறைந்து அச்சிறுவர் கையைப்பிடித் திழுத்துத் தூரமா யுட்காரவைத்துப் பத்திரங்கள் போட்டு அன்னம் பகிர்ந்தார்கள். க்ஞானேசுவரர் மிகவுங் குரோதமுற்றிருந்து சகலரும் புசித்திருக்குந் தருணத்தில் நிவர்த்தி சாதுவேண்டாம் வேண்டாமென்று மறுத்துரைத்துக் கொண்டிருக்கும் போதே கேட்காமற் போய்ப் பந்தியிலிருந் துண்ணவும் பாட்டனுர் பத்திரத்தி லுட்கார்ந்தார். அதனல் அந்தணர் மூனிந்து அடா துஷ்டப்பயலே பிரஷ்டப்பயலே உன் தாதையினருகில் வந்துட்கார்ந்து எங்களை அன்னமுண்ணுமற் செய்துவிட்டாயே நீகெட்டாயே என்று வாயில்வந்தபடி வைது ஆளுக்கோ ரடியடித்து அன்னமுண்ணும லினி யென்றொருவர் ஒருவரை யோசனை கேட்க அதற்குச் சீதோபந்து ஓ பூசுரரே! இவ்வறியாக் குழவியால் உங்களாசாரம் போகாது வீணய் வம்பு செய்யலாகாது அறியாக் குழந்தையைப் பலரும் இப்படி அடிக்கலாமா தூஷணமொழிகள் படிக்கலாமா அடாத காரியஞ்செய்தால் படாத பாடுபட வேண்டியதாய் வருமென்றறைய அவ்வசனத்தை கேட்ட விப்பிரர் துவேஷமேலிட்டு அடா சீதோபந்து நீ யறியாய் பிள்ளைகளைக் கூட வைத்துக்கொண் டுண்ணுவதெங்களுக்கு தெரியாது? இன்று பிரத்தியட்சமாய் பார்த்த காரணத்தால் இனிமே லெங்க

ளோ டிருந் துண்ணத் தக்கவனல்ல பந்தியிலிருந் திக்கணம் தூரமாய்ப்போ. இல்லாவிட்டால் வாயில் வந்தபடி திட்டி விடுவோம் என்று பலரும் பகர்ந்து சீக்கிரம் எழுந்துபோ கும்படியா யிரைந்துபேச, அதனால் சீதோபந்துக்குக் கோபம் பிறந்து தன் கையிலிருந்த பஞ்ச பாத்திரத்தைப் பிராமணர் மீது வீசியெறிய அந்தணர் ஆக்ரம நிக்குரோதர்களாய்ச் சீதோபந்தைச் சூழ்ந்துக்கொண்டு அடா மடையா அடா கடையாவென்று வைது ஆளுக்கோரடியடித்து மூர்ச்சையாய் விழும்படிச் செய்தார்கள். அதைப்பார்த்த க்ஞானேசுவரர் மிகவும் முனிந்து ஓ விப்பிரர்களே! பிரமக்ஞானனது பிரா மணுவென்கிற வேதவாக்கியப்படி பிரமத்தை யுணர்ந்தவனே பிராமணனன்றி நீங்களெல்லாம் பிராமணர்களா வீரர்களா அதஞ்செய்யும் பிராமணனுக் கிதஞ்செய்பவனல்லவோ அந் தணனென் றுகமத்தில் மூறையிடுகின்றது அதையறியா நீங் களெல்லாம் அந்தணராகக் கூடுமா? கொலைசெய்யும் நீசரே விவேகமில்லா மிலேச்சரே வீணுயெங்கள் மூதாதையோடு வாதாடி மூர்ச்சையடைய அடித்தீர்களே காயம்படாமல் ஆய ம் பார்த்து இடித்தீர்களே இனி யுங்களைக் கொஞ்சத்தில் விட ப்போகிறேனுவென் றங்கிருக்கும் ஓர் பெருத்த கட்டையை எடுத்துக்கொண்டு பாட்டனுருகில் யாரும் வராமல் நாலு பக்கமும் வீசப் பூசுரரெல்லாம் பிரமித்து ஒன்று யொருமித்து இந்தத் துஷ்டப்பயலை வெட்டிவிட வேண்டுமென்று தாங்க ளும் பெருத்த கட்டைகளை எடுத்துக்கொண்டு க்ஞானேசு வரர்மேல் விழப்போகையில் நிவர்த்திசாது ஓ பிராமணசீல ரே! ஏழைகட் கனுகூலரே! விருத்தரையும் பால்யரையும் அதட்டவும் வாய்வராதே அப்படியிருக்க நீங்களிப்படி செய் யலாமா வேதமோது மாதவர்க் கீதியல்பானதா எங்கள் பாட் டனுரை மூர்ச்சை யடைவித்ததன்றிச் சிறு குழந்தையையும் அடிக்கத் துணிந்தீரே இது தருமமாயிருக்கிறதா இப்பேர்க் கொத்த முரட்டுக்குணம் பூசுரர்க் கிருக்கலாமா கோபத்தைப் பெருக்கலாமா சாந்தத்தைச் சுருக்கலாமா ஏழைகளை வெறுக்க லாமா வென்கிற நீதிவாக்கியங்களோத அவ்வசனங்களைக் கேட்ட முப்புரிநூலோர் கோபித்து ஓ ஓ விளையும் பயிர் முளை யில் தெரியுமென்கிற பழமொழிப்படி இனிமேல் விபரீதஞ் செய்யும் இவர்கள் இப்போதே நமக்கு நீதிகளுரைத்துத் தங்

கள் குணத்தைக் காட்டினார்கள். மேன்மையைப் பாராட்டினார்கள், பண்ணியபயிரிற் புண்ணியந் தெரியுமென்கிறபடி பிரஷ்டனுக்குப் பிறந்தவர்களின் துஷ்டகுணத்தை சிறுபொழுதிலேயே துலங்கச்செய்தார்கள்.

இக்கணம் இவனையும் அவனையும் இறுக்கிக்கட்டி நறுக்கிவிடுவதே நன்மை. இன்றேலந்தணர்க்கு வருந்தின்மையென்று நிவர்த்தி சாதுவையும் க்ஞானேசுவரரையும் கற்களாலும் கழிகளாலும் அடிக்க ஆரம்பித்தார்கள். அதனால் க்ஞானேசுவரர் பற்களை நரநரவென்று கடித்துத் தூஷணவார்த்தைகள் படித்து இராக்கதர் கூட்டத்திற் புகுந்த அனுமானைப்போலவும் யானைத்திரளிற் புகுந்த சிங்கத்தைப்போலவும் பசு மந்தையிற் பிரவேசித்த வியாக்கிரமத்தைப்போலவும் அந்தணர் குழுவிற் புகுந்து தன் கையிலிருந்த கட்டையால் மறையோர் கரங்களிலும், சிரங்களிலும், தாள்களிலும், தோள்களிலும், உதிரம் புறப்படவும், அவர்கள் வீரங்கெடவும், மூலைக்கொருவரா யோடிப் பதுங்கவும், கண்கள் பிதுங்கவும், தரையில் விழவும், சரணார்த்தியென்று தொழவும், தங்களைத் தாங்களே வெறுக்கவும், சக்ரபாணி நீயென்றுரைக்கவும், ஒருவரையொருவர் தள்ளவும், உச்சித நீயென்று விள்ளவும், அடியடியென் றடித்து காக்கைகள்போலப் பறக்கடித்து பின்னாலோடிப் பிடிந்து மூளைகள் சிதறவிடித்து ஒரு கணத்தில் ரணக்களமாக்கிவிட்டார் அதனால் நிவர்த்தி சாது க்ஞானேசுவரரின் கரத்தைப் பிடித்துக்கொண்டு ஓ பகவானே! நாம் பிறந்திருக்குங் காரியமென்ன நீகொண்ட கோலமென்ன கலியுகதர்ம மறிந்திருந்தும் வீபரீதங்கள் நடக்கிறதெனத் தெரிந்திருந்தும் அந்தணரைப் பிடித்துக் கொள்ளலாமா தூஷணவார்த்தைகள் சொல்லலாமாவென்றுரைத்து மறித்த பேர்களெல்லாம் உயிர்பெற் றெழும்படியாய்ச் செய்து இன்னஞ் சிலநாள் காட்டாமலிருப்பதே நமக்குகந்த யோக்கியம் இதனால்வருஞ் சிலாக்கியம் என்று பாட்டனாருடைய மூர்ச்சையைத் தெளிவித்து வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோக க்ஞானேச்வரர் கோபந்தணிந்து சோபான் தேவையும் முக்தாபாயியையும் நோக்கி இப்படி நான் செய்யாவிட்டால் விப்பிரர் மிகவும் விபரீதஞ்செய்வார்கள் என்றுரைத்து பாட்டன் பின்னாகவேபோய் வீட்டையடைந்துவேஷ்டையற்றிருந்தார்.

அத்தருவாயில் ஓடிப்போன அந்தணர்களெல்லாம் அரசனிடம்போய் முறையிட்டுத் தங்கள் தேகத்திற்பட்ட காயங்களைக்காட்டி இக்கணம் சிதோபந்தையும் அவன் வீட்டிலிருக்கும் பிள்ளைகளையும் ஓட்டிவிடவேண்டும் இன்றேல் கழுவில் மாட்டிவிட வேண்டுமென் ருரர்ப்பரித்தார்கள். அதுகேட்ட இராஜன் மிகவும் கோபதீப்தனகி மறையோரை யடித்த மகா பாதகரைத் தூர்த்த குணமுள்ள தோதகரை இக்கணமே அழைப்பியும் மந்திரியென் றறைந்து அந்தணரை அன்போடாதரணை செய்தான் மந்திரி காவலரை நோக்கி, நீங்களிக்கணம்போய்ச் சிதோபந்தையும் அவன் வீட்டிலிருக்கும் சிறுவரையும் அதிசீக்கிரமா யழைத்துக்கொண்டு வாருங்களென் ருக்யாபித்தான். ஏவலாளர்கள் மகா பாக்கியமென்று சிதோபந்து வீட்டையடைந்து சிதோபந்தை நோக்கி, ஓ துஷ்டப்பிராமண, ஓ பிரஷ்டப்பிள்ளைகளே உங்களை இராஜனதி துரிதமா யழைத்துக்கொண்டு வரும்படியாக கட்டளையிட்டார் சீக்கிரம் நடவுங்களென் றதட்டினர்கள். அவ்வசனங்கேட்ட க்ஞானேசுரர் ஓ காவலரே! எங்கள் பாட்டனர் அந்தணர்களா லடிப்பட்டுப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கின்ருர் என் தமையன் முதலானேர் அவர்க் குபசரணைசெய்துக்கொண்டிருக்கின்ருர்கள். இவர்களுக்குப் பதிலாக நானொருவனே வருகிறேன் அறையன் வினவுக்கு விடைதருகிறேன் வாருங்களென் றழைத்துக்கொண்டு சபாமண்டபத்துக்கெழுந்தருளி ஓ பூபதியே! எங்களை அழைப்பித்த காரணமேதென்று வினவினர். க்ஞானேசுவரர் செருக்குடன் பேசியதைக்கேட்ட தமக்குள்ள நரபதி மிகவும் முனிந்து, அடா! இதென்ன கத்தரிக்காய்க்குக் கால்கைமுளைத்ததுபோல ஜாண் பையலாயிருந்தும் வெகு முறுக்குடன் சுருக்கென்னும் வார்த்தைகளாடினன் இவன் வெகு துஷ்டனகவே யிருக்கின்ருன் நல்லதாகட்டும் பார்க்கிறேனென் றட்டகாசஞ் செய்து, ஓ பிரஷ்டனே நீயுமுன் சகோதரரும் பூசுரரை அடித்தகாரணமென்ன சீக்கிரஞ் சொல்லடா என்றுகேட்க, க்ஞானேசுவரர் ஓ மண்டலாதிபதியே நியாயமாய் விசாரித்து நல்லோர்க்குச் சகாயஞ்செய்யும் நரபாலனே! பொல்லாங்கு அபாயந்தரும் பூபாலனே! சந்தர்ப்பணம் நடக்கும் பந்தியில் பிள்ளைகளாகிய நாங்கள்போய் வீற்றிருக்க இவ்வேதியர் மறுத்தகாரண

மும் வேதமோதிய விப்பிரர்களாயிருந்தும் தப்பிதஞ் செய்யா எங்கள் மூதாதையை நைய அடித்து மூர்ச்சையடையச் செய்த காரணமும் போர்புரியாதீர்க ளென்றறைந்த என் தமையன்மேல்சீறி விழுந்தடித்த காரணமும் முன்னம் விசாரித்து எங்கள்மேல் குற்றமிருந்தால் தடையின்றித் தண்டனைகொடுக்கலாம். காரணந் தெரிந்துக்கொள்வதற்கு முன்பே கடுஞ்சினமடைந்தால் காவலனாகிய உம்மை யெதிர்த்துத் தர்ஞ்சொல்ல என்னலாகுமா? என்னல் ஆனாலுமமது சீற்றம்போகுமா? அரசனுக்கு நீதியும், ஆசானுக்கு விவேகமும், மந்திரிகட் காலோசனையும், பதிவிரதைகட்குக் கற்பின் மேன்மையும் சொல்பவருண்டா? கொடுங்கோல் பிடித்த கோமானும் கோள் சொல்லும் விப்பிரசீமானும், விவேகமில்லா மந்திரியும் விபசாரஞ்செய்யுமங்கையும், நரகன்றி பரமடைவதுண்டாவென்கிற நீதிவாக்கியம்காட்டி வெகுளி நிறைந்த வேந்தன் மனதைவாட்டி மௌனமாயிருந்தார். அவ்வாக்கியங்களைகேட்ட கொற்றவன் ஆச்சரியப்பட்டுத் தனக்கிருந்த மாச்சரியங்கெட்டு முப்புரி நூலோரை நோக்கி, ஓ விப்பிரர்களே! பந்தியில் வந்திருந்த மைந்தர்களை எல்லாம் நீங்கள் தள்ளின காரணமேது சொல்லுங்களென்று கேட்கப் பூசுரர் இப்பாலயர் தந்தையாகிய விடோபா வென்பவன் சன்யாசியாகிப் பலர் வீட்டிலுமுண்டு பிரஷ்டனாய் விட்டானென்று முன்னமே குலத்திலிருந்து நீக்கிவிட்டோம். அவன் காட்டையடைந்தபின் உற்பவித்த இச்சிறுவர் நாட்டையடைந்து எங்கள் பந்தியிலிருந் துண்ணவந்தால் நாங்கள் வேண்டாமென்றோமென்றுரைக்க அதற்கு க்ஞானேசுவரர் ஐயா இராஜனே! பிரமக்ஞானந்தந்து பிராமணவென்ற தேவவாக்கியபடி பிரமத்தை யறிந்துகொள்வதற்காக வெங்கள் தந்தை சன்யாசியாய்ப்போனர். பிரமக்ஞானியானர் குருவாக்கை மறுக்காமல் சம்சாரியானர். இதனல் அவரெப்படி பிரஷ்டனானர் கேட்பீராகவென, அந்தணர் சன்யாசி சண்டாளன் வீட்டிலும் புசித்திருப்பானதலால் சாதியிலிருந்து தள்ளநேரிட்டதென்றறைய க்ஞானேசுவரர் பலர் வீட்டிலுமுண்ணும் பரமாம்ஸனை அந்தணர் பந்தியில் வைத்துக்கொண் டுண்ணும்படியாய் வேதத்தில் முறையிடுவதால் எங்கள் தாதை பிரஷ்டனெப்படியானர் அன்றி முன்னோர் அனேககாலங் காட்டிற்

றவம்புரிந்தும் அனேகதேசங்களிற் றிரிந்தும் சன்யாசவே ஷமாயிருந்தும் பின் சம்சாரிகளாகவில்லையா? காஷாயதாரீ யாகிய கலைக்கோட்டு முனிவர் ஓர் காவலனீன்ற கன்னியரிரு வரைக் கலியாணஞ் செய்துக்கொள்ள வில்லையா? அனேக நாள் சன்யாசியாயிருந்த கும்பமுனி ஓரரசன்புத்திரியைமணர் ந்து சம்சாரியாக வில்லையா? எங்கள் தாதை மாத்திரஞ் செய் தது தொல்லையா? பிர்மத்தை யுணர்ந்தவர்களுக்கு சாதிபேத முண்டென் றெச்சாத்திரத்தில் முறையிடுகின்றது.

அப்படியே பேதமாய்ப் புகன்றிருக்குமாகில் சக்கிலியன் வீட்டில் வளர்ந்த அருந்ததியை மணர்ந்த வசிஷ்டரும், மச் சகந்தியின் கர்ப்பத்திற் பிறந்த வியாசரும், கிராதனுயிருந்த வால்மீகரும், வலைஞனுக்கு மாணக்கனுகி அவன் எச்சிலையு ண்ட நாரதரும், பிரஷ்டமடைந்திருக்க வேண்டுமல்லவா? அப் படியில்லாமையாலும் பிர்மக்ஞானநதந்து பிராமணுவென்று வேதம் முறையிடுவதாலும் யாரும் ஒப்புக்கொள்ளாத தப்பு வார்த்தைகளாடினல் தலைகள் வெடித்துப் போகாதாவென்ற றைந்து, பின்னும் அரசனை நோக்கி, ஓ இராஜனே! எங்கள் தந்தை பிர்மக் ஞானத்தை வேண்டிக் காசிதேசத்திற்சென்று விசுவநாதரைப்பாடி ஆசானைத்தேடி பிராமணேத்தமராகிய ஸ்ரீ பாதஸ்வாமிகளிட முபதேசம் பெற்றுத் தபவேஷமூற்று தன்னைமறந்து பிர்மானந்தம் நிறைந்து குருவாக்குக் கெதிர் வாக்குச் சொல்லாமல் சம்சாரத்துக் குட்பட்டார், அவரெப் படி குலபிரஷ்டராஞர் அநீதியான காரியங்கள் செய்கிறவர் களே பிரஷ்டரன்றி பிரமக் ஞானிகள் பிரஷ்டராவார்களா? அன்றிக் குணம் சிரேஷ்டமென்றும், குலம் சிரேஷ்டமல்ல வென்றும் வியாச வசிஷ்ட ராதியோரால் பிரத்தியட்சமாய்க் காணப்படுகின்றதால் இனியுமதிஷ்டதிப்படி தீர்ப்பு செய்யு மென்றுரைக்க, அவ்வாக்கியங்களைக் கேட்ட அரசன் ஓபோக் கியத்திலும் சமஸ்த பாக்கியத்திலும் சிறப்புள்ள பால்யனே! உன் திருவாயா லுரைத்தருளிய வசனங்களெல்லாம் வேத மந்திரமேயாகும். எனக்கென்றுமில்லா ஆனந்தந் தந்தாய் ஓ விடோபாவின் மைந்தா! சீக்கிரம் என்னருகில்வா முத்தந் தாவென்றவரை வாரியெடுத்து மார்புடனணைத்து நீர் எட்டு வயதுள்ள குழந்தையாயிருந்தும் மிகவும் அற்புதமான வச னங்கள் புகன்ருய் இனி பெரியவனுனல் உன்னுடனெதிர்த்'

துப்பேச இவ்வுலகிலொருவருண்டோ உனக்கிணை லட்சம்
பிராமணர்களுமாகார்கள்? ஓமதிமந்திரி! இச்சிறுவன் பேசிய
வசனங்களைக்கேட்டீரா? நீரும் மூத்தந்தரமாட்டீரா வென்ற
றைந்து, ஓ காவலரே! இக்கணம் மூன்று தண்டிகைகளைக்
கொண்டுபோய் இவ்வுத்தமருடைய சகோதரரை அதில் ஏற்
றிக்கொண்டு வாருங்களென்றறைந்து காவலராற் கொண்டு
வரப்பட்ட நிவர்த்தி சாதுமுதலானோரைப் பார்த்துக் கரங்க
ளைச்சேர்த்து அவர்கள் வாய்மொழிகளையுங் கேட்டு ஆனந்த
பரவசத்தனாகித் தன்னைமறந்து உடனேதெரிந்து சிம்மாசன
ங்களில் வீற்றிருக்கச்செய்து ஓ ஓ இப்பேர்க்கொத்தசீலர்
என்னாட்டுக் கனுகூலர் இத்தேசத்திலிருக்க நானென்ன பாக்
கியஞ் செய்தேனோவென்கிற பற்பல மொழிகள்பகர்ந்து நால்
வருக்கும் நான்குமேடையும் அனேக ஆடையாபரணங்களு
மளவற்ற சொர்னங்களு மளித்து மிகவுங்களித்து விப்பிரர்
களை நோக்கி, ஓபூசுரரே! என் வேண்டுகையில் யாதொரு குற்
றமில்லா யிந்நற்றவரை உங்களிற் சேர்த்துக்கொண்டு பந்தி
யில் வைத்துக்கொண்டு என்னைக்களிப்படையச் செய்யுங்கள்,
என் கர்மத்தைக் கொய்யுங்கள், என்னைப் புனிதராக்குங்கள்,
உங்களுடைய துவேஷத்தை நீக்குங்கள், இதனிமித்தம் உங்
களொவ்வொருவனுக் காயிரம் வராகனளித்தே னென்றுரை
க்க, செங்கோலுக்குமுன் சங்கீதஞ் செல்லாக் குறையால் விப்
பிரர் ஒப்புக்கொண்டதுபோல் அபிநயங் காட்டித் திரவியத்
தைப் பெற்றுக்கொண்டு மறுநாள் இராஜன் பக்கலடைந்து
ஓ அரசனே! எங்களுக்கு முதன்மையாசாரியார் பண்டரிபுரியி
லிருப்பதால் அவ்விடத்திற்குக் குழந்தைகளையும் இவர்கள்
தாய்தந்தையையு மனுப்பி இவர்களுக்குச் செய்யவேண்டிய
பிராயச்சித்தங்கள் செய்வித்து அவர்கள் சமாதானப் பத்திரி
கையும் வரும்படியாய்ச் செய்தால் உங்களிஷ்டப்படி நடக்கி
றோமென்றுரைக்க, இராஜன் அப்படியே செய்வேனென்று
சீதோபந்தை வரவழைத்து நீருமிக்குழந்தைகளும் பலகாவ
லர் சூழத் தண்டிகைமீ தூர்ந்துபோய் மகானுபாவராகிய
விடோபாவும் விரதசீலியாகிய ருக்மாபாயியையும் தண்டிகை
யின்மே லேற்றிக்கொண்டு ஆலசியஞ்செய்யாமல் அழைத்து
க்கொண்டு வாருமென்றறைந்து பல காவலரையும் இரண்டு
தண்டிகையையும் அனுப்பினர். அகண்ட சாம்பிராச்சியப

பெற்ற சீதோபந்து களிப்புற்றுப் பேரன்மாருடன் காட்டை யடைந்து மலைச்சாரலில் வாசமாயிருக்கும் விடோபாவிடஞ் சேர்ந்து களிகூர்ந்து அப்பா மருமகனே! நீபெற்றபால்யரால் நமது தாரித்ரமும் சகலகுறைகளும் நீங்கிவிட்டன. அரசன் உன்னையிக்கணமே அழைத்துக் கொண்டுவரும்படியாய்ப் பல காவலரையும் தண்டிகையையும் அனுப்பினர் தடைசெய்யாமல் நாட்டுக்கெழுந்தருளு மப்பாவென் றழைக்க, அவ்வசனங்கேட்ட விடோபா நகைத்து, ஓ ஐயா! காட்டிலிருந்து களிப்புற்றவர்கள் நாட்டையடைந்து நலிக்குள்ளாகார்கள் அது தெரிந்த தேவரீர் அடியேனை அரசனழைத்தாரென் றறைந்தீர். (துறவிக்கு வேந்தனொரு துரும்பு) என்கிற வாக்கியமறியாதவரோ ஒன்றுந்தெரியாதவரோ இனியிவ்வாக்கிய மூறைக்காமல் என்னை வெறுக்காமல் இச்சிறுவருடன் நாட்டுக்குப் போய் வாட்டமற் றிருப்பீராகவென்று மைந்தரையும் பார்க்காமல் மௌன நாட்டத்திலிருந்தார் க்ஞானேசுவரர் பாட்டனுரையும் காவலரையும்நோக்கி, நீங்களித்தண்டிகை முதலானவைகளுடன் நாட்டுக்குப் போங்கள் நானிவரை நாலுநாளுக்கு ளழைத்துக்கொண்டு வருகிறேனென் றுரைத்தனுப்பிச் சகோதரருடன் தந்தையிடத்தில் சந்தோஷத்துடனிருந்தார். கேட்டீர்களோ சித்தர்களேயென்று பின்னும் நாபாஜி சித்தர் சொல்லத் தொடங்கினர்.

ஞானேசுவரர் அந்தணரை அவமானஞ்செய்து
ஐசுவரியம்பெற்ற அத்தியாயம் முற்றிற்று.

ஒன்பதாவது அத்தியாயம்

ஞானேசுவரர் தன் தந்தையை
நாட்டிலழைத்துவந்தது.

பக்தர்களின் எண்ணமுழுதும் இனிதாய் நிறைவேற்றும் கருணாகரக் கணபதியை ஆராதாரத்துக்காதாரமான மூலாதாரத்திற் கண்டு களிப்புற்ற சித்தர்களே? ஏகாக்கிரக சித்தத்தோடுங் கேட்பீராக. சீதோபந்தும் காவலரும் நாட்டையடைந்தபின் காட்டிலிருக்கும் ஸ்ரீமந் நாராயணராகிய க்ஞானேசுவரர் தங்கள்மேல் பஞ்சப் பிராணனையும் விட்டுத் தந்தையாகிய

விடோபா தபோபலத்தாலும் பிரமக்ஞான நிஷ்டையாலும் ஆனந்த பரவசத்தாலும் தன்னைமறந்து சங்கல்பமிறந்து தட்சிணு மூர்த்தியைப்போல் சமாதிநிலையைச் சார்ந்திருப்ப தைக்கண்டு அவருடன் தர்க்கஞ்செய்ய வாஞ்சைகொண்டு சின்மய முத்திரையிலிருக்கும் அவர் மடியின்மேற்போய் வீற்றிருக்கப் பராத்பரனுகிய க்ஞானேசுவரர் பரிசம்பட்ட மாத்திரத்தில் எல்லையற்ற பரவசத்தனுயிருக்கும் விடோபாவின் நிர்விகற்ப சமாதி கெட்டுச் சுழுப்தி மௌனத்தைவிட்டுப் புளகாங்கிதனுகி விகற்ப மனதுடையவனுகி ஞானக்கண்ணைத் திறந்து ஊனக்கண்களைத் துறந்து தன் மடியின்மேல் வீற்றிருக்கும் பக்தவச்சலனுகிய க்ஞானேசுவரர்மேல் மிகவும் வாஞ்சைகொண்டு என் கண்மணியேயென்று விண்டு வாரியெடுத்து மார்பகத்திலணைத்து உச்சிமோந்து முத்தங்கொடுத்து நிவர்த்திசாது முதலானவர்களையுந் தழுவி ஆனந்த பாஷ்பங்களாற் கழுவி ஓ ஒப்பிலா மைந்தர்களே! யான் வணங்குதற் குகந்தவர்களே! சவுக்கியமான நாட்டைவிட்டுக் காட்டிலேன்வந்தீர்கள் அன்பிலா வென்பாலேன் வந்து நொந்தீர்கள், அழகொழுகிய உங்கள் முகதரிசன மின்றேன் தந்தீர்கள்.

அனேகநாளாய் என் தரிசனந் தராமலிருந்தீர்கள் என்கிற பல பட்சவார்த்தைகளாடி உடனே மௌன நாட்டைநாடிப் பரப்பிரம்ம சங்கீர்த்தனம் பாடிப் பரமானந்தத்தைத் தேடி மகவாசையை நீக்கி மைந்தர்களைநோக்கி இனிசுகமாய் நாட்டைச் சேர்ந்து வேஷ்டைதீர்ந்து மயக்கத்திலிருந்து பேர்ந்து மிகவுங் களிகூர்ந்து அரசனுே டன்புற்றிருங்களென்று பகர்ந்து மடியிலிருந்த ஞானேசுவரரை எழுந்திருமப்பாவென கபட நாடகனுகிய ஸ்ரீஞானேசுவரர் ஓ எந்தையே! எங்களையாண்டு ரட்சிக்கும் கடவுளாகிய எனைப்பெற்ற தந்தையே! தேவரீர் நாட்டுக்குவரவேண்டும். எங்களோடிருக்கவேண்டும், நாங்கள் களிக்கவேண்டும், இந்தவரம் தீரிப்போதே தரவேண்டுமென் றறைந்து மற்றோர் வாமத்தின்மேல் வாமபாகனுகிய நிவர்த்திசாதுவும் எதிரில் சோபானதேவும் முக்தாபாயும் வீற்றிருக்கச்செய்தபின் ஞானேசுவரர் தந்தையை நோக்கி நீர் நாட்டையடையாம லிக்காட்டிலிருக்க நாங்கள் சுகமுற்றிருப்போமோ பெற்ற தந்தையையும் வெறுப்போமோ சீக்கிர மெங்களுடன் பட்டணத்துக்குப் பிரயாணப்படுமென,

அதற்கு விடோபா அடா ஞானேசுவரா! கக்கினது ஆயாசந்திர்க்கும் பாயாசமானாலும் அதை நக்குவாருண்டா? உத்தமர் வாக்கிரண்டா? காட்டில் வந்தபின் நாட்டிற் பிரவேசிக்கலாமா? அறிவில்லாத மாந்தரோடும் நேசிக்கலாமா? அன்பார்ந்த நெஞ்சுடன் விசுவாசிக்கலாமா? அற்பமான அரசனைப் பூசிக்கலாமா? எப்பொழுது மெனக்குக் காடேகெதியாகும் உங்களுக்கு நாடே கெதியாகும் ஆதலால் வாட்டமற்று நாட்டையுற் றிருப்பீர்களென ஞானேசுவரர் ஓ என்னையனே நீர் காட்டிலிருக்கும் காரணமேதென விடோபா அப்பா மகனே நான் நாட்டையடைந்து இனி பெறும்படியான போகலாபமேதிருக்கின்றது நாட்டில் வருவதால் மோக்ஷத்துக்கு விக்கினமேயன்றிச் சகாயமில்லை நிர்ச்சங்கமான இந்தக் கானகமே மோனநிஷ்டைக்கு யோக்கியமானதால் இம்மலைச்சாரலிற் சஞ்சரிக்கின்றேனென, ஞானேசுவரர் கண்களை மூடாமல் கவுசனையால் விண்ணைமூட நினைப்பதுபோலவும், இடியைத் தன் சிறு கால்களாற் றாங்கக் கருதிய சிறு குருவியைப் போலவும், கர்மம் செய்துக்கொண்டே தர்மம் தேடுவதுபோலவும், கடினநெஞ்சன் காட்சியைப்பெற வாஞ்சை கொண்டதுபோலவும், நானென்பதை மாற்றுமல் ஞானநிஷ்டையைச் சாதிப்பது போலவும், நாடென்றுங் காடென்றும் பேதவெண்ணங்களோடுங் கூடியிருக்கும் நீர் செய்யும் பிரம நிஷ்டையிருக்கின்றது அபேத நிஷ்டைக்குப் பேதநாட்டமிருக்கலாமாவென, விடோபா எனதென்னும் பொருள்களிருக்கும் பரியந்தம் நானென்னு மகந்தையும் அது விதுவென்னும் துவித பாவமும் போகாது இப்பேத பாவங்களை நீக்குவது நிர்விகற்ப நிஷ்டை நிர்ச்சல்யத்தாலும் லபிக்கும் ஆதலால் ஏகாந்தமான காடே மௌனநிஷ்டைக் குரியதென் றிவ்விடத்திருக்கின்றேனென ஞானேசுவரர் தன்னையறிந்து தானுயிருப்பதே பிரம நிஷ்டையன்றி, காட்டினிற் றனித்திருப்பது நிஷ்டையல்லவென விடோபா சத்குரு முன்னிலையிற் றன்னை யறிந்துக்கொண்டாலும் தானுயிருப்பதற்கு ஏகாந்தஸ்தானமே முக்கியமாக வேண்டுமல்லவாவென, ஞானேஸ்வரர் காட்டிற் றனித்து தபஞ்செய்வதால் அஞ்ஞான நிவர்த்தியாகாது அகமமதைகள் நீங்கிப்போகாதென்று மெய்ஞ்ஞானிகள் காடென்றும் நாடென்றும் சன்னியாசமென்றும்

சம்சாரமென்று முன்னுமல் திடமனதினேடு நிருவிகற்ப சமாதியைப் பொருந்தியிருக்க நீர் சம்சாரத்தை யெதிர்த்து இக் கானகத்திலிருக்குங் காரணமேதென விடோபா சாட்சியை யறிந்து சர்வசாட்சியி லக்யமானவர்கள் சம்சாரத்திலிருப்பாரேல் சமாதிசாதனைக்கு விக்கினம் நேரிட்டுச் சாட்சாத்காரத்தை யிழந்துவிட நேரிடும். ஆதலால் சகசானந்தபூதி பெற்ருேர் சம்சார வபேட்சையைக் கனவிலுங் கொள்ளமாட்டார்களென க்ஞானேசுவரர் இது வேண்டுமென்கிற சங்கல்பமும் இது வேண்டாமென்கிற விகல்பமு மற்றிருப்பதே சகஜநிஷ்டையன்றிக் காட்டையபேட்சித்து நாட்டையுபேட்சித்திருப்பது நிஷ்டையாகுமாவென, விடோபா சங்கல்பவிகல்பபற்றிருப்பவர்க்கு வியாபார மெவ்விதமாய் நடக்கும் விவகாரத்துக் குதவாதவன் நாட்டிலிருப்பதாற் பிரயோசனமென்ன? பிணத்துக்கு மணஞ்செய்வதுபோல அநித்தியத்துக்கா சுத்தமான இத்தேக போஷணையைக் குறித்துப் பலசங்கடங்களுக்கிடமான நாட்டிலிருக்கக் கூடவேகூடாதென, க்ஞானேசுவரர் வியாபாரத்தி லிச்சையற்றவன் சமாதிசாதனஞ் செய்வானுயின் அச்சாதனமும் வியாபாரமல்லவோ இவ்வியாபாரமுள்ளவனுக்குச் சம்சார வியாபாரமு மிருக்கட்டுமேயென, விடோபா சமாதி ஓர் வியாபாரமானுலும் சமஸ்த சங்கல்ப சஞ்சலங்களையும் மாற்றிவிடும் சம்சார வியாபாரம் சமஸ்த சஞ்சலங்களைக் கொடுத்து எந்நேரமும் அல்லலுறச் செய்யுமல்லவாவென ஞானேசுவரர் சச்சிதானந்தப்பொருளே தானுயிருக்க நிஷ்டாசாதன மென்னகாரணஞ் செய்யவேண்டுமென விடோபா சாக்ராவஸ்தையில் சுழுப்திநிலையை யடைவதல்லவோ பிரம நிஷ்டையென்று உத்தமர்க ளுரைக்கின்ருர்கள் அப்படிக்கில்லாச் சமாதியால் தடையற்ற ஆனந்தம் உண்டாகுமாவென, க்ஞானேசுவரர் சாக்ராவஸ்தையில் இந்திரியங்களின் சேஷ்டையும் சொப்னுவஸ்தையில் மனேவியாபாரத்தையுஞ் சுழுப்தி யவஸ்தையில் சுத்த சூனியத்தையுங் கண்டு களித்திருப்பதே ஆனந்தமும், பருந்தினிழல்போல் ஒன்றிலு மொட்டியு மொட்டாம லிருப்பதே நனவிற் சுழுப்தி நிலையும் என்று வேதங்கள் முறையிடச் சுத்த சூன்யமான சுழுப்தியைப்போ லிருப்பதே ஆனந்தமென்றும் நனவிற் சுழுப்தி யென்றும் நீர் நினைத்திருக்கலாமா வென

விடோபா சாக்ராவஸ்தையும் சொப்னுவஸ்தையும் பிரபஞ்ச வியாபாரத்தி லமிழ்த்தி விஷயங்க ளென்னும் மிருகங்களுக் காகாரமாக்கி மிகவும் வேதனையடையும்படிச் செய்யும் ஆத லால் பிரபஞ்சவியாபார மிழந்த சுத்த சூன்யமான சுழுப்தி யவஸ்தைக் கிணையான சமாதியே உத்தம சமாதியன்றி வே றல்லவென, க்ஞானேசுவரர் திருடனுக்கு மூடனே குருவெ ன்பதுபோலப் பிரபஞ்சவியாபாரத்தி லிருந்துக் கொண்டே ஜனகரைப்போல விஜயங்களென்னும் மிருகங்களைத் திட ஞான மென்னும் வாளால் கண்டித்துச் சுகதுக்கங்களைச் சட் டைசெய்யாமல் வெதிர்த்திருப்பதே பரம சமாதியன்றி சூன் யமா யிருப்பது சமாதியல்லவென, விடோபா அனேக ஜெ ன்மங்களாய் வாசனை யேறியிருக்கும் மனக்குரங்கை சகல பற் றுகளுமற்ற சுகப்பிர்ம ரிஷியால் ஜெயிக்கப்பட்ட தன்றிச் சுழுப்தி நிலை யில்லாமல் தான்பிர்மமென்கிற திடஞானமுள்ள ஜனகரால் ஜயிக்கப்பட்ட தல்லவேயென, க்ஞானேசுவரர் கோலாடினல் குரங்குகாடுவதுபோலத் திடஞானமுள்ள ஜன கரால் மனநாச மடைந்ததே யன்றிப் புறப்பற்றுக் காடேகெ தியாயிருந்த சுகரால் மனோலயமடைய வில்லையோவென, விடோபா திருக்குவாயிருந்து திரிசியத்தை யகற்றவேண்டு மே யன்றித் திரிசியத்தி லிருந்துக்கொண்டே திரிசியத்தை யெப்படி நீங்கக்கூடும் விஷந்திர விஷமே குடித்தால் மரண வேது வல்லவோவென, க்ஞானேசுவரர் விஷந்திர வேறோர் விஷமான அவுஷத முட்கொள்ளுவதுபோலப் பயமான விஷயேந்திரிய காரணாதிகள் நிர்பயமான திடஞானத்தாற் கொள்பவனே சமர்த்தனன்றி எப்போதும் நிஷ்டையி லிரு ந்துக்கொண்டு எங்கே விஷயங்களென்னும் மிருகங்கள் வரப் போகிறதோ வென்கிற பீதியை குடிகொண்டிருப்பவனுக்கு அப்பீதியே பலிதமன்றிப் பிர்மானந்த மோர்காலத்துங் கிட் டாது நன்றுயோசித்துப் பாருமென, விடோபா சன்யாசி யாகி சதா சமாதி நிஷ்டையி லிருப்பவனையே சஞ்சலத்துக் குட்படுத்தும் விஷயங்கள் சம்சார வியாபாரத்தி லிருப்பவனை என்னென்ன படுத்தாது, பெரு வெள்ளத்தில் வீழ்ந்த சருகு சலனமின்றி ஓரிடத்தி லிருக்கவுங் கூடுமோவென, க்ஞானேசு வரர் திடஞானமில்லாதவன் எத்தனை நாள் அந்தர் திருஷ் டையிலிருந்தாலும் கருவிகள் பகிர்முகத்திற் கொண்டுவந்து

பலதுன்பமடையச்செய்யும் பெருத்த வெள்ளத்தில் வீழ்ந்த பருத்த கல்லானது சற்று மசையாம லிருப்பதுபோல் விஷயாதி விகாரங்க ளெத்தனை வந்தாலும் சகிக்காத் துன்பந் தந்தாலும் நிச்சலனமா யிருப்பவனே பிர்மானந்தானுபவம் பெறுவானன்றித் திடமில்லாதவனுடைய மடமை ஒருக்காலத்தும் நீங்கவே நீங்காதென, விடோபா எவ்வளவு திடமிருந்தாலும் நிற்சங்கனுய்ச் சதா பிர்மானுசந்தானஞ் செய்யாமற் போனால் மாயாந்தகார கூபத்தி லமிழ்ந்து போவதற்குச் சந்தேகமேயில்லையென, க்ஞானேஸ்வரர் பிர்மத்தையன்றி மாயையென்ப தொன்றுண்டா யிருந்தா லல்லவோ சதா நிஷ்டையிலிருந்ததை நீக்கவேண்டும் தன்நிழல் தன்னோ டெதிர்த்து யுத்தஞ்செய்யு மென்பதுபோல இல்லாமாயையும் இல்லா அகத்தையும் ஏற்படுத்திக்கொண்டு சதா நிஷ்டையி லிருக்கவேண்டுமென் றுரைக்கின்றீர் இல்லாநிழலோடு போராடுவதால் இளைப்பே பிரயோசனமாகுவதுபோய் என்றுமில்லா மாயையும் இல்லையென் றறிந்துக்கொண்டு மௌனமூற் றிருக்காமல் எந்நேரமும் நியதிகளைந்துக் கொண்டிருப்பது என்றும்நீங்காச் சள்ளையல்லவோ வென விடோபா நியதிகளையாமலும் ஏகாக்கிர சித்தமாகாலும் சாட்சியா யிருக்காமலும் சகலஸ்ஞானம் பொருந்துவ தெப்படியென, க்ஞானேசுவரர் நேதிசெய்யச் செய்யப் புற்றிலுள் ளிருந்து புறப்படும் ஈசலைப்போல மிகவும் விஷயங்கள் புறப்பட்டு நிற்கும் ஏகாக்கிர சித்த மாக்க வாக்க அடிக்கடிக்கப் பந்தெழும்புவது போல மனஞ் சஞ்சலப்பட்டு நிற்கும் சாட்சியாயிருக்க விருக்கக் குணங்களெடுத்த கணங்கள் வாலைப்போலத் தனுவாதிகள் தானென்கிற பிரமையே வந்துக்கொண்டிருக்கும் ஆதலால் அவித்தை யென்னும் அகத்தையையும் மித்தை யென்னும் மாயையும் சுத்திகா ரஜிதம்போல் முழுதும் மித்தையாயெண்ணி தானே பிர்மமென நண்ணி விசார க்ஞானத்தால் கெம்பீரத்துடனிருப்பதே பிர்மானந்தமென, விடோபா யாதொரு சாதனையுஞ் செய்யாமல் விசார ஞானத்தால்தானே பிர்மமென் றிருப்பதால் துக்கமயமான விஷயாதிகளை வெல்லக் கூடுமோ? அகண்டானந்த ஆத்மாவைப் புல்லக்கூடுமோ வென க்ஞானேசுவரர் உயிரோடிருக்கும் பசுவே வியாக்கிரத்தைக் கொல்லாதாயின் இறந்துபோன பசுகொல்லுமா ? அதுபோல

நித்யமாகியும் நிஷ்களமாகியும் அகண்டானந்த மயமாகியும் விளங்காநின்ற ஆத்மாவை விஷயாதிகளென்ன செய்யக்கூடும், கொழுத்த பசுவும் புலிமுன்வர அஞ்சுவதுபோலத் திடஞானத்தால் பூர்த்தியடைந்திருக்கும் ஞானவான்முன் விஷயங்கள்வரவேவராது வந்தால் புலிமுன் வந்த பசு வெப்படி அபாயமடையுமோ அப்படியே யழிந்துபோகுமென, விடோபா விபசாரியோடு கூடிய சம்சாரியுங் கெடுவதுபோல அஞ்ஞானிகளோடுகூடிய மெய்ஞ்ஞானியும் விஷயாதிகளிற் சிக்கி மனோசஞ்சலத்திற் சொக்கி துக்கமயமாய்ப் போனாலோவென க்ஞானேசுவரர் திடமுள்ள சம்சாரி பல விபசாரிகளோடு கூடியிருந்தாலும் கற்பழியாமலே யிருப்பாள் திடமில்லாதவள் ஒருவர் கூட்டுறவில்லாதிருந்தும் பதிவிரதைத் தன்மைக்குத் தானே பழிதேடிக்கொள்வாள்.

அதுபோலத் திடமுள்ளஞானி அனேக ஞானிகளோடு சூழ்வுற்றிருந்தாலும் பூரணஞானத்தை யிழக்கமாட்டான். திடமில்லாதவன் ஏகாந்தனாயிருந்து மிழந்துவிடுவானென விடோபா சம்சார வியாபாரத்தி லிருந்துக்கொண்டு சகஜ ஞானி யெப்படியாகக் கூடுமென க்ஞானேசுவரர் பார்ப்பான் தோட்டிவேஷம் போட்டு நாட்டியமாடினாலும் தோட்டியாகாமல் அந்தணனாகவே யிருப்பதெப்படியோ அப்படியே மெய்ஞ்ஞானி அஞ்ஞானிகளோடு கூடி அனேகவித நடனத்திலிருந்தாலும் பரமானந்தானுபோதியாகவே யிருப்பானென, விடோபா எவ்வளவு திடப்ரக்ஞையுள்ளவனானாலும் ஓர் முகூர்த்த நேரமாவது பிரமானு சந்தானஞ் செய்யாமற் போனால் பிரமஞானியாதல் வெகு துர்லபமென க்ஞானேசுவரர் தோட்டிவேஷம்போட்டு நாட்டியமாடும் மறையோன் அடிக்கடி நான்மறையோன் என்றுன்ன வேண்டுமோ! அப்படி நினைக்காவிட்டால் தோட்டியாய்ப் போவானோ? நாடறிந்த பிராமணனுக்குப் பூனூல் வேண்டுமோ நானென்னு மகந்தையற்றபின் பின்னும் நானென்னு மகங்காரக்கிரந்தியை வைத்துக்கொண்டு அகம் பிர்மமென்னும் பிர்மானு சந்தானம் பண்ணவும் வேண்டுமோ? நாடறிந்த பிராமணனுக்குப் பூனூலில்லாவிடினும் எல்லாராலும் பூசுரனென்றே பூசிக்கப்படுவதுபோலவே நானெனதென்னும் அகமமதையற்றவன் யாதோரனு சந்தானஞ்செய்யாவிடினும் எல்லாராலும்

பூசிக்கப்பட்டுப் பிர்மானந்தானு போகியாகவே யிருப்பானென, விடோபா ஜகதீசுவரனுக் கிணையானவனானாலும் தான் பிர்மமென்கிற அனுசந்தானம் நாடோறுஞ் செய்யானாகில் அஞ்ஞானியாய்ப் போவதற்கோர் தடையில்லவேயில்லை தனுவாதிகளை நானென்னும் அகந்தை கொஞ்சத்திற் போகவே போகாதென, க்ஞானேசுவரர் விளக்கை கையிற் பிடித்துக் கொண்டு இருட்டே இருவென்றால் இருக்குமோ? பூனையை அருகில் வைத்துக்கொண்டு கிளியே பேசென்றால் பேசுமா? அதுபோலவே தேகாதிகள் நானென்னும் அஞ்ஞானத்தை வெதிர்த்துப் பிர்மமே தானென்றறிந்தபின் அஞ்ஞானமே விருப்பாயாக வென்பதாலிருக்குமா? ஜீவேசுவர ஜகத்தாதிகள் பொய்யென் றறிந்தபின் மாயையை வாவென்றால் வருமா? நபும்சகனென்றறிந்த ஸ்திரீயின்முன் நான் புருஷனெனச் சொல்ல நாணமடைந்த பேடியைப்போல பிரமமென்பது சத்தியமென்றும் மாயையை அசத்தியமென்றும் பிர்மம் நிர்விகல்பமென்றும் மாயை சங்கல்ப விகல்பமென்றும் தானே பிர்மமென்றும் பிர்மமே தானென்றும் சற்குருநாதன் சன்னிதானத்திற் சந்தேகமறத் தெரிந்தவனுக்குச் சங்கல்பமேது விகல்பமேது பந்தமேது மோட்சமேது ஜனனமேது மரணமேது நாடேது காடேது தானமேது தபமேது சன்யாசமேது சமுசாரமேது என்று செத்தாட்டுக் கண்போலச் சகத்திலிருப்பவன்முன் மாயையின் சாமர்த்தியம் அணுவும் நடக்குமா? அஞ்ஞானத்திலு மடுக்குமா? நன்று யூகித்துப்பாருமென்று உரைக்கும்போது நிவர்த்திசாது ஓ என் தந்தையே நீர் வெகு நேரமாகத் தர்க்கிப்பது விந்தையே எதை நினைத்தமாத்திரத்தில் சகல பயங்களும் நிவாரணமாய்ப் போகுமோ எதையாராயின் அனங்கனுவானோ எதனுடைய தரிசனத்தால் தன்னை மறப்பானோ எது ஞானர்ச்சனைக் குகந்ததோ ஏகமாயிருப்பதெதுவோ அதையே யறியவேண்டும் மிகவும் பிரியத்தைக் கொடுப்பதாகியும் அகண்டானந்தத்தைத் தருவதாகியும் ஓர்தரம் சிரித்தாலும் ஆயுளிறுதி பரியந்தம் நினைத்து நினைத்து வியப்படைவதாகியும் வெளியிலும் வளியிலும் சமீபமானதாகியும் கோடிசூரியப் பிரகாசமானதாகியும் மகாவாக்கியங்களுக்கு லட்சியமாகியும் எப்போதும் நூதனமானதாகியும் விளங்காநின்ற தெதுவோ அதையே தியானிக்கவேண்டும்.

எதனிடத்தில் இந்த அண்டரண்ட பிண்டரண்ட பிர்மாண்டங்களெல்லாம் சிருஷ்டி திதி லயங்களைப் பொருந்தி யிருக்குமோ பூதபவுஷிய வர்த்தமானமென்னும் திரிகாலங்களிலும் பின்னமின்றி அத்துவிதமா யெந்தப்பொருளான திருக்கின்றதோ எது அவாங்மனோகோசரமா யிருக்கின்றதோ எது மேல் கீழ் நடுபக்கமும் நாமரூப விகாரமுற்றிருக்கின்றதோ அது பிர்மமென்றுரைக்கத் தகும் என்று வேதத்தில் முறையிட்டாலும் சராசரங்களிலும் பிருதிவியாகி பஞ்ச பூதங்களிலும் சப்தமாதி பஞ்ச தன்மாத்திரைகளிலும் அவ்யக்தம் மகத்வம் அகங்கார தத்வங்களிலும் சாத்வீக ராகத் தபோகுணங்களிலும் இதின் பிரதி பிம்பரான திரிமூர்த்திகளிலும் பரமாணுக்களிலும் பரிபூரணமா யென்றும் நீங்காதிருக்கும் பரப்பிரமத்தை வணங்குவ தெப்படி இணங்குவதெப்படி இப்பேர்க்கொத்ததென்று வாக்கினாற் சொல்லவும் மனதினால் நினைக்கவுங் கூடாததான வஸ்துவை வாழ்த்துவ தெப்படி மனனஞ்செய்வதெப்படி எவனுக்கு ரூபஞ் சூன்யமாயிருக்குமோ எது நாமத்துக் கப்பாற்பட்டிருக்குமோ அதைப்பார்க்கவேண்டும் துதிக்கவேண்டும் என்று பலதரம் பேசுவதனால் பிரயோசன மேது சுருதி ஸ்மிருதிகளே அப் பரமாத்மாவின் நிலைமை யுரைத்தற்குக் கூடாமல் மௌனஸ்திதியைப் பொருந்தியிருக்குமாயின் நாம் சொல்வதெப்படி நாமரூபங் குணங்குறி முதலியவைகளை நீக்கியபின் எப்பொருள் மீதியாயிருக்கின்றதோ அப்பொருளாகி சமஸ்த வஸ்துக்களிலும் சமத்துவம் பொருந்தியிருப்பதே மேன்மையான பிர்மத்தியானமாகும் விருப்பு வெறுப்புற்றுச் சுகதுக்க சகிதனாகி நானென்னும் அகங்காரக்கிரந்தியைக் களைதலே மாட்சிமையான பிர்மநிஷ்டையாகும் ஈதுண்மையா யிருக்க நீர் காட்டினிலிருக்குங் காரணமேன் தறிபோலசையாதோர் ஸ்தானத்தில் வீற்றிருப்பதேன் என்கிற பல வார்த்தைகளாடும்போது விடோபா தனயரோடு தர்க்கம் செய்யச் சாமர்த்தியமின்றி அப்பா நிவர்த்திசாது ஐயா க்ஞானேசுவரா! நீங்கள் ஜன்மிக்கும்போதே மெய்ஞ்ஞான நாட்டமும் சுஞ்ஞான கோஷமும் விளக்கமுற் றிருந்தவர்களாதலாலுங்களுடன் வாது செய்ய என்னாலாகுமோ இப்பேர்க்கொத்த மகானுபாவர்களாகிய உங்களை நான் மைந்தர்களாய்ப்பெற என்னபாக்கியஞ் செய்தேனோ எதுதவஞ் செய்தேனோ வென்

றவர்களை மார்பிருகத் தழுவிக்கொண்டு ஆனத்த மேலீட்டால் தன்னைமறந்தார். உடனே ஞானேசுவரரும் நிவர்த்திசாதுவும் அரியர ஸ்வரூபிகளாய் வீற்றிருந்தார்கள் விடோபா கண்களைத்திறந்து ஆலிங்கனஞ் செய்த தனயரிருவரும் சங்கரன் சாரங்கபாணியா யிருக்கக்கண்டு ஆனந்தங்கொண்டு புளகாங்கனாய் மயிர்க்குச்செறிந்து தழுவினபடியே அரியரனைத் தோத்திரஞ் செய்யத்தொடங்கினர்.

பகவான் துதி.

விருத்தம்.

மந்தரகிரியழுந்தாவகையுறப்படைக்கிபாதி
இந்திராதியரைக்காத்தவெந்தையேநெடியமாலே
பந்தமாம்பகுதிக்குள்ளாய்ப்பவம்மலவெடுப்பேற்கும்நீ
மைந்தனய்வந்ததென்னமாயமோவறிகிலேனே. 1

மந்தரகிரிக்காற்றுமல்வாசுகிக்குருகுமாலம்
விந்தையாயுண்டுவானோர்மேற்றயைசெய்தமூர்த்தி
தொந்தமாம்வாழ்வைமேலாஞ்சுகமெனநினைந்தேற்கும்நீ
மைந்தனய்வந்ததென்னமாயமோவறிகிலேனே. 2

பந்துபோலிருக்குமிந்தபற்பலவண்டபேதம்
அந்தணன்படைத்ததன்றேயவற்குநீதாதையன்றே
எந்தையேயுனக்குந்தாதையிகபரத்துண்டோவுன்றன்
மைந்தனன்பிதாநீயென்றமாயமோவறிகிலேனே. 3

அந்தணன்புலவனுகியோர்சிரமாலைபூண்ட
தந்தையுந்தாயுமில்லாச்சங்கராவுனைப்பயந்தோர்
எந்தலோகத்திலுண்டீதிங்ஙனமிருக்கவுன்றன்
மைந்தனன்பிதாநீயென்றுமாயமோவறிகிலேனே. 4

சிந்துரஞ்சிஞ்சுமாரஞ்செயுஞ்சமர்க்கிடந்தயர்ந்தே
உந்திபூத்தவனேகாவென்றோலமிட்டிறைந்துகூவ
வந்தனனஞ்சேலென்றுவகுத்தருண்மாலேநீயென்
மைந்தனய்ப்பிறந்ததென்னமாயமோவறிகிலேனே. 5

அந்தகன்வலியாங்காரமாவிநீங்கிடவுரைத்தே
எந்தன்மார்க்கண்டர்க்கிரெட்டிரண்டினையளித்தாட்கொண்ட
சுந்தரானந்தஞானத்தோன்றலேதொழும்பனேற்கும்
மைந்தனய்ப்பிறந்ததென்னமாயமோவறிகிலேனே. 6

அந்தமார்பிரகலாதனரியரியெனவேசீற்றம்
வந்துதன்மகவுமாற்கும்வகைபலவியற்றினேனை
அந்திவேளையிலழித்தவாயனேநீயுமுன்றன்
மைந்தனுனென்றறைந்தமாயமோவறிகிலேனே. 7

சந்தாதிதியின்மைந்தன்றுகளெளியுருவாய்ச்சென்று
அந்தரந்தனைக்கறிக்கவலவனுயடைந்தன்னேன்றன்
கந்தரங்கடித்துமூர்ச்சையுறச்செய்தகபாலீயுன்றன்
மைந்தனுனென்றறைந்தமாயமோவறிகிலேனே. 8

தந்தையின்படிக்காசித்ததன்யனுந்துருவனுக்கே
அந்தரத்தசலவாழ்வையளித்தகாருண்யமாயா
வெந்துயர்கடலின்மூழ்கிவேட்கையுற்றிருப்போர்க்கும்நீ
மைந்தனுய்ப்பிறந்ததென்னமாயமோவறிகிலேனே. 9

நந்திவாகனனேயென்றுநலவுபமன்யரேத்த
முந்தமிழ்துந்தியீந்தமுக்கணுயகனேநீய
செந்துவர்வாய்நலார்தஞ்சேமமிச்சித்தேற்கும்நீ
மைந்தனுய்ப்பிறந்ததென்னமாயமோவறிகிலேனே. 10

என்றிவ்விதமாகத் துதித்துருகி ஓ வைகுந்தவாசனே! ஓகைலைவாச நிவாசனே! நீங்களே எனக்குப் புத்திரராயவதரித்திருக்கத் தவமுஞ் செய்யவேண்டுமோ? என்னைப் போன்ற புண்ணியவானு மிவ்வுலகிலுண்டோ? உங்களுக்குச் சேவை செய்வதைவிட்டு இக்காட்டிலிருந்த வென்னறியாமையை என்னவென் றுரைப்பேன் பிறந்தநாளிலேயே உங்களுடைய சுயரூபங்களைக் காண்பித் தென்னை யாட்கொள்ளலாகாதோ? இதுநாள்பரியந்தம் மறைந்திருந்த காரணமேதோ வென்கின்ற பலவார்த்தைகளாடிச் சோபான்தேவை நோக்கி ஓ மகானுபாவா! சோபான்தேவா! உம்முடைய திவ்விய உருவத்தையும் அடியேன் தரிசிக்கும்படியாக அருள் புரியவேண்டுமையாவென்று வேண்ட சோபான்தேவ் பிரம தேவனுகக் காட்சி கொடுத்துத் தந்தையை நோக்கி, ஓ பரம சாதுவே! தனக்குள் பரப் பிர்மத்தை யறிந்து தானே பிர்மமெனத்தெளிந்து தனக்கு எக்காலத்திலும் ஜனன மரணுதிகளில்லையென்றறைந்து பரிபூரண வஸ்துவா யிருப்பானுனல் அவனுக்கு மரணமுண்டா? ஜன்மமுண்டா? இப்படி பிறப் பிறப்பற்ற பிரமக் ஞானிக்கு நரகமேது சொர்க்கமேது பந்தமேது மோட்சமேது எல்லாம் பிர்மமென்கிற அதர்வணவேத மகாவாக்

கியார்த்தத்தின்படி பிபீலிகாதி சமஸ்த வஸ்துக்களும் பிர்ம மயமென்றும் பிர்மம் அணுவுக்கணுவாகியும் மஹத்துக்கு மஹத்தாகியும் விளங்கும்பரவஸ்துவென்றும் அறிந்தவனே பிரமானுபூதி பெற்றவனாகும். அன்றி இப்பேர்கொத்த அனுபவத்தி லிருந்துக்கொண்டே சம்சாரத்தி லிருப்பவன் பிர்மவித்தென்றும் சுகஞானி யென்றும் சொல்லப்படும். இல்லறத்திலிருந்துதேர்ந்த வசிஷ்டருக்கு விசுவாமித்திரரும் ஜனகருக்குச் சுகப்பிர்ம ரிஷியும் ஸ்ரீ கிருஷ்ணருக்குத் தூறுவாசரும் ஐக்யமாயிருந்தார்கள். ஆதலால் இல்லற ஞானியே தன்னை மறந்த சன்யாசிகட்கும் மேலானவனாகுமென் றறையும்போது விடோபா ஓ சகத்சிருஷ்டிகரே! உமது வாக்கைக் கடப்பவருமுண்டோ இனி நீங்களென்ன சொல்லுகிறீர்களோ அப்படியே நடக்கச் சித்தமா யிருக்கிறேனென் றறைந்து ஆனந்தம் நிறைந்து ருக்மாபாயியை நோக்கி, ஓ பெண்ணே! நமதாசிரியர் ஆசிர்வசனப்படி திரிமூர்த்திகளும் நமக்கு மகவாய்ப்பிறந்து நம்மை கிருதார்த்தராக்கினார்க ளினி நாம் தவமுஞ்செய்யவேண்டுமோ வனத்திலுமிருக்க வேண்டுமோ நம்மைப்போல் புண்ணியவான்களு முண்டோவென்றுரைக்கும்போது ருக்மாபாயி ஆனந்தவாரியில் மூழ்கினவளாய் இவ்வுலகில் இப்பேர்க்கொத்த விந்தையும் நடந்ததுண்டா? ஆனல் அனுசூயாதேவி புத்திர வாஞ்சையால் வாடக்கண்ட மும்மூர்த்திகளும் அவ்வுத்தமிக்கு மகவாகப் பிறந்தார்கள் காரணம் அவ்விரத சீலியின் கணவனாகிய அத்திரி மஹாரிஷியின் தபோபலத்தால் அனுசூயாதேவியை பரிசோதிக்கவந்த மூவரும், தன் வல்லமை குன்றிச் சிறுகுழவிகளா யிருந்ததினாலே யாம் மகா பதிவிரதையாகிய அனுசூயாதேவிக்கும் மகவாய்ப்பிறந்த மூவரும் யாதொரு நற்குணமுமில்லா அடியாளுக்கு அருங்குழவிகளா யுற்பவித்தது மிகவும் ஆச்சரியமல்லவா வென்கிற பலவார்த்தைகளாடி முக்தாபாயின் வதனத்தை நோக்கி, ஓ அம்மா! நீ சரஸ்வதியோ லட்சுமியோ பார்வதியோ யாங்களறிய உன் சுயரூபத்தையுங் காட்டி எங்களை ஆட்கொள்ளு மம்மாவென்று வணங்க, முக்தாபாயி மூவர் வேண்டுதலினால் தன் சுயரூபமெடுத்து ருக்மாபாயும் விடோபாவும் களிக்கடலில் மூழ்கும்படியாக தரிசனந்தரவே சதிபதிகளிருவரும் பரமேசுவரியின் பாதங்களிற்ஞே

மூது ஓ அம்மணி பரமேசுவரி ஜகதீசுவரி அந்தரி சுந்தரி நிரந்தரி துரந்தரி சங்கரி பயங்கரி மனோன்மணி மஹாதேவி சகல லோகங்களையும் உன் உதரத்தில் வைத்திருந்தும் எங்கள் அகட்டிற் பிறந்து குழந்தையென்கிற பேருறலாமோ தந்தை தாயென்னும்பேர் நாங்கள் பெறப்போமோ வென்றனந்தம் விதங்களாய்த் துதிக்கும்போது ஆதிசத்தி ருக்மாபாயியையும் விடோபாவையும் நோக்கிப் புனிதர்களே! நாங்கள் நால்வரும் உலகிலுள்ள கொடும் பாவங்களைப் பரிகரிக்கவும் கோஹத்திமுதலான தீங்குகள்செய்யும் கொடியோரை அடக்கவும் சகுண நிர்க்குண தியானங்கள் நிலைபெற்றிருக்கவும் ஸ்ரீ ராம லட்சுமண பரத சத்துருக்கரைப்போல் அவதரிக்க எண்ணங்கொண்டு மகா புண்ணியவான்களாகிய உங்களுக்கு மகவாய்ப் பிறந்தோம் அவதரித்த காரணத்தை முடிக்க நாட்டையடைய வேண்டுமாதலால் எங்கள் வாக்கியத்துக்கு மறுவாக்குரைக்காமல நீங்களும் நாட்டுக்கு வரவேண்டும் அன்றிப் பிர்மாநுபூதி பெறும்படியான அத்வைத ஞானிகள் காடென்றும் நாடென்றும் பின்னபாவமாகப் பார்க்கவே கூடாது. மலமாதிகளும் சந்தனாதிகளும் அபின்னமாய் பார்ப்பவனும் விஷாமிர்தத்தை ஒன்றென மதித்துப் புசிப்பவனும் சுகதுக்கத்தைச் சமமாக நினைத்திருப்பவனும் உறவும் பகையும் வொன்றென உன்னுபவனும் சாதிக்கும்படியான பிர்ம நிஷ்டையைப் பேதபாவ முள்ளவனு லொருபொழுதும் சாதிக்கக் கூடவே கூடாது. ஆதலால் எல்லாவற்றிற்கும் சமபாவமுள்ளவனால் சாதிப்பதற்குகந்த பிர்ம நிஷ்டை நாடென்றும் காடென்றும் பேதபாவமுடைய உங்களால் அத்விதாநுபவம் பெறவேகூடாது. மூவர் தேவர் மற்றியாவர்களும் பிரியமாகியும் அவர்கள்பா லணுமாத்திரமான ஆனந்தமாகியும் தான் கண்டானந்த மயமாகியும் சராசரங்களில் நிறைந்திருக்கும் பராபரமாகியும் இருப்பதெதுவோ அதுவே பிர்மமென்றுரைக்கத்தகும் அதை ஏகமென்றும் அனேகமென்றும் சொல்லக் கூடாது ஒன்றென நிச்சயித்தபோதே அங்கனே விகற்பங்களுண்டாகும் அப்பரவஸ்துவை இப்பேர்க்கொத்ததென்று சொல்வதற்குக் கூடாமையாலே இப்பரமேசன் சின்முத்திரையால் சனக சனந்தனாதியர்க்குங் காட்டாமற் காட்டிப் பரமாத்மாவி லைக்யப்பட்டு மௌன நிஷ்டையைப் பொ

ருந்தி யிருக்கிறார் இந்த மகாவிஷ்ணுவும் அப்பரப் பிரம்மத்தை இப்பேர்க்கொத்ததென் றுரைக்கக் கூடாமையால் பௌத்தாவதாரமாய் மௌன மூற்றிருக்கின்றார். இப்பிரம்மாவும் அப்பரவஸ்துவை விரித்துரைத்துத் தன்னாலாகாமல் மூக பாவத்தை யடைந்திருக்கின்றார். வாக்கினாற் சொல்லும் ஓர் மொழியை அவ்வாக்கினாலே ஸ்திரப்படுத்த வேண்டுவது போலப் பரமாத்மாவின் நிலைமை அப் பரமாத்மாவாலேயே அறியவேண்டும் சீவவிம்சை அச்சீவனன்றி மற்றதாலறிதற்குக் கூடாததுபோலவும், தாகத்தின் வேஷ்டையைத் தாக மெடுத்தோனால் தெரியவேண்டுவதுபோலவும், இனிய பதார்த்தத்தின் ருசியை அருந்தினவனாலே அறிந்துக்கொள்வது போலவும், தானே அப்பரவஸ்துவை யாராய்ந் தறிந்துக் கொள்ள வேண்டுமன்றி ஒருவராலுணர்த்துதற்குக் கூடாது. குருவுஞ் சிஷனு மொன்றாயிருக்கும் அனுபவத்தில் சேவை செய்பவன் யார்? செய்வித்துக்கொள்பவன் யார்? ஆசிரியர் மாணக்கனை நோக்கி, நீயே நான் நானே நீயென்கிற அத்துவிதானுபவத்தை யுரைப்பானாயின் மாணாக்கன் பின்னப்பட்டிருககக்கூடுமா தன்னுடைய சொரூபஸ்திதி அபின்ன கீர்த்தியாயிருக்கப் பின்னப்படுவதெப்படி நன்றென்றும் தீதென்றும் பாராமல் காடாக்கினிக் கிணையா யிருப்பவர்க்குக் காடென்றும் நாடென்றும் துவிதபாகங் கொள்ளலாமோவென்கிற பல வார்த்தைகளாடி விடோபாவை நோக்கி, ஓ புண்ணியவானே! உண்மை இப்படி யிருக்க நீர் நாட்டைவெறுத்துக் காட்டிலிருக்குங் காரணமேன் என்று கேட்க விடோபா வணங்கி, இனி உங்களிஷ்டப்படி நடப்பதே எனக்குறுதியான தபோபலம் ஆதலால் நாட்டிற் பிரவேசிக்கலாம் வாருங்களென்றுரைக்க, மூவரும் ஆதிசத்தியும் விடோபாவை நோக்கி, ஓ விரதசீலனே எங்களுடைய ரகசியத்தைப் பிறருக்குணர்த்தாமலும் நாங்களினிசெய்யும் திருக்கூத்துக்கு வெதிருக்தம் செய்யாமலும் மௌன நாட்டத்தி லிருப்பதே உமக்குறுதியான பிர்ம நிஷ்டை யென்றறைந்து நால்வரும் சிறு குழந்தைகளாகி விடோபாவுக்கும் ருக்மாபாயிக்கும் முன்போல் புத்ரவாஞ்சையை யுண்டாக்கி அவர்களை அழைத்துக் கொண்டு காட்டைக் கடந்து நாட்டை யடைந்து சீதோபந்தின் வீட்டிற் பிரவேசித்துப் பால்யரைப்போலவே விளையா

டத் தொடங்கினர்கள். விடோபாவைக் கண்ட சீதோபந்து சந்தோஷ சாகரத்திற் படிந்தவராய்க் களிப்படைந்து பலவுபசாரஞ் செய்யத் தொடங்கினர். விடோபா மாமன் மாமியார்க்கும் வந்தனஞ்செய்து களிக்கடலி லமிழ்ந்திருந்தார். ருக்மாபாயி தனக்குற்ற பாக்கியத்தை உன்னியுன்னிப் புளகாங்க மடைந்திருந்தாள். கேட்டீர்களோ சித்தர்களே யென்று பின்னும் நாபாஜிசித்தர் சொல்லத் தொடங்கினர்.

க்ஞானேசுவரர் தன்றந்தையை நாட்டிலழைத்துவந்த அத்தியாயம் முற்றிற்று.

பத்தாவது அத்தியாயம்

ஞானேசுவரர் எருமைக்கிடாவினல் வேதத்தை விரித்துரைத்தது.

வாருங்கள் சித்தர்களே! விடோபா நாட்டைச் சேர்ந்த மறுநாள் காலையில் க்ஞானேசுவரர் தந்தையை யழைத்துக் கொண்டரையன்பாற் சென்று வேந்தனை நோக்கி, ஓ எந்தலே! சாந்தியா லுபசாந்தியடைந்த எங்கள் தந்தை இதோ வந்தனர். காட்டை நீங்க விடைந்தனர் நாட்டை யடையநொந்தனர் கிடைத்தற்கரிய சேவைதந்தனர் என்றுரைதததைக்கேட்ட நராதிபன் க்ஞானேசுவரருக்கு மவர் தாதைக்கும் வந்தனஞ்செய்து விடோபாவை நோக்கி ஓ புண்ணியமெல்லாந் திரண்டோருருவாய்வந்த புனிதரே! தவத்தில் கனிதரே! இகபர சவுக்கியத்தை யளிக்கும் நாட்டைவிட்டு ஜனசூன்யமான காட்டையடைந்த காரணமேதோ! திருவாய் மலர்ந் தருளுமையாவென்று பணிவாகக்கேட்க, விடோபா அரசனுக்காசிகூறி ஓ வீரமுந் தீரமும் விளங்கிச் சலட்சண சுலட்சணங்களிற் பூர்த்தியாய்த் துலங்கிக் கொடுங்கோலை வாட்டிச் செங்கோலை யீட்டிக் கர்மத்தை நீத்துத் தர்மத்தைப் பாதுகாத்துவரும் தலைவனே! நாட்டுக்கு நாரே முக்கியம், நரருக்கு நரபதியே முக்கியம், பதிக்குப் பண்பே முக்கியம், பண்புக்கு பச்சாத்தாபமே முக்கியம், தாபத்துக்கு சாந்தமே முக்கியம், சாந்தத்துக்கு தர்மமே முக்கியம், தர்மத்துக்குச் சத்புருஷரே முக்கியம், சத்புருஷருக்கு ஜகதீசுவரனே முக்கியம், ஜகதீசுவரனுக்கு தாசரே முக்கியம், தாசருக்குசம்பாவ

மே முக்கியம், சம்பாவத்துக்கு தற்பரசோதனையே முக்கியம், தற்பர சோதனைக்கு சர்வசாட்சித்வமே முக்கியம், சர்வசாட்சிதவத்திற்கு சாட்சாத்காரமே முக்கியம், சாட்சாத்காரத்திற்குச் சாஸ்திரவிசாரணையே முக்கியம், சாஸ்திரவிசாரணைக்கு சாட்சித்வமே முக்கியம், சாட்சித்துவத்துக்கு தத்காரமே முக்கியம், ததாகரத்துக்கு ஜகத்விலட்சணமே முக்கியம், ஜகத்விலட்சணத்துக்கு சர்வ சங்கபரித்யாகமே முக்கியம், சர்வ சங்க பரித்தியாகத்துக்குச் சதா நிஷ்டையே முக்கியம், சதா நிஷ்டைக்குத் தபசே முக்கியம், தபசுக்கு * சங்கிரமமே முக்கியம் ஆதலால் காட்டையடைந்தேன் அல்லாமல் தியானத்துக்கு தபசே முக்கியம், தானத்துக்குச் சமுசாரமே முக்கியம் ஆதலால் தியானத்துக் குறுதியான தவஞ்செய்துக்கொண்டிருந்தேனென்றறைய அவ்வாக்கியங்களைக் கேட்ட அரையன் திக்கென்றெழுந்து அவர் சேவடியில் விழுந்து ஓ மாதவனே! அஞ்ஞான விருளை நீக்கும் ஆதவனே! நரர்செய்யுங் குற்றம் நரபாலனுக்கென்கிற ஷ்மிருதியின்படி அடாத அகமமதை கெடாத அகிலாசாரததை விடாத அந்தர்முகத்துக் குட்படாத அந்தணரெனக் கறிக்கைசெய்யாமல் உம்மை அவமானஞ்செய்தடவியிற் போகும்படியாய்ச்செய்த வபசாரத்தை உபசாரமாகக்கொண்டு ஆசீர்வசனங்கள் விண்டு இப்போதே என்னை யடிமையாக்கிக் கொள்ளுமையாவென்று மிகவும்வேண்டும்போது விடோபா இராஜனுக் கன்பான மொழிகள் பகர்ந்து நீர் பரிசுத்த மனதுடையவராதலால் சகல சாம்பிராச்சியத்துடன் சுபமுற்றிருப்பீர்களென்று ஆசீர்வாதஞ்செய்ய இராஜன் சந்தோஷித்துத் தன்மந்திரியிடம் நிருபமெழுதிக்கொடுத்து நீ இவ்வுத்தமர்களுடன் பைடனபுரிக்குபோய் அங்கிருக்கும் ஆசாரியரைக் கண்டு இவர்களாட்சேப மற்றவர்களென்கிற நிருபம் வாங்கிக்கொண்டு வாருமென்றனுப்ப க்ஞானேசுவரர் நிவிர்த்துசாது முதலானவர்களுடன் பைடனபுரிக்குப் பிரயாணப்பட்டுப் போய் கோதாவரியில் ஷ்நானஞ் செய்யப்போன ஆசாரியரைக் கண்டு வந்தனஞ்செய்து அரசன் வரைந்தனுப்பிய கடிதத்தைக் கொடுப்பித்தார்.

அம்முடங்களைப்பார்த்த ஆரியன் அதற்குமுன்பே அலங்காவதியிலிருந்து அந்தணர் வரைந்தனுப்பிய கடிதங்களைப்

* சங்கிரமம் - காடு.

பார்த்திருப்பவ னுதலால் அங்கு ஸ்நானஞ்செய்ய வந்த பல மறையோரையும் விளித்துக் கேட்டீர்களோ அந்தணரே! சன்யாசியாய்ப் பலர்வீட்டிலுமுண்டு பிரஷ்டனாய்ப் போனவனையும் அவனுக்குப்பிறந்து மறையோரை அடித்த துஷ்டச் சிறுவரையும் நாமனைவோரும் மரியாதைசெய்து பந்தியில் வைத்துக்கொண் டன்னமுண்டு இவர்கள் மறுமாசில்லா அந்தணரென்று வரைந்து கொடுக்கவேண்டுமாம் இந்த விந்தையையார்ராவது பார்த்ததுண்டா கேட்டதுண்டா உலகிலிப்படியும் நடக்குமாவென்கிற பலபலவார்த்தைகளாட விப்பிரர் மதகரியின் தோலையும் கறுத்த நாயின் தோலையும் வெள்ளையாக்குவதுபோலல்லவோ இச்சங்கதி யிருக்கின்றது சன்னியாசியானவன் சூத்திரன்பந்தியிலு முட்காருதற்குக்கூடாது அப்படியிருக்க இப்படி நம்மாற் செய்யக்கூடுமோ விபசாரியைப் பதிவிரதை யாக்குவதுபோலல்லவோ இருக்கின்றது. சூத்திரனேடுண்ண அபாத்திரனனவன் அந்தணரோடுண்ணப் பாத்திரனெப் படியாவான் என்கிற பலவார்த்தைகளாடிச் சீட்டை கிழித்தெறிந்து மந்திரியைநோக்கி இப்பிறப்பிலிவர்கள் விப்பிரரோ டுண்ணுவதருமை மறுபிறப்புக்குதவுமென் றவ்வரசனுக் குறைப்பாயென் றறைந்தார்கள். அவ்வசனத்தைக்கேட்ட மந்திரி உலகியல்பை ஒருவரால் நிக்கிரகிப்ப தருமையென்றுன்னி அலங்காவதிக்குப் பிரயாணப்பட்டுப் போய்விட்டான். பின்பு க்ஞானேசுவரர் வேதபாராயணருக்குத் தன் தந்தையின் வரலாற்றைப் புகன்று பரமார்த்தத்தைக் குறித்துச் சன்னியாசம் பெற்றுக்கொள்பவன் பிரஷ்டனெப்படியாவான் இப்படி மிகவுங் கற்றோர் சொல்லவே மாட்டார்களென்றுரைக்க அதுகேட்ட பூசுரர் அடா துஷ்டப்பயலே மிகவுங் கற்றோரை நீதானுபார்த்தாய் கண்டவர்வீட்டி லுண்டு பிரஷ்டனனை துஷ்டனுக்கு பிறந்தவர் சிரேஷ்ட மொருகாலத்துமடைவதில்லை, ஞாயமாயுங்களைத் தொட்டுக்கொண்டாலும் பிரஷ்டமடைய நேரிடுமென்றறைய க்ஞானேசுவரர் அஞ்ஞானத்தினுற் செருக்குற்றுத் தபநிலையற்றுச் சூத்திரர்பால் யாசிக்கும் உங்களைப் பார்த்தமாத்திரத்தில் தோஷம் வந்து நேரிடும் இதற்குச் சந்தேகமுண்டோவென, விடோபா அப்பா க்ஞானேசுவரா! நமக்கு வாதேன் வேண்டாமென்கிறவர்களைத் தீண்டலாகாதென்கிறபடி இச்சையில்லாதவருடன் லச்

சைசெய்வதழகல்ல இக்கணம் அலங்காவதிக்குப் போகலாம் வாருமப்பாவென மூப்புரிநூலோர் க்ஞானேஸ்வராவென்றழைத்ததைக்கேட்டுக் கெக்கலிகொட்டி நகைத்து ஓவிடோபா! இச்சிறுவனை யென்னபேர் சொல்லியழைத்தாயென, விடோபா க்ஞானேசுவராவென் றழைத்தேனெனப் பூசுரர் மற்ற மூன்று குழந்தைகளின் பெயரென்னவென மூத்தவன்பேர் நிவிர்த்திசாது, இளையவன்பேர் சோபான்தேவ், இப்பெண்ணின்பேர் முக்தாபாயென, ஆதிவருணர் மந்தகாசம்புரிந்து, ஆச்சரியம் துடைப்பக்கட்டைக்குப் பட்டுக்குச்சங் கட்டினது போலவும், பறைக்கொட்டிப் பிழைப்பவனுக்குத் துரையெனப்பேரிட்டதுபோலவும், உண்ட வீட்டுக்கு இரண்டகஞ்செய்தவனுக்குத் தொண்டனென்று உரைப்பதுபோலவும், பிற்பாடு நிதிமேல் ஆசையாய்ப் பதிதோறுந் திரிபவனுக்குப் பதியென்பது போலவும், பதியை யிழந்த மதியில்லா மங்கையைச் சதியென்பது போலவும், குருசுவாமியை நிந்திப்பவனைக் குருபக்தனெனன்பதுபோலவும், குண்டினிவேலை செய்தவனைப் பண்டிதனென்பது போலவும், பிரஷ்டனாகிய உனக்குப்பிறந்த இத்துஷ்டப் பிள்ளைகளுக்கு நிவிர்த்தி சாது, க்ஞானேசுவரன், சோபான்தேவ், முக்தாபாயென்கிற பேரிட்டிருக்கின்றது.

எந்த விந்தையிலு மிந்தவிந்தையே கேட்பதற் காச்சரியமாயிருக்கின்றதென் றறைந்துப் பற்பல பரியாச வார்த்தைகளாடி ஸ்நானஞ்செய்ய நாடிப்போரும்போது க்ஞானேசுவரர் ஓ பிராமணோத்தமர்களே! மலையைப்பார்த்துக் குலைக்கும் நாய்க்கு ஆயாசமேயன்றிப்பர்வதத்துக் காயாசமுண்டா நல்லோர்களைத் தூஷிக்கும் புல்லோர்களுக்குக் குற்றமுண்டா தெய்வத்தை நிந்திக்கும் தீயர்க்குக் கேடன்றித் தெய்வத்துக்குக் கேடுண்டா அதுபோலவே முப்பத்திரண்டு பெயர்களைக் காட்டிக் கெக்கலிகொட்டி நகைக்கும் உங்களுக்கவமானம் வருமேயன்றி எங்களுக் கொருபொழுதும் வராதென் றறைய வேதிய ரடா துஷ்டப்பயலே! நீங்கள் மலையும் நாங்கள் நாய்களென் றல்லவோ ஒப்பிட்டுரைத்தாய், ஓ அறிவுகெட்டவனே! உன் துஷ்டத்தனமடங்க வெட்டிவிடுகிறோம்பற்களைத் தட்டிவிடுகிறோம் பாரென்றுர்ப்பரித்தார்கள். அப்போது நிவிர்த்திசாது விப்பிரரை வணங்கி, ஓ பூசுரரே! எங்களுடையஸ்திதி தடங்கலி

ன்றித் தங்களுக் குரைத்தோம் உங்களுக்குகந்தபடி எங்களுக் கேதாவ தெழுதிக்கொடுத்தாலும் சரி இல்லையென்றுரைத்தா லும்சரி அப்படிசெய்யாமல் இப்படி திட்டத்தகுமா திட்டுவ தன்றி நிந்தைசெய்யலாமா? இப்படி செய்வதால் தொந்தர வல்லவாவென, ஆதிவருணர் இனி சந்தடிசெய்யாமல் வந்த வழிபோனால் தொந்தரவேன் வாருமென நிவிர்த்திசாது உங் களை நாடிவந்த எங்களுக்கு ஒருமையோடொருவ நிரூபமெழு திக்கொடுக்க லாகாதோவென வேள்வியாளர் பறையன் மறை யோனாகாததுபோலவே நீங்களும் பிராமணராக மாட்டீர்கள் ஆதலால் இக்காரியத்தைக் குறித் தினி பேசாமலிருப்பதே உங்களுக்குரிய யோக்கியமென்றறைய, நிவிர்த்திசாது ஓ பூசு ரரே ! வேதத்தை விரித்துரைத்த வியாசரும், அவர் தந்தை யின் பாட்டனாகிய வசிஷ்டரும், பரத்துவாசன் ஆசிரியரா கிய வால்மீகரும், குகமகாரிஷியும், விசுவாமித்திரரும், குலத் திற்றாழ்ந்தவராயிருந்தும் தபத்தாலல்லவோ மேன்மையடை ந்து அந்தணர்க்காதி குருக்களானார்கள். அப்படியிருக்கத் தபத்தைச்சார்ந்த எங்களுடைய தாதை எப்படி பிரஷ்டரா னார் சொல்லுங்களென்று அயன்முகத் துதித்தோர் விவேக மில்லா வுனக்கு வெகு நேரமாயுரைத்தும் கேட்காமல் கிழக் கதைகள் சொல்லத் தொடங்கினாய் சாபானுக்கிரக சாமர்த்திய முள்ள அவர்களுக்கிணை உன் தந்தை ஒருகாலத்து மாகமா ட்டான். மகாரிஷிகளைத் துதித்ததுபோல் பழித்தாய் மோச லமாமுனி ஓர் நீச்சஸ்திரீயைச்சேர்ந்து அவளுக்குப் பிறந்த ஏழுகுழந்தைகளையும் அழைத்துக்கொண்டு சொர்க்கத்துக்குப் போய் இவர்களுக்கு உபநயனஞ்செய்து ஆட்கொள்ளுங்க ளென்று ரிஷிகளைவேண்ட, அவர்கள் கூடாதென மறுத்து விட்டார்களென்று பெரியோர்களுரைப்பது மெய்யல்லவா அப்படியே பிரஷ்டனுக்குப் பிறந்த நீங்களும் மாரணபரியந் தம் பிரஷ்டராகவேயிருப்பீர்கள் பன்னிப்பன்னிப் பேசுவதா லோர் பயனுமில்லையென, நிவர்த்திசாது நாங்கள் நீச்சருக் குப் பிறந்தவர்களோவென, அந்தணர் சன்னியாசியாய்க்கண் டோர் வீட்டிலுண்டவன் நீச்சனிலு மிழிவான மிலேச்சனே யாமென, நிவர்த்திசாது நீங்கள் ஆகாத்தியத்தா லிப்படிப் பேசுகின்றீர்களேயன்றி அருமறையாராய்ந்துணர்ந்தோ ரிப் படிச் சொல்லவேமாட்டார்களென, அந்தணர் ஆதிமறை

யை ஓதினோர்கள் தடையின்றிச் சன்னியாசியைப் பிரஷ்ட னென்றே யுரைப்பார்களென, நிவர்த்திசாது வேதத்தில் பர மார்த்த நிமித்தம் பாமாம்சமானவன் பிரஷ்டனென் றுரைக் கின்றதாவென மறையோர் அப்படியே யுரைக்கின்றதென க்ஞானேசுவரர் ஜலத்தைச் சுமந்துக்கொண்டு போகும் எரு மைக்கடாவைச் சுட்டிக்காட்டி இம்மேதிக்கடாவுக் கிணையான நீங்கள் ஆதிநூலை ஓதியிருந்தாலல்லவோ நீதிகள் தெரியும் வேதமே ஓதாத நீங்கள் இம்மேதிக்கடாவோடும் வாதுசெ ய்ய மாட்டீர்கள். அப்படியிருக்க இவருடன் வாதுசெய்யத் தகுந்தவர்களோ உங்களைத் துதிப்பதிலும் இந்த எருமைக் கடாவோடு பேசுவதாற் பிரயோசன முண்டெனை, மறையோர் முக்கால் மூட்டை முழுமூடன் கொண்டாடுவதுபோல் எரு மைக் கடாவிலும் இழிவான நீ இவ்வெருமைக் கடாவுடனே பேசத் தகுதியானவனென, ஞானேசுவரர் இந்த எருமைக்க டாவுக்கிருக்கும் அறிவில் ஆயிரம் பங்கில் ஓர் பங்குங்களுக் கிருந்தால் உங்களை அகத்தியங்கொண்டாட வேண்டியதே யென, இருபிறப்பாளா அடா துஷ்டா! அந்த எருமைக்கடா வுக் கென்னவறிவுண்டு. இக்கணம் அதைப் புலப்படுத் தாமற் போனல் உன்னை இரண்டு துண்டங்களாக வெட்டு கின்றோம்பாரென்று அவ்வம்பலைக் கொண்டுவந்து அவர் முன்நிறுத்திப் பல வார்த்தைகள் கூசாமல் பேச, க்ஞானேசு வரர் இந்தப் பகடுவின் பண்பை உங்களுக்கறிவிக்கின்றேன் பாருங்களென் றப்போத்துவின் மஸ்தகத்தின்மேல் தன் அஸ்தத்தை வைத்து ஓ ஒருத்தலே தபசால் பிராமணு ஜாதியால் பிராமணு பிரம க்ஞானத்தால் பிராமணுகை வேண்டுமா? கர்மகாரியங்களால் பிராமணுக வேண்டுமா? உண்மையை உன்வாய்திறந் துரைப்பாயாக வென்று திரு வாய் மலர்ந்தருளின மாத்திரத்தில் அந்த ஏறுருக்கு யஜுர் சாமம் அதர்வண மென்னும் நான்மறையிலுள்ள அனேக வாக்கியங்களுரைத்து முடிவில் இச்சுலோகஞ் சொன்னது ஜன்மணுஜர்யதே சூத்ர கர்மணு ஜாயதேத்வஜ வேதமூக்கி யந்து விப்ராணுப் பிர்மக் ஞானந்து பிராமணு (1) தாசிகர்ப்ப சம்பூதம் நாரதஸ்ய மஹாமூனி தபஸப் பிராமணே புத்வா தன்யாஜாதம் நகாரயேத் (2) பூர்வ சிகர்ப்பசம் பூதம் வசிஷ் டஸ்ய மஹாமுனி தபஸப் பிராமணேத் புத்வா தஸ்யாஜா

தம் நகாரயேத் (3) சுணகேர்ப்பசம்பூதம் சவுனகஸ்யாமஹா மூனி தபசப் பிராமணேத் புத்வா தஸ்யா ஜாதம் நகாரயேத் என்கிற பிராமணனுதற்கு முக்கியமான இவ்வாக்கியங்களைப் புகன்று க்ஞானேசுவரருக்கு வந்தனஞ்செய்ய அந்தண ராச்சரியப்பட்டுத் தங்களுக்கிருந்த மாச்சரியங் கெட்டு அப்பா இவன் மகாமந்திரவாதி இனி நாமிங்கிருந்தா லபாயம் நேரிடுமென் றொருவர்போனவழி ஒருவர் போகாமல் பல பக்கங்களில் தெரிந்தோடிப் பதுங்கலுற்றார்கள்.

அப்போது செந்திவளர்ப்போருக்குத் தேசிகரான ஆசிரியர் பயந்து நயந்து க்ஞானேசுவரர் திருவடிகளிற் பணிந்து நிவர்த்திசாது முதலானவர்களையும் வணங்கி விடோபாவுடனிணங்கி எருமைக்கடா வுரைத்த வாக்கியம் சத்தியம இவ்வாக்கியம் வேதத்திலில்லை யென்றுரைப்போர் இருணரகடைவார் அடியேன் உங்களுடைய மகிமையை யறியாமல் அபசாரப்பட்டேன் இந்த அபசாரத்தை உபசாரமாகக் கொண்டு என்னை யிக்கணமே ஆட்கொள்ள வாருங்களென்று தன் மனைக் கழைத்துக்கொண்டுபோ யுபசரணைசெய்து தனக்குற்ற சிலருடன் அவர்களைப் பந்தியில் வைத்துக்கொண் டன்ன மூண்டு வேதாந்த வார்த்தைக ளாடிக்கொண் டின்புற்றிருந்தார்கள். இதுதெரிந்த அவ்வூரிலுள்ள வேதபாராயணரனைவரும் ஓரிடத்திற்சேர்ந்து நமதாசாரியன் பிரஷ்டர்களைச் சேர்த்துக்கொண்டு பந்தியில் வைத்துக்கொண்டு உண்டு ஆசாரங் கெட்டான் அனுசாரத்துக்கு உட்பட்டான் ஆதலால் அவன் வீட்டில் நடக்கும் சுபாசுபகாரியங்களுக்கு நாம் யாரும் போகக்கூடாதென்று தீர்மானஞ் செய்துக்கொண் டன்றுடன் ஆசாரியரைப் பார்த்தாலும் பேசாமல் தூஷித்துக் கொண்டிருந்தார்கள். இப்படி யிருக்கிறநாளில் ஆசாரியர் தன் தந்தையின் திவசம் வந்தநாள் பிதுர் தேவதைகளுக்கு நைவேத்தியஞ் செய்யவெண்ணிச் செய்யவேண்டிய கிரிகைகளெல்லாஞ் செய்து முடித்து அந்தணர்க் கன்ன மூண்பிக்க வேண்டித் தனக்கு மிகவுமன்பாயிருக்கும் சில மறையோரை அன்னமுண்ணுதற்கு வரும்படியாய்க் கேட்டுக்கொண்டார். அதற்கு அயன் முகத்துதித்தோர் ஓ அனுசாரியனே! பிரஷ்டர்களான துஷ்டர்கள் யாதோ ஓர் வித்தையால் எருமைக் கடாவினால் சில சுலோகங்களை ஓதிவைக்கவே நீ ஆசாரத்தை

விட்டு அனுசாரத்துக் குட்பட்டதன்றி எங்களையுங் கெடுக்க நினைக்கின்றாய் இனியுன் வீட்டில் நடக்கும் சுபாசுப காரியங்களுக்கு நாங்கள் வரவே மாட்டோமென்று மறுக்க ஆசாரியர் வியாகுலத்தோடு வீட்டையடைந்து இதற்கென்ன செய்யலாமென்றிடைந்து முகஞ்சுருங்கி மனங்குழம்பி மனோராச்சியத்திலிருக்க நிவர்த்திசாது ஆசாரியரை நோக்கி, ஓ உத்தமரே! யாதுகாரணத்தால் முகவாட்டமும் மனக்கோட்டமும் பொருந்தியிருக்கின்றீர்? என்னகுறை நேரிட்டதென ஆசாரியர் நடந்த விர்த்தாந்தத்தைப் புகன்று உலகக் கட்டுப்பாட்டை ஒருவராலுங் கடத்தற் கரிதாயிருக்கின்றதேயென, நிவர்த்திசாது சத்குணமுள்ளவனே ஜாதிமான் சத்குணமில்லாதவன் சண்டாளனென்று வேதஞ் சாற்றுவதால் சத்குணமில்லா துர்க்குணரை அழைத்தல் குற்றத்துக் கிடமுண்டாகுமென ஆசாரியர் உலக வியாபாரத்திலிருக்கிற பரியந்தம் உலகத்தோடொத்து வாழவேண்டும் இன்றேல் சன்னியாசியாய்ப் போகவேண்டும். இவ்விரண்டும் இல்லாத நாடோட நாமும் வோடவேண்டுமென்கிற பழமொழியை இன்று பரீட்சித்தேனென நிவர்த்திசாது பிர்மக்ஞானத்து பிராமணனென்றும் தபசே பிராமணத்வமென்றும் எருமைக்கடாவினால் சொல்லிவைத்தும் தெளியாத அந்தணர்க் கினி யெவ்விதத்தி லறிவுணர்த்தலாம் பன்றியோடு கூடிய கன்றுங் கெட்டதுபோல் துஷ்டர்களாகிய எங்களோடுகூடி நீர் பிரஷ்டத்வமடைந்திரே, இதற்கு நானென்ன செய்வேனென்று வாட்டமுகத்தைக்காட்ட ஆசாரியர் பரமார்த்தத்தை நாடிய நமக்கு அந்தணரோடக்கரை யில்லையானாலும் பிதுர்தேவதைகட்குப் படைத்த அன்னத்தைப் பிராமணரன்றி மற்றவர்க ளுண்ணத்தகாது. உண்டாலோ பிதுர்கர்மஞ் செய்தவனும் அவன் குடும்பமும் நரகத்தை யடைவார்களென்று கர்மகாண்டத்தில் முறையிடுகின்ற ததனாலேயே வாட்டமடைய நேரிட்டதென அது தெரிந்த க்ஞானேசுவரர் நீ பிதுர்தேவதைகட்குப் படைத்த அன்னம் அப்பிதுர் தேவதைகளே புசிக்கவேண்டுமென்றிப் பிராமணர் உண்ணவே கூடாதென ஆசாரியர் பிதுர்தேவதைகளையழைப்பித் துண்பிக்கும்படியான வல்லமை யாருக்கிருக்கின்றதென, க்ஞானேசுவரர் உமக்குற்ற மனக்கோட்டம் நீங்க இக்கணமே அந்த பிதுர்தேவதைகளை அழைப்பிக்கிறேன் பாரு

மென்றறைந்து ஓ பிதுர்தேவதைகளே! இந்தப் பிராமணோ த்தமர் களிப்புற இக்கணமே வந்து உங்களரிய தரிசனந் தந்து இவ்வனத்தை யண்டு ஆசாரியரையாட்கொண்டு அந் தணர்க் கறிவுணர்த்திப் போங்களென் றுரைத்த மாத்திரத் தில் அவ்வூரிலுள்ள மாந்தர் யாவரும் பார்த்தாச்சரியப்பட ககனமார்க்கத்தி லிருந்து விமானங்களி லூர்ந்துகொண்டு அனேக பிதுர்தேவதைகள் ஆசாரியர் வீட்டிலிறங்கிப் பத்தி ரங்களில் வீற்றிருந் தன்னமுண்ணும்போது அவ்வற்புதத் தைப் பார்த்த அந்தணர் முதலானவரும் ஆச்சரியப்பட்டுத் தங்களுக்கிருந்த மாச்சரியங்கெட்டு ஆச்சாரியர் வீட்டினுட் சென்று ஈததிசயமெனப் புகன்று அன்னமுண்ணும் பிதுர் தேவதைகளை வணங்கி ஆசாரியரை யுணங்கி க்ஞானேசுவர ரைத் தாழ்ந்து நிவர்த்திசாது முதலானவர்களின் திருவடிக ளில் வீழ்ந்து நீங்களே பிரத்தியட்ச தெய்வங்களென்று பற் பல விதங்களாகத் தோத்திரஞ்செய்ய, ஆசாரியர் உடல்பொ ங்கி உல்லாசத்திறங்கித் துன்பங்குறைந்து இன்பம் நிறை ந்து க்ஞானேஷ்வரர் திருவடிகளிற் பணிந்து தன் திருநய னங்களை யணிந்து நீரே ஜகதீசுவரன் நீரே பரமேசுவரனெ ன்று தோத்திரம்புரிய, க்ஞானேசுவரர் அந்தணரை நோக்கி ஓ விப்பிரரே! பிரஷ்டனையும் பிரஷ்டனுக்குப் பிறந்த துஷ்ட ரையும் வணங்கலாகா? வணங்கி யிணங்கலாமா இப்படிச் செ ய்வதால் உங்களாசாரத்துக்குக் குறைவாகுமே மேன்மை நீங் கிப் போகுமேயென மறையோர் ஓ மாதவனே! யாங்கள் தொ ழும் யாதவனே! அறியாமையாற் செய்த எங்க ளபசாரத்தை உபசாரமாகக்கொண்டு இக்கணமே அடியேங்களை ஆட்கொள் ளுமையாவென்று அவர் தாள்களில் வீழ்ந்து தோத்திரஞ் செய்ய க்ஞானேசுவரர் ஓ வேதியரே! அகப்பட்டால் முடி இ ல்லாவிட்டா லடியென்கிற பழமொழிக் குகந்த உங்கள் முகத் தைப் பார்க்கவே கூடாது பிதுர்தேவதைக ளன்னமுண்ணு மிவ்விடத்தி லுங்களுக் கென்ன காரியம் போங்களென ஆதி வருணர் (சிரியோர்செய்த சிறுபிழையெல்லாம் பெரியோரா யிற் பொறுப்பது கடனே) யென்கிற பழமொழிப்படி சிறி யோங்கள் செய்த பிழையைப் பொறுத்து எங்களுக்குள்ள பாசங்களையறுத்து அடிமையாக்கிக்கொள்ளும் சுவாமி யென் று துதிக்கத் தயாநிதியான க்ஞானேசுவரர் ஓர் சார்பில் வீற்றி

ருங்களென் றறைந்து பிதுர்தேவதைகள் நசித்தபின் அவர்களுக்கு விடைகொடுத் தனுப்பி வேறு பத்திரங்கள் போடச் செய்து அந்தணர்களை விளித் துட்காரவைத்துத் தாங்களும் வீற்றிருந்து அன்னமுண்டு ஆசாரியரைச் சந்தோஷமுறச் செய்தார்.

இப்பால் அவ்வூரிலுள்ள அந்தணரும் அரசனும் மற்ற மூன்று வர்ணத்தோரும் க்ஞானேசுவரர் முதலானோரைத் தெய்வங்களாகப் பாவித்து அன்போடு சிலநாள்வைத்திருந்து க்ஞானேசுவர ருத்திரவின்படி அலங்காவதிக்குப் பிரயாணப்பட்டு பல நாடுகளைக் கடந்து அலங்காவதியை யடைந்து அலங்காவதியைப் புறக்கும் அரசனையும் சிதோபந்தையும் புகழ்ந்து அவ்வூரிலுள்ள விப்பிரரோடுகூடி சகலரும்வுண்டு ஆனந்தங் கொண்டு க்ஞானேசுவரர் முதலானவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு பைடணபுரியைச் சேர்ந்து களிகூர்ந்திருந்தார்கள். அலங்காவதியினரசன் க்ஞானேசுவரர் முதலானோர் பாலியரா யிருந்தாலும் பரமதேவதைகளென துணிந்து அந்திசந்தி அவர்கள் தரிசன பரிசனத்தால் காலங்கழிக்கலானான். சிதோபந்து விடோபா ருக்மாபாயி முதலானோரும் க்ஞானேசுவரர் முதலானோர் தம் திருவிளையாடல்களைக் கண்டு ஆனந்தவாரியிற் படிந்திருந்தார்கள். ஞானேசுவரர் முதலானோர் அனேகருக்குப் பிர்மக் ஞானமும்சகுணத்தியானமும் போதித்துக்கொண்டு ஆனந்தமா யிருந்தார்கள். கேட்டீர்களோ சித்தர்களேயென்று நாபாஜிசித்தர் பின்னுஞ்சொல்லத் தொடங்கினர்.

ஞானேசுவரர் எருமைக்கடாவினல் வேதத்தை
விரித்துரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஞானேசுவரர் சரித்திரம் முற்றிற்று.

தியேட்டர்
அமிர்தம் A/C
மதுரை

THEATRE
Amirtham A/C
MADURAI

I Class
RESERVATION
TOKEN

№ 0003

Date 22 NOV 199
Show 10 PM.

மாற்றத்தக்கதல்ல, மறுகாட்சிக்கு செல்லாது. நுழைவு வாயிலில் கிழிக்கப்படும், கட்டணம் வாபஸ் கிடையாது.

தியேட்டர்
அமிர்தம் A/C
மதுரை

THEATRE
Amirtham A/C
MADURAI

I Class
RESERVATION
TOKEN

№ 0010

Date 22 NOV 199
Show 10 PM.

மாற்றத்தக்கதல்ல, மறுகாட்சிக்கு செல்லாது. நுழைவு வாயிலில் கிழிக்கப்படும், கட்டணம் வாபஸ் கிடையாது.

ஸ்ரீ
புண்டரீகாய நம:

ஆறாவது

குசேலமாமுனிவர் சரித்திரம்.

ஸ்ரீ கண்ணபிரான் துதி.

பஃறொடை வெண்பா.

பூமேவுநான்முகத்தோன் போற்றித்துதிப்பதுவும்
தேமேவுபைந்துளவஞ் சேரக்கமழ்வதுவும்
மாமேவுமாமறைகள் வாழ்த்தப்பொலிவதுவும்
தேமேவும்வஞ்சச் சகடமுதைத்ததுவும்
தீமேவுமாகாணியஞ் சென்றுரிந்ததுவும்
தூமேவுமன்பருளந் தோன்றப்பயில்வதுவும்
மாமோகமென்றும் விளைத்தடியரைக்காத்தத்
தாமேகவண்ணனிரு பதாம்புயத்தின் றன்புகழே.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

முற்றாவிளமென் றளிர்க்கரத்தான் முனிவிலாதுமெல்லெனச்செம்
பொற்றாமரையிற்குடியிருக்கும் பூவைவருடுந்தொறுஞ்சேக்கும்
விற்றாரணிநற்பதமிரண்டும் வியன்மால்நடந்தீண்டிடநடந்து
கற்றாமேய்த்தசிற்றாயன் காமர்கீர்த்திவாழியவே.

ஸ்ரீ சுகப்பிர்ம்மரிஷி வாக்கியம்.

வாரீர் அகத்தாகியும், புறத்தாகியும், அனைத்தினும் வியாபகமாகியும், அணுவுக்கணுவாகியும், மகத்துக்கு மகத்தாகியும், பரமாகியும், அபரமாகியும் வளர்தலும் தேய்தலுமில்லாததாகியும், ஜகமாகியும், ஜகத்துக் காதாரமாகியும், சகலகுணங்களாகியும், நிர்க்குணமாகியும், பாகுபோற்செய்து வேதங்கள் சொல்லும் பொருள்களின் விரிவுக்கும் எட்டப்படாததாகியும், உருவாகியும், அருவாகியும், உயிர்க் குயிராகியும், உணர்வுக் குணர்வாகியும், ஒளிக்கு ஒளியாகியும், துரியமாகியும், துரியாதீதமாகியும், தோன்றும் பொருளாகியும், நிர்மலனாகியும், மனத்தாலும் வாக்காலும் நினைக்கவும் உரைக்கவும் அரிதானவனுமாகியும், அனுபவனாகியும், அகண்டபரிபூர

ணனுகியும், காலசக்கரத்தையும் குணங்களையுங் கடந்த நிருவிகற்பனுகியும், சருவக்கியனுகியும், அலகிலாவிளையாடல்களில் இச்சையுடையவனுகியும், அடி நடு முடியற்றவனுகியும், முத்தியளிக்கு முதல்வனுகியும், பரதத்துவப்பொருளாகியும், பிராகிருத பற்றற்றவனுகியும், பிரபுவாகியும், புவனங்களுக்கெல்லாம் காரணனுகியும், அகாரணனுகியும், அப்பாலைக் கப்பாலாய்நின்ற அகளங்கனுகியும், சுயேச்சையாலன்றி பிறப்பு யிறப்பற்றவனுகியும், ஞானனந்த மயனுகியும், மருவியிராநின்ற ஸ்ரீபரவாசுதேவனது உயிர்த்தோழனும், பார்த்தன் பவித்திரனும், உத்தரகுமாரன் மருமானும், பரமபாகவத சிரோன்மணியாகிய பரிட்சித்து மகாராஜனே! ஸ்ரீகுசேலமுனிவர் ஸ்ரீ பகவானேடு நட்பினராயிருந்து அவரால் இம்மையில் இன்பமும் மறுமையில் பேரின்பமுமுற்ற திவ்ய சரித்திரத்தை உரைக்கின்றேன் அதனை உள்ளத்தில் பதியும்படி செவி குளிரக் கேட்டுப் பேரானந்தம் பெறுவீராகவென்று சுகமுனிவர் பின்னும் சொல்வாராயினர்.

நெடிய கடல் புடைசூழ்ந்த பூமண்டலத்தில் பரதகண்டத்தில் பூமாதேவியின் முகக் கமலம்போலவும், அம்முகத்தில் எழுதிய திலகம்போலவும், கண்கள்போலவும், திருமகள் மார்பில் தரிக்கும் மாங்கல்ய சூஸ்திரம்போலவும், அப்பராசத்தியின் ஸ்தனபாரங்களில் புனைந்த முத்துமாலை போலவும் அத்திரு வீற்றிருக்கும் ஆசனமாகிய செந்தாமரை மலர்போலவும், மாயவன் மணிமார்பில் தரித்திருக்கும் கௌஸ்துவாபரணம்போலவும், அவ்வணிகள்வைக்கும் பெட்டிபோலவும், ஊழிகாலத்தில் சகல சராசரங்களும், ஒடுங்கியுள்ள அப்பரந்தாமன் திருவவதாரம்போலவும், அப்பரமமூர்த்தி நித்தமுத்தர்களோடு வாழும் அப்பிராகிருத வுலகமாகிய பரமபதம் போலவும், உத்தர மதுரையென்று ஒரு திருநகரம் விளங்குகின்றது. அதன் பாங்கோ மங்கைப்பருவமுடைய மாதர்கள் தங்கள் நாயகர்களோடு பிணங்கிக் கழற்றி வீசிய இரத்தினபரணங்கள் வீதிகள்தோறும் ஒளிவீசுகின்றதனல் இது சுவர்க்க லோகந்தானே என்று அமரர்களும் ஐயங்கொள்ளும் அற்புதமான அவந்தியென்னும் தேசம் ஒன்றுள்ளது அதன் வளப்பம் செந்தமிழ்ப் புலவராலும் ஆதிசேடனுலும் புகழ்ந்துரைக்க முடியாது அப்படிப்பட்ட சிறப்புடைய செழிப்பைக்

கூறுதற்கு என்னால் முடியாதாயினும் எனது உள்ளத்தில் உதிக்கும் சந்தோஷம் தூண்டுதலினால் சிறிது உணர்த்துகின்றேன். அத்தேசத்தில் மருத நிலத்தின் வயல்களானவை சூல்முதிர்ந்த பச்சை பாம்புபோல் கருப்பமடைந்து மேன்மைக் குணமற்ற செல்வப் பொருளுள்ள கீழோர்கள் இறுமாந்து தலை நிமிர்வதுபோல் நிமிர்ந்து கல்வி ஞானமற்ற மேலோர்கள் அடக்கமுடையோர்களாய்த் தலைகுனிந்து வணங்குவதுபோலக் கதிர்க்குலைகளைவிட்டுத் தாழ்ந்து காய்க்கும் அவைகள் காய்க்கும்படியாகத் தாமரைமலர்களிலிருந்து ஒழுகுந் தேனும் கொடிப்பூ வொட்டுப்பூ மற்றை நீர்ப்பூ முதலியவற்றினின்றும் சிந்துகின்ற தேனும் பெருக்கெடுத்து வயல் நதிகளிலும் கடலிலும் போய்விழும் வாளைமீன்கள் புரள்வதனால் கயற்கெண்டைகள் துள்ளிவிழ அதனால் வரால்கள் எருமைகளின் மூளை முதுகுகிழியப் பாய்ந்து மேலெழும்பிக் கமுகம்பாளை மொட்டுகளைக் கிழிய விரிக்கின்ற தடாகங்களுஞ் சூழ்ந்துள்ளது சூரியனுடைய உருளைத்தேரிற்கட்டிய பச்சைப்புரவிகள் ஏழும் இளைப்பாறுதற்குத் தக்க பூஞ்சோலைகளும் அந்நாட்டு மங்கையர்கள் செல்வம் மிகுதியும் உடையவராயிருத்தலுமன்றிக் கல்வியிலும் சார்புடையவராயிருத்தலினால் அதிதியர்கட்கும் இரவலர்க்கும் அகமகிழ்ந்து, கதலிக்கனி, மாங்கனி, பலாக் கனிவர்க்கங்களோடு அறுசுவை பதார்த்தவுணவுகளை உண்பிக்கின்ற உற்சாகச்செய்கையும் குயில்போலும் மொழியும், அயில்போலும் விழியும், மயில்போலுஞ் சாயலும், பஞ்சின்மெல்லடியும் பவளவிதழும் முகமதியும் முத்துநகையும் பங்கயக் கொங்கையும் சங்கை நிகர்த்த கழுத்தும் ஆலிலைவயிறும் நூல்போல் மருங்குலும் அரவகலல்குலுமுடைய மாதர்களின் அளகபாரத்தைக் கண்ட கோகிலங்களெல்லாம் மேகங்களென்று வாய்திறந்து மௌனிகளைப்போல் பேசாதிருந்தன. மயில்கள், கருப்பஞ்சாற்றைக் காய்ச்சுகின்றதனால் வானத்திற் பரவுகின்ற புகையைக் கண்ணுற்றுக் கொண்டலென்று கூத்தாடும் நம்முடைய நாடு நகரங்களின் வளப்பத்தை நிகர்த்து விண்ணுலகத்திலும் ஒருநாடு உள்ளதோவென்று எட்டிப் பார்ப்பதுபோன்ற இஞ்சி சூழ்மதிலும் மாதர்கள் தாளகதிதவறுது இசைக்கொத்து நிர்த்தனஞ்செய்கின்ற நாடகசாலைகளும், அவ்வகை மாதர்களின் கண்வலையி

லகப்படாத முனிவர்கள் மடங்களும், கல்விச்சாலைகளும், தருமச்சாலைகளும், பொற்குவியல்களுள்ள அறைகளும், மணிக்குப்பைகளுடைய மண்டபங்களும், அந்தணர் அரசர் வைசியர் சூத்திரர்வாழும் வீதிகளும், விண்ணுலகத்துள்ள பண்ணவர்களாகிய இமையவர்களும், இமையாது பார்க்கின்ற கடைவீதிகளும், அங்கு மாலைவிலை பகர்கின்ற மாலைமதி நுதலியர்களாகிய மடமங்கையர்கள் மணமில்லா மலர்களையும், வெறுஞ்சாந்தையும் விற்க, அவற்றைக் கொள்பவர்களாகிய வாலிபர்கள் அப்பாவைமார்களின் கண்ணிழல் பாய்வதினால் கஸ்தூரி கலந்ததென்றும், சுவாசம் படுவதினாலே நற்கந்தம் பொருந்தியுள்ளதென்றும், அருமையாக வாங்குவதும், அன்னியர்களது பொருளைத் தங்கள் அரும்பொருளாகப் பாவித்து ஒன்றைப் பத்து நூறு ஆயிரம் ஆகப்பெருக்கி வாணிபஞ்செய்யும் வளப்பமும், ஐசுவரியத்தால் அளகவேந்தனையும், கல்வியால் அனந்தனையும், அழகால் அனங்கனையும் வென்ற கீர்த்தியையுடைய மைந்தர்களும், கற்பில் அநுசூயையைப் பின்னிடச்செய்து கணவரது சொல்முறை கடவாத மாதர்களும் தங்கி இன்பமுறுவதும் இதழ்கள்விரிந்த மலர்களலர்ந்த நந்தவனங்களும், வாவிகூபங்களும், நான்குவேதங்கள் போன்ற நான்கு கோபுரங்களும், முகில்படியும் மதில்களும், சொற்ப சிகரங்கள் பல அமைத்துள்ள ஏழுநிலை மாடமாளிகைகளும், கூடங்களும், அவற்றிடையேயுள்ள திருவாலயங்களும் பலவுள்ளது. அந்நகருக்குச் சமீபத்தில் மந்தாரம், கச்சோலம், வாகை, வெட்பாலை, சந்தனம், வகுளம், சண்பகம், நாகம், வேங்கை, பலா, முருக்கு, கழிலைப்பாலை, மாதுளை, ஞாழல் தேக்குமுதலிய பலவிருட்சங்களுமுடைய வனமொன்றுண்டு. அதனடுவில் சுரவருமருளும் பெருங்குன்றம் ஒன்று உலகத்தை ஓரடியாய் அளந்தருளிய திருவிக்கிரமனைப்போல் நீண்டுயர்ந்து அம்மலைச்சாரலில் கனிகிழங்கு சருகுகளாகிய உணவுகளை உண்டுடை தோலாடை உடுத்தும் வேடர்களும் முனிவர்கள்போல் விளங்குவார்கள். மிருக ஜாதிகளில் மேன்மையடைந்த சிங்கம் யானை புலி கலை ஒட்டகம் ஆளி இவைகளின் வோசை நீங்காது யானைகளின் தந்தங்களினின்றும் சிந்துகின்ற முத்துக்களும் பரவி ஒளி வீசுகின்றமையால் அவ்விடத்தில் இருளென்பது அரிதாயிற்று. அந்தப் பெரிய மலை

யின் கொடிமுடியின் நடுவில் முனிவர்கள் வாசஞ்சேரி ஒன்றுள்ளது. அந்தச் சேரியில் வேதகோஷ்டமும், யாகங்களில் கூறும் மந்திரவோசையும், அமரர்களை யழைத்து அவிர்ப் பாகங்களை அளிக்கின்ற ஆரவாரமும், ஆசீர்வசன வோசையும் கூடிக் கடலொலிபோல முழங்கிக்கொண்டிருக்கும், தருப்பைக்கொய்பவரும், சமித்தை தேடுபவரும், மாவிலை பறிப்பவரும், பஞ்சகௌவியஞ் சேர்ப்பவரும், பவித்திரமுடி தரிப்பவரும், மலர்களைப் பறிப்பவரும், சாஸ்திர ஆராய்ச்சி செய்யும் மேலோர்க்கு உபசரிப்பவரும், சரியை கிரியை யோகம் ஞானம் இவற்றில் நிற்பவர்களும், ஒருபால் வேதமோதுபவர்களும், கற்பவர்களும், மற்றொருபால் மெய்ப்பொருள் பொய்ப் பொருள்கள் இரண்டையுந் தீரவிசாரித்து உணர்பவர்களும் உள்ளதாகிய அச்சேரியில் இயற்பெயர் வாய்ந்த குசேலரென்பவர் அங்குவாழும் முனிவர்களுடைய அருங்குலத்தில் திருப்பாற்கடலில் சோடச கலைகளும் நிறைந்த சந்திரன் உதித்தாற்போல் அவதரித்து அளிகள் ரீங்காரஞ் செய்கின்ற மகரந்தப் பொடியுள்ள செந்தாமரைமலரில் வீற்றிருக்கும் திருமகள் உறையும் திருமார்பனுகிய ஸ்ரீமந்நாராயணரது திருவடிக் கமலங்களை இடையறாது தனதுள்ளக் கமலத்தில் பதியவைத்து ஐம்பொறிகளையும் தீயவழிகளில் செல்லாமல் அடக்கும் மேலான நற்குணமுடையோனுகி மேலும் தன் னுயிர்போல பிறவுயிர்களையும் காப்பாற்றுதல் அறிவுடையோர்க்கு உறுதியாகிய செய்கையென்று சதுர்மறைகள் முறையிட்டு உரைப்பது சத்தியமென்று தனது பரிசுத்தமாகிய உள்ளத்தில் உணர்ந்தும் உயர்திணை அஃறிணை யென்னும் இருவகை ஜீவராசிகளும் மனமகிழும்படி அகற்றிற்கு உதவி செய்தலையே நினைத்தும், அடக்கமும் பெருமையும் கருணையும் சினேகமும் விரதங்களோடு தன்னிடத்து இமைப்பொழுதும் நீங்காது வளர்த்தும் கோபமும் கர்மமும் மயக்கமும் ஆகிய முக்குற்றங்களையே மேலு மேலும் விரும்பிச் செய்கின்ற கீழ்மக்களாகிய பாவிகளது கூட்டுறவை சொர்ப்பனத்திலும் பற்றுமல் அவற்றை அடியோடு பேர்த்தெறிந்தும், ஞான சாஸ்திரங்களை முற்றும் கற்றுணர்ந்து தன்னை அடுத்தோரை பரிபக்குவம் பார்த்து சித்து அசித்து ஈஸ்வரன் யென்னும் மூன்று வகைகளையும் பயிலுவிக்கும் ஆசி

ரியராகிய சாந்தீபமுனிவர் திருமலரடிகளை தஞ்சமாக அடைந்து வேதோப நிஷதங்களில் சந்தேக விபரீதங்களால் வாசனை வீசுகின்ற காயாம்பூ மலர்போலும் திருமேனியையுடைய மணிவண்ணனாகிய கண்ணபிரானோடு கற்றுணர்ந்தும் கொழுந்துவிட்டு எரியும் பசித்தலைத்தணிந்து குற்றமற்ற வைராக்கியம் அரிதரிது சாந்திராயண முதலிய செய்தற்கருமையான விரதங்கள் பற்பலமேலோங்கி விளங்கப் பலநாள் செய்துமுடித்து எலும்பு நரம்புகள் தோன்றித் தசைவற்றியிளைத்த தேகமுடையவனாகியும் சூரியன் உதயகிரிமேல் தோன்றும் விடியற்காலத்தின் முன் ஐந்துநாழிகை உள்ளபோதே நித்திரையினின்றும் நீங்கி சௌசாதிகள் முடித்து தந்தசுத்திசெய்து தீர்த்தமாடி சந்தி செபம் வந்தனை முதலிய நியதிகளைக் குறையாது நிறையப் புரியும்செய்து அமைத்து மனக்குறிப்பின்படியே மெய் வாய் கண் நாசி காது என்னும் ஐம்பொறியின்வழி சப்த ஸ்பரிச ரூப ரச கந்தம் என்னும் ஐம்புலன்களும் ஒன்றுபட்டு ஒழுக நடத்தும் தவ வுறுதி உடையவனாகியும், பொருமையை வொழித்த சிறந்த தவசிகள் அகம்புறம் என்னும் பாகுபாட்டைக் கருவறுத்து மூவுலகங்களும் தமதிடமாக வாசஞ்செய்வாராரென்று மறைகள் உரைப்பதற்கேற்ப இது வீடுயென்றும் அது காடுயென்றும் தெரிந்து வசிக்கும் பேதமில்லாதவனாகியும் ஞானகீர்த்தி பெற்ற அந்த பிராமண ஜனன சாகரத்தைக் கடக்க எண்ணும் புத்திமான்கள் எவர்தாம் புகழமாட்டார்கள். ஏ பரீட்சித்து மன்னவனே! மேலும் பல பலகிழிந்த வஸ்திரங்களைச் சேர்த்து இணைத்துச் சூசியிற்புகுத்திய மெல்லிய இழைச்சரட்டினல் பொத்திய கந்தையே பட்டாடையாகத் தரித்துக்கொள்ளும் காரணத்தினல் இம்முனிவரைக் கண்டோர் யாவரும் குசேலன் என்னும் பெயரால் அழைப்பார்கள் அதன்றியும் அஞ்ஞான சாகரத்தைக்கடந்த மனமுடையவனாகி வேதமுடிவைக்கண்டு ஞானதீபமாய் விளங்குகின்ற இந்தக் குசேலமாமுனிவரானவர் பாற்கடல்மீது கார்க்கடல்போல படமுடைய பல தலைகளையுடைய அரவணைமீது அறிதுயில் கொள்ளும் ஆதிபரஞ்சோதியாகிய அமலப் பிரானுடைய திருவடிகள் வருடச் சிவந்துகாட்டும் செந்தாமரை மலர்போன்ற திருவடிகளைத் தனது இருதய கமலத்திலிருத்தி மகா சிறப்புட

ணே பூசைசெய்வார் இவ்வாறு ஞானவல்லமை பொருந்திய பூசனை இயற்றிவருபவர் தாம் செய்யும் தவத்திற்கு உதவியாகு நிமித்தம் அன்பிலும் அழகிலும் கற்பிலும் சிறந்தவளாகிய பொறுமையிற் பூதேவியை யொத்த ஓரணங்கை வேதவிதிப்படி வதுவைசெய்தார். அவரது இல்லறக் கிழத்தியாகிய அம்மாது குற்றமில்லாத நற்குடியிற் பிறந்தவள் வந்த விருந்தினரை உண்பித்து இனிவரும் விருந்தை யெதிர்பார்த்திருக்கும் அன்புடையவள் தன் நாயகன் நினைப்பறிந்து ஒழுகுந் தன்மையுடையவள் வாய்மையுடையவள் சினஞ்சிறிதுமில்லாதவள் தனது கணவன் கொடுக்கப் பெற்றதைக்கொண்டு மகிழ்ச்சியுடையவள் பிள்ளைப்பே றில்லாதவர்க்குப் பிரகதி நாஸ்தியென்று மறைமொழியும் பழமொழி வழங்கலாலே தன்குலநீடித்துப் பரபொருளையடைய முயற்சிசெய்யும் பான்மையளாகி இருளும் மருகுங்குழலையுடைய தன் மனையாளோடு புணர்ந்தவளுக்கு இன்பம் நுகர்வித்தனர். அவ்வண்ணம் அவர் தன்மனைவியைக்கூடிப் புத்திரோற்பத்தி செய்வித்தமாத்திரத்தில் அம்மடந்தையின் தேகமுழுதும் பசிய நரம்புதோன்றிச் சேல்விழிகுழிந்தும் கொங்கையில் பால்சுரந்து முகவிளர்த்து தான் பலசுவையிலும் இச்சையுற்றுக் காட்டக் கருப்பமுதிர்ந்து பத்துமாதமும் நிரம்பிப் பால்போலும் பவள நிறமுடைய சங்கமானது அயராவுயிர்த்து முகத்தைப் பெற்றதைப்போல ஒரு ஆண் குழந்தையைப் பெற்றனள்.

பிறகு சிலநாள் கழித்துப் பின்னும் பிள்ளைகள் பெறவேண்டிக் கருத்துகொண்டு தனது காதலனைப் புணர்ந்து முறையே விருபத்தேழு சிறுவர்களை யீன்றார்கள். கேளீர் அதமந்நிய மன்னரும்பெற்ற புதல்வனே மலைபோலப் பொருள்களைத் தங்கள் கிரகத்திற் குவியலாகச் சேர்த்து வைத்திருக்கும் செல்வமுடையோர்கள் மகிழும்படியாக ஒரு புத்திரனையும் தராத அம்புபாசக் கடவுளானவர் எறும்பிற்கும் ஆஸ்பதமில்லாத வறியவனாகிய இந்தப்பிராமணனுக்கு இத்தனை பிள்ளைகளைக் கொடுத்து அவரது திருவிளையாடலன்றோ இவர்செல்வத்தினாற் செருக்குற்றவர்களுடைய வீட்டின் வாயில்களைப் பற்றி பறகளையெல்லாந் தெரியக்காட்ட அகத்திலுள்ள துன்பத்தை முகத்திற் காட்டத் தங்குறைச் சொற்களை யெல்லாம் நாட்டி இருகரங்களையும் விரித்துநீட்டித் துன்புறுத்தும் பசி·

ப்பிணியை அகல வோட்டி மானமென்பதனை முற்றிலும் வீட்டி தெய்வம் இவ்வகைக் கோலஞ் செய்ததேயென்று தலையையாட்டிக்கிடைத்த பிட்சையால் மக்களையூட்டி யாசகஞ்செய்வது உலகத்துள் இகழ்ச்சியென்பவற்றுக் கெல்லாம் இகழ்வானது என்று அதை ஒருத்துக் கானகத்தில் கொள்வாரில்லாது உதிர்ந்து கிடக்கின்ற சிறிய புல் தானியங்களை ஆராய்ந்து தன்னுடைய கைகளின் நகத்தாற் கிள்ளிச் சேர எடுத்துக்கொண்டு வந்து தனது பத்தினிகரத்தில் கொடுப்பார் அதனை இருகைகளினாலும் வாங்கிக் குத்தி பாகஞ் செய்து அதிதிக்கு ஓர் பாகம் வைத்துத் தனக்குப்பகிர்ந்து ஈந்ததை உண்டு மனமகிழ்ந்து தந்திரங்கட்கும் மறைகட்கும் எட்டாத மாதவனாகிய சீதரனுடைய பாதார விந்தத்தை சதா தியானித்துக் கொண்டிருப்பார்.

இவ்விதமாக இவர் வாழ்ந்துக்கொண்டிருக்க இவர்மனைவியார் தனது புத்திரர் இருபத்தேழு பேருக்கும் தனக்குவந்த பங்குக்கஞ்சியை இலக்கவப் பாத்திரத்தில் சுற்றிவார்த்துக் கொண்டுவர கால்வயிற்றுக்கும் பற்றாமையைக்கொண்டு வெற்றுடம்பாகி நிற்பாள். ஐயோ இதன்மேல் தானென்னதான் செய்வாள் ஒரு குழந்தைக்கு வார்க்கும்போது மற்றொரு குழந்தைகளும் கைநீட்டும் ஒரேகாலத்தில் இரண்டு குழந்தைகளும் கையை நீட்டிக்கொண்டு மேல்விழும் வேறொரு குழந்தை கையைப் பற்றிக்கொள்ளும் அதுகண்டு தேம்பித்தேம்பி மற்றொரு குழந்தை அழும் வேறொருகுழந்தை பொருமிப் பொருமிக் கண்களைப் பிசைந்துக்கொண்டு ஒழுகும் இன்னொன்று புரண்டுவீழ்ந்து தரையிற் கிடந்தபடியே பிணங்கிக்கொண்டிருக்கும் மற்றொருமகவு என் வயிற்றில் பசிதணிய வில்லையே அந்தோ என்று அயருறும் என் அன்னை எனக்குகஞ்சிவார்க்கவே யில்லையென்று ஒரு சேய் பொய்பேசும் மிக்க ஆவலோடு தாய் கையிலிருப்பதைப்பறித்து உண்ணச்செல்லும் ஓர் சேயை வேறொரு சேய் ஓடி முடிகியிழுக்க அதுவும் இழுக்க இவ்வண்ணம் ஒன்றோடொன்று பற்றி யிழுக்கும் போது சிதறிக்கொண்டு போவதைக்கண்டு சிரிக்கும் ஒருமகவு இவ்வாறுகலகம் விளைவிக்கின்ற மைந்தர்களை நோக்கியும், பவளத் துண்டுகள்போன்ற விரல்களையுடைய கையால் தூக்கியும், அணைத்து வீக்கியும் மடித்தலத்து இருத்தியும், அல

ங்கரித்தும், சீர்திருத்தியும், மைதீட்டிய கண்ணீரைத் துடைத்தும், முதுகைத் தடவிக்கொடுத்தும், ஆம்பல் மலர்போலுப் பவளச் செவ்வாயின் முத்தங்கொண்டும், அடுத்தமனையிலுள்ள சிறுவன் ஒருவன் இன்று உமது கிரகத்தில் என்ன பணிகாரம் யாது பதார்த்தம் செய்தார்கள் என்று அறுத்துக் கேட்க அதைக்கேட்டு ஓடிவந்து அம்மா பணிகாரம் என்பது எப்படி யிருக்கும் பதார்த்தமாவது யாது? அவைகள் எவ்விதச் சுவையோடு வுள்ளன? நீ யெடுத்துக் கூறுமென்று இரங்கிக்கேட்கும் பிள்ளைக்கும் அவைகளைக்குறித்தும் ருசிபாகங்களை எல்லாம் யெடுத்து சொல்லுவோம் ஆனல் அவற்றைச் செய்துகொடு என்று கெஞ்சி ஏங்கினல் யான் என் செய்வேனென்று வேறுமொழிகூறி போக்குக்காட்டி அவற்றை மறக்கும் உபாயஞ் செய்வாள் மற்றொரு மனையிலுள்ள ஒரு பிள்ளைகையிலே தின்பண்டம் ஏந்திக்கொண்டு நிற்கக்கண்டு ஓடிவந்து நின்று தாயின் வதனத்தைப்பார்த்து கண்களின் நின்றும் தாரைதாரையாக நீர்வொழுகத் தாயே என்வாயில் நீர் சுரக்கின்றது ஆதலால் இப்பொழுதே செய்து அளிப்பா யென்று பீறற்சேலையைத் தொட்டிழுத்து என்ன தேறுதலாகச் சமாதானஞ் செய்தாலும் தேருது ஏங்குகின்ற மதலையை யெடுத்து மார்புடனணைத்து மனம் வியாகூலப்படுவாள் ஒரு குழந்தை தாயின் எதிர்நின்று அன்னய்! அயல்வீட்டில் ஒரு பையல் குண்டலம் மோதிரம் மணிக்கடகம் நெற்றிச்சுட்டி பொன் அரைஞாண் சதங்கை இவைகளை அணிந்துக்கொண்டிருக்கிறுன் எனக்கு நீ யிடாதிருக்கும் பொறுமையென்னே அவை உள்ள விடத்தைப்பார்த்து எடுத்து உடனே எனக்கு இடுயெனச் சினங்குகின்றதை நோக்கி கடன்வாங்கி தரித்திரனொருவன் அக்கடன்காரன் வந்தபோதெல்லாம் நாளை நாளை யென்று தவணை சொல்வதுபோல அவ்வருமை சிறுமகவுக்கு நாளைக்கு ஆகட்டும் நாளைக்கு ஆகட்டும் பூட்டுகிறேனென்பாள். அந்தோ! இல்லாமைக்கு என் செய்வாள் ஐயோ பாவம் அம்மா எனக்குப் பருப்பும் சர்க்கரையும் தருவாயென்றும், எனக்கு மதுரமானபாலும் வெண்ணெய்யும் அளிப்பாயென்றும், மக்கள் தன்மேல்விழுந்து அழும்போதெல்லாம் வாய்திறவாது சும்மா யிருப்பாள், பாலகர்கள் தரித்துக்கொண்டிருப்பது பாலமணிப் பூண்களே அல்லாமல் நவமணிகளன்.

று உடுத்திக்கொண்டிருப்பது ஒளியற்ற மரவுரிச்சீலையேயன்றி அரிய சரிகைப்பட்டுடையன்று உண்ணுதற்குரிய கலங்கள் இலைக்கலங்களேயன்றி பொற்கலங்களன்று அருந்துதற்கரிய நீர் நீசத்தண்ணீராகிய அன்னப்பாலேயல்லது ஆவின்பாலில்லை அதனை நுகர்ந்துந் தனையர்களுக்குப் பசிதீர்ந்தபாடுமில்லை பார்க்கசகியாத இவ்வித வறுமையைக்கண்டும் மெய்ஞ்ஞானியராகிய குசேலமுனிவர்க்கு உள்ளத்திற் கவலையென்பது சிறிதும் இல்லை தொடர்ச்சியில் அளவு கூறப்படாத புகழுற்ற அவ்வந்தணர் தன் செய்கையைப் பார்த்தும் அவர் மீது விருப்பஞ் சற்றுங் குறைந்ததில்லை வரவு அதிகமுடையவராய் அளவிறந்த பெருஞ்செல்வத்தின் வளப்பமுடையவர்க்கும் அன்பொழியாத வொருபிள்ளை விரும்பியவற்றை விரும்பியபடி அளித்து உபசரித்தல் கூடாததாயிருக்க வெந்த இருப்பூசிபோலவும் தனக்கு ஒப்பில்லாத யமனைப்போலவும் ஆலகால விஷம்போலவும் கடலைச்சுவரடிக்கும் வடவாக்கினிபோலவும் பசிநோயானது நீங்காது வாட்டவும் அதனால் சஞ்சலிக்காத மனத்தையும் சஞ்சலத்துக் குட்படுத்தும் தாரித்திரதசையில் பல புதல்வர்களைப் பெற்றவளின் செய்கைகள் இவ்வித முடையனவென்று கூறும்தரம் யாவரால் தான்முடியும் இவ்வண்ணமாக தரித்திரமென்னும் பெருஞ்சாகரத்தினுள் அழுந்தியும் தனக்குள் இனியரான தாபத்தலைவரை வெறுத்து ஒன்றுமுறையாள் அக்கம் பக்கத்தார்களறியும் வண்ணம் அலர்தூற்றாள் மைந்தர்கள் எவ்வெண்ணத்தாலெனினும் உண்ணுதகாரியம் சிறிதும் மனங்கூசிச்செய்யாள் அவ்வகை மேன்மையான சற்குணம் அப்பெண்மணிக்கு வாய்த்தது குசேலமாமுனிவர் இருகண்மணி நிகர்த்தாயுள்ளது. ஆயினும் அவள் குணாதிசயத்தைக் காண்போர் யாவரும் இவளை அநுசூயையோ அருந்ததியோ என்று வியப்புறத்தக்க அரிவையர்க்கெல்லாம் அருங்கமலமானவளிடத்தெவ்வாறு இவ்வறுமையென்னும் நெடுங் கடலாகிய தீராத்துயர் எக்காலத்தில் நீங்குமோவென்று எண்ணும் எண்ணமாத்திரம் உள்ளக்கருத்தில் உண்டு தன்னை முதலில் கற்பினின்றும் வழுவாது காத்துக்கொண்டு பின்பு தன்னைக்கொண்ட தலைவனை நல்லசுவையுள்ள உணவுகளால் உபசரித்து அதன் பின்னர் புகழ்நீங்காது வளர்த்தி அவற்றை மறவாது பாது

காக்கும் பொற்பாவையை நிகர்த்த பூவையானவள் சிறுமை யேயுற்ற வறுமைக்கடலிலழுந்தி மனம் புண்ணுகி இவ்வாறு பற்பலநாள் கழிய ஒருநாள் சமயமறிந்து உளந்துணிந்து நல்லொழுக்கத்தோடு பணிந்து ஞானபானுவின் உதயம்போன்ற தன் உயிர்நாயகனது வதனத்தை நோக்கித் தானெண்ணிய கருத்தையுஞ் சுகமலரையும் செஞ்சடையையும் கொவ்வைக்கனியையும்போன்ற வாய்திறந்து கொஞ்சுங்கிளிபோல் இன்சொல் உரைப்பாளாயினள் வெண்மணிகளை கரையில் ஒதுக்குகிற வெள்ளிய அலைகள் வீசுகிற கருங்கடலும் விரும்புகின்ற காயாம்புமேனி மணிவண்ணப் பெருமானுடைய திருவடித்தாமரைகளை காமக்குரோத லோபமோக மதமாச்சரியமென்னும் அறுவகைப் பகைகளையும் மாசுதீரவொழித்து உள்ளத்தில் தியானபரரால் ஏத்தித்துதிக்கும் என் மணளரே மறைமுடிவை உணர்ந்த மாதுலரே! அரிகரி பரி புலி சரபம் கண்டபேரண்டம் திரிகின்ற பெருங் கானகத்தில் அணுகி காய், சருகு, புனல், காற்று இவைகளை அருந்திக் கடல்போலும் விரிந்ததாகிய தீவினைகளுக்கு குடியிருப்பு வீடாகிய வழும்பு உதிரம், சீ, நரம்பு, தசை, யிவைகளால் மூடப்பட்டு மலசலங்கள் ஒழுகாநின்ற தேகச்சுமையை வளறச் செய்கின்ற உந்தித் தாமரைமலர்ப் பூங்கோட்டையில் வீற்றிருக்கும் அந்தணனையொத்த அந்தணரே! தேவரீருக்குக் காதலியாகிய பேதையேனிடத்தும் பேதையேன்பால் பிறந்த மக்களிடத்தும் விருப்பம் வையாமலும் எந்நாளும் அன்னியரிடத்துச் சென்று யாசித்துக் கேட்பது இல்லாமலும் இருக்கின்றீர். நான் அதன் பயனை உணர்ந்துக்கொண்டேன் ஆனாலும் சஞ்சலப்படுகின்ற நோயுற்ற மனத்தால் வருந்திப்புகலும் புகலும் சிறிய வார்த்தைகளை அது ஒரு பேதையின் பேச்சு என்று மறுதலிக்காது விருப்பத்தோடு கேட்கவேண்டுமென்று மீட்டும் கூறுவாளாயினள் காருகபத்தியம் தட்சணாக்கினியம் ஆகவனீயம் என்னும் முத்தியையும் சுடர்க்கொழுந்து விட்டெறியும் வண்ணம் வேள்வியை வளர்க்கும் குற்றமற்றமுனிவரே! நம்முடைய சிறுவர்கள் அழுதழுது ஏங்கிக்கொண்டிருக்கப்பட்டவர்களாய்ப் பசி நீங்க அன்னமில்லாது தளர்ந்து சோர்ந்திருக்கின்றார்களே அந்தோ புராணங்கள் பதினெட்டிலும் வல்லவர்கள் சோற்ருல் எடுத்த வுடம்பென்று சாற்·

றுகின்றது, இக்கடல்சூழ்ந்த புவியில் உண்மையே அல்லவா நான்கு வேதங்களும் உவர்க்கடலை ஆடையாய் வுடுத்த நானிலத்தில் உள்ள ஜீவகோடிகள் எல்லாம் இன்பத்தோடு மனமகிழ்ந்து நன்ருக வாழக்கடவன் என்று கோஷித்துக் கொண்டிருக்கும் அதற்கு விரோதமாகத் தேன் வழிந்து சிந்துகின்றாற்போல அமுதொழுகுகின்ற மழலைச்சொற்கள் பொருந்திய சிவந்த வாய்களையுடைய சிறுவர்களுக்குச் சிறப்பாக அன்னம் முதலியது அளிப்பது உமது கடமையே ஆகும் படநெடுமரவம் உந்தியில் தாங்கும் இந்தத் தடநெடும்புவியில் எவ்வகை மேலோர்களும் அஞ்சி நாணுதற்கு காரணமாகிய தரித்திரமுடையவர் பாவியரும், தருமத்தையும் இன்பத்தையும் தருகின்ற செல்வப் பொருளுடையவர்கள் புண்யரும் அல்லவோ இம்பரும் உம்பருந்தொழும் எம்பிரான் எழுந்தருளி யிராநின்ற இதய தாமரை யுடையவரே! தரித்திரமானது தானடைந்துள்ள ஒருவனது அழகை அழித்து உடம்பை உலர்த்திச் சோம்பலை எழுப்பி உலோபத்தை மிகுவிக்குமல்லாமலும், நாயகநாயகியர்க்கு நடுவே நீங்காத கலகத்தை விளைவிக்கும் மேலு மவமானம் பொய் இவைகளை வருவிக்கும் ஆதலால் இந்த வறுமையைப்போன்ற கொடியதுவொன்று உலகெங்கும் இல்லை. இன்னுமிந்த இல்லாமையான சந்துஷ்டியாகிய சாகரத்தை வற்றச்செய்யும் வடவாமுகாக்கினியாகும். அன்றியும் பலபல யோசனைகளுக்கு இருப்பிடமாவதன்றிப் பலவகைத் துயர்களுக்கும் உறைவிடம் ஆம் என்பார்கள் நன்னூல் கற்றுணர்ந்த முன்னோர்கள். இவ்வறுமையானது ஒழுக்கம் உயர்குலத்திலும் மேம்பட்டதென்று விளம்பும்பழமொழிக்கு மாறுதலாய் அநாசாரத்திற்கு மூலமாகும். கொடுமை பலவற்றிலும் கொடியது இம்மிடியே ஆதலின் அதனை யொழித்துக்கழித்தல் நன்மையோ தீமையோ யாதவகுலமென்னும் ஓதத்தில் ஆதவனைப்போல வுதித்து ஏனைய அரசர்களுக்கெல்லாம் அரசனுகித்தன் ஒப்பு ஒருபொருளும் இல்லாதவனுய் மாதவனுகிய கண்ணபிரானுடன் பலகலைகளையும் ஒரே கல்லூரில் கற்றுணர்ந்தீர் என்று சுவாமிகளே உம்மை ஒப்பார் பலருஷிகள் பகரக் கேட்டிருக்கின்றேன். ஆதலினுல் அந்தப் பீதாம்பரதரனுடைய பக்கத்தேசென்று அப்பரமமூர்த்தி மனமகிழ்ந் தன்பால் அளிக்கும் பெருந்திருவைக்

கைக்கொண்டு கொணர்ந்து நமது குழந்தைகளுக்குக் கொடுத்து வறுமைப் பிணியைத் தவிர்க்கவேண்டும். தேவரீரோடு இளமையிற் கலைபயின்றவராகிய மணிவண்ணனாகிய கண்ணனும்மைக்கண்ட அளவில் எல்லா வரங்களும் அளிப்பான் அதற்கு ஐயமில்லை. மாசற்றநேசன் ஒருவனைப் படைத்ததால் அது அந்நேரம் படைத்தவனுக்கு பருந் தனப்பொதியென்று அறிவுடையோர் தெரிந்துரைக்கும் பழமொழி மெய்ம்மையோ பொய்ம்மையோ மண்ணுலகம் பொன்னுலகம் நாகருலகம் என்று கூறப்பட்ட இம்மூவுலகத் துள்ளுமுள்ள நல்லவர் துன்புறக் கொடுமைகளைச் செய்துவரும் கம்சன் முதலியோரைக் கொன்று நல்லோர் இன்புற வருள்செய்யும் பரமமூர்த்தி ஆதலால் நேரிற்சென்று புகழைப்பெருக்கும் செல்வம் வேண்டுவையே ஆனால் உமக்குந் தருவான் ஒருபோது அத்தீனதயாளு ஈயாது மறுப்பானாயின் வேதங்கள் இன்னுந் தேடிக்காணாத பாதங்காணத் தரிசித்ததே போதுமான அந்தப் பரந்தாமனுடைய பாததரிசனமன்றோ முத்தியாவதும் சித்தியாவதும் என்று பவள வெள்ளத்திலிருந்து அமிர்தம் சிந்துவதுபோல் மதுரமாகிய திருமொழிகளையெடுத்துப்பேசி நிறுத்தினாள் கண்ணனைத்திருப்பவுமறுவுந்துளபமாலிகையும் உடையவனாகிய மணிவண்ணனை மாசிலாமணியை நாள்தோறும் தவத்தினருள்ளத்தி லெண்ணியவை எண்ணியபடி அளிப்பவனை அடைந்து நமது குழந்தைகள் மனங் குழையாது பிழைக்க அவனருளிய செல்வத்தைப் பெற்று விரைவில் வாருமென்று மங்கையரிற் சிறந்தநங்கை நவின்ற மாத்திரத்தில் நல்ல தவமுனிவராகிய குசேலர் உரைப்பாராயினர் மக்களுக்காக இரங்கி வாடுகின்ற மடமைபொருந்திய மடந்தையே கேளாய்! முப்பிறப்பில் தருமம் நன்றாய்ச் செய்தவர்கள் இப்பிறப்பில் அதன்பயனை ஒருங்குசேர அனுபவிப்பார்கள்.

அறம் புரியாதவர்கள் துக்கசாகரத்தி லாழ்வார்கள் அது உண்மையாதலால் அதற்கு மனந்தடுமாறி மெலியவேண்டுவதென்ன பவளம்போன்ற அதரமுடைய பாவையே! இவ்வுலகில் பிறந்த ஜீவர்களெல்லோருங் கிட்டாத பொருள்களையெல்லாம் அநுபவிக்க வேண்டுமென்று மனோராச்சியஞ் செய்தால் எப்படி கிட்டும் எண்ணியது எண்ணியபடி முற்றுப்பெ

றுவது மூத்தேவர்களின் மூலமுதற் பொருளாகிய அத்தேவ தேவனுக்கேயாம் ஏனையோர்க்கும் அவரவர் எண்ணியபடி அமைவதானல் மேலென்றும் கீழென்றும் பகுப்பு இரண்டு வுண்டாகுமோ தத்துவந் தெரிந்த மேலோர்கள் முற்பவத் திற்செய்த நன்மையையுந் தீமையையும் பொதுவாகக் கருமம் என்பார். அக்கருமத்துக் கீடாய் செல்வம் வறுமைகளை தந்து உயிர்களை பாதுகாப்பவன் வேதமும் போதமுங்காண் கிலாத சீதர மூர்த்தியாகிய எம்பிரான் என்றறி அமிர்தத்தினும் இனிய சொல்லுடைய மெல்லியரே மைந்தர்களை உபசரித்துக் காப்பாற்ற பெருநிதி வேண்டுமென்ருய் வனங்களில் உலவும் பறவைகளும் கானகங்களில் திரியும் மிருகங்களும் தமக்கொரு இரட்சகந் தேடுகின்றனவோ? அல்லது அவைகட்கு வருவாயுண்டோ? எவ்விடத்திலேனும் சென்று இரந்து கேட்பதுண்டோ? நாளைப்பொழுது என்செய்வோமென்னுங் கவலையுண்டோ மேலும் அவைகள் உணவு அகப்படாமல் உயிர் நீத்ததுண்டோ சொல்லுவாய். கல்லினுள் சிறுதேரைக்கும் கருப்பை அண்டங்களில் வசிக்கும் ஜீவன்களுக்கும் விருப்பமுற்று உணவு அளித்து காப்பவன் துளபமாலை தோளிலசைய வேய்ங்குழலால் ஆவினங்களை மேய்த்தருளிய எம்பிரானுகிய கண்ணனன்றே அந்த செல்வ நாயகன் உனது அரிய சிறுவர்களைக் காவாது கைவிடுவானே விடான் விடான் இது உண்மையே ஆகும் நாணமடம் அச்சம் பயிர்ப்பு என்னும் நாற்குணங்களும் அமைந்த நாயகியே! இவையெல்லாம் உயிருக்குச் சுபமே யென்னில் கர்ப்பத்தினின்றும் இந்தப் பூமியில் தோன்றியபோதே மல ஜலம் விடுகின்றதே அஃது உணவின்று பொருந்துமோ? அடி பேதாய்! அலரவன் சிரத்திற் பொறித்த ஆயுளின் முடிவுவரையிலும் நல்லுணர் வெறுத்தற்குரிய உணவுயென்னும் இரண்டில் ஒன்றுண்டு உலகத்தில் உறையும் உயிர்க்கென்று அறநூலோராகிய மேலோர் உரைப்பார் இது சொற்பிரமாணமாத்திம் அல்ல, பிரத்தியட்ச பிரமாணமும் ஆகும் ஆதலினுல் உனது மைந்தர்களுக்கு ஆயுளுள்ளவரையிலும் அவர்கள் அப்பிறப்பிற் செய்த இருவினைக்குந் தக்கபடி நற்சுவை உண்டியும் வெறுப்புடைய உணவும் இருக்கவே இருக்கின்றது, சிந்தை நொந்துவருந்தாதே யாதுவரினும் அது

ஊழால் வந்ததென்று நினைத்திருத்தல் வேண்டும். அழகிய முகத்தையொத்த நகையினையுடைய நங்கையே! வளம்பொருந்திய நிதியை படைத்தோமென்றும், ரூபலாவண்யமுடைய மனையாளைப் படைத்தோமென்றும், பல புத்திரர்களை பெற்றோமென்றும், நாம் நல்ல அனுபவங்களை அடைந்திருக்கின்றோமென்றும், இளமை பருவத்திற் சிறந்திருக்கின்றோமென்றும், அழகின் நலத்தை பெற்றிருக்கின்றோமென்றும், சற்றும் உண்மை நூலில் உணர்ச்சி யில்லாத செருக்குடைய மூடர்கள் மனமகிழ்ச்சிகொள்வார்கள். அன்றியும் உயிர்கொலை புரிதலும், உண்ணும் உணவில் மாருட்டஞ் செய்தலும், சிறிதும் அய்யமில்லாத நண்புடையாரிடத்து வஞ்சனை செய்தலும், நல்லவர்களை நடுங்கத்தக்கதாக உதாசினம் பேசுதலும், மன்றிடப் பொய்க்கரி கூறுதலும், ஆலயத்தில் உள்ளசொத்துக்களை மறைத்துக் கணக்கிடுதலும், தம்மாதர்களைப் பிறருக்குப் புணர்ப்பித்தலும், வேசையர்களை காமிகளுக் குறவுபடுத்திச் செல்வ ஒழுக்கமுடையோனை ஒப்பாய் உலகில் நாய்கள் போல் திரிபவர் முயற்சியும் இவைபோன்ற முயற்சியும் இன்னும் பற்பலவும் செய்து கயவர்கள் காலங்கழிப்பார்கள்.

அவையெல்லாம் பொருள் நிமித்தமே ஆகும். அவ்வாறு பொருளைப்பெற்றால் புவியிற் புதைத்து வைத்துக் குதுகுதுப்படைந்து சுடலையை விடாத பேய்போல் காத்து பணப்பேயென்று ஒரு பட்டபெயர்பெற்று சுற்றம் நட்பினர் அயலார் யாவருமிகழ வாழ்வார்கள், ஒரு சிறிய தருமமாயினுஞ் செய்யார் இரப்பவர்கள்வந்து கற்பகதருவை யொத்த கரங்களையுடையவனேயென்று புகழ்ந்துகூறினலும் மனதில் அங்கீகரியாமல் அருள்சிறிதுமில்லாமல் தனதுமாளிகையில் வெளிப் புறத்தளவும் துரத்தி தனது இல்லத்தில் மீள வந்து புகுந்து கொள்வார்கள். மிகவும் நெருங்கிய தமது உறவினரையும் தழுவி உபசரிப்பார்கள். திலகலாள் நுதல் தெரிவையரே! இப்படிப்பட்ட வுலோபியர்கள் குபேர சாம்பிராச்சியம் பெற்றவர்களா யிருந்தாலும் அதனல் என்னபெற்றார்கள். இகழ்ச்சியே பெற்றார்கள். மற்றும் நீதிதப்பிய கொடுங்கோல் அரசர்களின் கோபத்திற்கு மிகவும் ஆயாசமடைதலும் கள்ளர்களின் கொள்ளைக்கு மிகுதியும் பயமடைதலும் தாயாதி வழக்கிட்டு வவ்வுவார்களேயென்று அஞ்சித் துயரு

றுதலும் பெற்றார்களே அன்றி பொருளினால்வரும் புண்ணி யப்பயனை எங்ஙனம் பெற்றார்கள். பரம்பொருளாகிய பாம்ப ணைப் பகவானிடத்தும் பற்றற்றவராய்ப் பாழ்ம்பொருளின் கண்ணே பற்று மிகுதியுடையார்களுக்கு நல்ல நடத்தையை யுடையவர்களைத் தீய நடத்தையை யுடையவர்களென் றுரை க்கும்படி செய்யுமற்பரை ஒழுக்கமுடையோரென்று சொல்வி க்கும் கற்பிற்சிறந்த மாதர்களைக் கலவிசெய்யக் கருத்துடைய வர்களாய் எதற்கும் அஞ்சாத முயற்சிசெய்விக்கும், மேலும் சுருங்கிய மருங்குலையும் நெருங்கிய குசங்களையும் உடையநே ரிழையே! மரண திசையில் உயிரை நாடிவரும் கருநிறமுடைய காலதூதர்களைப் பணிந்து ஓயமகிங்கரர்களே? கோடி பொன் கொடுக்கின்றேன் பெற்றுக் கொள்ளுங்கள் கைந்நொடிப்பொ ழுதில் பிணங்கியுள்ள எனதுமனைவி புதல்வர் மருமகன் மருகி கள் முதலியோர்களுக்கு ஒருமொழி கூறி வருகின்றேன் சற் றுப் பொறுத்துக் கொள்வீரென்று பரிதாபமாகக் கூறினும் நாடியோடிவந்த காலதூதர்கள் பிடியாதுவிட்டுவிட்டு வெறு ங்கையோடு செல்வார்களோ? தேன்மொழியே! அப்பொரு ளால் அவர்கள் அடைந்த பொருளின்பயனை நீ கண்டாயா? இன்னும் அப்பொருள் பந்தங்களையெல்லாம் வருவிக்கும் அருளாழியப்ப னடித்துணையில் அன்புநீங்கச்செய்யும் உறக் கமே உறுவிக்கும் கருப்ப அறைக்குள் புகுவிக்கும் இக்குற்றங் களாலன்றோ அப்பொருளுக் கிம்மானிலத்தில் வெறுக்கை யென்று காரணப்பெயர் வாய்த்ததென்று புல்லர்களெல்லாரு முரைக்கின்றார்கள். அடியாரணங்கே! அறிவிற்சிறியவர்களே மதித் திறுமாப்படைதற்குக் காரணமான இந்தச் செல்வம் வந்து அடைந்தபொழுதே மமதைகொண்டு வாய்மூடப்பெற் றுத் தாட்சண்ணியமின்றி முன்பின் வழக்கத்தையும் பாராது தம்மை அணுகி வந்தவர்களை அலட்சியஞ்செய்து ஊமர்க ளாகின்றார்கள். கேட்கின்ற காதுடையவர்களும் செவிட ராகின்றார்கள். விசாலமாகிய கண்களுடையவர்களும் குருட ராகின்றார்கள். ஆயிரங் கிரணங்களைப்பரப்பி ஒளிவீசி மேரு வில் மறையும் சூரியனைப்போல அலைகடல் சூழும் அவனி யில்தோன்றி மறைந்திடும். உங்களைவிட்டுச் செல்வம் என் னும் காரணத்தால் பொருளின் விரிவுக்குச் செல்வம் என்று உரைக்கும்பெயர் நன்றாகப் பொருந்தியிருக்கின்றது. வேல்

விழியே அங்ஙனம் நீரில் சுருட்டுந் திரைபோல் உடனே குறையும்பொருட்டுச் செல்வம் சதா அல்லலேயே விளைப்ப தனுல் அதனைப் பெருமுயற்சிசெய்து அடைவது கூடியகாரி யமாகுமா சீச்சீ அது சாலவும் பழிப்புடையது இஃதோ அழிவுறு செல்வம் அழியாத வுறுதியுடைய செல்வம் யாதெ னில் தேன்மடை திறந்து பாயும் தளபமாலிகையைத் தரித் துக் கலைகள் நிறைந்து திலகமாய் களங்கமுற்று கண்ணென கதிர்வாய்ந்து வில்லிரண்டுடையதாகிக் குவளையிரண்டு பூத்து ஒருமுழுமதி உலகில் காணப்படுமாயின் அதனை ஒத்துவிளங் கிய முகமுடைய பதுமையாகிய பெருந்தேவி தனது பவளத் துண்டுகளை நிகர்த்த கரகமலங்களால் மெல்லெனவருளச்சிவ ந்து தானுகந்து மெனக்கருதும் அன்பர் உள்ளக்கமலத்தில் புகுந்து வாழாநின்றபழமறைகள் நாடும் பரமேட்டியிற் பாத தாமரையிற் பற்றுமிக்குறுகலே ஆகும் அடி மங்கையர்க்கர சியே! கையிற் பொருள் பெற்றபோதே கடவுள் ஆலயத்திற் கு அளித்து சாத்துவீக புராணநூல்களை விருப்போடுகேட்டு மறுமைக்கு நமக்கு உதவும் பொக்கிஷம் என்றுகருதி இரப் போர்க்கு ஈந்துவருபவர்கள் யமனது புயமலைமேல் உள்ள தண்டத்தால் படுந்தண்டனையின்றித் தத்துவங்கடந்த தற்ப ரனுகிய சிற்பர தாமோதரக்கண்ணன் உலகாகிய பரமபதத்தை அடைந்து நித்யவாழ்வை அடைகின்றூர்கள். குடலும் உதி ரம், என்பும், நிணமும், வழும்பும், தோலும் நாடிகளும் வைத்துச் சுமத்திய தசையுங்கொண்டு படாச்செய்த ஜலமல பாண்டமே பேதையர்களின் வடிவம்யென்று தேறித்தெளி யாது இத்தகைய கசமாலத்திற்கும் மனம்மயங்கி உடையான் அடிகளை மறந்திருக்கின்றனர். அந்தோ நம் ஐயனுகிய தெய் வநாயகன் மாயன் விளையாட்டே ஆகும் பவ்வீக்குழம்பு பல துவாரங்கள்தோறும் மோதுதலால் வழிந்து ஒழுகுகின்ற கும்பம் என்பது ஒவ்வொருவனுக்கு வேறுசாட்சி வேண்டா மலே தன்கடையே விளங்கும் இதனை மூத்திரபாத்திரம் என் றுபல கிருமிக்குப் பை அடர்ந்த தீயினுற் கூடு என்று நல் லறிவாளர் உரைப்பன எல்லாம் கண்காட்சியல்லவோ இவ் வளவறியாது மாதா மெய்யில் மையல்கொண்டு மாழ்குவார் அது நிற்கட்டும் முன்னம் எத்தனைபேர்கள் மைந்தர்கள் பாராட்டினுரோ பின்னும் எத்தனையோபேர்கள் மைந்தர்கள்

முறை பாராட்டினரோ இன்னும் எத்தனைபெயர் மைந்தர் முறைகொள்ள விருக்கின்ருரோ அறியோம் அவ்வண்ணம் நிகழா நிற்க அவ்விதப் பிள்ளைகளை நமது பிள்ளைகளென்று நீபேசுவது மகாவிநோதம் இது பேதையர்க்குண்டான இயல்பே யாகும் நன்னடையில் அநுசூயையயும் மென்னடையில் அன்னத்தையும் துன்னிடையில் மின்னலையும் என்னடையில் சொல்தவருமையையும் தொன்னடையில் வழுவாமையையும் உடைய என் காதலியாகிய தார்குழலே குழந்தையை பெறுகின்றகாலத்திலும் வளர்க்கின்ற காலத்தும் அக்குழந்தைகளுக்கு நோய்சம்பவிக்கும்போதும் பருவகாலத்தில் அவர்கள் வழியில்லாத வழிகளிற் செல்லப்போகின்ருர்களென்று சாக்கிரதையோடு காக்குங்காலத்தும் காலபாசர்வந்து கைப்பற்றுகிறபோதும் அளவில்லாத துன்பமே ஆகும் இவ்வாறு கணக்கற்ற துக்கமேலிட்டிருக்கும் ஆனல் பெற்றபிள்ளைகளால் சுகம் அநுபவித்தல் எக்காலத்தில் ஆதலால் அம்மகவுகளால் எந்நாளும் துன்பமேயாகும் பெற்றபிள்ளைகள் தாய் தந்தையர் இளமையிற்செய்யுந் தண்டனைக் குட்பட்டு மனம் நடுநடுங்கி அவர்களை விடாதுன்னிக்கொண்டு நிற்பார்கள் வயது ஏற ஏறத் தங்கள் தங்கள் பெற்ருேரை நடுங்கச் சீறித் தன்மனம்போகும்வழியே ஒழுகி நிற்பார்கள் புத்திரர்களுக்கு அன்னையும் அப்பனும் அனந்தமாகும் அவர்களுக்கு அனந்த ஜன்மங்களில் வாய்த்த சுற்றத்தாரும் அளவற்றவர்களாவார்கள் அவர்கள்பெற்ற பெயர்களும் கணக்கில்லாதவைகளாகும் அவர்கள் செய்த தர்மங்களும் அளவற்றவைகளாகும் புகழுமிகமூழ் முடியற்றவைகளாகும் அத்தன்மையான புதல்வர்கள் யார் நீயார் நான்யார் அவர்களையும் உன்னையும் காப்பாற்றுதற்கும் நானே நான்மறைகளும் தான் முறையிட்டு நாடற்கரிய நாராயணனல்லேன் அனிச்சமலரை நெரிஞ்ல் முள்ளென்று அடிகளை வைப்பதற்கு அஞ்சுகிற கிஞ்சுகவாயாளே! பாலர்கள்மே லாசைகொண்டு வருந்துகின்ருய் இவ்வண்ணம் நீ இவ்வளவு வருந்துவதும் பித்தம் பிடித்த மத்தர்கள் செய்கையாகும் அறிவீனர் இம்மயக்கச்சேற்றி லகப்பட்டு வீணே தவலைப்பட்டார் யாவரும் அவரவர் செய்த நல்வினை பயனல் அப்பிறப்பில் அதற்குத்தக்க சிற்றின்பங்களை யனுபவிப்பர் நல்வினையல்லாத பொல்லா வினைகளின் பயனல் துன்பம்

அநுபவிப்பார்கள் முதியோ ரிதை ஊழ்வினையென்றும் விதியென்றும் ஆதிசங்கற்பமென்றும் பிர்மலபியென்றும் பெயர் மாத்திரம் வேறுள்ள ஒரு பொருளையே காட்டுகின்ற அறிகுறி மொழியென்று பகர்கின்றார் நாம் அநுபவிக்கின்ற சுகாசுகங்களெல்லாம் இம்மையில் நாம் செய்யும் இச்சிறு முயற்சியினு லென்று சற்றேனும் எண்ணவேண்டாம்.

அவ்வித நினைப்புள்ளோர் ஒழுக்கமேயன்றி சாந்தகுணம் வாய்ந்த கல்வியறிவுடைய மெல்லியோர் நடக்கையன்று. அமிர்தத்திலும் மினிய சொற்களையுடையாளே இப்பிறப்பில் தரும தானங்களைச் சீராக நடத்தினோர்கள் மறுபிறப்பில் தேவர்களாகி அமிர்தமுண்டு விரும்பிய போகங்களைப் புண்ணியமுள்ளவரையினும் அநுபவித்துப் பின்பு இப்பூமண்டலத்தில் வந்து பிறந்து இவர் என் தாய்மார் இவர் என் தந்தையர் என் றயலார்களையெல்லாந் தழுவுகின்ற சுபாவமுடையவர்களாக இருக்கின்றார்கள் அடி நேரிழையே! கேட்பனவற்றை கேட்கின்றவர்களுக்குப் பின்னையென்னாது அந்தட்சணமே உதவுகிற கற்பகநாட்டை ஒருவன் அல்லது ஒருத்தி அடைதலும் இத்தராதலத்தில் அநுபவித்தற்குரியபோகங்களையெல்லாம் அநுபவித்தலும் நல்ல ஊழ் என்றே நினை கொடுந்தண்டனைகளைப் பெறுகின்ற நரகத்தில் ஆழ்ந்து யாவராலுமாற்றப்படாத துக்கத்தைப் பொருந்துதலும் இம்மண்ணுலகில் நெஞ்சிறைந்து தரித்திர முதலியவற்றால் துயர்மிகுறுதலும் தீய ஊழ்வினையே யென்று உணர் இவ்வித இன்பதுன்பங்களை உணர்வுடையோர் அடையார் அவ்வறிஞர் பக்தியில் சிறிதும் வழுவாது நிலைபெற்று திருவின் நாயகன் திருவாய்மலர்ந்த வேதாகமங்கள் உரைக்கும் வண்ணமே அர்ச்சனைசெய்து நல்வழியில் சம்பாதித்த பொருள்களையெல்லாம் நிஷ்காமியமாக்கி என்னுளும் எழில்வண்ணனாகிய எம்மான் இணையடித்தாமரைகளை அடைந்து இடையறாத பேரின்ப சாகரத்தில் அமிழ்வார்கள் சளசளவென்று வாயில் நீர் ஊரல் தடையின்றி ஒழுகவும் பற்கள் உதிர்ந்து தேகந்தளர்ந்து திரைந்து மெலிந்து முதுகு வளைந்து தசைவற்றுக் கெம்பீரநடை வொழிந்து கோலூன்றி விதிர் விதிர்த்து இருமி படுக்கையின்கண்ணே கிடந்த கிடக்கையாய் மலஜலம் வருவதறியாதகிழத்தன்மையின் அளவைப்பார்த்து ஆறாத அறி.

வினந்தானே இளம்பருவ முடையவர்களைக் கண்டால் மன மகிழ்ந்து மயங்குகின்றார்கள்.

அடி கோதைபெருகிய பேதையே! பாவக்கிருத்தியங்கள் மிகவுஞ் செய்தவர்கள் நரகர் உலகத்தில் உற்பவிப்பார்கள். புண்ணியம் மிகுதியுடையோர் மேகவாகனன் உலகத்தில் உதித்திடுவர். புண்ணிய பாவம் இரண்டும் இயற்றினோர்கள் மானிலத்தில் கர்ப்பப்பையில் மானிடர்களாயும், மிருகங்களாயும் முட்டையில் பறவையாயும், பாம்பு ஓந்தி முதலாகியும், வேர்வையில் கீடாயீ முதலாகியும், இன்னும் மற்றையோனிகளில் ஜீவராசிகளா யுதிப்பார்கள், அடி மருவற்ற குழலாளே! தேகத்தினுள்ளேயுள்ள அழுக்கு கண்ணிற் பீளையாயும், காதில் குரும்பியாயும், மூக்கில் சளியாயும், கண்டத்தில் ஈளையாயும், மூலாதாரத்தில் மலமாயும் இன்னும் பற்பலவகையாம் அடி கருங்குழலாளே உணவின் சாரமானது உடலில் சுக்கில சுரோணிதங்களாகின்றன அவை ஆண் பெண் கூட்டுரவால் விளைந்து மாதர் கர்ப்பக்கோளரையில் தரித்து முதல் நாளில் பனிநீர்த்துளிபோல இருந்து ஏழுநாள் அளவில் குழுமியாய் பதினைந்து நாள்களில் நெகிழும் பிண்டமாய் ஒரு மாதத்தில் இருகி வளர்ந்து இரண்டு மாதத்தில் தலையுள்ளதாகி மூன்றுமாதத்தில் கரங்களும், சரணங்களு முற்று நாலாந்திங்களில் சகனமுண்டாகி ஐந்தாந்திங்களில் மணையாய் ஆருவது திங்களில் செவி நாசி கண்களடைந்து ஏழாவது மதியில் சீவனுற்று எட்டாவது மாதத்தில் ஒவ்வோரங்கமும் குறைவற்ற பூரணமாகி ஒன்பதாவது திங்களில் குழந்தையாய்ப் பழைய பிறப்பு இறப்புகளை தெளிந்து துன்பத்தில் உழன்று கெர்ப்ப உபநிஷத்திற் கூடியபடியே பூதலத்தில் இனிப்பிறவாமல் ஸ்ரீ முகுந்தப்பிரானது சரணாரவிந்தப்பதங்களைப்போற்றி அவனது மூலமந்திரத்தை தியானஞ் செய்துக்கொண்டிருக்கும் அந்தக்குழந்தையானது தாயினது சுரோணிதம் பெரிதானல் பெண்ணாகவும் பிதாவினது சுக்கிலம் மிகுத்தால் ஆணாகவும் சுரோணித சுக்கிலங்களிரண்டும் ஒத்துள்ளதானல் அலியாகவும் தாய் தந்தையர் மனமொத்து உடன்படாத புணர்ச்சியில் செவிடு கூன் குருடு சப்பாணி ஊமையாகவும் சுக்கில சுரோணிதங்கள் அபான வாயுவால் பிரிவுற்றால் இரட்டைப் பிள்ளைகளாகவும் பொருந்

தும் பத்துமாதம் பூரணமானல் பிரசாபத்திய வாயுவானது அதோமுகமாய்த்தள்ள பருத்த பொற்கம்பியானது சிறிய தோளையுடைய அச்சில் நின்றும் கழன்றுவருவதுபோல் அவயவமெல்லாம் நெரிக்கிட அஞ்சி யோனித்துவாரத்தால் பூமியில் தன்னுடைய ஊழ்வினையோடு உதித்து முன்னுள்ள அறிவு பறிபட்டு பசியினல் நலியுண்டு தாயானவள் எண்ணெயாலும் பாலாலும் குழந்தையை பரிகரிக்க உயிர்பிழைத்திருக்கும் இந்தவிதமாக முக்தியடையு மளவும் பிறக்கிறதும் இறக்கிறதும் ஆகியதுக்கத்தில் அழுந்தும் இதனை ஓர்ந்து உணர்ந்த அறிவாழி அந்தணனது திருவடியாகிய மரக்கலத்தால் பிறவிக்கடல்கள் ஏழையும் கடப்பார்கள் மற்றவர்களோவெனில் அக்கடலிலே அழுந்தி சோகத்திலகப்படுவார்கள்.

அடி திலகந்தீற்றிய நெற்றியுடையவளே! நாடிகள் உரோமம்-பந்தம்- நகம்-வீரிதம்-பித்தம்-கமழ்- நிணம் - தோல் உதிரம்-தசை-மூளை ஆகிய இவைகளை ஆயிரம்பலம் அளவுள்ளவைகளாம். இப்படிப்பட்ட புலால் சுமையை நாள்தோறும் நிலைமையையுடையதென்று எண்ணி யெண்ணி அன்புவைத்துக் காப்பாற்றி மலைத்து இளைத்து உழல்கின்றவை யெல்லாம் அறிவீனர்கள் செய்கைகளே ஆகும் கரும்புருவப்பாவையே! தரித்திரம் யென்று பலதரம் வருந்திகூவினுய் அவ்வார்த்தைப் பொதுமொழியாகக் கொண்டு தரித்து இரம் என்று பிரித்து நாம் (நீடித்துத்) தரித்திருக்கமாட்டோம் என்னும் பொருளடங்கிய எதிர்மறைத்தன்மைப் பன்மைமுற்ருக இயற்றமிழ் ஆசிரியர்கள் விரித்து உரைக்கின்ற பொருளைத் தேற விசாரித்தறியவில்லை. ஆதலால் தரித்திரமும் நிலைத்ததல்ல சேல்கெண்டை நிகர்த்தவிழியும் கற்கண்டைப் பழித்தமொழியும் உடையாளே! பாற்கடலை அடைந்த மீனனது அதிலுள்ள பாலைவிரும்பாது அதற்கேற்றபடி மற்றொன்றை விரும்பினற்போல நம்பெருமாள் திருமுன்சென்று நற்கதிகிடைக்கும் அந்த இன்பச் செல்வத்தை யான் அடைவேனே மானமற்று இழிவுபூண்டு செல்வர் வீட்டுக் கடை வாசல்தோறும் சென்று இரந்து இத்தேகத்தை பெருத்திட வளர்த்தாலும் இது மின்னலைப்போலும் நீரில் எழுதிய எழுத்தைப்போலவும் நிலைமையை உடையதல்ல மலத்துள் அருந்தி நகர்கின்ற புழுக்கள் அதுவே மகாசுகம் என்

பதுபோல இவ்வுடலைப்போற்றிக் காப்பாற்றுதல் நல்லோர் காரியமென்று அதனால் பேதையே அக்குடும்பச் சேற்றில் உழலமாட்டேன் என்று தவராஜ சிங்கமாகிய கூறிநிறுத்தினார். இதைக்கேட்டு அவர் பகர்ந்தது எல்லாம் உண்மையே ஆகுமென்று உணர்ந்து தான் விரும்பிப்பெற்ற மக்களிடத் தேவதை ஆசைமயக்கம் நீங்காததாகிப் பின்னும் தன்புத்தியில்விழும்பித் தனது கொழுனன் சீர்பாதங்களைப் பணிந்து நின்று கலைகளெல்லாம் முழுவது மென்றுணர்ந்த கற்றுணர்ந்த காந்தரே! இவ்வுலகில் முயற்சி செய்யாதவருக்குச் செல்வம் எங்ஙனே தானே வந்து பொருந்தும் நிலத்தை உழுது விரையாதவனுக்கு இந்நிலம் பலனைத்தருமோ ஒரு மானிடன் தனக்குப் பெருதற்கரியச் செல்வம் வாய்க்கக் கடவதென்றும் அநுதினம் முயற்சி செய்வானாயின் பேராயிரமுடைய பெருங்கருணைப் பெருமானும் அதனை அளிப்பான் அதனாலன்றோ மால்மகனாகிய நான்முகனது திரு அவதாரத்தினராகிய திருவள்ளுவரும் தாமருளிச்செய்த தமிழ்வேதமாகிய திருக்குறளில் (முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை, யின்மை புகுத்திவிடும்) என்று யாம் நன்றாக உணரக் கூறினர். செய்யத்தகுந்த முயற்சி செய்தால் திருமணவாளன் இரங்கி வேண்டியவற்றையெல்லாம் அருளுவான். மும் முயற்சியின்றி சோம்பி திரிந்தால் அளிக்கமாட்டானென்று அறிஞர் உரைப்பார். உலகமுண்ட பெருமாயனாகிய தெய்வநாயகன் கொடுப்பானே அல்லாமல் அள்ளி ஊட்டுவானோ ஏ மாதவக்கடலே! முற்பிறப்பில் புண்ணியத்தைச் செய்தார் முயற்சியில்லாமல் உண்பாராயின் தன் குலம் முதலிய உபகரணங்கள் எல்லாம் உடையவர்களானாலும் சமையல் செய்யாமல் பசி நோயை ஒழிக்க உண்பதற்குத் தானே உணவாய் விடுமோ ஆதிநாளில் துருவாசரால் சபிக்கப்பட்ட ஊகூ வென்னும் கந்தருவனாகிய முதலையால் அழிந்து அகஸ்தியரால் சாபமுற்ற இந்த்ரப் பிரஸ்தமனாகிய கஜேந்திராழ்வானும் அரி ஓம் என்று வேதமுதலில் கூறுது தன் பெயரையே உரைக்கச் சொல்லிய இரணியனால் மெலிந்த பிரகலாதாழ்வானும் இராஜசபையில் சுயோதனன் கட்டளையால் துற்சாதனன் சேலைகளைய மனமகிழ்ந்து மொழிந்த துருபதன் மகளும் மாற்றாந்தாயால் மனஸ்தாபமுற்ற துருவனும் அன்

பினோடு ஏந்தி அழைத்த முயற்சியாலன்றோ முழுமுதற் கடவுளாகிய முகில்வண்ணன் விரைந்தெழுந்தருளி ஆண்டான் ஆதலினால் முயற்சி செய்பவருக்கு அடையாத பொருளும் ஒன்றிருக்கின்றதா? மும்மலங்களையும் அடியோடு கெடுத்த முனிவர்களும் வேண்டும் முகுந்தன் எவ்வண்ணம் பொருள் அளிப்பான் நான்குவேதமும் ஆறு சாஸ்திரமும் நன்றாக ஆராய்ந்தவர்களிலும் சிறந்தவரே பற்பல முனிவர்களாயுள்ளவர்களும் பலநாள் அருந்தவஞ் செய்து பெறும்பேறு நம் பெருமான் அளிக்கப் பெற்றோர்கள் நான்முகனை யொத்த ஞானவரே! நாம் நாடுதற்கரிய செல்வம் செல்வி நாயகன் அளித்தலன்றிப் புகழ்ந்தடையுமோ அப்பரஞ்சுடராகிய பாந்தாமன் இணையடி அன்றி ஆதரவு எதுவென்று தெளிந்த தேசிகரே ஆசை பொய் சீற்றம் இவற்றைப்போக்கி நீராயினும் புராரிமுதலியோர் நராரிவாழும் துவாரகாபுரியை யடைந்து சகல அயிஸ்வரியங்களை வேண்டி இருப்பீராயின் அதனால் உமக்குத் தாழ்வுண்டாமோ கற்புடைய மாதர்களுக்குத் தங்கள் கணவாளரே தெய்வங்களென்று சாஸ்திரங்கள் கூறுவதனால் நீரே எனக்கு ஈஸ்வரர் எளியாளை இரட்சித்தாலும் உமக்குக் கடமையேயாகும். தானம் தவமுதல்யாவும் நீர் செய்விக்கின்ற பணிவிடையல்லவோ ஸ்ரீ வாசுதேவர் பாததாமரையைத் திடமாக நினைத்து வல்வினையை சிதற அடித்த அந்தணரே உலகங்களில் வாழும் உயிர்களை யெல்லாம் உலக நாதனாகிய சலரகிதன் காப்பாற்றினாலும் உனது குழந்தைகளையும் பேதையாளையும் பாதுகாப்பது உமது கடமையேயாம் என்றுபேசி முகம்சோம்பி இரக்கத்தோடு தலைசாய்ந்து நின்றாள். அப்பொழுது முனிவர் நாம் கண்ணனைத் தரிசித்தால் பரகதி நண்ணும் மனைவி மக்களும் படுகின்ற வறுமைத்துயர் ஒழியும் என்று உள்ளத்தில் எண்ணி மனைவியின் முகம் நோக்கித் தனயர்பால் மிக்க அன்புடையாளே! தெய்வம் ஆசாரியன் அரசன் இவர்களைத் தரிசிக்கச் செல்வோர் அவர்கள் அங்கீகரிக்கும் யாதொரு பொருளையேனும் கைக்கொண்டு சென்று காண்பார்கள். யான் எதைக்கொண்டு செல்வேன், தரித்திரர் செல்வரிடத்தில் சென்றால் மதியார்கள் அவமானஞ் செய்வார்கள் மானமுடையவர்களானால் அதனால் அப்பொழுதே உயிர்விட யத்தனிப்பார்கள் ஆதலால்

அச்செல்வர்பால் செல்வது சிறந்ததென்று சிந்தியாதே இவ்வுலகில் இல்லாதவரை எல்லோரும் இகழ்வார்களென்று முன்னோர் உரைத்த நீதி வாக்கியத்தை மனதிற்கொள்ள தங்களைப்பெற்ற தாய் தகப்பன்மார்களும் தனையர்கள்மேல் தரித்திரகாலத்தில் தாட்சணியமின்றி வெறுப்படைவார்களானால் உலகத்தில் அன்னியர்கள் எவர்கள்தாம் வறுமையில் தூஷிக்கார்கள் தரித்திரர் ஒருபொருளையும் விரும்பாமலே பொருள் உள்ளவர்கள்பால் சென்றால் இவ்வறிஞர் இன்றைய தினம் எதைக்கருதி இங்குவந்தார் என்று மனதில்கருதி, அவர்களுக்கு மனம் வெதும்ப குறிப்பு வார்த்தைகளைப் பேசுவார்கள். தெரியிழாய் செல்வரிடத்துச்சென்று வந்தது. சிறுமையேயன்றி பெருமை கிடைத்ததோ? ஏ சுடர்க்கொடி இவ்வண்ணம் இவர் உரைப்பது என்னவென்று நினையாதே ஏககாலத்தும் மானிடர் பந்தாபந்தம் இத்தன்மையை உடையதென்று பகர்ந்தேன் பரப் பிரமமாகிய ஸ்ரீ ஜநார்த்தனனிடத்து போவதுதகாதென்று சொல்லவந்தேனல்லேன் கடலுக்குப் பனித்துளியானது என்ன சந்தோஷத்தை கொடுக்கும்மலயத்தை தேவனுக்கு கடுகவ்வளவு சாம்பிராணிபோலவும், பிறைமதிக்கு நூலிழைபறித்து தூவியிட்டு சிந்தித்தல் போலவும், ஜகதீஸ்வரனுக்கும் கையுறைகொண்டுபோய் காணவேண்டும் என்று உரைத்தகாதலன் வாய்மொழியைக் கேட்டுக் களிகூர்ந்து இதற்குயாது செய்வதென்று சிந்தித்து அன்று முதல் உபவாசம் தானிருந்து நாயகன் அருமையாகத் தேடிக்கொணர்ந்த நெல்லினில் தன்னொருபாகத்தை வேறெடுத்துச் சேர்ந்த நெல்லை நீரில் ஊறவைத்து வறுத்து எடுத்து உலக்கைகொண்டிடித்துக் கரிசுபோக்கி அவலாக்கி, அவரது கந்தை வஸ்திரத்தின் ஓர் மூலையில் முடியிட்டுக் கொடுத்துச் சுகமாகப் போய்வருவீரென்றாள். அதனை வாங்கிக்கொண்டு முன்னே நெடுந்தூரவழி நடந்தறியாதவர் வழிப் போக்கர்களை வினவி வழிதேர்ந்து தடையில்லாமல் பலகாதம் நடந்து கிளைவழிகண்டு மயங்கிநின்று தன் அறிவால் இதுவேபோகும் மார்க்கமென்று தேர்ந்து செல்லும் வழியில் பலமலைகளையும் அங்கிருந்து ஓடுகின்ற அருவிகளையும், கடும்புலிவாழும் காடுகளையும், பலதேசங்களையும், நகரங்களையும் நதிகளையுங் கடந்துமற்ற வழியையும் எவ்வாறு கடப்பதென்று எண்ணிமெல்

லமெல்லச் செல்லும்பொழுது வேனிற்காலமானதால் மண்ணும் நீரும் வீசும் காற்றும் கொதிக்கவும், அதை நினைப்பவர் எண்ணமும் எரியவும், வீட்டைவிட்டு அகலாதவர்களுடைய கண் கொதிக்கவும், மேகங்கொதித்துக் கரிந்துவீழவும், பூமிபிறளவும், குளநீர் வறளவும், மான்கள் பேய்த்தேரின் விரைத்து சென்று இளைக்கவும், கண்டு வெய்யலில் பசியால் மிகநொந்தும் மரநிழலிலிருந்தும் எங்கும் நீர்கிடையாது வாய்வறண்டு வருந்தும்போது சூரியன் அஸ்தமயமாயிற்று அங்குள்ள நகரைக்கண்டு இங்கு நித்திரைசெய்ய பாட்டைசாரியாகிய நமக்கு ஆர் இடங்கொடுப்பார் நமக்கு இவ்வூரில் யாவரும் பழகியவருமில்லையென்று திடசித்தராய் அங்கு எதிர்ப்பட்ட ஒரு ஆலயத்தின் முன்னே உறங்கி உதயத்தில் எழுந்திருந்து நடக்கும்வழியில் முள்தைத்துக் காலூன்றமுடியாமல் அதை வாங்குங் கருவியுமில்லாமல் மனமெலிந்து எண்ணுவார். ஒருவன் தன் இஷ்டப்படியே செய்தால் நலமாகும் குருமொழிகேட்டு நடந்தால் அதிலும் நன்மைபகைவர் சொற்படிகேட்டு நடக்க துக்கமே ஆகும் அதிலும் மனையாள் பேச்சின்வழி நடப்பது மகா துக்கத்தைத்தரும் என்ற முதியோர்மொழி உணர்ந்தும் மனையாட்டி விளம்பிய சொற்கு உடன்பட்டு வருந்தி மூர்ச்சிந்து மெலிகின்றேன் துவாரகை எதுவென்றுகேட்டால் இன்னும் நெடுந்தூரம் என்கிறார்கள். மற்றை வழியையுங்கடக்க வழியில்லை ஆகினும் ஓர் விதத்தினால் கடந்தாலும் கடல் மார்க்கத்தை எவர்களுடைய சகாயத்தைக் கொண்டுக் கடப்பேன். அதனைக் கடந்தாலும் அத்துவாரகையில் என்னை யார் மதிப்பார்கள், சற்றும் யோசியாது பிரயாணப்பட்டேன் ஆ ஆ என்ன காரியத்தைச் செய்துவிட்டேன் மகா மகுடமுடி மன்னர்களெல்லாம் வந்து காத்திருக்கும் கோமகனுடைய தலைவாசலி லெவ்வாறு நெருங்குவேன் அவ்வண்ணம் நுழைந்தாலும் அவ்வேதநாயகனது திருச்சேவை ஏழைக்கு எவ்விதத்திற் கிடைக்கும் கற்பகத்தைச் சார்ந்து வறிய காயங்களைக் கேட்பாரைப்போல் எம்பெருமான் திருமுஞ் சென்று நீரலைப்போன்ற அற்ப செல்வத்தை விரும்புவது அறிவின் செய்கையோ வென்று பலபல எண்ணி இனி என்ன துயர் நேரிடினும் மூன்மனையாட்டிக்கு உரைத்தபடி முழுதும் போய்வருவதே தகுதியென்று சிலநாளில்

மேல்கடற்கரையைச் சார்ந்தார் என்று சுகப்பிரமமுனிவர் திருவாய்மலர்ந்தருளக்கேட்ட பரிட்சித்து மகாராஜன் பரமாசாரியரே! பின்னிட்ட சரித்திரத்தையும் உரைத்தருளுமென மீண்டும் உரைப்பாராயினர்.

முதலாவது மேல்கடலடைந்த அத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவது அத்தியாயம்

குசேலர் துவாரகாபுரியைக் கண்டு தன்னகர் அடைந்தது.

ஸ்ரீ கண்ணபிரான் துதி.

ஒருபொருள்மேல் மூன்றடுக்குவந்த ஆசிரியத்தாழிசை.

நீரார்பைங்கொண்டல் நிகர்திருமேனிப்பெருமான்
பாரார்நின்றசெழும் பங்கயச்செம்போதடிகள்
தேர்வார்வினையிருட்குச் செங்கதிரோனென்பாரால்
காயாம்பூவொத்த கதிர்த்திருமேனிப்பெருமான்
பாராயணமணக்கும் பங்கயச்செம்போதடிகள்
ஆய்வார்வினைவாரிக் கார்வடவையென்பாரால்
வற்றுக்கடல்நேர் வருதிருமேனிப்பெருமான்
பற்றுக்கடலொலிக்கும் பங்கமச்செம்போதடிகள்
உற்றார்வினையாவுக் கோருவணமென்பாரால்.

வேறு விருத்தம்.

வேதந்தெரிந்தானும் வேதத்திற்குள்ளானுங் கண்ணன்போலும்
போதந்தருவானும் போங்தெளிவால்நிற்பானுங் கண்ணன்போலும்
ஏதந்தவிர்ப்பானும் எவ்வுயிருங்காப்பானுங் கண்ணன்போலும்
நாதந்தருவானும் நல்லுயிர்கள்காப்பானும் கண்ணன்போலும்.

என்ற ஆயிரம், பணமகுடங்களையுடைய திருவனந்தாழ்வானும் ஐராவதம் முதலிய அஷ்டதிக் கஜங்களும் இளைப்பாற இப்பூமண்டலங்களை யெல்லாம் தாங்கிநிற்கும் மலர்மாலையை யணிந்த மலைபோலுந் தோள்களையுடைய பரிட்சித்து மகாராஜனே மகா சுகசீலராகிய குசேலர் மேற்கடலாகிய யவ்வணசமுத்திரத்தை யடைந்து மகாசந்தோஷத்துடனே அதன் கரையிலுள்ள ஓர் புன்னைமரத்தின் நிழலில் உட்கார்ந்து சிறிது இளைப்பாறி அங்குள்ள தோணியேறிப் போவதற்கு

அதனை வோட்டுபவனான மீகாமனுக்குக் கூலிகொடுக்க அரைக்காசும் என்கையிலில்லை அல்லது இக்கப்பல் வோட்டுகின்றவனே என்னைக் கூலிகேளாது ஏற்றிக்கொண்டு போவானென நினைப்பதற்கு இடமில்லை ஏனெனில் நானோ வஸ்திரஹீனனாய் மதிப்பற்றவனா யிருக்கிறேன் ஒருவேளை தேவகிதேவியின் திருக்குமாரராகிய கமலக்கண்ணனது திருச்சேவைக்குப் போகின்றேனென உண்மையைக் கூறினபோதினும் எதார்த்தமாக நம்புவானோ நம்பமாட்டானோ ஆயினும் இக்கப்பலோட்டிக்கு நல்ல உபசாரவார்த்தைகூறி இரந்து கேட்பதே உறுதியான காரணமென்று தனது திருவுள்ளத்திலெண்ணி அம்மரத்தினின்றும் எழுந்திருந்து மீகாமனருகேவந்து அவன் இறங்கும்படியாகப் பற்பல நயவசனங்களைப் பேசியவளவில் அவன் மனதிறங்கி நாவாய்மீது யேற்றிக்கொண்டனன்.

கேட்டீரோ பரிட்சித்து மகாராஜனே குசேலமுனிவரும் கப்பலேறிச் செல்லுகையில் மீகாமன் துவாரகையின் கரையருகில் செலுத்தி நிறுத்தினவுடனே பரமபாகவத சிகாமணியாகிய குசேலர் அங்கு இறங்குவாரோடு இறங்கி களிப்படைந்து துவாரகாபுரியைத் தரிசித்தார் தெரிசித்தமாத்திரத்தில் மாசிலா மணிவண்ணனாகிய கண்ணனைக்கண்டு களிகூர்ந்தாற்போல் மனமகிழ்ச்சியடைந்து ஆனந்த குதூகலனாய்ச் செல்லும்போது வழியில் வாயுவேக மனோவேகமாய்ச் செல்லுகிற பரிகளுக்கு ஒதுங்கிப் பதுங்கியும் அசைந்தசைந்து நடக்கின்ற மும்மதக்கரிகளுக்கு அஞ்சி அயலே சென்று நடுங்கியும் விரைந்து செல்லுகின்ற இரதக்குழாங்களுக்குக் குலைகுலைந்து வெகுதூரம் வாடி ஓடியும் மங்கையர் கண்களான வாள்களுக்குப் படாமல் கடுநடை நடந்தும் முன்னும் பின்னும் பார்த்துக்கொண்டே தன் காலடிகளால் நகர்ந்துபோகின்ற எறும்பு, புழு, பூச்சிகள் அகப்பட்டு இறந்துவிடுமே என்று தரையைநோக்கி மெல்லென நடந்தும் யானைக்கூட்டங்களும் பரிகள் கட்டப்பட்டுள்ள மந்திரங்களும் அந்தணர் மந்தணங்களும் கல்லூரிகளும் இரதசாலைகளும் உடையனவாகிய அந்தப் பட்டணத்தின் ஒரு பகுதியைக்கடந்து ஆண்யானைகளும் பிடிகளும் விளையாடுவன சிவந்தகைகளால் நீர்க்குழல் விசிறிகளால் நீரிறைத்து விளையாடல் செய்கின்ற மாதர்களும் மாந்தர்களும் நீராடுகின்ற மலர்த்தடாகங்களும் இயற்றமிழ்ப்புல

வர்களால் இயற்றப்பட்ட பாடல்களின் ஆழமுள்ள கருத்தை ப்போல் ஆழமுடையதாயும் கன்னியருடைய கடிதட தடாகத் தைப்போல யாவரும் படிதற்குக்கூடாத காவலுடையதாயும், இராநின்ற அகழியையும் தாண்டி பல தலைகளுள்ள பாம்பா கிய படுக்கையிற் பள்ளிகொள்ளும் பரம்பொருளான பகவான் தன் பாதத்தில் பாரளந்திட்டகாலையில் வளர்ந்த திருவுருவம் போல் உயர்ந்து ஓங்கிய மதிலின் வாயில்களையும் தடையறக் கடந்து நமது ஐயனைக் காணும்பொருட்டுச் செல்லுகின்ற அரசர்களும் கண்டுவருகிற கொற்றவர்களும் வரும்போதும் போபபோதும் வழியில் நெருங்குகின்ற நெருக்கத்தில் தன் பார்வையும் நுழையாமல் தேகத்தை ஒடுக்கிக்கொண்டு கரங்க ளைச் சிரத்தின்மீது தூக்கிக்கொண்டும் சாலத்துயருடையவ ளு யுள்புகுந்து நடக்கும் இடங்களிலெல்லாம் நெருக்கமா யிருப்பதால் அங்கு போகின்றவர்கள் வருகின்றவர்கள் அணி ந்துக்கொண்டிருக்கிற மலர்மாலைகளின் மகரந்தப் பொடிக ளும் பூசிக்கொண்டிராநின்ற குங்குமக் குழம்பும் கஸ்தூரியும் கலந்து தன் கந்தை வஸ்திரத்திற் செரிந்து அக்கந்தையும் சுகுமாரமாக பரிமளம் வீசாநின்றதாயிற்று.

கேட்டீரோ பரிட்சித்து மன்னவரே! இவ்வண்ணமாகக் குசேலமாமுனிவர் வழிநடந்து வெளியில் வருபவரும் உள் ளே நுழைபவரும் வீதியில் கலகம் விளைப்பவரும் மலர்மாலை சந்தனம் இவற்றை முன்னிட்டுக்கொண்டுபோய் அலங்கரிப் பவரும் கரங்களைத் தட்டுபவரும் காவாட்சிகளை மெல்ல விரல் களால் அசைப்பவரும் நாய்கள்போல் உழல்பவரும் ஆக்கா ளையர்களாயுள்ள வாலிபர்களுக்குத் தேகத்தைவிற்று கலவியி ன்ப மளித்துத் தாங்கள் அவர்கள் கைப்பொருள்களை யெல் லாங் கவர்ந்து உண்டு காலத்தைக் கழிக்கும் கணிகையற் சேரி யையுங் கடந்து இரவலர்க்கு முப்பழங்களோடு அறுசுவை உண்டியை வுதவுகின்ற கொடையாளராகிய வேளாளருள்ள வீதியையும் பொற்கட்டிகளால் அடுப்பமைத்து குமுதமலர்ப் பானையையேற்றி பனிநீர்வார்த்து உலைவைத்து குத்தரிசிபோ ட்டு மாணிக்கத்தியிட்டு பவளக்கோல் விறகிட்டுச் சிறுவீட் டில் சமையல் தொழிலைப் பயிலுகின்ற சிறுமகளிற் விளையாடு கின்ற வாணிகத்தெருவும், கோமயத்தால் மெழுகி மணித்து

களால் கோலமிட்டு பார்ப்பன மகளிர்கள் நிற்க யாககுண்டத்தில் பிறந்த அவிற்பாகங்களை அமரர்க்கூட்டிய அந்தணர்களிருக்கும் யாகசாலை வீதிகளும், அங்கு அந்தணர் சிறுவர்கள் கலைபயிலிடமும் கண்டுகொண்டு இராஜவீதியிற் புகுந்து யாழ் முதலிய கருவிகளின் இசை ஒலியும் மிருதங்க பேரிகை முதலிய வாத்தியங்களின் மங்களவோசையும் சிங்கநாதமும் செவியுறக் கேட்டுக்கொண்டே உள்ளுள்ளே நகையுடையவராயும் வாரும் ஐயா குசேலரே ஜகதீஸ்வரன் தன் அருட்சத்தியோடடியார்களுக் கருள்செய்யு நிமித்தமாக இங்கே யெழுந்தருளியிருக்கின்றான் விரைவில் வாரும் அவன் திருவழகைப்பாரும் ஜனனமரண வாதை இன்றோடே தீரும் யென்று கையாலழைப்பதுபோல உப்பரிகைகளின்மீது ஆடுகின்ற கொடிகளையும் அமலனைக்காணும்படிவந்த அமரர்கள் ஊர்ந்துவந்த விமானங்கள் தோரணங்களில் சிக்குண்டு கிடப்பனவற்றையும் அந்தணர்களுக்குத் தானஞ்செய்யும்போதுவார்த்த நீரானது ஆறாய்வோட அதில் தோணியைவிட்டு அக்கரை சேர்பவர்களையும் மன்னவர்கள் குடை, பிச்சம், விசிறி, ஆலவட்டம், மரகதம், வயிர முதலியவற்றால் இழைத்த மகுடங்கள் வெயிலை ஒட்டுதலையும் மாதர் நுதற்பிறையும் சீதமதிப்பிறையும் வேற்றுமை தெரியாத ஒரு வாலிபன் தன்காதலியின் வாள் நுதலென அதன் நடுவே திலகமெழுதுகிறதையும் கண்ணன் திருவடியும் வரைந்துள்ள சுவர்த்தலங்களையும் கண்டுகொண்டே ஏகும்போது கம்சன் சாளவன் காலயவனன் முதலியோரைச் சம்மரித்த ஜனார்த்தனது திவ்விய சரித்திரத்தை இடங்கடோறும் பண்ணுடன் பாடுகின்றதைக் கேட்டுத் தன் வயிற்றில் உலகை அடக்கிய மாயனைத் தன்னிடையே ஒடுக்கிவைத்திருக்கின்ற வுப்பரிகையையுடைய இந்நகரத்தின் சிறப்புகூறுதற்கு சேடனாலும் ஆகாதென மதித்து இவ்வகையே அந்நகரத்தின் வளப்பத்தை சிறிதுமாத்திரமே அறிந்ததினாலேயே பற்பல காதவழி நடந்த இளைப்பும் வருத்தமும் பசியும் பறந்துவொழிந்தன. நாவில் நீர்சுரந்தது தேகமும் பூரித்தது ஐந்து துந்துபியின் முழக்கமும் காவலர் கழலொலியும் பரிகளின் கனைப்பும் களிற்றிரள் பிளிறலும் தேரினரவமு மிடைவிடாது கோஷிக்கின்ற பரந்தாமனது திருக்கோயிலின் தலைவாயிலை அடைந்தார்.

கேளீர் பரிட்சித்துவேந்தே! அந்த வாசலின் சிறப்பைக் கண்டவுடனே உள்ளக்கமலத்தில் திகைப்புற்று அடங்காத பெருங்களிப்படைந்து அம்மம்மா நான் இங்கு ஒரு கற்பகாலம் வரையிலும் காத்திருந்தபோதிலும் மன்னவர் துன்னும் நெருக்கமுமாருது ஆதலால் எவ்வாறு உள்ளேபுகுவது முடவன் மலைமுடியிலுள்ள தேனைவிரும்பினல் கிட்டுமா? வரவரப் பொழுது கழிகின்றது சும்மா காலதாமதஞ்செய்து நிற்பது காரியமன்று இனி துணிந்து இந்த நெருக்கத்தில் செல்லுவோம் வருபவையெல்லாம் வருக என்று அணுகிப்போமளவில் அங்கு ஓர் அரசனைச் சூழ்ந்து காவலாளிகளாயிரா நின்ற கஞ்சுமாக்கள் வெருட்ட அஞ்சித் தூரமாகச்சென்று மீண்டும் உறுதிகொண்டுபோகாநின்ற ஆழிக்கண்ணபிரானுக்கு திரையளிக்கின்றதினல் மேடாகக் குவித்திருக்கின்ற திரவியக் குப்பல்களை இது மகாமேருவோ? இது கயிலாச பருவதமோ? அல்லது அஷ்ட குலாசமோ? யென்று ஐயுற்றுப் பெரிதும் ஆராய்ந்து சற்று நிற்கும்போது அவ்விடத்தில் ஓரரசன் சேனை பரிவாரங்கள் வர மெல்ல அதில் புகுந்து தேகம் அரைப்பட்டு நசுங்கிக் கால் தரையில் பாவாமல் கையிடிப்புண்டு வெயர்வை ஒழுகக்கண்டு அந்தோ இதில் நின்றும் பிழைத்தது நமக்கு இரண்டாம் பிறப்பென்றுணர்ந்து துவாரபாலகருள்ளயிடத்தை அடைந்து திருநெடுமால் அடியவர் இவர் என்று எவரும் புகழ்ந்துபேச துவாதசத் திருமணக்குறி நெற்றி முதலிய பன்னிரண்டு ஸ்தானங்களில் தரித்து விளங்குகின்ற அவர்களைக் கண்டவுடனே இவர்கள் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவைகுந்தத்துள்ள ஜெயவிஜயர்களே ஆகும். இவர்களை ஒப்பவர் ஒருவரும் இலரென நினைந்து பொத்தல் கந்தையுடனே அந்தத் துவாரபாலர்கள் மூன்நெருங்கி சற்குணமுடையீரே கேட்டருள்வீர்களென்று உரைக்கத்தொடங்கினர்.

ஓ பரீட்சித்து காவலனே! அவர்களை நோக்கி நீலமேனியனுக்கு அடியராக விருக்கின்றீர். என் ஆசீர்வாதத்தைக் கொள்ளுங்கள் உங்களைப் பார்த்தபோதே திருமங்கை மணளனகிய செங்கண்மாலைக் கண்டாற்போல உவகை பெருகுகின்றது. கமலாசனியாகிய கோமளவல்லியைத் திருமார்பிலணிந்துள்ள தேவதேவனது திவ்வியசேவை தினேதினே செய்

கின்றீர்களாதலால் உம்முடைய மேன்மையை எம்மாற் சொல்லி முடியாது. நானோ அந்தணர் குலத்தில் உதித்தவன் என்பெயர் குசேலன் திருப்பாற்கடலில் ஆயிரம் பணமணி முடிகளுடைய திருவனந்தாழ்வான்மீது திருத்துயில்கொள்ளும் யோக நித்திரையை ஒழித்து அடியார்க் கருள்செய்து ஏனையோர்க்கும் அருள் செய்திட அவதரித்தருளிய அருளாளனாகிய ஸ்ரீ கண்ணபிரானோடு இளமையில் கல்வியில் பழகினேன் இந்திரன் பெய்வித்த கல்மழையை ஒரு கல்மலையேந்தித் தடுத்தருளிய அச்சுதன் சந்நிதியில் சென்று எளியேன் வரவை அறிவித் தேழையாகிய என்னை அந்தப்புறம் மூர்த்தியிடஞ்சேர்ப்புவிப்பது உங்கள்கடமையென் றுரைத்தனன்.

கேட்டீரோ பரிட்சித்துப் பூபதியே! இன்னபடி வாசல் காப்பவரோடு கழறிய மொழிகளை அவர்கள் பக்கலி லிருந்த சில மடமையுடையோர் கேட்டுப் பழிக்கவாரம்பித்தனர். எவ்வாறெனில் ஓ ஏழைப் பார்ப்பானே! பகைவரை அடக்கி எமலோகத்துக்கு அனுப்பும் வலியோனான கண்ணபிரானுக்கும் உனக்கும் தாரதம்மியம் எங்கே உனக்குப் பகுத்தறியுங்குணம் சற்றேனும் இல்லை அன்றியும் வீணேபயனின்றி மூப்படைந்தாய் பகைவர் மலிவுகளைத் தேய்க்கும் கழலணிந்த மலரடிகளையுடைய மாதவனது பெருந்தன்மையும் தரித்திரனாகிய உனது தாழ்ந்த தன்மையும் தெளிந்து பார்த்தால் மேருவும் அணுவும்போலும் நன்னீர் கடல் நீரும் சிறுகுழி நீரும் ஒக்கும் நினையும் மக்கழும்போலும் கையில் பொருள் உள்ளவனென்று யாவரும் புகழும் வார்த்தை பெற்றிருக்கவேண்டும். இருகரங்களிலும் மணி அணிக்கடகம் பூண்டிருத்தல் வேண்டும் இருசெவிகளிலும் இரத்தக்குண்டலங்கள் தரித்திருத்தல் வேண்டும். மார்பில் மதாணியும் வேண்டும். உயர்ந்த பட்டாடை இடையில் புனைந்திருத்தல்வேண்டும். அன்றியும் ஏறி நடத்தத் தண்டிகையில் செலவுக்குப் பொருளும் ஏவலாளிகளும் மற்றும் ஆடம்பரங்களும் இராஜசேவைக்குப் போகின்றவர்களுக்கு வேண்டும். இனனுங் கேளும் செல்வர்களாயின் மன்னவர்கள் உபசரிப்பார்கள் வறியோரானால் பிடர் பிடித்துத் தள்ளுவார்கள் இஃதறியாத நீ உன்மேல் உள்ள நட்பை இதுவரையிலும் மறந்திடாது ஞாபகத்தில்வைத்திருப்பானென்று நினையா நிற்கின்றாய் நேற்றுண்ட உணவின்

கையை இன்று மறப்பாகவிருக்க இவ்வாறு நீ உன்னுவது திருடன் இராஜவிழி விழிப்பதுபோல் இருக்கின்றது. ஓர் நகரத்தில் செல்வராயுள்ளவர்கள் எங்குஞ் செல்வர்நேசத்தை விரும்புவார்கள் அவர்களில் தரித்திரர் நட்பு நிலையுறுதவ்வண்ணம் இருக்க மன்னர் பெருமானிடத்து உன்னுடைய நட்பு என்ன பயனைத்தரும். செல்வமுடையோன் முன்பின் பழக்கமில்லாதவனானாலும் நகரத்திற் சிறந்தவனாகின்றான்.

மேலும் காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூக்குற்றங்களில் ஒவ்வொன்றி லகப்பட்டோர்களாகி வேத விதியையும் விலக்கி மந்திரிமார்கள் இடித்திடித்து கூறும் புத்தியையும் கேளாதவர்கள் உனது குறையை யார் செவிகொடுத்துக் கேட்கப்போகின்றார்கள். பாடசாலையில் ஒன்றுகூடி கலைகற்கும் போது பிரியாச் சினேகமுடையராக இருந்தோமென்று கூறினீர் அவ்வண்ணம் பிரியாத நட்பில் பிரியம் இந்தக் கோபால கிருஷ்ண பரமார்த்தனுக் கிருக்குமாயின் உமதிருப்பிடத்திற்குக் காலாகாலத்திலேனும் ஒரு திருமுகச் சந்திரிகை வரைந்தனுப்பலாமே? அல்லது ஒரு தூதனையாயினும் செலுத்தலாமே? இப்போது இந்தக்கோவிந்தராஜன் உள்ள நிலைமையைக் கண்டால் அந்தரவாசிகளாகிய இந்திராதியரும் காணுதற்கு அருமையாகவே யிருக்கின்றது. இந்தப் பூபாலகனாகிய கோபாலன் சகல சாதாரணமாக யாவரிடத்திலும் கூட்டுறவு உடையவனென்று நினைத்துப் பழய சினேகமென்றும் உறுதி கொண்டு மூடுகிச் சொல்லாதீர். என் மொழியைத் தடைசெய்து சமயத்தை நோக்காது பிரயாசைகொண்டு உள்புகுந்தீராயினும் உமக்கு வருவது அவமானம் ஒன்றேயாகும். ஓ விப்பிர குலோத்தமரே! தன்வீட்டு விளக்காயினும் முத்தமிடுவாருண்டோ? உனது குலத்தோர் செய்யும் அறுதொழிலில் ஒன்றாகிய யாகத்தொழிலைச் செய்துவந்த பயனைகொண்டு நல்லாடை உடுத்து அறுசுவை உணவைவுண்டு காலங்கழியாது வேறோரெண்ணங்கொண்டு வழிநடந்து இளைத்துமெய்வாடினாய் ஐயோ இது ஆகாயச் சந்திரனே இங்கேவா வென்றழைத்து வராமல்போனவுடனே அழுஞ் சிறுகுழந்தைத் தனமாகவிருக்கின்றது குபேரனும் அவன் நேசனாகிய பரமேசனும் இந்திரன் இன்னு மற்றுமுள்ள வானவரும் இந்த அற்புத சேவைக்காகக் காத்திருக்கின்ற அருமையைக் காணுதிருக்கி

ருய் போலும் ஓ வேதியனே! இதோ நிற்கிறவன் மகததேச மன்னவன். அவன் கொங்கணதேசத்து கொற்றவன் இதோ வாளேந்தியுள்ளவன் கூர்ச்சர தேசாதிபதி அதோ வாகுவலயமணிந்து அழகுடைய தேககாந்தியுடைய மன்மதன்போல் வருகின்றவன் அயோத்தி அரசன் அவன் காம்போஜன் இவன் அங்க நாட்டிறைவன் அவன் துளுவதேசத்து இறைவன் அவன் பல்லவராயன் அதோ குழாங்கூடி ஒருங்குசேர வார்த்தையாடிக் கொண்டிருக்கிறவர்கள் கலிங்க காஷ்மீர, கேகய, சிங்கள, சோனக, சீன, சீனதாத்தார, நேபாள, வங்க, வங்காள, மராட, மச்ச, குடகு, காந்தார தேசங்களை ஆள்கின்றகாவலர்கள், இத்தனை அரசர்களில் யாரை நீவொத்திருக்கின்ருய் ஓய் கிழிந்தகந்தை இடையிற் சுற்றிய மறையோனே 10000, பொன்களையொத்த மாதர்கள் புடைசூழத் திருவிளையாடலைச் செய்கின்ற தேவதேவனுகிய வாசுதேவன் தரிசனைக்கு நீ பாத்திரனுவாயோ? உன் பிரயத்தனம் கண்ணில்லாதவன் கதிரவனைக்காண நினைப்பதையும் செவிடன் யாழிசைகேட்க முயற்சி செய்வதையும், மூடவன் கடலைக்கடக்கக் கருதுவதையும் நிகராயிருக்கின்றது. ஓ உயர் குலத்தினரே இவ்விமையவர்களும் அரசர்களும் பொன்னுடையோர்கள் ஏவலாளர்கள் உள்ளவர்கள் பூமியுடையவர்கள் ஆதலாலே எத்தனைகாலங் காத்திருந்தாலும் சிறுமையில்லை, இவற்றில் ஒன்று இல்லாத உனக்குத் தகுதியாகுமா? அந்தோ! ஆசை வுனக்கு அளவற்றதாக விருக்கின்றது. பேராசை யுடையவரே தரித்திரம் அனுபவிக்கிற தென்கிற பழமொழியை நீர் இது வரையிலும் கேட்டிலீர் போலும் இனியாயினும் இந்தச் செய்தியை யறிந்து வந்தவழி பார்த்துக்கொண்டு உமது ஊருக்குப் போதல் நலமாகத் தோன்றுகின்றது என்று அங்குள்ள அறிவிலார்கள் உரைக்கக் கேட்க குசேலர் ஆம் ஆம் நமக்கு மார்பில் அணிய மதாணியுமில்லை இடையில் அணிய பட்டாடையுமில்லை பொற் சிவிகையுமில்லை. இன்னும் வேண்டுவன ஒன்றுமில்லை. இப்போது எங்குபோய் இவற்றைப்பெறுவது நான் கந்தையில் கட்டிவைத்திருக்கின்ற அவல் மூட்டையை இவர் கண்டாராஞல் நமக்கு மிக இகழ்ச்சி அதுவுமன்றி சிரிப்புக்கிடம் என்று மனங்கூசி நிற்குங் குசேலரைத் துவாரபாலகர்கள் கண்டு சொல்வாராயினர்.

ஏ பரிட்சித்து மகாராஜனே! இவ்வண்ணம் அங்கிருந்த மடமையுடையோர் கூறியவற்றை யெல்லாம் கேட்டு துவார பாலகர் ஓ மடையர்களே! நீங்கள் இந்த அந்தணனை யாரென்று நினைக்கின்றீர்கள். பொய் என்பது கனவிலும் பேசாதவர் மகா விரதம் பூண்டவர், வேதங் கரை கண்டவர், இவர் யாவரிடத்தாயினும் போகின்றவரோ மிக இனிய வார்த்தை பேசுகின்றவர் யென்று யாம் மனதிற் கொள்ளுகிறோம் பாவியரே! இவ்வுலகத்தில் மானிடப் பிறப்பே பல பிறப்புகளிலும் மேலான ஜனனமாகும். அதிலும் தாழ்ந்தகுலத்தை நீக்கி உயர்ந்த குலத்தில் பிறப்பது அருமை. அந்தணர் குலத்தில் பிறப்பது அருமை அந்தக் குலத்தில் பிறந்த யிவர் நமக்கு ஆசாரியரும் தெய்வமும் ஆவார். அப்படியே பிர்மா முதலிய சகலரும் உரைத்திருக்கின்றார் இப்படியே வேதமூல காரணனாகிய நாராயணன் திருவவதார புருஷ விக்கிரகமாகிய நமது ஸ்ரீ கண்ணபிரான் திருவாய் மலர்ந்தருளவுங் கேட்டிருக்கின்றோம். ஆதலால் இவரைப்பற்றி நாம் சந்தேகிக்க வேண்டியது என்ன விருக்கின்றது. அந்தணர்களுக்கு பூசை செய்ய திரு ஆலயங்களும் கிரகங்களும் சமைத்துக் கொடுப்பவரும், உபநயனம் திருக்கல்யாண முதலியவை செய்ய பொருள் அளிப்பார்கள். கறவைப் பசுக்களும் இன்னும் அவர்கள் விரும்பியவற்றைத் தருபவர்களும், அவர்கள் அருந்த அறுசுவை உணவை அளிப்பவர்களும், புலி, கரடி முதலிய மிருகங்களினாலும் கொடுங்கோல் அரசர்களினாலும் அக்கினியாலும் தண்ணீராலும் கள்வர்களினாலும் இடர் வருமானால் அப்படிப்பட்ட துக்கத்துக்கு ஐயோவென்று இரங்கி விரைந்து பொருள் முதலியவை கொடுத்து அன்பு உண்டாகி பேருதவிசெய்து மேலுமேலும் காப்பாற்றுவோம் என்பவர்களும், இப்பிறப்பில் பல பெருஞ்செல்வம் இடையறாது விருத்தியாகப் பெற்ற பிள்ளைகள் தங்களைச் சூழ்ந்திருக்கவும் மகா பாக்கிய போகங்களை அநுபவித்து மறுமையில் சுவர்க்காதி போகங்களையும் அநுபவிப்பார்கள் இவ்வித பிராமணராகிய இவரை இலேசாக நினைத்து இவ்வண்ணம் பேசிவிட்டீர்கள். இந்த வேதவித்தாகிய மறையவனை முழுஞானியென்று நினையுங்கள் எத்தன்மையா லென்று கேட்பீராகில் மெஞ்ஞானியர்களுடைய இலக்கணங்களும் குடிகளும் கூறக்கேளீர்

நற்குணங்களும் புலன்களிற் செல்லாமல் மண், பெண், பொன் இவற்றின் மேலுள்ள ஆசைகளை வெறுத்த இவர்க்கு பணிகளாலும் பொருளாலும் வேந்தர்களாலும் உம்மாலும் எம்மாலும் உண்டாகும் பயன் யாதுள்ளது சொல்வீர்கள் மேகங்கள் மின்னி இடித்தாலும் பிரசண்டமாருதம் வீசினாலும் எழுகடலும் நிலைபெயர்த்து வந்தாலும் தங்கள் நிலைபெயரார்கள், மனம் நடுங்கார்கள், அவற்றைக்கண்டு நகைப்பார்கள், தம்மைப் புகழ்ந்து நல்ல மணமுள்ள கலவைச்சாந்தை மார்பிலணிந்தாலும் இகழ்ந்து பேசினாலும் விருப்பு வெறுப்பு என்பது அவர்களுக்கு ஒன்றுமில்லை, பூமியில் உள்ள கிழங்கு முதலிய அவற்றைப் பசிவந்தபோது அமுதம்போலப் புசிப்பார்கள், நாளைக்கு வேண்டுமென்று சிறிதாயினும் வைத்துக் கொள்ளார்கள், ஆகாயத்தில் செல்லுதலும் பாதலத்தில் புகுதலும் பரகாய பிரவேசஞ் செய்தலும் உள்ளவிடத்தே எண்ணியவைகளை வரச்செய்தலும் முதலியவைகளாகிய சித்திகளையும் வேண்டார்கள், பெருமை சிறுமை யில்லாதவர்கள் உன்மத்தர்போல் திரிவார்கள் நகைத்திடுவார் கைகொட்டி ஆடிப் பாடுவார்கள் இன்றிருந்த விடம் நாளையிருக்க மனம் பற்றூர்கள். கந்தை அன்றி வேறே உடுக்கார்கள், அப்படிப் பட்டவர்களின் பெருமை இத்தன்மையதென்று யாவரால் மதிக்கக்கூடும், தலை மயிர் விரித்து பீலிப்பிச்சங் கரத்திலேந்தி பாயுடை புனைந்து தவசிகளைப்போல வீணே விஸ்தரிப்பதும் ஞானமென்றுகந்த ஜந்துவற்ற சீவரம்போர்த்து விளங்குவதும் ஞானமல்ல தவம்வேண்டாம் நாமே பிர்மம் என்று பேசுவதும் மெய்யுணர்ச்சி அல்ல என்றுரைத்தார்.

கேட்டீரோ பரிட்சித்து மகாராஜனே! இவ்வாறு அம்மடமையோர்க்கு அறிவுறுத்தித் துவார பாலகர்மேலும் கூறுவாராயினர். ஞானியர்போல் பேசுவார்கள் அவர்கள் போல் வேடம் பூண்பார்கள் சத்கருமம் செய்பவர்களிடத்து சென்று இதை யொழித்துவிடு யென்பார்கள் இவையெல்லாம் பிரமத்தி நிலையென்பார்கள் இவ்விதமாக தாங்கள் கெடுவதன்றி மற்றவர்களையுங் கெடுக்கும் எண்ணம் பூண்பார்கள் பொன் முதலியவற்றின் மேல் இச்சை யுற்றவர்கள்போல் துறவுபூண்டு பின்பு பக்குவமுடையோர்க் குபதேசித்தும் வருவார் அவர்கள் நடக்கையானது ஆற்றில் அடித்துக்கொ.

ண்டு போகும் கரடியைக்கண்டு ஆடென்று விரும்பிப் பற்றிய போது அக்கரடியோடே தானும் அழிந்த கதையொக்கும். மிக்க வறிவுடையவரைப் போலவும், உடலின் பற்றுகளை விடுத்தவர்போலவும், பேசும் வழக்கத்தில் அயர்திணை வினையே அஃறிணை வினையாய்ச் சமையப்பேசியும் அறிவில்லா மயக்கியும், அவர் கைப்பொருள்களைப் பறிப்பதற்கு இவ்வகை உபாயஞ் செய்வார்கள். மேலும் மெஞ்ஞானியராயுள்ளவர்கள் இல்லறத்திலிருந்தும் உண்டு வுடுத்தும் மனைவிமக்களோடு நெருங்கி யிருந்தாராயினும் தாமரையிலைத் தண்ணீர் போல் பற்றற்றவராக விருப்பார். இவர்களுடைய பெருமையை வேதமானது துறவிகளுக்கும் பெருந்தன்மையதாகக் கூறுமிந்த பிராமணர் முழுஞானியாயிருந்தும் சத்கருமமிழந்தவரல்ல. அப்படிப்பட்ட சத்கருமத்தாலேயே இவரது தேகமிளைப்புற் றிருக்கின்றது நூல்களில் திரிலோகத்தில் ஒரு ஞானி கிடைத்தல் மகா அருமையென்று கூறும் எங்களைத் திருத்தி ஆண்டருள இங்கெழுந்தருளினரென் றெண்ணுகிறோம். இவர் சிறுபோதில் நமது மகாராஜருக்குநேசரென்பது உண்மையே ஆகும் அந்த தேசத்திலே ஆசை அதிகரிக்கத் தேடிவந்தனர் அதன்றி நம் அரசரிடத்திலிவர் பெருங்காரியம் ஒன்றுமில்லை. நம்முடைய பாப விமோசனம் ஆகுங்காலம் நேரிட்டதனால் இவரை யின்று கண்டோம் ஆ ஆ இந்தப் பிராமண முனிவரைப் பார்க்குந்தோறும் மனதில் சந்தோஷம் பெருகுகின்றது தேகத்தில் புளகம் அரும்புகின்றது கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருகுகின்றது நாவானது துதிப்பதற்குத் துடி துடிக்கின்றது ஆதலால் நாம் விரைந்து சென்று இப்பொழுதே தம் பெருமானுக்கு இவர் நல்வரவை விண்ணப்பஞ் செய்யவேண்டு மென்று அறியாமையினால் இகழ்ந்துபேசிய மன மூடையோர் வாயடங்கிப் பேசினார்கள்.

ஓ பரிட்சித்து பூபாலனே இவ்வண்ணம்பேசி நிறுத்திக் குசேலமுனிவர் திருமுகத்தைப்பார்த்துக் கூறுவாராயினர் ஓ ஞானச்செல்வரே நீர் இவ்விடம் யெழுந்தருளியதால் குறையெல்லாம் தவிர்ந்தோம் உமது தவப்பெருமையை அஞ்ஞானிகளாகிய இவ்வுலகத்திலுள்ள யார் அறியப் போகின்றார் இச்சிறியவர்கள் உரைத்த வார்த்தையை உமது திருவுள்ளத்

தில் கொள்ளாதீர் சுவாமிகளே சிறிது கொள்வீராகுல் பெரு ந்துன்பக்கடலில் ஆழ்ந்துவிடுவார்கள் கங்கை முதலிய நதிகளில் ஆடியும் தானங்கள் புரிந்தும் பெறும்பலன்க ளெல்லாம் உமது தரிசனம் ஒன்றினுலேயே அடைந்தோம் ஐயா வுமக்கு நமஸ்கரிக்கின்ருேம் சற்று இவ்விடத்திலிருந்தால் மன்னவருக்கு உமது வரவைப் பகர்ந்து காரியத்தை நிறைவேற்றுகின்ருேம் என்று வணங்கிக் கோபுரவாயிலினின்று பொன்ஞற்செய்த மணிகளால் இழைக்கப்பட்ட எழுபத்திரண்டு வாசல்களையுங் கடந்து அங்கு கூடியிராநின்ற மன்னவர்களை நோக்கி நம்மரசர் வீற்றிருக்கின்றது எந்த விடத்தில் யென்று வினவவும், அவர்கள் துவாரபாலர்களே தம்முடைய நாயகிமாரோடு அந்தப்புரத்தில் எழுந்தருளியிருக்கின்ருரென விடைகொடுத்தார். அதுகேட்ட மாத்திரத்தில் சரேலென்று அதிவேகமாகச் சென்று மாதர்கள் காவற்புரியும் மணிவாயிலின் அருகு வந்து நிற்க, அங்கு விளங்குகின்ற பவளத்தூண்கள் நிறுத்தி வயிரவட்டஞ் சேர்ந்து மற்ற மணிகளால் தூலம் நிறுத்தி கட்டியுள்ள மாடங்களுநம் நிலா முற்றங்களுநம் அவ்விடத்து வரிசை வரிசையாய்த் தொங்குகின்ற முத்துமாலைகளுநம் மலர்மாலைகளுநம் பொன்னரிமாலைகளுநம் மணம்வீசி விளங்கிக் கொண்டிருக்கவும் இது ஸ்ரீவைகுந்தமேயென்று தேவர்களுநம் மயங்கத்தக்க மாளிகையையுங் கண்டு சந்திரகாந்தத்தில் அமைந்த தலங்களில் சந்தனம் கற்பூரம்-கஸ்தூரி, குங்குமம் இன்னுமுள்ள வாசனை வீசுகின்ற வர்க்கங்களையுங் கூட்டி பனிநீரிற் குழைத்துப் புரையில்லா மற்பூசி வயிரமேறிய அகிற்கட்டைகளை புதைத்து துத்திநாகப் பளிங்கங்களைப் பரப்பி அதனடுவில் பலமணிகள் அழுத்திய கட்டிலின்மேல் அம்சச்சிறகு முதலியவற்ருல் செய்த மெத்தையில் வெண்பட்டு விரித்து மயிலியற்சாயல் மாதர்களிட்ட படுக்கையில் திருப்பாற்கடல்போலுஞ் சிறப்புள்ளதாகப் பொருந்தி அமுதம்போலும் மொழிகளையுடைய மாதர்கள் கவரிவீசவும், முத்துகளை ஓரத்திலழுத்திய சாந்தாற்றியாகிய விசிறி வொன்றை அசைக்கவும், ஒரு குயில்போலும் மொழியினையுடையாள் ஒருத்தி முறுக்காணிகளை முறுக்கிச் சுதிகூட்டி யாழ்வாசிக்கவும், பச்சைகற்பூரம் லவங்கங்கள் ஏலம் இவற்றைச்சேர்த்து ஒருமாது வெற்றிலைச்சுருளை நீட்ட

வும், பூங்கொடிபோலும் ஒரு சுந்தரவல்லி பொற்படிகம் ஏந்தவும் சேலையொத்தகண்களை நிகர்த்த விழிகளையுடைய ஒரு பொற்கொடி எங்கள் மனதை உருக்குகின்ற வுருவமுடையவுமது வடிவழகை நீரே பாருமென்று குறுநகையோடு கண்ணடி ஏந்திக்காட்டவும், பனிநீர்தெளித்து மணமுள்ள இந்தப் பூச்செண்டைவாங்கி மோருவீரென்று ஒரு தேன்மொழி இமைகொட்டாமல் ஐயன் வடிவழகில் ஈடுபட்டு அவன்மலர்க்கரத்தில் தன்மலர்க்கரம் பரிசிக்கும்படியாய்க் கொடுக்கவும் துடியிடை ஒருத்தி பொற்கமண்டலநீரைத் தாங்கி நிற்கவும், மலர்க்குழலுடைய வொருபெண்கள் நாயகம் விரைபுகையிடவும், ஒரு பிறைபோலும் நுதலையுடைய வொண்டொடியாகிய வுருக்குமணியின் தொடைமீது சிரத்தைவைத்து தன்பால் அன்புடையவர்களுக்கு கொடுக்கும் மலரடிகளை அழகிய சத்தியபாமையின் துடைகள்மீது நீட்டியும் நமது நாயகனாகிய சீதாபிராமன் மனமகிழ்ந்து படுத்திருந்தான்.

வாரீர் பரிட்சித்து மகாராஜனே! அதிகாலையில் அவ்வாயிலில் நின்ற துவாரபாலர்கள் அங்கே காவல் காக்கின்ற மாதர்களை நோக்கி நீங்கள் சென்று உம்முடைய தெய்வநாயகனுக்கு வாயில் காப்பாளர் வந்திருக்கின்றனர் என்று மொழிந்துவாரும் என்றுரைக்க அது கேட்டு மாதர்களும் விரைந்து சென்று பகவானிடத்துக் கொஞ்சுங் கிளிபோல உரைத்தனர் அதுகேட்டு ஆதியஞ்சோதியாகிய அமலப்பிரான் அவர்களை இங்கு அழைத்து வாருமென்றுள் காவல் புரியும் மங்கைமார்களும் தட்சணம் விரைந்து வந்து கூறக்கேட்ட துவாரபாலகர்கள் அனேகமாயிரம் நட்சத்திரக் கூட்டங்களின் மத்தியில் ஒரு பூரணச்சந்திரன் தனது தண் கதிர்கள் பரப்பிக்கொண்டு விளங்கிக்கொண் டிராநின்ற வேதமூலகாரணனைத் தரிசித்துச் சிந்தையுள் மகிழ்ச்சிபொங்க சிரங்களின் மீது வீழ்ந்து தண்டன் சமர்ப்பித்து வஸ்திரத்தை யொடுக்கிக்கொண்டு நிற்க, எதிரில் நிற்பவர்களைப் பார்த்தும் பவளவாய்திறந்து நீர்வந்தகாரியம் யாதென்று மாயப்பிரான் கேட்க உரைப்பாராயினர். கேளீர் பரிட்சித்து மகாராஜனே! கோபால பூபாலனாகிய புருஷோத்தமன் யாது செய்தி யென்று கேட்கவும் துவாரபாலகர்கள் எங்களை வழிவழி அடிமை கொள்ளுமையனே! வேத முதல்வனே! சந்திரகுல தீபமே! காம

னும் வேமனும் பூமனும் காமதகனனும் ஸ்ரீமானேயென்று புகழ்ந்து போற்றியும், காண்பதற்கரிய ஆண்டவனே! துவாரபாலகர்க் கதிபதியாகிய தோன்றலே! ஒரு பிராமண முனிவர் அவர் திருநாமம் குசேலர் யென்றூர் உம்மோடு சிறுவயதில் படித்தவராம் உமக்கு உயிர்த்தோழராம் அவர் தேகமுழுதும் மாமிசம்வற்றி எலும்பு தோன்றும் தோற்றமுடையவராக இருக்கின்றூர் அவர் தேவரீர்மீது வைத்துள்ள அன்பின் உறுதியைப் பகுத்தறிந்து அளக்கவல்லவர் எம்மைப் போன்றவர்களோ? இப்பொழுது நமது அரண்மனையின் தலைவாயிலின் பக்கத்தில் வந்து நின்றூர் இதுவே எமது விண்ணப்பம் என்றூர்கள் இவ்வாறு அவர்கள் கூறிய வசனங்களைச் செவிகுளிரக் கேட்டருளிய ஜகதீஸ்வரன் திருமேனி பூரித்து முகமலர்ந்து கருணைபொங்கி வழியவும் அவர்களை நோக்கி விரைவிற்சென்று இன்று நம் வாயலின் சார்பில் வந்திரா நின்ற தவராஜனுகிய குசேலரை இங்கு அழைப்பீராக என்று திருவாய் மலர்ந்தருளினுர். துவாரபாலர்கள் அவ்வண்ணமே பலவாயில் காவல்களையெல்லாங் கடந்து குசேலமாமுனிவரைக்கண்டு அவரடிகளில் நெற்றி நிலத்தில் படியத் தாழ்ந்து ஓ மாதவச் சிங்கமே மறையவர் குலவிளக்கே சன்மக் கடலைச் சர்வேசனுக் களித்த பூர்வநேசரே உமக்கு வந்தனம் செய்கிறோம் என்று பற்பல துதிகளைக்கூறி குசேலரே நாம் சென்றுமது வரலாற்றை யாதவ குலத்திற்கு ஒரு ஆதவன் போலவதரித் தருளிய ஸ்ரீ மாதவனைக் கண்டு உரைத்தோம் அப்போது அவர்கொண்ட களிப்பின் மிகுதியை ஆயிரநாவினுகிய ஆதிசேஷனுலும் மிகுத்துப் பேசுவதற்காகுமோ! ஐயா அந்தணர் பெருமானே அக்காலத்தில் உமது வரவைக் கேட்டவுடனே தனது மனைவிமார்களோடு மகா விலாசமாக கொஞ்சிக்கொண்டிருந்த இன்பம் முழுவதும் மறந்துவிட்டார். நல்லோர் நட்பைப்பார்க்கிலும் நானிலத்தில் நலந்தருவது ஒன்றுண்டோ அன்றியும் தாய்வரவைகண்ட இளங்குழவிபோல அன்புடையராகி மனத்தில் மகிழ்ச்சி பிறந்து அழைத்துவாருங்கள் விரைவில் என்றனர் நாங்களும் தடையின்றி வந்தோம் இனிக் காலதாமதமின்றி நீர் வரவேண்டும் இங்கு சிறிதுபொழுது செல்லாது நிற்போமானுலவர் தான் இங்கு நேரே வருவார் ஆதலால் நம்பெருமானுக்கு உற்சா

கம் உண்டாக எழுந்தருளக்கடவீர் என்று கைகூப்பி நிற்கக் கேட்ட குசேலர் நடந்துசெல்வதை முன்பு அறிவு சிறிது மிராமல் இகழ்ந்து பேசிய மடமக்கள் கண்டு நாம் என்னகாரியஞ் செய்துவிட்டோம் நாம் பேசிய கடுஞ்சொற்களை நமது இறைவன் அறிவாரானால் யாது தீங்கு நேரிடுமோ என்று நடுங்கி நின்றார்கள்.

ஸ்ரீ குசேலமுனிவர் ஸ்ரீ ராதா ருக்மணி சமேதரா யிருக்கப்பட்ட மணிவண்ணனைக் காணுதல்.

குசேலமாமுனிவர் துவாரபாலர் வழிகாட்ட ஆங்காங்குள்ள சிறப்புகளையெல்லாம் பார்த்து சந்தோஷ சாகரத்தில் மூழ்கி இந்த நகரத்தைப் பார்க்கிலும் மற்றொரு நகரம் பிரமாண்டத்துக்குள் எங்கு மிராது என்று மனதிற் கொண்டு பலவாகிய மணிவாசலைக் கடந்து இராஜமண்டலங்களை கண்டு ஆரணப்பொருளாகிய நாரணக் கடவுளிருக்கும் அந்தப்புரத்தை சமீபித்து அவ்விடங்களில் சித்திர மண்டபங்களை அடைந்து அவற்றி லெழுதியுள்ள கண்ணன் திருவுருவங்களை யெழுதிவைத்ததாக நினையாமல் சாட்சாத் ஸ்ரீபகவானென விரைந்து சென்று நெருங்கி ஆலிங்கனஞ் செய்ய நினைத்தமாத்திரத்தில் சுவாமிகளே இவ்வுருவங்களெல்லாம் மாயப்பிரான்போலச் சீர்திருத்திவைத்த படங்களெனத் தன்னுடன்வந்த துவாரபாலர்கள் மொழியக்கேட்டு அகத்தில் தெளிந்து அப்புறஞ் சென்று நடக்கும்போது நம்மை அடிமைகொண்ட வச்சுதன் இன்னும் ஏன் வரவில்லை யென்று சூரியன் உதயம்பார்க்குஞ் செந்தாமரைப் போலவும் சந்திரன் வரவைக்காணும் அரக்காம்பல்போலவும், மேகங்களின் வரவை நோக்கும் மயிலைப்போலவும், தாயின் வரவை யெதிர் நோக்கும் இளங்கன்றுபோலவும், ஸ்ரீதாமோதரனுதன் வரவைப் பார்க்கும் மெய்ஞ்ஞானியைப் போலவும், தருமத் தண்ணீர் வார்க்கும் இடத்தைக் காணும் தாகமுடையவன்போலவும், மணம்வீசும் தண்டுழாய் மாலையை யணிந்துள்ள அழகன் மறையவன் வரவை பார்த்திருக்க அக் குசேலமுனிவர் அரிவையர் காவல்செய்யும் அந்தப்புர வாயிலையுங் கடந்து

அளவற்ற மங்கைமார் சூழ்ந்திருக்கும் பிர்ம உருத்திராதியர் களும் அணுகுதற் கரிய அவ்விடத்தை யடையும்போது தின ந்தோறும் பசிப்பிணியால் வருந்துகின்ற ஓர் தரித்திரன் புதையலைக் கண்டாற்போலவும் உண்ணும் உண்டியைத் தவி ர்ந்து நிற்கும் ஒருமனிதன் திருப்பாற்கடல் அமிர்தத்தைக் கண்டாற்போலவும் உஷ்ணத்தால் விடாய்த்த ஒரு மானிட ன் கற்பகத்தருவைக் கண்ணுற்றாற்போலவும் ஜகமாயையில் அழுந்திய ஒரு அஞ்ஞானியானவன் பிர்ம்மசாரியனைக் கண் டதுபோலவும் ஆதித்திருவருள் என்கிற மூலப்பிரகிருதியா கிய ஸ்ரீ பராசத்தியென்னும் பெரிய பிராட்டியாருக்குத் தன் திருமார்பை யீந்தருளிய ஸ்ரீ மணிவண்ணனாகிய கண்ணனை சூரிய சந்திரர்களாகிய திருவாழியாழ்வானையும் ஸ்ரீபாஞ்சசந் நியப் பெருமானையும் வலத்தும் இடத்தும் தாங்கிய மூலகா ரண ஸ்ரீ பரப்பிரமமாகிய வாசுதேவனைக் கண்டமாத்திரத்தில் உவகைபூத்து அதிசீக்கிரமாகச் செல்லக்கண்ட புருஷோத் தமனாகிய ஸ்ரீ புண்டரீகாட்சன் பஞ்சசயனத்தை விட்டு எழு ந்து அணைகடந்த வெள்ளம்போல் அன்புபெருக்க குசேல முனிவர் எதிர்சென்று அவரது பொன்னடியில் வணங்கி யெழுந்திருந்து சரேலென்று ஆலிங்கனஞ் செய்துக்கொண் டார்.

கேட்டீரோ பரிட்சித்துப் புரவலனே! பூமானாகிய ஸ்ரீ மான் அந்தக் குசேலருக்கு உயிர்த்தோழனென்று நிலவுல கத்திலுள்ளோர் கூறும் வார்த்தையை நிலைநிறுத்தி யருளி னார் மேலும் இந்தநாள் நான் பாக்கியத்தையுற்றேன் யான் பாக்கியத்தை யடைந்தேன், நான்செய்த தருமம் இன்று பலி த்தது, அறத்தின் பயன் இன்றைபொழுது கிடைத்தது என்று சகல பாக்கியாதிபதியாகிய சர்வேஸ்வரன் திருத்தாண் டவமாடி நின்றான், அவனது மாயையின் வல்லமையை யா வர்தான் அறியவல்லவர்கள், உடனே அங்குள்ள ஒரு வுப் பரிகையில் அந்தணர் பிரானாகிய குசேலமுனிவரை யெழுந்த ருளப் பண்ணிக்கொண்டுபோய்ப் பொற்குடத்தில் நிறைத்து வைத்திருக்கும் புதிய திருமஞ்சனநீரால் அபிஷேகஞ் செய் வித்து ஒற்றாடையால் துடைப்பித்து தவப் பீதாம்பரத்தை அணிவித்துக் கர்ப்பூரம் கஸ்தூரி கலந்த சந்தனக்குழம்பை அவரது திருமேனியிற் சாத்தி முத்துக்களாகிய அட்சதை

யும் இறைத்து மலர்மாலையணிந்து மணமுள்ள தூபங்காட்டி தீபஞ்சுற்றி திருஷ்டிகழித்து அமிர்தம்போன்ற அறுசுவை உணவும் உண்பித்துத் திருவாயையும் கரசரணார விந்தங்களை அலம்பித் தாம்பூலஞ் சமர்ப்பித்து இனிய வார்த்தைகளாக வுபசரித்துத் தனது பீதாம்பரம் விரித்த படுக்கையில் ஏற்றி அன்பு பெருகப்பெருக அவரது மூதுகைத் தடவிக் கொடுத்தும் பின்னரும் தாமரைமலர்போன்ற தமது கரங்களால் கவரிவீசி ஆ ஆ அடியேன் நிமித்தமாக வழிநடந் திளைத்தனவே உமது திருவடிகள் இரண்டு என்று மிகவும் மகிழ்ச்சி அதிகரிக்க மிருதுவாகத் திருவடிகளைத் தடவிக்கொடுத்து வாய்பொத்தி நின்றான். வாரீர் பரிட்சித்துப் பூபாலரே! இவ்வகைப் பல வுபசாரங்கள் செய்தும் தன்னை அறியாது அந்தப் பரமாத்மனுடைய பாதார விந்தங்களில் தனது இதய கமலத்தைச் செலுத்தியிருந்தார் பித்தர் பாலகர்கள் பிசாசு பிடித்தவர் ஆகிய இவர்களது குணத்தை ஒத்து பரம பாகவத ஞானயோக சிகாமணிகள் இருப்பார்களென்று வேதங்கள் முறையிடுவதற்கொப்பத் தனது சித்தத்தைவிட்டு ஸ்ரீதரன் திருவடிக் கமலங்களை அகலாது தியானஞ்செய்து பரம ஞானமிர்தத்திற் புனைந்து அசைவற்று மௌனமாயிருந்தார். ஸ்ரீ குசேலமுனிவர் பூசிய குளவியின் ஓசையைத்தவிர வேறே ஒன்றின் சப்தத்தையும் அறியாத புழுவைப்போல இராநின்ற இந்தப் பரமபாகவதர் தனது மனையாளின் சொற்படி நிலையில்லாத பொய்ச் செல்வத்தையோ விரும்புவார்.

ஓ பரிட்சித்து மகாராஜரே! இந்தக் குசேலமாமுனிவர் எம்பெருமாள் திருவுருவைத் தரிசித்தும் மரகதமலைபோன்ற திருத்தோள்களில் அசையும் வனமாலையின் கணத்தைமோந்தும், நான்முகற்கு நான்குமறைகளைப்பகர்ந்த திருவாய்மொழிகளைக்கேட்டும், மழைவண்ணத் திருமேனியைப் பரிசித்தும், பிரகலாதாழ்வான் முதலிய பேரறிவாளர் புகழ்ந்துரைத்தவையும், உபநிஷதங்களால் பொருள் அறியப்படாததும் ஆகிய திருநாமங்களைத் துதித்தும், தனது ஐம்பொறிகளும் பேரானந்தமுற விளங்குகின்ற குடத்தினுள் தீபம்போலப் பிரகாசித்திருந்தனர். நீரில் உப்பைப்போலவும், கர்ப்பூரதீபம்போலும், சுத்தசாத்வீக சுரூப பரம்பொருளாகிய சுவாமியி

னிடத்துத் தன் மனமானது பசுமரத்தாணியைப்போலக் கலந்திருந்தால் இந்தப் பிரபஞ்ச வாழ்க்கையாகிய வியாதி ஒழிந்துபோக அந்த ஸ்ரீ வாசுதேவனுடைய திரிமூர்த்தியாகிய கண்ணபிரானது திருவுருவமும் தோன்றாது நிற்க இவரது வரவின் செய்கையைச் சொல்லாததற்கு முன்னே உணர்ந்த பரமாத்ம சொரூபியாகிய பகவான் அவரது திருமுக மண்டலத்தை நோக்கி வேத வேதாந்தங்களையெல்லாம் உணர்ந்த மகா தவசிரேஷ்டரே! உம்முடைய தரிசனத்தால் தேகம் பூரித்தேன் ஐயா அந்தணரே! அமரர்களுள்ளும் அந்தணருள்ளும் அரசருள்ளும் நான் பெற்றபேறு யார் பெற்றார்கள், இனி யார் பெறுவார்கள். நீர் இப்போது என்னிடத்தில் வைத்த தயைபோல வெப்போதும் வைக்கவேண்டும். ஓ சாந்தகுணமுடையவரே! நான் எப்போதும் உம்மை நினையாத காலமில்லை இப்போதும் நினைத்துக்கொண்டு தான் இருந்தேன் உமது சிநேகத்தைப்பார்க்கிலும் மற்றொன்றில் எனக்குப் பிரீதியில்லை ஐயா வேதமுதலிய கலைகள் முழுமையுமுணர்ந்து தருமாதருமம் பார்த்து இதுநன்று இதுதீது என்றுணர்ந்து தாமறிந்ததுபோலவே பிறர்க்கும் அறிவுறுத்துமறிவுடையோர் நேசத்தை மறப்பவர்க ளிப்பூமண்டலத்தில் நாயிலுங் கீழ்பட்டவர்களாவார், நல்லவர் சொல்லில் விருப்பமுறுவதும் அவர்களைக் காண்பதுவும் அவர்களுக்கு ஒருதவி செய்வதும் அவர்களைப் புகழ்வதும் நன்றென்று ஸ்ரீ பாஞ்சராத்திரம் ஆகமம் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கின்றது. ஆன்றோர் பொன்னுள்ளவன் பூமியுள்ளவன் புத்தியுள்ளவனானாலும் நட்புடைய நல்லனாயின் அவன் பயனுடையவனல்லன் ஒருபொருளு மில்லாதவனானாலும் சினேகமுடையனானால் அவனுக்கில்லாத பொருளும் அவற்றால் உண்டாகிய பயனும் உண்டோ பிரியரே பேயோடு பழகினும் பின்பு அதைவிட்டு பிரிதல் பிரயாசையென்று மேலோர் உரைக்கின்றார். மேலோர்களானாலும் முன்செய்த தவமிருந்தாலன்றி நல்ல சினேகரைப் பெறுவாரோ நேசம் அவ்வளவு அருமையாயிருக்க இலேசாக வொருத்தனுக்குக் கிடைத்தால் இகழ்ச்சி செய்வார்களோ ஒருவனுக்கு நல்ல சினேகமிருந்தால் நல்ல வழியில் தன்னையும் நடப்பிக்கும் சுவர்க்காதி போகங்களினும் மனஞ்செல்லாது சாஸ்திரமுணர்ந்த சாந்தகுண

மூடையவருடைய நடத்தை காணக்கிடைத்தலும் அரிதாகும், அவ்வித நண்பே தேடக்கிடையாத திரவியமாகும், மேலும் சித்திக்கும் முத்திக்கும் வித்துமாகும்.

இஃது இருக்கட்டும் உமக்கு திருமணம் ஆயிற்று, உமது தேவியார் நற்குண நற்செய்கையை யுடையவரா யிருக்கின்றரோ, உம்மை தன்னுயிர்போல் பாதுகாக்கின்றரோ, உம்முடைய வரவுக்கு ஏற்ற செலவு செய்பவரா, உமது சொற்படி நடப்பவரோ, என்ன தரித்திரம் வந்தபோதிலும் அக்கம் பக்கத்தார்க்குத் தமது குறையைச் சொல்லாதவரோ இதுவரையிலும் பலபுத்திரர் பிறந்திருக்கவேண்டுமே, தகப்பன் என்ன தவத்தைச் செய்தானே என்னும் பிள்ளைகள் உனக்கு எத்தனை உண்டு, அப்பிள்ளைகளுக்கு அழகான ஆடைமுதலியவைகள் வாங்கித் தந்தீரோ உபநயனம் முதலிய சத்கருமங்கள் செய்து முடித்திரோ, உமது தேவியார் மகிழ புத்திரர்களைக் கற்றுணர்ந்தோர் புகழக் கலைகற்பித்தீரா, ஸ்நானம், சந்தி, ஜபம் முதலியவைகள் நன்ருக நடக்கின்றனவா இவைகளைக் குறைவரச்செய்ய உமது தேசம் செவ்வையாக இருக்கின்றதோ, வேதோபநிஷதங்கள் வைத்தியானம் சிதருமல் ஒருவழியே நின்றதா உமது ஊரில் நின்று எமதிடத்திற்கு வருபவரால் உமது க்ஷேம சமாசாரங்களையெல்லாம் நேற்றையவரையிலும் விசாரித்துக்கொண்டிருந்தேன் வெகுநாள் சென்றபின்பு இப்பொழுது கூடினேம் சிநேகமில்லாதவர் நெருங்கி யிருந்தபோதிலும் நட்புடையவராகார், கூடிபிரியாதவர்கள் தூரத்தே யிருந்தபோதிலும் அன்பு நீங்கார் ஐயரே நீர் குடியிருக்கும் அழகிய நாட்டில் அதிகமழை பெய்யும் நாம் இருவோரும் கல்விச்சாலையில் வாசிக்கும்போது பேசிய வசனங்களெல்லாம் ஞாபகமிருக்கின்றதா, ஒருநாள் நமது குருநாயகனுகிய சாந்திப முனிவருடைய பத்தினியாகிய நமது தாயானவள் நம்மைப்பார்த்து அமுது சமைப்பதற்காக எரிகரும்பு கொண்டுவாருங்களென்று கட்டளையிட்டவுடன் உடனேபோய் விறகொடித்துக் கட்டியெடுத்துக் கொண்டபோது ஆகாயத்தில் மேகங்கள் கவிந்து பரந்து மின்னிகுமறி யிடித்து மழை தாரையாக விடாதுபெய்ய அப்போது நிற்க யிடமில்லாமல் குருந்தம், புன்னை, கொன்றை முதலிய அடிகளில் திகைத்து நின்றேம், அப்பொழுது நமது தேக

முழுவதும் நனைந்து விறகுகட்டும் நனைந்து குளிரில் நடு நடுங்கியு மிருந்தோம், மேலு மேலும் விடா மழை பெய்ந்த தினால் வெள்ளம் பெருகி முதலில் காலளவாய் பின்பு கணைக் கால் முழங்கால் அரையளவாயினது அதுகண்டு இன்னும் மாரிவிடாமல் பெய்கின்றதே நாமென்ன செய்வோமென்று நாம் உள்ளத்தில் யோசித்துக்கொண் டிருக்கும்போது ஒரு குளிர்காற்று வந்து கடுகிச் சுழன்றடித்து அதன்பின்பு வருவ தற்கு வழிதெரியாது மயங்கி யிருக்குங் காலையில் சந்திரோதய மாயிற்று அன்றிரவெல்லாம் அக்கானகத்தே தங்கியிருந்து சூரிய வுதயமானவுடனே நாம் ஊர் நோக்கி வரும்போது நமதாச்சாரியரான சாந்திபமுனிவர் நம்மைத்தேடி ஐயோ நமது மாணுக்கர்களாகிய பிர்மாச்சாரிக ளிருவரும் எங்குசெ ன்றுர்களோ என்னபாடு பட்டார்களோ என்று இரங்கிவந்து கொண்டிருக்கும்போது நாம் கண்டு வணக்கஞ்செய்து நிற் கக்கண்ட நமது குருராயர் நம்மைப்பார்த்து சிஷர்களே! என் னிடத்துக் கற்கும் மாணுக்கர்களில் உம்மைப்போன்ற புனி தர்கள் எவரிருக்கின்றுர். என்னிமித்தம் நீங்கள் மழையில் நனைந்தீர்கள் அதனால் வருத்தமிக கொண்டீர் இதுவே யெண க்குக் குருதட்சணையாகும் என்றுரைத்தும் மேலும் உங்களுக் குக் கல்விப்பொருள் வாய்த்ததுபோல் செல்வப்பொருளும் கற்புடைய மனைவியரும் மழலைப் பிள்ளைகளும் நல்வுறவினர் களுடன் தீர்க்காயுசும் உண்டாகக் கடவதென்று ஆசீர்வதி த்து தமது கிருகத்திற் அழைத்துப் போயினரே இவையெ ல்லாம் உமக்கு ஞாபகம் இருக்கின்றனவா சகல பற்றுக்களை யும் ஒழித்த மேலோரே பலநாள் சென்று என்னை நாடிவந் திரே யென்ன கொண்டுவந்தீர் அதனை இப்பொழுது தருவீ ராயின் சாலவும் நன்று நான் தின்பதற்குப் பட்சணங்கொ ண்டு வருவீரென்று என்மனம் அதனையே நாடிக்கொண்டிரு க்கின்றதென்று கபட நாடக சூஸ்திராவதாரியாகிய கண்ண பிரான் வினவியருளினர்.

வாரீர் பரிட்சித்து மகாராஜனே! இவ்வாறு வினவிய நமது அரும்பெறவடிகளாகிய நந்தநந்தனன் சிறிது நின்று மீண்டும் ஓ நட்பினரே! நீர் சிற்றுணவு இல்லாமல் வருவீ ரோ? உமது தேவியாரும் வெறுங்கையோடு போய்வாரும் என்பாரோ? எதோ நீர் கொண்டுவந்ததை அளிப்பீரென்று

செந்தாமரை மலர்போன்ற தனது கரத்தை நீட்டக் கண்ட குசேலர் நிதானித்துப் பாலன்னம் என்பவர்க்கு புளித்தகாடிச்சோற்றைக் கொடுப்பதுபோல இம்முழுமுதற் கடவுளுக்கு அவலையா நாம் கொடுப்பதென்று சும்மாவிருந்தனர். அது தெரிந்த சர்வக்யன் குசேலன் தனது பக்கத்தில் பலநாள் கண்ட கந்தையில் முடித்துவைத்துக்கொண்டிருக்கும் சிறிது அவல் மூட்டையைக்கண்டு முடியை அவிழ்த்துநோக்கி எனக்கு நன்றாக இன்றையதினம் வாய்க்காத அரும்பொருள் வாய்த்ததென்று அண்ட சராசரங்களையெல்லாம் பிரளயகாலத்தில் விழுங்கிய ஸ்ரீபரஞ்சோதியாகிய கண்ணபிரான் தனது திருவுதரத்திட்டு குதப்பி இது நல்ல உருசிகரமாக விருக்கின்றது நூதனமாக இப்போழ்துதான் இடித்ததாக தோன்றுகின்றது கடையில் வாங்கினால் இப்படி நெய் மணத்துக்கொண்டிருக்குமோயென்று அடுக்கு உறிகளில் ஆய்ச்சிமார்கள் சேர்த்து வைத்திருந்த வெண்ணெயையும் தயிரையும் வாரிவுண்டதுபோல ஒருபிடி அவலையும் உண்டு இதற்கு வெல்லஞ் சேராமலே யிவ்வளவு சுவையுள்ளதாயின் இதன் அருமை பெருமையை நம்மால் சொல்லத்தரமோ என்று தவறி கொடிற்றில் ஒதுக்கப்பட்டிருந்த சிலவூரில் சுவைகொடுக்கச் சுற்றிருத்தி மென்று மென்று அருந்தும்போது பலதரம் சிரத்தை யசைத்தும் பெரிய பிராட்டியாருடைய குமுதவாய் தேனூறலைச் சுவைத்து உண்ணும் பவளவாயால் ஐயா குசேலரே! நமக்கு இவ்வவல் மிகவிருப்பமென்று முன்னம் யாவராயினும் சொல்லக் கேட்டிருக்கின்றீர்களோ என்று முன்னுளமரர்களுக்கு அமிர்தத்தை வுண்பித்த அயன் அன்பராகிய குசேலருடைய அன்பையுங் கூட்டி உண்பதுபோலத் தின்றுவிட்டு மற்றொரு பிடியெடுத்துத் தனது வாயிலிடப் போகுங் காலத்தில் உருக்குமணிப் பிராட்டியார் வெகு பரபரப்புடனே ஓடிவந்து பரமஞானிகளுடைய இருதய தாமரையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுடைய கரகமலத்தை தனது நாயகனென்று சுதந்தரத்தால் தனது கைத்தாமரையில் பிடித்துக்கொண்டாள்.

இவ்வாறு நமது திருத்தாயாராகிய உருக்குமணிதேவிப்பிராட்டியானவர் ஒரு ஆண் யானையைப் பெண் யானையானது தனது துதிக்கையால் சுற்றிக்கொள்வதுபோல் பற்

றிக்கொண்டனள் என்று ஸ்ரீ சுகப்பிர்ம முனிவர் உரைத்த அளவில் இப்பரதகண்ட பூமண்டலத்தை ஆளும் பரீட்சித்து மகாராஜர் கைகூப்பித் துதித்து வினவுவாராயினர். ஓ தேசிகரே! இப்பொழுது தேவரீர் எடுத்து உரைத்தது மகா அற்புதமா யிருக்கின்றது கற்பிலக்கண சாத்திரத்தில் கற்புடைய மனையாள் தனது நாயகனுக்கு வேண்டிய பணிவிடைகளை அவன் விரும்பியபடி செய்வதே அல்லாமல் கணவன் மகா இஷ்டத்தோடு உண்ணும் உணவைத் தடுக்குங் காதலியின் ஒழுக்கமும் நல்ல இயல்பினை யடைவாயென்று கூறுகின்றதே பாற்கடலில் பிறந்த விஷத்தை சிவபெருமானிடம் தேவர்கள் வருந்தி முறையிடுங் காலையில் அவர்களுக்கு க்ஷேமகர முண்டாகப் பருகிய காலத்தில் உமாதேவியாரும் தடுத்ததன்றோ பிணியால் வாதைப்படுகின்ற நாயகன் ஆயுள்வேதியர் தடைசெய்ய் அபத்திய வுணவுகளின் மேல் ஆசை கொள்வானாயின் அப்பொழுது மெல்லென இது தீது யென்று உரைத்தலும் மகா அருமை ஆயிற்றே நாயகனுக்கு பணிசெய்வதில் ஊழியக்காரியைப் போலவும், அறிவில் மந்திரியைப் போலவும், அன்பில் தாயைப்போலவும் அன்றோ இருத்தல் வேண்டும். அவ்வண்ணமிருக்கத் தனது கணவன் அருந்துவதைத் தடைசெய்தது என்ன சொல்லுமையா யென்று வினவச் சொல்லுகின்றார். ஓ புரவலரே! ஸ்ரீ மகாலட்சுமியின் அம்சத்தில் அவதரித்து இலக்கணங்க ளெல்லாம் அமைந்து புகழ்பெற்ற சவுந்தரவதியாகிய உருக்குமணிப் பிராட்டியாரும் நாதனுக்கு மனவருத்தம் வரச் செய்வாரோ? பல சாஸ்திரங்களையும் உணர்ந்த அந்த அந்தணர்க்குப் பெருமகிழ்ச்சி யுண்டாக ஒழியாத பெருஞ் செல்வம் இவ்வுலகத்தில் உண்டாகவேண்டுமென்று ஸ்ரீ பரந்தாமன் தனது திருவுள்ளத்தில் சங்கற்பித்து ஓர்பிடி அவலெடுத்து திரு அமுது செய்தாரென்று அறிந்துகொண்டு இவ்வொருபிடி அவனுக்கே பெருஞ்செல்வம் பொருந்துமானல் மீட்டும் ஒருபிடி யெடுத்து மனமகிழ்ந்து தின்றால் பல நாளும் அம்முனிவர்க்கு அடிமையாய் அவர் சொல்லும் பணிவிடைகளை கடவாமல் திருநாதன் அமரவேண்டி முடியும் என்று தனது உள்ளத்தில் அந்தக் கருத்து பிறக்க இயற்கைமனம் பொருந்தியகுழலையும் குழலிசை யாழிசை குயில்வோசை தேன்கலந்த அமு-

தின் சுவை யிவற்றைப் பழித்த மொழியையு முடைய அவ் வேதவல்லி வேதநாயகனது திருக்கரத்தைப் பிடித்துத் தடுத்தனள். அன்றியும் அத்தொழு குலத்தானது அழகிய கிருகத்திற்கு வேண்டுவது செல்வம் ஒன்றுதானே அவர்க்கு பணிவிடை செய்யவேண்டிய தில்லேயே ஆதலினுல் தன்னுயகனுக்குப் பொருந்தியபடி செய்தாரே அல்லது மற்ருென்று செய்தாரோ? எம்பெருமானும் தன்பால் அன்புடையோர்க்கு இது அருளத்தகும் தகாதென்று தன் பட்சத்திலாயினும் எண்ணத்தக்கரோ? இவ்வுலகத்தில் ஒருமகானுபாவன் தன்னேயறியாது சிறிது தர்மம் செய்தானுயினும் சுவர்க்கத்தில் பெரும்போகத்தை அனுபவிக்கின்ருனுனல் குசேலருக்கு இது ஒரு பெரிதோ பகவானுடைய திருவடியை மறவாது வைத்திருக்கும் இருதயமும் சேஷ்டைகளற்ற பொறிகளும் உடைய மாதவரல்லவா என்று மீண்டும் உரைப்பாராயினர்.

ஓ வேல் வேந்தே? தனதுதேவியால் தடைபட்டு நின்றுமிருந்த அவலே அவரது கந்தையில் தானே முடிந்துவிட்டு முன் தின்ற ஒருபிடியவலிலேயே மகிழ்ச்சியுடையவராய் முனிவரை பலதரம்துதிசெய்து உபசரித்து இரவில் பள்ளி அலங்கரித்து உதவ அதில் பள்ளிகொண்டு பகவானுடைய திருமாளிகையில் அந்தபுர வேடிக்கையைகண்டதனுல் பேரானந்தம் ஒழியாமல் குடிகொள்ளவும் நித்திரை செய்தனர். மறுநாள் அருணேதயத்திற்குமுன் நித்திரை தெளிந் தெழுந்திருந்து பலகடமைகளேயும் முடித்துக்கொண்டு தெய்வநாயகனே ஒன்றுங்கேளாமல் பொருள்மிகுதியும் பெற்றவர்போல நினேந்து தன் ஊருக்குப் பிரயாணப்பட அப்போது ஆதிமூர்த்தியும் தன் அணிவாயில் வரையிலும்வந்து ஆர்வமேலிட்டு அந்தணரது அடியில் வீழ்ந்து வணங்கிட மகிழ்ந்து ஆசிகூறித் துவாரபாலர் வாயிலேக்கடந்து அப்பால் செல்லும்போது பகைவரது மணிமகுடங்களே மிதித்துக் கலங்கச் செய்கின்ற வீரகண்டந்தரித்த திருவடியையும் துளபமாலேயை யணிந்த திருத்தோள்களும் உடைய தேவர்பெருமானுர் கண் களிகூர்ந்து தமது அரண்மனேயின் திருமாளிகையின் அந்தப் புறத்தில் செல்ல அங்கிருக்கும் மின்னிடை மாதர்களும் கண்டு அவர்களிற்சிலர் மதிவதனங்களேச் சாய்த்துக் கொள்பவர்களும், சிலர் உதட்டைப் பிதுக்குபவர்களும், தோழிமார்களே

வெருப்பவர்களும் சிலர் முருக்கித்திரும்பி நடப்பவர்களும் ஆகி நன்றுநன்று வந்த பிராமணருக்கு ஒன்றுங் கொடாமல் மகா பிரீதியுடைய நேசனைப்போல ஊராரறியப்போய் எதிர் கொண்டு காலில்வீழ்ந்து அலங்கரித்து அவர் கொண்டுவந்த அவலைமாத்திரம் வாங்கித்தின்று போவென்றுரைத்தார் பார்த்தீர்களா யென்றும் சிலமாதர்கள் பார்த்தீர்களா இந்தப் பார்த்தசாரதி பண்ணிய வேலையை அனேக மகுடமாந்தாதிக ளெல்லாம் தமது சேவைக்குக் காத்திருக்கப் பாராதவனாய் ஒரு பார்ப்பானை யெதிர்கொண்டு பணிந்து கொண்டாடி யாதுந் தராமல் அந்தோ வீணாகப் போவென்றான் இப்புருஷோத்தமன் கீர்த்தியில் மகாமேன்மை பெற்றவர்தான் என்றும், சில மடந்தைமார்கள் அம்மம்மா அந்த மாயவன் தன்பால்வந்த ஏழையாகிய பிராமண அதிதியைக் கண்டவுடனே பூரண அன்புடையவனைப்போலக் கட்டி அணைத்தான் தொழுது தொழுது முகமன் கூறினான் பள்ளிமீ திருத்தினான் புகழ்ந்தான் முடிவில் ஒன்றும் கொடுத்திட்டவன் அல்லன். பொழுது விடிந்தும் விடியாததற்கு முன்னே உமது ஊருக்குப் போய்வாருமென்றான். இது நல்ல நாடகந்தான் என்றார்கள். சில பூவைமார் ஐயோ எளியன் பாவம் இத்தனை தூரம் ஏன் வந்தான் வாயாரத் தித்திக்கப் பேசிக் களிகூர்ந்து ஓர் காசும் ஈயாமல் செல்லுகயென்றான் ஆதலின் இனி நல்லோர் இவன் திருவாய் மொழியை உறுதியாகக் கொள்ளார்கள் என்றார்கள் சிலபாவைமார் இவ்விப்பிர குலோத்துங்கன் மகா பிரயாசையோடு காடு நாடு கடந்து நெடுநாளாக வறுமை ஒழியுமென்று மிக ஆவலோடுஎண்ணங்கொண்டுவந்தார் ஐயோ பாவம் இங்கு வொருவேளைச் சோற்றுக்கே வழியில்லை இதுதானோ ஜனக ஜனந்தனாதிகளாகிய மகான்கள் புகழும் புகழ்ச்சியென்றார். சில மங்கைமார் குன்று குடையாயெடுத்த இந்தப் பாலகிருஷ்ணர் பரம தயாளுவைப் போல எதிர்சென்று எனது உயிர்த்தோழரே யென்று நயமொழிபேசி அவர்கொண்டுவந்ததையும் வாரித் தின்றுவிட்டு வாயலின் அளவே விட்டுவிட்டு நடந்துபோகச் செய்தாரே இந்தக் கருணைக்கடலாகிய கண்ணபிரானுக்கு என்னகுறைவு யென்றார்கள். சிலர் அரிவைமார் இந்த அந்தணர் முற்பிறப்பில் தவஞ்செய்தவர் அல்லவென்று நினைக்கின்றோம் ஏனெ

னில் கங்காஸ்நானம் செய்தும் கர்மம் தொலையாததுபோல லட்சுமிபதியைக்கண்டும் காலநடையாக செல்வதைப் பாருங் கள் என்றார்கள். சில தெரிவைமார் சரிதான் அண்டங்களை யெல்லாம் வாரியுண்டருளும் பெருவாயாகிய இந்த ஜகநாத ருக்கு அதுவும் போதாதென்றல்லவோ அந்த சுவர்க்காதி பதியாகிய இந்திரனுக்குப் படைத்த ஆராதனைப் பொங்கல் களையெல்லாம் அமுதுசெய்தும் ஆயர்பாடிகிருகத்தில் அனை தயிர் வாரியுண்டும் யாராவது யாசகர்வந்தால் அதையும் பலா த்காரமாக வாங்கித்தின்பது என்றார்கள். சில காரிகைமார் இத்தேவதேவன் வெளியில் பார்த்தால்மாத்திரம் பார்ப்பவர் களுக்கு அகண்ட அயிஸ்வரியவானைப் போல காணப்படுகின் றானே யல்லது உள்நுழைந்து பார்த்தால் எல்லாம் வெட்ட வெளிதான் என்றார்கள் சில மடந்தைமார் ஆம் ஆம் அக் கைமாரே உலகாள்பவர்கள் தேவிமார்களானாலும் அவர்கள் கைகளில் தரிப்பது மண்வளையல்தானே யென்றார்கள் சில பேதையர்கள் இந்த மறையவன் மேல்வைத்த தயையெல் லாம் அறிந்தோம் கையில் அணிந்துக்கொண்டிருக்கும் கங்க ணத்தைக் காண்பதற்குக் கண்ணாடியும் வேண்டுமோ ஒருவே ளை அன்னம் உண்டது மலையைத் துளைத்து எலியைப் பிடித் ததுபோ லாயிற்றென்றார்கள் சில வனிதையர் இந்தப் பிராம ணைத்தமருடைய மனைவியும் மைந்தர்களும் வருவார் பொன் னொடும் பொருளோடு மென்று வழிபார்த்துக்கொண் டிருப் பார்களே இவர் கந்தையன்றி வேறொன்று மில்லாது செல கின்றாரே இதுதானோ உலகரட்சகம் என்றார்கள் சிலமாதர்க ளெவ்வளவு செல்வமிருந்தாலும் கொடுக்க மனம் வருமோ இக்கபட நாடகனுடைய பேச்சினால் மதிமயங்கி மரியாதையா யொன்றுங் கேளாமல் மறையவரும் பித்தம் பிடித்துப் போகி ன்றார் அவர் நேசரென்று வாயாற் பந்தலிட்டு திரும்பி வரு கின்றார் இந்தப் பூபதியும் கண்டீர்களோ இப்படிப்பட்ட சி னேகம் இருந்தென்ன இராமற் போய்தான் என்ன என்றார் கள் சிலமடமாதர் இந்த வேதியர் என்ன நினைத்து வந்தா ரோ நமது இராஜகோபாலர் யாது கருதியிருக்கின்றாரோ பக வான் செய்யும் மாயை யார்தான் அறிவார்கள் நாம் வாயில் வந்தவற்றைப் பேசுவதனால் பயனென்ன அப்படி நாம்பேசி னாலும் நமக்கு அறிவாகுமா இவ்விஷயம் தம்மையும் தலைவ

ளையும் உணர்ந்த ஞானிகளுக்கே புலப்படா தென்று வேத புருஷனே உரைப்பானானல் நாம் தரத்தில் ஆகுமோ என்றார்கள்.

ஓ பரிட்சித்துவே! இவ்வண்ணம் மாதர்கள் பலவாறாக பேசிக்கொண் டிருக்கும்போது குசேலமுனிவர் துவாரகாபுரியின் நெடுந் தெருக்கள் பல கடந்து சென்று கடலையும் முன் போலத் தாண்டி தான் வந்த வழியை யடைந்து நடக்கும் போது ஸ்ரீ கண்ணபிரான் திருவருளினாலே விரத முதலானவைகளாலே மிகவும் இளைத்து மெலிந்த தன் திருவுளம் பூரித்து பழங்கந்தையும் பீதாம்பரமாகி கண்டத்தி லணிந்திருந்த துளபமாலை இரத்தினமாலையாய் விளங்கிற்று மேலும் காதில் நூதனமாக மகரகுண்டலங்களும் கையில் உள்ள பவுத்திரம் கணையாழியாயும் அதிபராக்கிரமும் மன்மதனும் இச்சிக்கும் கட்டழகும் ஆகி வழி நடந்த இளைப்பும் போய் மகிழ்வடைந்துச்செல்லச் செல்ல வெயில் குளிர்ந்து தென்றற்காற்று வீசக் கண்டு இது சர்வாந்திரியாமியாகிய ஸ்ரீ கோபால சுவாமியின் திவ்விய சங்கற்பமென் றறிந்துகொண்டனர் பின்னர் யானை இரதம் குதிரை காவலர்கள் உடைய பல மன்னர்கள் வந்து எதிர்கொண்டு தாள்களிற் பணிந்து துதித்து அன்பில் வழி பாடுசெய்து முனிராஜரே இவ்விரதத்தின்மேல் எழுந்தருள வேண்டுமென்று வேண்டி நிற்கப் பொன்மயமான மகம்மேருவின்மேல் உதய சூரியன் உதித்தாப்போல் ஒரு பொற்றேர்மேலேறியருளினர் அப்போது விண்ணவர் இம்மண்ணுலகம் மறைந்து போம்படி ககனத்தில் மலர்மாரிசொரிந்து களித்து ஆர்த்தார்கள் ஆகாய துந்துபி முழங்கிற்று இவ்வோசைகள் அண்டகோளகை யதிரும்படி பேரொலி செய்தன அன்றியு மந்தரத்தில் அரம்பையர்கள் மின்னல்கள் நடிக்கின்றாற்போல நடித்தனர் மேலும் பரமாத்மாக்களாகிய பிரகலாதாழ்வார் பராசரபகவான் சவுனகமுனிவர் வேதவியாசர் அம்பரீஷன் புண்டரீகர் முதலியோர்கள் விரவி நின்று துதித்தனர் இவ் வாடம்பரங்களை யெல்லாங்கண்டு அச்சமுற்று இது ஆதிசேச வணுகிய ஸ்ரீ வேதநாயகனது திருக்கூத்தென்று தமது திருத் தாமரையில் அப்பரம புருஷனது திருமலரடிகளை மறவாது செல்பவர்க்கு முன்னும் பின்னும் அரசர்கள் ஏவலாளர்கள் போல் அணியணியாய்த் தம்மைக் கைகூப்பித் தொழுதுவர

வும், கரி பரி காலாள்களாகிய சேனைகளும் சூழ்ந்து வாட்படைகளைத் தாங்கிவரவும் தாம் தமது ஊர்செய்த தவந்தான் இதுவென்று காண்பவர் உரைக்கவும் ஊர்ப்புறத்தில் வந்து தங்கினார் யாவராலும் வெறுக்கத்தக்க பழங்கந்தையை இடையிலணிந்த இந்த விரதியர் இவ்வளவு மேன்மைபெற்றுடையவரானால் அவரது தவத்தினளவு யாவரால்தான் புகழக்கூடும் என்று சுகப்பிர்ம முனிவரை வணங்கி மற்றைய சரித்திரத்தையும் நடத்தியருளவேண்டும் எனக்கேட்க மீளவும் சுகப்பிரம முனிவர் உரைப்பாராயினர்.

2-வது குசேலர் துவாரகையைக் கண்டு தன்னகர்ப்புரமடைந்த அத்தியாயம் முற்றிற்று.

மூன்றுவது அத்தியாயம்

குசேலர் செல்வநுகர்ந்து பரமபத மடைந்தது.

வேற்றுவி வெண்டுறை.

கருங்கடலினடுவெண்ணெழிகதிரெனக்கார் நிறத்துகணிகதிர்பக்காமற்
பெருங்கனகவரையெனச்செம் பொன்னுடைநான் றபுயம்பிறங்கபாயல்
வென்றிவாளரவமும் தொடரமென்றுமரை
துன்றுமாமங்கையுந் தொடரவாய்விட்டெழூஉ
மன்றவேதங்களுந் தொடர்வான்சுவையமிழ்
தொன்றுசெந்தமிழ்தொட ரொருவர்பின்தொடர்தரச்
சென்றவன்றிருவடி தேருவார்யாருமே.

கலித்தாழிசை.

நாமன்நறுவிரைத்துளபக் கண்ணியனைப்புண்ணியனை
மாமகன்தன்கொழுநனை வழுத்துவீர்மானிடர்காள்
மாமகள்தன்கொழுநனை வழுத்துவீராமாயின்
தாமரைப்பெருமுதலுஞ் சாற்றரியகதிசார்வீரே.

ஒப்புமைபற்றிவந்த ஆறடித்தரவு கொச்சகக்கலிப்பா.

வண்டாடு பூந்துளவ மாலையனை வானோர்கள்
கொண்டாடு சீர்த்தியனைக் கோவலர்பாடித் தயிர்நெய்

உண்டாடு சீதரனை ஒப்பிலா வற்புதனை
கண்டாடு மன்பருளங் காதலிக்கும் புண்ணியனைத்
தொண்டாடுவன் றியெனச் சொல்லித் துதிமுழக்கி
ஒண்டாடுனைக்கொண் டுயர்வீ ருலகிரே.

ஓ பரிட்சித்து மகாராஜாவே! குசேலமுனிவர் தன் ஊர்ப்புறம் சார்ந்தமாத்திரத்தில் தன்னுடைய சீரூர் பெரு நகரமாகிய அதனுள்ளும் புறமுமுள்ள காடுகளெல்லாம் மாட மாளிகைகளாகிய விஸ்வகர்மாவினாலும் தொட்டு அழகு செய்து படைத்தற்கரிதாகிய தென்று புலவர்களெல்லாம் கற்பனை செய்தற்கரிய சிறப்புவாய்ந்து அப்பிராகிருத திவ்விய லோகமாகிய ஸ்ரீவைகுந்தமே இவ்வுலகத்தில் இறங்கி வீற்றிருத்தல்போல விளங்கிக்கொண் டிருந்தது. அயன் அருளுண்டானால் கிடையாதது என்னவிருக்கின்றது. அப்படிப்பட்ட அழகிய நகரத்தை தேவர்கள் கண்டு நமக்கு விரோதமாக விஸ்வாமித்திரமுனிவர் வேறொரு பொன்னகரம் சமைத்தனரோ என்று மதிமயங்கினார்கள். அந்நகரத்தில் பளிங்குக் கற்களாலும் தவளைச் சுதையாலும் கட்டி மெழுகியிரா நின்ற வெள்ளிய மாளிகைகள்தோறும் பொற்பதுமைகள் போல் மாதர்கள் நிற்கின்ற தோற்றங்களானவை திருப்பாற்கடலில் பெரிய பிராட்டியார் திருவடிவம் பல எடுத்து நிற்பனபோலவும் வெள்ளிமலையில் பவளக்கொடிகள்பல படர்ந்துள்ளவை போலவுமிருந்தது. அந்நகரத்துள் குசேலர் செல்வதற்கு மதிலின்வாயிலின் அடையுங்காலையில் அந்நகரத்துள்ளவர்கள் களிப்பு மேற்கொண்டு முனிவரை வந்து காணும் பொருட்டுக் கைகளிற் பரிசாக எலுமிச்சை முதலிய கனிவர்க்கங்களோடு மற்றுமுள்ள மங்கலப் பொருள்களை யேந்தி எடுத்துக்கொண்டு பல மங்கள வாத்தியங்கள் முழங்கவந்தடியேங்கள் வாழ்ந்தோம் என்றுகூறி முகமலர்ச்சி கொண்டு பூமியில் நெற்றி தோள்முதலிய அங்கங்கள் படியத் தாழ்ந்து வணங்கினார்கள். உடனே அவ்விரதத்தில் நின்றும் முனிவரை யிறக்குவித்து முத்துத் தண்டிகையிலேற்றி அழகியவெண்பட்டுக் குடைகள் நிழலைச்செய்யவும் பல வாத்தியங்கள் முழங்கவும் கவரி வீசிக்கொண்டு வரவும், சதுரங்க சேனைகள் புடைசூழ்ந்து வரவும், மறையவர் மங்கள வாழ்த்துப்பாடவும், முனிவர்கள் பல்லாண்டு கூறவும் அழைத்துக்கொண்டு

வரும்போது வீதிகளில் இருபுறத்திலுமுள்ள உப்பரிகைக ளில் விளங்காநின்ற சாளரங்கள்தோறும் சந்திரோதயம்போ லத் தங்கள் வதனங்களைச் சாய்த்து மங்கைமார்களெல்லாம் மகிழ்ந்துநோக்கி, ஞானத்தில் தனக்கு ஒப்பிலாத இந்தமுனி வர் முற்பிறப்பில்செய்த தவந்தான் யாதோ என்றும், கிள்ளித் தெறிப்பதற்கும் சற்றும் தசையில்லாத தேகத்தில் கீறல் வஸ் திரத்தைக் கட்டிக்கொண்டு திரிபவர்க்கும் பட்டாடை வுடுக்க வும் பல்லக்கேறிவரவும் வாய்த்ததைப் பாரீரென்றும் கந்த மூலம் புசித்தும் கானகத்தில் திரிந்தும் பந்த மொழிப்பவர் மிகவும் தவஞ்செய்வார்கள் பலரும் இவர்செய்த பாக்கியப் பேறு யார் பெற்றார்கள் மனம் வாக்குக் காயம் என்னும் மூன் றுகரணங்களையும் ஸ்ரீமுகுந்தனுடைய திருவடிக்கே சமர்ப்பி த்துத்தினமும் நன்னெறியில் நிலையா நிற்கும் அகழ்வாய்ந்த இந்த முனிவர்க்கு வாய்ப்பது இச்செல்வந் தானே பரமபத வாழ்வல்லவோ என்பார்கள் கற்புடைய மனைவிவேண்ட கண் ணன்பாற்சென்று அவரளித்ததைப் பெற்று இப்படிப்பட்ட போகபாக்கியத்தோடு இம்முனிவர் வருவது நம்முடைய பாக் கியமே என்பார்கள். சில நங்கைமார் மெய்ஞ் ஞானியராக வுள்ளவர் தங்கள்பால் செல்வம் வந்துற்றாலும் அல்லது வறுமையுற்றாலும் தங்கள் சுபாவம் சிறிதும் குறையாமல் அதற்குத் திருஷ்டாந்தம் ஜனகமகாராஜர் தழல்தட்டில் ஒரு தாளும் சந்தனத்தட்டில் மற்றொருதாளும் வைத்துச் தராசு நிறைபோல் செங்கோல் செலுத்தி மனம் சமமாகப் பொருந் தியிருந்தாற்போலத் தோன்றுவார்கள் இவரும் அவர்போ லவே இந்த உலகமயக்கத்தில் சிக்காமலே செல்கின்றார் பாரு ங்கள் பாவைமார்களே யென்றார்கள் சில பூவைமார்கள் இம் முனிவர்க்கு இந்த அயிஸ்வரியமும் பெண்போகமும்தகுமோ என்று சிலமங்கையர் பேசக்கேட்ட சிலமாதர்கள் சிவனரென் னும் முனிவர் இளமைப்பருவம் மேற்கொண்டு பொற்றொ டிப்போகம் விரும்பிப் பலநாள் இருந்திலரோவென்று கூறி னார்கள். இதைக்கேட்ட பரிட்சித்துமன்னர் சுகப் பிர்மத்தின் திருவடிகளை வணங்கி ஆரியரே சிவனரென்னும் முனிவர்வர லாறு என்னவென்று வினவ உரைப்பாராயினர்.

ஓ பரிட்சித்து மகாராஜாவே! குருகுயென்னும் பெருந் தவமுனிவர் குமாரர் ஆகிய சிவனர் இமயகிரியின் சாரலில்

உள்ளவனத்தில் நெடுநாள் தவம் புரிந்துகொண்டிருக்கும் போது அவர் திருமேனியை புற்று மூடிக்கொண்டது அவ்விடத்தில் சையாதியென்னும் ஓர் அரசன்மகள் சுகன்னியென்பவள் பாங்கிமாரோடு மலர்கொய்ய அவ்வனம் வந்தங்கு அப்புற்றைக்கண்டு அதனுள்ளிருப்பது என்னவென் றதன் தொளைவழியேபார்க்க அதில் தவஞ்செய்யும் முனிவரது கண்கள் தோன்றக்கண்டு இவை பொன் வண்டுகளோ என்றையமுற்று ஒருதிரணம் எடுத்துக்குத்தவும் அம்முனிவர் யோகம் நீங்கி இது யார் செய்தாரென்று பார்த்து அவள்மேல் மோகங்கொண்டு அவள் கரத்தைப் பற்றினமாத்திரத்தில் பதைத்து உதறிக் கரத்தைப் பறித்துக்கொண்டு பாங்கிமாரிடத்து ஓடிவிழவும் அவர்கள் இவள் எதையோ கண்டு பயந்தாளென்று விசிறி இளைப்பாற்றிக்கொண் டிருக்கும்போது அவ்வனம் பார்க்கவந்த அவள் பிதா சையாதி அரசன் அப்புற்றினருகே அம்முனிவரைக் கண்டு அடிவணங்கி யெழுந்திருந்து அவரது கண்களிலிருந்து நீரொழுகுவதைக்கண்டு இது செய்தவர் யாரென்று தேடிவரப் பாங்கிமார் நடுவில் சோர்ந்திருந்த மகளைக்கண்டு முனிவருக்குக் கண்களில் நீர் வரும்படியான உபத்திரவம் யார் செய்தவர் யாவரெனக் கேட்க நான் செய்தேனென்று நடந்த விருத்தாந்தங்களையெல்லாம் கூற மனம் வருந்தி என்னகாரியஞ் செய்தாய் பேதாய் என்றிரங்கி விரைந்து முனிவரிடத்துச் சென்று சுவாமிகள் என் புத்திரியின் புன் செய்கையைப் பொருத்தருளுமென்று மிகவும் பிரார்த்திக்க உடனே அவர் உன்செய்கை நன்செய்கைதான் உன்மகளை எனக்கு மணமுடித்து தருவாயேல் பொறுப்பேன் இல்லாவிடில் சபிப்பேனென்ன அதற்கரசன் உடன்பட்டு மகளை அழைத்து கல்யாணஞ் செய்வித்தான் அம்மாமுனிவருக்கு வேண்டிய உபசரணைகள் செய்துவரும் நாட்களில் ஓர்நாள் அசுவனிதேவர்கள் சுகன்னியை நோக்கி அவளழகில் பரவசப்பட்டு காரிகையே! உன் தந்தையார் உன் பெயர் யாது நாங்கள் அசுவனிதேவர்கள் உன்மீது காதலித்தோமென்று உருகி இரங்கிக் கேட்க அவள் நான் சையாதிமகாராஜாவின் குமாரத்தி என்பெயர் சுகன்னி சிவனமுனிவர் மனைவி ஆதலால் உங்கள் கருத்து முடிவுபெறாது யென்று யெடுத்தெரிந்து பேசித் தலைகுனிந்து நிற்பவளைப்பார்த்து

மாதே உன் புருஷனும் நாங்களும் இந்த மலர்த்தடாகத்தில் மூழ்கினால் நல்ல இளமைப்பருவம் வாய்ந்து அழகுள்ள புருஷர்களாய் நிற்போம் இம்மூவருள் உனக்கிஷ்டமானவர்களைச் சேரென்றுரைக்கக்கேட்டு மவுனமாய் விரைவில் தன் நாயகனிடத்து ஓடிச் சொல்லினள். அவர் அதுகேட்டுச் சம்மதித்து தானும் தன் மனையாளோடு வந்து அசுவனி தேவர்களைக்கண்டு அவ்விருவரோடு முனிவரும் அம்மலர்ப் பொய்கையில் மூழ்கி இளமையும் வனப்பும் பெற்று வெளி வந்தார்கள் சுகன்னியானவள் நான் கற்புடையாளானால் என் புருஷனே புருஷனாக வேண்டுமென்று புருஷோத்தமனை தியானஞ்செய்து தன் கணவனது தோள்களைத் தழுவிக் கொண்டனள்.

அதுகண்டு சிவனமுனிவர் அசுவனி தேவர்களே நீங்கள் செய்த வுதவி எனக்கு யார்செய்வார்கள் என்று உடனே ஓர் யாகஞ்செய்து அவர்களுக்கு அவிர்ப்பாகம் பகிர்ந்தளித் தனுப்பிவிட்டு சுகன்னியோடு வாழ்ந்திருந்தார் அவர்போலவே இந்தக் குசேலமுனிவர் என்னபாக்கிய போகம் எம்பிரானருளால் வாய்த்தபோதும் ஐயன் திருவடியை மறப்பாரோ யென்றார்கள் சில மாதர்கள் இவ்வாறு தத்தம் கிருகங்களில் முனிவரது செல்வத்தைக் கண்டு மகிழ்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது குசேலமுனிவர் தனது வாயிலையடைந்து, சிவிகை முதலியவை அலங்கிர்தையாய்த் தன்னை யெதிர் கொண்டு பாங்கிமார்சூழத் தன் மனைவிவந்து வந்தனை புரிந்து கரகநீரால் திருவடி விலக்கி கந்தமிட்டு மலர்சூடி தூப தீபங்காட்டி ஆலாற்றி சுற்றியெறிந்து வணங்கி நிற்கக் குசேலமாமுனிவர் உள்ளெழுந்தருளி இரத்தினக் குப்பை பொற்பெட்டி முதலியவைகளையும் பால சுப்பிரமணியனைப் போல் அழகு வாய்ந்த தனது புத்திரர்களையும் கண்டுகொண்டிருக்க மனையாள் அங்கொரு ஆசனமிட்டு அவரை அதில் இருத்தி தயிலக்காப்பிட்டு நீராட்டி ஈரம்வுலர்த்தி வேறுடை வுடுத்தி நின்றனள். குசேலர் நியமனம் முடித்து அவள் உபசரிக்கவுண்டு மனையாளோடு இவ்வகையாக இன்பம் நுகர்ந்து ஒருநாள் அந்தப்புரத்தில் ஓர் அறையில் தான் தனியேயிருந்து கபாடத்தைத் தாளிட்டு யோசிக்கின்றார். பொருள் சம்பாதித்தலும் அதைக்காத்தலும் இழைத்தலும் துக்கமேயா

கும். அது நாகத்திலும் சேர்க்கும். சீ சீ இப்பொருளைப் பர மபாகவதர்கள் மறந்தும் நினைப்பார்களோ அதனாலே பிறப் பும் பெருகும். இதனாலே யான் சம்பாதிக்கேன் என் வீடு என் பொருள் என்று மயக்கம் உண்டாகின்றது. அதை ஒழி ப்பவனே பிரமாதிகளுக்கு எட்டாத முத்தியுலகமாகிய பரம பதத்தை அடைகின்றானென்று வேதோப நிஷத்துக்கள் முறையிடுகின்றன. தெய்வம் உள்ளதோ இல்லதோ வினைப் பயன் உண்டோ யில்லையோயென்னுஞ் சங்கையை ஒழித்து ஞான அநுபவத்தால் பரமாசாரியனையும் பகவானையும் உணர் ந்தவனே இவ்வுலக மயக்கத்தினின்றும் ஒழிந்தவனாவான். ஆசையற்றவனன்றோ ஞானியாவன் மற்றவைகளையெல்லாம் நீக்கினவனானாலும் அஞ்ஞானியே யாவான். இம்மனையிலிரு ந்து ஜீவன் முத்தனானவன் என்பது மலையைக் கடலிலிட் டுப் புணையாக்கி அக்கரைசேர நினைக்கும் ஒருவனை ஒக்கும் ஆதலின் சர்வேஸ்வரனைத் துதிப்பேனென்று பகவஸ்மரணை செய்து கண்களில் நீரரும்ப இருகரங்களையுஞ் சென்னிமேற் குவித்து யாவர்க்கும் பிரானாகிய ஸ்ரீவாசுதேவன் எனக்கருளு வனோ என்று மனநெக்குருகிக் கசிவுறுங்காலத்தில் வேத மூல மாகிய ஆதிபிரான் ஒரு பச்சைமலையானது தன் முடியில் சூரி யனைப் பதித்துக்கொண்டு இரண்டு சந்திரமண்டலங்களை நெ டிய சிகரத்தின் இரண்டு பக்கங்களிலும் தரித்துப் பல தாம ரை மலர்களோடும் வருவதுபோல ஸ்ரீமந்நாராயணன் அவர் முன்னெழுந்தருள முனிவரெழுந்து கைகூப்பி மும்முறை வலம் வந்து ஞானபூசைசெய்து ஐயா நெடுநாள் தவமிருந் து யோகஞ்செய்து காணொணுப் பரஞ்சுடராகிய நீர் அவற் றில் ஒன்றும் செய்து அறியாத பாவியாகிய எனக்கும் உமது தரிசனம் கிடைத்ததே நான்கு வேதங்களும் ஓலமிட்டும் காணா த நினது திருவடிக்காட்சி இருவினை கடலிற் கலங்கிய மரு ளில் மூழ்கும் அறிவில்லாத எனக்கும் கிடைக்கிடைத்தது மஹா புதுமை அடியேன் முடியில் உமது சீர்பாதம் வைத்த ருளினால் பழவினை மாய்ந்துபோம். ஐயனே உமதடியவர் அடியராகுதலே பெருஞ்செல்வமாக வேண்டுகின்றேன் இச் செல்வம் வேண்டாம் என்ன குசேலரே! வறுமையை வேண் டுதல் என்ன காரணம் என்று யெல்லாந்தெரிந்த இறைவன் கேட்கக் குசேலர் ஆரணப்பொருளே உமதடியில் தியானம்

வைத்து இடையூறுகிறதென்ன குசேலரே உனக்குத் திருவ ளித்தது உனக்கல்ல உன்னைச் சேர்ந்தவர்க்கே உன்னைச்சேர் ந்தவர் துன்புறுதல் அழகாகுமா உன்னுள்ளம்போல் அவ ருள்ளம் பற்றில்லாமலிருக்குமா மந்திரவாதிகளை பாம்பின் விஷம் ஒன்றும் செய்யாததுபோல செல்வம் உன்னை என்ன துன்பஞ்செய்யும் சற்று நிதானித்துப்பாரும் என்று கம்பீர மாகக் கருணைக்கடலாகிய கமலக்கண்ணன் குறுநகையோடு திருவாய் மலர்ந்தருளியதைக் கேட்டு எம்பெருமானைத் தொ ழுது தொழுது துதிப்பாராயினர்.

ஓ ஜெகதலத்தரசனான பரிட்சித்து மன்னவரோ! குசேலர் ஐயனது சீர்பாதங்களில் விழுந்து யெழுந்து துதித்த துதிக ளைக் கேளும். ஓ மாதவனே! எழுதறியமறையைக் கவர்ந்து கொண்டு கடலிற் புகுந்து ஒளித்த சோமுகாசூர னுயிரை மீனுருவெடுத்து அவனுயிர் மாய்த்து அவன் விடாதுபற்றி யிருந்த வேதத்தைப்பெற்று நாமகள் நாயகனாகிய நான்முகக் கடவுளுக்களித்து உயிர்களையெல்லாம் புரந்தருளும் புண்ணி யனே போற்றி போற்றி திருப்பாற்கடலின் நடுவே மந்தர கிரியை மத்தாக்கி மதியைத் தறியாக்கி நாட்டி வாசுகியை வட மாகப் பூட்டிச் சுராசுரர்கள் கடையும்போது அம்மலை கடலி லழுந்தாவண்ணம் ஆமைவுருவுற்றுப் பரிசுத்த பராபரனே போற்றி போற்றி பார்மகளைப் பாயாகச்சுருட்டி பாதலத்தில் மறைந்த இராட்சதனுடைய உயிர் குடிப்பதற்கு இமைப்பொ ழுதில் அப்பூமியை விரிப்பதற்கு வராகவடிவுகொண்டருளிய வரதனே போற்றிபோற்றி இரணியாட்சதனுடைய உயிரை நீங்கிப் பழிவாங்கிக் கொள்ளக் கருதிப் பிரமருத்திராதிகட்கு அச்சுறுத்தியும தன் பெயரையே வேதாரம்பத்தில் வழுத்த ஆக்கினையே செய்து தன்னையே யாவரும் வந்து வணங்க இறுமாந்திருந்த இரணியன்மார்பை அவனாலறையப்பட்ட தூணிலிருந்து பிறந்து அவ்வசுரனைக்கொன்றவன் புத்திர னாகிய பிரகலாதாழ்வானைக் காத்தருளிய கருணாகரனே போ ற்றிபோற்றி தவத்திற்சிறந்த காசிபமுனிவரும் அதிதியும் தந்தையுந் தாயுமாக அவதரித்து மமதையிற்படிந்த மாவலி யென்னும் அவுணனிடத்துச்சென்று ஓரடியால் மூவுலகு கொண்டு ஓரடிக்கு இடம்பொறாமல் அவ்வசுரன் முடிமேல் வைத்து இந்திராதியரைப் புரந்த புராதனனாகிய வாமனனே

போற்றி போற்றி சமதக்கினிமுனிக்கும் ரேணுகாதேவிக்கும் புத்திரனாகப்பிறந்து உலக நடையிற் சிறந்து நடந்த கார்த்த வீரியார்ச்சுனன் முதலிய சூரியகுல அசுரர்களையழித்து அந் தணரைக் காத்தருளிய அச்சுதனான பரசுராமனே போற்றி போற்றி திருவயோத்தியில் தசரதச் சக்ரவர்த்திக்கும் கௌ சலாதேவிக்கும் புத்திரனாய் சங்கு சக்ர அனந்தவுருவாகிய பரத சத்துருக்க இலட்சுமணர் தம்பியர்களாகி அடிபரவ வுதித்துத் தாடகை தன் மகனோடு வருகையிலுருளச் சரந் தொடுத்து விஸ்வாமித்திரன் வேள்வியைக் காத்து கல்லுரு வாய்க் கிடந்த அகலிகை சாபந்தீர்ந்து மிதிலை நகரம்புகுந்து காளகண்டனது கார்முகமிருத்தி மலர்கள் உருவாம் சீதையை மணந்து மீட்டும் அயோத்தியையடைந்து தாய்சொல் தாங் கித் தம்பியும் தொடர அன்றுமலர்ந்த தாமரை மலர்போல் முகமலர்ந்த மகிழ்ச்சியோடு அந்நகர் நீங்கிக் குகப்பெருமா னைச் சிநேகித்து சித்திரகூட பர்வதமடைந்து அங்கு தன் னைக்காண ஆவலா யோடிவந்த பரதாழ்வானுக் கினிமை கூறிப் பாதுகமளித்து அனுப்பி தண்டகாரணியம் புகுந்து அங்கு ஜானகியைத் தூக்கிச்சென்ற விராதனை மாட்டி அவ் வசுரன் துதிகேட்டுச் சாபங்கள் கருத்தினை முடித்து அகஸ் தியர் ஆசிரமமடைந்து அவரருளிய படை முதலியவற்றைக் கைக்கொண்டு பஞ்சவடியடைந்து சடாயு சந்தோஷம் அடை யச்செய்து சூர்ப்பனகையின் உருவபங்கங்கண்டு தூரத்திக் கரன் முதலியோரைக் காலனார்க்கு அனுப்பி மாரீசனை மாய் த்துச் சிறகறுப்புண்டு வீழ்ந்துகிடந்த தந்தையைக்கண்டு ஈம க்கடன் முடித்துக் கவந்தனைவீட்டி அவன் துதியேற்று சவரி பூசை கொண்டு மதங்கமலையைக் கண்ணுற்று அனுமானால் சுக்ரீவனைக்கண்டு மராமரந்தொளைத்து வாலியைப் போக்கி ஆஞ்சநேயரால் அறிவதை யறிந்து வருணனை அடக்கி சே துகட்டி இலங்கை புகுந்து கும்பகர்ணாதியரையும் தசமுகனை யும் கொன்று விபீஷணர்க்கு அரசளித்து கற்புக்கரசியை மீட்டு விமானமேறி பரத்துவாசர் ஆசிரமம் அடைந்து விருந்துண்டு அனுமாரால் அக்கினிப்பிரவேசமாகாமல் பர தரைத் தடைசெய்வித்து அயோத்தி சென்று இராச்சியபா ரஞ்செய்த ஸ்ரீராகவபிரானாகிய சீதரனே போற்றி போற்றி தேவகி தேவிக்கும் உரோகணி ஒருமகனாக அவதரித்துப் பிற

லம்பன் முதலியோரைக் கூற்றுவனூர்க்குப் பலிகொடுத்த பலராமனுகிய பரந்தாமனே போற்றி போற்றி வடமதுரையில் ஆவணிமாதத்தில் கிருஷ்ண அஷ்டமியில் தேவகியின் திருவுதிரத்தில் திருவவதரித்து வசுதேவன் கால்விலங்கு தெறிப்பித்து அவர் மலர்க்கரம் அடைந்து காவற்கதவு திறக்கவும் யமுனை வழிவிடவும் கடாட்சித்து நந்தகோபர் கிருகத்தில் அசோதை பெற்ற யோக மாயையின் திருவுருவாகிய வைஷ்ணவி பிறந்த மனையுள் புகுவித்து எல்லாருமகிழ வளருநாளில் கம்சனுகிய மாமன் விடுக்கவந்த பூதனையின் முலைப் பாலுண்டு உயிர்போக்கிச் சகடாசூரனை உதைத்து வதைத்து வாயில் சுழன்றுகொண்டு செல்லும் அரக்கனை மாயும்படி வீழ்த்தித் தாய் காணும்படி வயிற்றுள் பல்லாயிரங்கோடி அண்டங்களையும் அவைகளுக்குத் தலைவர்களாகிய தேவர்களையுங் காட்டி மறைத்து தயிர் கடையும் வேளையில் பால் பொங்கி வழிய தாய் ஆற்றப்போன சமயம்பார்த்து அங்குள்ள தயிர்த்தாழிகளை மத்தாலுடைத்து வெண்ணெயைத் திரட்டி உண்டு அடுத்த மனையிற் புகுந்து உறல்மேல் நின்று உரியிலுள்ள வெண்ணெயை வாரியுண்டு பூனைக்குங் கொடுத்து தாம்பால் உரலில் உதரத்தில் கட்டிவைக்க அதை இழுத்துக்கொண்டு மருதமரங்க ளிரண்டொடிய இடையே தவழ்ந்து நளகூப மணிக்கிரியாளை அநுக்கிரகித்துப் பிருந்தாவன மடைந்து கன்றுகள் மேய்த்து அவற்றில் கன்று போல் மாயை கொண்டுவந்த ஒரு அசுரக்கன்றால் விளம்பழ முதிர்த்து பகாசூரன் வாய் கிழிந்துவிழப் பாம்பின் வாய்ப் புகுந்து சாபமொழித்து ஆயர் சிறுவர்களோடு கட்டமுது பொசித்து பிர்மதேவர் கவர்ந்து கொண்டுபோன சிறுவர்களையும் கன்றுகளையும் பண்டுபோல் உண்டாக்கி விஷநீர் உண்டு உயிர்துறந்த உயிர்களாய்ந்திடக் கடைக்கண் பார்த்துக் காளியன் முடியில் நடித்து ஆயர் சிறுவர்களைக் காட்டழல் வளைந்துகொள்ள அதனை அயின்று ஆச்சியார்மயங்க பவளவாயில் வேய்ங்குழல் வைத்து ஊதி அவர் நீராடல் செய்யும்போது கலைகளைக் கவர்ந்து குருந்தமரத்தின்மீதேறிக் கரைமிசை வந்தவர்களுக்குத் துகிலை யெடுத்தெடுத்து ஈந்து மலர் சோலையில் பல வுருவங்கொண்டு அவர் கனிவாயமுதுண்டு முனிவர்கள் பத்தினிமார்கள் சமைத்தளித்த இன்சுவையமு

துண்டு உவந்து இந்திரனுக்கு இடும் பொங்கல் பூசையைக் கொண்டு மலையால் மழையைத் தடுத்து சிவந்த கண்களையுடைய ஓரசுரன் கொண்டு செல்லும் தந்தையைத் திருப்பிக் கொண்டுவந்து அவனும் அண்டர்களும் தரிசிக்க ஸ்ரீவைகுந்தத்தைக் காட்டித் திடீரென்று மறைந்து பசுக்காவல் செய்யுமிடத்தில் ராதையின் அழகியனலத்தைக் கவர்ந்து பல மாதர்களோடு ஆயர்பாடிக்குச் செல்லும்போது தந்தையைப் பற்றும் பாம்பைப் பாதத்தால் மிதித்து அகற்றிக் காட்டை மீட்டுமடைந்து சங்கசூடனை மாய்த்து மணியினை பலராமர்க்களித்து நாரதமுனிவர் சொல்லக்கேட்டு கம்ஸன் அனுப்பிய பூதகியினுயிர் குடித்து அவன் அமர்ந்திருந்த மதுரையை அடைந்து ஈரங்கொல்லியைத் தடிந்து எழில்கலன் உதவி மதுமலர்மாலையைக் கொடுத்தவர்க்கு இன்பவீடளித்து கூனியை நல்ல தெய்வப் பெண்ணாகச் சமைத்து இராஜசபைக்குப் போய்க் குவலயா பீடமென்னும் குஞ்சரத்தையும் மல்லர்களையும் கஞ்சனையுங்கொன்று உக்கிரசேனர்க்கு அரசுரிமை அளித்து தந்தை மனமகிழ்ந்து பூநூல் கலியாண முதலியவை செய்த வளவில் சாந்தீபமுனிவரை அடைந்து வேதமுதலிய கலைகளெல்லா முணர்ந்து குருதக்ஷிணைக்காக கொடிய பராக்கிரமம் பொருந்திய அவனது மலைபோன்ற மார்பைக் கிழித்து சக்கரமேவி முன்னிறந்த மதலையைமீட்டுஆசாரியன் தேவி முன்வைத்து கோபியர்களைத்தேற்ற வுத்தவரை செலுத்திக் கூனியின் இள நலம் பேசித் திரிதராஷ்டிரனிடத்தில் அக்குரூரரைப் போக்கிச் சரா சந்தனோடு பதினேழுநாள் அமர் விளைத்து அம்மதுரையை காலயவனன்வந்து வளைத்துக்கொள்ளவும் மேற்கடல் நடுவே துவாரகா புரியென்று ஒரு அழகிய நகரமொன் றுண்டாக்கிப் போரில் வலியில்லாமல் புறங்கொடுத்து ஓடுபவனைப்போல் விரைந்தோடி முசுகுந்தன் உறங்கும் மலைக்குகையில் புகுந்து அவனால் பகைவனை அழைப்பித்துப் பலராமரோடு வடமதுரையி லிருந்து துவாரகாபுரிக்குச் செல்லும்போது சராசந்தன்வளைக்க அவனுக்கும் அஞ்சினவர்போல் பலராமரோடும் மலையேறி அழல்சூழக் கவலையில்லாமல் விரைந்து தாண்டிச்சென்று துவாரகை யடைந்து விதர்ப்ப தேசத்தரசன் நங்கை முன்னோனுரைக் கஞ்சி விடுத்து தூதைக் கண்டபொழுதே தேர்மிசை

ஏறிச்சென்று கவுரியை வணங்கி கன்னியைக் கவர்ந்து பகைத்த அரசர்களை ஓட்டி ருக்குமன் குடுமியை அரிந்து துவாரகையைச் சேர்ந்து பின்பு ருக்மணிபெற்ற புத்திரன் மீன்வயிற்றை யடைந்து இரதியைச் சார்ந்து வளர்ந்து அவள் நலனுண்டு எதிர்த்த சம்பரனை வென்று அவளோடு துவாரகையில் புகக்கண்டு மனமகிழ்ந்து சத்திராஜித்து சூரியன்பாற் பெற்ற சிவந்தக மணியைப் பிரசேனன் கரத்திற் கொடுக்க அதனைச் சிங்கம் கவர்ந்து கொண்டுபோக அதினின்றும் ஜாம்புவந்தர் பறித்துப் பிலத்தை அடைந்து தன் மகளிடத்து வைக்க அதுகண்டு பெரும்பழி வருமென்று உடனே அப்பிலத்தை அடைந்து ஜாம்பு வந்தரோடு போர்செய்து வென்று அவர்களையும் அம்மணியையும் பெற்று சித்திராசித்துவுக்கு அளிக்க மிகவும் மகிழ்ந்து சத்திய பாமையை மணியோடும் உவந்து கொடுக்க மிகமகிழ்ந்து மணியை அம்மான்கை அளித்து தருமர் முதலாயினோர் துயர் ஒழிய அவர்களிருக்குமிடம் சென்றுறையுங் காலையில் மாமனைக் கடிந்து அம்மணியைக் கைகொண்ட சததனுமாவின் உயிர் நீங்கத் தொலைத்துப் பின்னர் மழைபெய்யு நிமித்தம் அக்குரூரன் சிமந்தகமணியோடு வந்துகண்ட மாத்திரத்தில் மிகமகிழ்ந்து அம்மணியைச் சத்யபாமைக் குதவுகவென்று இனிதளித்துச் சுபத்திரையை அர்ச்சுனனுக்கீந்து இந்திர பிரஸ்தத்துக்குப் போகும்போது பார்த்தனோடு கானில் வேட்டையாடுங்காலையில் காளிந்தியின் இன்பத்தை அனுபவித்து துவாரகா புரியையடைந்து அவந்திராசன் பெற்ற மித்திர விந்தையைக் கவர்ந்து துரியோதனன் முதலானோர் மனத்தில் அராசுமுறையில் வளைத் தமர்த்திக் கோசலராஜன்விட்ட போர்விடையேழையுந் தழுவிச் சத்தியை மணந்து கேகயராஜன் கலியாணஞ்செய்துகொடுக்க பத்திரையின் இன்பம் அனுபவித்து இலக்கணையை மணம் புணர்ந்து காகாசுரனைக் கொன்று வச்சிராயுதபாணியின் மனக்குறையை முடித்து பிலத்தில் வைத்திருந்த பதினயிர மங்கையர் போகம் விரும்பிச் சத்தியபாமைக்குக்கற்பகத்தருவைக் கொண்டுவந்து கொடுத்து மழலைசொற்களையுடைய மதலைகள் அளவற்றவர் பிறக்க அகமகிழ்ந்து பௌத்திரனைச் சிறைவைத்த பாணாசூரன் கரங்களை யறுத்தெறிந்து சோம்பியாய்க் கிடந்தவன் பாதகந் தவிர்த்து காசி

ர்ஜுனையும் பாம்பணை பரமன் யானேயென்று உலகத்து மாதர்களையெல்லாம் மயக்கிதிரிந்த பௌவணமன் வாச னையும் உயிரொழித்து அக்காசிராஜன் விடுத்த பூத துரந்து சுயோதனன் கன்னியின்போகம் விரும்பி சாம்பன் சிறையைப் பலராமர் மீட்டு வாக்களித்து வான் காண பதினாயிரந் திருவுருக்காட்ட சராசந் உடலைப் பிளந்து பீமனறியப் புல்லைக் கிழித்துப் வருந்திய அரசர்கள் சிறைவிடுத்துத் தருமர் புரிந்த இரா சூயத்தில் நிந்தித்த சிசுபாலனை வாதித்துச் சாலுவனையு தந்தவக்ரனையும் சேனைகளோடு மடித்துப் பார்த்தனுக்குச் சாரதியாய் தேரை நடத்திப் பஞ்சவர்களால் அரசக்கொடி யோன் முதலியோரை அதஞ்செய்வித்துப் பூபாரந் தொலைந் து தருமருக்கு அரசு நல்கி யெனது கந்தையில் முடிந்துள்ள அவலையும் அவிழ்த்துத் தின்ற கமலக்கண்ணனுடைய கட வுளே போற்றிபோற்றி எம்பிரான் போற்றி மாயவா போற்றி கஜேந்திர வரதா போற்றி கமலநாயகனே போற்றி போற்றி யென்று கண்களில் நீரரும்ப இருகரங்களுஞ் சென்னிமேற் குவிய மனதைக்குருகி வுருகுங்காலையில் மறையின்பொருளாய் என்றைக்குமெட்டாத மாயபிரான் விரைந்து காட்சிகொடுத்த அளவில் பொருக்கென யெழுந்து பலகால் திருவடியில் வீழ் ந்துயெழுந்து முடிமிசைக் கரங்கூப்பி வலம்வந்து ஆடிப் பாடி என்போல் யார் தவஞ்செய்தார்களென்று பூசைசெய்து ஐயனே ஆரணியஞ்சென்று தீர்த்தம் திவ்விய தலங்கள் சார் ந்தும் மலைக்குகைகளில் புகுந்து ஐம்பொறிகளை வாட்டியும் தவஞ்செய்வார்க்குக் கிடைத்தற்கரிய நினதுசேவைபாவி யெ னக்குங் கிடைத்ததே யென்றுரைத்து மீண்டும் அப்பனே! நீர் அளித்த இச்செல்வம் பிறவிக்கு ஏதுவாதலால் எவ்வள வும் வேண்டாம் அடியார்க் கடியேனென்னும் அப்பெருஞ் செல்வம் வேண்டா நிற்கின்றேன் என்றிரங்கும் அன்பன் வார்த்தையைச் செவியிலேற்றுத் தொண்டரே உமக்கு இச் செல்வம் நாம் அளித்தது உம்பொருட்டல்ல உம்மைச்சார் ந்தவர்களுக்கேயாம். அளித்த இவ்வைஸ்வரியம் நம்மையெ ன்னசெய்யும் மந்திரவாதிகளை பாம்பின்விஷம் என்னசெய்ய மாட்டும்? இத்திருவோடு நெடுங்காலமிருந்து உம் நிலைதவ றாது முடிவில் பரமபதம் சார்வாயென்று ஜெக தீஸ்வரியைத்

வ திருமார்பில் வைத்துள்ள பகவான் ஆக்கினைப்படி புத் க்கியம் பெருக வாழ்ந்து பின்னர் ஒருநாள் உம்பர்மலர் பெய்ய விமானமேறி பரமபதஞ்சார்ந்தார்.

ரமபதமடைந்த அத்தியாயம் மூற்றிற்று.

விருத்தம்.

சீரியராம் ஜெயதேவ் கபீர்த் துளசிதாசர்
சிறந்தநாம்தேவ் ஞானேசர் குசேலர் முன்னம்
பேரின்பம் பெற்றுயர்ந்த சரிதை தன்னை
பிரியமொடு படிப்பவருங் கேட்ட பேரும்
பாரின்மிசை பவநாச மற்று மேலாம்
பதமுற்று ஹரிபரந் தாம னேக்கால்
மாரிமாதம் மூன்று தாம்பெய்யச் சென்னல்
மக்கள்மனைச் செழித்துமகி தலத்துய் வாரே.

வாழி விருத்தம்.

மன்னு மாமறை வாழிமா மறையவர்
பன்னு மான்முதல் வாழிகற் பார்த்திபர்
மின்னு நீதியும் வாழி மிகுநல
மென்னு மிக்கதை யின்தமிழ் வாழியே.

குசேலமாமுனிவர் சரித்திரம் மூற்றிற்று.

அட்டவணை.

சரித்திரக் குறிப்பு. பக்கம்.
பாயிரம் 11
நூற்பெருமை 18
பண்டரிபுரத்தின் வரலாறு 25
புண்டரீகபக்தன் வரலாறு 28
நூல் வரலாறு 40

ஜெயதேவ ஸ்வாமிகள்.

ஜெயதேவர் உற்பத்தி 51
ஜெயதேவர் விரக்தி 59
ஜெயதேவ் கைகால்கள் வெட்டுண்டல் 66
ஜெயதேவ் நாட்டையடைந்தது 77
பத்மாவதி தரிசித்தது 82
கள்வர் பாதாளத்திலமிழ்ந்தது 93
ஜெயதேவர் கள்ளரைக்காத்தது 103
பத்மாவதி மரித்தது 113
பத்மாவதி உயிர்பெற்றது 123
பகவான் பிராமணரூபமாய்வந்து சுயரூபத்தைக் காட்டினது 133
ஜெயதேவர்பாடிய பாகவதத்தை பகவான் பிராமணரூபமாய் வந்து வாசித்துச் சுயரூபத்தைக் காட்டினது 137
ஜெயதேவர்செய்தமுப்பதுஅஷ்டங்களை கங்கையில்விடுத்து பரீக்ஷித்தல் 146
பிரமோபதேசம் 153

கபீர்தாசர்.

கபீர் உற்பத்தி 168
கபீர் சுன்னத்துச்செய்கிறதை மறுத்தது 179
பிராமணரூபமாய்வந்த பகவானுக்கு கபீர் வஸ்திரதானஞ்செய்தது 183
கபீருக்குப் பகவான் பக்கிரிரூபமாய்வந்து நிஜதரிசனம் கொடுத்தது 197
கபீர் ராமானந்தஸ்வாமிகளின் பணிவிடைக்காரர்களாலடிபட்டது 217
கபீர் ராமானந்தஸ்வாமிகளின் ஆசீர்வாதம் பெற்றது 230
கபீர் ராமானந்தஸ்வாமிகளிடம் உபதேசம் பெற்றது 235
கபீர் துலுக்கமதத்தைக் கண்டித்தது 241
கபீர் கோரக்கரை வென்றது 252
கபீர் விவாகம் 27
கபீர் பசுவின்கன்றை கொல்லாமல் மறுத்தது 2
கபீர் தன் மனைவியை வர்த்தகனுக்களித்தது
கபீர் குமாரனுகிய கமால் யாத்திரைசெய்தது

துளசிதாசர்.

துளசிதாசர் உற்பத்தி
பகவான் துளசிதாசனைக் காமத்தில்அழுத்தியது
காமம் நீக்கும் அத்தியாயம்

துளசிதாசர் ஸ்திரீவாஞ்சனை
துளசிதாசர் வைராக்கியம்
துளசிதாசர் பூததரிசனம்
துளசிதாசருக்கு அநுமார் தரிசனந்தரல்
துளசிதாசருக்கு ஸ்ரீராமர் தரிசனமாகுதல்
துளசிதாசர் ஞானோபதேசம் பெறல்
துளசிதாசர் மடத்திற்குப் பகவான் காவலாயிருந்தது
துளசிதாசரைச் சோதித்தல்
பகவான் துளசிதாசனுருவமாய் வந்து பிரேதமான பிராமணனை யெழுப்பல்
துளசிதாசர் அக்பர்பாதுஷாவை பங்கஞ்செய்தது
துளசிதாசர் அக்பர் பாதுஷாவுக்கு அனுக்கிரகஞ்செய்தது

நாமதேவர்.

நாமதேவர் உற்பத்தி
நாமதேவருக்கு பகவான் அன்னமூட்டல்
நாமதேவருக்குப் பகவான் விவாகஞ்செய்தது
நாமதேவருக்குப் பகவான் லக்ஷவராகனளித்தது
பகவான் கூலியாளனய்வந்து பணிசெய்தது
நாமதேவர் தநயனுக்கு மயிர்வாங்கிக் காதுகுத்தும்போது பகவ வரிசை கொண்டுவரல்.

ஞானேசுவரர்.

ஞானேசுவரர் தநயராகிய விடோபா யாத்திரை
சன்னியாசி விடோபா
விடோபா ஞானோபதேசம் பெறல்
விடோபா கிரகதாசிரமம்
திரிமூர்த்திகளும் ஆதிசத்தியும் உற்பத்தி
விடோபா சஞ்சலத்துக்காற்றுமல் பரப்பிரமத்தைத் துதித்தல்
ஞானேசுவரர் அந்தணரை அவமானஞ்செய்து ஐஸ்வரியம் பெறல்
ஞானேசுவரர் தன்தந்தையை நாட்டில் அழைத்துவந்தது
ஞானேசுவரர் எருமைக்கடாவினுல் வேதத்தை விரித்துரைத்தது

குசேலமாமுனிவர்.

ீ சுகப்பிர்மரிஷி வாக்கியம்
ேசலர் துவாரகாபுரியைக்கண்டு தன்னகர்ப்புரம் அடைந்தது
குசேலமுனிவர் ஸ்ரீராதாருக்மணி சமேதராயிருக்கப்பட்ட மணிவண்ணனைக் காணுதல்
லர் செல்வநுகர்ந்து பரமபதமடைதல்

அட்டவணை முற்றிற்று.